நவம்பர் 2012

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

150 ஆவது இதழ்



# ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்

www.gnanam.info

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

150ஆவது இதழ்

# ஈழத்துப்
# போர் இலக்கியச் சிறப்பிதழ்

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

ஞானம் பதிப்பகம்

**நூல் :**
ஞானம் -150ஆவது இதழ்
“ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்”

**தலைமை ஆசிரியர் :**
தி. ஞானசேகரன்

**இணை ஆசிரியர் :**
ஞானம் ஞானசேகரன்

**நிர்வாகம் :**
ஞா.பாலச்சந்திரன்

**பதிப்பு :**
முதலாம் பதிப்பு, நவம்பர், 2012.

**பதிப்பகம் :**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06,
இலங்கை.
தொலைபேசி: 0094 11 2586013
தொலைநகல்: 0094 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**ஓவியர் :**
சிவா கௌதமன்

**அச்சுப்பதிப்பு :**
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13.

**Book:**
GNANAM - 150th Issue
“Eelaththu Pōr Ilakkiya Sirappithal”

**Chief Editor :**
T.Gnanasekaran

**Co-Editor :**
Gnanam Gnanasekaran

**Management:**
G. Balachandran

**Edition** :
First Edition, November, 2012.

**Published by:**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6.
Sri Lanka.
Tel: 0094 11 2586013
Fax: 0094 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Artist:**
Siva Gowthaman

**Printed by:**
Unie Arts (Pvt) Ltd.
48B, Bloemendhal Road, Colombo 13.

**Pages:** 600

**Price:**
SL Rs. 1500/=
US $ 25

**ISBN: 978-955-8354-47-6**

ஞானம் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழில் பிரசுரமான படைப்புகளின் கருத்துகட்கு
அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

This license allows for redistribution, commercial and non-commercial, as long as it is passed along unchanged and in whole, with credit to Gnanam Pathippakam.

# தமிழ் இலக்கிய வரலாற்றில்
# ஈழத்துப் போர் இலக்கியம்

ஞானம் சஞ்சிகை ஜூன் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

"இக் கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடர விழைகிறோம்" என்ற அடக்கமான பிரகடனத்துடன் ஆரம்பித்த நாம், அன்றிலிருந்து நிதானமாகப் பயணித்து 50ஆம் இதழை 'பொன் மலரா'கத் தருவித்தோம். 100ஆவது இதழை "ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழாக" வெளிக் கொணர்ந்ததன் மூலம் எம்மை விரிவாக்கிக்கொண்டோம். தற்பொழுது 150ஆவது இதழை "ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக" உலகத் தமிழ் இலக்கியத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் எம்மை நாங்கள் மேலும் விரிவுபடுத்திக்கொண்டுள்ளோம்.

சுதந்திரம் என்பது அடக்கு முறையின் அனைத்துக் கரங்களையும் எதிர்த்து வாழ்தலில் இருந்து சாதல் வரைக்குமான இயல்பு நிலை மீறாப் பெருந்தளை நீக்கமாகும். மானுடத்தின் மிகப் பெரும் பரவசமும் இதுவே. இதற்காகத் தான் உலகெங்கிலும் கந்தகம் காற்றில் கலக்கிறது. ஈழத்துப் போர்க்காலத்தில் மொழியையும் அதன்வழியான இலக்கியத்தையும் கலாசார ஆயுதமாக ஏந்திய பேனா மன்னர்களின் போரிலக்கியம் தொடர்பான படைப்பு - ஆய்வு - மதிப்பீடு- கருத்தாடல் - ஆவணம் பற்றிய பெருந்தொகுப்பாக ஞானம் சஞ்சிகையின் "ஈழத்துப் போர் இலக்கியம்" எனும் இச் சிறப்பிதழ் வெளிவருகிறது.

**உலகப் போரிலக்கியம்:**

உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் நடைபெற்றனவோ அங்கெல்லாம் உன்னதமான போரிலக்கியங்கள் தோன்றின. முதலாம் உலகமகாயுத்தம், இரண்டாம் உலகமகாயுத்தம் ஆகியற்றின் விளைவுகள் மட்டுமன்றி அதன்பின்னர் உலகெங்கிலும் நடைபெற்ற பல புரட்சிகளின் போதெல்லாம் போர் இலக்கியங்கள் மலர்ந்தன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்ய இலக்கியங்களில் போரிலக்கியங்களே உலகப் பிரசித்திபெற்றவை. உரிமையும் உரிமை மறுப்பும், ஆயுதமும் ஆயுத எதிர்ப்பும், சமாதானமும் சமாதானமீறலும் மட்டுமன்றிக் காட்டிக் கொடுத்தலிலிருந்து பொருளாதாரத் தடைவரைக்கும் பழிவாங்கலிலிருந்து பண்பாட்டு அழிப்பு வரைக்கும் போரிலக்கியங்கள் பேசுகின்றன. ஒரு நாட்டுக்குள் இன, மத, ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்து போராடிய உள்நாட்டுப் போர்களிலிருந்தும் பல உன்னத இலக்கியங்கள் தோன்றியதை ஐரிஷ், பலஸ்தீன இலக்கியங்கள் காட்டிநிற்கின்றன.

**தமிழில் போரிலக்கியம்:**

தமிழில் போரிலக்கிய மரபின் ஆரம்பமாகச் சங்கப் புறத்திணை நூல்களைக் கொள்ளலாம், புறநானூற்றிலிருந்து பதிற்றுப்பற்று வரையான புறத்திணை நூல்கள்

போரை மட்டுமன்றி அதற்கான மன்னராட்சி அரசியலையும் முன்னிறுத்தின. காவியங்களின் பெரும்பகுதியான காண்டம்கூட 'யுத்த காண்டம்' எனும் பெயர்த்தன்மையுடையதாய் அமைந்தது. சிற்றிலக்கிய மரபிலும் இந்நிலையைக் காணமுடியும். குறிப்பாகப் பரணி முதலிய சிற்றிலக்கியங்களின் தோற்றுவாய் போர் மற்றும் வெற்றியின் அரசியலைச் சார்ந்ததாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டில் மகாகவி பாரதியின் வருகையானது நவீன தமிழ் இலக்கியத்தில் ஆழமும் அகலுமான அரசியலுக்கான ஒரு பெருவெளியை ஏற்படுத்திவிடுகிறது. இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டம் சார்ந்த தமிழ் நிலைப்பட்ட இலக்கியப் பிரதிகளையும் நவீன தமிழின் போர் இலக்கியங்களின் ஆரம்பமாகக் கொள்ளமுடியும்.

**ஈழத்தில் போர் இலக்கியத்தின் வரலாற்றுப் பின்னணி :**

"ஈழத்தில் போர் இலக்கியம்" எனுந் தொடர், தமிழ்த் தேசியத்தை முதன்மைப்படுத்திய ஆயுதப் போராட்டம் சார்ந்தது. எல்லை வரையறுக்கப்பட்ட ஒரு நாட்டை அரசியல் பொருளாதார நலன் கருதி காலனிய அரசுகள் கைப்பற்றியபோது இடம்பெற்ற விடுதலைப்போராட்டத்திற்கும் நாட்டுக்குள்ளேயே பாரம்பரிய, தார்மீக உரிமைகள் நசுக்கப்பட்டபோது இடம்பெற்ற போராட்டத்திற்கும் உணர்வுசார் வேறுபாடுகள் நிறையவேயுள்ளன. பொதுவாக ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையிலான போரில் சுதேசிகள் மொழி, இன, மத பேதமற்று ஒன்றிணையும் உணர்வினைக் காண முடியும். ஆனால் ஒரு நாட்டிற்குள் பெரும்பான்மைச் சமூகமொன்று சிறுபான்மைச் சமூகமொன்றை அடக்கும்போது அதற்கெதிராக, வெடிக்கும் போராட்டத்தின் உணர்வுநிலை இனம்,மொழி,மதம் மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் காரணமாகக் கொதிநிலை உடையதாய் அமையும். அடக்கு முறைக்கு உட்பட்ட சிறுபான்மைச் சமூகத்தின் எதிர்ப்பு உணர்வில் அச்சமூகம் இறுகப்பற்றிய இன உணர்வு மொழியுணர்வு, மதவுணர்வு மற்றும் பண்பாட்டு உணர்வுகள் மிகக் கூர்மையுடன் காணப்படும். இந்த உணர்வுக் கொதிநிலையைத் தமிழ்த் தேசியத்தை முதன்மைப்படுத்திய ஈழத்துப் போர்க்காலப் பிரதிகளில் அதிகமாகக் காணமுடிகிறது. இந்த உணர்வுக் கொதிநிலைதான் இப்பிரதிகள் தோன்றுவதற்கான பிரதான ஊக்கியுமாகிறது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. எனினும் உடனடியான அரசியல் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1955இன் பின்னரேயே அம்மாற்றம் மெல்ல மெல்ல ஏற்படுகிறது. 1956 வரையும் இலங்கையின் பாரம்பரிய அரசியல் வரலாற்று மூலங்களிலிருந்து காலனிய காலத்திலும் அதற்கு முன்னரான காலத்திலும் தமிழ் - சிங்கள இன முரண்பாடு மன்னர்களின் ஆட்சிபிடிப்பதற்கான போரில் வெளிப்படத் தொடங்கியதை அறியமுடிகிறது. ஆனால் 1956இல் இனமுரண்பாடு உக்கிரமடைந்தமைக்கான ஆரம்பப் புள்ளியாகத் தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கத்தைக் குறிப்பிடலாம். இதைத் தொடர்ந்து பல எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. "நண்டெழுத்து வேண்டாம் நமக்கு" போன்ற மொழியுணர்வு சார்ந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. "காலிமுகத்திடற் சத்தியாக்கிரகம்", "ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்" முதலானவற்றையும் இங்கு குறிப்பிடலாம். மொழிரீதியான அடக்குமுறை, தமிழர்களை வெகுவாகப் பாதித்தது. 56, 57, 58, 77, 83 களில் நடைபெற்ற சிறுபான்மையினருக்கெதிரான கலவரங்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளைப் பெரிதும் பாதித்தன. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை மேற்கொண்டதன் மூலம் தமிழர்களின் அறிவாளுமையை நிறுவனக் கல்வி ரீதியாக ஒடுக்கும் முறையையும் அரசு மேற்கொண்டது. இது மட்டுமன்றி அரசியல் மதமாக பௌத்தம் முதன்மை பெற்றதுடன் மதரீதியான சமத்துவ நிலையும் பாதிப்புக்குள்ளானது. இன, மொழி, மத, பண்பாட்டுசார் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர் தமக்குரிய அரசியலை

ஸ்திரப்படுத்துவதும் உரிமைக்காகப் போராடுவதும் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக அமைந்தது.

தொடர்ச்சியாக ஏற்பட்ட இனக்கலவரங்கள், அதன்விளைவாக நிகழ்ந்த இனப்படுகொலைகள் அகிம்சை வழியிலிருந்து ஆயுதவழிக்கு தமிழர்களைத் திருப்பியது. விடுதலை இயக்க அமைப்புக்கள் பல பிறநாட்டு போராட்ட அமைப்புகளின் கொள்கைகளைத் தழுவி தமிழருக்கான உரிமைகளை வென்றெடுக்கும் போரில் ஈடுபட்டன. இயக்கங்களுக்கிடையேயான உள்முகமான ஒற்றுமையின்மையும், மக்களை விருப்புடன் கூடிய அரசியற்பங்கேற்குநர்களாகக் கொள்ளாத நிலையும், பழுத்த அரசியற் தலைமைகளினதும் புத்திஜீவிகளினதும் வழிகாட்டல்களையும் எதிர்வு கூறல்களையும் ஏற்றுக் கொள்ளாததன்மையும் போராட்ட முன்னெடுப்பில் ஆரம்பத்திலிருந்தே விமர்சனங்களைப் பெறும் நிலைக்கு விடுதலை அமைப்புக்களை உள்ளாக்கின. அறிவுஜீவிகளின் படுகொலை, அரசியல் தலைமைகளின் படுகொலை மட்டுமன்றி விடுதலைக் குழுக்களில் அங்கம் வகித்த உறுப்பினர்களின் படுகொலை, ஒன்றிவாழ்ந்த சகோதரச்சிறுபான்மை இனம் ஓர் இரவில் வெளியேற்றப்படல் என விடுதலைக்குப் புறம்பான செயற்பாடுகளும் காணப்பட்டன.

பெரும்பான்மையின் இன ஒடுக்கு முறையானது உயிரில் இருந்து பண்பாட்டு அழிப்பு வரை நீண்டு சென்றது. யாழ் நூலக எரிப்பு பண்பாட்டு அழிப்பின் பெருங்கொடுமையானது. உள்நாட்டுப் படையினரின் ஆக்கிரமிப்பு மட்டுமன்றி அமைதிப் போர்வையில் இலங்கை வந்த இந்திய இராணுவப்படையினரின் அட்டூழியங்களும் சொல்லிமாளாப் பெருந்துயரங்களாகின.

ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள்கொண்ட விடுதலைப் போர், ஆயுத ரீதியாக முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றது. இம் முப்பெருந் தசாப்தங்களில் ஈழத்துத் தமிழ்ச்சமூகத்தின் போரின் வலி சுமந்த ''பாடுகளின் பயணம்" எந்த நூற்றாண்டிலும் முற்றுப் பெறாதது. உள்நாட்டு இடப்பெயர்வுகள் கண்டந்தாண்டிய புலப்பெயர்வுகள் மட்டுமன்றி அகதி முகாம் வாழ்க்கை, பொருளாதாரத்தடை முதலாய இன்னல்கள் தொடர்கதையாயின. அமைதிச் சூழலிலிருந்து கற்பதற்கான கல்விச் சூழல் வரை மோசமாகப் பாதிப்படைந்தது. இப்போரின் விளைவுகள் போர்சார்ந்த கருத்து நிலைப்பாடுகள் பற்றிய மதிப்பீடுகள் அனைத்துத் தளங்களிலும் நடைபெறுதல் ஆரோக்கியமானது. இதுதான் தமிழ்த்தேசிய அரசியலை நேர்த்திசைவழிக்கு இட்டுச்செல்லும். மேற்குறிப்பிட்ட தமிழ்த் தேசியப் போரின் அடிப்படைகளும் அவை வழியான விளைவுகளுமே ஈழத்துப் போர் இலக்கியங்களுக்குத் தோற்றப் பின்னணியாயின.

**போர்க்கால இலக்கியம்:**

நவீன தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றவொரு தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும். இவ்விலக்கியம் உலகெங்கிலும் தோன்றிய பெரும் போர் இலக்கியங்களுக்கு இணையானதாக மதிக்கப்படுகிறது. ஆங்கில மொழியில் நடைபெற்றுள்ள ஈழத்தமிழ்ப் போரிலக்கியம் பற்றிய ஆய்வுகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

விடுதலை அமைப்புகளின் கொள்கை பற்றிய ஆரம்பகால வெளியீடுகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள், மொழி, உணர்ச்சி சார்ந்த படைப்புகள், முதலியனவும் பன்னூற்றாண்டு மரபுத் தமிழ் இலக்கியச் செழுமையும் ஒன்றிணைந்து உருவ உள்ளடக்கப் புதுமைகொண்ட உயிர்ப்பும் வீச்சும் மிக்க ஈழத்துப் போர் இலக்கியம் தோன்றியது. 1985இல் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பு போரைப்பதிவு செய்த முதலாவது இலக்கியத் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து போரையும் போரின் வலிகளையும்

பிரதிபலிக்கும் பல கவிதைத் தொகுதிகளும் சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களும் நாடகங்களும் வெளிவந்துள்ளன.

இராணுவ அடக்குமுறைகள், அழிப்புகள், அவற்றுக்கெதிரான போராட்டங்கள் பதுங்குகுழி நாட்களாகக் கழியும் மக்களின் வாழ்நாட்கள், இடம்பெயர்ந்து இரவுநேரப் பயணிகளாகும் மக்கள், மரணங்கள் மலிந்த பூமியாக மாறிய மண், சாற்று கவிகளின்றிச் சரம கவியே பாடும் உணர்வுநிலை, காற்றுவெளியாகிய கிராமங்கள், வாசல் ஒவ்வொன்றிலும் ஒலித்த அன்னையர்களின் ஒப்பாரி, நிலத்திற்கடியில் புதைக்கப்பட்ட இளைஞர் யுவதிகளின் உடல்கள், காணாமற் போனோரின் உறவினரின் கதறல்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் கையகப் படுத்தப்பட்டு விதைப்பாரற்றுப் போன விளைநிலங்கள், பார்வையைக் குருடாக்கும் கொடூரக் கொலைகள், செவிக்குள் சென்று முடியாத ஓலங்கள், இதயத்தால் தாங்கொணா இன்னல்கள், ஊசலாடித்திரிந்த உறவுகளின் உயிர்கள், உணவும் மருந்தும் அற்று உருகிச்செத்த குழந்தைகள், உலைக்களமான மனங்கள், மண்ணில் விழுந்து தேய்ந்து போன மானுட நேயங்கள், தலைகளற்ற கற்பக தருக்கள், முகடுகளற்ற வீடுகள், முகங்களும் முகவரிகளும் இல்லாத மக்கள் எனப் பெரும் பாடுபொருள் வெளியை போர்க்கால இலக்கியங்கள் தமதாக்கிக் கொண்டன.

**போர் இலக்கிய எழுத்தாளர்கள்**

போர்க்காலத்தில் முன்னர் எழுதி வந்த மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் மட்டுமன்றி புதிய தலைமுறை எழுத்தாளர்களும் எழுதினர். கவிஞர்கள், சிறுகதையாசிரியர்கள், நாவலாசிரியர்கள், பத்திரிகையாளர்கள், நாடகவியலாளர்கள் எனப்பலர் எழுதிக்குவித்தனர். இவர்களில் ஆண்களும் பெண்களுமடங்குவர். போர்க்கால எழுத்தாளர்களை, போர்நடைபெறும் களத்தில் நின்று போராடிக்கொண்டே எழுதிய போராளிகள், போர்க்களத்துக்கு வெளியே இருந்து போரின்நியாயப்பாட்டையும்இழப்புகளையும்எழுதிய படைப்பாளிகள், புலம்பெயர்ந்து சென்று ஈழப்போரின் இழப்புகளை எழுதிய புலம்பெயர் படைப்பாளிகள், முஸ்லிம் தேசியத்தை முதன்மைப்படுத்திய முஸ்லிம் படைப்பாளிகள், ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழகத்திலிருந்து எழுதிய தமிழகப் படைப்பாளிகள் என வகைப்படுத்தலாம். பெரிதும் சிறிதுமாக வெளிவந்த பல்லாயிரக்கணக்கான படைப்புகளைப்பார்த்தால்போர்க்காலஇலக்கியத்தின்பல்பரிமாணப்போக்குப்புலப்படும். தேசவிடுதலை, இனவிடுதலை மொழிவிடுதலை, பண்பாட்டு விடுதலை, பெண்விடுதலை, சமூக விடுதலை முதலிய பல போக்குகளை இவ் இலக்கியங்கள் காட்டிநிற்கின்றன.

**ஆறாந்திணை**

பாரம்பரியத் தமிழ் இலக்கியங்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்தன. போரின் விளைவாய் ஈழத்தமிழரின் மேலை நாடுகளுக்கான புலப்பெயர்வு புதியதொரு திணைவெளியான ஆறாந் திணையையும் ஏற்படுத்தியது. ஐரோப்பிய, ஸ்கன்டிநேவிய நாடுகளின் 'பனிநிலம்' புதியதொரு திணையாகி அதனைஅடிப்படையாகக்கொண்டுஇலக்கியங்கள்தோன்றின. ஆறாந்திணைஎன்றகருத்துநிலை ஈழத்தமிழரால் தமிழ் உலகிற்குக் கையளிக்கப்பட்டது. இப்போர் இலக்கியங்கள் தமிழ் ஐவகை நிலங்களின் பகைப்புலங்களை மட்டுமல்லாது மேலைத்தேய நாடுகளின் பகைப்புலங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது அனுபவத் தேட்டத்தை வெளிப்படுத்தின.

**ஞானம் போர்க்கால இலக்கியச் சிறப்பிதழ் – தேவையும் பின்னணியும்**

கடந்த கால இலக்கியச் செயற்பாடுகளை விமர்சிப்பதும் உரையாடுவதும் காலத்தின் தேவையாகும். இலக்கியத்தினை மதிப்பிடுவது என்பது தனியே இலக்கியத் தரத்தினை

மதிப்பிடுவது மட்டுமல்ல. இலக்கியம் பேசும் பண்பாட்டை, கருத்தியலை, அதன் தோற்றக்காரணிகளை, அதன் அரசியற் பின்புலத்தை எல்லாம் மதிப்பிடுவதாகும். இந்த மதிப்பீடு தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தமிழர் புதிதாக வழங்கிய இலக்கிய நன்கொடையாக அமையும். இன்னும் எதிர்கால ஈழத்தமிழ்ச் சந்ததிக்கு தமிழினம் உரிமைக்காக நடத்திய போரின் இலக்கியச் சாட்சியங்களாக இப்பிரதிகள் இருக்கும். கால ஓட்டத்திலும், திட்டமிடப்பட்ட இலக்கிய இருட்டடிப்புகளில் இருந்தும் இவ் இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதற்கான ஒரு தொடக்கமாக இச்சிறப்பிதழ் உருவாகியது.

போரிலக்கியம் மேலை நாடுகளில் உள்ளது போன்று இங்கும் அது ஒரு கற்கை நெறியாக மாறக்கூடிய தேவையும் இருக்கிறது.

ஒரு சமுதாயத்தின் உரிமைக்கான போரின் போது இதழியல் துறையின் பங்களிப்பை உணர்ந்து ஞானம் செயற்பட்டு வந்துள்ளது. ஞானம் முதலாவது இதழில் சிறுசஞ்சிகைகளின் பணி பற்றிக் குறிப்பிடும்போது ,“இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக்கண்ணாடியாக இவை மிளிர வேண்டுமெ”னக் குறிப்பிட்டிருந்தோம். இக்கூற்றுக்கு அமையவே ஞானம் செயற்பட்டு வந்திருக்கிறது. ஈழத்து இலக்கியத்தின் தாரதம்மியங்களையும் அரசியல் வரலாற்று நிலைகளையும் அவ்வப்போது ஞானம் வெளிப்படுத்தி வந்துள்ளது. ஞானம் இதழ்களும், ஞானம் பதிப்பக வெளியீடுகளும் இதற்குச் சான்று பகரும். ஞானத்தின் முதலாவது இதழிலிருந்து ஒவ்வொரு இதழிலும் போர்க்காலக் கவிதைகள், சிறுகதைகள், விமர்சனங்கள், பத்தி எழுத்துக்கள் வெளிவந்துள்ளன. பல ஆசிரியத் தலையங்கங்கள் போர்க்கால இலக்கிய அரசியல் குறித்துப் பேசியுள்ளன. போரின் நெருக்கடியான வேளைகளிலும் உண்மைகளை வெளிக்கொணரும் வரலாற்றுக் கடமையிலிருந்து ஞானம் தவறியதே இல்லை. தென்னிலங்கையில் வெளிவந்த போர்க்கால இலக்கியப் படைப்புகள் மற்றும் மேலைநாட்டில் ஆங்கில மொழியில் வந்த போர்க்காலப் படைப்புகள் போன்றவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகள் ஞானத்தில் வெளியாகின. ஞானத்தின் தனித்துவமாக, ஞானம் முதல் 50 இதழ்களில் வெளிவந்த போர்க்காலச் சிறுகதைகளில் 20 கதைகளைத் தெரிவு செய்து “போர்க்காலக் கதைகள்” என்ற மகுடத்தில் 2007இல் வெளியிட்டதையும், தலைநகரில் இருந்து கொண்டு பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் எந்தவொரு சிற்றிதழும் செய்யத் துணியாத பணியாக இது அமைந்ததனையும் சுட்டிக் காட்டலாம். அதேபோன்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட போர்க்காலக் கதைகளை தமிழில் மொழிபெயர்த்து ஞானத்தில் தொடராக வெளியிட்டதோடு, அவற்றை ‘யுத்தத்தின் சாபம்’ என்ற மகுடத்திலும் நூலாக வெளிக் கொணர்ந்தோம். இதன் உச்சமாக ஞானத்தில் வெளிவந்த “காரணங்கள்” என்ற கவிதை இலங்கைப் பாராளுமன்றத்தில் ஈழத்தமிழரின் இலக்கியச் சாட்சியாக வாசித்துக் காட்டப்பட்டதும் ஹன்சாட்டில் பதியப்பட்டதும் ஞானம் இலக்கியப்பணியின் முக்கிய மைல்கல் என்றால் அதுமிகையாகாது.

ஈழத்தின் மூத்த தலைமுறை மற்றும் இளைய தலைமுறை எழுத்தாளர்கள், புலம்பெயர் எழுத்தாளர்கள், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் மட்டுமன்றி போராளிகளின் படைப்புகளையும் ஞானம் வெளியிட்டுள்ளது.

**ஞானம் 150 – ஈழத்துப் போர் இலக்கியம்**

ஞானம் 150 ஆவது நிறைவு இதழ் ‘ஈழத்துப் போர் இலக்கியம்’ எனும் சிறப்பிதழாக இப்போது உங்கள் கரங்களில் தவழ்கிறது. போர் இலக்கியத்தின் பல்பரிமாணத்தையும் இலக்கிய வாசகருக்கு உணர்த்தும் தேவைகருதி ஞானம் இதழ்களில் வெளிவந்த சில

படைப்புகளும் ஏனைய இலக்கிய இதழ்களிலும் படைப்பிலக்கிய நூல்களிலும் வெளியான சிறந்த சிறுகதைகள், கவிதைகள் சிலவும் இங்கு மீள்பிரசுரமாகின்றன.

உலகளாவிய ரீதியில் தமிழாய்வு நிறுவனங்களால் வெளியிடப்படும் சிறப்பு மலர்களே 500 க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்டு வெளிவரும் நிலையில், ஞானம் இலக்கியச் சஞ்சிகையானது ஒரு தனிமனித முயற்சியாக, இந்த ஈழத்துப் போர்க்காலச் சிறப்பிதழை 600 பக்கங்களில் வெளிக்கொணர்வதில் எமக்கு ஒரு தயக்கம் இருந்தது. ஆனால் உலகத் தமிழ் இலக்கியத்திற்கு "ஈழத்துப்போர் இலக்கியம்" என்ற புதிய பகுப்பினை வழங்கும்போது இது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தப் புதிய பகுப்பினை நாங்கள் கீழ்க்கண்டவாறு வகுத்தளித்துள்ளோம்.

**கவிதைகள்:** ஈழப்போரின் தொடக்கத்துக்கான பின்புலங்களை வெளிக்கொணரும் "இரண்டாவது சூரிய உதயம்" என்ற கவிதையை முதலாவதாகவும் அதன்பின்னர் பல்வேறு காலப்பகுதியில் வெளிவந்த போரின் வலிகளை வெளிக்கொணரும் கவிதைகளையும், ஆயுதப்போர் முடிவைக் காட்டிநிற்கும் "காடாற்று" எனும் கவிதையை இறுதியாகவும் உள்ளடக்கி 43 கவிதைகளைப் பிரசுரித்துள்ளோம்.

**சிறுகதைகள்:** ஆயுதப் போரின் தொடக்க காலத்தில் இளைஞர்கள் போராட்டத்திற்குச் சென்றபோது அவர்களது குடும்பங்களில் ஏற்படுகின்ற மனவலிகளையும் சிதைவுகளையும் படம்பிடித்துக் காட்டி நிற்கும் 'கோசலை' என்னும் கதையை முதலாவதாகவும், தொடர்ந்து வந்த காலப்பகுதியில் போர் ஏற்படுத்திய காயங்களைக் காட்டும் படைப்பாளிகளின் சிறுகதைகளையும், போர்க்களத்தில் நின்றெழுதிய போராளிப் படைப்பாளிகளின் கதைகளையும் உள்ளடக்கி இறுதிக் கதையாக போரின் பின் விளைவுகளைக் காட்டிநிற்கும் "வோர் சின்ட்றோம்" கதையையும் பிரசுரித்து மொத்தம் 26 சிறுகதைகளுக்கு இச்சிறப்பிதழில் இடமளித்துள்ளோம்.

**கட்டுரைகள்:** போர் இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் "போரும் இலக்கியமும்' என்ற கட்டுரையை முதலாகக் கொண்டு போர் இலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிக்கொணரும் விதமான விடயங்களை உள்ளடக்கிய 42 ஆளுமைகளின் கட்டுரைகளையும் உள்வாங்கியுள்ளோம். இறுதிக் கட்டுரையாக போர் இலக்கிய நூல்களைத் தொகுத்துக்கூறும் 46 பக்கங்கள் கொண்ட "ஈழத்தமிழரின் போர்க்காலப் பிரசுரங்களும் போராட்ட இலக்கியங்களும்" என்னும் சிறப்புக் கட்டுரையையும் தந்துள்ளோம்.

**நிகழ்த்து கலைகள்:** போரின் வலிகளைப் பன்முகப்பட்ட பார்வையில் காட்டிநின்ற 'மண்சுமந்த மேனியர்' நாடகத்தின் தொடர்முயற்சிகள் பற்றிய நேர்காணலையும் போர்க்காலத்தில் எழுந்த திரைப்படங்கள், குறும்படங்கள் பற்றிய கட்டுரைகளையும் போர்முடிந்த பின்னர் சிங்களத் திரைப்படங்கள் அவைகுறித்த எத்தகைய பதிவுகளை மேற்கொண்டு வருகின்றன என்பது பற்றிய கட்டுரையையும் ஆவணப்படுத்தியுள்ளோம்

**பாடல்கள்:** போர் எழுச்சிப்பாடல்கள் தொடங்கி ஈழத்துப் போர்க்கால மெல்லிசைப்பாடல்கள், வாய் மொழிப்பாடல்கள் பற்றிப் பேசும் கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளோம்.

**ஓவியம்:** போராட்டத்தின் வலிகளைச் சித்திரிக்கும் நவீன ஓவியங்களும், ஓவியம்பற்றிய கட்டுரையொன்றும் இடம்பெற்றுள்ளன.

மேலும், வடக்கில் - யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப் பிரதேசங்களில் போர் ஏற்படுத்திய தாக்கங்கள், கிழக்கில் - திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பில் போர் ஏற்படுத்திய வலிகள், மேற்கில் - கொழும்புவாழ் தமிழ் மக்கள் சந்தித்த இனத்துவேச நெருக்கடிகள் தெற்கில் - சிங்களவர்கள் போரினைப் பார்த்த பார்வைகள், மத்தியில் - மலையகத்தில் போர் ஏற்படுத்திய அதிர்வுகள் என்று இலங்கை பூராவும் எழுந்த போரின் பிரதிபலிப்புகள் (Ripple

effect of war) அடங்கிய ஆக்கங்களை இந்தச் சிறப்பிதழில் தொகுத்துத் தந்துள்ளோம். இது, ஈழத்துப் போரிலக்கியத்தின் ஒரு வெட்டு முகத்தை வழங்கும் என நம்புகிறோம்.

**ஞானத்தின் நன்றிகள்**

இந்தச் சிறப்பு மலரில் மீள் பிரசுரம் செய்வதற்கென நாம் பலரது சிறந்த போர்க்காலச் சிறுகதைகளையும் கவிதைகளையும் சேகரித்திருந்தோம். இருப்பினும் பக்க விரிவு காரணமாக அவற்றை எம்மால் மீள்பிரசுரம் செய்ய முடியவில்லை. அதேவேளை இச்சிறப்பிதழுக்கென புதிதாக ஆக்கங்களை எழுதி அனுப்பிய பலரது படைப்புகளையும் சேர்த்துக் கொள்ள முடியவில்லை ஆயினும் எமது வேண்டுகோளை ஏற்று சிறந்த படைப்புக்களை அனுப்பிய அத்தனை நெஞ்சங்களையும் ஞானம் தலைசாய்த்து வணங்குகிறது.

ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை வெளிக்கொணரும் எண்ணத்தை நாம் வெளியிட்டபோது இந்தச் சிறப்பிதழுக்கென படைப்புகளைப் பெற்றுத்தருவதில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்ட பேராசிரியர் செ. யோகராசா அவர்களுக்கும் திரு. சி. கருணாகரன் அவர்களுக்கும் ஞானத்தின் நன்றிகள் என்றும் உரியது. நண்பர் திரு. செ. சுதர்சன் அவர்களும் இந்த ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை வெளிக் கொணர்வதில் தனது சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார். நண்பர் திரு. சி. விமலன் அவர்களும் பல வழிகளில் உதவியுள்ளார். போர்க்கால இலக்கியம் பற்றிய பின்புலத்தை வெளிக்கொணரும் நோக்கத்துடன் கருத்தாடல் ஒன்றை இச்சிறப்பிதழில் வெளியிட எண்ணினோம். இந்தக் கருத்தாடலில் பங்கேற்ற திரு. வீ. தனபாலசிங்கம், திரு. மு. பொன்னம்பலம், திரு.தெ. மதுசூதனன் அவர்களுக்கும் ஈழத்து இலக்கிய உலகு சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஞானம் இதழின் நிர்வாக ஆசிரியர் திரு. ஞா. பாலச்சந்திரன் அவர்கள் 'ஞானம்' அழகோடும் இளமையோடும் இலக்கிய உலகில் வலம்வர தோள்கொடுத்து வருபவர். இணையத்தினூடாக உலகமெங்கும் பரந்து வாழும் வாசகர்கள், ஞானம் சஞ்சிகையை வாசிக்க வழிசெய்பவர். இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் அவர் உழைப்பின் கதை பேசும். அவருக்கு நான் எப்படித்தான் நன்றி சொல்வேன்!

ஞானத்தின் வாசகப் பெருமக்களே, படைப்பாளிகளே, விளம்பரதாரர்களே, நலன்விரும்பிகளே,

எங்களது இந்த இலக்கியப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் எமக்குத் தோள்தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்துள்ளீர்கள். அதனை நாம் என்றென்றும் மறவோம். இந்த ஈழத்துப்போர் இலக்கியச் சிறப்பிதழைத் தமிழன்னையின் பாதங்களில் சமர்ப்பிக்கும் இந்த உன்னதமான தருணத்தில் எமது இதயங்கனிந்த நன்றிகளையும் உங்கள் யாபேருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**"பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்"**

*நன்றி.*



தி. ஞானசேகரன்

ஞானம், பிரதம ஆசிரியர்

*25.11.2012*

# கருத்தாடல், நேர்காணல்கள்


| | | |
|---|---|---|
| • மொழியே ஆயுதமாக... | | 17 |
| • இலக்கியப்போராளி ஷோபா சக்தி | முருகபூபதி | 194 |
| • குழந்தை ம. சண்முகலிங்கம் | கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் | 328 |


# கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| • போரும் இலக்கியமும் | பேராசிரியர் சபா ஜெயராசா | 13 |
| • ஈழத்துத் தமிழ் இலக்கியம் – மேலெழுந்த வாரியான நோக்கு | நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் | 51 |
| • சமகால இலங்கைத் தமிழ்க் கவிதையில் இனத்துவ முரண்பாட்டின் தாக்கம் | எம்.ஏ.நுஃமான் | 74 |
| • பெண்கள் கவிதைகளில் போர் பற்றிய விசாரணையும் விமர்சனமும் | பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு | 90 |
| • போர்முகம் | கலாநிதி.எம்.எஸ்.எம்.அனஸ் | 102 |
| • கருத்தானம் | கம்பவாரிதி.இ.ஜெயராஜ் | 117 |
| • இந்திய அமைதிகாக்கும் படையின் செயற்பாடுகள் பற்றிய இலக்கியப் பதிவுகள் | பேராசிரியர்.செ.யோகராசா | 122 |
| • போரிலக்கியம் தமிழில் எதிலிருந்து, எங்கிருந்து? | கருணாகரன் | 145 |
| • ஈழப் போர் இலக்கியம் | நிலாந்தன் | 157 |
| • ஈழத்துக் கவிஞைகளின் நவீன கவிதைகளில் போரும் போரியல்வாழ்வும் | அந்துவன் கீரன் | 172 |
| • தமிழ்த் திரைப்படங்களில் ஈழத்தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு | யேசுராசா | 208 |
| • இனப்பிரச்சினை காலத்துக் கவிதைகள் ஒரு நோக்கு | கலாநிதி எம்.ஏ.முஹம்மது றமீஸ் | 230 |
| • "இடர் சுமந்த பயணம்" | சேனத்திரன் | 235 |
| • போர் எழுதிய கவிதை – இருபதில் ஈழத்துக் கவிதை குறித்த பார்வை | கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் | 238 |
| • தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்கள் | சு.ஜெபவி | 248 |
| • ஈழத்துப் போர்க்கால மெல்லிசைப் பாடல்கள் | த.மேகராசா | 269 |
| • "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் " எனும் கவிதைத் தொகுதி மீதான பார்வை | ஏ.எல்.மனாரா | 275 |
| • ஈழத்தின் முதல் யுத்த வெளிப்பாட்டு ஓவியராக மாற்கு | சு.சிவரெத்தினம் | 283 |
| • ஓ.கே.குணநாதனின் போர்க்காலச் சிறுவர் இலக்கியம் | கலாநிதி அகளங்கன் | 289 |
| • கிராமியப் புதல்வர்களின் அரசியற் பாடல்கள் | சி.சந்திரசேகரம் | 296 |
| • போர்க்காலத்துப் புனை கதைகளும் அவை தரும் வரலாற்றுக்கான தகவல்களும் | மு.சிவலிங்கம் | 307 |
| • ஈழத்துப் போர்க் காலக் கவிதை | சோ.பத்மநாதன் | 347 |
| • சிங்கள மொழியில் அமைந்த யுத்தத் திரைப்படங்கள் | இப்னு அஸூமத் | 359 |
| • போர்க்காலப் பிரசவங்கள் | இயல்வாணன் | 361 |
| • எதிர்ப்பு இலக்கியம் | மு.பொ. | 366 |
| • போர்க்கால சிறுகதைகள் மீதான வாசிப்பு | எம்.எம்.ஜெயசீலன் | 371 |
| • மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஈழத்துப் போர்க்கால இலக்கியங்கள் | புலோலியூர் வேல்நந்தகுமார் | 392 |
| • மலையக மக்களும் போர்க்காலச் சூழலும் | தெளிவத்தை ஜோசப் | 403 |
| • போரின் இருளில் தொலைந்து போன குரல்வளைகள் | தானா விஷ்ணு | 406 |


உள்ளே

| | | |
|---|---|---|
| • இணைப்புக்கான பாலம் ஆங்கிலக் கவிதைகள் | அ. அன்ரன் அன்பழகன் | 412 |
| • கிழக்கிலங்கை முஸ்லிம்களின் போர்க்கால வாய்மொழிப் பாடல்கள் | எம்.ஐ.எம்.ஹனிபா இஸ்மாயில் | 416 |
| • யுத்தத்தின் சாபம் – சில மனப்பதிவுகள் | அந்தனி ஜீவா | 424 |
| • வன்னிப் பிரதேச நாவல்கள் | இரா. சிவலிங்கம் | 425 |
| • ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள் | கு.றஜீபன் | 437 |
| • ஒரு முன்னாள் பெண்போராளியின் வாழ்வியல் பதிவுகள் | கலாநிதி துரை.மனோகரன் | 457 |
| • உயிரின் வாசம் "பெயரிடாத நட்சத்திரங்கள்" | சு.குணேஸ்வரன் | 472 |
| • போர்க்கால நாடக அரங்கச் செயற்பாடுகள் | சுந்தரலிங்கம் சந்திரகுமார் | 484 |
| • வன்னி மண்ணின் போர்க்காலக் கதைகள் | ச. முருகானந்தன் | 486 |
| • "போர்க் காலக் கதைகள்" – இரசனைக் குறிப்பு | முருகேசு ரவீந்திரன் | 511 |
| • போரும் கவிதையும் மஞ்சுள வெடிவர்த்தனவின் மனிதத்தை நோக்கிய சகோதரத்துவக் குரல் | லறீனா அப்துல் ஹக் | 521 |
| • துப்பாக்கியால் ஒருபோதும் சுடாத கொமாண்டோக்கள் | செல்லத்துரை சுதர்சன் | 529 |
| • ஈழத் தமிழரின் போர்க்காலப் பிரசுரங்களும், போராட்ட இலக்கியங்களும் | என்.செல்வராஜா | 553 |


# கவிதைகள்


| | | |
|---|---|---|
| • இரண்டாவது சூரிய உதயம் | சேரன் | 25 |
| • கோணேஸ்வரிகள் | கலா | 34 |
| • புத்தரின் படுகொலை | எம்.ஏ.நுஃமான் | 40 |
| • வாயடைத்துப் போனோம் | முருகையன் | 45 |
| • 1983 ஆண்டு ஜூலை 23 – 25 களில் | ஜின்னாஹ் ஷரிபுத்தீன் | 57 |
| • காலனின் கடை விரிப்பு | மு.பொன்னம்பலம் | 59 |
| • எனது நகர் | வாசுதேவன் | 65 |
| • மலரினைச் சாத்துமென்! | அஸ்வகோஷ் | 70 |
| • தொலைந்த வாழ்வு | முரளீஸ்வரன்.ஆர் | 95 |
| • மரணங்கள் மலிந்துவிட்ட பூமி | புதுவை இரத்தினதுரை | 100 |
| • கடலம்மா.........! | நிலாந்தன் | 101 |
| • குண்டுமழை ஓயாதோ | சோ.பத்மநாதன் | 107 |
| • சுற்றிவளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்குகுழி | கருணாகரன் | 127 |
| • இனிய தேசமே | மேஜர் பாரதி | 135 |
| • மீதம் | முல்லை முஸ்ரீபா | 141 |
| • கொக்கட்டிச்சோலை 166 | நட்சத்திரன் செவ்விந்தியன் | 160 |
| • படை போன பிறகுகண்ட என் அலரிமர மாமி | சோலைக்கிளி | 163 |
| • இடையில் ஒரு நாள் | ஊர்வசி | 165 |
| • ஸெய்த்தூன் | அஷ்ரஃப் சிஹாப்தீன் | 170 |
| • ஒரு மயானமும் காவல் தேவதைகளும் | பஹீமா ஜஹான் | 179 |
| • திரும்ப முடியாத நகரம் | தீபச்செல்வன் | 183 |
| • தேடி அடைவாய் | அம்புலி | 198 |
| • 19.05.2009 | தமிழ்நிதி | 245 |
| • அகால மரணங்கள் | தா.இராமலிங்கம் | 253 |
| • விசரி | பா.அகிலன் | 288 |
| • சொல்லாமல் போகும் புதல்வர்கள் | ஒளவை | 294 |
| • பாய்த்தோணி | இக்பால் அலி | 300 |

- இங்கு வாழ விருப்பமில்லாமல்தான்.... கவிஞர்.செ.குணரத்தினம் | 301
- காரணங்கள் பெனி | 302
- கருவறையிலிருந்து ஒரு கதறல்....... ஞா.பாலச்சந்திரன் | 306
- காவு கொள்ளப்பட்ட வாழ்வு ஏ.எம்.றஷ்மி | 314
- துப்பாக்கிக் குழந்தை சண்முகம் சிவலிங்கம் | 332
- மேலும் சில இரத்தக் குறிப்புக்கள் அனார் | 335
- கேட்டாயா காற்றே...... சாருமதி | 370
- மரண நனவுகள் கல்வயல் குமாரசாமி | 375
- துயர் காலம் அமரதாஸ் | 391
- இலையுதிர்கால நினைவுகள் வ.ஐ.ச.ஜெயபாலன் | 402
- "கரிப்புமணி" நிலம் கைவந்து சேர்ந்தது! தமிழவள் | 405
- செப்ற்றெம்பர் நான்காம் நாள் (மொழிபெயர்ப்பு) சி.சிவசேகரம் | 415
- உரக்கச் சொல்லோம் தமயந்தி | 442
- மீன் கொட்டிக்கிடக்கிறது ப.க. மகாதேவா | 477
- கண்கள் குருடாகி...! கால்கள் முடமாகி...! காதுகளும் செவிடாகி...! சமரபாகு சீனா உதயகுமார் | 498
- காடாற்று சேரன் | 509


# சிறுகதைகள்


- கோசலை ரஞ்சகுமார் | 60
- அம்மாளைக் கும்பிடுகிறானுகள் | 112
- மண்ணோடு போய்.......... ஓட்டமாவடி அறபாத் | 152
- அரசனின் வருகை உமா வரதராஜன் | 188
- உள்ளே எரியும் தீ அம்புலி | 201
- காட்டுப்பூனைகளும் பச்சைக் கிளிகளும் தி.ஞானசேகரன் | 224
- கொட்டி கந்தவுற (புலிகளின் முகாம்) (மொழிபெயர்ப்பு) வ.அ.தங்கவேலாயுதம் | 257
- ஷெல்லும் 7 இஞ்சிச் சன்னங்களும் செங்கை ஆழியான் | 303
- மனிதம் நந்தினி சேவியர் | 319
- அழுவதற்கு நேரமில்லை தாமரைச்செல்வி | 320
- கண்ணீரினூடே தெரியும் வீதி.......... தேவமுகுந்தன் | 342
- மஞ்சள் வரி கறுப்பு வரி த.மலர்ச்செல்வன் | 353
- போர் வி.ஜீவகுமாரன் | 385
- உவப்பு தெணியான் | 398
- கடல் எப்பவும் இருக்கும் முல்லை யேசுதாசன் | 420
- தொலையும் பொக்கிசங்கள் வதிரி.இ.இராஜேஸ்கண்ணன் | 432
- நான் இப்படி ஒருநாளும் அழுததில்லை ஆவூரான், மெல்பேர்ண் | 440
- கபால பதி திரேசா | 443
- கருவறைக் கனவுகள் வவுனியூர் இரா.உதயணன் | 452
- மாணிக்கம் வேல் அமுதன் | 463
- படுவான்கரை சக்கரவர்த்தி | 464
- பதுங்கு குழி நந்தி | 478
- சாருமதியின் வீடு தாட்சாயணி | 491
- ஆத்ம விசாரம் அ.ச.பாய்வா | 499
- விலங்கு நடத்தைகள்....... அம்ரிதா ஏயெம் | 504
- வோர் சின்ட்றோம் *(War Syndrome)* ஞா.பாலச்சந்திரன் | 515

# போரும் இலக்கியமும்

போர்களில் மிகவும் தீவிரமானது 'முழுநிலைப் போர்" (Total war) என்று ஆய்வாளர்குறிப்பிடுவர். நாட்டு வளங்கள் அனைத்தையும் போரைக் குவியப்படுத்திப் பயன்படுத்துதல் 'முழுநிலைப் போர்" என்று சமூகவியலிலே குறிப்பிடப்படும். அத்தகைய போர், மிகுதியான மனித அவலங்களையும் ஒன்றுமே அறியாத அப்பாவிகளை அதீத துன்பநிலைக்கும் உள்ளாக்கி விடும்.



சபா.ஜெயராசா

அவ்வாறான கள எழுபுலம் துன்பியல் இலக்கியங்களின் தோற்றத்துக்கும், தர மதிப்பீடுகளில் உச்ச நிலைகளுக்கு இட்டுச் செல்லும், உள்ளடக்கங்களையும் கொண்டிருக்கும்.

போர் நிகழ்த்தும் சமூக அதிர்வுகள் மொழி நிலையிலும் தாக்கங்களை ஏற் படுத்தும். புதிய புதிய படிமங்கள் மேலெழத் தொடங்கும் இருப்பும், வாழ்க்கையும் தொழிற்பாடுகளும் மொழியும் 'பதகளம்" (Anxiety) என்ற உளவியல் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும். போரும் மேலாதிக்கமும் பிரிக்க முடியாத நிலையில் பதகளிப்பு மேலும் அவலம் மிக்கதாக மாறும். அந்நிலையில் போலியான இலக்கியப் புனைவுகள் கவிழ்ந்து விடும். அவை இலகுவாக இனங் காணப்பட்டுவிடும்.

போர்கள் பற்றி ஆராய்ந் தவர்கள் ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்துள்ளனர். அதாவது போர்களினாற் கிடைக்கப்பெறும் வெற்றிக் களிப்பிலும் பார்க்க, தோல்வி களினாற் கிடைக்கப்பெறும் படிப்பினைகளே பெறுமதி வாய்ந்தவை என்ற அந்தக் கருத்து ஆழ்ந்து நோக் குதற்குரியது. அந்நிலையில் 'போர்க்கால இலக்கியம்" மற்றும் 'போருக்குப் பின் னரான இலக்கியம்" என்ற இருவகைப் பாடுகளின் மதிப்பீடுகள் எழுகோலம் பெறுகின்றன.

போர்க்கால இலக்கியம் மகிழ்ச்சிக் குரியதன்று. இலக்கியத்தின் தலையாய நோக்கம் 'மகிழ்வு பெறல்" (Enjoyable) என்ற கருத்தைப் போர்க்காலம் மறு பரி சீலனைப்படுத்தும். பதகளிப்போடு நேர் நிலையிலும் எதிர்நிலையிலும் ஈடுபட்டு மேலோங்கிச் செல்லல் அங்கே வலிமை பெறும்.

வாசகர் கொடுப்பவற்றை உள்வாங்கு வோராய் இருத்தல் இல்லை. மாறாக 'வினைப்படுவோராய்" இருப்பர். அந் நிலையிலே போலியான இலக்கியங்களும், பரப்புரைகளும் இலகுவாகத் தள்ளுபடி செய்யப்பட்டு விடும்.

நேர் அனுபவங்களில் இருந்து கூர்மைப்பட்டு எழும் இலக்கியங்களை

நோக்கிய கவன ஈர்ப்பு ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் கார்ல் பொப்பர் என்பவர் முன்வைத்த விஞ்ஞான மெய்யியற் கருத்து இணைத்து நோக்குதற்குரியது. அதாவது விஞ்ஞானக் கோட்பாடுகள் வரன்முறையாகக் கட்டமைப்புச் செய்யப் பட்டிருந்தாலும் அவற்றினுள்ளே பொய்ம்மையும் (Falsification) உட்புகுந் திருக்கும். அது கண்டறியப்பட்டதும் குறித்த கோட்பாடு நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவிடும் என்று அவர் குறிப்பிட்டார். (அவரது ஆய்வில் ஓர் அரசியல் நோக்கு உட்புகுந்திருந்தது). அக்கருத்து போர்க்கால இலக்கிய ஆக்கங்களுக்கும் நீட்சி கொள்கின்றது. உட்புகுந்த பொய்யுரைக்கும் இலக்கியப் புனைவுகள் உடனடியான நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டுவிடும். அதாவது, ஆக்கச் செயல்முறை நடப்பியலைத் தழுவாவி டிலோ, அல்லது நடப்பியலின் உள்ளே சுளு வாகப் பொய்ம்மைகளைச் செருகிவிடலோ இலகுவாக இனங்காணப்பட்டுவிடும்.

போர்க்கால இலக்கியங்களிற் கூர்மை யான உணர்ச்சிகளுடன் கற்றலுடனும் கற்பித்தலுடனும் செறிந்திருக்கும் பரி மாணங்கள் முக்கியமானவை. அறிவும் உணர்ச்சியும் கலந்து ஊடுருவிச் செல்லும் நிலையில் வாசிப்போரின் உள்ளங்கள் தனித்து உணர்ச்சிகளோடு மட்டும் சங்க மித்தல் இல்லை. கருத்துக் கையளிப்பு என்பது சாதாரண காலங்களை விடப் போர்க்கால இலக்கியங்களில் அதிக முக்கியத்துவம் பெறும்.

கிரேக்க மரபில் கவிதை என்பது **"செய்தல்"** என்று குறிப்பிடப்படுகின்றது. கவிஞர் செய்வோராகின்றனர். கருத் தற்றவை செய்தலாகாது. சமூகத்திலே வர்க்க வேறுபாடுகள் வளர்ச்சியடைய 'நடப்பு வாழ்க்கை நிலைசார்ந்த செய்தல்" ஒடுக்கப்படுவோரிடத்து இடம் பெறலா யிற்று. 'பொழுதுபோக்கு நிலைச் செய்தல்" ஒடுக்குவோருக்குரியதாயிற்று. அதாவது, 'இலக்கியம் செய்தல்" என்பது வர்க்க நிலைப்படலாயிற்று.

போர்கள் சுய விளக்கம் நோக்கிய நகர்ச்சிகளை ஏற்படுத்தும். உலகின் மெய்யியல் வளர்ச்சியின் பின்னெழுகை யாகப் போர்கள் அமைந்துள்ளன. பௌத்தம் உள்ளிட்ட சமயங்கள் போர் நிராகரிப்பின் இலட்சிய வடிவங்களாயின. ஐரோப்பிய போர் அனுபவங்களே **'இருப்பியம்"** என்ற மெய்யியற் கோட்பாட்டுக்கு வலுவூட்டி யது. புறநிலவரங்களை நோக்காது மனித அகவயப்பாடு தொடர்பான தேடல் நீட்சிக்கு இருப்பியம் ஆழ்ந்து சென்றது.

அத்தகைய சிந்தனைகள் போர் இல்லாத ஒரு சமுதாயத்தை நீட்சி கொள்ளச் செய்ய முடியாதிருத்தல் போரின் பின்விசைகளாக இருக்கும் பொருண்மிய மேலாதிக்கம், மற்றும் இனமேலாதிக்கம் ஆகியவற்றின் மீது கவனக் குவிப்பை ஏற்படுத்துகின்றது. அந்த விசைகளைத் தரிசிக்காத இலக்கியங்கள் பதர் இலக்கியங்களாகிவிடும். கருத்துச் செறிவு, போர் இலக்கியங்களுக்கு முக்கியமானவை யாயிருக்கும்வேளை சுலோகப்படுத்தலை யும், இலக்கியப் படுத்தலையும் வேறு பிரித்தறிதல் முக்கியமானது.

போர் என்பது **'விளைவின் முகிழ்ப்பு"** (Product) என்று குறிப்பிடப்படும். சமூக, பொருளாதார அரசியற் செயல்முறை களின் தொடர்ச்சியிலிருந்து அது தோற்றம் பெறும். அந்நிலையில் தொடர்ச்சியான மனித மனப்பதிவுகளுக்கு ஈடுகொடுக் கக்கூடிய பரிமாணங்களும் போர்க்கால இலக்கியங்களுக்குரியவை. அந்நிலையில் தொடர்ச்சியான அழுத்தங்களோடு இணைந்த ஆழ் மனப்பதிவுகள் முக்கியத் துவம் பெறுகின்றன. போர்க்கால இலக்கி யங்கள் பொதுவாக ஆழ்மன உளவியலோடு தோய்ந்து எழுந்தவையாக இருக்கும். அந் நிலையில் பிறிதொரு போலித்தனமும் இனங் காணப்படத்தக்க நிலையில் இருக்கும்.

அதாவது, போரின் பொழுது, எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் குத்தகைக்கு அமர்த்தப்படுதல் உண்டு. பட்டு அனுபவித்து ஆழ்மனப்பதிவுகளை உள்ளடக்கிய மனங்களால் வலிந்து மேற்கொள்ளப்படும் குத்தகைப்

புனைவுகளைப் பிரித்தறிதல் கடினமான செயலன்று. மதிநுட்பத்தால் ஆழ்மன உணர்வுகளுடன் இணைந்த ஆக்கங்களை அவர்களாற் புனைந்தெழுத முடிந்தாலும் யாதாயினும் ஒரு புள்ளியில் போலித்தனமானது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.

பின்நவீனத்துவவாதிகள் குறிப்பிடும் **'நூலாசிரியரின் இறப்பு"** என்ற கருத்தைப் போர் இலக்கியங்கள் கேள்விக்கு உள்ளாக்கு கின்றன. 'போரின் வடு" என்ற தளத்தில் வாசகரும் நூலாசிரியரும் இணைந்து நிற்கும்பொழுது பொருள் விலகல் நீண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும்.

மொழியின் மீது ஏற்பட்ட சந்தேகமே நூலியத்தின் தகர்ப்பையும், நூலாசிரியரின் இறப்பையும் தோற்றுவித்தது. போரிலக்கியங்களின் ஒரு முக்கிய பரிமாணம் அதில் உட்பொதிந்துள்ள ஆவணத்தன்மையாகும். ஆவணப்படுத்தல் **புறநிலை** (Objective) இயல்பைக் கொண்டது.

புறநிலைப்பதிவு விஞ்ஞான எழுத்தைப் போன்று நெகிழா இயல்பைக் கொண்டுள்ளமையால் நூலியத்தகர்ப்புக்கு இடமில்லாமற் போகின்றது. அதே வேளை புறநிலைப் பதிவுகள் மட்டும் இலக்கியமாகி விடுதல் இல்லை. அகநிலையான உணர்வுகளும் அங்கே கலந்திருத்தல் இலக்கிய மயமாக்கலுக்குரிய தேவையாகின்றது. அந்நிலையில் அகநிலைக்கும் புறநிலைக்கு மிடையேயுள்ள எல்லை போரிலக்கியங்களிலே அழிந்து விடுகின்றது. வாசிப்பின் பொழுது நூலியத்தகர்ப்பு (Deconstruction) ஏற்படா வண்ணம் புறநிலைப் பண்பு இறுகப்பிடித்துக் கொள்வதனால் நூலாசிரியரின் இறப்பு என்ற கருத்து கேள்விக்குரியதாகின்றது.

நூலாசிரியரும் வாசகரும் குறிப்பிட்ட சூழலால் உருவாக்கப்பட்டும் கட்டமைப்புச் செய்யப்பட்டும் மேலெழுந்தவர்கள் என்பதை மனங்கொள்ள வேண்டியுள்ளது. அத்தகைய "உருவாதற்கட்டமைப்பு" விலகலைக் காட்டிலும் இணைதலுக்குரிய விசைகளையே வலுப்படுத்திக் கொண்டிருக்கும்.

போர்ச் சூழலின் வாசகர் **"மீநூலியம்"** (Meta text) பற்றிய உற்றுணர்வு உடையோராயிருப்பதற்குரிய வாய்ப்புக்களையும் கொண்டிருப்பர். ஓர் இலக்கியம் எவ்வாறு ஆக்கம் பெறுகின்றது, உருவெடுக்கின்றது என்பவற்றை அறிந்து கொள்ளும் நிலைகளை 'மீநூலியம்" என்ற கருத்தாக்கம் குறிப்பிடுகின்றது. களநிலவரம் பற்றிய அறிவை வாசகர் கொண்டிருத்தல் மீநூலியத் தரிசனத்தை வளம்படுத்துகின்றது.

மனித மனங்களிலே போர் குரூரமான தாக்கங்களை விளைவிக்கவல்லது. அதிலும் இனத்துவ நிலையிலான போர் மேலும் குரூரமானதாக்கங்களை ஏற்படுத்த வல்லது. நிர்க்கதி நிலையிலான குதிர்ப்பு அவலம் (Panic) போர்ச்சூழலில் எழுந்த வண்ணமிருக்கும். தொடர்ச்சியான பதகளிப்பு, நடத்தை விலகல், இசைவாக்கற் பிரச்சினைகள், உள அழுத்தம், தொடர்பாடல் ஒழுங்குக்குலைவு, தனியாள் இயல்புகளின் குலைவு, பிறழ்வு அழுத்தங்கள், கற்றலிலே ஈடுபட முடியாத குலைவு

ஞானம் 13ஆம் இதழில் (ஜூன் 2001)

**பேராசிரியர். பொன்.பூலோகசிங்கம் அவர்களது நேர்காணலில்...**



***தி.ஞா: இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைத்தால் புலம்பெயர்ந்த தமிழர் தாய் நாடு திரும்புவார்களா?***

*பொ.பூ.: புலம்பெயர்ந்த தமிழர் பல்வேறு தரத்தினர். மூத்தோர் பலர் தாயகம் மீள்வதை ஆவலுடன் எதிர்பார்க்கலாம். நடுவயதினர் சிந்தனைகள் ஒரே விதமாக இருக்க வாய்ப்பில்லை. இங்கு (அவுஸ்திரேலியாவில்) வாழ்வும் வளமும் பெற்றிருப்பவர்கள், அங்கு போய் என்ன செய்வது என்று சிந்திப்பார்கள் அல்லவோ? இளைய சமுதாயம், முற்றிலும் வேறுபட்ட சூழலில் நடை பயின்று வளர்ந்தவர்களுக்கு - எது தாய் நாடு? தன் தாய் பிறந்த நாடா? தத்தையின் நாடா? அல்லது தான் முக்கியத்துவம் அளிக்கும் நாடா? தங்கள் கருத்து கனவுலகின்பாற்பட்டதாயினும் அவிழ்க்க முடியாத சிக்கலை உடையது.*

நிலை, கண்முன்னே நிகழும் அவலங்களால் ஏற்படும் அதிர்ச்சி, இழப்புக்களால் நிக ழும் அதிர்ச்சி, பயத்தின் மேலாதிக்கம், தொடர்புபட்ட அச்சம், உடலும் உள்ளமும் இணைந்த அவலங்கள், என்றவாறு தோற்றம் பெறும் உளவியற் கோலங்கள் போர்க்கால இலக்கியங்களை அடையாளப்படுத்தும் உளவியற்பதிவுகளாக இருக்கும்.

போரின் விசைகளால் மாறுபாடு கொண்ட பண்பாட்டுக்கோலங்கள் உருவாக் கம் பெறும். ஆயுதப் பண்பாட்டின் எழுச்சி மனிதத்தை விலையற்ற பொருளாக்கிவிடும். ஆபத்துக்கள் திரண்டெழுந்த வண்ண மிருக்கும். சமூக வரைபடத்தை (Social Map) உருவாக்குதலும் பராமரித்தலும் கடினமாக இருக்கும்.

போரோடு இணைந்த முக்கியமான ஒரு விளைபொருள் அகதி முகாம் நிறுவலாகும். அதனை அடியொற்றிய இலக்கிய ஆக்கங்கள் தனிப்பிரிவாக அடையாளப்படுத்தப்படும். போர்களிலும் அகதி முகாம்களிலும் பெண்கள், குழந்தைகள் துடிப்பான இளைஞர்கள் மற்றும் முதியோரின் நிலை மிகுந்த அவலம் நிரம்பியதாக இருக்கும். குரூரமான காட்சிகள் சார்ந்த பயம் ஆழ்மனங்களிலே உறங்கிக் கொள்ளும்.

அவ்வாறான போர்ச்சூழலில் முகிழ்த் தெழும் இலக்கியங்கள் ஏனைய இலக்கியங்களிலிருந்து பிரித்தறியக் கூடிய உளவியல் நிலைத் தனித்துவங்களைக் கொண்டிருக்கும்.

போரின் அழுத்தங்களைக் கூறாது, 'புத்திமதி" கூறும் இலக்கியங்கள் இனங் காணப்படத்தக்கவையாயிருக்கும். புத்திமதியின் எழுபுலத்தில் அரசியல் ஒளித்துக் கொண்டிருக்கும் போருக்குரிய அரசியலும் புத்திமதிக்குரிய அரசி யலும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றிருக்கும்.

போரின் உட்கிடையாக இருப்பது **கொடுஞ்செயல்** (Violence). போரின்போது கொடுஞ்செயல் பகிர்ந்தளித்துப் பரவ விடப்படும். அந்நிலையில் எங்கும் எதிலும் எவற்றிலும் கொடுஞ்செயல் பரவலுற் றிருக்கும். பலநிலைகளில் அது வெளிவந்து கொண்டிருக்கும். முழுநிலைப் போரில் மனிதரின் அடிப்படையான தேவைகளிலும் அது நீட்சி கொண்டிருக்கும். அவற்றுடன் தொடர்புடைய இலக்கியங்கள் பிறிதொரு நிலையிலே தனித்துவமான சாயல்களைக் கொண்டிருக்கும்.

போரின் பொழுது உயிர்ப்புள்ள கொடுஞ் செயற்படிமங்கள் உலாவவிடப் படும். இலக்கியங்களில் அத்தகைய படிமங்களை நேரடியாக எடுத்தாளல் சிரமமாக இருக்கமாட்டாது. ஆனால் அவற்றை அடியொற்றிய ஆக்கங்கள் எழுத்தாளர்களுக்குரிய தனித்துவங்களை வெளிப்படுத்தி நிற்கும்.

போரும் வலிந்து உருவாக்கப்படும் சமூக அசைவியமும் (Mobility) தவிர்க்க முடியாதவை. அந்நிலையில் மரபு வழியான ஆசாரங்களும், விழுமி யங்களும் நடத்தைகளும் தகர்ப்புக்கு உள்ளாக்கப்படும். அத்தகைய சிதறலும் குதறலும் இலக்கிய ஆக்கங்களுக்குரிய பலவிதமான கருக்களை அள்ளிக் கொடுத்த வண்ணமிருக்கும். அந்நிலை யிற் போர்க்காலம் என்பது கலை இலக் கியங்களுக்குரிய செறிவான கருக்களை அள்ளி வழங்கும் காலமாகவும் இருக்கும். மனித அவலங்களினூடேதான் அத்தகைய கருக்கள் அள்ளி வழங்கப்பட்டுக் கொண் டிருத்தலை நினைவிற் கொள்ள வேண்டும்.

போர் இலக்கியங்களை எளிமையான வாய்ப்பாடுகளுக்குள் அடக்கிவிட முடியாது. சிக்கலான நிலவரங்களாற் போர்கள் மீண்டெழுதலால் மேலோட்ட மான பார்வை அபத்தம் விளைவிக்க வல்லது. போரிலக்கியங்களின் பிறிதொரு வகைப்பாடாக இருக்கும். "போராளிகளே படைக்கும் இலக்கியம்" அனுபவ நிலையிலே தனித்துவமானது.

இலக்கியம் என்று கருதாது அவர்கள் எழுதி வைக்கும் குறிப்புக்களும் இலக்கியப் பெறுமதியுடையனவாயிருக்கும்.

மொழியே ஆயுதமாக...

# ஈழத்துப் போர் இலக்கியம்

## ஒரு கருத்தாடல்

இக் கருத்தாடலில் பங்குபற்றியோர்:

- **திரு. வீ. தனபாலசிங்கம்**
  (தினக்குரல் பிரதம ஆசிரியர்)
- **திரு. மு. பொன்னம்பலம்**
  (பிரபல கவிஞர், விமர்சகர்)
- **திரு. தெ. மதுசூதனன்**
  (விமர்சகர்,பிரதம ஆசிரியர் 'ஆசிரியம்', 'சமூகவெளி')

இக்கருத்தாடலை ஆற்றுப்படுத்தியவர்:
'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்
**திரு. தி. ஞானசேகரன்**

**தி.ஞா.: போரியல் இலக்கியம் பற்றி குறிப்பிடும் போது, உலக நாடுகள் பலவற்றில் பல்வேறு கால கட்டங்களில் போர்கள் நடந்திருக்கின்றன. அவை தொடர்பான இலக்கியங்களும் வந்திருக்கின்றன. அதே போன்று எமது நாட்டில் நடைபெற்ற போர் பற்றியும் பல இலக்கியங்கள் எழுந்திருக்கின்றன. அந்த இலக்கியங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். அவை தொடர்பான வரலாற்று ஆவணமாக 'ஞானம்' 150ஆவது இதழ் அமையவேண்டும் என்ற நோக்குடன் இந்த இதழை வெளிக்கொணர்கிறோம். முதலில் போர்க்கால இலக்கியம் பற்றிய உங்கள் கருத்தைக் கூறுங்கள்?**

**மு.பொ.:** போர்க்காலம் என்னும்போது அது பற்றிய வரையறைகளை வைத்துக் கொள்வது தடம் புரளாது எம்மைப் பார்த்துக் கொள்ளும். முதலாம், இரண்டாம் உலகமகாயுத்தங்கள் உலக நாடுகளைப் பாதித்ததுபோல் வேறெதுவும் இருந்ததில்லை. அதுபற்றி எண்ணிறந்த இலக்கிய வெளிப்பாடுகள். கொதிக்கும் எரிமலை கக்கும் குழம்பே பயிர் விளைச் சலுக்குரிய பசளையாய் இருப்பது போல் யுத்தத்தின் கொடுமைகளே போர் இலக்கியங்களின் விளைநிலமாயிற்று. "போரே நீ போ" என்ற (FAREWELL TO ARMS) நாவலை எழுதினான், முதலாம் உலக மகாயுத்தத்தில் பங்குபற்றி அதில் காயமடைந்த ஏனஸ்ற் எமிங்வே. ஸ்பானிஷ் சர்வாதிகாரி ஃபிராங்கோவை எதிர்த்து நிகழ்ந்த உள்நாட்டுப் போரில் உலகத்தின் அனேகமான புத்திஜீவிகள் பங்குபற்றினர். இலங்கையிலிருந்து பிலிப் குணவர்த்தனா சென்று பங்குபற்றினார். மீண்டும் இதில்வந்து எமிங்வே பங்குபற்றியது மட்டுமல்லாமல் உலகின் தலைசிறந்த நாவல்களில் ஒன்றான FOR WHOM THE BELL TOLLS (யாருக்காக மணி அடிக்கிறது?) என்ற நாவலை எழுதினான். எறிக் மறியா றிமார்க்யூ (ERIC MARIA REMERQUE) என்ற பெயரை படித்தவர்கள் மட்டுமல்ல, அனேகமான நம் எழுத்தாளர்களே அறிந்திருக்கமாட்டார்கள். முதலாம் உலகப் போர் பற்றிய மிகச் சிறந்த நாவலான ALL

QUIET ON THE WESTERN FRONT (மேற்குப் பகுதியில் எல்லாம் அமைதியாக உள்ளது) என்ற ஆக்கத்தை தந்தவர் இவர்தான். 1914இல் 18 வயதில் பாடசாலையிலிருந்து நேரடியாகவே போருக்குச் சென்ற இவர் பட்ட துன்பம் கொஞ்சமன்று. இவர் போரில் இருந்தபோது தாயை இழந்தார். நண்பர்கள் அனைவரும் போரில்கொல்லப்பட்டனர். இவர் யாருமற்ற நிலையில் விடப்பட்ட போது இந்நாவலை எழுதினார். ஜேர்மனியரின் பார்வையில் இது எழுதப்பட்டாலும் போரின் கொடுமையைச் சிறப்பாகக் காட்டுவதில் இதனோடு எதுவும் போட்டிபோட முடியாது. இன்றைய அமெரிக்க உலகின் மாபெரும் புத்திஜீவியான NORMAN MAILER இரண்டாம் உலகப் போரில் பங்குபற்ற வேண்டுமென்பதற்காக சாதாரண கல்வியறிவற்ற ஒருவனாக பொய் சொல்லி - அவன் படித்தவன் என்ற உண்மை சொல்லப்பட்டால் அவனைப் போர்க்களத்துக்கு அனுப்பாது எழுத்து (CLERICAL) வேலைகள் ஏதாவது கொடுத்துவிடுவார்கள் என்பதால் - காலாட்படையில் சேர்ந்து கொண்டான். அதன் விளைவாக அவன் எழுதியது உலகப் பிரசித்திபெற்ற THE NAKED AND THE DEAD என்ற நாவலாகும். யப்பானியரின் தாக்குதலுக்குள்ளான பர்மா பகுதியில் விடப்பட்ட அவன் போரின் அவலங்கள் பற்றி அழகாக எழுதிச் செல்கிறான். தாக்குதலுக்கு முன்னேறிச் செல்லக் கட்டளையிடப்படும் போது, சில சிப்பாய்கள் பீதியினால் 'வயிற்றாலை அடித்து' மலங்கொட்டக் கொட்ட ஓடுவதும் மயங்கி விழுவதும் என்று நரக வேதனைகள் அங்கே சித்திரிக்கப்படுகின்றன. 1961இல் நடந்த இந்திய - சீனப்போர் பற்றிய படைப்புகள் எதுவும் இந்திய எழுத்தாளர்களால் எழுதப்படவில்லை, ஆனால் அதுபற்றி ஈழத்து எழுத்தாளரான மு.த.வினால் வித்தியாசமான குறுநாவல் 'சுஸூல்' என்ற தலைப்பில் எழுதப்பட்டது. இதைப் படிக்க விரும்புவோர் அவரது முழுத் தொகுப்பும் அடங்கிய நூலில் காணலாம். பிரான்ஸ் தேசம் நாஸிப் படைகளால் முற்று முழுதாகக் கைப்பற்றப்பட்டதை PLAGUE நோய்க்கு குறியீடாக வைத்து ALBERT CAMUS ஆல் எழுதப்பட்ட நாவல் ஓர் அற்புதப் படைப்பாகும். இக்காலத்தில் ஷோன்போல் சாத்தரால் (SATRE) எழுதப்பட்ட ஈக்கள் (FLIES) என்ற நாடகம் மற்றொன்று.

**தி.ஞா.: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஈழத்து ஆயுதப்போர் 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுள்ளது. அது இலக்கிய உலகில் ஏற்படுத்திய தாக்கங்களைக் கூறமுடியுமா?**

**மு.பொ:** அப்படிப் பார்ப்பதானால் தமிழரசுக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிரான காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம். ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம் அதைத் தொடர்ந்து வந்த 56, 57, 58, 77, 83 கலவரங்கள் அதன்பின் வந்த ஆயுதப் போராட்ட எழுச்சி என்று நாம் ஆரம்பத்திலிருந்து பார்க்கவேண்டும். ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தின் போது சுதந்திரன் பத்திரிகையில் 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்று வெண்பாவில் ஈற்றடி கொடுத்து கவிதை பாடும்படி வழிப்படுத்தினார் மஹாகவி. தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளில் ஒன்று பின்வருமாறு:

**சங்கத் தமிழுண்டு சங்கிலியன் நெஞ்சுண்டு**
**பொங்கும் மறக்குலப் போர் பண்புண்டு – சுங்கானே**
**பண்டாவுக்கு இஃது பகர்க பலரறியா**
**நண்டெழுத்து வேண்டாம் நமக்கு.**

இப்போராட்டம் வடபகுதியில் சூடு பிடித்தபோது, தென்பகுதியில் தமிழ் எழுத்துக்கள் தார்பூசி அழிக்கப்பட்டன. உடனே மஹாகவி கொடுத்த ஈற்றடி

'தார்பூசிற் சாமோ தமிழ்' என்பதாகும். 1958 ஆவணியில் அகிம்சைப் போராட்டம் எனக் கூறி அதற்கான மாநாடு கூட்டியபோது நீலாவணன் பின்வருமாறு பாடினார்:

காவினில் வந்து கருங்குயிலொன்று கதவைத் திறந்திடுவீர்
ஆவணி வந்தது ஆவணிவந்தது ஆழ்துயில் நீங்குமென
கூவிய இன்னொலி கேட்டு மகிழ்ந்தனர் கூடினர் எம்தமிழர்
சாவது போரினில் சர்க்கரை யாம் எனச் சங்கொலி கேட்குதடி

இதே காலத்தில் பிசிறற்ற நடையில் காசி ஆனந்தன் பின்வருமாறு பாடினார்:

"தூற்றினார் தமிழை என்னும் துடித்திடும் செய்திகேட்டு
ஆற்றொணா நெஞ்சினோடு அங்கவர் மண்ணுக்கேகி
ஏற்றினாள் சேரன் கல்லை எதிரியின் சிரம்மீதென்ற
கூற்றினைக் கேட்ட பின்னும் கூனுமோ தமிழன் வீரம்!"

வேறு நாடுகளிலும் இவ்வாறு ஒரே நாட்டுக்குள் இனம், மதம், மொழிரீதியாகப் பிரிந்து விடுதலைக்காகப் போராடிய வரலாறு பல உண்டு. ஐரிஷ், பலஸ்தீனப் போராட்டங்கள் அவ்வகையானவை. அவர்களது போராட்டங்கள் பற்றிய கவிதைகளை பேராசிரியர் சிவசேகரம், பேராசிரியர் நுஃமான் ஆகியோர் மொழிபெயர்த்து போர் இலக்கியங்களுக்கு வலுச் சேர்த்துள்ளனர். மு.பொ.வின் ஆங்கில நெடுங் கவிதையான THE SONG OF A LIBERATED ZONEல் வரும் தமிழ் மக்களை ஆங்கில விமர்சகர்கள், வட அயர்லாந்திலுள்ள கத்தோலிக்க மக்களோடு ஒப்பிட்டனர். (COULD BE LIKENED TO THE CATHOLICS IN NORTHERN ISLAND DURING 'THE TROUBLES'). இன்னும் ஏ.சிவானந்தனின் WHEN MEMORY DIES, ஷியாம் செல்லத்துரையின் FUNNY BOY ஆகியோரின் இந்நாவல்களும் இவற்றுள் சேர்ந்து போர்க்கால இலக்கியத்தை விரிவுபடுத்தும்.

**தி.ஞா.: 80களிலும் அதற்குப் பின்னரும் இப்போர்க்கால இலக்கியங்களில் குறிப்பாகக் கவிதையில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியதாக தமிழக விமர்சகர்கள்கூட கூறியுள்ளார்களே?**

**மு.பொ.:** இந்தப்பாய்ச்சல் கவிதையில் பெருமளவு நிகழ்ந்திருந்தாலும் சிறுகதை நாவல்களிலும்கூட ஏற்பட்டிருந்தன. கவிதையில் 'சொல்லாத சேதிகள்', 'மரணத்துள் வாழ்வோம், சு.வியின் 'காலத்துயர்', நிலாந்தனின் 'மண்பட்டினங்கள்' நுஃமானின் கவிதைகள், சிவசேகரத்தின் 'போரின் முகங்கள்' மு.பொவின் 'சூத்திரர் வருகை, சோலைக்கிளியின்

**கலந்துரையாடல் – இடம்: கொழும்புத் தமிழ்ச் சங்கம்**



கவிதைகள், அஸ்வகோசின் 'வனத்தின் அழைப்பு', கலாவின் 'கோணேஸ்வரிகள். இவ்வாறே சிறுகதைகளிலும், போர்க் காலச் சாதனைகளாக தாமரைச் செல்வியின் கதைகள், ரஞ்சகுமாரின் 'கோசலை', 'கோளறு பதிகம்', மு.த.வின் இரத்தம், 'ஒரு தனி வீடு' நாவல், உமா வரதராஜனின் 'அரசனின் வருகை', மு.பொ.வின் 'பயம் கக்கும் விஷம்', 'வீடும் பல்லக்கும்', 'நோயில் இருத்தல்' நாவல், செங்கை ஆழியானின் 'இரவு நேரப் பயணிகள்', ஞானசேகரனின் 'அல்சேஷ னும் ஒரு பூனைக்குட்டியும்', 'காட்டுப் பூனைகளும் பச்சைக்கிளிகளும்', 'கருவறை எழுதிய தீர்ப்பு' ஆகிய சிறுகதைகள், கவி யுகனின் 'உடைத்துப் போட்ட தெரு விளக்கு' திசேராவின் 'கபாலபதி' சாந்தனின் 'கிருஷ் ணன் தூது' புஷ்பராஜனின் மீண்டும் வரும் நாட்கள் ஆகிய மேற்படி கவிதைகளும், கதை களும் உலகத்தரத்தை எட்டக் கூடிய போர்க்கால இலக்கியங்கள் எனலாம். இறுதியாக இதையும் சொல்லித்தான் ஆகவேண்டும். போரின் உச்சக் காலகட்டத்தில் அதுபற்றி சண்டே ரைம்ஸில் எழுதிய அத்தாஸ் முக மாலையில் தீபனின் போர் வியூகத்துக்குள் அகப்பட்ட படைகள் பற்றி அவர் கவிதைப் பாணியில் பின்வருமாறு எழுதி-னார்: "முன்னுக்குப் போகாதே, முன்னால் போனால் ஜொனி, ஜொனி, பின்னுக்குப் போகாதே போனால் ஃபொனி. ஃபொனி (FONY) அதாவது முன்னால் போகாதே போனால் JONY கண்ணி வெடிகளுக்குள் அகப்படுவாய், பின்னுக்குப் போகாதே போனால் பொன்சேகாவிடம் (FONY) அகப்படுவாய். அத்தாஸ் இவ்வாறு எழுதியமைக்காக தாக்கப்பட்டார். ஆனால் இவை அனைத்துக்கும் மேலாக தமிழர் போராட்ட எதிர்ப்பிலக்கிய கவிதைக-ளில் புதுவை இரத்தினதுரை ஒரு சாதனை யாளராகவே உள்ளார். அவரின் கீழ்வரும் கவிதையைக் குறிப்பிடலாம்.

Njtp vOf

தேவி எழுக
இந்தச் சிறு முல்லைக்காடதிர
ஆவி கலங்குமெமை ஆதரிக்க நீவருக
தேவி எழுக
இந்தச் சிறு முல்லைக்காடதிர
கூவும் குயிற்பாட்டெம் குடிமனையிற் கேட்டிடனும்
தூவும் மழைச்சாரல்
சுடுநிலத்தில் வீழ்ந்திடனும்
தவித்த வாயடங்கத் தண்ணீர் பெருகிடனும்
அவித்த கிழங்குண்டு
அந்தரித்த உயிர்களுக்கு
விதித்த தீர்ப்பதனை விலக்கிச் சுகம் தருக
நதியில் இறங்கிடனும் நம்கால்கள்.
இற்றை வரை
கொதித்த உடலமெல்லாம் குளிரும் நிலை வரனும்
வாசலெங்கும் கோர வல்லூறின் எச்சங்கள்
வீசும் காற்றினிலும் வெடிமருந்தின் உச்ச மணம்
சாவின் மணம் போதும்
சாக்காட்டின் பூமத்தம்
பூவின் மணம் போதும்
புது வசந்தம் வீசட்டும்
இரந்திரந்து எல்லா இரவற் திண்ணையிலும்
உறங்கியதும்
பட்ட உத்தரிப்பும் போதுமடி
கரம் தொழுதோம் எங்கள் கண்ணீருக் கென்பதில்?

**தி.ஞா.: இந்தக் காலகட்டத்தில் கவிஞர் முருகையனின் பங்கு என்ன?**

**மு.பொ.:** அவரை முற்போக்கு ஆதர வாளர்கள் வேறு விதமாகக் காட்ட முனைந் தாலும் அவர் தமிழ்த் தேசியத்துக்கு ஆதர வாகவே இருந்தார். இதோ அவர் எழுதிய தற்கொலைப் போராளிகள் பற்றிய கவிதை:

**"தற்கொடை என்ப தமிழீழ மைந்தர்கள் நிற்கும்**
**புதிய நிலை.**
**"தன்னுயிரைத் தான் ஈயும் சான்றாண்மை**
**தற்கொடையாம் என்ன நிகர் ஆகும் இதற்கு?"**

**தி.ஞா.: தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாக, அதாவது தமிழர் போராட்டத்துக்கு ஆதரவாக முன்னைய அல்லது இன்றைய முஸ்லிம் கவிஞர்கள் ஏதாவது எழுதியுள்ளார்களா?**

**மு.பொ:** முல்லை முஷ்ரிபா, உவைஸ் கனி, இளைய அப்துல்லாஹ், ஆகியோரின் கவிதைகளில் இதற்கான கீற்றுக்களை காணலாம். பழந்தலைமுறைக் கவிஞர்களில் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பண்டார வன்னியன் காவியம் தனிமுத்திரை பதிப்பதாகும். எம்.ஏ.நுஃமானின் புத்தரின் படுகொலை, துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும் புகழ்பெற்ற கவிதைகள்.

**தி.ஞா.: மதுசூதனன் அவர்களே வரலாற்றுப் பின்புலத்தில் மு. பொ. அவர்கள் போர்க்கால இலக்கியம் பற்றி விரிவாகப் பார்ப்பதற்கான அடிப்படைகளை வைத்துள்ளார். இந்தப் போரிலக்கியம் பற்றி அறிவியல் ரீதியாகப் பார்ப்பதற்கென சில தகவல்களையும் தந்துள்ளார். இந்தப் பின்புலத்தில் ஈழத்துப் போரியல் இலக்கியம் பற்றி உங்களது கருத்துக்களைக் கூறுங்கள்.**

**மது:** மு. பொ. சொன்னது போல், இலங்கையில் நடைபெற்ற போரின் வரலாற்றைப் பார்க்கும் போது, 56 ஒரு பிரிநிலைக் கோடாகத்தான் இருக்கும். ஏன் அப்படிப் பிரிநிலைக் கோடாக இருக்கிறது என்றால் அக்காலகட்டத்திலேதான் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதையொட்டி பல்வேறு செயற்பாடுகள், கலவரங்கள், வன்முறைகள், எனத் தொடர்ச்சியான நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன, அதன் உச்சமாக 83 இனக் கலவரம் ஏற்பட்டது, 50களுக்குப் பின்னர் இலங்கை வாழ் மக்களிடையே குறிப்பாகப் 'பெரும்பான்மை சமூகம்' என்ற சொல்லாடல்கள் பேசு பொருளாக மாறுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. பெரும்பான்மைச் சமூகம் ஒரு ஆளும் அதிகார வர்க்கமாக உருப்பெற்றது. சிறுபான்மைச் சமூகங்கள் முன்வைக்கக் கூடிய கோரிக்கைகளை அல்லது சாத்தியமான பல்வேறுபட்ட போராட்ட வடிவங்களை ஒடுக்கி நசுக்க முற்படும் நிலையில் இருந்தது. சாத்வீகப் போராட்டங்களை வன்முறை கொண்டு நசுக்க முற்பட்டபோது, எந்த வன்முறை கொண்டு நசுக்க முற்பட்டார்களோ அந்த வன்முறையே சிறுபான்மைச் சமூகம் தனது தற்பாதுகாப்புக்கான ஆயுதமாக எடுக்க முற்பட்டபோதுதான் ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.



இன்னும் ஒன்று, "இலங்கைத் தேசியம்" என்கிற ஒரு பல்லினச் சமூகத்தை அங்கீகரிக்கக் கூடிய ஒரு ஜனநாயக மரபு இங்கு இருந்திருந்தால், அது பல்வேறுபட்ட தளங்களிலும் செல்வாக்குப் பெற்றிருந்தால், இங்குள்ள சமூகங்களிடையே ஒரு இன ஐக்கியமும், சக மனிதனை, சக மனிதனாக நேசிக்கக்கூடிய தன்மையும், இனம் சார்ந்து அல்லது அடையாளம் சார்ந்து நேசிக்கக்கூடிய தனித்துவங்களை, வித்தியாசங்களை மதிக்கக்கூடிய பல் கலாசாரமும் இயல்பாக இருந்திருக்கும். ஆனால் இந்த அம்சங்கள் துரதிஷ்டவசமாக ஆட்சி அதிகாரங்களில் இருந்தவர்களால் இனங்காணப்படாத நிலையாக மாறி இருக்கிறது. இந்த அடிப்படையிலேதான் ஒடுக்கு முறையும், அரச பயங்கரவாதமும், சிங்களச் சமூகம் தவிர்ந்த ஏனைய சமூகங்களிடையே கட்டவிழ்க்கப்பட்ட பொழுது அதற்கு எதிரான பல்வேறு வடிவங்களில் போராட்டம் வெடித்தது,

இந்தப் போராட்டம் விடுதலை அரசியல் சார்ந்த முழக்கமாக எந்த விதத்தில் இருக்கிறது அல்லது இல்லை என்பது










வேறு விடயம். ஆனால், அது ஏதோவொரு விதத்தில் ஒரு எதிர்ப்பு சார்ந்த அல்லது தற்காப்பு சார்ந்த, அல்லது தன்னுடைய அடையாளங்களைமீட்கின்ற, பாதுகாக்கின்ற அல்லது உரிமை சார்ந்த விடயமாக அமைந்திருக்கின்றது. இந்த அம்சங்களுக்குள்ளேதான் எங்களுடைய இந்த அனுபவங்கள், உணர்வுகள் எவ்வாறு இலக்கியப் பரப்புக்குள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்த்தல் வேண்டும். சில எழுத்தாளர்கள் போராளிகள் என்ற நிலையில் இருந்து கொண்டு ஆயுதம் தாங்கிக் கொண்டு, தமது அனுபவங்களை அல்லது கூட்டு அனுபவங்களை, தனி மனிதன் சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த அனுபவங்களை கவிதைகளாகவோ அல்லது சிறுகதைகளாகவோ அல்லது புனைகதை சாரா கட்டுரை எழுத்தாகவோ வடிக்கக்கூடிய நிலைமை எம் மத்தியில் ஏற்பட்டது. இன்னும் சொல்லப்போனால், நாங்கள் **60**களுக்குப் பின்னர் இதற்கான ஒரு எழுத்துப்பரப்பை துல்லியமாக இனங்காணக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில் **56**க்குப் பின்னர் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிரான எமது போராட்டங்கள் பல்வேறுபட்ட நிலைகளில் கவிதை சார்ந்த ஒரு மொழிவழித்தேசியத்தை வலியுறுத்துகின்ற அல்லது அதைப் பாதுகாக்கின்ற வகையில் பல்வேறுபட்ட கவிஞர்கள் பல கவிதைகளை எழுதியதை நாம் பார்க்கிறோம். மஹாகவி, நீலாவணன், முருகை யன் போன்றோர் பல கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். மொழி சார்ந்து பண்பாட்டைப் பேணுகின்ற நிலையில் இவர்களது பல கவிதைகளைப் பார்க்கிறோம். பல சிறுகதைகள் கூட, இவ்வாறு வெளிவந்துள்ளன. வரதர், மு.தளையசிங்கம், வ. அ. இராசரத்தினம் போன்றோர் இத்தகைய சிறுகதைகளை எழுதியுள்ளார்கள்.

எங்களுடைய இந்த எழுத்து மரபு, தமிழ் மொழி பேசக்கூடிய சமூகங்கள் எதிர்கொள்ளக் கூடிய சவால்களை வாழ்வியல் நெருக்கடிகளை பதிவு செய்கின்ற ஒரு முறைமை எங்களிடம் நீண்ட காலமாகத் தொடர்புபட்டு வந்திருக்கிறது. ஏற்கனவே மு.பொ குறிப்பிட்ட 'மரணத்தில் வாழ்வோம்' என்ற எண்ணக்கரு எங்களுடைய அக்கால வாழ்வியலுக்குரிய ஒரு குறியீடு. பொதுவாக போருக்கு விடை கொடுப்போம் அல்லது 'போரே போ' என்று சொல்கின்ற ஒரு சர்வதேசப் பரிமாணம் இருந்தது போல, நாம் எப்படி வாழ்கிறோம். --- மரணத்துள் வாழ்கிறோம்

என்பதாகச் சொல்கின்ற மரபினைக் காண்கின்றோம்.

**தி.ஞா.: 80களுக்குப் பின்னரான ஈழத்துப் போர்க்காலக் கவிதைகளின் உள்ளீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஆதர்சமாக அமைந்த உலகப் போர்க்காலக் கவிதைகள் என நீங்கள் எவற்றைக் கூறுவீர்கள்?**

**மது:** *1981 இல் இறுதியில் எம்.ஏ. நுஃமான் மொழிபெயர்ப்பில் 'பலஸ்தீனக் கவிதைகள்' வெளிவந்தது. இத் தொகுப்பு பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாகவே வெளிவந்தது. இந்தக் கவிதைகள் பெரும்பாலும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துடன் நேரடியான தொடர்புடையவை. அந்த மக்களின் உண்மையான மனவோட்டங்களை உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கும் இந்த நூல் உதவியது என்றே கூறலாம்.*

*இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் இடையேயுள்ள உறவை பிரிக்க முடியாத வகையில் இக்கவிதைகள் மிகவும் ஆழமாக நுட்பமாக வெளிப்படுத்தின. விடுதலைப்போராட்ட உணர்வின் வெளிப்பாடு இயல்பாக கடத்தப்படும் அனுபவமாகவும் இந்தக் கவிதைகள் அமைந்திருந்தன. இந்தத் தொகுப்புவெளிவந்தகாலம்முக்கியமானது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட அரசியலில் இளம் தலைமுறையினர் தீவிரமாக உள்வாங்கப்படும் காலமாக இருந்தது. ஈழத்துப் படைப்பாளர்களின் வாசகர்களின் அரசியல் உணர்வின் வெளிப்பாடாக அவர்களின் வாழ்க்கை அனுபவத்தின் குரலாக தமக்கான அரசியலை வெளிப்படுத்தும் ஊடகமாக இந்தத் தொகுதி அமைந்திருந்தது.*

*அக்காலத்தில் அரசியல் பிரக்ஞையுடன் கவிதை எழுதத் தொடங்கியவர்களுக்கு இந்தத் தொகுப்பு சிறந்த ஊக்கியாகவிருந்தது. பலஸ்தீன மக்கள் மரணத்துள் வாழ்வு தேடுகின்றனர். அபகரிக்கப்பட்ட தங்கள் தாய் நாட்டிற்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடுகின்றனர் என்ற உணர்வு தமிழர்களுக்கான விடுதலை உணர்வாக அரசியல் சிந்தனையாக தள மாற்றம் பெற்றது. சியோனிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான போராட்டமாக பலஸ்தீன விடுதலைப் போராட்டம் அமைந்திருந்தது. இந்தப் போராட்டம் உலகெங்கும் விடுதலைக்காகப் போராடும் மக்களின் போராட்டத்தின் ஒரு பகுதியாகவும் நோக்கப்பட்டது. தமிழ்த் தரப்பும் இந்தப் போராட்டத்தின் இன்னொரு நீட்சியாக இந்த அரசியல் விடுதலை உணர்வை உள்வாங்கிய கவிதை மரபு ஒன்றும் தமிழில் எழுச்சி பெற்றது.*

*இந்தச் சூழலின் தருக்க ரீதியான விளைவாக 'மரணத்துள் வாழ்வோம்' என்னும் கவிதைத் தொகுதி 1985இல் வெளியானது. இந்தத் தொகுப்புக்கு சேரன் எழுதிய முன்னுரை கவனிப்புக்குரியது. தேசிய ஒடுக்குமுறையும், இராணுவப் பயங்கரவாதம், ஆயுதப்போராட்டம், மரணம், இரத்தம் சிந்தும் அரசியலே இன்று எமது கவிதையின் பிரதான கூறாக அமைகிறது. இந்த வகையில் இவை தரும் சேதிகள் கிளர்த்தும் அனுபவங்கள் தொற்ற வைக்கும் உணர்வுகள் தமிழ் இலக்கியத்தில் முற்றிலும் புதிய வாழ்நிலையைக் கொண்டு வருகின்றன. இந்தப் பதிவு காலத்தை-காலங்களைக் கடந்து பதிவாகிறது. இதுவே பின்னர் தமிழ்க் கவிதையின் உள்ளீடுகளின் இயங்கியலைஆற்றுப்படுத்துபவையாகவும் அமைந்திருந்தன.*

*இங்கு நாம் கவனிக்க வேண்டியது, இந்த இரண்டு நூல்களும் சமகால அரசியல் பிரக்ஞையும் விடுதலை உணர்வும் கொண்ட கவிதைகளின் வெவ்வேறுபட்ட அனுபவங்களின் விரிவாக்கம் எனலாம்.*

குறிப்பாக 1980களுக்கு பின்னர் வெளிவந்த கவிதைகளின் உள்ளடக்கம் 'அரசியல் கவிதைகள்' என்ற வற்புறுத்தல் சார்ந்து அடையாளம் காணப்பட்டது. தேசிய விடுதலை மட்டுமல்ல சமூக விடுதலையின் விரிதளங்கள் மீதான தேடுகை ஆழமா-கவும் நுணுக்கமாகவும் வெளிப்பட்டது. அது போல் தமிழ்த் தரப்பாரின் அரசியல் தவறுகள் ஏற்படுத்திய விளைவுகள் மீதான பார்வையும் கவிதைகளில் வெளிப்பட்டன. இயக்கப் படுகொலைகள் தமிழ் மக்களுக்கு எதிராகவே திரும்பிய துப்பாக்கிகளின் கதைகள், முஸ்லிம் மக்கள் மீது நடந்த படு கொலைகள்மற்றும்இனஅழிப்புநடவடிக்கைகள் அவற்றின் விளைவுகள் பற்றியெல்லாம் கவி தைகள் உரத்துப் பேசின. தமக்கான அரசி யலை முன்வைத்தன. இந்த இடத்தில் "மீஸான் கட்டைகளில் மீள எழும்பாடல்கள்" என்னும் தொகுப்பு குறிப்பிடப்படவேண்டும். இதனை அஷ்ரப் சிஹாப்தீன், ஸதக்கா,நளீம் ஆகியோர் தொகுத்துள்ளனர். இது 2002ல் வெளியானது. முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை மறுதலித்ததன் விளைவுகள் - அவை ஏற்படுத்திய விளைவுகள் - அவை ஏற்படுத்திய இழப்புகள், வலிகள் மற்றும் தமிழ்த்தேசிய அரசியல் மீதான மீள்விசாரணை ஆகியவற்றை இதில் உள்ள கவிதைகளில் சில அடையாளப்படுத்தின. 1985இற்கு பிறகு முஸ்லிம் மக்களிடையே உருவான சமூக அரசியல் எழுச்சி கவிதைகளிலும் ஆழமாக வெளிப்பட்டன. தமிழ் மேலாதிக்கம் தொடர்பிலான எச்சரிக்கையும் விழிப்புணர்வும் முஸ்லிம்கள் இடையே அரசியலாக விரிவாக்கம் அடைந்தது.

தமிழ்க் கவிதை வழி நின்று தமிழ்ச் சமூகத்தின் போராட்ட வரலாறு பேசப் படுவதற்கான ஆய்வு செய்வதற்கான தடயங்கள் நிறைய உள்ளன. வடகிழக்கு முஸ்லிம் மக்களின் தனித்துவமான அரசியல் வெளிப்பாடுகளை புரிந்து கொள்வதற்கான பின்புலங்களையும் தன்னகத்தே கொண் டுள்ளன. நாம் உண்மைகளை வெளிப் படையாக எதிர்கொள்ளவேண்டும். இதற்கான சமூகத் தயாரிப்பு நம்மிடையே வளர்க்கப்படவேண்டும். இவற்றை நமது தமிழ்க் கவிதைப் புலமும் சாத்தியப் படுத்துகிறது.

80களின் ஆரம்பத்தில் யாழ். பல்கலைக் கழகப்பின்புலத்தில்'கவிதாநிகழ்வு'என்றஒரு புது நிகழ்ச்சியும் அறிமுகப்படுத்தப்பட்டது. 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்ற கவிதா நிகழ்வைக் குறிப்பிடமுடியும். இதனைத் தொடர்ந்து சேரன், ஜெய பாலன், வில்வரத்தினம், முருகையன் போன்றவர் களின் கவிதைகள் கவிதா நிகழ்வாக ஆற்றுகை செய்யப்பட்டுவந்தன. இது ஒரு ஊடகமாகத் தொழிற்பட்டது. தமிழ் நாட்டில்கூட இவ்வாறான கலை வடிவம் தொழிற்பட்டதாக இல்லை.

**தி.ஞா.: தங்களது பதில் கவிதைகள் சார்ந்ததாக அமைந்தது. அதேவேளை நாவல் இலக்கியப் பரப்பில் அரசியல் சார்ந்து வெளிப்பட்ட சில எழுத்துக்கள் நமது கவனத்துக்குரியனவாக அமைந்தன. அவைபற்றிக் கூறுங்கள்.**

**மது:** 1960களிலேயே மு.தளையசிங்கம் எழுதிய 'ஒரு தனிவீடு' என்னும் புனைவு முக்கியமானது. தனிச் சிங்களச் சட்டமும் 1958 சிங்களத் தமிழ்க் கலவரமும் இங்கு முக்கியமாகப் பேசப்படுகின்றன. இலங்கைச் சூழலில் இன முரண்பாட்டின் செல்நெறி இரு சமூகங்களுக்கிடையில் ஏற்படக்கூடிய பிளவுகள் தமிழ்த் தரப்புச் செல்லும் பாதை... என இங்கு பல்வேறு அம்சங்கள் பேசப்படுகின்றன. இது போல் 1977 இனக் கலவரத்தை அடுத்து அருளர் எழுதிய 'லங்கா ராணி' என்னும் பிரதியும் குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் இருப்புக் கேள்விக் குறி யாகி தமக்கான பாதுகாப்பு தமிழ்ப்

பிரதேசங்களில் தான் என்பதை அகதி மன நிலை சார்ந்து வெளிப்படுத்தும் நுட்பம் அதன் அரசியல் தெளிவானது. அக்கால சமூக அரசியல் வெளியை கோடிட்டுக் காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

இதை விட 1985இல் கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' என்னும் நாவல் அரசியல் ரீதியிலும் அழகியல் ரீதியிலும் தமிழ்ச் சூழலில் மிகுந்த கவனிப்பிற்குரிய பிரதி. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உள் நுழைந்த ஜனநாயக மறுப்பும் உட்கொலைக் கலாசாரமும் இயக்கப் போராளிகளது உளவியலும் சமூக விமர்சனமும் போராட்டம் பற்றிய பரிசீலனையும் என அக்காலத்தின் மேற்கிளம்பிய தன்மைகளையும் குறியீடாகவும் தளமாற்றம்பெறும் அரசியல் செல்நெறியாகவும் வெளிப்படுத்திய பிரதியாக இது அமைந்திருந்தது. இதுபோல் செழியன் எழுதிய 'ஒரு மனிதனின் நாட்குறிப்பு' இன்னொரு புலப்பாட்டை அரசியல் முகத்தை அடையாளப்படுத்தியது. விடுதலை அரசியல் என்ற பன்முகப்பரிமாணத்தில் இயக்க அரசியலில் முனைப்படைந்த கவனிக்கப்படாத பகுதியாக வும் நாட்குறிப்பு எழுதப்பட்டிருந்தது. புதுசு இரவியின் காலமாகிவந்த கதையும்கூட குறிப்பிடப்படவேண்டிய தொன்று. யேசுராசா தொகுத்த 'காலம் எழுதிய வரிகள்' மற்றும் புதுசு கவிதைகள் செம்மணி, ஆனையிறவு முதலான தொகுதிகளும் கவனிக்கப்பட வேண்டியவை. மு. பொ.வின் 'பொறியில் அகப்பட்ட தேசம்' , அகிலனின் 'பதுங்கு குழி நாட்கள்', சரமகவிகள் போன்றவையுங்கூட சமகால அரசியலின் வெவ்வேறுபட்ட முகங்களை வெளிப்படுத்துவனவாக இருந்தன. "உலகவரலாற்றை ஓங்கி அளக்கும் உன்னத முயற்சி இது"வென 'பொறியில் அகப்பட்ட தேசத்'தை பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறியது இவ்விடத்தில் முக்கியமானது.

புலிகள் இயக்கத்தில் இருந்த மலரவன் எழுதிய 'போருலா' என்னும் பிரதியும் இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும்.



## இரண்டாவது சூரிய உதயம்

**- சேரன் -**

**அன்றைக்குக் காற்றே இல்லை**
**அலைகளும் எழாது செத்துப் போயிற்றுக்**
**கடல்.**

**மணலில் கால் புதைதல் என**
**நடந்து வருகையில்**
**மறுபடியும் ஒரு சூரிய உதயம்.**

**இம்முறை தெற்கிலே –**
**என்ன நிகழ்ந்தது?**
**எனது நகரம் எரிக்கப்பட்டது**
**எனது மக்கள் முகங்களை இழந்தனர்.**
**எனது நிலம், எனது காற்று**
**எல்லாவற்றிலும்**
**அந்நியப் பதிவு.**

**கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி**
**யாருக்காகக் காத்திருந்தீர்கள்?**
**முகில்களின் மீது**
**நெருப்பு.**

**தன்சேதியை எழுதியாயிற்று!**
**இனியும் யார் காத்துள்ளனர்?**
**சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து**
**எழுந்து வருக.**

**(20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் தொகுப்பிலிருந்து...)**

மணலாறிலிருந்து மாங்குளம் இராணுவ முகா மைத் தாக்குவதற்காய் காடுகளினூடு நகர்கின்ற போராளிகளின் வாழ்வு இதன் மூலம் இயல்பாகப் பதிவுசெய்யப்படுகிறது. மலைமகள் உள்ளிட்ட பெண் போராளிகளால் தொகுக்கப்பட்ட 'விழுதுமாகி வேருமாகி' முக்கியமான பதிவாகி றது. குறிப்பாக பெண் போராளிகள் பற்றியது. வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யும் பகுதிகள் பதிவாக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கவியின் 'இனி வானம் வெளிச்சிடும்' என்னும் பிரதியும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

ஷோபாசக்தியின் 'கொரில்லா', 'ம்' போன்றவையும் அரசியல் சார்ந்தவை. போராட்டத்தின் வேறுபட்ட சில முகங்கள் விமர்சனங்கள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர விமல் குழந்தைவேலின் 'வெள்ளாவி', முதலான வையும் நமது பார்வைக்கு முக்கியம்.

**மு.பொ.: (குறுக்கிட்டு)** இச்சந்தர்ப்பத்தில் இவற்றோடு சுபாஷ் (கவிஞர் பாலகணே-சன்) என்பவரால் எழுதப்பட்ட 'விடியலுக்கு முந்திய மரணங்கள்' என்ற ஆக்கமே போரா-ளிகள் மத்தியில் தோன்றிய முதல் நாவலா-கும். அத்தோடு பெருந்தேசியவாதத்திற்கும் இன ஒடுக்குமுறைக்கும் எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த போராட்டத்தை முதன்முதலில் வெளிக்கொணர்ந்த நாவலாக தி. ஞான சேகரனின் குருதிமலையைக் குறிப்பிடவேண்டும். மலையக மக்களை அவர்கள் வாழும் மண்ணிலிருந்து வெளியேற்றிவிட்டு சிங்களமக்களை அர சாங்கம் குடியமர்த்த முற்பட்டபோது, மலையகமக்கள் ஒன்று திரண்டு போராடிய மக்கள் போராட்டமாகவும் அதிலே சிவனு லெட்சுமணன் என்ற தொழிலாளி வீரமரணம் அடைந்ததையும் அந்தப் போராட்டத்தில் அவர்கள் வெற்றி பெற்றதையும் சித்திரிப்பது இந்தக் குருதிமலை நாவல். இது 1979ல் வெளிவந்தது. இந்நாவல் புலிகளாலேயே அங்கீகரிக்கப்பட்டது. ரணில் பிரதமராக இருந்த போர்நிறுத்த ஒப்பந்தகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் "மானுடத்தின் ஒன்று கூடல் 2002" மாநாட்டினை நடத்தியது. இதில் போர்க்காலம் தொடர்பான நாவல் பற்றிய ஆய்வரங்கிற்கு, பெருந்தேசியத்தை எதிர்ப்பதை நோக்கமாகக்கொண்ட நாவலை எழுதிய ஞானசேகரனை தலைமைதாங்கச் செய்தார்கள்.

**மது: (தொடர்ந்து)** மேற்குறிப்பிட்ட இந்த புனைவுகள் சார்ந்து 'போர் இலக்கியம் மீதான மீள்பார்வை மீள் விசாரணை ஆக்கப்படுகிறது. இயக்க அர சியல், விடுதலை அரசியல் மரபுக்குள் உள்வாங்கப்படுவதற்கான அல்லது தள மாற்றம் பெறுவதற்கான பல்வேறு செய்திகள் நமக்குள் பழங்கதையாய், பேசாப்பொருளாய் இருக்கின்றன. இவை வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. இலக்கிய மயப்படுத்தப்படுகின்றன. நாம் அரசி யல் சார்ந்து வாசிப்பில் ஈடுபடும்போது நமக்கான வெளி இன்னும் விரிவாக்கம் பெறுகிறது. இவை பற்றியெல்லாம் நாம் இன்னும் ஆழமாக ஆராயவில்லை. இப்போது இதற்கான காலம் உருவாகி உள்ளது.

**தி.ஞா.: 1995க்குப் பிறகு வன்னியை மையமாகக் கொண்டுதான் இலக்கிய முயற்சிகள் நடைபெற்றன. இது பற்றிக் கூறுங்கள்.**

**மது:** 1995இற்குப் பிறகு ஏற்பட்ட இடப்பெயர்வு குறிப்பாக வன்னிப் பகு தியை மையம் கொண்டிருந்தது. இதில் கணி சமான எழுத்தாளர்களும் கலைஞர்களும் இருந்தார்கள். இதுதவிர போராட்டத் தரப்பிலிருந்து புதிய எழுத்தாளர்கள் படைப் பாளர்கள் கலைஞர்கள் உருவாகினர். இவர்கள் மத்தியில் உருவான எழுத்துக்கள் படைப்புக்கள் கலைமுயற்சிகள் பற்றிய

தெளிவான பார்வைகள் எம்மிடையே உருவாகவில்லை. 1995 - 2005 காலப் பகுதி வரையிலான முக்கியத்துவம் இங்கு பல்வேறு நிலைப்பட்ட பார்வைகளுக்கு இடமுண்டு. ஆனால் அவை யாவும் எழுத்து மரபுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் எனக் கருதமுடியாது.

இங்கு நாம் ஒரு மாற்றுப் பார்வைக்கான இடத்தைப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. அதாவது போர் இலக்கியம் போருக்கு பிந்திய இலக்கியம் என்று சொல்லும்போது நாம் எழுத்து மரபு வழியான இலக்கியங்களையே குவியப் படுத்துகின்றோம். ஆனால் அதிக முக்கியத்துவம் பெறுவது எழுத்து மரபு வழி வராத இலக்கியங்களாகும். இக்காலத்தில் வாய்மொழி மரபு இலக்கியங்கள் அதிகமாக இருந்திருக்கும். ஆனால் இவை தொகுக்கப்படாமல் அந்தந்தத் தருணத்தில் வெளிப்பட்டு அந்த வேகத்திலேயே மறைந்திருக்கும். சிலவேளைகளில் இவை எதிர்ப்பு வடிவமாகவும் அரசியல் வழிமுறை பற்றிய விமர்சனங்களையும் முன்வைத்திருக்கும். பொதுவாக உலகப் போர்களைத் தொடர்ந்து வாய்மொழிக் கவிதைகள் வாய்மொழி உரையாடல்கள் பெரும் வடிவங்களாக அமைந்துள்ளன. ஆனால் இவற்றைப் புரிந்து கொள்வதற்கான உந்துதலும் மனவெழுச்சியும் அணுகுமுறைகளும் வரன்முறையாக எம்மிடம் கடத்தப் படவில்லை.

இக்காலங்களில் பல்வேறு நாடக முயற்சிகள் நடந்ததாக அறிய முடிகிறது. ஆனால் இவைபற்றிய சரியான பதிவுகள் எம்மிடம் இல்லை. அதைவிட நாடகங்களுக்கான எழுத்து வடிவம் எல்லாவற்றிற்கும் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. இது எல்லாக் கலை வடிவங்களுக்கும் இருக்கும் பிரச்சினைதான். ஆனால் 80களுக்குப் பின்னர்

> எங்களுடைய இலக்கியமுயற்சி, உலகப் பிரபல இலக்கியங்கள், போர்க்கால இலக்கியங்கள் என்பனவற்றுடன் எந்தளவுக்கு ஒப்பிடக்கூடியதாக இருக்கும் என்பது பற்றி இங்கு கருத்துச் சொல்லப்பட்டது. போராட்ட காலங்களிலேதான் உலக வரலாற்றில் சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய இந்தப் போராட்ட காலத்தில் நடைபெற்ற இலக்கியங்களுக்கும் அத்தகைய ஒரு அரங்கிலே நிச்சயமாக பெரிய அளவில் இடம் இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.
>
> - தளபாலசிங்கம்

எமது அரசியல் நடவடிக்கைகளுக்குச் சமாந்திரமாக நாடகமுயற்சிகள் அதிகம் இடம்பெற்றிருக்கின்றன. இதுபோல எம்மிடையே குறும்படத் தயாரிப்புகளும் அதிகம் இடம்பெற்றுள்ளன. எமது பல்வேறு அரசியல்குழுக்கள்மத்தியிலிருந்து இதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனால் நாம் இவையாவற்றையும் ஒரு இடத்தில் தொகுத்து வைத்திருக்கிறோமா என்றால், இல்லை என்றே கூறலாம். ஆனால் இவைபற்றிய கவனிப்பும் எமக்கு முக்கியம். இவற்றைவிட எம்மத்தியிலிருந்து பல்வேறு இசைத்தட்டுகளும் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு இயக்கங்களும் அரசியல் சார்ந்து இசைத்தட்டுகள் வெளியிட்டன. உள்ளூர்,

தமிழகக் கலைஞர்களைக் கொண்டு இவை தயாரிக்கப்பட்டன. இக்காலங்களில் வெளி வந்த எமது ஓவியங்களும் வெகு சிறப்பாகக் சுட்டிக் காட்டத்தக்கன. புதிய தலைமுறை யினர் பலர் அரசியல் பிரக்ஞையுடன் ஓவி யங்களைத் தீட்டும் மரபை உருவாக்கினர். ஆனால் இவைபற்றிய பதிவுகளும் ஆங்காங்கு இருக்கின்றன. இவற்றை நாம் இனிமேல்தான் தேடிப்பார்க்க வேண்டும். இவ்வாறு நாடகம், ஓவியம், இசை, சினிமா எனப் பல்வேறு களங்களிலும் புதுமை-யான முயற்சிகள் நடைபெற்றுள்ளன. எமது சமகால கலை இலக்கிய வெளிப்பாட்டில் இவை புதிய புதிய அர்த் தப்பாடுகளை உருவாக்கியுள்ளன. எமது இந்த உரையாட லில், பதிவுசெய்யும் நோக்குடனே குறைந்த பட்சக் குறிப்புகளே கூறப்பட்டுள்ளன. இவை முழுமையானவையல்ல.

ஆகவே போர் இலக்கியம் போருக்குப் பிந்திய இலக்கியம் என்று வகைப்படுத்தி நோக்கும் போது நாம் இவற்றை ஒரே நேர்கோட்டில் புரிந்து கொள்வது சிக்கலானது. இது பல்வேறு சிக்கல் பாடுக-ளைக் கொண்டது. இங்கு பல்வேறு குரல்கள் உள்ளன. பலவகையான வெளிப் பாடுகள் உள்ளன. இவையெல்லாம் நமக்கு மட்டும் பொருந்தக் கூடியவையல்ல. முதலாம், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான இலக்கியங்கள் இவற்றை தெளிவாக அடையாளப்படுத்துகின்றன. ருஷ்ய இலக்கியங்கள் நமக்கு இன்னும் பல்வேறு புதிய அனுபவங்களைத் தரத்தக்கன. உதாரணமாக, ருஷ்யக் கவிஞர் அன்னா அகமத் தோவா, தம் தாய்நாட்டின் மீது ஹிட்லரின் ஆக்கிரமிப்புக் கண்டு எழுதிய கவிதைகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. இந்தக் கவிதைகள் உல கில் எந்த மொழியிலும் உருவான தேசபக்திக் கவிதைகளையும் விட இன்னும் சிறப்பாக உள்ளன எனவும் கருத்துக்கள் உள்ளன. இதுபோல் சோவியத் ஆட்சியின் இருண்ட பக்கங்கள் எனக் கூறப்படுபவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த படைப்பாளி களில் ஒருவராக அலெக்ஸ்சந்தர் சல் செனித்சின் நன்கு அறியப்படுகிறார். இவர் ஸ்டாலின் காலத்தை எதிர்கொண்டவர். அவற்றைத் தம் படைப்புகளாகவும் தந்தவர். இருப்பினும் இவரது படைப்புக்கள் சோவி யத் அமைப்புக்கு எதிரான ஆயுதமாக மேலை நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றன. இவருக்கு அளவுக்குமீறிய பிரபல்யம் கொடுப்பதாகவும் குற்றச்சாட்டு உண்டு. எவ்வாறாயினும் முகாம்வாழ்வு பற்றிய இவரது பதிவுகள் சிறப்பாகப் பேசப் படுகின்றன.

**மு.பொ.: (குறுக்கிட்டு)** இன்னும், பஸ்ரநாச் எழுதிய டொக்டர்ஷிவாகோநாவல், ஸ்ரலின் ஆட்சிக்கு எதிராக வந்த சிறந்த நாவலா கும். அவ்வாறே நாஸிகள் ரஷ்யாவை ஆக்கிரமித்த காலத்தில் குடியானவர்களே சேர்ந்து கெரில்லாப்படையொன்றை அமைத்து நாஸிப்படைகளை எவ்வாறு கிராமத்தைவிட்டே வெளியேற்றுகின்றனர் என்பதைச் சித்தரிக்கும் 'வானவில்' என்ற நாவல் ஸ்ராலின்கால நாவல்களில் மிக உயிர்த்துவமானது.

**மது: (தொடர்ந்து)** இந்த மாதிரியான எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகமும் அவர் களது படைப்புக்கள் பற்றிய முழுமையான பார்வையும் தமிழுக்கு வந்து சேரும் பொழு துதான் நாம் வித்தியாசமான படைப்பு அனுபவங்களையும் அவை சார்ந்த அரசி யல் வாசிப்புக்களையும் உருவாக்க முடியும். முன்பு அதிகம் சோவியத் இலக்கியம் பேசப்பட்டளவிற்கு தற்போது அதிகம் பேசப்படுவதில்லை. இதனால் அரசியல் சார்புகொண்ட நமது இலக்கிய மரபின் பன்முகப் பரிமாணத்தை விளங்கிக் கொள்ள முடியாத நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.



*இந்தத் தொகுப்பு எதிர்காலச் சந்ததிக்கு எமது போராட்ட அணுகுமுறைகள் சரியோ, பிழையோ என முடிவுக்கு வரக்கூடிய ஒரு நிலையைத் தர முடியும். நீங்கள் தொகுக்கப்போகும் இந்த விடயங்களைப் பார்த்து எங்களுடைய இனப்பிரச்சினையை, எங்களுடைய அவலங்களை, உள்நாட்டுப் போரை, வரலாற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவைப் பெறக்கூடியதாகவும் தவறுகள் எங்கே விடப்பட்டிருக்கின்றன, சரியான அணுகுமுறைகள் எங்கே கடைப்பிடிக்கப்பட்டன அவை ஏன் சரியான முறையில் முன்னெடுக்கப்பட முடியாமல் போயின என்பதைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை கணிசமான அளவுக்குப் பெறக்கூடிய ஒரு தொகுப்பாக இது இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.*

இந்த இடத்தில் நாம் புதுவையின் கவிதைப் பங்களிப்பை மறந்துவிடக்கூடாது 2003ல் வெளியான இவரது 'உலைக்களம்' விடுதலைப்பயணத்தின் நேரடிச் சாட்சியாக களநிலைமைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் போராளிகளது உளப் பரிமாணங்களையும் மக்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆவணமாகவும் இருந்தது. பின்னர் வந்த அவரது பெரும் தொகுப்பான "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்" குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்று. தானொரு அரசியற் கவிஞர் என்ற வகையில் புதுவை பின்வருமாறு திருப்தியடைகிறார்:

**உடல் விறைத்து**
**பிணமென்றான பின்பும்**
**யாரும் கலங்கக் கூடாது**
**வீட்டிலென் சவமிருக்கும் வரை**
**என்பாடல்களைப்பாடி**
**கவிதைகளை உரத்து வாசித்து**
**எல்லோரும் இன்புற்றிருக்கக் கடவது.**
**வந்தேன்**
**இருந்தேன்**
**சென்றேனென இல்லாமல்**
**என்னாலும் இயன்றளவு**
**செய்தே திரும்பினேன் என**
**போவேன்**
**எனக்கிது போதும்**

**தி.ஞா.: இந்தக் காலகட்டத்தில் போர்க்கால அரசியல் சார்ந்து பல பெண்படைப்பாளிகளும் இயங்கியிருக்கிறார்களே. அவர்களின் படைப்புகள் பற்றியும் கூறுங்கள்.**

**மது:** நிச்சயமாகக் கூறப்படவேண்டியது தான். '85ல் வெளிவந்த 'சொல்லாத செய்திகள்' தொகுப்பு முக்கியமானது. குறிப்பாகத் தமிழ்க்கவிதை மரபில் பெண் மொழி சார்ந்த சமூக அரசியல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் புதிய போக்கை இத் தொகுப்பு அடையாளப்படுத்தியது. இத் தொகுப்பில் இடம்பெற்ற சிவரமணி, செல்வி முதலானவர்கள் அக்கால அரசியல் நிலைப்பட்ட பார்வைகளை தமது நிலையில் இருந்து பதிவு செய்ததுடன் மட்டுமல்ல. விமர்சன ரீதியில் அணுகுவதற்கான மாற்றுக்குரல்களையும் பதிவு செய்திருக்கின்றனர்.

அந்தக்கால நெருக்கடியின் அழுத்தங்கள் காரணமாகவும் அதனை எதிர்கொள்வதற்கான தைரியமின்றியும் சிவரமணி தனது உயிரையே மாய்த்துக் கொண்டார். அப்போது, தான் வாழ்ந்ததற்கான அடையாளமே இருக்கக் கூடாது என்பதற்காகத் தனது கவிதைகளையே அழித்துக் கொண்டார். பின்னர் அவரை விளங்கிக் கொள்வதற்கு 'சிவரமணி கவிதைகள்' என்னும்

தொகுப்பு அவரது கவிதா ஆளுமையையும் சமூக நோக்கையும் காட்டுவதாய் அமைகிறது. இது போல் செல்வியின் கவிதைகளும் முக்கியமானவை ஔவையின் எல்லை கடத்தல், ஆழியா னின் 'உரத்துப் பேச, துவிதம் மற்றும் மைதிலி, ஆகர்ஷா போன்றவர்களின் கவிதைகளும் முக்கியமானவை. இவற்றை விட இக்காலங்களில் பெண் போராளிகளான கப்டன் வானதி, அம்புலி போன்றோரது கவிதைகளும் முக்கியமானவை. ஒரே நேரத்தில் பெண்ணானவள் ஆயுதப்போராளியாகவும் கவிதைப் போராளியாகவும் இணைந்து காணப்படும் தன்மை ஈழத்துக்கே உரித்தானது, தமிழ்நாட்டில் இவ்வாறு நோக்குவதற்கு வாய்ப்புகளே இல்லை.



**தி.ஞா.: எழுத்தாளர்கள், விமர்சகர்கள் என்ற நிலையில் மு.பொ. அவர்களும், மதுசூதனனும் தமது கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. தனபாலசிங்கம் அவர்களே, நீங்கள் நீண்ட காலம் பத்திரிகைத் துறையுடன் தொடர்புபட்டவர் என்ற வகையில், உங்களுடைய போர்க்கால அவதானிப்புக்கள், போர்க்காலப் பதிவுகள், போர்க்கால இலக்கியம் ஆகியன பற்றிய உங்களுடைய பார்வை என்ன?**

**தனபாலா:** பத்திரிகையாளன் என்ற நிலையிலேயே உங்களுடைய இலக்கிய முயற்சி பற்றி நான் கூறுகிறேன். இந்த ஆயுதப்போர் முடிவடைந்த பின்பு இலங்கைத் தமிழர் சமூகத்தின் மத்தியிலே நாங்கள் ஒரு சரியான, வலுவான, கட்டுறுதியான அரசியல் சமுதாயத்தைக் கொண்டவர்களாக இல்லை. அந்த வகையிலே எதிர்காலத்தில் எங்களுடைய அரசியல் பார்வையை - தமிழ் மக்களுடைய விமோசனத்துக்கான அரசியல் பார்வையை, அதனுடைய நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு அரசியல் தீர்வை நோக்கி எத்தகைய தடத்தில் பயணிக்க வேண்டும் என்பது தொடர்பிலே நாங்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய ஒரு காலகட்டத்திலே இருக்கிறோம். எங்கள் மத்தியிலே ஒரு அரசியல் சமுதாயம் உருவாவதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டும். ஆயுதப் போர் முடிந்து மூன்று வருட காலத்திற்குப் பின்பு கூட அந்த ஒரு சூழ்நிலை, அந்த ஒரு ஈடுபாட்டு நிலை இல்லாதிருக்கிறது. இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் நாங்கள் வாழ்கிறோம். என்னைப் பொறுத்தவரை கடந்தகாலத்தில் நடந்த அகிம்சைப் போராட்டமாக இருந்தாலென்ன, அடுத்த 30 வருட காலத்தில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டமாக இருந்தாலென்ன நாங்கள் ஒரு வகையில் தோல்வியை அடைந்திருக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும். ஒடுக்கப்பட்டிருக்கிறோம் என்றும் சொல்லலாம். உண்மையில் எங்களுடைய தந்திரோபாயங்களின் விளைவாகவும் அந்தத்தோல்விக்கு நாங்கள் பங்களிப்புச் செய்திருக்கிறோம் என்பதை சுயவிமர்சன ரீதியில் நாங்கள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் முன்னோக்கி நகர்வதற்குரிய தகுதி கொண்டவர்களாக நாங்கள் எங்களைக் கருதமுடியாது. அந்த வகையில் எங்களது கடந்த காலப் போராட்டங்கள், அர சியல் அணுகுமுறைகள் என்பன அந்தந்தக் காலத்தில் அந்தந்த அணுகுமுறைக்கேற்ப நடைபெற்றுள்ளன. அவை பற்றிய இலக்கியங்களும் படைக்கப்பட்டு வந்திருக்கின்றன. அந்த இலக்கியங்கள்

உள் நாட்டுப் படைப்பாளிகளாலும், புலம் பெயர்ந்த படைப்பாளிகளாலும் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இலக் கியங்களைத் தொகுக்கின்ற முயற்சியானது, எதிர்காலத்திலே எங்களுடைய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாததன் விளைவாக அது உள்நாட்டுப் போராக மாறி எங்களுக்குத் தந்த அவலங்கள், எங்களது மக்கள் உலகில் எந்த மூலைகளிலும் ஒரு யூத இனம் போன்று வாழ்கின்ற சமூகமாக இருக்கின்ற நிலைமை போன்றவற்றை வெளிக்கொணரும் ஒரு ஆவணமாக அமை யும். இந்த நிலைமையில், இந்தத் தொகுப்பு எதிர்காலச் சந்ததிக்கு எமது போராட்ட அணுகுமுறைகள் சரியோ, பிழையோ என முடிவுக்கு வரக்கூடிய ஒரு நிலையைத் தர முடியும். நீங்கள் தொகுக்கப்போகும் இந்த விடயங்களைப் பார்த்து எங்களுடைய இனப் பிரச்சினையை, எங்களுடைய அவலங்களை, உள்நாட்டுப் போரை, வரலாற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவைப் பெறக்கூடியதாகவும் தவறு கள் எங்கே விடப்பட்டிருக்கின்றன, சரி யான அணுகுமுறைகள் எங்கே கடைப் பிடிக்கப்பட்டன அவை ஏன் சரியான முறையில் முன்னெடுக்கப்பட முடியா-மல் போயின என்பதைப் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை கணிச மான அளவுக்குப் பெறக்கூடிய ஒரு தொகுப்பாக இது இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் இந்தத் துறைசார்ந்த என்னாலான முழுமையான உதவிகளைச் செய்து தருவதற்கு நான் தயா ராக இருக்கிறேன் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி.ஞா.: போர்க்காலம் என்பது ஆயுதப்போர் நடந்த காலத்தைக் குறிக்கும் எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால், வேறு சிலர் இந்த உரிமைப்போரானது பல்வேறு வடிவங்களை எடுத்து வந்துள்ளது எனவும் ஆரம்பத்தில் சாத்வீகப் போராட்டம், அதன் பின்னர் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுள்ள நிலையில் இன்றும் உரிமைப்போராட்டம் முடிந்து விடவில்லை அது ஒரு சர்வதேசப் பரிமாணத்தை எடுத்துள்ளது எனச் சிலர் கருதுகின்றார்கள். இந்நிலை யில் போர் முடிந்து விட்டதா? என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாக இருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்தினைக் கூறுங்கள்.**

**மு.பொ:** போர் முடிந்து விட்டதாக நான் சொல்லமாட்டேன். இப்போதும் பற்பல தளங்களில், பல்வகையான முறைகளில் போர்முன்னெடுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. போருக்கான அடிப்படைக் காரணங்கள் தீர்ந்துவிட்டதெனச் சொல்ல முடியாது. CYBER WARFARE என்ற நிலைக்கு இன்று உலகம் வளர்ந்துள்ளது. நமது நிலை எப்படி? இதையும் இன்று வரும் எதிர்ப்பு இலக்கியங்கள் மூலந்தான் அறிய வேண்டும்.

**தி.ஞா.: எதிர்ப்பு இலக்கியங்கள் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக மட்டுமன்றி தமிழர்களது போராட்டத்திற்கு எதிராகவும் தோன்றியிருக்கின்றன. அவற்றிற்கான காரணங்களை நீங்கள் எவ்வாறு விமர்சிக்கின்றீர்கள் மு. பொ.?**

**மு.பொ.:** நான் ‘திசை’யில் ஆசிரியராக இருந்தபோது ‘தமிழ்ப் பேரினவாதம்’ என்ற தலைப்பிட்டு முஸ்லிம்கள் பள்ளி வாசலில் கொல்லப்பட்டபோது ஆசி ரியர் தலையங்கம் எழுதினேன். இன்று யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டதைத் தொடர்ந்து இரு சிறுபான்மை இனங்களிற்குமிடையே விரி சல் பெரிதாக வளர்ந்துள்ளது. இது இன்று அரசியல்வாதிகளால் மேலும் மேலும் பெரிதாக்கப்பட்டுக் கொண்டு வருகி றது. இந்தப் பிளவை மேவி வளரவேண்டும் என்ற இரு இனத்தினதும் நலனைப் பேணும் பார்வை பெரியளவு எழவில்லை என்றே சொல்ல வேண்டும். இதனால் முஸ்லிம்கள் தமிழ்த் தேசியத்தையும் புலி-

களையும் எதிர்த்து எழுதிய இன்னொரு எதிர்ப்பு இலக்கியம் தோன்றிற்று. அஷ்ரப் சிஹாப்தீனால் வெளியிடப்பட்ட 'மீஸான் கட்டைகளின் மீள் எழும் பாடல்கள்' தொகுப்பில் இந்த எதிர்ப்பிலக்கிய ஆக்கங்களையும் அதன் ஆசிரியர்களையும் காணலாம். இதோ அதில் இடம்பெறாத நவாஸ் செளபியின் அங்கதக் கவிதையின் இறுதி வரிகளை மட்டும் தருகி றேன்:

**...இழப்புகளின் முடிவில்**
**சமாதானம் வந்ததில்**
**உடன்படிக்கை இருந்தது**
**எனக்கு தலைவர்கள் இருந்தார்கள்**

**பேச்சு வார்த்தையு மிருந்தது**
**இறுதியில்**
**இனங்களுக்கான தீர்வு வந்ததும்**
**உரிமை இருந்தது**
**என்னோடு பிணங்கள் இருந்தார்கள்**
**ஒரு அடக்குமுறையுமிருந்தது"**

மற்றும் தமிழ் போராளிகள் கையில் முஸ்லிம்கள் பட்டபாடு அறபாத் தின் நினைந்தழுதல், ஆண்மரம் ஆகிய தொகுப்பு களிலும் ஏ.ஜி.எம். சதக்காவின் கதை களிலும் கவிதைகளிலும் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. யாழில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதை வண்ணை கே. சிவராஜாவின் "இன்ஷா அல்லாஹ்" துயர் தோயச் சொல்கிறது.

இன்று கவிதை எழுதும் இளங் கவிஞர்களான அலறி, டீன் கபூர், றியாஸ் குர்னா, மஜீத் மற்றும் பெருவெளி இளைஞர்கள் அனைவருமே முஸ்லிம் தேச எழுத்தாளர்களே. இவர்களின் கோரிக்கைகளையும் உள் வாங்கியவாறே நாம் முன்னேற வேண்டும். மேலும் தமிழ்த்தரப்பு புத்திஜீவிகள் மத்தியிலும் பல்வகைக் கருத்தியல் மோதல்கள் உள்ளன. அண்மையில் பேராசிரியர் சிவசேகரத்தின் சிறுகதைத் தொகுதியான "குழந்தையும் தேசமும்" படித்தேன். அதில்வரும் குழந்தை யும் தேசமும் அருமையான கதை. அக்கதை புலிகள் முன்வைத்த தமிழ்த் தேசியத்துக்கு சார்பானதென எடுத்துக் கொள்ளலாம். அப்படியிருந்தும் அவரது தனிப்பட்ட அபிப்பிராயத்தைக் கேட்டால் அவர்கள் முன்வைத்தது 'குறுந்தேசிய வாதம்' எனப் புறக்கணிப்பார். ஏன் இச்சிக்கல்கள் ஏற்படுகின்றன? எப்படி தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போரா-டிய இயக்கங்கள் மத்தியில் இத்தகைய குழறுபடிகள் இருந்தனவோ அவையே நம் புத்திஜீவிகள் மத்தியிலும் தொடர்கின்றன. இவைகளை யெல்லாம் புறந்தள்ளியவாறு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் முற் போக்கு அணியைத் திரட்டி இப்புத்திஜீவிகள் செயற்படக் கூடாதா? ஏற்கனவே ஒவ்வோர் அமைப்புகளைக் கொண்டியங்கும் இவர் களால் ஏன் இது முடியாது போகிறது? இதே சிறுகதைத் தொகுதியில் இன்னும் ஒரு கதை 'தம்பரின் இரும்புப் பெட்டி'. இது பெரிய பூட்டால் பூட்டப்பட்டு கனகாலமாக திறக்கப்படாமல் கிடந்த இரும்புப் பெட்டி. கடைசியாக அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தால் பழைய கிழிந்த சால்வை ஒன்றுதான் அதற்குள். இதுதான் சந்திரிகா தமிழர்களுக்கு தருவ தாகச் சொன்ன தீர்வு என்று கதை கேலி செய்கிறது. ஆனால் இதை அக்கால வரலாறு தெரிந்தவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். சந்திரிகா கொண்டுவந்த உடன்படிக்கைக்கு நம்தலைமையே எதி ராய் இருந்தது. தமிழர்களுக்கு சரியான தீர்வை வழங்க வேண்டும் என்று சந்திரிகா நினைத்தார். பிரபாகரனுடைய பேச்சுக்கள் பலதடவைகள் தொடர்ந்து வானொலி யில் ஒலிபரப்பாயின. தமிழ்ப் பெண்கள் 'சந்திரிகாவின் காப்பு, சந்திரிகாவின் சாறி' என்று அவர்பின்னே ஓடினர். இவ்வாறு தன்பேரையும் பிரபலத்தையும் மிஞ்சி

ஒருவர் போவதை நமது MEGALOMANIAC தலைமைகள் விரும்பவில்லை. இலங்கையை ஆட்சிசெய்த எந்த அரசியல் தலைவரும் ஒரு அரசியல் ஞானியாக (STATESMAN) இருக்கவில்லை. அதாவது மண்டேலா, ஆப்பிரகாம் லிங்கன், ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஜோன் எஃப் கெனடி போன்றவர்கள். 57இல் பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது பண்டாரநாயக்கா அந்தத் தலைமைக்கருகே வந்தார். ஆனால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதும் அது நழுவிப்போனது. சந்திரிகாவும் 94இல் இத்தகைய நிலைக்கருகே வந்தார். அவருடைய படம் தமிழ் பகுதிகளில், வீடுகளில் வைக்கும் நிலை ஏற்பட்டபோது நமது தலைமைகளே அதைக்கெடுத்தன. கண் பறிபோன பின் சந்திரிகாவின் நிலை வேறாயிற்றென்பது வேறு விடயம்.

**தி.ஞா.: மதுசூதனன் அவர்களே, மு.பொ. சில அடிப்படையான விஷயங்களைத்தொட்டுச்சென்றிருக்கிறார். நீங்கள் அவற்றோடு தொடர்பான விடயங்கள் எவற்றையாவது கூற விரும்புகிறீர்களா?**

**மது:** ஆம், குறிப்பாக ஒரு தமிழ்த் தேசிய அலைக்குள் தமிழ் இளைஞர்கள் அள்ளுண்டு போகின்ற ஒரு மரபு, ஒரு உணர்ச்சிபூர்வமாக இருந்த அளவிற்கு அது ஒரு அறிவு சார்ந்து அரசியல் சார்ந்து வளர்க்கப்பட்டதா? என்பது ஒரு அடிப்படையான கேள்வி. எல்லா இயக்கங்களும் விடுதலைக்காக போராடுகிறோம் என்று சொல்லிக் கொண்டாலும் கூட, அந்த விடுதலையை அடைவதற்கான ஒரு தெளிவான சிந்தனையும், பிரக்ஞையும் கொள்கை சார்ந்த அடிப்படையில் இருந்திருக்கிறதா என்பதும் ஒரு கேள்விக்குறிதான். இயல்பாகவே தமிழ்ச் சமூகத்திற்குள் புரையோடி இருக்கின்ற உள்ளக முரண்பாடுகள் அவை ஒரு பிரதேசமுரண்பாடாகவோ, சாதிய முரண்பாடாகவோ அல்லது தமிழ், முஸ்லிம் மதம் சார்ந்த முரண்பாடாகவோ இருக்கலாம். இவைகளை யெல்லாம் கையாளுவதற்கான பக்குவமும் முதிர்ச்சியும் அறிவும் இந்த விடுதலை இயக்கங்களிடையே இருக்கவில்லை.

ஆனால், எங்களிடம் இருக்கக்கூடிய முரண்பாடுகளை தமிழ்ச்சமூகம் விளங்கிக் கொண்டிருந்ததை விட,

**விடுதலையின் பெயரால் எத்தனையோ தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. எந்த மக்களுக்காக போராட்டம் நடத்தப்படுள்ளதோ அந்த மக்களுக்கெதிராகவும் ஆயுதங்கள் திருப்பப்பட்டன. இதன் உச்ச வெளிப்பாடாக வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். நாம் இதனை எந்த ரீதியிலும் நியாயப்படுத்த முடியாது. இதுவரை காலமும் தமிழ்த் தலைமைகள் வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களை அரசியல் ரீதியாக அணுகுவதற்கு தயாராக இருக்கவில்லை. முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் அரசியல் பரிமாணம் கொண்டவை. ஆகவே ஆயுத முனையில் முஸ்லிம் மக்களை வெளியேற்றியமை இரு சமூகங்களுக்கிடையில் முரண்கள் பிளவுகள் தோன்றுவதற்கு காரணமாயிற்று. இந்தநிலைமையை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடியதாயிற்று.**



எதிரி அல்லது சிங்கள அதிகார வர்க்கம் தெளிவாக விளங்கிக் கொண்டது. தமிழ்ச் சமூகத்தில் எவ்வாறான முரண் பாடுகள் இருக்கின்றனவோ அந்த முரண்பாடுகளை தமிழ்த்தேசியத்தைச் சிதைக்கும் வகையில் எவ்வாறு கையாள வேண்டும் என்ற தெளிந்த ஞானத்தோடு ஒரு தெளிந்த திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்தி இருக்கிறது என்பதற்கு பல சந்தர்ப்பங்களைக் கூறலாம். திம்புப் பேச்சுவார்த்தை தொடங்குகின்ற போது முஸ்லிம்கள் தொடர்பான பிரதிநிதித்துவம் பற்றி இயக்கங்கள் மத்தியில் எந்த எண்ணமும் இருக்கவில்லை என்கிற ஓர் உணர்வு இருந்தது. இது இந்தியத் தரப்புக்கும் சுட்டிக் காட்டப்பட்டது. அவர்கள் இலங்கை அரசிடம் ஒரு முஸ்லிம் தரப்புப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது ஜே. ஆர். சொன்ன ஒரே பதில், "முஸ்லிம் தரப்பை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் தமிழ்ப் பிரதி நிதிகளை திருப்திப்படுத்துவதற்கான- அவர்களை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியைக் கவனியுங்கள்" என்பதுதான். ஜே. ஆர். அப்படிக் கூறியதற்கான காரணம் அப்போது விளங்கவில்லை. அதனுடைய பின்புலத்தில் என்ன நடந்தது என்றால், தன்னுடைய மகன் ரவி ஜெயவர்த்தனா தலைமையில் விசேட அதிரடிப்படை என்றொரு படையை கிழக்கு மாகாணத்தில் உருவாக்கினார். இந்த அதிரடிப்படைதான் கிழக்கில் சிவில் சமூகத்தில் குறிப்பாக ஆயுதம் தாங்கிய நட மாட்டங்களையும், அங்கு நடக்கக்கூடிய சின்னச்சின்ன விஷயங்களையும் நசுக்கக் கூடிய வகையில் செயற்பட்டது.

# கோணேஸ்வரிகள்..

- கலா

நேற்றைய அவளுடைய சாவு - எனக்கு
வேதனையைத் தரவில்லை.
மரத்துப்போய்விட்ட உணர்வுகளுள்
அதிர்ந்து போதல் எப்படி நிகழும்?

அன்பான எம் தமிழச்சிகளே!
இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்?
ஆகவே வாருங்கள்.
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்.
என் அம்மாவே உன்னையும்தான்.

சமாதானத்திற்காய்ப் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்.
பாவம்.
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்.
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்.
தீர்ந்ததா எல்லாம்?
அவ்வளவோடு நின்று விடாதீர்!

எங்கள் யோனிகள் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே,
வெடிவைத்தே சிதறடியுங்கள்.
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளிப்
புதையுங்கள்.
இனிமேல் எம்மினம் தளிர்விடமுடியாதபடி.

சிங்களச் சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

(சரிநிகர்)

1985க்குப் பின்னர் கிழக்கில் இடம் பெற்ற தமிழ் - முஸ்லிம் மோதல்களின் பின்னால் அரச படையினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டுள்ளனர். இங்கு மோதல்களைத் தூண்டுவதில் முஸ்லிம்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்ற முஸ்லிம்களை அரச படையினர் கொன்று விட்டு அவற்றை இயக்கங்களின் மீது போட்டுள்ளனர். இதனால் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் தூண்டப்பட்டனர். அதே நேரம் தமிழ் இயக்கங்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்களை அரசியல் ரீதியில் வெல்வதற்கான வேலைத்திட்டங்கள் அப்போது தெளிவாக இருக்கவில்லை. அவர்கள்மீது ஆயுதங்களையும் பிரயோகித்தனர்.

அன்று கிழக்கில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவைச் சீர்குலைப்பதும் அவர்களிடையே பகைமையை ஏற்படுத்துவதும் அரசுக்கு அவசியமாக இருந்தது. அன்றைய தேசிய பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத் முதலியின் தலைமையில் அரசு திட்டமிட்டுச் செயற்பட்டது. முஸ்லிம் பிரமுகர்களின் கொலைகளின் பின்னால் அரசின் சதி முயற்சிகள் இருந்தன. தமிழ் இயக்கங்கள்மீது பழி போடக்கூடியதாக இருந்தது. தமிழ் இயக்கங்களின் செயல் என்று கூறி பிரசாரத்தையும் மேற்கொண்டது. கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே மோதல்களைத் தூண்டுவதில் அரசாங்கமும் உளவுப்பிரிவும் ஆயுதப் படையினரும் சாதகமான சூழலை உருவாக்கி வந்தனர். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் இயக்கங்களின் வெளிப்படையான அராஜகச் செயற்பாடுகளும் அமைந்திருந்தன. முஸ்லிம்மக்கள் விரோதக்கண்ணோட்டம் தமிழ் இயக்கங்களிடம் தாராளமாக வெளிப்பட்டன. இதைவிட ஊர்காவல் படை 'ஜிகாத்' போன்ற அமைப்புகளின் செயற்பாட்டாலும் தமிழ் முஸ்லிம் உறவை சிதைக்கும் அரசியல் போக்கும் நேரடியாக இருந்தது.

**தி.ஞா.: தமிழரின் போராட்டத்தை முஸ்லிம்கள் காட்டிக் கொடுத்தார்கள். அதனாலேதான் வட புலத்திலிருந்து அவர்கள் கலைக்கப்பட்டார்கள் என்று அக்கால கட்டங்களில் பரவலாகக் கூறப்பட்ட காரணம் எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியது?**

**மது:** போராட்டத்தை முஸ்லிம்கள் காட்டிக் கொடுத்தார்கள் என்பதெல்லாம் ஒரு அப்பட்டமான பொய். அந்தக் காலத்தில் தமிழ் தரப்பிடமும் காட்டிக் கொடுக்கும் ஒரு நிலைமை இருந்தது. பலரைத் தெரு வீதிகளில் சுட்டுக் கொல்லும் நிலைமை இருந்தது. 83இலிருந்து 87வரை காட்டிக் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், தமிழ்த் தரப்பிலேதான் கூடுதலாக உள்ளது. தமிழ்த் தரப்பினர் என்பதற்காக அவர்களை காட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொல்லி, கலைப்பதற்கு இயக்கங்கள் துணியவில்லை. ஆனால் முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொல்லி, அதனால் ஏற்படக்கூடிய நெருக்கடியை கையாளக் கூடிய திராணியில்லாத நிலையில் இயக்கங்கள் இருந்தன. அவ்வாறான ஒரு முடிவை எடுத்ததனுடைய விளைவு பிற்பட்ட காலத்தில் அரசியல் ரீதியான பிரச்சினைகளை முகம் கொடுப்பதற்கு காரணமாக இருந்திருக்கிறது என்பதை இன்று பார்க்கக் கூடியதாக இருக்கிறது. கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான உளவியல் விரிசல் முறுகல்நிலை உருவாவதற்கு திட்டமிட்டு அரசு உழைத்து வந்தது. இருதரப்பிலுமிருந்த நாசகாரக்கும்பல் இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனால் நிலைமைகள் மோசமாகின. இதன் உச்சக்கட்டமாக வடக்கிலிருந்து முஸ்லிம்மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இயக்கத்தின் இந்த முடிவுக்குப் பின்னால் யாருடைய நலன்கள் இணைந்திருந்தன என்பது நாம் நிதானமாக எழுப்ப வேண்டிய கேள்வி. இது தந்திரோபாயத் தவறு என்பதை விட பாரிய தேசிய அரசியல் தவறு. அதாவது தமிழ்த் தேசிய அரசிய லைச் சிதைக்கும் அரசியல்பண்பு கொண்டது. இந்தத் துரோக அரசியல் தமிழ்த் தரப்பு நிலையிலிருந்து வெளிப்பட்டுள்ளமைதான் பரிசீலனைக்குரியது.

**தி.ஞா.: இயக்க அரசியல் ஒரு விடுதலை அரசியலாகப் பரிணமிக்கவில்லை என்றா நீங்கள் கூறவருகிறீர்கள்?**

**மது:** இன்று சர்வதேச ரீதியான தலையீடுகள் வந்தபொழுதும்கூட எங்களுடைய இந்தத் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒட்டுமொத்தமான தமிழ் பேசும் மக்களின் நலன்களை அரசியல் ரீதியாக தீர்ப்பதற்கான வழிமுறைகளையும், தந்திரோபாயங்களையும் கையாள்வதற்கு இந்தத் தலைமைகளிடம் முதிர்ச்சியும், அறிவும், ஆற்றலும், அதற்கான மனப்பாங்கும் இருக்கவில்லை. இதனை எதிரி சரியான முறையில் புரிந்து கொண்டதன் விளைவுதான் வெவ்வேறுபட்ட காலங்களிலும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆரம்பத்தில் இயக்கங்கள் தீவிரமாக வளர்ந்து கொண்டிருந்த கால கட்டத்தில் சில இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் “நாங்கள் போராடி ஈழத்தைப் பெறுவோம். அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள், அதனை அரசியல் ரீதியாக நடத்துவார்கள்” என்று கூறியதை இன்று நினைத்துப் பார்க்க வேண்டும். இது எவ்வளவு தூரம் அரசியல் முதிர்ச்சி அற்ற அப்பாவித்தனமான நிலைப்பாடு எடுப்பதற்கு இவர்களைத் தூண்டியிருக்குமோ? தூண்டுவதற்கான காரணங்கள் இருந்திருக்குமோ? என்பது பின்னர் உள்ள முடிவுகளில் இருந்து காணக்கூடியதாக இருக்கிறது. இன்னும் தேசிய விடுதலை சமூக விடுதலைக்கான முழுப்பரிமாணங்களையும் உள்வாங்கிய ஒன்றாக இருக்கவில்லை. இதற்கு மக்களும் தயார்ப்படுத்தப்படவில்லை.

**தி.ஞா.: திரு. தனபாலசிங்கம் அவர்களே, ஒரு பத்திரிகையாளன் என்ற நிலையில் இவர்கள் இருவரும் கூறிய விடயங்களை நீங்கள் எவ்வாறு விமர்சிக்கிறீர்கள் ?**

**தனபாலா:** என்னைப் பொறுத்தவரையில் இந்த தமிழ் தீவிரவாத இயக்கங்களின் போராட்டங்கள் ஆரம்பக் கட்டங்களிலேயே தவறான வழிகளில் செல்வதற்கான அறி-குறிகளைக் காண்பித்தபோதும், அரச இயந்திரத்துக்கு எதிரான போராட்டம் என்ற வகையில், அவர்களின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூட அவர்களை ஆதரித்திருந்தார்கள். குறிப்பாக இடதுசாரி இயக்கக் குழுக்களைச் சொல்லலாம். அரச இயந்திரத்திற்கு எதிரான போராட்டம், ஒரு ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், ஒரு சிறுபான்மை இனத்தின் சார்பிலான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்ற முறையில் அந்தப் போராட்டத்தை ஆதரித்தவர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தந்தை செல்வாவினால் வைக்கப்பட்டதுதான் தமிழ் ஈழம் என்ற கோரிக்கை. ஆனால் அது, 76 வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு முன்னரே வவுனியா வில் சுந்தரலிங்கம் எலெக்சன் கேட்கும் போது அதனை முன்வைத்து தோற்கடிக்கப்பட்டார். மற்றவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஈழக்கோரிக்கைக்குக் கூட ஒரு குறிப்பிட்ட வரலாறு இருக்கிறது. அது எந்த கட்டத்திலாவது உள்நாட்டு அரசியல் நிலவரங்களை-எதிரிகளால் அங்கீகரிக்கக்கூடிய நேசசக்திகள் யார் என்பதை அடையாளங்கண்டு

அவர்களை வென்றெடுக்க வேண்டுமென்று முனைப்புடன் முன்வைக்கப்பட்ட கோரிக்கை என்று யாருமே சொல்ல முடியாது. தமிழ் கூறும் மக்களுடைய பிரச்சினைகளுக்கு இறுதியந்தமாக முன்வைக்கப்பட்ட தீர்வாக அந்தக் கோரிக்கையை முன் வைத்தவர்களுக்கு அடுத்த நாள் என்ன செய்வது என்ற சிந்தனை கூட இருக்கவில்லை. தமிழர் விடு தலைக்கூட்டணி 76ல் அதனைச் செய்தபோது, அடுத்த நாள் என்ன செய்வதென்றுகூட தெரியவில்லை. 78ம் ஆண்டு மே தினத்தில் அமிர்தலிங்கத்திடம் இது பற்றிக் கேட்டபோது- அடுத்தமுறை ஈழத்தில் காண்போம் என்று சொன்னீர்களே என்று கேட்டபோது, தலைவர்கள் இப்படித்தான் சொல்லிக்கொள்வார்கள் என்று சொன்னார். ஆயுதம் ஏந்திய இயக்கங்களாக இருந்தால் என்ன, மிதவாத சக்திகளாக இருந்தால் என்ன, எங்களுடைய கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான நேச சக்திகளை அணிதிரட்டுவதில் ஒவ்வொரு கட்டத்திலும் பிழைவிட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அநேகமான போர்க்கால இலக்கியங்கள் என்று வந்திருந்தாலும்கூட கணிசமான இலக்கியங்கள் பக்கச் சார்பு உடையனவாக இருக்கின்றன. எழுத்தாளன், ஏதாவதொரு கோட்பாட்டுக்குச் சார்பானவன், ஒரு நிலைப்பாட்டுக்குச் சார்பானவனாகத்தான் இருக்கவேண்டும் என்ற வகையில் நாம் எந்த நிலைப்பாட்டிற்கும் சார்பில்லாமல் ஒரு யதார்த்த நிலையில், அவரவர் எந்தெந்த நிலைப்பாட்டில் இருந்தார்கள் - இஸ்லாமிய தரப்பினர் என்ன நினைத்தார்கள்?, தமிழ் தரப்பினர் என்ன நினைத்தார்கள்?, நாங்கள் விட்ட பிழை என்ன?, அவர்கள் விட்ட பிழை என்ன? என்பதை பரிசீலிக்கவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம்.

**தி.ஞா.: இன்றைய நிலையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் முடிந்து விட்டதா? அல்லது அது வேறு வடிவம் எடுத்துள்ளதா? மது, நீங்கள் சொல்லுங்கள்.**

**மது :** கடந்த 6, 7 தசாப்தங்களாக நடைபெற்றுவரும் சிறுபான்மையினத்தவரின் உரிமைப் போராட்டங்கள் பல்வேறுபட்ட வடிவங்கள் எடுத்துள்ளன. குறிப்பாக மூன்று தசாப்தங்களாக முனைப்படைந்த ஆயுதப் போராட்டம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. போராட்டம் முடிந்திருக்கிறதா? என்று பார்த்தால், இந்த ஆயுதப் போராட்டந்தான் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதே நேரம் சமூக, அரசியல்,பொருளாதார பண் பாட்டு விடயங்களை சிதைக்கின்ற, உளவியல் தளங்களில் ஒடுக்குகின்ற இன்னொரு வடிவில் இந்த யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். தொடர்ந்து போர் உணர்வு மேற்கிளம்பாமல் பார்த்துக் கொள்வதும் அதே நேரம் இந்தப் பேராட்டம் இருப்பதற்கான காரணிகளைத் தளமாற்றம் செய்கின்ற, அதனை இல்லாமல் செய்கின்ற 'அரசியல் நீக்கம்' செய்கின்ற நிலைமைகளாகத்தான் பார்க்கவேண்டும். உதாரணத்திற்கு ரணில் காலத்தில் அல்லது சந்திரிகா காலத்தில் குறைந்த பட்சம் இங்கு ஒரு இனப்பிரச்சினை இருக்கிறது என்பதும் இவர்களுக்கு ஒரு சமஷ்டி மூலமான தீர்வு வேண்டும் என்று சொல்லி சிங்கள சகோதரர்கள்கூட உரத்துப் பேசக்கூடிய நிலை இருந்தது. சில சிங்களக் குக்கிராமங்களில்கூட பல கருத்தரங்குகள் நடைபெற்ற பல செய்திகளைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் இன்று சமஷ்டியை உச்சரிக்கக்கூட முடியாத அளவுக்கு நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல எங்களுக்கு இனப்பிரச்சினை என்பது அபிவிருத்திப் பிரச்சினையாக

சுருக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பின் னால் இயங்கிய அரசியல் இல்லாமல் செய்யப்பட்டு வேறு சில அரசியல் நிலை மைகள் திணிக்கப்படுகின்ற நிலைமைதான் இருக்கிறது.

2009மே மாதத்திற்குப் பிறகு அபிவிருத்தியின் பெயரால் தமிழ்ப் பிரதேசங்களின் வளம்மிக்க பிரதேசங்களும் நகர மையங்களும் தென்னிலங்கை சார்ந்த தனியார் துறைக்கு ஒதுக்கப்படுகின்றன. இங்கு ஒரு வேகம் தெரிகிறது. ஆம்! பெருமளவு காணிகள் இராணுவ முகாம்களாகவும் இராணுவத்தினரின் குடியிருப்புக்களுக்காகவும் எல்லையிடப் படுகின்றது. யுத்தத்தின்பின்னான முத லீட்டு வாய்ப்புகள் பெரும்பாலும் தமிழ் மக்களால் நிரப்பப் படவில்லை. இந்நிலையில் தென்னிலங்கை சார்ந்த முதலாளித்துவ நிறுவனங்களால் நிரப்பப் படுகின்றன. வங்கிகளின் பெருக்கத்தையும் சுட்டிக்காட்டலாம். ஆக தமிழ் மக்கள் தங்களது வேலைவாய்ப்புக்காக இந்த நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்குள் தம் மைக் கொண்டுவருகின்றனர். வாழ்நாள் கொத்தடிமைகளாக மாறிக்கொண்டிருக் கின்றனர். பொருளாதாரத் தளத்தில் தொடரப்பட்டுள்ள யுத்தத்தினை வெல்வ தற்கு தமிழ்த்தரப்பிடம் பொருத்தமான வேலைத்திட்டம் எதுவுமில்லை. மாறிவரும் நிலைமைகள் பற்றிய சரியான கணிப்பும் மாற்றுப்பார்வையும்கூடத் தமிழ்ச் சூழலில் இல்லை.

அடுத்தது இன்று நிலைமை மாறி யிருக்கிறது. முன்பு வட்டுக்கோட்டைத் தீர்மானம் சொல்லப்பட்ட நிலை மையும் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையும் வேறாகியுள்ளது. இன் றைக்கு நம்மவர்கள் வாழுகின்ற புவிப் பரப்பினுடைய எல்லைகள் அதனு டைய தன்மைகள் அதன் அரசியல் மாறி யிருக்கிறது. ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களை அரச இயந்திரம் மிக மோசமாக நசுக்கின்றது. அவர்கள் இந்த ஒடுக்கு முறைக்கு எதிராகத் தங்களுடைய குரலை வெளிப்படுத்தவேண்டும் என்பதில் யாருக் கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் நாங்கள் என்னவிதமான முறையில் எங்களது எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப் போகின்றோம்? இந்த மக்களுக்கு என்ன

**புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் உண்மையில் எங்களது போரியல் இலக்கியத்திற்கு முழுமையான பங்களிப்பைச் செய்தவர்களாக நாங்கள் கருதமுடியாது. எங்களுடைய போராட்டத்தை வளர்க்கக் கூடியதாக உரிமைகளைப் பெறக் கூடிய** POSTIVE APPROACH **அவர்கள் எழுத்துக் களில் இல்லை. எங்களை மிக கேவலப்படுத்தும் போக்குகளும் அவர்களது எழுத்தில் உண்டு. அதுவே தூக்கலாகத் தெரிகிறது. நடுநிலையில் நின்று வித்தியாசமாக எழுதியவர்கள் மிகக் குறைவு.**



விதமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான தந்திரோபயமான வழிமுறைகளை அல்லது அரசியல் பொறிமுறைகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் போகின்றோம்? என்பது பற்றிய ஒரு தேடல் உரையாடல் எங்களுக்கு வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தன்னை மீள் சிந்தனைக்கும் மீள்விசாரணைக்கும் அத னடிப்படையிலான மீள்கட்டமைப்பிற்கும் உட்படுத்தப்படுவதன்மூலம்தான் சமகாலத்தில் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். குறிப்பாக முஸ்லிம்மக்களின் அரசியலை விளங்கிக் கொள்ளவும் அங்கீகரிக் கவும் முடியும். போருக்குப் பிந்தியதா? போருக்கு முந்தியதா அல்லது நாங்கள் எங்கே நிற்கிறோம் என்பதெல்லாம் ஒரு சொல்லாடல் விளை யாட்டுத்தான். நாங்கள் எதனைப் பார்க்கவேண்டுமென்றால், இந்த மூன்று நான்கு தசாப்தங்களில் கஷ்டப்பட்டு, தங்களுடைய வாழ்க்கையை இழந்து எவ்வளவோ துன்பத்திற்கு மத்தியில் இருக்கக்கூடியவர்களுடைய எதிர்காலம் நாங்கள் கதைக்கின்ற தீர்வுகளுக்குள் அல்லது பேசப்படுகின்ற இந்த விடுதலைக்குள் ஒன்றுகலக்கின்றதா? என்பது மிக முக்கியமான விடயம். இன்றைக்கும் தேர்தல் களத்தில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதைப் பார்க்கும்போது அங்கு இனவிடுதலைக்குத் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்யாதவன் அல்லது ஒரு கல்லைத் தூக்கி எறியாதவன் அல்லது இந்தக்கஷ்டங்களை அனுபவிக்காமல் இருப்பவர்கள்தான் இங்கு வேட்பாளர்களாகத் தெரிவாகும்நிலைமை இருக்கிறது. சாதாரண மக்களின் கண்ணோட்டங்கள் கவனத்தில் எடுக்கப்படாத நிலைமை இருக்கிறது என்பதை நாம் மறந்திடக்கூடாது. இதனையும் உள்ளடக்கித்தான், போரியல் இலக்கியம் என்று நாங்கள் பேசுகின்றோம். சில நேரங்களில் இந்த இலக்கியம் என்பதை ஒரு விரிந்த அர்த்தத்தில் பார்ப்பது பொருத்தமாக இருக்குமோ என நான் கருது கிறேன். வெறுமனே சிறுகதை, கவிதை என் பதை விட இலக்கியம் என்பது ஒரு விரிந்த புதிய பொருள்கோடல் சொல்லுகின்ற ஒரு மரபுக்குள் உள்ளாக்கினால் புனைகதை சாரா விடயங்களையும் உள்ளாக்கினால், நாங்கள் சில வேளைகளில் புதிய அம்சங்களைக் காண முடியும். இந்த மரபுக்கு ஊடாகச் சில பதிவுகள் இருக்கின்றன.

உதாரணமாக ஆரம்ப காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் புரையோடியிருக்கக்கூடிய உள்ளக முரண்பாடுகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும் எனப் பல கவிதைகளை எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். குறிப்பாக ஜெயபாலன் தனது கவிதைகள் சிலவற்றில் பிரதேசவாதத்தின் தன்மையை - குறிப்பாக யாழ்ப்பாணத்தாரிடம் புரை-யோடிப் போயிருக்கக்கூடிய பிரதேசவாதக் கண்ணோட்டங்கள்களையப்படவேண்டும் என்பதை கிழக்கு மாகாணத்தின் கண்ணோட்டத்தில்எழுதியிருக்கிறார். அது மட்டுமல்ல முஸ்லிம் நண்பர்கள் பற்றிய நிலையை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதை ஜெயபாலனுடைய கவிதை கள் சொல்கின்றன. சேரன் தனது கவி தைகள் சிலவற்றில், சிங்களச் சகோதரர்கள் பற்றியதோ, இஸ்லாமிய சகோதரர்கள் பற்றியதோ அல்லது ஆதிக்கம் எந்தெந்த வடிவத்தில் வெளிப்பட்டாலும் அது சிங்கள வடிமாக இருந்தாலும் சரி, தமிழ் வடிவமாக இருந்தாலும் சரி அதுவும் கண்டிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் எழுதியிருக்கிறார். இளவாலை விஜேந்திரன் அனுராதபுரப் படுகொலைகள் செய்யப்பட்டபொழுது “இந்தக்கைகளை எந்தக் கங்கையில் கழுவுவேன்” என்று எழுதியிருந்தார். இவ்வாறான பதிவுகள் இருக்கின்றன. அதாவது இந்த இலக்கியப் பதிவுகளுக்கூடாக, இலங்கையினுடைய

## புத்தரின் படுகொலை

**நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.**

**இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.**

**"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்..."
என்றனர் அவர்கள்.**

**"சரிசரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.**

**சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக் *
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான்* சாம்பரானது.**

– *சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன பௌத்தமத அறநூல்கள்.
(1981 – அலை–18)

**– எம்.ஏ.நுஃமான் –**

பல்லினச் சமூகக்காரருடைய ஒரு விடுதலை அரசியலுக்கான அதாவது சிங்களச் சமூகத்தை எப்படிப் பார்க்கவேண்டும்! முஸ்லிம் சமூகத்தை எப்படிப் பார்க்க வேண்டும் அல்லது தமிழர்களிடம் புரையோடியிருக்கின்ற சாதிக்குள் சாதி பற்றிய விடயங்களை எப்படிப் பார்க்கவேண்டும் போன்ற விடயங்கள் வெளிவரவேண்டும். இயக்கங்களுக்கு ஜாதிப் பெயர் சூட்டியிருந்த நிலை மையையும் நாம் மறந்து விடக்கூடாது. இதெல்லாம் தமிழ்த் தேசியத்தில் நடக்கக் கூடிய விடயங்களாக இருந்திருக்கின்றன. நாங்கள் நினைக்கக்கூடாது, இந்த ஜாதிகள் எல்லாம் போராட்டத்தால் மறக்கப்பட்டு விட்டதென்று, இடம் பெயர்ந்திருக்கக் கூடிய காலத்தில் தென்மராட்சியில் எத் தனை வீடுகளில் இருக்கும் கிணறுகளில் ஒடுக்கப்பட்ட ஜாதியினர் தண்ணீர் அள்ளினார்கள் என்ற காரணத்துக்காக அதற்குள் குப்பைகளைக் கொட்டிய வரலாறு கள் இருக்கின்றன. பல ஊர்களில் நடந்த இப்படியான பல சம்பவங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் நாங்கள் திறந்த மனதுடன் விரிந்து பார்ப்பதற்கான களம்தான் இன்று திறக்கப்பட்டிருக்கிறது. போராட்டம் இப் போது வாழ்வியல் சார்ந்த போராட்டம், அந்த வாழ்வியலை பிணித்திருக்கக்கூடிய அனைத்துத் தளைகளையும் நீக்குவதற்கான போராட்டம்என்றுஇன்றுபலவடிவங்களில் பேசக்கூடியநிலை இருக்கிறது.

*1986*களின் ஆரம்பத்தில் "பாவம் மக்கள்" என்னும் தலைப்பில் கவிதைத் தொகுதியொன்று வெளியானது. இயக்க அரசியல் குறித்த விமர்சனம் இளையோ-டிய தொகுதி. இதனைப் பலரும் மறந்து விட்டோம்.

**தி.ஞா.: மு.பொ., உங்களது கருத்தைக் கூறுங்கள்**

**மு.பொ.:** தனபாலசிங்கம் கூறினார், இதனை மக்கள் போராட்டமாக்கியிருந்தால், இது எங்களுக்கு வெற்றி அளித்திருக்கும் என்று. அது உண்மை. அரவிந்தர் இந்தியப் போராட்டத்தின் போது கூறினார், "விடுதலைக்காகப் போராடுகிற ஒரு இனம் முதலில் விடுதலை பெற்றிருக்கவேண்டும்" என்று. அதனை நமது போராட்ட வீரர்கள் மறந்து விட்டார்கள். அவர்கள் மக்களை ஒரு பார்வையாளர்களாக வைத்திருந்தார்களே ஒழிய அவர்களையும் அதில் பங்குபற்றக் கூடியவர்களாக அவர்களுக்குரிய ஒரு பங்கைக் கொடுக்கக்கூடியவர்களாக வைத்திருக்கவில்லை. இனிமேலும் வரக்கூடிய ஒரு போராட்டத்தில் கூட இத்தகையதொரு பார்வை இருக்கவேண்டும். அது என்ன முறையில் வரும் என்ற சொல்ல முடியாது. பிறநாட்டு உள்நாட்டு அரசியல் மாற்றங்களால் மீண்டும் எமக்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அந்த நேரங்களில் நாங்கள் மக்களைத் தழுவியே அந்தப் போராட்டம் நடைபெறவேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. ஒருவர் மேலே இருந்து சொல்லக்கூடிய நிலை இருக்கக்கூடாது. அதனாலேதான் நாங்கள் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

**தனபாலா:** போர் முடிந்து விட்டது, போராட்டம் முடிந்து விட்டது என்று கதைக்கிற விஷயங்களைப் பொறுத்தவரை, போராட்டம் முடிந்து விட்டது என்று ஒருவர் சொன்னால், 'அதிலிருந்து நான் விலகிக் கொண்டேன்' என்றுதான் அர்த்தம். போராட்டம் ஒருபோதும் மனித குலத்திற்கு முடிவுபெறுவதில்லை. நாங்கள் இந்தப் போர்க்கால இலக்கியங்களை ஒரு தொகுப்பாகத் தொகுத்தல் வேண்டும் என்றது கூட நாங்கள் ஏதோ ஒரு வகையில் போராட்டத்தைத் தொடர நினைக்கிறோம் என்றுதான் அடையாளம். எனவே போராட்டம் முடிந்து விட்டது என்று சொன்னால் அவர் அதிலிருந்து பின்வாங்கிவிட்டார் என்றுதான் அர்த்தம். இந்தப் பாதிக்கப்பட்ட சமூகத்தில் இருக்கக்கூடிய எந்த ஒருவனுக்குமே அந்த உணர்வு இருக்கத்தான் செய்யும். அது வெவ்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படவேண்டும். நாங்கள் செய்கிற இந்த முயற்சிகூட அது ஒரு வடிவிலான முயற்சி. அதைக்கூடப் போராட்டம் இல்லை என்று சொல்ல முடியாது. போராட்டம் என்பது ஆளை ஆள் அடிப்பதல்ல. "பிக்கெற்றிங்" செய்வதல்ல. கோஷம் போடவேண்டுமென்பதல்ல. எழுத்துக்குள்ளால் போராட்டங்கள் வந்திருக்கிறது. கருத்தாடல்கள் மூலம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரபாகரன் தலைமையில் ஈழம் கண்டிருந்தால் அதில் நிட்சயமாகப் பல விடயங்களுக்காகப் போராட வேண்டியிருந்திருக்கும். அடிப்படை உரிமைகளுக்காகத் தமிழன் போராட வேண்டிய நிலைமை கூட வந்திருக்கலாம். இவைகளை நாங்கள் 'சீல்' பண்ண முடியாது. முடிந்தது என்று சொல்லமுடியாது. வரலாற்றில் இந்தக் கட்டத்தில் எங்களது பிரச்சினை ஒரு பரிதாபமான நிலைக்கு நகர்த்தப்பட்டியிருக்கிறது. அந்த நகர்வுக்கான காரணங்கள் என்ன? அதை இன்னொரு ஆரோக்கியமான தளத்தில் எவ்வாறு முன்னெடுப்பது என்பதற்கான பங்களிப்பாக நாங்கள் இதனை முழுமனதோடு செய்வோம்.

**தி.ஞா.: இந்த ஆயுதப் போராட்ட காலத்தில் எழுத்தாளர்களுக்கு ஒரு 'மனத்தடை' இருந்தது. எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலைமை இருந்தது. எனவே இதுவரை காலமும் எமக்குக் கிடைத்த பதிவுகள் இந்த 'போரியல்' இலக்கியத்தைச் சரியாகப் பிரதிபலிக்குமா?" அல்லது இனிமேல்தான் அவை எழுதப்படவேண்டும் என்ற கேள்வியும் ஒன்று இருக்கிறது. குறிப்பாக**

**ஆயுதப் போராட்டம் நடந்த காலத்தில் எழுத்தாளர்கள் தங்களது கைகளுக்குத் தாங்களே பூட்டுப் போட்டுக் கொண்டு எழுதினார்கள். அந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. இப்போது ஆயுதப் பேராட்டம் இல்லை எனவே இதுபற்றி முழுமையாக எழுதவேண்டும் என்று கூறுகின்ற புத்திஜீவிகள் கூட்டமொன்று இருக் கிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**மு.பொ.:** உண்மையில் இது ஒரு முக்கியமான கேள்வி. எங்களுடன் நெருங்கியவர்கள் கூட பெரும் ஆபத்துக் களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நான், என்னோடியங்கிய சு.வி ஆபத்துக்களில் இருந்து தப்பியது ஏதோ ஒருவகை அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது நாங்கள் இயக்கத்துக்கு நேரடியாகவே எதிர்ப்பைத் தெரிவித்தோம். அப்போது எமது உறவினர்கள், ஊர்ச் சனங்கள் பலரும் இது பெரும் அநியாயம் எனக் கதைத்தது அவர்களுக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது. சில போராளிகளுக்கும் இதில் உடன்பாடு இருக்கவில்லை. இத்தகைய சூழல் நமக்குரிய ஆபத்தை இல்லாது செய்ததெனலாம். நான் 2002ல் 'குந்தி ஷேத்திரம்' நெடுங்கவிதையை எழுதினேன். 'துரோணர்' என்ற புனை பெயரில் எழுதி னாலும் அதை நான்தான் எழுதுகிறேன் என்பதை வன்னியில் இருந்தவர்கள் மோப்பம் பிடித்தனர். பல கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. ஆனால் அவர்கள் அனைவரும் எனது நண்பர்களும் ஆதரவாளர்களுமே. 'குந்திசேத்திரம்' என்பது குந்தியின் வாய் கட்டப்பட்டிருப்பதாகவும் அவளது வாய் எப்பொழுது கட்டவிழ்க்கப்படுமோ அன்று தான் உண்மையான போராட்டம் வெடிக்கும் என்றும் மக்கள் போராட்டத்தைக் குறி யீடாக வைத்தே எழுதினேன்.

**மது:** தமிழ்த்தரப்புச் சக்திகள் இருந்த போது எவ்வாறான ஜனநாயகச் சூழல் நில வியதோ அதேபோன்ற நிலைமைதான் அரசாங்கத்தரப்பிலும் தொடர்ந்து நில-வுகிறது. கடந்த ஆறு, ஏழு வருடங்களில் பத்திரியாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் நாட்டைவிட்டு வெளியேறியவை-தயும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே அதிகார வர்க்கம், எழுத்துச் சுதந்திரம் கருத்துச் சுதந்திரம் முதலியவற்றை தனது கடிவாளத்திலேதான் வைத்துள்ளது.

தமிழ்த்தரப்பில் புரையோடிய அதி-காரத் துஷ்பிரயோகம் ஜனநாயக மறுப்பு ஆயுதக் கலாசாரம் போன்றவற்றை ஆக்குரோசமாக எதிர்க்கும் நிலை சில தமிழ்ப் புலமையாளர்களிடம் காணப்படுகிறது. ஆனால் இவர்கள் அரச இயந்திரத்திற்கு எதிராக அரச சித்தாந்தத்திற்கு எதிராக இதேவேகத்துடன் கிளர்ந்தெழாத தன்மையையும் நாம் பார்க்கக் கூடிய-தாக இருக்கிறது. இவர்களின், ஆளும் அதிகார வர்க்கத்தின் நலன்களை கேள்விக்குட்படுத்தாத போக்கை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது?

கடந்த காலங்களில் பொதுவாக எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுதி யிருக்கிறார்கள். சிலர் எழுதவில்லை அல்லது தங்களது மனதுக்குள் பதியம் போட்டுவிட்டு எழுதாமல் விட்டவர்களும், இருக்கிறார்கள். சில எழுத்துக்கள் ஏதோ ஒரு விதத்தில் சில விடயங்களைச் சொல்ல முற்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்கு 'முறிந்த பனை' ஒரு விதத்தில் எங்களுடைய போராட்டம் பற்றி குறிப்பிட்டகாலம் பற்றிய ஒரு சுய விமர்சனமாகப் பார்ப்பதற்கு அல்லது பல்வேறுபட்ட விடயங்களைத் தொகுத்துப் பார்ப்பதற்கு ஒரு முக்கியமான ஆவணம். ஆனால் அதே நேரம் அதிலே சம்பந்தப்பட்ட எழுத்தாளர் ஒருவர் கொலை செய்யப்படக்கூடிய நிலை வந்தது. குறிப்பிட்ட சிலர் இந்த நாட்டை விட்டு அஞ்ஞாதவாசம் செய்ய

வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆகவே எல்லாக் கருத்துக்களையும் சொல்லக் கூடிய அளவுக்கு ஒரு திறந்த சூழல் இருக்கவில்லை. அது மிக முக்கியமான ஒருவிடயம். அடுத்தது எழுத்தாளர்கள், - குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடு களில் ஒரு ஜனநா யக மறுப்பும் அதிகாரத் துஷ்பிரயோகமும்அதிகாரநெருக்கடிகளும் இருக்கின்றபோது அவர்கள் வழமையான மரபு ரீதியான இலக்கிய எழுத்து முறை களிலிருந்து மாற்றான அதை மீறின எழுத்து முறையை நோக்கி நகர்ந்தார்கள். அதைத்தான் 'மெஜிக்கல் ரியலிசம்' என்று சொல்லக்கூடிய நிலை. அவர்கள் சொல்லவேண்டிய விடயத்தை ஏற்கனவே இருக்கக்கூடிய எழுத்து மரபுக்குள் சொல்ல முடியாது. எங்களுடைய நாட்டில் என்ன நடந்ததென்றால், அதிகமானவர்கள் புலம்பெயர்ந்த காரணத்தினால், இங்கு சொல்லமுடியாத பல விடயங்களைப் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து சொன்னார்கள். ஒரு எழுத்தாளன் தன்னுடைய சமூகம் பற்றி, தன்னுடைய மக்கள் பட்ட வாழ்வியல் பற்றிய ஒரு கருத்துநிலை தெளிவு தனக்குள் வைத்திருந்தால் அவனுடைய தரிசனம் அவனுடைய பார்வைகள் அது சார்ந்ததாக அமையும். கருத்துநிலைத் தெளிவில்லை என்று சொன்னால், அவன் எது நோக்கி எதைச் சொல்லப் போகிறான் என்ற குழப்பம் நிச்சயமாக ஏற்படும். அதனுடைய விளைவை நாங்கள் பார்க்கிறோம். உதாரணமாக எங்களையே நக்கல் பண்ணி, நளினம் பண்ணி அதை இன்பமாக அனுபவிக்கிற எழுத்தாளர்களும் சிலர் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் எழுத்து என்று சொல்லி நாங்கள் கொண்டாட முடியாது. சில நேரங்களில் எழுதாமல் இருப்பது என்பது வேறு விடயம். ஆனால் இவ்வாறு எழுதி எங்களின் சமூகத்தை ஒரு மோசமான சமூகமாகச் சித்தரிப்பது அல்லது காட்டுவது என்பது ஒரு அடிப்படையான குறைபாடான விடயமாக இருக்கும். நிட்சயமாக இன்று களம் திறக்கப்படுகிறது. இந்தக் களங்களை யார் எப்படி என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப் போகின்றோம் அல்லது எதனை நோக்கி நாங்கள் எழுது கோலைப் பயன்படுத்துகிறோம் என்பதில்தான் தங்கியிருக்கிறது.

**தி. ஞா.: இன்று களம் திறக்கப்பட்ட நிலையில் எதிர்காலத்தில் வெளிவரவிருக்கும் எழுத்துக்கள் எவ்வாறு அமையவேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

**மது:** ஏற்கனவே தங்களிடம் எவ்வளவோ எல்லாம் எழுத வேண்டியிருந்தது. எழுது வதற்குச் சந்தர்ப்பம் இல்லை இப் போது தான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்று சொல்லி தங்களைப் போராளியாகக் காட்டிக் கொண்டவர்கள், அந்தப் போராளியாகத் தாங்கள் எவ்வாறு வந்தார்கள் தாங்கள் எவ் வாறு ஏமாற்றப்பட்டரர்கள். தாங்கள் மக்களை ஏமாற்றியது அதனால்பட்ட துன்பங்கள் இவற்றையெல்லாம் ஒரு சுய விமர்சனமாக எழுதுவதில் ஒரு நேர்மை இருக்கிறது. அதுவேறு விடயம். ஆனால் தாங்கள் பட்டதெல்லாவற்றையும் ஒரு நக்கல் நளினத்தோடை கிண்டல் பண்ணி எழுதுவது என்பது ஒட்டுமொத்தமாக ஒரு சமூகத்தை கிண்டல் பண்ணுகிற ஒரு விடயம். அது ஏமாற்றப்பட்டிருக்கிற ஒரு சமூகத்தை இன் னும் கொச்சைப்படுத்துகிறதாக அமையும்.

**மு.பொ.:** (குறுக்கிட்டு) விடுதலைக்காக போராடுபவர்களிடமிருந்து எதிர்ப்பு இலக்கியம் வருவதுண்டு. இன்று விடு தலைக்காக போராடிய முன்னாள் போரா-ளிகள் சிலரிடமிருந்து இன்னொரு வகை இலக்கியம் வருக-றது. அதுதான் 'சிதைப்பு இலக்கியம்'. தம்மைப் பெரி யவர்களாகக் காட்டிக் கொள்ள தாம் வரித்த இலட்சியங்களையே தென் னிந்தியச் சஞ்சிகைகளுக்கு



விலை கூறிநிற்கும் சிதைப்பு இலக்கியம்!

**தி.ஞா: இந்த ஆயுதப்போர் முடிவடைந்த பின்னர் "போருக்குப் பிந்திய" என்ற சொல்லாடல் பரவலாகப் பாவனையில் உள்ளது. இந்தச் சொல்லாடல் பாவனையில் உள்ள தாற்பரியத்தை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம்?**

**மது:** இன்று பொதுவாக ஊடகங்களில் போருக்குப் பின் என்ற சொல்லாடல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சொல்லாடல் கருத்தாக்கத்தை யார் அதிகம் - எந்த நோக்கத்திற்காக எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பது நமக்கு முக்கியம்.

போருக்கு பிந்திய என்ற தொடர் எண்ணக் கரு பல்வேறு சிக்கல்பாடுகளைக் கொண்டது. இதனை நாம் ஒற்றைப் பரிமாணத்தில் வைத்துப் புரிந்து கொள்ள முடியாது. இதுவரை தமிழ்த்தரப்பு சக்தி களால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஆயுதப் போராட்டத்தை இலங்கை அரசாங்கம் தற் போது முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. இதன் பின்னர் தான் போருக்கு பிந்திய என்ற எண்ணக்கரு பயன்பாட்டில் தாராளமாக நிலைபேறாக்கம் அடைந்தது.

பொதுவாக போர் என்பது பல்பரி மாணங்களைக் கொண்டது. இது தனித்து ஆயுதப் போரை மட்டும் கொண்டது அல்ல. ஆனால் நடைமுறையில் ஆயுதப்போர் மட்டுமே முழுப்போராட்டமாக காட் டப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்தது. இதனால்தான் போர் முடிந்ததும் போருக்குக் காரணமான அரசியல் என்பது மறக்கப்பட்டு மக்களுக்கு நேர்ந்த அவலம் துன்பம், இழப்பு, வலி யாவும் பிரச்சினையாக மாற்றப்பட்டது. இங்கு இவை மக்கள் நலம் சார்ந்த வகையில் முக்கியமான பிரச்சினைகள் என்பது எவருக்கும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இவை ஏன் ஏற்பட்டது. எப்படி வளர்க்கப்பட்டது என்பது மறக்கப்பட முடியாத விடயங்கள். எப்போதும் போர் என்பது அரசியலின் தொடர்ச்சியாகப் பார்க்கப்பட வேண்டும். தேசிய ஒடுக்கு முறை என்ற அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுதப் போராட்டமானது தோன்றியது. அதன் உச்சக் கட்ட விளைவுகளுக்குத்தான் நாம் இன்று முகம் கொடுத்துள்ளோம். அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

ஆக, போர் அனைத்துக்கும் காரண-மாகி விட்டது என்பது உண்மைதான். இங்கு நாம் ஒரு அடிப்படையான கேள்வி ஒன்றை எழுப்புவது மிகப் பொருத்தமாக இருக்கும். அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் யுத்தம் என்றால் இந்த யுத்தம் ஏன் நடைபெற்றது என்பது முக்கியம். யுத்தம் ஒரு அரசியல் விளைவால் நடந்தது. இந்த அரசி யல் தேசிய ஒடுக்குமுறையின் பாற்பட்டது. இந்த ஒடுக்கு முறைக்கு தீர்வு காண எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளும் இதே விதமான யுத்தங்களையும் நெருக்கடி களையும் திரும்பத் திரும்ப தோற்றுவிக்கவே வழிவகுக்கும். ஆம், இதற்கான மாற்று வழி-வகைகளைக் காண முடியாத அரசாங்கம் இந்த ஒடுக்குமுறையை தொடர்வதாகவே அர்த்தப்படும்.

இலங்கை அரசின் இருப்பே சிங்கள பௌத்தத்தை பாதுகாப்பது, வளர்த்தெடுப்பது என்ற கோட்பாடுகளின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஒன்று என்ற வகையில் அவற்றைச் செயற்படுத்துவதிலேயே அது தங்கி யுள்ளது. இதுவரை மாறி மாறி வந்த அரசாங்கங்களும் இந்த இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதிலேயே தமது தீவிரத் தன்மையையும் அக்கறையையும் முடியுமானளவிற்கு காட்டிவந்திருக்கின்றன. இதனைச் சரிவரச் செய்யமுடியாத அல்லது அதில் அக்கறை காட்டாத அரசாங்கம் 1948 சுதந்திரத்திற்குப் பின்னான எந்த ஒரு அரசாங்கத்தின் மீதும் குற்றஞ்சாட்டிவிட

## வாயடைத்துப் போனோம்

- முருகையன் -

*என் நண்பா, மெளனம் எதற்கு?'*
*என்று கேட்டிருந்தாய்.*
*வாயடைத்துப் போனோம்; வராதாம் ஒரு சொல்லும்.*
*'திக்' கென்ற மோதல் -*
*திடுக்கிட்டுப் போனோமே!*

*பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று போய்ப்பற்ற*
*ஏற்ற வகையில்*
*இதமான நச்செண்ணெய்*
*ஊற்றி*
*அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்*
*இத்தனை தீய எரிவு நடைபெறுமா?*

*எத்தனை தீய எரிவு - தலையுடைப்பு,*
*குத்துவெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?*

*சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்*
*பேசி இருந்த பிராணி*
*சடக்கென்று*
*வாரை இடுப்பாற் கழற்றி,*
*மனங்கூசாமல்*
*ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்*
*மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?*
*சுர்ரென்று*
*சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?*
*கொள்ளை, திருட்டு, கொலைகள், கடையுடைப்பு,*
*பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை*
*புரிந்து*
*சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?*

*ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.*
*'திக்'கென்ற மோதல் - திடுக்கிட்டுப் போனோம் நாம்.*
*வாயடைத்துப் போனோம்;*
*வராதாம் ஒரு சொல்லும்.*

*(1978 - மல்லிகை)*

முடியாது. அரசாங்கம் கைமாறுகின்ற போதெல்லாம் அந்தக் கைமாறுதலுக்குப் பிரதான காரணமாக இருந்தவை இந்த விடயங்களில் அதிக சிரத்தை எடுப்பவர் யார் என்ற கேள்வியே சுதந்திரத்திற்கு பின்னான காலங்களில் இருந்தது. 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். அராசங்கம் 1978இல் கொண்டுவந்த புதிய அரசியல் அமைப்பு மூலம் இந்தக் கேள்விக்கு இனிமேலும் இடமில்லாத வகையில் இவ்விடயம் நிறுவனமயப்படுத்தப்பட்டு ஸ்திரப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த நிறுவனமயமாக்கலும் ஸ்திரமாக்கலும் தனது சக்தியை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் ஒரு விளைவுதான் 1983 இல் நடந்த இனக்கலவரம்.

தமிழர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் முழுக்கமுழுக்க ஒதுக்கப் போகிறோம் என்ற செய்தியை இந்தக் கலவரம் எழுதியது. அதுவரை காலமும் இருந்துவந்த கொஞ்ச நஞ்ச அதிகாரப் பகிர்வு வாய்ப்புக்களையும் முற்றாக இழுத்து மூடிவிட்டதற்கான ஒரு சமிக்ஞையாக யாவும் நடந்து முடிந்தன. நிலைமைகள் மாறின. இந்த இன ஒதுக்கலுக்கெதிரான எதிர்ப்பு தமிழர்கள் மத்தியில் இருந்து தீவிரமான ஆயுதமேந்திய போராட்டமாக மாறியது.

தேசிய விடுதலை என்ற முழக்கத்துடன் நடந்த இந்தப் போராட்டம் தமிழ் தேசியத்தினை ஒருமுகப்படுத்தி ஸ்திரப் படுத்தும் செயலை இன்னொரு தள மாற்றத்தை, வளர்ச்சியை ஏற்படுத்தியது. முரண்பட்ட இருதேசங்களுக்கிடையிலான யுத்தமாக இந்த யுத்தம் மாறியது. வெறும் உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் -கலவரம் என்ற நிலைமை மாறி ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் என்ற நிலைக்கு இது வளர்ச்சி கண்டது. இன்று

இங்குள்ள பிரச்சினை வெறும் சராசரி உரிமைகளுக்கான போராட்டம் என்ற நிலையைக் கடந்ததொன்று என்பதை இந்த வளர்ச்சி நிறுவிக் காட்டியது.

ஆனால் இந்த நிலைமைகளை வளர்ச்சிகளை புரிந்து கொள்ளாமல் பிரச்சினையின் அடிப்படைகளை விளங்கிக் கொள்ளாமல் சிங்களத் தரப்பு தொடர்ந்து தவறுவிட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளைப் புரிந்து கொள்ளத் தவறுகிறது. தமிழ்த் தேசியத்தின் உரிமைக்கான போராட்டத்தை 'பயங்கரவாதம்' 'அதிகார வெறி' போன்ற சொற்களுக்குள் போட்டுக் குழப்புகிறது. தனக்கும் தனது நாட்டிற்கும் தனது சந்ததிக்கும் மாபெரும் அநியாயத்தை ஏற்படுத்துகின்ற யுத்ததில் ஈடுபட்டு இந்த யுத்தத்தை தற்போது முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தப் பின்புலங்களில் நின்று கொண்டுதான் போருக்குப் பின்னான என்ற சொற்பதத்தை எண்ணக்கருவை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல தமிழ்த் தரப்பு சக்திகளால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தில் உள்நுழைந்த அராஜகமும், பாசிசமும், ஜனநாயக மறுப்பும், சுத்த இராணுவ கண்ணோட்டமும் மேலாட்சி பெற்று விடுதலை அரசியல் பண்பாட்டுக்கு விரோதமான நடவடிக்கைகள் தீவிரப்பட்டு வந்திருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அம்சங்கள் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தும் மனிதாபிமானத்தையும் மானுட உயிர்ப்புக்கான ஜனநாயகப் பண்புகளையும் அறவே இல்லாமல் செய்துவிட்டன. இதன் விளைவுகளையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

விடுதலையின் பெயரால் எத்தனையோ தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. எந்த மக்களுக்காக போராட்டம் நடத்தப் பட்டுள்ளதோ அந்த மக்களுக்கெதிராகவும் ஆயுதங்கள் திருப்பப்பட்டன. இதன் உச்ச வெளிப்படாக வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். நாம் இதனை எந்த ரீதியிலும் நியாயப்படுத்த முடியாது. இதுவரை காலமும் தமிழ்த்தலைமைகள் வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களை அரசியல் ரீதியாக அணுகுவதற்கு தாயாராக இருக்கவில்லை. முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் அரசியல் பரிமாணம் கொண்டவை. ஆகவே ஆயுதமுனையில் முஸ்லிம் மக்களை வெளியேற்றியமை இரு சமூகங்களுக்கிடையில் முரண்கள் பிளவுகள் தோன்றுவதற்கு காரணமாயிற்று. இந்த நிலைமையை அராசங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடியதாயிற்று.

மொத்தத்தில் போருக்கு பிந்திய என்ற எண்ணக்கரு வெளிப்படுத்தும் அரசியலை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த அரசியல் கருத்துநிலை சார்ந்த உரையாடல் மூலம்தான் போரியல் இலக்கியம் மீதான நமது கவனத்தை குவிக்கமுடியும். இந்த அரசியல் அம்சங்களையும் உள்வாங்கி பொருள் கோடல் செய்யும் வகையிலேயே நாம் நமது பார்வைகளை விரிவாக்க வேண்டும்.

**தி.ஞா.: போராளிகளாக இருந்த பலர் தமது வாழ்வாதாரத்திற்கு வாழ்க்கைத் தெரிவை மேற்கொள்ளும்போது சமூகம் எத்தகைய வரவேற்பை அவர்களுக்குக் கொடுக்கிறது? எத்தகைய வரவேற்பை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்? போன்ற எழுத்துக்கள் வெளிநாட்டு போரியல் இலக்கியங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. அத்தகைய இலக்கியங்கள் எங்கள் நாட்டில் வெளிவந்துள்ளனவா?**

**மது:** இதில், மிக மோசமான பகுதி என்னவெனில் எங்களுடைய போராளிப் பெண்கள் தொடர்பான பகுதி. அது அதிகமாக இந்தச் சமூகத்தில்

பேசப்படாத விடயமாக இருக்கிறது. போர் முடிந்த இந்த மூன்று வருடங்களில் பல பெண்கள் தற்கொலைக்குத் தூண் டப்பட்டிருக்கிறார்கள். இந்தப் போராட் டத்தில் ஈடுபட்டதற்காக இந்த சமூகம் அவர்களை எவ்வாறு பார்க்கிறது? அந்தப் பார்வை அவர்களை எவ்வாறு நசுக்குகிறது என்பது மிக மோசமாக இருக்கிறது. இங்கு போராட்டம் தோல்வியில் முடிந்தாலும்கூட சிலர் அங்கவீனர்களாகத் தமது கால் கையை இழந்தவர்கள்ளாக இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு எவ்வாறான வாழ்க்கைத் தெரிவை நோக்கிப் போகப் போகிறார்கள். அவர்களுக்கு எமது சமூகம் எப்படிப்பட்ட உந்துதலை ஒரு தெரிவிற்கான பாதுகாப்பைக் கொடுக்கின்றது என்பதெல்லாம் மிக முக்கியமான விடயம். வியட்நாம் போராட்டத்தில் கூட அதில் கலந்து கொண்ட பெண்கள் பின்னர் அடுப் பங்கரைக்குச் சென்றதாகவும் அது பற்றிய பல எழுத்துக்கள் புனைவுகள் இலக்கியங்கள் வந்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம். ஒரு சமூகத்தில் தெரிவு செய்து வாழ்வதற்கான ஒரு சிந்தனைத்தெளிவை ஒரு புலக்காட்சியைக் கொடுப்பதற்கான ஒரு மனப்பாங்கை வளர்ப்பதற்கான உந்துதலை கொடுப்பதற்காகத்தான் எங்களது எழுத்துக்களும் தெரிவுகளும் அமையவேண்டும். அதனை நோக்கித்தான் நாம் சிந்திக்கலாம். இவ்வாறு சிந்திப் பவர்களைத்தான் நாங்கள் முக்கியப் படுத்தலாம். எங்களை நாங்கள் திட்டித் தீர்க்கிறதாலை ஒன்றையுமே நாங்கள் சாதிக்கப்போவதில்லை என்றுதான் நினைக் கிறேன்.

ஒருவர் நல்ல படைப்பாளியாக கலைஞராக இருப்பது எவ்வளவு முக் கியமோ அதைவிட அவர்நல்ல மனி தராகவும் இருக்கவேண்டும். இதையே மு. தளையசிங்கம் வேண்டிநின்றார். அப்போதுதான் அவர் சமூகத்தையும் மனிதர்களையும் நேசிப்பவராக இருப்பார். இதனால் எல்லா வகையான ஒடுக்குமுறை களையும் எதிர்ப்பவராகவும் சாத்தியமான வகையில் போராளியாகவும் இருப்பார். தொடர்ந்து அனைத்துவித பிற்போக்கு ஜனநாயக விரோத கருத்துக்களுக்கும் எதிரான கருத்தியல் போராட்டத்தையும் வலியுறுத்திக் கொண்டிருப்பார். தன் னிலை சார்ந்து கட்டப்பட்டிருக்கும் தளை களிலிருந்தும் விடுபடத் துடிக்கும் மனி தராகவும் இருப்பார்.

இந்தப் பண்புகள்தான் ஒருவரைத் தெளிவாக நமக்கு அடையாளம் காட்டும். போரியல் இலக்கியம் என்று தனியாக வகைப்படுத்தி நோக்கப்பட்டாலும் மேற் சொன்ன அம்சங்களையும் பண்புகளையும்

ஞானம் சஞ்சிகைக்கான தனது நேர்காணல் பற்றி

**பேராசிரியர்.கார்த்திகேசு சிவத்தம்பி (04-08-2005)**



ஞானம் சஞ்சிகைக்கான எனது நேர்காணல் சற்று வித்தியாசப்பட்டது என்று கருது கிறேன். இன்று ஏறத்தாழ ஐம்பது வருட கால இலக்கிய ஈடுபாட்டுக்குப் பின்னர் என்னுடைய அறிவுத் துணிவின்படி, எண்ணத்துணிவின்படி ஏற்பட்டுள்ள என்னுடைய கருத்து மாற்றங்கள் சிலவற்றையும் இதிலே பதிவு செய்துள்ளேன். அந்த அளவில் இது ஒரு முக்கியமான இலக்கிய ஆவணமாக என்னைப் பொறுத்தவரையில் அமை கிறது என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். இதனுள் என்னுடைய இளமைக்கால வளர்ச்சியினையும் அதற்கான பின்புலத்தையும் காணலாம் என்று கருதுகிறேன். ஈழத்து இலக்கியப் பரப்பில் நமது தலைமுறையினர் ஈடுபட்டிருந்த காலத்திற்குரிய சமூகப் புலமைப் பின்புலங்களை இந்த நேர்காணலில் வெளிக்கொணர ஓரளவுக்காவது உதவியிருப்பின் அந்தநன்றிதிரு. ஞானசேகரன் அவர்களைச்சென்றடைதல்வேண்டும்.

அடிப்படையாகக் கொண்டு நாம் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் மதிப்பிட வேண்டும். அதுதான் நமக்குப் பொருத்தமான ஆரோக்கியமான அணுகு முறையாகவும் இருக்கும்.

தனிமனித ரீதியில் தன்னிலை சார்ந்து எப்படி உணர்கிறோம் என்பது முக்கியம். அதுவே நமக்கான உணர்வாகவும் சிந்தனையாகவும் தேர்வாகவும் அமையும். அப்படிப் பார்க்கையில்தான் ஒடுக்கப்பட்ட பிரதிநிதியாக நம்மை நாம் இனம் காணமுடி யும். இவை சார்ந்த இருப்பியல் கேள்விகள் பாதுகாப்பு உணர்வுகள் நமக்கான அரசி யல் வழிமுறைகள் சார்ந்து சுழல்வதற்கான உந்துதலைக்கொடுக்கும். இந்தச் சிந்தனை நமக்கு முக்கியமென்றே கருதலாம்.

**தி.ஞா.: புலம்பெயர்ந்து இருக்கிறவர்கள் அவர்களது கைகள் கட்டுப்படாத நிலை யில் இந்தப் போரியல் இலக்கியத்தைத் தங் களது நிலைப்பாட்டிலிருந்து நிறைவாகச் செய்திருக்கிறார்களா? அது போதுமானதா? ஒருவர் இருவர் அல்லது மூவர்தான் போர்பற்றி எழுதியிருக்கிறார்கள். அது பற்றி நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**மு.பொ:** புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் உண்மையில் எங்களது போரியல் இலக் கியத்திற்கு முழுமையான பங்களிப்பைச் செய்தவர்களாக நாங்கள் கருதமுடியாது. ஷோபாசக்தியை எடுத்துக் கொண்டால், அவர் ஒரு இயக்கத்தில் இருந்த போதும் முழுமையானதைத் தரவில்லை. அதாவது எங்களுடைய போராட்டத்தை வளர்க்கக் கூடியதாக உரிமைகளைப் பெறக் கூடிய ஒரு POSTIVE APPROACH அவரது எழுத்துக்களில் இல்லை. சக்கரவர்த்தி என்பவர் கனடா வில் இருக்கிறார். மதுசூதனன் கூறியது போல் எங்களை மிக கேவலப்படுத்தும் போக்குகளும் அவர் எழுத்தில் உண்டு. அதுவே தூக்கலாகத் தெரிகிறது. நடுநிலை யில் நின்று வித்தியாசமாக எழுதியவர்கள் மிகக் குறைவு. செழியன், கருணாகரமூர்த்தி இவர்களுக்குள் புறநடை. இவர்களிடம் தேவையற்ற எதிர்மறைப் போக்கு (NEGATIVE) இல்லை. பிழைகளைக் கூட இவர்கள் தேவை யின் நிமித்தமே சுட்டினர். கோவிந்தன் எழுதிய புதியதோர் உலகம் ஒரு நேர்நிலை அணுகுமுறைக்கான ஒரு விடுதலை அரசியல் முன்னணிப்படைப்பாகக் கொள்ளலாம்.

**தி.ஞா.: சேரனுடைய 'காடாற்று' தொகுப்பு பற்றிய உங்களது பார்வை என்ன? அதிலே உள்ள 'காடாற்று' என்ற கவிதைகூட போரினுடைய இறுதி நிலையை கையறு நிலையை கண்ணீரில் கரைத்து எழுதியிருக்கிறார். அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**மது:** சேரனை மையப்படுத்தியே எங்களது போராட்ட வரலாற்றின் பல்வேறு காலகட்டத்தின் பல பரிமாணங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் ஆய்வு ரீதியாக இருக்கின்றன. ஆரம்பத்தில் 'இரண்டாவது சூரிய உதயம்' எழு திய சேரன் இந்தக் 'காடாற்று' என்ற தொகுப்பை வைக்கிறபோது, சேரனுக்குள் பல்வேறுபட்ட அனுபவங்கள் பல்வேறு பட்ட அறிவுப்புலங்கள் எல்லாம் உள்வாங்கப்பட்டு ஒரு அறிவுசார்ந்த புலமையாளராக தென்படுகிறார். கவிஞ னாக, இறுதிக்காலத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய அந்தத் துன்ப துயரங்கள், அந்த நெருக்கடிகள், அந்த நெருக்கடிகளில் ஒரு அங்கமாக அந்த அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்ற அல்லது பகிர்ந்து கொள்ள முடியாத அந்தத் துயரங்கள் அந்த மனச்சாட்சியின் சான்றாக அந்தக் கவிதைத் தொகுப்பில் சேரன் பதிவு செய்திருக்கிறார் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. குறிப்பாக காடாற்று என்ற கவிதையை வாசிக்கிறபோது அந்தக் கவிதை வெளிப்படுத்துகிற அந்த உணர்வு ஒவ்வொரு

சக மனிதர்களும் தனக்குள் குமுறுகின்ற அந்த உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதாகத் தான் இருக்கும். இன்னும் பலர் கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். அப்படியானகவிதைகளைஎழுதுவதினூடாக தன்னை ஒரு அடையாளப்படுத்தக்கூடிய அல்லது ஒரு வித்தியாசமான சமூக அக்கறை உள்ள கவிஞனாகக் காட்டுகின்ற நோக்கில் எழுதப் போய் தோல்வியடைந்த கவிஞர்களும் நம்மத்தியில் இருக்கிறார்கள்.

**தி.ஞா.: இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள இலக்கியவாதிகள் எவ்வளது தூரம் தமிழ் மக்களுடைய போராட்டத்துக்கு அனுசரணையாக எங்களுடைய துன்பங்களில் பங்கெடுத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அதைப் பற்றிச் சொல்லுங்கள்?**

**மு.பொ.:** 1956, 58, 77, 83 நடந்த கொலைகள், தமிழருக்கெதிரான ஆக்கிரமிப்புகள், வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றைக் கண்டித்து பல சிங்களப் புத்திஜீவிகள் எழுதியுள்ளனர். 1958 அவசரகால நிலைமை' (EMERGENCY 1958) என்ற தலைப்பில் தார்சி வித்தாச்சி (TARZI VITACHI) எழுதிய நூலே தமிழருக்கு நேர்ந்த அவலத்தையும் திரைமறைவில் நிகழ்ந்தவற்றையும் பகிரங்கப்படுத்தியது. 58ல் இனக்கலவரம் மோசமடைந்து கொண்டிருந்ததைப் பார்த்த ஆளுநர் ஒலிவர் குணதிலக்கா மிகவும் கவலையுடன் அவரசகால நிலையைப் பிரகடனப்படுத்து மாறு பிரதமராய் இருந்த பண்டார நாயக்காவை வற்புறுத்தினார். அதற்கு பண்டார நாயக்கா கொடுத்த பதில், "இல்லை, தமிழர்கள் இதைச் சுவைத்துப் பார்க்கட்டும். (LET THEM TASTE IT) என்பதே. பண்டார நாயக்க அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்த பிந்திய 24 மணித்தியாலங்களில் ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. பெண்கள் பெரும் அவலத்துக்குள் வீழ்ந்தனர். றெஜி சிறிவர்த்தனா மற்றொரு மேன்மைக்குரியவர். 83 நடந்தவை பற்றி மிகக்கடுமையான கருத்துக்களை முன்வைத்தார். தென்னிலங்கைக் கவிதைகள் நூலில் பல கவிதைகள் 83 கலவரத்தை பற்றி வந்துள்ளன. பசில் பெர்னான்டோ என்பவர் எழுதிய கவிதை சிங்களவர்களையே தலைகுனிய வைப்பதாகும். மற்றும் மஞ்சுள வெடிவர்த்தனாவின் 'லிங்கமாலா' இன்னொரு முக்கிய படைப்பு. கூடவே 'ஹிரு' பிரிவினரின் ஆதரவு தனியானது. 83 கலவரத்தை அடுத்து 'லங்கா கார்டியனில்' வெளிவந்த பலகட்டுரைகள் புதிவுகளைக்குறிப்பிடமுடியும்.

**தி.ஞா.: நிறைவாக ஒரு கேள்வி. உலகப் போரியல் இலக்கியங்களோடு ஒப்பிடுகையில் எங்களது போரியல் இலக்கியங்கள் எத்தகைய இடத்தை வகிக்கும்? அதற்கு ஒரு இடம் இருக்கிறதா?**

**மு.பொ.:** நிச்சயமாய எமது போரியல் இலக்கியம் உலகத்தரத்துக்குரியது. இது பற்றி ஏற்கனவே முழுமையாகச் சொல்லியுள்ளேன்.

**மது:** எங்களுடைய போராட்ட இலக்கியம் என்னும்போது, இக்காலத்தில் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தொகுப்பு. அதன் பின்னர் வெளிவந்த பல கவிதைத் தொகுப்புகள் - இவற்றைப் பார்க்கும்போது உலக இலக்கிய தரத்தில் எமது போரியல் இலக்கியம் நிச்சயமாக இடம்பெறும் என்றுதான் சொல்வேன். சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகள் சில உலக இலக்கிய தரம் வாய்ந்தவை. நுஃமானின் புத்தரின் படுகொலை மிக அருமையான கவிதை. A Country Entrped என்ற மு.பொ.வின் ஆங்கிலக்கவிதைத் தொகுதி சிவசேகரத்தின் 'போரின் முகங்கள்' மிக அருமையான கவிதைகள். மூன்றாம் உலக போராட்டக் கவிதைத் தொகுப்பு ஒன்றினை நாங்கள் செய்கின்றபோது அவ்வாறான கவிதைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எங்

களுடைய ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் அதற்குச் சமாந்தரமாக நிற்கக் கூடிய-தாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல பலஸ்தீனக் கவிதைகளுடன் எங்களுடைய கவிதைகளை நாங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால் சில அம்சங்களை நாங்கள் கூடுத லாக விளங்கிக் கொள்ளலாம். குறிப்பாக இந்திய சூழலில் 'நக்சலைட்' இயக்கங்கள், மாவோயிஸ்ட்டுகளுக்கு ஊடாக வந்த கவிதை மரபுகள், தெலுங்கான கவிதை மரபுகள் இவற்றுடன் எல்லாம் வைத்துப் பார்க்கும்போது எங்களுடைய கவிதைகள் பல அவற்றைவிட வீச்சுடன் தெரியும் கவி தைகளாக இருக்கின்றன. சொல்லாடல்கள் உணர்வுபூர்வமாகவும் வரக்கூடிய தன் மைகள் இருக்கின்றன. இக்கவிதைகளின் சரியான மொழிபெயர்ப்புகள் இல்லாத தன்மைதான் குறைபாடாக இருக்கிறது.

**தி.ஞா.: திரு.தனபாலசிங்கம் அவர்களே, இந்தக் கருத்தாடலைப் பற்றிய உங்களது எண்ணங்களைக் கூறி நிறைவு செய்யுங்கள்.**



**தனபாலா:** எங்களுடைய இலக்கியமுயற்சி, உலகப் பிர-பல இலக்கியங்கள், போர்க்கால இலக்கியங்கள் என்பனவற்றுடன் எந்தளவுக்கு ஒப்பிடக் கூடியதாக இருக்கும் என்பது பற்றி இங்கு கருத்துச் சொல்லப்பட்டது. போராட்ட காலங்களிலேதான் உலக வரலாற்றில் சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய இந்தப் போராட்ட காலத்தில் நடைபெற்ற இலக்கியங்களுக்கும் அத்தகைய ஒரு அரங்கிலே நிச்சயமாக பெரிய அள வில் இடம் இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அத்துடன் போர்க்கால கட்டத்தில் சிலர் எழுதாமல் இருந்தார்கள். அவர்களுக்கு மனத்தடை இருந்தது என்பது பற்றிச் சொன்னீர்கள். அந்த விடயத்தைப் பொறுத்தவரை இலங்கையிலே நாங்கள் முக்கியமான விடயத்தைப் பார்க்க வேண்டும். எங்களுடைய தமிழ் மக்க ளுடைய ஜனந-ாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆயுதத்தை ஏந்திய அதே இயக்கங்கள், தமிழ் மக்களுடைய ஜனநாயகத்தையும் மறுத்தார்கள். அதற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. என்னுடைய நண்பர் ஒருவர், தமிழகத்திலே ஒரு அறிஞர் கேட்டபோது "புலிகளுடைய தோல்வி தமிழர்களுடைய தோல்விதான். ஆனால் புலிகள் வென்றிருந்தால், அது தமிழர்களுடைய வெற்றியாகக் கொண்டாடப்பட முடிந்திருக்குமா?" என்று பதில் கூறினாராம். அந்த அளவுக்கு எங்களது போராட்டத்தைப்பற்றி பல பார்வைகள் இருக்கின்றன. பல அனுபவங்களைப் பெற்றவர்களாக எங்களுடைய இலங்கைத் தமிழ் மக்கள் இருப்பதால் எங்களுடைய இலக்கியச் செழுமைக்கு ஒரு தரம் இருக்கவே செய்யும். உங்களுடைய இந்தத் தொகுப்பு முயற்சி மிகவும் காத்திரமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**தி.ஞா.:எல்லோருக்கும் நன்றி.**

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்

## - மேலெழுந்தவாரியான நோக்கு

### ஆரம்ப காலம்

ஈழத்துத் தமிழ் இலக்கியம் சங்க காலத்திற்கு முற்பட்டதெனினுஞ் சங்க இலக்கியந்தான் எமக்குத் திடமான சான்றைப் பகர்கின்றது எனலாம். ஈழத்துப் பூதந்தேவனார் சங்ககால தமிழ் இலக் கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். எனினுந் தொல்பொருள் ஆராய்ச்சியின்படி, சங்ககாலத்திற்கு முன்னையதான பெரிய கற்காலத்தின் போது (Megalithic) ஈழத்திலுந் தென்னிந்தியாவிலுங் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான நாகரிகம் வளர்ச்சி அடைந்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ் மொழியானது தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் கிறீஸ்துவுக்கு முன்னைய காலத்தில் இருந்தே சமாந்திரமாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது என்று கொள்ள இடமிருக்கின்றது.

### இடைக்காலம்

பத்தாம், பதினொராம் நூற்றாண்டுகளில் ஈழம் வந்த சோழர்கள் இந்துக் கோயில்களை இங்கு கட்டினார்கள். அக் கோயில்களில் எழுந்தருளிய இறைவடிவங்கள் மீது எழுதப்பட்ட பாடல்கள் இடைக்கால ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன. இவற்றைவிட எட்டாம், ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் சீகிரிய குகை முகட்டு எழுத்துக்களுள் தமிழ்ச் செய்யுள்கள் சிலதுங் காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

அதன்பின் யாழ்ப்பாண இராச்சியத்தின் போது எழுதப்பட்ட பல படைப்புக்கள் ஈழத்துத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அடையாளமாகக் காணப்படுகின்றன. ஜெயவீரசிங்கை ஆரியன் என்ற யாழ்ப்பாண இராச்சிய மன்னன் காலத்தில் மருத்துவம் பற்றியும், சோதிடம் பற்றியும் கணிதவியல் (Mathematics) பற்றியும் படைப்புக்கள் எழுந்தன. குணவீர சிங்கையாரியன் காலத்தில் பரராஜசேகரம் என்ற மருத்துவ நூல் வெளிவந்தது.

சிங்கை பரராஜசேகரனின் ஆட்சிக் காலத்தில் தமிழ்ச் சங்கமொன்று முன்னைய தமிழ்ச் சங்கங்களின் மாதிரியாக நல்லூரில் தாபிக்கப்பட்டது. மேற்படி தமிழ்ச் சங்கமானது ஓலைச் சுவடிகளைத் தேடி எடுத்து சரஸ்வதி மகால் என்ற நூலகத்தில் பாது காத்து வந்தது. சிங்கை பரராஜசேகரனின் உறவினனான அரசகேசரியே வட மொழி இரகுவம்சத்தைத்



நீதியரசர்
க.வி.விக்னேஸ்வரன்

தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்ததாகக் கூறப்படுகிறது. வெள்ளையர்கள் வரமுன் இந்த இடைக்காலத்தில் வெளிவந்த படைப்புக்களில் வையாபுரி ஐயர் யாத்த வையபாடல் பிரசித்தி பெற்றது.

## மேற்கத்தையோர் காலம்

போர்த்துக்கீசர் (1505-1618), டச்சுக் காரர் (1619-1796), ஆங்கிலேயர் (1796-1947) ஆகியோர் சுமார் நானூற்றியைம்பது வருடங்கள் இலங்கையை ஆண்டார்கள்.

கிறீஸ்தவ பாதிரிமார்களின் மத மாற்றத்தை எதிர்க்கும் விதமாகத் தமிழ் மொழியில் எதிர்ப்பு நூல்களை இக்காலகட்டத்தில் எழுதிய ஆரம்பகால எழுத்தாளர்களுள் முத்துக்குமார கவிராயர் பிரசித்தி பெற்றவர். அவரின் காலம் கி.பி 1780-1851 வரையிலாகும். அவரின் பின்னர்தான் ஆறுமுக நாவலரின் இலக்கியத் தாக்கம் ஏற்பட்டது. கி.பி 1822 தொடக்கம் 1879 வரை வாழ்ந்த அவர் பல நூல்களை வெளிக்கொண்டு வந்தார். தென்னிந்தியர்களுக்கு முன்னோடியாக அவர் திகழ்ந்தார். எனினும் ஆங்கில, அமெரிக்கன் மிஷன், மெதடிஸ்ட் கிறீஸ்தவ சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். இந்தக் காலகட்டத்தில் பல நூல்கள் தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டன.

## நவீன காலம்

தமிழ் இலக்கிய நவீனகாலம் இருபதாம் நூற்றாண்டின் மத்தியகாலத்தில் தொடங்கியது எனலாம். காரணம் அந்த காலகட்டத்திலேதான் நவீன பல்கலைக் கழகங்கள் பல செயற்படத் தொடங்கின. இலவசக் கல்வி நாடெங்கிலும் மாணவ மாணவியர்க்குக் கிடைக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பரவலாக அறிவு முன்னேற்றம் ஏற்பட்டது.

இதே காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சாதிப்பிரச்சினை முன்னணிக்கு வந்து சமூக மறுமலர்ச்சிக்கு அது அடிகோலியது. இக்காலகட்டத்திலேதான் டொமினிக் ஜீவா போன்றோரின்படைப்புக்கள்வெளிவந்தன. சமூகத்தில் காணப்பட்ட சாதித் தடை-களைத் தகர்த்தெறிவதில் ஈழ இலக்கியம் தென்னிந்திய தமிழ் இலக்கியத்திலும் பார்க்கக்கூடிய தீவிரத் தன்மையைக் காட்டியது.

அதன் பின்னர்தான் ஈழத்துப் போர்க்கால இலக்கியம் 1983 உடன் ஆரம்பமாகியது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு சூழலுக்கேற்பத் தமிழ் இலக்கியம் புதிய உத்வேகத்தைப் பெற்றது, புதிய கருப்பொருட்களைக் கையாண்டது, புதிய உரைநடைகளையும், பா நடை-களையும் உலகுக்குணர்த்தியது, புதிய படைப்பாளிகளை உலகம் பூராகவும் இருந்து அறிமுகப்படுத்தியது.

இந்த இலக்கியமானது முக்கியமாக மரணம், அழிவு, கற்பழிப்பு போன்ற கருப் பொருட்களையே மையமாக வைத்து வெளி வந்தது. உலகின் பல பாகங்களில் இருந்தோர் திரும்பவுந் தமது தாய் நாட்டுக்கு எப்போது திரும்புவோம் என்ற ஆதங்கத்தில் சிறுகதைகள் எழுதினார்கள், கட்டுரைகள் யாத்தார்கள், பாடல்களை இயற்றினார்கள், நாடகங்கள் உருவாக்கினார்கள். தாம் வாழ்ந்த வெளி நாடுகள் தம்மை ஏற்றதையுந் தாம் அவற்றுடன் ஒன்றியதையும் உணர்த்திப் படைப்புக்களை வெளியிட்டார்கள்.

ஆனால் வடகிழக்கு இலங்கைத் தமிழ் பேசும்மக்களின்இலக்கியங்கள்பற்றிக்குறிப்பிடும் போது ஈழத்தில் தமிழ்மொழியை வளர்த்து வரும் இன்னும் இரு சாரார் பற்றிக் கூறாது விடல் தவறாகும்.

அவர்கள்தான் முஸ்லீம்களும், மலையகத் தமிழர்களும். அவர்களாலுந் தமிழ் வளர்க்கப்பட்டு வருகின்றது. எனவே மூவகைத் தமிழ் இலக்கியங்கள் அண்மைக் காலங்களில் ஈழத்தில் பரிணமித்துள்ளன. முஸ்லீம்களின் தமிழ் இலக்கியக் கருப்

பொருட்கள், மலையகத் தமிழரின் தமிழ் இலக்கியக் கருப்பொருட்கள் ஆகியன வடகிழக்குத் தமிழர்களின் கருப் பொருட்களுடன் உடன்பட்டிருக்க வேண் டும், ஒற்றுமித்து இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அவரவர்களின் சூழலை ஒத்தே, மனோநிலையைப் பொறுத்தே அவர்களின் படைப்புக்கள் வெளிவந்தன, வெளிவர வேண்டும், வெளி-வருவன.

ஆனால் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒரு முக்கிய சிறப்பம்சம் காணப்படுவதை நாம் அவதானிக்க வேண்டும். 19ம் நூற்றாண்டு வரையிலான ஈழத்தமிழ் இலக்கியத்தில் தனி இன உணர்வோ இனமுரண்பாட்டு உள்ளடக்கங்களோ புலப்படவில்லை. 19ம் நூற்றாண்டிலேதான் இன உணர்ச்சியும் தனித்துவ இன தேசீய உணர்ச்சியும் புலப்படுகின்றன. கிறீஸ்துவ மதமாற்ற நடவடிக்கைகள் பௌத்த, இந்து, இஸ்லா-மிய மக்களைத் தனித்தனியாகப் புத்தெழுச்சி பெறவைத்தன. அது ஒரு காரணமெனலாம்.

இவை அரசியல் காரணங்களுக்காகவுந் தனித்துவம் பெற்றன. ஈழத்துத் தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் ஆறுமுக நாவலரும் சித்திலெப்பேயும் இப்பேற்பட்ட இன, மத, எழுச்சியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் ஏற்படுத்த உறுதுணையாக நின்றனர்.

1931 ஆம் ஆண்டில் டொனமூர் அரசியல் யாப்பானது பொது வாக்குரிமை, வாக்காளர் தொகுதி அரசியல் ஆகியன வற்றை அறிமுகப்படுத்தியது. 1921ம் ஆண்டு வரையிலான அரசியல் யாப்புக்களில் ஆங்கிலேயர் சகல இனங்களையுஞ் சம-மாகப் பாவித்து ஒவ்வொரு இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் ஒரே தொகைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். (Communal Representation). 1921ம் ஆண்டுக்குப் பிறகு நிலவாரியாகப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக் கப்பட அனுமதிக்கப்பட்டனர். ஒரே சட்டமன்றத்திற்கு நிலவாரியாக மக்கட் பிரதிநி-திகளைத் தேர்ந்தெடுக்க இடமளித்ததும் (Territorial Representation) கூடிய நிலப் பரப்பைத் தம்வசம் வைத்திருந்த சிங்கள மக்கள் சட்ட மன்றத்தைத் தமது பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தால் ஆட்டிப்படைக்க முடிந்தது. இதனாலேதான் இன உணர்வு களும் ஈழ மக்களிடையே துருவப்படுத்தலும் உக்கிரமடையத் தொடங்கின. சிறுபான்மை இனங்களை மதித்து, அவற்றிற்குப் போதிய வசதிகள் அளித்து, பாதுகாப்புடன் வாழ வழி அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பெரும்பான்மை சமூகத்தின் தலைவர்களிடம் காணப்படவில்லை. மாறாகத் தமது அரசியற் தேர்வுக்கு இன அடிப்படையை உபயோகிப்பது அவர் களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது. தூரநோக்குடன் அரசியல் மாற்றங்கள் இடம்பெறாது அப்போதைக்கப்போதைய தேர்தல் வெற்றிக்குச் சாதகமாகவே சட்டங்கள் இயற்றப்பட்டன. இப்பொழு தும் அவ்வாறுதான். இதனால் சமூக முரண்பாடு உக்கிரமடைந்தது. வன்முறை அரசியலினுள் புகுந்தது. 1958லும், 1977லும், 1983 லும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைப் பயப்படுத்தி அடக்க வன்முறையில் இறங்கினர். இது தீவிரவாத சக்திகளை உருவாக்கின. சிங்களத் தனிமொழிச்சட்டம் மேற்படி இனமுரண்பாடு உக்கிரமடைய மூலகாரண-மாக அமைந்தது. 24 மணித்தியாலங்களுள் சிங்களம் மட்டும் என்று சிங்களத் தலைவர்கள் கூற அதை எதிர்த்து சமஷ்டிக் கட்சி தமிழ் மக்களிடையே வாக்குக் கேட்க மக்கள் இன வாரியாகத் தமது பிரதிநி-திகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பத் தொடங்கினர். அது வரையில் இன அடிப்படையில் அல்லாது மனிதாபிமான அடிப்படையில் அரசியல் நடந்துவந்த ஈழத்தில் இனமுரண்பாடு தழைத்தோங்கத் தொடங்கியது.

எனவே நவீன ஈழத்துத் தமிழ் இலக்கியம் நாட்டில் நடந்தவற்றை, ஊரில் நடந்தவற்றை, வீட்டில் நடந்தவற்றை, உற்றார் உறவினர்க்கு நடந்தவற்றை எல்லாம் பிரதிபலிக்கத் தொடங்கியது. மொழி வாரியான தேசீயம் முன்னணிக் கருப்பொருளாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தது.

1950 - 60 களில் முருகையன், நீலாவணன், மஹாகவி, சில்லையூர் செல்வ ராஜன், இராஜ பாரதி, காசி ஆனந்தன் போன்றவர்கள் துடுக்கான கவிதைகளால் மொழிசார்ந்த தேசீயத்தை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினுள் உட்புகுத்தினர்.

இவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதாய் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதான தமிழ் வார இதழான சுதந்திரன் அமைந்தது. அக்காலப் படைப்புக்களின் தலையங்கங்களில் இருந்து இந்தப் போர்க்குணம் பாற்பட்ட தமிழ் இலக்கியக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளலாம். 1960 களில் வெளிவந்த அவற்றுட் சில பின்வருமாறு -

1. **உயிர் தமிழுக்கு**
2. **தமிழ் எங்கள் ஆயுதம்**
3. **செந்தமிழ்ச் செல்வம்**

இக் கவிதைகள் தமிழ் மீது கவிதை ஆக்கியோனுக்கிருந்த மட்டில்லாத பக்தி யையும், சிங்கள ஆதிக்கத்தின் மீது இருந்த வெறுப்பையும், சுதந்திரம் பெற வேண்டும் என்ற வெறியையும் வெளிக்காட்டின. “உரிமைக் குரலைத் திருகத் தகுமோ” என்று கேட்டான் ஒரு பாவலன்.

முஸ்லிம் மக்களுக்குத் தமது மதம் எத்துணை முக்கியமாக இருந்ததோ அதற் கும் மேலாகத் தமிழ்ப்பேசும் இந்து, கிறீஸ்தவ மக்களுக்கு மொழியே அடித்தளமாக, ஆணி வேராக அமைந்திருந்தது. அந்த மொழி மீதான பற்று வெறியாக மாறி செந்தமிழில் சிலிர்ப்பூட்டியது. இந்தக்காலகட்டத்தில் சங்ககாலப் புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றில் பொங்கி எழுந்த வீரச் சுவைப் பாங்கு ஈழத் தமிழ்த் தேசீயத்தை வெளிப்படுத்துங் கருவியாக மாறியது.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மனதில் ஒரு மாயையை உருவாக்கி அதில் குளிர் காய்ந்து கொண்டது. அதற்குக்காரணம் உண்டு. தமிழரசுக் கட்சியை வழிநடத் தியவர்கள் ஆங்கிலக் கல்வியில் சிறந்து விளங்கிய தலைவர்கள். உலக அரசியலை அறிந்து வைத்திருந்தவர்கள். சமஷ்டியே இலங்கைக்குச் சிறந்த அரசியற் தீர்வு என்பது அவர்களின் ஆங்கில அறிவு வழிவந்த தீர்க்கமான முடிவு. ஆனால் அதனை மக்களுக்கு எடுத்துக் கூறி தேர்தல்களில் வாக்குப் பெற எத்தனிக்கையில் தமி ழறிவு மட்டும் பெற்ற இளைஞர்களே பயன்படுத்தப்பட்டனர்.

உணர்ச்சிக்கு இடங்கொடுத்து உண் மைக்கு மாறான ஒரு பெயரைத் தமது கட்சிக்கு இட்டு விட்டார்கள். சமஷ்டிக் கட்சியாக வலம் வர வேண்டிய கட்சி, கட்சித் தொண்டர்களுக்குத் தமிழரசுக் கட்சியாகப் பெயர் போட்டுக் காட்டப்பட்டது. சமஷ்டி என்ற கோட்பாடுந் தீர்வும் வேறு, “தமிழரசு” என்ற சொற்றொடர் குறிக்கும் அரசியல் இலக்கு வேறு. எந்த அளவுக்குத் “தமிழரசு” என்ற சொல் தமிழ்க் கவிஞர்களிடையே ஒரு கலை நயம்மிக்க காவியஇலட்சியத்தைஉண்டுபண்ணியதோ அதே அளவு சிங்கள மக்களிடையே சீற்றத்தையுஞ் சினத்தையும் ஏற்படுத்தியது. ஒரே நாட்டினுள் இருந்து அதிகாரத்தைப் பங்குபோடுவது சமஷ்டி. தமக்கெனத் தனித்துவமான ஆட்சி அமைத்துக் கொள்வது தமிழரசு. உண்மையில் “தமிழரசு” என்ற சொல் தனிநாட்டையே சாதாரண தமிழ் மக்கள் மனங்களில் குறித்தது. சமஷ்டி என்ற போர்வையில் தமிழரசுக் கட்சி தனிநாட்டை உருவாக்கப் பார்க்கின்றார்கள் என்று சிங்கள மக்கட்

**தற்போதைய காலம் ஈழத்துத் தமிழ்ப்பேசும் மக்களின் மனங்களை நிலைகுலையச் செய்யுங் காலம். அடுத்தென்ன என்று அங்கலாய்க்குங் காலம். மாற்றுவழிகள் என்னதென்று மயங்கிக் கிடக்குங் காலம். ஒன்று மட்டும் நிட்சயம். எந்த ஒரு இனத்தையும் எல்லாக் காலமும் அடக்கி ஒடுக்கி வாழ முடியாது. தமிழ்ப்பேசும் மக்கள் அதற்கு விதிவிலக்கன்று. யூதர்கள் இலட்சோப இலட்சத்தில் நிர்மூலமாக்கப்பட்டார்கள். ஆனால் இன்றும் வாழ்கின்றார்கள். வளமாக வாழ்கின்றார்கள். வலுவாக வாழ்கின்றார்கள். செம்மையான இலக்கியம் படைத்த எம் தமிழர் ஏற்றமுடன் வாழும் காலம் வரும்.**

தலைவர்கள் தம் மக்களிடையே பிரசாரஞ் செய்தார்கள். இதனால் இன முரண்பாடு, போர்க்குணம், தீவிரவாதம் ஆகியவை முன்னணிக்கு வந்தன.

இதே கால கட்டத்தில் மார்க்சீய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே வேரூன்றி யதன் பயனாக வர்க்கப்போராட்டம், சாதிப் பிரிவினைகளை எதிர்த்தல் போன்றவை இன்னொரு சாராரின் தமிழ் இலக்கியப் படைப்புக்களின் கருவூலமாக அமைந்தன. இளங்கீரன், டொமினிக் ஜீவா, கே.டானியல், நீர்வை பொன்னையன், என்.கே.இரகுநாதன் போன்றோர் இந்த விதமான தமிழ் இலக்கிய கர்த்தாக்களாகப் பரிணமித்தனர். ஒரு விதத்தில் தமிழ் மக்களின் போர் வெறிப் பாங்கான கவிதைகளின் தாக்கத்தைத் தணித்து சமூக ஒப்புரவு, இன ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு போன்றவற்றைத் தமிழ் மக்களிடையே பரப்ப இந்த முற்போக்கு எழுத்தாளர்கள் காரண கர்த்தாக்களாக இருந்தனர். சிறுகதைகளில் மேற்படி கருத்துக்கள் வேரூன்றின. வர்க்க முரண்பாடு, பொருளாதாரச் சுருண்டல், சாதி வழி அடக்குமுறை போன்றவற்றை மையமாக வைத்து இக்கதைகள் வெளி-வரத் தொடங்கின. புதுவை இரத்தினதுரை இப்பேர்ப்பட்ட அக்காலப் புலவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. இன முரண்பாடு மறந்து ஒரு பொது சோஷலிசப்பாதையில் இலங்கை மக்கள் செல்ல வேண்டியதன் அவசியத்தை இவர்களின் கவிதைகள் எடுத்துக் காட்டின.

எனினும் 1972ம் ஆண்டில் ஒரு புகழ்பெற்ற மார்க்சீய சட்டத்தரணியான டொக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வாவால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு சிறுபான்மை மக்களுக்கு 1947ம் வருடத்தைய வெள்ளையர் தந்த அரசியல் யாப்பு அளித்த கொஞ்சநஞ்ச உரிமைகளை யும் பறித்துக்கொண்டது. 1947ம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுபான்மையினர் பாதுகாப்புச் ஷரத்தான 29(2), 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பில் நீக்கப்பட்டது. இது மார்க்சீயவாதிகளின் பேரில் ஒரு பெரும் வெறுப்பை தமிழ் மக்கள் மத்தியில் உண்டாக்கியது. தமிழ் மக்களுக்கெதிரான கல்வியில் சமநிலைப்படுத்தல், தமிழ் மொழியின் சட்ட அந்தஸ்தைக் குறைத்தல், ஒரு மதத்துக்கு அரசியல் யாப்பில் முக்கிய இடம் கொடுத்தல் போன்றவை இந்த மார்க் ஸிய மந்திரியின் காலத்தின் போதுதான் அர சியல் யாப்பில் இடம்பெற்றன. தமிழ்த்தேசியம் பிழை, சோஷலிசம் சரியென்று எழுந்த தமிழ் இலக்கியம் பின்னடைவு பெற்றது. மீண்டும் தமிழ்த்தேசீயம் முன்னணிக்கு வந்தது. ஆனால் அது கூடிய வீர்யம் பெற்று தீவிரப் போக்குடன் நிலைபெற்றது.

போர் தொடங்கியது. ஈழத்துத் தமிழ் இலக்கியம் தீவிரப் போக்கைக்கட்டிப்

பிடித்துக் கொண்டது. தமிழ்ப்பேசும் மக்களின் வேதனைகள், அழிவுகள், அவலங்கள், சொல்லொண்ணாத் துயரங்கள் யாவும் ஈழத் தமிழ்ப்போர்க்கால இலக்கியத்தில் பிரதிபலிக்கத் தொடங்கின. புதுவை இரத்தினதுரை போன்றோர் மார்க்சீய புரட்சிக் கவிஞர் ஸ்தானத்தை விட்டு தமிழ் மக்களின் தனித்துவம், தனிநாடு பேசும் புரட்சிக் கவிஞர் ஆகினர். புதுவை இரத்தினதுரை விடுதலைப் புலிகளின் கொள்கைகள், நடைமுறைகள், அனுபவங்கள், இலட்சியங்கள் போன்றவற்றைப் பரப்பும் ஆஸ்தான கவிஞர் ஆனார்.

பல இளைஞர்கள் யுவதிகள் போர்க்காலத் தமிழ் இலக்கியக் கர்த்தாக்கள் ஆகினர்.

ஆர்.சேரன், அ.யேசுராசா போன்றோர் இவர்களுக்கு முன்னோடிகளாய் அமைந்தனர். இவ்விளைஞர்களுள் பெரும்பான்மையானவர்கள் வடக்கில் இருந்துதான் வந்தார்கள். இஸ்லாமிய, மலையக, ஏன் கிழக்கிலங்கையில் இருந்து கூட இந்தப் போர்க்கால இலக்கியத்தைப் படைத்தவர்கள் மிகச் சிலரே. பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் இருந்துதான் இவர்கள் உருவானார்கள்.

போர்க்கால தமிழ் இலக்கியத்தை ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல. ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை ஒரு மேலெழுந்தவாரியாக நோக்குவதே இக் கட்டுரையின் நோக்கம். நடந்தவை, நடப்பவை, இனி நடக்கலாம் என்று நாம் நம்புவனவே எம் கருத்தை ஈர்த்துக் கவிதைகள் ஆகின்றன. அந்த விதத்தில் சென்ற நூற்றாண்டின் பின்னரைப் பகுதியும் இந்த நூற்றாண்டின் இது வரையான வருடங்களும் ஈழத் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சோதனைக் காலமாக அமைந்துள்ளன. அவர்களின் ஆதங்கங்கள், அல்லல்கள், ஆக்ரோ ஷங்கள் யாவும் அண்மைக் காலங்களில் கவிதை ரூபம் பெற்றுள்ளன. புதுக் கவி தைகள், புலப்படாத வரம்புகளைக் கொண்டு புதுமைகளைப் புகுத்தியுள்ளன. புலம்பெயர் மக்களின் புலம்பல்கள் புதிய பரிமாணங்களைப் புலப்படுத்தியுள்ளன.

இனிவருங்கால இலக்கியம் எவ்வாறு அமையுமோ சொல்வது கடினம். ஆனால் தற்போதைய காலம் ஈழத்துத் தமிழ்ப்பேசும் மக்களின் மனங்களை நிலைகுலையச் செய்யுங் காலம். அடுத்தென்ன என்று அங்கலாய்க்குங் காலம். மாற்றுவழிகள் என்னதென்று மயங்கிக் கிடக்குங் காலம். ஒன்று மட்டும் நிச்சயம். எந்த ஒரு இனத்தையும் எல்லாக் காலமும் அடக்கி ஒடுக்கி வாழ முடியாது. தமிழ்ப்பேசும் மக்கள் அதற்கு விதிவிலக்கன்று. யூதர்கள் இலட்சோப இலட்சத்தில் நிர்மூலமாக்கப்பட்டார்கள். ஆனால் இன்றும் வாழ்கின்றார்கள். வளமாக வாழ்கின்றார்கள். வலுவாக வாழ்கின்றார்கள். செம்மையான இலக்கியம் படைத்த எம் தமிழர் ஏற்றமுடன் வாழும் காலம் வரும். அதற்கு முன் எமது பிழைகளை நாங்கள் அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒற்றுமையில்லாமையே எமது அழிவுக்குக் காரணமாக அமைந்துள்ளது. ஒற்றுமை என்றால் என்ன? “நான்” என்பதை விட்டு “நாம்” அல்லது “நீவிர்” என்ற நிலைப்பாட்டைத் தழுவுதலே ஒற்றுமை. “நான்” முக்கியமல்ல. “நாம்” தான் முக்கியம். எங்கள் இன எழுச்சியும் இன மேம்பாடுந்தான் முக்கியம். அதற்காக நான் என்னைப் பலியிட ஆயத்தம் என்று ஒருவன் எப்பொழுது கூறுகின்றானோ அப்போது அங்கு ஒற்றுமைக்கு அவன் வித்திடுகின்றான். இனிவரும் தமிழ் இலக்கியம் ஒற்றுமைக்கு வித்தாக அமையவேண்டும். அந்த ஒற்றுமையில் இருந்து ஓர்மை பெற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டும். எமது இலக்கியத்தாலேதான் அந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இக் கவிதை, ஜூலை 83 கலவரம் நடந்து முடிந்த இரண்டு நாட்களின் பின் (27.07.1983) எழுதப்பட்டது. இதுவே 83 கலவரம் பற்றிய முதலாவது தமிழ்க் கவிதை ஆகும். - ஆசிரியர்

# 1983 ஆண்டு ஜூலை 23-25களில்

1. வரலாற்றின் ஏடதனில் வழுவாய்ப் பொல்லா
    வன்முறையின் சிகரமென ஈழ நாட்டின்
பெருமைதனைக் குழிதோண்டிப் புதைத்த தொக்கும்
    பெரும்பாவச் செயல்கள்தனைச் செப்பக் கேள்மின்
இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்
    எண்பத்து மூன்றாமாண் டேழாந் திங்கள்
குருதியினால் எழுதிவிட்ட அத்தி யாயம்
    குவலயமிஃ துள்ளளவும் அழியா தம்மா

2. பெரும்பான்மை நாமிந்த மண்ணில் மற்றோர்
    பிறந்தாலு மிந்நாட்டில் உரிமை அற்றோர்
விரும்பாத இதுபோன்ற வார்த்தை கூறி
    வெறிகொண்டா ரூட்டிவிட்ட உணர்ச்சி யாலே
இரும்பாக வுளம்மாறிக் குரோதம் மிஞ்சி
    இருதரப்பு மக்களுமே பகைமை கொண்டு
பிரிந்திங்கு வாழுவதே உவப்பென் றெண்ணிப்
    பிறந்ததொரு புரட்சியிந்த மண்ணி லாமே.

3. சிறுபான்மை இனத்தவரி னுரிமை தன்னைச்
    சிந்தித்தும் பாராத நிலைமை கண்டு
பொறுத்திருந்தும் பயனற்றுப் போன தாலே
    புரியவைத்தார் புரிந்துமவர் புரியா தோராய்
வெறுத்தொதுக்கு மெண்ணமதே கொண்டார் கெட்ட
    வேற்றுமையே அரசியலாய்ச் சிலர்வ ரித்தார்
பொறுத்ததினிப் போதுமெனப் பொங்கித் தங்கள்
    புயபலத்தா லுரிமைபெறத் துணிந்திட் டாரே

4. தமிழீழந் தனைக்கோரித் தானை வீரர்
    தம்மோடு தம்மினத்திற் தமக்கு வேண்டாத்
தமிழ்த்தலைவர் தன்னையுஞ்சேர்த் தழித்த செய்கை
    தாமிந்தத் தழும்பீழத் தாயின் நெஞ்சில்
தமிசொன்று தாவித்தன் தாகந் தீரத்
    தாக்கியதாற் தோன்றியது போலு மென்ன
தமிழினத்தின் மீதுபழி தீர்த்துக் கொள்ளத்
    தான்துணிந்த தோர்வெறியர் கூட்டம் மாதோ

5. இருபத்து மூன்றாம்நாள் ஏழாந் திங்கள்
    இரவிவலம் வருவதற்கு முன்னே சற்றும்
வருவினையை அறியாத வெறியர் கூட்டம்
    வகைவகையாய் ஆயுதங்கள் தனையுந் தாங்கி
பொருதவவ ரெவருமற்றுப் பிரியம் போல
    பெருந்திரளாய்க் கூடித்தமிழ்க் கடைகள் தேடி
கருமமது கண்ணாயி னாரே கொள்ளைக்
    காரணமே காரணமாய்க் கவர்ந்தே சென்றார்

6. இரவெல்லாங் கொள்ளையிட்டோர் போக இன்னும்
    எங்கிருந்தோ எஞ்சியிதைச் சுருட்டிச் செல்லக்
குரவையிட்டுக் குதுகலித்தோர் காடைக் கூட்டம்
    கூடிவந்து கொள்ளைதனைத் தொடர்ந்த தாங்கே
பொருளனைத்தும் முடிந்ததனாற் பிறிதோர் கூட்டம்
    பெருஞ்சினத்தோ டெஞ்சியதைத் தீயி லிட்டார்
பெருநெருப்புஞ் சுடர்விட்டு எரியக் கண்ட
    பகலவனும் போட்டிக்கென் றுதய மானான்



ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

7. வழியெல்லாம் பொருள்களினை வாரி வீசி
வாகனங்கள் தனையுடைத்துத் தீயு மிட்டார்
பழிபாவங் தனையறியாப் பாவி யர்கள்
பாதையெலாங் கூடிநின்றே ஆர்ப்பரித்தார்
இழிவான விச்செயல்கள் கண்டு நெஞ்சம்
இரங்கிடினும் வாய்திறக்க வியலா நல்லோர்
விழிகண்டும் மொழியற்று வூமை யாகி
விதியதனை நொந்துள்ளம் வெதும்பி னாரே

8. வரும்போகும் வாகனங்கள் தனைம றித்து
வாங்கியெண்ணெய் சேர்த்தெடுத்துக் கடைகள் மீது
பெருமளவில் வீசித்தீ வைத்தார் பொல்லார்
பெருநெருப்பால் அவைதீய்ந்து சாம்ப லாக
அருகிருந்தே இன்னுமின்னும் அக்கி னிக்கு
ஆனமட்டும் ஆதரவு செய்த பின்னே
கருமமொன்று முடிந்ததெனக் கரகோ ஷித்துக்
கடுகினரே இன்னுமொரு கடையைத் தேடி

9. தெருத்தெருவாய்த் தேடியவர் தேர்ந்தெ டுத்துத்
தீக்குணவு படைத்தார்கள் மகிழச்சி யாலே
பெருகியது வான்நோக்கி புகைகி ளப்பிப்
போர்க்கொடியைத் தூக்கியது போலு மாக
இருமருங்கு தனையுஞ்சேர்த் தெரித்த த஼தின்
இட்டத்துக் கியைந்தபடி பரவி யெங்கும்
கருகியழித் தொழித்திடவென் றெண்ணங் கொள்ளக்
காற்றுமதன் துணைக்கென்று சேர்ந்த தந்தோ

10. வீழ்ந்தடித்து வீடுவீடாய் விரைந்தே ஓடி
வேண்டுவன வேறொருவர் கொள்ளும் முன்னே
தாழுடைத்தே உட்புகுந்து தனக்கு கந்த
தத்தனையுஞ் சேர்த்தெடுத்துச் சென்றா ரந்தோ
வாழ்நாளிற் பாடுபட்டுச் சேர்த்து நல்ல
வசதியொடு வாழுபவர் கண்டு நெஞ்சம்
காழ்ப்புணர்வு கொண்டதனால் காலம் பார்த்துக்
கவர்ந்தனரவ் விழிகுலத்துப் பேர்க ளம்மா

11. போனபொருள் போகட்டும் வீடு வாசல்
போனாலும் போகட்டும் இந்த வேளை
ஊனுடலோ டுயிர்மட்டுங் காத்தாற் போதும்
உறவினரோ டெங்கேனும் ஓடு வோமென்
றானவரை முயன்றெவரு மறியா வண்ணம்
அடைக்கலத்தைத் தேடியவர் ஓடும் போது
கானவிலங் கதினிலிழி காடைக் கூட்டம்
கண்டவரைப் பின்தொடர்ந்தே ஓடிற்றம்மா

12. கற்சிலைக்கு முன்னின்று கூப்பித் தன்னைக்
காப்பாற்று தெய்வமென்ற கரங்கள் இன்று
கற்பனைக்கும் எட்டாத வாறு கெட்ட
காடையரின் முன்னின்று கூப்பிக் கெஞ்சும்
கற்களின்முன் அவ்வாறு கேட்டி ருந்தால்
கனிந்தவைகள் உருகித்தான் போகும் ஆனால்
கற்களிலுங் கொடியவல் லிதயங் கொண்டோர்
கருணையின்றிக் கல்கம்பா லடித்தா ரன்றோ

13. வாகனத்தில் வந்தோரை வாக னத்தில்
வைத்தேதான் எரித்தார்கள் உயிரி னோடே
தாகமடங் காதுவெறி நாய்கள் போல
தமிழர்களைத் தேடியலைந் தார்கள் அன்னார்
போகுமிடம் அறியாது கண்ட வாறு
பேய்களென அலைந்தார்கள் அந்தோ விந்தச்
சோகமிகு காட்சிதனைக் கண்டே நெஞ்சம்
சுக்காக நொறுங்கிற்றே துன்பத் தாலே

14. சிறைக்கூடந் தனில்பிடித்தே வைத்தி ருந்த
செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த வீரர் தம்மைச்
சிறைக்குள்ளே இருந்தவரும் புகுந்தே வந்து
சேர்ந்தோரும் சேர்ந்தொன்றாய்ச் செகஞ் சிரிக்க
முறைகேடாய்க் கொன்றுகுவித் தார்கள் அந்த
மூர்க்கர்கள் செய்கைதனை நாவாற் செப்பத்
திறனேது நானுமொரு தமிழ னன்றோ
தெய்வமிந்தத் தீயவரைத் தண்டிக் காதோ

15. வெட்டினராம் வாள்கொண்டு வீர நெஞ்சம்
வேறாகிப் போமென்றே உயிரு டன்தான்
கொட்டினராம் எண்ணெய்தனை ரணத்தி னுள்ளே
கொளுத்தினராந் தீகொண்டே உயிர்து டிக்கக்
கட்டிவைத்துக் கழுத்தறுத்துக் கொன்றா ரின்னுங்
கடைப்பிறப்போர் கண்களையுந் தோண்டி னாராம்
இட்டப்படி இவைநடக்கக் காவ லாளர்
ஏதுமறி யாதோரா யொதுங்க லுற்றார்.

16. பலநூறு வுயிர்களழிந் தனவே மேலும்
பலநூறு படுகாயச் செயல்கள் கண்டும்
இலவேறு வழியிதனைத் தடுக்கச் சென்றால்
எமதுயிரும் பறிபோகும் எனவே அஞ்சி
விலகிப்பலர் இல்லங்கள் உள்ளி ருந்து
விதிதன்னை நொந்தழுதார் மனங்கு மைந்தே
பலனாக விதற்கொருநாள் பாவி யர்கள்
படுந்துன்பந் தனையுலகு பார்க்குந் தானே.

17. குற்றமிழைத் தோர்தொகையோ கொஞ்சம் நல்ல
குணங்கொண்டு வுதவியவ ரெல்லை யற்றொர்
நிர்க்கதியா யானவர்க்குத் தம்மா லான
நிதிபொருளுங் கொடுத்துதவி செய்தார் பெண்கள்
கற்பதனைக் காத்தவர்கள் பலபே ரன்னார்
கருணைக்குத் தண்டனையுங் கொண்டார் கெட்ட
அற்பகுணத் தாரவர்கள் செய்கை கண்டே
ஆவேசங் கொண்டிழிசொல் சாற்றி னாரே

18. மறைத்துவைத்து மற்றவர்கள் காணா வண்ணம்
மனமிரங்கி யுபசரித்துப் பசியும் போக்கி
அறிந்தவரை அழிவிருந்து காக்க வென்னும்
அன்புள்ளங் கொண்டுதமி ழல்லா தோர்கள்
பொறுத்திருந்து பின்னகதி முகாம்க ளுக்குப்
பொறுப்புடனே போகவழி செய்தார் பின்னும்
வெறுக்காது முடிந்தவரை யங்குஞ் சென்று
வேண்டியன கொடுத்துதவி செய்திட் டாரே.

19. ஆயிரந்தான் ஆண்டுகழிந் தாலு மென்ன
அழியாதே சரித்திரத்திற் கல்லின் மீது
பாய்ந்தவுளி செதுக்கிவிட்ட எழுத்துப் போன்றே
பாருள்ள நாள்வரைக்கும் நிலைத்தே நிற்கும்
ஓயாதே உலகமெமைப் பழித்து ரைக்கும்
ஒருசிலரால் நேர்ந்தபழி தொடரும் மேலாம்
தூயமனங் கொண்டாலும் எதிர்கா லத்தோர்
தொடருமிந்தப் பழியாற்தலை குனியு வாரே

(முத்துநகை கவிதைத் தொகுதியிலிருந்து...)

---



# காலனின் கடை விரிப்பு

– மு.பொன்னம்பலம் –

காலன் கடைதிறந்து விட்டான்
எங்கள் பூமியில்
காலன் கடைதிறந்து விட்டான்!

தமிழ்நிலத்தில் சாவுஒரு மலிந்த சரக்கு
அழிவு ஒரு விலை குறைந்தபொருள்
கொத்தும், வெட்டும், கொலையும், களவும்
கால் விலைக்குப் போகுது!
வாருங்கள், வாருங்கள்
காலன் போடும் அங்காடிக் கூச்சல்!

எங்கள் பூமியின் எல்லைகள் எங்கும்
கொல்லைப்புறங்கள், தோட்டந்துரவு,
பட்டி, தொட்டி எங்கும்
காலன் கடைதிறந்து விட்டான்!
திருவிழாக் காலங்களில்
திரையாக விரியும் பெட்டிக் கடைகள் போல்
எங்கள் எழுச்சிவிழா முன்றலில்
காலனின் கடை விரிப்பு

திருப்பணி வேலைக்கு ஒரு ஆள் பத்துசதம்!
திருப்பணி வேலைக்கு மூன்றாள் ஐந்துசதம்!
திருப்பணி வேலைக்கு ஐந்தாள் மூன்றுசதம்!
காலன் போடும் அங்காடிக் கூச்சல்.

வல்வெட்டித் துறையில் விலைபோன உயிர்கள்
திருமலை முல்லை மன்னார் எங்கும்
'மைலாய் வீதியாய்' ஓடிய ரத்தம்
காலன் போடும் அங்காடிக் கூச்சல்.

கடலில் மிதந்தவை
களத்தில் விழுந்தவை
கண்ட கண்ட இடமெல்லாம்
வெந்தவை, கிடந்தவை, அழுகிச் சிதைந்தவை...
இன்னும் இன்னும் உயிர்கள் மலிய
எங்கும் அழிவு சில்லறையாக
எங்கள் எழுச்சி
தேரென எழுமே!
எங்கள் விடுதலை
இலக்கினை அடையுமே!
அதனால்,
காலன் கடை விரிக்கட்டும்
அது விடுதலை விழாவின்
அர்ச்சனைக் கடை

(1985 / அலை – 26)



# கோசலை

- ரஞ்சகுமார் -

சிறுகதை

"குலம்!... மாடுகளுக்குக் கொஞ்சம் வைக்கல் இழுத்துப்போடு மேனே"

குலம் மல்லாந்து படுத்துக் கிடந்தான். ஓலைப் பாயில் தலையணைகூட இன்றித் தான் இவன் படுப்பான். முதுகு வலிக்குமா, இல்லையா? இவன் ஏன் ஒரு காட்டுப் பிறவி மாதிரி இருக்கிறான்!



அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்தவாறே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"கொஞ்சம் வைக்கல் இழுத்துப் போடடன் அப்பன்... மாடுகள் கத்துதெல்லே..."

குலம் நெற்றியில் முழங்கைகளை அழுந்தப் போட்டவாறு, கால்களை ஆட்டியவாறு படுத்துக் கிடந்தான். அம்மா இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மார்பில் உரோமங்கள் படர்கிற வயது. முரட்டுத்தனமான உடல் வாகு. குரல்கூட கட்டைக்குரல், இவனுடைய அப்பா மாதிரி. நெற்றியில் தூக்கிப் போட்டிருந்த கைகளைப் பார்த்தாள். நரம்புகள் புடைத்துக் கொண்டு விம்மித் தெரிந்தன. உள்ளங்கைகள் முதலையின் முதுகு மாதிரி காய்த்துப் போயிருந்தன. விரல்கள் ஓயிலும் கிறீஸும் படிந்து பழுப்பு நிறமாகத் தெரிந்தன. நகக் கண்களில் கறுப்பாக ஓயில் அழுக்குப் படிந்திருந்தது.

"குலம்! கொஞ்சம் வைக்கல்..."

அவசரமாகப் பாய்ந்து இடை வெட்டியவாறு மகன் சிடு சிடுத்தான்.

"நீயே இழுத்துப் போடடன்... எனக்கு ஒரே அலுப்பு"

அம்மா சற்றே வேதனையின் சாயல் படியச் சிரித்தாள்.

சீலன் இருந்தால் இப்படியா எல்லாம் இருக்கும்? அம்மா சொல்லாமலே வேலை எல்லாம் செய்து கொடுப்பான். மாடுகளுக்கு வேளா வேளைக்கு வைக்கோல் இழுத்துப் போடுவான். தண்ணீர்கொண்டுபோய் வைப்பான். கோழி-களைக் கவனித்துக் கூடு

களில் அடைப்பான். சமயத்துக்கு தேங்காய் கூட அம்மாவுக்குத் துருவிக் கொடுப்பான்.

எவ்வளவு அருமையான மகன்?

அவன் ஏன் அப்படிப் போனான்?

ஊரை நீக்கித் தூரே வயல்வெளிகள் பரந்திருக்கின்றன. இடையிடையே பனங் கூடல்களும் திடல்களும் தனித்துக் கிடக்கின்றன. மாலை நேரங்களில் அம்மா அவ்விடங்களில் புல் செதுக்கிக் கொண்டு வரப் போவாள். சைக்கிள் ஓட்ட முடியாது அவ்விடங்களில். சீலன் சைக்கிளில் சாய்ந்தபடியே ரோட்டில் காத்து நிற்பான்.

அம்மா புல்லுக் கட்டுடன் திரும்பி வரும் நேரங்களை அவன் நன்கு அறிவான். அம்மாவின் உருவம் மிகத்தூரே மங்கலாகத் தெரியும்போதே ரோட்டை விட்டிறங்கி அம்மாவை நோக்கி விரைந்து போவான். பாரத்தை மாற்றிக் கொண்டு அம்மாவுக்கு முன்னே வீட்டுக்கு சைக்கிளில் பறப்பான்.

அம்மா வழியிலேயே துரவில் உடம்பைக் கழுவிக் கொள்ள, முருகன் கோவில் மணி சிணுங்கி அழைக்கும். அம்மா உருகியவாறு கோயிலுக்குப் போவாள். பூசை முடிய நன்றாக இருள் சூழ்ந்து விடும். உள்ளங்கையில் பொத்தியபடி விபூதியும், சந்தனமுமாக திரும்பி வரும்போது, சீலன் வீட்டில் 'பளிச்' செ்ன விளக்கேற்றியிருப்பான்.

மேசைக்கு முன்னால் விளக்கொளியில் முகம் விகசித்துத் தெரியும்படிக்கு அவன் உட்கார்ந்திருப்பான். ஏதாவது படித்துக் கொண்டோ, எழுதிக்கொண்டோ இருப் பான். முன்னால் மென்குரலில் இசைத்தபடி ரேடியோ அவனை ரசிக்கும். பக்கத்திலே சைக்கிள் முன் சில்லை ஒயிலாக ஒடித்துச் சாய்ந்தபடி அவனைப் பார்த்துப் பளீரென ஒளி வீசிச் சிரிக்கும்.

மகள் அழகிய மொட்டு. மிகவும் சின்னவள்தான். ஆயினும் குசினியில் தேநீர் தயாரிக்கஆயத்தமாக்கிக்கொண்டிருப்பாள். குலத்தை மட்டும் காணக் கிடைக்காது. அவன் வீட்டில் இருக்கும் நேரங்களை அம்மாவுக்கு அறுதியிட்டு கூற முடியாது. அவன் தொழில் அப்படி!

மாடுகள் கழுத்து மணிகள் கிணு கிணுக்க புல்லை அரைக்கின்ற சத்தம் கேட்கும். கூடவே மாடுகள் பலத்து மூசி மூச்சு விடுவதும் வாலைத் தூக்கி ஈக்களை விளாசி விரட்டுவதும், கேட்கும். சாணியின் மணத்துடன் பசும் புல்லின் வாசனை நாசியில் உறைக்கும். கோழிகள் எல்லாம் ஏற்கனவே கூடுகளில் அடைக்கப்பட்டிருக்கும். குறு குறுவெனக் கொக்கரிக்கும். 'படபட'வெனச் சிறகுகளை உல்லாசமாக அடிப்பது கேட்கும்.

சுடச்சுட ஒரு கோப்பை தேநீர்... கடுமையான உழைப்புக்குப் பின், தொழு கையின் பின், மோகனமாக இரவின் பிறப்பு நேரத்தில்... அருமையான தனது பிள்ளைகளுடன் அம்மா அருந்துவாள். அதுவல்லவோ வாழ்க்கை!

எல்லாமே சீலனுடன் கூடவே சேர்ந்து அம்மாவிடம் பிரிவு சொல்லாமலே போயி-னவோ?

அம்மா அலுத்தபடியே வைக்கோல் போரை நோக்கிப் போனாள்.

ஒரே வயிற்றில் உதித்த பிள்ளைகள் ஏனோ இவ்வாறு வேறு வேறு குணம் கொண்டவர்களாய் ஆகிப் போனார்கள்? இரண்டு பேரையும் அம்மா ஒரே மாதிரித்தான் சீராட்டினாள். ஒரே மாதிரித்தான் உணவூட்டினாள். ஒரே பள்ளிக்கூடத்திலேதான் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாள். புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு, எண்ணெய் பூசி படியச் சீவிய தலை களுடன் அவர்கள் பள்ளிக்கூடம் போவதை வாசலில் நின்று பார்த்து ரசித்தாள்.

குலம் மட்டும் படிப்பை ஒரேய டியாகக் குழப்பினான். அண்ணனுடன் நெடுகலும் சண்டை போட்டான். அம்மாவுடன் கோபித்துக்கொண்டு சிலவேளை சாப்பிடாமலே போனான். ஆறாம் வகுப்புக்குமேல் அவனால் ஏறவே முடியவில்லை. அம்மா அறிவாள், அவளது

இளைய மகன் மிகவும் புத்திசாலி. ஆனால் ஏன் அவனால் படிக்க முடியவில்லை என அம்மாவுக்குப் புரியவில்லை.

சீலன் அமைதியாகப் படித்தான். அவன் மிகவும் அமைதியான மகன். இரைந்து கதைக்கத் தெரியாதவனாக இருந்தான். நடப்பதுகூட மிகவும் மென்மை. ஒரு கம்பீரம் இருக்கத்தான் செய்தது. ஆயினும் புல்லுக்குக் கூட நோகாத நடை. கண்கள் பெரிதாக இருந்தன. உள்ளங்கைகள் மென்மையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. நகங்கள் ரோஸ் நிறமாகவும், நீள மாகவும்... விரல்கள்கூட மெலிந்து நீளமாக நளினமாக இருந்தன. பெண்களைப் போல.

சீலன் ஒரு மோகனமான மாலை நேரம் பிறந்தான். பறவைகளின் கீச்சொலிகள் அடங்கிய பிறகு, மாடுகள் எல்லாம் மேய்ச்சல் நிலங்களிலிருந்து திரும்பி வந்துவிட்ட பிறகு, மென்மஞ்சட் கதிர்களை மண்ணெண்ணெய் விளக்குகள் உமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில்... அம்மாவின் இடது தொடையை சற்றே உரசியபடி ஒரு வளர்பிறை நாளில் சீலன் பிறந்தான். புனர்பூச நட்சத்திரம் 'இவன் பெரிய காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவன்' என அவனது சாதகம் சொல்லிற்று.

குலம் அத்த நட்சத்திரம், அதுதான் அவனிடம் முரட்டுச் சுபாவங்கள் சேர்ந்து விட்டனவோ? அத்தம், அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

மத்தியான நேரம் கொடுமையானது. மௌனமானது. காற்றை வெயில் விரட்டிவிடும். ஒழுங்கைகளில் படிந்திருக்கிற புழுதியில் கச்சான் வறுக்கலாம் எனத் தோன்றும் பூவரச மரங்கள் கொடு வெயிலில் வாடித் துவளும். சனங்கள் வெளியில் தலை காட்டவே மாட்டார்கள். சொறி பிடித்த நாய்கள் மட்டும் நாவைத் தொங்கப் போட்டபடி இளைத்தவாறு நிழல் தேடி ஓடித் திரியும். 'கர்ர்ர்' எனக் கடூரமாகக் கத்துகின்ற காக்கைகள் நீர் தேடிப் பறக்கும்.

குலம் ஒரு மத்தியான நேரம் பிறந்தான். பிறந்தவுடன் எட்டு இறத்தால் நிறை காட்டினான். அம்மா இராஜவலியில் துவண்டாள். மயக்கம் தீர நெடு நேரமாயிற்று. காய்ச்சல் ஓய சில நாளாயிற்று.

என்னவோ அம்மாவுக்கு குலத்தைவிட சீலனை மிகவும் பிடித்தது. அவன் அவளை விட வளர்ந்து விட்ட பிறகும், மேலுதடு அரும்பிய பிறகும்... அவனது கேசங்களை வருடுவதில் அம்மா இன்புற்றாள். ஒரு குழந்தையினது போல மிகவும் மிருதுவான தலைமயிர்.

குலத்துக்கு, மிகவும் முரட்டுத் தலை மயிர், சுருண்டு சுருண்டு இருக்கும். கண்கள் சிறுத்து உள்வாங்கி இடுங்கி இருந்தன. மேனியில் மண்ணெண்ணெய் நாற்றமும் ஓயில் நாற்றமும், வியர்வை வாடையும் சதாகாலமும் வீசிற்று. அவன் தொழில் அப்படி! குலம் ஒரு மெக்கானிக் ஆக வேண்டி ஆயிற்று. அவனது மாமனைப் போல. நேரங்காலமற்ற வேலை. சில நாட்கள் சேர்ந்தாற் போல வராமல் இருக்க நேர்ந்தது. நேரத்துக்கு உண்ண முடியாமல் போயிற்று. தன்னைக் கவனிக்க நேரமில்லாமல் போயிற்று. அண்ணன் நிறையப் படிக்க வேண்டுமென நினைத்தானோ, என்னவோ? ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை வேலை எனப் பறந்தான்.

நினைக்க நினைக்க அம்மாவுக்கு நெஞ்சைப் பிளக்கும் படி நெடுமூச்சு எறிந்தது.

சீலன் ஏன் அப்படிப் போனான்?

அம்மா மெல்ல மெல்ல போரிலிருந்து வைக்கோலைப் பிடுங்கி இழுத்தாள். நாய் அம்மாவிடம் ஓடி வந்தது. கால்களில், 'சில்வெ்ன' இருந்த ஈர மூக்கைத் தேய்த்து, வாலைத் தூக்கி சுழற்றிச் சுழற்றி ஆட்டியது. அம்மா காலால் எட்டி உதைக்க நினைத்தாள்.

நாயின் கண்களில் நன்றி வழிந்தது. அது சீலன் கொண்டு வந்த நாய். அம்மா

அதை உதைப்பாளா? கால்களை மடக்கிக் கொண்டாள்.

'சொசொத'வென்ற மாரி காலத்தின் சோம்பலான ஒரு நாளில் சீலன் அதைத் தூக்கிக் கொண்டு வந்தான். வந்தபோது வெள்ளை நிறமாக இருந்தது. இப்போ பழுப்பு நிறமாக வளர்ந்து விட்டது.

மழைநீர் ஓடிக்கொண்டிருந்த தெருக்களில் மிகவும் நனைந்து போய் அனுங்கிய குரலில் கத்தியபடி நடுங்கிக் கொண்டிருந்தது. யாருக்கும் தோன்றாத இரக்கம் அவனுக்குள் சுரந்தது. தூக்கிக் கொண்டு வந்தான்.

ஓலைப் பெட்டியால் கவிழ்த்து மூடினான். பெரிய காரியவாதி போன்ற பாவனையுடன் அம்மாவுக்குச் சொன்னான்.

"வளர்ந்தாப் பிறகு நல்லது... மர நாய் வராதம்மா... கோழிகளுக்குக் காவலாயிருக்கும்..."

தினமும் செங்காரிப் பசுவில் பால் கறந்து ஊட்டினான். அவனுக்குத் தெரியும், எந்தப் பசுவின் பால் ருசியும், கொழுப்பும் மிக்கதென்று.

அம்மா மாடுகளை நோக்கிப் போனாள். நாய் அம்மாவின் கால்களைத் தடுக்கப் பண்ணி விளையாடியபடி பின்னே ஓடியது.

வாலிபத்தில் துள்ளுகிறது நாய். கொழுப் பேறிய உடல் பளபளக்கிறது. நன்றாகத்தான் கொழுத்துவிட்டது. சீலன் கூட கொழு கொழு என்றுதான் இருந்தான். திரட்சியான கன்னங்களும், காந்தக் கண்களுமாக... எவ்வளவு அழகாக இருந்தான் இந்த அம்மாவின் மகன்!

அமைதியாக இருந்தான். ரேடி-யோவைக் கூட சத்தமாக முடுக்கி விடமாட்டான். அவனைச் சுற்றி மட்டுமே இசை இருக்கும். இரண்டாம் பேரைத் தொந்தரவு செய்ய அவன் விரும்புவதில்லை. அவன் படிக்கும்போது கூட ரேடியோ முன்னாலிருந்து ஏதாவது முணுமுணுத்துக் கொண்டிருக்கும். சைக்கிளைத் துடைக்கும் போதும் பாடியவாறு பார்த்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் உதய காலத்தில் 'பளபள'மென மின்னுமாறு சைக்கிளைத் துடைப்பான். காற்று இருக்கிறதா எனக் கவனித்து திருப்தியுடன் தலையைக் குலுக்குவான். எதிலும் ஒரு ஒழுங்கு அவனிடம் இருந்தது.

அவன் போன பிறகு எல்லாமே ஒழுங்கற்றுப் போயிற்று. ரேடியோ அநேகமாக மௌனித்து விட்டது. அந்த வீடே ஜீவனற்றுப் போயிற்று. சைக்கிள் சீந்துவாரற்று தூசி படிந்து போய், ரயர்கள் காற்று இறங்கி மெலிந்துவிட, சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டு விட்டது.

குலத்துக்கு சைக்கிள் அவசியமென் றில்லை. அவனுக்கு நேரத்துக்கு ஒரு வாகனம், காரோ, வானோ, மோட்டார் பைக்கோ... காற்றைக் கிழித்துக் கொண்டு வருபவனென வந்து நிற்பான்.

சீலன் போன பிறகு இந்த வீட்டில் முரட்டுத்தனமும், மௌனமும், அம்மாவின் ஏக்கப் பெருமூச்சுகளும் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன. மகளோவெனில் மிகவும்

**வயல் வெளியில் அம்மா நிற்கிறாள்.**
**சூரியன் பயங்கரமாகச் காய்ச்சுகிறான்.**
**மழையும் பெய்கிறது.**
**வெம்மையாக அம்மா உடலைப்**
**பொசுக்கிற்று மழைநீர்.**
**அம்மா ஓடுகிறாள். ஒழுங்கைகளில் வெள்ளம்**
**பாய்கிறது. ஒரு சிவப்பு நூல் போல் இரத்த**
**ஓடை ஒன்று வெள்ளததில் கலக்கிறது.**
**அம்மா அதன்வழி போனாள்.**
**வெகுதூரம்... வெ-கு-தூ-ர-ம்... கடைசியில்**
**வந்து சேர்ந்தாள். வீட்டு வாசலில் சீலன்**
**தலையைக் கவிழ்ந்தபடி இருக்கிறான்.**
**கண்களிலிருந்து இரத்தம் தாரை**
**தாரையாகக் கொட்டுகிறது; மழைநீரில்**
**கலக்கிறது. வீடெங்கும் இரத்தம். நாய்**
**இரத்தத்தை நக்கி நக்கிக் குடிக்கிறது.**

சின்னவள். புரியாத பேதை. அழகிய சிறு மொட்டு.

சீலன் ஏன் வீட்டை விட்டுப் போனான்?

அம்மா நன்றாகவே கவனித்தாள். சில நாட்களாக சீலன் சரியாகவே இல்லை. பரீட்சை வேறு நெருங்கிக் கொண்டிருந்தது.

எதையோ குறித்து தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது; எதையோ குறித்து மிகவும் கவலை கொள்பவனாகவும் தெரிந்தது.

பரீட்சையை நினைத்துக் கலவரப்படுகிறானோ? ஏன், நன்றாகத்தானே படித்தான்!

பிடிப்பில்லாதவன் போலக் காணப்பட்டான். அம்மாவை நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தான். வாய்க்குள் ஏதோ முனகிக் கொள்பவனாய் தலையை அடிக்கடி குலுக்கினான். இரவு நேரங்களில் நித்திரையைத் தொலைத்து விட்டான். புரண்டு புரண்டு படுக்கின்ற அரவங்கள் கேட்டன. காலை நேரங்களில் அவன் சைக்கிளைத் துடைப்பதில்லை. ரேடியோவை மீட்டுவதில்லை. ஆம் ரேடியோவை அவன் மீட்டுவதாகத்தான் அம்மா இவ்வளவு காலமும் எண்ணினாள். ரேடியோவில் இருந்து அவனது இனிய சாரீரமே மிதந்து வருகிறது போல... உலகின் இனிய வஸ்துகள் யாவும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதென... அவன் தொட்டதெல்லாம் துலங்கும் என... அவனுக்காக எங்கோ ஓர் அரிய நங்கை வளர்ந்து வருகிறாள் என... அவர்கள் அம்மாவுக்கு அழகிய, மதலை குதம்பும் பேரக் குழந்தைகளைப் பெற்றுத் தருவார்கள் என...

சீலனோ எனில், சில நாட்களாக ஏனோ தானோ என மாறி விட்டான். பரீட்சை எழுதப் போனான். மற்றப் பையன்களிடம் காணப்பட்ட ஆர்வமோ பரபரப்போ அவனிடம் காணப்படவில்லை. அம்மா அவனை ஏதும் கேட்கவில்லை. அவளது இனிய குழந்தையைத் தொந்தரவு செய்ய அவள் விரும்பவில்லை. எங்காவது காதல், கீதல்... என்று ஏதாவது?... அவனாகவே சொல்லட்டும் என விட்டு விட்டாள்.

பரீட்சை நடந்து கொண்டிருந்தது. சீலன் வரவர மிக வெளிறினான். முகத்தில் ததும்புகிற ஜீவகளை எங்கே போயிற்று? அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சீலன் அன்று வெகு சீக்கிரமே எழுந்தான். மிக நீண்ட நேரம் எங்கோ கவனமாக பல் துலக்கினான். தன்னுணர்வற்றவன் போல உலாவினான். 'பளிச்'சென அம்மா பெருக்கி விட்டிருந்த முற்றத்தில் அவனது சீரான அடிகள் பதிந்தன. அம்மா மிகவும் அதிசயப்பட்டாள்.

"நேரமாகுதெல்லே மேனே..."

சரியாகச் சாப்பிடத்தானும் இல்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். வழமைபோல் ஒரே தாவலில் ஏறிப் பறந்து விடவில்லை. மிக நிதானமாக ஏறி, உட்கார்ந்தான். காற்றை அளப்பவனைப்போல் சுற்றிலும் பார்வை ஓட்டினான்.

"போயிட்டு வாறன் அம்மா."

"வடிவாகக் கடவுளை நேர்ந்து கொண்டு போ..."

பிறகும் ஏன் நிற்கிறான்?

"நேரமாகுதெல்லே..."

"நான் போறன்..." மொட்டையாக முணுமுணுத்தான்.

மெல்லமெல்ல ஒரு கிழவனைப் போல உழக்கிக் கொண்டு போனான். அம்மா அவன் பின்னாலேயே போனாள். தெருவில் இறங்கி நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்தாள். முடுக்கால் திரும்பி மறையுமுன் 'சட்' என ஒரு தரம் திரும்பிப் பார்த்தான்.

அம்மா உள்ளே வந்தாள். சற்று நேரம் திண்ணையில் உட்கார்ந்தாள். பிறகு, தலைக்கு எண்ணெய் பூசி சீவி முடிந்துகொள்ள நினைத்து எண்ணெய்ப் போத்தலைத் தேடினாள். வாசலில் யாரோ சைக்கிளில் வந்து நிற்பதைப் போல உணர்ந்தாள். எட்டிப் பார்த்தாள்.

# எனது நகர்

**– வாசுதேவன் –**

கரும்பூதமாய் தெரிகிறது
கல்லடிப் பாலம்.....
அப்பால், விரிந்த வெளியில்
துயர்போல் இருள் கவிந்துளது
உறைந்த மௌனத்தினூடு
ஒளியிழந்த வாவியின்
அலைகள் கரையுரசும்
சிறுசிறு ஒலியும் தெளிவுறக் கேட்கும்...
இருள் சூழ்ந்த என் சிறு நகரை,
நேற்றைய நாள் நிகழ்வுகளின்
கீற்றுகள் நெஞ்சிற் கிளர
இங்கிருந்து துயருடன் பார்த்திருப்பேன்!
பௌர்ணமி இரவில்
தங்கச் செதில் முளைத்து
தகதகக்கும் மட்டுநகர்
வாவிக் கரையோரம்
காற்றில் நடக்கும் சுகத்தினை இழந்தேன்!
விளக்குகள் ஒளி சுடரும்
உன் தெருக்களில்
நான் உலவிய இரவுகள் போயின!
எழிலும் வளமும் நிறை
என்சிறு நகரே!
என் இதயத்தினின்றும்
உன் தொப்புள் கொடி அறுந்து போயிற்று
உன்பால் பசியுறுகிறேன் நான்
இன்று உன் வனப்புகளை
உயிர்ப்புடன் உணர்கிறேன்
பொன்னும் கனியும் விளையும்
உன் இளமையில் காதலுறுகிறேன்
உன் வாசத்தை
நுகரத் துடிக்கிறது
என் நாசி
உன் தெருக்களை
அளைய விழைகிறது
என் உடலம்
உன் தேனை உறிஞ்சி
பொலிந்து நிமிர்வுற
அவாவி நிற்கிறது என் இதயம்!

உன்னை பிரிவதற்கில்லை நான்!



சீலன்!

என்னவாயிற்று இன்று இவனுக்கு?

மீண்டும் சீலன் உள்ளே வந்தான். எதையாவது மறந்துபோய் விட்டுவிட்டுப் போனானோ?

திண்ணையில் ஏறி அமர்ந்தான். முகம் செத்துப் போய் இருந்தது.

"ஏன் மேனே தலையிடிக்குதோ..."

"சாச் சாய்..."

குனிந்து நிலத்தைக் கீறவாரம்பித்தான்.

"இரு கோப்பி போட்டுத் தாறன்..."

"..."

"இண்டைக்குப் பாடம் உனக்கு ஓடா-தோ?"

அசிரத்தையாகத் தலையைக் குலுக்கினான்.

"அப்ப ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"

"......"

"காசு... கீசு... ஏதாவது வேணுமோ?

சிரித்தான். இந்த அம்மா எவ்வளவு அப்பாவி!

அம்மா அவசரமாகக் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கினான். இல்லை பறித்தான்! அவனது ஆவலும் பரபரப்பும் அம்மாவை வியப்பிலாழ்த்தின. வாங்கும் போது அம்மாவின் கைகளை அவன் விரல்கள் தீண்டின. என்றுமில்லாத அழுத்தம் அவ்விரல்களில் இருந்தது. உள்ளங்கைகள் பிசுபிசுத்து வியர்த்திருந்தன.

"தங்கச்சி எங்கை அம்மா...?"

"ப்ச்... உங்கைதான் எங்கையாவது போயிருப்பாள்."

"..."

"ஏன்?"

"சும்மா தான்"

"அவளைப் பார்த்துக் கொண்டு நில்லாமல் வெளிக்கிடு... நேரம் போகுது..."

ஏதோ ஒரு உறுதியுடன் விருட்டென எழுந்தான்.

விறைந்து நின்று கொண்டான் சிறு நேரம். ஒரு நொடி அம்மாவின் கண்களைக்

கூர்ந்து பார்த்தான். அவளது கண்களுக்குள் எதையோ தேடினான் போலும்!

"நான்... போ-ற-ன்... அம்மா!"

வெடுக்கெனத் திரும்பிச் சைக்கிளில் பாய்ந்து ஏறினான். வெகுவேகமாகப் போனான். ஏதோ ஒரு இனம் புரியாத சக்தி அவனை அம்மாவிடமிருந்து பிரித்து இழுத்துச் செல்கிறதென...

அம்மா கலவரத்துடன் தெருவுக்கு விரைந்தாள். சீலன் முடுக்கால் திரும்பி மறைந்து கொண்டிருந்தான். ஒரு தரம் திரும்பிப் பார்ப்பான் என எதிர்பார்த்தாள். அவன் பார்க்கவில்லை. ஆனால் ஹாண்டிலில் ஒரு சிறு பொலித்தீன் பாய்க் தொங்கிக் கொண்டிருப்பதை அம்மா அப்போது தான் கவனித்தாள். சைக்கிள் சில்லு தெரு நீளத்துக்குப் பாம்பு ஊர்ந்து போன சுவடாகத் தடம் பதித்துத் தெரிந்தது.

அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. புருவங்களைச் சுருக்கினாள்.

மாலையில் யாவும் புரிந்தன. தயங்கித் தயங்கி ஒரு பையன் சீலனின் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான். தலையைக் குனிந்து கொண்டே போய்ச் சுவருடன் சைக்கிளைச் சாத்தினான். அவனை எங்கோ பார்த்த ஞாபகம் காட்டிற்று அம்மாவுக்கு. அம்மாவின் முகத்தைப் பாராமல் எங்கோ வேண்டுமென்றே பார்வையைத் திருப்பினான்.

வெகு ஆயத்தமாக தொண்டையைச் செருமிச் சரி பண்ணிக் கொண்டான்.

"சீலன்... இதை... இஞ்சை கொண்டு வந்து விடச் சொன்னவர்..."

"ஆங்!... சீலன் எங்கையப்பு..."

"..."

"ஐயோ! என்ரை பிள்ளை..."

அந்தக் குரலின் அவலம் பையனைத் துரத்தியது. தலையைக் குனிந்தவனாய் விடுவிடென விரைந்து போனான்.

அம்மா பதைத்தாள். கிரீச்சிட்டாள்.

"சீலன் எங்கையப்பு..."

பையன் பின்னே தட்டுத்தடுமாறி ஓடியபடி அம்மா கேட்டாள். அவன் பதில் சொல்ல முடியாமல் ஓடத் தொடங்கி னான்.

"சீலன் எங்கையப்பு..."

இலேசாக குளிர்ந்துபோய் தன்னைக் கடந்துபோன காற்றை, அம்மா கேட்டாள், அது மௌனமாகப் போனது.

"ஐயோ, என்ரை சீலன் எங்கை..."

சிவந்து மின்னிக் கொண்டிருந்த அந்திவானை அம்மா கேட்டாள்.

இவ்வாறான எத்தனை சீலன்கள் அதன் கீழ் உள்ளனர். அது பேசாமல் கண்ணை மூடிற்று.

"சீலன் எங்கை?"

அவளுக்குத் திருப்தியான பதிலைத் தர ஒருவரும் இல்லை.

"சீலன் எங்கை?"

அம்மாவின் பரிதாபமான அக்கேள்வி ஊர் மேல் ஓங்கி அடித்தது. அம்மாவைச் சுற்றி ஊர்ப்பெண்கள் ஒவ்வொருவராகக் கூடத் தொடங்கினார்கள்.

அவர்களுக்குப் புரிந்தது சீலன் எங்கே போனான் என்று! இவ்வாறான எத்தனை கதைகளை அவர்கள் அறிந்திருக்கின்றனர். அம்மாவை ஆதரவாக உள்ளே கூட்டிப் போயினர்.

பிறகு,

அந்த எளிமையான சிறிய வீட்டின் ஆனந்த வாழ்வும் அவனுடன் கூடப் போய் விட்டதாய்...

வெறுமை.

❍ ❍ ❍

மாலை நேரங்களில் அம்மா ஊரை நீங்கித் தூரே இருக்கின்ற வயல்வெளிகளிலும், பனங்கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கின்ற திடல்களிலும் புல் செதுக்கிக் கொண்டு வரப் போவாள். முழுத் தூரமும் இளைத்து, இளைத்து முதுகொடியச் சுமந்து வந்தாள்.

அவள் பாரத்தை மாற்றிக்கொள்ள யாரும் இல்லை.

அவள் பாதி வழியில் வரும்போதே முருகன் கோயில் மணி சிணுங்கிக் கேட்கும். அவளால் வேளாவேளைக்குப் பூசைகாணப் போகமுடியவில்லை. அவள் போகும்போது கோயில் நிசப்தமாக இருளில் மூழ்கி இருக்கும். பூசை முடிந்து போனதின் தடங்களாகச் சிந்திக் கிடக்கின்ற சில மலர்களும்... மெல்ல மெல்லக் காற்றில் கரைந்து கொண்டிருக்கிற கற்பூர வாசனையும்... முணுக்கென எரிகின்ற ஒரு சிறு தூண்டாமணி விளக்கும்... இழுத்துப் பூட்டப்பட்டிருக்கிற சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய கனத்த கதவும்...

அம்மா வாசலில் நின்று தனியே தொழுதாள். தனது அருமையான புதல்வனின் நலத்துக்காக அம்மா தினமும் தனியே நின்று உருகினாள்.

வீட்டுக்குத் திரும்பி வரும் நேரங்களில் மாடுகள் பின் புறத்தில் ஒன்றையொன்று கொம்புகளால் குத்தி விரட்டியபடி துள்ளித் திரியும். கண்ட இடத்திலெல்லாம் குளம்புகளால் உழக்கிய அடையாளங்களும்... சாணியும்...

அம்மாவே ஒவ்வொன்றாக இழுத்து வந்து கட்டைகளில் கட்ட வேண்டியிருந்தது.

கோழிகள் பூவரச மரங்களில் குடிபுகப் பழகின. அம்மா கற்களை எடுத்து வீசுவாள். "சூ" என விரட்டுவாள். நிசப்தமான முன்னிரவு அவற்றின் கொக்கரிப்புக்களாலும், சிறகடிப்புகளாலும் நிம்மதி இழந்து தவிக்கும்.

அம்மாவே தனியாக, அவற்றைக் கூடுகளில் அடைக்க வேண்டி இருந்தது.

புகை படிந்துபோய் மங்கிய ஒளி சிந்தும் ஒரு சிறு விளக்கு. மேசை மீது சீலனின் புத்தகங்கள். ஒரு சைக்கிள். மௌனமாகி விட்ட ஒரு ரேடியோ, அருகில் மகள் அமர்ந்திருந்தாள். அழகிய சிறு மொட்டு. வயதுக்கு மீறிய குருட்டு யோசனைகள், கொட்டக் கொட்ட விழித்தபடி தனிமையில் உட்கார்ந்திருப்பாள். பாவம்!

அந்த அருமையான மாலை நேரத் தேநீர் அம்மாவுக்குப் பிறகு கிடைக்கவேயில்லை.

அம்மா வரவர மெலிந்தாள். கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் தோன்றின. நடை வரவரத் தளர்ந்தாள். முன்புபோல உற்சாகமாக வேலை செய்ய முடியவில்லை. அம்மா வயோதிபத்தை நோக்கி மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருந்தாள்.

இரவு நேரங்களில் நித்திரையின்றி வாடுவாள். புரண்டு புரண்டு படுப்பாள். அலுத்துப் போய் எழுந்து உட்கார்வாள். ஏதோ ஏதோ விபரீத எண்ணங்கள் தோன்றப் பெருமூச்சுகள் விடுவாள்.

குலத்தைப் பற்றியும் அம்மாவுக்கு வரவர ஒன்றும் புரியவில்லை. எப்போதாவது மூன்று நான்கு நாட்களுக்கொருமுறை வருவான். அம்மா அரைத் தூக்கத்தில் அவஸ்தையுடன் புரளும்போது கனவேகத்தில் வந்த ஒரு வாகனம் வாசலில் நின்று ஒருதரம் உறுமி ஓயும். குலம் 'திமுதிமு'வென உள்ளே வருவான். அம்மாவுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமலே... அம்மா முகத்தைச் சரியாக ஏறிட்டுக் கூடப் பார்க்காமலே... கைகளில் பணத்தைத் திணிப்பான். சேட்டைக் கழற்றிக் கண்ட இடத்தில் எறிவான். ஓலைப்பாயை விரித்து, தலையணைகூட இன்றிப் படுப்பான். வலிய கரங்களை நெற்றியின் மீது அழுந்தப் போட்டபடி... கால்களை ஆட்டியபடி... மயிரரும்பும் மார்புகள் விம்மித் தணிய ஒரு நொடியில் தூங்கிப் போவான்.

இப்போ தூங்கிக் கொண்டிருக்கின்றானே. அது மாதிரி! ஒரு காட்டுப் பிறவி!

இப்போ!

குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்கின்றன. குண்டுச் சத்தங்களைக் கேட்டவுடன் அம்மா நடுங்குவாள். கண்கள் பீதியால் விரியும். அடிவயிறு குலுங்கும்.

'அவர்கள்' அடிக்கடி ஊர்களைச் சுற்றி வளைத்தனர். கனரக வாகனங்களின் உறுமலைக் கேட்டவுடன் அம்மா பாதி உயிரற்றுப் போவாள். நீட்டிய துப்பாக்கிகளுடன்

“மகன் எங்கே?” என உறுக்கியபடி அவர்கள் வரும்போது - துப்பாக்கிச் சன்னங்களில் குத்திக் கொண்டு போகும் பாவனையில் பிள்ளைகளை அவர்கள் வளைத்துக் கூட்டிச் செல்லும்போது - அம்மா படும் சஞ்சலம் சொல்லிமாளாது.

“கடவுளே!... நான் சாக முதல் என்ற பிள்ளையை ஒருக்கால் கண்ணிலை காட்டு...”

ஊரில் தினமும் இரவு நேரங்களில் குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அம்மாவின் காதுச் சவ்வுகள் கிழிந்து விடுமாற்போல் ‘கிண்’ என வலிக்கின்றன. நெஞ்சு நீரற்று வரண்டு போய்விடுகின்றது.

ஓ! இந்த இரவுகள் மிகவும் கொடியன.

அம்மாவுக்கு மிகவும் பரிச்சயமான அந்த வயல் வெளிகளிலே, பனங் கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கும் திடல்களிலே ‘பொடி யன்கள்’ குண்டு வெடிக்க வைத்துப் பழகுகின்றார்கள் என ஊர்ப்பெண்கள் அம்மாவிடம் சொல்லினர்.

சீலனும் அவர்களுள் ஒருவனாக இருக்கலாமோ? அம்மா பெரும் பீதி யுடன் எண்ணினாள். ஆனால் சீலனைக் கண்டதாக ஒரு நாய்கூட அம்மாவிடம் சொல்லவில்லை.

அவன் எந்த ஊரில் குண்டு வெடிக்க வைத்துப் பழகுகிறானோ? அம்மா பிற ஊர்களை அதிகம் அறியாள். இந்தச் சிறு குடிசை வீடும்... முருகன் கோயிலும்... புழுதி பறக்கின்ற ஒழுங்கைகளும்... பனங்கூடல்களும்... திடல்களும்... மாடு களும்... கோழிகளும்தான் அம்மாவின் உலகம். அவளது பிள்ளைகளே அவளீட்டிய ஈடற்ற செல்வம்.

## 2

இன்று அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. ஒவ்வொரு சத்தத்திற்கும் சீலனின் நினைவு அம்மாவுக்குள் கனதியாக ஏறிற்று.

குலம்கூட நாலைந்து நாட்களாக வீட்டுக்கு வரவில்லை. இன்றாவது அவன் வருவான் என அம்மா மிகவும் ஆசைப் பட்டாள்.

இவன் என்ன பிள்ளை வீட்டுக்கு வருவதே குறைவு, வந்தவுடன் விழுந்து படுக்கிறான்.

“அம்மா... பசிக்குது” என ஒரு வார்த்தை!

ம்ஹூம்.

பசி என ஒரு பிள்ளை கேட்டாலே தாயின் வயிறு நிறைந்து விடுமே. இது கூடப் புரியாத காட்டுப் பிறவி.

எங்கேதான் இவன் சாப்பிடுகிறானோ?

இன்று குலம் கட்டாயம் வருவான் என எண்ணினாள் அம்மா. தூங்காமல் விழித்திருந்தாள். திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்தாள்.

இன்று மங்கிய நிலவு வெளிச்சம் இருக்கிறது. சந்திரனின் முகம் ஒரு அழகிய பெண்ணின் நெற்றி போலத் தெரிகிறது. வெள்ளை மேகங்கள் வேகமாக வானில் திரிவதை அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். பூவரசமிலைகள் மங்கிய நிலவொளியில் பளபளத்துத் தெரிகின்றன.

அம்மா மட்டும் தனித்திருந்தாள். விளக் கின் சிம்னி புகை படிந்திருந்தது. மகள் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மாடுகள் மூச்சு விடும் சத்தத்தை, கோழி கள் குறுகுறுப்பதை, நாய் மூச்சு வாங்க அங்கும் இங்கும் ஓடுவதை நிலத்தைப் பிராண்டுவதை... அம்மா பார்த்துக் கொண் டிருந்தாள்.

சிள்வண்டு ஒன்று கீரிச்சென்று குர லெடுத்து அலற ஆரம்பித்தது. நாய் காரணமற்றுப் பலமுறை குரைத்தது.

நிலவைக் கண்டு அது குரைப்பதாக அம்மா எண்ணினாள்.

செங்காரிப் பசு வேதனையான குரலில் கதறியது. எதுவோ அதைத் துன்புறுத்துவதாகத் தோன்றியது. அம்மாவால் எழுந்து பின்புறம் போக முடியவில்லை. ஆடாமல் அசையாமல்

உட்கார்ந்திருந்தாள்.

நடுநிசியின் மணத்தையும், உருவத்தையும், சத்தத்தையும் அம்மா உன்னிப்பாகக் கவனித்தாள். எங்கோ புல்லாந்தி மலர்ந்திருக்க வேண்டும். குரக்கன் பிட்டு வாசனை மூக்கைக் கமறச் செய்கிறது. புடையன் பாம்பு இரையெடுக்கின்ற போதும் இதே வாசனை! வேலி சரசரத்தது, உடலெங்கும் கபடான அழகுமிக்க முத்திரைகளைப் போர்த்தியபடி கொடிய விஷமுடைய புடையன் பாம்பு, வழுவி வழுவி வேலிக்குள் ஊர்கிறதோ? - அம்மாவுக்கு ஒரே பயம்!

குலம் எப்போது வருவான்? அவன் கட்டாயம் வரவேண்டும் என அம்மா முருகனை அடிக்கடி வேண்டினாள்.

அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. நிலமும், காற்றும், வானம் அதிர்கின்றன. அடிவயிறு குலுங்குகிறது.

சிறுவயதில், இருளைக் கண்டு பயந்து அம்மாக்கள் பக்கத்திலேயே ஒட்டியபடி படுத்திருந்த புதல்வர்கள், யாருமற்ற வயல்வெளிகளிலே பிசாசுகளும் உலவத் தயங்கும் நடுநிசி வேளைகளிலே இவ்வாறு திரிய எப்படிப் பழகினர்? இந்தப் பயங்கர சத்தங்களை எவ்வாறு தாங்கிக் கொள்கின்றனர்? இந்த ஆபத்துக்களை எவ்வாறு சிரிப்புடன் ஏற்றுக் கொள்கின்றனர்? இவ்வளவு வேகத்தையும் வெஞ்சினத்தையும் அவர்களின் மனங்களில் விதைத்தது யார்?

"கடவுளே!... எவளெவள் பெத்த பிள்ளையளோ... இப்பிடி வாய்க்கு வயித்துக்கில்லாமல்..."

குண்டு ஒன்று பிசிறடித்த சத்தத்துடன் வெடிக்கின்றது. கேட்டுப் பழக்கமில்லாத வித்தியாசமான வெடிப்பு. மிகவும் வெறுக்கத்தக்க அருவருப்பான சத்தம் - அரை குறையில் பிரசவமான ஒரு உயிரற்ற முண்டத்தைப் போல.

அம்மாவுக்கு உடல் 'பட்'டென வியர்த்தது. ஏதோ கெட்ட விஷயம் நடந்தேறியதாக உள்ளுணர்வு சொல்லிற்று.

எழுந்து மேசையை நோக்கிப் போனாள். நடுங்கும் கரங்களால் விளக்கைத் தூண்டினாள். இறங்கி முற்றத்துக்கு வந்தாள். சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு குண்டுச் சத்தம் வந்த திசையில் பார்த்தாள். நாய் அம்மாவின் காலடியில் நின்றது, வாலைக் கால்களுக்கிடையில் நேராகத் தொங்கப் போட்டபடி செவிகளை வானோக்கி உயர்த்தி எதையோ உற்றுக் கேட்டது. மெல்ல உறுமிற்று. பிறகு வேதனையான குரலில் ஊளையிட்டது. வீட்டைச் சுற்றிச்சுற்றி வேகமாக ஓடியது. அம்மாவின் காலடியில் நிற்பதும்... பிறகு ஓடுவதும்... கெட்ட சேதியொன்றை அம்மாவுக்கு உணர்த்த அது துடித்தது போலும்!

செங்காரிப் பசு மீண்டும் மீண்டும் கதறியது. சிள் வண்டின் பிலாக்கண ஓசை மிகைபடக் கேட்கலாயிற்று. குரக்கன் பிட்டு வாசனை எங்கும் நீக்கமற நிறைந்தது.

அம்மா சோர்ந்துபோய், துடிக்கும் நெஞ்சுடன் முற்றத்தில் உட்கார்ந்தாள். நெஞ்சு மிக வறண்டு விட்டது. தொண்டைக் குழிக்குள் கனமான வஸ்து ஒன்று அடைத்து விட்டது போலத் திமிறித்திமிறி மூச்சு விட்டாள்.

சீலனை நினைத்து நினைத்து ஏங்கினாள். குலம் இன்றாவது வருவான் என்ற நம்பிக்கையும் பொய்த்தது. இரவு மிகவும் முற்றி அம்மாவைச் சுற்றிக் கனமாகப் படிந்தது. துன்பம் தரும் குரலில் ஏதோ சொல்லிற்று.

சற்றுத் தூரே போகும் ரோட்டில் ஒரு வாகனம் விரைந்து போகும் சத்தம். ஆபத்தான நோயாளியை யாரோ சிலர் அவசர அவசரமாகச் சுமந்து கொண்டு காப்பாற்ற ஓடிக் கொண்டிருப்பதாக...

எங்கோ ஏதோ பிசகு நடந்துவிட்டது.

கோழி ஒன்று பரிதாபமாகக் குளறுகிறது. மரநாய் பிடித்திருக்க வேண்டும். தீனமான அந்தச் சத்தம் மெல்ல மெல்லத் தேய்ந்து தேய்ந்து தூரே போய் மறைகி-

றது. நாய் துரத்திக்கொண்டு ஓடிப் போய் இயலாமையுடன் திரும்பி வருகிறது.

விழிகள் திறந்தபடியே இருக்க அம்மா கனவு கண்டாள்.

வயல் வெளியில் அம்மா நிற்கிறாள். சூரியன் பயங்கரமாகச் காய்ச்சுகிறான். மழையும் பெய்கிறது. வெம்மையாக அம்மா உடலைப் பொசுக்கிற்று மழை நீர். அம்மா ஓடுகிறாள். ஒழுங்கைகளில் வெள்ளம் பாய்கிறது. ஒரு சிவப்பு நூல் போல் இரத்த ஓடை ஒன்று வெள்ளத்தில் கலக்கிறது. அம்மா அதன்வழி போனாள். வெகுதூரம்... வெ-கு-தூ-ர-ம்... கடைசியில் வந்து சேர்ந்தாள். வீட்டு வாசலில் சீலன் தலையைக் கவிழ்ந்தபடி இருக்கிறான். கண்களிலிருந்து இரத்தம் தாரை தாரையாகக் கொட்டுகிறது; மழை நீரில் கலக்கிறது. வீடெங்கும் இரத்தம். நாய் இரத்தத்தை நக்கி நக்கிக் குடிக்கிறது.

கனவில் இரத்தத்தை காண்பது கூடாதே! அம்மா வீரிட நினைத்தாள். இயலாமல் போயிற்று.

குலம் அன்று வரவேயில்லை. அம்மாமுழுஇரவும் தூங்காமல் விழித்திருந்தாள். அந்தக் கொடிய இரவின் ஒவ்வொரு வினாடியையும் வேதனையுடன் அனுபவித்தாள்.

கிழக்கு வானிலே விடிவெள்ளி காலித்தது. சந்திரனை அது மேற்கு நோக்கி விரட்டிற்று. காகங்கள் துன்பம் நிரம்பிய குரலில், விடிந்து கொண்டிருப்பதைப் பூமிக்குச் சொல்லின. கோழிகள் சிறகடித்துக் கொக்கரித்தன, கூவின. முதல் நாள் இரவில் பறிபோன தங்களது தோழனுக்காக அவை அஞ்சலி செலுத்தின. மாடுகள் மடி நிறையப் பால் சுரந்து கனக்கின்ற வேதனை தாளாமல் கன்றுகளை அழைத்தன. செத்த வீட்டுக்கு தலையைக் குனிந்து கொண்டு வரும் ஒருவனைப் போல, சூரியன் மெல்ல மெல்ல உதயமாகினான்.

புரியாத பேதையான மகள் சோம்பல் முறித்தபடி எழுந்து வந்தாள். முற்றத்தில் நாடியில் கையூன்றி உறைந்து போய்விட்ட அம்மாவைப் புரியாத பார்வையால் அளந்தாள். அம்மாவின் ஜீவன் எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. சிறு காற்றுக் கூட அம்மாவின் பலகீனமாக தேகத்தைப் பூமியில் புரட்டி விடும்.

மெல்ல எழுந்து திண்ணையில் கால் நீட்டி உட்கார்ந்தாள், யாராவது ஒரு வேலையற்ற பெண்

## மலரினைச் சாத்துமென்!

**இரத்தமூறிடும் கால இடுக்கில்**
**புதைக்கப்பட்ட நண்பரின் மேலொரு**
**மலரினைச் சாத்துமென்**
**மரண ஊற்றில் கரைந்தவர்**
**முகங்களைத் தேடுதல் அபத்தமேயாயினும்**
**உயிர்களை இழந்தும்**
**ஆழப்பாயும் வேர்களின் வீரியம்**
**மண் தான் அறியும்**
**இரைச்சலை மேவி இசைக்கும் நாளில்**
**எம் நண்பர்கள் இசைத்த கீதங்களாலொரு**
**மலரினைச் சாத்துமென்!**

– அஸ்வகோஷ் –

அம்மாவைத் தேடி வரமாட்டாளா? கேவும் குரலில் அவளிடம் தன் துன்பங்களைக் கொட்டி அம்மா ஒரு பாட்டம் அழுது ஓயமாட்டாளா?

ஒருவரும் வரவில்லை. பதிலாக மகள் பள்ளிக்கூடம் போக வேண்டியிருந்தது. மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்குத் துரத்த வேண்டியிருந்தது. கோழிகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அம்மா யந்திரகதியில் அவற்றைச் செய்தாள். மூளைவேலைசெய்யாதுமரத்துப் போயிற்று. கண்கள் காந்தின; அம்மாவுக்கு உட்காய்ச்சல் கண்டுவிட்டது. நெருப்புக் காற்றுப்போல உஷ்ணமான மூச்சுக்கள் உதடுகளைப் பொசுக்கின. காரணமற்று சில தப்படிகள் நடப்பதும்... பிறகு நெடு-நேரம் ஒரேயிடத்தில் உட்கார்வதும்... தூரே அர்த்தமற்றுப் பார்வை பதித்து பெருமூச்சுக்கள் எறிவதும்...

சூரியன் யாருக்கும் பிரிவு சொல்லாமல் மறைந்து போனது. இருளுடன் போரிட்டு தோற்றுப்போய் அழுது வடிகிறது நிலவு. காற்று சோர்வாக நடந்து போய்க் கொண்டிருந்தது. அம்மாவால் இவற்றைக் கவனிக்க முடியவில்லை.

சீலன் என்ன ஆனான்?

குலம் ஏன் நாலைந்து நாட்களாக வரவில்லை?

அம்மா மனதில் கேள்விகள் மாறிமாறி எழுந்தன; ஒன்றை ஒன்று துரத்தின.

தொடர்ந்து மூன்று நாட்களாகக் குண்டுச் சத்தங்கள் கேட்கவில்லை. அச்ச மூட்டும் பேரமைதி ஊர்மேல் கவிந்தது. மூன்று நாட்களும் அம்மாவால் ஒரு வாய்கூட உண்ண முடியவில்லை. ஒரே விக்கல்!

நாலாவது இரவு வேகமாக வந்தது.

ஓ! இந்த இரவுகள் மிகவும் கொடியன;

அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்திருந்தாள். மர இலைகள் நடுநடுங்கிக் கொண்டிருக்க, காற்று அவற்றைச் சீண்டிவிட்டுப் போய்க் கொண்டிருந்தது. நிலவு மேகங்களுக்குள் பயந்து போய் ஒளித்துக் கொண்டு அடிக்கொரு தரம் எட்டிப் பார்த்து, ‘சடக்’ எனத் தலையை உள்ளிழுத்துக் கொண்டிருந்தது. ஒழுங்கையில் யாரோ சுருட்டுப் பிடித்துக் கொண்டு போனான் போலும் ‘குப்’பென சுருட்டின் நாற்றம் வீசிற்று. நாய் சுருண்டு போய் அம்மா பக்கத்தில் படுத்திருந்தது.

வாகனம் ஒன்று வருவதை அம்மா உணர்ந்தாள். அளவான வேகம். கண்களைக் கூசச் செய்யும் ஒளி வெள்ளத்தை உமிழ்ந்தபடி வாசலில் நின்றது. ‘ஹோர்ன்’ஐ ஒலித்து, வந்துவிட்டதாகச் சேதி சொல்லிற்று.

அம்மா ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள்.

கடவுளுக்கு நன்றி! குலம் இன்று வீட்டுக்கு வந்திருக்கிறான்!!

கதவுகளைத் திறந்து அறையுஞ் சத்தம். குலம் மட்டுமல்ல, வேறும் சிலர் வந்திருக்க வேண்டும். குசுகுசுவென்று கதைக்கின்ற சத்தம். படலையை மெல்லத் தள்ளித் திறந்தனர். கூட்டமாக வந்தனர்.

யாரோ ஒருவனைக் கைத்தாங்கலில் கூட்டிக் கொண்டு வந்தனர். அம்மா பயந்தவளாய் விருட்டென எழுந்தாள். விளக்கைத் தூக்கி உயரப் பிடித்தாள்.

குலம் சோர்ந்து போய் வந்துகொண் டிருந்தான். அவனைத் தாங்கி அழைத்து வருகின்றனர். வலது கையை ஒருவன் மென்மையாகப் பற்றியபடி வந்தான். மணிக்கட்டுக்கு கீழே இரத்தம் ஊறிப்போன ஒரு துணிப் பந்து!

ஐயோ! இந்த அம்மாவின் முரட்டுக் குழந்தைக்கு என்னவாயிற்று?

அம்மா அசைய நினைத்தாள், முடியவில்லை. பாதங்களை யாரோ ஆணி யால் தரையுடன் சேர்த்து அறைந்தது மாதிரி.

அவர்கள் ஓலைப்பாயை விரித்தனர். தலையணைகளைப் போட்டனர். குலம் பொறுக்கமுடியாமல்முனகியபடிசரிந்தான்.

முகம் மிக வெளிறியிருந்தது. உதடுகள் காய்ந்து தோலுரிந்திருந்தன. மிகவும் தாக மாக இருந்தான். நாவால் உதடுகளை நீவி-னான்.

"அம்மா..."

தீனக்குரல் அம்மாவை அழைக்கிறது. அம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை.

மகன் தாகத்தால் தவிக்கின்றான். அம்மாவால் அசைய முடியவில்லை.

அவர்கள் கிட்ட வந்தனர். தலையைக் குனிந்தபடி அம்மாவைச் சூழ நின்றனர். ஒருவன் அம்மாவைத் தொட்டசைத்தான். அம்மா இமைக்க மறுக்கும் விழிகளால் அவர்களைப் பார்த்தாள்.

அவர்களை அம்மா அடையாளங் கண்டாள்! நடுநிசிகளில்... யாருமற்ற வெளிகளில்... திரிகின்ற புதல்வர்கள்!!

ஓ! குலமுமா இந்த அப்பாவி அம்மாவை இவ்வளவு காலமும் ஏமாற்றித் திரிந்தான்?

"கோப்பி வச்சுக் குடுங்கோ..."

அம்மாவின் தோள்களைக் குலுக்கியபடி ஒருவன் சொன்னான்.

அவளுடைய முரட்டு மகன், புரிய முடியாத புதல்வன், கையைக் காவு கொடுத்து வந்திருக்கிறான்! தாகத்தால் தவிக்கின்றான்!!

கடவுளே, அம்மாவுக்கு கொஞ்சம் பலமளிக்கமாட்டாயோ?

அம்மா எதுவோ கேட்க உன்னினாள். அர்த்தம் குலைந்த பலகீனமான ஒரு முனகல் மட்டுமே வந்தது.

அம்மா அசைய முயற்சித்தாள். பெரும் பிரயாசையுடன் கால்களைப் பெயர்ந்தாள். உடல் முழுவதும் மரண வேதனை போலும் நோவெடுத்தது. ஓரடி எடுத்து வைத்தாள். 'மொளக்'கென ஏதோ சுளுக்கிக் கொண்டது அம்மா பிருஷ்டம் அடிபட மல்லாந்து விழுந்தாள்.

அவர்கள் அம்மாவைத் தூக்கினர். ஓலைப்பாயை விரித்தனர். தலை யணைகளைப் போட்டனர். பாயில் அம்மாவை மெல்லச் சரித்தனர்.

ஊருக்குள் எப்படித்தான் விஷயம் பரவிற்றோ?

அவசர அவசரமாக மண்ணெண்ணெய் விளக்குகள் மீண்டும் ஏற்றப்பட்டன. ஒவ்வொருவராக ஊர்ப் பெண்கள் அம்மாவின் வீட்டு முற்றத்தில் கூடத் தொடங்கினர்.

"கையிலையே வெடிச்சிடுத்தாம்..." ஒருத்தி பீதி கவ்விய குரலில் மற்றவளிடம் குசுகுசுத்ததை, அம்மா கனவிற் கேட்பதைப் போலக் கேட்டாள்.

குலத்தைத் திரும்பிப் பார்த்தாள். அரை மயக்கத்தில் கிடந்தான். சொட்டுச் சொட்டாகக் கருஞ்சிவப்பு இரத்தம் தலை யணையில் சிந்திக் கொண்டிருந்தது.

முத்து முத்தாக சூடான கண்ணீர் அம்மாவின் கன்னங்களை நனைத்தபடி சிந்தத் தொடங்கிற்று.

### 3

முதுகுப் பிடிப்புடன் ஒரு முதிய பெண், அவள் வெகு வேகமாகக் கிழவியாகிக் கொண்டிருந்தாள். ஊரில் ஒருவருடனும் அவள் இப்போ பேசிச் சிரிப்பதில்லை.

ஒரு அழகிய சிறு மொட்டு, புரியாத பேதை, வாடிக் கொண்டிருக்கும் பூமரம். அவளது வயதுக்கு மீறின குருட்டு யோசனைகள். கவலைகள். ஏக்கங்கள். தாயின் வேலையில் பாதிக்குமேல் இதன் பிஞ்சுத் தோள்களில் பலவந்தமாக இறக்கி வைக்கப்பட்டுவிட்டது. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை. போகும் நாட்களிலும் பிந்தித்தான் போகும். ஒரு அழுக்கு யூனிபோமுடன், கலைந்த கேசத்துடன், வாடிய முகத்துடன், கண்களில் பிந்தி விட்டதின் கலவரமும் பயமும் தெறிக்க, மார்பில் புத்தகக் கட்டுக்களை அணைத்தபடி, புழுதி பறக்கும் ஒழுங்கைகள் வழியே ஓட்டமும் நடையுமாக விரையும்.

ஒரு முரட்டு இளைஞன். மணிக் கட்டுக்குக் கீழே அவனது ஒரு கரத்தை துணித்துவிட்டார்கள். அவனிடம் அடிக்கடி

அவன் தோழர்கள் வருகின்றனர். அவன் ஒரு அருமையான மெக்கானிக். மிகவும் மூளை-சாலி. அவசியமான வன். ஒற்றைக் கை-யால் கடுமையாக உழைக்கக்கூடிய அசகாய சூரன். நாலைந்து நாட்களுக்கொருமுறை நடுநிசி நேரம் வீட்டுக்கு வருவான். அவன் முகத்தில் காணப்படும் கடுமையும், ஏதோ ஒரு வெறியும் காண்போரைப் பிரமிக்கச் செய்யும். அவன் ஒரு முசுடு. அதிகம் பேசமாட்டான். வீட்டுக்கு வந்தவுடன் அம்மாவுக்கு பணம் கொடுப்பான். உடனே ஓலைப்பாயை விரித்தபடி தலையணை கூட இன்றித் தூங்கிப் போவான்.

வீடு மிகவும் பழையது. ஒரு சிறு குடிசை. கூரை மிகவும் உக்கிப் போய்விட்டது. முற்றத்தில் எங்கணும் பூவரசமிலைகள் சருகாக குப்பையாகச் சேர்ந்திருக்கும்.

ஒரு நாய். அதைக் கவனிப்பாரில்லை, எலும்பெடுத்துத் தெரிய மெலிந்து விட்டது. சொறி பிடித்து விட்டது. காதுக-ளில் உண்ணிகள் படையாகப் பெருகி விட்டன. காதுகள் கீழ் நோக்கி வளைந்து பாரத்தால் தொங்கி விட்டன. வளவின் ஒரு மூலையில் மண்ணைத் தோண்டி விட்டுச், சோம்பிப் படுத்திருக்கும். அது குரைப் பதோ, ஓடுவதோ கிடையாது, விரைவில் இறந்துவிடும்.

அடிக்கடி இந்த வீட்டுக்கு மாட்டுத் தரகர்கள் வருகின்றனர். கதறக் கதற ஒரு பசுவையோ, கன்றையோ இழுத்துப் போகின்றனர். கால்களைப் பரப்பிக் கொண்டு, போக மறுத்து அது கதறும். உதவிக்கு அம்மாவை அழைக்கும். பரிதாப மான குரலில் மாடுகள் எல்லாம் சேர்ந்து அழும்.

இரவு நேரங்களில் அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கும். மரநாய்கள் கோழி-களைக் குழறக் குழறத் தொண்டையில் திருகி யபடி இழுத்துப் போகும். உயிரை வாட்டும் அத்தீனமான ஓலம் மெல்ல மெல்லத் தேய்ந்து தூரே போய் மறையும்.

அம்மா இப்போ குண்டுச் சத்தங் களைச் சட்டை செய்வதில்லை. அவள் துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் பழக்கப் பட்டவள்.

குலத்தினதும் சீலனினதும் ஜாதகங் களைக் தூக்கிக் கொண்டு பெயர் பெற்ற சாத்திரிமார்களைத் தேடிப் போகிறாள்.

சீலன் புனர்பூச நட்சத்திரம்! ராமன் கூடப் புனர்பூச நட்சத்திரம்!!

அவனும் காடுகளில் வசிக்க நேர்ந்தது! கடலைக் கடக்க நேர்ந்தது! அதர்மர்களுடன் நெடுகலும் போரிட்டுக் கொள்ள நேர்ந்தது!

சாபத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவனும் விமோசனமளித்தான்!

அவனும் பேதங்களைக் கடந்தவன். குரங்கும் வேடனும் அவனது தோழர்கள்!

ஓ! ஆயினும் ராமன் பேரில் அன்பு கொண்டவர்கள் அவன் பிரிவால் துன்புற நேர்ந்தது.

தசரதன்!... கோசலை!... சீதை!!

குலம் அத்த நட்சத்திரம். அத்தம் அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

அவன் ராஜத்துரோகமான காரியங் களில் ஈடுபடுவான் என்றும்...

மிகப்பெரிய கண்டங்களில் மாட்டிக் கொள்ள நேரும் என்றும்...

மறியல் வீட்டுக்குப் போகின்ற பலன்கூட அவனுக்கு உண்டென்றும்...

கிரகங்கள் யாவும் நீசதிசை அடைந்திருக்கின்றன வென்றும்...

❍ ❍ ❍ ❍ ❍

**(மோகவாசல் தொகுப்பிலிருந்து)**

# சமகால இலங்கைத் தமிழ்க் கவிதையில் இனத்துவ முரண்பாட்டின் தாக்கம்

எம். ஏ. நுஃமான்

காலனித்துவத்தின் விளைவுகளுள் ஒன்றான இனத்துவ முரண்பாடு பின்காலனித்துவ இலங்கையில் தீவிரமான ஒரு சமூக அரசியல் பிரச்சினையாக உருவெடுத்தது. இதன் விளைவாக வளர்ச்சியடைந்த இனமோதலும் உள்நாட்டு யுத்தமும் காரண-மாக கடந்த சுமார் முப்பது ஆண்டுகளில் ஒரு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், பத்து இலட்சத்துக்கு அதிகமானோர் உள்நாட்டிலும் வெளிநாடுக-ளிலும் புலம் பெயர்ந்திருக்கிறார்கள்.

இலங்கையின் இனத்துவ முரண்பாடும் மோதலும் ஒப்பீட்டளவில் சிங்கள இலக்கியத்தைக் காட்டிலும் மிகப் பெருமளவில் இலங்கைத்தமிழ் இலக்கியத்தில் நேரடி யான தாக்கத்தைச் செலுத்தியிருக்கிறது. பின்காலனித்துவ காலகட்டம் முழுவதிலும் இனத்துவ மோதலினால் நேரடியா-கவும் மிக மோசமாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்ப் பேசும் சமூகத்தவர்களே என்பது இதற்கு முக்கியமான காரணம் எனல-ாம்.

இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் எனும் தனித்துவமான மூன்று இனக் குழுமத்தினரால் இலங்கையில் தமிழ்மொழி தாய்மொழியாகப் பேசப்படுகின்றது. அவர்களுக்கே உரிய சில கிளைமொழி வேறுபாடுகளையும் நாம் அவதானிக்கலாம். இந்த மொழி வேறுபாடுகளும் இனத்துவத் தனிப் பண்புகளும் வேறுபட்ட பண்பாட்டு அரசி யல் கூறுகளும் இவர்களின் இலக்கியப் படைப்புகளிலும் வெளிப்படக் காணல-ாம். அவ்வகையில் இனத்துவ அடிப்படையில் பிளவுபட்ட சம-கால இலங்கையில் தமிழ் இலக்கியம் அல்லது தமிழ்க் கவிதை என்று நாம் பேசும்போது, இச்சொல் ஒரு பல்-இனத்துவ சமூக அரசியல் சூழலையும் உள்ளடக்குவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.



எம்.ஏ. நுஃமான்

இலங்கையில் தமிழ் இலக்கியத்துக்கு ஒரு நீண்ட வரலாறு இருப்பினும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் இனத்துவ உணர்வோ இன முரண்பாடோ இலக்கியத்தில் வெளிப்பட்டமைக்கான சான்றுகள் எவை யும் இல்லை. இலங்கையில் இனத்துவ உணர்வும் இனத்தேசியவாதங்களும் மத, பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கங்கள் என்ற வடிவில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே எழுச்சியடைந்தன. பௌத்த, இந்து, இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கங்கள் அவ்வச் சமூகங்கள் மத்தியில் அரசியல் தன்மை கொண்ட இனத்துவ அடையாளங்களை உருவாக்குவதிலும் உறுதிப்படுத்துவதிலும் இக்காலகட்டத்தில் தீவிரமாகச் செயற்பட்டன.

அரசியல் நலன்களை அடிப்படை யாகக் கொண்ட இனத்துவ உணர்வும், இன அடிப்படையிலான சமூகப்பிளவுகளும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கையில் படிப்படியாக வளர்ச்சி யடைந்தன. 1931ல் டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையும், தொகுதிவா-ரியான தேர்தல் முறையும் இதனை ஊக்கப்படுத்தின. அரசியல் சந்தர்ப்பவாதம் காரணமாக அரசியல் கட்சிகள் மக்களை இனத்துவஅடிப்படையில்ஒன்றுதிரட்டின. தமது உடனடி நன்மைகளுக்காக அரசியல் கட்சிகள் இனத்துவப் பிரச்சினைகளை தவ-றாகக் கையாண்டமை மோதலைத் தீவிரப் படுத்தியதோடு பிரிவினைக் கோரிக்கைக்கும், அரசியல் தீவிரவாதத்துக்கும், உள்நாட்டு யுத்தத்துக்கும், அழிவுக்கும் இலங்கையை இட்டுச் சென்றது.

ஆட்சிமொழிப் பிரச்சினை இத்தகைய தவறான கையாள்கைக்கு ஒரு உதாரண-மாகும். சுதந்திரம் கிடைத்த சிறிது காலத்துக்குள் முதலாவது சிங்கள-தமிழ் இனக்கலவரத்துக்கும் இனத்துவப் பிளவுக்கும் இது இட்டுச்சென்றது (Kearney, 1967). சிங்களம் மட்டும் ஆட்சிமொழிச் சட்டம் 1956 ஜூனில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது இலங்கையின் இனமுரண்பாட்டில் ஒரு திருப்புமுனையாகும். 1950களின் தொடக்கத்திலிருந்து பிரதானமான சிங்கள அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட சிங்களம் மட்டும் ஆட்சிமொழிக் கொள் கைக்கு எதிராக இலங்கைத் தமிழர்கள் அரசியல் ரீதியில் எழுச்சியுற்றனர்.

இதன் விளைவாக, இலங்கையில் தமிழ் இலக்கியம், குறிப்பாகத் தமிழ்க்கவி தை தமிழர்களின் இனத்துவ உணர்வைப் பிரதிபலிக்கத் தொடங்கியது. மொ-ழித் தேசியவாதம் ஒரு பிரதான பாடு பொருளாக கவிதைகளில் இடம்பெறத் தொடங்கியது. 1950 முதல் 1960களின் முற்பகுதிவரை கவிஞர்களின் மொழிப் பற்றும் மொழித் தேசியவாதக் கருத்து நிலையும் சொற் தீவிரவாதத்துடன் (verbal militancy), வெளிப்படுத்தப்பட்ட பல நூற்றுக் கணக்கான கவிதைகள் வடக்கையும் கிழக்கையும் சேர்ந்த ஏராள-மான கவிஞர்களால் படைக்கப்பட்டன. தமிழ்ப் பற்று, சிங்கள மேலாதிக்கத்துக்கு எதிர்ப்பு, தமிழ்மொழியினதும், தமி ழர்களதும் வெற்றியும் விடுதலையும் என்பனவே இக்கவிதைகளின் பிரதான தொனிப்பொருள்களாக அமைந்தன. இக் கவிதைகளுட்சில1960களின்தொடக்கத்தில் ‘தமிழ் எங்கள் ஆயுதம்’, ‘உயிர் தமிழுக்கு’ ஆகிய தலைப்புகளில் தொகுப்பு நூல்களா கவும் வெளிவந்தன. எனினும், 50களின் மொழித்தேசியவாதக் கவிதைகள் 1958 இனக் கலவரத்தின் பின்னர் படிப்படியாக ஒரு முடிவுக்குவந்தன. இனத்துவ அரசி யல் எழுச்சியின் மனிதத்தன்மையற்ற, வன்முறை சார்ந்த பின்விளைவுகளை

கவிஞர்கள் உணர்ந்துகொண்டதும், 1960 களின் தொடக்கத்திலிருந்து இடதுசாரிக் கட்சிகளின் பங்குபற்றலுடன் பிரதான அரசியல் நீரோட்டத்தில் மேலெழுந்துவந்த மார்சிய நிலைப்பட்ட முற்போக்குக் கருத்து நிலையும் இதற்குக் காரணங்களாகலாம்.

1960, 1970களில் இலங்கைத் தமிழ்க் கவிதையின் அரசியல் உள்ளடக்கத்தில் ஒரு முக்கியமான மாற்றம் காணப்பட்டது. இக்காலகட்டத்தில் நாட்டின் அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக தமிழ் இலக்கிச் செயற்பாடுகளிலும் மார்க்சீய, சோசலிச இலட்சியங்கள் முன்னணிக்கு வந்தன. இக்காலகட்டத்தில் பின்காலனித்துவ மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்நாட்டு முகவர்களுக்கும் எதிரான போராட்டத்தில் மார்க்சீய, மாஓஇசச் சிந்தனைகள் முக்கிய பங்கு வகித்தன. இலங்கை இந்த அரசியல் போக்குக்கு விலக்காக அமையவில்லை. 1960களில் சோசலிசத்துக்கு பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்துகொண்ட இடதுசாரிக் கட்சிகள் பிரதான சிங்கள தேசியவாதக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டிணைந்தன. இக்கூட்டணி 1970ல் ஆட்சிக்கு வந்தது. சோசலிசத்துக்கு பாராளுமன்றப் பாதையை நிராகரித்த எண்ணிக்கையில் சிறுபான்மையான மாஓஇசக் கட்சிகள் மாஓவின் புதிய ஜனநாயகக் கருத்தியலை ஏற்றுக்கொண்டு, இனத்துவ எல்லைகளைக் கடந்து தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒன்றிணைத்துப் போராடுவதன் ஊடாக சோசலிசத்தை அடையும் புரட்சிகரப் பாதையைப் பிரச்சாரப்படுத்தின. இக்காலகட்டத்தில்தான் இலங்கையில் பிரதானமாக கிராமப்புற வறிய விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களும்

**இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள்** (poetry of political protest) **என்ற ஒரு புதிய இலக்கிய வகை 1977 முதல் தோன்றி வளர்ந்தது. இக்கவிதை வகை 1950களில் எழுதப்பட்ட மொழித் தேசியவாதக் கவிதைகளின் பொருளிலும் வடிவத்திலும் இருந்து பெரிதும் வேறுபட்டது.**

யுவதிகளும் அரசாங்கத்தைக் கவிழ்க்க ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். ஆயிரக்கணக்கானோர் தமது புரட்சிகர இலட்சியவாதத்துக்காக உயிர்த்தியாகமும் செய்தனர்.

பெரும்பாலான எழுத்தாளர்களும் கவிஞர்களும் பல்வேறு அளவில் சோசலிச இலட்சியங்களின் செல்வாக்குக்கு ஆட்பட்டனர். இவர்களுட் பலர் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்தனர் அல்லது அவற்றின் அனுதாபிகளாயினர். அவர்கள் தம்மை முற்போக்கு இலக்கியவாதிகள் என அடையாளப்படுத்தினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமிழ் இலக்கியத்தில் சோசலிச இலட்சியங்களைப் பிரச்சாரப்படுத்துவதில் முன்னணிப் பங்குவகித்தது. சமூக சமத்துவம், இன ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை

என்பவற்றை அவர்கள் நம்பினர். சோசலிசம்தான் இனத்துவ முரண்பாட்டுக் கான ஒரே தீர்வு என்பதை அவர்கள் உறுதியாக நம்பினர். சாதி ஒடுக்குமுறை, வர்க்க முரண்பாடு, பொருளாதாரச் சுரண்டல் போன்ற சமூகப் பிரச்சினைகள் இக்கால கட்டத்தில் தோன்றிய தமிழ்ப் புனைகதை, கவிதைகளின் பிரதான தொனிப்பொருட்கள் சிலவாகும்.

இருப்பினும், இக்காலகட்டத்தில் அரசியலில் தமிழ்த் தேசியவாதம் மங்கி மறைந்துவிடவில்லை. உண்மையில் அது உயிர்ப்புடனேயே இருந்தது. சிலவேளைகளில் அது கொழுந்தவிட்டு எரிந்தது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அக்கறை காட்டாமையும், தன் இருத்தலுக்காக இனப்பிரச்சினையை உயிர்ப்புடன் வைத் திருக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசி யவாதக் கட்சிக்கு இருந்ததும் இதற்குக் காரணங்கள் எனலாம். இக்காலகட்டத்தில் சிங்கள, தமிழ்த் தேசியவாதங்களை எழுச்சி யடையச் செய்வதில் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் பெரும்பங்காற்றியது. பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்த இடதுசாரிக் கட்சிகளும் தமது அர சியல் இருத்தலுக்காக சிங்களப் பேரின வாதத்துடன் கூட்டணி அமைத்து தங்கள் சோசலிச இலட்சியங்களைக் கைவிட்டன. ஒரு இடதுசாரி அமைச்சரால் வரையப்பட்ட 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மொழி, மதம் ஆகியவற்றைப் பொறுத்தவரை மிக வெளிப்படையாகவே பாராபட்சமானதாக அமைந்தது. பின்காலனித்துவ இலங்கை வரலாற்றில் முதல்முறையாக அதற்கு முன்பிருந்த மதச்சார்பற்ற அரசியல் யாப்பை மாற்றி பௌத்தம் யாப்புரீதியாக அரச மதம் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. ஒரு தேசிய மொழி என்ற அந்தஸ்துக் கூடத் தமிழுக்கு வழங்கப்படவில்லை. அதே ஆண்டில் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை ஒன்றை அரசு அறிமுகப்படுத்தியது. அது பாரா பட்சமானது மட்டுமன்றி யாழ்ப்பாண இளைஞர்களைப் பெரிதும் பாதித்தது. இத்தகைய செயற்பாடுகள் வடக்கில் தமிழ்த் தீவிரவாதத்தின் வளர்ச்சிக்கும் தமி ழர் மத்தியில் பிரிவினைவாதத்துக்கும் வழி வகுத்தது.

1977ஆம் ஆண்டு சமகால இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இனமுரண்பாடு, தமிழ் இலக்கிய உற்பத்தி இரண்டிலும் அது பெரும் செல்வாக்குச் செலுத்தியது. 1960களிலும் 1970களின் தொடக்கத்திலும் முன்னணியில் இருந்த இடதுசாரிக் கருத்துநிலையை ஓரங்கட்டி விட்டு தமிழ்த் தேசியவாதம் அரசியலி லும் இலக்கியத்திலும் ஆதிக்கமுடைய கருத்துநிலையாக மாறியது.

1958ல் நடந்த தமிழர்களுக்கு எதிரான இனக் கலவரத்தின் பின்னர் அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்களின் தொடக்கமாக 1977ஆம் ஆண்டு அமைந்தது. அந்த ஆண்டில்தான் யாழ்ப்பாண நகரம் அரச காவலர்களால் தீக்கிரையாக்கப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டது. கலவரம் தெற்குக்கும் பரவி யது. தமிழ் அகதிகள் கப்பல்மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த சிங்கள மாணவர்களும் ஆசிரியர்களும், யாழ்ப்பாணத்தில் குடியிருந்த சிங்களப் பொதுமக்களும் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டனர். தமிழர்களுக்கும் சிங் களவர்களுக்கும் இடையிலான பௌதீகரீதி யான பிரிவு ஆரம்பித்தது.

1979ல் பயங்கரவாதத் தடைச்சட்டம் (PTA) என்ற பெயரில் மிக மோசமான அடக்குமுறைச் சட்டம் ஒன்றை அரசு

அமுல்படுத்தியது. இச்சட்டம் ஒரு குறுகிய கால எல்லைக்குள் யாழ்ப்பாணத்தில் 'பயங்கரவாதத்தை' அடக்குவதற்கு ஆயுதப் படையினருக்கு அளவற்ற அதிகாரத்தை வழங்கியது. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள், கடத்தப் பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். பொதுமக்கள் பீதிக்கு உட்படுத்தப்பட்டனர். இச்சம்பவங்கள் அரசாங்கம் எதிர்பார்த்ததுபோல் பயங்கரவாதத்தை ஒழிக்கவில்லை. பதிலாக அரச பயங்கரவாதத்தை வளர்த்தன. வடக்கிலும் கிழக்கிலும் தீவிரவாத இயக்கங்கள் வளர்ச்சி அடைவதற்கான சூழலை உருவாக்கின. 1977 கலவரத்தைத் தொடர்ந்து 1981ல் பிறிதொரு கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1983ல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் உச்சத்தை எட்டின. 1983இன் பின்னர் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் ஏனைய விடுதலை இயக்கங்களும் இந்தியா வழங்கிய ராணுவப் பயிற்சி, ஆயுத உதவி என்பவற்றின் மூலம் வலிமையான பிரிவினைவாத இயக்கங்களாக எழுச்சியடைந்தன. கடைசியில் 1985க்குப் பின்னர் படிப்படியாக ஏனைய விடுதலை இயக்கங்களைத் தடைசெய்து, 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' ஒன்றை ஏற்படுத்திக்கொண்டதன் மூலமும், 1987ல் இந்திய அமைதிப்படையுடன் யுத்தத்தத்தில் இறங்கியதன் மூலமும் விடுதலைப் புலிகள் இயக்கம் வலிமைமிக்க ஒரே இயக்கமாக எழுச்சி பெற்றது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும்இடையேநடந்தயுத்தத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியானதுடன் பத்து லட்சத்துக்கு அதிகமானோர் உள்நாட்டிலும் வெளி நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர்.

## 2

இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் (poetry of political protest) என்ற ஒரு புதிய இலக்கிய வகை 1977 முதல் தோன்றி வளர்ந்த அரசியல் வரலாற்றுப் பின்னணி இதுவே. இக்கவிதை வகை 1950களில் எழுதப்பட்ட மொழித் தேசியவாதக் கவிதைகளின் பொருளிலும் வடிவத்திலும் இருந்து பெரிதும் வேறுபட்டது.

1980களில் தமிழ் இலக்கிய வரைபடம் பெரிதும் மாற்றம் அடைந்தது. தமிழ் இலக்கியத்தில் மார்க்சியக் கருத்துநிலையின் இடத்தைத் தமிழ்த் தேசியவாதம் பிடித்துக்கொண்டது. சில தீவிர இடதுசாரிக் கவிஞர்கள் தீவிர தமிழ்த் தேசியவாதிகளாக மாறினர். உதாரணமாக 1970களில் 'புரட்சிகரக் கவிஞராக' இருந்த புதுவை இரத்தினதுரை 1980 களில் தீவிர தமிழ்த் தேசியவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து

**1985க்குப் பின்னர் படிப்படியாக ஏனைய விடுதலை இயக்கங்களைத் தடைசெய்து, 'விடுவிக்கப்பட்ட பிரதேசம்' ஒன்றை ஏற்படுத்திக்கொண்டதன் மூலமும், 1987ல் இந்திய அமைதிப்படையுடன் யுத்தத்தத்தில் இறங்கியதன் மூலமும் விடுதலைப் புலிகள் இயக்கம் வலிமைமிக்க ஒரே இயக்கமாக எழுச்சி பெற்றது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மே-லாக அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடந்த யுத்தத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியானதுடன் பத்து லட்சத்துக்கு அதிகமானோர் உள்நாட்டிலும் வெளி நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர்.**

**1977ல் யாழ்ப்பாணத்தில் அரச காவலர்களால் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு உடனடி எதிர்வினையாக 'துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்', 'நேற்றைய மாலையும் இன்றைய காலையும்' என்னும் தலைப்புகளில் நான் இரண்டு கவிதைகள் எழுதி–னேன். நான் அறிந்தவரை இவைதான் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் 1970க்குப் பிந்திய இரண்டாம் கட்ட அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் முதல் வருகையாகும்.**

அதன் பிரச்சாரகராகச் செயற்பட்டார். சிலர் விரக்தி அடைந்து தற்கொலைகூடச் செய்துகொண்டனர். கம்யூனிசஇயக்கத்தில் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கவிஞர் சுபத்திரன் மாறிய அரசியல் சூழலினால் ஏமாற்றத்துக்கும் விரக்திக்கும் உள்ளாகி, குடிபோதைக்கு அடிமையாகி, குடும்பச் சச்சரவுகளில் மூழ்கி இறுதியில் தற்கொலை செய்துகொண்டார். வேறுசிலர், உதாரணமாக சி.சிவசேகரம், சண்முகம் சிவலிங்கம், ஒரு சமநிலையைப் பேண முயன்று தேசியவாதம், இன மேலாண்மை, வன்முறை, யுத்தம் என்பன பற்றி விமர்சனபூர்வமான கவிதைகள் எழுதினர்.

1977ல் யாழ்ப்பாணத்தில் அரச காவலர்களால் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு உடனடி எதிர்வினையாக 'துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்', 'நேற்றைய மாலையும் இன்றைய காலையும்' என்னும் தலைப்புகளில் நான் இரண்டு கவிதைகள் எழுதினேன். நான் அறிந்தவரை இவைதான் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் 1970க்குப் பிந்திய இரண்டாம் கட்ட அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் முதல் வருகையாகும். முதல் கவிதை அடக்குமுறைக்கு எதிரான குரலையும் இரண்டாவது கவிதை வன்முறையின் அவலத்தையும் வெளிப்படுத்தின. உருவம், உள்ளடக்கம் என்பவற்றைப் பொறுத்தவரை கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கையில் எழுதப்பட்ட மிகப் பெரும்பாலான போர்க்காலக் கவிதைகள் இவ்விரு கவிதைகளின் வெவ்வேறு வகைகள் என்றே சொல்லவேண்டும். அக்கவிதைகள் இரண்டையும் நான் இங்கு தருகின்றேன்.

**துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்**

நாளையக் கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடினர்
ஒரு பெரும் நகரம் மரணம் அடைந்தது

வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது
திருவிழாக் காணச் சென்றுகொண்டிருக்கையில்
படம்பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ் நிலையத்தின் வாசலில் நிற்கையில்
சந்தையில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இறக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்

உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அடிபணிவதே
அரசியல் அறமா?

அதை நாம் எதிர்ப்போம்
அதை நாம் எதிர்ப்போம்
தனிநாடு அல்ல எங்களின் தேவை
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்
மனிதனுக் குரிய கௌரவம்
வாழ்க்கைக்கான உத்தரவாதம்

யார் இதை எமக்கு மறுத்தல்கூடும்?
மறுப்பவர் யாரும் எம்மெதிர் வருக
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடுக

போராடுவதே மனிதனின் விதிஎனில்
போராட்டத்தில்
மரணம் அடைவதும் மகத்துவம் உடையதே

**நேற்றைய மாலையும் இன்றைய காலையும்**

நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்.

சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்.
பூபால சிங்கம் புத்தக நிலைய
முன்றலில் நின்றோம்
பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேம்.

பஸ்நிலையத்தில் மக்கள் நெரிசலைப்
பார்த்தவாறிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்.

சந்தைவரையும் நடந்து சென்றோம்
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர்ச் சந்தியில் ஏறி
பண்ணை வெளியிற் காற்று வாங்கினோம்.

'றீகலின்' அருகே
பெட்டிக் கடையில்
தேனீர் அருந்தி – சிகரட் புகைத்தோம்.
ஜாக் லண்டனின்
'வனத்தின் அழைப்பு'
திரைப்படம் பார்த்தோம்.

தலைமுடி கலைந்து பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்.

இன்று காலை
இப்படி விடிந்தது
நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன.
குண்டுகள் பொழிந்தன்
உடலைத் துளைத்து
உயிரைக் குடித்தன.

பஸ்நிலையம் மரணித் திருந்தது.
மனித வாடையை நகரம் இழந்தது
கடைகள் எரிந்து புகைந்து கிடந்தது
குண்டு விழுந்த கட்டடமாக
பழைய சந்தை இடிந்து கிடந்தது
வீதிகள் தோறும்
டயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன.

இவ்வாறாக
இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்.

இக்கவிதைகளைத் தொடர்ந்து கடந்த முப்பது ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. நூற்றுக்கு அதிகமான கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. வேவ்வேறு அளவில் தமிழ்த் தேசியவாதம், மார்க்சியம் ஆகிய கருத்துநிலைகளின் கலவையாக இவை

அமைந்தன. 1970களின் பிற்பகுதியிலிருந்து இளந் தலைமுறையைச் சேர்ந்த ஏராள-மான கவிஞர்கள், ஆண்களும் பெண்களும், முன்னணிக்கு வந்தனர். வ. ஐ. ச. ஜெய பாலன், சேரன், சு. வில்வரத்தினம், கி. பி. அரவிந்தன், பாலசூரியன், ஊர்வசி, செல்வி, சிவரமணி ஆகியோர் இவர்களுட் சிலர். போராளிகள் மத்தியிலிருந்தும் கவிஞர் களும் எழுத்தாளர்களும் உருவாகினர்.

இத்தகைய கவிதைகளின் முதல் தொகுதி 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தலைப்பில் 1985ல் வெளிவந்தது. 31 கவிஞர்களின் 82 கவிதைகள் இதில் இடம்பெற்றன. இதன் பிரதான தொகுப்பாளர்களான சேரன், அ. யேசுராசா இருவரும் தமிழ்த் தேசியம், இன முரண்பாடு என்பன உருவாக்கிய முக்கியமான இரு தலை முறைப் படைப்பாளிகளின் பிரதிநிதிகள் எனலாம். இத்தொகுப்பில் இடம்பெற்ற 31 கவிஞர்களுள் மூவர் மட்டும் கிழக்கைச் சேர்ந்தவர்கள், ஒருவர் மலையகத்தவர், ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். ஏனையோர் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 1980களின் நடுப்பகுதிவரை எதிர்ப்புக் கவிதையின் உருவாக்கத்தில் வடக்கைச் சேர்ந்த கவிஞர்களே ஆதிக் கம் செலுத்தினர் என்பதை இது காட்டு கின்றது.

### 3

1985வரை இனமுரண்பாடும் மோதல்களும் சிங்கள, தமிழ்ச் சமூகங் களுக்கிடையில் மட்டுப்பட்டிருந்தன. 1985க்குப் பின்னர் முஸ்லிம்களும் இதற்குள் இழுக்கப்பட்டனர். இதன் பின்னர் இன முரண்பாடு வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை மிகவும் சிக்கலான ஒன்றாக மாறியது. இலக்கிய ஆக்கத்திலும் இது பிரதிபலிக்கத் தொடங்கியது.

1985ல் இருந்து தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியும் முஸ்லிம்களுக்கு எதிரான அவர்களது நடவடிக்கைகளும் முஸ்லிம்கள் மத்தி யில் பாதுகாப்பின்மை உணர்வைத் தீவி ரப்படுத்தியதோடு இப்பிரதேசத்தில் முன் என்றும் இல்லாத அளவு முஸ்லிம்கள் மத்தியில் இனத்துவ அடையாள உணர்வை ஆழப்படுத்தியது. இது முஸ்லிம்களுக்கு என்று ஒரு தனி அரசி யல் கட்சியின் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் - எழுச்சிக்கு வழிவகுத்தது. கிழக்கு முஸ்லிம்களை அரசியல் ரீதியாக ஒன்றிணைக்கும் ஒரு பிரதான அரசியல் நிறுவனமாக அது உருவாகியது. 1987ல் நடைபெற்ற முதலாவது மாகாண சபைத் தேர்தலின் பின்னர் கிழக்கின் முஸ்லிம் அரசி யலை முஸ்லிம் காங்கிரஸ் ஏகபோகமாக்கிக் கொண்டதுடன் விடுதலைப் புலிகள் தாங்களே தமிழ்மக்களின் ஏக பிதிநிதிகள் என உரிமை கோரியதுபோல் முஸ்லிம் களின் ஏக பிதிநிதிகள் தாங்களே என உரி மை கோரினர். இது முஸ்லிம்களுக்குப் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தியது. புலிகள் இயக்கம் முஸ்லிம்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை 1990ல் தொடங்கியது. கிழக்கில் ஆயிரத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் அவ்வாண்டில் கொல்லப்பட்டனர். வடக்கில் இருந்த மொத்த முஸ்லிம்களும் உடுத்த உடையுடன் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையும், கொலைகளும், இடப்பெயர்வும் 2002ல் விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரும்கூட அவ்வப்போது தொடர்ந்து நிகழ்ந்தது.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வன்முறையும் அவர்களின் துயரமுமே 1985ன் பின்னர் முஸ்லிம் கவிஞர்கள் எழு

**1985வரை இனமுரண்பாடும் மோதல்களும் சிங்கள, தமிழ்ச் சமூகங் களுக்கிடையில் மட்டுப்பட்டிருந்தன. 1985க்குப் பின்னர் முஸ்லிம்களும் இதற்குள் இழுக்கப்பட்டனர். இதன் பின்னர் இன முரண்பாடு வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை மிகவும் சிக்கலான ஒன்றாக மாறியது. இலக்கிய ஆக்கத்திலும் இது பிரதிபலிக்கத் தொடங்கியது.**

திய கவிதைகளின் பிரதான கருப்பொரு ளாக அமைந்தது. கிழக்கிலிருந்தும் வடக்கு முஸ்லிம் அகதிகள் மத்தியிலிருந்தும் இளந்தலைமுறையைச் சேர்ந்த ஒரு பெருந்தொகையான முஸ்லிம் கவிஞர்கள் இக்காலப்பகுதியில் தோன்றினர். கடந்த இருபது ஆண்டுகளில் ஏராளமான கவி தைகளையும் அநேக கவிதைத் தொகுதி-களையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். சோலைக்கிளி, அஷ்ரஃப் சிஹாப்தீன், ஓட்டமாவடி அறபாத், என். ஆத்மா, ஏ. ஜி. எம். சதக்கா, ஏ. எம். றஷ்மி, முல்லை முஸ்றிபா, உவைஸ் கனி, சுல்ஃபிகா, அனார், பெண்ணியா ஆகியோர் இக்காலப் பகுதி யில் தோன்றிய முக்கியமான கவிஞர்களுட் சிலர்.

1985ல் வெளிவந்த, ஆயுதப் படையி-னரின் இன வன்செயல்களினால் பாதிக்கப் பட்ட தமிழர்களின் கோபத்தையும் துன்பத்தையும் எதிரொலித்த மரணத்துள் வாழ்வோம் தொகுதியைப்போல், 50 கவிஞர்களின் 100 கவிதைகளைக் கொண்ட ‘மீசான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள்’ என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொ-குதி கொழும்பில் 2002ல் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது. இதன் தொகுப்பாளர்களான அஷ்ரஃப் சிஹாப்தீன், ஏ. ஜி. எம். ஸதக்கா, எஸ். நளீம் ஆகியோர் 1990களில் கிழக்கின் கொந்தளிப்பினால் உருவாகிய கவிஞர்கள் எனலாம். இத்தொகுதியில் உள்ள கவிதைகள் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின், குறிப்பாக விடுதலைப் புலிகளின், ஒடுக்குமுறை, வன்செயல்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் கோபத்தையும் துயரை-யும் எதிரொலிப்பவையாக அமைந்தன. இத்தொகுப்பில் இடம்பெற்ற 50 கவி ஞர்களில் ஐவர் மட்டும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த தமிழர்கள். முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறைக்கு எதிரான தங்கள் உணர்வுகளையும் எதிர்ப் பையும் அவர்கள் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள் எவை யும் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிவசே கரம், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இப்பொருள் தொடர்பாக எழுதிய சில கவி தைகள் தவறவிடப்பட்டுள்ளன. 45 முஸ்லிம் கவிஞர்களில் மிகப் பெரும்பாமையோர் கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பது புரிந்துகொள்ளக் கூடியதே. இன முரண்பாடு எவ்வாறு அது உருவாக்கும் வலியையும் அந்த வலி உருவாக்கும் கவிதை-யையும் இனத்துவமயப் படுத்துகின்றது என்பதற்கு இங்கு நான் குறிப்பிட்ட இரண்டு கவிதைத் தொகுப்புகளும் நல்ல உதாரணங்களாக அமைகின்றன.

## 4

இனத்துவம், தேசியவாதம் என்பன பிறரை (the Other) வெளி ஒதுக்கும்

கருத்துநிலைக் கட்டமைப்புகளாகும். அப்பிறருடன் சமூக அரசியல் முரண்பாடுகள் ஏற்படும்போது அப்பிறரை எதிரியாகவும் அவை கட்டமைக்கின்றன. இக் கருத்துநிலைக்கட்டமைப்புகள்வேறுபட்ட அடையாளங்களை திணிப்பதன் மூலம் மக்களைப் பிளவுபடுத்துகின்றன. பரஸ்பரம் பகைமையைத் தூண்டுகின்றன. மனித விழுமியங்களைத் தரம் தாழ்த்துகின்றன.

இனத்துவ முரண்பாடு நிகழும் காலகட்டங்களில் கவிதை இரண்டு எதிர்முரணான பாத்திரங்களை வகிக்கின்றது. ஒருபுறம் நேரடியாகவோ மறைமுகமாகவோ இனத்துவம், தேசி யம், வன்முறைக் கருத்துநிலைகளை அது ஊக்கப்படுத்துகின்றது. மறுபுறம், இக்கருத்துநிலைகளின் அசிங்கமான இயல்பை அம்பலப்படுத்துகின்றது, மனித விழுமியங்களையும் ஐக்கியத்தையும் அர்த்தமுள்ள வகையில் மீள்கட்டமைப்புச் செய்வதற்கு அழைப்புவிடுக்கின்றது.

இக்கருத்தை விளக்குவதற்கு நான் இரண்டு உதாரணங்களை இங்கு தருகின்றேன். முதலாவது உதாரணம் குழந்தைப் படைவீரர் (child soldger) பற்றிய இரண்டு கவிதைகள். முதலாவது கவிதை விடுதலைப் புலிகள் இயக்கம் சார்ந்த கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியது. இக்கவிதை குழந்தைப் படைவீரர்களை மகிமைப்படுத்தவதாக அமைகின்றது. உண்மையில் இச்சிறுவர்கள் பலாத்காரமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டவர்கள் என் பதை இக்கவிதை மறைத்துவிடுகின்றது. கவிதையின் தலைப்பு 'தலைமுறை இடைவெளிக்குள்' என்பது.

**துப்பாக்கியோடு திரிகின்ற சிறுவனே!**

**பக்கத்தில் வா!**
**உனக்கு வயது பதினான்கா**
**பதினைந்தா?**
**எத்தனையாக இருந்தாலும்**

ஞானம் 3ஆம் இதழில் (ஆகஸ்ட் 2000)

**பேராசிரியர். எம்.ஏ.நு:மான் அவர்களது நேர்காணலில்...**

**தி. ஞா:–'பலஸ்தீனக் கவிதைகள்' என்னும் போராட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் எண்ணம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது? காலத்தின் தேவை எனக் கருதியதாலா?**

***எம்.ஏ.நுஃமான்:***– *1970களின் தொடக்கத்திலிருந்தே பலஸ்தீனக் கவி தைகளை அவ்வப்போது நான் மொழிபெயர்த்து வந்தேன். பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் எனக்கிருந்த ஈடுபாடு அதற்கு ஒரு முக்கிய காரணம். ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் எழுச்சிக்கும் அவர்களது இலக்கிய வெளிப்பாட்டுக்கும் இடையிலான உறவு பற்றிய எனது அக்கறை பிறிதொரு காரணம். 1970களின் இறுதியில் இருந்து ஈழத்தில் இன ஒடுக்கு முறை தீவிரமடைந்த சூழ்நிலையில் பலஸ்தீனக் கவிஞர்களின் உணர்வு நமக்கும் மிகவும் ஏற்புடையதாக அமைந்தமை பிறிதொரு காரணம். தமிழில் அரசியல் அல்லது எதிர்ப்புக் கவிதைகள் சரியான வடிவம் பெறாத அன்றையச் சூழலில் பலஸ்தீனக் கவிதைகள் எமக்கு ஒரு ஆதர்சமாக அமையலாம் என்று நான் கருதினேன். இவற்றின் விளைவே எனது மொழிபெயர்ப்புகள். 1982ல் எனது 'பலஸ்தீனக் கவிதைகள்' தொகுப்பு வெளிவந்தது. 9 கவிஞர்களின் 30 கவிதைகள் அதில் இடம்பெற்றன. முருகையனைக் கொண்டு நான் மொழி பெயர்ப்பித்த சில கவிதைகளும் அதில் அடக்கம். அதன் பிறகும் நிறையக் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளேன். அவற்றையெல்லாம் சேர்த்துச் சற்றுப் பெரிய தொகுப்பாக வெளியிட உள்ளேன்.*



மகனே! அருகில்வா
உன் பாதத்தைக் காட்டு
தூசிபடிந்த கால்களைச்
சேவிக்க விரும்புகின்றேன்.
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
காலையில் சத்தியப் பிரமாணம்
செய்யும்போது
இந்த மந்திரச் சொல்லை
விசுவாசிப்பதாகக் கூறுகின்றாயே!
இந்த வேதமந்திரம்
உன்னை மலைபோல் நிமிர்த்துகின்றது.

உனக்குத் துப்பாக்கி தூக்கும் வயதல்ல
வாய்ப்பாடு பாடமாக்கும் வயது.
என்றாலும் நீ நடக்கும்போது
அட்டதிக்குகளும் அதிர்கின்றதே!

நீ மூச்சுவிடும்போது–
புயலொன்று புறப்படுகின்றதே!
உன்னைப் பார்க்கும் போது
எனக்குப் பெருமையாக இருக்கிறது,
பொறாமையாகவும் இருக்கிறதே!
உன் வயதில் நான் என்ன சாதித்தேன்
ஒன்றுமில்லை.
ஒன்றுமேயில்லை.
கிட்டி அடித்தேன்
கிளித்தட்டு மறித்தேன்
வெள்ளையப்பா வீட்டு விளாத்திக்குக்
கல்லெறிந்தேன்.

நீயோ
கையில் துவக்கேந்தி
களத்தில் நிற்கிறாய்
கொட்டும் மழையினிலும்
குறிபார்த்து நிற்கின்றாய்
தூங்காத விழியோடு 'சென்றிக்கு' நிற்கின்றாய்.

உன் பாதத்தைக் காட்டு
கால்களை முத்தமிட
கவிஞன் விரும்புகிறேன்
நீயும் உன்போன்ற புலிகளும்
களத்தில் உலாவரும் காலம் வரை
உலகத்துப் படையெல்லாம்
ஒன்றாய் எதிர்க்கிலும்
வேங்கைகள் பாய்ந்து
வெற்றிகொள்ளும்

*(நினைவழியா நாட்கள், புதுவை இரத்தினதுரை)*

இங்கு நான் தரும் இரண்டாவது உதாரணம் இதே விடயம் பற்றிய முற்றிலும் வேறுபட்ட தொனிப்பொருளில் அமைந்த கவிதை. சேரன் இக்கவிதையில் பலாத்கார மாகஇயக்கத்தில் சேர்க்கப்பட்ட சிறுவ-னின் உள்ளுணர்வை வெளிப்படுத்துகிறார். இக்கவிதை முதல் கவிதை உருவாக்க முயலும் குழந்தைப் படைவீரத்துவத்தை மகிமை நீக்கம் செய்வதோடு விடுதலை இயக்கங்களின் குரூரத்தையும் அம்பலப் படுத்துகின்றது. கவிதையின் தலைப்பு 'நவீன துப்பாக்கி அரசன்'

காலை
பாடசாலை செல்லும் வழியில்
சிறைப்பட்டேன்
யுத்தத்தின் நாய்களிடம்.

புத்தகங்களை வீசி எறிந்தனர்
பேனாவை முறித்தனர்
தூரிகையை மிதித்தனர்
என் தலையையும்
மழித்தனர்.

துப்பாக்கியைக் கைகளில் தந்து
'போ! போய்விடு
தேசப் பணிபுரி, போர் செய்!'
என்றனர்.

பணிந்தேன்
இல்லையேல் பிணமாய்

**காய்ந்த குருதியும்**
**ஈயும்**
**இன்னும் கொஞ்சப் பேரிடமாவது**
**எஞ்சி இருக்கும்**
**இரக்கமும் பரிதாபமும் சூழத்**
**தெருவின் ஓரத்தே**
**புழுதியில் புரள்வது**
**விதி என உணர்வேன்.**

**அனைத்தும் கொடிதுதான்**

**இப்போது**
**வரையறை செய்யப்படாத**
**ஒரு போர்முனையில்**
**இரு புறமும் குழல் நீண்ட**
**துப்பாக்கிச் சனியனை**
**ஏந்துகிறேன்**

*( சேரன், நீ இப்பொழுது இறங்கும் ஆறு, பக். 164)*

இக்கவிதைகளின் கருத்துநிலைச் சார்பு பற்றி நான் அதிகம் விளக்க வேண்டிய தில்லை.

நான் தரவிரும்பும் இரண்டாவது உதாரணம் போர்க்காலத்தில் ஆயுதப் படைகளால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறை பற்றி இரண்டு பெண் கவிஞர்கள் எழுதிய இரண்டு கவிதைகள். முதல் கவிதை கலா எழுதிய அதி-கம் பேசப்பட்ட 'கோணேஸ்வரிகள்.' 1997ல் அம்பாறை மாவட்டத்தில் கோணேஸ்வரி என்ற பெண் ஆயுதப்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு குரூரமாகக் கொல்லப்பட்டதன் எதிர் வினையாக எழுதப்பட்ட கவிதை இது. இச்செய்தி தமிழ்ப் பத்திரிகைகளில் பரவலாக இடம்பெற்றது. வழமை போல் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் இதற்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. அப்பெண் கூட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டபின் அவரது பால் உறுப்பில் கைக்குண்டு வீசி குரூரமாகக் கொல்லப்பட்டதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. கலா மிகுந்த கோபத்துடன் இச்சம்பவம் பற்றித் தன்கவிதையில் எதிர்வினை ஆற்றியிருக்கிறார். கவிதை பின்வருமாறு.

**நேற்றைய அவளுடைய சாவு எனக்கு**
**வேதனையைத் தரவில்லை.**
**மரத்துப்போய்விட்ட உணர்வுகளுள்**
**அதிர்ந்துபோதல் எப்படி நிகழும்?**
**அன்பான என் தமிழச்சிகளே**
**இத்தீவின் சமாதானத்திற்காய்**
**நீங்கள் என்ன செய்தீர்கள்?**
**ஆகவே, வாருங்கள்**
**உடைகளைக் கழற்றி**
**உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்**
**என் அம்மாவே உன்னையும்தான்.**
**சமாதானத்திற்காய் போரிடும்**
**புத்தரின் வழிவந்தவர்களுக்காய்**
**உங்கள் யோனிகளைத் திறவுங்கள்**
**பாவம்**
**அவர்களின் வக்கிரங்களை**
**எங்கு கொட்டுதல் இயலும்.**

**வீரர்களே! வாருங்கள்**
**உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்**
**என் பின்னால்**
**எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்.**
**தீர்ந்ததா எல்லாம்**
**அவ்வளவோடு நின்று விடாதீர்!**
**எங்கள் யோனிகளின் ஊடே**
**நாளையச் சந்ததி தளிர்விடக் கூடும்**
**ஆகவே**
**வெடிவைத்தே சிதறடியுங்கள்**
**ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி**
**புதையுங்கள்**
**இனிமேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி**

**சிங்கள சகோதரிகளே!**
**உங்கள் யோனிகளுக்கு**
**இப்போது வேலையில்லை**

*(சரிநிகர், ஜூலை, 1997)*

இந்த எதிர்வினை மிகுந்த இனத்துவ உணர்வுசார்ந்தது என்பது வெளிப்படை. பாதிக்கப்பட்டவரின் பால்மையும், பால்நிலையும் (sextuality and gender) தெளிவாகவே இனத்துவ மயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பெண்கள் சிங்களப் பெண்களிலிருந்து வேறுபடுத்தப் பட்டுள்ளனர். பௌத்த மதமும் உள்ளிழுக்கப்பட்டுள்ளது. இனத்துவ ரீதியில் பிளவுபட்ட சமூகங்களில் இத்தகைய எதிர்வினை எதிர்பார்க்கக் கூடியது மட்டுமன்றி பொதுவாகக் காணப்படுவதுமாகும். எனினும், பாலியல் வன்முறை இன, மத எல்லைகளைக் கடந்தது. உதாரணமாக, 1971 இலும் 1989இலும் நடந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) கிளர்ச்சிகளின்போது ஆயிரக்கணக்கான இளம் சிங்களப் பெண்கள் இதே சிங்கள ராணுவத்தினாலும் பொலினாலும் கைதுசெய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, பாலியல் வலிலுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர் அல்லது கொல்லப் பட்டனர். தென் மாகாணத்தின் அழகுராணியான பத்மினி மன்னம்பேரியின் கதை பலரும் அறிந்ததே. அவள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, வீதியில் நிர்வாணமாக நடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டாள். 1980களில் சில தமிழ் விடுதலை இயக்கங்களில் பெண் உறுப்பினர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டமை பற்றிய சில கதைகளும் உண்டு. இக்கவிதை வெளிப்படுத்தும் வெளிப்படையான இனத்துவ உணர்வு இச்சம்பவத்தால் உணர்பு பூர்வமாகப் பாதிக்கப்பட்ட,

> **இனப் பிரச்சினைகளையும் மோதல்களையும் அர்த்தமுள்ள வகையில் தீர்க்க விரும்பினால், இனத்துவக் குழுமங்கள் மத்தியில் முறுகல் நிலையைத் தளர்த்த விரும்பினால், சமாதான சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க விரும்பினால் இனங்களுக்கிடையே சமத்துவம் உறுதிப்படத்தப்பட வேண்டும்.**

இனத்துவ உணர்வுடைய வாசகர்களை அதிகம் ஈர்த்ததில் ஆச்சரியம் இல்லை.

இதே போன்ற ஒரு சம்பவம் இதற்கு ஓராண்டுக்கு முன்னர் 1996ல் யாழ்ப்பாணத்தில் நடந்தது. இதில் பாதிக்கப்பட்டவர் கிரிஷாந்தி என்ற ஒரு பள்ளி மாணவி. ஒரு ராணுவ காவல் நிலையத்தில் அவள் தடுத்துவைக்கப்பட்டு பாலியில் வல்லுறவின்பின் கொல்லப் பட்டாள். இதுவும் தமிழ்ப் பத்திரிகைகளில் பெரிதும் முக்கியத்தவம் கொடுக்கப்பட்ட செய்தி. நம்பிக்கை ஊட்டும் இளம் பெண் கவிஞரான விநோதினி இச்சம்பவத்துக்கு எதிர்வினையாக ஒரு கவிதை எழுதியிருக்கிறார். இது கோணேஸ்வரிகள் கவிதையிலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு எதிர்வினை. இக்கவிதையின் தலைப்பு 'கிரிஷாந்தி', கோணேஸ்வரிகள் போல் பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர்தான். ஆனால் தலைப்பு பன்மையாக்கப்படவில்லை. தலைப்பில் மறைமுகமாக வெளிப்படுத்தப்படுவதைத்

தவிர கவிதைப் பிரதிக்குள் பாதிக்கப்பட்ட வரினதோ அல்லது குற்றம் இழைத்தவர் களினதோ இனத்துவம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. கவிதை இது:

**குருவிகள் பாடிய அந்த வேளையில்**
**சூரியன் கடலுக்குள் விழுந்த பொழுதில்**
**அவளது மரணம் யாருமறியாமல்**
**வெண் மணல் வெளிப்பரப்பில் நிகழ்ந்தது**

**பெண்ணாய்ப் பிறந்த போதில்**
**இத்தகு முடிவை**
**ஒரு கணமேனும் நினைத்திராள்**
**பெற்ற தாயும் அறிந்திராள்**

**முதலில் முட்களாய்க் குத்திய பார்வைகள்**
**பின் அவள் கைகளைப் பற்றின**
**அவர்கள் கொடுங் கரங்கள்**
**குரல் எழும்பவில்லை**
**புலன்கள் ஒடுங்கிச் சாய்ந்தாள்**
**உணர்வற்ற தேகத்தில்**
**ஊர்ந்து புணர்ந்தனர்.**
**அது நிகழ்ந்தது**
**வெண் மணல் வெளிப் பரப்பில்.**
**உப்புக் கரிக்கும் சுடுகாட்டின் ஓரமாகப்**
**புதைந்தாள்**
**பிறந்த போதில்**
**இத்தகு முடிவை**
**ஒரு கணமேனும் நினைத்திராப் பெண்**

இவ்விரு கவிதைகளையும் ஒப்பிடுவது பயனுடையது. இரு கவிஞர்களின் கருத்து நிலை, மனப்பாங்கு. கவித்துவக் கூருணர்வு என்பனவேறுபட்டவை. கருத்துநிலையைப் பொறுத்தவரை கலா வெளிப்படையாகவே தமிழ்த் தேசியவாதியாகத் தோன்றுகின் றார். பாதிக்கப்பட்டவரினதும் குற்றம் இழைத்தவர்களினதும் இனத்துவ அடையாளம் கலாவின் கவிதைப் பிரதியாக்கத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. பால்நிலை இரண்டாம் இடத்துக்கு அல்லது இரண்டாம் பட்சமானதாகத் தள்ளப்படுகின்றது. பால்நிலையும் பால் உறுப்புகளும் கூட இனத்துவ மயமாக்கப்பட்டுள்ளன. (தமிழ்ப் பெண்களின் யோனி, சிங்களப் பெண்களின் யோனி) இவ்வகையில் குறித்த சம்பவம் பற்றிய கவிஞரின் பார்வை வெளிப்படையாகவே இனத்துவச் சார்புடையது.

விநோதினி கருத்துநிலையைப் பொறுத்தவரை தேசியவாதி என்பதை விட பெண்ணியவாதியாகத் தோன்று கிறார். பாதிக்கப்பட்டவர், குற்றம் இழைத்தவர்களின் இனத்துவ அடை யாளத்தைஅவர்குவிமையப்படுத்தவில்லை. கிரிஷாந்தி என்ற தலைப்பு மட்டும் (மறை முகமாக) பாதிக்கப்பட்டவரின் இனத்துவ அடையாளத்தைக் குறித்துநிற்கின்றது. இனத்துவம் பற்றிய எந்தக் குறிப்பீடும் கவிதைப் பிரதியில் இல்லை. பாதிக்கப் பட்டவரின் பால்நிலையே கவிதையில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

## 5

இறுதியாக போர்க்காலத்தில் எழுதப் பட்ட, நேரடியாகவோ மறைமுகமாகவோ இனப்பிளவுக்கும் வன்மறைக்கும் எதிரான, வன்முறையின் குரூர இயல்பை அம்பலப் படுத்துகின்ற, மனிதனின் மனச்சாட்சியைத் தூண்டுகின்ற, சமாதானத்தையும் நல்லிணக் கத்தையம் ஊக்கப்படுத்துகின்ற சில கவி தைகளைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

'மனிதனின் அடையாளம்' என்ற எனது கவிதை இலட்சியத்திக்கும் யதார்த்தத்துக்கும் இடையிலான முரண்பாட்டைச் சித்திரிப்பதோடு இனத்துவப் பிளவுக்கு மத்தியில் மானுட இலட்சியத்துக்காக ஏங்குகின்றது.

கடவுள் என் கனவில் தோன்றினார்
சுவர்க்கத்தின் வாயிலையும்
நரகத்தின் வாயிலையும்
திறந்துவைத்துக் கொண்டு
நீயார் என்றார் கடவுள்
நான் மனிதன் என்றேன்
உன் பெயர் என்ன என்றார்
மனிதன் என்றேன்
உன் இனம் என்ன என்றார் மீண்டும்
மனித இனம் என்றேன்
கடவுள் கடைசியாகக் கேட்டார்
உன் மதம் என்ன என்று
மனிதம் என்றேன் நான்

கடவுள் ஒரு புன்னகையுடன் கூறினார்
சரி நீ இனி சுவர்க்கம் புகலாம் என்று

அந்தோ,
என் கனவு கலைந்தபோது
நான் நரகத்தில் கிடக்கக் கண்டேன்.

சோலைக்கிளியின் 'எனது இனத்துப் பேனையால் அழுதது' என்ற கவிதை சமூகத்தின் இனத்துவப் பிளவு பற்றிய அவரது வெறுப்பை வெளிப்படுத்துவதோடு அவரது வழமையான உத்தியான இயற்கை பற்றிய படிமங்களைப் பயன்படுத்தி அதைக் கேலிசெய்கின்றது.

நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்குபோட்டுப் பகிர்ந்துகொள்
வெள்ளிகளை எண்ணு
இன விகிதாசாரப்படி பிரி
நாகரிக யுகத்து மனிதர்கள் நாம்

கடலை அளந்து எடு
வானத்தைப் பிளந்து துண்டாடு
சமயம் வந்தால்
காற்றைக் கடத்து
அல்லது
சூறாவளியைக் கொண்டு சகோதர இனத்தை அழி

அங்கே
செவ்வாய்க் கிரகத்தில் நம்மில் ஒருவன் இறங்கட்டும்

எறும்புக்கும்
இன முத்திரை இடு
மரத்திற்குக் கூடச்
சாதி சமயத்தைப் புகட்டு
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து
பல்லியும் பூச்சியும் நத்தையும் தவளையும்
கத்தும் ஒலியிலெல்லாம் பேதங்கள் தொனிக்கட்டும்
வா
வண்ணத்துப் பூச்சியே
இது உன்னுடைய இனத்து மலர்தான் நுகர்

பாவம்
மனிதன் பிரிந்த விதம்
நான்கூட இந்தக் கவிதை எழுதுகையில்
ஒரு பேனை மறுத்தது
"உனது இனத்துப் பொருளல்ல நானென்று"
ஓ.. அது வேறு இனத்துப் பேனை.

சமகால இலங்கைத் தமிழ்க் கவிதையில் ஒரு முக்கியமான ஆளுமையான சண்முகம் சிவலிங்கம் தனது வீழ்ச்சி என்ற கவிதையில் ஒரு உருமாற்றம் பற்றிய கதையை, துப்பாக்கிக் கலாசாரத்தின் எதிரே, யுத்தத்ததால் சிதைந்த சமூகச் சூழலில் எவ்வாறு ஒரு மனிதன் மண்புழுவாக உருமாற்றம் அடைகிறான் என்பதைக் காட்டுகிறார். துப்பாக்கியின் முன் மனிதனின், மனித விழுமியத்தின் வீழ்ச்சியைச் சொல்லும் கவிதை இது.

காய்ந்த சருகுபோல் ஒரு மண்புழு
ஊர்ந்துகொண்டிருந்தது படியோரம்.
நான் மனிதன் என்ற இரக்கம் மீதூர
அதனைப் பார்த்துவிட்டுப் போனேன் ஒருகணம்.
சுர் என்று சருகு இரைதல்போல் கேட்டது,
திரும்பிப் பார்த்தேன–
மண்புழு வாலில் நின்றது.

வாயைத் திறந்தது கூரிய பல்தெரிய.
நாக்கு எங்கே என்று நினைக்கையில்,
நாக்கிலிருந்து தீச்சுவாலை பறந்தது.
மண்புழுவுக்குப் பல் ஏது? நாக்கு ஏது?
நினைக்கையில் தெரிந்தது மண்புழு
உருமாறிவிட்டதென்று
எனினும் அஞ்சவில்லை.
குனிந்தேன் தடி எடுக்க.
நிமிரும்போது
மண்புழுவின் கையில் துப்பாக்கி இருந்தது.
அல்ல,
ஒரு பாம்பின் கைத் துப்பாக்கி.
அதுவும் அல்ல,
ஒரு சிப்பாயின் கைத் துப்பாக்கி.
நான் குனிந்து,
பாம்பாய் நெளிந்து
காய்ந்த சருகின் மண்புழு ஆகி
ஊர்ந்துகொண்டிருக்கிறேன் படியோரம்.

இக் கட்டுரையை எனது கவிதைப் பிரகடனம் ஒன்றுடன் முடிக்க விரும்புகிறேன். இலங்கையின் இன மோதல் அதன் உச்சங்களுள் ஒன்றை எட்டிய 1990ல் நான் இதை எழுதினேன். இது சமத்துவம், சமாதானம், சுதந்திரம் பற்றியது. வெவ்வேறு இனக்குழுமங்களின் சமத்துவம் சமாதானத்துக்கு ஒரு முன்நிபந்தனை என்பதையும், சமாதானம் சுதந்திரத்துக்கான முன் நிபந்தனை என்பதையும் அது பிரகடனம் செய்கிறது. இந்த முன் நிபந்தனைகள் குடும்பம், சமூகம், நாடு, உலகம் அனைத்துக்கும் பொதுவானது. சௌஜன்ய உறவுகளைப் பேணுவதற்கு இவை அடிப்படை.

இனப் பிரச்சினைகளையும் மோதல்களையும் அர்த்தமுள்ள வகையில் தீர்க்க விரும்பினால், இனத்துவக் குழுமங்கள் மத்தியில் முறுகல் நிலையைத் தளர்த்த விரும்பினால், சமாதான சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க விரும்பினால் இனங்களுக்கிடையே சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். 'என் கடைசி வார்த்தைகள்' என்ற தலைப்பிலான எனது கவித்துவப் பிரகடனம் இதுதான்.

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்

எங்கு சமத்துவம் இல்லையோ
அங்கு சமாதானம் இல்லை
எங்கு சமாதானம் இல்லையோ
அங்கு சுதந்திரம் இல்லை

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்

நீ என் சமத்துவத்தை மறுக்கிறாயா?
நீ உன் சமாதானத்தை இழந்தாய்
உன் சுதந்திரத்தை இழந்தாய்

நீ என் சமத்துவத்தை அழித்திட
துப்பாக்கியை நீட்டுகிறாயா
துப்பாக்கி சமாதானத்தின் எதிரி
சுதந்திரத்தின் எதிரி

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்

வான் அதிரக் கூவுங்கள் மனிதர்களே
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்

(இந்திய சாஹித்திய அக்கடமி 'வரலாற்று முதுசமும் சமகாலக் கொமன்வெல்த் இலக்கியமும் என்ற தொனிப்பொருளில் 1910 ஒக்டோபர் மாதம் புது டில்லியில் நடத்திய சர்வதேச மாநாட்டில் படிக்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரையின் சற்றுச் சுருக்கிய தமிழ் வடிவம்.)

# பெண்கள் கவிதைகளில் போர் பற்றிய விசாரணையும் விமர்சனமும்

பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு



இலங்கையில் தமிழில் பெண்கள் தமது கவிதைகளைப் "பெண்கள் கவிதைகள்" என்ற உணர்வுடன் வெளியிட ஆரம்பித்தது 1980களிலாகும். 1986இல் வெளிவந்த 'சொல்லாத சேதிகள்' என்ற பெண்களின் முதலாவது கவிதைத் தொகுதி இந்த உணர்வின் ஒரு குறியீடாகும். அந்த ஆண்டிலிருந்து இன்று வரை ஈழத்துப் பெண்கள் கவிதைத் தொகுதிகள் பல வெளிவந்துள்ளன. பல புதிய கவிஞர்கள் தமது அடையாளங்களைத் தீர்மானமாக நிலைநிறுத்தியுள்ளனர்.

1980களிலிருந்து தொடர்ந்த முப்பதாண்டுக்காலம் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அரசின் இராணுவ நடவடிக்கைகளும் அதற்கு எதிரான தமிழ்த் தேசிய இயக்கங்களின் மாற்று இராணுவ நடவடிக்கைகளும் போர் நிலைமைகளும் அதிகரித்த காலகட்டமாகும். 1983 ஜூலையில் நிகழ்ந்த தமிழருக்கெதிரான மோசமான வன்முறை, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரசுக்கு எதிரான ஆயுதத்தாக்குதல்கள், 1987இல் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தம், 90, 91 இரண்டாம் ஈழப்போர், 95, 2006 யுத்தம் எனத் தொடர்ந்தன. இறுதியில் 2009 மே போரின் அவலமும் முடிவும் போரின் விளைவுகள் மக்கள் அனைவரையுமே வெவ்வேறுபட்ட விதத்தில் பாதித்தன.

உயிரிழப்பு, சொத்து அழிவு, மக்கள் தம் வாழிடங்களிலிருந்து இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுதல் எனப் போரின் விளைவுகள் மக்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டன.போர்க்கால வாழ்க்கை பல்வேறு வலிகளையும் வேதனைகளையும் கூடவே சவால்களையும் உயிர்பிழைப்பதற்கான அயராத எத்தனங்களையும் சுமந்துள்ளது. அவலங்களுக்கும் அடக்குமுறைக்கும் முகம் கொடுத்த காலகட்டத்தில் பெண்கள் நெஞ்சுரம் பெற்றும் வளர்ந்தனர். சவால்களைச் சந்திக்கும் தன்னாற்றல் பெற்றனர். பெண்கள் அமைப்புக்கள் பல உருவாகின. பெண்ணிலைவாத உணர்வு பரந்து வேர் கொண்டது. வீட்டின் எல்லைக்குள் தமது பெரும் பொழுதுகளைக் கழித்த மத்தியதரவர்க்கப் பெண்கள் கூட பொது வெளிக்குள் அதிகளவு செயற்படத் தொடங்கினர். சமாதானக் கோரிக்கைகளை முன்வைத்தனர். போரையும் அரசியல் வன்முறையையும் நிறுத்துமாறும் ஜனநாயக விழுமியங்களைக் கைக்கொள்ளுமாறும் அரசையும் ஏனையோரையும் கோரினர். ஆணாதிக்கமும் இராணு வவாதமும் பெண்களை அடக்குவதில் கைகோர்த்து நிற்பதை எடுத்துக் காட்டினர். தனி நபராகவும், அமைப்பாகவும் பெண்நிலைத் தற்துணிவுடன் செயற்பட முன்வந்தனர்.

இத்தகைய ஒரு கால கட்டத்தில்தான் பெண்களும் அதிக அளவில் கவிதையாக்கத்

தொடங்கினர். இவ்வகையில் இப் போர்க் காலம்பற்றிய அவர்களது மனஉணர்வுகளும் விசாரணையும் விமர்சனமும் இக் கவிதை களில் இடம் பெறுவதில் வியப்பில்லை. இவற்றைப் போர் பற்றிய பெண்களின் பார்வைகளும் பதிவுகளும் என்பேன். இந்தப் பதிவுகளையும் பார்வைகளையும் சில குறிப்பிட்ட வகைமைகளாக அடை யாளம் காண முடியும்.

போருடன் தொடர்பான ஒன்று மரணம். பல்வேறு வகையில் இந்த மரணங்கள் சம்பவிக்கின்றன. போரிடுவதால் ஏற்படும் மரணம்,அது போரை நடத்துவோரால் மரணமாக அறிவிக்கப்படுவது, அரசும் அரசுக்கு எதிராகப் போரிடும் அமைப்பும் தமது இராணுவத்தினரையும் போராளி-களையும் வீரர்களாக, வீராங்கனைகளாக உருவாக்குகின்றனர். இராணுவத்தில் சேரு வோருக்குச் சம்பளத்துடன் பெரும் சன் மானங்கள் வழங்கப்படுகின்றன. யுத்தத்தில் இறக்க நேரிட்டால் குடும்பத்துக்குப் பெருந்தொகையான இழப்பீட்டுப் பணம் தருவதாக வாக்குறுதிகள் அளிக்கப் படுகின்றன. போரிட்டு இறந்தோருக்கு நினைவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அதன் மூலம் மேலும் இளைஞர்களை யுத்தத்துக்குள் இழுக்கின்றனர். போர் மூலம் கட்டி எழுப்பப்படும் வீரம் - வீரர் என்ற படிமம் எப்படியிருந்த போதிலும் மரணம் தரும் வலி யதார்த்தமானது. சொந்த இழப்பு, துயர் என்பவற்றுடன் பொதுவான துயரும் அடங்குகிறது. சாவை விவரித்தலின் மூலம் இந்தத் துயர் வெளிப்படுகிறது.

போரிலும் தாக்குதலிலும் அகப்பட்டு எதிர்பாராத கணத்தில் இறந்துபோகும் பொதுமக்களின் மரணங்களையும் அவற் றின் அபத்தமான தன்மையையும் நாமக-ளின் **“யதார்த்தம்”** என்ற கவிதை எடுத்துக் காட்டுகிறது. ஒரு கணத்தில் யாருமே எதிர்பாராமல் நடக்கும் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு, கண்ணி வெடிகள் ஆகியவற்றில் அகப்பட்டு இறந்து போதல் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் ஒரு பொது யதார்த்தமாகக் காணப்பட்டது.

இத்தகைய மரணங்கள் ஏற்படுத்தும் வலியை விட இந்த மரணங்கள் மிகச் சாதாரணமாகவே மாறிவிட்டதும் மக்கள் அதனால் பாதிக்கப்படாதவர்கள் போல் “வழமைக்கு” நிலைமைகள் திரும்புவதும் மரணத்தைவிடக் கொடுமை யானதும் வேதனையைத் தருவதுமா-கும். தொடர்ந்து நீண்ட காலமாக ஒரு சமூகத்தில் நிகழும் வன்முறைகள் சமூ கத்தில் ஒரு உணர்ச்சியின்மையைத் தோற்று வித்துவிடும் என்பர். எந்த விடயத்திற்கும் எதிர்வினை புரியாது உணர்விழந்து போகும். சமூகத்தின் எதிர்காலம் மந்தமாகிவிடும் அபாயம் உள்ளது. தேநீர்க் கடையில் இருந்தவர்கள், பொருட்கள் வாங்க வரிசை யில் காத்து நின்றவர்கள் எல்லோருக்கும் முன்பாக நிகழ்ந்த ஷெல் வெடிப்பில் ஒருவன் இறந்தான்.

**“.......**
**எல்லோரையும் தாண்டி**
**அவனுக்கு முன்பாய்**
**நிகழ்ந்த வெடிப்பு**
**மேலே விமானங்கள் இல்லை**
**ஷெல் தான்**
**..................**
**அவன்**
**ஒருமுறை மேலெழும்பிக்**
**கீழே விழுந்தான்**
**எந்தச் சத்தமுமில்லை**
**கத்த நினைப்பதற்குள்**
**அவன் இறந்திருக்க வேண்டும்**
**................**
**அவன் மட்டும்**
**தனியாகக் கிடந்தான்**
**கையொன்று**
**வீதியின் மறுகரையில்**
**விரல்களை நீட்டியபடி**
**யாரையோ**

**குற்றஞ் சாட்டுவதாய்**
**சில நிமிஷங்கள் தான்...”**

பிறகு அம்புலன்ஸ் வந்து யாவற்றையும் அள்ள, மீதியிருந்த அடையாளங்களையும் வீதியில் போன வாகனங்கள் துடைக்க, எதுவுமே நிகழாத மாதிரி சனங்கள் விரைந்து கொண்டிருந்தார்கள் எனச் சொல்கிறது கவிதை. மனித மனம் எந்த மரணத்தைக் கண்டும் திடுக்கிடுவது, பயப்படுவது, வேதனைப்படுவது இயல்பு. அந்த மனிதத்தின் இயல்பையும் யுத்தம் தின்று தீர்த்துவிட்டது. இராணுவ வாதம் மனித இயல்புகளைச் சீரழிக்கச் செய்து விட்டது என்பது இதில் பதிவாயுள்ளது.

மரணத்தின் வலியும் இழப்பின் வேதனையும் பற்றிய பெண்போராளிகளின் கவிதைக் குரல்களை **“எழுதாத உன் கவிதை”** தமிழீழப் பெண்கள் கவிதைகளின் அணிந்துரை சரியாகவே அடையாளம் கண்டுள்ளது.

“பெண் போராளிக் கவிஞர்கள் பாடியிருப்பதால் போரின் புகழ், போர்த் தலைவன் புகழ், போர் வெற்றியின் புகழ் மட்டுமே இருக்கும் என ஒரு முற்சாய்வு எடுத்திட வேண்டாம்-இவை சொல்லும் செய்தி வலியது, வலியைத் தருவது...”

பெண் போராளி ஒருவரும் பெண்களின் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையொன்றில் இதே விடயத்தைச் சற்று மனத்தாங்கலுடன் குறிப்பிடுகிறார்.

“பார்வைக்குப் படைத்துறை வீரர்களாகத் தோற்றுகின்ற, செயற்படுகின்ற இவர்களின் ஈரம் நிறைந்த இன்னொரு பக்கத்தை நானறிவேன்.முன்னேறி வருகின்ற எதிரிப் படைகளை முறியடிப்பவர்களாகவும் நிலம் மீட்பவர்களாகவும் மட்டும் இருக்கவில்லை என்பதையும் நானறிவேன்”

மரணத்தின் பிரிவு ஏற்படுத்தும் வலி ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வன்னியிலிருந்து வெளியாகிய பெண்களின் கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் களப் போராளிகளான பெண்களின் கவிதை களில் மரணம் தரும் வலி மிக வலுவாகவே வெளிப்பட்டது குடும்பங்களையும், உறவு-களையும் நீங்கி அதிக தொடர்புகளற்று முகாம்களில் வசிக்கும் போராளிகளது உறவாக அவர்களது சக போராளி களே விளங்கினர். அவர்களுக்குள் மிக நெருக்கமான உறவுகள் உருவாகியிருந்தன. ஆனால் போரில் கணநேரத்தில் இத்தகைய நெருக்கத்திற்குரியவர்களை இழந்து விடுவது பற்றிய சோகம் கவிதைகளின் விஷேட பொருளாகியுள்ளது.

**“அன்பான தோழி**
**நீயும் இல்லை**
**உனக்கு கல்லறையும் இல்லை**
**கண்ணீர் விட்டு அழமுடிந்தும்**
**பெயர் சொல்லி அழமுடியவில்லை**
**தோழி!**
**உன் சாதனை உன்னதம்**
**உயிரிலும் மேலான உன் தோழிக்கும்**
**தெரியாமல் நீ சென்றாய்**
**உயிரைத் துறந்த அக்கணம்**
**உடல் சிதறிய அந்நேரம்**
**அறியேன் தோழி..**

இங்கு கவிஞர் குறிப்பிடும் மரணம் தற்கொலைப்போராளியினுடையதாகும். தற்கொலைப் போராளிகளின் வாழ்வு இரகசியமானது. அவர்களது தாக்குதல் நடவடிக்கை எவருக்கும் தெரி வதில்லை. இறந்த பின்பும் அதற்கு உரிமை கோரப்படுவதோ போராளியின் பெயர் உடனடியாக வெளியிடப்படுவதோ இல்லை. போராளிகளுக்குள் சிறு வட்டத்துக்குள் தெரிந்தாலும் வெளியில் சொல்லப்படுவதில்லை. விடை பெறாத இப்பிரிவுகளின் வெளியே சொல்ல முடியாத ஊமைத் துயரங்களுக்கு ஒரு வெளிப்பாட்டு வழியாக மேற்கூறியது போன்ற கவிதைகள் அமைகின்றன.

**பேரதிர்வுகள் கிளம்பிய காலையின்**
**சிதிலமாக்கப்பட்ட எனது**
**வாழ்க்கைக் கனவுகளோடு**
**இன்னும் உயிரள்ளிப் போகின்ற**
**கனத்த நினைவுகளின் மீதத்தில்**
**நீள்கிறது வாழ்க்கை..”**

என்று சுதாமதியின் இக்கவிதை, போரிடலின் அவலத்தைப் பதிவு செய்கிறது. தமது மரணம் பற்றிய விசாரணையும் போராளிப் பெண்களின் கவிதைகளில் காணக்கூடிய இன்னோர் அம்சமாகும். தமது அன்னையருடன் மரணம் பற்றி உரையாடு-வதாக இக்கவிதைகள் பெரும்பாலும் அமைந்துள்ளன.

**நாளை திரும்பி வரா**
**உன் மகளை எண்ணிக்**
**கவலைப் படாதே**
**என் மறைவின் பின்னர்**
**புதிய தோழர்கள்**
**அந்த வைகறைக்காய்**
**புறப்படுவார்கள்**
**புதிய விடியலை**
**வரவேற்கும்**
**அதிகாலைப் புஷ்பங்களாய்**
**மெல்லிய பனித்துளியின்**
**முகத்தின் பின்னால்**
**நாம் முகையவிழ்ந்து**
**தென்றலின் தடவலில்**
**முகமலர்ந்தாடுவோம்**
**அப்போது நீ இருந்தால் உற்றுப்பார்**
**உன் செல்ல மகளின் முகம்**
**சிரித்தபடியே தெரியும்**

இவ்வகையில் பெண்களது இக்காலக் கவிதைகளின் பொது அம்சங்களில் ஒன்றாக. மரணத்தின் வேதனை உள்ளது. பெண்கள் என்ற வகையில் ஒரே வகையிலான பார்வையை ஒரு பொது அம்சமாகக் காண லாம். ஆண்மையின் ஒரு அம்சமான வெற்றி, இறுமாப்பு, தற்பெருமை ஆகியவற்றுக்கு மாற்றான குரல்களாகவே இத்தகைய கவி தைகள் உள்ளன. இனத்தால் இஸ்லாமி யராகவும் இலங்கையின் தென் பகுதியில் வாழ்பவருமான பஹீமா ஜெகானின் கவிதை யிலும் போரில் இறந்து போகும் போரா-ளிகளின் மரணம் பற்றிய வேதனை மிக உருக்கமான வகையில் அமைந்துள்ளது. அவரது ‘ஒரு கடல் நீருற்றி’ என்ற கவிதை பின்வருமாறு சொல்கிறது.

**“................**
**அலையெழும்பும் கடல் பரப்பினில்**
**உனக்கான பணி முடிக்கவென**
**விடைபெற்றுப் போனாய்**
**வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை!**
**ஆரத் தழுவிட நீ விரும்பவுமில்லை**
**வெளியே பெய்த மழை என் கன்னங்களில்**
**வழிந்தோட**
**மழைப்புகாரினூடே மறைந்து போனாய்!**
**திரைகடல் சென்ற திரவியமானாய்!**
**ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து**
**தணிந்தது .... நீ**
**திரும்பி வரவே இல்லை**
**......**
**சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே**
**இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்**
**ஒரு கடல் நீருற்றி நிரப்பிடவோ?”**

(பஹீமா ஜகான் - 2007)

கடற் தாக்குதலில் ஈடுபட்டு கடலில் கரைந்து போகின்ற போராளி காதலனின் மரணமும் பிரிவும் ஏற்படுத்திய ஆழமான சோகமும் மரணத்தின் வெறுமையும் இக் கவிதையில் கவிந்துள்ளன.

போரினாலும் அரசியல் வன்முறையி னாலும் ஏற்படுகின்ற மரணங்களும் கொலைகளும் மனித உறவுகளின் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பெண்களுடைய கவிதைகளில் நண்பர் களையும் காதலர்களையும் பிரியும் துன்பம் பொதுவாகத் தெரிகிறது. காத லைத் துறந்து போராளியாவதும் மரணம் அடைவதும் (பெரும்பாலும் ஆண்கள்) பெண் மனதில் ஏற்படுத்துகின்ற ஆழமான ஊமைக் காயங்களை வினோதினியின்

'கெனடி' என்ற கவிதை காட்டுகிறது. அது மாத்திரமல்ல, இராணுவத்தாலோ மாற்று இயக்கங்களாலோ குறி வைக்கப்பட்டு தேடப்பட்ட போது தேசம் நீங்கி அன்னிய நாடுகளில் தஞ்சமடைவதால் ஏற்படும் பிரிவுகள், அவை தரும் வேதனைகள் என்பனவும் கவிதைகளில் பதிவாகியுள்ளன.

**"அடைய முடியாத் தொலைவும் நீ**
**தீண்ட முடியாத உறவும் நீ**
**..................**
**அதீதப் புனைவுகளால் சித்தரிக்கப்பட்டுத்**
**தோற்றுப் போனது கடந்த காலம்**
**அனைத்தின் மீதும் கேள்வியெழுப்பி**
**வாழவிடாமற் செய்துள்ளது நிகழ்காலம்**
**யார் யாராலோ விதிக்கப்பட்டதை எனக்கு**
**ஏற்று வாழும்படியாயிற்று**
**திணிக்கப்பட்டதை மறுத்ததால் உனக்குத்**
**தொலைதூரம் போகும்படியாயிற்று**
**எமக்கிடையே தேசதேசாந்திரங்களும்**
**கடல்களும் காடு மலைகளுமாய்**
**..................**
**எனக்கொரு அழைப்பு தருவாயா?**
**தங்க எங்கும் இடமற்று நீ வாழும் தேசம் வரை**
**நீண்டு நீண்டு வருகின்றன என் கனவுகள்"**

எனப் பஹீமா ஜகானின் இன்னொரு கவிதை இக்கையறு நிலையைப் பதிவு செய்கிறது.

பெண்கள் தமது உரிமை, தமது சுயம், தமது உணர்வுகள் என்று பேசியதுடன் கூட நாட்டு நிலை பற்றியும் சமூக நிலை பற்றியும் தமது கருத்துக்களை கவிதைகளூடாக முன்வைத்தனர். சொல்லாத சேதிகள் தொகுதியில் சன்மார்க்சா, சிவரமணி, செல்வி ஆகியோரின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நிலைமைகள் தொடர்பான எதிர்வினையை முன்வைப்பதுடன் இப் போக்கு ஆரம்பிக்கிறது. இராணுவ அடக்குமுறை ஏற்படுத்திய உணர்வுகள், மனப் பதிவுகளிலிருந்து இனத்துவ அரசியல் பற்றிய விமர்சனம் வரை இக்கவிதைகள் உரையாடின.

சன்மார்க்காவின் ஒரு தாயின் புலம்பல் என்ற கவிதை தமிழர் தரப்பு அரசியல் பற்றி விமர்சித்த ஆரம்பகாலப் பெண் கவிதை எனலாம்.

மொழிவழித் தேசியத்தை வளர்த்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலையும் அரச இராணுவ ஒடுக்குமுறையையும் ஒருசேர ஒரேதளத்தில் வைத்து விமர்சிக்கிறது அக்கவிதை.

ஏழைத்தாயின் குரலில் இவ்விமர்சனத்தை அவர் முன்வைக்கிறார்.

தனிநாடு கேட்ட 1972 வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் வர்க்கச் சார்பையும் வர்க்க நலனையும் அக்கவிதை மெலிதாகத் தொட்டது. அன்றைய கால கட்டத்தில் அரசியல் தலைவர்கள் பாதுகாப்பாக இருக்க இயக்கங்களில் சேர்ந்த ஏழை இளைஞர்களே பயங்கரவாதிகள் எனச் சுட்டப்படுவதும் சிறைப் பிடிக்கப்படுவதும் யதார்த்தமாய் இருந்தது. ஒரு குடும்பத்தில் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்தால் அந்தக் குடும்பமே இராணுவத்தினரின் மிரட்டல்களுக்கும் சித்திரவதைக்கும் ஆளாவது சாதாரணமான சம்பவமாகும். இதனால் குடும்பத்தினரின் அங்கத்தவர் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்திருந்தால் அதனை இரகசியாக வைத்திருப்பதும் அப்படி ஒருவர் குடும்பத்தில் இல்லை என மறுப்பதும் பொதுவான ஒரு நடவடிக்கையாகும். குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறு நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட தாக்குதலில் ஈடுபட்டோ அகப் பட்டோ மரணித்தால் மரணித்தவரை தமது புதல்வன் என்றோ புதல்வி என்றோ கூறாதிருப்பதும் நிகழ்ந்தது. மரணச்சடங்கு நடத்த முடியாமல் பொதுவைத்தியசாலைகளில் கொடுக்கப் பட்ட சடலங்களை உரிமை கோரவோ, அடையாளம் காட்டவோ முடியா-மல் ஊமைத் துயரத்தை அனுபவித்த குடும்பங்கள் ஏராளம்.

“தெருப் புழுதியில் உன் உடம்பு
முதுகெல்லாம் இரத்த வெள்ளம்
நீதானா எனக் குனிந்து பார்த்தேன்
“ஓம் ராசா நீயே தான்”
“ஏன் ஆச்சி அழுகிறாய்”
கூடி நிற்கும் சனம் கேட்க
“பெடியனைத் தெரியுமா உனக்கு?”
மிரட்டுகிறான் காக்கிச்சட்டை
அவன் கையில் துவக்கு வெயிலில் மின்னுகிறது
தெரியாது என்று தலையசைத்தேன்
நான் பெற்ற முதல் முத்தை
..............
குருஷேத்திரத்தில் கர்ணன் விழ
ஐயோ மகனே என்று குந்தி
ஓடிச் சென்று அணைத்தாளே
ஐயோ ராசா நான் பாவி
என் பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்
..........
தனிநாடு கேட்டு மேடையேறி
கனக்கக் கதைத்தவர்கள்
அயல்நாட்டில் விருந்துண்டு
பாதுகாப்பாய் இருக்கையிலே
ஊருக்காய் மடிந்த பிள்ளை
தெருப்புழுதியில் கிடக்கிறான்”
..................

சன்மார்க்காவின் ஒரு தாயின் புலம்பல் என்ற இக் கவிதை ஒரு தாயின் வேதனை, விரக்தி, அரசியல் விமர்சனம் ஆகியவற்றை முன்வைக்கிறது. நேரடியாக யுத்தம் வேண்டாம் என்ற பிரகடனம் செய்வதிலிருந்து வேறுபட்டு மிக நுணுக்கமாக அதனைக் கட்டுடைத்து யுத்தத்துள் இருக்கும் அடக்குமுறை அதிகாரம் என்பவற்றையும் காட்டுகிறது. இலங்கை என்ற தேச எல்லைக்கு அப்பாலும் நிகழும் வேறு போர்கள் பற்றியும் பொதுவான இராணுவ வன் செயலுக்கு எதிராகவும் கூட பெண்கள் கவிதை பேசியது.

ஔவையின் தாயின் குரல் என்ற கவிதை போர் பற்றி மாத்திரம் அல்லா

# தொலைந்த வாழ்வு

முரளீஸ்வரன். ஆர்

ஒரு முனிவனுக்கேயான
பற்றறுத்தலுடன்
வன்னியில் இடம் பெயர்ந்தனர்
மக்கள்.
மீண்டும்
வாழ்தலுக்காய் வரம் கேட்டு
நின்றனர்.

குடிசைகள் பூத்த மண்ணில்
ஒரு விதவைத்தாய்
இருண்மை சுவாசித்து கைகளைத் தாடைகளிடமும்
கண்களை வானத்திடமும் கொடுத்து.

அவளின் மகன்
செம்மணியில் புதைந்து
கிடப்பதாய் சொன்னது
செய்தி.
உறவுகள் –
இராமேஸ்வரக்கடலில்
பணத்தை மாலுமியிடமும்,
உயிரைக்காலனிடமும்
கொடுத்ததாய்
யாரோ ஒருவன் சொல்லிப்
போயினான்.

இன்னும் ஏன் அவள்
வானத்தைப் பார்த்திருக்கிறாள்?

மண்ணைப் பார்த்திருக்கலாம்
மகன் தொலைந்த
இடமென்று.

கடலைப் பார்த்திருக்கலாம்
உறவுகள் தொலைந்த
இடமென்று.



பிறகேன் வான் பார்த்தாள்?
தன் வாழ்வு தொலைந்த
இடமென்றா?

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் தொகுப்பிலிருந்து...)

மல் மண்ணுக்காகப் போர் என்ற கருத்தாக்கத்தையும் நிராகரித்துவிடுகிறது. போரின்போது தேசமும், நிலமும் பெண்ணாகவும் தாயாகவும் புனைவு செய்யப்படுகிறது. தாய் நாட்டுக்காக உடல் பொருள், ஆவியின் அர்ப்பணிப்புப் பற்றிப் பேசப்படுகின்றது. தாய் நாட்டுக்காகப் போரிட தனயர்களைத் தரும் தாய் வீரத் தாய் எனப் போற்றப்படுகிறாள். தமிழ் இலக்கியத்தில் வீரத்தாய் படிமம் சங்ககாலம் தொட்டு பிரபல்யம் பெற்றது. போரில் கணவனும் உறவினரும் இறந்து போக எஞ்சியிருந்த இளம் மகனை போருக்கு அனுப்பிய புறுநானூற்றுத் தாய்மார்கள் பற்றி இக்காலத்தில் அதிகம் பேசவும் எழுதவும் பட்டது. இலங்கையில் தமிழர் தமது மொழியுரிமைப் போராட்டங்களின் போதும், தனிநாட்டுக் கோரிக்கை அடிப்படையிலான போராட்டங்களிலும் இந்த வீரத்தாய் படிமத்தைத் தாராள-மாகப் பயன்படுத்தியுள்ளார். தமது ஐதீகங்களில் இருந்து சிங்கள இனவாதமும் பயன்படுத்தியுள்ளது. துட்டகாமினியின் அன்னை விகாரமாதேவி பற்றிய கதை மேடைப் பிரசங்கங்களிலும், பாடல் களிலும், பாடப்புத்தகங்களிலும் இடம் பெற்றது. தாய் நிலத்துக்காகப் புதல்வர்களை - புதல்விகளைத் தரும்படி பெற்றோர்கள் கேட்கப்பட்டனர்- வற்புறுத்தப்பட்டனர். இந்தப் பின்னணியிலேயே “பிள்ளை இராணு வம்” என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

இனத்துவப் போராட்டம், தேசி யம், மண்மீட்புப் போர், நிலத்துக்கான போர் என்ற கருத்தாக்கங்களையெல்லாம் நிராகரிப்பதாக ஔவையின் கவிதை அமை-கிறது.

கொலைகளும் மரணமும் யாவற்றுக்கும் முடிவாயிருக்கையில் ஒரு தாயாக நின்று புதல்வர்களைக் கேட்காதே என்கிறது இக்கவிதை. இரு தாய்களை எதிர் நிலையில் நிறுத்துகிறார் ஔவை.ஒரு தாய் நிலம், இது உருவாக்கப்பட்ட தாய் படிமம். மற்றது உண்மையான, உயிருடனும் உணர்வுடனும் உள்ள தாய் யுத்தத்தில் பிள்ளைகளைப் பறிகொடுக்கும் தாய், வீரத்தாய் அல்ல. உண்மையானதாயின் வார்த்தைகள்:

**“போராட என்னை அழைக்காதே**
**நானொரு தாய்**
**எனது புதல்வர்களையும் கேட்காதே**
**இரக்கமற்ற தாய் நிலமே**
**கொல்லப்பட்ட என் புதல்வர்களின் இரத்தம்**
**இன்னும் காயவில்லை**
**..................**
**இன்னுமா தாய்நிலம் புதல்வர்களைக் கேட்கிறது?**
**கடித்துக் குதறி**
**நெரித்தும் எரித்தும்**
**வடக்கிலும் தெற்கிலும் உலகெங்கிலும்**
**எத்தனை குஞ்சுகளை விழுங்கிவிட்டாய்**
**இன்னும் அடங்காதோ உன் பசி”**

இவ்வாறு தாயின் அனுபவத்தில் யுத்தத்தின் கொடூரத்தை மாத்திரமல்ல, அதன் பின்னாலுள்ள கருத்தியலையும் வெளிக்காட்டும் வகையில் கவிதையின் அமைப்பும், பொருளும் வடிவமைக்கப் பட்டுள்ளன. ஔவையினுடைய தாயின் குரல் என்ற இக்கவிதை யுத்தத்தை சபிக்கிறது. பிள்ளைகளை வாழ்த்துகிறது.

**விண்ணேறி மண் தொட்டு**
**மீண்ட பின்னும்**
**சமாதானம் வேண்ட யுத்தம் தேவையோ?**
**பற்றி எரிக ஆயுத கலாசாரம்!**
**என் மழலைகளை விடு, நாளை உலகம்**
**அவர்களுக்காய் மலரட்டும்”**

யுத்தம் பற்றிய விமர்சனம் மிகப் பூடகமாக, சிவரமணியின் கவிதைகளில் வெளிவந்துள்ளது. யுத்தகால இரவொன்றின் நெருக்குதல் என்று தொடங்கும் அவரது கவிதை 1989இல் எழுதப்பட்டது. எண்பதுகளின் மத்திய பகுதியிலிருந்து தமிழ் தேசிய இயக்கங்களுக்கிடையே உருவான மோதல்கள், அவற்றினால் நிகழ்ந்த மோசமான கொலைகள், 1987இல்

இந்திய அமைதிப் படையினருக்கும், விடுத லைப் புலிகளுக்குமிடையேயான யுத்தம் ஆகியவை பெருமளவில் யுத்தம் பற்றிய அச்சத்தையும் அதே சமயம் இவற்றைப் பற்றிப் பேசத் தயங்கும் ஒரு பய உளவியலை யும் உருவாக்கின. இக் கால கட்டத்தில்தான் யாழ்பல்கலைக்கழகமருத்துவபீடவிரிவுரை யாளரான ராஜினி திரணாகம, சகல அரசி யற் தரப்பினரதும் இராணுவ வாதத்தை விமர்சித்ததற்காக யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறு ஆயுத கலாசா ரமே மேலோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்த சிவரமணி சிறுவர்கள் தமது பிள்ளையை இழந்து போவது பற்றி எழுதிய கவிதையே இது. துப்பாக்கி வெடிகள் குழந்தைக் கவி தைகளில் அர்த்தத்தை இல்லாதொழிப்பது பற்றி வேதனை தோய்ந்த எள்ளலுடன் கவிதை கூறுகிறது.

**யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்**
**எங்கள் குழந்தைகளை வளர்ந்தவர்களாக்கி விடும்**
**ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற**
**அவர்களின் அழகிய காலையின்**
**பாதைகளின் குறுக்காய்**
**வீசப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த**
**முகமற்ற மனித உடலும்**
**உயிர் நிறைந்த அவர்களின் சிரிப்பின் மீதாய்**
**உடைந்து விழும் மதிற் சுவர்களும்**
**காரணமாய்**
**எங்களுடைய சிறுவர்கள்**
**சிறுவர்களாயில்லாது போயினர்**
**தும்பியின் இறக்கைகளைப் பிய்த்து எறிவதும்**
**தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி**
**எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்**
**எம் சிறுவரின் விளையாட்டானது.'**

1980களின் நடுப்பகுதியிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. தார் மீகப் பண்பில் தடுமாற்றங்கள் ஏற்பட் டன. சகபோராளிக் குழுக்களுக்குள் சண்டைகள் வலுத்தன. விடுதலைப் போரில் இராணுவவாதம் மேலோங்கியது. மாற்றுக் கருத்துடையோர் கொலையும் செய்யப்பட்டனர்.

இவை பற்றியெல்லாம் மிகுந்த வலி-யுடன் பெண்கள் பேசினர். 90 களின் முற்பகுதியில் எழுதப்பட்ட நம்பிக்கை யீனமும், நிராசையும் கலந்த சிவரமணி யின் கவிதைகள் இக்கால கட்டத்தின் இத்தகைய அரசியற் சூழலிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டியவையாகும்.

**"துண்டுப் பிரசுரத்தைப் போல் ஆறுதலும்**
**நம்பிக்கையும் தரக் கூடிய வார்த்தைகள் இல்லை"**

என்றும்

**"புத்திசாலித்தனமான கடைசி மனிதனும்**
**இறந்து கொண்டிருக்கிறான்"**

எனவும்

**"ஒவ்வொருத்தனும் தனக்குரிய**
**சவப் பெட்டியைச் சுமந்தபடியே**
**தனது ஒவ்வொரு வேளை**
**உணவையும் உண்கிறான்"**

என்றும் சிவரமணி மிகுந்த விமர்சனப் பார்வையுடன் எழுதினார். செல்வியின் இராமனே இராவணனாய் என்ற கவிதை யும் இத்தகைய ஒரு அவநம்பிக்கையையும் நிராசையையுமே பிரதிபலிக்கிறது.

அனாருடைய மேலும் சில இரத்தக் குறிப்புகள் என்ற கவிதை மிக வலுவாக வன்முறையை விமர்சிக்கிறது.

**"மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்க்க**
**– பழக்கப்பட்டிருந்தும்**
**குழந்தை விரலை அறுத்துக் கொண்டு**
**அலறி வருகையில்**
**நான் இன்னும அதிர்ச்சியுற்றுப் பதறுகிறேன்**
**வன்மத்தின் இரத்த வாடை**
**வேட்டையின் இரத்த நெடி**
**வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்**
**கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்**
**சாவின் தடமாய்**
**என்னைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறது**

என வரலாறு முழுதையுமே இரத்தம் பெருகும் வன்மமாய் காட்டுகிறார். வன்முறை போர் பற்றிய நுண் அரசியல் பார்வை கவிதையில் இழையோடுகிறது.

ஈழத் தமிழர் போராட்டத்தின் இன்னோர் அம்சம் தமிழருக்கும் முஸ் லீம்களுக்கும் இடையே இனத்துவ அடிப்படையில் ஏற்பட்ட பிளவுகள் ஆகும். ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய இயக்கக் குழுக்கள் சிலவற்றில் முஸ்லீம்களும் அங்கத்தவராக இருந்தனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆனால் 1980களின் மத்திய பகுதி யிலிருந்து முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்தது. முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலத்தில் இது மேலும் அதிகரித்தது.

1990 அக்டோபரில் யாழ் குடா நாட்டிலிருந்து முஸ்லிம்கள் ஒரு இரவில் வெளியேற்றப்பட்டமைக்குப் பின்னர் இந்த இடைவெளி பெருத்தது.

ஒரு ஒலிபெருக்கி அறிவிப்பில் ஒரு இனமே தமது வாழ்வைப் பின்விட்டு துரத்தப்பட்டுத் தூரப் போனதையும் பெண்களின் கவிதைகள் பாடின. வடக்கிலும் கிழக்கிலும் நடந்த இச் சம்பவங்களையும் இரு இனங்களுக்கிடையே பெரிதா-கிய இடைவெளியையும் மிகுந்த மனப் பாரத்துடன் பாடினார்.

**"அது ஓர் சுகமான ஞாபகம்**
**என் உறவுகளும்**
**என் ஸ்நேகங்களும்**
**நானும் அமைதியும் மகிழ்வுமாய்**
**அம்மண்ணில் வாழ்ந்திருந்ததும்**
**...............**
**மறைந்து போன என்**
**மணல் ஓவியங்களைக்**
**கீற முனைகிறேன் நான்**
**என்னுடைய அந்த நிமிடங்களை**
**நினைக்கும் என் இதயத்தை**
**அறுத்தெறிந்து வாழ நினைக்கும் நான்**
**இன்று எதைச் சிந்திப்பேன்..**
**தொலைந்து போன**
**என் சமாதானம் பற்றியதாகவோ?**
**.................**
**நான் தொலைந்தவற்றைத் தேடுகிறேன்"**

போர்க்காலத்தில் மனித இருப்பு நிச்சயமின்மையையும் அச்சத்தையும் போர்த் துகிறது. இதனை இயற்கைப் பொருட்களின் வர்ணனையூடாக துர்க்குறிகள் காட்டும் இயற்கை நிகழ்ச்சிகளுடாக பெண்கள் கவிதைகள் உணர்த்துகின்றன. முற்றத்து மரங்களில் பூப்பதைக் களவாய் வந்து தின்னும் வௌவால்களால் பூக்கள் கனி களாவதில்லை. அவை பூக்களாக காவு கொள்ளப்படுகின்றன. காற்று எவ்வித ஓசைகளுமற்று கனத்த அமைதியைத் தாங்கிக் கொண்டு நிற்கிறது. விநோதி னியின் 'இருப்பு' என்ற கவிதை அச்சத்தை இயற்கைப் படிமங்களூடாக எடுத்துக் காட்டுகிறது.

**"வீசும் காற்றில் கனத்திருக்கும் அமைதி**
**இருந்திருந்து ஒற்றைக் குரலில் கத்தும்**
**ஒரு பேர் தெரியாப் பறவை**
**மடி மீது திறந்து கிடக்கும் புத்தகம்**
**காற்றில் அலை பாயும்**
**இருளில் படிந்திருக்கும் அச்சம்**
**வாழ்தல் பற்றிய பயமாய்த்**
**திரண்டெழும் என்னுள்**
**தூரக் கேட்கும் வெடியொலி"**

வினோதினியின் நெடும்பகல் முத லிய கவிதைகளும் மரணம், அச்சம் அதன் வேதனையைத்தான் தருகின்றன.

போர் தனி நபர்களை ஒருவருக் கொருவர் எதிரணியில் நிற்க வைக்கிறது. இராணுவத்தில் சேர்பவர்கள் மனிதத் தன்மையை இழக்க நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். அதிலும் ஆக்கிரமிப்பு ராணுவம் தம்மால் ஆக்கிரமிக்கப்படும் மக்களை மிகக் கொடூரமாக நடத்துகிறது. அம் மக்களும் இராணுவத்தினரை மிகக் குரோதத்துடனேயே நோக்குகின்றனர். சில சமயங்களில் போர் தற்காலிகமாக நிற்கும் போதோ சமாதான ஒப்பந்தங்கள் ஏற்படும் போதோ மீண்டும் மனித உறவுகள்

உருவாகின்றன. ஆனால் பிரச்சினை முற்றும் தீராததால் அடிப்படையில் பயமும் சந்தேகமும் நீடிக்கிறது. யுத்தத்தை நடத்துவோர் தமது பெண்கள் அன்னிய இனத்தவர் மதத்தவருடன் நட்புக் கொள்வதையோ பழகுவதையோ அனுமதிப்பதில்லை. அதை மீறுவோர் துரோகிகள், ஒழுக்கம் கெட்டவர்கள் என முத்திரை குத்தப்படுகின்றனர். விநோதினியின் “அவன்” என்ற கவிதை போர் நிறுவனத்திலிருந்து போராளியை இராணுவத்தில் சேர்ந்திருப்பவரை பிரித்துப் பார்க்கிறது. அரச ஒடுக்குமுறையின் பிரதிநிதியாகக் கருதப்படும் இராணுவத்திலிருந்து அதன் அங்கத்தவர் ஒருவரை இவ்வாறு வேறுபடுத்துகிறது. முதற்பார்வையில் அரசியல் விளக்கமற்ற ஒரு செயலாகத் தென்படினும் ஆழ்ந்து படிக்கும் போது நிறுவன அடையாளங்களை நிராகரிக்கும் ஒரு நுண் அரசியல் அக்கவிதைக்குள் இழையோடுகின்றது.

**“எல்லாரையும் போல் தான் அவனும்**
**கையில் சுட ஆயத்தமாயிருக்கும் துவக்கு**
**முதுகில் பென்னம் பெரிய பை”**

ஆனால் இப்போது சமாதான காலம் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்.

**எண்பதுகளில் கண்டது போன்ற முகமில்லை**
**இது மனித முகம் அழகு முகம்**
**...............**
**அவனது பெயர் சிறிலாகவோ பெரேராவாகவோ**
**அன்றி தர்மசிறியாகவோ இருக்கலாம்**
**.............**
**யாரிடமும் பேசிக் கண்டதில்லை**
**நம்மில் யாரும் பேச விழைந்ததும் காணேன்**
**கடமை நேரம் காலை ஆறு முதல் மாலை ஆறு வரை**
**இட்டலியும் இடியாப்பமும் விருப்பம் என்று தெரிந்தது**
**அவ்வப்போது வீட்டில் சமைப்பதைப் பகிர**
**நினைக்கும் நினைப்பழிய**
**மழைக்கிதமாய் தேநீர் தர எண்ணுதலும் நடவாது**
**ஏதும் இயலா எதிரி போல்**
**பேசவாகிலும் முடியுமா என்றால்**
**இல்லை முடியவே முடியாதொரு போதும்**
**மனிதம் வளர்ந்து வன்மம் வளர்க்கும்**
**எம் மனங்களும் பிற மனங்களும் புரியாது**
**அவன் வருவான்,போவான், வருவான்**
**புதைந்த மனிதரைத் தேடும் விதமாய்**
**......**
**நாளை அவன் கைக்குண்டுக்குப் பலியாகில்**
**என் சிரிப்பை ஒரு கணம் எண்ணி**
**அமைதியுறும் மனதுடன் இறந்துபோகக் கூடும்**
**அல்லது ஊர் திரும்பல் நிகழலாம்**
**அவனது காதலிக்கும் தாய்க்கும்**
**என்னைப் பற்றி ஏதாவது சொல்லவும் கூடும்**
**அழகு முகங் கொண்ட அவன்**
**சிறிலா, பெரேராவா அன்றி.....**

அவன் என்னும் தலைப்பிலான இக்கவிதையில் மனித உறவுகளும் மனித் தொடர்புகளும் அடையாள அரசியலால் துண்டாடப்படுவது பற்றி வினோதினி பேசுகிறார். பழக்கம் காரணமாக ஏற்படக்கூடிய தொடர்பும் உறவும் நிர்ப்பந்தத்தினால் இல்லாமல் போகிறது. மனித இயல்பு செயலற்றுப் போவதால் “மனிதம் வளர்ந்து வன்மம் வளர்ப்பதால்” ஏற்படும் வலியைப் பேசுகிறார். மேலே கூறியதுபோல நிறுவன அடையாளங்களை நிராகரிப்பதற்காகத்தான் எதையுமே குறிக்காமல் பால் அடையாளத்தை மாத்திரம் வைத்து அவன் என்று கவிதைத் தலைப்பையும் உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் இனத்துவப் பிணக்குகளும் அரசியல் வன்முறையும் போரும் மக்களின் வாழ்வை வெகுவாகப் பாதித்த காலத்திலேயே பெண்களின் கவிதையாக்கமும் வலுப் பெற்று வளர்ந்தது. அவர்கள் தங்கள் கவிதைகளில் இக்காலத்தில் நிலைமைகள் பற்றிய தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். போரையும் மரணத்தையும் நிராகரித்து வாழ்க்கைக்காக வேண்டுகோள் விடுப்பதாகவே அவர்களது குரல் கவிதைகள் ஊடாக ஒலிக்கிறது.

# மரணங்கள் மலிந்துவிட்ட பூமி

– புதுவை இரத்தினதுரை



மான் சுட்டால்..... அன்றி
மரை சுட்டால்..... மயில் சுட்டால்
ஏன் என்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு
மாடடித்தல் கூட, மறைவான ஓரிடத்தில்
சாகடிக்க வேண்டுமெனச்
சட்டத்தில் இடமுண்டு.
கொக்குச் சுடுதல்..... குற்றம்
பயிரழித்து
திக்கெட்டும் நடந்து திரிகின்ற ஆனையினை
சுட்டால்..... அது குற்றம்
'சுதந்திர பூமியிலே.....'
சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும்;
தண்டிக்க வேண்டியதே.
நாய்பிடிக்கக் கூட நகரசபைக் காரர்கள்
நீபிடிக்கலாமென்று நியமனங்கள் செய்துள்ளார்
மானுக்கு.....
மாட்டுக்கு.....
மரையோடு..... மயிலுக்கு
ஆனைக்குக் கூட அனுதாபப்படும் நாட்டில்
மனித உயிர் மட்டும் மலிவு
மிக மலிவு.
துப்பாக்கி வாய்க்கு பூச்சூடும் பூமியிது
எப்போதும் நாங்கள் இறப்பதற்கே காத்திருப்போம்.
வீதியிலோ..... அன்றி வீட்டினிலோ.....
பள்ளியிலோ.....
பாதியிரவினிலோ..... பஸ்சினிலோ.....
படுக்கையிலோ
நாங்கள் சுடப்படலாம்
நாய்போல் தெருவினிலே.....
தாங்க ஒருவரின்றிச் சவமாகிப் போயிடலாம்.
கல்யாண ஊர்வலமே
கருமாதி ஊர்வலமாய்
மாறிய சம்பவங்கள் மலிவான சங்கதிகள்,
எல்லைப் புறங்களிலே
எழுகின்ற கூக்குரல்கள்
கசாப்புக் கடைகளிலே கதறுகின்ற மாட்டொலிகள்
கேட்க வொரு நாதி
கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்
மீட்க வொரு இயக்கம்
மூச்சுவிட ஒரு கவிஞன்
கட்டாயம் தேவை..... இது
காலத்தின் குரலாகும்
வீட்டுக்குள் இருந்து ரீ.வி. பார்க்கையிலோ.....
பூசை அறைக்குள்ளே பிரார்த்தனைகள் செய்கையிலோ,
நாங்கள் சுடப்படலாம்.
நடுராவில் வந்தெழுப்பும்
பிணந்தின்னிக் கழுகுகளால்
பிணமாகிச் சாய்ந்திடலாம்
எங்கும் இருட்டு
ஏனென்று கேட்பதற்கு
இங்கொருவர் இல்லை..... என்ற இறுமாப்பில்
எங்கும் இருளில் இருளாட்சி,
வீட்டுக்கு வீடு வீதிக்கு வீதியென
நீட்டிக் கிடக்கின்ற நிலமெல்லாம் பேயிருட்டு,
இந்த இருட்டைத்தான்
இல்லாமற் செய்வதற்கு
வந்தவரும் இன்று வழிதவறிப் போனார்கள்

தங்களுக்குள் ஏதோ தகராறுப் பட்டார்கள்
கும்மிருட்டை ஊதிக் குலைப்போம்
எனச் சொன்ன
நம்பிக்கையான நாயகரும்
இருளுள்ளே.....
போனார்கள் இங்கே பொழுதோ விடியவில்லை.
தானாக இந்தத் தனியிருட்டுத்
தீருமெனக்
கோலாட்டம், கும்மி, குரங்காட்டம்
இப்படியாய்
வாலாட்டிக் கொண்டிருந்த வல்லவரைக் காணவில்லை
மீண்டும்..... இருட்டு
மிக இருட்டு..... கண்ணுக்கு
நீண்ட இடமெல்லாம் நிலைகொண்ட பேயிருட்டு
எங்கேனும் ஒளிக்கீறு
ஒன்று தெரிந்துவிட்டால்
அங்கே தான் இருட்டின்
அலைக் கரங்கள் மிக அடிக்கும்
இருட்டை ஒழிப்போம் எங்களுக்கென்றோர் இடத்தை
பிடித்தே, அவ்விடத்தில்
பேயிருட்டைச் சங்கரிப்போம்
எல்லோரும் சேர்ந்து இருளழித்தல் கடினமென்றும்
எல்லைகளைப் போட்டால்.....
இது சுலபம் என்றுரைத்து
வில்லெடுத்த பார்த்திபரும் விடிவுவரச் செய்யவில்லை
விடிவுக்குப் பூப்பறிக்க.....
வெளிக்கிட்ட மின்னல்கள்.....
அழிவுக்கும் தோள்கொடுக்கும் அக்கிரமப் பூமியிது
இறப்புக்குள் வாழ..... இப்போது பழகிவிட்டோம்.
சாவுக்குள் வாழ்ந்து சாகத் துணிந்துவிட்டோம்
மரணம் எமக்கிப்போ மலிவான பொருளொன்று
கருச்சிதைவு கூடக் கடும் குற்றம்
இப்போதோ,
தெருக் கொலைகள் இங்கே சிறுவிடயம் ஆகியது.
கேட்க ஒரு நாதி
கிளர்ந் தெழும்ப ஒரு கூட்டம்
மீட்க வொரு இயக்கம்
மூச்சுவிட ஒரு கவிஞன்
கட்டாயம் தேவை..... இது
காலத்தின் குரலாகும்.

(மல்லிகை – ஜனவரி 1986)

# கடலம்மா...!

கடலம்மா... நீயே சொல்
'குமுதினி' ஏன் பிந்தி வந்தாள்?

எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்துகொண்டு
'குமுதினி' குருதி வடிய வந்தாள்.
கடலம்மா கண்டாயோ
கார்த்திகேசு என்னவானான்?
எந்தக் கரையில்
உடலூதிக் கிடந்தானோ?
ஓ...! சோழகக் காற்றே
நீ,
வழம்மாறி வீசியிருந்தால்...
'குமுதினி' வரமாட்டாள் என்று
நெடுந்தீவுக்குச் சொல்லியிருப்பாய்.
பாவம்
மரணங்களின் செய்தி கூடக்
கிட்டாத தொலைதீவில்,
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்.....

கடலம்மா நீ மலடி
ஏனந்தத் தீவுகளை
அனாதரவாய்த் தனியே விட்டாய்?

கடலம்மா.....
உன் நீள் பரப்பில்
அனாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
'அனாதைக் கல்லறைகள்' என நினைவூட்டு.
ஆனால்,
இனிவரும் கல்லறைகள்
வெறும்
இழப்புக்களின் நினைவல்ல,
எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்!

- நிலாந்தன் -

(1985 – அலை – 26))

# போர் முகம்

கலாநிதி
எம்.எஸ்.எம் அனஸ்



**20**ஆம் நூற்றாண்டின் உலக யுத்தங்கள் ஐரோப்பாவில் போர்ப்பாடல்களுக்கு ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுத் தந்தன. நவீன இலக்கியங்களில் அது ஒரு பிரதான இடத்தைப் பெற்றிருப்பதோடு உலகயுத்தங்களின் பின்னரும் நடைபெற்ற, நடைபெற்றுவரும் எல்லா யுத்தங்கள் பற்றியும் போர்ப்பாடல்கள் எழுந்துள்ளன.

உலகப்போர்களின்போது போர்க் காலப் பாடல்களில் களத்தில் நின்று போராடியவர்களின் நேரடி அனுபவக் கவிதைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. எனினும் யுத்தத்தின் பிடியில் சிக்கியிருந்த சாமான்ய மக்களும் தமது போர்க் கால அனுபவங்களைக் கவிதைகளில் பகிர்ந்து கொண்டனர்.

குண்டுமாரி பொழிவதில் உயிரிழந்தவர்கள், களத்தில் எதிரிகளால் சாய்க்கப்படுபவர்கள் அவர்கள் பற்றிய துன்பப் பதிவுகள் ஒருபுறம், யுத்தத்திற்குப் பயந்தும், உத்தரவுகளுக்கு அடிபணிந்தும் பிறந்த தேசங்களை, ஊர்களை விட்டு கண்காணாத தொலைதூரத்திற்கு செல்பவர்களின் பிரலாபங்கள் மறுபுறம் என இதன் வகைகள் பன்முகப்பட்டனவாய் இருந்தன.

போர்க் காலப் பாடல்கள் போர் எதிர்ப்புப் பாடல்களாக மட்டும் இருக்கவில்லை. WPA அமைப்பு வரையறுத்துள்ளது போல் போர்ப் பாடல் பண்புகளை பின்வருமாறு கூறலாம். அடை யாளம், அப்பாவித்தனம், பிழை செய்தல், அணிபணிவு, கருணை, மனிதத்தன்மை, கடமை, ஆவல், இருப்பின் துயரம், மரணம் இந்தப் பிரச்சினைகளுக்கான வினையாற்றல்கள் என்பவற்றை உள்ளடக்கி இருப்பவை. சுதேச அல்லது சர்வதேச நெருக்கடிகள் தொடர்பிலான உடனடியான சொந்த அனுபவங்களாக வெளிப்படல் என்றும் இதன் வகைகள் அமைந்துள்ளன. பிரித்தானியாவில் போர்ப் பாடல்கள் பாடசாலைகளின் பாடங்ளாக்கப்பட்டுள்ளன. நாம் யார்? நாம் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதைப் போர்ப் பாடல்கள் உணர்த்துகின்றன என்பதுதான் இவற்றைக் கற்பதன் நோக்கங்களில் ஒன்றாக கூறப்படுகின்றது.

போர்ப் பாடல்கள் போரின் அல்லது அதன் விளைவுகளின் நினைவுகளும், பதிவுகளும் மட்டுமல்ல. அவை பாடங்களும், படிப்பினைகளு மாகும். துன்பத்தை சுமந்த வர்கள், அதில் அமிழ்ந்து அனாமதேயமாய்ப் போனவர்கள், அப்பா, அம்மா, தங்கை, நண்பர்கள், காதலி, கைக்குழந்தை என்ற இந்த

அழிவுகளை எப்படி மறந்து வாழ லாம். அழிந்தவர்கள் அனாமதேயங்கள் அல்ல.

மனிதனின் தூரப்பார்வையற்ற அல்லது பிழையான (அரசியல்) தீர்மானங்களால், பிடிவாதத்தால், மாற்றுவழி தெரியாத தால் நடக்கும் தீவினை தான் போர். நாம் விரும்பியவர்கள், விரும்பாதவர்கள், எதி-ரிகள் எல்லோரையும் அது பீதிக்குள் தள்ளுகிறது. மரணத்துள் புதைக்கிறது.

சொல் அலங்கார தேசிய உணர்ச்சிப் பாடல்களுக்கு அப்பால் வாழ்வின் உட்பொருளையும் மறைவாய்ப் புலம்பும், மன அவசங்களையும் ஆழமாய்ப் பேசுவன புதிய போர்ப் பாடல்கள். அத்தகைய கவிதை கள் மனிதன் யார் என்பதையும் யுத்தத்தின் கொடுமை என்ன என்பதையும் புரிந்து கொள்ள எமக்கு துணை செய்கின்றன.

யுத்தங்களின் பொதுத் தன்மை எப்போதும் எல்லா இடங்களிலும் ஒன்றுதான். அழிவு, துயரம், கைசேதம் என இது தொடர்கின்றது. காலங்களும், ஆயுதங்களும், தொழில்நுட்பங்களும் மாறிச் சென்றாலும் இவை மாறுவதில்லை.

**யூஃபிரட்டீஸ் நதிக்கரையிலாகட்டும்**
**வேறெந்த நதிக்கரையிலாகட்டும்**
**–எல்லா இராணுவங்களும் ஒன்று**
**–எல்லா ஆயுதங்களும் ஒன்று தான்**

(பண்ணாமத்துக்கவிராயர், காற்றின்மௌனம், 1996)

என்று பாகிஸ்தான் கவி இஃப்திக்கார் ஆரிப் கூறுகின்ற கருத்தின் அர்த்தமும் இதுவாக இருக்கலாம்.

'பெரிய யுத்தங்களும் நவீன நினை வுகளும்' நூலில் வரலாற்றாசிரியரும் விமர்சகருமான பவுல்/பாரிசல் குறிப்பிடும் பின்வரும் கருத்து உலக யுத்தத்திற்கு மட்டுமல்ல எல்லா யுத்தங்களுக்கும் பொருந்தும்.

***முழு ஐரோப்பவையும் பேரழிவிற்கு இட்டுச் சென்ற முதலாவது உலக யுத்தம் இருண்ட மேகங்கள் உலவும் உலகையே விட்டுச் சென்றுள்ளது. நாட்டுப் பற்று, நல்லதே நடக்கும் என்ற எண்ணம், இலட்சியவாதம் என்ற நம்பிக்கைகளுடன் தத்தமது நாடுகளுக்காக ஒவ்வொருவரும் போராடினர். ஆனால், பேரழிவு, பேரிழப்பு என்ற கெடுதிகளைத்தான் உலகப்போர் கொண்டு வந்தது.***

*(Poetry of the Great War: http:edsitement. neh.gov)*

பலஸ்த்தீனப் (போர்க்) கவி முஹம் மது தர்வீஷ் கூறும் தத்துவமும் இதற்கு வேறுபட்டதல்ல. தர்வீஷ் பாடுகிறார் : 'எப்படித் துக்கப்படலாம் என்பதை மட்டுமே கற்றோம்'. ஏனெனில் போர் துயரங்களின் மொத்த வியாபாரஸ்தலம் போன்றது.

வடபுலத்திலிருந்து இரவோடிரவாக வெளியேற்றப்பட்ட வடபுல அகதிகளில் ஒரவரான கவிஞர் முல்லை முஸ்ரிபாவின் போரனுபவங்களிலும் இதன் பிரதிபலிப்பை காண முடியும்.

**போர்ப் பேய்**
**விதியின் பெயர் சொல்லி**
**தின்று தீர்த்தது மானுடச் சதை**
**நீர்த்துப் போனதென் நெடுநிலம்**

**சீரழிந்து தவித்தலே**
**வாழ்வினிருப்பாயிற்று எமக்குள்**
**வலிந்த பெருந்துயர் மீதினில்**
**குறுகிற்று ஜீவிதப் பற்று**

முன்னோடிப் போர்ப்பாடல் கவ-ிஞரான வில்ஃபரட் ஓவன் 'எனது துறை போர் பற்றியது - துயர் மிகுந்த போர்' என்று தனது போர்க் கவிதைத் துறை பற்றிக் கூறினார். ஒவ்வொரு யுத்தங்கள் பற்றியும் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. அதி-கமான யுத்தக் கவிதைகள் அதைரியப்பட வைப்பவை. உலகப் போரைப் பற்றிய வரையும் இது தான் உண்மை.

சில நம்பிக்கை ரேகைகள் பளிச்சிட் டாலும் உலகப் போர் பற்றிய கவி தைகள் கவிஞர்களைச் சுற்றி நடந்த வன்முறைகளையும், குழப்பங்களையும்தான் கூறுகின்றன. நடைபெற்ற மரணங்களைப்

பற்றிய அனுபவங்கள் அக்கவிதைகளை மேலும் அச்சமுடையனவாக மாற்றிவிடு கின்றன. என்று யுத்த காலக் கவிதைத் தொகுப்புரையில் ஜேம்ஸ் எஸ்.ரொபின்ஸ் கூறியிருப்பது யுத்தகால கவிதைகளை அணுகுவதில் சில கருத்து வெளிப்பாடுகளை முன்வைப்பனவாகக் கருதலாம்.

போரின் தாக்கங்களையும் அனர்த்தங் களையும், போரின் விளைவுகளையும் போர்க் காலப் பாடல்களில் கவிஞர்கள் படைக்கின்றனர். இவற்றில் நிகழும் மனித வேதனைகள்தான் இப்பாடல்களின் தனித்துவமாகவும் உண்மையாகவுமுள்ளன. நமக்கு விருப்பமான அல்லது எதிரான போர் பற்றிய எல்லாக் கவிதைகளின் சாரமும் மனித துயரங்களின் கதைகளும், அவலங்களும் தான். இதைச் சக மனிதனுக்கு கவிதை ஊடகம் மூலம் சரியாகப் பரிமாற்றம் செய்யும் போது படைப்பாளிகள் வெற்றி பெறுகின்றனர்.

எனினும் போர்ப் பாடல்கள் அழிவுகளை யும், துன்பங்களை மட்டும் கூறவில்லை. வெற்றி தோல்விகளையும், தவறுகளை யும் அதேபோல் திருத்தக் கூடியவைகளை யும், மன்னிப்பதற்குரியவற்றையும் அவை உணர்த்தக் கூடியவை. அந்த கவிஞர்களின் அர்ப்பணிப்புகளினூடாக தெளிவுகளுக் கும் சக வாழ்வுக்கும் வழிகாணமுடியும். போர்க்கால பாடல்களைப் புரிந்து கொள் ளுதல் என்பது ஒரு ஒழுக்க நெறியில் இருந்து தான் ஆரம்பமாக வேண்டும்.

ஹிரோஷிமாவின் அணுகுண்டு தாக்கு தலையும், போர் வீரர்களின் அழிவையும் ஒவன், கிர்கூப், மெக்ரெ என்ற மூன்று கவிஞர்கள் தத்தமது மொழிநடை, பார்வை, அவதானிப்பு என்ற மூன்று வேறுபட்ட வகைகளில் கவிதைகளில் கூறியுள்ளனர். ஒவன் படை வீரர்கள் மீது யுத்தம் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கி உள்ளார். கிர்கூப் அணு யுத்தத்தை நேரடியாக வர்ணிக்கும் பாணியில் அணு யுத்தத்தின் தாக்கத்தை விபரித்துள்ளார்.

ஒவனின் ‘mental cases’ நவீன போர் நடவடிக்கைகளால் ஏற்படும் உளவியல்த் தாக்கங்களைக் கூறுகிறது. போரின் ஆழமான வேதனைகளை ஒவன் எடுத்துக்காட்டுகிறார் என்று இந்த மூன்று கவிஞர்களைப் பற்றியதுமான ஒப்பீடு கூறுகிறது. (Sophiah: http//www.essayforum.com) யுத்தம் முடிந்து திரும்பிய பின்னரும் யுத்த நினைவுகள் எவ்வாறு ஒரு படை வீரனின் மனதைத் தாக்குகின்றன என்பதையும் ஒவனின் கவி தைகள் கூறுகின்றன. அணுயுத்தத்தின் வெவ்வேறு பாதிப்புக்களை இம்மூன்று கவிஞர்களும் தமது படைப்புகளில் முன்வைத்த போதும் மூவரும் போரின் விளைவுகளையே பேசினர். இறுதியில் போர் எதனை மனிதனுக்கு வழங்குகிறது? என்ற கேள்விக்கும் அதற்கான விடைக்கும் இக்கவிஞர்கள் மூவரும் ஒரு பொது அடிப் படையை உருவாக்கியிருப்பதையும் அவர்களது கவிதைகளில் இருந்து உணர முடியும்.

போரின் விளைவுகளில் முக்கிய மானது வாழ்வின் இருப்பு கேள்விக் குறியாக்கப்படுவதுதான். போரின் மீதான வெறுப்பும், அச்சமும் உருவாகும் மையப் புள்ளி இதுவெனக் கருத முடியும். சாவு அவன் அருகில் மிக அருகில் பயணம் செய்கின்றது. வாழ்க்கையில் மரணம் என்பது மரணத்துள் வாழ்வாகிறது. இது மரண பயத்தையும், வாழ்வின் அபத்தத்தையும் அச்சத்தின் வழியாக மனதில் பாரிய அழுத்தத்தை உருவாக்குகிறது.

கவிஞர்கள் போர்க் காலப் பாடல் களில் இது பற்றி அதிகம் பேசியுள்ளனர். இலங்கையில் ஏ.ஜி.எம். ஸதக்காவின் பாடல்களில் இந்த இருப்புக் குறித்த நிலையாமை உணர்வு ஆழமாகச் சித்திரிக்கப்படுகிறது.

**அடையாளந் தெரியாத கரங்கள்**
**சாவின் நிறத்தை**

**எங்கும் பூசிற்று**

**யாருமற்ற மயான வெளி**
**பொய்த்துப் போன**
**கனவுலகம்**
**புகை மனிதர்கள்**

**தொலைவில்**
**மிகத் தொலைவில்**
**ஒற்றைக் குயிலாய் கூவுகிறதே**
**அதுவா**
**நம் வாழ்க்கை**

போர்க் கவிதை அழகானதாயினும் போர் குரூரமானது. யுத்தத்தின் கொடூரங்களில் முக்கியமானது கொலைகளும் இரத்தம் சிந்துதல்களும் மட்டுமல்ல. யாரைக் கொலை செய்கிறோம் யாரின் இரத்தம் சிந்தவைக்கப்படுகின்றது என்பது யுத்த நியமங்களின் படி சிந்திக்கத் தகுதியற்றது. எல்லோரது யுத்த தர்மமும் போதிக்கும் அடிப்படை இதில்தான் போய் முடிவடைகின்றது. யுத்தங்களின் குரூரத்தில் அது உருவாக்கும் அதற்கான நியதிகளும் நியமங்களும் அடங்கியுள்ளன.

'The man he killed' என்ற தோமஸ் ஹார்டியின் போர்க்கால கவிதை ஒன்றில் இருந்து இந்த உண்மையை எடுத்துக் காட்டலாம். யுத்தத்தின் நியதி கொடூரமாயினும் அது யுத்தத்தின் உண்மையாகவும் உயர்த்தப்படுகின்றது. இதுதான் 'யுத்தத்தின் முரண்நகை'. தோமஸ் ஹார்டி 'சூழ்நிலை மாற்றத்தின் முரண்நகை' மூலம் இதனைச் சித்திரிக்கிறார்.

அக்கவிதையில் தோமஸ் ஹார்டி இரு பாத்திரங்களை உருவாக்கியுள்ளார். பிரதான பாத்திரம் பாருக்கு குடிக்க வரும்போது அங்கு மது அருந்திக் கொண்டிருந்த ஒருவருடன் நெருங்கிப் பழகுகின்றது.

**ஒரு பழைய தவறணையில்**
**நானும் அவனும் சந்தித்தோம்**
**இருவரும் சேர்ந்து மது அருந்தினோம்**
**குறுகிய நேரத்தில்**
**சிரிப்பும் கும்மாளமுமாய்**
**இருவரும் நண்பர்களானோம்**

இருவரினதும் அடுத்த சந்திப்பு போர்க்களத்தில். போர்க்களத்தில் இருவரும் எதிரிகளாகச் சந்திக்கின்றனர். ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்கின்றனர். ' நான் அவனைச் சுட்டேன் அதுபோல் அவன் என்னைச் சுட்டான்' என்று கவிதை வரி கூறுகின்றது. கூடிச் சிரித்து குடித்து மகிழ்ந்த நண்பனை பிரதான பாத்திரம் சுட்டுக் கொல்கிறது. 'நீ அவனைச் சுட்டு வீழ்த்தினாய் / யுத்தத்தில் உனது எதிரி எதிரிதான்' யுத்தம் குரூரமானது என்று கவிதை முடிகிறது.

யுத்த வீரர்கள் யுத்த களத்தில் தமது சுதந்திர அபிப்பிராயங்களுக்கு ஏற்ப இயங்க முடியாது. மேலிடம், கட்டளை மற்றும் அது போன்ற பல நியதிகள் அவர்களை கைதிகளாக்கிவிடுகின்றன. அதாவது 'இரக்கம்', 'மன்னிப்பு' போன்ற மானிட ஒழுக்க மேன்மைகள் அங்கு வெற்றி பெறுவதில்லை.

போரின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்களை விடப் போர்க்கவிதைகள் அதிகம் நினைவில் இருக்கக்கூடியவை. பல புகைப்படங்கள் பதுங்கு குழிகளிலிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும் சசூன், ஓவன் போன்றோரின் போர்க்கவிதைகள்தான் மக்கள் மனத்தில் இன்றும் நிலைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. காயம் பட்ட போர் வீரர்களிடமிருந்து சேகரித்த கவிதைகளை நூலாக்கம் செய்த போது மனிதரின் அக உணர்வுகளுக்கு அரிதான எண்ணங்களைத் தரக்கூடியவை இக்கவிதைகள் என்று அதன் தொகுப்பாசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

இதை இன்னொரு வகையிலும் கூறலாம். புகைப்படங்களின் தொழிற்பாடு வேறு, கவிதைகள் இலக்கியங்கள் கொண்டுவரும் உணர்வும் வெளிப்பாடும் வேறு. கவிதைகள் சாஹித்தியம் மட்டுமல்ல

அவை சரித்திரங்களுமாகும். உள்ளக் குமுறல்களின், பிரிவுத் துயர்களின், அழிவுகளின் அவலங்களை மனிதனுக்குக் கற்றுத் தரக்கூடியவையுமாகும்.

**எனது நகரம் கொழுந்து விட்டெரிகிறது**
**எங்கள் மக்கள்**
**முகமற்றவர்களானார்கள்**

என்ற சேரனின் கவிதையும் பேரினவாதப் பெருந்தீ யாழ்ப்பாணத்தை நூலக எரிப்பாக சுற்றி வளைத்த போது நுஃமான் பாடிய புத்தரின் படுகொலையும் அசாதாரண உணர்வுப் பதிவுகளாகும்.

அவற்றின் தனித்துவமும் போர்க்கால வரலாற்றை அதன் முன்னரும் பின்னரும் என அவை பிரிகோடாக்கிக் காட்டுவதும் அவற்றின் படிமமும் கவிதைக்கே சாத்திய மான ஒரு கலைதான். யாழ் நூலகம் திருத்தியமைக்கப்பட்ட பின்னும் நுஃமானின் அக்கவிதை கூறும் அந்தக் கலாசாரக் கொலையின் ஆவணத் தன்மையும் அதன் கலைப்படிமமும் நின்று நிலைக்கக்கூடியது என்ற கவிஞர் சு.வில்வரத்தினத்தினத்தின் மதிப்பீடு மனங்கொள்ளத்தக்கதாகும்.

அது அந்த நேரத்தின், சூழலின் பேரதிர்வுகளை சொல்கிறது. அக்கவிதைகளின் தாக்கம் மீட்டுப் பார்த்தலாக மாத்திர மின்றி மனதில் ஒரு வேகத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்த வல்லவையாக உள்ளன. இதே நேரத்தில் நடந்த நிகழ்வும் உண்மைச்சம்பவங்களும்ஓவியச்சுவர்போல் அவற்றின் பகைப்புலமாய் அமைந்துள்ளன. அதாவது அவற்றிற்கொரு அரசியல் உண்டு, சரித்திரமும் உண்டு. இவற்றின் பின்னணி தெரியாத போது அக்கவிதைகளின் வார்த்தைகளும் படிமங்களும் தனித்து எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பது நிச்சயிக்க முடியாத ஒன்று.

**வா**
**மீண்டும் முகாமிருளில்**
**முகமும் முகவரியும்**
**தொலையப் புதைவோம்**

**குடில்வாசலில் குந்தியமும்**
**வாப்பாவின் கன்னத்தில்**
**கண்ணீர்த்துளிகளாய் வடிவோம்**

**விடிவெப்போ என்றேங்கும்**
**உம்மாவின் மடியில் மறுபடி வீழ்ந்து**
**இன்னொரு தசாப்தம் பாரமாவோம்**

**முக்காடிட்டு மூலையில் முடங்கும்**
**மூத்தராத்தாவின் நெஞ்சுட் புகுந்து**
**நெடு மூச்சின் நெருப்பலைகளாவோம்.**

(முல்லை முஸ்ரிபா, இருத்தலுக்கானஅழைப்பு: 2003)

இது ஒரு கவிஞன் தனது வறுமையை அல்லது தனது ஊரின் வறுமையை உலகுக்குச் சொல்வதற்காக எழுதப்பட்ட கவிதையல்ல. 1990ல் வடபுலத்தில் இருந்து வெளியேற்றப் பட்டு புத்தள அகதி முகாம்களில் சீரழிவான வாழ்வைத் தொடங்கியவர்களின் விதியைப் பற்றிய வேதனைப் பாடல். ‘இருத்தலுக்கான அழைப்பு’ என்ற முல்லை முஸ்ரிபாவின் கவிதைத் தொகுதி எதிர்காலம் இழந்து புத்தளம் புதர்க்காடுகளிடையே முகாம்களில் வாழ நிர்பந்திக்கப்பட்டவர்களின் முகாரி ராகம்.

சேரனும் நுஃமானும் பாடிய ஆரம்பகால போர்ச்சூழல் மற்றும் நூலக எரிப்போடு ஒரு பிரிகோடு கவிதைப் படைப்புக்களிலும் உருவாகிறது. கவிதை வெளிப்பாட்டிலும் மென் உணர்விலும் ஈழத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய யுகம் தோன்றியதாக பேராசிரியர் கா.சிவத்தம்பி இக்காலப்பகுதியை வரையறுக்கின்றார்.

50 வருடகால ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய கட்டுரையில் கா.சிவத்தம்பி ஒரு விரிவான தளத்திலிருந்து 1980களுக்கு பிற்பட்ட போர்காலச் சூழலின் இலக்கியங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இது இலக்கியம் சார்ந்த விடயம் மட்டுமல்ல. போரையும் அதன் பன்முக விளைவுகளையும் அதனூடு விரவிக்கிடந்த வர்க்க, இன, அரசி யல் மோதல் கூறுகளையும் உள்ளடக்கியதாகும்.




குண்டு மழைபோல
வந்துபொழி வேளை
குஞ்சுகுரு மான்கள் ஓடுகாதல்
கொண்ட மனை தாயர்
தந்தை கிளை தோழர்
என்றஉற வேதும் நிலையாது
பஞ்சுபடும் பாடு
கொஞ்சமல நாளும்
நொந்துவரு வார்கள் துயர்காண
நெஞ்சுருகும், ஆறி
நின்றொருசொல் கூறு
முன்வருவி மானம் பலிகோரும்
எங்கள் பொருள் வீடு
எங்கள் தொழில் வாழ்வு
எங்கள் உயிர் ஏதும் எமதாமோ?
என்றநிலை மாற
இந்த இடர்தீர
என்றுமயில் ஏறி வருவாய்நீ
மங்கைதெய்வ யானை
குன்றிலுறை பேதை
என்றிருவர் சூழ ஏதமேறி
வந்து பணி கோடி
அன்பர்புகழ் பாட
வண்டமிழ் நல்லூரில் வருவோனே.

போரின் நேரடி விளைவுகளும் போருக்கான அரசியல் பொருளாதாரக் காரணிகளும் இனங்களுக்குள் குறிப்பாக தமிழ் - முஸ்லிம் உறவுகளிலும் பிராந்திய மட்டத்திலும் கூடத் தாக்கங்களை ஏற்படுத்தின. இவை போரின் தவிர்க்க முடியாத அங்கங்களாக வளர்ச்சியடைந்திருந்தன. இது நிதானமாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயம். அமைதி நாடும் எல்லோரதும் ஆதங்கமும் இந்த பிரச்சினைகளில் இருந்து மீட்சி பெறுவது எப்படி என்பதுதான்.

இவற்றில் கற்றுக் கொள்ளப் பாடங்கள் இருந்தன. இது எப்படி நிகழ்ந்தது? இது சோலைக்கிளி கூறும் 'பல்முளைத்த பனை கதை' போலத்தான் பல சமயங்களில் மன தைத் நெருடுகிறது எல்லோருக்கும்.

**தென்னை மரத்தை பனை மரம் அடித்துத் தள்ளியது**
**குலை தெறித்தது**

**அது சாக**
**உலகில் தேங்காயே இருக்கக் கூடாது**
**என்று கத்தியது**

**நுங்கு தள்ளிய பனை மரந்தான்**
**ஏனோ இன்று அதற்கு வெறி**
**ஓலைகளை ஒரு தரம் சடசடவென அடித்து,**
**பொத்தடா வாயை**
**என்று குட்டியது**
**இன்னொரு தென்னம் பிள்ளையை**

**எல்லாம்**
**ஒரு தோட்டத்தில் நின்ற மரங்கள்தான்**
**என்ன நடந்ததோ நான் அறியேன்**

என்று சோலைக்கிளியின் கவிதை தொடர்கிறது.

தமிழ் முஸ்லிம் மோதல் நிகழ்வுகள் இலக்கியத்திலும் தாக்கம் செலுத்திய பின்னணியினை ஒரு வகையீட்டு நோக்கில் கா.சிவத்தம்பி, நுஃமான்ஆகியோர்தந்துள்ள விளக்கங்கள் முக்கியத்துவமானவை ஆகும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்தை பின்வருமாறு வகுக்கலாம்.

(அ). துயரங்களிலும் அனுபவங்களிலும் காணப்படும் பிரதேச ரீதியான வேறு பாட்டை கவனத்தில் எடுப்பது. மட்டக்களப்பு அனுபவங்கள் யாழ்ப் பாணத்து, வன்னி அனுபவங்களில் இருந்து வேறு பட்டது.

(ஆ). கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தமிழ் மோதல்கள் வட மாகாணத்திலிருந்து வேருடன்பிடுங்கப்பட்டமுஸ்லிம்கள். இந்த அனுபவங்கள் நெஞ்சைப் பிளக் கும் கவிதைகளாகியுள்ளன.

கா. சிவத்தம்பியின் வார்த்தைகளிலேயே கூறுவதாயின் சோலைக்கிளி வேதாந்தி (சேகு இஸ்ஸதீன்) போன்ற கவிஞர்கள் பெரியதொரு தொடக்கத்தை கவிதை களில் உருவாக்கினர். ‘மறக்க முடியாத வார்த்தைகளால் சோலைக்கிளி தமது கவி தைகளைப் படைத்தார். அவரது மந்திர மொழியும் மிகை யதார்த்தப் படிமங்களும் எமது நினைவுகளை வேட்டையாடின’ (கா. சிவத்தம்பி).

‘1980ல் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தள வரைபடம் மாற்றமடைந்தது’ (கா. சிவத்தம்பி). 1985 வரை இன மோதல் பெரும்பாலும் தமிழ் - சிங்கள இனத்தவரிடையில் மட்டுமே காணப்பட்டது. 1985ல் முஸ்லிம்களையும் இனப்போர் உள்ளே கொண்டு வந்து விடுகிறது. (எம். ஏ. நுஃமான்) வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இது பிரதான பிரச்சினையாக உருவெடுத்தது. அதுவரை காணப்பட்ட இயல்பான பாரம்பரியமான தமிழ் - முஸ்லிம் உறவுகள் மோதல்களைச் சந்தித்தன.

பழைமையான கௌரவத்துக்குரிய உறவுகள் துண்டிக்கப்பட்டது போன்ற நிலை இது. அதாவது ‘வட கிழக்குப் பிராந்தியத்தில் மொழியால் உணர்வால் பிணைந்த தமிழ் - முஸ்லிம் உறவு நீண்டகாலப் பாரம்பரியமுடையதாக இருந்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் போ-ரின் விளைவாக போர்க்காலக் கவிதை இலக்கியம் முனைப்புக் கொண்ட ஆரம்ப காலங்களில், முஸ்லிம் கவிஞர்களது கவி தைகள் தமிழ் மக்களது அவலங்களை உரிமை மறுப்புக்களை ஆக்ரோஷத்தோடு வெளிப்படுத்தின’. (எஸ்.ஜி.எம். ஸதக்கா, 2002) ஆனால் இந்த உறவு நீடிக்கவில்லை.)

‘நிகழ்கால வரலாறு நம்பிக்கை தரக்கூடியதாயில்லை’ என்று கூறும் ஸ தக்காவின் மற்றும் சில வரிகள் அன் றைய மோசமான நிலையை நன்கு சுட்டிக்காட்டுகின்றன. வன்முறைகள் வெடித்தன. இரு புறத்திலும் போரில் ஈடுபட்டவர்களும் பொது மக்களும் பாரிய அழிவைச் சந்தித்தனர். கிராமங்களும் அழிக்கப்பட்டன. போரின் துரதிர்ஷ்டமான விளைவுகள் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் முஸ்லிம் உறவைப் பிரித்தது. அப்படியொரு

மோசமான சம்பவம் ஒன்றை சோலைக்கிளி தனது பாணியில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

இன்றும், மனதுக்குள் மலங்கழித்து விட்டது

**காற்று**
**இருபத்தி ஐந்துபேர்**
**அதில் ஏழு பேர் ஆண்கள்**
**பதின்மூன்று பெண்கள்**
**நாலு குழந்தை**
**ஒரு பிள்ளைத் தாய்ச்சியும் என**
**அது கழித்த மலம்**
**வயிற்றைக் குமட்டியது**
**ஐயோ!**
**வாகனத்தை மறித்தனர்**
**இறக்கினர்**
**இழுத்தனர்**
**இனம் இனமாகப் பிரித்தனர்**
**ஓர் இனம் போக ஓர் இனத்தை வெட்டினர்**
**குத்தினர், சுட்டனர்**
**பிள்ளைத்தாய்ச்சியை வெட்டி சிசுவை**
**எடுத்துத் தெருவில் நசித்தனர்**
**என்றெல்லாம் இன்றையக் காற்று**
**என் மனதுக்குள் கழித்த மலத்தில்**
**மனிதத்தின் நாற்றம் தாங்காமல்,**
**சூரியன் ஒருதரம் ஆடி நின்றது**
**அதன் கதிர்கள் சில**
**முறிந்து தொங்கின**
**குடையின் கம்பிபோல்**

இவற்றின் பிரதிபலிப்புக்களாக 1985க்குப் பின்னர் உருவான கவிதைகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளையும் அவர்களின் துயரங்களையும் கருப் பொருளாகக் கொண்டிருந்தன.

இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிம் தேசம் என்று முனைப்புப் பெற்ற அடையாளத் தேடல்கள் இலக்கியங்களிலும் பதிவா-கின. ஒடுக்கப்பட்ட லத்தீன் ஆபிரிக்க இனங்களின் இலக்கியம் போல் அமைவன-தான் இவ்விலக்கியங்களும் என்று முஸ்லிம் இளைஞர்கள் கோஷம் எழுப்பினர். போர்க்காலப் பாடல்களின் முஸ்லிம் பிரதிபலிப்பை இது உள்வாங்கியது.

பலஸ்தீனக் கவிதைகளின் வீறும் சாயலும் கொண்டனவாகப் பல நூறு கவிதைகள் தோன்றின. 'ஸெய்த்தூன்' இப்பாடல்களின் மினாராவாக வானம்வரை உயர்ந்து நின்றது. மலாலா ஒரு மலாலா அல்ல பல மலாலாக்கள். ஸெய்த்தூன் ஒரு ஸெய்த்தூன் அல்ல பல ஸெய்த்தூன்கள். அது உண்மை நிகழ்வாக இருந்தாலும் முஹம்மது தர்வேஷின் கவிதையின் முதற் பந்தியை வாசிப்பதைப் போல் அஷ்ரஃப் ஷிஹாப்தீனின் ஸெய்த்தூன் கவிதையும் பிரகாசித்தது.

**ஆவேசம் மிகுந்த – மெலிதான சோகத்தில்**
**ஸெய்த்தூன் பற்றிய துயரச் செய்தியை**
**இங்கு பகிர்ந்து கொள்கின்றனர்.**
**..................**
**எங்கள் ஸெய்த்தூன்**
**ஒரு அதிகாலை!**
**ஒரு பூவரசு மொட்டு**
**பௌர்ணமி ராத்திரிப் பனித்துளி**
**நயம் மிகுந்த நல்ல கவிதையின்**
**ஞாபகமூட்டல்**
**....................................**
**துப்பாக்கிகள் உரத்துப் பேசிய**
**ஓர் அந்திக் கருக்கலில்**
**அவளை நாங்கள் இழந்திருந்தோம்.**

மற்றொரு புறத்தில் வடபுலத்தில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்பட்ட செய்தி 1990களை அதிர வைத்தது. நம்பிக்கை வரட்சியில் முஸ்லிம்கள் உறைந்து போன காலம் அது. ஒரு பிரமை பிடித்த நிலை எங்கும் ஓடிப்பரவியது. கண்ணீர் அஞ்சலி போல் உள்ளத்தை நெருடும் உணர்வுகளுக்கு மயிலிறகு வருடல் போல் தமிழ் தரப்பில் இருந்து வந்த கவிதை மலர்களையும் மன்னிப்புக்களையும் முஸ்லிம் சமூகம் எப்படி மறக்கும்.

எனக்கு தெரிந்த வரை வ.ஐ.ச. ஜெயபாலன் அதில் ஒரு சரித்திரத்தையே

யுத்தங்களின் பொதுத்தன்மை எப்போதும் எல்லா இடங்களிலும் ஒன்றுதான். அழிவு, துயரம், கைசேதம் என இது தொடர்கின்றது. காலங்களும், ஆயுதங்களும், தொழில்நுட்பங்களும் மாறிச் சென்றாலும் இவை மாறுவதில்லை.

படைத்தார்.

**ஒடுக்குதல் ஒழிக எனப்பாடும் போதல்லாம்**
**எம் எழுச்சிப் பாடலை அபஸ்வரம் கிழித்தது.**
**விடுதலை என்று பாடும் போதெல்லாம்**
**எம் புரட்சிப் பாடலின் கரு குலைந்தது.**

**யார் சதி செய்பவன்**
**யார் எம் கனவிலும் மலத்தை எறிபவன்**
**யார் எம் தலையில் மண் போடுபவன்**
**பார்த்துச் சொல்லென**
**வானில் பறக்குமெம் கவிதையைக்**
**கேட்டோம்.**

.................................

**வீடு திரும்பும் வழியில்**
**புத்தளம் கரையில் பறக்கும்போது**
**தற்செயலாகக் கீழே பார்த்தது**
**கீழே பார்த்ததும் ஓவென அழுதது**
**தலையிலும் மார்பிலும் மோதி மோதி**
**ஒப்பாரி வைத்தது.**

.............................

**கீழே புத்தளத்து உப்புக்களரில்**
**முட்புதர்களிடை நிழல் காணாது**
**கண்ணீரோடு அலைந்த தெம்குடி**
**முஸ்லிம் என்று பழித்து**
**கச்சைத் துண்டையும் பறித்துக் கொண்டு**
**ஊரைவிட்டு நாமே விரட்டிய**
**நம் குடி**

*(மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள், 2002)*

1995ல் 'இந்தியா டுடே' சஞ்சிகையில் வாசித்து எனது மனதை நெகிழவைத்த இவ்வகையிலான முதலாவது கவிதை. இது போன்ற பல கவிதைகளில் தமது உணர்ச்சிகளை வெளியிட்டு ஜெயபாலன், சேரன், சி.சிவசேகரம் போன்றோர் தமது நட்பையும் அன்பையும் பரிமாறிக் கொண்டனர்.

**தூற்றினர் தமிழை என்றும்**
**துடித்திடும் சேதிகேட்டு**
**மாற்றலர் மண்ணில் பாய்ந்து**
**மானத்தைக் கல்லாய் மாற்றி**

என்று காசி ஆனந்தனும் புதுவை ரத்தின துரையும் தேச எழுச்சிப் பாடல்கள் யாத்துக் கொண்டிருந்தபோது தமிழின் எழுச்சி இலக்கியத்தில் பலஸ்தீனப் பாடல்கள் புதிய இரத்தம் பாய்ச்சியதை எப்படி மறக்க முடியும். புரட்சிக்குள்ளும் போருக்குள்ளும் முடங்கிப் போயிருந்த மக்கள் வாழ்வையும் உணர்வுகளையும் இன்னொரு வகையில் பேசும் புதிய கருப்பொருள்களும் கவிதைப் படிமங்களும் கொண்ட மறுமலர்ச்சி போர்க்கால பாடல் யுகம் தமிழில் உதயமாகியது.

**எந்தன் ரொட்டியைப்**
**பறிகொடுக்க நேர்ந்தாலும்**
**உணவு தேடி**

ஊத்தைகளைக்
கிளறுவதற்கு நேர்ந்தாலும்
மனிதனின் விரோதியே
விட்டுத் தரமாட்டேன்

முற்றுமுழுதாய் – என்
மண்விழுங்கி ஏப்பமிடு,
முது சொத்தைச் சூறையிட்டென்
புத்தகங்கள் தீயிலிடு
என் பீங்கான் தட்டுக்களில்
நாய்களுக்குத் தீனியிடு
என் கிராமக் கூரைகளில்
கண்ணிவைத்து வேட்டையாடு
விட்டுக் கொடுக்க மாட்டேன்.

(சமீ அல் - காசீம், மொ.பெ: பண்ணாமத்துக் கவிராயர், மல்லிகை, 1976)

எஸ்.எம். பாரூக் (பண்ணாமத்துக் கவிராயர்) எம்.ஏ நுஃமான் போன்ற சிலர் பலஸ்தீனக் கவிதைகளை தமிழில் தந்து போர்க் காலப் பாடல்களுக்கு புது இரத்தம் பாய்ச்சினர். எம்.ஏ நுஃமானின் 'பலஸ்தீனக் கவிதைகள் மொழி பெயர்ப்பு' (1981) இவற்றுள் ஒரு முக்கிய படைப்பென குறிப்பிடப்பட வேண்டும். இளைஞர்கள் மத்தியிலும் கவிஞர்கள் இடையேயும் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய இத்தொகுதி அரசின் சந்தேகத்திற்கும் இலக்காகியது. 1980களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இளைஞர்கள் நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகளில் இருந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்து மேடைகளில் முழங்கினர். போரின் குரூரத்தையும் போரின் துயரங்களையும் கவிதையில் சொல்ல அவ்வறபுப் பாடல்கள் புதிய பாடங்களை கற்பித்துத் தந்தன.

இரவில் படையினருக்கு கட்டளை வந்தது
எங்கள் அழகிய கிராமம்
செய்த்தாவை அழித்திடுமாறு
செய்த்தா
மரங்களின் மணமகள்
முகை அவிழும் மலர்ச்சோலை
காற்றுக்களின் தீப்பொறி
......................
இருளில் படையினர் வந்தனர்
....................
'கட்டளை இதுதான்
விடியுமுன்னர் செய்த்தா அழிக்கப்படும்
எல்லோரும் வெளியேறலாம்'
ஆயினும் நாங்கள்
இறுகப் பற்றி அணைத்து நின்றோம்
பாடினோம்: செய்த்தா எங்கள் பூமி
பூமியின் இதயம்
நாம் அதன் கிளைகள்
........ (சுலஃபா ஹிஜாவி, பலஸ்தீனக் கவிதைகள், 2008)

ஆனால், 1985களின் பின்னர் என்ன நடந்தது? யுத்தம் எல்லாவற்றையுமே மாற்றி எழுதியது. யுத்தத்தின் கொடூரம் அதன் கொலை வெறி மட்டுமல்ல ஆயிரம் ஆண்டுகள் அமைதிக்குள் சல்லாபிக்கும் மக்கள் குழுமங்களையும் மோதவிட்டு அதற்கு நியாயம் கற்பிக்கக்கூடியது. தோமஸ் ஹார்டியின் 'யுத்தம் ஒரு முரண்நகை' என்பதைத்தான் உறவுகளை வளர்க்க விரும்பும் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் எதிர்காலப் பாடமாகக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளது.

**உசாத்துணைகள்:**

அஷ்ரஃப் சிஹாப்தீன், ஸதக்கா ஏ.ஜி.எம், நளீம் எஸ், (2002), 'மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்', உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, கொழும்பு

முல்லை முஸ்ரிபா, (2003), 'இருத்தலுக்கான அழைப்பு', கொத்தாந்தீவு: இலங்கை.

பண்ணாமத்துக் கவிராயர், (1996), 'காற்றின் மௌனம்' மலையக வெளியீட்டகம் : கொழும்பு.

இத்ரீஸ் ஏ.பி.எம் (பதிப்பாசிரியர்), (2012) 'ஏ.ஜி.எம் ஸதக்கா - எழுத்தின் புன்னகை', காகம் வெளியீடு, வாழைச்சேனை : இலங்கை

நுஃமான் எம்.ஏ, (2008), 'பலஸ்தீனக் கவிதைகள்', அடையாளம், திருச்சி, தமிழ்நாடு.

உண்மைக் கதை

# அம்மாளைக் குடம்பிடுகிறானுகள்

சிறுகதை

**வா**ழ்க்கையில் கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் இங்கேதான் படிக்க வருகிறார்கள். விவேகானந்தா மகளிர் வீத்தியாலயத்தில் அட்டகாசங்கள் இல்லை. ஏழ்மையின் நொந்துபோன உள்ளங்களுக்குக் கிளுகிளுப்பு ஏது? பெரிய இடத்துப் பெண்களின் கூச்சலையும், பாய்ச்சலையும் இங்கே பார்க்கமுடியாது. காற்று வீசி அலை கிளப்பாத நேரத்தில் மட்டக்களப்பு ஏரி எப்படி அமைதியாக இருக்குமோ, அப்படித்தான் அந்தப் பள்ளிக்கூடமும் இருந்தது.

யோகராணி புத்தகங்களோடு பள்ளிக் கூடத்தை விட்டுத் தெருவில் இறங்கினாள்.

நீண்ட தூரம் குனிந்த தலை நிமிராமலே நடந்தவள்.... தூரத்தில் வந்த சிறீலங்காப் படையின் 'ட்றக்' வண்டியைப் பார்த்து, பக்கத்தில் இருந்த வீட்டுக் 'கடப்பின்' உள்ளே 'விர்' என்று நுழைந்தாள். 'வா புள்ள' என்று அழைத்து ஒரு பெரியவர் அவளை முற்றத்தில் உட்கார வைத்தபோது, யோகராணிக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

"ஆமிக்காறனுகள் வாறானுகள்" என்று சுருக்கமாக அவள் சொன்னாள். 'ட்றக்' வண்டி உறுமிக்கொண்டே பெரியவரின் வீட்டைக் கடந்து போயிற்று.

சிங்களப் படை ஊர்களை வளைத்துக் கொண்டு தமிழ்ப் பெண்களைக் கற் பழிக்கும் கொடுமைகளை யோகராணி அறிந்திருந்தாள். இல்லையென்றால் முன் பின் தெரியாத பெரியவர் வீட்டுக்குள் திடுதிப்பென்று நுழை-வாளா? "திருகோணமலை யிலையும் கனக்கப் பொ டிச்சிகளை பழுதாக்கிப் போட்டானுகளாம் அறுவான் கள்....." என்று, யோக ராணியின் அச்சத்தைப் புரிந்துகொண்ட கிழவர் ஆத்திரத்தோடு உறுமினார். யோக ராணி வீட்டுக்குப் போக எழுந்ததும் 'கடப்பு' வரை வந்து "கவனமாகப் போ புள்ள.... சண்டாளனுகள் குறுக்காலையும் நெடுக்காலையும் திரியுறானுகள்" என்று கூறி, அக்கறையோடு அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

யோகராணி இப்படித்தான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போய் வருகிறாள். தமி ழீழ மக்களின் இழிந்த அடிமைநிலை, பத்தாம் வகுப்புப் படிக்கும் அவளை உலுப்பிற்று. பள்ளிக்கூடம் போகும் வழியில் எத்தனை வீடுகள் எரிந்து சாம்பலாகிக் கிடக்கின்றன. இதே தெருவில் பல குடும்பங்களைச் சேர்ந்த 'பொடியனுகள்' விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, தாய்மண்ணுக்காகப் போராடிப் பிணங்களாய் விழுந்ததை அவள் எண்ணிப் பார்த்தாள். எத்தனை பேர் 'பூசா' முகாமில் அடைபட்டு.....!

யோகராணியின் கண்களில் நீர் தளதள என்று நிரம்பிற்று. வீட்டுக்கு வந்ததும் புத்தகங்களை மேசையில் எறிந்துவிட்டுத் தாயைப் பார்த்து அவள் சொன்னாள்:

"அம்மா.... இனி என்னால பள்ளிக்கு போக ஏலாது......"

தமிழரின் நாற்பது ஆண்டுகால விடு தலைப் போரில் ஆரையம்பதி என்றைக்குமே பின்நின்றதில்லை. மட்டக்களப்பு நகரில் இருந்து ஐந்து கல் தொலைவில் இருக்கும் இக்கிராமம், 'அஹிம்சை' வழியில் தமிழர்கள்

‘செல்வா’ தலைமையில் போராடிய காலத்திலும் சரி - சிங்கள இனவாதிகளுக்கும் அகிம்சைக்கும் தொடர்பே இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, ‘பிரபா-கரன்’ அந்த வெறியர்களை எதிர்த்துத் துப்பாக்கிகளோடு போராடும் இன்றும் சரி - களத்திலேயே நிற்கிறது. மட்டக்களப்பில் இதுதான் பெரிய கிராமம். மீன்பாடும் மட்டுநகர் ஏரியோடு ஒட்டினாற்போல் ‘ஆத்தங்கரையில’ அமைந்த இக்கிராமம், அழகாகவே இருக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் ‘செல்வா நகர்’ என்ற புதிய கிராமம் ஒன்றை இவ்வூர் மக்கள், ஆரையம்பதிக்குப் பக்கத்திலேயே உருவாக்கியிருக்கிறார்கள்.

‘செல்வா நகரில்’தான் யோகராணியின் வீடு. அவளுடைய குடும்பம் பெரியது. அப்பா செத்துப்போனார். ஏழு பேரைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு தாய்க்கு இருந்தது. மூத்தவர்கள் எதை-யோ உழைத்துவர வெளியே போய் வந்து கொண்டிருக்கிறார்கள். பத்தொன்பது வயது யோகராணி பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் உதறிவிட்டு வீட்டில்தான் கிடக்கிறாள். பொழுது போவதே இல்லை. அடிக்கடி சிங்களப்படை வெறியர்கள் ஆரையம்பதியை வளைத்துக் கொள்வார்கள். அந்தக் கிராமத்தில் துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டுக்கொண்டே இருந்தது.

“புலிப் பொடியனுகளுல ஒருவனைச் சுட்டு - சவத்த சிங்கள ‘ஆமி’க்காறனுகள் கட்டி இழுத்துற்றுப் போறானுகளாம்.....”

யாரோ ‘ஓ’ என்று அழும் ஓசை கேட்கும். அச்சமும் நடுக்கமுமாய்......

❍ ❍ ❍

*1987* ஜூலை *29*இல் இந்திய - சிறீலங்கா உடன்படிக்கை ஏற்பட்டபோது, வேகமாக ஓடிய ஒரு வண்டி திடீரென்று நின்றுவிட்டது போலவே தோன்றிற்று.

ஆரையம்பதி ‘செல்வா நகர்’ மக்கள் அசைந்து போனார்கள் யாருக்காக யார் உடன்படிக்கை செய்வது? அரசியல் தெளிவு மிக்க அம்மக்கள், உடன்படிக்கையில் எதுவுமே இல்லை என்பதை உறுதியாகவே தெரிந்து கொண்டார்கள் பிரபாகரனின் ‘சுதுமலைப் பேச்சு’ அவர்களை உணர்ச்சிவசப்படுத்தியது; அதே வேளை விழிப்பாக இருக்கவும் செய்தது.

ஊரில் காந்திகாலக் கதை தெரிந்த ஒரிரு கிழவர்கள் இந்தியப் படை வந்ததில் நம்பிக்கை பெற்றார்கள். என்பதும் உண்மை. “எப்படியோ இனிமேல் சிங்கள ‘ஆமி’க் காறனுகளுற ‘அட்டாதுட்டித்தனங்கள்’ நடக்காது தம்பி” என்று பேரனைப் பார்த்துப் பெருமையோடு சொல்லிக் கொண்டார் ஒரு கிழவர்.

தெருக்களில் இந்தியப் படையின் கரும்பச்சை ‘ட்றக்’ வண்டிகள் பறக்கத் தொடங்கின.....

❍ ❍ ❍

கண்ணகி பிறந்த சோழநாட்டிலும் - வழக்குரைத்த பாண்டிய நிலத்திலும் - மறைந்த சேர மண்ணிலும் கண்ணகி கோயில்களைக் காண்பது அரிதாக இருந்தாலும், மட்டகளப்பில் கண்ணகி கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை. தமிழீழத்தின் இந்தத் தென்பகுதியில்தான் இன்று கண்ணகி வழிபாடே உயிரோடு வாழ்கின்றது ஒரு ‘மனிதப் பெண்ணை’ - அவள் கற்பின் மாண்பை - மட்டக்களப்பு மக்கள் போற்றி வழிபடுகிறார்கள். ஒவ்வொரு வைகாசித் திங்களிலும் கண்ணகி திருவிழா தடபுடலாக நடந்து, ‘குளிர்த்திச் சடங்கோடு’ நிறைவு பெறுகிறது.

ஆரையம்பதியிலும் ‘கண்ணகி கோயில்’ உண்டு. சிறிய கோயில்தான் - ஆனால் கோயில் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும்: பெண்களுக்குக் குறைவில்லை கோயிலின் மணல் முற்றத்தில் பிள்ளைகளின் விளையாட்டு ஒரு பக்கம் நடக்கும். அங்கும் இங்குமாக நான்கு பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள்.

யோகராணி கண்ணகி கோயிலுக்குள் நுழைந்தபோதே தன்னை மறந்தவளாய்த் தான் நுழைந்தாள்.

"அம்மாளே! இவ்வளவு நாளும் எங்கட ஊருல ஒரு பெண்ணுக்கும் தீங்கு வராம காப்பாத்துனியே, உன்னை ஒரு நாளும் மறக்கமாட்டம் தாயே..... இனி எங்களுக்கு ஒரு கேடும் வராது.... இந்தியப் படை வந்திருக்குது."

யோகராணியின் கண்களில் நீர் கசிந்து 'பொலபொல' என்று கொட்டிற்று.

அவள் அழுதாள்.

ஆற்றங்கரையில் நண்டு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போக வந்த மூன்றாம் குறிச்சி வாத்தியார் தெருவில் நின்று உரத்தகுரலில் சொன்னார்.



"விடுதலைப் புலிகள்ற 'நிதர்சனம்' நிலையத்தையும் 'ஈழமுரசு', 'முரசொலி' பத்திரிகைக் கட்டிடத்தையும் இந்தியப் படை யாழ்ப்பாணத்துல குண்டு வச்சுத் தகர்த்துப் போட்டுதாம்.... விடுதலைப் புலிகள் திருப்பி அடிக்கத் தொடங்கிற்றானுகளாம்.... எத்தனை நாளைக்குத்தான் பொடியனுகளும் பொறுப்பானுகள்? அவன் பொடியன் திலீபனையும் - அவன் குமரப் பாவையும் - அவன் புலேந்தியையும் மத்தப்பொடியனுகளையும்இவனுகள்தானே சாகவச்சவனுகள்....."

வாத்தியார் பேசிக்கொண்டிருந்த போதே, இந்திய 'ட்றக்' வண்டி ஒன்று தெருவால் சீறிக்கொண்டு போயிற்று. தெருவில் நின்றவர்கள் எல்லோருமே அந்த வண்டியின் வழக்கத்துக்கு மாறான வேகத்தைக் கவனிக்கத் தவறவில்லை. பழையபடி அவர்கள் நெஞ்சில் அச்சம். தலை தூக்கிற்று.

வாத்தியார் தொடர்ந்தும் பேசிக் கொண்டுதான் இருந்தார்......

"திருகோணமலைப் பகுதியில சிங்களவனுகள ஆயிரக்கணக்கில் குடியேத்துறானுகளாம். இதுக்குத்தானா உடன்படிக்கை"?

'ட்றக்' வண்டி சுற்றிக்கொண்டு திரும்பவும் அதே இடத்தில் வந்து நின்றது. வண்டியில் இருந்த முரட்டு இந்தியப்படை வெறியன் ஒருவன் 'அரைகுறைத்' தமிழில் கத்தினான். "டேய்.... றோட்டுல நில்லாதீங்கடா...... நீ எல்லாம் புலிகள் தானே.....?"

எல்லோரும் சிதறிக் கலைந்துபோகத் தொடங்கினார்கள்.

வாத்தியாரும் தான்.

ஆனால் அவர் போகும்போதும் - பேசிக் கொண்டே போனார்.

"நாம அடிமைகளாக இருக்குமட்டும் நாலு பேரும் உதைப்பானுகள். நம்மள நாமளே ஆளவேணும். அதுமட்டும் நமக்கு உதைதான்..... வெடிதான்.... சாவுதான்"

*1987* ஒக்ரோபர் *10*ஆம் நாள் தொடங்கிய இந்தியப் படை - விடுதலைப் புலிகள் சண்டை, நாளுக்குநாள் பெரியதாயிற்று ஓர் எதிரி நாட்டு அரசுப் படையை மோதுவது போலவே, விடுதலைப் புலிகளை இந்தியப் படைகள் மோதின விடுதலைப் புலிகள் தளர்ந்துவிடவில்லை. உலகின் அந்த நாலாவது பெரிய அரசின் படைகளை எதிர்த்து, அவர்கள் உறுதியாகவே போராடினார்கள்.

"கல்லடியில வீடு வீடா சோதனை போடுறானுகளாம். நாளைக்குச் செல்வா நகருக்கு வந்தாலும் வருவானுகளாக்கும்...."

தெருவில் சேதி அடிபட்டது.

யோகராணி இடிந்து போனாள். அவள்

நெஞ்சு பட படத்தது.

வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து தாயும் பிள்ளைகளும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

எங்கோ தொலைவில் யாரோ ஒருவன் 'தண்ணியில்' வாய்கிழியக் கத்திப் பாட்டுப் பாடுவது கேட்டது. இரவு மாடுகள் வேலி யில் உராய்த்துக் கொண்டு போயின. வீதியில் எரிந்த மின்விளக்கு வெளிச்சம் வேலிச் செடி-களைத் தாண்டிப் பொட்டுப் பொட்டாக விழுந்து கொண்டிருந்தது. தூரத்தில் அடிக்கடி துப்பாக்கி வேட்டோசைகளும் கேட்டன.

'அமைதி'யின் உடல் துண்டு துண்டாய்க் கிழிந்து கிடந்த அந்த இரவில், ஒரு பிணத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பேசுவது போலவே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ட்றக்குல போற நேரத்துல நல்லாச் சிரிக்கிறதும் - கையைக் காட்டுறது மாகத்தானே திரிஞ்சுவனுகள். இவனுகள் இந்த மாதிரி இருப்பானுகள் எண்டு நாம் நினைக்கல்லியே..... 'சத்துருக் கொண்டானு'ல பொம்புளையள எல்லாம் கெடுத்துப் போட் டானுகளாம்...."

பக்கத்து வீட்டுப் பிள்ளை சொன்ன சேதியை யோகராணி சொன்னாள்.

"ஏனம்மா சிங்கள வனுகளுட 'ஆமி'யும் இந்தியாட 'ஆமி'யும் ஒண்டுதானா?" என்று தாயைப் பார்த்துக் கேட் டாள் சின்னவள்.

தாய் போராட்ட உணர்வோடும், அதே வேளை பெரு மூச்சோடும் கூறினாள்.

"எனக்கெண்டாத் தெரியா-மனே.... பாவம்.... இவனுகள் விடுதலைப் புலிகளை அழிக்கிற எண்டா எவளவு மனவருத்தமா இருக்குது. நமக்காகத்தானே அவ னுகள் செத்தவனுகள். 'இயக்கமோ' என்னவோ எண்டு சொல்லித்து ஆரோ நம்மடவனுகள் தான் காட்டிக் கொடுக்கானுகளாம். சன மெல்லாம் சொல்லுது."

அவர்கள் இரவு முழுதும் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஒரு வெ-ளவால் மாமரத்தில் மோதிக்கொண்டு பறந்து போயிற்று.

நொவெம்பர் 23 காலை அந்த வீட்டில் எல்லோரும் சோர்வுடனேயே இருந்தார்கள். இரவு தூங்காமல் யோகராணியின் முகம் காய்ந்துபோய் இருந்தது. வழக்கமான காலை வேலைகளை முடித்துவிட்டு, அவள் அம்மாவுக்குக் 'கோப்பி' போட்டுக் கொடுத்தாள். அம்மாவும் மற்றவர்களும் வேலைக்குப் புறப்பட்டார்கள்.

யோகராணி கொஞ்ச நேரம் முற்றத் துக்கு வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே அசைவற்று நின்றாள். பெரியவர்கள் யாருமே வீட்டில் இல்லை என்பதை நினைக்க அவளுக்கு நடுக்கமாக இருந்தது.

இருவர்தான் அவளோடு வீட்டில் இருந்தார்கள். ஒருத்தி சின்னத் தங்கச்சி; இன்னொன்று அவளுடைய நாலு வயதுக் குஞ்சு மருமகள். இவர்கள் ஒரு துணையா பாதுகாப்பா?

கிணற்றடிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து தலை வாரிக்கொண்டிருந்தவள் தெருவில் யாரோ ஒரு சிறுவன் 'இந்தியப் படை வருகுதாம்' என்று கத்திக்கொண்டு ஓடியபோது, அசந்து போனாள்.

வெளியே தெருவில் ஆட்கள் வேகம் வேகமாக நடப்பதும் ஓடுவதும் தெரிந்தது.



மோட்டார் சைக்கிள் வண்டியில் போன ஒருவன்,

"முதலாம் குறிச்சிச் சந்தியில 'லொறி'களை எல்லாம் கொணர்ந்து உட்டுத்து இந்தியாக்காற 'ஆமி' நிக்குதாம். ஊருக்குள்ள வாறானுகள் போலக் கிடக்கு........" என்று உரத்துச் சொல்லிக் கொண்டே வண்டியை விரைவாக ஓட்டினான்.

யோகராணிக்கு உடல் கொதித்தது. அவள் படபடத்தாள். வியர்வை வியர்வை யாய்க் கொட்டிற்று.

ஊரில் ஒரு பெரிய அமைதி நிலவு-வதை அவள் கவனித்தாள். மாலையில் பறவைகளெல்லாம் ஓடி அடங்குமே .... அப்படித்தான் செல்வா நகர் ஓடி அடங்கி ஓய்ந்து கிடந்தது.

யோகராணி என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக்குள்ளேயே இங்கும் அங்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

அப்போது நேரம் 10 மணி.

நாய்கள் தொடர்ந்து குரைக்கும் ஓசை ஒவ்வொரு நொடிப்பொழுதும் பக்கத்தில் நெருங்கிவருவதை அவள் கேட்டாள். இப்போது அவளுடைய தெருவிலேயே நாய்கள் குரைக்கத் தொடங்கிவிட்டன.

யோகராணி வேலிப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள்...... இந்தியப் படைவெறியர்கள் இருவர் வேலிப் 'படலை' யைத் திறந்து, அவள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

பக்கத்திலே வந்ததும், ஒரு முரடன் அவளை விழுங்கி விடுவது போலவே பார்த்தான். யோகராணி ஒடுங்கிப் போனாள்.

வெறித்தனமான அவன் கண்களும் - காவி படிந்த அந்த அசிங்கமான பற்களின் முரட்டுச் சிரிப்பும் - அவள் நெஞ்சைக் குத்தி வதைத்தன.

"வீட்டில ஆம்பிளைகள் யாரும் இல்ல....." என்று கள்ளம் கபடம் இல்லாத அவள், அந்த முரட்டு இந்தியப் படைவெறியர்களைப் பார்த்துச் சொன்னாள். விடுதலைப் புலிகளைத்தானே தேடுகிறார்கள்....இப்படிச் சொன்னால் அவர்கள் போய்விடக்கூடும் என்பது அவள் நினைப்பு.

ஆனால்.......

வெறியர்கள் அவளை விலங்குத்தனமாக நெருங்கினார்கள்.

யோகராணியின் கையைப் பற்றி ஒருவன் இழுத்த போது "அக்கா" என்று கத்திய சின்னத் தங்கச்சியை, அடுத்தவன் 'கொற கொற' என்று இழுத்துக் கொண்டு போனான்.

யோகராணி நடுங்கினாள்.

அவளைக் கீழே தள்ளி அவளுடைய மார்புச் சட்டையைக் கிழித்தான் அந்த நெட்டை வெறியன். வானம் தலை கீழாகிக் கொண்டிருந்தது. அவளுடைய இரண்டு கால்களையும் முரட்டுக் கைகளால் வெறித்தனமாகத் தள்ளி....

"கண்ணகி அம்மாளே!" என்று ஓங்கிக் கத்தினாள் யோகராணி.

அவள் நினைவாற்றல் கொஞ்சம் கொஞ்சமாய் மங்கிப் போயிற்று.

ஒருவன் அவளை விட்டு நிமிர்கிறான். அடுத்தவன் தொடர்ந்து.....

கண்களைத் திறந்தபோது யோகராணி ஒரு சிறிய மருத்துவ நிலையத்தில் இருந்தாள் மருத்துவர்கள் அவள் உடலைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"கொல்லாம இந்த அளவோட விட்டுத்துப் போனானுகளே... 'பொடிச்சி'ர நல்ல காலந்தான்....." என்று, மருத்துவ நிலையத்துக்கு வெளியே ஒரு கிழவி பெருமூச்சோடு சொல்லிக்கொண்டாள்.'

கட்டிலில் கிடந்த யோகராணியின் கண்களில் நீர் பொங்கிற்று.

நினைவு வரும்போதெல்லாம் உயிருள்ளவரை இனி அவள் செத்துச் செத்துத்தானே......

கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து அச்சத்தோடு "சண்டாளனுகள் ஊரைவிட்டுப் பொயிற்றானுகளா?" என்று கேட்டாள் அவள்.

ஒரு பெரியவர் சொன்னார்.

"நான் வரக்குள்ள கண்ணகி கோயில-டியில 'ட்றக்' வண்டி நிக்குது. அம்மாளைக் கும்பிடுறானுகள் போல கிடக்கு!"

❍ ❍ ❍

# கருத்தானம்



**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

**முன்னுரை**

உலகம் இறைவனின் விசித்திரப் படைப்பு,
இன்பம், துன்பம் என இருவகைப்பட்ட அனுபவங்கள்,
உலக நடைமுறையில் அன்றாடம் பதிவாகின்றன.
மனத்தால் வெறுக்கப்பட்டாலும்,
இன்ப அனுபவங்களை விடத் துன்ப அனுபவங்களே,
புத்தியில் ஆழப்பதிகின்றன.
அப்பதிவுகள் காலம் கடந்தும் அழிய மறுக்கும் ஆற்றல் கொண்டன.
இதயமும், புத்தியும் விரும்பாத போதிலும்,
அத் துன்ப அனுபவம் தரும் அதிர்வுகள்,
ஓயாமல் உள்ளேயே சுழன்று நிற்பது ஓர் அதிசயம்!
வெறுப்பூட்டும் அவ் அனுபவங்கள் பதிவாகும் போது,
சுவை மிக்க இலக்கியப் பதிவுகளாய் அவை பரிணமிக்கும் வாய்ப்புள்ளது.

❍ ❍ ❍

1983 இல் இனக்கலவரம் வெடித்ததிலிருந்து,
1995 இல் யாழ் குடாநாடு இராணுவத்தின் கைவயப்பட்டது வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததால்,
மேல் துன்ப அனுபவங்கள் பல என் நெஞ்சில் ஆழப் பதிவாகின.
இனக்கலவரம், தொடர்ந்த இயக்கங்களின் வளர்ச்சி,
குடாநாடு இயக்கங்களின் கைவயப்பட்டமை,
இயக்கங்களுக்கிடையிலான மோதல்,
புலிகளின் தனித்த நிர்வாகம், குடாநாட்டின் மேல்
இலங்கை அரசு தொடுத்த போர்,
இந்திய இராணுவ வருகை, இந்திய இராணுவத்துடனான புலிகளின் மோதல்,
இந்திய இராணுவ வெளியேற்றம், அதன் பின் விளைந்த சமாதானச் சூழல்,
மீண்டும் போர் என்பனவாய், அடுத்தடுத்து ஏற்பட்ட சம்பவங்களால்,
எனக்கேற்பட்ட அனுபவங்கள் பல.
அவற்றுள் நான் அழிக்க நினைந்தும் அழிய மறுக்கும்,
சில அனுபவங்களை ஒரு நோக்கத்தோடு இங்கு பதிவு செய்கிறேன்.
அந்நோக்கம் பற்றி பின் உரைப்பேன்.

❍ ❍ ❍

**காட்சி-1**

1985 என்று ஞாபகம்.
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஏதோ அலுவலாய் நடந்து கொண்டிருக்கிறேன்.
ஒடுக்கமான அவ்வீதியில் எப்போதும் சனக்கூட்டம் நிறைந்திருக்கும்.
எரிபொருள் தட்டுப்பாட்டால் வாகனங்கள் குறைந்து விட்ட காலமது.
மண்ணெண்ணெயில் ஓடிய எஞ்சி இருந்த சில வாகனங்களும்,
இவ்வீதியில் மெதுவாகவே ஊர்ந்து செல்லும்.
அவ் விதிக்குமாறாய் அன்று ஒரு லொறி,
தொடர்ந்து 'ஹோன்' அடித்தபடி மின்னல் வேகத்தில் அவ்வீதியுள் நுழைந்தது.
அது இட்ட சத்தத்தையும், அதன் வேகத்தையும்

கண்டு சனமெல்லாம் கரை ஒதுங்க,
உயிர்காக்கும் எண்ணத்தோடு நானும் பாய்ந்து வீதி யின் கரையில் ஒதுங்கினேன்.
அந்த லொறி என்னைக் கடந்து சென்றது.
அதன், பின் கதவு திறந்திருக்க,
அதனூடு தெரிந்த காட்சி இரத்தத்தை உறைய வைத்தது!

❍ ❍ ❍

பட்டுவேட்டி, பட்டுச்சட்டை கழுத்தில் மாலை என்பவற்றுடன்,
மாப்பிள்ளைக் கோலத்தில் ஓர் இளைஞன்,
லொறியின் பின் பகுதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.
அவன் அருகில் ஓரிரு போராளிகள்.
விழுந்து கிடந்த அவ் இளைஞனின் மேல்,
கூறைச்சேலை, சடைநாகம், உச்சிப்பட்டம்,
மின்னும் புதுத்தாலி என்பவற்றுடன்,
மணக்கோலத்தில் இருந்த ஒரு பெண் விழுந்து கதறிக்கொண்டிருந்தாள்.
லொறியின் வேகம் காட்சியை வினாடியாய் எல்லைப்படுத்தியது.
ஆனாலும் அவ் வினாடிக்காட்சியில் அவ் வீதியே ஸ்தம்பித்தது.

❍ ❍ ❍

மங்கல நிகழ்வுகள் பல பார்த்திருக்கிறேன்.
அங்ஙனமே அமங்கல நிகழ்வுகள் பலவும் கண்டிருக்கிறேன்.
ஆனால் மங்கலத்தில் அமங்கலமாய் ஒரு காட்சி கண்டது அன்றுதான்.
அடுத்தடுத்த வீடுகள், பத்துவருடக் காதல்.
சாதி வித்தியாசத்தால் தடைப்பட்ட திருமணம்.
காதலர்களின் பிடிவாதத்தின் பின்னான பெற்றோரின் சம்மதம்.
இவ்வளவும் நிகழ்ந்ததன் பின் அன்று காலை திருமணம் நடந்ததாம்.
கோயிலில் தாலி கட்டி வீடு வந்து சேர்ந்த தம்பதியினர் தனி அறையில் விடப்பட்டனராம்.
காதலன் குடிக்க நீர் கேட்க காதலி குசினியினுள் சென்றாளாம்.
அப்போது இராணுவம் ஏவிய ஷெல் தம்பதியர் அறையினுள் விழுந்து வெடிக்க,
கணவன் பிணமானானாம்.
சம்பவத்தை வீதி விபரித்தது.

❍ ❍ ❍

**காட்சி-2**

கல்வியங்காடு இராஜவீதி,
ஒரு காலைப்பொழுதில்,
ஏதோ அலுவலாய் அந்தப்பக்கம் போன எனது கண்ணில் விழுந்தது ஒரு காட்சி.
பள்ளிச் சீருடையோடு ஒரு அழகான குழந்தை.
அதற்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கலாம்.
தாயும், தந்தையும் சீராட்டியதிலிருந்து ஒரே பிள்ளை அது எனத் தெரிந்தது.
தந்தையின் சைக்கிள் பின் ‘கரியரில்’ ஏற்றி விட்டு,
திரும்பத் திரும்ப முத்தம் கொடுத்து,
அனுப்ப மனமில்லாமல் பிள்ளையை அனுப்பிக்கொண்டிருந்தாள் அவ்விளந்தாய்.
காலைப்பொழுதில் தாய்மையின் நெகிழ்வு கண்ட சிலிர்ப்போடு,
நண்பரின் வீடு போய்ச் சேர்ந்தேன்.
திடீரென மேலே போர் விமானம் கழுகாய்ச் சுற்ற,
நண்பர் வீட்டில் இருந்த பதுங்கு குழியினுள் புகுந்து கொள்கிறேன்.
மிக அருகில் குண்டுகள் விழும் சத்தம்.
உயிர் நடுங்க ஒளிந்திருந்து விட்டு,
விமானச்சத்தம் ஓய்ந்ததும் நண்பரிடம் விடைபெற்று வீடு நோக்கி விரைகிறேன்.
ஓர் பாடசாலையின் வாசல்,
அவலச்சத்தங்கள், பரபரக்கும் மக்கள் கூட்டம்,
என்னை அறியாமல் அவ்விடத்தை நெருங்கிவிட்டேன்.
விமானம் வீசிய குண்டொன்று அவ்விடத்தில் வீழ்ந்திருந்தது.
பாடசாலைக் குழந்தைகள் பலரது உடல்கள்

சிதறிக்கிடந்தன.
கைகள், கால்கள் என அவயவங்கள்
தனித்தனியாய்,
எதிரியும் காணக் கூடாத காட்சி!
வெலவெலத்துப் போனேன்.
திடீரென ஒரு பெரும் ஓலச்சத்தம்.
“என்ர ராசா” நான் காலையில் கண்ட இளந்தாய்,
வீட்டில் நின்ற உடையோடு ஓடி வந்து
கொண்டிருந்தாள்.
அவள் கண்களில் பயமும், சோகமும்,
தன் பிள்ளைக்கு ஏதும் நடந்திருக்கக் கூடாது என்ற
பதட்டத்தில் அவள் கால்கள் தடுமாறின.
விழுந்து கிடந்த குழந்தைகளின்
உடல்களையெல்லாம் நிமிர்த்தி நிமிர்த்திப்
பயத்தோடு பார்த்தாள்.
அங்ஙனம் ஒவ்வொரு தரம் பார்க்கையிலும் அவள்
உயிர் அதிர்ந்தது கண்களில் தெரிந்தது.
ஒவ்வொரு தரமும் இது தன் பிள்ளை இல்லை
என்று தெரிந்ததும்,
அவளுக்கேற்பட்ட நிம்மதியை முகம் காட்டிற்று.
சில நிமிடங்கள் தேடிய பின் அங்கு தன் குழந்தை
இல்லை என உறுதிவர,
நிம்மதியோடு திரும்பியவளின் கால்களில் ஏதோ
இடற குனிந்து பார்க்கிறாள்.
ஒரு பிஞ்சுக் குழந்தையின் வெட்டுண்ட கை அதில்
ஒரு சிறு தங்க மோதிரம்,
அதைக் கண்ட மாத்திரத்தில், “ஐயோ என் ராசா
போயிற்றியோ?”என,
மோதிரம் இனம் காட்ட அது தன் பிள்ளையின் கை-
யெனத் தெரிந்து கொண்டு,
அந்தத்தாய் கதறிய கதறலில்,
மானிடம் தலைகவிழ்ந்தது.

❍ ❍ ❍

**காட்சி-3**

எழுத மனம் வராமல் இதை எழுதுகிறேன்.
நான் நேரில் காணாத காட்சி.
தொண்டு நிறுவனத்தில் வேலை செய்த,
எதற்கும் அசையாத ஒரு முரட்டு நண்பன்,
அழுதபடி இக்காட்சியை விபரித்தான்.
அவன் அழுகையே காட்சியின் விபரீதத்தை
உணர்த்த,
கேட்கத் தொடங்கினேன்.
அன்று காலை நிகழ்ந்த விமானக்குண்டு வீச்சில்,
பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணை செய்யவென,
தன் நிறுவனத்தின் சார்பில் விரைந்திருக்கிறான்
நண்பன்.
குண்டு வீச்சால் சிதைந்து கிடந்த ஒரு வீட்டினுள்
அவன் நுழைந்து,
கூடத்தினுள் காயப்பட்டுக்கிடந்த இளைஞனைத்
தூக்க முயன்றிருக்கிறான்.
“மனுசியும், பிள்ளையும்” என திக்கித்திக்கி அவன்
ஓர் அறையைச் சுட்டிக்காட்ட,

---

ஞானம் 25ஆம் இதழில் (ஜூன் 2002)

**பேராசிரியர். சி. தில்லைநாதன் அவர்களது நேர்காணலில்...**

***தி.ஞா: இன்றைய போர்க்கால இலக்கியங்கள், சூழல் மாற்றம் அடையும்போது எத்தகைய கணிப்பைப் பெறும்?***



**சி.தில்லைநாதன்:** இலக்கியங்கள் அவை எழுகின்ற காலத்து அனுபவங்களையே பொதுவாகப் பிரதிபலிப்பனவாகும். எங்கள் காலத்து இலக்கியங்கள்தான் எங்கள் அபிலாசைகளையும் நாங்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், மேற்கொள்ளும் போராட்டங்களையும் எதிர்காலத்துக்கு எடுத்துச் சொல்வனவாகும். போர்கள் நிகழ்ந்த சூழலில் பட்டுணர்ந்த அனுபவங்களை வெளியிட்ட சங்க இலக்கியங்கள் இன்று படிக்கப்படுவதில்லையா? மனித வாழ்க்கை அனுபவங்களை உன்னிப்பாக அவதானித்து, தெளிவுற விளங்கிக்கொண்டு, நயம்பட வெளியிடும் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் நிலைக்கக் கூடியன. இன்று இலக்கிய முயற்சிகளில் ஏராளமானவர்கள் இறங்கியுள்ளனர். பல்வகைப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வெளியிடப்படுவனவும் பிரசித்தப்படுத்தப்படுவனவும் இருக்கலாம். அத்தகைய பிரயத்தனப்பாடுகள் அற்றுவிட்டபின்னர்தான் இலக்கியங்கள் அவற்றுக்குரிய கணிப்பினைப் பெறும்.

அவர்களையும் காப்பாற்றவென என் நண்பன்
உள்ளே ஓடியிருக்கிறான்.
அங்கு அவன் கண்டதாய்ச் சொன்ன காட்சி,
பல பிறவிகளிலும் என் மனதைப் பாதிக்கும் என
நினைக்கிறேன்.
தாயின் மடியில் கிடந்து,
விலத்திய ரவிக்கையினூடு தெரிந்த மார்பகத்தில்,
ஆர்வமாய்க் குழந்தை பால்
குடித்துக்கொண்டிருந்திருக்கிறது.
குழந்தையில் பதிந்த முகத்தை நண்பன் சற்று
நிமிர்த்த,
தாயின் தலையில்லாத உடல் தெரிந்திருக்கிறது.
குண்டு வீச்சு, தாயின் தலையைக் கொய்து செல்ல,
அது அறியாமல் உடலில் பிள்ளை பால் குடித்துக்
கொண்டிருந்த காட்சி கண்டு,
என் முரட்டு நண்பன் மயங்கி வீழ்ந்தானாம்.

❍ ❍ ❍

**காட்சி-4**

நல்லூர் முத்திரைச்சந்தி.
சந்தியில் பெரிய சனக்கூட்டம்.
ஏதோ வேலையாய் அந்தப் பக்கம் போன நான்,
கூட்டத்தை விலத்தி சற்று உள் நுழைந்து
பார்க்கிறேன்.
உள்ளே இருந்த இரண்டு ‘லைற்போஸ்ற்று’களில்,
இளம் வயதான ஒரு ஆடவனும், பெண்ணும்
கட்டப்பட்டிருந்தனர்.
இருவரது கண்களும் கட்டப்பட்ட நிலையில்.
சுற்றித் துப்பாக்கிகளோடு சில போராளிகள்.
போராளிகளில் ஒருவன் ஏதோ சொல்லி,
கட்டப்பட்டிருந்தவனின் முகத்தில் அறைந்தான்.
என்ன சொன்னான் என்பது சந்தடியில் காதில்
விழவில்லை.
அடிவாங்கியவன் அசையாது நின்றான்.
நடக்கப்போவதை உணர்ந்ததாலோ, என்னவோ,
அவன் முகத்தில் பிண விறைப்பு.
முன்னால் கட்டபட்டிருந்த பெண்ணின் முகம்
பயத்தில் சிவந்திருந்தது.
‘ஐயோ எங்களை விட்டிடுங்கோ, இனிமேல் இப்படிச்
செய்யமாட்டம்,
எங்களைச் சுட்டுப் போடாதையுங்கோ!’ என்று,
பயத்தின் உச்சத்தில் அவள்
கதறிக்கொண்டிருந்தாள்.
‘எங்களை ஆராவது காப்பாத்துங்கோ’ என்று
திரும்பத்திரும்பக் கதறிக் கதறிக் கெஞ்சினாள்.
அருகில் நின்றிருந்த போராளிகளின் முகத்தில்
கருணையின் சாயல் சிறிதுமில்லை.
சற்றுப் பூரித்திருந்த அவளது வயிறு அவள் ஒரு
கர்ப்பவதியோ என ஐயுறச் செய்தது.
நடுநடுங்கிப் போனேன்.
கூடியிருந்த கூட்டம் எதுவித பாதிப்புமின்றி நடப்பதை
வேடிக்கை பார்த்தது.
அடுத்து என்ன நடக்குமோ எனும் அச்சத்தில்,
ஏதும் செய்ய இயலாத கோழையாய் அவ்விடத்தை
விட்டு விரைவாய் நகர்ந்தேன்.
பத்து நிமிடத்தில் இரண்டு வெடிச்சத்தங்கள்
கேட்டன.

❍ ❍ ❍

**காட்சி-5**

1993 ஆம் ஆண்டோ , 1994 ஆம் ஆண்டோ
ஞாபகத்தில் இல்லை.
முக்கிய அலுவல் ஒன்றுக்காய் நண்பர்களுடன்
கொழும்பு சென்றேன்.
கொம்படிச் சேறு தாண்டி கிளாலி கடற்கரை வந்து
இருளில் படகேறி மறுகரை சேர்ந்து,
சைக்கிள் பயணத்தின் பின் இராணுவ எல்லையை
அடைந்தோம்.
ஒரு வயலின் வரம்பினூடு நடந்து இராணுவ
‘சென்றி’யை அடையவேண்டும்.
சிற்றெறும்புகளாய், வரிசை தவறாது, ஒருவர் பின்
ஒருவராய் அனைவரும் நடந்து கொண்டிருந்தனர்.
தமிழரின் கட்டுப்பாடான ஒழுங்கு ஆச்சரியம் தந்தது.
வரம்பின் இரு கரைகளிலும் மிதி வெடிகளாம்.
கட்டுப்பாட்டின் காரணம் பின் தெரியவந்தது.
நாங்களும் வரிசையில் இணைந்து பயத்தோடு
கொஞ்சத்தூரம் நடந்திருப்போம்.
அப்போது நான் அங்கு கண்ட அதிரவைக்கும்

காட்சியை இப்போதும் மறக்க முடியவில்லை.
படித்தவராய்த் தெரிந்த ஒரு நடுத்தர வயது மனிதர்.
வரம்போரத்தில் வயலினுள் விழுந்து கிடந்தார்.
அவரது கால்களில் ஒன்று வெட்டுண்டு தொங்கிக் கிடக்க,
இரத்தம் வெள்ளமாய்ப் பாய்ந்து கொண்டிருந்தது.
தன்னைக் காப்பாற்றும்படி வரம்பில் நடந்து கொண்டிருந்த அத்தனை பேரிடமும்,
கைகூப்பிக் கெஞ்சிக் கதறிக்கொண்டிருந்தார் அவர்.
நடந்தவர்கள் அவரைப் பார்த்ததாய்க் கூடக் காட்டிக்கொள்ளாமல்,
தாண்டிச்சென்று கொண்டிருந்தனர்.
துணை செய்ய முனைந்த என்னையும்,
நண்பர்களையும்,
'நீங்களும் துலைஞ்சு எங்களையும் துலைக்கப்போறியள் போல,
விருப்பம் எண்டா வயலுக்குள நீங்களும் இறங்கி எங்களைப் போக விடுங்கோ'
பின்னால் வந்த கூட்டம் விரட்டியது.
விழுந்து கிடந்தவரின் நிலை மிரட்ட,
வயலுக்குள் இருப்பதாய்ச் சொல்லப்பட்ட கண்ணி வெடிகளுக்கு அஞ்சி,
நாங்களும் 'நபுஞ்சர்களாய்' அவரைக் கடந்து சென்றோம்.
இன்றும் அவர் ஓலம் என் காதுகளில் ஒலித்தபடி.
யமனின் சபையில் குற்றவாளியாய் நான் நிற்பதான கனவொன்று,
அதன் பின் அடிக்கடி வருகிறது.

❍ ❍ ❍

## முடிவுரை

மேற்சொன்னவை,
போர்க்காலத்திலான எனது உயிர் கரைக்கும் மனப்பதிவுகள்.
இப்படி இன்னும் பல உள.
போர்த்துன்பங்களைப் பதிவு செய்வதோ,
அரசினதும், போராளிகளினதும் செயல்களை விமர்சிப்பதோ,
இக் கட்டுரையின் நோக்கமன்று.
போர், மானுடத்தை எத்துணை தூரம் சிதைவிக்கும் என்பதை,
உரைப்பதும் கூட இக்கட்டுரையின் நோக்கமன்றாம்.
அங்ஙனமாயின் நோக்கம் எது என்கிறீர்களா?
உரைக்கிறேன்.
இன்றைய இலக்கியவாதிகளில் சிலர்,
இலக்கிய கருவுக்காய் எங்கெங்கோ தேடித்திரிவதாய்ச் சொல்லிக் கொள்கிறார்கள்.
சாதி, மதம் என காலம் கடந்த மிகப்பழைய கருக்களைத் தூசு தட்டி,
இன்றைய கருப்பொருள்களாய் உபயோகித்து இலக்கியம் செய்ய அவருள் சிலர் முயல்கின்றனர்.
வேறு சிலரோ காதல் கத்தரிக்காய் என்று மண்ணில் கால் பதியாமல் மயங்கித் திரிகின்றனர்.
இன்னும் சிலர் புத்தாக்க ஆற்றல் இழந்து,
ஐம்பது, அறுபதுகளில் வந்த தமது பழைய ஆக்கங்களை மீள்பதிப்புச் செய்து,
புதிய விமர்சனங்களால் அவற்றைப் பொலிவுறச்செய்ய முயல்கின்றனர்.
வேறு சிலர் ஆணாதிக்கம், பெண்விடுதலை, முதலாளித்துவம் என,
தத்துவம் தந்த வித்தகம் கொண்டு இலக்கியம் விரிக்க முயல்கின்றனர்.
அவர்களுக்காகத்தான்,
மனத்தில் இருந்த, அழித்து விட வேண்டும் என்று நான் அன்றாடம் போராடுகின்ற,
மேல் அவலங்களை இங்கு பதிவு செய்திருக்கிறேன்.
புதிய கருக்கிடைக்காமல் அலைந்து திரியும் இத்தகு இலக்கிய மேதாவிகள்,
நம்மண்ணில் பதிவான மனதை அதிரச்செய்யும் மேற் சம்பவங்களை,
எனது அனுமதியின்றியே தமது ஆக்கங்களின் கருவாக்கிக் கொள்ளலாம்.
'கொப்பி றைற்றும்' அவர்களுக்கே உரித்தாகட்டும்!
உயிர்க்கருவையே இரவல் வாங்கும் இக்காலகட்டத்தில்,
கதைக்கருவையா இரவல் வாங்கக் கூடாது?
கருத்தானம் செய்திருக்கிறேன்.
அதைப் பெற்றாவது சுவை மிகுந்த புதிய இலக்கியங்களை,
அவர்கள் பிரசவிப்பார்களாக!

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிய தமிழீழம் கண்டீரோ தம்பி

பருப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
பருத்தித் துறையூரும் கண்டீரோ தம்பி

சீனிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
தெல்லிப் பழையூரும் கண்டீரோ தம்பி

எண்ணெய்ப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இனுவிற் பதியூரும் கண்டீரோ தம்பி

ரின்மீன் பொதியோடும் வந்தீரோ தம்பி
திருகோண மலையூரும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உயிலங் குளத்தையும் கண்டீரோ தம்பி

மாவுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மன்னார் முருங்கனும் கண்டீரோ தம்பி

புடைவைப் பொதியோடும் வந்தீரோ தம்பி
புளியங் குளத்தையும் கண்டீரோ தம்பி

மருந்துப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மட்டக் களப்பூருங் கண்டீரோ தம்பி

மருந்துப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மருத்துவர் மூவரைக் கொன்றீரோ தம்பி

வானிற் பொதியோடும் வந்தீரோ தம்பி
வன்னிப் பதிமூதூர் கண்டீரோ தம்பி

அமைதிப் படையோடு வந்தீரோ தம்பி
அழிவைத் துயரத்தைத் தந்தீரோ தம்பி

அமைதிப் படையோடு வந்தீரோ தம்பி
ஆப்பிட் டதையப்பிக் கொண்டீரோ தம்பி

மேற்கூறிய பாடல் இந்திய அமைதி காக்கும் படை (இ.அ.கா.ப) யின் ஈழத்தின் முதற் பிரவேசம் பற்றியும் ஈழத்தின் பல பிரதேசங்களையும் ஆக்கிரமித்தது பற்றியும் சுவையாக விவரிக்கின்றது. இலங்கை அமைதி காக்கும் படை ஏற்படுத்திய பேரவலங்களுள் ஒன்று பற்றியும் (மருத்துவர்கள் கொலை) குறிப்பிடுகின்றது. அந்த அவலம் தவிர, அது ஏற்படுத்திய பேரவலங்கள் பலவுள்ளன. அத்தகைய அழிவைத் துயரத்தைப் பற்றிய இலக்கியப் பதிவுகள் பற்றிய தேடல் ஈழத்துப் போர்க்கால இலக்கியம் பற்றிய விரிவான ஆய்விற்கு அத்தியாவசியமானவொன்றே.


பேராசிரியர்
செ.யோகராசா

# இந்திய அமைதிகாக்கும் படையின் செயற்பாடுகள் பற்றிய இலக்கியப் பதிவுகள்

மேற்கூறிய இலக்கியப் பதிவுகளுள் ஆய்வு நோக்கிலான பதிவுகள் சிலவுள்ளன. முதற் பதிவு என்ற விதத்தில் காலச்சுவட்டில் வெளிவந்த (நா.அமுதகரன் எழுதிய) ‘சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும் (ஏப்.யூன் 1988) முதன்மையானதொன்று. (அப்பதிவு ஜெயமோகனால் மலையாள குங்குமம், இதழில் மறுபிரசுரம் செய்யப்பட்டதும் இதழாசிரியர் விசாரணைக்குட்பட்டதும் குறிப்பிடத்தக்கது). விரிவான பதிவுகள் என்ற விதத்தில் (ராஜனி திராணகம, ராஜன் ஹூல், தயாசோமசுந்தரம், கே.ஸ்ரீதரன் ஆகியோர் இணைந்தெழுதிய) முறிந்த பனை (1996) தரும் தகவல்கள் முக்கியமானவை. தமிழ் நாட்டவரென்ற விதத்தில் ஓவியர் புகழேந்தியின் சிரத்தின் சுருக்கமான பதிவும் (அமைதிப் படையும் அழியா வடுக்களும் - தமிழீழம்: நான் கண்டதும் கேட்டதும் 2008) குறிப்பிடப்பட வேண்டியது. (உண்மையின் தரிசனம் என்ற தலைப்பிலே நிராஸ் டேவிட்டும் ‘நினைவுகளில் தொடும் நீர் ஊஞ்சல்’ என்ற தலைப்பிலே, “ஓட்டமாவடி அறபாத்தும் தற்போது இணையத்தளங்களில் எழுதிவருகின்ற பதிவுகளும் கவனத்தை ஈர்ப்பவையே) ஆயினும், விரிவஞ்சி, அவற்றைத் தவிர்த்து உண்மைக் கவிதைகள், சிறுகதை, நாவல், கவிதை, மெல்லிசைப் பாடல் ஆகியவை சார்ந்த முக்கியமான சில வெளிப்பாடுகளே இச்சந்தர்ப்பத்தில் அவதானிப்புக்குள்ளாகின்றன.

ஈழத்துப் போர்க்கால இலக்கியங்களுள் உண்மைக் கதைகள் பெறும் முக்கியத்துவம் விதந்துரைக்கப்படவேண்டியது. இத்தகைய உண்மைக் கதைகள் என்ற விதத்தில் பரவலாக அறியப்படாத, ‘அம்மாளை கும்பிடுகிறானுகள்’ ‘வில்லுக்குளத்துப் பறவைகள்’ ஆகிய இருதொகுப்புகளும் ஏனைய விடயங்களோடு இ.அ.கா. படைகள்நிகழ்த்திய “அழிவைத் துயரத்தைப் பற்றியதான உண்மைச் சம்பவங்களையும் அம்பலப்படுத்துகின்றமை குறிப்பிடத் தக்கது.

மேற்கூறிய பேரவலங்களுள் இ.அ.கா.ப நிகழ்த்திய படுகொலைகள் பல பற்றிய யாழ் போதனா வைத்தியசாலை, உரும்பிராய் வல்வெட்டித்துறை, கிண்ணையடி, கூனித் தீவு, கீரிமலை , கட்டை முறிவு என பதிவுகள் பற்றி முதலிற் குறிப்பிட்டாக வேண்டும். கீரிமலைப் படுகொலைகள் பற்றிய பதிவின் ஒரு பகுதி, பின்வருமாறு அமைந்துள்ளது.

*6.11.88* காலையில் தான், புவனேசுவரியின் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு அவர்கள் உள்ளே பாய்ந்தார்கள்.

புவனேசுவரியையும் - இரண்டு பெண்களையும் - பஞ்சாட்சரத்தையும் அந்தக் கும்பல் கடற்கரைக்கு இழுத்துக் கொண்டு போயிற்று.

கடற்கரையில் -

பஞ்சாட்சரத்தின் உயிரை வாங்கிவிட்டு, புவனேசுவரியின்வீட்டைக்கொள்ளையிடத் திரும்பவும் அவளையும் பிள்ளைகளையும் துப்பாக்கி முனையில் தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

இப்போது ...

சுருட்டுவதையெல்லாம் சுருட்டி ஆயிற்று.

வெளியே தெருவில் ‘ஜீப்’ வண்டியில் பறந்த வெள்ளைக் கொடியைக் கழற்றி .... உள்ளே எதையோ மூடி மறைத்து முடிச்சுப் போட்டான் ஒருவன்.

ஒரு விதவையின் வீட்டை மொட்டை அடித்து முடித்து திருப்தி.

“இனி, கடற்கரைக்குப் போகலாம்....” என்று மீண்டும் கொச்சை ஆங்கிலத்தில் கத்திக் கொண்டே புவனேசுவரியின் தோளில் ஓங்கித் துப்பாக்கியால் அடித்தான். ஒரு முரட்டு ஆசாமி.

நடுங்கிக்கொண்டே கடற்கரையை நோக்கி அவர்கள் நடந்தார்கள்.....

கடற்கரை நெருங்க நெருங்க....

பஞ்சாட்சரம் சுருண்டு கிடப்பது தூரத்தில் தெரியத் தெரிய...... ஜெயந்தி தாயின் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டு தேம்பினாள். சற்றுத் தள்ளி வேறு யாரோ விழுந்து கிடப்பது போலத் தோன்றியது. கூடிய எண்ணிக்கையில் இந்தியப் படைக்கும்பல் கடற்கரையில் குவிந்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பக்கத்தில் வந்து பார்த்தபோதுதான் தெரிந்தது.... அது... அது தம்பித்துரையின் பிணம்....

சிறீதேவி கைக்குழந்தையோடு வெறி பிடித்தவளாய்க் கதறிக் கொண்டிருந்தாள். சிவாஜினியும், சுபாஜினியும் "அப்பா, அப்பா!" என்று புழுவாய்த் துடிக்கிறார்கள். கோணேசும், தவனேசனும் தம்பித்துரையின் கையைப் பிடித்து இழுப்பதும்....... அழுவதுமாய்.......

ஓ! எத்தனை கொடிய உலகம்! ஹிட்லர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறானா! நீதி எங்கே? வெறித்தனத்துக்கு எல்லையே இல்லையா?

தன் கண்களுக்கு முன்னாலேயே ஜெயந்தியையும், வசந்தியையும் முரட்டுத் தனமாகச் சேலை களைந்து வெறியர்கள் நிர்வாணமாக்கிய போதும் -தாயாக அல்ல ஒரு குழந்தையாக முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குலுங்கி அழுதாள் புவனேசுவரி.

ஒரு முரடனின் இரும்புக் கைகள் ஜெயந்தியை ஆவேசமாகப்பற்றி இழுத்து எறிந்தன.

"போடி, உன் புருஷனைப் போய்த் தழுவு."

அதற்குள்....

ஜெயந்தியின் இரண்டு தொடைகளுக்கும் நடுவில் துப்பாக்கியை வைத்து இன்னொரு பாவி, தமிழனின் மானத்தையே சுடுவதுபோல.....

பிணமாய்ச் சுருண்ட ஜெயந்தியின் மேல், "அக்கா" என்று கதறிக்கொண்டே ஓடிப்போய் விழுந்தாள் வசந்தி.

அவளுக்கும் அதே இடத்தில் துப்பாக்கி குண்டுகள்....

வசந்தியின் இரத்தம் சீறிப்பாய்ந்து புவனேசுவரியின் நெஞ்சில் அடித்தது. சின்னக் குழந்தையாக இருந்தபோது எந்த முலைகளால் அந்தப் பிள்ளைக்குப் பாலூட்டி இரத்தம் பாய்ச்சினாளோ....அதே இரத்தம் - இப்போது இவள் முலையை இடித்து, 'ஏனம்மா என்னைத் தமிழச்சியாக வளர்த்தாய்?' என்று நியாயம் கேட்கிறது.

புவனேசுவரி மயங்கி விழுந்தாள்.

கீரிமலைக் கடல் ஆவேசமாக இரைந்து கத்தியது. கரையின் நீள அலைகள் பிணங்களை நனைத்து மீள்கின்றன...... தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள்....

கண்களை மெதுவாகத் திறந்தபோது, அந்த மனித விலங்குகள் சிறீதேவியைச் சுட்டுப் பிணமாக வீழ்த்துவதையும் - அவள் கையிலிருந்து விழுந்த பிஞ்சுக் குழந்தை அலைக்கு நடுவில் "அம்மா....." என்று கத்துவதையும் - புவனேசுவரி கண்டாள்.

அடுத்த நொடியில் -

ஜெயந்தியும், வசந்தியும் கொல்லப் பட்டதுபோலவே தம்பித்துரையின் இரு பெண்பிள்ளைகளும் அதேவிதமாக நிர்வாணமாக்கப்பட்டு.... அதேவிதமாக..... எத்தனை கொடிய நிகழ்வுகள்....!

இரண்டு துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டன..... புவனேசுவரி நிலத்தில் கிடந்தபடியே ஓரக் கண்களால் பார்த்தாள்.... ஒன்று கோணேஸ் - அடுத்தது தவநேசன்.

புவனேசுவரி செத்தவள் போலவே படுத்துக் கிடந்தாள். தன்னை இந்தியப் படைக் கும்பல் மறந்துவிட்டது என்பதை அவளால் உணரமுடிந்தது. மணலில் ஏறும்கடல் அலையின் அசைவிற்கு ஏற்பத் தலையை ஆட்டியபடி தன்னையும் ஒரு

சடலம் போலவே ஆக்கிக் கொண்டாள் அவள்.

காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அலைகளின் வெறித்தனமான இரைச்சலும் - இடையிடையே அந்தப் பிஞ்சுக் குழந்தையின் ஓலமும் கேட்டது. கொஞ்ச நேரத்தின் பின்பு.....

மீண்டும் ஒரு துப்பாக்கி வேட்டோசை, குழந்தையின் அழுகை நின்றது. அதேவேளை அந்தப் பெரிய மனிதர்களின் சிரிப்பொலி..... 'ஜீப்' வண்டிகள், 'ட்றக்குகள்' முதலியவற்றின் கொடி இரைச்சல்.... அவர்கள் கடற்கரையை விட்டுச் செல்கிறார்கள்.

புவனேசுவரி இரவு வரை அப்படியே கிடந்தாள்.... அவளைத் தாண்டி... அந்தப் பிணங்களை நோக்கி... நண்டுகள் ஊர்கின்றன......

நாவண்ணன் எழுதிய நினைவாலயம் (1989) வித்தியாசமானதொரு தொகுப்பு இ.அ.கா. படையினால் கொலை செய்யப் பட்ட தனது மனைவியினதும் மகனதும் அவலச் சாவு பற்றிப்பலரும் கூறியவற்றைக் கணவன் கூற, அவற்றைத் தொகுத்துத் தந்திருக்கின்றார். 'நாவண்ணன்' "ஒரு குழந்தை பிறந்தவுடன் தாய் எவ்வளவு சந்தோஷப்படுவாளோ அதே போல் இங்கு மகன் - மோகன்ராஜ் அந்நிய இராணுவத்தினால் சுட்டு இறந் திருப்பதைக் கண்ட தாய் கதறி னாள் - புரண்டாள் -அழுதாள் -இதைக் கண்ட அதே அந்நியப் படை யினர் தாயையும் மகன் சென்ற இடத்திற்கே அனுப்பினார்கள் என் பது நினைவாலயத்தின் சாராம்ச மாகவுள்ளது.

இ.அ.கா. படைகள் அரங் கேற்றிய பாலியல் வல்லுறவு சார்ந்த அவலங்கள் எண்ணிலடங்காதவை. முதிய பெண்கள் சிலருக்கும் (ஏன் ஆண்களுக்குக் கூட) நிகழ்ந்த அத்தகைய கொடுமைகள் மட்டு மன்றி, கர்ப்பிணிப் பெண்களுக்கும் அத்தகைய அவலங்கள் நிகழ்ந்தமைக்குச் சான்றாகவுள்ளது. பின்வரும் பகுதி,

"பாரத் மாதா கீ ஜெய்!"

வானத்தை இடித்த முழக்கத்தோடு ஒருவன் துப்பாக்கியால் ஓங்கி முகத்தில் அடிக்க..... கீழே விழுந்த கணவனைப் பார்த்து, "அவரை அடியாதீங்கோ!" என்று முழுவலிமையையும் திரட்டிக் கூச்சலிட்டாள் அவள்.

சண்டாளர்கள் அவள் பக்கம் திரும் பினார்கள்.

கையைக் கொடுத்து, ஒருவன் அவளை வெறித்தனமாகப் பெட்டியில் இருந்து கீழே இறக்கினான்.

"அவள் கர்ப்பிணி பாருங்கோ .... அவளைத் தொடாதீங்கோ!"

நிலத்தில் - இரத்தம் தோய்ந்த முகத்தோடு கிடந்து கத்திய அவன் குரலை, யாருமே பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை.



"சேலைக்குள்ளே குண்டு இருக்குதா?"

ஒருவெறியன்குடிபோதைச்சிரிப்போடு, அரைகுறைத் தமிழில் அவளைப் பார்த்துக் கேட்டான்.

எல்லோரும் கொல்லென்று சிரித் தார்கள்.

"சேலையை உயர்த்து!" என்று கத்தினான் ஒருவன்.

"பாவிகளே! ஐயோ! ஐயோ?" என்று அவள், தலையில் அடித்து ஓலமிட்டாள்.

எல்லாம் முடிந்துவிட்டது.

வதைகளைச் சுமந்து சடலமாய் அவள் வாகனத்தை விறைத்துப் பார்த்த கண்கள் மூடாமல் - அசைவற்றுக் கிடந்தாள்.

முகத்தைக் கைகளால் பொத்திப் பிடித்துக் கொண்டு, ஒரு சின்னஞ்சிறு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் அவன் தேம்பித் தேம்பி அழுதான்.

தெருவில் உழவு வண்டி நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது.

"ஐயா, சவத்தை ஊருக்குக் கொண்டு போகவேணும்"

இந்தியப்படை அதிகாரி ஒருவரைப் பார்த்துக் கெஞ்சினான். அவன்.

வாயில் இருந்த சுங்கானை அவர் வெளி-யே எடுத்தார்.

"அதெல்லாம் முடியாது. தெரு ஓரத்தில் எரி .போ!"

அவன் அவளைத் தூக்கிச் சென்று தெருவோரத்தில் நின்ற நெடிய பனை மரத்துக்குக் கீழே கிடத்தினான். பட்ட பனைமரத்தின் கட்டைகளைத் தூக்கிவந்து அவள் உடலின் மேல் போட்டான்.

நெருப்பு வைத்த நேரத்தில், அவன் காதில் இந்தியப் படை வெறியர்கள் கூட்டமாகச் சந்தியில் நின்று பாடிய அந்தப் பாடல் தெளிவாகவே கேட்டது!

அவர்கள் கூத்தாடிக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள்.

**"ஜன கண மன அதி**

**நாயக ஜயகே**

**பாரத பாக்ய விதாதா!"**

தடுப்பு முகாம்களிலும் தேடுதல் வேட்டைகளின் போதும் நிகழ்கின்ற சேஷ்டைகள் பற்றிய பதிவுகளும் மேற் கூறிய தொகுப்புகளில் இடம்பெறுகின்றன.

மேற்கூறிய தொகுப்பு நூல்கள் தவிர, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் படுகொலைகளைப் பதிவு செய்துள்ள 'அக்கினிக் கரங்கள்' (நாவண்ணன், 1995) என்ற குறுநாவலும் எமது கவனத்தை ஈர்க்குமொன்று. இக்குறுநாவலிருந்து முக்கி யமானதொரு பகுதி, இது .

"I am a doctor....!" என்று சிவபாதசுந்தரம் இரண்டு மூன்று தடவைகள் சத்தமிடுகின்றார். மீண்டும் தட தடவென்று படிகளால் இறங்கி ஓடி வரும் ஓசை........ சிவபாதசுந்திரத்தின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"I am a doctor. don't shoot me" ஆனால் துப்பாக்கிச் சன்னங்கள் அவருக்கு பதில் சொல்கின்றன. தொடர்ந்து பெண்கள் கீச்சிடும் - அலறும் சத்தம். "ஐயோ! சுட வேண்டாம். ஓ! முருகா: முருகா தண்ணீர்........ தண்ணீர்.....! தண்.... த....." பிறகு டொக்ரரின் சத்தம் கேட்கவில்லை. அந்தச் சீக்கிய சிப்பாயின் துப்பாக்கித் துளைகளின் ஊடாக..... அவர் உயிர் விடைபெற்றுக் கொண்டது போலும். கூட வந்த பெண்கள் யார்? அவர்களும் இறந்துவிட்டனர் போலும்!

மேலே இருந்த சிப்பாய்களும் ஓடி வந்தார்கள். பார்த்தார்கள்: பின்னர் யாரோ வந்தார்கள்: நின்றார்கள்....! என்னால்புரிந்து கொள்ள முடியாத மொழிகளில் பேசிக் கொண்டார்கள்: போனார்கள். எனக்கு என் உயிர் மீது இருந்த கொஞ்ச நம்பிக்கையும், டொக்ரர் சிவபாதசுந்திரத்தின் கொலை யோடு விடுபட்டுப் போயிற்று.

"யாரும் உயிரோடு இருந்தால் எழும்பி வாங்கோ!" எவ்வித பதிலும் இல்லாத படியால் மீண்டும்.... மீண்டும் அக்குரல் ஒலித்தது.

அவர்கள் நின்ற திசையிலேயே யாரோ பெண்கள் வேதனையில் முனகும் ஒலி கேட்டது. தொடர்ந்து ஆங்காங்கு இன்னும் சிலர் உயிரோடு இருப்பதற்கான முனகல் ஒலிகள்.... இனியும் என்னால் தாங்க முடியாது என்ற நிலையில், எது நடந்தாலும் பறவாயில்லை என்ற முடிவுடன் நான் எழத் துணிந்தேன்.....! இதற்குள்.....

சிலர் உட்புறமிருந்து நடந்து வரும் சத்தங்களும் கதவுகள் திறக்கப்படும் சத்தமும் கேட்டன. 'ஆமாம்! ஆங்காங்கு தப்பி உயி-ரோடு இருப்பவர்கள் சரணடைகிறார்கள். என்பதைப் புரிந்து கொண்ட நான், எனக்கு மேல் சாய்ந்து கிடந்த பிணத்தை ஒருவாறு உன்னி விழுத்திக் கொண்டு எழுந்தேன். கைகள் இரண்டையும் மேலே தூக்கிப் பிடித்துக் கொண்டு, என்னைச் சுற்றிவர நோட்டம் விட்டேன். அங்கு நான் கண்ட காட்சி.... காலடியில் எங்கும் ஒரே பிண-மயம்......!

வயிறு பிளந்து, நெஞ்சு பிளந்து, தலை சிதறி, கண்கள் வெளியே துருத்திக் கொண்டிருந்தபடி, வாய் பிளந்து, நாக்கு வெளியே நீண்டபடி..... குடல் சரிந்து, வெளியே கொடி போல் மற்றப் பிணங்களின் மேல் படர்ந்தபடி.... அப்பப்பா.... ! என்ன கொடூரம். கண்களை மூடிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது. அவர்கள் என் சக தாதிகள் - ஊழியர்கள். டொக்டரர்களும் இருந்தார்கள்....

இந்திய அமைதிகாக்கும் படை, சந்தேக நபர்களை விசாரணைக்காகக் கைது செய்து கோட்டை இராணுவ சிறையில் அடைக்கும் கைங்கரியத்திலும் ஈடுபட்டு வந்துள்ளது. 'ஈழமுரசு', 'முரசொலி' பத்திரிகைக் காரியாலயங்களைக் குண்டு வைத்து

## சுற்றி வளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்கு குழி



வானத்தை நான் பார்க்கவில்லை
நட்சத்திரங்களையும் காணவில்லை
பதுங்குகுழியின்
இருளுக்குள் வீழ்ந்த வாழ்வின்
சருகு நான்
சூரியன் வந்ததா சென்றதா
நானறியேன்
நிலவின் ஒளியும் மறந்து போயிற்று

நிலம் அதிர்கிறது
குருதியின் மணத்தையும்
மரணத்தின் அருகாமையையும்
உணர்கிறேன்
கந்தக நெடில்
கபாலத்தைப் பிளக்கிறது
வீரர்கள் முழங்கிக்
கொண்டேயிருக்கிறார்கள்
அழியும் வாழ்வின் பிரகடனத்தை
ஒவ்வொரு துப்பாக்கியிலும்
ஒவ்வொரு பீரங்கியிலும்

பூக்கள் இனி எப்படியிருக்கும்
மரங்கள் மிஞ்சியிருக்குமா
பறவைகளின் சிறகுகளில்
சாவு வந்து குந்திக் கொண்டிருக்கும்
காலம் இதுவல்லவா

இந்தப் பதுங்கு குழிக்கு
நம் எதிர்காலத்தைக் காப்பாற்றும்
கருணையும் வலிமையுமிருக்கிறதா
அல்லது
எதிரியிடம் பலியிடும்
ஒற்றனைப்போல்க் காத்திருக்கிறதா

- கருணாகரன் -

(பலியாடு)

தகர்த்திருந்த இந்திய அமைதி காக்கும் படை, ஈழமுரசு பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) அவர்களை இருமாதங்கள் சிறையி லடைத்து வைத்திருந்தது. சிறையிலிருந்து மீண்ட பின்னர் தமது அனுபவங்களை 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற பெயரில் பத்திரிகைத் தொடராக எழுதி பின்னர் நூலாகவும் வெளியிட்டுள்ளார். (2000). சிறையில் வழங்கப்பட்ட உண-வுகள், சிறை வசதியீனங்கள் எனப் பல்வேறு விடயங்கள் பற்றியும் அவர் பதிவு செய்துள்ளார். தாம் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் விதம் பற்றிப் பின்வருமாறு விவரித்திருப்பதனை இவ்வேளை எடுத்துக்காட்டுவது பொருத்த மானது,

தப்பி வந்த நான் இந்த இடத்தில் தப்பமுடியாது என்று தோன்றியது. 'ராம் ராம்' என்று முணுமுணுத்தவாறு சென்று கொண்டிருந்தேன். "நீ எல்.ரீ.ரீ.ஈ யா?"

என்று ஒரு குரல் கேட்டது. என்னைத்தான் கேட்டிருக்க வேண்டும். நான் பதில் சொல்வதற்கு முன் "நோ, எடிட்டர் எடிட்டர்" என்று ஒரு குரல் பதில் சொன்னதுடன், அந்தக் குரலுக்குரிய கரம் என்னை அவசரமாக முன்னே இழுத்துச் சென்றது. அந்தக் குரல் கோர்ப்பரல் குத்பாவினுடையது. மீண்டும் 'ராம் ராம்' என்று சொல்லிக் கொண்டேன்.

இந்தக் கண்டத்தைச் தாண்டிச் சென்றதும் மரநிழல் நிறைந்த இடத்தில் 'சிட்டவுன்' என்று உட்காரச் சொன்னார்கள். இங்கு உட்கார்ந்த பின்னரும் சிலரின்

**வசந்தியின் இரத்தம் சீறிப்பாய்ந்து புவனேசுவரியின் நெஞ்சில் அடித்தது. சின்னக் குழந்தையாக இருந்த போது எந்த முலைகளால் அந்தப் பிள்ளைக்குப் பாலூட்டி இரத்தம் பாய்ச்சினாளோ.... அதே இரத்தம் – இப்போது இவள் முலையை இடித்து, 'ஏனம்மா என்னைத் தமிழச்சியாக வளர்த்தாய்?' என்று நியாயம் கேட்கிறது.**

"இவர்களில் சிலர் நீங்கள் எல்லாம் எல்.ரீ.ரீ.ஈ. யா? என்று கேட்டபடி எங்கள் 'பட்டி'யில் வந்தவர்கள் சிலரின் முதுகில் தடிகளால்அடிக்கும்சத்தமும்ஐயோ....அம்மா என்று அவர்கள்முனகுவதும் கேட்டது. இந்தக் கட்டங்களைத் தாண்டி மற்றோரிடத்துக்கு வந்ததும் ஒருவர் பின் ஒருவராக ஒடுக்கமான பாதையில் செல்லும்படி உத்தரவு. சிங்கிள் லைன் என்பதை வைத்துத்தான் எங்கேயும் ஒருவன் பின் ஒருவர் என ஊகித்துக் கொள்ளவேண்டும். மற்றைய உத்தரவு யாவும் இந்தியில் தான். இந்த ஒடுக்கமான பாதையைத் தாண்டிச் செல்லும் போதும் தாக்குதல் சத்தம் கேட்டது. இதுவரை முதுகிலும் தலையிலும் அடிவிழுந்ததை நான் கேட்கக்கூடியதாக இருந்தது. எனது அருகிலும் ஒருவர் வந்தார். பின் தலையை ஏனோ தடவிப் பார்த்தார். எனது பாக்கெட்டில் கையை வைத்து உள்ளிருந்த அடையாள அட்டை மற்றும் சில்லறைகளையும் எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் வைத்தார். அவர் என்னை அடிப்பதற்குக் கையை ஓங்கியிருக்க வேண்டும். "ஓல்ட்மான், எடிட்டர்" என்று கோப்பரல் குத்பாவின் குரல் கேட்டது. அவருக்கும் ஆண்டவனுக்கும் மனத்தில் நன்றி செலுத்திக் கொண்டேன்...."

சிறுகதைகள் பற்றிக் கவனத்திற்

கெடுப்பின், இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் அகப்பட்டுக் கொண்ட தாய்க்கும் மக்களுக்கும் ஏற்பட்ட கொடுமைகள் பற்றி விவரிக்கும் (சித்ரா நாகநாதன் எழுதிய) 'விடியாத இரவுகள்' கவனத்திற் கொள்ள வேண்டியதொன்றாகின்றது. இச் சிறுகதையின் முக்கியமான பகுதியொன்று இங்கே தரப்படுகின்றது.

"அவசரமாக ஓடியவள் பெட்டியைக் கிளறி ஒரு மஞ்சள் நூலைத்தேடி எடுத்தாள். நாலாகச் சுற்றி முறுக்கித் திரிந்து கழுத்தில் கட்டிக் கொண்டாள். மஞ்சள் குங்குமத்தை அடைய ஒரு தமிழ்ப் பெண் வாழ்க்கையில் எப்படிக் காத்திருந்து, மகிழ்ந்திருந்து கட்டிக்கொள்ளும் சம்பவம் என்று அவளுக்குத் தெரியாமல் இல்லை. அந்த மங்கலப் பொருட்களை எடுத்துக் கற்பைக் காப்பாற்றக் கவசமாகப் பயன்படுத்தும் கேவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்களில் தானும் ஒருத்தியாக நிற்கும் நிலையை நினைக்க வேதனை மனதை நெருடியது.

இராணுவ மிடுக்கும், கையில் துவக்குமாக மிக அருகில் வந்துவிட்ட இந்திய இராணுவத்தைத் தாண்டி ஓட முடியாமல் தாயும், மகளும் திகைத்து நின்ற வேளையில்..... உள்ளே புகுந்துவிட்டனர் இந்திய சீக்கிய ராணுவ வீரர்கள். சீவியத்திலும் பெண்களைக் காணாத வெறிபிடித்த கண்கள். அபிநயாவின் மேல் மொய்த்தது. அவள் முடிந்தமட்டும் சேலையை இழுத்து தன்னை மறைத்தாள், ஏதேதோ புரியாத பாஷையில் கேட்டான் ஒன்றுமே புரியவில்லை. ஐந்தரை கோடி தமிழ் மக்கள் வாழும் இந்திய மண்ணில் பாஷை புரியாத வேற்று இனத்தவனை தமிழன் பாதுகாப்பிற்கு அனுப்பிய ஒப்பந்தக் காரர்களின் தந்திரம் அவர்களுக்கே வெளிச்சம்.

இருவரும் நடுங்கிக் கொண்டிருந்தனர். திரும்பத் திரும்ப அவன் பாஷையில் ஏதேதோ கேட்டான். அவற்றிற்குக் கலங்கிய விழிகளுடன் தலையாட்டத்தான் முடிந்தது, அவர்களுக்கு. ஆனால் அவர்கள் நோக்கம்....... அபிநயாவை இழுத்தான் ஒருவன். "விடு என்ரை பிள்ளையை விடு" அபிநயாவின் தாயார் கதறியபடி அவன் காலில் விழுந்தாள். இரண்டு வெடிச் சத்தம்! அங்கே சத்தமும் சலனமும் சட்டென நின்றுவிட்டது. அதன்பின் அவளது அன்னையின் சடலத்தின் முன் பரிதாப-மாக பயங்கரமாக கொடூரமாக அவளை வேட்டையாடினர். அந்த மனித மிருகங்கள், சில மணிநேரத்தில் சிறகொடிந்த பறவையாய் ஒரு மூலையில் கிடந்தாள் அபிநயா."

தேடுதல் வேட்டையின்போது வீட்டைச் சுற்றி இந்திய அமைதி காக்கும் படையினர் நின்ற வேளையில் ஒரு இளம் பெண்ணின் மனப் போராட்டங்களை நுண் அவதானிப்புகளுடன் தத்ரூபமாகச் சித்தரிக்கும் சிறுகதையான (சந்திரா தனபாலசிங்கம் எழுதிய) 'இயன்றால் நகுக' கலாபூர்வமானதொரு படைப்பாகின்றது. அதன் முடிவு பின்வருமாறு அமைகின்றது.

"வதனி இன்னும் சுவரோடு சுவராகவே ஒட்டிக் கொண்டு நின்றிருந்தாள். தன்னை யாரும் பார்த்துவிட்டாலும், தான் யாரையும் பார்த்துவிடக் கூடாது என்பவள் போல் கண்களை இறுக மூடியிருந்தாள். அப்பா வந்ததும் சொல்லிவிட வேண்டும். இப்போதைக்கு என்னைத் தனியே விட்டு எங்கேயும் போகக்கூடாது என்று, இதே நிலையும் நீடித்து, இன்னும் கதைகளும் கேள்விப்பட்டால், தான் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டு நிரந்தர நோயாளியாகி விடலாம் என்று மிகவும் அஞ்சினாள்.

"வீட்டில் யாருமே இல்லையா?"

அவர்களில் தமிழ்க்குரல் ஒன்று அதட்டலாகக் கேட்டது. வதனி இப்போது மூச்சு விடவும் மறந்தாள். ஏதோ கதம்ப

மொழிகளில் பலமாக இப்போதும் தன் நிலைகண்டு வதனி தானே சிரிக்கத்தான் நினைத்தாள்: அவளால் முடியவில்லை. அவள் கண்களில் இருந்தும் கண்ணீர் ஊற்றாகப் பெருக்கெடுத்தது. நன்றாகத் தான் சொல்லிவைத்தார். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று வள்ளுவர். அவர் காலத்தில் இப்படிப்பட்ட இடுக் கண்கள் இருந்திருந்தால் அப்படிச் சொல்லியிருப்பாரா என்ன?

மேற்கூறிய சிறுகதையின் இடையில் இடம்பெறும் பின்வரும் விவரிப்பும் முக்கியத்துவமுடையது.

"வதனிக்கு இதுபற்றிய விபரம் புரிந்த போது இப்படியும் ஒன்றுண்டோ என வயிற்றைக் கலக்கியது. இத்தனைக்கும் இவளின் அபிமான இந்திய எழுத்தாளரான ஜெயகாந்தன், தமிழ் நாட்டில் சென்னைக் கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் இப்படிப் பேசியிருந்தாராம் - "எங்கள் வீரர்கள் அங்கே தமிழ்ப்பெண்களிடம் தவறாக நடக்கிறார்களாம். நான் இதை ஒருநாளும் நம்பமாட்டேன்" என்று 'சோ' என்னும் ராமசாமிகூடப் பேசினாராம், "காதில் பூ வைத்திருப்பவனிடம்போய்ச்சொல்லுங்கள் இதை. ஒரு குழந்தைகூட நம்பாது" என்று. யாரும் நம்பினாலும் நம்பவிட்டாலும், இங்கே நடப்பவை நடந்துகொண்டுதான் இருக்கின்றன."

இந்திய அமைதி காக்கும் படை யினர் பிரம்படித்தெருவில் நடத்திய படுகொலைபற்றிச் சித்திரிக்கிறது. (தணிகாசலம் எழுதிய) 'பிரம்படி' பிரம்படியில் இடம்பெற்ற பேரவலங்கள் பற்றிய சித்திரிப்புப் பகுதியொன்று இவ்வாறமைகின்றது.

"அவலக் குரல்கள் அங்குமிங்குமாக ஒழுங்கைகளிலும் வீடுகளிலும் கேட் கின்றன. இரவு பெய்த மழையில் ஈரமான அந்த மண்ணில் புதைந்த "செயின் புளொக்" கின் ஒற்றை அடிப்பள்ளத்தின் கீழ் மிதிபட்டு, இழுபட்டு புதைந்து கிடக்கும் பிரேதங்கள்... கிழக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வந்த இரண்டு மாணவர்களின் உடல் களும் அங்கு நெரிந்து கிடக்கின்றன. சிவநாதனுக்கே அங்கு கண்ட காட்சிகளால் உடலெங்கும் மயிர்க்கூச்செறிகிறது. முத்துச்சாமியர் ஒருமுறை பார்த்து விட்டு 'சிவனே' என்று வாய் மட்டும் முணுமுணுக்க முகத்தைத் திருப்பிக் கொள்கிறார். அப்பால் ஒரு சுருட்டுத் தொழிலா ளியின் மகன் அவனது குடிசையோடு வைத்து சுட்டு எரிக்கப்பட்டிருக்கிறான். அப்பொழுதுதான் அங்கு வந்த அவனது தாயார் தனக்குப் பாதுகாப்பாக இருந்த ஒரே ஒரு மகனை இழந்த துயரத்தில் ஒப்பாரி வைத்துக் கத்துவது அங்குள்ளவர்களின் இதயத்தைப் பிழிகின்றது. ஒரு வயோதி பரின் உடல் முள்வேலியில் தலைகீழாகத் தொங்குகின்றது. உயிரைப் பாதுகாக்க முட்கம்பியைக் கடந்து ஓடும்போது அவர் சுடப்பட்டிருக்க வேண்டும். உறவினர்கள் எவரும் வராததால் அப்படியே தொங்கும் அந்தப் பரிதாபமான காட்சியைக் காணச் சகிக்காத சிவநாதன் அங்கு நின்ற இளைஞர்களின் உதவியுடன் கம்பியில் தொங்கிய முதியவரின் உடலை விடுவித்துக் கீழே கிடத்துகின்றான். பணயக் கைதிகளாக வைத்திருந்த பொதுமக்களின் பிரேதங்கள் அந்தப் பகுதியில் ஒவ்வொரு வீட்டினுள் ளும் அங்குமிங்கும் அலங்கோலமாகச் சிதறிக் கிடக்கின்றன. கற்பழிக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டபெண்களின்அவலக் கதைகளை கூடிநின்றவர்கள் கூறுகின்றனர். கண்களில் நீர் திரளக் காதுகளைப் பொத்திக் கொள்கிறார் முத்துச்சாமியர்"

'பிரம்படி' சிறுகதையின் முடிவுப்பகுதி இவ்வாறமைந்துள்ளது.

"ஹோல்" சுவரில் மாட்டப்பட்டிருந்த விவேகானந்தர். பரமஹம்சரின் படங்கள் சுவரோடு இடிந்து வீழ்ந்து, வீட்டின் கூரை பெயர்ந்து இருந்ததால் இரவு பெய்த மழையில் நனைந்து இற்றுப்போய் கிழிந்து கிடக்கின்றது. காந்தியின் படம் மட்டும் பாதி இடிந்த சுவரின் ஒரு பகுதி யில் இன்னும் விழாமல் நனையாமல் அப்படியே உயிர்ப்புடன் ஒரு கம்பியில் அறுந்து தொங்கிக் கொண்டு இருக்கின்றது. இடிபாடுகளுக்குள் சென்று அந்தப் படத்தை அவர் கையில் எடுக்கிறார்.

"காந்தியின்ரை படம் மட்டும் உடையேல்லை." படத்தைப் பார்த்தபடி எந்தவித உணர்வுமில்லாமல் ஒரு செய்தியாளனைப் போல அமைதியாகச் சொல்கிறார்." முத்துச்சாமியர்.

"ஓம்.... ஆனால்... காந்தியின்ரை கைத்தடி நழுவிவிழுந்து எங்களைக் காயப்படுத்திப் போட்டுது."

உடைந்த கண்ணாடித் துண்டொன்றைக் கையில் வைத்து அதன் கூரான முனையை நிதானமாக விரல்களால் தடவியபடி அந்த இடிந்த வீட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டு கூறுகிறான் சிவநாதன்.

அவனது வார்த்தைகள் ஆயிரம் பிரம்படிகளாக அவரது இதயத்தில்பட அதிர்ச்சியுடன் அவனைத் திரும்பிப் பார்க்கின்றார் அவர்.

போராளிகள் இந்தியக் கமான்டோக்கள் முப்பதுபேரைச் சுட்டு வீழ்த்தியமையைக் கண்டிருக்கும் இந்திய நிருபருக்கு, இலங்கை அமைதி காக்கும் படையினர் 'பிரம்படி' யில் நிகழ்த்திய படுகொலைகள் பற்றி எடுத்துரைக்கின்றது. (செங்கையாழியான் எழுதிய 'நாணயத்தின்' இருபக்கங்கள்.)

இந்திய இராணும் கல்லூரி ஒன்றினுள் புகுந்து ஆசிரியர்களைச் சுட்டுக் கொன்ற அவலம் (செம்பியன் செல்வனின்) 'காண்டீபம்' சிறுகதையில் நுணுக்கமாகச் சித்திரிக்கப் படுகின்றது.

இலங்கை அமைதி காக்கும் படையி-னர் அடிக்கடி ஊரடங்குச் சட்டத்தைத் திடீரெனப் பிறப்பிப்பது வழக்கம். ஒரு தடவை ஒரு மாதந் தொடர்ந்த ஊரடங்கின் போது நிகழ்ந்த அவலங்கள் யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் சிறுகதையொன்றில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதி காக்கும் படைக் காலத்தில் முஸ்லீம் மக்கள் அடைந்த துயரங்கள் பற்றிய படைப்புகள் குறை வாகவே வெளிவந்ததுள்ள. இவ்விதத்தில் (ஓட்டமாவடி அறபாத் எழுதிய) 'வெள்ளைக்கொடி' முக்கியமானதாகின்றது. அதன் முடிவு இவ்வாறு:

அந்தத் தலைப்பாகைக்காரன் இவன் உம்மாவுடன் தூங்கும் அறையை எட்டிப் பார்த்தான். அறைக்குள் நின்று கொண்டே உம்மாவை வரும்படி சைகை செய்தான். உம்மா இவனை இறுக்கிக் கொண்டு சத்தம் வைத்தா. செல்லன் கருப்பனை பிடித்தபடி ஓடிவர அவன் கதவை அறைந்து சாத்திவிட்டு வெளிய வந்தான்.

வாப்பாவில் அவன் பார்வை விழுந்தது.

'யோவ் இஞ்செ வாய்யா?' டீ கலக்கின கரண்டியுடன் வாப்பா ஓடிவந்தார்.

'அவனுகள் வந்தானுகளாய்யா?'

'ஓம் ஸேர்'

'நீ சாப்பாடு குடுக்கிறியா?'

'ஓம் ஸேர்'

'ஏண்டா குடுத்தாய்'

அவன் குரலில் சன்னம் அதிர்கிறது.

'குடுக்காட்டி எப்படி ஸேர் நான் கட நடத்துகிறது?'

'அப்ப நீ இயக்கக்காரன வளர்க்குறாய். நடய்யா காம்புக்கு.'

மீசைக்காரின் கை வாப்பாவின் கழுத்தில் பதிந்தது.

'நான் புள்ள குட்டிக்காரன் ஸேர், என்ன வுடுங்க'

அவரின் கதறலில் கையிலிருந்த கரண்டி



**இந்திய எழுத்தாளரான ஜெயகாந்தன், தமிழ் நாட்டில் சென்னைக் கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் இப்படிப் பேசியிருந்தாராம் “எங்கள் வீரர்கள் அங்கே தமிழ்ப்பெண்களிடம் தவறாக நடக்கிறார்களாம். நான் இதை ஒருநாளும் நம்பமாட்டேன்”**

தடாரென நிலத்தில் விழுந்து அதிர்ந்தது. வாப்பா இவனையும், உம்மாவையும், திரும்பிப் பார்த்தார். தலைப்பாகைக்காரன் வாப்பாவை திரும்பவிடாமல் கழுத்தை திருகி ஜீப்புக்குள் அமுக்கினான். உம்மா வாசப்படியக்கடந்து ஓடினா. ஓடும்போது பிடவ காலில் சிக்கி பெஞ்சில விழுந்து கதறினா. அவட மொகம் எல்லாம் ரெத்தம் கசிந்தது.

இவனின் சதையும் நடுங்கியது. உம்மா ஜீப்புக்கு பின்னால ஓடுனா. புழுதிய அள்ளி காத்து அவ முகத்தில எறிந்திற்று. ஆத்தங்கரை கல்லில் மீன் கிடந்து துடிப்பது போல, நிலத்தில் வீழுந்து உம்மா துடித்ததை இவன் அச்சத்துடன் பார்த்தபடி விறைத்து நின்றான். பட்டிக்கார அப்பாதான் கேள்விப்பட்டு ஓடிவந்தார். உம்மாவை தூக்கி விட்டார். இவனையும் இழுத்து வைத்துக் கதறினா. திறந்திருந்த கடைப்பலகையைப் பட்டிக்கார அப்பா போட்டுவிட்டார்.

வீட்டில் சனம் நிரம்பி வழிந்தது. சந்தனம் அக்காவும் வந்திருந்தா. அவ அடிக்கடி வருபவ. அவவோட இவனுக்குப் பிடிப்பு அதிகம். அவ உம்மாவைத் தேற்றினா.

‘அக்கா அழாதியுங்கோ, காக்காவுக்கு ஒன்றும் ஆகாது. கடவுள் காப்பாத்துவாரு. நாங்களும், உவங்களுக்கு வந்த புதிசில் ரெத்தத்தால பொட்டு வச்சனாங்க. இப்ப என்னடாண்டா, எங்கட ரெத்தத்தையே குடிக்கிறானுகள்.’

சந்தனம் அக்கா உம்மாவுக்கு ஆறுதல் சொன்னா.

இரண்டு நாள் கழித்து வாப்பாவைக் கொணர்ந்து கடைக்கு முன்னால் கிடத்திவிட்டுப் போனார்கள். உம்மாவுக்கோ சரியான சந்தோஷம். இவனுக்கும் தான். எனினும் வாப்பா அதிகம் பேசாதது மிகுந்த வருத்தத்தைத் தந்தது. கை காலெல்லாம் தடித்துப் பெருத்திருந்தது. முற்றம் கொள்ளாச்சனம் ஆறுதல் சொல்லிவிட்டுப் போனது. உம்மா வாப்பாவைப் பார்த்தபடி இரவு முழுக்கக் குழறினர். இவனின் நெஞ்சும் பொய்லராய் தளதளத்தது.

வாப்பா மறுநாள் வாய்த்திறந்து பேசியதில் இவனுக்கு சந்தோஷம். உம்மா பாணிச்சேவல அறுத்து மிஸ்கீன்களுக்கு சோறு போட்டா. வாப்பா இவனைப் பார்த்து இலேசாக புன்ன கைத்தார். அவர கொண்டு போய் கட்டிப்போட்டு அடிச்சானு களாம்.

அவங்களக்காட்டச் சொல லிக் கரண்டும் பிடிச்சதாம். தண்ணிக்குள்ள தலைகீழா நிப்பாட்டி, அவர்ற தோளுக்குமேல

ஏறி நிண்டானுகளாம். நாக்குல பிளேட்டால கீறி மிளகா தேய்ச்சானுகளாம். வாப்பா நாக்கை நீட்டினார். உம்மா விரலைத் தடவ-ிப் பார்த்தா. இவனும் விரலால் நாக்கைத் தொட்டான். சில்லிட்ட ஈரலிப்பில் இவன் கரைந்து என்ட பூ வாப்பா என அவரை அணைத்துக் கொண்டான்.

வீட்டிற்கு வந்த வாப்பா இரண்டே நாளில் இவன் கதறக்கதற உம்மா மூர்ச்சித்து விழ-மௌத்தாகிப் போனார்.

இந்திய அமைதி காக்கும் படையினரின் அடாவடித்தனங்கள் நாளாந்த வாழ்க்கை எதிர்கொள்ளும் அவலங்களை (கப்டன்) கஸ்தூரியின் சிறுகதைகள் தத்ரூபமாகப் படம் பிடித்துள்ளன. 'அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே..!' என்ற சிறு கதை அவற்றுள் முக்கியமானதொன்று. இருபிள்ளைகளின் (ஒரு ஆணும் ஒரு பெண்ணும்) தாயொருத்தி அவளும் மகன் கொலை செய்யப்பட்ட நிலையில் மன பேதலிப்பிற்குள்ளாவதை வெகு இயல்பான முறையில் சித்திரிக்கும் சிறந்த சிறுகதையாகவுள்ளது அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே!? கதையின் முடிவுப் பகுதியை இங்கு எடுத்தாள்வதனூடாக இக்கதாசிரியரின் படைப்பாற்றலை நன்குணர முடியும்.

"ஓடிச் சென்று கதவை அடித்துச் சாத்தினாள்... நடந்து வந்து வாங்கருகில் நின்றாள்..... மகனையே பார்த்தாள்.... தலைமாட்டில் கிடந்து வாடிய செவ்வரத்தம் பூவை எடுத்து நெஞ்சில் கழுத்துக்குக் கிட்ட வைத்தாள். கால் மாட்டில் வந்து துணியை விலக்கிக் காலைத் தொட்டுப் பார்த்தாள்.... குளிர்ந்து விறைத்திருந்தது.

மூலையில் மேசையருகில் கிடந்த கதிரை யில் மகள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் முகம் மலர மேசையை நோக்கி ஓடினாள்.... எல்லாமே பிரமை..... கதிரை வெறுமனே சும்மா கிடந்தது.....

ஒரே தாகமாக இருந்தது..... ஏதாவது குடிக்க வேண்டும்போல்..... குசினிக்குள் சென்று அடுப்பை மூட்டினாள்.... வாளி யில் தண்ணீர் இல்லை..... அடுப்பு நன்றாக எரிந்தது.....

கேற்றிலில் இருந்த சிறிதளவு நீரையே கொதிக்க வைத்தாள்.

"அம்மா.... ஆ..... நான் போட்டு வாறன்...." மகளின் குரல் கேட்டது. விறாந்தைக்கு ஓடிவந்தாள்.

எல்லாமே பிரமை..... அங்கே... மகனின் பிணம் மட்டுமே.... தலைமாட்டில் அந்தக் குத்துவிளக்கு மட்டும் மௌனமாக அழுது கொண்டிருந்தது.....

தலையில் அடித்து 'ஓ' என்று கத்தினாள். சிறிது நேரம் அப்படியே செய்தாள்.

குசினியுள் சென்று ஓர் கரிபிடித்த தட்டில் கொஞ்சம் தணல் கொண்டு வந்து வாங்கின் ஓரமாக மகனின் கால்மாட்டில் வைத்தாள். சாமி அறையினுள் சென்ற ஒரு பேணியோடு திரும்பி வந்தாள்.... அதனுள் இருந்த தூளை அள்ளித் தணல் சட்டியில் போட்டாள்.

அடர்த்தியான புகை வாசனையோடு மேலே எழுந்தது. இரண்டு கைகளையும் புகையின் மேல் பிடித்து, கைகளைச் சூடாக்கினாள். பாதங்களை மூடியிருந்த துணியை விலக்கிச் சூடேறிய கைகளால் பாதங்களை உரசினாள். இடக்காலின் மேற் பாகத்தை நன்றாகத் தேய்த்தாள். வலப்பாதத்திற்கும் அப்படியே செய்தாள்.

திடீரென்று சூட்டுச் சத்தங்கள் நின்றன..... மயான அமைதி..... உலகமே இறந்து விட்டது போல் ஓர் அமைதி.... எழுந்து வெளியே வந்தாள்.... இருட்டை வெறித்தாள்.

அமைதி அவளை என்னமோ செய்தது.... சூட்டுச் சத்தமில்லாமல் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. வெடிச் சத்தங்களைக் கேட்டுக்கொண்டேயிருக்க

வேண்டும் போலிருந்தது. வெடிச் சத்தம்! வெடிச் சத்தம் அவளுக்குள் கத்த வேண்டும் போல் இருந்தது. சீ என்ன படைவீரர்கள் இவர்கள்... இப்படி ஒரேயடியாக நிறுத்தி விட்டார்கள்.

திரும்பி மகனைப் பார்த்தாள்.... அவன் புன்னகைத்தபடி படுத்திருந்தான்....

சீக்கிரம்.... சீக்கிரம்.... அவளுக்கு வெடிச் சத்தம் வேண்டும். ஒரு வேளை.... இந்தியப் படைவீரர்கள் மலங் கழிக்கப் போயிருப்பார்கள்.... அதெப்படி எல்லோருமே ஒரே நேரத்தில்.....?தலைவன் ஏதாவது கட்டளை பிறப்பித்திருப்பான்.... சுடுவதை நிறுத்திவிட்டுக் கேட்கிறார்கள் போலும்....

அமைதி அவளுக்குப் பயத்தை உண்டுபண்ணியது. தூரத்தே ஒரு 'டோர்ச்' வெளிச்சம் தெரிந்தது.... யாராக இருக்கும்.....? சிறிது நேரம் நிற்கிறது. பின் நடக்கிறது.

திடீரென்று சூட்டுச் சத்தங்கள்.... எல்லாத் திக்கிலும்... அவளுக்கு ஒரே ஆனந்தம்.... தூரத்தே வந்த 'டோர்ச்' வெளிச்சத்தைப் பார்த்தாள். அது வந்த பாதையால் திரும்பி ஓடிக் கொண்டிருந்தது. அவளுக்குச் சிரிப்பு வந்தது.....

இடப்புறக் கழுத்தில் ஏதோ ஊர்வது போலிருந்தது மார்பிலும், இடுப்பிலுங்கூட அப்படித்தான் இருந்தது.....

அவளுடலில் குண்டுகள் பாய்ந்து விட்டன.... அவளுக்குகெங்கே அது விளங்கப் போகிறது.....? பாழாய்ப் போன குண்டுகள்....

கழுத்தைத்தடவிப்பார்த்தாள்.... ஈரமாக இருந்தது..... "ஏன்தான் இப்படி வியர்த்துத் தொலைக்கிறது....!" பிசு பிசுத்தது..... உள்ளே வந்து வெளிச்சத்தில் பார்த்தாள்..... கையெல்லாம் சிவப்பாக .... சீலையில் துடைத்தாள்..... திரும்பவும் கழுத்தைத் தடவினாள்.... மீண்டும் கையெல்லாம் ரத்தம்..... இடுப்பைத் தொட்டுப் பார்த்தாள். துவாரம் போலிருந்தது. சுண்டுவிரல் உள்ளே சென்றது.....

எங்கோ தொலைவில் சேவல் கூவுவது கேட்டது. வாசலருகில் வந்து நின்றாள். வியப்பாக இருக்கிறதே.....! இந்தப் பயங்கர இருட்டில்..... மயான அமைதியில்.... சூட்டுச் சத்தங்களின் மத்தியில்.... இந்தச் சேவல் மட்டும் எங்கே ஒளிந்திருந்தது.....? பயமில்லாமல் எவ்வளவு துணிச்சலாகக் கூவுகிறது.....! மனிதர்கள்கூடப் போட்டது போட்டபடி.... ஊரைவிட்டே ஓடி விட்டார்கள். துணிச்சலான சேவல்.... சாவைப் பற்றி அஞ்சாது தனது கடமையைச் செய்கிறது.

விடியலுக்காகத்தானே அது கூவுகிறது....? அவர்களுக்குத்தான் எமக்கு விடிவதில் விருப்பமில்லையே....! நாளை இச்சேவலை நிச்சயம் இந்தியப் படைக்காரர்கள் கொன்று விடுவார்கள்......

இங்கே கூட கருஞ்சிவப்பில் ஒரு கொண்டைச் சேவல் திரிந்தது.... எங்கே செத்ததோ தெரியாது....! நாலைந்து நாட்களுக்கு முன் ஒரு குட்டி நாய் துரத்தக் கோவென்று ஓடிச் சென்று வைக்கோல் பட்டடைக்குள் புகுந்து கொண்டது... பயந்தகோழி.

ஒரு நாய், இரண்டு பூனை.... ஒன்றைக்கூடக் காணவில்லை....! இரவில் இவர் மார்பில்தான் அந்தச் சிவலைப் பூனை படுத்திருக்கும்.... இப்போது அவன் தனியாகக் கிடக்கிறான்.... பூனை எங்கே தொலைந்ததோ தெரியவில்லை.

அவளுக்கு ஒரே களைப்பாக இருந்தது.... தூங்க வேண்டும் போல் ஒரே மயக்கமாய் வந்தது. அவசரமாக வெளியே போய்வர நினைத்தாள்: முடியவில்லை. தூக்கம்.... தூக்கம்.... ஒரே தூக்கம்.... பாய்கூட வேண்டாம். விழுந்து விடுவாள் போலிருந்தது. தட்டுத்தடுமாறி வாங்கருகில் வந்தாள்.... வீடு முழுவதும் இரத்தம் கோடு

# இனிய தேசமே

மேஜர் பாரதி



என் இனிய தேசமே!
குறிப்பெடுத்துக் கொள்

எரியுண்டு
சிதையுண்டு போன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளை
குறிப்பெடுத்துக் கொள்.

இந்த தேசத்தை
எப்படி நான்
நேசித்தேன் என்று
தெரியுமா உனக்கு?

என் தலைமையை
எப்படி நான்
தெரிந்தெடுத்தேன் என்று
தெரியுமா உனக்கு?

கீழ்வானம் எமக்கு
எப்போது சிவக்கும்?
என் இதயத்தின் துடிப்பிது
கேட்கிறதா உனக்கு?

என்னால்
விளங்கப்படுத்த
முடியவில்லை.
ஆனாலும்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்.
இன்னும்
என்
அம்மா என்ற பெயரில்
உயிரோடு உலாவும்
எலும்புக் கூட்டை
நீ
கண்டிருக்கிறாயா?
ஆம்!
கண்டிருப்பாயானால்
நடைப்பிணமாய்த் திரியும்
அதன் கால்கள்
நிச்சயம்
உன் மடியில்
பதிந்திருக்கும்.

வாழ்வின்
பற்றுக் கோட்டினைத்
தேடி அலையும்
இந்த எலும்புக்கூடு

தினம் தினம்
என் நினைவில்
வந்து போனாலும்
இன்னும் எதன்மீது
அன்பு செலுத்துகிறேன்
தெரியுமா உனக்கு?
தெரிந்து கொள்
உன் மீதுதான்.

இருண்டு போயிருக்கும்
என் தேசத்தில்
ஏற்றப்படும்
விடுதலைத் தீபத்துக்கு
என் உயிரும்
எண்ணெய்யாய்
ஊற்றப்பட வேண்டும்
குறிப்பெடுத்துக் கொள்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்.



(ஈழத்தின் புதிய தமிழ்க் கவிதைகள்)

போட்டது.

மகனைப் பார்த்தாள். புன்னகையுடன் படுத்திருந்தான்.... இறந்திருந்தான். தலையைக் கோதிவிட்டாள். கை வெளியே தெரிந்தது.... உள்ளே தள்ளி நன்றாக மூடினாள். அது விறைப்பாக இருந்தது. கால்மாட்டில் வந்து நின்றாள். பூக்களைக் கையில் எடுத்துப்

பார்த்தாள். மகளின் நினைவு வந்தது. இருந்த இடத்திலே பூக்களை மீண்டும் வைத்தாள்..... அவை வாடாமல் இருந்தன.

தூக்கம் பிய்த்தெடுத்தது.... அவளை யறியாமலே கீழே இருந்து விட்டாள். தாக மாய் இருந்தது. படுத்துக் கொண்டாள்.... இல்லை, விழுந்து விட்டாள். கண்கள் மூடிக் கொண்டன. உடனேயே தூங்கிப் போனாள் மகளைப் போல.....

போராளிக்கு உதவி செய்கின்ற 3 பிள்ளைகளின் தாயொருத்தி படையினரால் கொலை செய்யப்பட்ட பின்னர் பிள்ளை கள் அநாதரவான நிலைக்குள்ளாவதை விவரிப்பது 'இடம் மாறியுள்ள துப்பாக்கி களால்' பாலியல் வல்லுறவிற்கு மறுத்தது மட்டுமன்றி கடுமையாக ஏசி விட்டும் சென்ற இளம் பெண்ணொருத்தியின் தகப்பனைப் படையினர் கொலை செய்வது பற்றியது. 'மக்களைப் பிரிந்த துப்பாக்கிகள்' சிறுபிள்ளையொன்று தனது சமயோ-சித புத்தியினால் படையினரிடமிருந்து போராளியான தனது தமையனைக் காப்பாற்றுவது தொடர்பான சிறுகதையே சின்னப் பூக்களுடன் சில பொழுது!

இந்திய அமைதி காக்கும் படை உருவாக்கிய தொண்டர் படையில் இணைந்துவிட்ட தம்பிக்குப் புத்திமதி கூறும் பாங்கில் இந்திய அமைதி காக்கும் படையினரின் செயற்பாடுகளை விளக்கி விமர்சிப்பது கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று மீள்கின்ற கணவன் படையினரால் தெருவில் அநியாயமான முறையில் சுட்டுக் கொல்லப்படும் அவலம் முற்குறிப்பிட்ட சித்ரா நாகநாதனின் வேதனைவடுக்கள் சிறு கதையில் விவரிக்கப்படுகின்றன.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்தாற்றிய கொடூரங்கள் சில படைப்புக்களில் இடம்பெறுகின்றன. இவ்விதத்தில் குறிப் பிடத்தக்கது, (சித்ரா நாகநாதனின்) 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' இச்சிறுகதையின் முக்கியமானதொரு பகுதி பொருத்தம் கருதி இங்கே தரப்படுகின்றது.

"பெரியதொரு முகாமிட்டு இந்தியப் படையினர் அமைதி காத்துக் கொண்டி ருந்தனர். "ஐயா ஒருத்தனை சிங்களவன் இழுத்திட்டுப் போறான். காப்பாத்துங்கோ" தப்பிய ஒரு உயிர் மற்றவனுக்கு உயிர்ப்பிச்சை கேட்டு இந்திய இராணுவ காலவீரனின் கால்களைப் பிடித்தாள். ஆனால், அவன் அமைதிகாக்க வந்தவன். அந்த வீரன் அமைதியாகச் சொன்னான். "நோ ஓடர்".

ஈனஸ்வரத்தில் முனங்கியபடி காமாட்சி இந்த வயதிலும் எழும்பி ஓடினாள். "தெமல கேணி துவனவா!" பளபளக்கும் கத்தியுடன் ஓடி வந்தவன் காமாட்சியின் முதுகில் குத்தினான். "காளியாச்சி! காப்பாற்று!" அதன் பின் அவள் அப்படியே சரிந்தாள். கழுத்தை இழுப்பது மட்டும் தெரிந்தது. ஓ! அந்த சங்கிலியை ஒரே இழுவையாக இழுத்துக் கொண்டு போனான் அவன்.

காமாட்சியின் ஆயுட்பலமோ? ஆண்டவன் சித்தமோ? இன்னமும் உயிர் இருந்தது. ஆனால் உணர்வில்லை. மயங்கிப் போனாள். தமிழ் மண்ணில் தமிழரை ஓடஓட விரட்டினர். விரட்டி விரட்டிக் கொன்றனர். ஆவேசத்தோடு எதிரியை அணுக முயற்சித்த சில தமிழ் இளைஞர்களை மட்டும் தடுப்புக்காவலில் வைத்துவிட்டனர் இந்தியப்படையினர். ஏனென்றால் சிங்களவனின் உயிரை எடுக்க யாருக்கும் அனுமதியில்லை. ஆனால் தமி ழன் உயிரை நினைத்த மாத்திரத்தில் பறிக்க யாருக்கும் அனுமதி உண்டு."

சிறுகதைகளை விட, நாவல்கள், தாம் பேசும் விடயங்களை ஆழமாகவும் பரந்ததளத்திலும் விரிவாகவும் பேசும் இயல்புகள் கொண்டவை.

தாமரைச்செல்வி இந்திய அமைதி காக்கும் படையினரது காலத்தைப்

பின் புலமாகக் கொண்டு இருநாவல்கள் எழுதியுள்ளார். இவற்றுளொன்றான வீதியெல்லாம் தோரணங்கள் (2003) நாவலில் மிகச் சுருக்கமாகவே இந்திய அமைதி காக்கும் படையினர் செயற்பாடுகள் (சுற்றி வளைப்பு, சிறு சண்டைகள், போக்குவரத்துச் சிக்கல்கள்) இடம்பெறுவதோடு சீதனப் பிரச்சினையோடு அவற்றைத் தொடர்பு படுத்தி (மணப்பெண்ணின் வீட்டார் சேர்த்து வைத்திருந்த சொத்துக்கள் இந்திய அமைதி காக்கும் படைச் செயற்பாடுகளால் இழக்கப்படுகின்றன.) எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நாவல் யாழ்ப்பிர தேசத்தை முதன்மைப்படுத்தி, 'விண்ணில் அல்ல விடிவெள்ளி' (1992) கிளிநொச்சி விவசாயக் குடும்பச் சூழலில் நடைபெறுகின்றது. ஆரம்பத்தில் விரிவாக எழுதிய அப்பிரதி எரிந்துவிட்ட நிலையில் மறுபடி எழுதப்பட்டமையாலும் பின்னர் சுருக்கி எழுதியபோது சுருக்கி எழுதப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையாலும் அந்த நேரம் இந்திய இராணுவப் போர்க்களத்தில் எழுதப்பட்டபோது இருந்த ஆவேசம் இப்போது சிறிது தணிந்துவிட்டதாலும் சற்று மிதமாக எழுத வேண்டி ஏற்பட்டதாகவும் சொல்லவந்த பல விடயங்களைச் சொல்லமுடியாது போய்விட்டதாகவும் நாவலாசிரியர் குறிப்பிடுவது நாவலை வாசிக்கின்றபோது உறுதிபெறுகின்றது!

இலங்கையில் இனமோதல்கள் வெடித்த நிலைமையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும் அங்கு அமைதியை நிலைநாட்டவும் சென்ற இந்தியப் படை அங்கு தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டது என்பது இந்த நாவலின் பின்னணி என்ற நோக்கத்துடன் தனது யுத்தபூமி (2006) எழுதப்பட்டதாக அதன் ஆசிரியர் செங்கை ஆழியான் குறிப்பிட்டாலும் இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகள் மேலோட்டமாகவே இந்நாவலில் இடம்பெற்றுள்ள வழக்கமான காரணம் புலப்படவில்லை.

'மு.பொ.வின் 'நோயில் இருத்தல்' நாவலிலும் விடுதலைப் போராட்டம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. இவ்விதத்தில் நாவலின் ஒரு பகுதியாக இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகள் பற்றிய பதிவும் இடம்பெறுகின்றது. எனினும், நோயில் இருத்தல் ஏனைய நாவல்கள் போலன்றி, 'விடுதலை' யைப் பரந்த நோக்கில் பார்க்கிறது. அதாவது, தமிழரது விடுதலைப் போராட்டத்தையும் தனிமனித அக விடுதலை முயற்சியையும் சமாந்தரமாக வைத்து விசாரணை செய்வது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகள் பற்றி ஆழமாக விமர்சனம் செய்யப்படுவது இந்நாவலிலேயே என்று கூறத் தோன்றுகின்றது. உ-ம்:

"என்ன பிழையோ?" என்று ஆத்திரத்தோடு இழுத்தவன் "இவையளை ஆரு இந்திய ராணுவத்தோட சண்டை போடச் சொன்னது? இது அடாத்தான யுத்தந்தானே?" என்று ராசு எதிர்க்கேள்வி கேட்டான்.

"அடாத்தான யுத்தமே? நல்ல கதை! அமைதிப்படை எண்ட பேரில வந்திற்று எங்களைஅழிச்சிறசிங்களவனோடஅல்லோ சேர்ந்து நிக்கீனம்? அப்பிடிப்பட்டவைக்கு அடியில்லாமல் ஆராத்தியோ எடுக்கச் சொல்லிற?" சிவா ஆத்திரத்தோடேயே கேட்டான்.

"சிங்களவன் பக்கம் நிக்கிறாங்களா? புதிர் போடாமல் விளக்கமா சொல்லு" - ராசு அமைதியாகவே கேட்டான்.

"இதில என்ன புதிரும் புதினமும்? எங்கட 17 போராளிகளை இலங்கை இராணுவம் புடிச்சு கொழும்புக்கு ஏத்திறத்துக்கு ஆதரவாய் இருந்தவை.

இதெல்லாம் ஒப்பந்தத்துக்கு மாறானது எண்டு அவைக்குத் தெரியாதா? திலீபனைப் பட்டினி கிடந்து சாக விட்டவை. இதுக்கு மேல இவையின் நியாய அநியாயம் பற்றி என்ன கதைக்க இருக்கு?" - சிவாவின் கதையில் ஆத்திரம் பீறிட்டது.

"சிவா, நீ சொல்லிறது எல்லாம் சரிதான். ஆனா முதல்ல நீ இந்தக் கேள்விக்கு பதில் சொல்லு. தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவு தந்து, நம்ம பொடியளுக்குப் பயிற்சி குடுத்து ஆயுத உதவி செய்தது ஆர்?"

"இந்தியாதான். அதுக்கென்ன இப்ப?"

"இந்தியா ஏன் இப்பிடிச் செய்தது? எங்கட தமிழ் மக்களில கொண்ட கருணையாலா?

"இல்ல. அது இலங்கை அரசு தன்னை மிஞ்சி விடாமல் பாத்துக் கொள்ள, எங்கட பொடியளின்ர போராட்டத்தை தூண்டித் தனக்காகப் பாவிக்குது. அத்தோட இந்தியாவுக்குத் திருகோணமலைத் துறை முகத்திலும் ஒரு கண்."

"அப்ப இவை எல்லாத்தையும் தெரிஞ்சு கொண்ட பிறகும் நீங்களேன் இந்தியாவோடை சண்டை பிடிக்கிறேங்க?" ராசுவின் கேள்வியில் கேலி தொனித்தது.

"தெரிஞ்சு கொண்டபடியால்தான் சண்டை பிடிக்கிறம். தங்கட நலத்துக்காக எங்களை எந்த நேரமும் பேய்க் காட்டலாம் எண்டு நினைக்கக் கூடாது. இவையளுக்கு அடிதான் சரி" - சிவா உணர்ச்சி வசப்பட்டவனாய்க் கூறினான்.

"ஏன் சிரிக்கிற, நரி வெருட்டுதா?" என்றான் சிவா அவனைப் பார்த்து,

"இந்தியாவை அடிச்சுத் துரத்த வேணும் எண்டாய் அதுதான் சிரிக்கிறான்" என்றான் ராசு.

"ஏன் இந்தியாவை அடிச்சு துரத்தேலாதோ?"

"அதுகூட இந்தியா நினைச்சாதான் முடியும்"

"ஏன் அப்பிடி?"

"இப்ப இந்த ஆஸ்பத்திரியை இயக்கிறவர்கள் போராளிகள். ஒரு பழைய நோயாளியை கட்டிலைவிட்டு இறக்குவதும் ஆபத்தான நிலையில் காயப்பட்டு வரும். ஒரு போராளியை அந்தக் கட்டிலில் கிடத்துவதும் அவர்கள் கட்டளையில் நடைபெறுவது இல்லையா?"

"அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?" - சிவா வெகு அக்கறையோடு கேட்டான்.

"இந்து சமுத்திர பிராந்தியத்தை இயக்குவது இந்தியாதான். அதைத் தட்டிக் கேக்க ஆரும் இல்லை. அது நினைத்தால் தமிழீழத்தை ஏற்படுத்தவும் முடியும். அதுக்குத் தடையாக இருக்கவும் முடியும். இதைத் தெரியாம வீரம் பேசுவதெல்லாம் விசர்க்கதை!" - ராசு கூறிவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான்.

"நீ சொல்லிறதுதான் விசர்க்கதை" என்று சிரித்தான் சிவா. "நீ இண்டைய உலகப் போக்கைத் தெரியாமல் கதைக்கிற. ஆப்கானிஸ்தானை ரஷ்யா பிடிச்சா

**அங்கு நான் கண்ட காட்சி.... காலடியில் எங்கும் ஒரே பிணமயம்......! வயிறு பிளந்து, நெஞ்சு பிளந்து, தலை சிதறி, கண்கள் வெளியே துருத்திக் கொண்டிருந்தபடி, வாய் பிளந்து, நாக்கு வெளியே நீண்டபடி..... குடல் சரிந்து, வெளியே கொடி போல் மற்றப் பிணங்களின் மேல் படர்ந்தபடி.... அப்பப்பா.... ! என்ன கொடூரம்.**

அதுக்கெதிராக பாகிஸ்தானைக் கொண்டு காய் நகர்த்திது அமெரிக்கா. இதுதான் இண்டையப் போக்கு. இண்டைய உலக ஒழுங்கு நாளைக்கு இருக்காது. மாறிக் கொண்டு வரும் உலகில் நீ நினைக்கிற மாதிரி இருக்காது.... உனக்குத்தான் அரசியல் தெரியும் எண்டு நினைக்காத. எங்களுக்கும் அது தெரியும்" என்று சிவா தொடர்ந்து கூறினான்.

"எண்டாலும் இந்தக் கட்டத்தில நாங்க இந்தியாவுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்காமல், பச்சை விளக்குக் காட்டிறதுதான் ஆரோக்கியமானது, அது தான் ராஜதந்திரம்."

"ஓமோம் பச்சை விளக்கைக் காட்டினா அவன் பிச்சை போடுவான். நீ வாங்கி வைச்சு தின்னும்" என்று சிவா கூறியபோது இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த சில நேர்ஸ்மாரும், இரண்டொரு நோயாளிகளும் அவனோடு சேர்ந்து சிரித்தனர்."

அண்மைக்காலத்திலும் இந்திய அமைதி காக்கும் படையினர் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட இருநாவல்கள் வெளி வந்துள்ளன. இவற்றுளொன்று சயந்தன் எழுதிய "ஆறா வடு" (2011). வித்தியாசமான பின்புலத்தில் அதாவது, "87 இல் தொடங்கி 2003 வரையான இந்த இரண்டு அமைதிக் காலங்களுக்கு இடையே இந்த நாவலின் கதை நகர்கிறது. இத்தகைய அமைதிக் காலங்களிலொன்று, இந்திய அமைதி காக்கும் படை சில காலம் ஏற்படுத்தியிருந்த அமைதிக்காலம். "இந்திய இராணுவம் அந்த மண்ணில் போய் இறங்கிய போது அப்படியொரு நம்பிக்கை அந்த மக்களிடத்தில் முகிழ்த்திருந்தது. பதுங்குகுழி வாழ்வொன்றைப் பாரதம் தந்து விடுமென அவர்கள் எதிர்பார்த்தார்கள். முடிவில் நம்பிக்கை சிதைந்தழிந்தன. சனங்களின் முகங்களில் போர் அமிலமாய்த் தெரிந்தது என்று தன்னுரையிலும் நாவலாசிரியர் குறித்துள்ளார். ஆயினும், இந்நாவல் வேறுமிரு தளங்களில் கவனஞ் செலுத்தியமையால் மூன்று தளங்களுமே ஆழமாக அணுகப்படவில்லை என்றே கூறவேண்டும். ஆயினும் மெய்சிலிர்க்க வைக்கும் சம்பவமொன்றை இந்நாவல் பதிவுசெய்துள்ளது.

ஏதோ ஒன்றைக் கடந்து கொண்டிருந்த சமயத்தில் நிலாமதி வீட்டின் வேலிக்கு அப்பால் எண்ணெய் மணக்கிற உருவங்களின் சப்பாத்துக் கால்களின் சரக் சரக் சத்தங்கள் வந்துவிட்டிருந்தன.

விறாந்தையில் சற்று முன்னர் போராளிகள் கூடியிருந்தார்கள் என்பதற்கான எந்தத் தடயமும் இல்லாதிருப்பதான திருப்தி நிலாமதிக்கு உருவான கணத்திலேயே அவள் அதனைக் கண்டாள். மூலைச் சுவரோடு ஒட்டியபடி பெரும் கருவண்டு ஒன்று கிடப்பதைப் போலக் கிரேனைட் குண்டொன்று தனியனாய்க் கிடந்தது. ஒரே பாய்ச்சலில் தாவி அதனைத் தூக்கியபோது அது உள்ளங்கைக்குள் முழுவதுமாக அடங்கியது. புகைக் கூடு, புளியமரத்தடிக், குப்பைமேடு என்ற நினைப்புகள் அவளுக்குள் தோன்றவில்லை. 'சலோ சலோ' என்ற சத்தங்கள் வீதியில் மிகக் கிட்டத்தில் கேட்டன.

அவள் அணிந்திருந்த சட்டையின் முன்பக்க பட்டன்கள் ஒன்றிரண்டைக் கழற்றினாள். பிராவை விலத்தி கிரேனைட் குண்டை மார்புச் சதையை நசித்து உள்ளே தள்ளினாள். அது முழுவதுமாக அடங்கிக் கொண்டது. மீளவும் சட்டையைப் பூட்டிக் கொண்டாள். உள்ளே இரும்புக் குண்டு குளிர்ந்தபடி இருந்தது.

என்றுமில்லாதவாறு இராணுவம் படலையைத் திறந்து கொண்டு வந்தபோது நிலாமதிக்குப் பயத்தினால் மூச்சிளைக்கத் தொடங்கியது. மார்புகள் மேலும் கீழும் ஏறி இறங்கின. அவள் மூச்சையடக்க

முயற்சித்தாள். சிப்பாய்கள் பல்லை இளித்துக் கொண்டு முன்னால் நின்றார்கள் "இங்கே யாரெல்லாம் இருக்கிறீர்கள்?" என்று கேட்டவனின் பார்வை அவளின் கண்களைத் தாண்டி கழுத்தினைத் தாண்டி மார்புகளில் நிலைத்து நின்றது.

"நானும் அம்மாவும்."

"அம்மா எங்கே?"

"காணிக்கு புல்லுப் பிடுங்க போயிட்டா."

அவர்களில் இருவர் கிணற்றடிக்குச் சென்றனர். மற்றவர்கள் வீட்டுக்குள் நுழைந்தனர். நிலாமதி விறாந்தைக்கும் வெளியே வந்து முற்றத்தில் நின்று கொண்டாள். குசினிக்குள் பாத்திரங்கள் விழுந்து உருளும் சத்தங்கள் கேட்டன. வானரங்கள் என்ற வார்த்தையை உதடு மெதுவாகத் தன்பாட்டில் உச்சரித்தது. அவர்கள் மீண்டும் முற்றத்திற்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் அவளிடம் "சரி நீ சாப்பிடு பொண்ணு" என்றான். அப்பொழுதுதான் விறாந்தையில் பழஞ்சோறு நிறைந்த சட்டியை அவள் கண்டாள். ஓடிப்போய்த் தூக்கிய போது சட்டையின் உள்ளே கிரேனைட் குண்டு நகர்வதாய் இருந்தது. இதயத்தின் துடிப்புகள் காதின் அருகில் கேட்டன.

இராணுவத்தினர் வெளியேற எத் தனித்தபோது ஒருவன் என்னவோ சொல்லி அவர்களை நிறுத்தினான். தனது துப்பாக்கியை இன்னொருவனிடம் கொடுத்தான். அவன் நிலாமதியை நோக்கி நடந்தபோது அவளுக்கு அழுகை வெடித் திருந்தது. அவன் அருகே வந்தான். "ஏ பாப்பா அழாதே" என்றான். பிறகு "உள்ளே வா" என்று அவளது கையைப் பற்றி இழுத்தான். நிலாமதி கையைத் திமிறி விடுவித்தாள். முற்றத்தில் நின்றவர்கள் அவனைப் பார்த்து இந்தியில் என்னவோ சொல்லிச் சிரித்துக் கையை ஆட்டினார்கள். அவனும் பதிலுக்குச் சொல்லிச் சிரித்தான். பிறகு "ரூமுக்குள்ளே பீரோ சாவி உன்னிடமுள்ளதா.... செக்கிங் செய்ய வேண்டும். உள்ளே வா" என்று அவளை இழுத்தான். நிலாமதி நடந்தாள்.

அலுமாரி சாமியறையில் இருந்தது. அதன் திறப்பு சாமிப் படங்களின் பின்னே இருந்தது. அதை எடுத்து நிலாமதி நீட்டினாள். அவன் வாங்கிக் கொள்ளவில்லை. அவளைச் சுவரோடு தள்ளினான். நிலாமதி ஒடுங்கினாள். மார்புகள் வேகமாகத் துடித்தன. அப் பொழுது அவனிடத்தில் கோரமான புன்னகையொன்று தோன்றி வழிந்தது. தன் கைகளுக்குள் அவளை அடக்கி, சுவர்களில் ஊன்றி நின்றான். நிலாமதி வீரிட்டுக் கத்தத் தொடங்கினாள். அவன் அவளின் இடுப்பைச் சுற்றித் தன்னோடு இழுத்துக் கழுத்துச் சட்டையைக் கிழித்தான். பட்டன்கள் சர-சரவென கழன்று விழுந்து நிலத்தில் ஓடின. கண்களில் வெறி மிதக்க அவன் பிராவி னைப் பற்றி கீழே இழுத்தபோது கிரேனைட் குண்டு வெளியேறி உடல்வழி ஓடி கீழே விழுந்து உருண்டது. நெருப்புச் சுட்டது போல அவன் கைகளை உதறி இரண்டடி பின்னால் பாய்ந்தான்.

"ஏ.... நீ... புலி" அவனுக்கு வார்த்தைகள் குழறின. பதற்றத்தோடு ஒரு காளையை அடக்குகிறவனைப் போலப் பதுங்கி அவளைச் சுற்றிக் கொண்டு நின்றான். அவனது காலடியில் குண்டு அசைவு முடித்து ஓய்ந்திருந்தது. சட் என்று குனிந்து அதை எடுத்து நிமிர்ந்தபோது மீண்டும் அவனில் கோரமான புன்னகை வழிந்தது. "செத்தாய் நீ" என்றான் அவன். நிலாமதி வெறித்தபடி நின்றாள். இராணுவத்தான் அவளிலிருந்து விலகி கதவருகே ஓடினான். நடுங்குகிற விரல்களால் கிரேனைட்டின் கிளிப்பினைக் கழற்றி நிலாமதி மீது எறிய எத்தனித்த கணத்தில் நிலாமதி அவனில் பாய்ந்தாள். குண்டினை வைத்திருந்த அவனது கை

உடல்களுக்கிடையில் சிக்கியது. அவள் அவலக் குரல் எழுப்பித் திமிறினாள். நிலாமதி இரண்டு கைகளாலும் அவனை இறுக்கிக் கொண்டாள். அவனது கழுத்திடையே தன் முகத்தை வைத்து அழுத்தினாள். காலினால் ஒரு பாம்பைப் போல அவனைச் சுற்றிப் பிணைத்துக் கொண்டாள். அவளது வெற்று மார்புகள் அவனது சாக்கினை ஒத்த தடித்த பச்சை உடையில் அழுந்தி நின்றபோது அவளிடமிருந்து வார்த்தைகள் வெளியேறின.

'இப்ப பிடிச்சுக் கசக்கடா' குண்டு வெடித்தபோது வெளியே நின்ற ஆமிக்காரர்கள் கண்டமேனிக்குச் சுடத்தொடங் கினார்கள்.

# மீதம்



– முல்லை முஸ்ரீபா

வா,
மீண்டும் முகாமிருளில்
முகமும் முகவரியும்
தொலையப் புதைவோம்

குடில் வாசலில் குந்தியழும்
வாப்பாவின் கன்னத்தில்
கண்ணீர்த் துளிகளாய் வழிவோம்

விடிவெப்போ என்றேங்கும்
உம்மாவின் மடியில் மறுபடி வீழ்ந்து
இன்னொரு தசாப்தம் பாரமாவோம்

முக்காடிட்டு மூலையில் முடங்கும்
மூத்த ராத்தாவின் நெஞ்சுட் புகுந்து
நெடு மூச்சின் நெருப்பலைகளாவோம்

எதிர்காலம் ஏதென்றறியாது
ஏங்கியலறும் நானாவின்
தோள்களிலேறிச் சுமையாவோம்

வா, இரத்தல் மட்டுமே
இருத்தலாய்ப்போன அகதி யுகத்தில்
கை நீட்டும்
நம்பிக்கை வைத்தே வா!

மீண்டும் முகாமிருளில்
முகமும் முகவரியும்
தொலையப் புதைபடுவோம்

எங்கள் புதைதலில்
பூமி சிலிர்த்தேயெழுந்து
எங்களுக்காய் ஸ்நேகம் பேசும்
என்றெல்லாம் எண்ணிப் பின் வீணாகி

எமக்கினி ஏது மீதமென்பாய்
அழகான எமதூரின்
அழியாத நினைவலைகளைத் தவிர்த்து
விட்டால்...
எமக்கினி ஏது மீதமென்பாய்?

(யாத்ரா – முதலாண்டு மலர்)

இதுவரை குறிப்பிட்ட தமிழ் நாவல்களைவிட ஆங்கிலத்தில் வெளிவந்த ஐயாத்துரை சாந்தன் எழுதிய The Whirlwind *(2010)* என்ற நாவல் முக்கியம் பெறுகின்றது. ஏனெனில் முழுவதுமே இந்திய அமைதி காக்கும் படை பற்றியதாத வெளிவந்த ஒரே ஒரு நாவல் இதுமட்டுமே. வெறும் சம்பவங்களை மட்டும் குவிக்காது. தமிழர், சிங்களவர் வரலாற்றிற்கும் இந்திய வரலாற்றுக்கும் முக்கியத்துவமளிக்கப்படுவதும் பொது மக்களது உரையாடல்களூடாக இலங்கை அரசியல் போக்கு அலசப்படுவதும் இந்நாவலின் சிறப்பம்சங்களாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அமைதி காக்கும் படைச் செயற்பாடுகள் தொடர்பான கவிதைகள் எவ்வாறமைந்துள்ளன? இவை பற்றி நோக்குமுன் கவிதை வடிவத்தின் தனித்துவ இயல்புகள் பற்றி -குறிப்பாக தன்னுணர்ச்சி வெளிப்பாடுகள் பற்றி நினைவுகூர்ந்து கொண்டுதான் (அத்துடன் கவிஞரது ஆளுமைத்திறன் பற்றியும் கவனத்திற் கொள்ள வேண்டும்) அணுகப்படுவது பொருத்தமானது.

மேற்கூறிய நிலைநின்று நோக்கும் போது, கிடைத்துள்ள கவிதைகளுள் கணி சமானவை, இசைப்பாடல் தன்மைபெற்று, இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிரான உணர்வலைகளைப் பொதுமக்கள் மத்தியில் எழுப்புகின்ற மெல்லிசைப்பாடல்களாகக் காணப்படுகின்றன என்றே கருத வேண்டும். புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் முதலானோரது ஆக்கங்கள் அத்தகையன. இந்தியச் சிறைக்குள்ளிலிருந்து மு.வே. யோ. வாஞ்சிநாதன் எழுதிய பாடல்களும் அத்தகையனவே. அவரது கவிதைகள் கவனிக்கப்பட வேண்டியவையாகவுள்ளன.

உ-ம்:

**‘பாரதகண்டம் ஏன் எரியவில்லை?’**

**“எங்கள் மண்ணில் பதிந்துவிட்ட**
**உங்கள் இரத்தக் கறைபடிந்த**
**சப்பாத்துக்களால்.....**
**எங்களை மிதிக்கிறீர்களே!**
**“காந்தீயம்” இதைத்தானா**
**உங்களுக்குக் கற்றுத் தந்தது?**
**கற்புக் கனலால் மதுரையை எரித்தாள்**
**கண்ணகியென்று...**
**மேடைக்கு மேடை....**
**உரத்துக் கூறுவீர்களே.....**
**ஒரு கண்ணகியின் கற்புக்காக**
**ஒரு நகரமே எரிந்தது, உண்மையானால்.....**
**நீங்கள் சிதைத்த....**
**ஆயிரமாயிரம் கண்ணகிகளால்**
**“பாரதம்” என்ற தேசமே**
**பற்றி எரிந்திருக்க வேண்டுமே....**
**ஏன் எரியவில்லை?....**

**சீதையைச் சிறையெடுத்து வந்தவர்கள்....**
**நாமென்று கூறிவரும் சீலர்களே....**
**எமது நாட்டில் எத்தனை சீதைகளை நீங்கள்**
**சிதையெடுத்து....**
**சிதையிலே வைத்திருப்பீர்கள்?**
**ஒரு சீதைக்காக....**
**இலங்கா புரியையே.... வாலினைத் திரியாக்கி**
**எரித்துவிட்டோம்: என்றீர்களே....**
**இங்கே ..... ஆயிரமாயிரம்....**
**சீதைகள் சிந்திய.... நெருப்புக் கண்ணீரால்**
**பரத கண்டமே....**
**பற்றி எரிந்திருக்க வேண்டுமே?**
**ஏன் எரியவில்லை?**

வேறு சில மெல்லிசைப் பாடல்கள் இந்திய அமைதி காக்கும் படையினரால் மரணித்த போராளிகளுக்கான அஞ்சலிப் பாடல்களாக வெளிப்பட்டுள்ளன. (உ-ம்: காசி ஆனந்தத்தில் பல ஆக்கங்கள்)

அதேவேளையில் போராளியான தமது பிள்ளைகளின் இழப்புக்குறித்து எழுதிய கவிதைகள் சிலவுமுள்ளன. சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகள் சில இவ்விதத்தில்

குறிப்பிடத்தக்கவை. உ-ம்: ஒரு போராளியின் புதையல்.

**"உன்னையும்**
**ஒரு சவப்பெட்டியுள்தான் ஒடுக்கினார்கள். மகனே!**
**நீட்டி நிமிர்ந்து நீ நெடுமாலாய்க் கிடக்கையிலே**
**நிழல் போலக்**
**கறுத்து**
**விறைத்த உன் முகம்மீது**
**வீழ்ந்து புலம்பல் அல்லால்**
**வேறென்ன முடியும் உறவுக்கு?**
**மாலை வரையும் உன்னை வைத்திருக்கத் தடை**
**மதியத்திற்கு முதல்**
**புதைப்போம் என்ற பொறுப்பு**
**வழக்கமான பாதைக்கு மறுப்பு**
**ஊர்வலம் ஆகாதென உறுமல்**

**புதைத்தார்களா?**
**வாய்க்கரிசி போட்டார்களா?**
**பொன் மணலைக்**
**குவித்தார்களா? பிரண்டங்கொடி நட்டார்களா?**
**கொழுத்தினார்களா மெழுகுவர்த்தி**
**கடற்காற்றி கொசு கொசுப்பினிடையே?**
**எதைத்தான் பார்த்தேன்,**
**என் மகனைக் கொன்றது ஓர்**
**இந்தியத் துப்பாக்கி என**
**எண்ணுவதைத் தவிர?"**

போர்க்களம் கவிதையில் தனது மகனின் களச் சாதனை பற்றியும் குறிப்பிடுகின்றார் கவிஞர்:

**"....................**
**நேருக்குநேர்**
**நீ நடுவன் தனியா**
**சுழன்று சுழன்று கொடுத்த பாணங்களின்**
**அற்புதம் பற்றி அளந்தார்கள்**
**அமைதிப்படை**
**சர்ப்பமாய் ஒளித்து**
**சக்கரமாய் மாறிய**
**அற்பத்தனம் பற்றியும் அளந்தார்கள்"**

எனினும் இந்திய அமைதி காக்கும் படை ஏற்படுத்திய அவலங்கள் பற்றிப் பேசுகின்ற கவிதைகள், அதிகளவு வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு வந்தவற்றுள், நா. அமுதசா-கரன் எழுதிய பின்வரும் கவிதை கவனத்திற்குரியது. இந்திய அமைதி காக்கும் படையின் சாதனைகள் பற்றி சென்னை வானொலி 'நேசக்கரங்கள்', 'அன்புவழி' 'வெற்றிமாலை' போன்ற நிகழ்ச்சிகள் நடத்திவந்த சூழலில் அவற்றை மனங்கொண்டு இக்கவிதை எழுதப்படுகின்றது.

**சென்னை வானொலிக்கு**
**"நேசக் கரங்கள் நீண்டு**
**பீரங்கி வெடிக்க**
**பொம்பர் சுற்றிக் குண்டுகள் போட**
**அரிய மனிதப் பிறவிகள் வீடுகள்**
**சிதறு தேங்காய்**
**புகலிடந் தேடிய சனங்கள்**
**புலம்ப ஓட,**
**கவச வண்டிகளில்**
**அமைதிப் புறா நசிபட**
**வெற்றிமாலை சூடி**
**அன்புவழி யில்**
**முன்னேறி வருகிறது அமைதிப் படை,**
**பராக்...."**

இறுதியாக, தொகுத்து நினைவு கூர்வதாயின், மேலே கூறப்பட்ட இலக்கிய வெளிப்பாடுகளுள் உண்மைக் கதைகள் அதிக முக்கியத்துவம் பெறுபவையாக வுள்ளன.

சிறுகதை முயற்சிகளையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

நாவல்கள் பொதுவாக ஏமாற்றம் தருவனவேவாகவே உள்ளன. போதா நிலையிலுமுள்ளன. (கிடைத்துள்ள) கவிதை வெளிப்பாடுகளின் நோக்கம் புனை கதைகளிலிருந்து வேறுபட்டு உணர்ச்சியூட்டும் பாங்கினவாயிருப்பது கண்கூடு.

இந்திய அமைதி காக்கும் படை ஏற்படுத்திய அவலங்கள் தொடர்பாக

வெளிவந்த அனைத்து ஆக்கங்களும் இங்கு கவனத்திற்குட்பட்டன என்று கூற முடியாது. இவை பற்றிய பட்டியல் எவை யும் ஆய்வாளரெவராலும் இன்றுவரை தயாரிக்கப் படவில்லை.

அறியப்பட்ட படைப்புகளும் சிலரது ஆக்கங்களை இக்கட்டுரை எழுதும் வேளை பெறமுடியவில்லை. உ-ம்: மைக்கேல் கொலினின் கவிதைகள், செ.யோகநாதனின் சில சிறுகதைகள் செங்கை ஆழியானின் வேறு சில சிறுகதைகள், மலைமகளின் சிறுகதை பொ.கருணாகரமூர்த்தியின் சிறு-கதை.

எனினும், தொடர்ச்சியான தேடுதல் அவசியமானது. ஏனெனில், இந்திய அமைதி காக்கும் படையினர் தொடர்பாக ஜெயமோகன் தனது இணையத்தளத்தில் 'கற்பழித்ததா இந்திய இராணுவம்?' என்ற நோக்கில் தொடக்கி வைத்த சர்ச்சை பற்றி யும் அதற்குப் புகலிட எழுத்தாளிடமிருந்து பல கண்டனங்கள் எழுந்தமை பற்றியும் (உ-ம்: ஷோபா சக்தி, திருமாளவன்) ஆன எழுத்துப் பதிவுகளும், வெளிவந்துள்ளன. (அம்ருதா ஜான் 2012). ஜெயகாந்தனும், 'சோ'வும் 1988 இல் இவ்வாறு கூறினாரென்றால் 2012 ல் ஜெயமோகனுமா அவ்வாறு கூறவேண்டும்? (புருட்டஸ் நீயுமா என்பதனை இன்னொரு அர்த்தத்திலே நினைவுகூரத் தோன்றுகிறது) போதாக்குறைக்கு இந்திய இராணுவத்தில் 28 வருடங்களாக கர்னலாக பணியாற்றிய ஓய்வு பெற்ற ஜாஸ் டயஸ் என்பாரின் வாக்குமூலம் வேறு! அதன் ஒரு பகுதி வருமாறு:

"....... நான் ஜம்முகாஸ்மீரில் பல்லாண்டுகள் தொடர்ச்சியாக பணி யாற்றியவன். என் அனுபவத்தில் நான் ஒருமுறைகூட உண்மையிலேயே கற்பழிப்பு நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கேள்விப்படவோ சந்திக்கவோ இல்லை. பரஸ்பர ஒப்புதல் மூலம் உறவு நடப்பதுண்டு. ஏழைப் பெண்கள் அவர்களின் வறுமை யைப் பயன்படுத்திச் சிலர் பாலியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதுண்டு.... அது கூட அபூர்வம் அதன் அபாயம் மிக அதி-கம். மற்றபடி கற்பழிப்பு என்பதற்கெல்லாம் வாய்ப்பே கிடையாது. அப்படிச் சில குற்றச் சாட்டுக்கள் மிக அபூர்வமாக வரும். விசாரித்தால் அவை தவறெனத் தெரி யும்....."

ஆரம்பத்தில் குறிப்பிட்ட முறிந்த பனையில் இது பற்றிய "அக்கா அழுவதற்கு இனி என்னிடம் கண்ணீர் இல்லை பெண்களின் அனுபவங்கள் (343-377) என்ற தலைப்பிலே பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் பற்றிய விரிவான சாட்சியப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

"உண்மையிலே நான் தமிழக ஊடகங்கள் திட்டமிட்டு இலங்கை சென்ற இந்திய அமைதிப்படைக்கு எதிராகச் செய்துவரும் அவதூறுப்பிரசாரத்தில் மிக மனம் வருந்துகின்றேன். இலங்கையில் இந்தியராணுவம் தமிழ்ப் பெண்களைக் கூட்டுக் கற்பழிப்பு செய்தது என்று இங்கே எழுதுகிறார்கள். மேடையில் பேசுகிறார்கள். மொத்தத் தமிழ் நாடே மெல்ல மெல்ல இந்தத்திட்ட மிட்ட அவ தூறை நம்புகிறது..."

என்று குறிப்பிடும் ஜாஸ் டயஸ் முதலானோருக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதற்காக என்றாலும் கூட, (பாலியல் வல்லுறவுக் சம்பவங்களுட்பட பேரலவங்கள் பலவற்றையும் பதிவு செய்துள்ள) உண்மைக் கதைகள் கொண்ட தொகுப்பு நூல்களாவது மறுபிர-சுரம் செய்யப்படுவதும், தொடர்ந்து ஆய்வுத் தேடலை மேற்கொள்வதும் அவசியமானதன்றோ!

❍ ❍ ❍

# போரிலக்கியம் தமிழில் எதிலிருந்து, எங்கிருந்து?

– கருணாகரன்



**'இன்று மட்டும் பேசாதே! மௌனம் கொள். உன்வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு பரிசாகலாம்'**

**– சேரன்**

'சென்று வா, மகனே வென்று வா! செருக்களத்தில் புறமுதுகிட்டோடும் பகைவர் குருதியில் நெற்றித் திலகமிட்டுவா!'

போர் இப்படியெல்லாம் எழுத வைக்கிறது. எதிரும் புதிருமாக. இது நவீன யுகம். எண்ணங்களும் அபிப்பிராயங்களும் கருத்துகளும் நிலைப்பாடுகளும் தரப்புகளும் ஆயிரமாகப் பல்கிப்பெருகியுள்ள யுகம். இந்த யுகத்தில் ஒரு குரல் மட்டும் ஏற்புடையது அல்ல. அப்படி ஒரு குரல்தான் ஏகத்துவமாக இருக்கும் என எதிர்ப்பார்ப்பதும் தவறானது. ஆகவே, போரிலக்கியம் என்பது இன்று பன்முகங் கொண்டதாக விரிவாக்க மடைந்துள்ளது. இதை நாம் ஒற்றைப் பரிமாணத்துடன், போருக்குப் பரணிபாடுதல் என்ற உணர்வோடு, தனிச் சொல்லுக்குள் சுருக்கிப் பார்க்க முடியாது. இன்றைய உலக முறையியலின்படி பல குரல்கள் எதற்குள்ளும் ஒலிக்கும். அத்தகைய ஒலிப்பு போரிலக்கியத்திலும் இருக்கும், இருக்கிறது. இதுவே இங்கே அவதானத்திற்குரியது.

ஒரு தரப்பிற்காகப் பரணி பாடி, அந்தத் தரப்பின் வெற்றிக்காகவும் வெற்றிக் களிப்பிற்காகவும் குரல் எழுப்பிய யுகம் தமிழில் செழிப்பாக இருந்திருக்கிறது.

தமிழிலக்கியத்தில் விவரிக்கப்படும் சங்ககாலக் காட்சிகள் இதற்குச் சான்று. கலிங்கத்துப் பரணி, புறநானூறு என்ற பெரு இலக்கியப் பதிவுகள் இதையே சொல்கின்றன. ஆனால், இங்கே சனங்களின் நிலைபற்றிய சித்திரங்கள் குறைவு. அல்லது அவை முன்னிலைப்படுத்தப்படவில்லை. அன்றைய அரசியல் நிலை அப்படி. ஆனால், பின்னர் உலக அனுபவங்களும் நிலை மைகளும் மாறிவிட்டன. அவை தமிழிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக தமிழ்ப்போரிலக்கியத்திலும் மாற்றங்களும் விரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

என்றபோதும் நவீன போர் இலக்கியம் பற்றிய புரிதலிலும் ஏறக்குறைய குறை நிலைப் பார்வையே உள்ளது. இதற் குச் சான்றுகள் உண்டு. ஈழப்போரில் எழுந்த போர் ஆதரவு இலக்கியமே பெரும்பாலும் போரிலக்கியமாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. போரைக் குறித்து இன்னொரு நிலையிற் பேசிய ஏனையவை போரிலக்கியமாகக் கொள்ளப்படவில்லை. அல்லது அவற்றை எதிர்க்கும் போக்கு காணப்படுகிறது. இதை எதிர்ப்பிலக்கியம், மாற்றிலக்கியம் என்று வகைப்படுத்தியுள்ளனர். அப்படியான வகைப்படுத்தல் இருக்கலாம். ஆனால், அவையும் போரின் பிரதிபலிப்புகளே. போரின் குருதியிலிருந்து பிறந்தவையே. ஆகவே, போரிலக்கியத்தின் ஒரு பகுதியாக,

மறு பக்கமாக அவை அமைகின்றன என்பதே உண்மை.

நவீனத் தமிழிலும் போரையும் அதில் ஈடுபட்ட வீரர்களையும் அந்தப் போரை நடத்திய தலைமையையும் போற்றிப் பாடியிருக்கிறது போரிலக்கியம். சங்க கால இலக்கியத்தைத் தன்னுடைய அகத்தில் கொண்டு, போரை மேலும் உத் வேகப்படுத்தி, ஊக்கப்படுத்தி வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கு முயன்றிருக்கிறது. அதேவேளை எதிர்த்தரப்பை முடிந்த மட்டும் எதிர்த்திருக்கிறது. எதிர்த்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகளால் ஏற் பட்ட பாதிப்புகளையெல்லாம் அது முன் னிலைப்படுத்தியிருக்கிறது. இதேவேளை சனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் அது இங்கே பாடியிருக்கிறது. ஆகவே, சனங்களுக்கான இலக்கியம் என்பதை நிலைப்பாடாகக் கொண்டு, இந்த முன்னி லைப்படுத்தல் நிகழ்ந்திருக்கிறது.

எனினும் இந்த இலக்கியத்தின் இலக்கு போரின் வெற்றியே. போரில் வெற்றிதான் குறி. எதிராளியை வீழ்த்தி வெற்றியடைவது. ஆகவே அந்த இலக்கிற்குக் கீழே இருக்கும் எதுவும் கண்களுக்குப் புலப்படாது. எதிரியைத் தவிர, வெற்றி என்ற இலக்கைத் தவிர, வேறு எண்ணங்கள் போர் வீரரி டம் இருப்பதில்லை. வெற்றிக்காகவே அவர்கள், எந்தக் கணமும் சிந்திக்கிறார்கள். அதற்காகவே அவர்கள் ஓயாது செயற்படு கிறார்கள். அதைப்போல, அந்த இலக்கை எட்டுவதே போரை ஆதரிக்கும் போரி லக்கியத்தின் இலக்குமாகும். அதனால், அதற்கு எதிரியையும் வெற்றியையும் தவிர, வேறு எதுவும் தெரிவதில்லை. பரணி இலக்கியங்களில் உள்ள பெருங்குறை இதுதான். வெற்றியைத் தவிர, வேறு எதை யும் அவை பொருட்படுத்துவதில்லை. பரணி இலக்கியத்தைப் பாடுவோருக்கு மற்றவை புலப்படுவதுமில்லை.

ஆனால், போரானது, யாரும் நினைப்பதைப் போல அமைந்து விடுவ தில்லை. அது இலகுவானதும் அல்ல. வரையப்பட்ட கணிதங்களையெல்லாம் தகர்த்துக் கொண்டு பயிரின் ஊடே செல்லும் மதயானையைப்போன்றது அது. அங்கே சனங்களும் அவர்களுடைய வாழ்க்கையும் அவர்களுடைய சூழலும் அழிக்கப்படுகின்றன. அல்லது அவை அழிந்து போகின்றன. எனவே இந்த இடத்திலிருந்து போரிலக்கியத்தில் மறு திசைகள் மேற்கிளம்புகின்றன. பரணி இலக்கியத்திற்கு நிகராக - போராதரவு இலக்கியத்திற்கு நிகராக, போரையும் போரில் ஈடுபடும் தரப்புகளையும் சாடி, விமர்சிக்கும் எதிர்க்குரல்கள், மறுகுரல்கள் எழுகின்றன. அவ்வாறு பல குரல்கள் எழுந்துள்ள யுகம் இது. ஆகவே பல குரல்களையுடைய - பல திசைகளை யுடைய பெரும் பரப்பைக் கொண்ட விரிவே இன்றைய போரிலக்கியமாகும். இது முன்னரைப்போல வீரர்களையும் வீரத்தையும் வெற்றியையும் அதனுடைய நாயகர்களையும் தலைவனையும் மட்டும் பாடிவிடுவதை அனுமதிப்பதில்லை. இந்த வெற்றியை எட்டும் வழிமுறைகளைப் பற்றிய விமர்சனங்களையும் எழுப்புவன.

வீரர்களையும் வீரச் செயல்களையும் பாடும் பரணிக்காலம் வேறு. முன்னரே சொல்லியுள்ளதைப்போல, தமிழிற் சங்ககாலம் அப்படித்தானிருந்தது. அங்கே வாகை சூடுவதே போரிலக்கியத்தின் அடிப்படை நோக்கு. அது இன்று இருளடைந்து விட்டது. இன்று எல்லாப்பக்கமும் அபாயங்கள் நிறைந்த வாழ்க்கை போரின் மையத்தில் வைக்கப் பட்டுள்ளதால் அதைப் பேசுவது தவிர்க்க முடியாது என்றாகி விட்டது. ஆகவே, அந்த வாழ்க்கை தரும் நெருக்கடியின் தீவிரத்துக் கேற்ப அதனுடைய மொழி யும் அதன் கொதிப்புமிருக்கும். இந்த வாழ்க்கையில் சிலவேளை பேசுவதற்கு

வார்த்தைகளில்லை. வாழ்வதற்கு வாழ்க்கையுமில்லை என்றாகி விடுவதுமுண்டு. இந்த நிலையில் மௌனமே சிறந்த வழியாகிறது. அதுவே தேர்ந்த வழியும் கூட. ஆனால், இது உள்ளே கொந்தளித்துக் கொண்டிருக்கும் மௌனம். சுவாலையாக மூளத் துடித்துக்கொண்டிருக்கும் கொதிப்பு. இது நெருக்கடி நிறைந்ததே. இந்த நெருக்கடியில் எழுவது இன்னொரு வகையான போரிலக்கியம். அதாவது வரலாற்று ரீதியான புரிதலுக்கு மறுதலையானது.

எனவே, போரிலக்கியம் என்பது இன்றைய நிலையில் பெரும் பரப்பாக, பல திசை முகங்களையுடையதாக மாறியுள்ளது. போருக்கு ஆதரவளிப்பதும் அதை எதிர்ப்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். இந்த இரண்டு பக்கங்களையும் இணைத்தே நாம் போரிலக்கியமாகக் கொள்ள வேண்டும். இது ஜனநாயகத்தின் அடிப்படையும் கூட.

இதேவேளை இன்னொன்றையும் இந்த இடத்தில் நாம் பார்க்க வேண்டியுள்ளது. போரின் வெற்றியைப் பாடுவது என்பதும் போரிலே வெற்றி கிட்டும் என்பதும் சனங்களுக்கு நன்மையை வழங்கும் என்று கூறிவிட முடியாது. அதில் ஏகப்பட்ட வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உள்ளன. உதாரணமாக, இன்றைய நிலையில் இலங்கை அரசு போரில் வெற்றியடைந்துள்ளது. அது சொல்கிறது, தன்னுடைய இந்த வெற்றியானது, நாட்டின் வெற்றி. சனங்களின் வெற்றி என்று. ஆனால், இந்த வெற்றியை அரசுடன் இணைந்து, சிங்கள மக்கள் கொண்டாடினாலும் தமிழர்களால் அப்படிக் கொண்டாட முடியவில்லை. அவர்கள் தாங்கள் தோற்கடிக்கப்பட்டதாகவே உணர்கின்றனர். நிலைமையும் அப்படித்தான் உள்ளது. இதைப்போல, புலிகள் வெற்றியீட்டியிருந்தால் அதைத் தமிழர்களில் ஒரு பகுதி மக்கள் அல்லது பெரும்பாலானவர்கள் கொண்டாடியிருக்கக்கூடும். ஆனால் அதைச் சிங்கள மக்கள் எந்த அளவுக்கு ஏற்றிருப்பர் என்ற கேள்வி மறுபக்கத்தில் இருக்கிறது. மேலும் முஸ்லிம்களும் அதை எந்த அளவுக்கு ஏற்றிருப்பார்கள்? என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆகவே வெற்றியின் அளவு கோல்களும் தன்மையும் இங்கே வேறுபடுகிறது. இதற்கு நாம் முதலில் போரின் தன்மைகளையும் வகைப்பாடுகளையும் விளங்கிக் கொள்ள வேண்டும். போரை நாம்



போரானது, யாரும் நினைப்பதைப் போல அமைந்து விடுவதில்லை. அது இலகுவானதும் அல்ல. வரையப்பட்ட கணிதங்களையெல்லாம் தகர்த்துக் கொண்டு பயிரின் ஊடே செல்லும் மதயானையைப்போன்றது அது. அங்கே சனங்களும் அவர்களுடைய வாழ்க்கையும் அவர்களுடைய சூழலும் அழிக்கப்படுகின்றன. அல்லது அவை அழிந்து போகின்றன. எனவே இந்த இடத்திலிருந்து போரிலக்கியத்தில் மறு திசைகள் மேற்கிளம்புகின்றன.

பொதுமைப்படுத்திக் கூறுவது கடினமானது. அப்படிப் பொதுமைப்படுத்தி விளங்கிக் கொள்வது தவறானதும் கூட. உண்மையில் போர் என்பது பல நிலைப்பட்டது; பல்வகைப்பட்டது. அரசுகளுக்கிடையிலான போர், அரசுக்கும் போராட்ட அமைப்புக்கும் இடையிலான போர், போராட்ட அமைப்புகளுக்கிடையேயான போர், போராட்ட அமைப்பிற்குள்ளேயே நிகழும் போர், சனங்களுக்கும் அரசுக்கும் இடையிலான போர், சனங்களுக்கும் போராட்ட அமைப்புகளுக்கும் அல்லது அமைப்புக்கும் இடையிலான போர் என இது பல வகைப்படுகிறது.

ஆகவே இந்தத் தன்மைக்கேற்ப அல்லது இந்த வகைகளுக்கேற்ப போரின் தன்மையும் மாறுபடுகிறது. இதற் கேற்பவே வெற்றி தோல்விகளும் அமைகின்றன. மேலும் அவற்றின் பிரதிபலிப்புகளும் நன்மை, தீமைகளும் அனுபவிப்புகளும் அனுபவிக்கும் தரப்புகளும் வேறுபடுகின்றன. போரிலக்கியமும் அப்படித்தான், போரின்வகைப்பாடுகளுக்கேற்ப, வெவ்வேறு தன்மைகளுடன் வேறுபடுகிறது. ஆனால், என்னதான் இருந்தாலும் மூன்று அல்லது நான்கு பிரதான அடிப்படைகளிற்தான் போரிலக்கியம் உருக்கொள்கிறது.

ஒன்று போரை ஆதரிக்கும் இலக்கியம். அதுதான் ஆதரிக்கின்ற தரப்பிற்குச் சார்பான இலக்கியம். அதாவது, போரை நியாயப்படுத்துகின்ற, அதை ஆதரிக்கின்ற, அதை ஊக்கப்படுத்துகின்ற இலக்கியம். இது போரில் ஈடுபடும் ஒரு தரப்பை மட்டும் ஆதரிப்பது. மறுதரப்பை முழுதாகவே எதிர்ப்பது. இதை நாம் தமிழ்ப்பாரம்பரியத்தின் வழி நோக்கினால், ‘பரணி இலக்கியம்’ என்று வகைப் படுத்தலாம். இது எப்போதும் ஒற்றைப் படைத்தன்மையை உடையது.

போரிடும் தரப்பை மனதார ஏற்று, அதன் குறை நிறைகளுக்கெல்லாம் உடன் பட்டு இயங்கும் படைப்பாளிகளைக் கொண்டது. ‘பரணி இலக்கியம்’ என்று நாம் முன்னர் குறிப்பிட்டிருப்பது இவர்களால் உற்பத்தியாக்கப்படுவதே. போரை ஊக்கு வித்து, அதைப் புகழ்ந்துபாடி, வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கானது.

அடுத்தது, போரை எதிர்த்தும் போரிடும் தரப்பை எதிர்த்தும் அதை விமர்சித்தும் எழுகிற எதிர்ப்பிலக்கியம். அல்லது மாற்று இலக்கியம். போரிடும் தரப்பினுடைய தவறுகளை, பலவீனங்களை, நியாயமறுப்புகளை எல்லாம் எதிர்த்து எழுகின்ற இலக்கியம். ஆனால், மறு தரப்பின் பலவீனங்களையும் தவறுகளை யும் இது பொருட்படுத்துவதில்லை. ஆகவே இதுவும் ஒரு வகையில் கறுப்பு வெள்ளைத் தன்மையுடையதே. அதாவது ஒற்றைப்படைத்தன்மையைக் கொண்டதே. ஆனால், இதுவும் போரிலக்கியமே. இது வும் போரின் வெளிப்பாடாகவே ஏதோ ஒருவகையில் உள்ளது. போரை ஆதரிக்கும் இலக்கியத்துக்கு நிகரான தன்மையையும் நியாயத்தையும் இதுவும் கொண்டுள்ளது.

மற்றது, போரை ஆதரிப்பது எதிர்ப்பது என்ற இரு நிலைகளுக்கிடையில் நிற்பது. இது சனங்களின் - சமூகங்களின் - தரப் புகளின் ஜனநாயக அடிப்படைகளைப் பற்றியே அதிகமும் சிந்திப்பது. போரில் இழக்கப்படும் ஜனநாயக அடிப் படைகளைப் பற்றிய கரிசனையைக் கொண்டது இந்த வகை இலக்கியம். அதேவேளையில் போர் எழுந்ததற்கான நியாயப்பாடுகளைப் பற்றிய கவனத்தையும் கொண்டது. ஆகவே, ஒடுக்குமுறை அல்லது அதிகாரத்தை எந்த நிலையிலும் எதிர்ப்பது. ஒடுக்குமுறைக்கு எதிரான புதிய ஒடுக்கு முறையையும் அதிகாரத்தையும் கூட நிராகரிப்பது. எப்பொழுதும் சனங்களின் உணர்வையும் பாதுகாப்பையும் அவர்களுடைய வாழ்வையும் முதன்மை

யான உணர்தளத்திற் கொண்டது. சனங்களே பல சந்தர்ப்பங்களிலும் குரலற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். போரில் ஈடுபடும் இரண்டு தரப்பிற்கும் இடையில் எதையும் வெளிப்படுத்த முடியாதவர்களாக, எதையும் தீர்மானிக்க முடியாதவர்களாக ஆக்கப்படும்போது அவர்களுடைய உணர்வான உண்மை நிலை மறைக்கப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது. ஆனால், சனங்களின் உணர்வாக உண்மை மட்டுமே அங்கே உள்ளது. இந்த உண்மையை, சனங்களின் நிலையை, போரிடும் தரப்புகள் முதன்மையாகக் கொள்வதில்லை. ஆகவே, போரிடும் தரப்புகளிடையே உண்மை சிக்கிக் கொள்கிறது. சனங்களின் வாழ்க்கை சிக்கிக்கொள்கிறது. இங்கே தங்களுடைய வெற்றிக்காக உண்மையைப் பல தடவைகள் இரண்டு தரப்பும் மாறி மாறிக் கொல்வதை நாம் அவதானிக்கலாம்.

நியாயத்தின்படி, நீதியின்படி, தர்மத்தின்படி, தம்மை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்கு யுத்தப் பிரபுக்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. ஆகவே ஒருவரை ஒருவர் வெல்லும் முனைப்பில் சாத்தியமான அளவில் எல்லாத்தளங்களிலும் அவர்கள் முயற்சிக்கின்றனர். அதற்காக மேல், கீழ் வழிமுறைகள் அனைத்தும் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த நிலையில் உண்மை பல சந்தர்ப்பங்களிலும் இவர்களுக்குக் கடினமான நிலைகளை ஏற்படுத்துகிறது. மேல், கீழ் வழிமுறைகளை உண்மை ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. அது எப்போதும் மேல் நிலையைத்தான் ஏற்கும். அப்போதெல்லாம் இவர்கள் தயக்கமின்றி உண்மையைக் கொல்கின்றனர். சிலவேளை இந்தக் கொலை இரகசியக்கொலையாக நடக்கிறது. சில சந்தர்ப்பங்களில் இது பகிரங்கக் கொலையாக நடக்கிறது. ஆகவே, எந்த நிலையிலும் இவர்கள் உண்மையைக் கொல்லத் தயங்குவதேயில்லை. அதற்காகக் கூச்சப்படுவதும் இல்லை.

இங்கேதான் போரிலக்கியத்தைப் படைக்கும் அல்லது பரணி இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளிகளுக்கு நெருக்கடி ஏற்படுகிறது. படைப்பாளி உண்மையைச் சார்ந்து நிற்கவேண்டும் என்ற அடிப்படையைத் தகர்க்கும் வகையில், போரிடும் தரப்புகள் செயற்படும் போது என்ன செய்வது என்று தெரியாத தடுமாற்றத்துக்குள்ளாக வேண்டியேற்படுகிறது படைப்பாளிகளுக்கு. தம்மை ஆதரிக்க வேண்டும் என போரிடும் தரப்பு நிர்ப்பந்திக்கும். இல்லையென்றால், அது நெருக்கடிகளை ஏற்படுத்தும். ஆகவே இவர்கள் தவிர்க்க முடியாமல், சார்ந்து எழுதவும் இயங்கவும் வேண்டும். அல்லது மௌனம் காத்தல் வேண்டும். மறுத்தெழுதினால், மறுத்து இயங்கினால் மரணத்தை எதிர்கொள்ள வேண்டும். அல்லது அந்த இயங்கு களத்தில் இருந்து வெளியேற வேண்டும். அப்படி வெளியேறினாலும், அபாயங்களைச் சந்திக்க வேண்டியிருந்தாலும் இவர்களால் உண்மையின் தளத்திலிருந்து நீங்கி விடமுடியாது. எனவே எந்த நிலையிலும் இவர்கள் இதன்வழியிலேயே தங்களின் இயக்கத்தை - இலக்கியப்பிரதிகளை உற்பத்தி செய்கின்றனர். எனவே இந்தத் தரப்பின் போரிலக்கியம் இப்படித்தான் உள்ளது. 'பேசாதே! மௌனம் கொள். இல்லையெனில் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு' என, - வார்த்தைகளுக்கும் வாய்மைக்கும் வெடிகுண்டை வைப்பதாக அல்லது துப்பாக்கிக்குண்டைப் பரிசளிப்பதாக; அல்லது சிறைக்கம்பிகளை எண்ண வைப்பதாக. அல்லது காணாமற்போக வைப்பதாக. மேலும் கேள்விகளுக்கே இடமில்லாத அதிகாரத்தின் முன்னே சனங்களை மண்டியிட வைப்பதாக.

ஆகவே, இத்தகைய மூன்று பிரதான

அடிப்படைகளைக் கொண்டே போர் இலக்கியம் பெரும்பாலும் கட்டமைந்துள்ளது. இதைவிட வேறு பல உப பிரிவுகளும் தன்மைகளும் உள்ளன.

ஈழப்போரிலக்கியமும் இத்தகைய தன்மைகளைக் கொண்டே கட்டமைந்துள்ளது. ஈழப்போரிலக்கியத்தை இன்று நோக்கும் எவரும் இந்தப் பரந்த தளத்தையும் அதனுள்ளேஇருக்கும்வகைப்பாடுகளையும் உணர்ந்து கொள்ள முடியும். ஒன்றை விட்டு ஒன்றை ஏற்க முடியாத, ஒரு நிலையை அவர்கள் உணர்வர். சமநிலையில் வரலாற்றையும் உண்மையையும் யதார்த்தத்தையும் பயில விரும்புவோருக்கு இந்த முக்கோண நிலை தெளிவாகப் புலப்படும். அவற்றின் முக்கியத்துவமும் புரியும். இதை யாரும் மறுக்க முடியாது.

இன்றைய யுகத்தில் நிலைமைகள் மாறிவிட்டன. யுத்தத்தைப் பற்றிய மனவோட்டங்களும் கள நிலைகளும் மாறிவிட்டன. வாழ்வைப் பற்றிய புரிதல்களும் எதிர்கொள்ளல்களும் கூட மாறித்தான் விட்டன. யுத்தத்தை எதிர்கொள்ளும் சனங்களிடம் ஏற்பட்டுள்ள ஜனநாயகப் புரிதல்களைப் பற்றிய வளர்ச்சி, போரைப் பற்றியும் போர் இலக்கியத்தைப் பற்றியும் வேறு விதமான எண்ணங்களை உருவாக்கியுள்ளன. தனியே பரணியை மட்டும் ஏற்கவோ, அங்கீகரிக்கவோ அவர்கள் தயாராக இல்லை.

ஆகவே ஈழப்போரிலக்கியமும் உலக இலக்கியங்களைப் போலவே இன்று பல் பரிமாண நிலையை அடைந்துள்ளது. அவ்வாறு அடைய

ஞானம் 23ஆம் இதழில் (ஏப்ரல் 2002)

### லெ.முருகபூபதி அவர்களது நேர்காணலில்...



**தி.ஞா:–இப்பொழுது இங்கு யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் தோன்றுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. புலம் பெயர்ந்தவர் என்ற முறையில் – அவுஸ்திரேலியாவில் வதியும் எம்மவர்கள் இதனை எவ்வாறு அவதானிக்கிறார்கள் என்று சொல்லமுடியுமா?**

***முருகபூபதி:– எங்கள் தேசம் காயப்பட்டிருக்கிறது. எங்கள் தேசத்தின் மக்களின் காயங்களை சுகப்படுத்த அந்நிய சக்திகளின் துணை நாடவேண்டிய அளவுக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றால் எம்மிடையே புரிந்துணர்வு இல்லை என்பது தான் அர்த்தம். எந்தவொரு போராட்டமும் இறுதியில் பேச்சுவார்த்தையில் தான் முடியுமென்பது வரலாறு. இப்பேச்சுவார்த்தைகளை என்றோ ஆரம்பித்திருப்பின் எத்தனையோ உயிர் அழிவுகளைத் தடுத்திருக்க முடியும். காலம் கடந்தாவது இரண்டு தரப்பினரும் பேசமுன்வந்திருக்கின்றனர் என்றால் அதற்குக் காயங்கள் மட்டுமல்ல சர்வதேச அழுத்தங்களும்தான் காரணம்.***

***இன்று அவுஸ்திரேலியாவில் வதியும் ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். பல்கலைக்கழகம் செல்கின்றனர். இசை, நடனம் முதலான துறைகளில் தேர்ச்சி பெற்று அரங்கேற்றமும் செய்கின்றனர். இதனைக்கண்டு பெற்றோர்கள் பூரித்துப்போகின்றனர். அங்கு புலம்பெயர்ந்த மக்கள் கனவுகளுடன் வந்தனர். கனவு மெய்ப்பட வேண்டுமென்று கடுமையாக உழைத்தனர். அதேபோல் தாயக மக்களுக்கும் கனவுகள் எதிர்பார்ப்புகள் உண்டு. ஆனால் இவர்கள் கண்டதோ காயங்களும் அவலவாழ்வும்தான். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டு சிந்தை இரங்கவேண்டிய நிலையிலேதான் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அவர்களால் பெரிதும் வரவேற்கப் படுகிறது.***

***கிடைக்கும் தீர்ப்பு அர்த்தமுள்ளதாக அமையவேண்டும்.***

***இலங்கையின் எதிர்காலம் - அரசியல்வாதிகளின் கைகளில் இல்லை.***

***மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் என்ற இந்த ஐம்பெரும் சக்திகளிடம்தான் பெரிதும் தங்கியுள்ளது. இனமத வேறுபாடுகளுக்கப்பால் தேசத்தின் நலன் குறித்து இச்சக்திகள் இணைய வேண்டும். நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குவோம்.***

வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது. ஐரோப்பிய வருகையின் பின்னரும் சர்வ தேச தொடர்பூடாட்டத்தின் வழியாகவும் ஈழத்திலக்கியத்தைப் பாதித்த பிற இலக் கியங்களின் வழியாகவும் சமூக நிலையில் ஏற்பட்ட ஊடாட்டங்கள் காரணமாகவும் இத்தகைய வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

இதைத் தனித்தனியாக நோக்குகையில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் போ ரிலக்கியமானது, அனைத்தையும் சேர்த்து நோக்குகையில் முழுமையான பரிமா ணங்களும் முழுமையும் தெரியக் கூடியதாக உள்ளது. தனித்தனியாகப் பார்க்கும்போது முழுமையற்ற பாதித் தன்மையே தெரி யும். ஒன்றில் ஆதரவு இலக்கியம். அல்லது எதிர்ப்பிலக்கியம் என்ற அளவில் இது கறுப்பு வெள்ளை என்று குறைநிலை அளவி லேயே இருக்கும். இவ்வாறிருக்குமானால், சமனிலையற்ற பிரச்சாரத்தன்மை இங்கே மேலோங்கித் தெரியும். இது சமூக வளர்ச்சியிலும் குறைபாட்டையே உணர்த்தும். தன்னகத்திலும் புறத்திலும் வளர்ச்சியடைந்த சமூகமொன்று பல் பரிமாணத்தையே தன்னிடத்திற் கொண் டிருக்கும். ஆகவே, முழுமையான போரிலக்கியத்தில் பல முகங்களும் பல திசைகளும் இருந்தே தீரும். அது இன்றைய ஈழத்துப் போரிலக்கியத்திலும் ஏற்பட்டுள்ளது. ஆனால், இதை உணர்ந்து கொள்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும்தான் மனத்தடைகள் உள்ளன. ஆனால், முழுமையை உணரும்போது, உணர முற் படும்போது இது ஒரு குறைபாடு எனத் தெரியாது. மேலும் இது ஒரு வளம் என்றே தெரியும்.

இந்த முழுமையை உணர முடி யாதவர்கள் தொடர்ந்தும் கறுப்பு வெள்ளைத் தளங்களிலேயே ஒற்றைப் படைத்தன்மைகளிலேயே மையங் கொண் டிருப்பர். இவர்களால் ஒரு போதும் உண்மையை நெருங்க முடியாது. யுத்தத்தில் கொல்லப்பட்ட உண்மையை இவர்களால் என்றும் உயிர்ப்பிக்கவும் முடியாது. மேலும் உண்மையைத் தொலைவிலேயே நிறுத்த முடியும்.

யுத்தத்தின் முதலிற் கொல்லப்படுவது உண்மை எனும்போது, போரிலக்கியம் அந்த உண்மையை எந்த அளவுக்குப் பிரதி பலிக்கிறது? எந்த அளவுக்குப் பிரதிபலிக்க முயல்கிறது? அல்லது எந்த அளவிற்கு உண்மையை விட்டு விலகி நிற்கிறது என்ற கேள்விகளுக்கு பதில் காணவேண்டும். இதைக் குறித்து இவர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆகவே, போரிலக்கியம் என்பது எல்லாத்திசைகளையும் உள்ளடக்கிய ஒரு முழுமையே. அந்த முழுமையை அங்கீகரிப்பது முக்கியமானது. இதை அங்கீகரிப்பதற்கிருக்கும் மனத்தடைகள் மேலும் போரையே ஊக்கப்படுத்த முனையும். வரலாறு இதைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது.

இந்த உண்மை என்பதும் பெரும் பாலும் வரலாற்றைப் பற்றியதே. போ- ரில் கொல்லப்பட்ட உண்மையை உயிர்ப் பிப்பது அவசியமானதைப்போல வர லாறு உணர்த்தும் உண்மையைப் புரிந்து கொள்வதும் அவசியம். வரலாறு என்பது படிப் பினைகளுக்கானது. அதைப் புனித மாகவும் போற்றுதற்குரியதாகவும் கொள் வதை விடவும் கற்பிதங்களில் அதைச் சுமப்பதை விடவும் படிப்பினைக்காகக் கொள்வதே மேலானது.

❍ ❍ ❍



ஓட்டமாவடி அறபாத்

# மண்ணோடு போய்...

'தம்பி மலெ தெரியுதாண்டு பாருமனே' செத்தையில் சாய்ந்திருந்த வாப்பாவின் குரல் நசிபட்டு கசிகிறது. 'ஓம் வாப்பா தெரியுது' என்கிறேன். நான்கைந்து வருடங்களாக அவர் ஆதங்கமாய் தொடுக்கும் வினா. நானும் கிளிப்பிள்ளையாய் ஒரே பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 'ஓம் தெரிகிறது' என்கிற போதெல்லாம் எனக்குள்ளும் விபரிக்கவியலா புழுக்கம் தகிக்கத் தொடங்கிவிடும்.



நகரத்தில் எத்திசையில் நின்று நோக்கிடினும், மலை முகடு மதர்ப்புடன் துலங்கும். அதன் பொலிவில் மனம் மோகிக்கும். வழக்கம் போல வாப்பா பினாத்தத் தொடங்கிவிட்டார். மலை முகட்டை தீட்சண்ணிய வேட்கையுடன் வெறிக்கிறேன். அது நான் பிறந்த மண்ணுக்குரிய மலை. அதன் அடிவாரத்தில் என் நினைவுகள் சிக்கிக் கொள்கின்றது. என்னுள்ளே உறைந்து கிடக்கும் மண் மணத்தை கிண்டிவிடுகிறது. மனசை பிய்த்துப் பிய்த்து உதறிப்போடுகிறது. முதிர்ந்த கிழவனொருவன் முரட்டுக் கம்பளியொன்றால் போர்த்திக் கொண்டிருப்பது போல், சவடலாய் தெரிகிறது அதன் கூனல். மலையடிவாரத்தை அண்டினாற் போல் நுங்கிப் பிரவகித்து ஓடும் ஆறு. வாப்பா கதை சொல்வார்.

'மகன் இந்த மலையைப் பத்தி தெரியுமா?'

'இல்ல வாப்பா'

'இது ராச பரம்பர கண்டதுடா'.

'அந்தா அங்க பாருடா'.

அவர் சுட்டும் திசையை நோக்கி பாவுமென் விழிகள். அடிவாரத்தில் துருத்திக் கொண்டிருக்கும் கருங்காலித் தூண்களும், தூர்ந்து போன அரண்மனை எச்சங்களும் எதிரே அரக்கித் தெரியும்.

'அதான்டா மகன் அவங்கட மாளிக'.

'ம் என்னத்தடா சொல்ல.

நம்மட கையில இருக்கிறத காகம் சொட்டிப் போகாத காலம்டா அது' என்றவாறு பெருமூச்செறிவார். அவர் மடிக்குள் மடிந்திருந்து,

'ம்' என முனகி. 'மருகா', என உந்தி மல்லாந்திருப்பேன். வெதுவெதுப்பான வாப்பாவின் மடி மெத்தென்றிருக்கும். சீதளம் விட்டுப் போகும்.

சோதயன் மலையின் வடநிழல் விழும் திசையில் எங்கள் தோட்டம் இருந்தது. மிகுதமாய் மாமரங்களும், பலா மரங்களும் சடைத்து நின்ற விசாலமான தோட்டம் அது. தோப்பின் மையத்தில் 'புரைவாடி'. காவற்காரன் தங்குவதற்கென

சிறுகதை

சற்று விஸ்தாரமாய் கட்டியிருந்தார் வாப்பா. தோப்பு முசிய நிழல் மண்டிக்கிடக்கும். இலை இடுக்கினூடே நழுவி விழும் பொற்கதிர்கள் தரையெங்கும் கருநாகமாய் வழுவித்திரியும். உள் மனசில் உவகை தெரிக்கும்.

இராக் காலங்களில் எல்லையோரம் நின்றால் அலைகளின் பேரிரைச்சல் காதில் வந்து அறையும். எகிறி வரும் அலைகளின் முதுகு மினுக்கம் கதலி நிலாவின் வெள்ளிக் கோடுகளால் ஜாலங்காட்டும். அலைகள் ரச வித்தை பழகும். மவுனித்திருக்கும் இரவுடன் மனம் கட்டிப்புரளும்.

இந்தப் பகுதியில் கடை என்று பேர் சொல்ல எங்களது மட்டும் தான் இருந்தது. வியாபாரமும் வலு கலாதி. அந்தரித்து வருபவர்கள் இளைப்பாறிப் போக-வென கடை முன்றலில் சடை விரித்து நின்றது புளியமரம். பெரும் புயலுக்கும் வெள்ளத்திற்கும் தலை சாய்க்காத கர்வி என்பார். அது நெஞ்சு தாளாத சுய தம்பட்டம். தலை குனியாத அதன் சுயத்திற்கு கிடைத்த மவுசு. 'இப்படித்தான் எல்லோரும் இருக்க வேண்டும். எந்தக் கொம்பனாய் இருந்தாலென்ன தலை குனி யக் கூடாது' என்பார்.

அப்போது எங்கள் தோட்டமே போராளிகளின் உறை விடமாய் இருந்தது. சமயற்கட்டில் சதா பொங்கிக் கொண் டிருக்கும் உலை. விறாந்தைக்குள் கால்களை பரத்தியவாறு காய்கறி நறுக்கிக் கொண்டிருப்பாள் செல்லம் அக்கா. வியர்வை கசிந்துருக வருபவர் களுக்கு இலைபோட்டுப் பரிமா-றிக் கொண்டிருப்பாள் கமலம் அக்கா. இவற்றிக்கெல்லாம் பிரதியுபகாரம் எதிர் பார்க்காத நெஞ்சினனாய் 'தம்பியள் நல்லா பசியாறுங்கோ' என்றபடி கடைக்கும் விறாந்தைக்குமாக நடந்து வருவார் வாப்பா.

கடைக்கு முன்னால் எம்.கே.யின் செம்மறி ஆட்டுப்பட்டியும், இடையர்கள் குடிசைகளும், மாரி காலத்தில் ஆட்டுப் புழுக்கையும், மொச்சை நெடியும் கலந்த துர்வாடை காற்றில் ஒழுகி வர மனங் குமையும். இடது பக்கமாய் விரிந்த தோட்டுபாயென பரந்த வயல்வெளி. சேற்றுப் புதையில் இழுவை மாடுகளின் சொத சொதப்பு. வரப்பு நிறைய நாட்டுப்புற மரக்கறி, கீரை வகையறாக்கள் உம்மாவின் மேற் பார்வையில் செழித்து நிற்கும்.

வயலுக்கு அப்பால் அகன்றதொரு ஆலமரம் 'வைரவனின் உறைவி டாய்' 'பேய்'க் காட்டி நின்றது. மாதந்தோறும் தவறாது. செல்லனின், படையலும், பலி யும் தின்று கொழுப்பேறின கட்டாக்காலி நாய்கள் ஆலமரத்தின் அடியில்தான் இளைப்பாறும். 'கொட்டார் மாமாவின் கொச்சிக்காளை'யை மறைத்தவாறு நிற்கும் அதனில் எப்பவும் எனக்கு சிறு அச்சம். உழைப்பிற்கும், ஈதலுக்கும் பேரெடுத்த மண் இது. இந்த மண்ணுக்குரிய மிடுக்கும் செருக்கும் இதில் வாழும் மக்களிடமும் பிரதிபலித்துக் கொண்டே இருந்தன.

வாப்பா பலமாக இருமுகிறார். மனசு அறுந்து விழ குடிசைக்குள் பாவுகிறேன். 'என்ன செய்யிது?' நெஞ்சுக் கூட்டுக்குள் காற்றெழும்பி உப்பிச் சுருங்குகிறது. சிரமப்பட்டு, பிராணத்தை உள்ளிழுத்து அருகே இருந்த மண் சிரட்டையில் ஆந்தினார். தங்கச்சி ஓடிவந்து நெஞ்சை நீவிவிட்டு, நீரைப் பருக்கிக் விடுகிறாள்.

நெஞ்சு தாளாத துயரத்துடன் மறுபடி யும் குடிசைக்கு முன் கிடந்த பலகை 'பெஞ்ச்'சில் வந்தமர்கிறேன். உள் மனசில் அவஸ்தை ஊறத் தொடங்கிற்று. மறுபடி யும் சோதயன் மலைச் சாரலுக்குள் புதையுண்டு போகிறேன். அனுபவித்து கைநழுவிப் போன சுகங்களில் தோய்ந்து போவது எத்துணை இன்பம். அந்த 'இரை'

மீட்டலில் தான் என்னே பரபரப்பு.

அறுவடைக் காலங்களில் எங்கள் 'கிறவள்' வீதிக்கு தனியொரு மவுசு. குன்றும் குழியுமான பொறை வீதி மெருகேறி. களைகட்டத் தொடங்கும். மக்கள் மருத நிலப்பரப்பை நோக்கி சஞ்சரிக்கத் தொடங்குவர். எதிரே 'மூக்கர்கல்' கடை தென்படும். அங்கே ஒரு பிடிபிடித்து இளைப்பாறி போக, பிறகு வருவது எங்களது கடைதான்.

அறுவடைக்காலங்களில் கடைப்பலகை சாத்துவதில்லை. இரவு முழுக்க 'ட்றக்டர்' கடர்'களும், கரத்தைகளும் சூடடிக்கும் ஆட்களை திணித்துக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாய் வந்து முட்டும், மாட்டுவண்டிச் சவாரிதான் கலாதி. வகைவகையான வண்ணக் கரத்தைகள் சிங்காரித்து வரும் காட்சி வலு குஷி. குளிர் காய்வதற்கென வாப்பா தீ மூட்டி இருப்பார். வீரத்தணல் தகதகவென உஷ்ணத்தை உமிழும். சூழவும் தத்திக்காரர்கள் வளையமிட்டிருப்பர்.



வாப்பா டீ ஊத்துவார். சாயம் படிந்து பெருவிரலால் மூக்குக் கண்ணாடியை அநாயாசமாய் உயர்த்திவிட்டு அவர் 'டீ' ஆற்றும் பாங்கே தனியழகு. 'சோகே'ஸில் கதகதப்பான முட்டக்கோசும், தேங்காய் ரொட்டியும் வர்ணம் காட்டும். சுருட்டப்பமும், போலையும எண்ணெய் மணக்க அடுக்கப்பட்டிருக்கும். மேற்தட்டில் 'பேக்கிரி அய்ட்டங்கள்' வாப்பாவின் கைப்பட பொங்கிய 'கவுண் ரொட்டி'க்கு கரத்தை வட்டாரத்தில் தனி மவுசு. இப்படி புளிய மரத்தடி வியாபாரம் பொங்கிற்று.

எனது குஞ்சான் பருவத்து கூர்முனை மழுங்கின மண்ணது. புணாணை அணைக்கட்டில் தூண்டில் போடுவதும், உச்சவடக்கல், கபுறடியில் நேர்ச்சை திண்ணப்போவதும் இந்தப் பருவம்தான். இந்த சோதயன் மலைதான் - கள்ளன் - பொலிஸ் விளையாட தோதான இடம்.

போராட்டம் உச்சிக்கு நின்ற காலம் இதே மலைதான் முகாந்திரமாகவும், போராளிகளின் உறைவிடமாகவும் மாறிற்று. அதன் மேற்தளத்தில் முகாம்கள் முளை விடத் தொடங்கின. அதற்கேற்றவாகாய் அதன் இயல்பும் இருந்தது. இந்த மண்ணின் புதல்வர்களை காத்து நின்ற அரணாகவும், சோதயன் மலை ஆயிற்று. போரின் உக்கிரம் எங்கள் குரல் வளையையும் நசுக்கத் தொடங்கிற்று. வாப்பா இடிந்து போனார். கிராமத்தின் வனப்பும் கம்பீரியமும் தீய்ந்து போயிற்று.

போராட்டம் திசை பிசகத் தொடங்கின புதிதில் ஒருவரை ஒருவர் ஐமிச்சமாய் உற்றுப் பார்க்க ஆரம்பித்தோம். கமலத்தையும் ஓர் உளவாளியோ என எண்ணும்படியாயிற்று. நிலமைஅவள்பறித்துவரும்காய்கறிகளிலும், பீச்சி எடுத்துவரும் செவத்தாளின் பாலிலும் நஞ்சிருக்குமோ என அஞ்சி நடுங்கினோம். வாப்பா நிரம்பவும் உடைந்து போனார்.

எழில் மிகு கிராமம் சலனத்தின்

என்னுள் ஓர் உள்ளுணர்வு அபாயமாக கூவத் தொடங்கிற்ற. இனி-மேல் இங்கு தரித்திருப்பது ஆபத்தென அது அலறிக் கொண்டிருந்தது. சுய பிரக்ஞையற்ற வாப்பாவை தோளில் அள்ளி போடுகிறேன். நான் அலைந்து திரிந்து விளையாடிய மண்ணை, என் வீட்டை, படியளந்த கடையை, நிழல் முகிழும் தோட்டத்தை ஏகமாய் பிரியும்போது ஈரல் கருகத் தொடங்கிற்று. தேற்றுவாரற்று விசும்புகிறேன். வாப்பாவின் தேகமும் மவுனமாய் அதிர்வதாக உறைத்தது.

ஆளுகைக்குள் சிறைப்படலாயிற்று. சனங்கள் ஒடுங்கிச் சிறுத்து வனமேகிக் கொண்டிருந்தனர். கிராமத்தை விட்டும் அந்நியராயினர். புளிய மரத்தின் அடி வேரில் கறையான் புற்றெழும்பத் தொடங்கிற்ற. மேய்ச்சல் தரை முழுக்க அயலகத்து போர் யானைகள் முகம் குப்புறக் கிடந்தன. நுங்கிப் பிரவகித்தோடும் ஆற்றின் ஈரலிப்பை நுகரவிடாது அவை அரணமைத்து நின்றன. திடீரென சூழ்ந்து சனங்களை நசுக்கிக் கொன்றன. சொந்தக் குரலில் கத்தும் ‘தவளை’களைக் காட்டும் படி எங்களை நோக்கிப் பிளிறின. பிளிறுக-ளின் பிடிக்குள் எங்கள் பூவையர் துகிலுரிய துகிலுரிய துடித்துமாண்டனர்.

இக்கொடூரங்களைக் காணச் சகியாத மலை சீறியெழுந்தது. தன் மடிமீது அயர்ந்து உறங்கிய புதல்வர்களை சுண்டியது. அரக்கர் மீது அடர்ந்தேறும் உரத்தையும் வன்மத்தையும் விதைத்தது. எமது பூவலும் பாசடர்ந்து நீர் கெட்டு, தூர்ந்து போயிற்று. விறகெடுக்கப் போன எனக்கு மூத்தவன் மாட்டு வண்டியில் சடலமாய் திரும்பினான். பின்னாளில் உம்மா வெம்பி வெடித்து உயிர் கருகிப் போனா. வாப்பா புற்றெழும்பின புளிய மரத்தடியில் அமர்ந்து கொண்டு, தனக்குள்ளே பினாத்தத் தொடங்கி விட்டார்.

காகங்களை காணும் போதெல்லாம் வாப்பாவின் அந்தக் காலம் கற்பனையில் கோலமிட்டது. ‘டைகர்’ கிரம உணவின்றி நாக்கை தொங்கப் போட்டவாறு அலைந்து திரிந்தது. அதை யாரும் கவனிக்கவில்லை. கோழிகள் காட்டுக்குள் முட்டையிட்டு. அடைகாத்து குஞ்சுகளுடன் உலா வந்தன. செவத்தாள் பசுவும், இளங் கன்றும் யானை மிதித்து இறந்து கிடப்பதாக செய்தி வந்தது. சென்று பார்க்கவில்லை.

வாப்பாவைப் பார்க்கும் போதெல்லாம் நெஞ்சு கொதிக்கத் தொடங்கிற்று. சுய பிரக்ஞையற்று பிலாக்கணம் பாடத் தொடங்கி விட்டார். அவர் வசீகரம் குன்றி, சுறுசுறுப்பும் தளர்ந்து போயிற்று. வெறிச்சோடிக் கிடக்கும் வீதியில் நின்றவாறு பெருமூச்செறிவார். கடை பெரும்பாலும் சாத்தப்பட்டே இருந்தது. கொதித்து ஆறின உலைகள் அம்போவென பரணில் மல்லாந்திருந்தன. டீ பட்டறை, காவி படிந்து உலர்ந்து போயிற்று. அதற்குள் எறும்புகள் குறுக்கும் நெடுக்குமாக பதறித் திரிந்தன.

வாப்பா விறாந்தைக்குள் சுருண்டு

உறங்கலானார். குரலை தணித்து பாந்த மாய் உசுப்புகிறேன். கண் மலர்த்தி என்னவென்கிறார்.

'எழும்புங்க போவம், இனிமே இஞ்ச் இருக்கேலா பச்சத் தண்ணியும் இல்லாமெ சாகணும்'

'எங்கடா மகன் போக?'

'இந்த வூரை உட்டு, நகரத்துக்கு போவம்'

'மத்த புள்ளயள் எங்கடா?'

'நேத்தே அனுப்பிட்டன் அகதி முகா முல இடம் பார்த்து, இருக்கிறாங்க, உங்களையும் கூட்டி வரச் சொல்லி, அடம்பிடிக்கிறாங்க'

கனத்த ஏமாற்றத்துடன் அவர் முகம் சோம்பிப் போயிற்று. அவரை கேட்காமல் உடன் பிறப்புக்களை அனுப்பி இருக்கக் கூடாதோ என மனம் வருந்தியது. கண்களை இடுக்கிக்கொண்டு என்னை உற்றுப் பார்க்கிறார். பின் அழுத்தமாய் ஆனால் நிதானமாய், 'நான் வரமாட்டன்' 'இந்த மண்ணைத் தவிர வேற ஒண்டையும் தெரியாதடா மகனே' இதவுட்டுப் போரத விட, இதிலே 'மவுத்தா'ப் போறன்டா, என்ற உசிறு வேற மண்ணுல எப்படியடா வாழும், மகன் என்ன கக்கிசாரப்படுத்தாத' பிரமை பிடித்து விக்கித்து நின்றேன்.

வாப்பாவின் பிடி தளர்வதாயில்லை. எனினும் அவர் தளர்ந்து கொண்டு வந்தார். ஜீவன் வற்றிக் கொண்டு வந்தது. நாளடைவில் கண் உக்கிப் போய், விலா ஒடுங்கி பாயோடு பாயானார். ஒரு பிடி கவளத்தையும் கடும்பிராயமெடுத்து ஊட்டவேண்டியதாயிற்று.

என்னுள் ஓர் உள்ளுணர்வு அபாயமாக கூவத் தொடங்கிற்ற. இனிமேல் இங்கு தரித்திருப்பது ஆபத்தென அது அல-றிக் கொண்டிருந்தது. சுய பிரக்ஞையற்ற வாப்பாவை தோளில் அள்ளி போடுகி றேன். நான் அலைந்து திரிந்து விளையாடிய மண்ணை, என் வீட்டை, படியளந்த கடை-யை, நிழல் முகிழும் தோட்டத்தை ஏகமாய் பிரியும்போது ஈரல் கருகத் தொடங்கிற்று. தேற்றுவாரற்று விசும்புகிறேன். வாப்பா வின் தேகமும் மவுனமாய் அதிர்வதாக உறைத்தது.

அன்று தூக்கி வந்து இந்த குச்சி வீட்டின் மூலையில் கிடத்திய போது, நினைவு தட்டி அவர் அழுத அழுகை, ஆனந்தித்து விளை யாடிக் கொண்டிருக்கும் பொம்மையை தட்டிப் பறித்தவுடன் வீறிட்டழும் சிறு குழந்தையையாய் வாப்பாவின் அந்தக் கதறல். வாயருகே கொண்டுபோன வடையை அவுக்கென காகம் சொட்டிப் போகயில் விக்கித்து மனம் பதைத்து வானத்தை வெறித்து நிற்கும் சிறுவனாய் நான். என்ன கொடுமை இது. வாப்பாவா இப்படிக் குமுறுகிறார். உம்மாவின் மையத்திலும் அழாதவரா?

'காக்கா இன்டெக்கி ரேஷன், இந்தாங்க பேக்'

தங்கச்சி நீட்டிய 'பேக்'கை வாங்கிக் கொள்கிறேன். குடிசைக்குள் சுருண்டிருக்கும் வாப்பாவில் வாஞ்சையுடன் ஒரு பார்வை. என் புறப்படுதலை மோப்பம் பிடித்துவிட்டார்.

'மனெ எங்கடா போறாய்?'

'மலை தெரியுதாண்டு ஒழுப்பம் பார்த்து சொல்லிட்டு போ மகன்' மறுபடி யும் வாப்பாவின் வாய் உனாவல். நான் சிதறி வெடித்து கேவுகிறேன். கருகி எரிகிறது நெஞ்சு. வெறி பிடித்தவானய் கத்துகிறேன்.

'ஓம் வாப்பா தெரியுது நல்லா தெரி யுது'

'அந்தா நம்மட ஊரு மலெ தெரியுது வாப்பா'

**(மீள்பார்வை '97)**

# ஈழப் போர் இலக்கியம்

- நிலாந்தன் -

18-10-2012

யுத்தத்தின் முதற் பலி உண்மை. பலியிடப்படும் உண்மைக்கு சாட்சியாக இருப்பதே போரிலக்கியம்.

எவ்வளவுக்கெவ்வளவு அது உண்மைக்கு கிட்டவாக வருகிறதோ அவ்வளவுக்கவ் வளவு அது பேரிலக்கியமாக மேலெழுகி றது. எவ்வளவுக்கெவ்வளவு அது உண்மை யிலிருந்து விலகிச் செல்கிறதோ அது அவ் வளவுக்கவ்வளவு பிரசாரமாக அல்லது பஜனையாக அல்லது தனிநபர் துதியாக அல்லது உள்நோக்கமுடைய வசையாகத் தாழ்ந்துபோகிறது.

இந்த விளக்கமானது படைப்பின் உள்ளடக்கத்தையே வரைவிலக்கணப் படுத்துவதாகத் தோன்றலாம். ஆனால், அது அப்படியல்ல. ஒரு வெற்றிபெற்ற படைப்பின் உருவம், உள்ளடக்கம் இரண்டையும் பிரிக்கப்படவியலாத ஒரு முழுமையின் இரு கூறுகளாகவே இக்கட்டுரை கருதுகிறது. எனவே, உண்மை யானது அதன் பன்முகத் தன்மையுடன் வெளிப்படும்போது அதற்கேயான உருவ வெற்றியையும் பெற்றுவிடும். அதாவது வெற்றி பெற்ற எல்லாப் படைப்புகளிலும் அவற்றின் உள்ளடக்கத்திலிருந்து உரு வத்தை வேறுபடுத்தி பார்க்க முடியாது. உலகப் பேரிலக்கியங்களாக வெற்றிபெற்ற எல்லாப் போரிலக்கியங்களிலும் இதைக் காண முடியும். உள்ளடக்க முழுமையே உருவ முழுமையுமாகும்.

எனவே, வெற்றிபெற்ற எல்லாப் போரிலக்கியங்களும் ஆகக்கூடிய பட்சம் முழுமையான யுத்த சாட்சியங்களே.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் யுத்த களங்களிலிருந்து முழு நிறைவான ஒரு போரிலக்கியம் படைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப் படுகின்றன. ஏனெனில், யுத்தம் எப்பொழுதும் யுத்தம்தான். அது என்னதான் புனிதப் போராக இருந்தாலும் அங்கே இறுதி வெற்றிக்காக பலியிடப்படும் விவகாரங்களில் உண்மையும் ஒன்றாக இருக்கும். யுத்தத்தின் வெற்றியை விட உண்மையை மேலாக கரு- திய யுத்த களங்கள் பெரும்பாலும் இல்லையெனலாம். இதிகாச புராண கால யுத்த களங்களிலிருந்தும் நவீன யுத்த களங்கள் வரை நிலமை இதுதான். எனவே, அதிகம் சோதிக்கப்படுவது உண்மையாக இருக்கும். ஒரு கலை இலக்கியச் சூழலில் படைப்பாளி முழு அளவிற்கு உண்மைக்கு சாட்சியாக இருப்பது சவால்கள் மிகுந்தது. விசுவாசத்தின் பெயராலோ அல்லது குருட்டுப் பக்தியின் பெயராலோ அல்லது ராணுவ ரகசியம் என்பதாலோ அல்லது இறுதி இலட்சியம் தோன்றுவிடக் கூடாது என்பதாலோ சொல்லப்படாத கதை களே அதிகமுடைய யுத்த களங்களிலிருந்து



**ஈழத்துப் போரிலக்கியத்தில் மூன்று பிரதான போக்குகள் உண்டு.**
**முதலாவது போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட போராளி எழுத்தாளர்கள்.**
**இரண்டாவது சக பயணிகள்.**
**மூன்றாவது அதிருப்தியாளர்கள் அல்லது எதிர்ப்பிலக்கியகாரர்கள்.**

**- நிலாந்தன்**

உண்மையின் பன்முகத்தன்மை எப்படி வெளிப்பட முடியும்?

எனினும் ஒரு குறிப்பிட்ட போர்ப் பரப்பிலிருந்து வரும் போரிலக்கியமானது எவ்வளவுக்கெவ்வளவு ஆகக் கூடிய, பட்ச முழுமையான யுத்தச் சாட்சியமாக அமைகிறது என்பதைவைத்து குறிப்பிட்ட அந்த யுத்த களத்தின் மாண்பினை விளங்கிக்கொள்ள முடியும். அங்கே எந்தளவுக்கு சிவில் வெளி இருந்ததென்பதையும் வேற்றுமைகளுக்கும் பன்மைத்துவத்திற்குமான ஊடாட்டப் பரப்பு எந்தளவுக்கு மூடப்படாது இருந்ததென்பதையும் குறிப்பிட்ட ஒரு போரிலக்கியத்தில் இருந்து அனுமானிக்கக் கூடியதாக இருக்கும்.

எனவே, மேற்கண்ட விளக்கத்தின் வெளிச்சத்தில் வைத்து ஈழப்போரிலக்கியப் பரப்பை நோக்கலாம். அதை இரண்டு தளங்களில் செய்யலாம். ஒன்று அதை அதன் வரலாற்றுப் போக்கினூடாகப் பார்ப்பது மற்றது அதை அதன் வகைகளுக்கூடாகப் பார்ப்பது.

ஈழத்துப் போரிலக்கியத்தின் வரலாறென்பது அரை நூற்றாண்டு கால நீட்சியை உடையது. அதன் தொடக்கத்தில் மு. தளையசிங்கம் காணப்படுகிறார். மு.த.வின் ஒரு தனி வீடு நாவலின் இறுதிப்பகுதியில் பின்னர் வரப்போகும் ஆயுதம் ஏந்திய ஒரு அன்டர் கிறவுண்ட் இயக்கம் பற்றி கூறப்படுகிறது. ஒரு தனி வீடு என்பதே 'ஒரு தனி நாடு' என்பதை குறிப்பால் உணர்த்துவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்நாவலில் ஒரு தீர்க்கதரிசனம் இருப்பதாக மு.த. பின்னாளில் கூறியிருக்கிறார். இப்படிப்பார்த்தால் ஈழத்துப் போரிலக்கியத்தின் கட்டியக்காரனாக மு.த.வை கூற முடியும்.

மு.த.விற்கு அடுத்தபடியாக காசி ஆனந்தனை கூற முடியும். அவருடைய தமிழன் கண்ட கனவு 1968இல் வெளிவந்தது. காசி ஆனந்தனும் பின் வரப்போகும் ஆயுதப் போராட்டம் ஒன்றை முன் உணர்ந்தவராக காணப்படுகிறார். அவருடையவை இன உணர்ச்சி எழுத்துக்கள், அவற்றின் அழகியற் பெறுமானம் குறித்து தனியாக ஆராயப்படவேண்டும். எனினும், ஈழத்துப் போரிலக்கியத்தின் முன்னோடிகளில் அவரும் ஒருவர். பின்னாளில் அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இணைந்தார் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்ட போர் எழுச்சிப் பாடல்களின் முன்னோடியாகவும் காசி ஆனந்தனே காணப்படுகிறார்.

காசி ஆனந்தனைப் போலவே சண்முகம் சிவலிங்கமும் ஒரு கனவு கண்டார். 1969இல் இவர் எழுதிய ''வெளியார் வருகை"

கவிதையை இங்கே சுட்டிக்காட்டலாம். தனது கனவில் தோன்றிய சில காட்சிகளை வைத்து அவர் கவிதையை எழுதிய-தாக பின்னாளில் யேசுராசாவிடம் கூறி யிருக்கிறார். அந்தக் கவிதையிலிருந்து எடுக் கப்பட்ட வரியே 'மரணத்துள் வாழ்வோம்' என்பதாகும். சண்முகம் சிவலிங்கம் "இனி மரணத்துள் வாழ்வோம்" என்று கனவு கண்டார்.

தளையசிங்கத்தின் "தீர்க்க தரிசனமும்" சண்முகம் சிவலிங்கம், காசி ஆனந்தன் ஆகியோர் கண்ட "கனவும்" மெய்ப்படத் தொடங்கியபோது உருவாகிய ஆயுதம் ஏந்திய "அன்டர் கிறவுண்ட்" இயக்கங்கள் மத்தியில் முதலாவதாகத் தோன்றிய போராளி எழுத்தாளர் அருளர் எனலாம். அவர் எழுதிய "லங்காராணி" நூல்தான் முதலாவது போராளி இலக்கியமாகும். அருளர் ஈரோஸ் இயக்கத்தின் உறுப்பினராக இருந்தார்.

அருளரிற்குப் பின் செங்கை ஆழியான், நீலவண்ணன் என்ற புனைபெயரில் எழு திய 'யாழ்ப்பாணம் எரிகிறது', '24 மணி நேரம்' ஆகிய நூல்கள் வெளிவந்தன. அவற்றின் இலக்கியத் தரம் பற்றி தனியாக ஆராயப்பட வேண்டும். எனினும் அவை குறிப்பிடத்தக்க அளவிற்கு மெய்விபர ஆவணங்களாக கருதப்படுகின்றன.

செங்கை ஆழியானின் எழுத்தைப் போலவே ஆவண இலக்கியம் அல்லது ஊடக இலக்கியம் என்றவகைக்குள் வரக்கூடிய மற்றொரு நூலுண்டு. ஈழ நாடு ஆசிரியராக இருந்த சபாரட்ணத்தின் 'ஊரடங்கு வாழ்வு' என்றநூல் 1985இல் வெளியிடப்பட்டது. 1984இல் அவர் எழு திய ஆசிரியர் தலையங்கங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டவற்றின் தொகுப்பே அந்நூல்.

1984இல் சேரனின் 'யமன்' தொகுப்பு வெளிவந்தது. 1985இல் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பு வெளிவந்தது. இதேகாலப் பகுதியில் சு.வில்வரத்தினத்தின் 'அகங்களும் முகங்களும்' வந்தது. ஏறக் குறைய இதே ஆண்டில் செழியனின் தொகுப்பு வந்தது.

மரணத்துள் வாழ்வோம் தொகுப்பானது அதுவரையிலும் வந்த பெரும்பாலான போர்க் கவிதைகளின் தொகுப்பாயிருந்தது. ஈழப் போரிலக்கியத்தின் தொடக்க காலவரலாற்றை குறிப்பாக 70களின் பிற்கூறிலிருந்து 80களின் வரலாற்றைத் தேடிச்செல்லும் எவரும் தவிர்க்க முடியாதபடி வந்தடையும் ஒரு தொகுப்பாக அது காணப்படுகிறது. மற்றது 'அலை' மற்றும் 'புதுசு' போன்ற சஞ்சிகைகள். குறிப்பாக அலையைப் பொறுத்தவரை ஈழப் போரிலக்கியத்தின் ஆரம்பகட்ட வரலாறு எனப்படுவது ஓரளவிற்கு அலை யின் வரலாறாகவும் காணப்படுகின்றது. சண்முகம் சிவலிங்கத்தின் 'வெளியார் வருகை' உட்பட பல முக்கியமான போரிலக்கியப் படைப்புக்கள் அலையிலும் புதுசுவிலும் வந்திருக்கின்றன.

1985இல் நிலாந்தனின் 'கடலம்மா' வெளிவந்தது. 1986இல் பாலகணேஷனின் விடியலுக்கு முந்திய மரணங்கள் என்ற நூல் வெளிவந்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்தால் வெளியிடப்பட்ட நூல் இது. இங்கிருந்து தொடங்கி 4ஆம் கட்ட ஈழப் போர் காலத்தில் உட்சுற்று வாசிப்புக்குத் தரப்பட்ட 'ஏணைப் பிறை' நாவல் வரையி லுமான விடுதலைப்புலிகளின் போரி லக்கியப் பரப்பானது தனியாக ஆராயப்பட வேண்டும்.

அதே சமயம் விடுதலைப்புலிகள் இயக்கம் அல்லாத ஏனைய இயக்கங்களைச் சேர்ந்த படைப்பாளிகளைப் பற்றிய தொகுக்கப்பட்ட தகவல்கள் ஒப்பீட் டளவில் குறைவு. விடுதலைப்புலிகள் ஒரு அரசாக செயற்பட்டதால் அவர்கள் தமது கலை இலக்கிய முயற்சிகளை ஆவணப்படுத்தியுள்ளார்கள். ஏனைய

## கொக்கட்டிச்சோலை 166

**- நட்சத்திரன் செவ்விந்தியன் -**

இன்றைய தலைப்புச் செய்தி
166 தமிழர் கொக்கட்டிச் சோலையில்
அகோரக் கொலை

என்னை ஒன்றுமே செய்யவில்லை.
நாளைக்கும் பரீட்சை நடக்கும்
இன்றிரவுக்கு நான் படிப்பேன்.

எத்தனை மோசமான காரியம் நடந்துவிட்டது
மனம் விக்கிக் கரைந்திருக்க வேண்டும்
அந்த நேரம் எந்தப் பின் கதவைப் பற்றிச்
சிந்தித்திருப்பீர்கள்...

உங்கள் வீட்டில் இப்படி நடந்தாலும்
வெய்யிலில் நிழலில் நின்றாலும்
அனல் வீசும் உங்கள் தெருவில்
நாய்ப்பீ கரைந்து ஓடும் மழை நாளில்
உங்கள் தெருவில் இப்படி நடந்தால்

எந்தப் பின் கதவு திறந்திருக்கிறது?
அந்தப் பெரிய ஆண்களும்
சிரிக்கிறதைப் போல விக்கி விக்கி அழுதார்கள்.
மார்பு மயிரிலும் கள்ளு மண்டி வெண் கறுப்பு மீசையிலும்
கண்ணீர் படிய அழுதார்கள்.....

(ஈழத்தின் புதிய தமிழ்க்கவிதைகள்
தொகுப்பிலிருந்து...)

இயக்கங்களைப் பொறுத்தவரை அவை விடுதலைப்புலிகளால் தடை செய்யப்பட்டபின் தலை மறைவாக நேரிட்டது. இதனால் அவ் இயக்கங்களைச் சேர்ந்த படைப்பாளிகள் ஒன்றில் தலை மறைவாயினர் அல்லது பாது காப்பான இடங்களுக்கு போயி-னர் அல்லது புலம் பெயர்ந்தனர்.

மரணத்துள் வாழ்வோம் என்பது தமிழ்த் துப்பாக்கிகள் தரும் மரணத்தையும் குறிப்ப தாக மாறியபோது ஈழப் போரிலக்கியப்பரப்பில் மற்றொரு கிளை ஓட்டம் தோன்றியது. அதுதான் அதிருப்தியாளர்களின் இலக்கியம். பொதுவாக இந்த இலக்கியப் போக்கானது கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' (1985) நூலிலிருந்தே இனங்காணப்பட்டு வருகின்றது. புளொட் இயக்கத்துக்குள் நிகழ்ந்த உட்கொலைகளின் விளைவே அந்நூல்.

இதேகாலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் 'போராட்டத்துள் ஒரு போராட்டம்', 'பாவம் மக்கள்' என்ற இரு பிரசுரங்கள் வெளியிடப் பட்டன. ரெலோ இயக்கத்துக்குள் ஏற்பட்ட சகோதரச் சண்டைகளின் விளைவே அச்சிறு பிரசுரங்கள் என்று நம்பப்படுகிறது. அவை இலக்கியப் பிரதிகள் இல்லைத் தான். ஆனாலும் அவற்றின் மொழி குறிப்பிடத்தக்க அளவிற்கு கலைப் பெறுமதி உடையதாக இருந்தது. அல்லது அக்காலச் சூழலில் அவை பேசிய உண்மைகள் அவற்றுக்கொரு கலைப் பெறுமதி யைக் கொடுத்திருக்கலாம். இச்சிறு பிரசுரங்களானவை ஏனைய

இயக்கங்கள் விடுதலைப் புலிகளால் தடை செய்யப்படுவதற்கு முன்னர் வெளிவந்தன. எனவே, களத்திலிருந்து வெளிவரக்கூடியதாக இருந்தன. இச்சிறு பிரசுரங்களுக்கு சிறிது முன்பின்னாக 'புதியதோர் உலகம்' வெளிவந்தது. இந்தியாவில் நூலை வெளியிட்ட கோவிந்தன் களத்திலிறங்கி செயற்பட்ட வேளை காணாமற் போனார். பின்னர் 'செல்வி'யும் காணாமல் போனார்.

குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் ஏகப்பெரும் இயக்கமாக எழுச்சி பெற்ற பின் பெரும்பாலான ஏனைய இயக்கங்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக திரும்பின. அவ் அமைப்புக்களைச் சேர்ந்த தலைமறைவாக வாழ்ந்த அல்லது நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற படைப்பாளிகளில் அநேகர் அதிருப்தியாளர்களாக மாறினர் அல்லது எதிர்ப்பிலக்கிய காரர்களாக மாறினர். கோவிந்தன், கணபதி கணேசன், ஜீவமுரளி, சக்கரவர்த்தி, நக்கீரன், தயமந்தி, கற்சுறா, சுகன், எம்.ஆர்.ஸ்டாலின், பானு பாரதி. போன்றோரை இங்கு குறிப்பிடலாம். (இப்பட்டியல் முழுமையானதல்ல) மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறும்போது பூர்த்தி செய்யப்பட வேண்டியது.

இது வரையிலும் ஈழத்துப் போரிலக்கியத்தை அதன் வரலாற்றுப் போக்கின் ஊடாகக் கண்டோம். இனி அதை அதன் வகைகளுக்கூடாகப் பார்க்கலாம்.

ஈழத்துப் போரிலக்கியத்தில் மூன்று பிரதான போக்குகள் உண்டு. முதலாவது போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட போராளி எழுத்தாளர்கள். இரண்டாவது சக பயணிகள். மூன்றாவது அதிருப்தியாளர்கள் அல்லது எதிர்ப்பிலக்கியகாரர்கள்.

முதலாவதாக போராளிகளைப் பார்க்கலாம். ஈழப் போரின் முதலாவது போராளிப் படைப்பாளி அருளர்தான். அவரைப் போன்ற விடுதலைப்புலிகள் அல்லாத இயக்கங்களைச் சேர்ந்த படைப்பாளிகள் விடுதலைப்புலிகளால் தடை செய்யப்படும் வரையிலும் களத்தில் நின்று செயற்பட்டார்கள். ஆனால், களத்தில் தடை செய்யப்பட்டதாலோ அல்லது தமது சொந்த இயக்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவோ அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காகவோ களத்தை விட்டு அல்லது இலங்கைத்தீவை விட்டு வெளியேறினர். அருளரும் உட்பட கி.பி. அரவிந்தன், ஜெயபாலன், சின்னபாலா, புதுசு ரவி, சபேசன், தமயந்தி, சக்கரவர்த்தி, சுகன், கற்சுறா, செழியன், கோவிந்தன், கலாமோகன், அருந்ததி (அருள்) போன்றவர்களை இங்கே குறிப்பிடலாம். (இப்பட்டியல் முழுமையானதல்ல)

விடுதலைப்புலிகள் அல்லாத ஏனைய இயக்கப் படைப்பாளிகளில் களத்தைவிட்டு வெளியேறாத சிலரும் உண்டு. உதாரணம்- கருணாகரன், செல்வி(காணாமற்போனவர்), பசீர் ஷேகு தாவுத், அன்ரன் அன்பழகன், சின்னபாலா(கொல்லப்பட்டவர்)-.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த படைப்பாளிகளில் இரண்டு வகையினர் உண்டு. ஒரு வகையினர் இயக்கத்திலிருந்து வெளியேறிய பின் வெளித்தெரிய வந்த படைப்பாளிகள். மற்றையது இயக்கத்தில் தொடர்ந்தும் இருந்து நந்திக் கடல் வீழ்ச்சியின்போது காணாமல் போனவர்கள் அல்லது கைது செய்யப்பட்டவர்கள். இதில் இயக்கத்திலிருந்து விலகியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பாலகணேசன், வசந்தன், ஷோபாசக்தி, அஸ்வகோஷ், கர்ணன், எஸ். போஸ்,கோளாவிலூர் கிங்ஸ்லி, த. அகிலன், சாத்திரி போன்றவர்களாகும். (இப்பட்டியல் முழுமையானதல்ல) அதே சமயம் தொடர்ந்தும் இயக்கத்தில் இருந்தவர்களாக புதுவை இரத்தினதுரை, காக்கா (கரும்பறவை), பொட்டு, வளநாடன், தூயவன், கவியழகன், தமிழ்க்கவி, சாம்பவி, மலைமகள், பாரதி, வானதி, அம்புலி,

மலரவன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். (பட்டியல் முழுமையானதல்ல)

மேற்கண்ட போராளிப் படைப்பாளிகளின் பெயர்களைத் தேடித் தொகுத்த போது மரணத்தில் வாழ்வோம் தொகுப்பு ஒரு முதன்னிலை ஆவணமாகக் காணப்பட்டது. அதிலிருந்து தொடங்கி ஏனைய பின்வந்த படைப்பாளிகளின் பெயர்களையும் தொகுத்த போது குறிப்பாக இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட்டன. ஒரு நண்பரும் அவற்றைச் சுட்டிக்காட்டினார்.

முதலாவது மேற்கண்ட படைப்பாளிகளில் அனேகர் குறிப்பிட்ட இயக்கங்களில் இருந்த காலத்தில் பிரகாசித்ததை விடவும் இயக்கங்களிலிருந்து வெளியேறிய பின்னரே அதிகம் மிளிர்ந்திருக்கிறார்கள். காசி ஆனந்தன், கி.பி. அரவிந்தன், ஜெயபாலன், புதுசு ரவி போன்ற சிலர் ஏற்கெனவே தமது படைப்பாளுமைகளை நிறுவியிருந்தார்கள். எனினும் ஷோபா சக்தி, பாலகணேஷன், கர்ணன், எஸ்.போஸ் (கொல்லப்பட்டவர்), ஜீவமுரளி, செழியன், அஸ்வகோஷ் போன்றோர் இயக்கக் கட்டுப்பாடுகளை விட்டுவெளியில் வந்த பின்னரே அவர்களுடைய படைப்பாளுமைகள் துலங்கத் தொடங்கின.

இது விடயத்தில் அவர்களது போராட்ட அனுபவமும் அவர்களை செதுக்கியது எனலாம். எனினும், அவர்கள் உறுப்பினர்கள் அல்லாத சக பயணிகளாக மாறிய பின்னரே அவர்களுடைய படைப்புச் சக்தி ஒப்பீட்டளவில் அதிகம் ஜொலிக்கத் தொடங்கியது. உதாரணமாக பாலகணேஷனின் விடியலுக்கு முந்திய மரணங்கள் என்ற நூலோடு ஒப்பிடுகையில் பின் வந்த படைப்புக்களின் வீச்செல்லையும் கலையாழமும் அதிகம் எனலாம்.

அதாவது, ஈழப் போராட்ட இயக்கங்கள் எல்லாமும் படைப்பாளிகள் கோரும் சுயாதீனத்துக்கு ஏதோவொரு விதத்தில் தடையாகத் தான் இருந்திருக்கின்றன. இது முதலாவது அவதானிப்பு.

இரண்டாவது அவதானிப்பு - மேற்கண்ட போராளி எழுத்தாளர்களில் துருத்திக் கொண்டு மேலெழுந்தவர்களில் அதிக தொகையினர் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களே என்பது. இதற்குப் பிரதான காரணம் போராட்டத்தின் நியாயம் புலிகளின் பக்கமே இருந்தது என்பதுதான். சரி பிழைகளோடும் நவீன தமிழ் வீரத்தையும் தியாகத்தையும் அவற்றின் உச்சங்களுக்கு எடுத்துச் சென்றது விடுதலைப்புலிகள் தான். எனவே, ஈழத்துப் போரிலக்கியம் எனப்படுவது போராடும் தரப்பை ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ எழுதுவதாகத்தான் காணப்பட்டது. இதனால் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினராக இருந்த ஒருவர் அதை எழுதும் போது அந்த எழுத்து அனுபவ எழுத்தாகவும்,அதிகம் அதிகார பூர்வமானதாகவும் காணப்பட்டது. அதாவது உண்மைக்கு ஒப்பீட்டளவில் கிட்டவாக வந்தது. இதைப் போலவே விடுதலைப்புலிகளால் பாதிக்கப்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர்கள் எதிர்ப்பிலக்கியம் செய்யும்போது அது அங்கேயும் அனுபவ எழுத்து என்பதால் படைப்பானது உண்மைக்கு நெருக்கமானதாகக் காணப்பட்டது.

மேலும், ஒரு நண்பர் கூறியது போல விடுதலைப்புலிகள் இயக்கமே நீண்ட காலம் களத்தில் நின்று பிடித்ததால் அதிக தொகை படைப்பாளிகள் அந்த அமைப்புக்குள்ளிருந்து வந்தனர் என்ற விளக்கமும் ஏற்புடையதே.

மேற்கண்ட போராளி படைப்பாளிகளில் நந்திக்கடல் வீழ்ச்சி வரையிலும் இயக்கத்தில் இருந்த படைப்பாளிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஏனையவர்களை விடவும் ஒப்பிட்டளவில் வரையறுக்கப்பட்ட ஒரு படைப்பாக்க வெளிக்

குள் இருந்தே செயற்பட வேண்டி இருந்தது. போர்க் களத்தில் விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்ட யுத்தகளச் சாதனைகளுடன் ஒப்பிடுகையில் படைப்புகள் வீச்சுக் குறைந்தவையாகவே காணப்பட்டன.

ஒரு முறை புதுவை இரத்தினதுரை ஒரு கூட்டத்தில் வைத்துச் சொன்னார். ‘கரும்புலிகள் இடிக்கிற வேகத்துக்கு ஈடாக எங்களால் அடிக்க முடியாமல் இருக்கிறது” என்று. அதாவது யுத்த களத்தில் செய்யப்பட்ட பெருஞ் செயல்களின் வேகத்தோடு ஒப்பிடுகையில் அப்பெருஞ் செயல்களின் மீதான பாடல்கள் உருவாக்கப்படும் வேகம் போதாமல் இருந்தது என்பதைத்தான் புதுவை அவ்வாறு கூறினார். ஆனால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் காணப்பட்ட கலை இலக்கியப் போக்கெனப்படுவது யுத்தகளச் சாதனைகளுக்கு நிகரானதாக இருக்கவில்லை என்பதே மெய்நிலையாகும்.

இயக்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த படைப்பாளிகள் இவர்கள். கூட்டுப் பொறுப்பு, விசுவாசம், இராணுவ இரகசியங்களைப் பாதுகாப்பது இறுதி வெற்றிக்காக உண்மைகளைத் தியாகம் செய்வது என்பவற்றின் அடிப்படையில் இவர்களது



# படை போன பிறகுகண்ட என் அலரிமர மாமி

– சோலைக்கிளி –

கண்ணாடி போட்டிருந்தாள் மாமி
யாரோ ஓர் ஆமிக்காரன் வாங்கிக்கொடுத்திருந்தான்

அவளின் முத்துப்போன்ற பற்களில் சிலதை
முன் முரசில் காணவில்லை
தலைக்கு நிறச் சாயம்
இருந்தாலும் முகம் சுருங்கி புன்னகைக்கும் பூ வெந்து
இளமையை
ஒரு நூலில்கட்டி அவள் உடம்பில் வைத்ததுபோல்
இருக்கிறது இன்றுநான் பார்க்க

மாமி
என்னைத் தெரிகிறதா உங்களுக்கு
நான்தான்
வெயில் மங்கி நிலா விதைக்க இருள்
வானம் உழும் நேரம்
ஊர் இருந்து பறந்துவந்து
இந்தப் பெருங்கொப்புள் குந்தியிருந்த
தினம் வரும் குருவி

நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி இருப்பதுபோல்
இருக்கும்
உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்
பார்ப்போர்க்கு
மாமி

ஆமி வந்து உங்களைத் தமது
படைவளவுள் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில்
இரண்டொரு கடிதம்
பூக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கின்றான் என்று சொல்லி
அழுதெல்லாம்
பின் காற்றும் இறந்தது
நாம் கடிதம் எழுதி வாசிக்கும் எழுத்துகளும்
மறந்தன

மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு.
(25.04.1994)

படைப்புகள் உண்மையின் ஒரு பகுதியைத்தான் வெளிக் கொணர்ந்தன.

எனவே, அவை அவற்றுக்கேயான சுய-வரையறைகளைக் கொண்டிருந்தன. வீரம், தியாகம் என்பவற்றுக்கும் கலை இலக்கிய வெளிப்பாடுகளுக்கும் இடையே ஒரு பெரிய புதிரான இடைவெளி காணப்பட்டது. அறிவுக்கும் வீரத்துக்கும் இடையிலான அபூர்வமான ஒரு சமநிலையைக் கண்டுபிடிக்க முடியாமல்போனது போலவே வீரத்துக்கும் படைப்புக்கும் இடையிலான ஒரு கலா பூர்வமான சமநிலையையும் கண்டுபிடிக்க முடியாது போயிற்று.

இந்த இடத்தில் ‘ஏணைப் பிறை’ நாவலை எடுத்துக் காட்டலாம். அதை எழுதியவர் கவியழகன். 4ஆம் கட்ட ஈழப்போரின்போது தன்னோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு அவர் அதை வாசிக்கக் கொடுத்தார். அதைப் பிரசுரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இடையில் நிறுத்தப்பட்டன. ஏணைப் பிறை நாவலானது அங்கிருந்து வெளிவந்த படைப்புகளிலிருந்து துலக்கமாக வேறுபட்டு நின்றது. அதனாலேயே அது சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழ்ந்த படைப்பாளிகள் மற்றும் இயக்க உறுப்பினர்களாக இருந்த படைப்பாளிகள் எல்லோருமே சொல்லப்படாத அல்லது சொல்லப்பட முடியாத உண்மைகளுடன்தான் வாழ்ந்தார்கள். இதில் துயரம் என்னவென்றால் இவர்களிற் பலர் மீட்கப்படவியலா உண்மைகளுடன் இறந்துபோய்விட்டார்கள் என்பதுதான்.

இதுவரை நாம் பார்த்தது ஈழத்துப் போரிலக்கியத்தின் முதலாவது வகையை. இனி இரண்டாவது வகையைப் பார்க்கலாம். அதாவது சக பயணிகள். போராட்ட அமைப்பில் உறுப்பினர்களாக இல்லாத, ஆனால், போராட்டத்தை ஏற்றுக்கொண்டு அதோடு சேர்ந்து சமாந்தரமாக பயணித்த இந்த வகைப் படைப்பாளிகளை ரொட்ஸ்கி சக பயணிகள் என்றழைக்கிறார். இவர்களில் மூன்று பிரதான உட்கூறுகள் உண்டு. போராட்டத்தையும் இயக்கத்தையும் ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு வகை. போராட்டத்தை ஏற்றுக் கொண்ட ஆனால், போராட்ட இயக்கத்துடன் முழுமையாக அல்லது பகுதியாக உடன்படாதவர்கள் இரண்டாவது வகை. போரையோ அல்லது இயக்கத்தையோ மகிமைப்படுத்தாது பொதுசனங்களின் பாடுகளை எழுதியவர்கள் மூன்றாவது வகை.

ஒப்பீட்டளவில் ஈழத்துப் போரிலக்கியத்தின் பெரும் பகுதியினர் சக பயணிகள் தான். அதிகம் சாம்பல் நிறப் பகுதிக்குள் நின்று படைத்தவர்கள் இவர்களே. எனவே, ஒப்பீட்டளவில் உண்மைக்கு அதிகம் நெருக்கமாக வரக்கூடிய வாய்ப்புக்கள் இவர்களுக்கே இருந்தன. இவர்களுள் யுத்த களத்தில் வாழ்ந்தவர்களும் உண்டு. வெளியில் வாழ்ந்தவர்களும் உண்டு. களத்தில் வாழ்ந்தவர்கள் ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட வரையறைகள், சுய தணிக்கைகளுடன் வாழ்ந்தார்கள். களத்துக்கு வெளியே குறிப்பாக, புலம் பெயர்ந்து வாழ்ந்தவர்கள் அதிகளவு சுயாதீனத்துடன் எழுதக் கூடியதாக இருந்தது.

முன்னாள் இயக்க உறுப்பினர் பலரும் பின்னாளில் சக பயணிகளாக மாறினார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்தை ஆதரித்து எழுதினார்கள். இன்னொரு பகுதியினர் போராட்டத்தை எதிர்த்து எழுதினார்கள் அல்லது இயக்கங்களை எதிர்த்தோ அல்லது விமர்ச்சித்தோ எழுதினார்கள். யார் எதை எழுதினாலும் ஈழத்துப் போரிலக்கியத்தில் ஒப்பீட்டளவில் உண்மைக்கு அதிகம் கிட்ட வந்தது சக பயணிகள்தான். ஈழப் போரிலக்கியத்தில் சக பயணிகளின் தொகையே ஒப்பீட்டளவில் அதிகம்.

எனவே விரிவஞ்சி அப்பட்டியல் இங்கே தவிர்க்கப்படுகிறது.

இனி மூன்றாவது வகையின ரைப் பார்க்கலாம். அதாவது அதிருப் தியாளர்கள். போராட்டத்தை அல்லது இயக்கங்களை எதிர்த்து அல்லது விமர்ச்சித்து எழுதியவர்கள் இந்த வகைக்குள் வருகிறார்கள். இந்த வகையை எதிர்ப்பிலக்கியம் என்ற ஒற்றைப் பரிமாணத்துக்குள் மட்டும் அடக்கிவிட முடியாது. ஏனெனில், போராட்டத்தை ஏற்றுக் கொண்டு இயக்கங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களும் இதற்குள் வருகிறார்கள். போராட்டத்தையும் இயக்கங்களையும் நிராகரித்து எழுதி யவர்களும் இதற்குள் வருகிறார்கள். யுத்தம், வீரம், தியாகம்போன்றவற்றை வழிபட மறுத்தவர்களும் இதற்குள் வருகிறார்கள்.

அதிருப்தியாளர்களின் இலக் கியத்தடம் எனப்படுவது அது தோன்றியபோது விடுதலைப்

# இடையில் ஒரு நாள்

எப்பொழுதாவது ஒரு மாலையில்
அது நடக்கலாம்;

ஒரு மதகுரு
அல்லது முக்காடு அணிந்த
ஒரு மாது
ஒரு தாடி மீசைப் பிச்சைக்காரன்
இப்படி,
இன்னும் வேறு யாராவது
என் வீட்டு வாசலில்
கதவைத் தட்டலாம்....

நான் அவர்களைச்
சட்டென அடையாளம்
கண்டு கொள்கிறேன்.....
அந்த இரவு முழுவதும்
நீ என்னருகில் இருப்பாய்.....
வாய் திறந்து பேச விரும்பாத
மௌனம்
இடையே கவிந்துள்ளது.....
உனக்கு மிகவும் பரிச்சயமான
துப்பாக்கியை, துண்டுப் பிரசுரங்களை;
அடர்ந்த காட்டை,
இன்னும் எதையெதை யெல்லாமோ
மறந்து போய்
உனது உடலும், மனமும்
எனக்குள் அடைக்கலமாகும்.

விடியலில்;
கருக்கல் கலைகிறபொழுதில்
எனக்குக் கிடைத்த தற்காலிக அமைதியில்
நான் உறங்கும் போது,
ஒரு முரட்டுத்தனமான
கதவுத் தட்டலுக்குச் செவிகள்
விழிக்கும்.

ராணுவக் கும்பல் அல்லது
பொலிஸ் படை
பிறகு கூந்தல் அவிழ்ந்து விழுகிற வரையில்
விசாரணை
என்னருகே அம்மாவும்
கூட்டிலிருந்து தவறி விழுந்து விட்ட
ஒரு அணில் குஞ்சைப் போல.....

நீ போய் விட்டாய்;
நாள் தொடர்கிறது.....

(1982 / புதுசு – 6)



ஊர்வசி

ஒரு முறை புதுவை இரத்தினதுரை ஒரு கூட்டத்தில் வைத்துச் சொன்னார். 'கரும்புலிகள் இடிக்கிற வேகத்துக்கு ஈடாக எங்களால் அடிக்க முடியாமல் இருக்கிறது" என்று. .... ஆனால், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் காணப்பட்ட கலை இலக்கியப் போக்கனைப்படுவது யுத்த களச் சாதனைகளுக்கு நிகரானதாக இருக்கவில்லை என்பதே மெய் நிலையாகும்.

புலிகளுக்கு எதிரானதாகக் காணப்பட வில்லை. புளொட் மற்றும் ரெலோ ஆகிய இயக்கங்களுக்கு எதிரானதாகவே அது தோன்றியது. ஆனால் பின்னாளில் விடு தலைப்புலிகள் இயக்கம் ஒரு ஏகப்பெரும் இயக்கமாக எழுச்சிபெற்றபோது ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் உட்பட எல்லா அதிருப்தியாளர்களினதும் விமர் சனப் பொருளாக அந்த இயக்கம் மாறியது.

களத்திலிருந்து அதாவது விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டு பரப்பிற் குள்ளிலிருந்து இத்தகைய படைப்புக்கள் வெளிவர முடியாத ஒரு கலை இலக்கியச் சூழலே ஈழப்போரில் நிலவியது. எனவே, களத்துக்கு வெளியில் இருந்தே இவை வெளிவந்தன.

களத்தில் சொல்லப்பட முடியாதிருந்த உண்மையின் மறைக்கப்பட்ட புனிதமற்ற கசப்பான பகுதிகளை இப்படைப்புக்கள் வெளிக்கொணர்ந்தன. பேசாப் பொரு-ளைப் பேசியதே இவற்றுக்கு இருந்த முக்கியத்துவமும் கவர்ச்சியுமாகும். அதாவது ஈழப்போரின் இருண்ட பகுதிக்கான யுத்த சாட்சியங்கள் இவை. பலியிடப்படும் உண்மைக்கு இயன்றளவு சாட்சியாக இருப்பதே போரிலக்கியம் என்ற அடிப்படையில் பார்த்தால் ஈழப்போரின் யுத்த சாட்சியத்தில் தவிர்க்கப்படவியாலாத ஒரு கூறு இந்த வகைப் படைப்புகளாகும். ஒரு முழுமையான யுத்த சாட்சியம் என்று வரும் போது இவற்றை தவிர்க்க முடியாது.

இப்போதுள்ள பிரச்சினையே இவற்றை எதிர்நிலையில் வைத்துப் பார்ப்பதுதான். உண்மையில் இவை எதிர் நிலையில் வைத்துப் பார்க்கப்பட முடியாதவை. ஒரு முழுமையான யுத்த சாட்சியம் என்று தொகுக்கும்போது இவை அதன் தவிர்க்கப்படவியலாத கூறுகளாக இணைக்கப்பட வேண்டும். அதாவது, கூறுபட்ட துண்டு துண்டுகளான அல்லது கறுப்பு வெள்ளையாக பிளவுண்ட நோக்கு நிலையில் இருந்து பார்க்கும்போது தான் இவை 'துரோகச் செயல்களாகத்' தோன்றும். மாறாக, எதையும் அதன் முழுமைக்கூடாக தரிசிக்க முயலும் கூறுபடாத ஒரு நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் ஈழப்போரின் ஆகக்கூடியபட்ச முழுமையான யுத்த சாட்சியத்தின் தவிர்க்கப்படவியலாத ஒரு பகுதியாக இந்த வகை எழுத்துக்கள் முக்கியத்துவம் பெறும்.

தமிழ்த் தேசியத்தின் உள்ளடக்கப் போதாமைகளை வெளிக் கொணர்ந்த விமர் சனப் படைப்புகள் இவை. எனவே, தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக அடித்தளத்தைப் பலப்படுத்துவதற்கு இவை அவசியமா னவை. இவற்றைத் தவிர்த்துவிட்டு ஈழத்துப் போரிலக்கியத்தைப் பற்றிய ஒரு முழுமையான சித்திரத்தை வரைய முடியாது.

நாம் இதுவரை பார்த்த மூன்று வகைகளும் திட்டவட்டமானவை அல்ல. ஒரு வசதிக்காகப் பிரிக்கப் பட்டவையே.

இம் மூன்று வகைகளிற்குள்ளும் அவற்றிற் கிடையிலும் சாம்பல் நிற ஓரங்கள் விகித வேறுபாடுகளுடன் உண்டு. உதாரண-மாக புதுவை இரத்தினதுரை தொடக்கத்தில் இடதுசாரி சிந்தனைகளால் ஆகர்ஷிக் கப்பட்டிருந்தார். அந்நாட்களில் அவர் முழு இலங்கைக்குமான தேசியத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். 1980களின் நடுக்கூறுகளிலிருந்து அவர் தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்க்கப்பட்டார். பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக் கத்தின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளராக இருந்து இறுதி யுத்தத்தில் காணாமற்போனார்.

ஜெயபாலன் முதலில் புளெட் உறுப்பினராக இருந்தார். பின்னாளில் தனது சொந்த இயக்கத்தோடு முரண் பட்டு அதிலிருந்து விலகி சகபயணியா-னார். தமிழ்த் தேசியம் தொடர்பாகவும் முஸ்லிம்கள் தொடர்பாகவும் பால் அசமத்துவம் தொடர்பாகவும் அவருக் கென்று மாறாத விட்டுக் கொடுப்பற்ற தொடர்ச்சியறாத ஒரு நிலைப்பாடு உண்டு.

சேரன் முதலில் தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்டார். பின்னாளில் இயக்க மோதல்களின் போதும் மாற்றுக் கருத்துடையவர்கள் அச்சுறுத்தப்பட்ட போதும் அவர் தமிழ்த் தேசியத்தையும் ஏற்றுக் கொண்டு அதிருப்தியாளர்களையும் பிரதிபலித்தார். புலம்பெயர்வின் பின் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை அதிகம் பிரதிபலித்த அவர் குறிப்பாக நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின் தீவிரநிலைப்பாட்டை பிரதிபலிப்பவராக காணப்படுகிறார்.

ஷோபா சக்தி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முதலாவது தெரு நாடகமும் ஈழத் தமிழர்களின் முதலாவது தெரு நாட கமுமான விடுதலைக்காளியில் நடித்தவர். அவர் இயக்கத்திலிருந்து விலகி புலம் பெயர்ந்த பின்னர்தான் அவருடைய படைப்பாளுமை அதிகம் பிரகாசித்தது. அதிருப்தியாளர்களை பிரதிபலிப்பவரா கவே அவர் பிரபல்யமடைந்தார்.

செழியன் தொடக்கத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிபலித்தவர். பின்னர் சகோதரச் சண்டைகளின்போது அதிருப்தியாளர்களைப் பிரதிபலித்தார். புலம் பெயர்ந்த பின் குறிப்பாக, நந்திக் கடல் வீழ்ச்சிக்குப்பின் தமிழ்த்தேசியத்தை அதி-கம் பிரதிபலிப்பவராக காணப்படுகிறார்.

ஷோபா சக்தி, கர்ணன், எஸ்.போஸ் போன்ற பல முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள், அமைப்பை விட்டு விலகி சக பயணிகளாக அல்லது அதிருப்தியாளர்களாக மாறியபோதே அவர்களுடைய படைப்பாளுமையானது ஒப்பீட்டளவில் முன்னரைவிட அதிகமாக துலங்கத் தொடங்கியது.

எனவே, ஒரு காலம் போராளிப் படைப்பாளிகளாக இருந்து பின்னாளில் இயக்கத்திலிருந்து விலகி எழுத்துப் போராளிகளாக பிரகாசித்த பலரும் மேற்கண்ட மூன்று வகைகளுக்குள்ளும் ஊடாடுபவர்களாக காணப்படுகின்றனர். இயக்கப் போராளிகள் பின்னாளில் அதிருப் தியாளர்களாக ஆகியிருக்கிறார்கள். சக பயணிகள் சில சமயங்களில் அதிருப்தி யாளர்களாக இருந்திருக்கிறார்கள். அதிருப்தி யாளர்கள் பின்னாளில் குறிப்பாக நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின் தீவிர சக பயணி களாக மாறியிருக்கிறார்கள்.

எனவே, ஈழத்துப் போரிலக்கியத்தைப் பற்றிய முழுமையான சித்திரம் எனப்படுவது மேற்கண்ட மூன்று கூறுகளையும் அதாவது, போராளி எழுத்தாளர்கள், சக பயணிகள், அதிருப்தியாளர்கள் எனப்படும் மூன்று கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அத்தகைய ஒரு முழுமையான சித்திரம்தான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக அடித்தளத்தை பிரதிபலிக்கும் ஒன்றாக அமையும்.

நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின்

ஏறக்குறைய மூன்றாண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. எந்த மூலகாரணத்திலிருந்து ஆயுதப் போராட்டம் தொடங்கியதோ அது இப்பொழுதும் அப்படியே கூர்கெடாது இருக்கிறது. அழிக்கப்பட்டிருப்பது ஆயுதப் போராட்டம்தான். அதாவது மூலகாரணத்தின் விளைவுதான். தமிழ் இயக்கங்கள் செய்த மனித உரிமை மீறல்கள் எனப்படுபவை ஆயுதப் போராட்டத்தின் விளைவுகள்தான். அதாவது விளைவின் விளைவுகள்தான். எனவே, மூலகாரணத்தை மட்டும் பாடுபொருளாகக் கொண்ட இலக்கியத்தைப் போலவே விளைவை அல்லது விளைவின் விளைவை மட்டும் பாடுபொருளாக கொண்ட இலக்கியமும் உண்மையின் ஒரு பகுதியை மட்டுமே பேசமுற்படுகின்றது. ஆனால், போரிலக்கியம் எனப்படுவது போர்க்களத்தில் பலியிடப்படும் உண்மைக்கு சாட்சியாக இருப்பதுதான். அதா வது உண்மையின் எல்லா அடுக்குகளையும் அதன் நுண் அடுக்குகளையும் வெளிப்படுத்தும் ஒரு முழுமையான யுத்த சாட்சியம்தான்.

எனவே, ஆகக்கூடிய பட்சம் முழுமையான யுத்த சாட்சியமாக அமையக்கூடியதும், அதனாலேயே ஒரு பேரிலக்கியமாக பிரகாசிக்கக் கூடியது மான ஈழத்துப் போரிலக்கியமானது மூலகாரணத்துக்கும் விளைவிற்கும் விளைவின் விளைவிற்கும் சாட்சியாக இருக்கவேண்டும்.

இறுதி வெற்றிக்காக தியா-கம் செய்யப்பட்ட உண்மைகளும் ஒத்திவைக்கப்பட்ட உண்மைகளும் ராணுவ ரகசியங்களும் பேசப்படும் ஒரு காலம் கனியும்போதே அத்தகைய ஒரு முழுமையான யுத்த சாட்சியம் சாத்தியப் படும். அப்பொழுதுதான் ஈழத்துப் போரிலக்கியமானது அது இதுவரை தொட்டிராத புதிய உச்சங்களைத் தொடும். "எழுதாத எனது கவிதையை யாராவது எழுதுங்களேன்" என்ற வானதியின் வேண்டுகோளும் நிறைவேறும்.

**பின் குறிப்பு:**

*1)* 2002ஆம் ஆண்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த மானுடத்தின் ஒன்றுகூடல் முதல் நாள் அமர்வில் ஆற்றப்பட்ட சிறப்புரையின் விரிவாக்கமே இக்கட்டுரை. மூல உரையின் சாராம்சம் கெடாத வகையில் பிந்திய அனுபவங்களையும் குறிப்பாக நந்திக் கடல் வீழ்ச்சிக்குப் பின்னரான அனுபவங்களையும் உள்வாங்கி இக்கட்டுரை விரித்து எழுதப்பட்டது. உண்மையின் எல்லா அடுக்குகளும் அதன் நுண் அடுக்குகளும் வெளிப்படுத்தப்படும் போதும் இக் கட்டுரையில் வரும் பட்டியல்கள் முழுமைப் படுத்தப்படும் போதும் அல்லது அவற்றை முழுமைப்படுத்தக்கக்கூடிய ஒரு காலம் உருவாகும் போதும் இக்கட்டுரையானது மேலும் திருத்தி எழுதப்படலாம்.

*2)* வசந்தன் - விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகையான விடுதலைப்புலிகளின் ஆசிரியர் பீடத்தில் இருந்தவர். இவருடைய போர்க் களச் சித்திரிப்புக்கள் தனித்துவமானவை. இலக்கியச் சுவை மிக்கவை. இயக்கத்தில் இருந்து விலகி புலம்பெயர்ந்த பின் அவர், எதையும் எழுதியதாகத் தெரியவில்லை. லண்டனில் அவர் புற்றுநோயால் இறந்து போனார்.

*3)* இக்கட்டுரையை எழுதுவதற்கு வேண்டிய தகவல்களை சரி பார்த்து உறுதிப் படுத்தி உதவிய திரு அ.யேசுராசாவிற்கும், திரு சி.கருணாகரனுக்கும் நன்றிகள்.

❍ ❍ ❍

ஞானம் 79ஆம் இதழில் (டிசம்பர் 2006)

## பேராசிரியர். வீ. அரசு அவர்களது நேர்காணல்...

***தி.ஞா. ஈழத்தமிழ் போர்க்கால இலக்கியங்கள் பற்றிய உங்களது கணிப்பு யாது?***



**வீ.அ:** தமிழுக்கு இதனால் ஒரு புதிய பரிமாணம் கிடைத்திருக்கிறது. நமது சங்க இலக்கியங்கள் பற்றி பேசுகிறபோது அவற்றில் பேசப்படுகிற பல்வேறு புறம் சார்ந்த செய்திகளை இலக்கிய மரபாக வாசிக்கின்ற ஒரு மரபு உண்டு. அந்த அகம், புறம் என்பதில் புறம் என்பது வீரம் சார்ந்த ஒரு செந்நெறி மரபு இலக்கியம் என்பதால் அது சார்ந்த செய்திகளைப் பேசிய மரபு தொடர்ச்சியாக நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் இப்போது அண்மைக் காலங்களில் யதார்த்த வாழ்க்கையில் நடந்துகொண்டிருக்கிற இனங்களுக்கிடையான இந்தப் போராட்டத்தில் ஒரு மிக வீச்சான இலக்கியம் தமிழில் உருவாகியுள்ளது. அதில் ஒன்று ஈழத்தில் உருவாகியுள்ள போர்சார்ந்த கவிதைகள். இந்தக் கவிதைகள் இதற்குமுன் இருந்த தமிழ்க் கவிதையினுடைய பல பரிமாணங்களை எல்லாம் மாற்றி ஒரு புதிய பரிமாணத்தை அது கொடுத்திருக்கிறது. எப்படியென்றால் இதற்குமுன் தமிழ்நாட்டில் கவிதை எழுதுகிறவர்களும் சரி, ஈழத்தில் கவிதை எழுதுகிறவர்களும் சரி கவிதை என்பது ஒரு கற்பனைத் தளத்திலேயே போய்க் கொண்டிருந்தது என்ற நிலைமைமாறி, இன்றைக்கு இவர்களுக்குக் கற்பனை தேவை இல்லை வாழ்க்கையில் நேரடியாக எதிர்கொள்பவற்றை ஒரு கவிதை மொழியில் கிடைக்கக்கூடிய ஒரு கவிதை வந்திருக்கிறது. அந்தக் கவிதை ஒரு தனிப்பட்ட மனிதனுடைய உணர்வு சார்ந்த பதிவாகவும் இருக்கிறது. இது பாலஸ்தீனத்தில் உருவான கவிதைகள் போலவும் ஆபிரிக்காவில் காலனி ஆதிக்கத்திற்கு எதிராக உருவான அந்த "யுகுதிவாத்தியாங்கோவின்" கவிதைகள் போன்றும் அப்படியான நேரடியான வாழ்க்கையின் ஒரு இலக்கிய வடிவாக்கமாக தமிழ்க் கவிதை ஈழப்போரினால் உருவாகியுள்ளது. இது ஒரு புதிய பரிமாணம். அதேபால கவிதைகள் உருவான அளவிற்கு போர்சார்ந்த புனைகதைகள் உருவாகி இருக்கின்றனவா என்று பார்த்தால், உருவாகியிருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அளவு ரீதியாகக் குறைவுதான். அதனுடைய தன்மையும் இதுவரை இருந்த தமிழ்ப் புனைகதை மரபிலிருந்து ஒரு புதிய மரபாக உருவாகியிருப்பதைப் பார்க்கலாம். குறிப்பாக போராளிப் பெண்கள் எழுதக்கூடிய சிறுகதைகள் நாவல்கள் கவிதைகள் என்பவை தமிழுக்குப் புதியவை, இதற்குமுன் இப்படி ஒரு மரபில் இந்த வடிவம் உருவானதாக நம்மால் சொல்ல முடியவில்லை. இந்தப் பிரிவுனுடைய இன்னுமொரு வடிவமாக போரினால் புலம் பெயர்ந்து வாழ்பவர்களிடமிருந்து வேறொரு பரிமாணத்தில் புதிய இலக்கியமும் உருவாகிவருகிறது. அதனை ஒரு காலத்தில் "புலம் பெயர் இலக்கியம்" என்று சொன்னார்கள். இப்பொழுது அச்சொற்றொடர் அவ்வளவு பொருள் சார்ந்ததாக இல்லை என்ற விமர்சனம் வந்ததினால் இப்பொழுது அதிகமாக அச்சொற்றொடரைப் பயன்படுத்துவதில்லை. ஆனால் அது போர்சார்ந்த இலக்கியம்தான். போரினால் வெளியேறி அகதிகளாக வாழ்ந்தவர்களின் அகதி மனநிலைசார்ந்த ஒரு இலக்கியம் என்பதும் தமிழுக்குப் புதியபரிமாணமாகக் கிடைத்துள்ளது. இந்த அகதி மனநிலை என்பது அதுதான் அந்த DiasaPara என்று கூடச் சொல்லுகிறார்கள். அதைத்தான் "அலைவு உழல்வு" என்று சொல்கிறோம். யூதர்கள் பல நூற்றாண்டுகளாக கி.பி.9,10 இல் தொடங்கி உலகம் முழுவதும் அலைக்களிக்கப்பட்டு அவர்கள் வாழ்கிற வாழ்வு முறை சார்ந்து ஒரு புதுவகையான அறிவுசார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். உலகில் மிக அதிகமான விஞ்ஞானிகள், அறிவாளிகள் அந்த இனத்திலிருந்து உருவாகியிருக்கிறார்கள் என்பது வரலாறு, அதைப்போலவே இந்தத் தமிழ் அலைவு உழைவினால் உலகம் முழுவதும் சென்று அகதிகளாக வாழக்கூடிய இந்த மனிதர்களிடமிருந்து புதுவகையான பல இலக்கிய வடிவங்களும் வகைகளும் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த வகையில் தமிழில் இந்தப் போரினால் புதுவகையான ஆக்கங்களுக்கான ஒரு மிகுந்த விரிந்த பரிமாணம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

# ஸெய்த்தூன்

– அஷ்ரஃப் சிஹாப்தீன் –



ஆவேசம் மிகுந்த – மெலிதான சோகத்தில்
ஸெய்த்தூன் பற்றிய துயரச் செய்தியை
இங்கு பகிர்ந்து கொள்கின்றனர்...

எங்களூரின் எல்லாத் தெருக்களிலும்
எல்லா ஒழுங்கைகளிலும் – வேலியோரங்களிலும்
எல்லா நாற்காலிகளிலும்
நட்சத்திரங்கள் பூத்த இரவுகளிலும்
அனல் தகிக்கும் பகல் பொழுதுகளிலும்
ஸெய்த்தூன் பற்றியே
அதிகம் பேசுகின்றனர்

எங்கள் ஸெய்த்தூன்
ஓர் அதிகாலை!
ஒரு பூவரசு மொட்டு
பௌர்ணமி ராத்திரிப் பனித்துளி
நயம் மிகுந்த நல்ல கவிதையின்
ஞாபகமூட்டல்!

மயான அமைதி பூத்த
ஒரு சோகமான அதிகாலையில்
நான் ஊருக்குள் நுழைந்தபோது
ஸெய்த்தூன் பற்றிய துயரச் செய்தியை
அவர்கள் எனக்குரைத்தனர் கண்ணீரோடு

துப்பாக்கிகள் உரத்துப் பேசிய
ஓர் அந்திக் கருக்கலில்
அவளை நாங்கள் இழந்திருந்தோம்!
பதினாறு வயதான
எங்கள் ஸெய்த்தூன்
யாரையும் அறிந்திருக்கவில்லை
ஆனாலும்
நாட்படாத ஒரு கோழிக் குஞ்சைப்



பருந்து தூக்கியது போல்
அவர்கள் தூக்கிச் சென்ற போது
யாருக்கும் தெரியாது!

ஊர் எல்லையைச் சற்றுத் தாண்ட
சேலை இருந்தது...
மேல் சட்டை இருந்தது...
இரத்தம் இருந்தது...
ஸெய்த்தூன் இருக்கவில்லை!

எங்கள் சிறுமிகள் யாவரும்
அவளை அதிகம் நேசிக்கின்றனர்
அந்தத் தினத்தை
பாடக் கொப்பிகளில் கூட
பதிவு செய்து வைத்திருக்கின்றனர்
மாரி மழையும் – கோடை வெய்யிலும்
வசந்தத் தென்றலும் – இலையுதிர் தினங்களும்
மாறி மாறி மாறி வரும்...
ஸெய்த்தூனின் நினைவு மட்டும்
மாறாமலே இருந்து வரும்!



எமது மக்கள்
அவளை
இதயத்தில் வைத்திருக்கிறார்கள்
ஒரு சோகமான கவிதையைப் போல

வெள்ளமும் புயலும்
எந்தக் கொண்டாட்டங்களும் எந்த மகிழ்ச்சியும்
எமது மக்களின் இதயத்தை விட்டு ஸெய்த்தூனை
அப்புறப்படுத்தி விடாது
இனிமேல் –
ஸெய்த்தூன் திரும்பி வரமாட்டாள்

இளைஞர்கள் எனக்குச் சொன்னார்கள்
துவக்கு வெடித்த இரவின் மீது
இரத்தம் உறைந்த பூமியின் மீது
சத்தியம் பண்ணியதாக...
இனிமேல்
எந்த ஸெய்த்தூனையும் இழப்பதில்லை என்று

1985 ஏப்ரல்
இனக்கலவரத்தின் போது
பாதிக்கப்பட்ட
முஸ்லிம் சகோதரிகளின்
நினைவாக

**(மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்)**

# ஈழத்துக் கவிஞைகளின் நவீன கவிதைகளில் போரும் போரியல்வாழ்வும்

அந்துவன் கீரன்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணியச் சிந்தனை வலுப்பெற்ற நிலையில் பெண்கள் தங்கள் சுய இருப்பை, உள்மனதை, பெண் நடத்தைவாத முறைகளை, நுண்மை, பருண்மைக் காட்சிகளைப், புற உலகத் தாக்குதல்களைத் தாங்களே விசாரணை செய்யத்துணிந்தனர். இதனால் 'கவிதை அரசியல்' புதிய பரிமாணத்தைப் பெற்றது. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பெண்ணடையாளமையம் சிதைக்கப்படும் போது அவள் எழுத்தை ஊடகமாக்கினாள். பெண்ணின் வலியும், மன உளைச்சலும் பெண்ணெழுத்தாக வடிவம் பெறும்போது பெண்ணின் உள்முகத் தன்மை புதிய அடையாளத்தைப் பெற்றது. சமூக உறவுமுறைகளை மீறி பெண்ணின் அக அனுபவங்களை, அகச்சமூகமுரண்களை, பெண்ணுடலை அவள் அரசியல் ஆக்க முற்பட்ட வேளையில் பெண் கவிதைகள் முனைப்பு பெற்றன. பெண் கவிஞர்களின் கவிதையின் பாடு பொருள், வடிவம், மொழி, ஆகிய புனைவு வெளிப்பாடுகளைப் பெண்ணிலை நோக்கில் அணுகும் பெண்மையவாதம் (Gyno criticism), ஆண் சொல்லாடலை மறுவாசிப்புக்குட்படுத்துவதுடன் பெண்ணிலக்கியத்துக்கான இலக்கியமரபு, திறன் குறித்து ஒரு புதிய இலக்கிய வரலாற்றுக்கான தளத்தை உருவாக்குகிறது.

ஈழத்தில் 1983 களுக்குப் பின் ஆயுதப் போராட்டம் பரந்து பட்ட ரீதியில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கடுமையான யுத்தத்துக்கு முகம் கொடுக்கலாயினர். அரசியல் பொருளாதார, சமூக முன்னேற்றம் கருதி மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்வினைச் சிதைத்து அவர்களின் வாழ்வினை நிர்மூலமாக்கியது. ஆழமான விரிவான தளத்தில் தேசிய விடுதலைப் போராட்டக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் ஈழத்து நவீன கவிதைகள் மக்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசின. புதிய சிந்தனைகள் முன் வைக்கப்பட்ட நிலையில் உரமும் செழுமையும் கொண்ட பிரக்ஞை பூர்வமான கவிதைகள், நேர்த்தியான மொழிகளுக்கூடாகப் புதியபடிமங்கள். புதிய வடிவங்களைத் தாங்கி வெளிவந்தன. அதிகார அசமத்துவப் போக்குக்கெதிராக எழுந்த தமிழ்க் கவிதைகள் புண்ணுண்ட மனங்களுக்கூடாகப் போரின் வடுக்களைப் பேசின.

1980களுக்குப் பின் ஈழத்தின் பல்வேறு பெண் கவிஞர்களின் போரியல் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுப்புக்களாக 'வானதியின் கவிதைகள் (1990),

கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), பாரதியின் காதோடு சொல்லிவிடு (1992), சிவரமணி கவிதைகள் (1993), தூயவளின் நிமிர்வு (1993), காலம் எழுதிய வரிகள் (1994), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செல்வி - சிவரமணி கவிதைகள் (1997), செம்மணி (1998), ஆனையிறவு (2000), ஔவையின் எல்லை கடத்தல் (2000), ஆழியாளின் உரத்துப் பேச (2000), எழுதாத உன் கவிதை (2001), அம்புலி கவிதைகள்(2005),பெயரிடாத நட்சத்ததிரங்கள் (2011) முதலானவற்றைக் கூறலாம்.

அவ்வகையில் வன்னிநிலவாழ் மக்களின் வாழ்வியல் அவலங்களைப் பெண் அல்லது பெண்ணியவாதப் படைப்புக்களுக்கூடாக வெளிக்கொணர்ந்த இதழ்களில் முக்கிய இதழ்களாக வெளிச்சம், சுதந்திரப்பறவை, எரிமலை, ஈழநாதம் (வெள்ளி வாரமலர்) போன்றன காணப்படுகின்றன.

அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், கஸ்தூரி, மலைமகள், தமிழவள், தமிழ்க்கவி, சுதாமதி, நாமகள், தூயவள், செந்தணல், பிரேமினி சுந்தரலிங்கம், மன்னார் ரூபி மாக்கிரெட், சோழநிலா, அலை இசை போன்றோர் சிற்றிதழ்களுக்கூடாகவும் தொகுப்புக்கவிதைத் நூல்களினூடாகவும் அறியப்பட்டவர்கள். போரையும் போரியல் வாழ்வையும் பாடும் இவர்கள் போரினை முகம் கொண்டவராகவும் போரின் பங்காளிகளாகவும் செயற்பட்டவர்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடு பொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறி தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடுமிவர் கவிதைகள், பெண் விழிப்புணர்வுக்கூடாக பெண் விடுதலையைச் சாத்தியமாக்குகின்றன. இவர்களின் பெரும்பாலான கவிதைகள் செப்பனிடப்படா வார்த்தைப் பிரமாணங்களுக்குள் சிக்கி, உணர்வுத் தள மற்று கருத்துருவாக்கங்களுக்குள் சிதைந்து போவதாகக் காணப்படுகின்ற போதிலும் பெண்ணியல் அனுபவங் களுக்கூடாக விரியும் பெண்ணிய மொழி ஆங்காங்கே வீரியம் மிக்க சிறந்த கவிதைகளையும் தமிழ் இலக்கிய உலகுக்கு அளித்துள்ளது.

1980களில் ஈழத்துப் பெண் படைப்பிலக்கிய கர்த்தாக்களில் நன்கறியப்பட்ட ஒருவர் 'சிவரமணி" ஆவார். இவர் எழுதிய கவிதைகளில் எமக்கு கிடைக்கப் பெற்ற கவிதைகள் மிகச் சிலதே ஆயினும் அவரெழுதிய அத்தனை கவிதைகளும் சொல் நேர்த்தி கொண்டவை. எளிமையான மொழிநடைக்கூடாகக் கட்டுரும் இக்கவிதைகள் புதிய காட்சிப் படிமங்களுக்கூடாக வடிவமைக்கப்பட்டவை. யுத்த சூழலின் கொடுவடுக்களின் சாட்சியமாகவும் பெண்ணுணர்வின் பிரதிமையாகவும் உருப்பெறும் சிவரமணியின் எழுத்துக்கள் தன்னைச் சுற்றியுள்ள சமூக இயங்கியலின் இயற்பியலையும் துல்லியமாகச் சித்திரிப்பவை. சிவரமணியின் 'யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்" கடந்த கால அரசியல் சமூக ஓட்டத்தையும் சம்பவங்களையும் யதார்த்தத்தின் குரூரத்தையும் அழுத்தமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்துகின்றது.

**'தெருவில்**
**அவலமும் பதற்றமுமாய்**
**நாய்கள் குரைக்கம் போது**
**பூட்டப்பட்ட கதவுகளை**
**மீண்டும் ஒருமுறை சரிபார்த்து விட்டு**
**எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில்**
**நான்**
**நாளைக்கு**
**தோன்றுகின்ற சூரியனை பற்றி**
**எண்ண முடியாது**
**இரவு எனக்கு முக்கியமானது**

**நேற்றுப்போல்**
**மீண்டும் ஒரு**
**நண்பன் தொலைந்து**
**போகக் கூடிய**
**இந்த இருட்டு**
**எனக்கு மிகவும் பெறுமதியானது"**

*போர் பெண்களுக்கு வரையறுக்கப் பட்ட கலாசாரத் தடைகளைத் தகர்க்கிறது. போர்க்களம் சென்ற பெண்கள் இரவுக் காவல்பணிகளில் ஈடுபடுதலும் எல்லைப் புறங்களில் வேவு பார்க்கச் செல்வதும் போரில் சமராடுவதும் இயல்பாகவே நடைபெறும் ஒன்று.சிவரமணியின் அதே இருள் வித்தியாசமான பரிமாணத்தில் அம்புலியின் கவிதையில் உருப்பெறுகிறது.*

**"கண்ணுறக்கம் தவிர்ந்த நடுநிசி**
**எல்லை வேலியில்**
**நெழுப்பேந்துகிறது என்னிதயம்**
**ஓராயிரம் விழிகளின்**
**உறக்கத்துக்கான**
**உன் காவலிருப்பு**
**நாளையும்**
**நான் வாழவேண்டும்**

**எனதிழப்பின்**
**நிரப்ப முடியா இடைவெளி புகுந்து**
**பகை வரலாம்**
**புதிதாய்ஒரு புலி**
**விரைந்து வரும்**
**வரை**
**இரட்டிப்பு விழிப்போடு காத்திருக்கும்**
**என்**
**தோழியின் காவலுக்கு**
**என்னிழப்பு காரணமாயிருக்கக்**
**கூடாது**
**நாளையும் நான் வாழவேண்டும்"**

*ஈழப்பிரதேசத்தின் பெரும் பகுதி யுத்தமாக விரிந்த காலப்பகுதியில் ஆட்கடத்தல்கள், நீசப்படு கொலை கள் மனிதவாழ்வைச் சிதைத்தது. பிண வாடையே இல்லாத பொழுதுகள் இல்லை என்னும் அளவுக்கு நாள்தோறும் நடுத் தெருக்களில் உத்தியோகப் பணிமனை-களில் உறங்கும் வீடுகளில் மனிதர்கள் கடத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டனர். பள்ளிச் சிறார்கள் கூட தங்கள் சீருடைகளில் விதிவிலக்கின்றி வேட்டையாடப்பட்டனர். கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனோராக்காகவும் வதையின் பின் புதைக்கப்பட்டவருக்காகவும் ஈழத்தில் 'செம்மணி' என்னும் தொகுப்பு புதுக் குடியிருப்பு அந்தி வானம் பதிப்பகத்தின ரால் வெளியிடப்பட்டது. பிரமிளா, சோழ நிலா, தயாமதி, சுதாமதி, தமிழவள், மலை மகள், துாயவள், அம்புலி முதலான பெண் கவிஞர்களின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றன. இத் தடத்தில் வெளிவந்த அங்கவையின் கவிதை, சீரழிந்த அரசியல் சூழலால் காவு கொள்ளப்பட்ட பூர்வீகப் பூமியில் வேட்டையாடப்பட்ட பள்ளிச் சிறுமியை, யதார்த்த வாழ்வியலுக்கூடாக படிப்பவர் மனதில் ஆழமான வருத்தத்தைத் தூண்டும் வகையில் வெளிப்படுத்துகிறது.*

**"உன் முற்பகல் நினைவுகளோடுதான்**
**தேடினேன்**
**கறுப்புத்திரையில்**
**உன் சுவடுகளின்**
**புள்ளிகள் ஏதுமில்லை**
**தென்படாத உன் வட்டமான**
**முகத்துக்காக ஏங்கினேன்**
**பள்ளிக்கூடம் வெறுமையில் கிடக்கிறது.**
**சூரியன் மேற்கிளம்பும் காலையில்**
**நாங்கள்**
**சீருடையணிந்து**
**பள்ளிக்கு சைக்கிளில்போனது நேற்றுத்தானே**
**வழிகள்தான்**
**பொல்லாதவை**
**பெரியவாய் திறந்து விழுங்கி விடும்.**

**அபாய வளைவுகள்**
**நிறையவேயிருந்தன.**
**நீ எங்கே என்று தொடர்ந்து தேடியதில்**
**உன் உதிர்ந்த**
**நகங்கள்லிருந்து**
**முளைத்திருந்த காளான்கள்**
**மணந்தன நாறி"**

ஈழத்தில் மனிதர்கள் தங்கள் இயல்பை இழந்து நரகத்தில் வாழும் துன்பியல் நிலையை இக்கவிதையினூடாக நாம் தரிசிக்கலாம். இங்கு நிகழ்வுகளின் வீரியம் பொதுமைப்பட்டதொன்றாகக் காணப் படுகிறது. நடப்பியலின் உட்தோய்தல் கவிதையைச் செழுமைப் படுத்துகிறது. நிகழ்காலத்தின் நினைவின் வேராக இக்கவிதை மனதில் நிழலாடிச் செல்கிறது.

தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத் தில், போராட்டத்துடன் இணைந்து செயற்பட்ட ஈழத்துக் கவிஞைக-ளின் கவிதைகள் போரியல் வாழ்வைப் பேசின. போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களை, அநுபவங்களின் வாயி லாக வெளிப்படுத்தும் இக்கவிதைகள் காலத்தின் பதிவுகளாகும். சிங்கள இன வன்முறையையும் மக்களின் துன்பிய லையும் மாத்திரம் பேசாது, விடு தலைப் போராட்டத்தின் எழுச்சியையும் போரியல் முறைமைகளையும் பேசிய கப்டன் வானதி, மேஜர் பாரதி, கப்டன் கஸ்தூாரி முதலானோரின் கவிதைகள் மனித வாழ்வுடன் போராட்டத்தையும் இணைத்துக் கொண்டன.

**"நண்ப...**
**பொறுத்துக்கொள்**
**என்வரையில்**
**பொறுப்பெடுத்து விட்டேன்!**
**காவலரணில்**
**கடமையில் இருக்கும் போது,**
**எதிரியின் பாசறையை**
**முற்றுகையிடும் போது**
**அடுத்த பாய்ச்சலுக்காய்**
**துப்பாக்கியை துடைக்கும்**
**போது**
**ஒவ்வொருரவையாக**
**எண்ணி எண்ணி**
**எண்ணியெண்ணி நிரப்பும்**
**போது,**
**உன்னுடன் பேசுகிறேன் டாம்போ**
**மீட்கப்படப் போவது**
**வெறும்**
**சிலாபத்துறை மட்டுமல்ல!**
**என்பதை மட்டும்**
**இப்போது தெரியப்படுத்துகிறேன்"**

மலரவனின் போருலா, தூயவனின் சமரும் மருத்துவமும் முதலான புனை-கதைகள் எவ்வாறு மனித வாழ்வியலைக் களமுனையுடன் இணைத்ததோ அவ் வாறே கப்டன் வானதியின் 'மன்னார் மீழும்! உன் கனவுகள் வாழும்!' என்னும் இக்கவிதை மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் மீது நிகழ்த்தப்பட்ட நேரடித்தாக்குதல்களைக் களமுனைக் காட்சிகளின் அநுபவங்களுக்கூடாக உயிரோட்டமாகப் பதிவு செய்கிறது. கப்டன் வானதியின் "நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு" என்னும் பிறிதொரு கவி தை தமிழீழ தேசத்தின் வீர விடியலுக்காய் தம் சுகம் மறந்து காட்டிலும் மழையிலும் நின்று போராடிய போராளிகளின் உன்னத தியாகத்தை எடுத்துகிறது.

**"மாளிகையில்**
**வாழ்ந்ததை விட**
**உன் ஒற்றைமர நிழலில்**
**காவல் இருந்ததை,**
**சந்தோசமாக**
**நினைந்ததை**
**பஞ்சணையில்**
**படுத்ததை விட**

**பசும் புல்லில்**
**சுகமாகத் தூங்கியதை,**
**மழையில் நனைந்து**
**அடுத்த ஆடைமாற்றாது**
**'பொஸிசனில்'**
**நின்றதை,**
**பசி மறந்து**
**தூக்கம் மறந்து**
**எதிரி எல்லையை**
**மீறுவதாயின்**
**எம்**
**உடம்புகளின்**
**மேலாகத்தான்**
**என்ற**
**உறுதியோடு**
**காவலிருந்ததை,**
**கூறுவாயா"**

தேசவிடுதலையில் தன்னுயிர் நீத்த, பங்கெடுத்த போராளிகளின் போரியல் வாழ்வையும் அவர்சார் இறந்தகால இருப்பையும் நிகழ்கால தேசத்துக்கு உணர்த்துமுகமாக எழுதப்பட்ட இக் கவிதைகள் தேசத்தின் மகுடத்துக்காய் போராளிகள் பட்ட மனித அவலங்களை எடுத்துரைக்கிறது.

ஈழத்தில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்ற காலப்பகுதியில் தாயக மக்களின் விடுதலைக்காய் அகிம்சா வழியில் போராடி உயிர்க்கொடை தந்து நீத்தவர்களுள் திலீபன், அன்னை பூபதி முதலானோர் முக்கியமானவர்கள். போராட்ட காலத்தில் மண்ணின் விடுதலைக்காக மரணித்த இவர்களின் தியாகங்கள் அளப்பரியன. லெப்.கேணல் திலீபனை

"குழிவிழுந்த கன்னங் கண்டு இங்கு குளமாகும் கண்கள் .. உங்கள் ஒட்டிய வயிறும் குழிவிழுந்த கண்களும் குற்றுயிராய்க் கிடக்கும் நிலையும் கண்டால் கல் நெஞ்சம் கசிந்து கண்ணீர் விடும்"

என்று நெஞ்சுருகும் வண்ணம் பாடிய கஸ்தூரி அன்னை பூபதியின் உயிர்க் கொடையை உணர்வுபூர்வமாகப் பதிவு செய்தவர். அன்னை பூபதியோ குடும்பம் என்னும் சிறு வட்டத்துக்குள் தன்னைச் சிறைப்படுத்தாது 'தேசம்', 'மக்கள்' என்னும் அகன்ற பரப்பினில் தன்னை உட்படுத்தி தாயக விடுதலைக்காய் உரிமைக்குரல் கொடுத்தவர். அன்னையின் பணி,தியாகம் முதலான இன்ன பிறசெயல்கள் கஸ்தூரியின் "காலம் அவளது கைபிடித்து நகர்கிறது" என்னும் கவிதை உள்ளம் நெகிழும் வண்ணம் பதிவு செய்யப்படுகிறது.

**"தாயே.....!**
**பிரபஞ்ச வரலாற்றின்**
**பிரமாண்டமான உச்சியில்**
**உயிரோட்டத்தோடு**
**உன்னை நீ**
**செத்துச் செத்துச்**
**செதுக்கிக்கொண்டாய் .....**
**'உறுதிப்படுத்தப் படாத**
**உலக அழிவு**
**ஒருநாள்**
**உண்மையாகிப் போனாலும்**
**அதற்குப் பின் வரும்**
**யாருமே அறியாத**
**ஆரம்பமொன்றிலும்**
**உந்தன் பெயர்**
**உயிர்த்திருக்கும்"**

மக்களுகென வாழ்ந்தவர்கள் மரணிப்பதில்லை. அவர்கள் என்றும் எப்போதும் ஜீவித்துக் கொண்டு இருப்பவர்கள் என்னும் உண்மையைஅதன் திண்மையை இக்கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது.

போர் தின்ற பூமியைக் "காதோடு சொல்லுகின்றோம்" என்னும் கவிதைத் தொகுப்புக்கூடாக உயிரோட்டமாகப் பதிவு செய்தவர் மேஜர் பாரதி ஆவார்.

யுத்தம் மலிந்த பூமியில் அவல வாழ்வியலுக்குட்பட்ட மக்களைப் போரா-ளிகளுடன் இணைத்த இத்தொகுப்பு காத்திரமான கவிதைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.'போராடச் சென்ற பெண் போராளி தன் தாயினை நினைத்து ஏங்குகின்றாள்.தன் மகவை நேசித்த உள்ளார்ந்த அன்பு போராளிக் கவி ஞையின் உள்ளத்தை வருடிச் செல்கிறது". தாயின் நேசிப்பும்,மகவின் ஏக்கமும்,தேசம் மீது கொண்ட அதீத அன்பும் பார தியின் 'அன்பான அம்மா'கவிதையில் வெளிப்படுத்துகிறது.

**"நாளை திரும்பி வரா**
**உன் மகளை எண்ணி**
**நீ கவலைப்படாதே**
**என் மறைவின்**
**பின்னர்**
**புதிய தோழர்கள்**
**அந்த வைகறைக்காய்**
**புறப்படுவார்கள்.**
**அதற்கு**
**முன்னால் அவர்கள்**
**உன்னிடம் வரலாம்.**
**அப்போது அவர்களின்**
**புதிய சீருடையில்**
**புதிய துப்பாக்கியில்**
**இனிய முகங்களில்**
**என்னைப் பார்.**
**அடுத்து வரும் நாட்களில்**
**அவர்களும்**
**இல்லாமல் போகலாம்**
**ஆனால்...**
**என்றோ ஒரு நாள்**
**எம் மக்கள்**
**புறப்படுவார்கள்**
**அப்போது அந்த**
**புதிய விடியலை**
**வரவேற்கும்**
**அதிகாலைப்**
**புஸ்பங்களாய்**
**மெல்லிய பனித்துளியின்**
**முகத்தின் பின்னால்**
**நாம் முகையவிழ்ந்து**
**தென்றலின் தடவலில்**
**முகமலர்ந்தாடுவோம்.**
**அப்போது நீ இருந்தால்**
**உற்றுப்பார்.**
**உன் செல்ல மகளின் முகம்**
**சிரித்தபடியே தெரியும்."**

இதனைப் போன்றே தாயைப் பிரிந்து போன மகவின் ஏக்கத்தை கௌதமியின் "அன்னை நிலம்" என்ற கவிதையும் உள்ளம் நெகிழும் வண்ணம் எடுத்துரைக்கிறது.

**" அம்மா!**
**அழுகின்றாயே வேண்டாம்**
**நான்**
**மீளவில்லையெனில்**
**என் படத்துக்கு ஒரு**
**முத்தம் கொடுப்பாயல்லவா....**
**ஏனெனில் என்றுமே... நான்**
**உனக்கும் குழந்தைதான்!"**

கவிதை மொழியின் வழியே அதிக சாத்தியங்களை உருவாக்கும் என்பதற்கு இக்கவிதை சிறந்த எடுத்துக்காட்டாகும். கவிதைக்குள் பொதிந்திருக்கும் உண்மை, உணர்வின் ஆற்றல் இக்கவிதையை வீரிய மாக்குவதுடன் நுகரும் சாதாரண வாசக னின் உணர்வின் முள்கொண்டு கீறுகிறது.

1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசினால் யாழ்குடா நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளா-தாரத் தடையைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி ஒப்பரேசன் லிபரேசன் என்னும் பெயரில் இலங்கை இராணுவத்தால் வடமராட்சிப்பகுதிகள் கைபற்றப்பட்டன. இதனை அடுத்து வட-பகுதியில் பொருளாதாரத்தடையால்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குகின்றோம் என்னும் அடிப்படையில், இந்தியப்படையினர் இலங்கையின் எல்லைக்குள் அத்து மீறி நுழைந்து ஐந்து யுத்த விமானங்கள் மூலம் சுமார் 24 தொன் பொருட்களைப் பாராசூட் மூலம் போட்டனர்.ஒப்பரேசன் பூமாலை என்னும் இந்நடவடிக்கையைத் தொடர்ந்து 1987ஆடிமாதம் 29 இல் நிகழ்ந்த இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் நுழைந்தது. 1987 ஆவணி மாதத்துக்குப் பின் இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல்களைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையில் பாரிய மோதல்கள் வெடித்தன. இவ்விருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் புலிகள் என்னும் பெயரில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு காணாமல் போயினர்.பெண்கள் புலிகள் எனப் பெயர் சூட்டப்பட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுச் சிதைக்கப் பட்டனர்.தமிழ் இளைஞர்கள்,யுவதிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகளை ஈழத்துப் பெண் கவிதைகள் பதிவு செய்துள்ளன.

**"உலகநாடுகள் முன்**
**தமிழன்**
**வயிற்றுப் பசியை**
**வாதாட்டத்திற்கு வைத்தது**
**வல்லரசு.**
**அனைத்து நாடுகளும்**
**அண்ணாந்து பார்த்து நிற்க**
**உயரத்திலிருந்து விழுந்தன**
**உணவுப் பொட்டலங்கள்.**
**ஒருதலைப் பட்சமாக**
**உள்ளே வந்த வல்லரசால்**
**அரிசிப் பொதிகள் விழுந்த**
**அதே குச்சொழுங்கையில்**
**குப்பெனப் பீறிட்டது**
**குருதியாறு"**

ஒரு காலகட்ட வாழ்வியலின் நிஜத்தைப் படம் பிடித்துக் காட்டும் கஸ்தூரியின் இக்கவிதை,இந்திய அரசின் உண்மையான முகத்தை வெளியுலகுக்குக் காட்டி நிற்கிறது.

**"அமைதி காக்க வந்தவர்கள்**
**என் வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே**
**புகுந்தனரே என் வீட்டினுள்**
**பதறியது என் தேகம்**
**பாய்ந்தனர் என்மீது**
**பதம் பார்த்தனர் என் உடலை**
**குரங்கின் கையில் அகப்பட்ட**
**மாலையாய் ஆனதோ என் உடல்**
**உடல் முழுக்க நோ**
**உள்ளத்திலோ பாரம் –ஆனாலும்**
**என் இருப்பு உறுதியானது".**

இந்திய அமைதிப்படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்ணின் உள்ளத்தையும் அவளது இருப்பையும் முன்மொழியும் இக்கவிதை, துன்பியல் வாழ்வுக்குள் அகப்பட்ட போதும் துவளாது போராடும் தமிழ் பெண்களின் மனோதிடத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

போர் மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்ததோடு, வாழ்விடங்களையும் பறித்தது. பிறந்தகம் பற்றிய ஏக்கங்களையும் இடம் பெயர்வுற்றவர்களின் துன்பங்களையும் இக்காலத்தில் எழுந்த கவிதைகள் காலத்துயராய் பதிவு செய்தன.குடியிருப்பு மனைகள் தகர்க்கப்பட்டு மக்களில்லா பாலைகளாய் வெறுமை படரக் கிராமங்கள் இருந்த நிலையினை யாழினியின் கவிதை உணர்வுத்தளத்தில் பதிவு செய்கின்றன.

**"மாங்காய்க் கெறிந்து மண்ணில் விளையாடி**
**பாங்காய்த் திரிந்த ஊர் பாழ்பட்டுக்**
**கிடக்குதையோ வரம்பில் நடந்து அழகை ரசித்து**

- பஹீமா ஜஹான்

# ஒரு மயானமும் காவல் தேவதைகளும்

சூழலுமிச் சோகச் சூழலிடை
உனக்கென எதையெழுத?
ஆடிப் பாடிப் பின் அவலம் சுமந்து நீங்கிய
சோலை வனத்தைத் தீயின் நாவுகள் தின்று தீர்த்தன
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த வயல் வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுருவித் தகர்த்தன
எஞ்சிய எமது பள்ளிவாயில்களும்
அசுத்தமாக்கப்பட்டன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள் வீழ்ந்தழிந்திட
பேய்கள் உலவிடும் பூமி மாத்திர்
தரிசு தட்டிக் கிடக்கிறது
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளிர்த்திடுமினி?

யாருமற்ற பாழுடைந்த நகரத்தின் இடிபாடுகளினூடு
சூரியன் தயங்கித் தயங்கித் தலை நீட்டும்
போர் தின்ற பூமியில் வீழ்ந்திடும் கிரணங்கள்
ஒருதலைமுறையின் தலை விதியை ஊமையாய்ப்
படிக்கும்
அந்திப் பொழுதில் பயமும் பீதியும் தொண்டைக் குழியை
நெரித்திடப்
பூதங்களின் காலடியோசை கேட்டுச் சூரியன்
நடுநடுங்கி
மறையும்
தளைகளை வெட்டியெறிந்திடப் புறப்பட்ட விடுதலைப்
பிரவாகம் எமை வீடு துறக்க வைத்தது
நீ வாழ்ந்த தேசம் இன்றுனை
எந்தப் பாடலைக் கொண்டும் வரவேற்கும்
நிலையிலில்லை!

நானும் நீயுமன்றி
இந்தப் பரம்பரையே தோள்களில் சுமையழுந்திடத்
திசைக்கொவ்வொன்றாய்ச் சிதறுண்டு போனது
கல்வியும் உழைப்பும் கனவுகளை மெய்ப்பித்திட
ஆனந்தம் பூரித்த நாட்கள் இனியில்லை
பாழுடைந்த படகுத் துறைகள்...
காடடர்ந்த பயிர் நிலங்கள்...
தலைகருகிய கற்பக தருக்கள்...
தரைமட்டமாகிப் போன எங்கள் குடிமனைகள்...
எல்லாம்
பேய்கள் சன்னதம் கொண்டாடிய கதையினைச்
சொல்லும்

அவசரப்பட்டு நீ
ஊரைக் காணும் ஆவலிலிங்கு சோலை நிலத்தினூடு
அணிவகுத்துச் செல்லும் காவல் தேவதைகள்
அமைதியைப் பேணுகின்றன
அந்த ஏகாந்தம் குடியிருக்கும் மயானத்தைக் காண
உனக்கென்ன ஆவல்
வந்து விடாதே

பரம்பரை வயல்கள் சீரழிந்து
கிடக்குதையோ தேங்காய்க் குரும்பை தொங்கிப்
பறித்து நாங்கள் குடித்த தென்னை
தலையிழந்து நிற்குதையோ பால் தயிர் தந்த
எங்களின் பசுக்கள் கால் குளம்பிழந்து
கிடக்குதையோ"

சு.வில்வரெத்தினத்தின் காலத்துயர், காற்றுவழிக்கிராமம் என்பவற்றின் தொடர்ச்சியாய் இக்கவிதை சின்னா பின்னமாய்ச் சிதறுண்டு வாழ் விடத்தை உணர்வுபூர்வமாய்க் காட்சிப்படுத்தப்படுகிறது.

தமிழீழப் போராட்டத்தில் தமிழ்

மக்களுக்குரிய நியாயப்பாடான பக்கங்கள் பல உண்டெனினும் தவறான கற்ப்பிதங்களுக்குள்ளான தேசியவாதத்தின் மோசமான பக்கங்கள் பல, விமர்சிக்கப்பட்டதும் உண்டு. ஜனநாயகமின்மை, கருத்துச் சுதந்திரமின்மை, சகோதரப்படு கொலை, இன அழிப்பு என விரியும் பக்கங்கள் விடுதலையின் பெயரால் மாசுபடுத்தப்பட்டகொடூர நிகழ்வுகளை எடுத்துரைக்கும். ஈழத்தில் விளைவுகளுக்கப்பால் 'தமிழ்த்தேசியப் போராட்டம்' வன்மம் கொள்ளும், மனிதாபிமானத்தைச் சிதைக்கும், தாய் மகன் உறவில் கூட விரிசலை உருவாக்கும் என்பதை ஔவையின் 'வீடு திரும்பிய மகன்' என்னும் கவிதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது.

**'இராணுவ வீரனாய் என்முன் நின்றான்**
**என் மகன்........**
**நண்பனைச் சுட்டு வந்து**
**வீரம் பேசினான்**
**தியாகம் பற்றி**
**ஆயுதம் பற்றி**
**எல்லைப்புற மக்களைக் கொல்வதைப் பற்றி**
**நிறையவே பேசினான்**
**இப்போது நான் மௌனமாக இருந்தேன்**
**மனிதர்கள் பற்றி**
**விடுதலை பற்றி**
**மறந்தே போனான்**
**இப்போது நான்**
**தாயாக இருத்தல் முடியாது**
**என்று தோன்றுகிறது**
**துரோகி என்று**
**என்னையே புதைப்பானோ**
**ஒருநாள் ".**

போர்க்காலத்தில் பலாத்காரம், சித்திரவதை, காணாமல்போதல், கொல்லப்படல், பாலியல் துஷ்பிரயோகம் எனப் பெண்ணுக்கெதிராக நிகழ்ந்த வன்முறைகள் பெண்ணுணர்வை அழித்து அவள் அடையாளத்தைச் சிதைத்தன. இனத்துவ அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட இவ்வன்முறைகள் பௌதீக நிலையில் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் அரச வன்முறையினால் கோணேஸ்வரி, கிருஷாந்தி, ஜூடா கமாலிட்ட, ராகினி எனப் பலபெண்கள் குதறிச் சிதறடிக்கப்பட்ட வேளையில் ஆக்கிரமிக்கும் அரசபடைகளுக்கு எதிரான பெண்குரல்கள் ஆக்கிரோசமாக எழுந்தன. கிழக்குமாகாணத்தில் மனிதாபிமானத் துக்கு அப்பாற்பட்டு அரச படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாகி யோனிக்குள் வெடிகுண்டைச் செலுத்தி குதறிச் சிதைக்கப்பட்ட கோணேஸ்வரியை குறியீடாக்கிப் எழும் கலாவின் 'கோணேஸ்வரிகள்" என்னும் கவிதை உடலின் உதிரப்பிசிறல்களைக் கந்தகநெடி கமழ எடுத்துரைக்கிறது. ஈழத்து நவீன கவிதைத் தடத்தில் இக்கவிதை ஓர் மைல்கல் எனலாம்.

**'வீரர்களே**
**உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்**
**என் பின்னால்**
**என் பள்ளித் தங்கையும் உள்ளாள்**
**தீர்ந்ததா எல்லாம்**
**அவளோடு நின்று விடாதீர்**
**எங்கள் யோனிகளின் ஊடே**
**நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்**
**ஆகவே**
**வெடி வைத்தே சிதறடியுங்கள்"**

வதைகளின் தடவழியே வன்முறையை எதிர்கொள்ளும் ஒரு பெண்ணின் தார்மீகக் குரல் கலாவின் கவிவழியே பிசிறின்றி ஒலிக்கிறது. கொடுமைகளுக்கு எதிரான எதிர்ப்பின் குரலாக எழும் ஆழியாளின் 'மன்னம்பேரிகள்' ஈழத்தின் கவிதை தடத்தில் வதையின் மொழியைத் தத்து ரூபமாகப் பதிவு செய்த கவிதையாகும்.

*1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சியில் பெண்கள் அணிக்குத் தலைமை தாங்கி 1971.04.16 அன்று படையினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாகிப் படு கொலை செய்யப்பட்ட 'மன்னம்பேரி', 17.05.1997 இல் அம்பாறையில் சென்றல் முகாம் பொலிசாரினால் வன்புணர்வுக்குப் பின் கணவன் முன்னிலையில் யோனி யில் கிரனெட் வைத்து வெடிக்கச் செய்த 'கோணேஸ்வரி முருகேசு', முதலானவரைப் பாடும் இக்கவிதை, வீச்சு மிக்க ஈழத்துக் கவிதைகளில் ஒன்றாகும்.*

**" காலப்பொழுதுகள் பலவற்றில்**
**வீதி வேலி ஓரங்களில்**
**நாற் சந்திச் சந்தைகளில்**
**பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்.**
**நாய்,கரடி,ஓநாய்**
**கழுகு,பூனை,எருதாய்ப்**
**பல வடிவங்கள் அதற்குண்டு.**
**தந்திக் கம்பத்தருகே**
**கால் தூக்கியபடிக்கு**
**என்னை**
**உற்றுக் கிடக்கும்**
**அம் மிருகம் துயின்று**
**நாட்கள் பலவாகியிருக்கும்.**
**அதன் கண்கள்**
**நான் அறியாததோர்**
**மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று**
**அவற்றின்**
**பாலைத்தாகம்**
**அறியாப் பாஷையை**
**எனக்குள் உணர்த்திற்று.**
**அழகி மன்னம் பேரிக்கும்**
**அவள்**
**கோணேஸ்வரிக்கும்**
**புரிந்த வன்மொழியாகத்தான்**
**இது இருக்கும் என**
**அவதியாய் எட்டிக்**
**கடந்து போனேன்."**

*இத்தடத்தில் எழும் கே.சுதாஜினியின் பிறிதொரு கவிதை பாலியல் வல்லுறவுக்குட் பட்டு சிதைக்கப்பட்டு நலிவடைந்த பெண் ணின் உள்ளத்தை பதிவு செய்கிறது.*

**" ஒழுங்கையில் திடீரென**
**நாய் குரைக்கும் சத்தம்**
**அது**
**அசதாரணமாயிருந்தது**
**யன்னலூடே பார்க்கிறேன்**
**படலைக்கருகில் "ஓநாய்க்கூட்டம்"**
**பத்துப் பன்னிரெண்டென**
**அவை**
**என்னை**
**நான் எதனுள் மறைக்க ....**
**என் தனிமையில் களி கொண்டு**
**வெடுக்கென என்னில் பாய்ந்தன ஓநாய்கள்**
**குரல்வளையும் வறண்டு போய்**
**அதிர மறுத்தது**
**ஆனாலும் விக்கித்துக் கதறினேன்**
**ஓநாய்கள் தம் முன்னங்கால்களால்**
**என் கன்னங்களை**
**அறைந்தன**
**தலை கிறுகி வந்தது**
**கணங்கள் இருண்டு போக**
**என்னுடல்**
**இழுத்துச் செல்லப்படகிறது என்**
**இருட்டறைக்குள் ....**
**நான் நினைவிழக்கிறேன் ....**
**என்னுடலெங்கும் காயங்கள்**
**அசைக்க முடியவில்லை**
**கிழிந்த உதடுகளிலிருந்து குருதி**
**வடிந்தது**
**சிதைந்த என் உடலங்களை**
**ஒருங்கு சேர்க்கிறேன்**
**மெதுவாய் நிமிர்ந்து**
**சுவரில்**
**சாய்கிறேன்**
**நான் கிடந்த இடம்– அது**
**குருதியில் நனைந்திருந்தது**
**என் இதயம்**

**அனலாய்க் கொதிக்க**
**கண்ணீர்**
**அதன் வடிகாலாய் வழிந்து**
**உதட்டுக் குருதியை**
**கழுவிச்**
**சென்றது "**

விபரணப் பாங்கில் அமையும் இக்கவிதை ஈழத்தில் நடந்த துன்பியலின் வடுக்களை நடப்பியல் வாழ்வுக்கூடாக எடுத்துரைக்கிறது. குரூர வெறியாட்டுக் குட்பட்ட பெண்ணின் உடல் வலிகளுடன் கவிதையை படிப்போன் மனதைத் தைக்கும் வண்ணம் எடுத்துரைக்கிறது. மரபு-களை உடைத்து பெண்ணுணர்வுகளை மையப்படுத்தி எழுந்த இக்கவிதை அச்சம் தரும் சூழலில் நிகழ்காலப் பெண்ணின் இருப்பை ஆவணப்படுத்திக் காட்டிய கவி தையாகும்.

ஒக்டோபரில் வந்து விழுந்த கவிதைகள் என்னும் தலைப்பில் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையில் ஆகர்சியாவால் எழுதப்பட்ட கவிதைகள் அனைத்தும் ஈழதேசத்தின் ஒரு காலகட்டத்தின் நிகழ்கால பதிவுகளே ஆகும். வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் போராடும் ஈழப் பெண்ணின் அன்றாட வாழ்வியலை இக்கவிதைகள் எடுத்துரைக் கின்றன.

**"ஷெல்களிலும் சொல்களிலும்**
**சிதறிப் போகின்ற வாழ்க்கையை**
**குனிந்து தடவுகின்றேன்**
**பிரிவு சொல்லிப் போனது**
**பஸ் வண்டி**
**காதிற்குள் குடைந்தன**
**துயர ஓலங்கள்**
**இருப்பென்றும் இறப்பென்றும்**
**பச்சோந்தி முகம் காட்டும்**
**நாட்களின்**
**மார்பில் உதைத்து**
**அடிமரம் பற்றி அழுகின்றேன்**
**தழுவி அணைப்பனவோ**
**வேட்டொலிகள்"**

துயர் படிந்த பூமியின் துன்பியல் குரலாய் ஒலிக்கும் இக்கவிதை நிதர்சன வாழ்வின் வரலாற்றுச் சுவடுகள்.

உயிர்குடிக்கும் எறிகணைத் தாக்குதல் களாலும் துப்பாக்கிகளின் வெடியோ சைகளாலும் அதிர்ந்து கொண்டிருக்கும் ஈழ தேசத்தில் தன் குழந்தைகளுக்கு நிசப்தமான இனிய காலைப் பொழுதைக் கூடக் காட்டமுடியாத ஏக்கம் அம்புலியின் ஏக்கம் 'தேடி அலைவாய்" கவிதையில்,

**'ஒரு அழகிய காலையை**
**உனக்கு காட்ட முடியாத**
**வசந்த காலத்தில்**
**விளையாட முடியாத**
**பாலைவன நாட்களையே**

உனக்கு பரிசளிக்கிறேன்" என்னும் அடிகளிற்கூடாக வாழ்வியலின் நடப் பியலாக வெளிப்படுகிறது.குழந்தைக்கு காட்ட முடியாத காலை மைதிலி அருளையாவின் 'ஒவ்வொரு காலையிலும்' கவி தையில் படிமங்களுக்கூடான துயரியின் சாட்சியாய் அன்றாட கொடுநிகழ்வின் பதிவாய் துலங்குகிறது.

**" ஒவ்வொரு இரவிலும் கவியும்**
**சோகை பிடித்துப்போன கருமையைக்**
**கரைத்த படி பிழியப்பிழிய அழுது சோர்ந்து**
**முகம் வெளிறிய குழந்தையாய்த் தோன்றும்**
**காலை"**

இயற்கையைக்கூட பார்க்க முடியாத ரசிக்க முடியாத துர்ப்பாக்கிய சூழலில் யுத்தம் மனித உணர்வுகளைச் சிதைக்கிறது. மனித உறுப்புக்களை காவுகொள்கிறது. ஷெல்லுக்கு இரையாகி குண்டடிபட்டு அங்கவீனப்பட்ட கால்களைப்பாடும் உதயலட்சுமியின் (அம்புலி) குரல் ஈழதேசத்

# திரும்ப முடியாத நகரம்

**தீபச்செல்வன்**

என் நகரத்தின் கடைசித் தருணம்
அதுவென நினைத்திருக்கவில்லை.
உன்னை முத்தமிடுகிறபோது
அது கடைசி முத்தமெனவும் நினைத்திருக்கவில்லை.
போருக்கான வார்த்தைகள்
எழுதப்பட்ட நகரத்தில் உன்னை
தனியே விட்டு வந்தேன்.

எப்படி பிரிந்து போயிற்று என் தெரு?
இழப்பின் கொடுமையை
நீதான் முழுமையாகச் சுமந்திருப்பாய்.
நான் உன்னை இழந்து
தனிப் பறவையாய் வீசப்பட்டேன்.

நமக்கு மேலால் நின்ற நாவல் மரம்
முறிந்து போனதை
நீ எனக்குச் சொல்லாமலே விட்டிருந்தாய்.
நிழலற்றுத் திரிகிறதை
நான் காணமுடியவில்லை.
நாம் நாவல் மரத்தை இழந்திருக்க
அது வௌவால்களை இழந்துபோயிற்று.

விமானங்கள் வீடுகளைக்
கவ்விக்கொண்டு போகிறதாக
நான் கனவு கண்டெழும்புகையில்
நீ நமது நகரத்தில் இருந்து
துரத்தப்பட்டாய்.

காலையென்பது இழப்புடன்
தொடர்ந்து விடிகிறது.

எனது பேருந்து திரும்பவில்லை.
காத்திருப்பில் நீ அலைகிற துயர்மிகு
தெருக்களில் நான் திரும்பவில்லை.
போர் உன்னை
என்னிடமிருந்து பிரித்துவிட்டது
யாரிடம் நான் சொல்ல.

உன்னை ஷெல் தின்றுவிட்டது.
ஆயுதங்கள் மேலும் குவிக்கப்படுகையில்
போர் தொடரப்படுகிறபோது
வரைபடங்கள் மேலும்
அவதானிக்கப்படுகிறபோது
நம்மைக் குறித்து என்ன இருக்கிறது?

உன்னிடமும்
நமது காதல் நகரத்திடமும்
நான் திரும்பப்போவதில்லை.
திரும்பாத நகரத்தை
நாம் இழந்துவிட
நகரம் நம்மை இழந்திருக்கிறது.
நகரமிட்ட முத்தம்
இன்னும் காயாமலிருக்கிறது.

*தின் ஒரு கால கட்டடத்தின் நிகழ்காலப்பதிவு ஆகும்.*

**‘எத்தனை களங்கள்**
**கண்ட என் கால்கள்**
**செத்தநிலை போல**
**சவமாகிக் கிடக்கிறதே’**
**வேதனையின் ரணங்களைப்பாடும்**
**அம்புலியின்**
**குரலைப் போன்று**
**‘அம்மா**
**இன்று நான்**
**உன்னிடம் வந்த போது**
**வீட்டு முற்றத்தில் பதித்த என்**
**பாதச்சுவடு காத்து வை**

நாளை நான்
வருவேன் என்பது
என்ன நிச்சயம்"

என நாளைய பொழுதில் மரணத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் பெண் போராளியின் பதிவாய் ஒலிக்கும் மன்னார் ரூபி மார்க்கிரட்டின் குரலும் நவீன தமிழிலக்கியத்துக்குப் புதியதே.

ஈழத்தில் போர் ஏற்படுத்திய தாக்கம் கொடூரமானது. போரின் வாழ்வில் பலி கொள்ளப்பட்டவர்கள் அநேகர். போர்க்கால அமைதியில் அச்சமும் பீதியும் மனித வாழ்வை வாட்டி,வதைத்த அக்கொடூர கணங்களை நிணமும் சதையுமாக ஆழியாளின் 'சின்னப்பாலம்' என்னும் கவிதை பதிவு செய்கிறது.

'போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்
ஐந்துவிரல் கொண்டு அறைந்து
கிடந்தது.

சின்னப் பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும்
கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும்,
சுழியோடும் நீர்க் கோழிகளும்,
அவற்றில் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசன முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறலிகளும்,
குறட்டை பெட்டியான் மீன்களும்,
கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனித கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன ....
சண்டை சச்சரவின்றி சமாதானத்துடனே"

போருக்குப்பின்னரான அமைதியை ஆழமான படிமத்துக்கூடாக விளக்கும் இக்கவிதை நவீனத்தமிழ்க்கவிதைகளில் தனித்துவமானது.

போரினால் உடமையிழந்து, உரிமையிழந்து, வலியிழந்து, அடிமையாய், ஏதுமற்ற ஏதிலிகளாய் வாழும் வாழ்வைக் காட்சிப்படுத்தும் கவிதைகளும் பெண்களால் பாடப்பட்டுள்ளன.

"அவள் அரசின் வன்செயலால் அகதியாகி வந்திட்டாள் தொற்று நோய்களின் இருப்பிடம் நோய்க்காவிகளின் உறைவிடம் வயிற் றுப்பசியின் வாழ்விடம் இதுவே இவள் வதிவிடம் அகதிகளின் நிவாரணம் அரை வயிற்றுக்கு அடங்காமல் போனதால் அரைவாசி அவிந்த மீனை ஆவலுடன் புசிக்கின்றனர் எரியும் வயிற்றுக்குள் புதைக்கின்றனர் "

கவிதை அலங்காரத் தன்மை கொண்ட அதீத வார்த்தைகளுக்கூடாகக் கட்டுண்டாலும் ஈழத்தில் இயங்கும் பெரும்பாலான அகதிமுகாம்களின் உண்மைத்தன்மையை இக்கவிதை காட்சிப் படுத்துகிறது.

2002 இல் தொடங்கப்பட்ட சமாதான பேச்சுகள் தொடச்சியற்று நின்றுபோய்விட, நிம்மதியில்லா வாழ்க்கை மீண்டும் தொடரப்போவதை எண்ணி கலங்கும் பெண் உள்ளத்தை நாகபூஷணி கருப்பையாவின் 'மெல்ல மெல்ல'என்னும் கவிதையில் காணலாம்.

"சந்தோசமாயிருந்த
மனங்கள் மீது
மெல்ல மெல்ல
பதற்றம் தடவியது.

**திடீரென்று சமாதானப் பேச்சுகள்**
**இடை நிறுத்தப்பட்டது.**
**படுக்கையில்**
**கனவொன்று**
**முன் கூட்டியே**
**நிழலாய் தொடர்ந்தது**
**....நடுக்கம் வந்து..என்**
**உடம்போடு ஒட்டியது.**
**மீண்டும் –**
**என் நிம்மதி**
**காணமல் போய்விடுமோ**
**என்று"**

ஈழத்து நவீன கவிதைகள் புறநானூற்று வீரத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. "கெடுக சிந்தை கடிதிவடுணிவே" என்னும் ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் வரும் தாய் முதிய மறக்குடியில் பிறந்தவள். இவளின் தந்தை யானையைக் கொன்று தானும் மாண்டவன். இவளது கணவன் நிரை-களைப் பகைவர் கவர்ந்து செல்லாதவாறு தடுத்து மாண்டவன். அச்சமயம் போருக்கு எழுமாறு பகைவரின் பறையொலி கேட்கிறது. மறப்புகழ்பாற் விருப்பம் கொண்ட அப்பெண் தனக்கிருந்த ஒரே-யொரு புதல்வனைக் குடும்பியில் எண்ணை வைத்து வெள்ளிய ஆடையுடுத்தி, போருக்கு அனுப்புகிறாள். இத்தாய்க்கு நிகர்த்த வீரத்தை அ.காந்தாவின் "எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த"என்னும் கவி தையில் காணலாம்.

**" அவனை விதைத்த**
**அடுத்த கணம்**
**அதோ அடுத்தடுத்துள்ள**
**கல்லறைகளை நோக்கி**
**ஓடின கால்கள்.**
**கண்ணீர் பூக்களைத்**
**தூவின கைகள்.**
**எந்த மகனுக்காய்**
**என் கால்களை நகர்த்த?**
**நேற்று விதையுண்டு போன**
**மூத்தவனுக்கா?–இல்லை**
**இப்போதுதான்**
**விதைக்கப்பட்ட என்**
**இளைய குஞ்சுக்கா?"**

இழப்புக்களைத் தாங்கித் தாங்கி நிமிர்கிறது நம் தேசம். இன்று உள்ளவன் நாளையில்லை. மண்ணுக்காக மரணித்தவன் மாண்ட பின்னரும் வாழ்கிறான். துயரத்தை நெஞ்சில் ஏந்தி கண்ணீரை விழியில் சேர்த்து தொடர்கிறது சண்முகநாதன் கலைமகளின் பயணம்.

**"நேற்றுவரை**
**கண்ணெதிரே நின்று**
**கதை பேசிச் சிரித்த முகம் இன்று**
**காவியமாய்ப் போனது.**
**நிஜமும் நிழலாகிப் போக**
**நீங்க முடியாத**
**நினைவுகளால்**
**நிறைக்கப்பட்ட**
**இதயத்தின்**
**விழி வழியே**
**நினைவின் துளிகள்**
**......இன்னமும் இரண்டு**
**மணித்துளிதான்.**
**நேற்றைய உன்னைப்போல்**
**இன்று உன்னருகில்**
**நான்.**
**கந்தகச் சுமையை**
**கட்டியணைத்தபடி**
**உன் தடம் பட்ட**
**மண்ணெடுத்து**
**முத்தமிட்டு**
**இலக்கு நோக்கி**
**தொடர்கிறது**
**என் பயணமும்"**

உடலில் வெடி குண்டினைக் கட்டிச் செல்லும் உன்னத ஆத்மாவின் பதிவும்

பார்வையுமாக வெளிப்படும் இக்கவிதை தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியது. படிப்போர் மனங்களில் கண்ணீரைச் சொரியச் செய்யும் இக்கவிதைகள் நெய்யப்பட்டவையல்ல. இதயத்திலிருந்து வார்க்கப்பட்டவை.

தற்கொடைப் போராளிகளுக்கு கல்ல றைகள் கிடையாது. அவர்களின் சடலங்கள் உரிமை கோரப்படுவதில்லை. சுவடு தெரியாமல் அவர் இருப்பு மறைக்கப்படும். இவ்வாறு தற்கொடைப் போராளியாய்ப் போய் உடல் சிதறி வெடியுண்டு சிதைந்து கிடக்கும் தோழியைப் பாடும் பெயரிடப்படாத நட்சத்திரங்கள் என்னும் கவிதை உள்ளத்தை உடைய வைக்கிறது.

**"அன்பான தோழி**
**நீயும் இல்லை**
**உனக்கு கல்லறையும் இல்லை**
**கண்ணீர் விட்டு**
**அழமுடிந்தும்**
**பெயர் சொல்லி அழ முடியவில்லை.**
**தோழி!உன் சாதனை உன்னதம். .....**
**பெயரிடாத நட்சத்திரமே!**
**பல்லாயிரம் நட்சத்திரங்களில்**
**உன்**
**பிரகாசம் மட்டும்**
**என் கண்ணைப் பறித்துக் கதை**
**சொல்லுகின்றது...."**

பெண்ணுடல், பெண்மொழி என் னும் கருத்துருவங்கள் வலுவடைந்த நிலையில் நுட்பமான வார்த்தைப் படிமங்களுக்கூடான அனுபவ உலக மாக விரியும். ஃபஹீமா ஜஹானின் கவி தைகள் முஸ்லீம் தமிழ் இனத்துவத்தின் உறவுப்பாலமாகும். இஸ்லாமிய அடிப் படைவாதத்திலிருந்து விலகி தமிழ்த் தேசியத்தின் ஆதரவுக் குரலாய் விளங்கும் ஃபஹீமா ஜஹானின் கவிதைகள் போரின்வலி, அடக்குமுறைக்கெதிரான தார்மீகக்கோபம், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, மனிதமனங்களுக்கிடையிலான உறவு முதலானவற்றைப் பேசுகின்றன. சிறந்த குறியீட்டு உத்திகளைக் கையாண்டு தமிழ்க்கவிதைகளை நவீன தளத்துக்கு இட்டுச் சென்ற கவிதா ஆளுமைகளுள் ஒரு-வரான ஃபஹீமா ஜகான் தமிழருக்கெதிரான ஒடுக்குமுறைகளையும் அவர்களின் வாழ் வியல் அவலங்களையும் பாடியவர். விடுதலைப் போராட்டத்தின் தீவிரப் போக்குகள் தமிழ் முஸ்லிம்களிடையே விரிசலை ஏற்படுத்திய காலப் பகுதி யில் தமிழ் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர். விடுதலைப் போரில் தன்னுயிர் ஈந்த போராளியைப் பாடும் ஒரு கடல் நீரூற்றி என்னும் கவிதை ஈழத்தின் நிகழ் காலப்பதிவுகளில் ஒன்றாகும்.

**"அலையெழுப்பும் கடல் பரப்பினில்**
**உனக்கான பணி முடிக்கவென விடை**
**பெற்றுப்போனாய்**
**வாழ்த்தச் சொல்ல வாயெழவுமில்லை**
**ஆரத்தழுவிட**
**நீ**
**விரும்பவுமில்லை**
**வெளியே பெய்த மழை என் கன்னங்களில்**
**– வழிந்தோட**
**மழைப்புகாரினூடே மறைந்து போனாய்**
**திரைகடல் சென்ற திரவியமானாய்**
**ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது... நீ**
**திரும்பி வரவே இல்லை**
**இன்று வீரர்கள் துயிலும் சமாதிகள் மீது**
**காலத்துயரின் பெருமௌனம்**
**கவிழ்ந்துள்ளது**
**சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவளே !**
**இங்கு ஏதுமற்ற உன்கல்லறையில்**
**ஒரு கடல் நீருற்றி நிரம்பிடவோ"**

வீரம் நிலத்தை ஆக்கிரமித்தது. நிலத்தை வென்றது. உயிர்களைப் பலி குடித்து உடல்களைச் சிதைத்த போதும்

வீரம் பேசப்படும். அன்று தொடக்கம் இன்றுவரை அது வரலாற்று உன்னதமாகச் சித்திரிக்கப்படும். இவ்வகையில் ஆனை யிறவு வெற்றி மகத்தான வெற்றியாக கருதப்பட்டு 'ஆனையிறவு" என்னும் கவி தைத் தொகுப்பை ஈழத்துக்களித்தது. வீரத்தின் வலிகளைத் தாங்கி உப்புக்காற்றுத் தழுவிய சாலையில் 'ஆனையிறவு" எழுந்து நிற்பதை அலையிசையின்

**'ஆக்கிரமிப்புச் சின்னங்களைத் தாங்கிய பூமி**
**உலகறியக் கூவும் பிரச்சார விளைநிலம்**
**வெறித்தனத்தின் உச்சம் சிதற விழித்திருந்தது.**

(ஆனையிறவு, பக் 41) என்னும் எழுச்சிமிக்க வரிகள் காட்சிப்படிமங் களுக்கூடாக உயிரோட்டம் பெறுகின்றன.

யுத்தம் ஏற்படுத்தும் உணர்வும் வலியும் கொடுமையானவை. வன்மம் கொள்ளும் இக் கொடியயுத்தம் தவிர்க்கப் படவேண்டும். ஒடுக்கு முறையையும் போரியலையும் தாண்டிப் புதிய வெளிகள் திறக்கப்படுவதுடன் போரற்ற நிம்மதியான வாழ்வை அவாவிநிற்கும் கவிதைகளை இக்காலத்துக் கவிஞர்கள் கோரி நின்றனர். பிற்காலத்தில் எழுந்த ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள் பல, போரின் மீதான கடும் விசனத்தைப் பாடின

**"யுத்தம் எனக்குப் பிடிக்கவில்லை**
**குண்டுமழைக் குளிப்பில்**
**குருதியுறைந்த வீதிகளில்**
**நிணவாடை கலந்த சுவாசிப்புக்களில்**
**வெறுப்படைகின்றேன்.....**
**மனிதர்களின் கோரச் சாவு கண்டு என்**
**மனம் குமுறுகின்றது**
**துப்பாக்கி முழக்கத்திடையே**
**விழித்துக்**
**கொள்ளும் ஒவ்வொரு காலையையும்**
**என்னால் ரசிக்க முடியவில்லை**
**வசந்தம் கருகிப்போன வருடங்களாய்**
**விரிந்துள்ளது எம் வாழ்வு...."**

'நான் எப்போதும் மரணிக்கவில்லை' என்னும் அம்புலியின் இக்கவிதை வசந் தத்தைக் கருகச் செய்த யுத்தத்தை எள்ளி நகையாடுகிறது.

பெண்ணியத்தின் தீவிரப்போக்கைக் கருத்தாடல்களுக்கூடாக உள்வாங்கிய பெண் கவிஞைகள், போர் ஏற்படுத்திய வலி, உணர்ச்சி, அதன் தாக்கம் ஆகியவற்றை ஆழமான மொழிச்சொல்லாடல் படிமக், குறியீட்டுக் கருத்துருவாக்கங்களின் வழி அனுபவங்களை, நவீன கவிதை களாக உருவாக்கினர். இக்காலப்பகுதியில் இலக்கிய மீட்டுருவாக்கத்தின் மூலம் பெண்ணிற்கான ஒரு புதிய வெளியை ஈழத்தின் போரியல் கவிதை திறந்தது. இங்கு பெண் மொழி என்பது ஒடுக்கப்பட்ட பெண்ணுடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு, ஆகியன உள்ளிட்ட அகநிகழ்வுகள் சார்ந்து உருவாகின்றது. பொதுவாக தான் சார்ந்த சூழலோடு முனைப்பு பெறும் இப்பெண் மொழியானது பிரத்தியேக மனப்படிமங்களுக்கூடாகப் பால்சார்ந்த தனித்த அடையாளங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. ஈழத்தின் பெயரிடப்படாத நட்சத்திரங்களின் வாழ்வியல் சுவடாக ஒளிர்ந்து, தனித்துவமான உணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் பதிவு செய்யும் இக்கவிதைகள் சமுதாய வாழ்வு பற்றிய தெரிநிலை விழிப்பினை ஊட்டிநிற்பவை. நிலை பிரமாணமாய் எழுந்து என்றும் எப்போதும் அழியாது நிலைத்து நிற்பவை.

❍ ❍ ❍

சிறுகதை

# அரசனின் ஆயுதம்

உமா வரதராஜன்

மூடுண்ட அந்த நகரத்துக்கு அரசன் வரும் நாள் அண்மித்துக் கொண்டிருந்தது. யுத்தத்தில் இடிந்து போன கோயிலைக் கட்டும் பணிகளை ஆரம்பித்து வைக்க அவன் வருவதாகச் சொன்னார்கள். அரசனின் வருகை பற்றிய அறிவிப்புக்களை உடம்பில் ஒட்டிக்கொண்டு எருமைகள் எல்லாம் நகரத்து வீதிகளில் அலைந்து திரிந்தன. முரசுகள் சந்து பொந்துகளெங்கும் சென்று அதிர்ந்தன.

ரத்த ஆற்றின் கரையில் அந்த நகரம் இருந்தது. சிறு காற்றுக்கு உரசி, தீப்பற்றி எங்கும் மூளும் மூங்கில்கள் நிறைந்த நகரம் அது. கடைசி யுத்தம் மூன்று வருஷங்களின் முன்னால் நடந்தது. யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, வாட்கள் ஒன்றோடொன்று உரசுமொலி, மனிதர்களின் அவலக்குரல் எல்லாம் இன்றைக்கும் செவிகளில் குடியிருந்தன. அப்போதைய பிணங்களின் எரிந்த வாடை இன்னமும் அகலாமல் நகரத்தின் வானத்தில் தேங்கிப் போய் நின்றது. அண்மைக் காடுகளை உதறி விட்டு பிணந்தின்பதற்காக இங்கே வந்த பட்சிகள் யாவும் பெரிய விருட்சங்களில் தங்கி இன்னொரு தருணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தன. கூரையிழந்த வீடுகள், கரி படிந்த சுவர்கள். அந்நகர் தன் அழகு முகத்தின் மூக்கை இழந்த விதம் சொல்லும். ஆந்தைகளின் இடைவிடாத அலறல்களுடனும், நாய்களின் அவ்வப் போதைய ஊளைகளுடனும் நகரத்தின் இரவுகள் கழிகின்றன. முகிலுக்குள் பதுங்கிக்கொண்ட நிலவு வெளியே வருவதில்லை. பால் கேட்டுக் குழந்தைகள் அழவில்லை. நடு இரவில் குதிரைகளின் குளம்பொலிகளும் சிப்பாய்களின் சிரிப்பொலிகளும் விட்டு விட்டுக் கேட்கும். நெஞ்சறை காய்ந்து, செவிகள் நீண்டு, கூரையில் கண்களைப் புதைத்துப் பாயில் கிடப்பான் ஊமையன்.

ஊமையனும் இன்னம் சிலரும் அந்த நகரத்தில் எஞ்சியிருந்தனர். உயிர் தப்பிய சிலரும், உயிர் தப்பப் பலரும் ஆற்றைக் கடந்து வேறு பகுதிகளுக்குச் சென்றார்கள். கரையில் நின்று கையசைத்த பெண்களின் கண்களில் துளிர்த்த நீரில் அந்தப் படகுகள் மறைந்து போயின. ஊமையனுக்கு அம்மாவை விட்டுப் போக மனமில்லை.

ஊமையனின் உண்மையான பெயர் பலருக்கு மறந்து போய்விட்டது. அதிகம் எதுவும் பேசாததால் அவனுக்கு அந்தப் பெயர் வந்தது. அவன் பேச்சு எவ்விதம் மெல்ல மெல்லக் குறைந்தது என்பது பற்றி அம்மா அறிவாள்.

கலகக்காரர்களை ஒடுக்க இந்த நகரத்துக்கு அரசன் அனுப்பிய படையுடன் கூடவே ஆயிரமாயிரம் பிணந்தின்னிக் கழுகுகளும் தம் சிறகுகளால் சூரியனை மறைத்த படி இங்கே நுழைந்தன. கோயிலின் சிலை, பெண்களின் முலை, குழந்தைகளின் தலை என்ற வெறியாட்டம். மதயானைகள் துவம்சம் செய்த கரும்புத் தோட்டமாயிற்று, அந்நாட்களில் இந்த நகரம்.

ஊமையனும் ஒரு நாள் பிடிபட்டவன்தான். முகத்து மயிரை மழிக்க அவன் வைத்திருந்த சவரக்கத்தி கூட ஓர் ஆயுதம்

எனக் குற்றஞ் சாட்டி, அவனுடைய கைக-ளைப் பின்புறம் கட்டி, பாதணிகள் இல்லாத அவனைக் கொதி மணலில் அழைத்துச் சென்றனர், நடு வெயிலில் நடுத்தெருவில் முழங்காலில் நிற்க வைத்து சூரிய நமஸ்காரம் பண்ணச் சொன்னார்கள். வாயில் கல்லைத் திணித்து, வயிற்றில் குத்தினார்கள். 'அம்மா' என்ற அவனுடைய சத்தம் கல்லைத் தாண்டி வெளியே வரவில்லை.

மாலையில், வெறிச்சோடிய தெரு வழியாகத் தளர்ந்த நடையும், வெளி-றிய முகமுகமாக ஊமையனும் இன்னும் சிலரும் நகரத்துக்குத் திரும்பி வந்தனர். மரணத்தின் தூதுவன் மறுபடியும் கைதட்டிக் கூப்பிடுவான் என்ற அச்சத்தில் திரும்பிப் பாராமல் நிழல்கள் இழுபடத் தள்ளாடித் தள்ளாடி அவர்கள் வந்தனர். தெருமுனையில் அவர்கள் தோன்றியதும் பெண்கள் ஓட்டமும் நடையுமாக அவர்களிடம் வந்தனர். ஓடி ஓடி ஒவ்வொரு முகமாகத் தேடி அலைந்தனர். வராத முகங்கள் தந்த பதற்றத்தில் நடுங்கினார்கள். ஒப்பாரி வைத்து அழுதார்கள். 'என்ன நடந்தது, என்ன நடந்தது' என்று ஓலமிட்டார்கள். தனதப்பன் போய்ச் சேர்ந்து விட்டான் என்ற சேதி தெரியாமல் ஒருத்தியின் இடுப்பிலிருந்த குழந்தை விரல் சூப்பிச் சிரிக்கின்றது. 'என்ன நடந்தது, என்ன நடந்தது' என்று இன்னொருத்தி ஊமையனின் தோளைப் போட்டு உலுக்கி ஒப்பாரி வைக்கின்றாள். பேய்க் காற்றின் உரசலில் கன்னியர் மாடத்தின் சவுக்கு மரங்கள் இன்னும் துயரத்தின் பாடல்களைப் பரப்புகின்றன.

வாழ்வதற்கான வரமும் அதிர்ஷ்டமும் தனக்கிருப்பதாக எண்ணி ஒரு சிறு கணம் உள்ளம் துள்ளிய சிறுபிள்ளைத்தனத் துக்காக வெட்கப்பட்ட ஊமையன் தன் தலைமேல் கத்தி தொங்கும் வாழ்க்கை விதிக் கப்பட்டிருப்பதை மெல்ல உணர்ந்தான். மௌனத்தில் அவன் காலம் நகர்ந்தது. வீட்டுக்குள் முடங்கிய அவனை நான்கு சுவர்களும் நெரித்தன. வீட்டின் கூரை பல சமயங்களில் நெஞ்சில் இறங்கிற்று. ஒளியைத் தவறவிட்ட தாவரம்போல ஊமையன் வெளிறிப் போயிருந்தான். தேவாங்கின் மிரட்சியுடன் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பகலிலும் இரவிலும் கனவுகளில் அலைந்தான். கண்கள் தோண்டப்பட்ட, நகங்கள் பிடுங்கப்பட்ட மனிதர்கள் 'எங்களுக்கோர் நீதி சொல்' என்று தள்ளாடித் தள்ளாடி அங்கே வந்தனர். அரைகுறையாக எரிந்த தெருச் சடலங்கள் வளைந்தெழுந்து 'நாங்கள் என்ன குற்றம் செய்தோம்' என்று முனகின. நீர் அள்ள உள்ளே இறங்கிய வாளியைக் கிணற்றுள் கிடந்த பிணங்களிலிருந்து கையொன்று மெல்லப் பற்றிக் கொண்டது. கழுத்தை இழந்த கோழியொன்று துடிதுடித்து உயிரைத்தேடி அங்குமிங்கும் அலைந்து மண்ணில் சாயும். குட்டித் தாய்ச்சி ஆட்டின் வயிறு மீது குதிரை வண்டிச் சக்கரங்கள் ஏறிச் செல்லும். மயிர் உதிர்ந்த தெரு நாய்களின் வாய்கள் மனிதர்களின் கையையோ காலையோ கவ்வி இருக்கும்.

ஊமையனின் கனவில் அரசனும் வந்திருக்கின்றான். சாந்த சொரூபனாய் கடைவாய் கெழிந்த புன்னகையுடன் அந்தக் கனவில் அவன் வந்தான். கடைவாய் கெழிந்த இந்தப் புன்னகைக்குப் பின்னால் முத லைகள் நிறைந்த அகழியும், நச்சுப் பாம்புகள் பதுங்கிக் கொண்ட புற்றொன்றும், விஷ விருட்சங்களைக் கொண்ட வனாந்தரமும் ஒளிந்திருப்பதாகப் பலர் பேசிக் கொண் டனர். இதைப் போல் அரசனைப் பற்றிப் பல கதைகள்: வெண்புறாக்களை வளர்ப்பதில் அவன் பிரியம் கொண்டவன் என்றும், மண்டையோடுகளை மாலை யாக்கி அணிவதில் மோகமுள்ளவன் என்றும் ஒன்றுக்கொன்று முரணான கதை கள், பல நூற்றாண்டுகள் மண்ணுக்குள்



யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த தன் முன்னோரின் கிரீடத்தைக் கண்டெடுத்துத் தலையில் சூடிக்கொண்டான் அவன் எனவும், செல்லுமிடமெல்லாம் சிம்மாசனத்தையும் கொண்டு திரிந்தான் என்றும் காற்றில் வந்தன பல கதைகள்.

அரசவை ஓவியர்கள் வெகு சிரத்தையுடன் உருவாக்கியிருந்த அந்தப் புன்னகை சிந்தும் முகத்துடனேயேதான் ஊமையனின் கனவிலும் அரசன் வந்தான். கோவில் மணிவிட்டு விட்டொலிக்கின்றது. பாட்டம் பாட்டமாக வானத்தில் பறவைகள் அலைகின்றன. வேதம் ஓதுகின்றனர் முனிவர்கள். அது ஒரு நதிக்கரையோரம். பனி அல்லது புல்வெளியில் அரசன் வெண்ணிற ஆடைகளுடன் தன்கையிலிருந்த வெண்புறாவைத் தடவியபடி நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் ஊமையன். சௌந்தர்யத்தைக் கண்டு சூரியன் கூடச் சற்றுத் தயங்கித் தடுமாறி வந்த ஓர் இளங்காலை.

அரசன் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

'மேகங்கள் அகன்று கொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சநேரம்.... கொஞ்ச நிமிஷம்.... வெளிச்சம் வந்து விடும்...

அரசனின் குதூகலமான மனநிலை ஊமையனுக்கு ஓரளவு தைரியத்தைக் தந்தது.

'அரசே வெளிச்சம் வருவதற்குள் நாங்கள் இறந்து விடமாட்டோமா.... இப்போதும் என்ன, நாங்கள் நடைபிணங்கள் போல அல்லவா உள்ளோம்?'

ஊமையனைத் திரும்பிப் பார்த்து அரசன் சிரித்தான்.

'போர் என்றால் போர்.... சமாதான மென்றால் சமாதானம்....'

ஊமையன் வார்த்தைகளை மென்று விழுங்கிச் சொன்னான்.

'போர் என்றால் ஒரு தர்மமில்லையா அரசே? குடிமக்கள் செய்த பாவம் என்ன? சிசுக்கள், நோயாளிகள், முனிவர்கள், பெண்கள் இவர்களைக் கொல்வது யுத்த தர்மமா?'

அரசன் புன்னகைத்தான். 'தேர் ஒன்று நகரும் போது புற்கள் புழுக்கள் பற்றி முனகுகின்றாய் நீ.... எனக்குத் தெரியும்... எல்லாம் தெரியும்....'

'நீங்கள் மனது வைத்தால் எதுவும் முடியும். எதுதான் முடியாதது?' என்றான் ஊமையன்.

அரசனின் நடை திடீரென்று நின்றது. 'ஆம்.... நான் நினைத்தால் எதுவும் சாத்தியம்.... இதோ பார்!' என்றான் அவன். அரசனின் கையிலிருந்த வெண்புறா சட்டென்று மாயமாக மறைய, முயலின் அறுபட்ட தலை ரத்தத்தில் தோய்ந்து அங்கேயிருந்தது.

அரசனின் வருகை நெருங்க நெருங்க நகரம் அமர்க்களப்பட்டது. அரச காவல் பரண்கள் புதிது புதிதாய் முளைத்தன. இரவு பகலாய் வேலைகள் நடந்தன. சவக்கிடங்குகளின் முன்னால் பூச்செடிகள் நட்டு நீரூற்றினார்கள். இலையுதிர் காலம் நிரந்தமாகிவிட்ட இந்த நகரத்தின் வாயில் களில் வேற்றூர்களிலிருந்து மரங்களை வேர்களுடன் பெயர்த்துக் கொணர்ந்து நட்டார்கள். நூறு வருஷத் தொடர் மழையாலும் கழுவ முடியாத ரத்தக்கறை கொண்ட மதில்களுக்குப் புதுவர்ணம் பூசினார்கள். புன்னகை சிந்தும் அரச னின் ஓவியங்கள் சுவரெங்கும் நிறைந்தன. சோதனைச் சாவடிகளில் மாட்டு வண்டிகள் நீளத்துக்கு நின்றன. கொட்டும் மழை-யில் ஆடைகள் நனைய, பொதிகளைத் தூக்கித் தலையில் வைத்தபடி மௌன-மாக ஊர்ந்தனர் ஜனங்கள். நாக்குகளை நீட்டச் சொல்லி அங்கே புதைத்திருக்கக் கூடிய அரச விரோதச் சொற்களை அவர்கள் தேடிப்பார்த்தனர். நகரத்துக்கு வேளை தெரியாமல் வந்து விட்ட பசுவொன்றின் வயிற்றைக் கீறி அதன் பெருங்குடலை ஆராய்ந்து பார்த்தனர். எருமையின் குதத்தினுள்ளும் கைவிட்டு ஏதேனும் கிடைக்குமா என்று துழாவினார்கள். மீசை யில் நுரை அகலாத கள்ளுக்குடியர்கள் தம்பட்டம் அடித்து வீதிகளில் ஆட்டம் போட்டனர்.

**"கோயில் தந்தான்**
**எங்கள் மன்னன் கோவில் தந்தான்**
**இன்னுந்தருவான்**
**கேட்கும் எல்லாம் தருவான்.**
**தில்லாலங்கடி.... தில்லா.....**
**பிச்சைப் பாத்திரம் இந்த.....'**

திண்ணையிலிருந்த ஊமையனின் தாத்தா இடிப்பதை நிறுத்திவிட்டுப் பாட்டு வந்த திக்கைப் பார்த்தார். பார்வை தெரியாத அவருக்கு ஓசைகளே உலகம். கள்ளுக்குடியனின் பாடல் தாத்தாவுக்குக் கோபத்தைத் தந்திருக்க வேண்டும். கையு ரலில் இருந்த வெற்றிலையை வேகமாக இடித்தவாறிருந்தார்.

'கோவிலைத் தருகிறானாமே. மறுப-டியும் இடிக்க அவனுக்கு எவ்வளவு நேரமாகும்?' என்று முனகிக் கொண்ட தாத்தா மேலே எதுவும் பேச விரும்பாமல் வெற்றிலையை வாய்க்குள் போட்டுக் கொதுப்பிக் கொண்டார்.

அரசன் வருவதற்கு ஒருதினம் இடை யிலிருந்தது. கண்ணயர்ந்து கொண்டிருந்த தாத்தா குதிரைகளின் கனைப்பொலியால் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். வீட்டு வாசலுக்கு வந்த பெண்கள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு மறைந்தனர். பதற்றத்துடன் வந்த அம்மாவை ஊமையன் வெறித்துப் பார்த்தான். அம்மாவின் உதடுகள் உலர்ந்து, விழிகள் வெருண்டிந்தன. வானத்தை அண்ணாந்து பார்த்து இருகைகளாலும் கும்பிட்டாள்.

வழக்கம்போல் எல்லாம் நிகழ்ந்தன. அந்தக் குடியிருப்பின் ஒவ்வொரு வீட் டினுள்ளும் சிப்பாய்கள் நுழைந்து புறப்பட்டனர். ஊமையனை அவர்கள் காட்டிச் சென்றபோது அம்மா என்னென் னவோ சொல்லி அழுது பார்த்தாள். மனித பாஷை புரிந்த குதிரைகள் மாத்திரம் தலை கள் அசைத்துக் கனைத்துக் கொண்டன. சிப்பாய்களை நோக்கிக் குரைத்தவாறு, ஊமையனின் கால்களை மறித்தபடி தெருமுனைவரை வந்தது அவனுடைய நாய். சிப்பாய்கள் அதை எட்டி உதைத்து விரட்டினார்கள். பிடிபட்ட ஆண்களின் பின்னால் பெண்கள் தங்கள் வாய்களிலும், வயிறுகளிலும் அடித்துக் கொண்டு பெருங்குரலில் ஒப்பாரி வைத்துத் தொடர்ந்து சென்றனர். குதிரை வீரர்கள் அவர்கள் பக்கமாக ஈட்டிகளை ஓங்கி அச்சுறுத்தி விரட்டினார்கள். குதிரைகள் கிளப்பிய புழுதிப் படலத்தினூடாகத் தங்கள் ஆண்பிள்ளைகள் சென்று மறை

வதைத் தெருமுனையில் செய்வதறியாது நின்று விட்ட பெண்கள் கண்டனர். சுவரில் முதுகை முட்டுக் கொடுத்தபடி நின்ற தாத்தா அங்கு நின்றவர்களுக்கு ஆறுதல் தரும் விதத்தில் சொன்னார். 'ஒன்றும் ஆகாது..... நாளைக்கு அரசன் வருகிறான் அல்லவா? அதற்குக் கூட்டம் சேர்க்கிறார்கள்......' சுவரிலிருந்த பல்லியொன்று அவ்வேளை பார்த்துச் சத்தமிட்டது தாத்தாவுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

பிடிபட்ட அனைவரும் நகரத்து சத்திரங்களில் அடைக்கப்பட்டனர். இவர்களைப் போன்றே சுற்றியுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப் பட்டவர்களால் சத்திரங்கள் நிரம்பி வழிந்தன. ஒருவரோடு ஒருவர் பேசா-மல் பழுக்கக் காய்ச்சித் தங்கள் தலை களில் இறக்கப்பட்ட விதியை எண்ணி நொந்தவர்களாகஅங்குஎல்லோருமிருந்தனர். சிப்பாய்களின் சிரிப்பொலி ஏளனத்தின் அம்புகளாக அவ்வப்போது இவர்களின் காதுகளில் இறங்கிற்று. ஊமையன் அந்தக் குளிர்ந்த சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டான். இருள் நிறைந்த பலிபீடத்தில் வெட்டரிவாள் ஒன்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. நரி போல் ஊளையிடும் காற்றில் சுருக்குக் கயிறொன்று அங்குமிங்குமாக அசைந்து ஊஞ்சலாடுகின்றது. கழுத்துவரை மண்ணில் புதையுண்ட அவனை நோக்கி யானைகளின் தடித்த பாதங்கள் மூர்க்கத்துடன் முன்னேறி வருகின்றன. அவனுடைய நிர்வாண உடம்பில் புதிது புதிதாய் ரத்த வரிகளை எழுதுகின்றன சாட்டைகள். கனவுமற்ற நினைவுமற்ற இரண்டுங்கெட்டான் பெரு வெளியில் அவனுடைய வீடும் வந்தது. கூட்டிப் பெருக்காத வாசலில் வாடிய பூக்களும், சருகுகளும் கிடக்கின்றன. உற்சாகமிழந்த நாய் வாசற்படியை மறித்துப் படுத்திருக்கின்றது. சாம்பல் அள்ளாத அடுப்படியில் சோம்பல் பூனை, சமை யலறையில் குளிர்ந்து போயிருக்கும் பாத்திரங்கள். ஒரு கருநிற வண்டைப் போலச் சுவர்களிலே முட்டி மோதித் திரிவார் தூக்கம் வராத தாத்தா. உண்ணாமல், உறங்காமல் கண்களின் ஈரம் காயாமல் அம்மா சுருண்டு கிடப்பாள். நிமிஷங் களைப் பெரும் பாறைகளாய்த் தன் தலை யில் சுமந்து இருட்டின் பெருங் காட்டில் அலைந்தான் ஊமையன். சத்திரத்துக் கதவு திறபட்டதும் உள்ளே புகும் காற்றுக்காகவும் வெளிச்சத்துக்காகவும் அவன் விழி மூடாமல் காத்துக் கிடந்தான்.

விடிந்தது, வெளிச்சத்தை முந்திக் கொண்டு கதவு வழியாகச் சிப்பாய்களின் தலைவன் உள்ளே நுழைந்தான்.

'ஏய் எழும்புங்கள்... எழும்புங்கள்' என்று அதட்டினான்.

அவர்களை ஏற்றிக் கொண்டு நகரத்து வீதிகளில் மாட்டு வண்டிகள் விரைந்து சென்றன. மாட்டுவண்டியின் தொடர்ச்சியான 'ஜல் ஜல்' சத்தத்தைக் கேட்டு அங்காடித் தெரு வணிகர்கள் அப்படியே நின்றார்கள். எண்ணெய் வழியும் முகங்களுடன், தூக்கம் நிறைந்த கண்களுடன், வாரப்படாத தலைகளுடன், பசி கொண்ட வயிறுகளுடன் உலகத்தின் மிகக் கேவலமான விலங்குகளைப் போல இப்படிப்போவது உமையனுக்குப் பெரும் வெட்கத்தைத் தந்தது. இடியுண்ட கோயி லின் அருகிலிருந்த குளக்கரையில் அனை-வரும் இறக்கப்பட்டனர். சிப்பாய்களினால் வரிசையாக அமர்த்தப்பட்டனர்.

வானம் இருண்டிருந்தது. மழை-யையும் அரசன் கையோடு கூட்டி வந்து விட்டதாகச் சிப்பாய்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

'ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ கம்பீர....' என்று ஒரு குரல். திடீரென வாத்தியங்கள் முழங்கின. மகுடி வாத்திய விற்பன்னர்கள் நகரத்துச் சிறுமிகளை நெளி

யும் பாம்புகளாக்கி ஆட்டுவித்தார்கள். கள்ளுக்குடியர்கள் கால்கள் நிலத்தில் படாது குஸ்தியடித்தவாறு வந்தனர். பின்னால் அரசன் வந்து கொண்டிருந்தான். முனிவர்கள் தாடிகளை மீறிய புன்னகையுடன் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

உயரமானதோர் இடத்தில் அமைக்கப் பட்டிருந்த பந்தலை அடைந்த அரசன் அனைவருக்கும் கையசைத்தான். தொண்டை பெருத்த கவிஞர்கள் அந்தக் குளிர் வேளையிலும் பனையோலைச் சுவடி களால் அரசனுக்கு சாமரம் வீசினார்கள். அரசவைக் கவிஞரின் நாவிலிருந்து பனிக்கட்டிகள் கொட்டியவாறிருந்தன. ஒருபக்க மீசையை மழித்துக் கொண்ட எடு-பிடிகள் அரசனின் பின்புறமாக உட்கார்ந்து, அவனுக்கு அரிப்பெடுக்கையில் முதுகைச் சொறிந்து கொடுத்தனர்.

ஊமையன் அண்ணாந்து பார்த்தான். கறுப்பு ஆடையைக் கழற்றி வீசி, அம்மணங் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தது வானம். வானத்துப் பறவையொன்றின் எச்சம் போல ஒரு சொட்டு ஊமைய னின் முகத்தில் முதலில் விழுந்தது. பின்னர் வேகமான பல சொட்டுகள். இரைச்சல் காற்று திசை காட்ட மழை தொடுக்கும் யுத்தம். பலத்த மழையின் நடுவே அரசன் பேச எழுந்தான். கொட்டுகின்ற மழை-யிலும் அசையாத மக்கள் அவனுக்கு வியப்பளித்திருக்க வேண்டும்.

‘என் உயிரிலும் மேலான மக்களே...’

மழையோசையை வெல்ல முயலும் அரசனின் குரல்.

குலை தள்ளிய வாழைகளாலும், குருத்தோலைகளாலும், செந்நிறப் பூக் களாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் நின்று மழையில் நனையாத அரசனின் குரல். ஊமையன் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தான். பேய் பிடித்த பெண்ணாகி வாயிலும், வயிற்றிலும், முதுகி லும், முகத்திலும் மாறி மாறி அறைகின்ற மழை.

“இடியுண்ட கோவிலைப் புதுப்பிக்க இன்றைக்கு வந்திருக்கின்றேன். இன்னும் என்னென்ன வேண்டும் சொல்லுங்கள்.”

காற்றும் மழையும் பதில் குரல் எழுப்பின. சிப்பாய்களின் ஈட்டிமுனைகளுக்கும் உருட் டும் விழிகளுக்கும் பயந்து அசையாமல் மௌனமாய் இருந்தனர் ஜனங்கள்.

“கொட்டுகின்ற மழையிலும் என்னைப் பார்க்க இவ்விதம் கூடியிருப்பது என்னை உணர்ச்சி கொள்ளச் செய்கின்றது. உங்களுக்கு என்ன வேண்டும். உடனே கேளுங்கள்.”

ஊமையன் மீண்டும் அண்ணாந்து பார்க்கிறான். வருண பகவான் பற்களை நற நறவென்று கடிக்கின்றான். நீரேணி வழியாக இறங்கும் அவன் கைகளில் மின்னல் சாட்டைகள். கழித்துச் சுழித்துப் பாதையெடுத்து ஓடுகின்றது தண்ணீர், நெருப்புப் பாம்புகள் வானமெங்கும் நெளிவதும்,மறைவதுமாய் ஜாலங் காட்டு கின்றன.

“மாட மாளிகைகள் கட்டித் தருகின் றேன். வீதிகளைச் செப்பனிட இன்றே. ஆணையிடுகின்றேன். குளங்களைத் திருத்தித் தரச் சொல்கிறேன். இன்னும் என்ன வேண்டும்? அரங்குகள் வேண்டுமா? நவ தானியங்கள் தேவையா? பட்டாடைகள் வேண்டுமா? என்ன வேண்டும் சொல்லுங்கள்... இவற்றை எல்லாம் நான் தரத் தயார்... ஆனால் ஒருபோதும்....”

அரசன் தன் வாக்கியத்தை முடிப்ப தற்குள் ஒரு பெரிய மின்னல். ஒரு பெரும் ஓசை. வானத்திற்கும் பூமிக்குமாகக் கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல்.

ஒரு கணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். கண்களைக் கசக்கிவிட்டு அவன் உயரத்தே பார்த்தான்.

பேசிக் கொண்டிருந்த அரசன் மாயமாக மறைந்து போயிருந்தான்.

# அ ல்லைப்பிட்டியிலிருந்து ய்ரோப்பாவரையில்



## பயணித்த இலக்கியப்போராளி ஷோபா சக்தி

**"எந்தவடிவில் அதிகாரம் மக்கள்மீது செலுத்தப்பட்டாலும் சமரசமின்றி எதிர்ப்பதே எழுத்தாளனின் அடிப்படை அறம்"**

**"தமிழ் இலக்கிய உலகில் தவிர்க்கமுடியாத பெயர் ஷோபா சக்தி. இலங்கை, இந்தியா மற்றும் புகலிட தீவிர வாசகர்களினதும் விமர்சகர்களினதும் மிகுந்த கவனிப்புக்குள்ளான இலக்கிய ஆளுமை. இலங்கையில் வடபுலத்தில் அல்லைப்பிட்டி கிராமம் இவரது பூர்வீகம். பலவருடங்களாக பிரான்ஸில் வாழ்ந்துவரும் ஷோபா சக்தி, இதழ்கள்,,இணையத்தளங்களில் தொடர்ந்து பேசப்படுபவர். விவாதங்களில் வீரியமுடன் ஈடுபடு–பவர். சிறுகதை, நாவல், நேர்காணல், விமர்சனம், பத்தி எழுத்து என பல்துறை ஆற்றல்மிக்கவர், தமிழ் திரைப்படத்துறைக்கும் வந்தவர். இவரின் கொரில்லா, தேசத்துரோகி, ம், வேலைக்காரிகளின் புத்தகம், எம்.ஜி.ஆர் கொலைவழக்கு என்பன வாசகர், விமர்சகர் புரப்பில் பேசப்பட்டவை. நான் எப்போது அடிமையாயிருந்தேன் என்ற நேர்காணல் தொகுப்பினையும், போர் இன்னும் ஓயவில்லை (பல இதழ்கள், இணையத்தளங்களில் வழங்கிய நேர்காணல்களின்) தொகுப்பையும் வெளியிட் டிருப்பவர். இவரது படைப்புகள் ஆங்கிலம் உட்பட பிற மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.**

**ஷோபசக்தியின் படைப்பாளுமைபற்றி முழுமையாகத் தெரிந்துகொள்வதற்கு பார்க்கவேண்டிய இணையத் தளம்:** www.shobasakthy.com

**ஞானம் இதழின் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழுக்காக ஷோபா சக்தியுடன் நடத்திய மின்னஞ்சல் உரையாடலை இங்கே பதிவு செய்கின்றோம்.**

சந்திப்பு: **முருகபூபதி**

**மு.பூ.: தங்களது படைப்புகளின் ஊடாகவே தங்களது சிந்தனைகளை வாசகர்கள் தெரிந்து கொள்கின்றனர். புலம்பெயர்ந்து வாழும் பல படைப்பாளிகளுக்கு மத்தியில் தாங்கள் மிகவும் துணிச்சலுடன் கருத்தாடலில் ஈடுபடுபவர். தங்களுடன் கருத்தியல் ரீதியாக முரண்படுபவர்கள் கூட தங்களின் படைப்புகளை விரும்பிப்படிப்பதாக அறிகின்றோம். ஈழத்து வாசகர்களுக்கு தங்களது எழுத்துலகப்பிரவேசம் பற்றிய (ஆரம்பகாலம்) தகவல்களைச் சொல்லுங்கள்?**

**ஷோபா:** மிகச் சிறிய வயதிலேயே எனக்குத் தமிழ் தேசியப் போராட்டத்தின் மீது ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. அரசியல் முழக்கங்களை உருவாக்கி சுவர்களில் எழுத ஆரம்பித்து, அரசியல் துண்டறிக்கைகள், கவிதைகள், நாடகம் எனப் பரப்புரை எழுத்துகளை எழுதியவாறே நான் எழுத்துத் துறைக்குள் நுழைந்தேன். பரப்புரை எழுத்துகள் என்பதற்கு அப்பால் தீவிர இலக்கியம் நோக்கி நகருவதற்கு ஏதுவான நிலைமைகள் அப்போது என் சூழலில் இருக்கவில்லை.

எனது இருபத்தைந்தாவது வயதில் பாரிஸ் வந்தேன். இங்கே 'புரட்சிக் கொம்யூனிஸ்ட் கழகம்' என்ற சர்வதேச ட்ரொட்ஸ்கிய அமைப்போடு தொடர்பு ஏற்பட்டது. அமைப்போடு இணைந்திருந்த

# நேர் காணல்

அந்த நாட்களில் செவ்வியல் இலக்கியங்களும் நவீன இலக்கியங்களும் எனக்குக் கட்சித் தோழர்கள் மூலமாக அறிமுகமாயின. அந்த நாட்களில் நான் அரசியலில் மாத் திரமல்லாமல் கலை இலக்கியத்திலும் கட்சியால் பயிற்றுவிக்கப்பட்டேன். பீற்றர் ஸ்வாட்ஸ், நிக் பீம்ஸ், ஸ்டீவ், ஞானா போன்ற மிகச் சிறந்த ஆளுமைக-ளிடம் கற்றுக்கொள்ளவும் விவாதிக்கவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. கட்சித் தோழர்களுடனான விவாதங்கள், உரை யாடல்கள் மூலம் நான் எனக்கான எழுத்தைக் கண்டடைந்தேன்.

**மு.பூ.: புலம் பெயர்ந்து சென்ற பின்னரே தாங்கள் எம்மவர் மத்தியிலும் ஏனையோர் மத்தியிலும் (பிறமொழிகளில் தங்கள் படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டதனால்) நன்கு அறி-முகமானவர். தங்கள் இலக்கியப்பிரதிகள் தொடர்பாகவும் கருத்துக்கள்பற்றியும் வெளியா-கும் எதிர்வினைகளுக்கு முகம் கொடுக்கும்போது தங்கள் உணர்வுகளை வீச்சான மொழிகளில் வெளிப்படுத்துகிறீர்கள். அதனால் தங்களது உணர்வுகளின் பின்புலம் (அரசியல் ரீதியாகவும்) பற்றிச்சொல்ல முடியுமா?**

**ஷோபா:** தேசியம், இனம், சாதி, மொழி போன்ற எந்த வடிவில் அதி-காரம் மக்கள்மீது செலுத்தப்பட்டாலும் சமரசமில்லாமல் அதை எதிர்த்து நிற்க வேண்டும். இதுவே எழுத்தாளனுக்கான அடிப்படை அறம். நிறுவப்பட்டிருக்கும் நீதி அமைப்பும், சட்டங்களும், தத்துவங்களும், தேசியம் குறித்த கற்பிதங்களும், பொதுப் பண்பாடும் இச் சமூகத்தின் பெரும்பான்மை மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திணிப்புகள் தேசியத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் கலாசாரத்தின் பெயராலும் இனவுணர்வின் பெயரா லும் சமூகத்தின் பொதுப்புத்தியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் இவை குறித்து கேள்வி எழுப்புபவர்கள் மிகச் சிறுபான்மையினரே. எனவே கேள்வி எழுப்பும் சிறுபான்மையினர் மீது பெரும்பான்மைப் பொதுப்புத்தியின் அதிருப்தி இருந்தேயாகும். அந்த அதிருப்தி சப்பைக் குற்றச்சாட்டுகளாகவும் சிலவே ளைகளில் அவதூறுகளாகவும் வெளிப் படும். கேள்வி எழுப்புபவர்கள் மீது பொது அவமானமும் சமூகப் புறக்கணிப்பும் நிக ழும். இது ஒரு கருத்துப் போராளி தனது எழுத்துக்காகக் கொடுத்தேயாக வேண்டிய விலை.

நாங்கள் எங்களுக்காக மட்டுமல்லாமல் எங்கள்மீது நிராகரிப்புகளையும் அவ தூறுகளையும் கொட்டுபவர்களுக்காகவும் சேர்த்துத்தான் அதிகாரத்திடம் கேள்வி களை எழுப்புகிறோம் என்ற எங்களது உறுதியான நம்பிக்கைதான் எங்களது துணிச்சலுக்கும் எங்களது வீச்சான கருத்துப்போருக்குமான அடிப்படை.

**மு.பூ: தமிழர்கள் யூத இனத்தவர்கள் போன்று தங்களுக்கென ஒரு நாட்டை உருவாக்கிக் கொள்ளத்தவறிவிட்டார்கள் என்று தமிழ் புத்தி ஜீவிகள் சொல்லிவருகின்றனர். இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக வாழ முடியாதா? இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

**ஷோபா:** சிங்களப் பெரும்பான்மை இனத்துடன் ஏனைய சிறுபான்மை இனங்கள் ஒற்றுமையாகச் சேர்ந்து

வாழ்வதென்பது சிங்கள இனத்தவர்களின் கைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சிங்கள மக்களுக்குள்ள அரசியல், பொருளியல், பண்பாட்டு உரிமைகள் ஏனைய இனங்களிற்கும் நீதியுடன் பகிரப்பட்டால் மட்டுமே ஒற்றுமை சாத்தியமாகும். சிறுபான்மை இனங்களின் தனித்துவமான மொழியும் பண்பாடும் பாரம்பரிய நிலமும் பெரும்பான்மை இன அரசால் சிதைக்கப்படக் கூடாது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனங்களின் மீது இன வெறுப்பைக் கக்குவதை நிறுத்துவதே இனங்களிற்கிடையேயான ஒற்றுமைக்கான முதல் நிபந்தனை.

தமிழர்களோ மற்றைய சிறுபான்மை இனங்களோ பெரும்பான்மை இனத்தின்மீது அரசியல் ஐயுறவு கொள்ளவும் பிரிந்து செல்வது குறித்து யோசிக்கவுமான காரணங்களை இலங்கை இனவாத அரசுகளே உருவாக்கின. அந்தக் காரணங்கள் இன்னும் அப்படியேதானுள்ளன.

இப்போது ‘இணக்க அரசியல்’ என்றொரு சொல்லாடல் சில தமிழ் அரசியற் தரப்புகளால் முன்வைக்கப்படுகிறது. அரசுடன் இணங்கி மக்களிற்கான அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள். அரசிடமிருந்து அபிவிருத்தித் திட்டங்களையும் சமூகநல உதவிகளையும் பெறுவது மக்களது அடிப்படை உரிமை. அதைச் செய்து கொடுக்க வேண்டியது அரசுடைய கடமை.

இந்த அபிவிருத்திட்டங்களிற்காக அரசினுடைய இனவாதப் போக்கைக் கண்டுகொள்ளாமலிருப்பதும் அரசுடைய அராஜகங்களின் முன் வாய் பொத்தி நிற்பதும் இன்னுமொரு படி கீழிறங்கி இலங்கை அரசுக்கு இடதுசாரிப் பாத்திரத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாராட்டுப் பத்திரத்தையும் இந்த இணக்க அரசியலாளர்கள் வழங்குவது மக்களுக்குச் செய்யும் மோசமான துரோகமாகும். இணங்கி வாழ்வதற்கும் அடிமைகளாக வாழ்வதற்கும் நிறைய வேறுபாடுகளுள்ளன. கைகளில் விலங்குடன் இன்னொருவருடன் கைகளைக் குலுக்கிக்கொள்ள முடியாது.


முருகபூபதி

**மு.பூ.: இன்றைய அவலத்திற்கு அரசுகளும் ஆயுதம் ஏந்திய இயக்கங்களும்தான் காரணம்எனில், ஒருபடைப்பாளி என்ற முறையில் அவலங்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் விடுபடுவதற்கும் மீண்டும் பேரவலங்கள் தோன்றாதிருப்பதற்கும் தங்களது கருத்துக்கள் என்ன?**

**ஷோபா:** இலங்கைத் தீவின் இன முரண்களையும் இனங்களிற்கு இடையிலான பரஸ்பர சந்தேகங்களையும் அதிருப்திகளையும் ஒருபோதும் ஆயுதத்தாலோ இராணுவ நடவடிக்கைகளாலோ போக்கிவிட முடியாது என்பதைப் போராடும் சிறுபான்மை இனங்கள் மட்டுமல்லாமல் ஆளும் தரப்பும் பெரும்பான்மை இன மக்களும் விளங்கிக்கொள்வது முக்கியமானது.

இலங்கையின் புவியியல், பொருளியல், பண்பாடு எனத் தீர்க்கமாகச் சிந்திக்கையில் இலங்கை வரலாற்றுரீதியாகவே இந்திய வல்லரசின் கீழேயே இருக்கிறது. இலங்கையின் இறையாண்மை சுயாதீனமானதல்ல. இந்த அரசியல் உண்மையை நாம் கசப்புடன் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

இலங்கையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமெனில் அதற்கு இந்திய அரசினது முழுமையான ஒப்புதல் கிடைத்தேயாக வேண்டும். இனப் பிரச்சினையில் சிங்களவர்களும் தமிழர்களும் இஸ்லாமி

யர்களும் மட்டுமல்லாமால் இந்திய ஆட்சியாளர்களும் ஓர் அசைக்க முடியாத தரப்பே என்ற உண்மையை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கை - இந்திய உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்படுவதும் மாகாணசபைகளிற்கு காணி, காவற்துறை உள்ளிட்ட முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு ஓரளவுக்காவது அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதுமே இன முரண்களைக் களைவதற்கான சரியான தொடக்கமாக இருக்க முடியும்.

மாறாக இலங்கை அரசு வடக்குக் கிழக்கில் காணி பிடிப்பதாலும், போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் மீது கழிவு எண்ணெய்யை ஊற்றுவதாலும், வெள்ளை வான் கடத்தலாலும், கட்டாயக் குடியேற்றங்களாலும் இனச் சனத்தொகை வீதாசாரங்களை மாற்றியமைப்பதன் மூலமும் இனப்பிரச்சினையை முடித்துவிடலாம் என நினைக்கிறது. இதுதான் இலங்கைத் தீவின் நிரந்தரப் பேரவலம்.

**மு.பூ.: அண்மைய காலங்களில் தமிழகத்திற்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் பின்னணியில் தொழிற்படும் காரணங்கள் எவையாயிருக்கும் எனக் கருதுகிறீர்கள்?**

**ஷோபா:** ஈழத் தமிழர்கள்மீது உள்ள அக்கறையால்தான் இத்தகைய வன்முறைக்கான எத்தனிப்புகளோ வன்முறைகளோ நிகழ்கின்றன என்பதை நான் முற்றாக நிராகரிக்கிறேன். ஈழத் தமிழர்கள் மீது இந்த வன்முறையாளர்கள் உண்மையிலேயே அக்கறை கொண்டவர்களாக இருந்திருப்பின் வன்னியில் மக்கள் புலிகளால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த போதும், தப்பியோடிய மக்களைப் புலிகள் சுட்டுக்கொன்ற போதும் இந்த வன்முறையாளர்கள் புலிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்திருப்பார்கள். மாறாக இந்த வன்முறையாளர்கள் இன்றுவரை புலிகளின் புகழ் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வன்முறையாளர்களிடம் இருப்பது வெறும் புலியபிமானம் மட்டுமே. அதை ஈழத் தமிழர்கள் மீதான அக்கறையாக விளங்கிக்கொள்ளத் தேவையில்லை.

தமிழகத்திலுள்ள இத்தகைய வன்முறைக் குழுக்களிற்கு ஈழத்து அரசியலின் வரலாறோ, உள்ளார்ந்த பிரச்சினைப் பாடுகளோ தெரிவதில்லை. தமிழர்களிற்கும்

எந்த வகை இலக்கியமெனினும்
அது நடுவுநிலையோடு இருக்க
வேண்டும். அரசியலில்
நடுவு நிலைமை என்பது
எந்தப் பக்கமும் சாராது
இருத்தலல்ல.
எந்தச் சந்தர்ப்பத்திலும்
உண்மையை மறைக்காது
பேசுதலே அரசியல்
நடுவுநிலைமை.





# தேடி அடைவாய்

– அம்புலி

**பசுமைப் போர்வையிழந்து**
**சாம்பல் கவிந்த**
**மேனிய ளாயுள்ளேன்.**
**மாரிக் குளிரில் நனைந்திடினும்**
**தனல் பூத்துக் கிடக்கிறதெனதுள்ளம்.**
**துன்பத்துக்கும் துயரத்துக்கும் நடுவில்**
**உன்னை வாரியணைக்க முடியாத**
**தாயானேன் நான்.**

**ஒரு அழகிய காலையை**
**உனக்குக் காட்ட முடியாத**
**வசந்த காலத்தில்**
**விளையாட முடியாத**
**பாலைவன நாட்களையே**
**உனக்குப் பரிசளிக்கின்றேன்.**
**எந்த நேரமும் வீழ்ந்து வெடித்து**
**உயிர் குடிக்கும் எறிகணைக்குள்**
**முகில் கலைத்து வானிரையும்**
**எமதூதப் பறவைகளின்**
**வருகைகளிற் கிடையில்**
**துப்பாக்கி வெடியோசையின்**
**சத்தங்களுக்கிடையில்**
**எப்படி என்னால்**
**இனிமையை உனக்குத் தரமுடியும்.**
**என்னால் பரிசளிக்க முடியாத வாழ்வை**
**நீயே சென்றடைவாய்!**
**விழிகளில் சிவப்பும்**
**இறக்கைகளில் நெருப்பும்**
**உனக்குச் சொந்தமாகட்டும்.**
**எம்மை வேகவைத்த காலம்**
**உன்னால் வேகிச் சாம்பலாகட்டும்.**
**ஒரு புதிய வாழ்வு**
**உன் கரங்களிலே பிறக்கட்டும்.**

**(எழுதாத உன் கவிதைத் தொகுப்பிலிருந்து..)**

சிங்களவர்களிற்கும் கூட அவர்களுக்கு வேறுபாடு தெரியவில்லை.

இந்தக் குழுக்களுடைய அரசியல் பண்பு என்னவென்பதை அறிய தமிழக அரசியலிலும் தமிழக மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளிலும் இவர்கள் என்ன நிலைப்பாடுகளை எடுக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனித்தாலே தெரியும். அப்பட்டமான வலதுசாரிகளாகவும் கலாசார அடிப்படைவாதிகளாகவுமே இவர்கள் அங்கு இயங்குகிறார்கள்.

இந்த வன்முறைகள் குறித்து தமிழகத்தின் சொற்ப மனிதவுரிமையாளர்கள் கவனமெடுத்திருப்பதும் கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பதும் நம்மைச் சற்று நிம்மதியடைய வைத்தாலும் இந்த வன்முறையை ஆதரித்து பலர் எழுதுவதும் பெரும்பாலானோர் மவுனம் சாதிப்பதும் அச்சத்தையூட்டுகிறது.

**மு.பூ.: போர்க்கால இலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும்? செய்திகளே வரலாறாகின்றன. வரலாறுகளே இலக்கியப்புனைவுகளுக்கு ஆதாரமாகின்றன. என்பதனால்தான் இந்தக் கேள்வியையும் தங்களிடம் கேட்கின்றோம்.**

**ஷோபா:** எந்த வகை இலக்கிய மெனினும் அது நடுவுநிலையோடு இருக்க வேண்டும். அரசியலில் நடுவு நிலைமை என்பது எந்தப் பக்கமும் சாராது இருத்தலல்ல. எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மையை மறைக்காது பேசுதலே அரசியல் நடுவுநிலைமை.

செய்திகளே வரலாறாகின்றன, வரலாறே இலக்கியப் புனைவுகளிற்கு ஆதாரங்களாகின்றன என்ற உங்களது 'பொயின்டை' நான் விளங்கிக் கொள்கின்றேன். செய்திகளாயிருந்தாலும் வரலாறாயிருந்தாலும் அவை அவற்றைக் கட்டமைப்பவரின் பார்வைக் கோணத்திலிருந்தே கட்டமைக்கப்படுகின்றன. ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு வரலாறுகள் சாத்தியமே.

எடுத்துக்காட்டாக ஒரு வரலாற்று நிகழ்வுக்கு மூன்று விதமான வரலாறுகள் வெவ்வேறு பார்வைக் கோணம் கொண்ட மூன்று தரப்புகளால் கட்டமைக்கப்படுகின்றன என வைத்துக் கொள்வோம். ஓர் இலக்கியவாதிக்கு இந்த மூன்று வரலாற்றுக் கோணங்களுமே முக்கியமானவை. இந்த வரலாறுகளின் அடிப்படையில் இலக்கியவாதியால் இன்னொரு வரலாறைக் கட்டமைக்க முடியும். அது நான்காவது வரலாற்றுக் கோணம். இலக்கியவாதியின் தரப்பு அது. எழுதப்பட்ட அல்லது சொல்லப்பட்ட வரலாற்றை அப்படியே பிரதியெடுப்பதல்ல இலக்கியம். வரலாற்றின் நுண் அலகுகளிற்குள் ஊடுருவி வரலாற்றை மறு ஆக்கம் செய்வதே படைப்பிலக்கியம். இலக்கியத்தை உபவரலாறு என்பார்கள்.

**மு.பூ.: நீங்கள் சிறுகதை, நாவல், பத்தி எழுத்துக்கள், விமர்சனங்கள் எழுதிவருபவர். 'செங்கடல் என்ற திரைப்படத்தில் தங்களது ஈடுபாட்டினையடுத்து தங்களுக்கு திரைப்படத்துறையிலும் ஈடுபாடு இருப்பதை அறிகின்றோம். இது குறித்துச் சொல்லுங்கள்.**

**ஷோபா:** சினிமாவுக்கும் இலக்கிய வாதிகளிற்குமான தொடர்பு புதுமைப் பித்தன் காலத்திலிருந்து இன்றைய எஸ். ராமகிருஷ்ணன் வரைக்கும் இருக்கிறது. இலக்கியவாதிகள் சினிமாவில் பங்கெடுப்பது மூலம் தமிழ் சினிமா ஒருபடி தன்னும் முன்னேறவேண்டும். ஆனால் சினிமாவுக்குள் நுழையும் இலக்கியவாதிகளும் வணிகச் சினிமா எனும் சகதிக்குள் மூழ்கிவிடுவதே இங்கே நடக்கிறது. முப்பது வருடங்களாக இலக்கியம் எழுதிவரும் சாரு நிவேதிதா ஒரு மகா கேவலமான திரைப்படத்தில் கண்ணிமைக்கும் நேரமே தோன்றி குத்துப்பாட்டிற்கு புட்டத்தை நெளிக்கும் அவலம்தான் இங்கே நடக்கிறது.

உலகச் சினிமாவைக் கரைத்துக் குடித்ததாகச் சொல்லும் ஒரு எழுத்தாளன் இவ்வாறா சீரழியவேண்டும். தமிழ்ச் சினிமா இன்டஸ்ரி என்பது வெறும் சந்தை. சந்தை விதிகளே அங்கே செல்லுபடியாகும்.

'செங்கடல்' திரைப்படம் சந்தைப் படுத்தும் நோக்கத்தை முதன்மைப் படுத்தாமல் தயாரிக்கப்பட்ட திரைப்படம். வணிக நிறுவனங்களின் கட்டுகளிற்குள் நிற்காமல் சுயாதீனமாக உருவாக்கப்பட்ட சினிமா அது. அந்தத் திரைப்படத்தின் கதை நேரடியாக அரசியலைப் பேசும் கதை. இராமேஸ்வரத்திலிருக்கும் ஈழத்து அகதிகள் குறித்தும் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள் குறித்தும் அந்தப் படம் பேசியது. வணிக மதிப்புள்ள அல்லது தொழில்முறை நடிகர்களைக் கொண்டல்லாமல் அகதிகளையும் மீனவர்களையும் நடிக்க வைத்து உருவாக்கப்பட்ட மக்கள் பங்கேற்புச் சினிமா 'செங்கடல்'. அதனால் தான் அத்திரைப்பட உருவாக்கத்தில் நான் பங்கெடுத்தேன்.

**மு.பூ.: தங்களது அல்லைப்பிட்டி கிராமம் பற்றி சொல்லுங்கள்? எப்போது தாயகம் திரும்புவீர்கள்?**

**ஷோபா:** எனது கிராமம் யாழ் நகரத்திலிருந்து மூன்றரைக் கிலோ மீற்றர் தொலைவிலிருக்கிறது. மிகவும் பின்தங்கிய தீவகக் கிராமம். யுத்தத்தால் அல்லைப்பிட்டிக் கிராமம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்

***என்மீது வீசப்படும் குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் ஷோபாசக்தி என்ற தனி நபர் மீது வைக்கப்படுவதில்லை. அந்த அவதூறுகள் மூலம் எனது அரசியல் நிலைப்பாடுகளையும் விமர்சனங்களையும் தாக்குவதும் திரிப்பதுமே அவதூறாளர்களது குறியாயிருக்கிறது.***

பட்டது. மூன்று மிகப்பெரிய கூட்டுப் படு கொலைகளை எனது கிராமத்தில் இராணுவம் செய்திருக்கிறது. இப்பொழுதும் எனது கிராமம் இராணுவத்தின் கைகளிலேயே இருக்கிறது.

தாயகம் திரும்ப வேண்டும் என்ற ஆசை மனதிற்குள் கனன்றுகொண்டேயிருக்கிறது. எனினும் சிங்கள ஊடகவியலாளர்களே மகிந்த ராஜபக்ச அரசுக்கு அஞ்சி வெளிநாடுகளிற்குத் தப்பி ஓடி வருகையில் நான் அங்கு செல்வது எவ்வளவு சாத்தியம் என்ற கேள்வி எனக்குள் இருக்கின்றது. ஏனெனில் ஒரு சுற்றுலாப் பயணியாகாவோ அல்லது வாய் பேசாப் பிராணியாகவோ இலங்கைக்கு வர எனக்கு விருப்பமில்லை. நான் அகதியாக அய்ரோப்பாவுக்கு வருவதற்கு என்ன காரணங்களிருந்தனவோ அதே காரணங்கள் இப்போதும் நீடிக் கின்றன.

அரசின் இத்தனை ஒடுக்குமுறைகளிற் கும் கண்காணிப்புகளுக்குள்ளும் இருந்து கொண்டு எந்த அரசியல் பின்பலமோ அமைப்புப் பலமோ இல்லாமல் உண்மை களை எழுதிவரும் தோழர்களை நான் மரியாதையுடன் வணங்குகிறேன். அவர்களை நான் தாயகத்தில் சந்திக்க வாய்ப்பிருப்பதைக் காட்டிலும் அவர்கள் என்னை அய்ரோப்பாவில் சந்திப்பதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளதாக நான் கருதுகி றேன்.

**மு.பூ.: தங்களது கருத்துக்களுக்கு எதிர்வினை யாற்றுபவர்களுக்கும் தங்கள் மீது பொய் அவதூறு கற்பிப்பவர்களுக்கும் பதிலடி கொடுப்பதற்காக அதிக நேரம் செலவிடுவதாகவும் அதற்காக உழைப்பதாகவும் வரும் விமர்சனங்களை பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

அத்தகையை விமர்சனங்களும் இத்தகையை கேள்விகளும் எப்போதும் என்மீது வைக்கப்படுகின்றன. நானும் ஒரே பதிலையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகி றேன். என்மீது வீசப் படும் குற்றச்சாட்டுகளும் அவதூறுகளும் ஷோபாசக்தி என்ற தனி நபர் மீது வைக்கப்படுவதில்லை. அந்த அவதூறுகள் மூலம் எனது அரசியல் நிலைப்பாடுகளையும் விமர்சனங்களையும் தாக்குவதும் திரிப்பதுமே அவதூ றாளர்களது குறியாயிருக்கிறது. அதை என்னால் அமைதியாக அனுமதிக்க முடியாதுதானே.

**மு.பூ.: உங்களது சில கருத்துக்களிலிருந்து நீங்கள் ஒரு ட்ரொஸ்கியவாதியாகவும் இனம் காணப்படுகிறீர்கள். ட்ரொக்ஸி குறித்து பல வாதப்பிரதிவாதங்கள் அரசியல் சிந்தனை யாளர்களிடமிருக்கின்றன. உங்களில் ட்ரொக்ஸியின் சிந்தனைகள் எத்தகைய தாக்கத்தை உருவாக்கின? அவரை நீங்கள் கீர்த்திமிக்கவராக கணிப்பதற்கு?**

**ஷோபா:** பொதுவுடமை இயக்க வர லாற்றில் கார்ல் மார்க்ஸிற்கு அடுத்ததாக கலை இலக்கியத்தின் மீது அக்கறை செலுத்திய மிகப்பெரும் ஆளுமை ட்ரொஸ்கியே. இலக்கியம் குறித்த அவரது சுதந்திரக் கோட்பாடுகள் எனக்கு இன்றும் வழிகாட்டுவன.

பொதுவுடமைத் தத்துவத்தைப் பொறுத்தவரை ட்ரொஸ்கியின் ‘நிரந் தரப் புரட்சி’ குறித்த கோட்பாடு மிக முக்கியமானது. இந்தளவுக்குத்தான் இப்போது ட்ரொஸ்கியத்தின் மீது எனக்கு ஈடுபாடுண்டு. ட்ரொஸ்கியின் எழுத்துகளையும் கடந்து வந்துதான் இன்றைய உலகமயமாதல் சூழலை அடித்தள மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, எமது சாதியச் சூழலில் அம்பேத்கரும் பெரி யார் ஈவெராவுமே அடித்தள மக்களின் விடுதலைக்கான முதன்மையான வழி காட்டிகள் எனக் கருதுகின்றேன். நமது சமூகத்தின் ஒவ்வொரு தனிநபருக்குமான முதன்மையான சமூக அடையாளம் வர்க்க அடையாளம் கிடையாது. அந்த அடை யாளம் அவரது சாதியாகவேயிருக்கிறது. எனவே சாதிய விடுதலை சாத்தியமில்லால் நமது சமூகத்தில் வேறெந்த விடுதலையும் சாத்தியமாகாது.

# உள்ளே எரியும் தீ

– அம்புலி

டொம் டொம் டொமர் தொடர்ந்து எறிகணைகள் வந்து விழுந்து கொண்டிருந்தன. *81 மி.மீ, 82மி.மீ* ஆட்டி என்று படையினர் வகை தொகையாய்ப் பீரங்கிகளை நிலைப்படுத்தி செறிவான சூடுகளை புலிகள் பக்கம் திருப்பியிருந்தனர்.

'ஷெல்' குத்தும் ஓசைக்குத் தலையைப் பதித்து பதுங்கு குழிக்குள் காப்பெடுத்தாள் நீலா. தொடர்ச்சியாக வந்தவையெல்லாம் அவளைக் கடந்தும், பக்கத்திலும் முன் னாலும் விழுந்தும் செம்பாட்டு மண்ணை கிளறி எறிந்து கொண்டிருந்தன. மழைக்குச் சேறாகிப்போன காப்பகழிக்குகள் வாழையிலைகளைப் போட்டு அதற்குள் ஏறியிருந்தபடி சூழலை அவதானித்துக் கொண்டிருந்தது அந்தக் காவும் குழு அணி.

"கவனம் எல்லாரும் றெஞ்சுக்குள்ள இருங்கோ, ஒருத்தரும் தலையை வெளியில காட்ட வேண்டாம்"

சோபனா ஓடிஓடி எல்லோரும் பத்திர மாக இருப்பதைப் பார்த்துவிட்டுத் தானும் காப்பகழிக்குள் நின்று வோக்கியில் வரும் தொடர்பை எதிர்பார்த்துக் கொண்டி ருந்தாள்.

மூன்று நாட்களுக்கு முன் உரும்பிராய் நோக்கி முன்னேறிவந்த படையினரை மறித்துச் செய்த முறியடிப்புச் சண்டைக் குப்பின்பு அணிகளில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப நீலாவும், கலையும் இன்னும் பத்துப்பேரும் அந்த இடத்திற்கு வந்திருந்தனர். நீண்ட நாட்கள் வேறு பிரிவுகளில் நின்றதால் சண்டைக்குரிய அணிகளில் காவும் குழுவில் அவர்கள் விடப்பட்டிருந்தனர்.

வந்து மூன்று நாட்களில் நல்ல சண்டை முட்டியது. அந்தச் சண்டைப் படைகள்தான் இப் போது எறிகணைகளைச் சரமாரியாக வீசிக்கொண்டிருந்தன.

"ஏய் தலையைப் பதி"

நீலா கலைக்குப் பேசிவிட்டுத் திரும்ப இவர்களுக்குப் பக்கத்தில் எறிகணை ஒன்று வந்து விழுந்தது.

"நல்லவேளை வெடிக்கேல்லை. இல்லையெண்டா நீ அல்லது நான்தான்"

கலை சிரித்துக்கொண்டாள். சோபனா வின் வோக்கி இரையத்தொடங்கியது.

"ரெண்டு பேர் றமணியின் பொயின்ர டிக்கு ஸ்ரெச்சரோட ஓடுங்கோ. கவனம்"

சோபனா கூற காத்திருந்தவர்கள்போல் கலையும், நீலாவும் காப்பகழியிலிருந்து வெளியேறிப் பாய்ந்து அருகிருந்த ஸ்ரெச்சரையும் தூக்கிக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக இருநூறு மீற்றர் தூரத்திலிருக்கும் றமணியின் பொயின் ரடிக்கு ஓடிக்கொண்டிருந்தனர்.

கிட்டடியில் ராங்கிகளதும், பவள்கள தும் உறுமல் கேட்டுக் கொண்டிருந்தது, வழியெங்கும் எறிகணைகள் விழுந்து வெடித்து மரங்கள் முறிந்து சிதறிக்கிடந்தன. கட்டிடங்களின் கொங்கிறிற்றுச் சிதறல்கள் வழியெங்கும் இறைந்து கிடந்தன. பாதைகளிலும், காணிகளின் வேலிகளை ஏறிக்கடந்தும் ஓடிக்கொண்டிருந்த நீலா

வின் 'பாட்டா' செருப்பு செம்பாட்டுச் சேற்றுக்குள்ளால் வர மறுக்கவே அதைக் கழற்றி எறிந்துவிட்டு ஒற்றைக்கால் செருப்புடன் ஓடினாள்.

கால்அந்தக்கலட்டித்தெருவின்கற்களில் இடறுப்பட்டு, வழியில் முறிந்துகிடக்கும் முள்முருக்கம் முட் களால் கீறுப்பட்டு எரிந்தது. ரமணி யின் பொயின்ற் மோட்டார் பொயின்ற. மோட்டார் எறிகணைகள் புலிகளின் அணிகளுக்கு ஆதரவுச் சூடுகளை தொடர்ந்து வழங்கி கொண்டிருப்பதால் அந்தத் திசையை இனங்கண்டு படையி-னர் சரியான இலக்குப் பார்த்து எறி-கணைகளைக் குவியப்படுத்தியிருந்தனர். நீலாவும், கலையும் இவ்விடத்துக்கு ஓடிவர முன்னுக்கிருந்த சண்டையணியிலிருந்து காயக்காரர்களையும், வீரச்சாவடைந்த வர்களின் உடல்களையும் வேறு காவும்குழு அணியினர் தூக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

மோட்டார்ப் பொயின்ரில் கோகிலா வின் உடல் சிதைந்து கிடந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்து தலையெங்கும் சிவப்பாகிக் கிடந்தது. இரத்தவாடை குப்பென்று நீலாவின் மூக்கினுள் நுழைந்தது. குனிந்து கோகிலாவின் உடலை சீர்படுத்தினர் கலை யும், நீலாவும், வெறுமனே தூக்கி வைக்க முடியாமல் இருந்தது இவளது உடல்.

சண்டைக்குப்போவதற்கான ஆயத் தமாக இடுப்பில் வரிந்து கட்டியிருந்த பச்சை 'பற்றிக்' சாரத்தை அவிழ்த்தாள் நீலா. அதனுள் கோகிலாவின் உடலை சேர்த்துக்கட்டி ஸ்ரெச்சரில் ஏற்றி தோளுக் குத் தூக்கினார்கள். கால்கள் ஓட்டம் எடுத்தன. பின்னுக்கிருக்கும் மருத்துவ ஆர்.வி தாண்டி வாகனம் வரும் பாதைக்கு அரை மைலுக்கு மேல் சென்று வாகனத்துள் ஸ்ரெச்சரை ஏற்றிவிட்டு அங்கிருந்து வேறு ஸ்ரெச்சரை வாங்கி முன்னுக்கு ஓடினர்.

அன்று இன்னும் ஆறேழு காயக்காரரை மாறி மாறி அனுப்பிவிட்டு உரிய இடம் செல்ல எத்தனிக்கையில் நிலைகள் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தன. முன்னரங்க நிலைகள் படையினரால் உடைக்கப்பட்டு, சண்டையிட்டவர்கள் காயப்பட்டும் வீரச் சாவடைந்தும் பின்னுக்கு அனுப்பப்பட, விரல்விட்டு எண்ணக்கூடிய மீதிப்பேர் கட்டளைப் பணியகத்தின் கட்டளைக்கிணங்க அடுத்த நிலைக்கு வந்து நிலையெடுத்தனர். சண்டை செய்த களைப்பும், இழந்தவர்கள் பற்றிய நினைவுகளும் அகலமுன்னர் மண்வெட்டியும் துப்பாக்கியும் அவர்களது பணிக்காய்க் காத்திருந்தன.

காயப்பட்டவர்களைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தவேளை எறிகணைகள் விழுந்து வெடித்தாலும் நல்லவேளை கலைக்கும், நீலாவுக்கும் காயம்படவில்லை. அவர்களது அணியில் இரண்டுபேர் காயப்பட்டு பின் நகர்த்தப்பட்டனர்.

அன்று விடியற்காலையில் ஆறு மணிக்குத் தொடங்கிய அமர்க்களம் முடிய பொழுது சாய்ந்துவிட்டிருந்தது. காலையிலிருந்து பச்சைத் தண்ணீர் கூட குடிக்க நேரமில்லை. இனி அடுத்த 'செற்றப்' பார்த்து, வருகின்ற சாப்பாடுகளை முன்னிருக்கும் அணிகளுக்குப் பகிர்ந்தளித்து கொடுத்துவிட்டுவர எப்பிடியும் பத்து மணியாகும். இரவென்றாலும் ஓய்வெடுக்க நேரமில்லை. காலெல்லாம் வலித்தது. கீறல்கள் பட்டு காயப்பட்டிருந்தது. இன்று வலி தெரியாது நாளை கால் தூக்க முடியாது. நீலா நினைத்துக்கொண்டாள். காயப்பட்டவர்களின் காலிலிருந்த ஒரு செருப்பை ஒருவாறு வாங்கிப் போட்டி ருந்தாள்.

ராதா பக்கத்திலிருந்த கிணற்றிலிருந்து கானுக்குள் தண்ணீர் அள்ளி வந்தாள். நீலாவும், கலையும் தொண்டைக்குழி நிரம்பும்வரை தண்ணீரைக் குடித்தனர். பசி

வந்ததாயும் இல்லை, வராத தாயும் இல்லை. சாப்பிட வேண்டும்போலவும்இல்லை. இரத்த நெடி மூக்கினுள் இன்னமும் இருந்தது. கைகள் இரண்டிலும் இரத்தம் காய்ந் திருந்தது. உடைகளிலும் திட்டுத்திட்டாக இரத்தம் காய்ந்து கிடந்தது. வானம் நன்றாக இருட்டிவிட்டது.

இரவுக்கான தூரவீச்சு எறிகணைகளை சூரியக் கதிர் ஒன்று படைகள் ஏவிக்கொண்டிருந்தனர். இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு அவை அவர்களைத் தாண்டி கோண் டாவில் சந்திக்கப்பால் எங்கோ போய் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

சோபனா எல்லோரையும் ஒன்றாக்கிப் புதிய நிலைகளை காப்பகழிகளை வெட்டுவதற் குரிய மண்வெட்டிகளைப் பிரித்துக் கொடுத் தாள்.

“ம்..... இனி இவன் அடுத்த மூவ் எடுக்க இன்னும் நாலஞ்சு நாட்கள் செல்லும் அதுவரைக்கும் வெட்ட வேண்டியதுதான்”

கலை சொல்லிக்கொண் டிருந்தாள். இருளின் கனத்த போர்வைக்குக்கீழ் அவர்க ளின் அணிகள் விழிப்போடு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் காலை அணிகள்ஒன்றாக்கப்பட்டன. இழக்கப்பட்ட ஆட் தொகை நிரபிட செய்யப்பட்டு



**மோட்டார்ப் பொயின்ரில் கோகிலாவின் உடல் சிதைந்து கிடந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்து தலையெங்கும் சிவப்பாகிக் கிடந்தது. இரத்தவாடை குப்பென்று நீலாவின் மூக்கினுள் நுழைந்தது. குனிந்து கோகிலாவின் உடலை சீர்படுத்தினர்..**

புதிதாகக் குழுக்கள் பிரிக்கப்பட்டன. நீலாவுக்குப் புதிய ஒன்பதுபேர் கொடுக்கப் பட்டு வோக்கியம், துப்பாக்கியும் கொடுக் கப்பட்டன. கலை சண்டை அணிகளோடு ஒருத்தியாக இணைக்கப் பட்டுவிட்டாள்.

“ஒருத்தரும் அங்க நிக்கப்போறன் இங்க நிக்கப்போறன் எண்டு கேக்காதேங்கோ. எல்லாரும் சண்டையிலதான் நிக்கிறியள். எல்லாரும் மாறி மாறி சண்டைக்குப் போக லாம். சண்டையில எல்லா வேலையும் சம-மானதுதான்”

வாயைமுதலிலேயே அடைக்குமாப் போல் பொறுப்பாளர் கதைத்துக் கொண்டிருந்தார்.

நீண்ட காலம் கலையோடு வெளியிலும் முதல் நாள் சண்டையிலும் ஒன்றாயிருந்த நாட்கள் வெவ்வேறாக்கப்பட்டுவிட்டன. இனி அவளை அடிக்கடி காணமுடி யாது. விழுந்து வெடிக்கும் எறிகணைப் புகையடங்கும் முன்பே கெக்கட்டமிட்டு சிரிக்க முடியாது. குழுத்தலைவியிடம் பேச்சு வாங்க முடியாது. நீலாவுக்கு மனது குறுகுறுத்தது. புதிய போராளி-களை ஒழுங்காக வழிநடத்த வேண்டிய பொறுப்பும் அவளுக்கு.

இனி கலையை உயிரோடு பார்ப்பேனா? மனது வலித்தது. சிலவேளை காயப்பட்ட அவளையோ அவளது வித்துடலையோ நீலா தூக்கிச் செல்லக்கூடும். காலத்தின் கொடுமையைவிட இந்த நினைவு அவளை அதிகம் அலைக்களித்தது.

❍ ❍ ❍

அடுத்த நகர்வை முறியடிக்கும் ஆயத்தத்தில்எல்லோரும்ஈடுபட்டுக்கொண் டிருந்தனர். வானத்தில் அடிக்கடி இரையும் சத்தங்களுக்கேற்ப காப்பெடுத்து பின்னர் ஒன்றாகி வேலை செய்துகொண்டிருந்தனர். அந்தப் பிரதேசத்திற்கான அணிகளைக் காட்டு வதற்கு வழிகாட்டியான கண்ணனின் பின்னே ராஜி, சபரி, நீலாவின் காவும் குழு அணிகள் சென்றுகொண்டிருந்தன. நீலா வின் அணி கடைசியில். அதிலும் நீலா கடைசியாகச் சென்றுகொண்டிருந்தாள்.

“இது ரஞ்சனின் செக்‌ஷன் நிக்குமிடம். அந்தப் பத்தைக்கு அங்கால முரளியின்ர”

கண்ணன் எல்லோருக்கும் விளக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

சண்டையில் ஆண், பெண் என்று எல்லோருக்குமே சாப்பாடு, வெடிமருந்து, காயம், வித்துடல்கள் சுமக்கவேண்டிவரும். இப்போது நிற்கும் போராளிகளில் ஆரார் அடுத்த சண்டை முடிய இருப்பினமோ அவள் நினைத்துக்கொண்டாள். முரளியின் ‘செக்‌ஷன்’ இருக்கும் கடைசிக் காவலரண் அது.

காப்பரணை வெட்டிக் கொண்டிருந்த வர்களில் மண்வெட்டியில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்து நிலைகுத்தியது அவளது பார்வை. கால்கள் நகர மறுத்தன. அவனும் அவளையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துவிட்டு அணிகள் நகர்ந்து கொண்டிருந்தன. அவளுக்கு முன் சென்றுகொண்டிருந்த யோகா அடுத்தவளவு தாண்டிப் போய்விட்டாள். கதைப்பதற்கு அது நேரமில்லை. கதைக்கவும் அவளால் முடியாது. நாலுகாலில் அவளின் குழுவை எட்டிப்பிடித்து விட்டாள் நீலா. மனம் மட்டும் அவனைச் சுற்றி வந்தது.

‘ஹரி’ அவன் எப்படி இங்குவந்தான். வடமராட்சியில் வேறு நிர்வாகத்தில் அல்லவா இவ்வளவு நாளும் நின்றிருந் தான். நீலாவைப்போல் சூரியக் கதிர் ஒன்று சமர்க்களம் அவனையும் களத் துக்கு அழைத்திருக்க வேண்டும். எப்படி யென்றாலும் அவளால் இனி ஒழுங்காகச் சாப்பிடவோ தண்ணீர் அருந்தவோ முடியாது.

அவள் அவனைக் காணாமல் இருந்த நாட்களும், காலமும் இப்போது அதிகரித்து விட்டிருந்தன. முன்பெனில் வீட்டில் ஒரு நாளைக்கு நாலைந்து தடவைகள் அவனைக் காணலாம். பேசலாம், பக்கத்து வீடுகளில் வசித்த அவர்களிருவரின் இதயத்தையும் இணைத்துவைத்த காலம், போராட்டக்களத்தில் வெவ்வேறு திசைகளில் அவர்களைப் பிரித்து விட்டிருந்தது. நீலாவின் மனதில் ஏழு வருடங்களாகக் குடியிருக்கும் ஹரி அவளைவிட எட்டு வருடங்கள் மூத்தவன். தொண்ணூறாம் ஆண்டு தனது ஆதரவுப்பணியை முழுமையாக்க அவளிடம் சொல்லிவிட்டே அவன் இயக்கத்துக்குப்போக, அவனுக்குப் பின்பு அவனுக்கு மூச்சுக்கூட விடாமல் அவள் பயிற்சிக்குப்போக இடையில் பார்க்காமலும், பேசாமலும், அவனைத் தேடி அவளும், அவளைத் தேடி அவனும் போகாமலும் அவர்களுக்கும் இயக்கத்தின் சுயவிபரக்கோவைக்கும் தெரிந்த கதையாக அது உறைந்திருந்தது.

அவள் ஆகாயக் கடல் வெளியில் காயப்பட்டு விடுமுறையில் போக அவன் பூவரங்குளத்திலிடப்பட்ட காயம் மாறி விடுமுறையில் வீடு வந்து போயிருந்தான்.

இனிக் கலையுடன் இவனையும் சில வேளை தூக்கவேண்டி வரலாம். போராட்டத்தில் இயல்புகளில் ஒன்றாகிவிட்டசாவும், விழுப்புண்களும் அவளைக் கலங்க வைக்கவில்லை. இருக்கிறானோ? இல்லையோ? அதை அவள் அறிவாளோ இல்லையோ இந்தச் சங்கதியை அறிய முடியாமல் தவிப்பதுதான் கடினமாக இருந்தது நீலாவுக்கு.

அணிகள் நகர்ந்து சென்று கோண்டாவில் டிப்போச் சந்தியை அடைந்து விட்டன. அடுத்த 'செற்றப்பை' வெட்டிக் கொண்டு புதிதாகப் பயிற்சிபெற்ற பெண் போராளிகள் நின்றனர்.

❍ ❍ ❍

யாழ்நகர்ப்பகுதிக்குரிய சண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அரியாலைப் பக்கமாக படைகள் மேவி நகர்ந்து 'ட' வடிவத்தில் நகர்ப்பகுதியில் இருக்கும் புலிகளோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தன. பலாலிப் பக்கமும், கொழும்புத் துறைப் பக்கமும், அது போதாதென்று மண்டைதீவிலிருந்தும் படையினர் எறிகணைகளை அனுப்பிக் கொண்டிருந்தனர். சுற்றிவர இராணுவம் நிற்க நடுவில் புலிகள். சூரியக்கதிரின் உச்சக்கட்ட நாட்களவை.

நீலாவின் அணி அந்தப் புளிய மரத்துக்குக்கீழ் இருந்தது.

"இப்ப சாப்பாடு. சண்டைபிடிக்கிற எங்களுக்கும், காயப்பட்டு மெடிக்சில நிக்கிறவைக்கும் மட்டும்தான்"

சாவித்திரி சாப்பாட்டுச் 'சொப்பிங்' பாக்கை கொடுக்கும்போது சொன்னாள். மரவள்ளி, கரட், வாழைத்தோட்டங்கள் என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஒன்றுமில்லாமல் ஓடிய மக்கள் சாப்பாட்டுக்கு அவலப்படும் காட்சி மனதுள் ஓடியது. மக்களும் வெளியில் நிற்கும் போராளிகளும் படும் இடப்பெயர்வு அவலத்தை நினைத்துக்கூடப் பார்க்க மறுத்தது இதயம்.

"அதைவிட நாங்கள் இங்க நிக்கிறது எவ்வளவோ மேல்"

சொப்பிங் பாக்கிலிருந்த பாணை அரைவாசியாகப் பிய்த்து பாணைக் கோறையாக்கி, இன்னொரு பையிலிருந்த குழம்புக்கறியை அதற்குள் ஊற்றி, பஞ்சுப் பாணை தொட்டுத்தொட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது உயிர் மீண்டும் வந்து ஒட்டிக்கொண்டது போலிருந்தது.

"ஆகா என்ன சுவையான சாப்பாடு"

இந்த நெருக்குவாரச் சண்டைக்குள்ளும் ஒரு நாளைக்கு ஒரு தடவையென்றாலும் வரும் கஞ்சியோ, பாணோ தேவாமிர்தமாகவே இருந்தது அவர்களுக்கு. பசித்த

நாவுக்குத்தான் உண வின் சுவை நன்கு தெரியும். சாப்பிட்டு முடிவதற்கிடையில் கஜனி ஓடிவந்து,

"எல்லாரையும் சென்.ஜோன்ஸ் கொலிஜுக்கு லைன் பண்ணி வரட்டாம்"

என்று கூறிவிட்டு ஓடினாள். சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக அவசர அவசரமாக எல்லோரும் தயாராகினர். நீலா எல்லாவற்றையும் சரிபார்த்தாள்.

"தமிழரசி நீ முன்னுக்கு வா. வேகமாக ஓடவும் மாட்டாய்"

கட்டையாகவிருந்த குண்டுத் தமிழரசியை முன்னுக்கு விட்டுவிட்டு வரிசையாய் ஓடிச் செல்பவர்களுள் கடைசியாய்ப் போனாள் நீலா.

பக்கத்து வீதிகளிலிருந்தும் ஆண், பெண் போராளிகள் அந்தப் பாடசாலை மைதானத்துக்கு ஓடிக்கொண்டிருந்தனர்.

"ஏதோ இறங்கி அடிக்கும் செற்றப் போல கிடக்குது"

மனது சொல்லிக்கொண்டது.

அந்தப் பாடசாலை வாசலை எட்டிப் பிடிக்க சற்று முன்னர் நீலாவின் அணிக்கு எதிர்த்திசையில் ஓடிக்கொண்டிருந்த ஆண் போராளிகளில் கடைசியாக அவன் ஹரி ஓடிக்கொண்டிருந்தான். அதே கறுத்த உருவம், இறுகிய முகம், கட்டம் போட்ட பச்சை சேட், உரும்பிராயில் கண்ட அதே உடை. இது அவன்தான். விழிகள் சந்தித்து இனங்காண்பதற்கிடையில் நகர்ந்துவிட்ட அந்த நொடிப்பொழுதில் அவளுக்கு ஏற்பட்ட ஒரே ஆறுதல் அவன் இன்னும் உயிரோடிருக்கிறான். அவனைப் பார்க்க, பேச முடியாவிட்டாலும் அதுபோதும் அவளுக்கு.

எல்லோரும் போய் வாகைமரத்தின் கீழ் வரிசையாக இருந்தனர். பானு அண்ணை, பால்ராஜ் அண்ணை, விதுஷாக்கா எல்லாத் தளபதிகளும் அரியாலையை ஊடறுத்து உள்நுழையும் தாக்குதல் திட்டத்தில் மும்முரமாய் இருந்தனர்.

**பசி வந்ததாயும் இல்லை, வராததாயும் இல்லை. சாப்பிட வேண்டும் போலவும் இல்லை. இரத்த நெடி மூக்கினுள் இன்னமும் இருந்தது. கைகள் இரண்டிலும் இரத்தம் காய்ந்திருந்தது. உடைகளிலும் திட்டுத்திட்டாக இரத்தம் காய்ந்து கிடந்தது.**

இறுக்கத்துடன் மூழ்கத்தொடங்கியது அன்றைய மாலைப்பொழுது.

❍ ❍ ❍

அரியாலை ஊடறுத்த தாக்குதல், நாவலர் வீதிச் சண்டையென்று நகர்ப் பகுதியில் நெருக்கமாக நடந்த சண்டைகளில் நீலாவுடன் கூட இருந்தவர்கள் பலர் இல்லை. கலையைப்பிரிந்த நாட்களின் பின் இரண்டொரு தடவை அவளைப் பார்த்ததற்குப் பின்பு இன்னமும் அவளைக் காணவேயில்லை. கொழும்புத்துறைப் பக்கம் நின்றதாக யாரோ சொன்னார்கள். இன்னமும் அவள் உயிரோடிருப்பது ஏதோ நிறைவாகவிருந்தது.

அந்த நடு இரவைப் 'பரா' வெளிச்சம் பகலாக்கிக்கொண்டிருந்தது. மண்டைதீவு, கொழும்புத்துறை, யாழ் நகர்ப்பகுதிப் படையினர் மாறி மாறி எல்லாப் படைக்கலங்களையும் பாசையூர் கரையை நோக்கித் திருப்பியிருந்தனர்.

**இனி கலையை உயிரோடு பார்ப்பேனா? மனது வலித்தது. சிலவேளை காயப்பட்ட அவளையோ அவளது வித்துடலையோ நீலா தூக்கிச் செல்லக்கூடும். காலத்தின் கொடுமையைவிட இந்த நினைவு அவளை அதிகம் அலைக்கழித்தது.**

இத்துடன் புலிகள் ஒழிந்தார்கள், இல்லையென்றால் கடலுக்குள்போய் விழுந்தார்கள் என்று வானொலியில் புழுக விரும்பும் படைத்தரப்புக்கும் அரசுக்குமெதிராகச் சண்டை பிடித்தவர்கள் குருநகர் ஐந்து மாடிக்குள் பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தனர். வலிகாமத்தை விட்டுப்போக மனமின்றி இறுகிக்கிடந்தன இவர்கள் மனங்கள். மண்டைதீவுக்காரனின் ஆர்.பீ.ஜீ. எறிகணைகள் கரையில் வந்து விழுந்துகொண்டிருந்தன.

கடற் புலிகளின் இழுவைப்படகுகளில் போராளிகள் ஏற, அவை கிழக்கரியாலைக் கரையில் போராளிகளைத் தரையிறக்கி விட்டுத் திரும்பி வருவதும் போராளிகளை ஏற்றுவதுமாக இருந்தன.

“மாதங்கியினர் குறுப் வந்திட்டுதோ? ஏனின்னும் வரெல்ல”

“பின்னால வந்துகொண்டிருக்கினம்”

“நீலா கெதியாய் ஓடிப்போய் அந்தக் குறுப்பைக் கூட்டிவா”

பொறுப்பாளர் அவரசப்படுத்தினார். இதுவரை கரைக்கு அணிகளை ஒவ்வொன்றாய்க் கூட்டி வந்த நீலா ஓடிப்போனாள். இடையில் கஜனியுடன் மாதங்கியின் அணி வந்துகொண்டிருந்தது.

“எல்லாரும் வந்திட்டினம்”

சரிபார்ப்பு, ஒழுங்கமைப்பு என்று சில நிமிடங்கள் கரைய,

“விசு, உங்கட ஆட்களை ஏத்துங்கோ”

தளபதியொருவர் கட்டளையிட்டார்.

மகளிர் அணிகள் ஒவ்வொன்றாக ஏற, கடைசிப் படகில் நீலா, பூமகள், விது ஷாக்கா இன்னும் சிலர். படையெடுத்து அவர்களுக்குப் பின்னால் வந்த நாய்க் கூட்டங்களின் ஊளையொலி கரையை நிறைத்தது. மனம் விரும்பமில்லாமல் அந்தக் கரையையும், ஐந்துமாடிக் கட்டடத்தையும் விட்டுப்பரிந்து கொண்டிருந்தது. கரை விலகிக் கொண்டிருந்தது.

மண்டைதீவுக்காரனின் ‘பராக்கள்’ நடுவானில் ஒளிர்ந்து அணைந்து கொண்டிருந்தன. எப்பிடியும் கலை முதல் சென்ற ஏதாவது ஒரு படகில் சென்றிருக்கக்கூடும். நீலா நினைத்துக்கொண்டாள்.

ஹரி அவன் எங்கிருப்பான். இன்னும் வலிகாமத்திலா? தென்மராட்சியிலா? இல்லை வானத்திலா? இந்த ஏழு வருட நினைவுகளில் ஒளிந்தும், முகங்காட்டியும், நேரில் சில நிமிடப்பொழுதுகளிலும் காண நேரிட்ட அவன் இருப்பானா?

படகின்ஆட்டத்திற்குஉப்புநீர்முகத்தில் எகிறித்தெறித்தது. எங்காவது ஒரு மூலையில் அவன் உயிருடனிருக்கவேண்டும். மனது நினைத்துக்கொண்டது. நீலா ஒருமுறை கரையை நோக்கித்திரும்பினாள். எறி-கணைகள் இன்னமும் கரையில் விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. படகுகள் தூரச் சென்றுகொண்டிருந்தன. போரா-ளிகளையும், வார்த்தைகளால் செதுக்க முடியாத அவர்களின் உணர்வுகளையும் சுமந்து கொண்டு படகு மற்றைய கரையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது.

❍ ❍ ❍

# தமிழ்த் திரைப்படங்களில் ஈழத்தமிழர் போராட்டச் சூழலின் வெளிப்பாடு

யேசுராசா

இவ்வாறான ஆய்வுகளின்போது பெரும்பாலும் முதலில் பலியாவது கலைத்துவம். ஏனெனில், குறிப்பிட்ட தலைப்புடன் பொருத்திய விடயங்கள் எங்கு எப்படிக் காணப்படுகின்றன என்பதைத் தொகுப்பதே பொதுவாக நிகழ்கிறது. இத்தகைய செயற்பாடு எந்தளவிற்கு சரி என்ற ஐயப்பாடு எனக்குண்டு. குறிப்பிட்ட விடயம் குறிப்பிட்ட கலை வடிவத்தில் வெளிப்படுவதிலுள்ள பிசிறற்ற தன்மைகள் - கலைத்துவம் - முக்கியமானதெனக் கருதுகிறேன். இது யாருடைய கலைத்துவம் என ஒருவர் கேட்டால், சமூக அரசியல் தன்னுணர்வுடன் வடிவத்தின் அடிப்படை அம்சங்களைக் கணக்கிலெடுக்கும் அக்கறை கொண்டவர்களின் கலைத்துவம் எனப் பதில் சொல்லலாம்.

திரைப்பட வடிவத்தில் காட்சிரூப மொழியே அடிப்படையானது. பேச்சிற்கு முதன்மை கொடுக்காத. காட்சிகளால் கதை நிகழ்வுகள் சித்திரிக்கப்படுவதே முக்கியமானது. அதனைப்போல கதைச் சித்திரிப்பில் - பாத்திரங்களின் இயக்கத்தில் யதார்த்தப்பண்பு அதாவது உண்மைத்தன்மை பேணப்படுவது இன்றியமையாததாகிறது. விடயமும் வெளிப்பாட்டு முறைகளும் இணைந்து மனதில் பதிவை ஏற்படுத்தியவற்றுக்கு முக்கியம் அளித்துள்ளேன். இங்கு பேசப்படும் எல்லாப் படங்களும் வீடி-யோப் பிரதியாகவே எனக்குப் பார்க்கக் கிடைத்தவையாகும்.

ஈழத்தமிழர் போராட்டச் சூழலை அத்துடன் தொடர்புபட்டவற்றை வெளிப் படுத்தும் திரைப்படங்களை இரண்டு வகையினவாக நோக்கலாம்.

1. தமிழ்நாட்டுத் திரைப்படங்கள் - இவை முழுநீளக் கதைப்படங்கள் (Feature Films)
2. ஈழத்துத் திரைப்படங்கள்
   அ) முழுநீளக் கதைப்படங்கள்
   ஆ) குறும்படங்கள் (Short Films)
   இ) விவரணப் படங்கள் (Documentary Films)

### 1. தமிழ் நாட்டுத் திரைப்படங்கள்

தமிழ்நாட்டுப் படங்கள் பெரிதும் வர்த்தக நோக்கிலேயே தயாரிக்கப்படு



(2002ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'மானுடத்தின் ஒன்றுகூடல்' நிகழ்வில் ஆற்றப்பட்ட உரை)

கின்றன. இலாபம் பெறுவதே அவற்றைத் தயாரிப்பவர்களின் முதலும் முடிவுமான அக்கறை.

தற்போது, சுமார் ஏழு இலட்சம் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் 'பரந்த சந்தை'யை இலக்காகக் கொண்டே ஈழத் தமிழர் தொடர்பான விடயங்களைக் கொண்ட படங்களைத் தமிழ்நாட்டில் தயாரிக்கிறார்கள். ஈழத் தமிழர்மீது கொண்ட உண்மையான அக்கறையால் இவற்றைத் தயாரிக்கவில்லை; இதனா-லேயே பிறழ்வானவெளிப்பாடுகள் பல காணப்படுகின்றன. எமது அடிப்படைப் பிரச்சினைகள் கோடி காட்டப்படுவதுகூட நிகழ்வதில்லை. எவ்வாறாயினும், 'காற்றுக்கென்ன வேலி' திரைப்படத்தை உருவாக்கிய புகழேந்தி தங்கராஜ் போன்றோரின் நல்நோக்கத்தை - ஈழத்தமிழர் போராட்டத்தில் கொண் டுள்ள அனுதாப நிலைப்பாட்டைப் புரிந்துகொள்கிறேன். தமிழ்நாட்டுத் 'திரை வியாபாரிகளி'லிருந்து அவரை வேறு படுத்திப் பார்ப்பதால், அவரது முயற்சியை நான் கொச்சைப்படுத்தவில்லை. ஈழத்தமிழர் போராட்டச் சூழலோடு தொடர்பான அம்சங்களைக் கொண்டவையாக ஐந்து படங்கள் கவனத்தில் வருகின்றன.

### I. கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

மிகச் சிறியதொரு அம்சமே ஈழம் பற்றியதாகச் சித்திரிக்கப்படுகிறது. முன்பு இலங்கையில் - வன்னியில் நடைபெற்ற போரா-ளிகளின் தாக்குதலில் ஒரு கால் ஊனமுற்ற இந்திய அமைதிப்படை மேஜராக, மம்முட்டியின் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. போராளிகளின் திடீர்த் தாக்குதல் காட்டப்படுகிறது.

பின்னர் ஒரு கட்டத்தில் அந்த மேஜர் கசப்புடன் சொல்கிறார். "ஆயிரத்து ஐநூறு பேர் கொல்லப்பட்டார்கள். இங்க ஒரு நினைவுச் சின்னம் இருக்கா? சென்னைத் துறைமுகத்தில் நாங்க கால்வச்சப்போ யாருமே கண்டுக்கல. அப்பதான் தோணிச்சு யாருக்காக, எதுக்காக இந்தச் சண்டை? எல்லாமே வேஸ்ட் வேஸ்ட்"

அமைதிப்படையின் இழப்பு, தமிழகத்தில் அவர்கள்மீது காட்டப்பட்ட வெறுப்புடன் கூடிய அலட்சியம், இலங்கையில் இந்தியத் தரப்புச் சண்டையின் அர்த்தமின்மை என்பன இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறு பகுதி-யேயாயினும் மம்முட்டியின் நடிப்பினால் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.




### II. நந்தா

இப்படத்திலும், யுத்தச் சூழலில் தப்பி வந்து தனுஷ்கோடிப் பகுதி மணற்றிடரில் இறக்கிவிடப்படும் இலங்கைத் தமிழ் அகதிகள் - அவர்கள்மீது இராமநாதபுரம் அரசபரம்பரையைச்சேர்ந்தஒருவர்காட்டும் அக்கறை என்பன, சிறு பகுதியாகவே இடம்பெறுகின்றன. கதாநாயகி இலங்கை அகதிப் பெண்ணாக உருவாக்கப்பட்டுள்ள போதிலும் அகதிமுகாம் வாழ்க்கை - இலங்கை அகதிகளின் அவலம் என்பன விபரமாகவோ, சரியாகவோ சித்திரிக்கப்படாமல், வழமையான 'தமிழ்ப்பட மசாலாத்தனங்களினுள்' கரைந்து போயுள்ளன. ஈழத்தமிழர் பிரச்சினையைத் தொடுவது போன்ற 'பாவனை-யே' இதில் மிஞ்சுகிறது.

## III.கன்னத்தில் முத்தமிட்டால்

முந்தைய இரு படங்களைப் போலல்லாது இப்படம் கூடுதலாக ஈழத்துடன் தொடர்புபடுகிறது. 1991 இல் படகு மூலம் இராமேஸ்வரத்தில் அகதியாக வந்திறங்கி, (இதற்காகவே வந்தவள் போல்! பெண் குழந்தையைப் பிரசவித்துவிட்டு இலங்கை திரும்பிவிட்ட ஒரு பெண் ஷியாமா. அந்தக் குழந்தையின் வளர்ப்புத் தந்தையும் தாயும் - குழந்தையின் வற்புறுத்தலால் - எட்டு ஆண்டுகளின் பின் கொழும்பு வழியாக இலங்கை வருவதும், மாங்குளத்தில் தற்போது போராளியாகவுள்ள தாயைச் சிறுமி சந்திப்பதுமாக, வேறு இடை நிகழ்வுகளுடன் கதை பின்னப்பட்டுள்ளது. இந்திய உயர் பிராமணிய ஆளும் வர்க்கத்தின் ஆதிக்க அரசியலுக்குச் சார்பாக காஷ்மீர், அஸ்ஸாம் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை முறையே 'ரோஜா', 'உயிரே' ஆகிய படங்களில் "பயங்கரவாதமாக" கொச்சைப்படுத்திய அதே மணிரத்தினம்தான் இந்தப் படத்தில், ஈழத்தின் யதார்த்தத்தையும் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தியுள்ளார். குறைந்த பட்சம் ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகள் என்னவென்பதைக் கோடிக்காட்டக் கூட அவர் முயலவில்லை. சிறுமி தாயைக் காணவேண்டுமென்பதுதான் முக்கிய பிரச்சினை போல போர்ச்சூழலில் (!) காட்ட முனைந்தமை வலுவற்றது. ஈழத்தமிழர் போராட்டத்திற்கு எதிரான சித்திரிப்புகள் 'நுட்பமாக' புகுத்தப்பட்டுள்ளன. கதையில் வரும் தமிழ்நாட்டுத் தம்பதி அவர்களின் சிங்கள நண்பன் எல்லாம் நல்லவர்கள்; ஆனால், போராளிகள் கெட்டவர்கள் - கொடுமைக்காரர்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுமி அமுதா காயப்படுகிறாள்; கறுப்புநிறப் பெண் போராளிகளைக் கண்டுதான் அமுதா பயப்படுகிறாள். மாங்குளத்தில் மக்கள் இடம்பெயரும்போது இராணுவம் துன்புறுத்துதலில் ஈடுபடாது நல்ல தனத்துடன் நடந்து கொள்கிறது; ஆனால், போராளிகள்தான் ஷெல் அடித்து மக்களை 'அல்லோலகல்லோலத்திற்கு' உள்ளாக்குகின்றனர். தமிழ்நாட்டு எழுத்தாளக் கதாநாயகனையும் சிங்கள நண்பனையும் பிடிக்கும்போது போராளிகள் முரட்டுத்தனமாய் நடந்து கொள்வதாய்க் காட்டப்படுகின்றனர். அப்போது அதற்கு எதிராகக் கதாநாயகன்,

> "எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக
> எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக
> எங்கள் முதுகில் கசையால் அடிக்குக"



என்று சில கவிதைவரிகளை உரத்தகுரலில் சொல்கிறான். உண்மையில், ஈழத்தின் முக்கிய கவிஞர் சண்முகம் சிவலிங்கம், இலங்கை அரசின் அடக்குமுறைச் சக்திகளிற்கு எதிராக எழுதிய கவிதை வரிகளைப் போராளிகளிற்கு எதிராகப் பாவிக்குமளவிற்கு, வக்கரிப்புடனும் யுக்தியுடனும் மணிரத்தினம் செயற்பட்டுள்ளார்.

மாங்குளத்தில் மலைகள் இருப்பது, **1999**இல் மாங்குளத்தில் சிங்களக் குடும்பம் இருப்பது; மின்சாரம் - வெளிநாட்டுடன் தொடர்புகொள்ளும் வகையிலான தொலைபேசித் தொடர்பு வசதி இருப்பது போன்ற (இன்னும் பல) சித்திரிப்புகள், ஈழப்போராட்டக் களம் பற்றிய மணிரத்தினத்தின் 'அறியாமை'யையே வெளிப்படுத்துகின்றன. இந்திய-இராமேஸ்வரச் சூழலில் காட்சிரூப வெளிப்பாடுகள் அழகிய சட்டங்களில் (Frames) நன்றாக அமைந்துள்ளபோதிலும், பிற்போக்கான எதிர்ப்புரட்சிகர அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதில் எரிச்சலும் கோபமும் மேலோங்குவதில், அந்தக் காட்சிரூபப்படுத்தல்களின் சிறப்பும் சந்தோஷமும் நசுங்கிப்போய் விடுகின்றன.

## IV.காற்றுக்கென்ன வேலி

**1997** ஜனவரியில், காயப்பட்ட 'மணிமேகலை' என்ற பெண் போராளியை ஆண் போராளிகள் இருவர், சிகிச்சைக்காகப் படகுமூலம், வல்வெட்டித்துறையிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள 'கோடிக்கரை'க்குக் கொண்டு செல்கின்றனர். நாகப்பட்டினத்திலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இதற்கு மாறான பொலிஸ் கெடுபிடிகளும் காட்டப்படுகின்றன. மருத்துவர் முதலில் உடன்படாத போதிலும் பொதுவில், காயப்பட்ட ஈழப் போராளிகளிற்கு உதவுவது சரியானது என்ற செய்தி வெளிப்படுத்தப்படுகிறது. மருத்துவரின் தாய் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில், "மனிதாபிமான ரீதியில் எனது மகன் இவ்வாறு உதவியது எப்படித் தவறாகும்?" என ஆக்ரோஷமாகக் கேட்பது தாக்கத்துடன் காட்சிப்படுத்தப்படுகிறது. ஆனால், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை அரசியல் பின்புலம் 'வெளிவரைவாக'வேனும் சொல்லப்படாத பல வீனத்தை, இந்தப்படமும் கொண்டுள்ளது. கதை நிகழ்காலத்தில் போராளிகள் சிகிச்சைக்குத் தமிழ்நாடு செல்வதோ, மருத்துவமனையிலும் சீருடையுடன் இருப்பதோ உண்மைக்குப் பொருத்தமாக இல்லை. போராளிகள் உட்படப் பாத்திரங்கள் பலவற்றின் நடிப்பு மிகை வெளிப்பாட்டைக் கொண்டிருப்பது, இலங்கைப் பேச்சுவழக்கு இயல்பாக இல்லாதது, மலையாளத் தாதியின் ஆபாசச் செயற்பாடுகள் ஆகியனவும் யாதார்த்தப்பண்பற்ற தன்மைக்கு உதாரணங்களாகின்றன.

மருத்துவர், பொலிஸ் அதிகாரிகள், யாழ்ப்பாண வீட்டுச் சூழலில் காணப்படும் மணிமேகலை ஆகியோரின் நடிப்பு இயல்பாகவுள்ளது; ஆங்காங்கே காட்சிச் சித்திரிப்புகள் நல்ல 'சட்டங்களாக' அமைந்திருப்பதையும் குறிப்பிடாமல் விட முடியாது. ஏன்றாலும், வழமையான சாதாரணத் 'தமிழ்ப்படமாகவே' அமைந்து விடுகிறது!

## V.ரெறறிஸ்ற்

இத்திரைப்படத்தின் திரைக்கதையை எழுதியதோடு படப்பிடிப்பு, இயக்கம் என்பவற்றையும் சந்தோஷ் சிவன் கையாண்டுள்ளார்; இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இது சர்ச்சைக்குரியதொரு படமாகும்.

கழுத்தில் 'சயனைற்' குப்பிகளுடன் போராளிகள் காட்டப்படுகின்றனர். முக்கிய அரசியல் பிரமுகரை அழிப்பதற்கான இரகசிய வேலைத்திட்டத்தில் 'மல்லி' என்ற பெண் போராளி கடல் கடந்து சென்று, வேறு போராளிகள் இருவருடன் செயற்படுவதாகவும் கதை செல்கிறது. கதைநிகழ்களம், அரசியற் சார்பு - இயக்கச் சார்பு என்பன வெளிப்படையாக எந்த இடத்திலும் திரைப்படத்தில் சொல்லப்படவில்லை; என்றாலும், புலிகள் இயக்கத்துடனும் இலங்கை - இந்தியக் களத்துடனும் அதனை இணைத்துப் பார்க்கக்கூடிய சாத்தியப்பாடுகள் உண்டு.

உண்மையில் இத்திரைப்படத்தைப் பிற்போக்கான ஒரு படம் எனவும் விமர்சிக்கலாம் அல்லது இப்போது பலரால் பேசப்படும் - அதாவது, மையத்தை மட்டும் பார்க்காமல் பகுதிகளையும் பார்க்கவேண்டுமென்ற இந்தப் பின்நவீனத்துவ அணுகுமுறையில், ஏனைய அம்சங்களையும் பார்த்து அவற்றின் நிறைகளை அல்லது குறைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நாங்கள் செல்லலாம். எவ்வாறாயினும், உள்ளடக்க ரீதியில் இது சர்ச்சைக்குரிய படம்தான்; ஆனால் 'திரைப்பட மொழி' கையாளப்பட்டுள்ள முறை, பாத்திரங்களின் செம்மையான உருவாக்கம், கதை சொல்லப்பட்ட நேர்த்தி, இயல்பான பின்னிசை என்பவை ஏற்படுத்தும் மொத்தப் பாதிப்பால் மிகச் சக்திவாய்ந்த ஒரு திரைப்படமெனக் கருதுகிறேன்.

இறுதியில், தற்கொலைப் பெண் போராளி கர்ப்பிணியாக இருக்கிறபோது, அரசியற் பிரமுகரைக் கொல்வதற்கான வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்குரிய பொத்தானைக் கைவிரலால் அழுத்த வேண்டிய வேளை, குழந்தையின் குரலொலியைக் கேட்ட உணர்வில் அதனை அழுத்தாமலே விடுவது - உறைகாட்சியாகக் காட்டப்படுவதுடன் படம் முடிகிறது. அவளில் குழந்தை உருவாகி கர்ப்பிணியாவதற்குரிய சூழல் திருப்புக் காட்சிகளாக முன்னரே காட்டப்படுகிறது. போர்க்களச் சூழல் - காயப்பட்டு உயிராபத்துக்குள்ளான ஆண் போராளியுடன் பதுங்குகுழியில் இருக்க நேர்ந்த தவிர்க்க இயலாத சூழலில் - தனிமை நெருக்கம் விரசம் ஏதுமின்றிக் காட்டப்படுகிறது. அது போராளிகளைக் கொச்சைப்படுத்துகிறதா. இல்லையேல் அத்தகைய சூழலில் - மானுட இயல்பின் பலவீனத்தில் நிகழக்கூடிய சாத்தியப்பாடு உண்டுதான் என்று ஏற்றுக்கொள்வதா என்பதெல்லாம், எம்மிடமுள்ள நெகிழ்வுத் தன்மையின் அளவீட்டைப் பொறுத்தது.

இத்திரைப்படத்தை ஒரு தற்கொலைப் போராளிபற்றிய உளவியல் ஆய்வாகவும் கருதலாம். துரோகியைத் தயக்கம் ஏதுமில்லாமல் சுட்டுக்கொல்கின்ற தற்கொலைப் போராளியாவதற்கு விருப்புடன் முடிவெடுத்த - இந்திய அமைதிப்படை இராணுவத்தான் என நாங்கள் உணரக்கூடியவனை நீண்ட கத்தியால் வெட்டிக் கொல்கிற அதே பெண் போராளிதான் (மல்லி), பின்னர் வாழ்வு தொடர்பான மானுட உறவுகள் தொடர்பான உணர்வுச் சிக்கல்களின் குழப்பத்தில் அல்லாடி, இறுதியில் ஒரு முடிவுக்கு வருகிறாள். சூழலில் பாத்திரக் குணநலனின் வளர்ச்சிப் போக்கிலான இந்த மாற்றம் இயல்பற்றதாகத் தெரியவில்லை.

பெண் போராளிக்கு வழிகாட்டியாக வரும் 'சூர்யா' என்ற சிறுவனின் குணநலனிலுள்ள 'முரண்நிலை'யும் இவ்வாறே இயல்பாகவுள்ளது. அவனது குடும்பம் இராணுவத்தால் அழிக்கப்பட்டுவிட்டது. தனது கண்முன்னால் எரிக்கப்பட்ட தந்தையின் நினைவில் நித்திரையில் கூடப்

புலம்பி அழுகிறான். ஆனால், மல்லி இராணுவத்தானைக் கத்தியால் வெட்ட இரத்தம் சீறியடித்த தோற்றத்தை இயல்பாக எடுத்துக்கொள்ள அவனால் முடியவில்லை. அதனால்தான் “நீ கொலைகாரி” எனக் கூறியபடி நடுங்குகிறான். இங்கும் அதே குணநல முரணின் இயல்புத்தன்மைதான் உள்ளது.

பாத்திரங்களின் உருவாக்கம் - தற்கொலைப் போராளி மல்லி, இரகசிய வேலைத்திட்டத்தில் ஈடுபடும் போராளி களான தியாகு, பெருமாள், வீட்டுக்காரரான வாசு, ஏழு ஆண்டுகளாக ‘கோமா’ நிலையில் படுத்திருக்கும் அவரது மனைவி, சிறுவன் சூர்யா, மல்லியின் சக போராளிகள் எல்லாம் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

போராளிகள் முகாம் உள்ள காட்டுச் சூழல், கடற் பயணம், புதிய கிராம வீட்டுச் சூழல், பாத்திரங்களின் செயற்பாடுகள், முகபாவச் சித்திரிப்புகள் என்பனவெல்லாம் தொலைவுக் காட்சி அண்மைக் காட்சி வெகு அண்மைக்காட்சி எனச்சட்டங்களில்காட்சி ரூபப்படுத்தப்பட்டிருக்கும் கலைத்துவ அழகு திரைப்படம் நிறையக் காணப்படுகிறது. வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட உள்ளடக்கத்துடன் இயைபுற்றதாகக் காட்சிப்படுத்தல்கள் அமைந்துள்ள தன்மையே, மிகுந்த தாக்குவலுக் கொண்டதொரு படமாக இதனை உருமாற்றியிருக்கிறது. ஏற்கனவே நடந்து முடிந்தவிட்ட ஓர் உண்மை நிகழ்வை, ஒரு சம்பவம் நடந்திருந்தால் (‘மல்லி’ தாய்மை அடைதல்) இவ்வாறும் நிகழ்வுப் போக்கு இருக்கலாம் என்று பார்த்ததொரு படைப்பு முயற்சியாக இதனைக் கருதவும் இடமிருக்கிறது.

## உ.ஈழத்துத் திரைப்படங்கள்

### ‘வீடியோ’ விலான நிதர்சனம் அமைப்பின் படங்கள்

இலங்கையில் ஓரளவிற்கு மேற் கொள்ளப்பட்ட தேசியத் தமிழ்த் திரைப்பட முயற்சிகள் கைவிடப்பட்டு நீண்டகாலமாகிவிட்டது. தனியார் முயற்சி என்பது இல்லையென்றாகி விட்டது.

தொண்ணூறுகளில் புலிகளின் ‘நிதர்சனம்’ நிறுவனம் ‘வீடியோ’த் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கியது. தமிழ்நாட்டுப் படத்துறையைப் போல் வியாபாரத்திற்கான ‘உற்பத்தி’களைச் செய்ய வேண்டிய தேவை அதற்கு இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புற்றவையாக-மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் பிரச்சாரப்பண்பு வாய்ந்தனவாகவும், ஆவணப்படுத்துவனவாகவும் - முழுநீளக் கதைப்படங்கள், குறும்படங்கள், விவரணப்படங்கள் என்பவற்றை உருவாக்கும் செயல்பாட்டில் அது ஈடுபட்டது. ஈழ விடுதலைப் போராட்டம், மக்களின் வாழ்நிலை தொடர்பான விடயங்களை முறையான வகையில் திரைப்படங்களில் வெளிப்படுத்தப்படுவது இதிலிருந்தே ஆரம்பமாகிறது. ஒப்பீட்டளவில் போராளிகள் - ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கமாகக் கொண்டவை. எண்ணிக்கையில் அதிகமாகவும், மக்களை - அவர்களின் வாழ்நிலைப் பிரச்சினைகளைச் சித்திரித்தவை குறைவாகவும் இருந்தன. திரைப்பட உருவாக்கம் தொடர்பான முறையான கற்கை நெறிகளை மேற்கொண்டவர்களையோ, அத்துறையில் முன் அனுபவங்கொண்டவர்களையோ வைத்து இம்முயற்சிகள் நடைபெறவில்லை. எனினும், இயல்பாய் அமைந்த அரசியற் தேவையின் நிர்ப்பந்தத்தில் - நல்ல திரைப்படங்களுடன் கொண்ட தொடர்பாலும் அத்துறை சார்ந்த வெளியீடுகளின் வாசிப்பாலும் உருவான தேர்ந்த திரைப்பட இரசனையைக் கொண்டிருந்த ‘ஞானரதன்’ போன்றோரின்

**சந்தையை இலக்காகக் கொண்டே ஈழத் தமிழர் தொடர்பான விடயங்களைக் கொண்ட படங்களைத் தமிழ்நாட்டில் தயாரிக்கிறார்கள். ஈழத் தமிழர்மீது கொண்ட உண்மையான அக்கறையால் இவற்றைத் தயாரிக்கவில்லை; இதனாலேயே பிறழ்வான வெளிப்பாடுகள் பல காணப்படுகின்றன. எமது அடிப்படைப் பிரச்சினைகள் கோடி காட்டப்படுவதுகூட நிகழ்வதில்லை.**

வழிகாட்டலில், இம்முயற்சிகள் நடந்தன; இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் நடைமுறை அனுபவங்களின் வழியாகப் பெற்ற வினைத்திறன் மேம்பாடு, தொடர்ந்த ஆக்கங்களில் வெளிப்பட்டது. திரைப்படத்தின் அடிப்படை அம்சமான காட்சிரூப வெளிப்பாடும் உண்மைத்தன்மையும் கொண்டவையாகவே பெரும்பாலான படைப்புகள் அமைந்துள்ளமை சிறப்பாகக் கூறப்படவேண்டியதாகும்.

### I.முழுநீளக் கதைப்படங்கள்

முகங்கள், காற்றுவெளி, தமிழோசை, இன்னுமொருநாடு, உறங்காதகண்மணிகள், பிஞ்சுமனம், தாயகக் கனவு, இது எங்கள் தேசம், தாயகமே தாகம், உயிர்ப்பூ, திசைகள் வெளிக்கும், கடலோரக் காற்று, உப்பில் உறைந்த உதிரங்கள் முதலியவை முழுநீளக் கதைப்படங்களாக உள்ளன; இவற்றில் சிலவற்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

படைப்பியல் ரீதியாக நிறைவான அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளவற்றைச் சிறிது விரிவாகவும், ஏனைவற்றைச் சுருக்கமாகவும் பார்க்கலாம். முழுநீளப் படங்கள் சராசரியாக எண்பது நிமிடங்களைக் காட்சி நேரமாகக் கொண்டுள்ளன.

### அ) முகங்கள் (89 நிமிடம்)

எமது மக்களின் இடப்பெயர்வு வாழ்வின் துயரநிலைகளைப் பற்றியதாகப் படக்கதை அமைந்துள்ளது. 1992இல், ஓர் இராணுவ நடவடிக்கையால் தெல்லிப் பழையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து மல்லாகத்திலுள்ள தெரிந்த ஒருவரின் வீட்டில், மனைவி அகிலாவுடனும் கைக்குழந்தையுடனும் சந்திரன் தங்குகிறான். வீட்டுத்தலைவியின் சுமுக மற்ற இயல்பு- நாள் செல்லச் செல்ல இயலாமையில் அதனுடன் இழுபடும் வீட்டுத்தலைவரின் போக்குகள், ஆதரவு காட்டும் அவரது மகள், சந்திரனின் பணக்கஷ்டத்தில் உதவும் தெரிந்த ஒருவரின் ஆதரவு, தொழிலற்ற நிலையில் கிளாலியைக் கடந்து செய்யும் வியாபாரத்தில் தன்னுடன்அவனைஇணைத்துக்கொள்ளும் இன்னொரு நண்பன், வன்னிக்கு வரும்படியும் வந்தால் தோட்டம்செய்யத் தனது காணித்துண்டொன்றைத் தந்துதவுவதாகச் சொல்லும் நண்பனது உறவினர் என வெவ்வேறு மனிதர்களின் குணவியல்புகளை - முகங்களை நாம் தரிசிக்கச் செய்கிறது படம். வீட்டுக்காரரின் மகளின் கணவன் வெளிநாட்டில்; இங்கு மனைவியும் சிறு குழந்தையும், செல்வ வளம் இருக்கிறது; ஆனால், உறவுத் தொடர்பு - வாழ்க்கை என்பது - வெறுமனே கடிதங்களிலும், 'நிழற்பட அல்பங்'களிலும் கொழும்பு சென்று தொலைபேசியில்

கதைப்பதிலும்தான். சந்திரனின் குடும்பம் வறுமையில் உள்ளபோதிலும் இயல்பான. கணவன் - மனைவி குழந்தை இணைத்த உயிர்ப்பான வாழ்வைக் கொண்டுள்ளது. இதனை அடிக்கடி பார்க்க நேர்கையில், ‘வெளிநாட்டுக் கணவனால்’தான் யதார்த் தத்தில் இழந்துவிட்ட ‘வாழ்க்கை’ பற்றிய அந்த இளம்பெண்ணின் ஏக்கம், நமது சமூகத்திலுள்ள வெளிநாட்டு மோகத்திற்கு மறைமுகமாய்ச் ‘சூடு’ கொடுப்பதகாவும் உள்ளது. கிளாலிப் பயணத்தின் அபாயம், அவலம், கடற்புலிகள் வழங்கும் பயணப் பாதுகாப்பு என்பன கலாரீதியான ஆவணத் தன்மையைக் கொண்டிருப்பதான முக்கியத்தையும் இன்று உணரமுடிகிறது.

இடம்பெயர்ந்து மல்லாகத்திலுள்ள வீட்டிற்குச் சந்திரன் குடும்பம் வந்தபின், கொண்டுவந்த கொஞ்ச சாமான்களை வெளியிலெடுத்து அடுக்கும்போது, உடைந்திருக்கும் பீங்கானொன்று காட்டப் படுவது அவர்களது வாழ்வின் குறியீ டாக உள்ளது. சாப்பாட்டிற்கு வழியில்லை என்றபோது, இருந்த ஒரேயொரு சிறிய சங்கிலியைக் கழற்றிக் கணவனிடம் அகிலா தருகிறாள். அடுத்த காட்சியில் வீட்டுக்காரரின் மகளது கை ஏராளமான தங்கக் காப்புகளைக் கொண்டிருப்பது காட்டப்படுகிறது. ஒரே சூழலில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடனுள்ள மனித வாழ்நிலையை இந்தச் ‘சட்டங்கள்’ (Frames) அழகாக வெளிப்படுத்துகின்றன. கஷ்ட நிலைமையிலும் மற்றவருக்கு உதவி யாக நடந்துகொள்ளுதல் - பொருளா-தாரக் கஷ்டத்தில் சீதனப் பணத்தைக் குறிப்பிட்டுக் கோபத்துடன் மனைவி யைப் பேசிவிட்டுச் சென்று, இடையில் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வந்து மனைவியிடம் மன்னிப்புக் கேட்டல் என்ற சந்திரனின் நல்ல குணம் இயல்பாய் மனதில் பதிகிறது. உதவிக்கு மா இடித்துக் கொடுக்க வீட்டுக்காரி ‘கூலியாக’ப் பணம் தரும்போது அதனை வாங்க அகிலா மறுத்துவிடுவது, ஏழ்மை நிலையிலுள்ள அவள் கொண்டுள்ள தன்மான உணர்வை வெளிக்காட்டுகிறது. கிளாலி வியாபாரத்தின்போது பற்றரிகள் தரலாமென ஒரு வியாபாரி சொன்னபோது, “அண்ணே அவர் ஆற்ற ஆள் தெரியுமா?” எனச்சொல்லி வாங்கவேண்டாமென (அவன் படையினரிடம் தொடர்புள்ளவன் என்ப தால்) நண்பனிடம் சந்திரன் கூறும்போது, அரசியல்சார்ந்து ‘தன்மான உணர்வு’ வேறுவிதமாக வெளிப்படுவதையும் காண லாம்.

யுத்தம் நடைபெற்ற காலத்தின் ஒரு வாழ்க்கைக்கோலத்தை, இயல்பானசாதாரண பாத்திரங்களின் மூலமாக இப்படம் மன-தில் பதிக்கிறது. காட்சிரூபப் பண்பு அழகிய ‘சட்டங்களாக’ப் படமெங்கும் விரவியிருக்கிறது. திரைப்பட ஆர்வலரைச் சந்தோஷப்படுத்துவது அது. பின்னிசை சில இடங்களில் மேலோங்கியிருப்பது தொழில் நுட்பக் குறையாயினும், உள்ளடக்கம் சார்ந்தும் காட்சிவெளிப்பாடு சார்ந்தும் தாக்கமான திரைப்பட அனுபவத்தைத் தருவதில் இது முக்கியமான கலைப் படைப்பாகிறது. இதன் நெறியாளர் ஞான ரதன் மதிப்பிற்குரியவராகிறார்.

### ஆ) காற்றுவெளி (78 நிமிடம்)

உலகின் கவனத்தை ஈர்த்துள்ள தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம், ஒரு சிறு குழுவால் ஆதிக்க மனப்பாங்குடன் நடத்தப்படுவது எனவும் மக்கள் ஆதரவு அதற்கு இல்லையெனவும் “சிலரால்” தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வரு கிறது. இத்தகைய எதிர்க்கருத்தைச் சொல்லுபவர்களிற்கும் ஓர் அரசியற் சார்பு இருக்கிறதுதான். மக்களின் ஆதரவு இல்லையென்றால் இப்போராட்டம் எப்போதோ அழிக்கப்பட்டிருக்கும்



காற்றுக்கென்ன வேலி

என்பதே யதார்த்தம். இந்தவிதத்தில், போராளிகளிற்கும் மக்களிற்குமான நெருங்கிய இணைப்பு என்ற விடயத்தை வாழ்நிலை அனுபவங்களின்மூலம் கலாரூபமாக வெளிப்படுத்துவது இப்படத்தை முக்கியமானதாக்குகிறது.

தனது தங்கையின் வீட்டில் போராளிகள் குழு தங்கியிருப்பதை, விருப்பமின்மையுடனும் எரிச்சலுடனுமேயே பக்கத்து வீட்டிலுள்ள முதியவர் நோக்குகிறார். அவர்களின் இளமைக் குறும்புகளினாலும் கோபமடைகிறார். ஆனால், நாளடைவில் அந்த இளம் போராளிகளில் அவரிற்கு நேசம் ஏற்படுகிறது; தனது பிள்ளைகளைப் போலவே நடத்துகிறார். ஒருநாள் கோழிக்கறியும் சமைத்துக் கொடுக்கிறார். பக்கத்து வீட்டிலுள்ள இன்னொரு குடும்பமும் ஒரு விசேட நாளின்போது, போராளிகளிற்கு உணவு கொண்டுவந்து வழங்குகிறது. அக்குடும்பத்துக் குழந்தை போராளிகளின் 'செல்லக் குழந்தை' யாகிவிடுகிறது.

போராளிகளிற் சிலர் சண்டையில் காயப்பட்டுள்ள போது, மருத்துவமனை சென்று முதியவர் ஆறுதல் சொல்கிறார். ஒருவன் மாவீரனாவது அவரை மேலும் வருத்துகிறது. அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்கிறார். ஏனைய பொது மக்கள் அஞ்சலி செய்வதும், காட்டப் படுகிறது. போராளிக்குழு வேறு இடத்திற்குச் சென்ற பின் அவரிற்கு வெறிச்சென்றிருக்கிறது. போராளிகளின் புதிய குழுவொன்று அவ்வீட்டிற்கு வருகிறது. ஆர்வத்துடன், அவர்களின் வருகையை அவர் எதிர்கொள்கிறார்.

முக்கியமான விடயம் கருத்துப் பிரச்சாரமாக அல்லாது, இயல்பான சம்பவச் சித்திரிப்பு, பாத்திர உருவாக்கம் என்பவற்றின மூலமாகப் பார்வையாளரிடம் தொற்றவைக்கப்படுகிறது. காட்சிப்படுத்தல்கள் 'சினிமா மொழி'க்குரிய அர்த்தத்துடனேயே வெளிப்படுகின்றன. சண்டைக்குப் போகப் போகும் செய்தியை 'சூட்டி' என்ற போராளி, "அப்பு நாங்க போப்போறம்" என்று சொல்லியபடி கயிற்றுக் கொடியில் வெள்ளைத் துவாயைப் போடுகிறான். அவனது முகத்தை மறைத்தபடி அது அண்மைக் காட்சியாக வருகிறது. சண்டையில் சூட்டி இறக்கிறான். 'வெள்ளைத் துவாய்' மரணத்தின் குறியீடாகவே உள்ளது. சூட்டியின் மரணச் செய்தி கேட்ட முதியவரின் கை தூணிலிருந்து வழுகிக் கீழ்நோக்கி வருவதும், குழந்தையின் அழுதமுகமும் அண்மைக் காட்சிகளாக வருவது இழப்பின் 'துயரத்தை'ச் சூசகமாகக் காட்சிப்படுத்தும் திறமைக்கு உதாரணங்களாகின்றன. உணர்வில் ஏற்படுத்தும் மொத்தத் தாக்கத்தினால், இப்படமும் ஞானரதனின் முக்கியமான படமாக உருவாகியுள்ளது என்றே கூறவேண்டும்.

**இ)** இன்னும் சில முழுநீளப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 'மாவீரர் தினம்' அனுஷ்டிப்பதில் இராணுவத்தினால்

மக்களிற்கு ஏற்படும் நெருக்கடிகள், மக்கள் அஞ்சலித் தீப்பந்தம் ஏந்திய படி திரளுதல், குறித்த நேரத்தில் அஞ்சலி மணியைச் சிறுமி அடித்தல் என்பவற்றை பொ.தாசன் இயக்கிய 'தமிழோசை' படம் வெளிப்படுத்துகிறது. உணர்வில் பதிவதாக இவை இருந்த போதிலும், துணிவுடன் ஐக்கியப்பட்ட மக்களைக் கண்டு, சிங்கள இராணுவ அதிகாரி தொப்பியைக் கழற்றி 'கௌரவம்' செய்வதான இறுதிக் காட்சி நம்பகத் தன்மையற்றதாக இருக்கிறது.

தாசனின் 'இன்னுமொரு நாடு' (79 நிமிடம்) என்ற படம், நெடுங்கேணிப் பாடசாலையில் இந்திய அமைதிப்படைப் பிரிவின்மீது மேற்கொள்ளப்பட்ட-துணிகரமான உண்மைத் தாக்குதல் சம்பவத்தைச் சித்திரிக்கிறது. பாடசாலையில் பகல்வேளைகளில் தங்கியிருக்கும் அமைதிப்படை ஆசிரியைகள் - மாணவிகள் மீதான சீண்டல்கள், துன்புறுத்தல்கள், போராளிகளின் வேவு நடவடிக்கைகள், மக்களின் ஒத்துழைப்பு என்பன பதிவாகியுள்ளன. சிறிய மண்கோவிலில் ஒரு கிழவி, "பிள்ளைகளைக் காப்பாற்று" எனப் போராளிகளிற்காக இறைஞ்சும் அண்மைக் காட்சி போன்றவை சிறப்பானவை.

சி.சேரலாதன் 'உறங்காத கண்மணிகள்" (79நிமிடம்) என்றபடத்தைஇயக்கியுள்ளார். வேவுப் புலிகளின் நடவடிக்கைகளை இது சித்திரிக்கின்றது. அவர்கள் மேற்கொள்ளும் உயிராபத்து நிறைந்த - திகிலூட்டும் செயற்பாடுகள் நன்றாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இரவில் மேற்கொள்ளப்படும் வேவுச் செயல்கள், போராளிகள் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் அதிர்ச்சியைத் தருகின்றன. அவர்களின் அர்ப்பணிப்பும் தியாகமும் நெஞ்சில் கசிவினை ஏற்படுத்துகின்றன. ஆங்கிலப் படம் போல் சிறப்பாக இருந்தாலும் ஆரம்பக் காட்சிகளில் உரையாடல்கள் செயற்கையாயுள்ளன. தவிர, தங்கமணி என்ற பாத்திரத்தின் மிகையான நகைச்சுவை நடிப்புக் காட்சிகள் - மூன்றாந்தரத் தமிழகத் திரைப்படங்களை நினைவூட்டுவதோடு, படத்தின் காத்திரத் தன்மைக்கும் ஊறு ஏற்படுத்துகின்றன.

**ந.கேசவராஜனின் 'பிஞ்சுமனம்'** (73 நிமிடம்) மக்களைப் பற்றியது. மனைவி பிள்ளைகள் வெளிநாட்டிலுள்ள தபால் அதிபர். முன்பு சண்டையினால் மனஸ்தாபப்பட்டிருந்தபோதும், பக்கத்து வீட்டிலுள்ள குடும்பத்தின் வறிய சிறுமியின் தாயும் தகப்பனும் குண்டுவீச்சில் கொல்லப்பட்டபோது சிறுமியிடம் ஆதரவு காட்டி, பின்னர், அநாதைப் பிள்ளைகளிற்கு ஆதரவு கொடுத்துவரும் 'செஞ்சோலை' நிறுவனத்தில் சேர்த்துவிடுகிறார். நடிப்பு, பின்னணிப் பாடல் போன்றவை செயற்கைத் தன்மையால் 'இந்தியத் தமிழ்ப்படங்களை' ஒத்துள்ளன.

**கேசவராஜனின் 'கடலோரக் காற்று':** சமாந்தரமாக இரண்டு கதைகள் -

அ) கடற்புலிகள் - கரும்புலிகள் பற்றி.

ஆ) கடலோர மக்கள் - வாழ்க்கைப் பிரச்சினைகள் - காதல் என.

இரண்டிற்குமிடையே இசைவின்மை, போதாமை, உள்ளன. முதலாவதில் விவரணப் படத்தன்மை. மக்களைச் சித்திரிப்பதில், சில பாத்திரங்கள் மனதில் பதிகின்றன. நகைச்சுவை, இந்தியத் தமிழ்ப் படம் போல் வலிந்து புகுத்தப்பட்டதாகவுள்ளது. சிறப்பான காட்சிப்படுத்தல்கள் பாராட்டுக்குரியவை.

**குயிலினியின் 'உப்பில் உறைந்த உதிரங்கள்'** ஒரு கடற்படை முகாம்மீதான கடற்புலிகளின் தாக்குதல் சித்திரிக்கப் படுகிறது. அதற்குரிய பயிற்சிகளும் காட்டப்படுகின்றன. சாகசக் கதைப் பொருளைக் கொண்ட படம் (Adventure Film). காட்சிப்படுத்தல்கள் - குறிப்பாக கடற்புலிகளின் கடற்பயிற்சிகள் சிறப்பாக வந்துள்ளன. சாகச நிகழ்வை ஆவணப்படுத்தும் நோக்கு

பாராட்டுக்குரியது. ஆயினும், பாத்திர வெளிப்பாடு நடிப்பில் மையங் கொள்ளாமையும், மையப் போராளி சார்ந்து தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் அழுத்தப்படாதமையும் படத்தைப் பலவீனப்படுத்துகின்றன.

'தேசத்தின் புயல்கள்' பலாலித் தளத்தினுள் கரும்புலிகள் ஊடுருவித் தாக்குவதைச் சித்திரிக்கிறது. 'தாயகக் கனவு', 'உயிர்ப் பூ', 'திசைகள் வெளிக்கும்', 'மண்ணுக்காக', 'தாயகமே தாகம்' ஆகிய படங்களும் ஏற்கனவே வந்துள்ளதாகத் தெரிகிறது. பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

## II.குறும்படங்கள்

சிறிதொரு மையப் பொருளைக் கொண்டு, குறுகிய காட்சி நேரத்தை உடையனவாகக் குறும்படங்கள் அமையும். பொதுவில் உரையாடல் அற்றவையாக இருக்கும். ஆனால், உரையாடலைக் கொண்டவையும் உண்டு. எழுபதுகளில் சிங்களத் திரையுலகில் குறும்படங்கள் வளர்ச்சியுற்றிருந்தன. குறும்படங்களும் திரையரங்குகளில் நடைபெற்றன. 'சத்துரோ', 'சராகி', 'சிக்ரட் கொட்டச', 'தீப்தி' நினைவில் வருகின்றன. மினிசா சஹ கப்புட்டா' (மனிதனும் காகமும்) போன்ற குறும்படங்கள் உலகத் திரைப்பட விழாக்களில் பரிசுகளும் பெற்றன. தமிழ்நாட்டில் மிக அண்மைக் காலத்திலேயே B.லெனின் மற்றும் இளைஞர் பலரால், குறும்படங்கள் உருவாக்கப்படுகின்றன. இலங்கையில் 'இனி ஒரு விதி' என்ற பரதனின் குறும்படத்துடன், 'நிதர்சனம்' நிறுவனம் இம்முயற்சியை ஆரம்பித்து வைத்தது. இன்றுவரை சுமார் நாற்பது குறும்படங்கள் வரையே என்னால்

ஞானம் 49ஆம் இதழில் (ஜூன் 2004)

### புதுவை இரத்தினதுரை அவர்களது நேர்காணலில்...

**கேள்வி : போர்நீங்கி நீடிய சமாதானம் நிலைக்கின்ற போது போராட்ட காலக்கவிதைகள், போராளிக் கவிஞர்கள் அவர்களின் சிந்தனைகள் எதிர்காலத்தில் எதிர்நோக்கும் மாற்றங்களைப்பற்றி தங்களால் எதிர்வு கூற முடியுமா?**



புதுவை: போராட்ட இலக்கியங்கள் போரின் இலக்கியங்கள் போரட்டம் முடிந்த பின் என்ன ஆகும் என்று நீங்கள் ஆதங்கப் படுவதைப்போலவே நாங்களும் ஆதங்கப் பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப் போராட்டக் கவிதைக்குரிய பணி போராட்டத்துடன் முடிந்து விடுமென நீங்கள் நினைக்கிறீர்களா? போராட்டக் காலக் கவிதைகளுக்கு இரட்டைப்பணியுண்டு. இரட்டைச் சுமையுண்டு. ஒன்று போராட்டம் நடந்து கொண்டிருக்கிற காலத்திலேயே அது போராளிகளை உருவாக்கும். போராட்டத்துடன் மக்களை இணைக்கும். போராட்டத்தை வெற்றியின் திசை நோக்கி நகர்த்தும். அந்தக் கவிதையும் சேர்ந்து களமுனைக்குப் பயணிக்கும். அங்கு மாவீரர் விழும்போது கவிதை அழும் வெற்றிகள் வரும்பொது கவி தையும் சந்தோசிக்கும். இது அந்தக்காலத்திலேயே கவிதை தன்பணியைச் செய்து கொண்டே போகும். இத்துடன் இந்தக் கவிதையின் பணி முடியாது. போராட்டம் வெற்றிபெற்று அதன் செல்வழி திசை திரும்பும்போது அந்தக் கவிதைக்குப் பணி இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கு இந்தப் போரை எப்படி நடத்தினோம், இந்தப் போராட்டத்தை வெற்றி கொள்வதற்கு நாங்கள் எத்தனை விலை கொடுத்தோம், எத்தனை வதை சுமந்தோம். நீங்கள் நினைப்பது போல் இது றோட்டில் கிடந்து கிடைத்த விடுதலையல்ல. இதற்கு உன் அப்பனைப் பலிகொடுத்து நான் பெற்ற விடுதலை என்று ஒரு தாயும் உன் அண்ணனைப் பலிகொடுத்துப் பெற்ற விடுதலை என்று ஒரு தங்கையும் சொல்லுகின்ற ஒரு பணியையும் இந்த இலக்கியம் செய்யும். வெற்றிபெறும்போது வித்துடல்களுக்கு அஞ்சலி செய்யும். அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும். இப்படித்தான்.. இப்படித்தான்.. என்று சொல்லும். மற்றக் கவிதைகளுக்கு ஒற்றைப்பணி, போராட்டக்கவிதைகளுக்கு இரட்டைப்பணி. அந்தக் காலத்தில் பயணம் செய்து அதுக்கு அடுத்த காலத்திலும் பயணம் செய்யும். இப்படியான கவிதைகள்தான் நீண்ட காலம் நிற்கப் போகின்றன.

பார்க்க முடிந்தது. இக்குறும்படங்களில் 'கண்ணீர்' தவிர ஏனையவை உரையாடலைக் கொண்டுள்ளன. எமது சூழலிலுள்ள கருத்து வெளிப்பாட்டின தேவை பரந்த பார்வையாளரின் புரிதல் மட்டம் என்பவை கருதி, இது தேர்ந்திருக்கலாம். ஆயினும், இப்படங்களில்காட்சிருபவெளிப்படுத்தல்கள் பெரும்பாலும் நன்றாக வந்துள்ளன. பெரும் பாலான குறும்படங்களின் காட்சி நேரம் இருபது நிமிடங்களிற்கு உட்பட்டது. ஒரு சிலவே முப்பது நிமிடங்கள் வரை கொண்டுள்ளன.

வசதி கருதி மக்களைப் பற்றியவை, போராளிகளைப் பற்றியவை என இரண்டு பிரிவுகளாக இவற்றைப் பிரித்து நோக்குவோம்.

### A.மக்களைப் பற்றியவை

### அ) அழியா நிழல் (27நிமிடம்)

அமலாவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்டுள்ளது. வன்னியில் இடம்பெயர்ந்து செல்லும் ஒரு குடும்பம், மரத்தடியில் தங்கும் நிலைமை, அதன் வறுமை என்பன சித்திரிக்கப்படுகின்றன. வழியில் காணும் அநாதைச் சிறுமியைத் தம்முடன் கொண்டு செல்லும் மனதாபினம் அக்குடும்பத்திற்குள்ளது. வறுமையால் சிறுவன் படிக்க முடியவில்லை. தேநீர்க் கடையில் வேலை செய்கிறான். பள்ளிச் சிறுவர்களைச் சீருடையில் காணும்போது அவனது கண்களில் ஏக்கம். தகப்பன் சைக்கிளில் விறகுகட்டி வியாபாரம். விமானக் குண்டுவீச்சில் தகப்பன், சிறுவன், சிறுமி தவிர குடும்பத்திலுள்ள ஏனையோர் கொல்லப்பட்ட துயரத்துடன் மீண்டும் இடம்பெயர்ந்து செல்கின்றனர். இந்த அவல வாழ்வைக் குயிலினியின் 'கமெரா' துல்லியமாய்ப் படம் பிடித்துத் தருகிறது. பாத்திரங்கள் மனதில் பதிகின்றனர். சாதாரண மக்கள்மீதான அரசின் கொடூரம் இயல்பாக அம்பலமாகிறது. இது முக்கியமானதொரு குறும்படம்.

### ஆ) அப்பா வருவார் (18 நிமிடம்)

இடம்பெயர்ந்த குடும்பமொன்றின் வறுமை. தாங்க முடியாத நிலையில், தனது சொந்தக் காணிக்குள்ளேயே அச்சத்துடன் சென்று, விழுந்து கிடக்கும் தேங்காய்களைஉரிக்கும்போது இராணுவம் வருகிறது. ஏளனமாய் அவனுடன் கதைக்கிறது. உரிந்த தேங்காய்களைச் சாக்கினுள்போட்டு எடுத்துச் செல்லுமாறும் சொல்கிறது. அவன் பயந்து கொண்டே சாக்குடன் நடக்கும்போது பின் புறம் சுட்டுக் கொல்கிறது. கெஞ்சல்கள் மதிக்கப்படவில்லை-கேலிச் சிரிப்புகளையே வீசுகின்றனர். மனைவியுடன் பிள்ளையும் - அப்பா 'கேக்' வாங்கி வருவாரெனப் பாதையைப் பார்த்தபடி நிற்கின்றனர். பாத்திரங்களின் மிகை உணர்ச்சி வெளிப்பாடுகுறையாகஇருந்தாலும், கொடுமையின் குரூரப் பதிவு மனதினைத் தொடுகிறது. கேசவராஜன் இதனை இயக்கியுள்ளார்.

### இ) இனி (15 நிமிடம்)

நிதர்சனம் மகளிர் பிரிவு இதனை உருவாக்கி உள்ளது. போர் நடவடிக்கைச் சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை கைவிடப்படல் - பொறுப்பின் சுமை ஆண் மேலாதிக்கத்தன்மை என்பன வெளிப்படுவது முக்கியமானது. தீவுப் பகுதிக்குள் இராணுவம் உட்புகும் போது கணவன் மற்றவர்களுடன் யாழ்ப்பாணத்திற்கு ஓடித் தப்பிவிட, பிள்ளைகளுடன் அங்கு தங்கவேண்டி ஏற்பட்ட பெண் சில ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணம் வருகையில், கணவன் இன்னொரு திருமணம் செய்திருப்பதைக் காண்கிறாள். நீதி கிடைக்க மகளிர் பிரிவை நாடுகிறாள். காட்சிப்படுத்தலில் சிறப்புக் காணப்படுகிறது.

### ஈ) வெல்லும் வரை (18 நிமிடம்)

இது கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவத்தைச் சித்திரிக்கிறது. மரத்தடிக் கோவிலின் ஐயர், மரத்திலுள்ள 'கொடி'யை இறக்கிச் சமிக்ஞை கொடுத்து, போராளிகள் வந்ததும் சாப்பாடு கொடுக்கிறார். இதனைக் கண்டுபிடிக்கும் இராணுவம், ஐயரைக் குரூரமாக அடித்துக் கொல்கிறது. அதே இராணுவ ரோந்துக் குழுமீது போராளிகள் துணிகரமான திடீர்த் தாக்குதலை நிகழ்த்தி அழிக்கின்றனர். போராளிகளிற்கும் மக்களிற்கும் இடையிலுள்ள நேசஉறவும் - அதனாலேயே அவர்கள் உயிர்வாழ்ந்து போராடுகிறார்கள் என்பதும் நன்கு வெளிப்படும் இப்படத்தை, புனிதன் இயக்கியுள்ளார்.

### உ) வேருக்கு நீர்

இதுவும் ஓர் உண்மைச் சம்பவத்தையே சொல்கிறது. வீட்டுக்குச் சாப்பிட வந்த போராளியான மகன், ஒருவன் காட்டிக் கொடுத்ததில் இராணுவம் சுற்றி வளைக்கத் தப்பிச் செல்கிறான். அவசரத்தில் அவன் விட்டுச் சென்ற கிரனேட்டை மார்புச் சட்டைக்குள் மறைத்த தாய், முகாமிற்கு விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, சிறுநீர்க் கழிப்பிட மண்தரையில் மறைத்து வைத்து, திரும்புகையில் மீண்டும் அதை எடுத்து முன்போல் மறைத்து. பிறதொரு நாள் வரும் மகனிடம் சேர்ப்பிக்கிறாள். முதிய தாயின் துணிவும் சாமர்த்தியமும் இயல்பாக நன்கு வெளிப்படுகின்றன. படப்பிடிப்பையும் இயக்கத்தையும் தவம் கையாண்டுள்ளார்.

**'கண்ணீர்** (11 நிமிடம்)', **சொந்தங்கள்'** (29 நிமிடம்) என்பனவற்றில் - படையினரின் கொடூரத்தால் சாதாரண மக்களிற்கு நேர்ந்த அவலம் காட்டப்படுகிறது. **'சின்னச் சின்ன வீடுகட்டி'** (30 நிமிடம்) படம். 'அம்புலன்ஸ்' வண்டி வன்னியிலிருந்து வவுனியா செல்ல முடியாததால் குழந்தை செத்துப் பிறக்க தாயும் மரணமடைய நேர்வதைக் காட்டுகிறது. ஆனால், இம்மூன்று படங்களிலும் செயற்கைத்தன்மைகள் பல காணப்படுகின்றன.

### B.போராளிகளைப் பற்றியவை.

### அ) நேற்று (16 நிமிடம்)

தனிமைப்பட்ட ஊர் எல்லைப் பகுதியில், இந்திய அமைதிப்படை ஒரு போராளியைப் பிடிக்கத் துரத்துகிறது. அவன் துப்பாக்கியால் சுட்டபடியே ஓடி வளவிலுள்ள கிழவியிடம் சொல்ல, அவள் அடைக்கலம் தருகிறாள். வைக்கோல் போட்டுவைக்கும் தீவனத் தொட்டியில் அவனை மறைத்துவைக்கிறாள். இராணுவம் கண்டுபிடிக்க இயலாமல் திரும்பிச் செல்கிறது. ஒரு போராளி தனது அலுவலகத்திலிருந்து நாட்குறிப்பைப் புரட்டும்போது, நினைவில் விரிவாகக் கதை அமைந்துள்ளது. போராளிகளிற்கும் மக்களிற்குமிடையிலான நெருங்கிய பிணைப்பை வெளிப்படுத்தும், சிறந்த வகைமாதிரிப் படைப்பாக அமைந்துள்ளமை முக்கியமானது.

நாட்குறிப்பில் போராளியின் கை, இராணுவத்தினரின் கால்கள், உதட்டில் பீடியுடன் தெரியும் இராணுவத்தானின் முகம், பெட்டி இழைத்தபடியுள்ள கிழவி, இறுதியில் கிழவியின் கையிலிருந்து தேநீருள்ள மூக்குப்பேணியை வாங்கும் போராளியின் கை எனவுள்ள அண்மைக்காட்சிச் சட்டங்கள் அழகாக உள்ளன. அவ்வாறே போராளியைத் துரத்தும் போதுள்ள விரைவான தொலைவுக்காட்சிகளும் அமைந்துள்ளன. மையக் கருவை இறுக்கமாக பிசிறல்கள் இல்லாது, இயல்பாக பாத்திரங்களுடன் காட்சிரூப மொழியில் நேர்த்தியாக வெளிப்படுத்தியதால் ஏற்படும் மொத்தப் பாதிப்பு, மிகச் சிறந்த குறும்படம் என்ற உணர்வைத் தருகிறது. இக்குறும்படமும் 'முகங்கள்', 'காற்றுவெளி' ஆகிய முழுநீளப் படங்களுடன் சேர்ந்து ஞானரதனுக்கும்

ஈழத்துத் திரைத்துறைக்கும் பெருமை சேர்க்கிறது!

### ஆ) தாய் (14 நிமிடம்)

இது ஓர் உண்மைக்கதை 'தவா'வின் படப்பிடிப்பில் பொ.தாசனின் இயக்கத்தில் உருவாக்கப்பட்டது.

நீண்ட நாளின் பின்னர் வீட்டிற்குவரும் போராளிக்கு, தாய் பாசத்துடன் உணவு கொடுக்கிறாள். அவன் சாப்பிடு முன்னரே, அவனது நண்பன் காட்டிக்கொடுத்ததில் இந்திய அமைதிப்படை கூலிப்படையுடன் வருகிறது. தாய் மகனைக் காப்பாற்ற, அழுதபடியேகட்டிப்பிடிக்கிறாள். அவளது அணைப்பிலேயே 'சயனைற் குப்பி'யைக் கடித்து இறக்கிறான். தாய், சகோதரிகளின் துயரம், போராளியின் சடலத்தின் மீது கத்தியபடியே கயிற்றினால் அடிக்கும் ஒரு கூலிப்படையினரின் 'வக்கிரம்' என்பன, மௌனத் துயரத்தையும் கோபத்தையும் வெற்றிகரமாய் எம்முள் உருவாக்குகின்றன.

### இ) கோலமிட்ட கைகள் (16 நிமிடம்)

சோதனை என்ற பேரில் பொது மக்களைத் துன்புறுத்தல்களிற்கு உள்ளாக்கும் இராணுவக் காவலரணொன்றை இரண்டு பெண் போராளிகள் வேவு பார்த்து, இன்னொரு நாளில் தாக்கி அழிக்கின்றனர். ஒரு போராளி மரணம் அடைய மற்றையவர் தப்பிச் செல்கிறார். இதிலும் போராளிகளிற்கான பொதுமக்களின் உதவி நன்றாக வந்துள்ளது. போராளிகள், இராணுவத்தினர், போராளி என்று தெரிந்ததும் பரிவுடன் தனது சேலையினால் அந்தப் போராளியின் முகத்தைத் துடைத்து வழி சொல்லும் ஆச்சிக்கிழவி, சைக்கிளில் போராளியை ஏற்றிச் செல்லும் பெரியவர் எல்லாம் இயல்புடன் நன்கு உருவாகியுள்ளனர். சிறப்பான காட்சிச் சித்திரிப்புகள். நிமலா படப்பிடிப்பைச் செய்ய குயிலினி நெறியாள்கையை

**ஒப்பீட்டளவில் போராளிகள் – ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கமாகக் கொண்டவை எண்ணிக்கையில் அதிகமாகவும், மக்களை அவர்களின் வாழ்நிலைப் பிரச்சினைகளைச் சித்திரித்தவை குறைவாகவும் இருந்தன. திரைப்பட உருவாக்கம் தொடர்பான முறையான கற்கை நெறிகளை மேற்கொண்டவர்களையோ, அத்துறையில் முன் அநுபவங்கொண்டவர்களையோ வைத்து இம்முயற்சிகள் நடைபெறவில்லை.**

மேற்கொண்டுள்ளார்.

### ஈ) நெருப்பு மலர்கள்

இது, பெண் வேவுப்புலி அணிகள் இரண்டைப் பற்றியது. தவிர்க்க இயலாது ஓர் அணி, எதிர்கொண்ட இராணுவத்துடன் சண்டையிலீடுபட நேர்கிறது. மற்றைய அணி சாதகமான தாக்குதலுக்குரிய சூழலிலும் அமைதி காத்து, வேவுத் தரவுகளைத் திரட்டி, வந்த நோக்கத்தை நிறைவேற்றி முகாம் திரும்புகிறது. இரண்டு அணிகளும் பாதுகாப்பாகத் திரும்பியதில், முகாமில் ஏனைய போராளிகளின் மகிழ்ச்சி ஆரவாரம்.

திகிலும் விறுவிறுப்பும் நிறைந்ததான சூழ்நிலை நன்கு காட்சிப்படுத்தப்படுகிறது. வேவுப்புலிகளின் நெருக்கடி சூழ்ந்த பணிகளையும் பார்வையாளன் தனது அனுபவமாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இப்படமும் நிமலாவின் படப்பிடிப்பில் குயிலினியின் நெறியாள்கையில் உருவாகி

யுள்ளது.

மேலேயுள்ள நான்கு குறும்படங்களும் முக்கியமானவையெனக் கருதுகிறேன்.

**உ)** பரதனின் **'இனி ஒரு விதி'** ஞான ரதனின் **'நதிமூலம்'** (15 நிமிடம்) குயிலினி யின் **'இன்றிலிருந்து'** (26 நிமிடம்) ஆகியன, போராளிகளாக மாறியதன் பின்னணியைச் சொல்வனவாக அமைந்துள்ளன. காட் சிப்படுத்தல்கள் இவற்றில் நன்றாக அமைந்திருக்கின்றன. ஆயினும், வெளிப் படையான கருத்து சொல்லுதல்கள் - சில பாத்திரங்களில் வெளிப்படும் செயற்கைத்தனம் போன்ற பிசிறல்களால், 'முழுமை' பாதிக்கப்பட்டுள்ளது. என்றாலும், இரண்டாம் படியிலுள்ளனவாக இவற்றைக் கருதலாம்.

**'இதயத்தில் இவர்கள்'** (18 நிமிடம்) சிறு வயதில் பிரிந்து விட்டதில் அண்ணன் எனத் தெரியாத போதும், சந்தித்த வேளைக-ளில் பாச ஈர்ப்பு ஏற்பட்ட இளைஞனே கரும்புலி வீரனாய் மரணித்த தனது அண்ணனென அறிந்து துயரடையும் தங்கை பற்றியது. **'பதித்த பாதங்கள்'** (19 நிமிடம்) பதுங்குகுழிகளிலும் காவலரண்களிலும் 'எதிரி'யை எதிர்பார்த்திருக்கும் பெண் போராளிகளின் செயல்களைச் சித்திரிக் கிறது. அவர்களிடையிலான நேசமும், கேலிச் செயல்களும், சண்டையின் போதான வீரமும் காட்டப்படுகின்றன.

**'வீரசீலம்'** (11 நிமிடம்), **'ஒளிபடைத்த கண்'** (15 நிமிடம்) ஆகிய இரண்டு உண்மையான பாத்திரங்களைப் பற்றியவை. ஆயினும், செயற்கைத் தன்மையான காட்சிகளும், இயல்புத்தன்மையற்ற நடிப்பு வெளிப்பாடும் கொண்டு பலவீனமடைந்துள்ளன.

**ஊ) யாருக்காக? (17 நிமிடம்)**

பொ.தாசனின் நெறியாள்கையில் உருவாக் கப்பட்ட இது தனியாகவே நோக்கத்தக்கது. ஏனெனில் இது, பௌத்த விழுமியங்களில் பற்றுக்கொண்டுள்ள -ஆனால் வறுமை காரணமாக இராணுவத்தில் இணைந்து கொண்டுள்ள ஒரு சிங்கள இளைஞ னின் மன உணர்வுகளையும், நல்ல செய லையும் சித்திரிக்கிறது. 14 - 40 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களைக் கொல்லவோ பிடிக்கவோ ஆணையிடப்பட்டு, தமிழ்க் கிராமத்துள் நுழைந்த இராணுவக் குழு-வில் ஒருவனாக அவன் துவக்குடன் வருகி றான். ஓலைக் குடிசையின் முன்னால் அமர்ந்து, வறுமையினால் கஞ்சி மட்டும் குடிக்கும் கணவன் - மனைவி - இரண்டு சிறுகுழந்தைகள் கொண்ட குடும்பம். இராணுவத்தைக் கண்டதில் அவர்களின் முகங்களில் பீதி, இராணுவத்தான் கணவனை அழைக்க மனைவி கெஞ்சுகிறாள். அவன் கிழிந்த ஊத்தைச் சாறத்துடன் வரும்போது இராணுவ வீரனிற்கு - தனது சிறிய வீடு, வறுமைச் சூழலில் கல்லுடைத்த தனது தொழில், தாய், இயலாத தகப்பன், சகோ தரி, 'பௌத்தன் என்பதால் கெட்டவனாய் நடக்கமாட்டேன்' என அவர்களிற்கும் விகாரைப் பிக்குவிற்கும் சொல்லிய தெல்லாம் நினைவிற்கு வருகின்றன. வீட்டுக்காரனிற்கு "போ போடா" எனச் சொல்லிவிட்டு, தன்னருகே வந்த பிறி-தொரு ராணுவத்தானின் கவனத்தையும் திருப்பிவிட்டுச் செல்கிறான். வாசலைக் கடந்து செல்கையில் திரும்பிப் பார்க்கும் அவனது முகத்தில், துயருடன் கூடிய நிறை-றவு தெரிகிறது. கணவனதும் மனைவியி-னதும் முகங்களிலும் ஆச்சரி யத்துடனான நன்றியுணர்வு.

அடுத்து, "ஜே.ஆர். நல்ல பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதந்தாங்கிப் போராடவேண்டி இருந்திராது" என்ற பிரபாகரனின் வரிகள் எழுத்தில் காட் டப்படுகின்றன. ஒரு நல்ல 'பௌத் தனை' மையப்படுத்திக் கலாரீதியாக உரு வாக்கப்பட்டுள்ள இப்படம், சிங்கள மக்களைச் சென்றடையவைப்பது, இன்றி யமையாததாகும்.

### III. விவரணப்படங்கள்

விவரணப்படங்கள் ஆவணப் பதிவுத்தன்மையையும், பிரசாரத்தையும் நோக்கமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் சண்டைகள், போராளிகள் பற்றியவையாகவே உள்ளன. மக்களின் பல்வேறு தேவைகள் - பிரச்சினைகள், நாட்டு நிலைமைகள் தொடர்பானவை இல்லையென்றே சொல்லலாம்.

'ஓயாத அலைகள் - I, II, III' 'ஜெய சிக்குறு எதிர்ச் சமர்' ஆகிய விவரணப்படங்கள், சண்டைகளையும் ஆயுத மீட்பினையும் களமுனைத் தளபதிகளின் கருத்துகளையும் வெளிப்படுத்துகின்றன. சண்டை நடைபெறும் போது களத்தில் நின்றபடி அபாயத்தின் மத்தியில் - போராளிக் கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட உண்மைப் பதிவுகள் என்பது, இவற்றுக்கு விசேடத் தன்மையைக் கொடுக்கின்றது.

கரும்புலிகள் பற்றிய விவரணப் படங்கள் தாக்குதல்களின் முன்னரான தயாரிப்புப் பயிற்சிகளில் கரும்புலிகள் ஈடுபடுவதையும், அவர்களது தனிப்பட்ட ஈடுபாடுகள் - உறவுச் செயற்பாடுகளையும், மாவீரரான பின் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தியுள்ளன.

'சங்கே முழங்கு' என்ற படம், பல்வேறு இடங்களில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளின்தொகுப்பாக உள்ளது.

ஈழத் தமிழர் போராட்டச் சூழலில் மையங்கொண்டு பொருள்பரந்துபடுவதான சமூக, கலாசாரப் பிரச்சினைகளை வெளிப் படுத்தும் விவரணப்பட முயற்சிகளின் அவசியத்தை இவை உணர்த்தி நிற்கின்றன. அத்துடன் - உரிய வகையில் தயாரிக்கப்பட்ட தெளிவான திரைப் பிரதியை, கதைப்படங்களில் கையாளப்படும் பல்வேறு படப்பிடிப்புக் காட்சி முறைகளைக் கையாண்டு, இறுக்கமான தொகுப்புடன், பொருத்தமான பின்னிசையையும் இணைத்து, கலாபூர்வமான விவரணப் படங்கள் உருவாக்கப்படலாம்.

முடிவுரையாக, இதுவரை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, குறிப்பாக ஈழத்துத் திரைப் படங்களில், சமகால வெளிப்பாடு போராளிகள், மக்கள், யுத்த நிலைமைகள், வெற்றிகள் சார்ந்து நிகழ்ந்துள்ளது. திரைப்பட வடிவத்தின் அடிப்படை அம்சமான காட்சிப்படுத்தல் முக்கியம்பெற்று வளர்ச்சி கண்டுள்ளது. அத்துடன் நம்பகத்தன்மையும் பெருமளவில் பேணப்பட்டுள்ளது. தொழில்நுட்பரீதியான குறைபாடாக குறிப்பாக, ஒலிப்பதிவில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன.

முறையான பயிற்சிகள் இல்லாதிருந்த போதிலும், இயல்பான ஆற்றல், அனுபவங்கள் மூலமான திறன் வளர்ச்சி, என்பவற்றால் கவனத்திற்குரிய நெறியாளர்களாக ஞானரதன், பொ.தாசன், குயிலினி, அமலா, கேசவராஜன், சேரலாதன் ஆகியோர் உருவாகியுள்ளனர். கவனத்திற்குரிய படப்பிடிப்பாளர்களாக ஸ்ரீராம், நிமலா, தவா, புனிதன், பபி முதலியோர் உருவாகியுள்ளனர். இவை நிறைவுதரும் அம்சங்களாகும்.

இறுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட படங்களிற்கு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் துணைத் தலைப்புகளிட்டு (Subtitles) ஏனைய மொழியினர் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில், எமது மக்களின் துயரமும் வீரமும் கலந்த வாழ்நிலைகளை - இந்தக் காலத்தின் ஆன்மாவை உணர்வுபூர்வமாக அவை எடுத்து விளக்கும் என்பதைக் குறிப்பிட்டு, எனது ஆய்வுரையை நிறைவு செய்கிறேன்.

**குறிப்பு :** *"படப்பெட்டி" இதழில் (ஏப்ரில் 2012) வெளியானது.*

சிறுகதை

அறையின் நான்கு பக்கச் சுவர்களும் என்னை நோக்கி நகர்கின்றன. மெதுமெதுவாக நகர்கின்றன. இன்னும் கொஞ்சநேரத்தில் இந்தச் சுவர்களுக்குள் நான் நசுங்கிச் சாகப்போகிறேன்.

தலைசுற்றுகிறது. நெஞ்சு விம்மித் தணிகிறது. இதயம் படபடக்கிறது. தேகம் குப்பென்று வியர்க்கிறது. கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டு நான் வீரிட்டு அலறுகிறேன்.

சுவரில் மாட்டப்பட்டிருக்கும் மணிக்கூட்டில் நேரம் காலை எட்டு மணி. அதன் டிக் டிக் சத்தம் பெரிது பெரிதாகிக் கொண்டு வருகிறது. என்னை நெருங்கி நெருங்கி வருகிறது. ஏ.கே. 47ன் சத்தம் போல் என் காதைப் பிளக்கிறது.

"சும்மா சத்தம் போடாதையடி பிள்ளை." அம்மா அடுப்படியிலிருந்து பலமாகக் கத்துகிறா.

கண்களைப் பொத்தியிருந்த கைவிரல்களைச் சிறிது விரித்து, நீக்கலினூடாகப் பார்க்கிறேன். இப்போது சுவர்கள் பின்புறமாக நகரத் தொடங்குகின்றன. சிறிது நேரத்தில் மீண்டும் தமது இடத்தில் பொருந்திக் கொள்கின்றன.

# காட்டுப் பூனைகளும் பச்சைக் கிளிகளும்...!

● தி. ஞானசேகரன்

நேரம் எட்டு ஐந்து.

ரியூசன் வகுப்புக்கு நேரமாகிறது. வசந்தி, கவிதா, பூரணி, நான் எல்லோரும் சேர்ந்துதான் சைக்கிளில் ரியூற்றறிக்குப் போவோம். இண்டைக்குக் "கெமிஸ்றி கிளாஸ்" ஸேர் ஒன்பது மணிக்கெல்லாம் வந்துவிடுவார்.

"அம்மா... அம்மா... கதவைத் திறவுங்கோ... நேரமாச்சு. நான் ரியூசனுக்குப் போக-வேணும்"

"....."

நான் கதவைப் படபடவெனப் பலமாகத் தட்டுகிறேன்.

"இவளோடை பெரிய கரச்சல்... ரியூசனுக்குப்போற நேரம் வந்திட்டால் அலட்டத் தொடங்கி விடுவள்" அம்மா முணுமுணுக்கிறா.

"கிணிங்..... கிணிங்....."

தெருவிலை நிண்டு வசந்தி பெல் அடிக்கிறாள். என்னைக் கூட்டிக்கொண்டு



போகத்தான் வந்திருக்கிறாள்.

"அம்மா கதவைத் திறவுங்கோ... ஏன் பூட்டி வைச்சிருக்கிறியள்? வசந்தி என்னை விட்டிட்டுப் போகப்போறாள்."

அவள் என்னை விட்டிட்டுப்போனா, நான் தனியாகத்தான் போகவேணும். இனிமேல் நான் அந்தப் பக்கம் தனியாகப் போகமாட்டன். எனக்குப் பயமா இருக்கு... தனியாக அவங்கடை "சென்றி"யைத் தாண்டிப் போறதெண்டா... வசந்தி கூட வந்தாப் பயமில்லை.

"அது வசந்தியில்லைப் பிள்ளை, வேறை யாரோ தெருவிலை பெல் அடித்துக் கொண்டு போகினம். நீ சும்மா சத்தம் போடாமல் இரு."

அம்மா பொய் சொல்லுறா. வசந்தியின் பெல் சத்தம் எனக்குத் தெரியும். போறது வசந்திதான். கதவைத் தட்டி தட்டி அம்மாவைக் கெஞ்சிக் கெஞ்சி நான் சோர்ந்து போகிறேன். கதவைத் தட்டிய கைகள் வலிக்கின்றன.

வசந்தி போயிருப்பாள். ரியூசன் தொடங்கிற நேரமாச்சு. அவள் தனியாகத்தான் போனாளோ... அல்லது கவிதா, பூரணி எல்லாரும் சேர்ந்து போயிருப்பினமோ...? எப்பிடிப் போனாலும் அவங்கள் சும்மா விடமாட்டங்கள். சென்றியிலை சோதிச்சுத்தான் அனுப்புவாங்கள். ஐ.சி. யைத் திருப்பித் திருப்பிப் பார்த்து... ஸ்கூல் பாய்க்குகளைக் கொட்டிக் கிளறி, கேள்வியள் கேட்டு...

சின்னராசு கார் ஓட்டிவரும் சத்தம் கேட்கிறது. யன்னல் பக்கம் சென்று வெளியே பார்க்கிறேன். யன்னலின் ஒரு பக்கக் கதவு உடைஞ்சு தொங்குது, இழுத்

துப் பூட்ட ஏலாது.

"அடே சின்னராசு, இங்கை வாடா... அச்சாப் பிள்ளையெல்லே... இந்த அறைக் கதவைத் திறந்து விடடா."

அவனுக்கு நான் சொல்லிறது கேட்கேல்லை. விர்ரென்று வேகமாய் அவன் கார் ஓட்டும்போது வாயிலிருந்து எச்சில் பறக்கிறது... தூவானமாய்த் தெறிக்கிறது. கால் இடறி விழப்போகும் நேரத்தில் சமாளித்துக்கொண்டு கியரை மாற்றுகிறான்.

ரிவேர்ஸ் கியர் - பின்புறமாக வேக மாய் ஓட்டி வந்து விறாந்தையின் முன் நிற்பாட்டுகிறான்.

அவன் எங்கள் வீட்டுக்கு வரும் போதெல்லாம் விறாந்தையில் தொங்கும் கிளிக்கூண்டின் பக்கம் போவான். "ரிவிரஸ" இராணுவ நடவடிக்கையின்போது நாங்கள் ஊரைவிட்டு ஒடி வன்னிக்குப் போயிருந்த காலத்திலை ஒரு கிளி பிடிச்சனாங்கள். திரும்பி வரேக்கை அதையும் கொண்டு வந்திட்டம்... அது என்ரை செல்லக்கிளி.

சின்னராசு தினமும் கிளி சாப்பிடு கிறதுக்கு ஏதாவது கொண்டு வந்து கொடுப்பான். அது சாப்பிடுவதை வேடிக்கை பார்ப்பான். வெகுநேரமாய்க் கிளியுடன் பேசுவான். அவனைக் கண்டுவிட்டால் கிளிக்கும் குதூகலம் பிறந்துவிடும், ஏதேதோ பேசும்.

யன்னலினூடாக வீட்டின் முன்புறத் தைப் பார்க்கமுடியாது. அதனாலை சின்னராசு என்ன செய்யிறான் எண்டு என்னால் பார்க்க முடியவில்லை.

சின்னராசு மீண்டும் காரை ஸ்ராட் செய்கிறான்.

"அடே என்ரை ராசாவெல்லே... கதவைத் திறந்து விடடா... நான் மீண்டும் அவனிடம் கெஞ்சுகிறேன்.

"முடியாதக்கா... திறந்துவிட்டால் மாமி என்னைப் பேசுவா" என்று சொல்லிக்கொண்டே கார் ஓட்டிய வண்ணம் அவன் விரைகிறான்.

எனக்கு மீண்டும் தலை சுத்துகிறது. திடீரென்று நாலு பக்கச் சுவர்களும் கைகோர்த்துக் கொண்டு என்னைச் சுற்றி வட்டமாய்ச் சுழல்கின்றன. "ஐயோ... ஐயோ..." நான் கண்களை மூடிக்கொண்டு வீரிட்டு அலறுகிறேன். நெஞ்சு பட படக்கிறது. தேகம் வியர்வையில் நனைகி றது. மயக்கம் வருகிறது. நான் நிலத்திலே சாய்கிறேன். எவ்வளவுநேரம் மயங்கிக் கிடந்தேனோ எனக்கே தெரியாது.

விழித்தெழுந்தபோது உடம்பெல்லாம் வலியெடுக்கிறது. சோர்வாக இருக்கிறது.

இப்ப ரியூசன் முடிஞ்சிருக்கும். முந்தி வடக்குச் சந்தியிலை "சென்றி" இருந்தபொழுது எங்களுக்கு எந்தக் கரச்சலும் இல்லை. பனை வடலியளுக்குப் பின்னாலிருந்து எழும்பி வருகிற சூரியனை ரசித்தபடி நாங்கள் ரியூசன் வகுப்புகளுக்குப் போறனாங்கள். சென்றிப் பக்கம் போகாமலே ரியூற்றறிக்குப் போகலாம். இப்ப இடத்தை மாத்திப்போட்டாங்கள். எங்கடை வீட்டிலை இருந்து நாலு வளவு தள்ளி சென்றி போட்டிருக்கிறாங்கள்.

போன மாசத்திலை ஒரு நாள் மைமல் பொழுது... "றக்" ஒண்டிலை வந்து அந்தப் பெரிய வீட்டுக்கு முன்னாலை இறங்கினாங்கள். வீட்டையும் வளவையும் சுத்திச் சுத்திப் பாத்தாங்கள். அடுத்தநாள் மரங்கள் தறிச்சு விழுத்துகிற சத்தங்கள் கேட்டுது. பனையளைத்தான் தறிச்சவங்கள். பனை யாழ்ப்பாணத்தின் சின்னம், கற்பகதரு எண்டு எங்கடை ஆட்கள் சொல்லிறவை. இவையளுக்குப்பனையளைத்தறிச்சாத்தான் பாதுகாப்பாம்!

தெருவிலை மண்மூடையள்... மரக் குத்தியள்... தகரங்கள்... பெயின்ற அடிச்ச

தார்ப்பீப்பாக்கள்... துவக்கோடை நிக்கிற இளவட்டங்கள்... கொச்சைத் தமிழ் மிரட்டல்கள்... காவல் அரண் ஒன்று புதிதாய் முளைத்தது.

அங்கு ஒரு நெட்டையன். பெயர் சறத். எந்த நாளும் சொட்டைக் கதை தான் கதைப்பான். அவனுக்குத் தமிழ் எழுத வாசிக்கவும் கொஞ்சம் கொஞ்சம் தெரி யும்.

“சிங்களம் பேசத்தெரியுமா?” எண்டுதான் முதலில் கேட்பான். இல்லையெனறுசொனனால் கொச்சைத் தமிழிலே கதைப்பான்.

“தமிழ்ப் பெட்டையள் நல்ல வடிவாம். இங்கை பெம்பிளைப் பிள்ளையள் எல்லாருக்கும் சைக்கிள் ஓடத் தெரியுமாம். உங்கடை அம்மாமாருக்கும் சைக்கிள் ஓடத்தெரியுமோ எண்டு ஒரு நாள் கேட்டான். எங்கடை “ஐ.சி.”யை வாங்கி வச்சுக்கொண்டு கனநேரமாய்த்தராமல்கதைச்சுக்கொண்டே இருந்தான்.



வசந்திக்குக் கோபம் வந்திட்டுது. “ரியூசனுக்கு நேரமாச்சு, ஐ.சி.யைத் தாருங்கோ. தராட்டில் பெரியவனிட்டை றிப்போட் பண்ணுவம்” என்று பட படத்தாள்.

“நான்தான் இங்கே பெரியவன்” எண்டு சொல்லிச் சிரித்தான் அவன்.

அந்தச் சென்றியைக் கடந்து போற தெண்டா எல்லாருக்கும் சங்கடம்தான். வண்டில்களில், சைக்கிள்களில், தலைச் சுமைகளில் கஷ்டப்பட்டுக் கட்டியேத்திக் கொண்டுபோற சாமான்களை செக் பண்ணிறதெண்டு கொட்டிச் சிந்துவாங்கள். சைக்கிள் செயின் கவர்களைக் கழட்டிச் செக் பண்ணிப்போட்டு நிலத்திலை போடுவாங்கள். நாங்கள்தான் அதைப் பூட்டவேணும்... கொழுப்பு...

அண்டைக்கு எங்களைச் செக் பண்ணிற நேரத்திலை வேறையொருத்தரையும் செக் பண்ணாமல் போகவிட்டாங்கள். எல்லாரும் எங்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போச்சினம். சந்தேகக் கண்கள்... எங்களுக்குக் கூச்சமாய் இருந்தது.

கொஞ்ச நாளில் ரியூசன் வகுப்பிலை எங்களைப்பற்றிக் கிசுகிசுப்பு... நாங்கள்தான் வலிய வலியப்போய் சென்றியிலை நிண்டு சிரிச்சுச் சிரிச்சுக் கதைக்கிறதாம்.

பின் வாங்கிலை இருக்கிற சிவ ராசன் சொன்னான். “எங்கடைஊர்ப்பெட்டையள், தெரிஞ்சதுகள் எண்டு ஆசையாய் நாங்கள் ஏதும் பகிடி கதைச்சால் எங்களை முறைச்சுப்

பாக்கிறாளவை... அவங்களோடை இளிச்சு இளிச்சு நளினம் பேசிறாளவை."

"அதுமட்டுமில்லையடா, எங்களைப் பற்றி அவங்களிட்டை றிப்போட் பண்ணுறாளவை" என்றான் பக்கத்தில் இருந்த வேல் முருகு.

அப்போது வசந்தி என்னுடைய காதுக்குள்ளை சொன்னாள், "உவையளுக்கு எங்கடை நிலைமை எங்கை தெரியப் போகுது? அவங்கள் கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் இருக்க முடியுமோ? அவங்க ளோடை சிரிச்சுக் கதைச்சா செக்கிங் குறையும், பிரச்சினை இருக்காது. நாங்கள் மனசுக்குள்ளை எரிஞ்சு கொண்டுதான் வெளியிலை சிரிக்கிறம் எண்டது உவை யளுக்குத் தெரியாது."

கொஞ்ச நாட்களில் எல்லாம் பழகிப்போய் விட்டது. சென்றியில் எங்களுக்குப் பெரிதாய் செக்கிங் ஏதும் இருப்பதில்லை. தனியாய்ப் போகும் போதும் பயமிருக்காது. அதனால் ரியூற் றறிக்குப் போகும்போது சேர்ந்துபோக வேண்டுமென்ற நிலைமையும் இல்லை.

இப்போது அங்கு ஐ.சி.யை எங்களிடம் கேட்க மாட்டார்கள். ஆனாலும் அந்த இடத்தில் சைக்கிளை ஓட்டிச் செல்வதற்கு எவருக்கும் அனுமதியில்லை. இறங்கி உருட்டிக் கொண்டுதான் போகவேணும்.

வசந்தி ஒருநாள் என்னிடம் கேட்டாள், "சென்றியிலை நிக்கிற சறத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?"

"நல்ல ஆள்மாதிரித்தான் தெரியுது" என்றேன்.

"அவனோடை நீர் அடிக்கடி கதைக் கிறீராம். அவன் உமக்கு லெட்டர் குடுத்தவனாம்., போய்ஸ் கதைக்கினம்"

"இல்லவே இல்லை... போய்ஸ் சும்மா கதை கட்டுகினம்; உப்பிடித்தான் உவையள் எல்லாரையும் சும்மா கேவலப்படுத்திறவை."

"சறத் உமக்கு லெட்டர் குடுத்ததை சிவராசன் கண்ணாலை கண்டவராம்."

நான் திகைத்துப் போனேன்.

"என்ன வசந்தி நீரும் அதை நம்புறீரே?" லெட்டர் எனக்குக் குடுக்கேல்லை. போற வழியிலை போஸ்ற் ஒபீஸிலை போஸ்ற் பண்ணச் சொல்லித்தான் தந்தவர்... சத்தி யமாய் வேறையொண்டும் இல்லை" நான் அழுதுவிட்டேன்.

சின்னராசு யன்னல் பக்கம் பரபரப்புடன் ஓடிவருகிறான். யன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தாழ்ந்த குரலில் கிசுகிசுக்கிறான். "அக்கா, அக்கா ஆமிக்காறங்கள் தெருவிலை நிக்கிறாங்கள். வீடு வீடாய் செக் பண்ணப் போறாங்களாம். எனக்குத் தெருப்பக்கம் போகப் பயமாய் இருக்கு அதுதான் இங்கை

**பனையளைத்தான் தறிச்சவங்கள். பனை யாழ்ப்பாணத்தின் சின்னம், கற்பகதரு எண்டு எங்கடை ஆக்கள் சொல்லிறவை. இவையளுக்குப் பனையளைத் தறிச்சாத்தான் பாதுகாப்பாம்!**

**தெருவிலை மண்மூடையள்... மரக்குத்தியள்... தகரங்கள்... பெயின்ற் அடிச்ச தார்ப் பீப்பாக்கள்... துவக்கோடை நிக்கிற இளவட்டங்கள்... கொச்சைத் தமிழ் மிரட்டல்கள்... காவல் அரண் ஒன்று புதிதாய் முளைத்தது.**

ஓடிவந்தனான்."

எனக்குத் தலைக்குள் ஏதோ செய்கிறது. சுவர் ஓரமாய் மறைந்து நின்று தெருப்பக்கம் பார்க்கிறேன். சறத்தின் தலை தட்டிப் படலைக்கு மேலால் தெரிகிறது. அவனருகே நிற்பவன் சுமதிபாலா. அவர்கள் என்னைத்தான் நோட்டம் விடுகிறார்கள். சறத் என்னைக் கண்டிட்டான். தலையில் அணிந்திருக்கும் தொப்பியை முன்புறமாகச் சரித்து தன்னுடைய முகத்தை மறைக்க முயற்சிக்கிறான். என்னைக் கூர்ந்து பார்க்கிறான். அவனது கையில் ரி.56 இருக்கிறது. துவக்கின் விசையில் அவனது சுட்டு விரல் பதிவது நன்றாகத் தெரிகிறது.

எங்கோ இருந்து வந்த காட்டுப் பூனையொன்று முன்விறாந்தைப் பக்கம் போகிறது.

"மியாவ், மியாவ்"

"எடே சின்னராசு, கிளிக்குச் சாப்பாடு போட்டனியே? கிளிக்கூடு திறந்தபடியே கிடக்கு... பூனை உலாவுதடா கவனம்."

சின்னராசு என்னை விநோதமாய்ப் பார்க்கிறான். "என்னக்கா மறந்து போனியளே? இப்ப கிளி அங்கை இல்லை... போன கிழமை அது செத்துப்போச்சு..."

ஓ... ஓமோம், எனக்கு நினைவுக்கு வருகிறது... கொஞ்சம் கொஞ்சமாய், புகை மூட்டத்துக்குள் தெரிவதுபோல் நினைவு வருகிறது. நான் விம்மி விம்மி அழுகிறேன்.

அண்டைக்கு நான் தனியாத்தான் போனனான். சென்றியிலை சறத்தும் சுமதிபாலாவும்தான் நிண்டவங்கள். என்ரை சைக்கிளைப் பறிச்சு உள்ளுக்குக் கொண்டு போய் வச்சிட்டாங்கள். சைக்கிளைத் தரச்சொல்லி நான் கெஞ்சி மன்றாடினன். உள்ளுக்குப் போய் எடுக்கச் சொன்னாங்கள்.

நான் தயங்கித் தயங்கி... பயந்து பயந்து... ஐயோ எனக்கு மயக்கம் வருகுது. தேகம் நடுங்குது, வேர்க்குது. நெஞ்சு படபடக்குது. ஓர் அடிகூட என்னால் எடுத்து வைக்கமுடியாது.

ஓ, அதுக்குப் பிறகு... அதுக்குப் பிறகு... உச்சந்தலைக்குள் ஏதோ கிழிந்து சிதறி... எழும்ப முடியாமல்... எழும்பி. நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி, சைக்கிளை உருட்டிக்கொண்டுதான் வீட்டுக்கு வந்தனான்.

விறாந்தையிலை சைக்கிளைச் சாத்தின போது அம்மா கவலையோடு சொன்னா, "உவன் சின்னராசு வந்து கிளிக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருந்தவன். கிளிக்கூட்டுக் கதவைப் பூட்ட மறந்திட்டான். காட்டுப் பூனையொண்டு திரிஞ்சது... கிளியைக் கடிச்சுக் குதறிப்போட்டுது பிள்ளை..."

எனக்கு நெஞ்சு விறைச்சுப் போச்சு.

அம்மா என்ன சொல்லிறா... ஒரு வேளை... ஒருவேளை?

என்னுடைய தேகம் நடுங்குது.

கிளி இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய்க் கிடக்கிறது. அதன் அடிவயிற்றின்கீழ் காட்டுப் பூனை பதித்த கோரச்சுவடுகள்...

மயங்கி நிலத்திலே சாய்கிறேன்.

என்னைச் சுற்றியிருக்கும் சுவர்கள் சுழல்கின்றன. என்னை நெரிப்பதற்கு மெதுமெதுவாய் நெருங்கி வருகின்றன.

"ஐயோ... ஐயோ"

**(கண்ணியில் தெரியுது வானம் 2001 தொகுப்பிலிருந்து)**

# இனப்பிரச்சினை காலத்துக் கவிதைகள் ஒரு நோக்கு

**கலாநிதி எம்.ஏ. முஹம்மது றமீஸ்**
தலைவர், மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

1980களுக்குப் பிந்திய ஈழத்துக் கவிதை மரபில் எதிர்ப்புக் கவிதைகள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஈழத்தின் சமூக, அரசியல், வரலாறு 80களில் முக்கியமான ஒரு மாற்றத்தை எதிர்கொண்டது. பல்லினச் சமூகங்கள் வாழ்கின்ற ஒரு சூழலிலே மக்களினது வாழ்வு நிலையைச் சமூக அதிகார மேலாதிக்கங்கள் பாதிப்புறச் செய்த போது, எழுந்த எதிர்ப்புணர்வுகளைச் சித்திரிக்குமுகமாகவே இத்தகைய கவிதைகள் தோற்றம் பெற்றன.

தமிழ்ச் சூழலில் எதிர்ப்புக் கவிதைகளின் வரவுக்கு ஆதாரமாக அமைந்த மிக முக்கியமான நூல், பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் மொழிபெயர்த்து வெளியிட்ட பலஸ்தீனக் கவிதைகளாகும். இதன் பின்னரே மிகப் பெரிய வீச்சுடன் ஈழத்துத் தமிழ் சமூகம் சிங்கள மேலாதிக்கத்தினால் அடைந்த துன்பங்களையும் துயரங்களையும் சித்திரிக்கும் பல கவிதைகளை வெளிக் கொண்டு வந்தது. இந்தவகையில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய கவிதைத் தொகுதி 'மரணத்துள் வாழ்வோம்', காசி ஆனந்தன், புதுவை ரத்தினத்துரை முதலானவர்கள் 1960களில் எழுதிய மொழியுணர்வுக் கவிதைகளுக்கப்பாலே, தமிழ் சமூகத்தின் மொத்தமான விடுதலை உணர்வைப் பிரதிபலிக்கும் கவிதைகளாக 'மரணத்துள் வாழ்வோம்!' என்ற கவிதைத் தொகுதியில் உள்ளடங்கிய கவிதைகள் அமைந்திருந்தன.

வடகிழக்கில் தமிழர், முஸ்லிம் உறவு மிக நெருக்கமானதாக அமைந்திருந்தது. இரு சமூகத்தினரும் கல்வி, அரசியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில் ஒன்றாகவே இணைந்து செயற்பட்டு வந்தனர். முஸ்லிம்களுக்கு மத்தியில் தனித்துவமான சிந்தனைகளை முன்னெடுத்த முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கூட "அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழத்தைப் பெற்றுத் தராவிட்டால் தம்பி அஷ்ரஃப் பெற்றுத் தருவான்" என தமிழ் முஸ்லிம் இணைந்த அரசியல் சிந்தனையையே வெளிப்படுத்தினார். இலக்கிய ரீதியாகக் கூட சிங்கள மேலாதிக்கத்திற்கு எதிராக, தமிழ் சமூகத்தைச் சேர்ந்த கவிஞர்களோடு முஸ்லிம் கவிஞர்களும் கவிதைகள் எழுதினர்.

அந்தவகையில் 1980களில் அஷ்ரஃப் எழுதிய "மணியோசை" என்ற கவிதை முக்கியமானது. தீகவாபி புனித நகர்ப் பிரகடனத்தின் காரணமாக, அப்பிரதேச முஸ்லிம் விவசாயிகள் தமது காணிகளை இழந்தபோது, அஷ்ரஃப் அக்கவிதையை எழுதினார். அதேபோல, யாழ்ப்பாண நூலகம் பற்றி எரிந்தபோது, எம்.ஏ. நுஃமான் எழுதிய 'புத்தரின் படுகொலை' என்ற கவிதையும் சிங்கள அடக்கு முறைக்கு எதிராக எழுந்த மிக முக்கியமான கவிதை ஆகும். இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் நுஃமானின் இக்கவிதை மிகத் துணிகரமான படைப்பாகும்.



இதேபோன்று

இலங்கையின் இனப் பிரச்சினையை சோலைக்கிளியின் கீழ்வரும் கவிதை மிகத் தத்ரூபமாக வெளிப்படுத்துகின்றது:

**நிலவுக்கு வேலியிடு**
**சூரியனையும் பங்கு போட்டுப் பகிர்ந்து கொள்**
**வெள்ளிகளை எண்ணு**
**இனவிகிதாசாரப்படி பிரி**
**நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்**
**கடலை அளந்து எடு**
**வானத்தைப் பிளந்து துண்டாடு**
**சமயம் வந்தால் காற்றைக் கடத்து**
**எறும்புக்கும்**
**இன முத்திரையிடு**
**சாதி சமயத்தைப் புகட்டு**
**புறாமுக்கட்டும்**
**இன்னொரு இனத்தை நகைத்து**

இவ்வாறு வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களின் உணர்வுகள் எல்லாவிதத்திலும் ஒன்றுபட்டே இருந்தன.

1980களில் முனைப்புப் பெற்றிருந்த தமிழ் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தின் பங்காளிகளாக முஸ்லிம் இளைஞர்களும் இணைந்தே இருந்தனர். சக போராளிகளா-கவும் நிதி வழங்குபவர்களாகவும் முஸ்லிம் சமூகம் மிகப் பெரிய பங்களிப்பினைத் தமிழ் சமூகத்தின் போராட்டத்திற்கு வழங்கி வந்திருக்கிறது. 1985க்கு முன்னர் கிழக்கிலும் கிழக்கிற்கு வெளியேயும் நிகழ்ந்த தமிழ் முஸ்லிம் கலவரங்கள் அடுத்த வீட்டுப் பிரச்சினையாகவும் குடும்பத்திற்குள் சகோதரர்களுக்கிடையில் நிகழ்ந்த பிரச்சினை போன்றவையாகவும் கருதத்தக்கன. ஆனால், 1985இற்குப் பின்னர் நிகழ்ந்த கலவரங்களைப் பார்க்கின்றபொழுது, அவை அப்படியாக அமையவில்லை.

தமிழ் இயக்கங்களினால் முஸ்லிம் களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட கலவரங்கள் துவக்கி வைக்கப்பட்டன. ஆட்கடத்தல் முதல் பலவந்த வெளி யேற்றம்வரை இந்தச் சூழ்நிலை தொடர்ந் தது. 1990கள் இன்னுமொரு புதிய கட்டத்திற்கு நகர்ந்தது. பாரம்பரிய முஸ்லிம் கிராமங்களில் இருந்த பலர், கும்பல் கும்பலாகக் கொலை செய்யப்பட்டதி லிருந்து முஸ்லிம் சமூகம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுவரை இந்தச் சம்பவங்கள் தொடர்ந்தன.

இவ்வாறு தமிழர் மேலாதிக்கம் வடகிழக்கு முஸ்லிம்களைப் பாதித்தபோது, இப்பிரதேசக் கவிஞர்களிடமிருந்து, இந்தச் சம்பவங்களின் சோகங்களைச் சித்திரிக்கும் பல நூற்றுக் கணக்கான கவிதைகள் எழுந் தன. இவற்றைப் பிரதிபலிக்கின்ற வகை யில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு 2002 இல் வெளியிட்ட 'மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள்' என்ற தொகுதி கவனத்திற்குரியது. சிங் கள மேலாதிக்கத்தினை இப்பிரதேச முஸ்லிம் கவிஞர்கள் பாடியது போல, முஸ்லிம்கள் மீதான தமிழர்களின் மேலாதிக்கத்தைச் சித்திரிக்கும் வகையில் கவிதைகளைத் தமிழ்ச் சமூகக் கவிஞர்களும் யாத்திருப்பது, ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பின் ஒரு முக்கியமான விடயம். அடக்குமுறைக்கு எதிராக நமது கவிஞர்கள் ஒன்று திரண்டிருக்கின்றார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் சோகங்களை 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தொகுதி சித்திரிப்பது போலவே, முஸ்லிம் சமூகத்தின் சோகத்தினை 'மீஸான் கட்டைகளில் மீள எழும் பாடல்களின் தொகுதி' வெளிப்படுத்துகின்றது. ஈழத்தின் மூத்த முஸ்லிம் கவிஞரான எம்.ஏ. நுஃமானின் 'அவர்களும் நீயும்' என்ற கவிதை தொடக்கம் எஃஎம். ஜாபீரின் 'வாப்பாவுக்கு ஒரு அஞ்சல்' வரை நூறு கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன.

தமிழர் மேலாதிக்கத்திற்கு எதிராக எழுந்த மிக முக்கியமான ஒரு கவிதையாக அஷ்ரப் சிஹாப்தீனின் 'ஸெய்த்தூன்' என்ற கவிதையைச் சொல்லலாம். 1985 ஏப்ரல்

இனக்கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரர்களின் நினைவாக எழுந்ததே அக்கவிதை:

**வெள்ளமும் புயலும்**
**எந்த மகிழ்ச்சியும்**
**எந்தக் கொண்டாட்டங்களும்**
**எமது மக்களின் இதயத்தை விட்டு ஸெய்த்தூனை**
**அப்புறப்படுத்தி விடாது**
**இனிமேல்**
**ஸெய்த்தூன் திரும்பி வரமாட்டாள்.**

**இளைஞர்கள் எனக்குச் சொன்னார்கள்**
**துவக்கு வெடித்த இரவின்மீது**
**இரத்தம் உறைந்த பூமியின் மீது**
**சத்தியம் பண்ணியதாக..**
**இனிமேல்**
**எந்த ஸெய்த்தூனையும் இழப்பதில்லை என்று**

அஷ்ரஃப் சிஹாப்தீனின் 'ஹபீப்' என்ற கவிதை, கபீப் முகம்மத் என்ற முஸ்லிம் புத்தி ஜீவியின் (மூதூர் உதவி அரசாங்க அதிபர்) இழப்பினால் எழுந்தது. இவரது 'குரும்பட்டி' என்ற கவிதையும் பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களான அழிஞ்சிப் பொத்தானை, அகமட்புரம், பள்ளியகொட ஆகியவற்றில் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான முஸ்லிம் களின் படுகொலைகளின் நினைவாக எழுந்த கவிதை:

**நீண்ட நெடுநாளாய் நெஞ்சக் குழிக்குள்ளே**
**நெருடிக் கொண்டு ஒரு**
**குரும்பட்டி கிடக்கிறது**
**அன்றாடங் காய்ச்சிகளின்**
**அழிஞ்சிப் பொத்தானைக்குள்**
**வெறி நாயாய்ப் புகுந்து வேட்டையாடுகையில்**
**பாலகரைத் தூக்கித் தென்னையில் அறைகையிலே**
**உதிர்ந்து விழுந்ததுகாண்**
**அந்தக் குரும்பட்டி**

இந்த வரிசையிலேயே என்.ஏ. தீரன் 'அபாபீல்களும் யானைப்படையும்' என்ற கவிதையில் இப்படிச் சொல்லுகின்றார்:

**உம்மாவும் ராத்தாவும் முக்காடிட்டு**
**ஒரே வீட்டில் இத்தா இருப்பார்கள்**
**கடைக்குப் போன காக்காவைக்**
**கடத்திப்போன சேதியும் வரும்**
**துப்பாக்கிக் குண்டுகளால் அவளுக்குத்**
**'தல்கீன்' ஓதிய ஓசையும் கேட்கும்**
**...**
**எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்**
**பொறுங்கள்...**
**எங்கள் 'அபாபீல்கள்' இப்போதுதான்**
**தம்சொண்டுகளைக் கூராக்கவும்**
**இறக்கைகளை வலிமைப்படுத்தவும்**
**கிழக்கு நோக்கிப் பறக்கின்றன.**

1987இல் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினாலும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டனர். இதனை வெளிப்படுத்தும் ஹசீர் என்ற கவிஞருடைய 'கடல் கக்கிய லெமூரியா', கவிஞரின் 'அமைதிகாத்த 01.12.87' என்ற கவிதைகளும் இக்காலகட்டத்தில் வெளிவந்த இத்தொகுதியிலுள்ள வேறு சில கவிதைகளும் கவனத்திற்குரியன. 1990களில் தமிழ் இயக்கங்களின் கோரத்தனத்தால் கொல்லப்பட்ட புத்தி ஜீவிகளினதும் அரசியல் பிரமுகர்களினதும் பொது மக்களினதும் நினைவுகளைப் பிரதிபலிக்கும் பல கவிதைகளும் இத்தொகுதியில் உள்ளன. அந்தவகையில் 1990.08.30 அன்று காத்தான்குடிப் பள்ளிவாயலில் நடந்த படுகொலைகளின் நினைவாக எழுந்த ஈழத்தின் பிரபல கவிஞர் சேரனின் 'காத்தான்குடி' என்ற கவிதை முக்கியமானது:

**இனி நடக்கப் போவது என்ன?**
**ஒன்றுமில்லை**
**பிரார்த்தனைக் கூடத்தில்**
**சிதறுண்டிருக்கும் உடல்களின் மேல்**
**அவற்றிடை**
**ஒரு இராட்சதக் கொலைக்கரம்**
**உருக்கிய குருதிச் சேற்றில்**
**அந்தகாரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்**
**அலறலில்**
**அசை விழக்கிறது காலம்**

**தமிழன் என்னும்**

**என் அடையாளக் கூறின் மேல்**
**வெட்கம்**
**இருள் விரவிப் படிகிறது.**
**என்னைக் கொல்லாதே!**
**என்று ஈரக்கண்களுடன் இரந்த**
**ஈழத்தின் மனச்சாட்சியையும்**
**கொன்றார்கள்.**

*இச்சம்பவத்தைப் பிரதிபலிக்கும் காத்தான்குடி றஹீமின் 'சிவப்பு இரவு' என்ற கவிதையும் இத்தொகுதியில் உள்ளது. 1990இல் நடைபெற்ற மிக மோசமான சம்பவம், வடக்கு முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமையாகும். இதனைப் பிரதிபலிக்கும் கவிதைகளை 'மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்' என்ற தொகுதியில் வ.ஐ.ச. ஜெயபாலன், சி. சிவசேகரம், சு. வில்வரத்தினம் முதலான கவிஞர்கள் மிக அற்புதமாக வெளிக்காட்டியுள்ளனர். ஜெயபாலனின் 'யானை' என்ற கவிதையில் இச்சம்பவம் பின்வருமாறு வந்துள்ளது:*

**நமது கவிதை**
**நமது முகத்தில் சிறகால் அடித்தது**
**நமது கவிதை**
**உலக மக்களின் மனதிலும் தைத்தது**
**கீழே புத்தளத்து உப்புக்களரில்**
**முப்புதர்களிடை நிழல் காணாது**
**கண்ணீரோடு அலைந்ததெம் குடி**
**முஸ்லிம் என்று பழித்து**
**கச்சைத்துண்டையும் பறித்துக் கொண்டு**
**ஊரைவிட்டு நாமே விரட்டிய**
**நம்குடி**

*சி. சிவசேகரத்தின் கவிதை வடபுலத்து முஸ்லிம் மக்கள் துரத்தப்பட்டதைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறது:*

**இந்த மண் எங்களின் சொந்தமண் – இதன்**
**எல்லை யார் தாண்டெனச் சொன்னவன்**
**இந்த மண் எங்களை ஈன்ற மண் – எமக்**
**கிடமில்லை என்றெவன் சொன்னவன்**

**தந்தையர் தோழமைச் சுமந்த மண் – அருந்**
**தாயாரின் மடியிலே சாய்ந்த மண்**
**பந்தடித்தோடி நாம் ஓய்ந்த மண் – தமிழ்ப்**
**பாடியும் பேசியும் தோய்ந்த மண்**

**வான்புகழ் நபிகளின் பாதையில் – பள்ளி**
**வாசலிற் தொழுகையிற் சேர்ந்த மண்**
**நோன்பினில் நல்லறம் செய்த மண் – நாம்**
**நாள்தோறும் பன்முறை தொழுத மண்**

**காதலின் நினைவினில் மிகுந்த மண் – பல**
**கனவிடை ஆழ்ந்து நாம் மகிழ்ந்த மண்**
**வேதனை வெந்துயர் உணர்ந்த மண் – மனம்**
**தேறவும் ஆறவும் செய்த மண்**

**நாமெலாம் ஓரினம் என்றசொல் – தனை**
**மாற்றினோர் எங்களைத் தூற்றினோர்**
**போமென எங்களை ஓட்டினோர் – செயல்**
**பார்த்ததால் நெஞ்சமே வெந்த மண்**

**வீடு நற்தொழில் பொருள் போயினும் – வெறுங்**
**கையராய் அகதிகள் முகாங்களில்**
**வாழினும் பன்முறை சொல்கிறோம் – நாளை**
**வருகுவோம் எங்களின் சொந்த மண்**

*2000ஆம் ஆண்டுகளில் ஈழத்துத் தமிழ் முஸ்லிம் அரசியலின் வேறு திருப்பங்கள் ஏற்படத் தொடங்கின. குறிப்பாக 2002இல் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடகிழக்கில் அமைதி நிலவியபோதும் முஸ்லிம் சமூகத்தின் மீதான புலிகளின் தாக்குதல் தொடர்ந்து இடம்பெறவே செய்தது. இதனைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு கவிதைகளைத் தொடர்ந்து எழுதுகின்றவர்களாக வாழைச்சேனை அமர், எம்.எல்.எம். அன்சார், எஸ்.எச். நிஃமத், ஏ.ஜி.எம். சதக்கா, ஓட்டமாவடி அறபாத், என். ஆத்மா, எஸ். நளீம், முல்லை முஸ்ரிபா, பஹீமா ஜகான் முதலானவர்களை இத்தொகுதியில் இனங்காண முடியும்.*

இவர்களுள் வட இலங்கை முஸ்லிம்களின் வெளியேற்றத்தைக் குறித்து முல்லை முஸ்ரிபா எழுதிய பல கவிதைகள் கவனத்துக்குரியன. தற்காலச் சூழலில் வடமாகாண முஸ்லிம்கள் அனுபவிக்கின்ற பல்வேறு இன்னல்களும் அவருடைய கவி தையின் பொருளாகின.

மேலும், என். ஆத்மாவின் 'பொன் னத்தா பூவத்தா' ஈழத்து முஸ்லிம்கள் இனப்பிறழ்வினால் பட்ட அவலத்தை பட்டியலிட்டுக் காட்டுகின்ற குறிப்பிடத் தக்க கவிதை. இக்கவிதை ஆத்மாவினது 'அதிகாலை நீல இருள்' என்ற கவிதைத் தொகுதியில் வந்துள்ளது:

**குழந்தை அதன் பாட்டில் துயில்கிறது.**
**விடாமல் வேட்டுகள் தீர்க்கப்பட**
**குண்டுகளால் நிலமும் கண்ணாடிகளும் அதிர**
**அடைமழைக்குப் பின்னான**
**புழுக்கமும் வியர்வையும் மிகுந்த இம்**
**மே மாத உஷ்ன இரவில்**
**பனிக்காலம் கூதலுக்கு கொடுகுவது போல்**
**நடுங்குகிறது எனக்கு**
**பள்ளிவாசலுள் சுட்டது**
**அம்பலாந்துறையில் கடத்தியது**
**கக்கத்தில் இடுக்கிய குழந்தைகள் அலற**
**முக்காடு போட்ட பெண்களும் ஆண்களும்**
**வடக்கை விட்டு பெயர்ந்து வந்தது.**
**அழிஞ்சிப்பொத்தானை**
**ஏறாவூர்**
**மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய பின்**
**எல்லைப்புறச் சென்றிகள் தாக்கப்படுமிரவுகள்**
**இப்படித்தான் கழிகின்றன.**

இன முரண்பாட்டினால் பாதிக்கப் பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்துகின்ற இன்னும் இரு கவிதைத் தொகுப்புக்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அதில் ஒன்று மெஸ்றோ வெளியீட்டுப் பணியகத்தால் வெளியிடப்பட்ட எம். நவாஸ் சௌ-பி எழுதிய "போராயுதமும் கவிை-தயிடம் சரணடைதலும்" என்ற கவிதைத் தொகுதி முக்கியமானது. முஸ்லிம் சமூகம் இழந்துபோன செய்திகளும் அவாவும் இத்தொகுதியில் மிக அற்புதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 29.01.2003 முஸ்லிம்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்குமுகமாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால், ஒலுவில் பிரகடனத்தின்போது, வாசிக்கப்பட்ட 'இழப்புகளோடு பயணித்தல்' என்ற கவிதை இத்தொகுதியில் உள்ளது. அக்கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு:

**அடக்கு முறைத் துப்பாக்கி**
**எங்கள் சமூகத்தின் மீது**
**குறிபார்க்குமாயின்**
**தலை குனிந்து**
**கால்களின் கீழ்**
**ஒளிந்து கொள்ள மாட்டோம்**
**நெஞ்சை நிமிர்த்திய**
**மையித்துகளாய்**
**எங்களுக்கான எல்லையினை**
**காட்டி நிற்போம்**
**ஆனாலும்**
**வேடிக்கையாக இருக்கிறது**
**கோழிக் குஞ்சுகளை**
**இந்தப் பருந்துகள்**
**அடைகாப்பதாகக் கூறுவது**

மற்றது, வடக்கு முஸ்லிம்களின் துரத் தலைப் பாடுகின்ற முல்லை முஸ்ரிபாவின் "இருத்தலுக்கான அழைப்பு" என்ற கவிதைத் தொகுதி. இத்தொகுதியின் முன்னுரையை "வடபுலத்து யாழின் கூட்டு நரம்புகள் மீட்டும் குரல்" என்ற தலைப்பில் கவி ஞர் சு. வில்வரத்தினம் எழுதியுள்ளார். சு. வில்வரத்தினத்தால் எழுதப்பட்ட இந்தக் குறிப்பு மிகுந்த கவனத்திற்குரியது.

வடகிழக்கு இன முரண்பாட்டில் முஸ்லிம்களின் பாதிப்புக்களை வெளிப்ப டுத்தும் கவிதைகள் பற்றிய அறிமுகத்தையே இக்கட்டுரை தருகிறது. இக்கட்டுரை இன்னும் விரிவாக எழுதப்பட வேண்டிய தேவையை வேண்டி நிற்கின்றது.

**1995** ஆபத்துக்களும் அவலங்களும் சூழ்ந்த போர்க்காலப் புறநிலை. தம் சொந்த மண்ணைவிட்டுத் துரிதமாக வெளியேறிவிட வேண்டுமென - அதுவும், ஒரு சில மணி நேரத்துள் ஓடி விட வேண்டுமென்ற அறிவுறுத்தல் அனு- மதியாகக் கொடுக்கப்பட்ட நேரம். மேலே வானம் பொத்துக் கொண்டு ஊத்துகிறது. கீழே வெள்ளம், சகதி, இருள், சனநெருக்கம், அத்துடன் நெருக்கத்துள் தடுமாற்றம், மக்கள் வெள்ளம் மழைநீர் வெள்ளத்துடன் போராட்டம் நடத்துகிறது - புகலிடமின்றித் தவித்தும் போகிறது. இங்கே, இணுவிலில் இயங்கும் வடமாநிலத்தில் ஒரு வரலாற்றை உருவாக்கிய, அண்ணா தொழிலகம், அதன் நிறு வனரும் அதிபருமான திரு.சு.பொ.நடராசா அவர்கள். அல்லற்பட்டு ஆற்றாது அழுதுநிற்கும் தன் சமூகத்தை வழி நடத்த முன்வருகிறார். இயற்பகையம், அயற்பகையும் இணைந்து நின்று தொழிலகமும் அதன் அதிபரும் அதிலிருந்து மாறுபட்டு நின்று மக்களை நேசித்த நாட்கள் அவை. வழி நடத்திய வரலாறும் அது தான். அந்தச் சோதனையான நேரத்தில் தன் வார்த்தையும் காத்து மக்களையும் காப்பாற்றி காரியத்தைக் கச்சிதமாக இவரால் மாத்திரமே செய்யமுடிந்தது என்பதுதான் மறக்காத - மறைக்காத வரலாறு ஆகிறது - வாழ்த்தும் பெற்று நிற்கிறது.

இன்று சர்வதேசப் புகழ்பெற்று நிற்கும் அண்ணா தொழிலகம் பல பிரிவுகளை உள்ளடக்கிய நிற்கிறது. வீட்டுத் தேவைப் பொருட்களின் உற்பத்தியுடன், விவசாயப் பண்ணை, விலங்குகள் வளர்ப்பு, பறவைகள் வளர்ப்பு பாற்பண்ணை, பழ உற்பத்தி, உயிர் வாயு (Biogas) ஆக்கம். விலங்கு உணவுகள் உற்பத்தி என விரிவாக்கம் பெற்றிருக்கிறது. 'ஜீவாகாரம்' குழந்தைகளின் உணவு, நெருக்கடி

**ஆறு தடவைகள் இடம்பெயர்ந்த தொழில் நிறுவனமும் அதன் தொழிலாளர்களும்....**

# "இடர் சுமந்த பயணம்"



திரு. சு.பொ.நடராசா

## ஒரு தொழிலதிபரின் போர்க்கால அனுபவங்கள்

**சேனத்திரன்**

கோரத்தாண்டவமாடும் அந்தச் சூழ்நிலைகளின் துயரங்களிலிருந்து மக்களை வெளியேற்ற விழைகிறார். எந்த நாட்டிலும் எந்தத் தொழில் அதிபரும் செய்தறியாத செயற்றிட்டம் இதுவா- கும். சரித்திரத்தில் இது முதல் தடவையும் முன்னேற்ற நகர்வுமாகும். வர்த்தகம் செய்வோர் பலர் மனச்சாட்சிக்கு மசிவதில்லை. அண்ணா மிக்கக் காலத்தில் யாழ் மழலைகள் வாழ வைத்த 'அமிர்த'மாக இருந்தது பல மருத்துவர்களால் சிபார்சு செய்யும், பாராட்டையும் பெற்றி ருந்தது.

இடையில் ஏற்பட்ட இழப்புக்கள், இட மாற்றங்கள், இடுக்கண்கள் எல்லாம் இந்தத் தொழிலகத்தையும் இதன் அதிபவ-



ரயும் பின்தள்ளவில்லையென்பதுதான் யாழ். மண் பெற்ற 'வரம்' எனலாம். 'துணிவு' இவருக்கு துணையாகி நிற்கிறது. அதன் பலனை சமூகம் அனுபவிக்கிறது. *1995* ஐப்பசி *30*ல் பெற்ற அனுபவத்தை அண்ணா தொழிலகத்தின் அதிபர் இப்படி விபரிக்கிறார்; "அன்று கந்தஷஷ்டி நாள். புறப்பட ஆயத்தமாகும் போது "இராணுவம் முன்னோக்கி வருகிறது. உடனடியாக நாவற்குழிப் பாலத்தை தாண்டிச் செல்லுங்கள்" அறிவிப்பு வருகிறது. வெளியில் வந்து பார்த்தபோது மக்கள் வெள்ளம் புறப்பட்டுப் போய்க்கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. செய்வதறியாது திகைத்துப் போனேன். நெஞ்சுக்குள் ஏதோ செய்வதுபோல் இருந்தது. தம்பி..." எப்படியோ இந்த இன்னலைத் தாண்ட முடிவெடுத்தார் திரு.நடராசா.

*1995* ஐப்பசி, *30*ம் நாள். யாழ் மக்களுடன் இரண்டு வான்களுடன் 'அண்ணா தொழிலகம்' தன் இணுவில் நிரந்தர முகவரியிலிருந்து நகர ஆரம்பிக்கிறது. நடந்து போக முடியாதளவுக்கு நலிவுற்ற பாதைகளில், எரிபொருள் அற்ற அந்த நாளில் எப்படி இந்த வாகனங்கள் பயணித்தன? மண்ணெண்ணய் ஒரு சிறு பகுதி, விளக்கெண்ணெய் வேப்பெண்ணெய், இவைகள் எல்லாம் சேர்ந்ததுதான் இந்த வாகனங்களின் எரிபொருள் ஆகிறது. ஊதி ஊதி இயக்கவும் இயங்காத போது திருத்தவும் எப்போதும் திருத்துநர்கள் தொடர்ந்து பயணித்தனர். தள்ளுவததற்கென்றே தயார் நிலையில் சிலர். அண்ணா தொழிலகத்தின் அதிபரைப் போலவே ஊழியர்களும் உற்சாகமானவர்கள் - உதவுகிறவர்கள். அப்படி மாற்றம் செய்யப்பட்டவர்கள். அந்த மழையிலும் குடிநீர் கிடைக்காத கொடுமை. எப்படி முகம் கொடுப்பது? அதற்கும் ஒரு வழி அதிபரி டம் இருந்தது. குடை வைத்திருந்தவர்கள் குடைகளை மேல் நோக்கித் திருப்பி மல்லாக்கப் பிடித்து மழைநீர் சேகரிக்கப்பட்டது. இதுவும் அந்த இடர்பாட்டின் நடுவே நடந்த புதுமைகளுள் ஒன்று. எப்படியோ நிமிர்ந்து, களைத்து, தளர்ந்து, தள்ளாடி இந்த ஊர்வலம் மீசாலையை அடை-கிறது. அங்கு அவசர அவசரமாக அலுவல்கள் நடக்கின்றன. குடிசைகள் அமைக்கப்படுகின்றன. குடிநீருக்காக கிணறுகள் தூர்க்கப்படுகின்றன. அவசர உணவாக அண்ணா நிறுவனத்தின் 'ஜீவா-காரம்' கைகொடுக்கிறது. காப்பாற்றுகிறது. குளிர் நீக்கிடும் கோப்பிக்கடையும் உருவாக்கம் பெறுகிறது. ஆக, தன்னைச் சுற்றி நின்ற அந்தப் பெருந்தொகை மக்களை அந்த நள்ளிரவிலும் நல்வழிகாட்டிக் காப்பாற்றினார் திரு.நடராசா.

அங்கேயும் ஷெல்வீச்சு அண்டிவருகிறது. தொடக்கப்பட்டவைகளைத் தொடர் நடையை - கிளிநொச்சி நோக்கி நகர்த்தத் திட்டமிடுகிறார் இவர். நகர்த்தி வந்த தொழிற்சாலை மீசாலையிலிருந்து கிளிநொச்சி கந்தசாமி கோயிலடிக்கு மீண்டும் எடுத்துச் செல்லப்படுகிறது. ஒரு தொகுதியோர் (கோப்பிக் கடை) மீசாலையில் தங்கிவிட மிகுதிப்போர் கிளிநொச்சிக்கு இடம்பெயருகின்றனர். அங்கு தொழிலகம் தொடங்கப்படுகின்றது. இத் துணை பிரச்சினைகட்குள்ளும் அன்றாட தேவைக்கான பொருட்கள் அனைத்தும் உற்பத்தி ஆகின்றன. விவசாயம், தொழில் வாய்ப்பு, பன்றி - கோழி வளர்ப்பு என உற்பத்திகள் பல்வகைப்படுத்தப்படுகின்றன. கிணறுகள் வெட்டப்பட்டன. கொட்டில்கள் அமைக்கப்பட்டன. மூலப்பொருட்கள் (ஏற்கனவே இருந்தவை) யாழ் தொழிலக களஞ்சியங்களிலிருந்து பாதுகாப்பாக கிளி நொச்சிக்கு மாற்றப்பட்டன. அங்கிருந்து ஏற்றி வந்த கோழிகளில் பல கிளிநொச்சிக்கு வரும்போது மடிந்து போயின. மேலும் பல பொருட்கள் விரயமாயின. எனினும் இருந்தவற்றைக் கொண்டு தன் இணுவில் வரலாற்றை இங்கு வழிப்படுத்தினார் திரு. நடராசா. இவைகள் நடந்து முடிந்த காலங்கள்

1995 மார்கழிக்கிடைப்பட்ட நாட்கள்தான் என்பது மறக்கமுடியாத நினைவுகள். 'ஜீவகாரம்' தட்டுப்பாடின்றித்தரங்குன்றாது குழந்தைகட்குக் கிடைக்க திரு.நடராசா எடுத்த முயற்சிகள் மிக மிகப் பாராட்டப்பட்டன. அது அசாதாரண-மான அபூர்வமான செயல் எனப்பலர் (மருத்துவர்கள் உட்பட) வாய்விட்டே கூறினர். நீரும் நெருப்புமின்றிச் சமைத்த 'நளபாகம்' பற்றிக் காப்பியங்கள்தான் சொல்லுகின்றன. இங்கு தன் பெரிய நிறுவனத்தையே பெயர்த்து வந்து, 'பீனிக்ஸ்' பறவையைப் போல, விழுவது மீண்டும் எழுவதற்காகவே' எனப் பதிய இலக்கணம் வகுத்தார் இவர். வேறு நபர்களாயின் இருப்பதைக் காப்பாற்றி கொண்டு எங்கோ சென்று தன் குடும்பத்தைக் காப்பாற்றியிருப்பர். ஆனால் இவர் மக்களுக்கு நிழல் தரும் மரமாய் நின்று அவர்களுடன் அதே வாழ்க்கையை அனுபவித்திருக்கிறார். அந்த மக்கள் கண்ணீருடன் நின்றபோது கரைசேர்க்க முனைந்திருக்கிறார்.

மீண்டும் தொடர்முயற்சியாக 1996 தை மாதம் முறிகண்டிக்கும் இரணை மடுவுக்கும் இடைப்பட்ட 'இந்துபுரம்' பகுதிக்கு இடமாற்றப்பட்டது தொழிலகம். கடையமைத்து ஒரு தொகுதியினரைக் குடியமர்த்தி உற்பத்திகள் உருவாக்கம் பெற்றன. அதுவே பின்நாளில் பெரிதாய் வளர்ந்து 150 பேர் வரை வேலை பார்க்கும் தொழிற்சாலை ஆனது. நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டன. காணிகளை உரிமையாக்கி அங்கு ஊன்றிநின்ற நேரம் மீண்டும் சோதனை தொடர்ந்தது. ஆனி மாத முற்பகுதியில் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கிய 'சத்செய' இராணுவ நகர்வு தொடங்கியது. எனவே கிளிநொச்சிக் கடையையும் தொழிலையும் இந்துபுரத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இங்குபெற்ற அனுபவங்கள் முன்பைவிட மாறுபட்டவை. எனினும் மனம் தளரவில்லை அண்ணா நிறுவனம். சாமர்த்தியமாக இத்தளர் வினைத் தைரியமாக எதிர்கொண்டார் இவர்.

பொன்னகர் தொழில் ஓங்கி உயர்ந்த போது வாகனங்கள் பெறப்பட்டு வசதிகள் விரிவாக்கப்பட்டன. ELF வான், LD வான், றைக்ரர் எனப் பல வாகனங்கள் பயனில் இருந்தன. அந்நேரம் 1996 ஆடி 24இல் ஆரம்பித்த இரண்டாவது 'சத்செய' நடவடிக்கை மீண்டும் இந்நிறுவனத்தின் செயற்பாட்டிற்கு இடையூறானது. அதன் பின்னான இன்னொரு நகர்வொன்றை தீர்மானிக்கும் அவலநிலை தோன்றியது. காலந்தாழ்த்தாத நிர்வாகம் தமது தொழிலகத்தையும் தொழிலாளர்களையும் பொருட்களையும் வவுனிக்குளம் நோக்கி நகர்த்தியது. அண்ணா நிறுவனம் வவுனிக்குளத்திலும் நிலைகொள்ளமுடியாத வாறு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. 1977இல் 'ஜெயசிகுறு' இராணுவ முன்னேற்றம் பெரிய அளவில் நடத்தப்பட்டிருந்தது. இதனால் பாதிப்புற்ற தொழிலகமும் தொழிலாளர்களும் துன்பப்பட்ட நேரத்தில் மனந்தளராத நிறுவனர் நடராசா அவர்கள் பாரிய நஷ்டத்துடன் தமது நகர்வை 'ஜெயபுரம்' நோக்கித் திருப்பினார்.

வேலைவாய்ப்புப் பிரச்சினைகள், உற்பத்தி கட்கான மூலப்பொருட்களின் பற்றாக்குறை, தொழிலாளர் கஷ்டங்கள், தொழிலில் ஏற்பட்ட இழப்புக்கள், வாகனங்கள் வெளியில் சென்று வழங்குதல்களைச் செய்யமுடியாத நிலை என்று 2008 மாசி மாதம் வரை அண்ணா நிறுவனம் பட்ட அவஸ்தைகள் அளப்பரியன. அதனூடே அதிபர் நடராசா தன் உடல் நிலையில் பட்ட நலக்குறைவுகள் சொல்லில் அடங்காதவை. அடிக்கடி அவர் உடல் நலிவுற்றார். எனினும் உற்சாகம் குறையவில்லை. நடல் உபாதையிலும் உணர்வுகள் 'சிலிர்த்து' நின்றன.

2008 மாசி மாதம் ஏற்பட்ட சமாதானம் மீண்டும் யாழ் வர வழி சமைத்தது. தென்மராட்சி ஊழியர்களும், மீசாலைத் தொகுதியிலிருந்தவர்களும் யாழ் திரும்பினர். யாழ்ப்பாணத்தில் அண்ணா தொழிலகத்தின் அத்தனை பொருட்களும் கொள்ளையிடப்பட்டிருந்தன. மீண்டும் ஒரு வாழ்வை மீட்டுத் தர முயன்றார் திரு.நடராசா. உலகத்தில் ஒரு நிறுவனம் இப்படி இன்னல்பட்டதுமில்லை. எழுந்து நின்றதுமில்லை என்னும் சரித்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

❍ ❍ ❍

# போர் எழுதிய கவிதை

## இருபதில் ஈழத்துக் கவிதை குறித்த பார்வை

### கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்



ஈழத்துக்கவிதை, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக்கூறுகளில் பெரும்பான்மையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய கவிதைப் பண்புகளோடேயே தொடர்ந்து வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முதல் நான்கு தசாப்தங்கள் வரையும் கவிதைச்சூழல் மாறுபடுவதற்கான அரசியல், சமூகக் காரணங்களேதும் ஈழத்து வரலாற்றில் ஏற்படவில்லை. நவீனகவிதையின் தந்தையெனப் போற்றப்படுகின்ற பாரதியின் தோற்றத்திற்குச் சிலகாலத்திற்கு முன்பாகவே தமிழ்நாட்டில் சிறுபான்மை நவீனத்துவ அடையாளங்களோடு எவ்வாறு சில கவிஞர்கள் தோற்றம் பெற்றனரோ அவ்வாறே ஈழத்திலும் நாற்பதுகளில் பிரக்ஞாபூர்வமாக ஏற்பட்ட நவீனத்துவ மாற்றங்களுக்குக் கட்டியம் கூறுவதுபோல,பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் பல துறைகளிலும் நவீனத்துவம் அரும்பத் தொடங்கியிருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியினால் ஆசியாவின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட நவீனத்துவ மாற்றத்தை ஒத்து, ஈழத்திலும் நாவல் முதலிய புதிய இலக்கிய வடிவங்கள் அறிமுகமாயின. உரைநடை சிறப்புற வளர்ச்சியடைந்தது. நிலப்பிரபுத்துவநிலையிலிருந்து விடுபட்டமையினால் ஏற்பட்ட பின்விளைவுகளும், ஆங்கிலக் கல்வியின் வழிவந்த பிறமொழி இலக்கியப்பரிச்சயமும், தகவல் தொடர்பாடல் துறையின் வளர்ச்சியும் இவ்வாறு ஈழத்தமிழ் இலக்கியப் போக்கை ஓரளவிற்கேனும் மாற்றுதற்குத் துணை செய்தன. எனினும், மரபு நிலைப்பட்டுத் தொடர்ந்த கவிதை உடனடியா-கப் பெருமாற்றத்தைச் சந்தித்ததெனச் சொல்லமுடியாவிட்டாலும், ஒரு சில கவிஞர்கள் நவீனத்துவ அம்சங்களை முன்னரே பாடத்தொடங்கியவர்களாக விளங்கினார்கள். மரபுக்கல்வி முறையில் வந்த சிலரும் அந்நிய ஆதிக்கத்தினால் சமுதாயத்திலே தோன்றிய மாற்றத்தினை பதினெட்டாம் நூற்றாண்டின் நிறைவு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலப்பகுதியில் பாடத் தலைப்பட்டனர்.

மிக அருந்தலாகத் தோற்றம் பெற்ற இத்தகைய சமகாலச் சித்திரிப்பு மற்றும் முற்போக்கான கருத்துக் கவிதைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு நிறைவை ஒட்டிய காலப் பகுதியிலும் சிலரால் எழுதப்பட்டன. தெல்லிப்பளை பாவலர் துரையப்பாபிள்ளை, அச்சுவேலி தம்பி முத்துப்புலவர், திருகோணமலை தி.த. சரவணமுத்துப்பிள்ளை முதலியோர் அவர்களுள் முக்கியமானவர்கள்.

எனினும், இருபதின் தொடக்கத்

தசாப்தங்களிலும் சமயஞ் சார்ந்த பிரபந்த மரபிலக்கியங்களே பெருமளவிலே தோன்றின. இதற்குக் காரணம் ஈழத்தில் காலனித்துவத்திற்கெதிரான போராட்டம், மதத்தை முன்னிறுத்திய போராட்டமாக இடம்பெற்றதேயாகும். அதாவது மதமாற்றத்திற்கு எதிரான சமுதாய முன்னெடுப்பாக இப் போராட்டம் ஆறுமுகநாவலர் தலைமையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அக்கால கட்டத்தில் தோன்றிய கவிதைகள் பெரும்பாலும் மதநிலைப்பட்டனவாகவே காணப்பட்டன. ஆலயங்கள் பற்றிப்பாடுவதும் சமய விரத அனுஷ்டானங்கள் பற்றிப் பாடுவதும் வடமொழி இலக்கியங்களை மொழிபெயர்த்துப்பாடுவதும் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதை இலக்கியங்களின் போக்காயிற்று. இப்போக்கே பெரிதும் மாறுபாட்டுக்குள்ளாகாமல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக்கூறுகளுக்கும் தொடர்ந்து வந்தது. இத்தகைய படைப்புகளைத் தந்தோரில் குமாரசுவாமிப் புலவர், மயில்வாகனப் புலவர்,அப்துல் காதிறுப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தொடர் காலத்தில், பாரதியின் பாதிப்பு, ஈழத்து இதழ்கள் பலவற்றினது வரவு, இலக்கிய அமைப்புகளது தோற்றம் போன்ற காரணங்களால் ஈழத்து படைப்பிலக்கியத்துறை வளர்வதற்கேற்ற சூழ்நிலை பெரிதும் வாய்த்தது. குறிப்பாக, 30களில் வரத்தொடங்கிய ஈழகேசரி பத்திரிகையில் (1939 - 1958) வெளிவந்த கவிதைகள் சிலவற்றிலும் சமூக அக்கறையோடுங் கூடிய இத்தகைய நவீனத்துவக் கருத்துகள் பேசப்பட்டிருப்பதனைக் காணலாம். இப் பத்திரிகையில் எழுதிவந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. நடராசன், அல்வையூர் மு. செல்லையா முதலியோரதும், உயர் கல்வித் துறையோடு தொடர்புபட்டிருந்த விபுலானந்தர், க.கணபதிப்பிள்ளை ஆகியோரதும் மற்றும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, அப்துல் காதர் லெப்பை ஆகியோரதும் கவிதைகள் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கன. எனினும் இவர்கள் அனைவரையும் பூரணமாக நவீன கவிஞர்கள் எனச் சொல்ல முடியவில்லை. மரபினதும் நவீனத்துவத்தினதும் வெவ்வேறு விகிதாசார அளவுகளிலான கலவைகளாக இவர்கள்தம் படைப்புகள் விளங்கின.

ஒரு நாட்டின் சுதந்திரத்தை நோக்கிய காலகட்டமானது அரசியல், சமூகத் துறைகளிலும் அவற்றின் தொடர்பாக இலக்கியத்துறையிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழக்கூடியது. எனினும் ஈழத்தில் அத்தகையதொரு நிலை காணப்படவில்லை என்பது கவனிப்புக்குரியதாகிறது. குறிப்பாக இந்தியாவில் இடம்பெற்றது போன்ற சுதந்திரத்திற்கான போராட்டம் ஈழத்தில் நடைபெறவில்லை. இதனால் சுதந்திரப்போராட்ட காலத்தில் தமிழ்நாட்டில் மாபெரும் நவீன கவிஞராக பாரதியார் தோற்றம் பெற்றதைப்போன்று, சமவேளையில் ஈழத்தில் எவரும் உருவாகவில்லை. சுதந்திரம் பற்றியும் ஈழமாதாவின் விடுதலை பற்றியும் பாடிய அக்காலத்து ஈழத்துக்கவிஞர்கள் கூட பெரிதும் பாரதியாருடைய தேசியகீதங்கள், விடுதலைக் கீதங்கள் ஆகியவற்றை அடியொற்றியே பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

40 களில் தோன்றிய கவிதைகள் காலனித்துவத்திலிருந்து இலங்கை விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பைக் கொண்டிருந்தன. சமகாலத்தில் இந்தியாவும் தனது விடுதலைக்காகப் போராடி வந்ததனாலும், இந்திய விடுதலைப் போராட்டகாலக் கவி பாரதியாரின் பாதிப்பிலேயே பெரும் பான்மைய ஈழத்துக்கவிஞர்கள் இயங்கியமையினாலும், இந்தியாவிலிருந்து அந்நிய ஆட்சி

யாளர்களால் அழைத்துவரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்தம் மனோநிலையாலும் இந்தியதேசம் பற்றிய அக்கறையையும் அக்கால ஈழத்தமிழ்க் கவிதைகள் கொண்டுவிளங்கின. இதனால் இலங்கைத்தேசியம், இந்தியத்தேசிய விருப்பு ஆகிய உள்ளடக்கங்களை ஈழத்துக் கவிதைகள் கொண்டிருந்தன.

1948 இல் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. இக் காலப்பகுதியில் ஏற்பட்ட மகிழ்ச்சியான மனோநிலையில், இலங்கைத் தேசியத்தைப் பாடுகின்ற கவிதைகள் பரவலாகத் தோற்றம் பெற்றன. சமவேளையில் இடம்பெற்ற தேசிய கீத ஆக்கத்தேர்வு, மரதன் ஓட்டக் கவிதைப் போட்டி முதலியவற்றால் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த ஈழத்துக் கவிஞர்கள் பலரும், இலங்கை மாதாவை வாழ்த்தியும், இன ஒற்றுமையை வலியுறுத்தியும் கவிதைகளைப் படைத்தனர். ஈழத்து மண்வாசனையுடன் கூடிய இப்படைப்புகள், பாரதி பாதிப்பிலிருந்து விடுபடத் தொடங்குகின்ற தன்மையைக் கொண்டிருந்தன. இத்தகைய படைப்புகளை அளித்தவர்களுள் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் முக்கியமானவர்.

(எ-டு) **எஃகிய பஞ்சினைப் போலத் – தமிழ்**
**எல்லாள மன்னனிருதயம் போல**
**வெஃகிய வெண்முகிற் கூட்டம்**
**வெண்டிரை மேய வெழுந்திடு மன்றே**

**கல்லாதவர் மனம்போல – அன்றிக்**
**கடுகணைக் குகைவரு கனையிருள் போல**
**அல்லாதமுக்காறு கொண்டோர் – மனம்**
**ஆமெனவே இருண்டங்கு சூல் கொண்டே..**

- சோமசுந்தரப் புலவர்

40களின் பிற்பகுதியில் ஈழத்தின் கவிதைப்போக்கு பிரக்ஞாபூர்வமாக நவீனத்துவச் சிந்தனைகளைப் பெற்று மாறுதலுக்குள்ளாகியது. 40களின் ஆரம்பத்தில் இலக்கிய ஆர்வமுடைய சிலர் சேர்ந்து மறுமலர்ச்சிச் சங்கத்தினை ஆரம்பித்தார்கள். ஏலவே ஈழகேசரி மூலம் அரும்பத்தொடங்கியிருந்த நவீனத்துவம், பாரதி, பாரதிதாசன் படைப்புகளால் ஊக்கம் பெற்றிருந்த மறுமலர்ச்சிச் சங்கக் கவிஞர்களால் ஆரோக்கியமாக முன்கொண்டு செல்லப்பட்டது. இச்சங்கம் மறுமலர்ச்சி இதழை வெளியிடலாயிற்று. இவ்விதழ் மூலம் நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், அ.ந. கந்தசாமி, சோ. தியாகராஜா, மஹாகவி, சாரதா, செ. கதிரேசர்பிள்ளை, யாழ்ப்பாணன் முதலிய கவிஞர்கள் கவிதைத்துறையில் பதிவாகினர்.

(எ-டு) **பழந்தமிழர் அது செய்தார் இதுவுஞ் செய்தார்**
**பண்ணாத(து) அவர் கணக்கில் இல்லையென்று**
**குழந்தை மொழி வழக்கிலோர் கொள்கை இல்லை**
**குவலயமெல்லாம் புரட்சிக் கூச்சல் கேட்டும்**
**விலங்குகளாய் உணர்விழந்து அறிவும் மங்கி**
**வேதாந்தம் பேசுகிறோம் விழல் வேதாந்தம்**
**இளந்தமிழா! எழுந்துலகம் எல்லாம் சுற்றி**
**எங்கள் நிலை கண்டு நவ எழுச்சி காண்பாய்...**

- சாரதா

சமவேளையில் ஈழத்து அரசியலில் இனத்துவ முரண்பாடுகள் ஆரம்பமாகின. இலங்கையின் அரசகருமமொழியாகச் சிங்களம் மாத்திரமே இருக்க வேண்டும் என்கின்ற தனிச்சிங்களச் சட்ட அறிவிப்பு, 1956இல் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. மறுமலர்ச்சிச் சங்கத்தையொட்டி வளர்ந்த கவிஞர்கள் படைப்பாக்கச் செழுமை பெற்றுக் கொண்டிருந்த அச்சந்தர்ப்பத்தில், தமிழர்களை வீறுகொள்ள வைக்கக்கூடிய விதத்தில் ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் ஈழத்தின் கவிதைப்போக்கைப் புதிய திசையில் பயணிக்க வைத்தன. முதன்முதலில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அரசியல்சார் நவீன கவிதைகள் தோற்றம் பெற்றன. இவை முனைப்புப் பெறுகின்ற காலகட்டத்திலேயே கவிதைத்துறையுள்

நீலாவணன், முருகையன் போன்ற கவிஞர்கள் பிரவேசித்தனர்.

50களின் இறுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் தமிழ்மக்களிற் பலர் கொல்லப்பட்டமையும், அகிம்சைவழியில் எதிர்ப்புத் தெரிவித்த தமிழரசுக்கட்சித் தலைவர்கள் காடையர்களாலே தாக்கப் பட்டமையும், பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கெதிராக மேற் கொள்ளப்பட்ட பாதயாத்திரையையடுத்து தென்மாகாணத் தமிழர்கள் தாக்கப் பட்டமையும் காரணமாக, தமிழ் மக்கள் தம்மையும் மொழியையும் காத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டார்கள். இதன் பின்னணியில், தமிழின - தமிழ்மொழி உணர்ச்சிக்கவிதைகள் பல தோன்றலாயின.

இக் கவிதைகள், சாத்விகப் போராட் டத்திற்கான அழைப்பை உள்ளடக்கமா கக்கொண்டு விளங்கின. இதனால், இந்தியத் தேசியத் தந்தையாக விளங்கிய மகாத்மா காந்தியின் மீதான ஈடுபாட்டையும், காந்தியக் கருத்துகளையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளும் குறிப்பிடத்தக்களவு தோன்றின.

அரசினதும் பெரும்பான்மையின மக்க ளினதும் துவேஷ நடவடிக்கைகளைக் கண்டித்து வந்த (1949 இல் தொடங்கப் பெற்ற) தமிழரசுக்கட்சி, இக்காலகட்டத்தில் மிகப்பெரிய வளர்ச்சி கண்டது. 1947 இல் இருந்து வெளிவரத்தொடங்கிய சுதந்திரன் பத்திரிகை பின்னர் தமி ழரசுக்கட்சியின் சார்புநிலைப்பட்டு தமிழுணர்ச்சி ஆக்கங்களைப் பெருவா-ரியாகப் பிரசுரித்தது. கட்சியின் பலம் பத்திரிகைத்தளம் என்பன காரணமாகத் தமிழுணர்ச்சிக்கவிதைகள் படைத்துவந்த கவிஞர்களுக்குப் படைப்பாக்கத்திற்கு ஏற்ற சூழல் மேலும் வாய்த்தது.

தமிழ்நாட்டின் திராவிடப் போராட்ட காலத் தமிழ்க்கவிதைகளின் பண்புகளை ஓரளவு ஒத்த தமிழுணர்ச்சிக் கவி தைகள் இக்காலகட்டத்தில் பெருமளவு வெளிவந்தன. உயிர் தமிழுக்கு, தமிழ் எங்கள் ஆயுதம் போன்ற தொகுப்புகள் இக்காலகட்டத்தைய தமிழ்த்தேசியக் கவி தைப் பண்புகளை வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன.

(எ-டு) **போர் முரசொன்று கேட்குதடா**
**புவியினின் ஈழத் திருநாட்டின்**
**சாரலின் வடக்கும் கிழக்கினிலும்**
**தமிழறை கூவி அழைக்குதடா...**

- யாழ்ப்பாணன் -

பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை ஒட்டியே நவீன கவிதைகள் உருவாகிவந்த நிலைமை விரிவடைந்து ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் நவீன கவி ஞர்கள் தோற்றம் பெற்றனர். அம்பி, சில்லையூர் செல்வராசன், காசிஆனந்தன், ராஜபாரதி, புரட்சிக்கமால், அண்ணல், பரமஹம்சதாசன், சக்தி அ.பாலையா முதலிய கவிஞர்கள் பலரும் இக்கால கட்டத்தில் கவிதையுலகில் பெரிதும் அறியப்பட்டவர்களாக இருந்தனர் என்ற போதும், மஹாகவி, நீலாவணன், முரு கையன் ஆகிய மூவருமே இவர்களுள் பிரதானர்களாக விளங்கினர்.

1958 இல் அரசாங்க சேவைக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சையைத் தமிழில் எழுதவும், வடகிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தைத் தமிழில் நடாத்தவும் சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றமை 60 களின் தொடக்கத்தில் இத்தகைய தமிழுணர்ச்சிக், கவிதைகளின் உக்கிரத்தைக் குறைத்தது. எனினும், சில கவிஞர்கள் தொடர்ந்தும் தமிழ்த்தேசிய உணர்ச்சிக் கவிதைப்பாதையில் பயணிக்கவே செய்த னர். அத்தகையோருள் காசி. ஆனந்தன் மிகுந்த முக்கியத்துவமுடையவர்.

(எ-டு) **கூண்டுக்கிளி நிலை எத்தனைநாள் வரை?**
**கூப்பிடு கூப்பிடு வீரர்களை!**
**ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை**
**ஆள நினைப்பதில் என்ன குறை?...**

- காசிஆனந்தன்

ஞானம் 30ஆம் இதழில் (நவம்பர் 2002)

## ஆசிரியர் தலையங்கத்திலிருந்து...

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும். தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அக்டோபர் 19முதல் நான்கு நாட்கள் மிகவும் சிறந்த முறையில் நடந்தேறியுள்ளது. 1974இல் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இதே வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது நடந்த அராஜகங்கள், மனித உயிரழிவுகள் இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தது. 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இதே மண்டபத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் படைப்பாளிகளை மனித விடுதலைக்காக பேனா ஏந்தும் தேவையினை மிக அழுத்தமாக உணர்த்தியுள்ளது.**

**இந்த மாநாட்டிலே தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று மூவினமக்களும் கலந்துகொண்டு தமது உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.**

**தமிழகத்திலிருந்து, தென்னிலங்கையிலிருந்து, மலையகத்திலிருந்து, புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து, வடக்குக் கிழக்கின் சகல பிரதேசங்களிலிருந்தும் ஏறக்குறைய மூவாயிரம் பேராளர்கள் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டனர். இவர்கள் யாபேரும் மானுடம் தழுவிய ஒரு விடுதலையை நோக்கி ஒன்றிணைந்து நின்றார்கள்.**

**இந்த மாநாடு 'மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப்போராட்டமும் கலை, இலக்கிய, ஊடகங்களின் வகிபாகமும்' என்னும் மையப்பொருள் பற்றி நடைபெற்றது. தொடக்கவுரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார் :-**

**"....**



**ஈழப்போர் மானுட விடுதலைக்கான போர். இந்தக் கட்டுக்கோப்பிலிருந்து விடுபடக்கூடாது.**

**தமிழ் மரபில் இதுவரை இல்லாத புதிய இலக்கியங்கள் கடந்த இருபத்தைந்து வருட காலமாக ஈழத்தில் எழுந்துகொண்டிருக்கின்றன. அனுபவங்களின் ஆழத்தை, உறவுகளின் மென்மையை, சோகத்தை தெளிவாக வெளிப்படுத்துபவை காத்திரமான இலக்கியங்களே. இலக்கியங்கள் மொழி கடந்தாலும் மதிப்பிறக்கம் அடைவதில்லை. தமிழர் உரிமைப்போரின் அதிர்வுகள் கலை இலக்கியங்களில் தக்க சான்றுகளாக வெளிப்படுத்தப்படவேண்டும்.**

**இன்று தமிழ் ஊடகங்களுக்கு ஒரு முக்கியமான பொறுப்பு உள்ளது. அதாவது இந்தப்போராட்டம் மானுட விடுதலையின் அடிப்படையில் வருவது என்பது பற்றிச் சொல்லும் அந்த மையக்கருத்தை மக்களிடையே கொண்டுசெல்வதும், மக்களிடையே பேணுவதும் மிக முக்கியமான ஒரு விடயமாகும்".**

**...."**

**(பேராசிரியரின் இக்கருத்து இன்றைய சூழலிலும் மிக முக்கியமானது. )**

*சமவேளையில், இடதுசாரித் தன்மை கொண்ட அரசு ஆட்சிப்பொறுப் பேற்றமை, இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி ஆகியன வடஇலங்கையிலும் இயங்கத் தொடங்கியமை, ஆளுமைமிக்க இடதுசாரிப் பிரமுகர்களால் தமிழ் இளைஞர்கள் பலர் ஆகர்ஷிக்கப்பட்டமை, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எழுச்சி பெற்றமை முதலியவை காரணமாக, 60 களில் ஈழத்துத்தமிழ்க்கவிதைகள் புதிய திசையில் பயணிக்கத் தொடங்கின. ஈழத்துக்கவிதைகளில் தமிழ்த்தேசிய உள்ள டக்கம் குறையத் தொடங்க இலங்கைத் தேசிய உள்ளடக்கம் முனைப்புப் பெறத் தொடங்கியது.*

(எ-டு) **இலங்கையன் என்றதும் என் இனம் சாதி மதம்**
**எல்லாம் மறந்தேனே!**
**நிலம் ஒன்றிலே பிறந்தால் நெறிகுலம் யாவும் ஒரே**
**நிகர் நேர் சமம் தானே!....**

*- சில்லையூர் செல்வராசன்*

இக்காலகட்டத்தில் முற்போக்குச் சித்தாந்தங்களை உள்வாங்கிய அரசியற் கட்சிகள், சமூக இயக்கங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய கவிஞர்கள் தோற்றம் பெற்றனர். சுபத்திரன், பசுபதி, புதுவை இரத்தினதுரை, எம். ஏ. நுஃமான், சண்முகம்சிவலிங்கம்ஆகியோர்இவர்களுள் சிலர். ஒடுக்கப்பட்ட வர்க்க, சாதிப் பிரிவுகளிலிருந்தும் பலபடைப்பாளிகள் உருவாகினர். ஏலவே, தமிழுணர்ச்சிக் கவிதைகள் படைத்துவந்த முருகையன் போன்ற சிலர், இக்காலகட்டத்தில் முற்போக்குஅணிச் சார்புடையவர்களாக மாற்ற முற்றனர். இத்தகைய முற்போக்குச்சித்தாந்த கவிதைகளுக்கு மல்லிகை முதலிய இதழ்கள் பிரசுரகளமாக விளங்கின.

(எ–டு) **சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்**
**பாதித் தமிழனடா! – அவர்**
**நீதி தனக்கொரு நீதி பிறர்க் கொரு**
**நீதி யென்றாடுதடா! – தமிழ்**
**நீதி மறந்தவர் எந்த மதத்தினில்**
**சாதி படித்தனரோ – அதை**
**மோதி உடைப்பது தானொரு பாதையென்**
**றோதி எழுந்திடுவாய்.....**

- சுபத்திரன்

இவ்வாறு, பெரும் இயக்கமாக முற்போக்குச் சித்தாந்தம் எழுச்சியுற்ற இவ்வேளையில், இக்கொள்கையைச் சாராத கவிஞர்கள் பலரும் ஒருபுறம் சமுதாய அக்கறையுடன் தொடர்ந்தும் படைப்பாக்கத்தில் ஈடுபட்டே வந்தனர். பல்வேறு பாடுபொருள்களையும் உள்ளடக்கிப் பாடிய இக்கவிஞர்களுள் வி. கந்தவனம், மு. பொன்னம்பலம், காரை செ. சுந்தரம்பிள்ளை, ச.வே. பஞ்சாட்சரம், பா. சத்தியசீலன், ஜீவா ஜீவரத்தினம், மு. சடாட்சரன், கல்வயல் வே. குமாரசாமி முதலிய கவிஞர்கள் முக்கியமானவர்கள். இவர்களுக்கு கலைச் செல்வி மிகமுக்கியமான பிரசுரகளமாக விளங்கிவந்தது.

(எ–டு) **நல்லறி வாண்மை இருக்கிறதா? – அது**
**நாளும் வளர்ந்து பெருக்கிறதா?**
**வல்ல திறமைக் கருக்குளதா? –எனின்**
**வந்து படைப்புகள் தந்திடலாம்.**
**நெஞ்சம் பரந்து விரிந்தவரா? –பொருள்**
**நேர்மையில் நின்று புரிந்தவரா?**
**கொஞ்சும் எளிமை தெரிந்தவரா – எனின்**
**கோர்த்திடலாம் அதை வார்த்திடலாம்...**

- வி. கந்தவனம்

1970 ஆம் ஆண்டு தரப்படுத்தல் மூலம் உயர்கல்வி பெறுவதில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் அதனை எதிர்க்கவென தமிழ்மாணவர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பாதிப்புற்ற பெருமளவிலான தமிழ் இளைஞர்கள் போராளிகளாயி-னர். இதேவேளை தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்கின்ற தம்கோரிக்கை தோல்வியடைய அரசியல் அமைப்புப்பேரவையில் இருந்து தமிழ் உறுப்பினர்கள் பலரும் வெளியேறினார்கள். 1972 இல் தமிழரசுக்கட்சியினர், ஏனைத் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள், மலையகத்தமிழ்த் தலைவர்கள் ஆகியோர் இணைந்து தமிழர் ஐக்கியமுன்னணியை உருவாக்கினார்கள். 1973 இல் போராட்ட எண்ணமுடைய இளைஞர்களால் தமிழ் இளைஞர்பேரவை உருவாக்கப்பட்டது. இதனைச் சார்ந்த பல இளைஞர்கள் இலங்கை அரசால் குற்றம் சுமத்தப்படாமல் சிறையில் அடைக்கப்பட்டனர். 1974 இல் இடம்பெற்ற நான்காவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய அரசியற் பின்புலமானது 70 களில் தமிழுணர்ச்சி மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்த கவிதைகளை மீள் முக்கியத்துவம் உடையதாக்கியது. கூடவே, தமிழ்நாட்டுக் கவிதைச் சூழலில் புதுக்கவிதை பெற்றுவந்த செல்வாக்கின்

பாதிப்பும் இணைய, சமூக அரசியல் உணர்வுகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கும் தனிநிலைப் புதுக்கவிதைகள் ஈழத்தில் இக்காலத்தில் தோற்றம் பெற்றன. தமிழ்நாட்டுப் புதுக்கவிதைச்சூழலில், ஒருபுறம் 1959 இலிருந்து வெளிவர ஆரம்பித்த எழுத்து இதழ் அகச்சார்பான கட்டிறுக்கமுள்ள கவிதைப்பாணியை வளர்த்தது என்பதும், மறுபுறம் வானம் பாடி இதழ் புறச்சார்பான நெகிழ்ச்சியான கவிதைப்பாணியை வளர்த்தது என்பதும் தெரிந்ததே. அக விசாரத்தோடு பல விடயங்களையும் வெளியிட்டுவந்த பிரமிள் (தருமு சிவராமு) எழுத்துப்பாணிக் கவிதைகள் எழுதிய ஈழத்தவராவார். 70 களில் ஈழத்தில் முனைப்புப் பெறத் தொடங்கிய புதுக்கவிதைகளுள் இவ்விரு பாணியினதும் பாதிப்பில் தோற்றம் பெற்ற கவிதைகளும் குறிப்பிடத்தக்களவு இருந்தன. எனினும், ஈழத்து அரசியல் பின்புலத்தால் தமிழ்நாட்டுப் புதுக் கவிதைப் போக்கிலிருந்து வேறுபட்ட, தனித்துவம் மிக்க, நேரடித்தன்மை வாய்ந்த சமூக, அரசியற் புதுக்கவிதைகள் ஈழத்தில் தோன்ற ஆரம்பித்தன. முற்போக்கு விடயங்களை மிகவும் வெளிப்படையாகவும் எளிமையாகவும் தந்த தா.இராமலிங்கம் மற்றும் சி. சிவசேகரம், வ.ஐ.ச. ஜெயபாலன் முதலியோருடைய கவிதைகள் இங்கு உதாரணங்களாகக் கொள்ளப் படக் கூடியன.

(எ–டு) **மீண்டும் சிரிப்பு,**
**நேபாம் குண்டுகளே**
**நாணிடும் சிரிப்பு.**
**போராட்டத்தை அர்த்தப்படுத்தும்**
**புழுதி தோய்ந்த புதல்வரின் சிரிப்பு.**
**ஆயிரம் காட்டுத் தீயும்**
**அணைந்தே போகும்.**
**முகங் கொடுக்கும் புல்வெளிகளோ**
**பூத்துக் குலுங்கும்...**

- வ.ஐ.ச. ஜெயபாலன்

முற்போக்கு அணிசார்ந்து இடதுசாரிச் சிந்தனைகளுடன் வர்க்க விடுதலையை நோக்கமாகக் கொண்டு இயங்கி வந்த கவிஞர்கள் சிலரும், இனபேதம் கடந்த நிலையில் வர்க்க விடுதலையைச் சாத்தியமாக்குவதன் இயலாமையைப் புரிந்துகொண்டு தமிழ்த்தேசியச் சார்புக்கவிதைகளை இக்காலத்தில் ஆக்கத் தொடங்கினர் (புதுவை இரத்தினதுரை). மேலும், 60 களின் நடுப்பகுதியில் சோவியத், சீனநாடுகளிடையே ஏற்பட்ட பிரிவினையைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவு பட்டமையும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வலிகுன்றியமையும் இடதுசாரி முற்போக்குக் கவிதைகளின் முதன்மைநிலையைத் தளரச்செய்தன.

70 களில் மெல்லமெல்ல வன்மம் பெற்ற தமிழருக்கு எதிரான அடக்குமுறை 80 களில் மிகக்கடுமையாக உக்கிரம் பெற்றது. தமிழர்களின் தலையாய அறிவுத்தேட்ட நிலையகமாகக் கொள்ளப்பட்டு வந்த யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், 1981 இல் எரிக்கப்பட்டமையும், 1983 இல் கொழும்பிலும் பிற இடங்களிலும் மிகக் கொடூரமானமுறையில் இடம்பெற்ற தமிழருக்கெதிரான வன்முறைகளும் பேரினவாதிகளின் உக்கிரமான போக்கைக் காட்டவல்லன. இத்தகைய இனமுரண்பாட்டு யுத்தச்சூழ்நிலையில் இலக்கியத்துள் பிரவேசித்த பரம்பரையொன்று 70 களின் நிறைவிலும் 80 களின் தொடக்கத்திலும் தோற்றம் பெற்றது. இத்தலைமுறையின் கவிதைகள் இனமுரண்பாட்டின் கொடுமையையும், போருக்கான அழைப்பினையும் தாங்கியனவாகவும், வெளிப்படையாகப் பேசுந்தன்மை கொண்டனவாகவும் விளங்கின. சேரன், செழியன், இளவாலை விஜயேந்திரன் முதலிய பலரின் கவிதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

(எ–டு) எனது நகரம் எரிக்கப்பட்டது.
எனது மக்கள் முகங்களை இழந்தனர்.
எனது நிலம், எனது காற்று,
எல்லாவற்றிலும் அந்நியப் பதிவு.

கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு,
தன் சேதியை எழுதியாயிற்று.
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களில் இருந்து
எழுந்து வருக.

- சேரன்

## 19:05:2009 தமிழ்நதி

இன்று
கண்கள் கண்ணீரில்
மூழ்கி இறந்தன.
காற்றை யாரோ
திருடிக்கொண்டு போகிறார்கள்
எல்லா நட்சத்திரங்களும்
வானப் பிரளயம் போலும்
எரிந்து விழுகின்றன

அழாதே என் தோழி
அது அவனில்லை!

நிலம் வானம் காடு
வீடு உறவு கவிதை
ஒன்றுமேயில்லை.
பிணங்களில் இடறிவிழுந்து
உடம்புக்கள் உயிர்
கூடுமறந்த குருவியெனப் பதகளிக்க
திசைகளெல்லாம் சிதறிவிழுந்தோம்.

குடும்பப் புகைப்படம்...
கைப்பிடி மண்...
காதலன் – காதலியின் கடிதம்
யாதுமில்லை!

அவன் எங்களோடிருந்தான்
நாங்கள் உயிரோடிருந்தோம்
அல்லது
அவன் உயிரோடிருந்தான்
நாங்கள் அவனோடிருந்தோம்
அவ்வளவே!

கண்களை நம்பாதே
நாசமாய்ப்போன கடவுளர் சாட்சியாய்
அது அவனில்லை
ஊடகக்காட்சிகளில் காறியுமிழ்ந்துசொல்
நாடகக்காரரை நம்பிலோம் என்று
கனவென்றுணர்ந்தும் கண்விழித்து
கதறியழுவதுபோல்
பொய்யென்றறிந்தும் விழியில்
பொங்குதே மாகடல்!

அழாதே அம்மா!
கடல் வற்றிவிடுமென்று நீ நம்புகிறாயா?
இரவின் நீளம் ஓராண்டென்றால்
ஒத்துக்கொள்வாயா?
பகலைச் சந்திரனும்
இரவைச் சூரியனும் ஆளுமென்றால்
ஆமாமென்றுரைப்பாயா?

சூறைக்காற்றில் சிறுவிளக்காய்
நடுங்கும் உன் குரல்.

ஈற்றில்
உண்மையிலேயே உண்மை
அணைந்துவிட்டதா என்ன?

– கவிஞர் இளம்பிறைக்கு எழுதியது.

ஆரம்பகால ஆயுதவிடுதலைக் குழுக் களைச் சார்ந்த போராளிகள் கூட கவி தைகளை குறிப்பிடத்தக்களவு எழுதினர். அலை, புதுசு முதலிய இதழ்களின் வெளி-வருகை, இக்காலத்தைய கவிதைகளுக்கு ஏற்ற பிரசுர களத்தை வழங்கி உதவியது.

70 களின் பிற்கூறுகளில் எழுந்த கவி தைகள் சிங்களப் பேரினவாதிகளைக் கண்டிப்பனவாகவும் பாதிக்கப்பட்ட தமி ழர்களுக்குத் தெம்பூட்டி வீறுகொள்ளச் செய்வனவாகவும் மட்டுமே விளங்கின. 80 களில் ஈழத்து இனமுரண்பாட்டுச்சூழலில் முதன்முறையாக, இந்தியா வெளிப்படை யாக பங்கேற்கத் தொடங்கியது. 1987 இல் இந்திய அமைதிகாக்கும் படையின ரின் வருகையும் அதனால் ஈழத்தமிழர்கள் அடைந்த கடுமையான பாதிப்பும ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பில் இந்திய அரசியல் மேலாதிக்கத்திற்கெதிரான கவிதைகளைத் தோற்றுவித்தன.

80 களில் தமிழ் விடுதலைக் குழுக் களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றி வளரத்தொடங்கின. இதனால் அவை பரஸ்பரம் தமக்குள் மோதிக்கொண்டன. தமிழர்களுக்கும் பெரும்பான்மையினத் தவர்களுக்குமான மோதலின் இடையே, தமிழர்களுக்கும் தமிழர்களுக்குமான இத்தகைய மோதல்களும் - அவற்றால் உயிரிழப்புகளும் ஏற்பட்டன. இத்தகைய நிலைக்கு இரங்கியும், அம்மோதல்களை நிறுத்தக்கோரியும் கவி தைகள் பல தோற்றம் பெற்றன.

இலங்கையின் இன்னுமொரு சிறு பான்மையினரான முஸ்லிம்கள், சிங்கள-தமிழ் இனமுரண்பாட்டுப் போரின் போது பேரினவாதிகளாலும் தமிழீழ விடுதலைக் குழுக்களாலும் பாதிக்கப்பட நேர்ந்தது. பள்ளிவாயில்களில் முஸ்லிம் கள் கொல்லப்பட்டதும், வடக்கின் சில பகுதிகளிலிருந்து அவர்கள் வெளி யேற்றப்பட்டதும் முஸ்லிம் தேசியக் குரல் ஒலிக்கும் கவிதைகளை 90 களில் தோற்றுவித்தன. இவ்வியல்பை வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன் போன்ற தமிழ்க் கவிஞர்களதும், அஷ்ரப் சிஹாப்தீன், ஆத்மா போன்ற முஸ்லிம் கவிஞர்களதும் படைப்புகளில் காணுதல் முடியும்.

பேரினவாதம் மற்றும் குழு மேலா திக்கம் என்பவற்றுக்கான எதிர்ப் புக்குரல் இக்காலகட்டப் பகுதியில் பல இளந்தலைமுறையினர்களாலும் கவித்துவ மாக வெளிப்படுத்தப்பட்டன. இவ்வாறான கவிதைகளுக்கு சரிநிகர் முதலிய இதழ்கள் முக்கியத்துவம் வழங்கின. மேலும், வெளிப்படைத்தன்மை நிரம்பிய ஈழத்து அரசியல் கவிதைகளின் வருகை தொடர்ந்து வந்த அதேவேளை, சிக்கல் தன்மை மிக்க வெளிப்பாட்டு முறையிலமைந்த கவி தைகளின் வரவும் தொடங்கிற்று. இத் தன்மைய கவிதைகளை எழுதுபவர்களுக்கு சோலைக்கிளி ஆதர்சமாக விளங்கினார்.

20 ஆம் நூற்றாண்டு நிறைவடையும் தருணத்தில், விடுதலைப்போருக்கான ஆதரவுக் கவிதைகள் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருந்த அதே வேளை, போராலான கடுமையான சிதைவின் விரக்தியினால், இனியும் போர் தொடரவேண்டுமா? என்கின்ற குரல்களும், சமாதானத்தை அவாவும் குரல்களும் இடையிடையே கவிதைகளாக வெளிவரத்தொடங்கியுள்ளன.

(எ-டு) **இருண்ட கண்டத்தில்**
**அவளறியாதோர் மூலையில்**
**மூப்புப் பிணியோடு**
**பார்த்திருக்கிறாள்**
**அம்மா.**

**துருவப் பனிக்கொதுங்கி**
**சாரளத்து ஓரத்தில்**
**காத்திருக்கிறேன்**
**நான்.**
**இன்னமும் எதை வேண்டி**

**தொடர்கிறது**
**போர்?......**

- திருமாவளவன்

இனி, அரங்கக் கவிதைகள் குறித்துச் சுட்டுவதும் அவசியமானதே. சாதாரண மக்களையும் கவிதையின் பால் ஈர்ப்புக் கொள்ள வைத்ததில் கவியரங்கக் கவிதைகள் பெரும்பங்கு வகித்தன. குறிப்பாக 1960 கள் 70 களில் ஈழத்தில் கவியரங்கங்கள் மிக்க சிறப்புப் பெற்றிருந்தன. கோயில் திருவிழாக்கள், சமூகமன்றங்களின் விழாக்கள் போன்ற பலவற்றிலும் கவியரங்கம் பிரதான நிகழ்ச்சிகளுள் ஒன்றாக அமைக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் மஹாகவி, நீலாவணன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, முருகையன், சில்லையூர் செல்வராசன், வி. கந்தவனம், காரை. செ. சுந்தரம்பிள்ளை, பா. சத்தியசீலன், அ. குமரன் முதலிய பலரும் கவியரங்கங்கள் பலவற்றிலும் தொடர்ச்சியாகப் பங்குபற்றி வந்தனர். இவர்கள் பலரதும் கவிதைகள் அக்கால இனமுரண்பாட்டு விடயங்களைப் பேசத் தலைப்பட்டன.

80 களின் பிற்பகுதியிலும் 90 களிலும் ஈழத்தில் கவியரங்கங்கள் மீண்டும் சிறப்பிடம் பெற்றன. தமது விழாக்களில் போதியளவு முக்கியத்துவம் வழங்கி ஆக்கபூர்வமாக முறையில் கவியரங்குகளை அமைத்து வெற்றி பெறச்செய்ததில் அகில இலங்கைக் கம்பன் கழகத்தினதும் அதன் கிளைக் கழகங்களினதும் பணி குறிப்பிடத்தகுந்ததாகும். சமவேளை யில் விடுதலை அமைப்புக்களால் நடாத்தப் பெற்ற தமிழ்த் தேசிய மாநாடுகள், முத்தமிழ் விழாக்கள் போன்றவற்றிலும் கவியரங்கங்கள் சிறப்பிடம் பெற்றன.

முன்னைக் கவியரங்கங்கள் போலல்லாது கற்றோரும் நிறைந்த சபையில் கம்பன் விழாக் கவியரங்கங்கள் நிகழ்த்தப் பட்டதால், அவை கவிதையுலகில் முக்கியம் பெற்றன. ஆண்டுதோறும் கம்பன்விழாக்களில் ஒருநாள் தனி அரங்காக இடம்பெறும் கவியரங்கங்களில் மூத்தகவிஞர்களான அரியாலையூர் வே. ஐயாத்துரை, இ.முருகையன், பா. சத்தியசீலன், ச.வே. பஞ்சாட்சரம், சு.வில்வரத்தினம், காரை. செ. சுந்தரம் பிள்ளை, புதுவை இரத்தினதுரை, வ.ஐ.ச. ஜெயபாலன், சோ. பத்மநாதன், கல்வயல் வே. குமாரசாமி, அ. குமரன் முதலியோரோடு நாக. சிவசிதம்பரம், ஜெ.கி. ஜெயசீலன், த. சிவசங்கர், த. ஜெயசீலன், ச. முகுந்தன் போன்ற இளங்கவிஞர்கள் பலரும் பங்கேற்று வந்தனர். இவர்கள் கவிதைகள் போராட்ட வேளையிலேயே போர் நடந்த மண்ணிலே போரின் அவலங்களைப் பதிவு செய்து தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றன.

எ-டு: யாழில் கடும் போர் நிகழ்ந்த காலத்தில் புதுவை இரத்தினதுரை, கம்பன் விழாத் தலைமையேற்றுப் பாடிய,

**எங்கள் பூமியை மீளப் பெற்றிடல்**
**என்ற லட்சியம் ஏறிய வேங்கைகள்**
**தங்கள் உயிர்களைச் சாவுக் களித்தனர்**
**தாவிவரும் பகையோடு பொருதனர்**
**இங்கு பற்பலர் பேசிக் கழித்தனர்**
**ஈழம் எரிகையில் ஓடிப் பறந்தனர்**
**சங்கமாடிய தமிழெனப் பேசிய**
**தம்பிமாரெல்லாம் கடலைக் கடந்தனர்.**

முதலிய பல கவிதைகள் போர்க்காலச் சித்திரிப்புகளே.

மொத்தத்தில், நிறைவுக் கால்நூற்றாண்டுப் பகுதியில் இனமுரண்பாட்டு விடயங்களும் அவை தொடர்பில் தமிழ்த்தேசியமும் ஈழத்துக்கவிதைகளின் உள்ளடக்கமாயின. இவை சிற்சில மாறுதல்களோடு நூற்றாண்டின் நிறைவு கடந்தும் தொடர்ந்து கொண்டுள்ளன.

❍ ❍ ❍

# தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்கள்

சு. ஜெபவி

## 1. அறிமுகம் :

ஈழத் தமிழினம் தனது உரிமைக்கான போராட்டத்தைத் தொடங்கி அரை நூற்றாண்டைக் கடந்து நிற்கின்றது. மக்களின் விடுதலைக்கான பயணிப்பில் இன்றைய காலம் மாற்றத்திற்குரிய, சர்வதேசத்தில் முக்கியத்துவம் மிகு காலகட்டம். உலகால் தமிழ்த் தேசிய மக்களின் போராட்டத்தை புறந்தள்ள முடியாதவாறான கனதியான சூழ்நிலைக்குள் ஈர்க்கப்பட்டுள்ள காலம். மக்கள் மயப்பட்ட தமிழ்த் தேசியப் பயணிப்புகளுள் உலகின் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பு இருப்பதை அவதானிக்கலாம்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட ஓர் இனத்தின் இத்தகு துயரப்பட்ட பயணிப்புக்கு கொடுக்கப்பட்ட விலைமதிப்புக்கள் யாவை? அவற்றுக்குப் பின்னால் இருந்த பின்புலக் காரணிகள் யாவை? அவற்றின் அகப்புறச் செல்வாக்குகள் எவை? இது எவ்வாறு நிகழ்ந்தது. இவ்விடத்தில் போர்க்கால இதழியல்களின் வகிபாகம் என்ன? ஆகியவற்றை ஒரு தொகு நிலையில் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. தொடர்பூடகங்கள் :

தொடர்பூடகங்களின் வளர்ச்சி பரந்து பட்ட உலகை ஒரு சமூகம் என்ற நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. உலகின் பரப்பை ஒரு காலகட்டத்தில் அறியமுடியாதிருந்த மனிதனுக்கு இப்போது உலகின் எந்தவொரு நிகழ்வையும் உடனே பார்க்கும் வாய்ப்பு எட்டியிருக்கின்றது. மனித உறவின் வட்டம் சர்வதேச அளவில் விரிவடைந்து விட்டது. இன்றுள்ள சமூகம் தகவல் சமூகம். தகவல் பலம் சமூக, அரசியல், போராட்ட, பொருளாதார, மத நிர்ணய சக்தியாக மாற்றம் பெற்று விட்டது.

ஒரு சமூகத்தின் மனித வாழ்வின் உறவு வட்டம் சர்வதேச தர நிர்ணயம் செய்யப்படுகின்றது. இதற்கெல்லாம் முதன்மைக் காரணியாகச் செயற்படு நிலையிலுள்ளவைகள் தொடர்பூடகங்களே. தகவல் அடிப்படையிலான சமூக மாற்றமும், தகவல் அடிப்படையிலான அரசியலும் இன்றைய உலகின் நடைமுறையாகியுள்ளது. தகவலை கடத்துகின்ற தொடர்பூடகங்கள் மனித வாழ்வின் தீர்மான சக்தியாக உருப்பெற்றுள்ளன.

ஒரு மாறும் சமூகம் அல்லது மாற்றத்தை அரசியலாக, பொருளாதாரமாக, மொழியாக, இனத்தின் விடுதலையாக, தேசிய அங்கீகாரமாகக் கருதுகின்ற போது வெகுசனத் தொடர்புகளின்றி அது நடந்தேற முடியாது. ஆகவே ஒரு இனத்தின் மாற்றத்திற்கான முனைப்பில் ஈடுபட்டவர்கள் வெகுசன ஊடகங்களினூடாகத் தங்களின் மாற்றத்தினை மிக வேகமாக நகர்த்தவும் அதனூடாகத்தங்களின்பயணிப்பின் தாக்கங்களையும் வெளிக்கொணர்ந்தனர். இது உலக வரலாற்றிலும் இடம்பெற்றது. ஓர்

இன மக்களிடையேயான நம்பிக்கைகள், நடத்தைகள், நாகரிகம், கலாசாரம், சமூக அமைப்பு என எதிலும் தாக்கம் விளைவிக்கக் கூடிய சக்தியினை கொண்டுள்ளது. மனித வாழ்வில் பிரிக்கப்படமுடியாத ஒன்றாக, ஒரு நாட்டின் எழுச்சியோடும் வீழ்ச்சியோடும் தொடர்புபட்டதாக வெகுசன ஊடகங்கள் இன்றுள்ளன.

குறிப்பாக முதலாம் உலகயுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் இத்தாலி, ஜேர்மன், ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஊடகங்களைக் குறிப்பாக இதழியலை உச்சளவில் பயன்படுத்திச் செய்யப் பிரச்சார கருத்துருவாக்கங்கள் தீவிரவளர்ச்சிக்கும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் தயார் படுத்தலுக்கும் இட்டுச்சென்றன. இது தொடர்பில் ஹிட்லர் தனது "மெயின் காம்ப்" (mein kamf) என்பதில் விரித்துக் கூறியுள்ளார்.

எனவே வெகுசன ஊடகங்கள் மனிதவாழ்வின் மறுக்கப்பட முடியாத ஒரு தீர்க்கமான சக்தி. சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளின் நிர்ணயசக்தி ஒன்றின் வெற்றிக்கும் தோல்விக்கும் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் வெகுசன ஊடகங்களால் பங்காற்ற முடியும்.

இத்தகு முன்னுதாரணங்கள் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றிலும் தமிழர்களின் போரியல் கால கட்டத்திலும் பொருந்துவன.

வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க ஈழத்தமிழர்கள் எத்தனையோ சாதனை மிகு வரலாறுகளைக் கண்டுள்ள போதிலும் அவற்றுக்கான ஆவணங்களைப் பேணு-வதிலோ, பதிவுகளை மேற்கொள்வதிலோ அக்கறை காட்டியது மிகவும் குறைவு, வேதனைக்குரியது. இந்த இடர்ப்பாடு ஊடகம் மற்றும் போரியல் இதழியல் தொடர்பிலும் காணப்படுகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் தமிழ்த் தேசியம் நோக்கிய போராட்டத்தை அறவழிப் போராட்டம், போரியல் போராட்டம் (ஆயுத) என இரு கட்டங்களாக வகுக்கலாம். தந்தை செல்வா தலைமையிலான இரு தசாப்தகாலம் அறவழிப்போராட்டத்தைத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பார்ப்பது தொடர்பில் சிக்கலுண்டு. மொழியுரிமை, நிலயுரிமை, கல்வியுரிமை ஆகிய கோரிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் 1974ஆம் ஆண்டு தமிழராய்ச்சி மாநாடு ஏற்படுத்திய வடுவுடன் ஆயுதப்போராட்டத்திற்கான வலுச்சேர்க்கப்பட்டு 1983 இல் ஏற்பட்ட ஆடிக் கலவரத்துடன் தீவிரம் பெற்றது. அதாவது ஆயுதப் போராட்டத்திற்கான நியாயத் தன்மையையும் அதுவே பெற்றுத் தந்தது. குறித்த இரண்டு போராட்ட காலகட்டங்களிலிருந்தும் பின்னையதே தொடர்ச்சியானதாகவும் இடைவிடாத தாகவும் பல சாதனைகளையும் வேதனைகளையும் தாங்கியதாகவும் அமைந்திருந்தது.

இக்காலகட்டத்தில்தான் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் பல்வேறு பெயர்களுடன் விடுதலைசார் அமைப்புக்கள், இயக்கங்கள் முனைப்புப் பெற்றன. இவை தமது தத்துவார்த்தக் கருத்துருவாக்கங்களை வெகுசனப்படுத்த முனைந்தபோது மேடைப்பேச்சு, கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பவற்றுக் கப்பால் மக்களின் தேவைகள் மற்றும் அபிலாசைகளையும் தங்களின் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் சார்பாக எண்ணங்களையும் வெளிப்படுத்த அல்லது மக்களுக்கு சொல்ல முனைந்தபோது போரியல் சார் இதழ்கள் தோற்றம் பெற்றன.

இதழியல் வரலாற்றில் தமிழ்த் தேசிய விடுதலை மற்றும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் தோன்றிய இதழ்கள் பின்வரும் மறுமலர்ச்சி மாற்றங்களையும், இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் புதிய

போக்குகள் மற்றும் புதிய வரவுகளைத் தமிழுக்குத் தந்தன. குறிப்பாக,

- தங்களது அமைப்பின் கொள்கை, கோட்பாடுகளை, அரசியல் சித்தாந்தத்தை முன்னெடுப்புச் செய்தமை.
- இளம் எழுத்தாளர்களுக்கான களமாக அமைந்தமை.
- போராட்டச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பியமை.
- போராட்டத்திற்கான வலுச் சேர்க்கும் உந்து சக்தியாகச் செயற்பட்டமை.
- இலக்கியத்திற்கான புதிய பொருள், புதிய வடிவம், புதிய மரபு முதலியன தோன்றுவதற்கான தடத்தை மேற்கொண்டமை.
- மக்களின் அவலவாழ்வு, பேரின வாதக் கொடூரங்கள், தமிழ் மக்களது சாதனைகள் மற்றும் வேதனைகளை வெளிப்படுத்தும் அறிகைக்கான செயலொழுங்கை ஏற்படுத்தியமை.
- வெளியுலகத் தேவைகளையும் தமிழ்த் தேசியத்தின் அவசியப்பாட்டையும் சகலரும் அறியும் வழியாகப் பயன்பெற்றமை.
- நாளாந்தச் செய்திகளை வெளிக் கொணர்ந்தமை.

ஆகிய காரண காரியங்களினால் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் போர்க்கால இதழ்கள் முதன்மைச் சக்தியாக, தமிழ் இனத்தின் பலமாக நிலைபெறத் தொடங்கியன.

### 3. பத்திரிகைகள் :

*1956* முதல் *1977* நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வரையான அறவழிப் போராட்டக் காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் என்ற ஒரு கருத்துரு முழுமையாக உருவாகியிருக்கவில்லை. தமிழரசுக் கட்சி தலைமை தாங்கி நடாத்திய போராட்டங்களை ஒரு தொடர்ச்சியான இடையறாத போராட்டமாக நோக்க முடியாதநிலையில் அத்தகைய கருத்தை வழிமொழிந்து எழுதிய இதழியலாளர்களின் வகிபாகம் இக்காலத்தில் பெரிதும் வெளிப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான சுதந்திரன், பின்னாளில் வெளியான தீப்பொறி மற்றும் ஒரு தீப்பொறி ஆகியவையே இந்த அறவழிப் போராட்டங்களை ஆதரித்து எழுதி வந்தன. கோவை மகேசன், எம்.கே.அந்தனிசில் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டுவந்த இந்தப் பத்திரிகைகள் செய்திப் பத்திரிகைகளாக அன்றி கட்சிப் பிரசாரப் பத்திரிகைகளாகவே கருத்துவாக்கங்களை முன்னெடுத்தன.

அதேவேளை, தேசியப் பத்திரிகைகள் என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டு இலங்கைத் தீவு முழுமைக்குமான வாசகர்களைக் கொண்டிருந்த தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய தினசரிகள் தமிழ் மக்களின் அறவழிப் போராட்டச் செய்திகளை அளிக்கை செய்து வந்தனவே தவிர அந்தச் செய்திகளின் ஊடாகத் தமிழ்த்



தேசியம் சார்ந்த கருத்தைக் கட்டியெழுப்ப முனையவில்லை. மாறாக, இலங்கைத் தேசியம் என்ற கருத்துருவைக் கட்டி வளர்ப்பதாகவே அந்த எழுத்துக்கள் அமைந்திருந்தன.

1977 பொதுத்தேர்தல் முதல் 1983 ஆடி வரையான காலகட்டத்தை தமிழ் ஊடகங்களினதும் இதழியலாளர்களினதும் நிலைமாறும் காலகட்டம் எனலாம். இக் காலகட்டத்தில்தான் தமிழ் மக்களின் அரசியற் தலைமை அரசியல்வாதிகளின் கரங்களில் இருந்து விலகி ஆயுதபாணிகளின் கரங்களைச் சென்றடைந்தது. அத்தோடு தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் சிங்கள மக்களோடு இணைந்து வாழமுடியாது என்ற முடிவை நோக்கியும் நகர்ந்தது.

தனிநாடு (தமிழீழம்) அமைப்ப தொன்றே தமிழ் மக்கள் நிம்மதியாக வாழச் சாத்தியமான ஒரேவழி. அதுவும் போர் ஒன்றின் மூலமே சாத்தியமாகும் என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் மேலோங்கிய காலம்.

இத்தகையமுக்கியமானகாலகட்டத்தில் கூட தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக நில-விய இக் கருத்துருவாக்கத்திற்கு உத்வேகம் தரும் வகையில் எந்தவொரு குறித்த பத்திரிகைகளும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

அதேவேளை, தமிழ்த் தேசிய எழுச்சி பற்றிப் பேசிவந்த தமிழரசுக் கட்சிப் பத்திரிகைகள் இளைஞர்களின் கருத்துக்களுக்குப் பதில ளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வந்தன.

1983 ஆடியில் தமிழர்களுக்கு எதிராக பேரினவாதத்தின் ஆதரவு-டன் நடாத்தப்பட்ட இனப்படுகொலை களத்தில் அனைத்தையும் மாற்றியமைத்தது. போரியல் ரீதியிலான தாக்குதல்கள், அரசியல் முனைப்புகள், தமிழ்த் தேசிய எழுச்சி எனப் பல முனைகளிலும் ஏற்பட்ட பாய்ச்சல் இதழியல்களையும் விட்டு வைக்க வில்லை.

அனைத்தையும் அடிப்படையில் இருந்தே மாற்றியமைக்கும் தன்மை கொண்ட புரட்சி, இதழியலாளர்களின் வரவுக்காகக் காத்திருக்கவில்லை. புரட்சி யாளர்கள் மத்தியில் இருந்தே தேசியத்தை ஆதரிக்கும் ஆற்றலுள்ள இதழியலாளர்கள் உருவாகினார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் அன்ரன் பாலசிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த உணர்வு, குமணன்

| இல. | சஞ்சிகையின் பெயர் | வெளியீடு | முதல் வரவு | வந்தவைகள் |
|---|---|---|---|---|
| 01 | வெளிச்சம் | கலை,பண்பாட்டுக் கழகம், தமிழீழ விடுதலைப்புலிகள் | 1991 புரட்டாதி- ஐப்பசி | 96 இதழ்கள் |
| 02 | நாற்று | பெண்கள் ஆய்வு நிறுவனம், தமிழீழ விடுதலைப்புலிகள் | 1995 தை- மாசி | 30 இதழ்கள் |
| 03 | விளக்கு | கல்விக் கழகம், தமிழீழ விடுதலைப்புலிகள் | 1991 ஐப்பசி | 30 இதழ்கள் |
| 04 | சாளரம் | மாணவர் அமைப்பு, தமிழீழ விடுதலைப்புலிகள் | 1991 ஆனி | 25 இதழ்கள் |
| 05 | வழிகாட்டி | தூயவன் அரசறிவியல் கல்லூரி, தமிழீழ விடுதலைப்புலிகள் | 1995 ஆடி | 25 இதழ்கள் |
| 06 | ஊக்கி | பொருமியம், தமிழீழ விடுதலைப்புலிகள் | 2001 | 10 இதழ்கள் |

இப்பட்டியல் நீட்சிக்குரியது.

அவர்களை ஆசிரியராகக்கொண்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்ட புதிய பாதை, ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பினால் (ஈரோஸ்) பாலநடராஜ ஐயரை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட தர்க்கீகம், சுந்தர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட சஞ்சிகையான பாலம், தமிழீழ விடுதலை இயக்கத்தினால் (ரெலோ) வெளியிடப்பட்ட எழுச்சி, ஈழ மாணவர் பொது மன்றத்தினால் சிறிதரன் (சுகு) அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட ஈழ மாணவர் குரல் ஆகிய ஆரம்பகாலப் பத்திரிகைகள் தமிழ்த் தேசிய விடுதலைப்பயணிப்பில் போர்க்கால இதழ்கள் தோற்றம் பெற்றன.

பின்னாளில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவை, களத்தில் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பத்மநாபாவை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட ஈழச் செய்திகள், சமகண்ணன் (தாஸ்) அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட கண்ணோட்டம், சிதம்பரப்பிள்ளை சிவகுமாரை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட புதிய கண்ணோட்டம், தமிழீழ விடுதலைப் புலிகளால் மட்டக்களப்பில் வெளியிடப்பட்ட விடுதலைச்சுடர் (1985-1986), தாய்மண், சுதந்திரச்சுடர் (1990-1992) ஆகியவை உட்பட பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் இளம் இதழியலாளர்களை, கட்டுரையாளர்களை, கவிஞர்களை, சிறுகதையாளர்களை ஈழத் தமிழுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் அறிமுகஞ் செய்து வைத்தன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வானொலியை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமே அறிமுகஞ் செய்தது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சிற்றலையில் ஒலிபரப்புச் செய்யப்பட்ட இவ் வானொலி 1984, 85 இல் இயங்கியது. இரண்டாவது வானொலியை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆரம்பித்தது. பின்னாளில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட புலிகளின்குரல், நிதர்சனம் தொலைக்காட்சி ஆகியவை தமிழீழ வானொலி, தமிழீழத் தொலைக் காட்சி எனப் பரிணாமம் அடைந்தன. புலிகளின் குரல் வானொலி தற்போதும் இணையத் தளம் ஊடாக ஒலித்துக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை, தமிழீழப் பொதுவுடமைக் கட்சி என்ற பெயரில் செயற்பட்ட ஒரு அமைப்பும் தனியான ஒரு வானொலியை நடாத்தியதாக அறிய முடிகின்ற போதிலும் அது தொடர்பான செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

## 4. சஞ்சிகைகள் :

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் ஈழவிடுதலையின் போரியல் கடுமையாக நடந்து கொண்டிருந்த வேளைகளில்தான் சஞ்சிகைகளின் வரவு வேகமாக முனைப்புப் பெறத் தொடங்கியது. விடுதலைப் போராட்டமொன்றின்போது கலை, இலக்கியப் பங்களிப்பின் முக்கியத்துவமும் அவசியப்பாடும் மிகப் பெரியது. இந்தப் பங்களிப்பை நிறைவேற்றும் பொருட்டுச் சஞ்சிகைகளின் வரவு முக்கியமாயிற்று. குறிப்பாகச் சஞ்சிகைகள்:

- தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை உத்வேகப்படுத்தவும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையைப் பகிரங்கப்படுத்தி அதை எதிர்க்கவும் வேண்டிய தேவைப்பாடு.
- போராடும் போரியல் காலத்தின் பதிவாகப் போராட்டச் செயற்பாடுகளை, போராட்டக் கால கட்டத்தை,

போராட்ட வாழ்வை பதிவு செய்ய வேண்டியதன் அவசியப்பாடு.

- சமூக, அரசியல், இலக்கிய விடயங்களில் உலக ரீதியிலும் தமிழ்ப் பரப்பிலும் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகள் மற்றும் மாற்றங்களில் கவனம் கொண்டு சமாந்திரமாகத் தன்னையும் தன் சூழலையும் வளப்படுத்துதல்.

ஆகிய அடிப்படைகளுடன் போரியல்கால சஞ்சிகைகள் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் வெளிவரத் தொடங்கின. குறிப்பாக:

**4.1 வெளிச்சம் :**

தமிழர்களின் கலை, பண்பாடு செம்மையானது. ஈழத்துத் தமிழ் மக்களின் கலையும் பண்பாடும் தனித்துவமானது. வெளிச்சம் இதழ் A4 வடிவில் ஒவ்வொரு இதழும் 60 பக்கங்களுக்கு மேற்பட்டே




வெளிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது. 75ஆவது இதழ் வெளிச்சம் 'பவள இதழ்' 2001 என்ற தலைப்பில் 300 பக்கங்களில் வெளிவந்தது மிகுதியான சிறப்பம்சமாகும். இதே போன்று பத்து இதழ்கள் குறித்த காலத்தில் ஏற்பட்ட

## அகால மரணங்கள்

வெள்ளென வெல்லாம்
வெறிச்சோடிக் கிடந்து
வெறுஞ் சாம்பல் மேடாய்த்தான்
தரிசனம் தந்தது.

மதியம் திரும்பியதும்
கட்டை அடுக்கிவிட்டுக்
காத்துக் கிடக்கின்றார்.

நீறு பூத்த குறங் கொள்ளிக் கட்டைகள்
காற்று ஊத கண் முழித்துப் பார்க்குது!

இப்ப வெல்லாம்
அகால மரணந்தானே அதிகம்.
ஒருவேளை
கைகூடாத் திருமணத்தால்
காதலர் தற்கொலையோ
சாதி மத பேதம் தடுத்த
கொடுமையிதோ!

அதோ பார்!
துண்டுப் பிரசுரம் தெருவெல்லாம் ஒட்டி
தண்டிகை காவிச் சனம் திரண்டு வருகுது

"குண்டு துளைத்துக்
குருதி குளிப்பாடிச்
சவமாகச் சாய்ந்தாலும்
சாகாமல் வாழுகிறாய்
விடுதலை வேள்வியிலே
உடல் தீக்கு ஈந்துவிட்டாய்..."

ஒரு கோடி சிந்தனைகள்
உள்ளத்தில் அலைமோத
மீதியைநான் படிக்கவில்லை.
இப்பவெல்லாம்
அகால மரணந்தானே அதிகம்.

(சுவர் - 1)

**- தூ.இராமலிங்கம் -**

சிறப்பு நிகழ்வுகளின் இதழ்களாக அதிக பக்கங்களுடன் வெளிவந்தன. ஒவ்வொரு சிறப்பிதழ்களும் அதனதன் முதன்மை விடயங்கள் பேசப்பட்டிருந்தன. வெளிச்சம் சிறப்பிதழ்கள் மட்டுமின்றி பின்வரும் விடயங்களுக்கு ஒவ்வொரு இதழிலும் முதன்மை கொடுத்திருந்தன.

நேர்காணல்கள், சிறுகதைகள், கவி தைகள், கட்டுரைகள், கருத்தாடல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள், சந்திப்புக்கள், நூல் வெளியீடுகள், வாசகர் வட்டங்கள் என எல்லா விடயங்களுக்கும் முதன்மை கொடுத்திருப்பதை காணலாம்

நேர்காணல்கள் 41 வெளிச்சம் இதழில் வெளிவந்திருப்பது குறிப்பிடத் தக்கது. ஈழத்தின் கலை இலக்கியத்தின் ஆளுமையாளர்களுடன் இந்நேர்காணல்கள் இடம் பெற்றிருந்தன. பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முக தாஸ், கவிஞர் முருகையன், இசைப்பிரியன், கண்ணன், கவிஞர் சோ. பத்மநாதன், குழந்தை ம. சண்முகலிங்கம், கோமல் சுவாமி நாதன், கோகிலா மகேந்திரன் எனப் பலரின் நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன.

வெளிச்சம் இதழில் 256 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. மூத்த சிறுகதை ஆசி ரியர் வரதர், அ.செ.மு முதல் சாந்தன் வரையில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதையாளர்கள் எழுதியுள்ளனர்.

ஈழத்துக் கவிதைகளின் இன் னொரு காலநகர்வினை வெளிச்சம் கவிதைகள் வெளிப்படுத்தி யுள்ளன. 200 கவிஞர்களுக்கு மேல் கவிதைகளை எழுதியுள்ளனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட கவி தைகள் வெளிவந்துள்ளன போர் அனுபவங்கள், இடப் பெயர்வுகள், அகதி வாழ்வு, போராளிகளுக்கிடையிலான உறவும் உணர்வும், தாயக நேசிப்பு, அரசியல் விசாரிப்புக்கள், கொடூரமான விமானத் தாக்குதலின் சித்திரிப்பு எனப் பல்வேறு புதிய உள்ளடக்கங்கள் கவிதைகளில் பேசப்பட்டுள்ளன.

இதே போன்று 200 மேற்பட்ட கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஈழத்து அறிஞர்கள் முதல் தமிழக அறிஞர்கள் வரையில் இவற்றில் எழுதியுள்ளனர். இவற்றைவிட ஓவியர்கள், புகைப்படங்கள்,, கருத்தாடல்கள், சந்திப்புக்கள், நூல்வெளி யீடுகள் (குறிப்பாக வெளிச்சம் சிறுகதைகள், வெளிச்சம் கவிதைகள், செம்மணி, ஆனை யிறவு, வாசல் ஒவ்வொன்றும் என்பன குறிப்பிடத்தக்கன.)

எனவே ஈழத்துப் போரியல் கால கலை, பண்பாட்டு வளர்ச்சியில் வெளிச்சம் சஞ்சிகை பாரிய சமூகப் பொறுப்புணர்வு, கலை, பண்பாட்டுப் பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றை நிறைவேற்றியிருக்கின்றது.

**4.2 நாற்று :**

1995ஆம் ஆண்டு தை- மாசியில் முதல் இதழ் வெளிவந்தது இருமாதங்களுக்கு ஒரு இதழ் எனும் வகையில் 2008ஆம் ஆண்டு வரையில் 30 இதழ்கள் வெளிவந் தன. பெண்கள் ஆய்வு நிறுவனம் இதனை வெளியிட்டது. முதல் இதழ் கல்லியங்காடு, கோப்பாய், யாழ்ப் பாணம் என்ற முகவரியில் தொடங்கி தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம், கோம்பாவில், புதுக் குடியிருப்பு என்ற முகவரியிலிருந்து 30 வது இதழ் வெளிவந்தது.



ஒவ்வொரு

இதழிலும் ‘பெருமைக்குரிய பெண்மணி; என்ற மகுடத்தில் உலக வரலாற்றில் பேசப்படுகின்ற பெண்ணின் வர லாறு வெளிவந்திருக்கின்றது. நாற்று பெண்களின் மேம்பாட்டில் முக்கிய மானது. முதல் இதழில் திருமதி ஸாரா ஜோசப் அவர்களோடு தொடங்கி சகோதரி நிவேதிதா, ஜான்சிராணி, ஆங் சாங் சூகி, அன்னை திரேசா, பேர்ள். எஸ். பக், மருத்துவர் ஜொய்செலின் எல்டேர்ஸ், முதலியோர் இதழ்களை அலங்கரித்துள்ளனர்.

சிறுகதைகள், நேர்காணல்கள், கவிதை கள், சமூக, பொருளாதார, பெண்ணியம் சார்பான கட்டுரைகள் ‘நாற்று’ இதழில் அதிகமாக வெளிவந்துள்ளன. குறிப்பாக ஒவ்வொரு இதழும் 60-80 பக்கங்களுக்கு குறையாத வகையில் B5 அளவில் வெளிவந்துள்ளது.

நாற்று இதழ்களினூடாக பெண்களின் சமூக மாற்றம், போரியல் வரலாற்றில் பெண்களின் வகிபாகம் மற்றும் துன்ப அவலங்கள், பொருளாதாரத்தில் பெண்களின் பங்கு, பெண்களும் கல்வியும் முதலிய பல்வேறு விடயங்களை இவ்விதழ்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. பெண்ணியம் சார் கருத்துருவாக்கத்திற்கு நாற்று முதன்மை இடத்தை வழங்கியுள்ளது.

### 4.3 விளக்கு :

விளக்கு முதல் இதழ் 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிற்பி அவர்களை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து தமிழீழக் கல்விக் கழகத்தினால் வெளியிடப்பட்டது. 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் நெடுந்தீவு மகேஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 2008ஆம் ஆண்டு வரையில் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு 30 இதழ்கள் வெளிவந்தன. அகவிழி, ஆசிரியம் ஆகிய கல்வியியல் சார்பான இதழ்களுக்கு நிகராக விளக்கு ஈழத்தில் கல்வியியல் சார்பான முதல் இதழாக வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் கல்வி மற்றும் வாண்மைத்துவம், கல்விப் பிரச்சினைகள், வகுப்பறை மற்றும் கற்பித்தல் சார்பான முகாமைத்துவம் தொடர்பான கட்டுரைகள் வெளிவந்தன. அத்துடன் கற்றல் கற்பித்தல் தொடர்பான கதைப் பொருளை மையப்படுத்திய சிறு கதைகள், கவிதைகள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு இதழும் 60 பக்கங்கள் கொண்டதாக A4 அளவில் வெளிவந்தது.

### 4.4 சாளரம்

“சாளரம்” முழுமையான மாணவர்கள் சார்பான இதழாகும். அதாவது கல்வியில் மாணவர்கள் காட்ட வேண்டிய அக்கறைகள் மற்றும் மாணவர்களின் கடமைப்பாடுகள் மற்றும் விழுமியங்கள், நாளைய தலைவர்கள் என்ற வகையில் ஆளுமை விருத்தி, தலைமைத்துவம், சமூகப் பெறுமானம், சமூக அக்கறை, தேசியப் பற்று என்பன வெளிக் கொணரப்பட்டன. 1991 யூன் மாதம் முதல் இதழ் வெளி வந்தது விவேக் அவர்களை ஆசிரி யராகக் கொண்டு 25 இதழ்கள் 2007 ஆம் ஆண்டு வரையில் வெளிவந்தன.




### 4.5 வழிகாட்டி

இவ்விதழ் முழுமையான அரசியற்கல்வி சார்ந்த இதழாகும் அதாவது தூயவன்

அரசறிவியல் கல்லூரியிலிருந்து வெளி வந்தது. தேசிய, மற்றும் சர்வதேச அரசியல் மாற்றங்கள் மற்றும் புறந்தள்ளப்பட்ட விடுதலைப் போராட்ட உலக வரலாறுகள், போரியல் சாதனைகள், உலகப்போரின் திருப்பு முனைகள் என்பன இவ்விதழில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. உலகத் தலைவர்களின் வரலாறுகள் தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தில் மரணித்தவர்களின் வரலாறுகள் என்பன வெளிவந்தன. கவிதை மற்றும் சிறுகதைகளும் வழிகாட்டியில் வந்திருந்தன.



### 4.6 ஊக்கி

முழுமையான சமூக பொருளாதார அபிவிருத்தி சார்பான இதழாகும். இவ்விதழ் பொருமியம் என்ற அமைப்பால் வெளியிடப்பட்டது.

### 5.முடிவுரை :

ஒரு சமூகத்தின் குறித்த காலத்தின் அசைவியக்கம் தொடர்பான அறிக்கைக்கு அக்காலத்தில் வெளிவந்த தொடர்பூடகங்களே சாட்சியங்கள் என்பர். அதற்கு 1990 முதல் 2009 வரையான காலப்பகுதியின் தமிழ்த் தேசியம் சார்பான போரியல் வரலாற்றினையும் அதன் அசைவியக்கத்தையும் அறிந்து கொள்வதற்கு அந்த சமூக அமைப்பில் சமூகக் கட்டுமானத்தில் வெளிப்பட்ட அல்லது வெளிக்கொணரப்பட்ட பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் அதாவது இதழ்கள் உற்ற சாட்சியங்களாக உள்ளன.

இவை பற்றிய ஆய்வுகள் முறைமையாக மேற்கொள்ளப்படும்போது அதன் அசைவியக்கமும், அது சமூகத்தில் ஏற்படுத்திய நகர்வுகளும், தமிழ்த் தேசிய விடுதலைப் பயணிப்பில் அதன் வகிபாகமும் சரியாகப் புரிந்து கொள்ளப்படும். இதற்கு வெளிவந்தவைகள் சரியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றின் உரித்துடையோர் இல்லையாயினும் யாரோ ஒருவரின் அல்லது பலரின் பாதுகாவலில் இவைகள் இருக்கும். ஆகவே இதழ்கள், பத்திரிகைகள் தொடர்பில் முழுமையான ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இக்கட்டுரை ஒரு தொகுநிலை ஆய்வே தவிர திறன்நிலை சார்ந்த ஆய்வல்ல. இவை எல்லாவற்றையும் மீளப்பார்ப்பதற்கான ஒரு முயற்சி, ஆனால் ஆய்வுநிலையில் ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. அவற்றை நோக்கிய பயணிப்பினை உயர் ஆளுகை கொண்ட ஆய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டும். ஆய்வுக்கான களத்தை உயர் கல்வித் தளங்கள் திறந்து விடுதல் அவசியம்.

### உசாத்துணைகள் :


1. வெளிச்சம் பவள இதழ் : கார்த்திகை- மார்கழி 2001: விடுதலைப் புலிகள், கலை,பண்பாட்டுக்கழகம்
2. நாற்று 1-30 இதழ்கள் தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்: புதுக்குடியிருப்பு
3. வழிகாட்டி: இதழ் 22: தை-மாசி 2005 : தூயவன் அரசறிவியல் கல்லூரி, கிளிநொச்சி
4. நேர்காணல், நெடுந்தீவு மகேஸ் 01.10.2012 காலை 1100 முதல் 1200 மணிவரை
5. சண் தவராஜா, தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் ஊடகர்களின் பங்கு முகநூல் : சண்முகம் தவராஜா

# கொட்டி கந்தவுர

## (புலிகளின் முகாம்)

-அஜித் பெரகும் ஜயசிங்ஹ

மொழி பெயர்ப்பு: தமிழில்: வ.அ. தங்கவேலாயுதம்

சிறுகதை

அந்த பங்களாவில் புலிகளின் முகாம் இருப்பதாக கண்டுபிடித்தவன் எட்டிங். அது நிகழ்ந்தது இப்படித்தான்.

ஊரடங்குச் சட்டத்தை நீக்கியதனால் எட்டிங் இன்று காலை ரவுணுக்குச் சென்றான். நகரில் பேயாட்டம் ஆடப்பட்டிருந்தது. அதனைப் பார்ப்பதற்கு அளவுகடந்த சனக்கூட்டம் சிலர் வாகனங்களை கூலிக்கு அமர்த்திக் கொண்டு வந்திருந்தனர். சரியாகச் சொன்னால் சுற்றுலா போவதைப் போன்று நாற் சந்தியில் சுருட்டுக் கடையில் இன்னமும் புகை எழும்புகிறது. "கிரவுண்" என்றால் வெசக் கூடு மாதிரி மூண்டு போய் விட்டதாம். அதில் இருந்தவை கசெற் றேடியோக்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பன. வாமதேவனின் அடைவுக்கடையின் இரும்புக் கதவு திறந்து கிடந்தது. தமிழ் சலூன் கடைக்கும் நெருப்பு வைத்து தியேட்டருக்குப் பக்கத்தில் இருந்த முனியாண்டியின் பெட்டிக் கடைக்கும் நெருப்பு வைத்து விட்டார்கள்.

நகரின் அனைத்து இடங்களிலும் இராணுவம். அடைவு கடைக்குப் பக்கத்தில் காவலாகப் போடப்பட்டிருந்த இராணுவச் சிப்பாயின் உசார் நிலையை எட்டிங் அதிக நேரம் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனது பச்சைநிறச் சீருடையில் ஒரு தோளில் மஞ்சள் நிறக் குருவி ஒன்றின் உருவம் இருந்தது. கடையினுள்ளே கால்களை வைக்கப்போன பார்வையாளர்களை அந்த இராணுவத்தினன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான். கடையினுள்ளே பணத்தைக் கட்டுக்கட்டாக எரித்தார்களாம். தங்கம் கட்டி கட்டியாக இருக்குதாம். "ஒன்றைப் பொறுக்கி எடுக்க இயலுமென்றால்?" எட்டிங் நினைத்தான்.

அலிஸ் அக்கா கசிப்பை அடிச்சு அடிச்சு செய்தித் துண்டுகளை விநியோகித்தாள். மீண்டும் ஊடரங்குச் சட்டம் போடப் படுவதாக வானொலியில் கூறியதனாலேயே எட்டிங் அங்கிருந்து செல்ல நேர்ந்தது.

வேலையை ஆரம்பித்தது கொழும்பில் இருந்து வந்த துரைமாரின் குழுவாம். அலிஸ் அக்கா சொல்கிறா; அந்தக் கூட்டத்தினர் இராணுவத்தினர் என்று... வழிநடத்துவது சீதேவி ஆமத்துறு ஒருவராம். புத்த பிக்குமார் பொலிஸ்காரர்களுக்குக் கூறினார்களாம் "எங்களுடைய வேலையைச் செய்ய விட்டு விட்டு பொலிஸ் வீட்டிற்குப் போங்கோ" என்று... சரியான இனப்பற்றுள்ள கூட்டம். யாருக்கேனும் கடுகுத் துண்டைத்தானும் எடுக்கவிட வில்லையாம். பணத்திற்குக் கூட நெருப்பு வைத்தார்களாம். உண்மையில் தமிழ் முதலாளிமார் பலபேர் பணத்தையும் எடுத்துக் கொண்டு நேரத்தோடேயே மாறிவிட்டார்களாம். கடைசியாகச் சென்ற கிறவுண் முதலாளி

வழியில் பிடிபட்டு குடும்பத்தோடு காரின் உள்ளேயே செத்துப் போனாராம். வெளியில் இருந்து வந்த அந்தக் கூட்டம் போனதற்குப் பின்பு ரவுணில் எழுபத்தேழு ஆரம்பித்தது. அலிஸ் அக்காவின் ஸ்பொட்டில் அரைவாசி இடத்தை நிரப் புவதற்கு இடம் இல்லை. ரமணி கடை எரியும்போது அலிஸ் அக்காவினுடைய மனுஷன் பின் பக்கத்தால் பாய்ந்து சென்று ஒவ்வொன்றாகத் தூக்கிக் கொண்டு வந்தாராம். "நீ இதற்குப் பிறகு கசிப்பை கூல் பண்ணித் தருவாயா குடிப்பதற்கு?" என்று வந்த ஒருவன் கேட்டானாம்.

குலோடன் தோட்டத்து லயத்தை சுத்தம் பண்ணி வந்தார்கள். ஆடுகள் கோழிகளையும் தோளில் வைத்துக் கொண்டு வரும்போது தமிழர்கள் கேட்டார் களாம் "மாத்தயா எங்களது ஆடும் தமிழா?" என்று.

"நீ கறுப்பிலும் கறுப்பு தமிழர்கள் மாதிரி; பாளிச் செய்யுள் தெரியுமோ தெரி யாது" அலிஸ் அக்கா எட்டிங்கிடம் கூறி-னாள். எட்டிங்கிற்கு அச்சம் ஏற்பட்டது. கடைசிச் சொட்டையும் தொண்டையில் ஊற்றிக்கொண்ட அவன் பாளிச் செய்யுளை நினைவு படுத்திக் கொண்டே நடந்து மலை ஏறினான்.

பிரபுவின் ஜீப்பைச் சந்தித்தது மடத்திற்குப் பக்கத்தில். "எட்டிங் பின்னால் ஏறு" துரை கூறினார். எட்டிங் ஏறினான். ஜீப் அறுபதுக்கு அறுபது பள்ளத்தில் இறங்கியது. சாரதியாக வேலை பார்த்தவன் பிரபுவின் தூரத்து சொந்தக்காரனான ஒரு இளந்தாரி.

"தமிழர்கள் நினைச்சு இருக்கேல்லை. சிங்களவர்களுக்கு வேண்டும் என்றால் இப்படியும் செய்ய முடியும் என்று. இந்த தடவை மாட்டிட்டாங்கள்" இளந்தாரி கூறினான்.

"இதனை அடக்க இருந்தது மிச்சங் காலத்திற்கு முன்பு, அப்படி நடந்திருந்தால் எங்கடை இராணுவப் பிள்ளைகள் சாக நேர்ந்திருக்காது." பிரபு கூறினார்.

"அது உண்மை சேர்" எட்டிங்கினுடைய சிங்கள உணர்வு மனதில் தோன்றத் தொடங்கியது. காற்று படும்போது வெறி அதிகரித்தது "ஜயவேவா சேர்" எட்டிங் ஜீப்பிலிருந்து இறங்கி பிரபுவுக்கு சல்யூட் அடித்தான். அதற்குப் பிறகு பாட்டுப் பாடிக் கொண்டு பள்ளத்தில் இறங்கினான்.

"வெளி தீவுகள் தேசங்களை வெற்றி கொண்டார்கள் - ஆதி சிங்களவர்கள்" அதுவும் ஹிந்தி கொப்பிதான்.

எட்டிங் குடித்த வேளைகளில் இந்தப் பாட்டைப் பாடும்போது கேட்டுக் கொண்டிருந்த தோழன் ஒரு நாள் கூறி-னான். "ஐயோ அவனுக்குத் தெரிந்த சீலை பைத்தியம்."

பெண்சாதி வீட்டில் இல்லை. எட்டிங் பெட்டியைத் திறந்தது இரண்டு ரூபா தேடிக்கொண்டான். இன்னும் ஒரு "ஷொட், போட்டுக் கொள்ள. வீட்டுப் பக்கம் பைத்தியக் காரியைக் காணவில்லை.

மனுஷிக்காரி வீட்டுக்கு வந்தாள். "எங்கை பிசாசு போனனி?" எட்டிங் கடுமையாகக் கேட்டான். அந்த 'றெஸ் பெக்டுக்கு' மனுஷிக்காறிக்கும் பிசாசு பிடித்தது.

"கலியாணத்திற்குப் போக இல்லை பிசாசு"

அவளும் கோபத்தோடு பதில் கூறி-னாள். "பெரிசுக்குக் காய்ச்சல். டொக்டர் பங்களாவுக்கு மருந்து எடுக்கப் போன-னான்."

"டொக்டர் இருக்கிறாரோ?" மனுஷி யின் கோபம் கொஞ்சம் இறங்கியவுடன் எட்டிங் மெதுவாகக் கேட்டான்.

"இருக்கிறார்கள்தான்; கதவு ஜன்னல் களை மூடிக்கொண்டு பயத்தில் நடுங்கி



எட்டிங் வலதுகையில் வாளொன்றை எடுத்துக் கொண்டு சிங்கக் கொடியில் உள்ள சிங்கத்தை போன்று முன்னே சென்றான். சீடிஸ்ஸின் கையில் ரோச் லைற்றும் இடுப்பில் கிறிஸ் கத்தியும். ஜோதிபால சரியான சோமாரி; சோம்பலானவன். சாக்குப் பையும், அலவாங்கும் மரக்கட்டையும் எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். நேரடியாக கதவை உடைத்துக் கொண்டு வீட்டினுள்ளே செல்வது என அவர்கள் பேசிக்கொண்டார்கள். உடைந்து தகர்ந்து போன டொக்டரின் பங்களாவின் கதவுகள் பலமில்லாதவை என்பது யாருக்குத்தான் தெரியாது.

நடுங்கி கதவை கொஞ்சம் திறந்து நோயாளிகளைப் பார்த்தாலும் பணம் எடுக்கவில்லை.”

நல்லவேளை அவனுக்கு. ரவுணிலை உள்ளவங்களுக்கு என்றால் வேலை குடுத்தாகி விட்டது. எனக்கு இரண்டு ரூபாதா!

அதுக்குப் பிறகு குழப்பம் போயிட்டுது. எட்டிங் இரண்டு ரூபா பறித்தெடுத்துக் கொண்டு சீடிஸ் உடைய வீட்டிற்குப் போனான். டொக்டருடைய பங்களாவிற்கு வேலை குடுக்க வேண்டும் என்று கதைத்துக் கொண்டது அங்குதான். அதிக கூட்டம் தேவை இல்லை. பங்களாவில் இருக்கிறது தமிழ் டொக்டரும் மனைவியும் மாத்திரம் தானே. மனைவியினுடைய தங்க நகைகள் இருபத்தையாயிரம் முப்பதாயிரம் பெறுமதி வாய்ந்தவை. அதைத் தவிர வேறு இருப்பது டொக்டரின் சில புத்தகங்கள் மாத்திரமே. ஆகவே எட்டிங்கும், சீடிங்கும், ஜோதிபாலவும் மாத்திரம் குழுவாக ஒன்று சேர்ந்து கொண்டார்கள்.

மணி பத்து பதினொன்று இருக்கும், செத்த தனிமை மாதிரி சரியான இருள்.

டிஸ்பென்சறியின் தோட்டத்தில் உள்ள மாமரத்தில் இருந்து ஆந்தைகள் ‘வாக்’, ‘வாக்’ என்று சப்தமிட்டன. டிஸ்பென்சரிக்கு வெளியே இருந்த நாய் குரைக்கத் தொடங்கியது. சீடிஸ் நாயைத் தூஷண வார்த்தைகளால் ஏசினான். ஜோதிபால பின்வாங்கினான். எட்டிங் திரும்பி வந்து ஜோதிபாலாவின் கழுத்தைப் பிடித்து முன்னே தள்ளினான்.

“உடையடா கதவை”

ஜோதிபால சப்தம் எழுப்பாமல் மெதுவாக கதவுகள் இரண்டுக்கும் மத்தியில் அலவாங்கைப் போட்டான். நாயோ சப்தமிட்டு உரத்துக் குரைத்தது. ஜோதிபாலவின் கரங்கள் நடுங்கத் தொடங்கின. அலவாங்கு கதவுகள் இரண்டுக்கும் இடையே உள்நுழைய வில்லை.

உள்ளே மின்விளக்குகள் எரிந்தன.

“யார்?”

ஜோதிபால பின்னால் பாய்ந்தான்.

“நாங்கள் இனவாதிகள்” எட்டிங் கூறினான்.

அப்படிக் கூறியதற்கு அந்தச் சொற்கள் நல்லவைகள் அல்ல என்று அவன் நினைத்தான்.

அப்படி இருந்ததற்கு வேறு சொற்களைப் பற்றி யோசனை செய்யும் நேரமல்ல அது. "மாத்தயா நாங்கள் அப்பாவிச் சனங்கள் எங்களுக்கு இடையூறு செய்யாதீர்கள்" சீடிஸ்ஸிற்கு டொக்டரின் அம்மாவின் ஞாபகம் வந்தது.

"திறவடா தமிழா கதவை" எட்டிங் கூறினான்.

டொக்டருடைய கீழ்ப்படிவினாலும் நண்பர்களது கடுமையான சொற்களினாலும் உசார் அடைந்த ஜோதிபால, மேலே பாய்ந்து கதவைக் காலால் உதைத்தான். ஜோதிபாலவையும் நிலத்தில் வீழ்த்தியபடி கதவு படீரென திறந்து கொண்டது. அந்தக் கணத்திலேயே பலத்த வெடிச் சப்தம் ஒன்று பேரொலியாக எழுந்தது. எட்டிங்கும் சீடிங்கும் விழுந்து விழுந்து ஓடினார்கள்.

"பிசாசே, ஜோதிபாலவைக் காண வில்லை. அவனுக்கு வெடி விழுந்தி ருக்கவேணும்" சீடிஸ் கூறினான்.

"உனக்கு என்ன பைத்தியமா? டொக்டர் வெடி வைச்சது மேலுக்கு" எட்டிங் அதனைக் கண்டிருந்தான். "போவம் பார்க்க"

திரும்பச் சென்று ரோச் அடித்துப் பார்க்கும் பொழுது ஜோதிபால கேற்றுக்குப் பக்கத்தில் நான்காகச் சுருண்டு விழுந்து கிடந்தான். "புது அம்மே நான் முடிஞ்சன். அவன் எனக்கு வெடி வைச்சவன்."

எட்டிங் ஜோதிபாலவை அங்கும் இங்குமாக திருப்பிப் பார்த்தான். எல்லா இடத்தையும் பின்புறத்தையும் கூட ரோச் அடித்துப் பார்த்தான்.

"உனக்கு வெடி விழவில்லை; பிசாசே எழும்படா, எழும்பு"

"டொக்டரின் பங்களாவில் புலிகள்" எட்டிங் கூறினான்.

"யார் அது புலி என்று சொல்லுறது?" சீடிஸ் கேட்டான்.

"தமிழங்கள்.... தமிழ் சேகுவேராக் கூட்டம்"

"அம்மட்ட உடு... அதுதான் வெடி வைச்சவங்கள்.... இப்ப என்ன சொய்யிறது?"

"போவம்... போய்த் துரைக்குச் சொல்லுவம்"

எட்டிங் ஆட்கள் இரவிலேயே மலை ஏறி தோட்டத்திற்கு சென்றார்கள்.

அல்சேஷன் நாய்கள் கோஷ்டியாக குரைக்கத் தொடங்கின.

"நீங்கள் யுத்தத்திற்குப் போனீங்கள் தானே"

"பைத்தியமா சேர்? எங்களுக்கு அது நேர்ந்தது மாலையில்"

"எப்படியென்றால்?"

இளந்தாரி ட்ரைவர் எழுந்து வந்தான். அவனின் திறந்த மார்பின் இடது பக்கத்தில் காயத்தின் தழும்பு இருந்தது. "இருளும் நேரத்தில் குழு ஒன்று மலையின் மேலிருந்து டிஸ்பென்சறிப் பக்கமாக இறங்கியதை நாங்கள் கண்டோம்.

"நல்லது நாளை காலையில் பார்ப்போம்" துரை கூறினார்.

ஊரடங்குச் சட்டம் முடிவடைந்து விடியும் வேளையில் செய்தி கிராமம் பூராகவும் பரவி முடிந்தது. என்னென்ன நேருமோ என்ற அச்சத்தில் அதிகமானோர் இரவு தூங்கவில்லை. "புலிகள் காண்கிற சிங்களங்களைக் கொல்லுறாங்களாம். அவங்க இப்ப கொழும்புக்கு வந்திட் டாங்களாம் டொக்டரின் பங்களாவிற்கு வந்திருப்பது கிராமத்துச் சனங்களைக் கொல்லுறதுக்காம். டொக்டர் புலிகளின் ஒரு தலைவராம். நோயாளிகளைக் கருணை-யோடு கவனிப்பது மனதிலுள்ள திருட்டுத் தனத்தாலை தானாம்"

டொக்டரின் கிராமம் யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறை என்று கூறியவர் ஸ்கூல் மாஸ்டர். அவரும் கொஞ்சக்காலம் யாழ்ப்பாணத்தில் வேலை செய்தவராம்.

உந்தப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஊரும் வல்வெட்டித்துறைதானாம். ஸ்கூல் மாஸ்டருக்கு நல்ல ஞாபகமாம். அவர் சின்னக் காலத்திலை இருந்து சரியான குழப்படிக்காரனாம்.

"சிங்களவங்கள் மாதிரி இல்லை தமிழர்கள்; சரியான இனவாதிகள்" வெத மஹாத்தயா கூறியதை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். கோச்சியிலை போகும் போதுதான் அவங்களை வேண்டாமென்று போகிறது. அனுராதபுரத்திற்கு அங்காலை போனால் சிங்கள ஆட்களுக்கு ஒரு இடம் தரமாட்டாங்கள்.

வெத மஹத்தயா இரண்டொரு தடவை யாழ்ப்பாணத்திற்குப் போயிருக்கிறார். "உண்மையாக சரியான தைரியக்காரங்கள்" ஐந்து வருடங்கள் யாழ்ப்பாணம் பள்ளிக் கூடத்தில் படிப்பித்த ஸ்கூல் மாஸ்டர் கூறினார்.

"எங்களை மாதிரி மனுசங்கள்தான். சிலர் நல்லவங்கள், சிலர் கெட்டவங்கள் கதைக்கிற மொழி, மதம் மாத்திரம் வேறை" ஸ்கூல் மாஸ்டர் அந்த நாட்களில் யாழ்ப்பாணத்துக்கு ஸ்கூல் பிள்ளை ஒன்றை கலியாணம் கட்டவும் பார்த்தவராம். இரண்டுதரப்பும்எதிர்ப்பாகஇருந்தபடியால் அது நிகழவில்லை. அந்தக் காலத்தை இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் ஸ்கூல் மஹத்தயாவின் முகத்தில் மலர்ச்சி தோன்றும்.

பைத்தியக்காரனான தோழர், ஸ்கூல் மஹத்தயாவின் தம்பி. எழுபத்தொன்று கிளர்ச்சியின் போது பொலிஸ் நிலையத்தை தாக்கச் சென்று பிடித்துச் செல்லப்பட்டு தலையில் புத்தகத்தை வைத்து அடித்ததனால் அவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. எல்லோரையும் "தோழர் தோழர்" என்று கூப்பிடுவதனால் அவனுக்கு தோழர் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

அதிகாலையிலேயே கிராமத்தின் பிரமுகர்கள் பன்சலவில் பிக்குகள் வசிக்கும் இடத்தில் ஒன்று கூடினார்கள். வாங்கிலும் இரண்டு மூன்று கதிரைகளிலும் வெதமஹத்தய, ஸ்கூல் மஹத்தயா, 2 ஸ்ரீ ஒப்பல் கார் உரிமையாளரும் காணிப் பயிர்ச்செய்கைகளின் சொந்தக்காரருமான றிச்சட் மஹத்தயா, அல்விஸ் அப்பு ஹாமி, பீரிஸ் முதலாளி ஆகியோர் உட்கார்ந்திருந்தனர். புத்த பிக்குகளும் சாய்ந்தபடி அமர்ந்திருந்தார்கள். முக்காலி ஒன்றின் மீது பெறுமதிமிக்க வெள்ளைநிற சொனி றேடியோவில் வர்த்தக சேவையில் பாட்டுக்களும் விளம்பரங்களும் ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தன.

"மலர்கள் என்றால் ஜயரத்ன, ஜயரத்ன என்றால் மலர்கள்" விளம்பரம் ஒலிபரப்பாகியது.

"நாங்கள் எதற்கும் பொலிஸிற்குப் தெரிவிப்போம்" பிக்குகள் கூறினார்கள்.

அந்த நேரத்திலும் கிராமத்துப் பையன்கள் ஏழெட்டுப் பேர் டிஸ்பென்சரி தோட்டத்தைச் சுற்றி உளவு பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். குறிப் பிடக்கூடிய அளவிற்கு விசேடம் எதுவும் இல்லையென அவர்கள் பன்சலவிற்கு அறிவித்தார்கள். உள்ளே புலிகள் இருக்கின்றார்களா இல்லையா என்று சொல்லக் கூடியவிதத்தில் டொக்டரின் பங்களாவில் அறிகுறிகளும் தென்படவில்லை.

துரை ஜீப்பில் ஏறி தோட்டத்தில் இருந்த பள்ளத்தில் இறங்கி டிஸ்பென்சறிப் பக்கம் சென்றார். கேட்வாசலில் கிராமத்துப் பையன்கள் ஜீப்பை நிறுத்தினார்கள்.

"போக வேண்டாம் துரை. புலிகள் உள்ளே இருக்கிறார்கள்; நேற்று இரவு வெடிக்கும் மேலை வெடி. உங்களுக்கு கேட்கவில்லையா?" பையன்கள் வின வினார்கள்.

"சரி.... சரி நீங்கள் நில்லுங்கோடா நான் போய்ப் பாக்கிறன்" துரை கூறினார்.

டொக்டர் துரையின் நண்பர். துரையின் சலரோக நோய்க்கு 'இன்சுலின்' போடுவதற்கும் அவர் நிதமும் டொக்டரின் பங்களாவிற்கு வருவார்.

"போக வேண்டாம் சேர்" சாரதியின் ஆசனத்தில் இருந்த இளந்தாரி இறங்கத் தயாரான துரையைத் தடுத்தான். அதற்குப் பிறகு கியரை மாற்றி அவன் வாகனத்தை திருப்பினான்.

"நாங்கள் எதற்கும் துவக்கைக் கொண்டு வருவம்" ஜீப் சென்றது.

பன்சலவுக்கு கிட்ட துரை இறங்கிக் கொண்டார். இளந்தாரி மலையின் மேலே ஜீப்பை ஓட்டிச் சென்றான், மின்னலைப் போன்று. இதற்கிடையில் சூடுபட்ட பன்றியைப் போன்ற ஆத்திரத்தோடு ஜோதிபால இருந்தான்.

"தமிழங்களைக் கொல்வோம்" ஜோதிபால சீடிஸ்ஸிற்கு ஆலோசனை கூறினான்.

"போடா போடா போ" சீடிஸ் வெறுப்போடு கூறினான். நேற்று அவன் மேலை வெடிவைச்சதுக்கே உனக்கும் மூத்திரம் போனது. இப்ப வாறாய் கொல்லப் போறதுக்கு."

ஆயினும் இறுதியாய் இருவரும் சென்று எட்டிங்கை கூப்பிட்டார்கள். இரவு பூராவும் நித்திரை விழித்து விட்டு சரத்தினால் தலை வரை போர்த்துக் கொண்டு உள் வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த எட்டிங் புறுபுறுத்துக் கொண்டு வெளியே வந்தான். நண்பர்கள் இருவரும் அவனை முற்றத்திற்கு அழைத்துச் சென்று விபரத்தைக் கூறினார்கள்.

"போங்கோடா, சித்திரவதை பண்ணாமல்" எட்டிங் மீண்டும் திரும்பினான்.

"அது எப்படி?" ஜோதிபால எட்டிங்கின் கையை இழுத்தான்.

"அவனைக் கொன்று எங்களுக்கு என்ன கிடைக்கப்போகுது? வேண்டுமென்றால் ஏழெட்டு வருசத்துக்கு மறியல் வீட்டுக்குப் போகக் கிடைக்கும்." எட்டிங் கையை உதறி விட்டான்.

"அப்படியென்றால் நீ நேற்று இரவு எங்களை கூட்டிக் கொண்டு போனது?" சீடிஸ் கேட்டான்.

"அது கொலை செய்யிறதுக்கா பிசாசு?" எட்டிங் சரத்தை அவிழ்த்துப் போர்த்திய படியே வீட்டினுள் சென்றான்.

"உனக்குக் கொஞ்சமும் இனப்பற்று இல்லை" ஜோதிபால கூறினான்.

"ஐயோ உன்னுடையதும் என்னுடையதும் இனப்பற்று" எட்டிங் பின்பக்கமாக சாரத்தை உயர்த்திக் காட்டினான்.

துவக்கையும் தோட்டாக்களின் பெட்டியையும் ஜீப்பில் போட்டுக் கொண்டு இளத்தாரி கிராமத்திற்கு வந்தான். கிராமத்தின் பொருட்டு பொலிசிற்குத் தெரிவிக்கும் பொறுப்பை துரை ஏற்றுக் கொண்டார். கிராமத்தவர்களின் பாதுகாப்பிற்கும் புலிகள் இருந்தால் தப்பிச் செல்வதற்கு இடம் வழங்காமல் இருப்பதற்கும் துப்பாக்கியோடு கிராமத்தில் இளத்தாரியை நிறுத்திய துரை, தானே ஜீப்பைச் செலுத்திக் கொண்டு பொலிசிற்குச் சென்றார். போகும் வழியில் இது நடக்கக் கூடியதா என அவர் யோசனை செய்தார். அவர் வேண்டிய அளவிற்கு டொக்டரோடு அரசியல் கதைகள் பேசியிருக்கிறார். மனுசன் புலிகளைப் பற்றிக் கதைத்ததும் வெறுப்புடனே. அப்படி இருக்கும்போது, ஜோதிபால சத்தியம் செய்து சொன்னவன், முதல் நாள் மாலையில் கறுப்பு ஆடைகளை அணிந்த கோஷ்டி ஒன்று டொக்டரின் பங்களாவிற்கு நுழைந்ததைக் கண்டதாக. அது மாத்திரமல்ல நேற்று இரவு உளவு பார்க்கச் சென்ற எட்டிங், சீடிங் ஆட்களும் சொன்னவங்கள் தங்களுக்கு வெடி வைச்சது

ஞானம் 114ஆம் இதழில் (நவம்பர் 2009)

### துவாரகன் (சு. குணேஸ்வரன்) அவர்களது நேர்காணலில்...



**கேள்வி:–புலம்பெயர் எழுத்தாளர்கள், ஈழத்துக் கவிஞர்கள் எல்லோருக்குமே அண்மைக்காலம் வரை போரியலே பாடுபொருளாக இருந்தது. போர் முடிந்து விட்ட சூழ்நிலையில் பாடுபொருள் எவ்வாறு மாறப் போகிறது?**

**துவாகரன்:–** புலம்பெயர் கவிஞர்கள் எல்லோருக்கும் போரியலே பாடுபொருளாக இருந்தது என்பதை முற்று முழுதாக ஏற்க முடியாது. அவர்களின் கவிதைகளில் போரியல் பற்றிப் பாடுவதும் ஒரு அங்கமாக இருந்துள்ளது. அடக்குமுறையையும் அதிகாரத்தையும் பொதுவாக எல்லோரும்தான் பாடினார்கள். மற்றும்படி அவர்கள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அனுபவங்களையும் கூடப் பாடியுள்ளார்கள். அகதி அனுபவம், தொழிற்தள நெருக்கீடுகள், இனவாதம், நிறவாதம், பண்பாட்டு அதிர்ச்சி, தனிமை, அந்நியம், அனைத்துலக நோக்கு என்றவாறு அவர்களின் கவிதைப்பாடு பொருள் விரிந்து சென்றுள்ளது.

ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரையில் மழை விட்ட பின்னரும் தூறல் விட்டபாடில்லை என்பது போல் எமது பிரச்சனைகள் இன்னமும் முழுதாகத் தீரவில்லை. மக்கள் மீளவும் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லவேண்டும். அவர்கள் இழந்தவை என்றுமே ஈடுகட்டமுடியாதவை. அது உயிராக இருக்கலாம். அல்லது அவர்கள் சிறுகச் சிறுகச் சேமித்த சொத்துக்களாக இருக்கலாம்.

ஆனால் அந்தப் போரின் வடு இன்னமும் எங்களை விட்டு முழுதாக நீங்கிவிடவில்லை. மனங்கள் ஆற இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதும் தெரியாது.

எனவே அந்த போரின் வடுவும் மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளும் இன்னமும் கவிதை களில் தொடரத்தான் செய்யும் என்று நினைக்கிறேன். எமது அடுத்த சந்ததிகளாவது இந்தக் காயங்களைச் சுமக்காமல் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு காலங்களில் மக்களின் வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் பிரச்சினைகள் ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. அவை தீர்க்கப்படும்வரை அவை பற்றி இலக்கியங்களில் பதிவுபெற்றவண்ணம் இருக்கும். முரண்பாடு இல்லாமல் வாழ்க்கை இல்லைத்தானே. தமிழ் இலக்கிய வரலாறே இதற்குச் சான்றாகவுள்ளது.

வேட்டைத் துப்பாக்கியால் அல்ல, புதுமையான பயங்கரமான சப்தத்தை எழுப்பும் இயந்திரத் துப்பாக்கியால் என்று.

டொக்டர் பங்களாவிலுள்ள புலிகள் முகாமைச் சுற்றி வளைக்கும் நடவடிக்கையை இளந்தாரி தானே பொறுப்பெடுத்துக் கொண்டான். ஊருக்கு அவன் விருந்தாளியாக இருந்தாலும் கிராமத்து இளைஞர்களின் பெயர்களைக் கூட அவன் தெரிந்திராவிடினும் அவனை அபூர்வமாக அவர்கள் நடத்தினார். இந்த அச்சமற்ற சிங்கள இளைஞன் மீது கிராமத்து இளைஞர்களின் அவதானம் விழுந்தது. அனைவரும் இளந்தாரியைப் பற்றியே பேசினார்கள். "இளந்தாரி அப்படிச் சொன்னார்", "இளந்தாரி இப்படிச் செய்தார்" என்று.

"பெட்ரோல் கொஞ்சம் கொண்டு வா" அவன் ஜோதிபாலவிடம் கூறினான்.

ஜோதிபால பிளாஸ்டிக் கேன் ஒன்றை எடுத்துக் கொண்டு றிச்சாட் துரையின் வீட்டிற்கு ஓடினான். றிச்சாட் துரை தீவிரவாத சிங்களக் கட்சி ஒன்றின் மாவட்டத் குழுவில் உள்ள ஒருவர். அவர் காரின் பெட்ரோல் டாங்கிளைத் திறந்து வயர் ஒன்றின் மூலம் கேனுக்குள் பெட்ரோலை நிரப்பினார்.

"இந்தத் தமிழங்கள் எல்லாரையும் கப்பலில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்ப வேணும்" றிச்சாட் துரை கூறினார். "அப்படி இல்லாமல் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது"

பெட்ரோல் குண்டுகளைத் தயாரித்ததும் இளந்தாரிதான். டிஸ்பென சரிக்குப் பக்கத்துத் தோட்டத்தில் உள்ள வீடுதான் நடவடிக்கைத் தலைமையகம் ஆகியது. தோழர் வந்து பெட்ரோல் குண்டு செய்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"தோழர் எங்களுக்கு ஐடியா ஒன்று தாங்கோவன்" சீடிஸ் கேட்டான்.

"உங்களுக்கு தெரியும்தானே டப்பி மைன்ஸ் தயாரிக்கிற விதம்"

எழுபத்தொன்று கிளர்ச்சி நேரத்திலை தோழர் பொலிஸைத் தாக்கிய நேரத்திலை அடித்த சமன்ரின் குண்டு ஒன்றுமே வெடிக்கவில்லை. ஒரு குண்டுபட்டு பொலிஸ்காரன் ஒருவன் முன் வாய்ப்பற்கள் இரண்டு இல்லாமற் போயிற்று. அதனை நினைத்த தோழருக்கு சிரிப்பு வந்தது.

"ஏன் நீ சிரிக்கிறாய்?"

விளக்குத் திரியினால் போத்தலின் வாயை மூடிய இளந்தாரி கேட்டான்.

"வா போவம் புலிகளின் முகாமை அடிக்க".

"புலிகளின் முகாம் எங்கே?"

"டொக்டரின் பங்களாவில்"

தோழர் இளந்தாரிக்குப் பின்னே சென்றான்.

டிஸ்பென்ஸறி இருந்தது டொக்டரின் பங்களாவிற்கு வலது புறமாக. இடது பக்கத்து வேலி எல்லையில் டொக்டரின் பங்களாவிற்கு அருகாகச் சென்ற இளந்தாரியும் ஜோதிபாலவும், சீடிஸ்ஸும் அங்கு நின்ற புளிய மரத்தில் மறைந்துகொண்டார்கள். சீடிஸ் கையில் இருந்த தோட்டாப் பெட்டியில் ஒன்றை எடுத்து துப்பாக்கியில் நிரப்பிக் கொண்ட இளந்தாரி, மேல் பைக்கட்டில் இருந்து லைட்டறை எடுத்துப் பற்றவைத்தான். ஜோதிபால அந்த நெருப்பை திரிக்குக் கிட்ட கொண்டு சென்றவுடன் அது பற்றிக்கொண்டது.

"அடியடா" இளந்தாரி சப்தமிட்டான். ஜோதிபால பெட்ரோல் குண்டை அடித்தான். கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு பெட்ரோல் குண்டு டொக்டரின் பங்களாவின் விறாந்தையில் விழுந்தது. அதன் பின் நெருப்புச் சுவாலை கள் பற்றி எரிந்தன. இளந்தாரி ஒரு இடத்தில்



நிலையெடுத்து துப்பாக்கியைப் பிடித்து டொக்டரின் பங்களாவிற்கு இலக்குப் பார்த்தான்.

எவ்வித பிரதிபலிப்பும் இல்லை. இப் பொழுது புலிகளோடு பங்களாவும் பற்றி எரிந்திருக்கும். ஆனால் சிறிது நேரத்தில் நெருப்புச் சுவாலைகள் கொஞ்சம் கொஞ்

சமாக அணைந்து செல்வது ஜன்னலினூடாக தெரிந்தது. உள்ளே யாரோ தண்ணி கொண்டு வந்து நெருப்பை அணைத்ததைத் தான் கண்டதாக சொல்லிக்கொண்டே தோழர் வந்தான். பைத்தியம் என்பதனால் அவன் அச்சமின்றி தனியாக பங்களாவுக்கு அருகாகச் சென்று ஜன்னலின் ஊடாகக் கூட எட்டிப் பார்த்தான்.

ஜோதிபால மீண்டும் பெட்ரோல் குண்டு ஒன்றை அடித்தான். இளந்தாரி மீண்டும் கீழே நிலையெடுத்து டொக்டரின் வீட்டுக்கு இலக்கு வைத்தான். மீண்டும் ஹோவென்று நெருப்புச் சுவாலை பற்றி எரிந்தது. அதற்குப் பின்பு அது மெதுவாக அணைந்தது.

ஜோதிபால மூன்றாவது பெட்ரோல் குண்டை அடித்ததுதான் தாமதம் பலத்த சப்ததோடு வெடிச்சத்தம் அது டொக்டரின் பங்களாவின் மேற்புறத்தில் இருந்து.

"அதோ புலிகள் வெடி வைக்கிறார்கள்" என்று அனைவரும் கத்தத் தொடங்கினார்கள். டொக்டரின் பங்களாவைச் சுற்றி இடத்துக்கு இடம் நின்றவர்கள் ஒளிவிடம் தேடி ஓடினார்கள். தோழர் மாத்திரம் அச்சம் இன்றி சுற்றிவர போனான்.

"டொக்டரின் பங்களாவில் இருப்பது டொக்டரும் மனைவியும் மாத்திரமே. வேறு யாரும் இல்லை" தோழர் சொல்லிக் சொல்லி நடந்தான். ஆயினும் பைத்தியம் சொல்லியதை யாரும் கணக்கில் எடுக்கவில்லை.

"பங்களாவில் புலிகள் இல்லையென்றால் யார் சுட்டது?" எல்லோருமே கேட்டார்கள். அதற்குப் பிறகு சுற்றி நின்றவர்கள் கற்களாலும் தடிகளாலும் அடிக்கத் தொடங்கினார்கள். இளந்தாரி இராணுவச் சிப்பாயைப் போன்று தோட்டாக்களை மாற்றி மாற்றிப் போட்டு டொக்டரின் பங்களாவை நோக்கிச் சுட்டான். சீடிஸ் கிழிந்த சரத்தை வாயினால் கௌவிப் பிடித்தபடியே தோட்டாப் பெட்டியை இரு கரங்களாலும் தூக்கிக் கொண்டு குரங்கினைப் போன்று இளந்தாரிக்குப் பின்னால் இழுபட்டான். ஜோதிபால பைத்தியம் பிடித்தவனைப் போல மேலே பாய்ந்து பாய்ந்து பெட்ரோல் குண்டுகளை அடித்தான்.

உள்ளே இருக்கும் புலிகள் தண்ணீர் பைப்பைப் பிடித்துப் பிடித்து பற்றி எரியும் தீயை அணைத்தார்கள். அனைத்து ஜன்னல்களிலும் அவர்கள் இருந்தார்கள். விட்டு விட்டு ஒவ்வொரு ஜன்னலில் இருந்தும் சுட்டார்கள்.

"தோழர்களே உள்ளே இருப்பது நோனாவும், மஹத்தயாவும் தான்" தோழர் சொல்லிச் சொல்லிக் கொண்டு வந்தான். "நான் எனது இரண்டு கண்களாலும் பார்த்தேன் தோழர்களே..."

தோழர் பைத்தியம் என்பதனால் யாரும் அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. அவனுக்குக் காது கொடுத்தது ஊரில் இருந்த புதிய ஜே வி பி காரனான ரொபி கமல் மாத்திரமே. ரொபி கமல் பஸ் ஸ்ரான்டில் ரொபி விற்பவன். கிராமத்து ஜே வி பி தேர்தல் கூட்டத்தில் பேசியும் இருக்கிறான்.

இருந்தது ஒரு துவக்கு என்பதனால் இளந்தாரிக்கும் சரியான வேலை. ஸ்கூல் மஹத்தயாவின் வீட்டில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இளைஞர்களின் பொருட்டு தேநீர் தயாரிக்கப்பட்டது. வெத மஹத்தயா சிங்களவன் என்ற அதிகாரச் செருக்குடன் தனது வயதைப் பற்றியும் கவனிக்காமல் தேநீர் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு மறைந்து மறைந்து போனார். பையன்களுக்கு தேநீரைக் கொடுத்தார், ஊக்கப்படுத்தினார்.

"இன்னும் கொஞ்ச நேரம் தாக்குப் பிடிச்சுக் கொண்டு இருங்கோ... இப்ப

பொலிஸ் வழியிலை வந்து கொண்டி ருக்கும்"

பங்களாவின் முன்புறம் இருக்கும் குழு-வினர் பெட்ரோல் குண்டுகளை அடிக்கும் போது பின்பக்கமாகச் சென்று வெடி வைத்து புலிகளை வெளியில் தப்பிச் செல்லவிடாது பார்க்க வேண்டும் என இளந்தாரி கூறினான். மறைந்து கொண்டு டிஸ்பென்சறியைச் சுற்றி தோட்டத்துக்கு மேலாக பின்பக்கமாக ஓடிச் சென்ற இளந்தாரிக்கு கிராமத்தவர்கள் வழி காட்டினார்கள்.

"இந்தப் பக்கமாக வா... இந்தப் பக்கமாக வா.."

இளந்தாரியின் உடல் பூராவுமே வியர்வையில் நனைந்து முட்கள், பற்றைகள் கீறி.. ஆயினும் அவன் அவற்றைக் கருத்தில் எடுக்காது உண்மையான வீரச்சிங்களப் படை வீரனைப் போன்று அவன் பங்களாவை இலக்கு வைத்துச் சுட்டான். அவனது கண்களில் நெருப்பாகக் கனன்றது இனப்பற்று மாத்திரமே.

"இளந்தாரியின் தோட்டாக்கள் முடி வடையப் போகிறது" என சீடிஸ் கூறினான்.

"நான் பின் பக்கமாக வருகிறேன். தோட்டாக்கள் குறைவு ஆனபடியால் முன்பக்கம் உள்ளவர்கள் கற்களாலும் தடிக-ளாலும் அடித்து கலவரம் பண்ண வேணும்" இளந்தாரி யுத்த தந்திரத்தை மாற்றிக் கொண்டான்.

இந்த வேளையில் பெட்ரோல் முடிந்துவிட்டதால் போத்தல்களில் நிரப்பியது மண்ணெண்ணையை. பீரிஸ் முதலாளி தேவையான அளவுக்கு மண்ணெண்ணெயை இலவசமாகவே வழங்கினார். புதிதாக நிரப்பிய போத்தல் களின்திரிகளைப்பற்றவைத்துஇளைஞர்கள் மேலே பாய்ந்து பாய்ந்து பங்களா மீது எறிந்தார்கள். இப்பொழுது உள்ளே இருக்கும் புலிகளால் நெருப்பை அணைக்க முடியாத அளவிற்கு தீச்சுவாலைகள் உள்ளே பற்றி எரிந்தன.

இந்த நேரத்தில்தான் தோழர் பைத்தியம் நின்றிருந்த பங்களாவின் முன்பக்க கதவுக்கு கிட்ட வெடி விழுந்தது. அவன் எதற்காக அந்த நேரத்தில் பங்களாவின் முன்பக்கம் போனான் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். அவன் இரு கரங்களையும் உயர்த்திக் கொண்டு எதையோ எதையோ சொல்லிக்கொண்டு பங்களா பக்கம்நடந்து கொண்டு போனானாம். அந்த நேரத்தில் தான் உள்ளே இருந்து வந்த துப்பாக்கிச் சூடு தோழரின் மார்பில் பட்டது. தோழர் அந்த இடத்திலேயே இறந்து விழுந்தான். அந்த வேளையிலேயே பங்களாவின் முன்புறம் நின்ற சிலர் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினார்கள். பிணத்தை எடுப்பதற்குப் போவதற்கு கூட ஒருவரும் முன்வரவில்லை.

உள்ளே டொக்டரின் மனைவி யின் மரணப்புலம்பல் சப்தம் கேட்டது. அதற்குப் பிறகு இரு பக்கத்திலுமே வெடித்தாக்குதல்கள் நின்றுபோயின. மேலே பாய்ந்து பாய்ந்து பெட்ரோல் குண்டுகளை அடித்து அடித்து கொண் டிருந்த ஜோதிபால ஆசிரியரின் வீட்டின் படிக்கு மேலே உட்கார்ந்து புறுபுறுத்தபடி காலை சொறிந்து கொண்டிருந்தான்.

"தோட்டா முடிந்தது" என்று கூறிக் கொண்டே இளந்தாரி ஆசிரியர் வீட்டுக்கு வந்தான்.

ஸ்கூல் மஹத்தயா "ஐயோ என்னுடைய தம்பி.... ஐயோ என்னுடைய தம்பி...." என்று சொல்லிக் கொண்டு ஓட ஆயத்தமாகிய போது வெத மஹத்தயாவும் வேறு சிலரும் கரங்களைப் பிடித்து கதிரையில் உட்கார வைத்து அவரை ஆசுவாசப்படுத்த முயன்றார்கள்.

**"சிங்களவங்கள் மாதிரி இல்லை தமிழர்கள்; சரியான இனவாதிகள்" வெத மஹாத்தயா கூறியதை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். கோச்சியிலை போகும் போதுதான் அவங்களை வேண்டாமென்று போகிறது. அனுராதபுரத்திற்கு அங்காலை போனால் சிங்கள ஆட்களுக்கு ஒரு இடம் தரமாட்டாங்கள்."**

அதற்குப் பிறகு அனைவரும் மீண்டும் அச்சமடையத் தொடங்கினார்கள். அனைவரும் உயிர்களைப் பாதுகாத்துக் கொள் வதற்கு தப்பிச் செல்லும் விதம் பற்றி கதைத்துக் கொண்டிருக்கும் வேளையில் துரை ஜீப்பில் வந்து டிஸ்பென்சறிக்குப் பக்கத்தில் ஜீப்பை நிறுத்தினார். அது பொலிஸ்காரர்களால் நிரம்பி இருந்தது. உள்ளே எவ்வாறு இருந்தார்கள் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு பொலிசாரின் குழு பின்பக்கக் கதவை திறந்து கொண்டு ஒருவர் ஒருவராக வெளியே பாய்ந்து டொக்டரின் பங்களாவிற்கு முன்னால் வரிசை யாக நின்றபடி பங்களாப் பக்கமாக ரைபிள்களினால் இலக்கு வைத்தார்கள்.

முன்பக்கக் கதவுக்குக் கிட்டச் சென்ற இன்ஸ்பெக்டர் இடுப்பில் இருந்த பிஸ்ரலை இழுத்து எடுத்துக் கொண்டு மேலே வெடி வைத்தார். அதற்குப் பிறகு உரத்த குரலில் சப்தமிட்டு இவ்வாறு கூறினார்.

"நாங்கள் பொலிஸ், உள்ளே இருப்பவர்கள் ஆயுதங்களை நிலத்தில் போட்டு விட்டு கரங்களை உயர்த்திக் கொண்டே முன்னே வாருங்கள்."

சிறிது நேரம் கழிந்தபின் கதவு திறக்கப்பட்டு துவக்கு ஒன்று வெளியே வீசப்பட்டது. அதன் பின்னால் டொக்டர் இரு கரங்களையும் உயர்த்திக் கொண்டு வெளியே வந்தார். அவர் கபில நிற கோடுகள் போட்ட றோஸ் நிற பிஜாமா சேட்டும் களிசானும் அணிந்திருந்தார். மற்றைய நாட்களில் ஒழுங்காக வாரி இழுக்கப்பட்டிருக்கும் வெள்ளை நிற கேசம் நன்றாக குழம்பி தட்டைத் தலை தெரிந்தது. முகத்தில் இருந்தது களைப்படைந்த வெற்றுப் பார்வை. அவருக்கு பின்னால் கறுப்பு நிற கிமோனா அணிந்திருந்த மனைவி இரு கரங்களாலும் மார்பிலும் தலையிலும் அடித்து அடித்து "கடவுளே கடவுளே" என்று கூறியபடியே வந்தார்.

முற்றத்தில் விழுந்து கிடந்த தோழரின் இறந்த உடலைக் கண்ட டொக்டர் கரங்களை உயர்த்திக் கொண்டு நிலத்தில் உட்கார்ந்து கொண்டார். அதற்குப் பிறகு கைகளை இரண்டையும் மார்பில் அடித்துக் கொண்டு அழுது புலம்பத் தொடங்கினார்.

பொலிசார் மிகுந்த அவதானத்தோடு புலிகளின் முகாமைச் சோதனை யிட்டார்கள். தோழர் பைத்தியம் என்பது சரியானது என்பதை பொலிசார் ஏற்றுக் கொண்டனர். உள்ளே இருந்தது அச்சத்தினால் நடுங்கிக் கொண்ட பூனைக் குட்டிகள் மாத்திரமே. வேறு யாராவது குழுவினர் இருந்ததற்கான எந்தவித அடை யாளமும் அங்கு இருக்கவில்லை.

ஒருவர் இருவராக டொக்கடரின் பங்களாவுக்கு முன்னால் மக்கள் மீண்டும் கூடத் தொடங்கினார்கள். "அப்படி யென்றால் நெருப்பை அணைத்தது யார்?

நெருப்புச் சுவாலைகளுக்கு தண்ணீரை சுற்றிப் பிடித்தது பெண்ணா, நாலா பக்கமும் சுட்டது தனி மனிதன் மாத்திரமா, தனி ஒரு துவக்கினாலா? இருக்க முடியாது. உள்ளே இன்னமும் புலிகள் இருக்கிறார்கள்; ஆயினும் இருந்தால் பிடிபட்டிருக்க வேண்டாம்?"

பொலிசார் டொக்டரையும் நோனா-வையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். பிணத்தின் காவலுக்கு இருவரை நிறுத்திவிட்டு அவர்கள் புறப்பட ஆயத்தமானர்கள். அப்பொழுது ஜீப்பைச் சுற்றி மீண்டும் சனக்கூட்டம் நிரம்பியது. முழுக் கிராமமுமே வந்ததைப்போன்று. ரொபி கமல் கூட வந்தான்; தூரத்தில் இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்கூல் மஹத்தயா வீங்கிக்களைத் துப்போன முகத்தோடு கண்ணீர் பெருக்கெடுக்க கோபத்தினால் சினந்து மதங்கொண்டவரைப்போல ஜீப்பிற்குப் பக்கத்தில் வந்தார். ஜீப்பின் உள்ளே மூலையில் நிலத்தில் டொக்டரும் மனைவியும், பூனைக்குட்டிகள் இரண்டும் உறைந்து போயிருந்தார்கள். டொக்டர் மனைவியை ஒரு கையினால் ஆசனத்தோடு தாங்க வைத்து அடிக்கடி நடுங்குகின்ற மனைவியின் உடலை மறைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அதற்கிடையில் தலையை உயர்த்தி அச்சம் கலந்த இரு கண்களாலும் பார்த்தவாறு மற்றைய கையை ஆட்டி ஏதோ கூறினார். அந்தச் சப்தம் ஜீப் மூடப்பட்டிருந்ததனால் கதவு ஜன்னல்களினூடாக வெளியே செல்ல வில்லை.

ஸ்கூல் மஹத்தயா ஜீப்பின் பாகங்களிலும் ஜன்னல்களிலும் கைகளால் அடித்து அடித்து ஜீப்பைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

யாருக்குமே கரைச்சல் கொடுக்காத என்னுடைய தம்பியைக் கொன்றவனை நல்ல விதமாக போகவிடப் போகிறீர்களா? அவர் கேட்டார். "இதுவா சிங்களத் தன்மை?" "இதுவா சிங்களத்தன்மை?"

மக்கள் வெகுண்டெழுந்தார்கள். பொலிசார் வந்து சேர்ந்தபோது ஒளித்து வைக்கப்பட்ட வாள்கள், பொல்லுகள் மீண்டும் பழிவாங்குவதற்காக வெளியே வந்தன.

ஜீப்பை சுற்றி சனக்கூட்டம் முண்டியடித்தது.

"இழுத்தெடுங்கோடா அவங்களை வெளியிலை..."

திடீரென்று அந்த இடத்தில் பொலிசார் இல்லாததைப் போன்ற நிலைமை ஏற்பட்டது. இளந்தாரி வந்து ஜீப்பின் கதவை இழுத்துத் திறந்தான். பல கரங்கள் ஜீப்பின் உள்ளே நுழைந்து போட்டி போட்டுக் கொண்டு அவர்கள் இருவரையும் வெளியே இழுத்தெடுத்தன. மேலும் பல கரங்கள் அவர்கள் மீது விளையாடத் தொடங்கின. அதற்கு மத்தியில் நான்கு கரங்கள் மாத்திரம் அடிக்கடி அவர்களைப் பார்த்துக் கும்பிட்டன. அதற்கிடையிலும் பல தடவைகள் கும்பிட்ட ஆணின் கரங்கள் அந்தப் பெண்ணின் உடலைப் பாதுகாத்துக் கொள்ள முயன்றன.

**(ஞானம், ஆகஸ்ட் 2005)**

ஒரு காலத்தின் இலக்கிய வளர்ச்சியில் அக்காலத்து அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு மாறுதல்கள் செல்வாக்குச் செலுத்துவது இயல்பானதாகும். ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலும் இக்காரணிகள் செல்வாக்குச் செலுத்தத் தவறவில்லை. ஈழத்துப் போர்க்கால இலக்கியங்கள் (1983 - 2009 மே) பன்முகத் தன்மை கொண்டவை. அவ்வகையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மக்களை எழுச்சியூட்டுவதாக அமையும் போர்க்கால மெல்லிசைப் பாடல்களும் நோக்கப்படவேண்டியவையாகும். ஆரம்ப காலத்தில் மாணவர் பேரவைகள் கவிதா நிகழ்வுகளை நடாத்தியதோடு போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தன. ஈ.பி. ஆர்.எல்.எப் இயக்கமும் தெருநாடகங்களை நடாத்தியிருந்தது. அதனைப் போன்று ஏனைய இயக்கங்களும் செயற்பட்டிருந்தன. பின்னாளில் த.வி.புலிகள் இயக்கம் பலம் பெற்றது. இப்பின்னணியில் போர்க்கால மெல்லிசைப்பாடல்கள் என்று நோக்கும் போது ஈழப் போராட்ட இயக்கங்களின் பாடல்களே நோக்கப்படவேண்டியவையெனினும் அப் பாடல்கள் கிடைக்கப் பெறவில்லையென் பதால் முக்கியத்துவம் பெற்றுவிளங்கிய கிடைக்கக்கூடியதாக இருந்த குறிப்பிட்ட போர்க்கால ஈழத்து தமிழ் மெல்லிசைப் பாடல்களை முன்வைத்து இலக்கிய நிலைசார்ந்த பார்வையாகவே இக்கட்டுரை நோக்கப்படுகின்றது.

பாடலுக்கு பெரும் சக்தியுண்டு. உணர்வைத்தூண்டி பேரெழுச்சியை உண்டு பண்ணுமாற்றல் உண்டு. போராட்டங்கள் நடைபெற்ற உலகின் பல பாகங்களிலும் அப்போராட்டங்களின் வெற்றியில் பாடல்கள் பெரும்பங் காற்றியுள்ளன. வங்கமொழிக் கவிஞர் இரவீந்திரநாத்தாகூர் பாடிய "வந்தே மாதரம்" என்ற பாடல் இந்திய தேசத்தின் மீது பற்றுதலை ஏற்படுத்தியதென்பது யாவரும் அறிந்ததொன்றே. மெல்லிசைப்பாடல்கள் மேடைகளில் ஒலிக்கும்போது அதனைக் கேட்பதற்காக மக்கள் பெருந்திரளாகத் திரள்வர். ஈழத்தில் அரச படைகளுக்கும் போராளிகளுக்குமிடையே போர் உக்கிரம் பெற்ற தொண்ணூறுகளின் ஆரம்பத்திலேயே (அதற்கு முன்னர் குறிப்பிட்ட பாடல்கள் வெளியாகியிருந்தாலும்கூட) மெல்லிசைப் பாடல்கள் வளர்ச்சிபெற்றன.

ஆரம்ப கால மெல்லிசைப்பாடல்கள் தமிழகத்திலிருந்தே அதிகம் வெளிவந்தன. புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் போன்ற ஈழத்துக் கவிஞர்களும் இன்குலாப் போன்ற தமிழகத்துக் கவிஞர்களும் பாடல்வரிகளை எழுதினர். டி.எம்.சௌந்தரராஜன், மனோ, மலேசியா வாசுதேவன், ஜெயச்சந்திரன், பி.சுசீலா, வாணிஜெயராம், சுவர்ணலதா போன்ற முதன்மைப் பாடகர்கள் பாடல் களைப்பாடினர். பல பாடல்களுக்கு எல். வைத்தியநாதன் இசையமைத்திருந்தார். பின்னர் கலைப் பண்பாட்டுக்கழகம் உருவாக்கப்பட்டு அதனூடாக கலை, இலக்கிய பணிகள் முன்னெடுக்கப்பட்ட சமயத்தில் மெல்லிசைப்பாடல்களை வளர்க்கும் பொருட்டு பல இசைக்குழுக்களும் உருவாக்கப் பட்டன. சிட்டு, சாந்தன், நிரோஜன், குமாரசாமி, பார்வதி சிவபாதம், தேனிசை



# ஈழத்துப் போர்க்கால மெல்லிசைப் பாடல்கள்

## சில அவதானிப்புக்கள்

த.மேகராசா BA (HONS)

செல்லப்பா போன்ற பல பாடகர்கள் பிரபல்யம் பெற்றனர். புலத்தில் மட்டுமன்றி புலத்துக்கு வெளியேயும் இவ் இசைக்கலைஞர்கள் நன்கு அறியப்பட்டனர். போர்க்காலத்தில் வெளிவந்த மெல்லிசைப்பாடல்கள் அடங்கிய முதலாவது இசை நாடா "புலிகள் பாடல்கள்" என்பதாகும்.

ஈழத்துப் போர்க்கால மெல்லிசைப் பாடல்கள் பின்வரும் நோக்கங்களைப் பிரதானமாகக்கொண்டுள்ளன.

1. போராளிகளுக்குத் தைரியமூட்டி, அவர்களைத் தொடர்ந்தும் போரில் ஈடுபடச் செய்தல்.
2. போராட்டத்தைப் பற்றியும், மக்களின் துன்பதுயரங்களையும் எடுத்துச் சொல்லி, புதிய போராளிகளை இணைத்துக்கொள்ளுதல்.
3. உலக மக்களின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெறமுனைதல்.
4. போரில் மரணமடைந்த போராளிகளின் நினைவேந்தல்.

இத்தகைய நோக்கங்களைக்கொண்ட பாடல்களைப் பொருளடிப்படையில் பின்வருமாறு நோக்கமுடியும்.

1. போர்க்களம் செல்லத்துணிவூட்டுபவை, போர்க்கள வெற்றி பற்றியவை.
2. போரில் வீழ்ந்த வீரர்களின் சாதனை, அவர்களின் நினைவுகளைச் சொல்லுபவை.
3. போராட்டத்தலைவர்களின் சிறப்பு உணர்த்துபவை.
4. மக்களின் துன்ப துயரங்களைச் சொல்லுபவை.
5. தாய் நாட்டில் பற்றுதலை ஏற்படுத்துபவை, அதன் அழகைச் சொல்லுபவை.
6. மொழி - கலை - கலாசார அடையாளத்தை வலியுறுத்துபவை.

உணர்வூட்டலைப் பிரதானமாகக்கொண்ட போர்க்கால மெல்லிசைப்பாடல்களில் போராளிகளின் துணிகரச் செயலைச் சொல்லி போர்க்களம் செல்ல ஏனைய வீரர்களுக்குத் துணிவூட்டுகின்ற - போர்க்கள வெற்றியைச் சொல்லுகின்ற பாடல்கள் முக்கிய கவனிப்புக்குரியவையாகும். சாவைத்துச்சமென எண்ணி போராளிகள் போருக்குச் செல்வரென்பதை பின்வரும் பாடல் எடுத்தியம்புகின்றது.

**"அச்சமின்றி குண்டடைத்து**
**ஆடிப்பாடிப் போவார்**
**எங்கள் அண்ணன் பெயர்**
**சொல்லிச் சொல்லி**
**கரும்புலிகள் சாவார்**
**சக்கை வண்டி தன்னில் ஏறி**
**சரித்திரங்கள் போவார்**
**வரும் சந்ததியின் வாழ்வுக்காக**
**தங்கள் உயிர் ஈவார்**
**தங்கள் உயிர் ஈவார்"**

பின்வரும் பாடல் போரில் வெற்றி கொண்ட மகிழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

**"பாரடா தமிழன் சிறப்பை – அங்கே**
**பாரடா வானில் நெருப்பை**
**பொடிப்பொடி ஆனதடா .....**
**போர்ப்படை வெண்ணூர்தி"**

பிறிதொரு பாடல்

**"வெற்றிக்கொடி கையிலெடு**
**வெல்வோம் எனச் சொல்லி எழு**
**பெற்ற வெற்றிகொஞ்சமில்லை – எந்தப்**
**பெரும்படைக்கும் அஞ்சவில்லை**
**சண்டை எங்கள் தனிக்கலை வரும்**
**சாவி கொண்டே கூண்டில் அடை**
**கொண்ட கொள்கை வெல்லும் வரை**
**புலிக் கோலம் மாறப் போவதில்லை."**

என்று உணர்வை கொப்பளிக்கச்செய்வதாக உள்ளது. பார்வதி சிவபாதம், சாந்தன் இருவரும் சேர்ந்து பாடிய "காற்றாகி வந்தோம் கடலாகிவந்தோம்.." என்னும் பாடல் எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது இங்கே மலரும் சின்னப் பூக்கள் வாடாது" என்று அழுத்தியுரைப்பதாகவுள்ளது. இப்பாடலில் பின்வரும் வரிகள் ஈண்டு எடுத்துக்காட்டத் தக்கவையாகும்.

**"எம்மை நினைத்து யாரும் கலங்கக் கூடாது –இனி**
**இங்கே மலரும் சின்ன பூக்கள் வாடாது**
**கண்ணில் வழியும் நீரைத் துடைத்தே வாருங்கள்**
**–எங்கள்**
**காவிய நாயகன் பாதையிலே அணி சேருங்கள்.**
**வாழும்போது மானத்தோடு வாழ்பவன்தானே தமிழன்**
**–தன்**

**வாசலில் அடிமை சேகவம் செய்து வாழ்பவன் என்ன மனிதன்**
**வழியில் இடறும் பகைகள் எரிய**
**வருக வருக தமிழா –(2)**
**உன் விழியில் வழியும் நீரைத் துடைத்து**
**வெளியில் வருக தமிழா**
**காற்றும் நிலவும் யாருக்கெனினும் கைகள் கட்டுவதில்லை –நாங்கள்**
**போகும் திசையில் சாகும்வரையில் புலிகள் பணிவதுமில்லை"**

"பாடடி முத்தம்மா" எனவரும் பாடல் பாரதி பாடிய ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று... என்னும் பாடலை நினைவூட்டுவதாக உள்ளது.

**"பாடடி முத்தம்மா பாடு**
**பழுத்தது விடுதலை பாடு**
**கேடு புரிந்தார் ஓடி ஒழிந்தார்**
**கிடைத்தது நம் கையில் நாடு**
**பாடடி முத்தம்மா பாடு**
**பழுத்தது விடுதலை பாடு"**

எதிர்காலக் கனவு நனவாகியதாக நினைத்துப் பெருமிதமடைவது ரொமான்றிஸம் (Romanticism) ஆகும். மேற்கூறிய பாடலும் அத்தன்மையானதே. ஒரு இனம் அல்லது ஒரு குழு தமது தேசியம் சார்ந்த விடுதலையை வேண்டிப்போராடுகின்றபோது அந்த மக்களிடம் அதிகமாக உணர்ச்சிப் பிரவாகத்தை ஏற்படுத்துவதற்காக இத்தன்மையினைக் கையாள்வது இயல்பானதாகும். "ஆண்டாண்டு காலமதாய் நாம் ஆண்டுவந்த பூமி.." எனவரும் பாடலும் பழமையை நினைத்து ஏங்கும் மேற்கூறிய பண்பினையே எடுத்துரைக்கின்றது.

போரில் வீழ்ந்த வீரர்கள் பற்றிய பாடல்கள் சோகத்தை உண்டுபண்ணி, வீர உணர்ச்சியை ஏற்படுத்தும் சக்தி மிக்கவை. குறித்த வீரரின் தோற்றப்பொலிவு, திறமை, வீர தீரச்சாதனையை எடுத்துக் கூறுவதோடு அவர்பற்றிய நினைவை நெஞ்சில் பதிய வைப்பவையாக இருக்கின்றன.

**"மண்ணில் புதையும் விதையே நாளை**
**மரமாய் வளர்கிறது – அந்த**
**விண்ணில் குவியும் முகிலே**
**உலகில் மழையாய் விழுகிறது**
**விரையும் முகிலும் இவனைப் பெரிதாய்**
**கவிதை எழுதுவதில்லை..."**

**"புன்னகை தவழும் பூமுகம் காண**
**கண்கள் தவிக்கிறதே**
**என் அன்பினில் ஆழ்ந்த**
**காலத்தை எண்ணி**
**உள்ளம் துடிக்கிறதே**
**நெஞ்சம் வலிக்குதே**
**நினைவுகள் கனக்குதே**
**எங்கே எங்கே நீயும் எங்கே சென்றாய்**
**நெஞ்சுக்குள்ளே ஏன் வலியைத் தந்தாய்**
**........**
**தங்கத்தமிழே அழுகிறதே தமிழ்ச்செல்வன் அண்ணா எங்கே**
**தேடும்போது வாடுதே மனது.**

போர்க்கால மெல்லிசைப்பாடல்களில் போராட்டத் தலைவரைப்பற்றி மக்களுக்கும் போராளிகளுக்கும் எடுத்துச் சொல்லுகின்ற பாடல்கள் அதிகமாக உண்டு. போர்க்கால இசைமேடைகளில் எப்படியேனும் இத்தகைய பாடல்கள் பாடப்படுவது பெருவழக்கமாக இருந்தமையை அறியமுடியும்.

**"ராஜ கோபுரம் எங்கள் தலைவன்**
**பாரெங்கும் புகழ்கின்ற எங்கள் தலைவன்**
**தடை நீக்கி வழிகாட்டும் தலைவன்**
**வந்த பகை வென்று முடி கொண்ட தலைவன்"**

**"ஒரு தலைவன் வரவிற்காய் காத்து நின்றோம்**
**எங்கள் தலைவன் பிறந்தான்.."**

முதலான பாடல்களை எடுத்துக் காட்ட முடியும்.

மக்கள் எதிர்நோக்குகின்ற இன்னல்களை - அடக்குமுறைகளைப் பொருளாகக்கொண்ட பாடல்கள் மக்களைச் சிந்திக்கத் தூண்டுபவையாக, அவர்களின் நிம்மதியற்ற வாழ்வை எடுத்தியம்புபவையாக உள்ளன. போர்க்காலத்தில் மக்களின் இடப்பெயர்வைச் சொல்லும் பின்வரும் பாடல் நன்கு பிரபல்யமடைந்திருந்தமை அறிந்ததே.

**"பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது**
**போகும் இடம் அறியாமல் – இங்கு**

**சாகும் வயதினில் வேரும் நடக்குது**
**தங்கு இடம் தெரியாமல் –இது**
**கூடு கலைந்திட்ட குருவிகள்**
**இடம் மாறி நடக்கின்ற அருவிகள்.."**

மரபு இலக்கியங்களில் கிளி,காற்று போன்ற இயற்கைப் பொருட்களைத் தூது விடுவதைப்பொருளாகக்கொண்டு பாடல்கள் பாடப்பட்டள்ளதைப்போன்று போர்க்கால மெல்லிசைப்பாடல்களிலும் அத்தகைய தன்மையைக் காணமுடிகின்றது. தமிழரின் துயரத்தை அயல் நாடான தமிழ் நாட்டின் சோதரர் காதில் போய்ச் சொல்லுமாறு அமைந்த பாடலில் காற்று தூதுப்பொருளாகக் கையாளப்பட்டுள்ளது.

**"வீசும் காற்றே தூது செல்லு தமிழ் நாட்டில்**
**எழுந்தொரு சேதி சொல்லு**
**ஈழத்தில்நாம்படும்வேதனைகள்இதனை எங்கள்**
**சோதரர் காதில் சொல்லு.**
**எங்கள் குயிலினம் பாட மறந்தது.**
**எங்கள் வயல்வெளி ஆடை இழந்தது."**

போர்க்கால மெல்லிசைப் பாடல்களில் பிரபல்யமடைந்த மற்றொரு குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பாடலாக பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

**"சிறகு விரிக்கும் பறவைக்கிங்கே சின்னச் சின்னக் கூடு**
**தீனி பொறுக்கும் அணிலுக்கிங்கே சொந்தம் கொள்ள வீடு**
**உறவுகளோடு இங்கே வாழ எமக்கில்லை நாடு**
**குரங்கு கூட மரங்கள் தானே இங்கே எங்கள் வீடு**
**நாடும் இல்லை வீடும் இல்லை.**
**நடந்துபோகத் தெருவும் இல்லை.**
**ஈழத்தமிழர் வாழத் தானே எங்கள் – மண்ணில்**
**எதுவும் இல்லை..."**

ஒரு தாய் குழந்தைக்குப்பாலூட் டும்போது பாலுடன் வேங்கைகளின் வீரத்தையும் ஊட்டுவதாகப் பாடும் பாடல் மிகவும் எளிமையான மொழிநடையில் தாலாட்டுப்பாடல் வடிவில் அமைந்துள்ளது. பின்வரும் வரிகளை அதன் சிறப்புக்கருதி எடுத்துக்காட்டமுடியும்.

**கண்மணியே கண்ணுறங்கு**
**காவியமே நீயுறங்கு**
**பொன்முடி சூடிய பூச்சரமே – எந்தன்**
**பூங்குயிலே கண்ணுறங்கு**
**...........**
**நாய்கள் குரைக்குது ராவினிலே**
**இந்தி ராணுவம் போகுது வீதியிலே**
**வாய்கள் திறக்கவும் கூடாதா**
**எங்கள் வாசலில் தென்றலும் வீசாதா**
**தீயினில் தாயகம் வேகுதுபார் எட்டு**
**திக்கிலும் போர்க்குரல் கேட்குது பார்**
**பாய்ந்திடும் வேங்கைகள் வீரத்தையே நான்**
**பாலுடன் ஊட்டுறேன் வாயினிலே.."**

ஈழத்தின் இயற்கை அழகையும் சிறப்பையும் எடுத்துக்கூறி அதன்பால் ஈர்ப்பை ஏற்படுத்தும் வகையிலான பாடல்களும் போர்க்கால மெல்லிசைப்பாடல்களில் சிறப்புடையன. யாழ்ப்பாணம், மன்னார், திருகோண-மலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களின் தனித்துவ அடையாளங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. "தமிழீழத்தின் அழகு தனி அழகு" என்னும் பாடல் இவ்வகையில் முக்கிய கவனிப்புக்குரியதாகும்.

**"............**
**கடல் சூழ்ந்த யாழ்ப்பாணம்**
**படகுபோல் இருக்கும்**
**கரை மணலில் நண்டுகள்**
**ஏதேதோ கிறுக்கும்.**
**குடைபோலும் பனைமரம்**
**பார்ப்போரை மயக்கும்**
**கொள்ளை அழகு என்று**
**உலகமே வியக்கும்**
**கோணமலை மீதில்**
**அலை மோதிப் பாயும்**
**கூட்டமாய் எழில் மான்கள்**
**கடலோரம் மேயும்.**
**தேன் நிலாக் காலத்தில்**
**கடலில் பொன் பூக்கும்**
**தீந்தமிழ்ப் புலவன் கை**
**எழுதுகோல் தூக்கும்.**
**மட்டுநகர் மண்ணில்**
**மீன் கூடப் பாடும்**

**மணல் மேட்டில் கடல் காற்றில்**
**தென்னை கூத்தாடும்.**
**பட்டிப்பளை வயல்கள்**
**தங்கமாய்க்காய்க்கும்.**
**பரண்மீது உழவர் பெண்**
**தமிழ்ப்பாடல் கேட்கும்."**

புலம்பெயர்ந்தவர்களின் மனதில் எழும் தாய் நாட்டு உணர்வுகளின் எதிரொலி-களை யும் இத்தகைய பாடல்களில் காண-முடிகிறது.தேனிசைச் செல்லப்பா பாடிய "மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்ல, நாங்க மட்டும் உலகத்தில நாடு திரும்ப முடியல்ல.." எனவரும் பாடல் இலகுவான மெட்டில் மென்மையான குரலில் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

**"பெத்தவங்க ஊரில**
**ஏங்குறாங்க பாசத்தில**
**எத்தனை நாள் காத்திருப்போம்**
**அடுத்தவன் தேசத்தில**
**உண்ணவும் முடியுதில்லை**
**உறங்கவும் முடியுதில்லை**
**எண்ணவும் முடியுதில்லை**
**இன்னுந்தான் விடியுதில்லை**

**கிட்டிப் புள்ளு அடித்து நாங்கள்**
**விளையாடும் தெருவில**
**கட்டிவச்சுச் சுடுகிறானாம்**
**யார் மனசும் உருகல**
**ஊர்க்கடிதம் படிக்கையில**
**விம்மி நெஞ்சு வெடிக்குது**
**போர்ப்புலிகள் பக்கத்தில**
**போக மனம் துடிக்குது.."**

என்பதாக அப்பாடல் அமைந்துள்ளது. தேனிசை செல்லப்பா பாடிய அனேகமான பாடல்வரிகள் கவிஞர் காசி ஆனந்தனுடையவை. "காவலரண் மீது காவலிருக்கின்ற ஆசை மகளே.." எனத் தொடங்கும் "வெஞ்சமரின் வரிகள்" இறுவட்டுப் பாடலும் தாயக உணர்வினையே எடுத்துக் கூறினும் அதன் எடுத்துரைப்பு முறை சிறப்பாக உள்ளது. கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய இப்பாடலை தமிழீழ மகளிர் இசைக்குழுவின் இசையில் நிரோஜன் பாடியுள்ளார். ஒரு தாய் தனது பலவீனத்தையும் தன் மகளின் பலத்தையும் சொல்லிப்பாடும் பாடல் அது. பாடல்வரிகள் அனுபவச் செழுமை பெற்று நிற்கின்றமை வியப்பளிக்கின்றது.

**"சாகும் வயதான போதும் எனக்குள்ளே**
**சாகப் பயம் இன்னும் மகளே,**
**சாகப் பயம் இன்னும் மகளே– நீ**
**பாயும் புலியாகி காவலரண் மீது**
**காவலிருக்கின்றாய் மகளே,**
**காவலிருக்கின்றாய் மகளே!**

**நெஞ்சின் ஓரத்தில் நெருப்பு– உன்**
**நிமிர்ந்த வாழ்வெண்ணிச் செருக்கு**
**பிஞ்சில் மண் காக்கும் பொறுப்பு**
**உனைப் பார்க்க வர இன்று விருப்பு!**

**உன்னை மகளாகப் பெற்ற மகிழ்வோடு**
**உயிரை விட வேண்டும் மகளே,**
**உயிரை விட வேண்டும் மகளே– என்**
**பெண்ணும் நிமிர்ந்தின்று போரில் விளையாடும்**
**பெருமையது போதும் மகளே,**
**பெருமையது போதும் மகளே!**

**நிலவு தலை வாரும் சாமம்– உன்**
**நினைவில் உறவாடும் நேசம்**
**அழகு பூச்சூடும் அழகே– பகை**
**அடித்து விளையாடு மகளே!"**

மேற்படி பாடலைப்பாடிய கவிஞர் போராட்ட இயக்கத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் என்பதும் கலைப்பண்பாட்டுக் கழகத்தில் பெரும் பங்காற்றியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பின்வருமாறு அவர் குறிப்பிட்ட கூற்று இதனை நிருபண மாக்குகின்றது.

"எமது மக்களுடைய நுகத்தடிகளை உடைத்தெறிவதில் நானும் போராட வேண்டும் என்று நினைத்தேனே தவிர, தொடர்ந்தும் கவிதை எழுதிக் கொண்டிருப்பேன் என்ற நினைப்பில் நான் வரவில்லை. ஆனால், அமைப் புக்கு வருவதற்கு முன்பே எனது துறை கலை யாக இருந்தபடியால், அமைப்புக்குள் நுழைந்த பின்பும் இயக்கத்தில் கலைப் பண்பாட்டுத்

துறையை கவனிக்க வேண்டியதே எனக்கிடப்பட்ட பணி ஆகியது. இந்தப் பணியை நான் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்”

புதுவை இரத்தினதுரையின் மற்றொரு பாடலான “இந்த மண் எங்களின் சொந்த மண்..” என்னும் பாடலும் தாயக உணர்வை... அதன் மீதான பற்றுதலை ஏற்படுத்தத்தக்க சிறந்த பாடலாகும். இப்பாடல் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் ஓரிடத்தில்

**“இந்த மண் எங்களின் சொந்த மண் இதன்**
**எல்லைகள் மீறி யார் வந்தவன்.**
**நிலைகள் தளர்ந்து தலைகள் குனிந்து**
**நின்றது போதும் தமிழா – உந்தன்**
**கலைகள் அழிந்து கவலை மிகுந்து**
**கண்டது போதும் தமிழா இன்னும்**
**உயிரை நினைத்து உடலை சுமந்து**
**ஓடவா போகிறாய் தமிழா...**

என நெருப்பாக தொடங்கி நீளும் ஒரு பாடலை புதுவை இரத்தினதுரை எழுதியுள்ளார். அந்த பாடல் வரிகள் எத்தகைய தாக்கத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது என்பதற்கு ஒரு உதாரணத்தை சொல்கிறேன் - ஈழத்திலுள்ள திருநல்வேலி சந்தியில் 1993இல் ஒரு நாள் அதிகாலை 4 மணியளவில் ஒருவர் தேநீர் குடித்துவிட்டு, சுருட்டு பற்ற வைத்துக்கொண்டு குளிருக்காக தலையையும் காதையும் மறைத்து தான் போட்டிருந்த போர்வையுடன் மிதிவண்டியில் ஏறிய நேரத்தில் இந்தப் பாடலும், ‘வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்’ பாடலும் ஒலிபரப்பாக மிதிவண்டியில் அப்படியே நின்றபடி கேட்டுவிட்டு சென்றார். புதுவை இரத்தினதுரையின் புரட்சிக் கருத்துக்களையும் நெகிழ்ச்சியான அனுபவங்களையும் பாடலில் கேட்டு, உறைந்துபோன அந்த ஈழத் தமிழனின் செயலை கண்டு மனம் நெகிழ்ந்தேன்”

என்று எழுதியுள்ளார்.

கலை - கலாசார - மொழி அடையாளங்களை மையப்படுத்தியும் போர்க்காலங்களில் மெல்லிசைப்பாடல்கள் தயாரிக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் வெளிவந்த பாடல்களுள் பின்வருவதொன்று,

**“தமிழா நீயும் பேசுவது தமிழா**
**அன்னையைத்தமிழ்வாயால்‘மம்மி’ என்றழைத்தாய்..**
**அழகுக் குழந்தையை ‘பேபி” என்றழைத்தாய்...**
**என்னடா, தந்தையை ‘டாடி” என்றழைத்தாய்...**
**இன்னுயிர்த் தமிழைகொன்று தொலைத்தாய்...**
**தமிழா! நீ பேசுவது தமிழா?**
**உறவை ‘லவ்” என்றாய், உதவாத சேர்க்கை...**
**‘ஒய்ப்’ என்றாய்மனைவியை, பார்உன்றன்போக்கை...**
**இரவை ‘நைட்” என்றாய், விடியாதுன்வாழ்க்கை**
**இனிமை ‘ஸ்வீட்” என்றாய், அறுத்தெறி நாக்கை...**
**தமிழா! நீ பேசுவது தமிழா?**
**வண்டிக்காரன் கேட்டான், ‘லெப்ட்டா?” ‘ரைட்டா?”**
**வழக்கறிஞன் கேட்டான், என்ன தம்பி ‘பைட்டா?”**
**துண்டுக்காரன் கேட்டான், கூட்டம் ‘லேட்டா?”**
**தொலையாதா தமிழ், இப்படிக் கேட்டா?**
**தமிழா! நீ பேசுவது தமிழா?**
**கொண்ட நண்பனை ‘பிரண்டு” என்பதா?**
**கோலத் தமிழ் மொழியை, ஆங்கிலம் தின்பதா?**
**கண்டவனை எல்லாம், ‘சார்” என்று சொல்வதா?**
**கண்முன் உன் தாய்மொழி, சாவது நல்லதா?**
**................**
**வெள்ளைக்காரந்தான் உனக்கு அப்பனா?”**

பொதுவாக தொகுத்து நோக்குகின்றபோது, போர்க்கால மெல்லிசைப் பாடல்கள் உணர்ச்சிப்பிரவாகத்தை ஏற்படுத்தும் வகையில் வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு மெட்டுக்களில் - சுருங்கச் சொல்வதாயின் இவை போர்க்காலப்பாடல்கள் என்று சொல்லக்கூடிய இசைப் பாணியில் வெவ்வேறு பாடகர்களால் பாடப்பட்டவையாக உள்ளமையை அவதானிக்கலாம். பெரும்பாலான பாடல்களை எழுதியவர்கள் போராட்ட அமைப்புச் சார்ந்தவர்களென்பதனால் அவை அனுபவச் செழுமை மிக்கவையாக உள்ளன. கேட்போர் மனதில் எளிதில் பதிந்துவிடக்கூடியனவாகவும் எதுகை - மோனை, உவமை உருவக அணிகளால் அழகுபெற்றனவாகவும் காணப்படுகின்றன. இத்தகைய பாடல்கள் விரிவாக ஆராயக்கூடியவை என்பதும் இலக்கியப்பிரதியாக (Text) பதிவுசெய்யப்பட வேண்டியவை என்பதும் முக்கியமானதாகும்.

○ ○ ○

# இலங்கை முஸ்லிம்களின் போர்க்காலக் கவிதைகள்

# 'மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்'

## எனும் கவிதைத் தொகுதி மீதான பார்வை



**ஏ.எல்.மனாரா**
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
பேராதனைப் பல்கலைககழகம்.

இலங்கையின் இனப்போராட்டம் என்பது மிகவும் நீண்டகால வரலாற்றுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டது. சிறுபான்மை என்ற ஒரே காரணத்திற்காக உரிமைகள் தர மறுக்கப்படுவதும், சமூகக் கண்ணோட்டத்தில் தமக்குரிய அந்தஸ்த்தைப் பெற்றுக்கொள்வதிலும் இனரீதியாகவும் மொழிரீதியாகவும் தமிழர்களும் முஸ்லிம்களும் நீண்டகாலமாகவே பல்வேறு விதமான அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றனர். இலங்கையில் ஆயுதரீதியிலான இனப்போராட்டம் வலுப் பெற்றமைக்கு உரிமை மீறல்களே அடிப்படையாக இருந்தன. இலங்கையின் இனப்போராட்டம் என்பது சிங்களம் மற்றும் தமிழ் மக்களுக்கிடையிலான போராட்டம் என உலகளாவிய ரீதியில் அறியப்பட்டிருந்தாலும் கடந்த மூன்று தசாப்த காலப் போர் நடவடிக்கைகளினால் இலங்கை முஸ்லிம்களும் மிகவும் மோசமான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இவை மக்களின் மனதில் மிகவும் ஆழமாக வேறூன்றியுள்ளன. குறிப்பாக 1980ஆம் ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்திலிருந்து தமிழ் விடுதலை இயக்கங்களினாலும் சிங்களப் பேரினவாத சக்திகளாலும் முஸ்லிம்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டது. இவர்கள் தாம் எதிர்நோக்கிய அவலங்களையும் உரிமை மறுப்புகளையும் யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் சாதனமாக இலக்கியங்களைப் பயன்படுத்தினர்.

இலக்கியம் என்பது ஒருகாலகட்டத்தின் பதிவாகக் காணப்படும் என்பதற்கிணங்க 2002ஆம் ஆண்டில் இஸ்லாமிய மாநாட்டின் செயற் குழுவினால், மாநாட்டின் ஒரு வெளியீடாக "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்" எனும் தொகுதி வெளியிடப்பட்டது. இத்தொகுதியில் ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடிகளுள் ஒருவர் என அழைக்கப்படும் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தொடக்கம் கடத்திச் சென்று கொல்லப்பட்ட தனது தந்தையின் நினை வாக முதற்கவிதை எழுதத்தொடங்கிய எச்.எம்.ஜாபிர் வரையிலான ஐம்பது கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம்கள் எதிர்நோக்கிய போர் அவலங்களை சகோதரர்களான தமிழர்கள் எழுதவில்லையே என்ற குறையையும் நீக்கும்படி வ.ஐ.ச.ஜெயபாலன்,

சு.வில்வரத்தினம், சேரன் முதலியோ ரது கவிதைகளும் இடம்பெற்றிருப்பமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். பெரும்பான்மையான கவிதைகள் கவி ஞர்களின் சொந்த அனுபவங்களையும் தாம் எதிர் நோக்கிய அவல வாழ்வினையும் வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன.

பொதுவாக இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தையும் நோக்கும் போது அவற்றின் கருப்பொருளை அடிப் படையாகக் கொண்டு பின்வருமாறு அவதானிக்கலாம்.

- போரும் போரைப் பின்னணியாகக் கொண்ட வாழ்க்கையும்.
- வரலாற்றில் கறை படிந்த நிகழ்வுகள்.
- வடபுல முஸ்லிம்களின் பலவந்த வெளி யேற்றமும் அகதி வாழ்க்கையும்.
- முஸ்லிம்களின் எழுச்சியை வலி யுறுத்தும் கவிதைகள்.
- போரும் போரைப் பின்னணியாகக் கொண்ட வாழ்க்கையும்.

முஸ்லிம்கள் இனமுரண்பாட்டு சூழ் நிலையில் எவ்வாறான இடர்பாடுகளுடன் ஒன்றித்து தமது வாழ்க்கையை நடாத்தினர் என்பதை விபரிக்கும் வகையில் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன. போர் தொடர்பான அனுபவத்தைப் பெறாத எந்தவொரு நபரும் விளங்கக் கூடியவ-கையில் கவிஞர்கள் தாம் அனுபவித்த போரையும் அதனைப் பின்னணியாகக் கொண்ட வாழ்க்கையயும் தெளிவுபடுத்தக் கூடிய வகையில் யதார்த்தபூர்வமாக இக்கவிதைகளை யார்த்துள்ளனர்.

மக்கள் இக்காலகட்டத்தில் எதிர் நோக்கிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை யாதெனில் முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமை ஆகும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கெதிராகக் குரல் கொடுத்த அரசியல்வாதிகள், அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பள்ளிவாயில் நிர்வாக சபைத்தலைவர்கள் ஆகியோர் கொடூரமான சக்திகளின் செயற் பாட்டுகளினால் மிகவும் பரிதாபமான சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்கானார்கள். இத்தொகுதியில் உள்ள “மரத்துக்கென்னநிழல்”, “என்னைத் தீயில் எறிந்தவள்”, “ஹபீப்”, “மரணம் அழுகிறது”, “நீ வரும் காலைப்பொழுது”, “கடலிடம் போதல்”, “மலங்கழிக்கும் பேய்க்காற்று”, “ வெறும் மண்ணும் சும்மாவீசும் காற்றும்”, “டிசம்பர் 26”, “என் தம்பியின் சதைத் துண்டங்களும் கோழிக்கறியும்”, “என் சுவாசத்தைத் திரு-டிய நண்பனுக்கு”, “அவர்கள் என்னை விதவையாக்கினார்கள்”, “ அந்த ஒருவனுக் காக”, “தொலைதல்”, “செங்கோல், - சிவப்பு - கோல்”, “விரிசலின் விசாலம்”, “அவர்கள் வரும் நாட்கள்”, “சிகப்பு இரவு”, “இனியொரு விதி செய்தே”, “வாப்பாவுக்கோர் அஞ்சல்” முதலிய கவிதைகள் இத் தன்மையினை பிரக்ஞை பூர்வமாக வெளிப் படுத்துகின்றன.

முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்ட செய்தியை சோலைக்கிளி தனது “மலங்கழிக்கும் பேய்க்காற்று” எனும் கவி தையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்

**“ஐயோ!**
**வாகனத்தை மறித்தனர்**
**இறக்கினர்**
**இழுத்தனர்**
**இனம் இனமாகப் பிரித்தனர்**
**ஓர் இனம் போக ஓர் இனத்தை வெட்டினர்**
**குத்தினர், சுட்டனர்**
**பிள்ளைத்தாய்ச்சியை வெட்டிச் சிசுவை**
**எடுத்துத் தெருவில் நசித்தனர்**
**என்றெல்லாம் இன்றைய காற்று**
**என் மனதுக்குள் கழித்த மலத்தில்**
**மனிதத்தின் நாற்றம் தாங்காமல்**
**சூரியன் ஒரு தரம் ஆடி நின்றது.”**

“மரங்களுக்கென்ன நிழல்” என்ற கவி தையில் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்கள்

முஸ்லிம்கள் எவ்வாறெல்லாம் கொலை செய்யப்பட்டிருந்தனர் என்பதை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

**"வீரைக் கொள்ளிகளும் பழைய**
**டயர்களும் சேர்ந்த**
**நெருப்புச் சூளையில்**
**உன்னையவர்கள் எரித்திருக்கலாம்.."**

வாழைச்சேனை அமர் மக்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதை தனது "மரணம் அழுகிறது" என்ற கவிதையில்,

**"என்னை புடைசூழ அவர்கள்**
**இழுத்துச் சென்றனர்**
**நான் அழுவேன் என்பதனால்**
**அவர்கள் என்னை அடித்து நொறுக்கினர்**
**நான் துடிப்பேன் என்பதனால்**
**துயரம் நிறைந்த**
**என் தோளின் மீது**
**மாலையைப் போட்டனர்**
**அன்றிரவு விழித்துப் பார்த்தேன்**
**என் தலைமுடியில்**
**நான் தொங்கவிடப்பட்டேன்...."**

என்றவாறு தம் சமூகத்திற்கு ஏற்பட்ட அவலத்தை உணர்வுபூர்வமான நிலையில் கூறுகிறார்.

அத்துடன் ஏழை விவசாயிகள் கொலை செய்யப்பட்டமை, சாதாரண மக்கள் கொலை செய்யப்பட்டு பாதைகளில் எறியப் பட்டமை, கொலை செய்யப்பட்ட மனித சடலங்கள் கடலிலிருந்து மீட்கப் பட்டமை போன்ற இன்னோரன்ன விடயங்களையும் இக்கவிதைகள் தெளிவு படுத்துகின்றன.

இப்போர்ப் பின்னணியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை சௌகரிய மான நிலையில் காணப்படவில்லை. தினந்தோறும் தனது உயிர் மற்றும் உடைமைகளுக்கு என்ன ஏற்படுமோ என்று ஏங்கித்தவிப்பவர்களாகவும் ஒவ்வோர் இரவுப் பொழுதுகளையும் ஒவ்வொரு யுகங்களாகக் கழித்தார்கள். வாழ்வுக்கும் இறப்புக்கும் மத்தியில் போராடுபவர்களாக இருந்துள்ளார்கள். இத்தொகுதியில் உள்ள ஏராளமான கவிதைகள் இதனையே வெளிப் படுத்தி நிற்கின்றன.

திடீரென்று மக்கள் காணா-மல் போதல், மக்கள் கடத்தப்படல், சொத்துக்கள் சூறையாடப்படல், பெண்கள் கற்பழிக்கப்படல், துவேச வார்த்தைகளி னால் மக்கள் வஞ்சிக்கப்படல், பொது இடங்களில் வைக்கப்படும் குண்டுகளுக்கு மக்கள் இலக்காதல், மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படல், சிறுபான்மை என ஒதுக்கப்படுதல், விடுதலை இயக்கங்கள் தங்களது போராட்டத்திற்கான பணத்தை முஸ்லிம்களை மிரட்டிப் பெற்றுக் கொண்டமை போன்றவற்றையும் வெளிப் படுத்துபவையாக இக்கவிதைகள் அமைந் துள்ளன.

அனார் தனது "வஞ்சனை" எனும் கவிதையில் முஸ்லிம்களின் வாழ்க்கைப் பின்னணியைக் குறிப்பிடும் போது,

**"எம்மிடமிருந்த**
**எல்லாமே உமக்கு**
**இடைஞ்சலாய் தோன்றிற்று**
**எம் உயிரும் உணர்ச்சியும்**
**உரிமையுங் கூட**
**விதவைகளையும் வேர்களையும்**
**பூவையும் பிஞ்சையும்**
**அவ்வப்போது அழித்துப் புசிப்பதே**
**உமது சேவையாயிற்று"**

எனக் குறிப்பிடுகிறார். 1985 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரத்தின்போது பாதிக்கபட்ட முஸ்லிம் சகோதரிகளின் நினைவாகவே அஷ்ரஃப் சிஹாப்தீனால் எழுதப்பட்ட ஸைத்தூன் எனும் கவிதை யானது போர்க்காலத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களையும் உண்மை நிகழ்வுகளையும் நெஞ்சுருகச் சொல்லுமாறு அமைந்துள்ளது.

கின்னியா கப்றுல்லாஹ் "உயிர்த்தல் பிழையெனில்" எனும் கவிதையில் பேரின வாத சக்திகளுக்கு மத்தியில் சிறுபான்மை

உரிமைகள் மறுக்கப்பட்டமையை வெளிப்படுத்துகிறார். பின்வரும் கவிவரிகள் மிகவும் சிறப்பாக இதனைவெளிப்படுத்துகின்றன.

**"மண்ணின் மேனியில் பிறப்பெய்வதென்பது**
**சிறுபான்மை உயிர்த்தலுக்கு**
**மறுக்கப்பட்ட உரிமையெனில்**
**எந்தக் கருவறை**
**எம்மை ஏற்று அங்கீகரித்தது"**

**வரலாற்றில் கறை படிந்த நிகழ்வுகள்**

போர்க்காலப் பின்னணியில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய வரலாற்றில் கறைபடிந்த கொடூரமான நிகழ்வுகளையும் இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. "குரும்பட்டி" எனும் கவிதையானது பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான அழிஞ்சிப்பொத்தானை, அஹமட்புறம், பள்ளியகொட ஆகியவற்றில் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான முஸ்லிம்களின் படுகொலையை ஞாபகப்படுத்தும் விதமாக எழுதப்பட்டுள்ளது.

"அன்பின் கண்ணம்மாவுக்கு" எனும் கவிதையில் கல்குடா ரயில் மறிப்பு சம்பவம் எடுத்துக் கூறப்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம்கள் தமிழரால் கொலை செய்யப்பட்டமை அதேவேளை தமிழ்ப் பெண் ஒருத்தி முஸ்லிம்களைக் காப்பாற்றிய செய்தியும் எடுத்துக் கூறப்படுகின்றது. "அமைதி காத்த 01.12.87" எனும் கவிதையானது இந்திய அமைதிப் படையின் கண்மூடித்தனமான செல் தாக்குதல் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுகின்றன. "கடல் கக்கிய லெமூரியா" எனும் கவிதையானது இந்திய அமைதி காக்கும் படையினால் இலங்கை முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட விடயம் குறிப்பிடப்படுகின்றது.

"அவர்கள் என்னை விதவையாக்கினார்கள்" எனும் கவிதையானது 1980களில் ஒலுவில் பிரதேசத்தில் விவசாயிகள் இரவுப் பொழுதில் இனம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்ட செய்தியை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. பண்ணாமத்துக் கவிராயர் தனது "அனகொண்டாவும் சிகரட் துண்டும்" எனும் கவிதையில் பேரினவாத சக்திகளினால் மாவனல்லைப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை, உண்மைச் சம்பவங்களை மிகவும் யதார்த்தபூர்வமான நிலையில் எடுத்துரைக்கிறார். அதாவது இனவாதம் வேரூன்றியதால் முஸ்லிம்களின் உயிர், சொத்துக்கள், பொருளாதாரம் பொசுக்கித் தள்ளப்படுதல், அதிகார வர்க்கத்தினரால் இவை மறைக்கப்பட்டு சட்டத்திற்கு விலங்கிடப்பட்ட செய்தியையும் எடுத்துரைக்கிறார்.

"நீ வரும் காலைப் பொழுது" "காத்தான்குடி" "சிகப்பு இரவு" முதலிய கவிதைகள் முஸ்லிம் சமூகத்தின் துயர் மிகுந்த சம்பவமான காத்தான்குடிப் படுகொலை தொடர்பாகக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது பள்ளி வாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள் மனிதாபிமானமற்றோரால் கொலை செய்யப்பட்ட அகோர சம்பவம் எடுத்துரைக்கப்படுகின்றது. வாழைச்சேனை அமர்,

**"நீ வந்துபோன இடமெல்லாம்**
**இரத்தம் நிறைந்ததாகவும்**
**தொப்பிகள் விழுந்ததாகவும்**
**மௌனம் கலையாத காலை கதைத்த போது....**
**நாங்கள்**
**வெடித்து.... அழுதோம்."**

எனக் குறிப்பிடுகிறார்.

சேரன் தனது "காத்தான்குடி" எனும் கவிதையில்,

**"தமிழன் என்னும்**
**என் அடையாளக் கூறின் மேல்**
**வெட்கம்**
**இருள் விரவிப் படிகிறது**

**என்னைக் கொல்லாதே;**
**என்று ஈரக் கண்களுடன் இரந்த**
**ஆழத்தின் மனச்சாட்சியையும்**
**கொன்றார்கள்"**

*எனப் பாடுகிறார்.*

*"சருகுகள் - சமாதிகள்" எனும் கவிதையானது 1997.10.11ஆம் திகதி பதூர் எனும் முஸ்லிம் கிராமத்தில் இனம் தெரியாத நபர்களால் முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு மூன்று நாட்களாக சருகுகள் மூடப்பட்டுக் கிடந்த நிகழ்வின் நினைவாக எழுதப்பட்டது. வடபுல வாழ் முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டுகளில் விடுதலை இயக்கங்களால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை முதலியவற்றை எடுத்துக் கூறும் வகையிலும் பல கவிதைகள் இடம்பெற்றுள்ளதுடன் மற்றும் மறக்க முடியாத வரலாற்று நிகழ்வுகளையே பெரும்பாலான கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.*

**பலவந்த வெளியேற்றமும் அகதி வாழ்வும்**

*இலங்கையின் போர்க்காலப் பின்னணியில் 1990 ஆம் ஆண்டுகளில் வடபுல வாழ் முஸ்லிம்கள் விடுதலை இயக்கங்களினால் குறிப்பிட்ட காலப் பகுதியில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இவர்கள் எவ்வாறு வெளியேற்றப்பட்டனர், இதன் போது தாம் எதிர்நோக்கிய உரிமை மீறல்கள், கொடுமைகள், பிரச்சினைகள் மற்றும் தாம் எதிர்கொண்ட அகதி வாழ்க்கையினையும் புலப்படுத்தும் வகையில் இத்தொகுப்பில் பெரும்பாலான கவிதைகள் இடம்பெற்றுள்ளன.*

*ஜின்னாஹ்வின் "யாரிட்ட தீ" எனும் கவிதையானது இப்பலவந்த வெளியேற்றம் மற்றும் முஸ்லிம்-தமிழ் உறவுக்குள் ஏற்பட்ட பிளவை எடுத்துக் கூறுகின்றன.*

**"துரத்தப்பட்டோர் துயர்தனை எண்ணி**
**துரத்தியோர் தம்மின் தாயும் தந்தையும்**
**கண்ணீர் வடித்தால்**
**காவோலை வருமென**
**நெஞ்சுள் வெடித்துச் செந்நீர் வடித்துத்**
**தவித்தே நின்றனர்"**

*எனக் குறிப்பிடுகிறார்.*

*மேலும் "இன்னும் எழுதாத அந்தக் கவிதை", "ஈறல்", "தணியுமா இந்தத் தாகம்", "இழப்புகள்", "மீதம்", "குடை", "காவுகொள்ளப்பட்ட வாழ்வு", "என் வண்டில் மாடு", "எங்கே எனது பள்ளிவாசல்", "இது கவிதையல்ல" முதலிய கவிதைகளை அவதானிப்போமாயின் தனது உரிமை மற்றும் உடமைகளை இழந்து முஸ்லிம்கள் பரிதாபமான முறையில் வெளியேற்றப்பட்டமை, அகதி வாழ்வு, தான் எதிர்நோக்கிய சமுக,பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் மற்றும் சொந்த மண்ணின் மீது தாம் கொண்ட ஏக்கம் முதலியவற்றைப் புலப்படுத்துகின்றன. எஸ். நளிமின் "ஈறல்" எனும் கவிதை சொந்த மண்ணின் மீது கொண்ட ஏக்கத்தை,*

**"என் தாய் தந்தையர்**
**அடங்கியிருக்கும்**
**புனித மண்ணில்**
**நானும் மரணிக்க வேணும்**

**இனப்பிரச்சினை காரணமாக பேரினவாத சக்திகளின் செயற்பாட்டினால் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக தமது சொத்து, உயிர், உறவு, உடைமை என்பவற்றுக்கான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். ஆகவே இதற்கு எதிராகப் போராட வேண்டும், முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலும் ஏராளமான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.**

**ஆவலோடு கேட்கிறேன்**

**என் மண்ணின்**

**குழந்தைகளே**

**என் மண்ணைத் தாருங்கள்"**

என்றவாறு தன் மனதிலுள்ள எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகிறார்.

கலைவாதி கலீலின் "தணியுமா இந்தத் தாகம்" எனும் கவிதை முற்று முழுதாக மக்கள் கடும் அவலங்களுக்கு மத்தியில் வெளியேறி அகதிகளாக மாறியமையை எடுத்துரைக்கிறார்.

**"துயில்நீங்கி எழுந்திட்ட போது –கொடுந்**

**துப்பாக்கிக் குழலூடேதொடர்ந்தே சேதி**

**வடபுலத்திருக்கின்றமுஸ்லிம் –**

**ஒன்றும் வாரிச் சுருட்டாமல் ஓடிவிடவேண்டும்**

**கட்டளை கேட்ட ஒரு கணத்தில்– கதி**

**கலங்கியே உடலும் தடதடத்தாட**

**பொட்டலம் ஒன்றினைத் தூக்கி...."**

என்று தொடர்ந்து செல்வதை அவதானிக் கலாம்.

முல்லை முஸ்ரிபா "குடை" எனும் கவி தையில் தாம் வெளியேற்றப்பட்டமையும் அகதிவாழ்வையும்,

**"குடையின் குளிர்மை நிழலில்**

**குழுமிக் குடும்பமாய் வாழ்ந்திட்டோம்**

**மகிழ்வெய்தி**

**நீயதை அபகரித்தாய்**

**நாமதன் கீழிருந்து வெளியேறினோம்**

**இன்று பெய்யும்**

**பேய் மழையின் நனைதலில்**

**மன மண் சுவர் கரைந்தொழுக**

**எப்போ**

**இடிந்து விழுமென்**

**இருப்பைக் காத்திடல்**

**இனி எவர் வசமோ....."**

எனக் குறிப்பிடுகிறார்.

"காவு கொள்ளப்பட்ட வாழ்வு" எனும் கவிதையில் முஸ்லிம்கள் வெளி யேற்றப்படல், புத்தளத்தில் அவர்கள் அகதிகளாகக் குடியேறியமை, தம்முடைய பழைய வாழ்க்கையை நினைவூட்டுதல், கஷ்டப்பட்டு உழைத்தல், கூலி வேலை செய்தல், வாழ்தல், வளர்தல், சந்ததி பெருகியமை போன்ற விடயங்கள் அகதி வாழ்க்கையின் யதார்த்தபூர்வமான நிலையை எடுத்துரைக்கின்றன.

பொதுவாக இக்கவிதைகளை அவதானிப்போமாயின் மக்கள் மத்தியில் தாம் மீண்டும் தமது சொந்த ஊரிற்குச் செல்லுதல் வேண்டும் என்ற உணர்வு ஓங்கி இருப்பதையும் அவ்வாறு செல்லும் போது அங்கு வாழும் இளம் சந்ததியினர் தம்மை ஏற்றுக் கொள்வார்களா என்ற ஐயப்பாடு நிலவு வதையும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இக்காலகட்டத்தில் முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திற்குத்தடையாக அமையும் ஒரு காரணமாக இத்தகைய ஐயப்பாடும் அமைந்துள்ளமை ஆய்வுகள் தெளிவுபடுத்துவது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகக் காணப்படுகின்றது.

### முஸ்லிம்களின் எழுச்சியை வலியுறுத்தும் கவிதைகள்

இனப்பிரச்சினை காரணமாக பேரின வாத சக்திகளின் செயற்பாட்டினால் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக தமது சொத்து, உயிர், உறவு, உடைமை என்பவற்றுக்கான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிக் கொண் டிருந்தனர். ஆகவே இதற்கு எதிராகப் போராட வேண்டும், முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலும் ஏராளமான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. கவிஞர்கள் தமது சம-கால சமூக நிகழ்வுகளைக் கருத்திற்கொண்டு இவ்வாறான கவிதைகளை எழுதியுள்ளனர். அவற்றுள் குறிப்பாக இஸ்லாமிய வர லாற்றில் இடம்பெற்ற போர்கள் மற்றும் முஹம்மது நபி (ஸல்) அவர்களினதும் அவர்களது தோழர்கள் என்று அழைக் கப்படும் சஹாபாக்களினதும் வீரதீரச் செயல்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இச்செயல்களின் மூலம் முஸ்லிம்களின்

வீர உணர்வை எடுத்துக் கூறி அவர்கள் எழுச்சி பெற வேண்டும் என்ற தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

என்.ஏ.தீரன் என்பவரால் எழுதப்பட்ட "காணாமற் போன சஹாபாக்கள்" எனும் கவிதையில் இஸ்லாமிய வரலாற்றில் நபி (ஸல்) அவர்களின் தோழர்களான வீரம் பொருந்திய ஸஹாபாக்களினால் வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட போர்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆனால் இக்காலகட்டத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் இவ்வாறு போராடுவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு வெறுமனே பதவி மோகம் உள்ளவராக உள்ளனர். இந்நிலைமை மாறி எழுச்சி பெற வேண்டும் என்பதை இக்கவிதை சுட்டிக் காட்டுகின்றது. மேலும் இவரால் எழுதப்பட்ட "அபாபீல்களும் யானைப்படைகளும்" எனும் கவிதையில் முஸ்லிம்கள் எழுச்சி பெற்று தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க வருவார்கள் என்ற தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதை,

**"எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்**
**பொறுங்கள்**
**தங்கள் 'அபாபீல்கள்' இப்போதுதான்**
**தம் சொண்டுகளைக் கூராக்கவும்**
**இறக்கைகளை வலிமைப்படுத்தவும்**
**கிழக்கு நோக்கிப் பறக்கின்றன......**
**விரைவில் நெருப்புக் கற்களைக் காவிக்கொண்டு**
**அவை திரும்பி வரக் கூடும்... அப்போது**
**மெல்லப்பட்ட வைக்கோல்களாக நீங்கள்....?"**

எனும் கவிவரிகள் வெளிப்படுத்துகின்றன.

என், ஆத்மா என்பவரால் எழுதப்பட்ட "யா அலீய்" எனும் கவிதையும் முஸ்லிம்கள் தமது உரிமைக் குரலை எழுப்ப வேண்டும் என்பதையே சுட்டுகின்றது. இக்கவிதையில் கவிஞர் தனது இறந்துபோன பெரியப்பா கனவில் வந்ததாகவும், அவரிடம் யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் தாம் அனுபவித்த தமது வாழ்வின் மகிழ்ச்சியான பொழுதுகள் மற்றும் தாம் தமக்கிருந்த உரிமைகள் என்பவற்றை எடுத்துக் கூறி ஆனால் இன்று அவை தம்மிடமில்லை. சுரண்டப்பட்டுவிட்டன என்பதை யதார்த்த பூர்வமாக,

**"ஒருகாலம் மூத்தவாப்பா அதெல்லாம்**
**இப்போதோ ஆறுகள் எங்களிடமில்லை**
**இறால்களுந்தானில்லை**
**களங்களும் அவற்றுக்கப்புறமிருந்த நிலங்களும்**
**எதுவும் எதுவும் எங்களிடமில்லை**
**போக**
**நாங்களும் நாங்களாக இல்லை....."**

என்றவாறு வெளிப்படுத்துவதோடு தமது வரலாற்று வீரர்களின் புகழை எடுத்துக் கூறுவதற்காக வரும்படி பெரியப்பாவை கவிஞர் அழைப்பது முஸ்லிம்கள் வீரத்துடன் தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

எஸ்.நளீமின் "மூன்றாமவனின் புலம்பல்" எனும் கவிதையானது முஸ்லிம்கள் தனிநாடு கேட்கவில்லை. ஆனால் அவர்கள் ஏன் இறக்கிறார்கள்? ஏன் இழக்கிறார்கள்? என கேள்வி கேட்பதாய் அமைந்துள்ளது.இவரது "கேள்வி" எனும் கவிதையானது யுத்த சூழ்நிலையில் முஸ்லிம்கள் தப்பிக்க அவர்களிடம் என்ன இருக்கின்றது என அவர்களை நோக்கி கேள்வி கேட்பதாய் அமைந்துள்ளது. இதனை,

**"புலியிடம் துப்பாக்கியிருக்கு**
**சிங்கத்திடம் கத்தியிருக்கு**
**இவற்றிட மிருந்து தப்பிக்க**
**நம்மிடம் என்ன வாப்பா இருக்கு"**

எனும் கவி வரிகள் புலப்படுத்துகின்றன.

இப்னு ஹஸனின் "இயலாமையில்" எனும் கவிதையும் இரண்டு இனங்களுக்கு மத்தியில் முஸ்லிம்கள் நசுக்கப்படுவதையும் என்றாவது ஒரு நாள் அவர்கள் எழுவார்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றன.

**"யானையும் யானையும்**

**அடித்துக் கொண்டால்**

**தகரைப் பற்றை**

**ஏன் தண்டிக்கப்படுகின்றது"**

உஸ்மான் மரிக்காரினால் எழுதப் பட்டுள்ள "ஆடுகள் நனைகின்றன" எனும் கவிதையில் பிற இனம், பிற நாடு என்பவற் றில் என்றும் முஸ்லிம்கள் தங்கியிருக்கக் கூடாது. அநியாயத்துக்கெதிராகப் போராட வேண்டும் என்ற தொனி-யோடு முஸ்லிம்களை விழித்தெழுமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது.

**"இரவல் இறக்கை கொண்டு**

**விண்ணின் விளிம்பில் சிறகடிப்பதை விட**

**உன் சொந்தக் கால்களால்**

**மண்ணின் மடியில் நடப்பதே நல்லது"**

பாலைநகர் ஏ.எச்.எம். ஜிப்ரி என்பவரால் எழுதப்பட்ட "கல்லறை வாழ்வு" எனும் கவிதையானது ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டும்என்பதையே குறிப் பிடுகின்றது.

**"துப்பாக்கிகளின் உறுத்தலுக்கும்**

**காக்கிச் சட்டையின் காரணமற்ற**

**துலக்குதலுக்குக் காரணமாகிப்போன**

**இழிதுயர் வாழ்க்கை இனியும் வேண்டாம்**

**இனித்துளிர்க்கும் வாழ்க்கை**

**இனிமை நிகர்த்ததாக இருக்கட்டும்**

**எனின்**

**நீ வா அன்பா**

**ஒடுக்குதலை**

**ஒடுக்கும் குரலாக ஒலிக்க**

**நீ வா"**

நியால் ஏ.ஸமதின் "அறைகூவல்" எனும் கவிதையானது இளைஞர்கள் தமது இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க உணர்ச்சிகொண்டு எழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

**"வேட்கையுள்ள இளைஞர்காள்**

**வீரங்கொண்டு**

**வெற்றிக்காய் கோஷங்கள் எழுப்புவோமே**

**வீட்டுக்கொரு**

**வீரனென**

**முன்னே சென்று**

**விடுதலைக்குத் தோளிணையத் திரளுவோமே"**

ஓட்டமாவடி இஸ்மாயிலின் "இன்னும் நாங்கள்"எனும்கவிதையானதுயுத்தத்தினால் இதுவரையும் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய அவலங்களை எடுத்துக் கூறும் அதே வேளை இன்னும் நாங்கள் வீணர்களாகவும், இறங்கிப் போவர்களாகவும் இனத்தின் உயர்ச்சியையும் நம்பிக்கையையுமே பறி கொடுப்பவர்களாகவுமே தொடர்ச்சியாக இருக்க வேண்டுமா? எனக் கேள்வி கேட்பதாய் அமைந்துள்ளது. பொதுவாக இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் முஸ்லிம்கள் மத்தியில் அடக்குமுறைக்கெதிரான எழுச்சியை வலி யுறுத்தும் வகையிலேயே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

எனவே பொதுவாக இக்கவி தைத் தொகுப்பினை எடுத்து அவதா னிப்போமாயின் ஒட்டுமொத்தமாக ஓர் அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உரிமை மீறல்களிற்கான எதிர்ப்புக் குர லாக ஒலிப்பதோடு தமது அவலம், கோபம், வெறுப்பு,பாசம், தாழ்வுச்சிக்கல், சகோதரத்துவம், விடுதலை உணர்வு என்பவற்றின் வெளிப்பாடுகளாகவும் அமைந்துள்ளன. இலக்கியம் ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பு என்ற வகையில் இக்கவிதைத் தொகுப்பு குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் போர்க்காலப் பிரதிபலிப்பாக இனம்காணமுடியும்.

❍ ❍ ❍

# ஈழத்தின் முதல் யுத்த வெளிப்பாட்டு ஓவியராக மாற்கு

சு.சிவரெத்தினம்

சுதந்திரத்தின் பின்பு தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்கப்பாடு தமிழர்களை அவர்களுடைய இன அடையாளத்துடனான இருப்பையும் அவர்களின் அரசியலையும் வலியுறுத்த வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளியது. இதனால் முனைப்புப்பெறத் தொடங்கிய தமிழ் தேசியவாதம் இரு வழிமுறைகளில் ஊடுபாயத்தொடங்கியது.

1. தமிழ்த் தேசிய அரசியல்
2. தமிழ்த் தேசிய பண்பாடு

தமிழ்த்தேசிய அரசியலை செல்வ நாயகம் தலைமையிலான தமிழரசுக்கட்சி முன்னயகர்த்த இந்த அரசியலுக்கான சமூக பண்பாட்டுத் தளத்தினை உருவாக்கு பவையாக பல்வேறு சமூக நிறுவனங்கள் தொழிற்பட்டன. இந்தவகையில் கலைஞர்கள் முக்கிய செயற்பாட்டாளர்களாக விளங்கினர். இலக்கியம், நாடகம் என்பன இந்த பண்பாட்டுருவாக்கத்தில் காத்திரமான பங்கினை வகித்தளவிற்கு ஏனைய ஈழத் தமிழர்களுடைய கலைகள் வகிக்கவில்லை. இதனால் ஈழத்து இலக்கியம், ஈழத்து நாடகம் என்னும் குறிப்பான அடையாளத்துடன் கூறக் கூடியளவிற்கு தனித்துவமான கலை வடிவங்களாக இலக்கியமும் நாடகமும் மேற்கிளப்பின.

1983ம் ஆண்டு சிங்களப் பெருந் தேசியவாதம் தமிழர்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையானது தமிழர்களை இன அடையாளத்துடன் மேலும் ஒன்றிணைய வைத்தது. கலைஞர்கள் இந்த ஒற்றுமையினை பேணவும் வளர்க்கவும் அதனூடாக பெருந்தேசிய அடக்குமுறைகளிலிருந்து விடுபட முடியும் என நம்பினர். பெரும்பாலான தமிழ்க் கலைஞர்கள் தமிழ் சமூகத்தின் அவல நிலையினையும் அவர்களது உணர்வுகளையும் படைப்பாக்க கருவாக வெளிப்படுத்தினர். கலைஞனுக்குமுன் காணப்பட்ட மிகக்கொடுமையான யதார்த்தமாகவும் அவனுடைய உணர்வினைப் பாதிப்பதாவும் இவையே காணப்பட்டதோடு ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் உணர்வுகளாகவும் இவை அமைந்திருந்தன.

மாற்கு இந்த தமிழ் சமூகத்தின் வாழ் நிலை யதார்த்தத்தினையும் உணர்வுகளையும் ஓவியத்தில் வெளிக்கொண்டு வந்த முதல் ஈழத்து ஓவியராகக் காணப்படுகின்றார். மாற்குவின் ஓவியங்கள் அவற்றினுடைய கருப்பொருள் சார்ந்தும் ஊடகம், நுட்பம் சார்ந்தும் பின்வரும் பண்புகளைக் கொண்டிருந்தன.

1. ஓவியம் வெளிப்படுத்திய சமூக யதார்த்தம்
2. ஓவியத்தினை அதன் உயர்ந்த பயில் நிலைத் தளத்திலிருந்து விடுவித்து விடுவித்து மக்கள் நிலைப்படுத்தியமை.

### ஓவியம் வெளிப்படுத்திய சமூக யதார்த்தம்

கலை கலைக்காக என்பதும் கலை சமூகத்துக்காக என்பதுமான விவாதங்கள்



ஒருபுறமிருக்க தன்னைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளால் பாதிப்படையாது அவை பற்றிச் சிறிதேனும் அசட்டை செய்யாது ஒரு மனிதனால் வாழமுடியுமா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். அவ்வாறு வாழ்பவன் மனிதனாகவும் இருக்கமுடியாது. மனிதனாக இருக்க முடியாதவன் எவ்வாறு கலைஞனாக இருக்க முடியும் என்பது சாத்தியமற்றதாகும். உலகில் வாழ்ந்த உன்னத கலைஞர்கள் எல்லாம் மனிதார்த்துவம் மிக்கவர்களாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை கலை வரலாறு சுட்டுகின்றது.

*"கலையின் வரலாறு மற்றொரு விசயத்தையும் நமக்குச் சுட்டிக் காட்டு கின்றது. மாபெரும் கலைஞர்கள் பலர், அன்றைய சமூக நிகழ்வுகளிலும் குறிப் பிட்ட சமூகப் பிரச்சினைகளிலும் அக் கறை காட்டியுள்ளனர். மாபெரும் கலைப்படைப்புக்களாக நிலைத்து நிற்கின் றவற்றில் பல குறிப்பிட்ட உண்மையை, குறிப்பிட்ட சமூகப் பிரச்சினையைக் கையாளுதலின் விளைவா-கவும் அப்பிரச்சினைக்கான எதிர் வினையாகவும் தோன்றி யவைதான்." (ராஜதுரை.எஸ். வி.1994, பக். 05)*

உதாரணத்துக்கு Jacques Callot ன் Miseries of war, Daumier d; Rue Transnonain, Francis Goya ன் The third of May, 1808, Piccasso d; Guernica போன்ற கலைஞர்களின் கலைப் படைப்புக்கள் எல்லாம் அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிரான படைப்புக்களாகவும் மனிதார்த்துவத்தின் தேவை யினை வற்புறுத்துபவையாக வுமே காணப்படுபவைகளாகும்.

*"மேற்காணும் ஓவியங்க ளுக்கு அந்தப்படைப்பாளியின் வாழ்க்கை யனுபவங்கள்தான் தூண்டுதலாக இருந்திருக் கின்றன. எனினும் ஸிட்னி பிங்கெல்ஸ்டைன் கூறுவதுபோல "படைப்பாளியின் வாழ்க் கையனுபவங்களிலிருந்து பிரிந்து, அதே அனுபவங்களை உருமாற்றப்பட்ட விதத்தில் தன்னுள் உள்ளடக்கி, புறவடிவம் எய்தி, தானாகவே அர்த்தப்படக்கூடிய ஒரு தனி உலகமாக விளங்குவதே கலை, கலைப்படைப்பு, அதைப் படைப்பதற்காக கலைஞன் பட்ட வேதனை முடிந்த பின்னர் சமூகத்துக்குச் சொந்தமான ஒன்றாக நிலைத்து நிற்கிறது."* படைப்பாளியின் கையைவிட்டு விடுபட்டு தானெனத் தனியாக நிற்கிறது கலைப்படைப்பு. இப்போது அதற்கென்றே ஓர் உயிர், ஒரு ஜீவன் உண்டு. கீட்ஸ் கூறியது போல அது இரத்த ஓட்டமற்ற, மாற்றமே இல்லாத ஒரு ஜீவன், ஒரு வாழ்வு, ஆனாலும், அதற்கென்று ஒரு அர்த்தம் உண்டு.

அதனாலேதான் முற்றிலும் மாறுபட்ட சமுதாய, வரலாற்றுச் சூழல்களில் படைக்கப்பட்ட கலைப்படைப்புக்கள் - டோமியர், ரெம்பிராண்ட் கோயா (கொலட், பிக்காசோ) போன்றவர்களின் படைப்புக்கள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற நமக்கு 'அர்த்தம்' உடையனவாக விளங்குகின்றன. மனித சமுதாயத்தில் வன்முறையும் ஒடுக்குமுறையும் அநீதியும் அவை தோற்றுவிக்கும் அவலங்களும் நீடித் திருக்கும்வரை அவற்றுக்கு காட்டப்பட்ட எதிர்ப்புகளாகவும் கண்டனங்களாகவும் விளைந்த மேற்காணும் கலைப்படைப்புகள் நமக்கு அர்த்தமுள்ளவையாக நீடித்து நிற்கும்." (மேலது பக். 07)

மாற்குவினுடைய படைப்புக்களையும் இந்தப் பின்புலத்தினூடாக நோக்குதல் வேண்டும். 1983ல் ஏற்பட்ட இனக் கலவரமும் அதனால் ஏற்பட்ட மனிதப் படுகொலைகளையும் சமூக அவலங்களையும். மனிதத்துவம் மிக்க மனிதர்கள் ஏதோ ஒருவகையில் வெளிப்படுத்தினார்கள். இக்காலத்தில் திடீர்த் திடீரென முளைத்த தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் எல்லாம் இந்த மனிதப்படுகொலைகளின் துயர வெளிப்பாடுகள்தான். ஈழத்து மக்கள் எல்லோரும் இவ்வாறு ஏதோ வகையில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்க கலைஞர்கள் தங்கள் உணர்வுகளை கலைப்படைப்புக்களாக பதிவு செய்தனர். இருந்த போதிலும் மாற்குவின் சமகாலத்து ஓவியர் எவரும் தமிழ்சமூகத்தின் இந்த உணர்வு நிலையினை அல்லது வாழ்நிலை யதார்த்தத்தினை ஓவியமாக்க முனைந்தவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ்வினையும் சாதாரணமான நிலக்காட்சிகளையும் நிலைப் பொருட்களையும் உருவங்களையும் ஓவியக் கருப்பொருட்களாகவும் தமது அழகியல் உணர்வின் வெளிப்பாடுகளாகவும் வரைந்து கொண்டிருக்க மாற்கு இந்தச்சமூக அவலத்தினைக் கண்டு கொதித்தெழுந்து அந்தக் கொதிப்பை தனது படைப்பாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

பிரான்சியப் படைகளின் கொடுமைகளை வெளிப்படுத்த கோயாவுக்கு எவ்வாறு ஒரு The third of May, 1808, அவ்வாறு இரண்டாவது உலக யுத்தக் கொடுமையினை வெளிப்படுத்த பிக்காசாவுக்கு எவ்வாறு ஒரு Guernica இருந்ததோ அது போல் யூலைக் கலவரத்தினையும், ஈழத்தின் யுத்தக்கொடுமையினையும் வெளிப்படுத்தும் ஓவியங்களாக மாற்குவின் யூலை 83, அவதி எனும் ஓவியங்களைக் குறிப்பிட முடியும்.

'யூலை 83' எனும் ஓவியம் 1983ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின்போது தமிழர் என்ற காரணத்திற்காக குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என்ற வித்தியாசமோ அல்லது மனிதார்த்தமோ இன்றி கொலையில் காட்டிய சமத்துவ மிருகவெறித்தனத்தை சித்தரிப்பதாக இருக்கின்றது.

ஒரு பெண் தனது கொல்லப்பட்ட குழந்தையை மடியில் தூக்கிவைத்துக்கொண்டு பேதலித்துப்போய் ஆனால் ஆணித்தரமான கேள்வியுடனும் மிருகத்தனத்தின்மீதுள்ள கோபத்துடனும்இருக்கின்றாள். துக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட மன நிலை தாயின் கோணலான நீண்டு வளைந்த கழுத்தாலும் குழந்தையைச் சுட்டும் கைகளினால் கேள்வியும் கோபமும் வெளிப்படுத்துகின்றது. குழந்தையின் அகன்ற வாயும் மூடிய கண்களுக்கூடாகவும் மனிதத்துவத்தின் இறப்பைக்காட்டுவதாகமிக அற்புதமாகவும் உணர்வோட்டத்துடனும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

'அவதி' எனும் ஓவியம் பிணக் குவியலுக்கு மேல் ஒரு தாய் மேலே

வானத்தைப் பார்த்துக்கதறுவததாகவும் ஆவேசப்படுவதாகவும் இருக்க அருகாமையில் அப்பிணங்களைப் புதைக்க கொண்டுவந்த ஒரு மண் வெட்டியும் காணப்படுகின்றது. அப்பாவி ஆண்களையெல்லாம் கொன்று குவித்துவிட்ட சூழலில் அவர்களைப் புதைப்பதற்கு ஒரு ஆண்மகன்கூட மிச்சமில்லாத நிலையில் தனியொரு பெண்ணாக மிக்க துயரத்தோடு அவ்வளவு பிணங்களையும் புதைக்கக் கொண்டு வந்தும் அவற்றைப் புதைப்பதற்கிடையில் மீண்டும் விமானங்கள் வானத்தில் பறப்பது போலவும் அப்பாவிகளைக் கொன்றுவிட்ட அந்த விமானங்களை எதுவும் செய்யமுடியாத நிலையில் ஆனால் அவற்றின் மேலுள்ள ஆத்திரம் முகபாவத்திலும் கைகளிலும் வெளிப்படுத்த முயற்சித்திருக்கின்றார். பெரிதாக்கப்பட்ட கண், பெரிய மூக்குத்துவாரம். பள்ளமான கன்னங்கள், பெரிய முகவாயின் மேலுள்ள திறந்த வாய் என எல்லாமே துயரத்தினதும் ஆவேசத்தினதும் உச்சகட்டத்தைக் காட்டுகின்றன. உழைப்பினால் வற்றிய உடம்பும் அகன்ற மூக்கும் பெரிய கண்களும் சேலையைக் கட்டியிருக்கின்ற முறையும் அது ஒரு சாதாரண வறிய குடும்பத்து தமிழ் பெண் என்ற உணர்வினை எமக்குத் தந்து விடுகின்றன.

இந்த இரு ஓவியங்களும் ஒரு உணர்வு வெளிப்பாடு மட்டுமல்ல அந்தக்காலத்தின் வணக்கலைப்படைப்புக்களாகவும் காணப்படுவது இவற்றின் சிறப்பம்சம் எனக் கூறலாம்.

மாற்குவினுடைய இவ் ஓவியங்கள் வலிமை, பொலிவு உணர்வுச் செறிவு என்பவற்றுடன் மனிதாபிமானப் பார்வை யிலிருந்து உருவானவைகளாகும். அவருடைய ஓவிய மொழி ஐரோப்பிய வழிவந்த இசங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அதனூடாக ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசுபவை யாகும்.

மாற்குவின் இந்த ஓவியங்களுடைய பிரதான சிறப்பம்சம் அவற்றினுடைய ரேகைப்பாவனையாகும். பிக்காசோவின் கியூபிசத்தின் அடிப்படைப் பண்புகளை ஜோஜ்கீற் பாரம்பரியம் பிறளாத தனக்கான மொழியில் புரிந்து கொண்டு வெளிப்படுத்துவதுபோல் மாற்குவும் தனக்கான ஒரு மொழியை உருவாக்க முயன்றிருக்கின்றார். பிக்காசோவின் தாக்கத்தினை இவ் ஓவியங்களில் சட்டென்று கண்டுகொள்ளமுடியும் ஒருவகை யில் இது மாற்குவின் பலவீனமாகவும் காணப்படுகிறது. இருந்தபோதிலும் மாற்குக்கேயுரித்தான தனிச்சிறப்புக்களை யும் இங்கு காணக் கூடியதாக இருக்கின்றது.

ஓவியத்தினை அதன் உயர்ந்த பயில்நிலைத் தளத்திலிருந்து விடுவித்து விடுவித்து மக்கள்நிலைப்படுத்தியமை.

தமிழ்மரபில் இலக்கியமும் நாடகமும் எப்போதும் அடித்தள மக்களின் கலைவடிவங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. புலவர்கள் மன்னர்களைப் போற்றிப்பாடி பரிசில்கள் பெற்று வந்திருப்பதும் அனேக புலவர்கள் வறுமை யினால் வாடியிருப்பதையும் தமிழ் இலக்கிய வரலாறு எமக்குக் காட்டுகின்றது. இது போலவே அரங்கக் கலைஞர்களும் புரவலர்களை நம்பியிருந்தமையை இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் ஓவியர்களும் சிற்பிகளும் புரவலர்களை நம்பியிருந்தார்கள் என்பதற்கு ஆதார மில்லை. சிற்பியின் துப்புச் சிரட்டை ஏந்தியவனாகவே இராஜ இராஜ சோழன் காண்பிக்கப்படுகின்றான்.

ஐரோப்பிய வருகையின் பின் இது மேலும் உயர்வர்க்க கலையாக மாற்ற

மடைகிறது. ஓவியம் வரைதலுக்கான ஊடகங்கள் ஐரோப்பியர்களுக்குரியதாக வும் அவை விலையுயர்ந்தவைகளாகவும் காணப்பட்டதோடு இவற்றைக் கொண்டு படைக்கப்படும் படைப்புக்களை இரசிப்ப தற்கு பார்வைப் புலன் பயிற்சியும் அவற்றை காட்சிப்படுத்துவதற்கான காட்சிக் கூடங் களும் தேவைப்பட்டன.

மாற்கு ஆரம்ப காலங்களில் கலை யகத்தையும் அதன் பண்புகளையும் புறக்கணிக்காத போதும் 1990களின் பின்பு ஏற்பட்ட யுத்தகால நெருக்கடிகளும் பொருளாதார தடைகளினாலும் பொருட் களின் பற்றாக்குறையினாலும் உயர் படைப்பாக்க ஊடகங்களில் தங்கியிராமல் தனது இயல்பான படைப்பாக்க சுதந் திரத்துடன் பணச்செலவின்றிக் கிடைக்கும் 'கார்ட் போட்' மட்டைகள், கடதாசிகள் போன்றவற்றை உபயோகித்து ஓவிய படைப்பாக்கத்தினை மேற் கொண்டார். சாதாரண சோக் கலரும் கரி யும் கூட வர்ணமாகவும் தூரிகையாகவும் அமையப் பெற்றன.



இவை காரணமாக ஓவியம் அதனு டைய செல்வந்த தன்மையில் இருந்து இறங்கி பாரம்பரியமான சமூகப்பயில்நிலை யின் நவீன போக்காக உருவாகியது. ஓவி யக் கண்காட்சிகள் செலவற்ற ஒரு விட யமாக ஆகியதுடன் அவை இலவச காட்சிகளாகவும் அமைந்திருந்தன. ஓவி யக் காட்சி குறிப்பேட்டில் விற்பனைக்கான ஓவியங்களின் விலை போடப்படாது சுவைஞன் விரும்பினால் அவற்றை கலைஞ னுடன் பேசி அதன் விலையை தீர்மானிக்கும் அளவிற்கு கலை ஒரு சாதாரண நுகர்வுப் பண்டமாக கொண்டுவரப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகள் ஓவியம் என்பது கலைஞர்களுடைய பார்வை யில் பணம் உழைக்கும் ஒரு ஊடகம் என்பதிலிருந்தும் சுவைஞ னுடைய பார்வையில் பணம் சுரண்டும் ஒரு ஊடகம் என்ற பார்வையில் இருந்து மாறி ஓவியத்தினை மக்கள் தளத்திற்குள் கொண்டு சென்றமை ஒரு முக்கியமான விடயமாகும்.

சாதாரணத் தமிழர்களின் வாழ்நிலை யதார்த்தத்தினை ஓவி யத்தின் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்று உந்துதல் பெற்ற இளைய தலைமுறையினர்கள் மாற்குவின் இந்த சமூக அக்கறையையும் அநீதிக்கெதிரான போர்க்குணத்தினையும் அடை யாளம் கண்டதோடு அவருடைய படைப்பாக்க எளிமையினாலும் மாற்கை தமது ஆதார புருஷ ராகக் கொண்டனர். இதனால் மாற்குவுக்கு ஒரு மாணவ பரம்பரையும் உருவாயிற்று.

இந்த மாணவ பரம்பரை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குட்பட்டதாகவோ

அல்லது குறிப் பிட்ட தகுதியினைக் கொண்டதாகவோ இருக்கவில்லை. ஓவியம் வரைய வேண்டும் என்ற விருப்பம் ஒன்றே தகுதியாகவும் மனி தம் என்கின்ற ஒன்றையே எல்லையாகவும் கொண்டிருந்தது. இதனால் சாதி, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து ஒரு உண்மைக் குருவாக ஓவியத்தினைக் கற்றுக் கொடுத்தார்.

"ஒரு ஓவியன் என்ற வகையில் மாற்கு ஒரு தலைசிறந்த படைப்பாளியாக மட் டும் விளங்கவில்லை. கூடவே 1958ம் ஆண்டிலிருந்து விடுமுறைக்கால ஓவி யப்பள்ளியின் மூலம் ஒரு மாணவ பரம்பரையையே உருவாக்கி வந்துள்ளார். ஓவியத்தில் பரீட்சையமுடைய எவரும் இன்று மாற்குவின் பாணியை சட்டென இனங்கண்டு கொள்வர். ஒருவகையில் 'மாற்குவின் கூடம்' எனக் கூறத்தக்கவகையில் புலமைசார் ஓவியப்பாணி ஒன்று மாற்கு வினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது." என பேராசிரியர் கிருஷ்ணராஜா குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

எனவே ஓவிய உள்ளடக்கத்திலும் அவற்றின் வெளிப்பாடுகளிலும் யுத் தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் யுத்த கால நெருக்கடிகளையும் ஓவியமாக பதிவு செய்வதில் முன்னின்ற ஓர் முதற் கலை-ஞராக ஈழத்தில் மாற்கு காணப்படுகின்றார்.

குறிப்பு: 'ஈழத்து நவீன ஓவியம் - எஸ். ஆர்.கனகசபை முதல் மாற்கு வரை' எனும் எனது நூலின் சில பகுதிகள் இக்கட்டுரையாக்கத்துக்கு பயன்படுத்தப் பட்டுள்ளன.

❍ ❍ ❍

---

# விசரி

– பா.அகிலன் –



காயமேதும் இல்லை.

ஒற்றையாடையில் மலமும்
மாதவிடாய் இரத்தமும் ஊறிக்கிடக்க
மாற்றுடை மறுத்தாள்
ஊன் மறுத்தாள்
பகலையும் இரவையும் ஊடறுத்தலறினாள்

மகவே.
மகவே.
மாயமே.

சூரத்தி
விலங்கிட்டுக் கட்டிய பின்
உள மருத்துவருக்கு சிபாரிசு செய்தோம்.

# ஓ.கே.குணநாதனின் போர்க்காலச் சிறுவர் இலக்கியம்

– கலாநிதி அகளங்கன் –



ஈழத்தின் இலக்கிய வரலாற்றைப் பல காலப் பகுதிகளாகப் பகுத்து ஆய்வு செய்யும் வழக்கம் ஆய்வாளர்களிடம் உண்டு.

ஆய்வாளர்களுக்குள்ளேயும், வாசகர்களுக்குள்ளேயும் காலப்பகுப்புப் பற்றிய மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன.

காலப் பகுப்பு என்பது ஒரு சுலபமான காரியமல்ல. இருப்பினும் கவனமாகப் பகுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழிலக்கிய வரலாற்றை அரசியல் அடிப்படையில் மூவேந்தர் ஆட்சிக்காலம், களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர்காலம், ஐரோப்பியர்காலம், தற்காலம் அல்லது இருபதாம் நூற்றாண்டு என்ற வகையிலே பிரித்துப் பார்த்த ஆய்வாளர்கள் ஒருவகை.

நூற் கருத்து நூல் வகை என்ற அடிப்படையில் இயற்கை நெறிக்காலம், அறநெறிக் காலம், பக்தி நெறிக் காலம், காவிய காலம், பிரபந்த காலம் சமூக எழுச்சிக் காலம் என்ற வகையில் பிரித்துப் பார்த்தல் ஒருவகை.

சங்க காலம், சங்க மருவிய காலம் எனத் தொடங்கி, அரசு, கருத்து, கி.மு. கி.பி, சொல் சொற்றொடர், யாப்பு என்று பலவகையாகப் பிரித்து ஆராய்ந்து பார்த்ததும் சரியான வகையில் தமிழிலக்கியத்தைக் காலப் பகுப்புச் செய்ய முடியவில்லை.

இந்தச் சிக்கலுக்குள் திருக்குறள் தொல்காப்பியம் முதலானவை கி.மு வா? கி.பி யா? என்ற சர்ச்சைகள் முடிவில்லாமல் தொடர்கின்றன.

எந்த வகையில் பகுத்துப் பார்த்தாலும், முழுமையாகச் சரி என்று சொல்லத்தக்க வகையில் பகுக்க முடியவில்லை என்பதே உண்மை.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பர் அறிஞர். அவ்விலக்கியம், படைக்கப்பட்ட காலப் பகுதியைக் குறித்ததாக இருக்கவேண்டியது அவசியமில்லை.

கதையின் அல்லது சம்பவங்களின் காலம்தான் காலம் என்று கருதத்தக்கது. படைக்கப்பட்ட காலத்தை வலிந்து காட்டவேண்டிய தேவை படைப்புக்கு இல்லை.

போர்க்கால இலக்கியம் என்று குறிப்பிடும் போது, போர்க்காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் அவற்றுள் அடங்கும் என்பது கருத்தல்ல.

போரோடு சம்பந்தப்பட்ட காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்ற இலக்கியங்கள் மட்டுமே போர்க்கால இலக்கியங்களாகக் கருதப்படும்.

போர் முடிந்த பின் படைக்கப்பட்ட, படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற, படைக்கப்பட இருக்கின்ற போர்க்கால நிகழ்வுகள் சம்பந்தமான இலக்கியங்களும், போர்க் கால இலக்கியங்களே.

எனவே போர்க்கால இலக்கியம் என்பது காலத்தோடு சம்பந்தப்பட்ட குறுகிய பொருளைக் கொண்டதல்ல. கருத்தோடு சம்பந்தப்பட்ட விரிந்த பொருளைக் கொண்டது.

இந்த வகையில் ஈழத்தில் சிறு கதைகள், நாவல்கள், கவிதைகள், காவியங்கள், இசைப்பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகள் எனப் பல இலக்கியங்கள் போர்க்கால இலக்கியங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்பவர்களாகவும் பலர் இருக்கிறார்கள்.

சிறுவர் இலக்கியத்தில் போர்க்காலப் பண்புகள் இருக்கின்றனவா? போர்க்காலச் சிறுவர் இலக்கியங்கள் யாவை? யார் ? யார்? எழுதியிருக்கிறார்கள்?, என்னென்ன வகைகளில் எழுதியிருக்கிறார்கள்?. என்னென்ன செய்திகளை எழுதியிருக்கிறார்கள் ? என்று ஆராய்ந்தால் பல தகவல்களைப் பெற முடியும்.

இதன் ஆரம்ப முயற்சியாக ஓ.கே.குணநாதனின் போர்க்காலச் சிறுவர் இலக்கியம் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

**ஓ.கே.குணநாதன்**

ஓ.கே.குணநாதன் 'விடிவைத் தேடி' என்ற நாவல் முதல் 'முள்ளிவாய்க்கால் குருவி' என்ற சிறுவர் நாவல் வரை இருபத்தேழு நூல்கள் வெளியிட்ட ஒரு பிரபல எழுத்தாளர்.

'வீர ஆனந்தன்' என்ற சிறுவர் நாவல் முதல் 'முள்ளிவாய்க்கால் குருவி' என்ற சிறுவர் நாவல்வரை பத்தொன்பது நூல்களை சிறுவர் இலக்கியநூல்களாக வெளியிட்டவர். இவற்றில் பத்து நூல்கள் சிறுவர் நாவல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈழத்தில் கூடுதலான சிறுவர் நாவல்களை எழுதிய எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் இவர்.

வெள்ளைக் குதிரை, மாவீரன் புள்ளி மான், மரம் வெட்டியும் ஒரு தேவதையும், குறும்புக்கார ஆமையார், பறக்கும் ஆமை, ஆகிய ஐந்து சிறுவர் நாவல்களுக்காக தேசிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்.

வடக்குக் கிழக்கு மாகாண, கிழக்கு மாகாண, இலக்கிய விருதுகளையும், தேசிய சிறுவர் இலக்கிய இலங்கை அரசு உத்தியோகத்தர்களுக்கானசிறுவர்இலக்கிய விருது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், அகில இலங்கை இலக்கியப் பேரவை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு கு.சின்னப்ப பாரதி அறக்கட்டளை முதலானவற்றின் விருதுகளையும் பெற்றவர்.

சிறுவர் இலக்கியம் படைப்பதற்கான பயிற்சிகள் பலவற்றைத் தகுந்த நிறுவனங்களிடமிருந்து பெற்றவர்.

மிகுந்த பொருட்செலவில், அழகான வர்ணப் படங்களோடு, சிறுவர்களைக் கவரக் கூடிய வகையில் நூல்களை வெளியிட்டவர்.

இவரது பல சிறுவர் நூல்கள், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அத்தோடு இவரது பல சிறுவர் நூல்கள் இந்தியத் தமிழகத்தில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன.

இன்று எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிறுவர் இலக்கியப் படைப்பாளிகளில் முன்வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் ஓ.கே.குணநாதன் என்றால் அது மிகையில்லை.

**போர்க்காலச் சிறுவர் இலக்கியம்**

ஓ.கே.குணநாதனின் போர்க்காலச் சிறுவர் இலக்கிய நூல்களைப் பற்றி 'மரம் வெட்டியும் ஒரு தேவ-

தயும்' என்ற ஓ.கே.குணநாதனின் சிறுவர் நாவல் நூலின் அணிந்துரையில் கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி செல்வி எஸ்.பொன்னையா அவர்கள் பின்வருமாறு குறிப்படுகிறார்.

'பிஞ்சுக்கால்கள்' என்னும் படைப்பு பொறி வெடியின் அபாயத்தை எளிதாகக் காட்டுகிறது. 'சங்கருக்குப் பிறந்த நாள்' படைப்பு பொறி வெடியில் காலை இழந்த சிறுவனுக்கு எவ்வாறு உதவலாம் என்பதைக் கூறுகிறது. 'குயில் அம்மா' கூறும் கதை நாட்டுரிமை. 'அம்மா' படைப்பானது அநாதைகள் யாருமில்லை என்பதைக் குறியீடாகக்கொண்டுள்ளது. 'குட்டி அணில்' இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு. 'கிச்சா' ஊனமுற்றவர்களின் அரவணைப்பைக் கூறுகிறது. 'வெள்ளைக் குதிரை' நாட்டுப் பிரச்சினையில் சிறுவர்கள்படும் அவஸ் தையை வெளிக்கொண்டு வருகிறது. (செப்டம்பர் 2007)

'கிச்சா' சிறுவர் கதையில் வரும் 'கிச்சா' என்ற முயல்குட்டி முன்கால்கள் இரண்டை யும் ஊனமாகக் கொண்டது என்ற கதை சொல்லத்தொடங்கும்ஆசிரியர்அக்கால்கள் எப்படி ஊனமாகின என்று சொல்லவில்லை. இருப்பினும் இக்கதையையும் போர்க்கால இலக்கியமாகக் கொள்வதற்குக் காரணம் இருக்கிறது.

'கிச்சா' சிறுவர் கதை பற்றி டாக்டர் சாந்தினி கணேசன் (சிறுவர் நல விசேட வைத்தியர்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இது விசேட தேவைகளைக் கொண்ட ஒரு குட்டி முயலின் கதை. ஒரு குட்டி முயலினூடாகச் சமூகத்திற்குப் பெரிய தொரு செய்தியைச் சொல்கிறார்.

இக்கதை இன்றைய காலகட்டத்தின் முக்கியமான ஒரு சமூகத்தின் தேவையை வைத்து எழுதப்பட்டுள்ளது.

எமது நாட்டில் பல்லாயிரம் சிறுவர்கள் விசேட தேவைகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

எனவே இந்தப் படைப்புக்களோடு இதற்குப் பின் வெளிவந்த 'முள்ளிவாய்க்கால் குருவி' சிறுவர் நாவலையும் ஓ.கே.குணநா தனின் போர்க்கால சிறுவர் இலக்கியமாகக் கொள்ளலாம்.

'குயில் அம்மா' சிறுவர் கதை மறை முகமாக போர்க்கால உணர்வைக் காட்டுகிறது. கூடுகட்டத் தெரியாத, அடைகாக்கத் தெரியாத, குஞ்சுகளுக்கு உணவூட்டி வளர்க்கத் தெரியாத குயிலை யும், தன் கூட்டுக்குள் கிடந்த முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்கச் செய்த காகம், குயிலின் குஞ்சுகள் என்று தெரிந்ததும் கொத்தி விரட்டுவதையும், அதனைப் பார்த்து வேதனையடைந்த குயில், கொக்கு, புறா, சிட்டுக்குருவி ஆகிய பறவைகள் முறையே கூடுகட்டுவதையும், அடைகாப்பதையும், இரை ஊட்டுவதையும் பார்த்து உணர்வு பெற்று கூடுகட்டி முட்டையிட்டு, அடைகாத்து, குஞ்சுகளுக்கு உணவூட்டி வளர்ப்பதையும் 'குயில் அம்மா' சிறுவர்கதை அழகாகச் சொல்கிறது.

"இக்கதை குயிலைக் குறியீடாகக் கொண்டு சிறுவர்களுக்கு சிறுவர் உரிமை- களையும், பெரியவர்களுக்கு நாட்டுரிமை யையும் அழகாகச் சுட்டி நிற்கிறது" என இந் நூலின்பின்அட்டையில்குறிப்பிடப்படுவது மனங் கொள்ளத்தக்கது.

'குயில் அம்மா' சிறுவர் கதைபற்றி SHIRZIMA SINNEN (Dip in child paychology, Dip in counseling psychology) அவர்கள் வழங்கிய கருத்துரையில்

"சிறுவர் உரிமையிலே மிக முக்கியமான கோட்பாடு சிறுவர்களைத் துன்புறுத்துதல் பற்றியது.

இங்கு படைப்பாளி குயில் - காகம் என்ற குறியீட்டினூடாகச் சிறுவர்கள் துன்புறுத்தப்படுதலையும் அதற்கான தீர்

வையும் அழகாகக் காட்டியுள்ளார்." எனக் குறிப்பிடுவது மனம் கொள்ளத்தக்கது.

'அம்மா' சிறுவர்கதை பற்றி டாக்டர் எம்.கணேசன், MBBS.M.D. (உளநல வைத்திய நிபுணர் போதனா வைத்திய சாலை, மட்டக்களப்பு) அவர்கள் பின்வரு மாறு குறிப்பிடுகிறார்.

"எமது நாடு போர் அரக்கனின் பிடியில் அகப்பட்டு விடுபட வழிதேடும் நேரம். நாங்கள் எமது பிள்ளைகளுக்கு ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தத் தவறிவிட்டோமோ என்ற கேள்விகள் எழத் தொடங்கிவிட்டன.

சமாதானம் ஏற்பட என்ன தேவை என்று நாம் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்க வேண்டிய நிலை. சமாதானம் என்பது, மனித நேய உணர்வுகள் எமது சிந்தனை மற்றும் நடத்தையில் வெளிப்படுகையில்தான் சாத்தியமாகும் என்பதை உணரக்கூடிய மனோபக்குவத்தை ஏற்படுத்தும் முயற்சியில் எழுத்தாளர் ஓ.கே.குணநாதன் ஈடுபட்டிருப்பது அவரது தீர்க்கதரிசனத்தைக் காட்டுகிறது.

...... இக்கதை சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் மிகவும் அவசியமான ஒரு செய்தியை இலகு நடையில் சொல்லியிருப்பது தெரிகிறது...."

'அம்மா' சிறுவர் கதை குயிலையும் காகத்தையும் வைத்துப் பின்னப்பட்டது. தனது உண்மைத் தாய் குயில்தான் என்பதை அறிந்து கொண்ட குயில்க் குஞ்சுக்கு 'தாய்' பற்றியதத்துவத்தைக்காகம்கூறுவதாகவரும் பின்வரும் பகுதி மிகவும் முக்கியமானது.

"இந்த உலகத்தில் இருக்கிற ஒவ்வொரு குழந்தைக்கும் அம்மா இருக்கவேண்டும். அல்லது அம்மாவாக யாராவது அன்பு காட்ட வேண்டும். எந்த ஒரு குழந்தையும் அநாதையாக இருக்கக் கூடாது. நான் இல்லாவிட்டால் நீயும் அநாதையாக இருந்திருப்பாய் இல்லையா. இப்போது சொல்லு நானும் உன் அம்மா தானே."

'குட்டி அணில்' சிறுவர் கதை தமிழ் சிங்கள ஒற்றுமை பற்றியது. வடக்கிலுள்ள தியாகு அணிலும் தெற்கில் உள்ள பியதாச அணிலும் சேர்ந்து இலங்காபுரி என்ற அழகிய தீவில், உடைந்து போய்க் கிடந்த பழைய பாலத்தைத் திருத்தி நட்புறவு பூணுகின்ற கதை இது. இந்த முயற்சியில் ஈடுபடமுன் தெற்கைப் பார்க்கச் சென்ற தியாகு அணிலை ஏமாற்றிக் கொல்ல முதலை தயாராக இருந்ததை காகம் தியாகு அணிலுக்குச் சொல்வது முக்கியமானது.

மீள் குடியேற்றக் கிராமங்களில், பொறி வெடியின் அபாயத்தைச் சொல்கின்றது 'பிஞ்சுக்கால்கள்'. மான்குட்டி ஒன்று பொறிவெடியில் இரண்டு கால்களையும் இழந்ததை மிகவும் உருக்கமாக இந்தக் கதை சொல்கிறது.

'ஐயோ காடு எரியுது' கதை "ஐயோ எரியுது" "ஓடுங்க", "ஐயோ எண்ட பிள்ளையைக் காணல்லயே" "எண்ட பிள்ளையைக் கண்டீங்களா" "அம்மா" ஆகிய வாக்கியங்களை சொற்களை மட்டுமே கொண்டது.

ஒரு காடு எரிந்தால் காட்டு மிருகங்கள் எவ்வளவு துன்பப்படும் என்பதைச் சொல்வதாக படங்கள் மூலம் இக்கதை படைக்கப்பட்டிருந்தாலும் யுத்தத்தின் போது - போர்க்கால இடப்பெயர்வையும் அச்சத்தையும் பரிதவிப்பையும் அழகாகச் சொல்கிறது. அதனால் இக்கதையையும் போர்க்காலச் சிறுவர் கதையாகக் கொள்ளலாம்.

"இவர்கள் எமது தேசத்தின் விடுதலைப் போரில் கால்களை இழந்தவர்கள். அன்பால் அரவணையுங்கள்." என்ற செய்தியோடு 'சங்கருக்கு பிறந்தநாள்' என்ற சிறுவர் கதை வெளிவந்தது.

"அவன் மிகவும் ஏழையானவன். அவனுடைய அப்பாவும் அம்மாவும் குண்டு வெடிப்பில் இறந்து போனார்கள்.

**போர் முடிந்த பின் படைக்கப்பட்ட, படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற, படைக்கப்பட இருக்கின்ற போர்க்கால நிகழ்வுகள் சம்பந்தமான இலக்கியங்களும், போர்க்கால இலக்கியங்களே.**

அவனுடைய இருப்பிடம் அருகிலுள்ள அநாதை இல்லம். அங்கிருந்துதான் அவன் பாடசாலைக்கு வருவான்.

எல்லோருக்கும் இரண்டு கால்கள், அவனுக்கு மட்டும் ஒரு கால். ஒரு கால் பொறி வெடியில் பட்டு போய்விட்டது. அதனால் அவனுக்கு அடுத்த கால் ஊன்று கோல் தான்."

என இக்கதையைத் தொடங்குகிறார் ஆசிரியர். அவனது வகுப்பில் கல்வி கற்கும் பணக்கார மாணவன் சங்கர் தனது பிறந்தநாட் பரிசாக, ரவி என்ற அந்தக் காலிழந்த மாணவனுக்கு ஒரு செயற்கைக் கால் கொடுத்து உதவி அரவணைப்பது இக்கதை.

'வெள்ளைக் குதிரை' சிறுவர் நாவலின் வாழ்த்துரையில் கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் வண.பிதா. சிறிதரன் சில்வெஸ்டர் அவர்கள் இந்நூல் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவனமும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையமும் இணைந்து நடாத்தும் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு இலக்கிய விழா 2003ஐ ஒட்டி 'வெள்ளைக் குதிரை' என்னும் இந்த சமாதான இலக்கிய நூல் வெளிவருவதனையிட்டு மிகவும் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

வளர்ந்தவர்களுக்கு சமாதானத்தை ஊட்டுவதனை விட சிறுவர்களுக்கூடாக ஊட்டுவதன் மூலம் எதிர்காலத்தில் புதியதொரு சந்ததியினரைக் கட்டி எழுப்ப முடியும் என்ற நம்பிக்கையுடனேயே இந்த நூலை எழுதியிருக்கின்றார் என்பது புலனாகின்றது.

அதிலும் இந்த நூலில் காணப்படுகின்ற ஓவியங்கள் கூட, எமது நிறுவனத்தின் ஆதரவுடன் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் ஓவியர் டாக்டர் கிக்கோ எழுத்தாளர் ஓ.கே.குணநாதன், தில்லை ஆகியோரை வளதாரிகளாகக் கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 30 சிறுவர்களுக்காக நடாத்தப்பட்ட 'ஓவியத்தினூடான சமாதானம் என்ற ஓவியப் பயிற்சிப் பட்டறையில் சிறுவர்களின் மனங்களில் இருந்து எழுந்த ஓவியங்களாக இருப்பதனைக் காணும் பொழுது பன்மடங்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.என்று குறிப்பிட்டு இந்நூலைப் போர்க்கால இலக்கியமாகக் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் அணிந்துரையில் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா அவர்கள்

"...... அநுவை.நாகராஜனின் "காட்டில் ஒரு வாரம்" ஓரளவு சமகாலப் பிரச்சினையை (1958ஆம் ஆண்டு இனக்கலவரம்) மையமாகக் கொண்டது. 'வெள்ளைக் குதிரையோ இன்றைய சமகாலப் பிரச்சினையை அதுவும் அண்மைக்காலப் பிரச்சினையை விரிவான தளத்தில் அலச முற்படுகிறது. இவ்வாறான உள்ளடக்கம் காரணமாக ஈழத்துச் சிறுவர் நெடுங்கதை வளர்ச்சியில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்று விடுகின்றது." என்று குறிப்பிடுகிறார். மேலும்,

"உள்நாட்டுப் போருக்கு முகம் கொடுத்துவரும் இன்றைய வன்னிப்

# சொல்லாமல் போகும் புதல்வர்கள்

– ஔவை

என் மகன்
பூஞ்சிறகு முளைத்த சிட்டுக் குருவியாய்
பறந்து போனான்.

இடி முழங்கி வான் அதிரும்
மழைக்காலக் குளிர் இரவில் – அருகிருந்து
தென்றல் சுமந்து வரும் மெல்லிசையை
கேட்டிருக்கும் என் மகன்

முழு நிலவு பூத்து
நட்சத்திரம் தெறித்திருக்கும் இரவுகளில்
மஞ்சளாய் சணல்
பூத்து விரிந்திருக்கும் எம் வயலில்
காற்று வாங்கியபடி
அவனும் நானும் தனித்திருக்கையில்
ஒருநாள் அவன் கேட்டான்
அப்பா ஏன் இறந்தார்?
யுத்தம் ஏன் வருகிறது?
அக்காவுக்கு ஏன் தலை நரைத்து விட்டது?

அன்று சின்ன பயல் அவன்
மகனே!
ஆந்தைகள் அலறும் இரவுகளும்
விமானங்களின் குண்டு வீச்சும்
நெஞ்சைப் பிளக்கும் அவலங்களும்
இங்கு நிறைய நடக்கும்.

காலம் முழுவதும் உன் வரவைப் பார்த்து
சோர்ந்து படுத்து விட்டேன்
ஏதோ இனம் புரியாத சோகம்
நெஞ்சை அரிக்கிறது.

ஆனாலும் பார் மகனே!
எங்கோ தொலைவில்
நீ என்ன செய்வாய் என்பதும்
நீ நடக்கும் பாதையையும் நான் அறிவேன்.

இராணுவ வெறியரிடம் அகப்படாதே!
கவனம் அதிகம் தேவை
அதைவிட மேலாக எமக்குள் நூறு எதிரிகள்,
மக்களை நேசித்த
சின்னப் பயல்களெல்லாம்
இன்று மண்ணுள்.

மகனே
சிட்டுக்குருவி போலத்தான் பறந்தாய்!
ஆயினும்
காலம் உன்னை வளர்த்திருக்கும்
மனித நேயத்தை இழந்து விடாதே
மக்களை அதிகம் நேசிக்கப் பழகு.



பிரதேசத்தைப் பின்னணியாகக் கொண்ட "வெள்ளைக் குதிரை" அப்பிரதேச மக்களின் வாழ்க்கை அவலங்களை மட்டும் எடுத்துரைக்கவில்லை. அதற்கப்பால் (மிதிவெடி அபாயங்கள், காடழிப்பு, அப்பாவிகளின் மரணம், இளஞ்சந்ததியினரின் துர்ப்பாக்கிய நிலை, பாலியல் வல்லுறவுக்கான பிரயத்தனம் என்றவாறு) போரின் பல்வேறு கோரமுகங்களை இனங்காட்டுகின்றது. இவை அனைத்தையும் விட போரற்ற அமைதியான வாழ்வின் அவசியத்தை வற்புறுத்துகிறது. இவ்விதத்தில் வெள்ளைக் குதிரை

சமாதானத்தின் குறியீடுமாகின்றது. இத்தியாதி விடயங்களை சிறுவர்களுக்கு எடுத்துரைக்கும் படைப்பாக இது அமைந்துள்ளமையே கவனத்திற்குரியது. இவ்விடயங்கள் ஈழத்துச் சிறுவர் பாடல் களில் (எ-டு: மு.பொன்னம்பலம், வாணன்) அவ்வப்போது இடம்பெற்றிருப்பினும் சிறுவர் நெடுங்கதை ஒன்றில் விரிவாக அமைவது இதுதான் முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது." என்றும்

"ஒரு குட்டி யானை துணிவு பெறுகிறது" என்றொரு சிறுவர் நெடுங்கதை முதலில் ஆங்கிலத்திலும் (ஆசிரியர் கலாநிதி நான்சிபரன்) பின்னர் மொழிபெயர்ப்பினூடாக தமிழிலும் வெளிவந்தமை நினைவிற்கு வருகின்றது. சமூகவியல், உளவியல் ஆய்வுகளுக்குப் பின் எழுதப்பட்ட அந் நூல், யுத்தத்தின் பாதிப்பினை மனத்தை உருக்கும் வண்ணம் சித்தரிப்பது. அந் நூலினை வாசித்து முடித்த வேளையில் தமிழில் அத்தகைய படைப்பு எதுவும் இதுவரை வெளியாகவில்லையே என்ற ஆதங்கம் எனக்குள்ளெழுந்தது. இப்படைப்பின் வரவு அத்தகைய ஆதங்கத்தை நிறைவேற்றியுள்ளமை திருப்தி தருகின்றது".

என்றும் "வெள்ளைக் குதிரை" நூலைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

"முள்ளிவாய்க்கால் குருவி" சிறுவர் நாவல் போர்க்காலத்தில் பெற்றோரையும், தம்பி, தங்கை யாவரையும் தவற விட்ட ஆனந்தி என்ற சிறுமியின் அவலத்தையும் ஆதங்கத்தையும் அழகாக வெளிப்படுத்துகின்றது.

கதையின் ஆரம்பத்தில் "கடைசி சண்டை. முள்ளிவாய்க்காலில் நடந்த சண்டை, குண்டுகள் வெடித்துச்சிதறின. குண்டோசை காதைப் பிளந்தது. வீடுகள் இடிந்தன. உடைமைகள் எரிந்தன. ஒரே பயம்! சனங்கள் ஓடினார்கள். அங்கும் இங்கும் ஓடினார்கள்; எல்லாப் பக்கத்தாலும் ஓடினார்கள். ஆனந்தி ஓடினாள், அவளுடைய அப்பா ஓடினார். அவளுடைய அம்மாவும் ஓடினாள் தம்பி... தங்கை... எல்லோரும் ஓடினார்கள். திசை தெரியாமல் ஓடினார்கள். அதன் பிறகு... ஆனந்தி அவளுடைய அப்பாவைக் காணவில்லை. அம்மாவைக் காணவில்லை. தம்பி, தங்கையைக் காணவில்லை. அவர்கள் எங்கு போனார்களோ தெரியாது. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? உயிருடன் இல்லையா? என்று கூடத் தெரியாது. ஆனால்... அவள் மட்டும் தனித்து நின்றாள்..."

என்று தொடங்குகிறார் கதையை உறவுகளை விரும்பி, உறவுகளுக்காக ஏங்கியவேளையில் ஒரு குருவிக் குடும்பம் அவளுக்கு உறவாகிறது. காற்றும் கடும் மழையும் குருவிக் கூட்டைச் சிதைத்துவிட குருவிக் குஞ்சுகளைக் காப்பாற்றி கூடமைத்துக் கொடுத்து ஆதரிக்கிறாள்.

"அதன் பிறகு குருவிகளும் குஞ்சுகளும் அக்கூட்டை விட்டுப் போகவே இல்லை. அவளை விட்டுப் பிரியவும் இல்லை. இப்பொழுது அவள் அநாதையில்லை" என்று கதையை முடிக்கிறார்.

## முடிவுரை

ஓ.கே.குணநாதனின் சிறுவர் படைப்புக்களில் பத்துப் படைப்புக்கள் நேரடியாகவோ குறியீட்டு முறையிலோ ஈழத்தின் போர்க்காலச் சிறுவர் இலக்கியப் படைப்புக்களாக வெளிவந்துள்ளன.

ஈழத்தில் அதிக சிறுவர் நாவல்கள் எழுதியவராக (10 நாவல்கள்) கணிக்கப்படும் ஓ.கே.குணநாதனின் சிறுவர் இலக்கியப் படைப்புக்களில் (19 படைப்புக்கள்) ஒன்பது படைப்புகள் போர்க்காலச் சிறுவர் இலக்கியப் படைப்புக்களாக வெளிவந்துள்ளன.

ஓ.கே.குணநாதனின் இப்படைப்புக்கள் பற்றிய ஆய்வின் முதற்படி இது. ஆய்வாளர்களுக்கு வழிவிட்டு இம்முயற்சியை இந் நேரத்தில் விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

❍ ❍ ❍

# கிராமியப் புலவர்களின் அரசியற் பாடல்கள்

சி. சந்திரசேகரம்
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத் தொகுதியினை எழுத்திலக்கியம், வாய்மொழி இலக்கியம் என இரு பகுதிகளாகப் பகுத்து அவற்றை அடையாளப்படுத்தும், ஆய்வு செய்யும் மரபே இதுவரைகாலமும் இருந்து வந்துள்ளது. ஆயினும் இவ்விரு இலக்கிய மரபுகளினதும் பண்புகள் கலந்ததும் இரண்டிற்கும் இடைப்பட்டதுமான மொழியாடல் முறையுள்ள பாடல் மரபொன்று வெகுசன இலக்கிய வகையாக கிராமிய மக்கள் மத்தியிலே பயிலப்பட்டு வந்துள்ளமை கவனிக்கப்படவில்லை. தமிழகத்திலும் இத்தகைய இலக்கிய மரபொன்று நிலவி வந்துள்ளமையை வேங்கடாசலபதியின் 'முச்சந்தி இலக்கியம்' என்ற நூல் எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இத்தகைய பாடல் மரபு நீண்ட காலமிருந்து நிலவி வருவது பற்றிய சிறு குறிப்புக்கள் அண்மைக் காலங்களில் வெளிவந்துள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் இத்தகைய வாய்மொழிப் பாடல் மரபு நீண்ட பாரம்பரியமுடையதாகவும் தொகையில் அதிகமாகவும் பயிலப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும். இதற்குக் காரணம் இப்பிரதேச கிராமியப் புவியியல் சூழலும் அதனடியான பண்பாட்டுக் கூறுகளுமாகும்.

இப்பாடல்கள் எழுத்திலே உருவாக்கப் படுதல், ஆசிரியர் பெயரைக் கொண்டிருத்தல் முதலான எழுத்து மரபுக்குரிய பண்புகளைக் கொண்டிருப்பினும் அடிப்படையில் வாய்மொழி இலக்கிய வகையாகவே அமைந்துள்ளன. வாய்மொழிப் பாடல்களின் ஒரு வளர்ச்சிநிலையாகவே இப்பாடல்கள் உள்ளன. இப்பாடல்களைக் கிராமப்புறங்களிலே அதிகம் எழுத்தறிவு பெறாத கிராமியப் புலவர்கள் எழுதி மக்கள் மத்தியில் அளிக்கை செய்து வருகின்றனர். சில நெடும் பாடல்களை இப்புலவர்கள் சிறு அச்சுருப்படுத்தி அவற்றை மக்கள் மத்தியில் பாடிக்காட்டி விற்பனை செய்கின்றனர். கிராமத்திலே நடக்கின்ற முக்கிய நிகழ்வுகள், கோயில் வரலாறுகள், குடும்பப் பிரச்சினைகள் முதலானவற்றைப் பிரதான பாடுபொருளாகக் கொண்ட இந்த மரபில் சமகால அரசியலும் முக்கிய விடயமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. முக்கியமாக அத்தகைய அரசியற் பாடல்கள் குறிப்பிட்ட புலவர்களினதும் கிராமிய மக்களதும் அனுபவங்களாகவே அமைந்தன.

இக்கட்டுரை மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசத்தைச் சேர்ந்த சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் பலவர்களால் உருவாக்கப்படுகின்ற இத்தகைய கிராமியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் அரசியல் பாடுபொருள் போக்குகளை அறிமுகம் செய்வதாக அமைகின்றது.

அந்தவகையில் கிராமியப் புலவர்களின் ஆரம்ப கால அரசியல் சார்ந்த பாடல்களாக அரசியற்கட்சிச்சார்புப்பாடல்களாகவே உள்ளன. 1950 களில் இருந்து 1980 வரையான காலப்பகுதியில் கட்சி அரசியல் பற்றிய பிரக்ஞை இவர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இப்பாடல்கள் கூடுதலாக தேர்தல் காலங்களிலே

இயற்றப்பட்டு ஆதரவாளர்கள் மத்தியிலே பாடிக்காட்டப்பட்டன. இவை கட்சிப் பிரசாரக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

கி. கனகரெத்தினம், வே.சின்னத்தம்பி, பூபாலபிள்ளை, க.சின்னத்தம்பி, ஐ. சுப்பிரமணியம் போன்ற பலர் தேர்தல் காலங்களில் நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதி துண்டுப்பிரசுரங்களாக அச்சிட்டும் மேடைகளில் பாடியும் வந்துள்ளனர். இப்பாடல்கள் கும்மி மெட்டிலும் சினிமாப் பாடல் மெட்டிலும் அமைந்தன. கனகரெத்தினம் என்பவரின் பாடல்கள் துண்டுப்பிரசுரங்களாக மட்டுமன்றி நூல் வடிவிலும் வெளியிடப்பட்டன. 'கதன வீதியில் பறந்து செல்லும் வெண்புறாவே' எனத் தொடங்கும் பாடல் உள்ளிட்ட அவரது தமிழரசுக் கட்சி சார்ந்த பல பாடல்கள் உணர்ச்சியைத் தூண்டுவனவாகும். இவரது பாடல்களைத் தமிழரசுக் கட்சி மேடைகளில் பாடுவதில் தர்மரெட்ணம் என்பவர் பிரபல்லியம் பெற்றிருந்ததாகவும் இவரை முன்னாள் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். இராசமாணிக்கம் தன்னுடன் மேடைகளுக்குக் கொண்டு சென்றதாகவும் அறிய முடிகின்றது.

வே.சின்னத்தம்பி என்பவர் 1950 களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற போது எஸ். இராசமாணிக்கம் மீது பாடிய புகழ்ச்சிப் பாடலும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எதிர்மன்னசிங்கம் மீது பாடிய வசைப்பாடலும் இப்புலவர்களின் கட்சிச் சார்புப் பாடல்களின் போக்கைச் சுட்டி நிற்கின்றன.

***ஏழைகள் அன்பனாம் எல்லோர்க்கும் நண்பனாம்***
***எங்கள் ராசமாணிக்கத்தை***
***கூடிக் கவுன்சிலுக் கனுப்புவோமென்று***
***கூடிக் கும்மியடியுங்கடி***
***பட்டிருப்பு நற்பகுதி வாழ்க அந்த***
***பாராளுமன்ற துயர் கேட்க***
***மட்டக்களப்புக் குறை தீர்க்க***
***ராசமாணிக்கம் வெற்றியென்றும் வாழ்க***

என்று தமிழரசுக் கட்சியின் ஆதரவாளராக இருந்துகொண்டு இராசமாணிக்கம் அவர்களைப் பலவாறாகப் புகழ்ந்தும் வியந்தும் பாடி அவருக்கே வாக்கைப் போடுமாறு பிரசாரம் செய்கின்றார். அதேவேளை எதிர்க்கட்சி வேட்பாளரை நையாண்டி பண்ணுவதனூடாகவும் தன் பிரசாரத்தைச் செய்கின்றார்.

***வாருங்கடி வந்து பாருங்கடி***
***மன்ன சிங்கனை மேலே போட்டேறுங்கடி***
***ஏறும் இறங்குமவ் வேளை தன்னில் –எதிர்***

என்று தொடங்கும் பாடலில் குறித்த எதிர்த் தரப்பு வேட்பாளரைப் பல வகையில் கேலி பண்ணிப் பாடுகின்றார். எனவே இத்தகைய தேர்தல் பிரசாரப் பாடல்களில் வாழ்த்தும். வசையும் முக்கிய தன்மைகளாக அமைந்தன.

இக்காலகட்டத்தில் கட்சி அரசியல் சார்ந்தும் வேறாகவும் கிராமியப் புலவர்களின்' பாடல்களில் காணப்படும் மற்றொரு போக்கு மொழி, இன உணர்வுநிலைப்பட்ட தன்மையாகும். ஈழத்து எழுத்து மரபுக் கவிதையிலே மொழியுணர்ச்சிக் கவிதைகள் வளர்ச்சி பெற்றிருந்த இக்காலகட்டத்தில் கிராமியப் புலவர்களது பாடல்களிலும் அப்போக்கு முதன்மை பெற்றது.

***மானமுள்ள தமிழா வாடா – மார்புதட்டி***
***முன்னே வாடா – மதியாதான் வாசல் தன்னில்***
***மிதியாய் முத்தம் தமிழா வாடா***

தமிழரசுக் கட்சி சார்பாக பூபால பிள்ளையினால் பாடப்பட்ட இப்பாடல் முற்றிலும் மொழி, இன உணர்வினைத் தூண்டுவதாக அமைந்தது. எவ்வாறாயினும் இத்தகைய கட்சிச் சார்பு, இனவுணர்வுப் பாடல்கள் பிரசாரத் தன்மை வாய்ந்தனவாகவே அமைந்தன. அரசியல்வாதிகள் இத்தகைய புலவர்களை தம் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தினர் என்றும் அப்புலவர்களும் குறித்த கட்சி ஒன்றின் தீவிர ஆதரவாளராக இருந்து இப்பாடல்களைக் கட்டிப் பாடினர் என்றும் அறிய முடிகின்றது.

அடுத்து கிராமியப் புலவர்களின் பாடல்களில்பேரினவாதத்திற்குஎதிரானஉணர்வு முக்கியபாடுபொருளாக அமையலாயிற்று. 1950 களில் இருந்த தமிழருக்கு எதிரான பேரினவாத

செயற்பாடுகள் வெளிப்படத் தொடங்கியபோது அதற்கெதிராக இப்புலவர்கள் தம் உணர்வு பூர்வமான எதிர்ப்பினைத் தம் பாடல்களிலே வெளிப்படுத்தினர். இப்பாடல்கள் மிகவும் வெளிப்படையாகவும் வன்மையாகவும் அச்செயற்பாடுகளை விமர்சனம் செய்வனவாகவும் அமைந்தன என்பதற்கு திருக்கோயிலைச் சேர்ந்த வ. இரைசையா என்பவர் பாடிய நான்கு பக்கங்களைக் கொண்ட 'திருக்கோயில் சித்திரவேல் செம்மல் பேரில் தமிழ்மொழி அனுதாபப் பத்து' என்ற பாடல் நூல் எடுத்துக்காட்டாகும். 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களமொழிச்சட்டவாக்கம், கல்லோயாச் சிங்களக் குடியேற்றத் திட்டம் என்பன நிகழ்ந்த போது அதே ஆண்டு இச்செயற்பாடுகளுக்கு எதிரான தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதாக இப்பாடலை அவர் பாடினார்

***கூண்டிலே அடையுண்ட கிளியைப் போலே***
***குலப்பெருமை குறைந்தடிமையாகி விட்டோம்***
***மீண்டிடவே வழியுரைத்துக் காக்க வேண்டும்***
***மேத்தானதாக்கள் உரை தோற்க வேண்டும்***
***தூண்டிலிலே பிடிபட்ட மீன் போலானோம்***
***துரைத்தனங்கள் பேசுகிறார் துட்டர் கூட்டம்***
***மாண்டிடவே மயிலெடுத்து வாருமையா சுவாமி***
***மன்னு திருக்கோயிலுறை மகிமை வேலே***

என்று இனவாத செயற்பாடுகளை முருகனிடம் முறையிடுகின்ற பாணியிலே கடுமையாக விமர்சனம் செய்வதாக அப்பாடல்கள்அமைகின்றன.அவரதுவார்த்தைப் பிரயோகங்களும் மிகவும் கடுமையானதாக அமைந்தன.

1980 இல் இருந்து வடகிழக்கில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையில் இப்புலவர்கள் யுத்த அவலச் சித்திரிப்புக்களைப் பிரதான பாடு பொருளாகக் கொண்டனர். முக்கியமாக கிராம மட்டத்திலே தாம் அனுபவித்த பல்வேறு அவலங்களை அவர்கள் பாடுபொருளாக்கினர். அவை அவர்களது சொந்த அனுபவங்களாகவே அமைந்தன. தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தல், தப்பி ஓடுதல், அகதிநிலை எனப் பல்வேறு அவலங்களையும் அவர்கள் உடனுக்குடன் பாடல்களாகப் பாடினர். அகதி அம்மானை, அகதிகளின் அநியாயத் துயர வரலாற்று அம்மானை, இலங்கையின் கோலத்து அம்மானை, இலங்கை வன்செயல் கும்மி போன்ற நெடும் பாடல்களை மட்டுமன்றி பல்வேறு யுத்த அனுபவங்களையும் அவர்கள் உடனுக்குடன் குறும் பாடல்களாகவும் கட்டிப் பாடியுள்ளனர்.

***'செல்லப்போட்டு அடிச்சிஅடிச்சி துரத்துறாங்க சனத்த***
***தெறிகெட்டு ஓடிஓடித் தேடுதிடா இனத்த***
***எடுத்த சாமான் கையில போட்ட சாமான் வீட்டில***
***எடுத்துப் புடிச்சி ஓடிப் போனம் வலயிறவு றோட்டில..'***

என்று தொடங்கும் பாடலை கதிர்காமத்தம்பி என்பவர் பாடினார். 2007 ஆம் ஆண்டு மட்டக்களப்புப் படுவான்கரைப் பகுதியில் இடம்பெற்ற பாரிய செல்வீச்சுக்கு மத்தியில் தானும் தனது பிரதேச மக்களும் பட்ட அவஸ்தைகளையும் பின்னர் அகதி முகாமில் இருந்து அனுபவித்த துன்பங்களையும் இப்பாடலிலே அவர் வெளிப்படுத்துகின்றார். சித்திரவேல் என்பவரும் இதே அனர்த்தத்தில் தாம் பட்ட துன்பங்களை அனுபவங்களை 'அகதிகளின் அநியாயத் துயர வரலாற்று அம்மானை' என்ற தலைப்பிலே பாடி சிறு நூலாக வெளியிட்டுள்ளார்.

கிராமியப் புலவர்களின் பாடல்களில் கணிசமானவை குறிப்பிட்ட ஆலயங்கள், தெய்வங்கள் மீது பாடப்பட்டவையாகும். ஆனால் யுத்த காலத்திலே பாடப்பட்ட இத்தகைய பாடல்களை நோக்கும்போது அவற்றிலே சமகால யுத்த நிலையினால் பாதிக்கப்பட்ட உணர்வு வெளிப்பாட்டைக் காணமுடிகின்றது. மட்டக்களப்பு-அமிர்தகழி பிள்ளையார் அகவல், நல்லைக் கந்தன் தோத்திரம், கொக்கட்டிச் சோலை ஈஸ்வரர் காவடிச் சிந்து ஆகிய பல பாடல்களிலும் சமகால யுத்த அவலங்களின் இழையோட்டத்தைக் காணலாம்..

***'வெறிபிடித்துப் போச்சுதையா வீணருக்கு***
***விளையாட்டாய் உயிர்களெல்லாம் மாய்ந்து போக***
***நெறிமுறைகள் இல்லாத நிலையினாலே***
***நித்தநித்தம் உயிர்ப்பலிகள் நேருதையா'***

மட்டக்களப்பு-அமிர்தகழி பிள்ளையார் அகவலில்வருகின்றஇப்பாடலில்போர்ச்சூழலில் பட்டுழலும் அவலம் சித்திரிக்கப்படுகின்றது. தன் மத உணர்வினைப் பாடவந்த புலவர் தன் யுத்த அனுபவங்களை இணைத்துக்கொள்கின்றார்.

அதேவேளை கிராமியப் புலவர்களின் யுத்த அவலச்சித்திரிப்புப் பாடல்களில் பல முற்றிலும் மதநிலைப்பட்ட, பிரார்த்தனைப் பாடல்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. தாம் அனுபவிக்கும் துயரங்களை இறைவனிடம் முறையிடுவதும் பரிகாரம் தேடுவதுமாக அப்பாடல்கள் அமைகின்றன. தமிழ் அகதிகளுக்கான மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம், முருகன் பத்திப்பதம் ஆகிய பாடல்கள் முற்றிலும் அரசியல் அவல வெளிப்பாட்டுப் பாடல்களாகும்.

கிராமியப் புலவர்களின் யுத்தநிலை பற்றிய பாடல்களின் முக்கியத்துவங்களில் ஒன்று அவை தமது கிராமங்களிலே நடந்த பல்வேறு யுத்த சம்பவங்கள், அனர்த்தங்கள் பற்றிய வரலாற்றுப் பதிவுகளாக உள்ளமையாகும். இத்தகைய நிகழ்வுகளில் அதிகமானவை வரலாற்றில் எங்கும் பதியப்படாதவையாகும். இவற்றிலே சில பாடல்கள் நெடும் பாடல்களாகும். இவை பல்வேறுகாலகட்டங்களிலும்இடம்பெற்றயுத்த நிகழ்வுகளையும் மக்களின் அவலங்களையும் வரலாற்று ஓட்டத்துடன் பதிவு செய்வனவாக உள்ளன. 'இலங்கையின் கோலத்து அம்மானை' என்ற கையெழுத்துப் பிரதி இதற்கு உதாரணமாகும். இனவிரிசல் ஆரம்பித்தது முதல் சமகாலம் வரையில் மக்களின் அவல வாழ்வினைப் பதிவு செய்துள்ள இப்பாடல் ஒரு வரலாற்று ஆவணமாகவும் அமைகின்றது.

இத்தகைய யுத்த அவலப் பாடல்கள் யுத்த அவல அனுபவங்களாக மட்டுமன்றி வெளிப்படையான விமர்சனப் பண்பும் கொண்டவையாக உள்ளமை அவற்றின் மற்றுமொருமுக்கியத்துவமாகும். இப்பாடல்கள் வெளியிலே பிரபல்லியமடையாமல் போனமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

எனவே ஈழத்து எழுத்து மரபு சார்ந்த கவிதைகளிலே வெளிப்பட்ட அரசியல் உணர்வுப் போக்குகளுக்குச் சமாந்தரமான போக்குகளை கிராமியப் புலவர்களது பாடல்களும் கொண்டிருந்தமை தெரிகின்றது. இவ்விடயத்தில் கிராமியப் புலவர்களின் பாடல்களின் சிறப்பம்சம் என்னவெனில் கிராமநிலைப்பட்ட அனுபவங்களைப் பதிவு செய்துள்ளமையும் நேரடியானதும் இயல்பானதுமானபோக்கிலேஇவ்வுணர்வுகளை வெளிப்படுத்தியமையுமாகும்.

ஞானம் 26ஆம் இதழில் ஜுலை 2002

**கலாநிதி துரை. மனோகரன் கட்டுரையில்...**

சிறு சஞ்சிகைகள் இலட்சிய நோக்குடன் வெளிவருபவை. தனிமனித முயற்சிகளே அவற்றில் மேலோங்கியிருக்கும் (சிறு குழு முயற்சிகளும் இடம் பெறுவதுண்டு). அவற்றின் அட்டைப்படங்களும், அவை வியாபார நோக்கில் வெளிவருபவை அல்ல என்பதை இனங்காட்டிக்கொள்ளும்.

ஞானம் சஞ்சிகையும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஞானத்தின் பலமுள்ள அம்சங்களாக மூன்றினைக் குறிப்பிடலாம்.



1. 2000ஆம் ஆண்டு யூன்முதல், மாதம் தவறாமல் வெளிவருவது.
2. அடக்கமான முறையில் கனதியான பரிமாணத்தைக் கொண்டு விளங்குவது.
3. காலந்தோறும் புதிய புதிய அம்சங்கள் சேர்க்கப்படுவது.

ஞானம் இப்போது மட்டுமன்றி, எதிர்காலத்திலும் பேசப்படும் சஞ்சிகையாகவும், பேணப்படும் சஞ்சிகையாகவும் விளங்கும்.

1 ஆம் ஞானத்தில் பிரசுரமான போரிலக்கியக் கவிதை

# பாய்த்தோணி



.................
இன்று எப்போதும்
மடிதாங்கி
பசியின் சின்னம்.

நீந்திச் சுழியோடி
தோய்ந்து பழக்கப்பட்ட
உயிர் மூச்சுகளுக்கு
என்னதான்
படையெடுப்புச் செய்தாலும்
தடையொன்று போடும் அரச நெறி
ஆட்சி செய்கின்றது.

இதனால்
படகிருந்தும் படகோட்ட
கடலில்லை,
கடலில் யுத்தக் கப்பல்கள்.
கடலில் மீனிருந்தும்
மீன் பிடிக்க ஆளில்லை,
மீனவர்கள் அரச கைதிகள்.

நங்கூரமெல்லாம்
ஆயுதங்களுடன் வலம் வரும்
நீர்மூழ்கிக் கப்பல்களாகவும்
மிதந்து நிற்கும்
'போயர்'க்க ளெல்லாம்
கடற் கண்ணி வெடிகளாகவும்
பேசும் பாஷையாய்
மாறி விட்டன.

தண்டயலுடன்
தண்டுகளைக் கொண்டு
வலித்துச்சென்று

மீன்வாடியை வாடாமல் வைப்பதற்காய்
தண்டுக்கைகளைத் தேடினோம்
அந்தக் கைகளில்
தண்டுக்கைகளுக்குப் பதிலாக
துப்பாக்கிகள் இருந்தன.

அக்கரைக்குச் சென்று
அகதியாகச் சரி
நிம்மதியாய் வாழ்ந்திடலாமென
தோணிக்கொரு
கொல்லாவைத் தேடினோம்
எம் பிரதேசக் காடுகளில்
அந்தக்கொல்லா மரக்கட்டைகளில்லை
படை முகாங்கள்தான் உள்ளன.

நீல நிறக்கடல்
சிவப்பு நிறக் குருதிக் கடலாய்
இரைகின்ற போது
கரைகின்றன கடற் காகக் கூட்டம்
கடலில் மிதக்கும் மீன்களையல்ல.....
மனிதப் பிணங்களை உண்பதற்காய்.

இப்பொழுது
குடாக்கடலில்
மீன்கள் கொதிப்பதில்லை,
அவையும்
தன்னுயிரைப் பாதுகாத்துக்
கொள்வதாய்
புலம்பெயர்ந்து சென்று
அகதிகளாய்
இன்னுமொரு இடத்தில்
வாழ்கின்றன.

அதனால்தான்
இன்று மீன்களின்
விலை அதிகம்.

ஒன்று
நிச்சயம்
நாளையொரு காலத்தில்
இருந்த இடத்திற்கு
மீண்டும் மீன்கள் வரும்.

மடிதாங்கி வெடிக்கும்
மீனின் விலை குறையும்
நீரோட்டம் ஓடும் வேகத்தில்
பாய்த் தோணியும்
சுற்றும் காற்றில் சுதந்திரமாய்
யாத்திரை செல்லும்.

- இக்பால் அலி

# இங்கு வாழ விருப்பமில்லாமல்தான் பொங்குகடல் தாண்டுகிறார்!



149ஆம் ஞானத்தில் பிரசுரமான போரிலக்கியக் கவிதை

கவிஞர் செ. குணரத்தினம்

முள்ளிவாய்க்கால் சமரோடு இறுதியுத்தம்
முடிந்து விட்ட ஈழப்போர், மக்களுக்கு
அள்ளிவைத்த துயர் துன்ப ஆக்கினைகள்
அழியாமல் இன்னுமிங்கே தொடர்வதென்ன?
இல்லையெனில் வடகிழக்கார் கப்பலேறி
ஏன் வெளியே கடல்தாண்டி உயிரைக்காக்க
செல்ல வேண்டும்? இதை எவரும் புரிந்தாரில்லை.
சிந்தித்துப் பார்ப்பதற்கும் முயலவில்லை!

கொலை களவு கற்பழிப்பு, ஆள்கடத்தல்
கொள்கை நீதி இல்லாமல் சிறையடைப்பு
தொலையாமல் இன்னுமிங்கே தொடர்வதென்ன?
துயரவாழ்வு சுனாமியாகச் சூழுமானால்
அலைபாயும் கடல்கடந்து தமிழர் கூட்டம்
ஆப்பிழுத்த குரங்காட்டம் வாழ்ந்திடாமல்
விலை கொடுத்து வெளிநாடு சென்று வாழ
விரும்பாமல் வேறென்ன செய்வார் சொல்வீர்?

இருந்த வீடு வாசலெல்லாம் அழிந்து போச்சு!
இருப்பதற்குத் தகரத்தால் கொட்டில்போட்டு
“இருங்களிதில்” என்றார்கள் இருந்து கொண்டோம்,
எங்கள் வாழ்வு செழிப்பதற்கு வழியைக்காணோம்
ஒருத்தருக்கும் தொழிலில்லை, உழைப்பில்லாமல்
உண்பதற்கு, உடுப்பதற்கு, குழந்தைகட்கும்
வருத்தமேதும் வந்தாலும் என்ன செய்வோம்?
வாழ்க்கையெல்லாம் அடிபட்டு நொந்து போனோம்,

சந்தேகக் கண்கொண்டு எம்மைப் பார்த்தால்
சரித்திரத்தில் ஒருநாளும் சமாதானத்தை
இந்த நாட்டில் நாம்காண இயலாதம்மா!
இதுவரையில் நடந்த போரை மனதில்வைத்து,
எங்கள் வாழ்வைச் சீரழிக்கும் திட்டம்போட்டால்
இங்கெவரும் வாழ்வதற்கு விரும்பமாட்டார்.
அந்த ஒரு காரணம்தான் அலைகடலை
அவர் தாண்டிப் போகின்றார் அறிந்து கொள்வீர்!

2001ஆம் ஆண்டு 'ஞன்சாட்டில்' பதிவான கவிதை (பக்கம் 1661-1662)

# காரணங்கள்

பெனி

தேசம் எரிவதற்கும்
தீய்ந்து போவதற்கும்
நீயும் நானும்
காரணம்தான் தோழா..

96ல்
கிருஷாந்தி கொலையுண்ட போது
"சிக்ஷரிலும் பவுண்ட்ரி"யிலும்
சிலாகித்துக் கிடந்தோம்.

செம்மணியின் அம்மணங்கள்
கல்லறைக்குள் கல்லறையாய்
மூடப்படுகையில் - நாம்
அகப்பாடல்களில்
மூழ்கிக் கொண்டிருந்தோம்.

98. செப்டெம்பர்
வெவல்வத்தை - அருளப்பொல
நெருப்பால் வேகுகையில்
மரக்கரி தோட்டத்திற்கு
மருந்தடித்துக்
கொண்டிருந்தோம்.

பிந்துனோயாவில்
மனிதம் மரிக்கையில்
ஹீரோக்களின் சாகஸங்களில்
புல்லரித்து நின்றோம்.

தலவாக்கல
லயங்கள் நொறுங்குகையில்
"மனையாள் மண்டபம்
கிருஷ்ணதாசி - "
மயங்கிக் கிடந்தோம்.

இப்போது
சிவமணியும் விஜிகலாவும்
தெருவில் நிற்கையில்
பாதி என்னிடம்
மீதி உன்னிடம் - என
இதய ராகங்களிடம்
காலத்தைத் தொலைக்கிறோம்.

கிருஷாந்தி - கோணேஸ்வரி
ரஜனி - சாரதாம்பாள்
ஹமாலிட்டா விஜித்தா
சிவமணி விஜிகலா - என
பட்டியல் நீள்கையில்
நாம்
உண்மைகளை அடைக்காது
மௌனங்களால்

தேசம் எரிவதற்கும்
தீய்ந்து போவதற்கும்
நீயும் நானும்
காரணம்தான் தோழா..

**(ஞானம் ஜூன் 2001 பின்னட்டைக் கவிதை)**



**செங்கை ஆழியான்**

*சிறுகதை*

# ஷெல்லும் 7 இஞ்சிச் சன்னங்களும்

- செங்கை ஆழியான் -

கூடிக் குறைந்தால் பன்னிரண்டு வயது இருக்கும். முகத்தில் இனந்தெரியாத சோகம், தேமலாக அப்பிக் கவிந்திருக்க, வயதுக்கு மீறிய பெருந்தன்மையும், பொறுப்பும் விழிகளில் தெறிக்கும். புலரா ஓர் அதிகாலை வேளையில், வீட்டு வாசலில் அவனை நான் கண்டேன். மதிலுக்கு மேல் பூத்துச் சிலிர்த்திருக்கும் மல்லிகைப் பூக்களை மொட்டுக்களோடு, வீட்டார் விழித்து எழுவதற்கு முன்னரே, ஒடித்துச் சென்று, மாலை கட்டுபவர்களுக்கு விற்கும் சிறுவர்களில் ஒருவனாக எனக்கு அவன் தென்படவில்லை.

அரைக் காற்சட்டையும் கிழிந்த பெனியனுமாக, பரட்டையாகப் பறக்கும், தலைமயிர் சிலும்பிக் கிடக்க, தோளில் சாக்கு ஒன்றைச் சுமந்தபடி அவன் என்முன் நின்றிருந்தான். சாக்கில் கிடந்த பொருட்களின் பாரத்தில், வலது பிஞ்சுத்தோள் ஒருபுறம் சரிந்து கிடந்தது.

'சேர்.....' என்றான். குரலில் பணிவும் இனிமையும் சேர்ந்து ஒலித்தது.

'என்ன?'

'வெறும் போத்தல்கள் விக்கிறதுக்கு இருக்கா.....'

'இருக்கு'

'தாங்கோ சேர்..... நல்ல விலை தருகிறேன்'.

அவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்துவிட்டு எனக்குள் சிரித்துக் கொண்டேன். வெற்றுப் போத்தல்கள் பல சிறிதும் பெரிதுமாக மூலையில் குவிந்து கிடக்கின்றன. நல்ல விலையா கிடைக்கப் போகிறது?

அவன் அப்போத்தல்களை வகை மாதிரியாகத் தரம் பிரித்து வைத்தான்.

'இந்தச் சாராயப் போத்தல்களுக்கு நான்கு ரூபாய்ப்படி தாறன்.....'

'நான்கு ரூபாவா? அண்டைக்கு ஒருத்தன் இரண்டு ரூபா கேட்டான்?'

'அது எனக்குத் தெரியாது சேர்.

நான் நான்கு ரூபா தாறன். இந்த மைப் போத்தல்களுக்கு இருபத்தைந்து சதப்படி தாறன்'.

'அண்டைக்கு வந்தவன் பத்துச் சதம் கேட்டானே?.....'

எனக்கு அந்தப் பையன் மீது இரக்கம் ஏற்பட்டது. பரிதாபமாக அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.

'தம்பி, உனக்கு விலையள் தெரியாது போல இருக்குது. உப்பிடி வாங்கி எக்கணம் எப்படி விற்கப் போறாய்? நட்டப்படப் போறாய்?.....'

'இல்லை சேர்..... இந்த விலைக்கு வாங்கினாலும் சாராயப் போத்தலில் ஒரு ரூபாவும், மைப் போத்தலில் பத்துச் சதமும் கிடைக்கும் சேர். அநியாய விலைக்கு வாங்கக் கூடாது சேர். அந்தக் காசு தங்காது'.

அவன் மீது எனக்கு ஒருவித மதிப்புத் தோன்றுவதை உணர்ந்தேன்.

'சரி எடுத்துக் கொள்..... உனக்கு என்ன பெயர்?'

'வேலு' என்றான் அவன்.

'அப்பா அம்மா?....'

அவன் என்னை நிமிர்ந்து பார்த்தபோது, விழிகள் கலங்கியிருப்பது தெரிந்தது. தலையைக் குனிந்து கொண்டபடி, போத்தல்களைச் சாக்கினுள் அடுக்கியவாறு மெதுவாகச் சொன்னான்: -

'வவுனியாவில் குடியிருப்புக்கு வந்த ஆமிக்காரர் ஐயாவைச் சுட்டுச் சாக்காட்டிப் போட்டினம். அம்மாவுக்கும் இடுப்பில் சூட்டுக்காயம். நாங்கள் இங்கை ஓடி வந்திட்டம். ரெண்டு தங்கச்சி. ஒரு தம்பி. நான்தான் உழைச்சு அவங்களை காப்பாத்துறன்'.

நான் இரக்கத்தோடு அவனைப் பார்த்து ஆறுதல் கூற முயன்றேன். இந்த இளம் வயதில் இப்படி ஒரு சுமையா? அவனை ஒத்த சிறுவர்கள் கவலையின்றி ஓடியாடி, படித்துத் திரிகின்ற வயதில், குடும்பப் பாரத்தைச் சுமக்க முடியாத இளம் குழந்தை..... சிட்டுக்குருவியின் தலையில் பனம்பழத்தை வைத்தது போல..... சுமை. இறக்கி வைக்க முடியாத சுமை.

என்ன அநியாயம்?

'இந்தப் போத்தல்களுக்கு நீ காசு தர வேண்டாம்'.

அவன் என்னை ஏறிட்டுப் பார்த்தான். என் இரக்கத்தை அவன் வேண்டவில்லை.

சாக்கினுள் அடுக்கிய போத்தல்களை ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வைக்க முயன்றான்.

'பொறு.....' என்று அதட்டினேன்.

'சும்மா எனக்கு வேணாம் சேர்.....'

'சரி, சரி காசு கொடு'.

என் மனதில் அவன் ஒரு படி உயர்ந்து அமர்ந்து கொண்டான்.

* * *

ஒரு ஞாயிற்றுக் கிழமை பின்னேரம் 'கேற்'ரடியில் நின்றிருந்த போது, வேலுவை மீண்டும் சந்தித்தேன். பழைய ஒரு சயிக்கிலில் வந்து என் அருகில் குதித்து இறங்கினான். சயிக்கிலின் கரியலில் ஒரு பெட்டி. அதனுள் பழைய இரும்புச் சாமான்கள்.

'என்ன வேலு. போத்தல்கள் வியாபாரம் விட்டிட்டியா?'

'இல்லை சேர். இந்த ஏரியாவில் இருந்த போத்தல்கள் எல்லாம் வாங்கிட்டன். அதனால இப்ப பழைய இரும்பு வாங்குறன். இருக்கா சேர்'.

'உது ஆருடைய சயிக்கில்?'

'கடை முதலாளியின்ரை..... வாடகை தான். இருக்கா சேர்?'

'என்ன?'

'பழைய இரும்பு, கம்பி, கல்வனைஸ்ட் பைப்புகள்'

'நீயே வளவுக்கை கிடந்தால் பார்த்துப் பொறுக்கி எடு.'

என்னால் நம்பவே முடியவில்லை என் வளவுக்குள்



கிடந்த உதவாத இரும்புப் பொருட்களைத் தேடிப் பொறுக்கி ஒரு சிறு குவியலாகக் குவித்துவிட்டான். கணக்கிட்டு நூறு ரூபா தந்த போது நான் வியந்து போனேன்.

'நீ உருப்பட மாட்டாய்.....' என்று அவனைச் செல்லமாகத் திட்டினேன். 'வேலு' பவுடர் டப்பாக்கள் வாங்கிறான்கள். என்னட்டை ஐந்தாறு கிடக்குத் தரவே?'

அவன் வேகமாகக் குறுக்கிட்டான்.

'ஒருக்காலும் பவுடர் டப்பாக்களை விக்காதீங்கள் சேர். அவங்கள் அதுகளை வாங்கி. அதுகளுக்குள் கண்ட கண்ட மாக்களைநிரப்பி, பவுடர்எனவிற்கிறான்கள். அநியாயம்!'

நான் விக்கித்து நின்றேன்.

'இரும்பை வாங்கி முடிந்த பிறகு என்ன செய்வாய்?'

'பழைய அலுமினியம் வாங்குவேன் அடுத்த முறை வாறன் எடுத்து வைங்க சேர். நான் சிரித்தேன்.

* * *

மூன்றாம் தடவை அவன் என் வீட்டிற்கு வந்து, ஓட்டையாகி மூலையில் ஒதுங்கிக் கிடந்த அலுமினியப் பாத்திரங்களை வாங்கிச் சென்றான்.

'எப்படி வேலு?'

'இப்ப பரவாயில்லை சேர்..... பட்டினி கிடக்காமல் சாப்பிடுறம். அம்மாவுக்கும் கொஞ்சம் சுகம். அரிசி இடிக்கப் போறா. தங்கச்சிமாரும் தம்பியும் பள்ளிக்கூடம் போகினம்.'

'நீ போகவில்லை?'

'நானா? நான் போகாட்டில் தான் அவை போக முடியும் சேர்.'

அவன் புறப்படும் போது கூறினான் -

'நாளைக்கு வாறன் சேர். உங்களிடம் விற்பதற்கு இன்னொரு பொருள் இருக்கிறது..... இப்ப என்னிடம் காசு போதாது. நாளைக்கு வாறன்.'



'வேலு நில்லடா..... என்னெண்டு சொல்லு. காசில்லாட்டில் பரவா யில்ல பிறகு தருவாய் தானே?'

'உங்கட கராய்ச்சுக்கு வெளி யில ஒரு பழைய கார் ரேடியேற்றர் கிடக்குது. செம்பு ரேடியேற்றர். நல்ல விலைக்கு விக்கலாம்.'

'அது கூடாதென்று எறிஞ்சு விட்டிருக்கிறன். நீ வேணுமென்றா எடுத்துக் கொண்டு போ.....'

'அது நூறு ரூபாவுக்கு மேல் போகும் சேர். நாளைக்கு வந்து வாங்கிறன்' என்றபடி அவன் சயிக்கிளில் தாவி ஏறி, மறைந்தான்.

'நல்ல பையன்..... பொறுப்பான பையன்.'

மறுநாள் வந்து வாங்கிப் போனான்.

'போத்தல் வியாபாரம், பழைய இரும்பு வியாபாரம், அலுமினிய வியா-பாரம், ரேடியேற்றர் வியாபாரம் எல்லாம் பார்த்திட்டாய். இனி என்ன செய்யப் போறாய்?.....' என்று கேட்டேன். 'ஏரியாவை மாத்தப் போறியா?'

அவன் சிரித்தான்.

'தொழிலா இல்லை சேர்? கொஞ்ச நாளைக்கு கன்னாதிட்டி நகைக்கடைகளுக்கு முன்னால் உள்ள வீதிகளைத் துடைத்து மண் அள்ளப் போறன். அள்ளிக் குடுத்தால் நல்ல கூலி தருவினம்'.

'ஏன் அந்த மண்?'

'சிந்துற பவுண் தூள் அதுக்குள்ள கிடக்குமாம்.'

மாலை வேளைகளில் நகைக் கடைகளுக்கு முன்னுள்ள வீதிகளை, பிறஸ்களினால்கூட்டிக்குவித்து, சாக்குகளில் மண் நிரப்பி எடுத்துச் செல்வதை நான் கண்டிருக்கிறேன்.

'அது உனக்கு வேண்டாம். வேறு தொழில் பார்'.

அவன்என்னைஏறிட்டுப்பார்த்துவிட்டு, 'சரி, சேர்.....' என்றான்.

* * *

யாழ்ப்பாண நகரம் திடீரெனக் கதிகலங்கியது. கோட்டைப் பக்கம் இருந்து வெடித்த ஒரு குண்டின் சத்தம். நகரத்தில் நின்றிருந்த மக்களை கிலிகொள்ள வைத்தது. வாகனங்கள் விரைந்து மறைந்தன. கணப்பொழுதில் யாழ்ப்பாண நகரம் வெறிச்சோடிப் போனது.

கடை ஒன்றினுள் பாதுகாப்பாகப் பதுங்கி இருந்த நான், வேகமாக எவரையும் காணவில்லை. மரக்கறிச் சந்தையில் நின்றிருந்த மரத்தின் பின்னால் ஒருவன் பதுங்குவதைக் கண்டேன். பயத்துடன் பார்த்தபோது, அவன் வேலு எனத் தெரிந்தது..... பாவம் அகப்பட்டுக் கொண்டானோ?

'வேலு... ஓடிவா... ஷெல் அடிக்கப் போறான்கள். ஹெலிக்கொப்டர் சத்தமும் கேட்குது சுடப் போறான்கள் ஓடி வாடா.....'

'நீங்கள் போங்க, சேர்..... கெதியா ஓடிப் போங்க சேர்.....'

அடங்காத கோபத்துடன் நான் அவனை நோக்கி ஓடிப் போனேன்.

'உனக்கென்ன விசரா..... வாடா ஷெல் அடிக்கப் போறான்கள் ஹெலியில் இருந்து சுடுகிற சன்னங்கள். ஏழு இஞ்சி நீளத்தில், தெரியுமே..... வா.....'

அவன் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு தலை குனிந்தான்.

'அதுக்காகத்தான் காத்திருக்கிறன் சேர்.....'

நான் புரியாமல் அவனைப் பார்த்தேன்.

'ஷெல் விழுந்து சிதறினால், அதில் இருந்து சிதறுகிற பித்தளைத் துண்டுகள், கெலிக்கொப்டர் சுடுகிற வெற்றுச் சன்ன பித்தளைக் கவர்கள், இவற்றைச்சேகரித்தால் நல்ல விலைக்கு விக்கலாம் சேர்.'

ஷெல் என்பது என் மண்டைக்குள் சிதறுவது போல உணர்ந்தேன். தூரத்தில் ஹெலியின் சத்தம் எழுகிறது.

*(மல்லிகை ஜூலை 1986)*



# போர்க்காலத்துப் புனை கதைகளும்

# அவை தரும் வரலாற்றுக்கான தகவல்களும்

இலங்கையின் போர்க்கால இலக்கியம் பற்றியும் அவை தரும் தகவல்கள் பற்றியும் ஆய்வு செய்வதென்பது ஓர் இமாலய முயற்சியாகும். இங்கு சிறு துளியாக மிக மேலோட்டமாகச் சில படைப்பாளர்களின் இலக்கியப் பதிவுகளைக் காட்டுவதற்கு எழுதப்பட்ட இந்த ஆய்வுக்கட்டுரை ஓர் ஆரம்பமுயற்சியாகும். இக் கட்டுரையில் சில முக்கியமான எழுத்தாளர்களின் படைப்புக்கள் நிச்சயம் விடுபட்டிருக்கலாம். அந்தக் குறைகள் யாவும் இன்னொரு வாய்ப்பில் நிறைவு செய்யப்படலாம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு சில குறிப்பிட்ட எழுத்தாளர்களின் படைப்புக்களே இங்கு ஆய்வுக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

உலகப் போர்க் காலத்து இலக்கியங்கள் யாவும் அமர காவியங்களாக இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவை வரலாற்றுப் பொக்கிஷங்களாக நாளைய மனிதனின் தேடலுக்கு ஆவணப் பதிவுகளாக காத்திருக்கின்றன.

இந்த இலக்கியப் பதிவுகள், போர் பற்றிய கவிதைகளாக, போர் பற்றிய கதைகளாக, போர் பற்றிய கட்டுரைகளாக ஒவ்வொரு பிரிவாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விலக்கியங்களின் படைப்பாளிகளைத் தேடும்போது, சாதாரண குடிமக்கள், இலக்கிய வாதிகள், கலைஞர்கள், போரிலே ஈடுபட்டு மடிந்துபோன இராணுவத்தினர் என முன்னால் நிற்கின்றனர். போர்க் காலத்துச் சம்பவங்கள் பற்றியதோடு, போரியல் சம்பந்தப்பட்ட படைப்புக்களும் ஏராளமாக எல்லா நாடுகளிலும் எழுதப் பட்டிருக்கின்றன.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களுக்கப்பால், அதிகமாக போர்க் கால கவிதைகள் எழுதிய நாடுகள் ஈராக், ஆப்கானிஸ்தான், போக்லண்ட், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, வியட்நாம், அல்ஜீரியா, ரஷ்யா, சீனா, ஜப்பான், பிரான்ஸ், என்று உள்ளடங்குகின்றன. இவைகளில் ஒவ்வொரு தனி நாட்டிலும் தேசிய ரீதியில் ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்கள், தங்களது உரிமைகளுக்காகப் போராடி, அந்தப் போராட்டம் போராக பரிணாமம் பெற்ற வரலாறுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த பரிணாமம் பெற்ற வரலாற்றில் வியட்நாம், அல்ஜீரியா, பாலஸ்தீனம், போன்ற நாடுகளுக்கு அடுத்து, இலங்கைத் தமிழர்களின் போர் முன்னிலை வகிக்கின்றது.



**மு.சிவலிங்கம்**

தேசியரீதியில் ஒதுக்கப்பட்டு, மிகவும் கொடூரமாக ஒடுக்கப் பட்ட சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் போராட்டம், பிரித்தானியா வழிவிட்ட சுதந் திரத்தோடு ஆரம்பமாகியது. அவர்களது உரிமைக்கான எழுச்சி அறப்போராட்டமாக, அகிம்சை போராட்டமாக, சாத்வீகப்

போராட்டமாக ஜனநாயகத் தன்மையை அரசுக்குக் காட்டிய போதும், அவர்களது உரிமைக்கான எத்தனிப்புக்கள் அவமானப்படுத்தப்பட்டு உதாசீனப் படுத்தப்பட்டன. இந்த அவமானமும், உதாசீனமும் ஓர் ஆட்சியின் ஆதிக்கமாக மட்டுமில்லாது, ‘சிங்கள பௌத்த மேலாதிக்கம்’ எனும் இனரீதியாகவும், மத ரீதியாகவும் ஒருங்கிணைந்த சர்வாதிகாரப் பகையாக மாற்றம் கொண்டதாக விளங்கியது.

இந்த ஆதிக்கத்துக்கு எதிராக அகிம்சை வழிக்கு அப்பால் ஒரு ‘ஆத்திரப் பரம்பரை’, ஒரு “ஆவேசப் பரம்பரை” முளையிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இனவாத ஆதிக்கத்தின் முதல் அடையாளம் யாழ்ப்பாணத்தில் போடப்பட்டது எனலாம். 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் பதினொரு அப்பாவித் தமிழ் மக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டனர். இதுவே அரசின் முதலாவது வெளிப்படையான இன அச்சுறுத்தல் எனக்கொள்ளலாம்.

இந்தச் சம்பவத்துக்கு அடுத்து கல்வித் துறையில் முன்னேறி வரும் தமிழ்ச் சிறுபான்மை இனத்தின் வளர்ச்சியை ஒடுக்குவதற்கு திட்டமிட்ட தரப்படுத்தல் என்ற நடவடிக்கை இளைய பரம்பரையினரின் ஆவேசத்தைக் கிளப்பியது. அந்த எழுச்சியே இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தில் தள்ளியது.

1977, 1983 ஆண்டுகளில் நடந்த இன வன்முறைகளின் தாக்கமே தமிழர்களைத் தங்கள் சுய நிர்ணய உரிமைக்கான அவசியத்தையும், தனி நிர்வாக அலகுக்கான தேவையையும் வலியுறுத்தி நின்றன. இதற்கான போராட்டங்களே போராக மாறியதன் வரலாறாகும். இந்த விளக்கமே இந்த ஆய்வுக் கட்டுரைக்கான அறிமுகமாகும்.

இலங்கைப் போர் பற்றி எழுதப்பட்ட இலக்கியங்களில் இனப் பிரச்சினையைப் பகைப் புலமாகக் கொண்ட கவிதை இலக்கியங்கள் நிறையவே எழுதப்பட்டுள்ளன.

போர்க் கால உலகக் கவிதை இலக்கியங்களில், இலங்கைக் கவிதை இலக்கியங்களே மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றன. போரில் கொல்லப்பட்ட ஒரு வியட்நாமிய விடுதலைக் கவிஞனின் “என்று துயிலெழுவாய்.. என்னருமைத் தாயகமே..?” என்ற சுதந்திரக் கவிதை, இலங்கைத் தமிழ்ப் போராளிகளால் பெரிதும் பேசப்பட்டது. மீள் மொழியாக்கம் செய்யப்பட்டு, விடுதலைக் கீதமாக முன்னிலைபடுத்தப்பட்டது. இங்கு போர்க்காலக் கவிதை இலக்கியத்துக்கப்பால், போர்க் கால கதைகள், நாவல்கள் கூறும் தகவல்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதுவன்றி அந்த படைப்புக்கள் பற்றி விமர்சனம் செய்யவோ, கருத்துரை வழங்கவோ இக்கட்டுரை முற்பட வில்லை.

தமிழ் மக்களின் போராட்டத்துடன் தொடர்புபட்ட முக்கியமானதொரு நூல் அருளர் எழுதிய “லங்காராணி” நாவலாகும். 1978ஆம் ஆண்டு 256 பக்கங்களில் இந்த நாவல் வெளிவந்துள்ளது. 1988ஆம் ஆண்டு இதன் இரண்டாம் பாகம் வெளிவந்துள்ளது. 1977ஆம் ஆண்டு இனக் கலவரத்தின்போது கொழும்பிலிருந்து தமிழர்களை அகதிகளாக யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச்சென்றகப்பலின்பெயர்தான் லங்காராணி. யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்லும் கடல் பயணத்தின்போது, அகதிகளின் உணர்வலைகள் ஊடாக இனப் பிரச்சினையின் பூதாகாரமான தன்மையும், விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தையும் இந் நாவல் அழகாக சித்திரித்துக் காட்டியுள்ளது.

போராட்டத்தில் நேரடியாக இளைஞர், யுவதிகளை

ஈடு படுத்துவதற்கு தூண்டுகோலாக இந்த நாவல் அமைந்திருந்தது. கொழும்பி லிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வரை தமிழரின் தேசிய உரிமைகள் பற்றிய பாடங்களை கற்றுக் கொடுப்பது போன்ற பாத்திரப் படைப்புக்கள் இந்த நாவ லில் மிகப் பெரிய யுக்தியாக கையாளப் பட்டிருக்கிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு முதல் சிந்தனையை இந்த நாவல் இலக்கியமே வழங்கியுள்ளது எனலாம். இந் நாவலில் வருகின்ற ஒவ்வொரு கதா பாத்திரமும் நான்கு, ஐந்து பக்கங்களில் பேசும்..! விடுதலைச் சிந்தனையற்ற எந்த ஒரு வாசகனாலும் இந் நாவலை வாசிப்பது கஷ்டமாகும்..!

முறிந்த பனை The broken Palmyra என்ற நூலை ராஜினி திரனகம மற்றும் யாழ்ப்பாண மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்ற அமைப்பு 1996ம் ஆண்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டுள்ளது. இனப் பிரச்சினையின் ஒரு பரிமாணத்தையும், தமிழரின் போராட் டத்தின் வரலாற்றையும் இந்தியப்படை யின் வருகை, அதன் தாக்குதல் பற்றிய புலனாய்வும் அறிக்கைகளும் கொண்டதாகவிருந்தது. இது ஒரு சிறு-கதை அல்லது நாவல் புத்தகமல்ல. இது ஒரு கட்டுரை புத்தகமாகும். இந்த நூல் வெளிவருவதற்கு பிரதான பங்களிப்பு செய்த ராஜினி திரணகம என்பவர் இனந் தெரியதோரால் கொல்லப்பட்டார்.

பல போராட்ட அறிவியல் நூல்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகமே விளை நிலமாக இருந்தது என்றால் அது மிகை யாகாது. போரியல் பதிவுகள் யாவும் ஏராளமாக கவிதை, சிறுகதை, நாவல், இலக்கியத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

1980 களிலிருந்து நாவல், சிறுகதை இலக்கியங்கள் போர் சம்பவங்களைப் பகைப் புலமாகக் கொண்டு பெரி தளவு எழுதப் பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

போர்க்காலச் சூழலில் போரின் கொடு மைகள் பற்றியும், போரில் அழிந்து போன மக்களைப் பற்றியும், சமர்க் களத்தில் ஈடு பட்டுள்ள போராளிகள் பற்றியும் படைப் பிலக்கியவாதிகள் எவ்வாறு இலக்கியப் பதிவுகளாக்கியிருக்கிறார்கள் என்பதை அறிய, முதலாவது படைப்பாளி செங்கை ஆழியான் அவர்களின் படைப்புக்களை அவதானிக்கலாம். போர்க்கால கதை இலக்கியத்துக்கு இவர்தான் முதலாவது பிள்ளையார் சுழி போட்ட படைப்பாளி யாக ஏற்றுக் கொள்ளலாம். இவ் வார்த்தைக்கு எதிர்க் கருத்துக்கள் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளலாம்..!

செங்கை ஆழியானின் "24 மணி நேரம்" என்ற நூலை நினைவுபடுத்த விரும்புகின்றேன். நீல வண்ணன் என்ற புனை பெயரில் செங்கை ஆழியான் இந்த நூலை எழுதியுள்ளார். 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த இனக் கலவரத்தின் முதல் நாளை சித்தரிக்கும் நூலாகும் இந்த படைப்பு. கணிசமான போர்க்கால கதைகளை ஜனரஞ்சக மொழியில் மனதைத் தொடும் உணர்வுகளில் எழுதிய பெருமை செங்கை ஆழியானுக்கு உண்டு. "யாழ்ப்பாணத்து ராத்திரிகள்" என்ற சிறு கதைத் தொகுப்பு தமிழ் இலக்கிய உலகில் பெரிதாகப் பேசப்பட்டது.

1993ம் ஆண்டு யாழ் இலக்கிய வட்டத்தால் இந்தத் தொகுப்பு வெளியா-னது. இந்தத் தொகுப்பில் யாழ்ப்பாணத்து போர்ச் சூழலையும், போரில் சிக்கிய மக்களின் மன ஓட்டங்களையும் உயிர் பாதுகாப்புக்கான தவிப்புக்களையும் எடுத்து காட்டுகிறது. 1983 ல் வெளிவந்த இவரது "அக்கினிக் குஞ்சுகள்" என்ற

குறு நாவல் 1995 ம் ஆண்டு வெளிவந்த "இரவு நேரப் பயணிகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு, 1998 ல் வெளிவந்த "கொழும்பு லொட்ஜ்" என்ற சிறுகதைத் தொகுப்பு யாவும் குறிப்பிட்டு பேசக் கூடியவையாகும்.

இவரது "அக்கினிக் குஞ்சுகள்" என்ற குறுநாவல் தமிழ் மக்களின் மேல் கட்டவிழ்க்கப்பட்ட இன வெறிக் கொடுமையையும், தமிழரிடையே புரையோடிப் போன சாதிக் கட்டுப்பாட்டுக் கொடுமையையும் பற்றி தமிழ் தேசியம் என்ற ஒரு நிலைப்பாட்டுக் காலத்தில் ஒப்பீட்டு ரீதியில் எழுதப்பட்ட ஒரு குறுநாவலாகும். எழுபத்தாறுகளில் யாழ்ப்பாணத்தில் தீவிரவாத சிந்தனை கொண்ட இளைஞர்களை இராணுவமும், பொலிஸ் படையும் வலை வீசித் தேடித்திரிந்த காலத்தினை சித்தரிக்கும் கதையம்சம் கொண்ட நாவலாகும் இது.

"இரவு நேரப் பயணிகள்" செங்கை ஆழியானின் இன்னொரு சிறுகதைத் தொகுப்பாகும். போராட்டச் சூழலில் தமிழ் மக்கள் பட்ட அவலங்களையும், அந்த அவலங்களைச் சந்திப்பதில் ஏற்படும் ஆதங்கம், வெறி வன்மம் பெறுகின்ற உள்ளங்களையும் இக் கதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மக்கள் எழுத்தாளர் டொமினிக் ஜீவா இத் தொகுப்புக்கு முன்னுரை வழங்கியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. "ராத்திரிய நொனசய்" (இரவு சாவதில்லை) என்ற தலைப்பில் சிங்களத்திலும் இத் தொகுப்பு மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

"கொழும்பு லொட்ஜ்" என்ற நாவலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சி காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வியல் இடர்பாடுகளின் ஒரு அம்சத்தை இந்த நாவல் சித்தரிக்கின்றது. ஆனையிறவு பாதை அடைக்கப்பட்ட போது, கிளாலி கடலேறி ஊடாக யாழ்ப்பாண மக்கள் இரவு நேரங்களில் பயணம் செய்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்புக்கு வந்தடைந்ததையும், கொழும்பு விடுதிகளில் பல கனவுகளோடும், ஏக்கங்களோடும் தங்கி வாழ்ந்த துயரங்களையும் இந்த நாவல் சித்தரிக்கின்றது. லொட்ஜ் வாழ்க்கை, சுற்றி வளைப்பு, கைது பற்றிய நினைவுகள் துயரம் நிறைந்தவை. விடிய விடிய படுக்கை

ஞானம் 19ஆம் இதழில் (டிசம்பர் 2001)

**கலாநிதி த.கலாமணி தன் நேர்காணலில்...**



**ஈழத்தின் தேசிய வாதம் சிங்கள நாடக மரபுத்தேடலிலும் ஈழத்துத் தமிழ் நாடக மரபுத் தேடலிலும், விளைவித்த தாக்கங்கள் மறக்கப்படமுடியாதன. ஈழத்துத் தமிழ்த்தேசிய வாதத்தின் எழுச்சியாகவே தமிழரின் நாடக மரபை மீள்கண்டு பிடிப்பதற்கான முயற்சிகள் உத்வேகம் பெற்றன. சிங்கள நாடக மரபுத் தேடலில் முக்கியமாக ஈடுபட்டோருள் ஒருவரான பேராசிரியர் சரச்சந்திரா குறுகிய தேசியவாதத் தளைகளுக்குமப்பால் பிற மொழி நாடக மரபுகளை உன்னிப்பாகக் கவனித்து அம்மரபுகளின் சிறப்புகளை உள்வாங்கி, புதிய தொரு சிங்கள நாடகமரபை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இவ்வாறாக, இவரும் பிறரும் கொண்டிருந்த சிந்தனை அகற்சியே கிராமிய மரபில் அமைந்த புதிய நாடக மரபொன்றை உருவாக்குவதற்கு கால்கோளாயிற்று.**

**இதேபோன்று, ஈழத்துத் தமிழ் நாடக மரபுத்தேடலுக்கும் ஈழத்துத்தமிழ் தேசிய வாதமே, அடிநா தமாய் விளங்கிற்று. பேராசிரியர் சரத்சந்திராவின் 'மனமே', 'சிங்கபாகு' நாடகங்கள் விளைவித்த தாக்கமே ஈழத்து மரபுவழித் தமிழ் நாடகங்கள் மீது பேராசிரியர் வித்தியானந்தன் ஆர்வம் கொள்ள அடிப்படையாயிற்று. 'சிங்களமரபு வழி நாடகங்களின் 'அரங்கை' (theatre)விட ஈழத்துத் தமிழ்க் கூத்து அரங்கு சற்றும் குறைந்ததன்று' எனப் பேராசிரியர் வித்தியானந்தன் கொண்டிருந்த எண்ணமே தமிழ் மரபுவழி நாடகங்களை செம்மையாகவும் நவீனமாகவும் தயாரிக்கும் பணிக்கு அவரைத் தூண்டிற்று.**

உடைகளோடு அலங்கோலமாக பெண்கள், ஆண்கள் என வாகனங்களில் அள்ளிப் போடப்பட்டு, சிறு சிறு பொலிஸ் கூடு களில், மூச்சு விட முடியாத நிலையில், இயற்கை உபாதைக்கும் ஈடு கொடுக்க முடியாது, தவித்த நிலைமைகளை, இக்கதையை வாசிக்கும்போது தகவல்களாக மனம் சேகரித்துக் கொள்ளும்.

இந்த நாவலில் இன்னொரு சிறப் பம்சத்தையும் அவதானிக்க வேண்டி யுள்ளது. போரின் அவலச் சூழலில் தமது மக்கள் பாரம்பரியமான பண்பாட்டு இறுக் கங்களையும் மரபுக் கட்டுப்பாடுகளையும் உதறிவிடும் மீறல்களையும் இந்த நாவல் விவரிக்கின்றது.

"போரே நீ போ..!" என்ற இவரின் இந்த நாவல் பூபாலசிங்கம் பதிப்பக வெளியீடாக 2002 ல் வெளி வந்தது. தமிழ் பிரதேசங்களின் சமகால பிரச்சினைகளைக் கூறும் நாவலாக இது உள்ளது. 1995 களில் நடந்த பாரிய இடம் பெயர்வின் போது, இடம் பெயர்ந்த மக்களையும், இடம் பெயராத மக்களையும் பேசும் நூலாக இது அமைகின்றது. மானிட வாழ்வின் பெறுமதி வாய்ந்த உயிர்களையும், இளமைக் கனவுகளையும் போர் எந்தளவு நாசப்படுத்தியுள்ளது என்பதையும் இந்த நாவல் சித்தரிக்கின்றது. தமிழகத்திலிருந்து வெளிவரும் 2011 ம் ஆண்டு தீராநதி சஞ்சிகையில் செங்கை ஆழியானின் "நந்திக் கடலில் கரைந்த கனவுகள்" என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. இக்கதை போராளி களின் இறுதி யுத்த போராட்டங்கள் பற்றி விளக்குகின்றது. சில வாசகர் மத்தியில் கசப்பான விமர்சனங்களையும் இக்கதை பெற்றுள்ளது.

போராட்டத்தின் போது நிகழ்ந்த அழிவுகளை கதைகளாகக் கொண்டு, சம்ப வங்களை வரலாறாகப் பதிந்து வைக்கும் பல படைப்புக்கள் முப்பதாண்டு கால போர் வாழ்க்கையில் வெளியாகியுள்ளன. இவை கற்பனைக் கலவாத சம்பவத் தொகுப்புக்களாகும்.

போர்க்கால இலக்கியங்களில் நிறைய தகவல்களைத் தந்தவர்களுள் பெண் படைப்பாளி தாமரைச் செல்வியும் முக்கிய மானவர். இவரது இயற் பெயர் ரதிதேவி கந்தசாமி. "பச்சை வயல் கனவு" அவரது பெயர் சொல்லும் நாவலாகும். 2004ஆம் ஆண்டு இந்த நாவல் வெளி வந்தது. விவசாயக் கனவுகளுடன் கிளிநொச்சியில் வந்து குடியேறிய மக்களின் கதையிது. கிளிநொச்சியின் எழுச்சியும், வீழ்ச்சியும், விடுதலைப் பயணத்தில் கிளிநொச்சி மண் வகித்த பாத்திரமும், இந்த நாவ லில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. போர்ச் சூழலில் இந்த மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள், அவர்களது போராட்டங்கள், எதிர்பார்ப்புக்கள், அந்தச் சூழலில் அவர்களது கலை கலாசார நிகழ்வுகள், எதிர்கால நம்பிக்கைகள், இயல்பான சுக துக்கங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்தியுள்ள சுவையான நாவல் இதுவாகும். தமிழ் படைப்புலகில் பெண் படைப்பாளிகளில் தாமரைச் செல்வி பெற்றுள்ள இடம் மிக முக்கியமானது.

"வீதியெல்லாம் தோரணங்கள்" என்ற நாவலும் தாமரைச் செல்வியின் மற்றொரு போர் இலக்கியப் படைப்பாகும். 2003ஆம் ஆண்டு இந்த நாவல் வெளி வந்தது. இந்திய பாதுகாப்புப் படை தமிழ் மண்ணில் நிலை கொண்டிருந்த காலத்தை பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்டது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இனவாதிகளிடம் நொந்து போய்க் கிடந்த மக்களின் மீது இந்தியப் படைகள் புரிந்த அட்டகாசத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் நாவல் இது. இந்திய படையே எங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையோடு, தோரணம் கட்டி, மாலை போட்டு, ஆரத்தியெடுத்து, பொட்டு வைத்து, கும்பிட்டு வரவேற்ற மக்களை, கொன்று குவித்த கொடூரச் சம்பவங்களை உணர்ச்சிவசத்தோடு காட்டு கின்ற வரலாற்று நாவல் இது..!

இலங்கையில் ஓர் இடத்தில் ஏற்படும் போரின் அனர்த்தங்களின் விளைவு-களை, அதன் வேதனையை இன்னொரு இடத்தில் வாழ்கின்ற மக்கள் அதாவது புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் பூர்வீகமாக வேறு நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் உணர்வுகளையும் அவர்களது தார்மீக ஆதரவுகளையும் இந்த நாவலில் காணலாம். தாமரைச் செல்வியின் "அழுவதற்கு நேரமில்லை" என்ற சிறு-கதைத் தொகுதி 2002 ம் ஆண்டு பரந்தன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.. இந்தத் தொகுப்பும் மக்களின் அவல வாழ்வையும், இனவாதிகளின் அட்டூழியங்களையும் சித்தரிப்பனவாகும்.

அடுத்ததாக பிரபல மூத்த எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் அவர்களின் "ஒரு பிடி மண்" என்ற சிறுகதைத் தொகுப்பை நோட்டமிடுவோம். 1994ஆம் ஆண்டு மீரா வெளியீடாக இந்நூல் வெளி வந்துள்ளது. இந்தத் தொகுப்பில் வெளிவந்துள்ள பதினொரு சிறுகதைகளை வாசிக்கும் போது, பாரதியின் நினைவுகள் வந்து மோதுகின்றன. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது, பாரதி வகித்த பங்களிப்பு மிக வித்தியாசமானது. அகில இந்தியாவிலும் போராட்டத்தில் மடிந்த மக்களைப் பற்றி வீராவேசத்தோடு எழுதிய கவிதைகளும், ஊர் ஊராய் சென்று மக்கள் அவலங்களைக் கண்டு துயர்பட்டதோடு நில்லாமல், அவர்களைத் தட்டியெழுப்பி ஊக்கங் கொடுத்து போராட்டத்தில் பங்கு கொள்ள அவர் பாடிய பாடல்கள் மூலம் செய்த பணியும் மகத்தானவை.

பாரதியைப் போன்றே கே.ஆர். டேவிட்டின் கதைகள் யாவும் போரில் சிக்கிய மக்களின் அவலங்களைக் காட்டுவதோடு, அவர்களை ஊக்கப்படுத்தி, தட்டியெழுப்பி விடுதலை போராட்டத்துக்கு தங்களது தார்மீக ஆதரவுகளை வழங்குவதற்கான பல புரட்சிச் சிந்தனை கொண்ட பாத்திரங்களை படைத்துள்ளார். அவரின் சில கதை களின் பெயர்களை மட்டும் இங்கு கூற விரும்புகின்றேன். "தாகம்", "சரித்திரம் திரும்பும்", "பலமான சிந்தனைகள்", "மெழுகுவர்த்தி", "குருத்துக்கள்", "ஒரு பிடி மண்", "தட்டுங்கள் திறக்கப்படும்", "ஜென்ம பாவம்", "எரிமலை" என்ற பெயர்களிலேயே எழுச்சியையும், போராட்டத்தின் பால் ஆகர்ஷிக்கப்படும் நாட்டத்தையும் காண லாம். ரஷ்ய புரட்சியின் போது மெக்ஸிம் கோர்கி, அலெக்சாண்டர் புஷ்கின், என்டன் செக்கவ், பிரான்சிய புரட்சியின் போது ரூசோ, வோல்டர்போன்ற இலக்கியவாதிகள் போர்க்காலத்தில் எப்படி மக்களைக் தட்டியெழுப்புகின்ற இலக்கியங்கள் படைத் தனரோ. அவர்களைப் போன்றே தனது படைப்புக்கள் மூலம் எழுத்தாளர் டேவிட் உயர்ந்து நிற்கின்றார்.

போரியல் இலக்கியத்துக்கு புது வடிவம் கொடுத்து இளந் தலைமுறை படைப்பாளி கள் வரிசையில் ஷோபா சக்தி குறிப்பிடத்தக் கவராகவிருக்கின்றார். இவரின் இயற் பெயர் அந்தனி தாசன். "தேசத் துரோகி" என்ற சிறுகதைத் தொகுப்பை 2003 ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். புலம் பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களுள் பிரபல்யமான ஒருவராக ஷோபா சக்தி இருந்து வருகிறார். "கொரில்லா" என்ற இவரது முதல் நாவல் ஈழத்து அரசியலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. விமர்சனப் பார்வை கொண்ட எழுத்துக்களாகவே இவரது படைப்புக்கள் தென்படுகின்றன. விடுத லைப் போராட்ட அமைப்புக்களின் உள்ளகப் பார்வை பல சம்பவங்கள் பற்றிய தகவல்கள் எம்மை ஆழமாக சிந்திக்க வைப்பவை. "கொரில்லா" இன்று வரை ஓர் அற்புதமான நாவல் என்று பேசப்பட்டு வருகின்றது. நல்ல சிறுகதைகளையும், நாவலையும், சில நாடகங்களையும் தந்த ஷோபா சக்தி 2004

ம் ஆண்டு "ம்" என்ற இன்னொரு பிரபல்யமான நாவலையும் வெளியிட்டுள்ளார். பேரினவாதத்தின் கொடுமைகளாலும், இயக்கங்களின் நடவடிக்கைகளாலும் அகதியாக ஐரோப்பாவில் வாழும் ஒருவனின் வரலாற்றை சித்தரிக்கும் நாவலாகும் இது. வெலிக்கடை சிறை படுகொலை, மட்டக்களப்பு சிறை உடைப்பு, இயக்கப் படுகொலைகள் என்ற வரலாற்றுப் பின்னணியில் மனித இருப்பைப் புரிந்துக் கொள்ள முயலும் ஓர் எழுத்தாக இந்த நாவல் அமைகின்றது.

ஈழப் போராட்ட வரலாற்றை ஒரு மகா நாவலில் உள்ளடக்கும் பாரிய முயற்சியை மேற்கொண்டவர் தேவகாந்தன் ஆவார். 1998 ம் ஆண்டு சென்னையில் "கனவுச்சிறை" என்ற இந்த நாவலை தேவகாந்தன் வெளியிட்டுள்ளார். கறுப்பு ஜூலை, அகதிமுகாம் அவலங்கள், மேற்குலக அடையாளச் சிக்கல்கள், சமூக நிலை மாற்றங்கள், தமிழ் கட்சி பூசல்கள், கூட்டணி அமைப்புக்கள், இயக்கங்களின் வளர்ச்சிகள் போன்ற விபரங்களை இந்த நாவல் உள்ளடக்கியுள்ளது. தேவகாந்தனின் "யுத்தத்தின் முதலாம் அதிகாரம்" என்ற நாவலும் 2003 ம் ஆண்டு வெளிவந்துள்ளது.

குழந்தை எழுத்தாளர் என்று அடையாளம் காணப்பட்டுள்ள ஓ.கே.குணநாதன் அவர்களின் போர்க்கால படைப்புக்களில் 2006ஆம் ஆண்டு வெளிவந்த "நாளைய தீனி" என்ற சிறுகதைத் தொகுப்பை நாம் நோட்டமிட்டுப் பார்ப்போம். போர்ச் சூழலில் சிக்கி மடியும் மக்களின் துயர வாழ்க்கையை சித்தரிக்கும் கதைகளோடு, ஏனைய எழுத்தாளர்களை விட ஓர் வித்தியாசமான பார்வையில் பல கதைகளைப் படைத்துள்ளார். இவரது தொகுப்பிலுள்ள பத்து கதைகளிலும் இன, மொழி, மத பேதங்களுக்கப்பால் மனிதனை நேசிக்கும் மானிடப் பார்வையே மித மிஞ்சித் தென்படுகின்றது. எந்தவொரு நாட்டிலும் ராணுவத்தில் சேர்ந்து மடிந்து போகக் காத்திருப்பவர்கள் கீழ் தட்டு வறிய வர்க்கத்தைச் சார்ந்தவர்களே என்ற உண்மையை குணநாதன் கதைகளில் அறிந்து கொள்ளலாம். சிங்கள ராணுவ இளைஞர்களினதும், தமிழ் போராளி இளைஞர்களினதும் குடும்பப் பின்னணி, வர்க்க நிலை, அவர்கள் களத்தில் முகம் கொடுக்கும் துயரங்கள் பற்றி நிறையத் தகவல்களை தனது எழுத்தில் பதித்துள்ளார். சிங்களப் படைப்பாளிகள், சிங்கள ராணுவத்தினரைப் பற்றி எழுதும்போது, தமிழ்ப் போராளிகளைப் பற்றியும் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு, குணநாதனைப் போன்று எழுதவில்லை எனலாம்.

அடுத்து, 'தகவம்' என்ற தமிழ் கதைஞர் வட்டத்தில் செயல்படும் ஒரு சிறந்த வாசகரான வசந்தி தயாபரனின் "முற்றுப் புள்ளியும் சில வினாக்களும்" என்ற கதையை நாம் கவனிக்க வேண்டும். போர்க் காலத்தில் பெரிதாகப் பேசப் படாத குழந்தைச் சமூகத்தின் எதிர் காலம் பற்றிய ஓர் கேள்வியை சமூகத்திடம் முன் வைக்கின்றார். போர்ச் சூழலில் பெற்றோர்களை இழந்தவர்களும், தாயுடனோ, தந்தையுடனோ மிஞ்சியவர்களும் இடம் பெயர்வு, அகதி முகாம் வாழ்க்கை என்று சிதறடிக்கப்பட்டு, உடல் ரீதியாகவும், மனோ ரீதியாகவும் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் குழந்தைகளுக்கு போர்க் காலத்திலோ, போர்க் காலத்திற்கு பின்னரோ எப்படி விமோசனம் கிடைக்கும் - என்ற ஒரு பாரிய பிரச்சினைக்குரிய கேள்வியை, ஓர் அகதி முகாம் சிறுமியின் பாத்திரத்தின் மூலம் தொடுக்கின்றார். போர்க்காலத்தில் பாதிக்கப்பட்ட குழந்தை சமூகத்தின் பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தக் கதை

# காவு கொள்ளப்பட்ட வாழ்வு

பழுக்க காய்ச்சிக் கிரணத்தால்
சூரியனும்
அவர்களின் உடலின் போர்வையெங்கும்
கோலிட்டுக் கறுப்பாக்கியது
விடாய்தீர
கிணற்றின் உப்பு நீரையெல்லாம்
குடித்துக் கனன்றது

கலைத்து அவர்களின் கேசத்தைப்
பரட்டையாக்கிய அதே காற்றுத்தான்
கோரத் தாண்டவத்தை குடிசை வாழிடக் கூரையில்
புரிந்தது

எப்போதாகிலும் பெய்கிற மழையோ
வளத்தை உறுஞ்சித் தரிசாக்கி நிலங்களை
அவர்களின் வாழ்வைப்போலச் செய்தது

புத்தளத்தின்
உப்பளக் கரைகள் தோறும்
அவர் கண்ணீரே
குவியலாய்ப் போய்ப் படிந்திற்று

முக்காடிட்ட பெண்கள்
தெருவில் நீர் வண்டிக்காய் காய
கணவன்கள்
மிக்க ஆழ் கிணற்றில் உவர் நீரை மொண்டு
நெஞ்சில் வலி கண்டு வீட்டில் சுருண்டனர்.

02
பாட்டிமார்
கிடத்தித் தம்மடியில் பேரர்களை
ஆண்டகதையும் ஒன்றாய் வாழ்ந்த கதையுஞ்சொல்லி
நீர் மல்கினர்

உடமைகளை உருவிப் பிடுங்கும் படலத்தே
கழற்ற மறுத்த தோடொரு சோடிக்காய்
பிரம்பு பதம்பார்த்த பிருஷ்டத்தின் வீங்கிய தடத்தின்
நோவு கூறினர் நடுத்தரவயது மாதுகள்

நாற்பது ஐம்பது வயதுக்காரரோ
தாம் அவதரித்த செம்மண்ணின்
ஏழுவருடப் புதர் மண்டிப்போன கதையிடை
பலவந்தத்தில் தம்மைப்
புலம்பெயர்த்து விரட்டுங்கால்
நெஞ்சுக்கு நீட்டப்பட்ட துவக்குக் குழல்களின் முன்
நா எழ நாவெழ – உதட்டைச் செருகிப் பல்லிடை
உள்ளே குமுறிக் கொந்தளித்த
வக்கற்ற மக்கள் தம் கோடிக் கோடி அர்த்தம் பொதிந்த
கண்களின் கடைசி மிரட்சியையும்
இறுக்கிய கைகள் தளர்ந்து நடுவிரலில் நழுவிப் பிரிகையில்
அம்மாந்தர் உகுத்த அடர்நீர்த் துளிகளையும்
மறவாமல் நினைவுகூர்ந்தனர்

03
அவர்கள் இன்னும் வாழ்ந்தனர்
அவர்களில் இளைஞர்களும் யுவதிகளும்
ஒருவர்பால் மற்றொருவர் ஈர்ப்புற்றனர்
காதல் கொண்டனர்
மணவாளன் மணவாட்டியாகினர்
கலவினர்
சந்ததி பல்கிற்று – பெருகிற்று
பக்கவேர் ஓடி வளர்ந்தது விருட்சம்.

04
காவு கொள்ளப்பட்ட வாழ்வின் எச்சமென்றான
அவர்களின் சந்ததி
பள்ளிவாழ்விழந்து
சுழன்றடிக்கும் கிறவல் தெருக்களில்
எதிர்க்காற்றில்
புழுதியொடு போரிடுவதை நான் கண்டேன்

05
காற்றில் பல்லிலைகள் சரசரக்க
நீட்டி நிமிர்ந்து உயர்ந்து நின்ற வலிய பனைகளுக்கு
எல்லாம் தெரியும்!

ஏ. எம். றஷ்மி

மூலம் வாசகர்கள் உணர்ந்து கொள்ளலாம். இது ஒரு தனிக் கதையாகவே எனது பார்வைக்குக் கிட்டியது.

"ஒரு மரணமும் சில மனிதர்களும்" என்ற கதையின் மூலம் எழுத்தாளர் தாட்சாயணி, போர்க் காலத்தில் அடிக்கடி நிகழும் உண்மைச் சம்பவங்களை முன் வைக்கின்றார். இயக்கத்தில் சேர்ந்து செயல்பட்ட தங்கள் சொந்த உறவு ராணுவத்தால் கொல்லப்பட்டதையறிந்து கதறி அழ முடியாமலும், உடலுக்குச் சொந்தம் கொண்டாட முடியாமலும் தவித்து, இன்னொரு மரண வீட்டில் போய் அழுது புலம்பித் தங்கள் துயரை ஆற்றிக் கொள்ளும் பரிதாபகரமான ஒரு மனிதத் தவிப்பை இக்கதை மூலம் சித்தரிக்கின்றார். போர்க் காலங்களில் வாழ்ந்த மக்களின் உளவியல் தாக்கங்களை, இந்த ஒரு கதை மூலமே அறிந்துக்கொள்ள வாய்ப்புண்டு,

எழுத்தாளர் தி.ஞானசேகரனின் "அல் சேஷனும் ஒரு பூனைக் குட்டியும்" என்ற குறியீட்டுக் கதை வாசகர்களின் கவனத்தைப் பெரிதாக ஈர்த்திருந்தது. அல்சேஷன் நாய் பேரினவாதிகளின் குறியீடாகவும், பூனைக் குட்டி சிறுபான்மை மக்களின் குறியீ டாகவும் காட்டப்படுகின்றன. ஆதிக்கம் செலுத்த முனையும் பேரினவாதிகளின் கொடுமைகளுக்கெதிராக கிளர்ந்தெழும்ப வேண்டும். அவர்களின் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் புரிந்து சுய பாதுகாப்பை நிலை நாட்டிக் கொள்ள வேண்டும் என்ற தகவலைத் தமிழ் மக்களுக்கு கோடிட்டு காட்டுகின்றார். சமூக விழிப்பு பெறாதவர்களுக்கு இப்படியான நாய், பூனை கதைகளைச் சொல்லித்தான் வரலாற்றை வலிமை படுத்த வேண்டும் என்பதை இந்தக் குறியீட்டுக் கதை மூலம் உணர்த்துகின்றார்

கண்டியைச் சேர்ந்த சுதர்ம மகாராஜன் என்ற எழுத்தாளர் தனது படைப்புக்களில் ஓர் வித்தியாசமான அனுகுமுறை தகவல்களைக் காட்டுகின்றார். பேரினவாத ராணுவத்தில் மனித தர்மம் நிறைந்த, இன பேதங்களுக்கு அப்பால் சிந்திக்கின்ற, யுத்தத்தை வெறுக்கின்ற, தமிழரின் நியாயமான போராட்டங்களை ஏற்றுக் கொள்கின்ற சில அபூர்வமான ராணுவத்தினரை தனது கதை களில் காட்டி வருகின்றார். இவரது "குளம்" என்ற சிறுகதை, இயக்க முரண்பாடுகளால் ஒருவருக்கொருவர் மோதி அழிந்து போகும் துரதிர்ஸ்டத்தை காட்டுகின்றது. திருமணமாகவிருக்கும் ஒருவன், திருமணத் துக்கு முதல் நாள் கொல்லப்பட்டு குளத்தில் வீசப்படுகின்றான். இவ்வாறான இயக்க முரண்பாடுகளின் மூலம் உரி மைக்காக உயிரை விலை பேசி வந்த இளைஞர் கூட்டங்கள், தங்களுக்குள்ளேயே முரண்பட்டு, பரஸ்பரம் அழிந்து, பாது காப்புக்காக ஆட்சியாளர்களிடம் சரண டைந்த தாழ்வான சம்பவங்கள் நடந்து வந்ததை இவ்வாறான கதையின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

மு. சிவலிங்கத்தின் "ஒப்பாரி கோச்சி" சிறுகதைத் தொகுப்பில் "வட திசைக் காற்று" என்ற கதையும், வீரகேசரி பத்திரிகையில் வெளி வந்த "வெந்து தணிந்தது காலம்" என்ற கதையும் இரண்டு தகவல்களைக் கூறி நிற்கின்றன. "வட திசைக் காற்று" என்ற சிறுகதை இன்றுவரையும் பெரிதாகப் பேசப்படாத தமிழ் அரசியல் கைதிகளின் விசாரணை பற்றியும், அவர்களது விடுதலை பற்றியும், யுத்த பிரதேசங்களுக்கப்பால் நாடளாவிய ரீதி யில் தமிழ் இளைஞர்களின் கைதுகள் பற்றியும், அவர்களின் துயரங்கள் பற்றியும் இக் கதைகள் தகவல் தந்து பேசுகின்றன. அத்தோடு தமிழ் இளைஞர்கள் சிறைகளில் சித்திரவதைக்குள்ளாக்கப்படுதலும், சிறை பிடிக்கப்பட்ட தமிழர்களின் வாழ் நாட்கள், வருடக் கணக்கில் வீணாகி, வயதாகி, மனம் பேதலித்து சிலர் இறந்து போன சம்பவங்கள்

***முறிந்த பனை* The broken Palmyra *என்ற நூல், இனப் பிரச்சினையின் ஒரு பரிமாணத்தையும், தமிழரின் போராட்டத்தின் வரலாற்றையும் இந்தியப் படையின் வருகை, அதன் தாக்குதல் பற்றிய புலனாய்வும் அறிக்கைகளும் கொண்டதாகவிருந்தது. இந் த நூல் வெளிவருவதற்கு பிரதான பங்களிப்பு செய்த ராஜினி திரணகம என்பவர் இனந் தெரியாதோரால் கொல்லப்பட்டார்.***

பற்றியும் இந்தக் கதை எடுத்துக் கூறுகின்றது. இக் கதையை வாசிக்கும்போது, அமெரிக்க அரசு மெக்சிக்கோ கடல் பிரதேசத்தில் அமைத்திருக்கும் "குவாண்டனாமோ" சிறைச் சாலையை ஞாபகப்படுத்துகிறது.

"வெந்து தணிந்தது காலம்" என்ற சிறுகதையில் இன வன்செயல்களால் பாதிக்கப்படும் நிலமற்ற மலையகத் தமிழ் சமூகத்தினர், வட பிரதேசத்தை நாடி தஞ்சம் புகும் பொழுது, வட பகுதி தமிழரின் பிரதேச வாதம் அவர்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதையும், இந்த ஒவ்வாமையினால், தமிழ் தேசியத்தை - தமிழர் தாயகத்தை நோக்கிய நிலைப்பாட்டின் மேல் இந்த மக்களும்ஒவ்வாமைகொண்டிருப்பதையும், இந்தக் கதை எடுத்துக் கூறுகின்றது.

"ஜீவநதி" சஞ்சிகையின் ஆசிரியர். இளம் படைப்பாளி, கலாமணி பரணீதரனின் "மீண்டும் துளிர்ப்போம்" என்ற சிறுகதைத் தொகுப்பு 2011ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. "உயிரினும் மேலானது" என்ற சிறுகதை, நாளைய பரம்பரையினரின் ஆய்வுக்கும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு கதையாகவும் இருக்கிறது. பேரின வாதிகளின் தாக்குதலுக்குள்ளாகி கடந்த முப்பதாண்டு காலமாக தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழந்து தவிக்கும் தமிழர்கள், தங்கள் சாதியத்தை மட்டும் இழந்து விடாமல் இன்றுவரை பாதுகாத்து வைத்திருக்கும் சமூகச் சீரழிவை, இந்த இளைஞன் தனது கதையில் மிக ஏளனமாக எடுத்துக் காட்டி, சாதி, சமயப் பேதங்களில் இன்றுவரை சிதைந்துக் கிடக்கும் தமிழ் இனத்தின் எதிர்கால ஐக்கியத்தின் மேல் ஐயம் கொள்ளும் வினாவைத் தொடுத்துள்ளார்.

எழுத்தாளர் நிரேஷ்குமார் அவர்களின் "இவர்களும் யதார்த்தவாதிகள்தாம்" என்ற சிறுகதைத் கொகுப்பு 2010ஆம் ஆண்டு மணிமேகலை பிரசுரமாக வெளிவந்துள்ளது. போர்ச்சூழலில் பாலியல் கொடுமைக்கு ஆளாகி அழிந்து போன ஆயிரமாயிரம் பெண்களின் நிலைமைகள் பற்றி இந்தத் தொகுப்பில் நிறையவே எழுதியுள்ளார். ராணுவத்தினரால் தூஷிக்கப்படும் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. என்பதற்காக ஒரு உண்மைச் சம்பவத்தை "இனி ஒரு விதி செய்வோம்.." எனும் பிரச்சாரக் கதையாக நிரேஷ்குமார் என்னும் இளம் எழுத்தாளர் காட்டிச் செல்கிறார்.. தமிழ்ச் சமூகம் அவர்களை ஆதரித்து, வாழ்வளிக்க வேண்டும் என வலியுறுத்தும் நிரேஷ்குமார், யுத்தத்தின் பெயரால், ஆயுதங்கள் கரங்களில் இருப்பதால், தமிழர்களை எதுவும் செய்யலாம், தமிழ்ப் பெண்களை வேண்டியவாறு பாலியல் வேட்டையாடிக் கொலை செய்யலாம்... என்பதை சுட்டிக்காட்டுகின்றார்.

டென்மார்க்கைச் சேர்ந்த ஜீவகுமாரனின் "மாங்கல்யம் தந்துனானே" என்ற சிறுகதை, 2011 நவம்பர் மாத ஞானம் இலக்கிய சஞ்சிகையில் வெளிவந்துள்ளது. போர்ச் சூழலில் தங்களை, தங்கள் குடும்பத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக பரஸ்பரம் சொந்த இனத்துக்குள்ளேயே காட்டிக் கொடுப்பு, சமூகத் துரோகம் புரியும் சுயநலவாதிகளை தோலுரித்துக்

காட்டுகின்றார். இளைஞன் ஒரு வன் போராளிகளிடமிருந்தும், ராணுவத்திட மிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள் வதற்காக, ஒரு பெண்ணை கபடத்தனமாக திருமணம் செய்து, அவள் மூலம் ஒரு குழந்தைக்குத் தந்தையாகி, வெளி நாட்டுக்குத் தப்பி ஓடும் வரை, தான் ஒரு குடும்பஸ்தன் என்று அடையாளம் காட்டிக் கொள்வதற்காக அவளைப் பாவிக்கும் சமூகத் துரோகத்தை, புதிய தகவலாகத் தனது கதையில் எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறான கதைகள் மூலம் போரை காரணம் காட்டி வெளிநாடுகளுக்கு உத்தியோகம்தேடி ஓடி மறைபவர்கள்கள்ளப் பயணங்கள் செய்து அகப்பட்ட நாடுகளில் அகதி விசாவுக்காக யுத்தப் பிரதேசங்களில் சொந்த மக்கள் வகை தொகையாக குண்டடி பட்டு சாக மாட்டார்களா..? என்று எதிர்பார்க்கின்றவர்களின் துரோ கத்தனமான எண்ணங்களும் வேறு படைப்பாளிகளின் கதைகளிலும் பிர திபலிக்கின்றன. புலம் பெயர்ந்த நாடு களில் வாழ்பவர்களின் அவல வாழ்க்கை பற்றியும், அவர்களது சீரழிந்து போகும் கலாசார பண்பாட்டு மாற்றங்களையும், பொய் முகங்களையும் சித்தரித்துக் காட்டும் ஐம்பது படைப்பாளிகளின் சிறுகதைகளை "முகங்கள்" என்ற தொகுப்பில் 2011 ம் ஆண்டு ஜீவகுமாரன் வெளியிட்டுள்ளார். 552 பக்கங்களைக் கொண்ட இந்த சிறுக தைத் தொகுப்பு 2011 ம் ஆண்டு கொழும்பில் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், விநியோகிக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

அடுத்து 'வல்வைப் படுகொலை' என்னும் பெயரில் யுத்தத்தின்போது நடந்த உண்மைச் சம்பவங்களை கதையா-கச் சித்தரித்து ந.அனந்தராஜன் என்பவர் ஒரு முக்கியமான படைப்பிலக்கியத்தைத் தந்துள்ளார். 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் திகதி முதல் 3ம் திகதி வரையிலான தினங்களில் வல்வெட்டித்துறையில் ஒரு கடலோரப் பிரதேசத்தில் இந்திய அமைதி காக்கும் படை நிராயுதபாணிகளான 64 அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றது பற்றியும், நாற்பத்திமூன்று பேர் படு காயமடைந்தது பற்றியும், அவர்களுக்கு சிகிச்சையளிக்கக்கூட மறுத்தது பற்றியும் இந்தப் படை செய்த இன்னும் பல கொடூரமான கொலைச் சம்பவங்களையும் இக் கதை சித்தரித்துக் காட்டுகின்றது.

சர்வதேச அரங்கில் இந்திய நாடு அனுப்பிய அமைதி காக்கும் படை அபகீர்த்தியடைந்தது. 'வல்வைப் படு-கொலை' என்ற இந்த நாவலுக்கு, அன்று 1998 முதல் 2004 வரை இந்திய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த ஜோர்ஜ் பர்ணான்டஸ் அவர்கள் அணிந்துரை வழங்கியிருப்பது வரலாற்றுச் சிறப்பாகும். இவர் தனது அணிந்துரையில் 'வல்வைப் படுகொலை' (Valvai massacre) என்பது 'மிளாய் படு கொலை' (Mylai massacre) க்கு ஒப்பானது என்று எழுதியுள்ளார். 'மிளாய் படு கொலை' என்பது தென் வியட்நாம் போரில் அமெரிக்கப் படை மிளாய் என்னும் கிராமத்துக்குள் நுழைந்து அங்குள்ள நிரா யுதபாணிகளான பெண்கள், குழந்தைகள் அடங்கிய ஐநூறு பேர்களை ஒரே தடவை யில் சுட்டுக் கொன்ற கொடூர சம்பவத்தை கூறுவதாகும். இந்த சம்பவத்தை அன்று அறிந்த முழு அமெரிக்க மக்களும் நிக்சன் ஆட்சிக்கு எதிராக வீதியில் இறங்கி கண்டனத்தைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

போராளிகளுக்கும், ராணுவத்தினருக் கும் இடையில் நடைபெறும் யுத்தச் சூழலில் தேசிய சிறுபான்மை தமிழினத்துக்கு அடுத்ததாக குடித்தொகையில் குறைவாக வாழும் தேசிய சிறுபான்மை முஸ்லிம் இனத்தின் போர்க்கால இலக்கியப் பதிவு-களை நாம் அவதானிப்பது அவசியமாகும்.

முஸ்லிம் படைப்பாளிகளின் போர்க்கால இலக்கியப் பதிவுகளெல்லாம், போராளிகளால் தங்களுக்கு நேர்ந்த துயரங்கள் பற்றியும், தமிழினவாதிகள் சிலரால் தமது மக்களுக்கு நேர்ந்த துயரங்கள் பற்றியும் நிறைய எழுதப்பட்ட கவிதை இலக்கியத்தோடு சிறுகதை இலக்கியங்களும் தங்களுக்கு நேர்ந்த அவலங்களை வரலாற்றுத் தகவல்களாக இலக்கியப் பதிவுகள் செய்திருக்கின்றனர். இங்கே இரண்டு எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புக்களை அவதானிப்போம்.

ஓட்டமாவடி அறபாத், வாழைச்சேனை அமர் ஆகிய இரண்டு படைப்பாளிகளின் பதிவுகளைப் பார்ப்போம். ஓட்டமாவடி அறபாத்தின் சிறுகதைகளான "மண்ணோடு போய்", "வன்மம்", "நினைந்து அழுதல்", "போர் நிறுத்தம்", "ரயில்வே ஸ்டேஷன்", "ஓணான்கள்" போன்ற கதைகள் நிறையத் தகவல்களைத் தருகின்றன. வாழைச்சேனையில் தங்களது பூர்வீக மண்ணை விட்டு முஸ்லிம் மக்கள் அகதிகளாக அகற்றப்பட்ட துயரச் சம்பவத்தை "மண்ணோடு போய்" என்ற கதை மூலம் விளக்கியுள்ளார். இந்தச் சிறுகதை பேராசிரியர் சிவசேகரம் அவர்களால் ஆங்கில மொழியிலும், பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்களால் சிங்கள மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதே போன்று "நினைந்து அழுதல்" என்ற சிறுகதையிலும் யாழ்ப்பாணத்து பூர்வீக மண்ணை விட்டு முஸ்லிம் மக்கள் அகற்றப்பட்ட துயரத்தையும் சித்தரித்துள்ளார். "ரயில்வே ஸ்டேஷன்" என்ற கதையில் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவும், அந்நியோன்னியமும் யுத்தத்தால் எப்படி சீர்குழைந்து போயின என்பதைக் காட்டுகின்றன.

எழுத்தாளர் வாழைச்சேனை அமர் எழுதியுள்ள கதைகள் "வாப்பா வருவாரா", "கொக்கின் கால்கள்", "அலைகளின் நடுவே", "சாம்பல் நெருப்பு" போன்ற கதைகள் முஸ்லிம் மக்களுக்கு நடந்த துயரச் சம்பவங்களைக் காட்டுவனவாகவிருக்கின்றன. இன முரண்பாடுகள் பற்றி நிறையவே முஸ்லிம் படைப்பாளிகள் எழுதியுள்ளனர்.

தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தில் நேரடியாக களத்தில் இறங்கி வீர மரணம் அடைந்த போராளிகளின் படைப்புக்கள் அதிகமான அளவில் வெளிவந்திருக்கின்றன. அவர்கள் சிறுகதை, நாவல்களை விட அதிகமாக கவிதை இலக்கியம் படைத்திருக்கின்றனர். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகளில் போராட்டம் பற்றியும், போராட்டத்துக்கான அவசியம் பற்றியும், போராட்டக் காலங்களில் பசி, தாகம் மறந்து, உறவு, பாசங்களைத் துறந்து துயரப்பட்டதையும், சக போராளிகளின் காயம் பட்ட உடலை, உயிர் பிரிந்த உடலை சுமந்து தங்கள் படை முகாம் நோக்கி எதிரிகளிடம் தப்பித்து ஓடி மறைந்த நினைவுகளையும், உரிமைக்காக உயிரை கொடை கொடுத்த வரலாற்றுச் சம்பவங்கள் ஏராளம் இலக்கியப் பதிவுகளாக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நாட்டில், ஒரு இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்த போராளிகள், வரலாறு வியக்கும் விதத்தில் போர் இலக்கியங்களையும் படைத்துவிட்டுச் சென்றார்கள்.. என்ற தகவல்களையும், இவர்களின் எழுத்துப் பதிவுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

(இலக்கிய நண்பர்கள் வழங்கிய புத்தகங்களும், இணையதள தேடல்களும் இக்கட்டுரை எழுத உதவின)

❍ ❍ ❍





சிறுகதை

# மனிதம்

நந்தினி சேவியர்

அவன் இறந்து போனான்...

பழங்கோவிலின் உருக்குலைந்து போன கரும் கட்டிடம் போல் அவனது உடலும் சிதறி சின்னாபின்னப்பட்டுப் போய்விட்டது.

கடற்கரை இருந்து ஆவேசத்தோடு திசையற்றுச் சீறிவரும் குண்டுகளின் வெறித்தனத்திற்குத் தப்பிக் கொள்வதற்காக புகலிடம் தேடிவந்த தருணத்தில் அவனும் அவனது குடும்பத்தில் சிலரும் இப்படியாக மரணித்துப் போனார்கள்.

சவக்காலையின் தென்புறத்து ஆலமரத்திற்கு இடப்புறம் வெள்ளம் ஓடும் பனை வடவலிக்கரைச் செம்மண் தரையில் அவனதும், அவனது மனைவியதும், அவனது இரண்டு பிள்ளைகளினதும் சடலங்கள் பரவிக்கிடந்தன.

முன்தினம்பகல்அந்தவிபரீதம்நடக்கமுன்அவர்கள்அறுவராகப்புறப்பட்டிருந்தார்கள். அவன், அவனது மனைவி, மூன்று பிள்ளைகள், தொழில் உதவிக்கென தன்னிடம் வைத்திருக்கும் வவுனியாவிலிருந்து கூட்டி வந்த மலையகத்துச் சிறுவன்.

இப்போது மீதம் அந்தசிறுவனும், அக்குடும்பத்தின் ஒரு வாரிசுவும்.

வடக்கிலிருந்து காற்றைக் கிழித்து வந்து சிதறி வெடித்து உயிர்களைப் பறித்துக் கொண்ட அந்தக் குண்டு வெடித்து ஒரு இரவு கழிந்து நெடு நேரம்.

அந்தக் கணமுதல்... சூரியன் மறைந்து தோன்றிய இந்த நேரம் வரை அந்த இரண்டு சீவன்களும் அதே ஆலமரத்தின் கீழ் ஊர் பதுங்கிக் கிடந்தது.

அழுதழுது கண்ணீர் வற்றி... பசி... சோர்வு நித்திரைக் களைப்புடன் அந்த பிஞ்சுவும் அந்த சிறுவனும்...

சிதைவுற்ற உடல்களை வெறித்ததென ஒரு பார்வை.

குண்டுச் சத்தங்கள் ஓய... ஊரில் சில சலசலப்பு... குசுகுசுப்பு...

“முத்துவும்... பெண்டிலும்... செத்துப் போச்சுதுகளாம்”

பயம்... வெருட்சி, துயரம்...

“ஆர் போய்ப் பாக்கிறது? என்னெண்டு பாக்கிறது...?” நெடுநேரம் கழித்து துணிந்த கிழடு ஒன்று புறப்பட்டது.

தனிமை. வெறுமை... பயம்...

ஆலமரத்தின் கீழ் அதே நிலையில் அந்தச் சிறுவனும் பிஞ்சுவும்...

விரைவாக நடந்த அந்த கிழம், பரபரப்போடு அவர்களை நெருங்கி... சிறுவனின் மடியிலிருந்த சிசுவை ஆதரவோடு வாங்கியது.

தலையைச் சரித்து துவளும் குழந்தையின் களைப்பில் கிழவன் சகலதையும் புரிந்து கொள்ள...

“தம்பி... பிள்ளைக்கு பசி... நான் கொண்டு போய் தேத்தண்ணியாவது பருக்கிறன். உமக்கும் பசி... நீரும் வாரும்...”

சோர்ந்து இருந்த சிறுவனின் குரல் தளதளத்தது. விம்மினான்.

“எனக்கும் பசிக்குது தான்... நானும் உங்களோட வந்திட்டாக்கா ஐயாவையும், அம்மாவையும் காகம் கொத்திப்போடும்... நீங்க தங்கச்சியை கொண்டுபோங்க...”

(ஈழமுரசு 1987)



சனிக்கிழமை மாலை ஆறுமணி ஐம்பத்திரண்டு நிமிடத்துக்கு வேணி என்கின்ற கிருஷ்ணவேணி இறந்து போனாள். நான்கு நாட்களாக அரைகுறை நினைவுடன் இருந்தவள் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப்போன போது அவன் பக்கத்தில்தான் இருந்தான். அவனால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. கடைசி நேரம் கிழிந்த பாயில் படுத்த படி அவளின் காய்ந்து போன மெலிந்த முகம் மூச்சுக்காக தவித்துத் தவித்து அடங்கிக் கொண்டதை அவன் கண்கலங்க பார்த்துக்கொண்டேயிருந்தான்.

ஏனோ தெரியவில்லை... இது ஒரு எதிர்பார்க்கப்பட்ட மரணம் போலவே அவன் மனது உணர்ந்தது. இப்போது என்ன செய்வது என்ற நினைவு இயல்பாய் எழுந்தது.

பாதி திறந்திருந்த வேணியின் கண்களை மெல்ல மூடிவிட்டு ஒரு பழைய சேலையை அவள் மீது போர்த்திவிட்டான். துரை யண்ணை வேணியின் இரு பாதங்களினது பெருவிரல்களையும் சேர்த்து வெள்ளைத்துணியால் கட்டினார்.

சாகிற வயதா இவளுக்கு... இருபத்தாறு வயதில் இந்த விதமாய் செத்துப்போக



# அழுவதற்கு நேரமில்லை

– தாமரைச்செல்வி –

ஒரு துளி பால் கடைசியாய் அவள் வாயில் விடக்கூட வழி இருக்கவில்லை. எட்டுவருடங்கள்அவனுடன்வாழ்ந்தவளின் மனம் அவன் வேணி... வேணி... என்று கூப்பிட்டதை உணர்ந்து கொள்ளவில்லை. கறுப்பு நிறமென்றாலும் என்ன அழகாய் களையான முகத்துடன் இருப்பாள். ஐந்து தடவை வந்த காய்ச்சல் அவளின் தோற்றத்தையே மாற்றிவிட்டது. பக்கத்துக் கொட்டிலில் இருக்கின்ற துரையண்ணைதான் அவள் இறந்து விட்டதாக சொல்லிவிட்டு அவனை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார்.



நேர்ந்ததே... கடவுளே... கடவுளே என்று உள்மனது அலறியது. வேணிக்குப்பக்கத்தில் ஆறுமாதம் நிரம்பிய கடைசிக் குழந்தை கிழிந்த சேலையில் கைவிரலை வாயில் வைத்துக்கொண்டு நித்திரையாய்க் கிடந்தது. ஆறு வயது ராசு காய்ச்சலுடன் இன்னொரு புறம் படுத்திருந்தான்.

இடி விழுந்தது போல ஏங்கிப் போயிருந்தாள் அம்மா. குடிசைச் கப்புடன் இருந்த அம்மாவின் மடியில் சாய்ந்து கொண்டு நாலு வயது வாணியும் இரண்டு வயது தேவியும்....

சிறுகதை

கை விளக்கின் மெலிந்த வெளிச்சத்தில் அந்தக் குடிசையின் சூழலைப்பார்க்க வயிற்றுக்குள் பிசைந்தது. அம்மா கூட குரல் எடுத்து அழவில்லை. அதிக வேதனையில் மனம் கூட இறுகிப் போய் விட்டது.

சத்ஜய நடவடிக்கையில் இடம் பெயர்ந்து வந்த இந்த ஏழெட்டு மாதங்களாக வேணியுடனும் இந்தப் பிள்ளைகளுடனும் படாத பாடுபட்டு விட்டான். இந்த இடப்பெயர்வால் ஏற்பட்ட அத்தனை பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

முன்பு பரந்தனில் இருந்தபோது இத்தனை துன்பம் இருந்ததில்லை. சொந்தமாய் ஒரு குடிசை இருந்தது. முற்றத்தில் ஐந்தாறு தென்னைமரங்கள் நின்றன. வயல் வேலைகளுக்கோ தோட்ட வேலைகளுக்கோ போய் உழைக்க முடிந்தது. இந்த வேலை இல்லாத நாட்களில் திருவையாறு, கனகாம்பிகைக்குளம் என்று தோட்டங்களில் போய் மரக்கறிகள் கட்டி வந்து கிளிநொச்சி சந்தையில் விற்கமுடிந்தது.

அன்றைய தினம் ஆனையிறவிலிருந்து பரந்தன் பகுதிகளை நோக்கி வந்து விழுந்து வெடித்த எறிகணைகளின் அதிர்வு தாங்க இயலாமல் வீடு வாசல் விட்டு ஓடி வரும் கூட்டத்தோடு அள்ளுப்பட்டு இந்த ஸ்கந்தபுரத்திற்கு ஓடிவந்தர்கள். இங்கு வந்து இந்த வாய்க்கால் கரையில் சின்னக் கொட்டில் போட்டு இருந்தார்கள். மழைக்காலக் குளிரையும்தாங்கிக் கொண்டு இங்குதான் குழந்தையும் பிறந்தது. குழந்தை பெற்றவளுக்கு நல்ல சாப்பாடு கூட கொடுக்க முடியவில்லை. இந்த இடம் ஒத்துக் கொள்ளவில்லையோ என்னவோ மாறிமாறி வருத்தம்தான்.

அக்கராயன் ஆஸ்பத்திரி வாசலில் நீண்டு கிடந்த வரிசையில் ஒரு நாள் முழுவதும் நின்று வேணி ரத்தம் சோதித்ததில் இரண்டு தடவை மலேரியா என்றார்கள். ஒரு தடவை நெருப்புக்காய்ச்சல் என்றார்கள். கடைசியாய் ஒரு மாதத்துக்கு முன்னர் மூளை மலேரியா என்றார்கள். ஒரு பன டோல் பத்து ரூபாவுக்கும் வாங்க இயலாத நிலைமையில் நோய் மட்டும் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது.

இரண்டு கிழமையாய் வேணி அக்கராயன் ஆஸ்பத்திரியில் கிடந்தாள். கட்டில்கள் எல்லாம் நிரம்பியதால் விறாந்தை ஓரம் பாய்போட்டு படுக்க வைத்தார்கள். இளநீரும் குளுக்கோசும் நிறை யக் கொடுக்கச் சொன்னார்கள். ஒரு இளநீர் முப்பத்தி ஐந்து ரூபா. விலை கேட்டதுமே மனம் சுருண்டு கொண்டது. ஆசையாய் வைத்திருந்த மணிக்கூடு பாதிவிலைக்குப் போனது. நாலு இளநீர் வாங்கிக் கொடுத்தான். இருபது ரூபா பெறுமதியான குளுக்கோஸ் பெட்டியை நூற்றி இருபது ரூபா கொடுத்து வாங்க வேண்டியதாயிற்று.

தொடர்ந்து இவைகளை கொடுக்க முடியவில்லை. வேணியின் உடல் சருகாய்ப் போனது.

அவனுக்குத்தான் நாய் அலைச்சல். ஆஸ்பத்திரியில் படுத்திருக்கும் வேணியைப் பார்ப்பதா... வீட்டைக் கவனிப்பதா... உழைப்புக்குப் போவதா...

எந்தத் தொழிலையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. குமரன் தாழ்வுக் காட்டுக்குப் போய் விறகு வெட்டி கொத்திப் பிளந்து சைக்கிளில் அடுக்கிக் கொண்டு வேகாத வெய்யிலுக்குள் வந்தால் நாற்பது ரூபா கேட்பார்கள். முகத்தைத் திருப்பிக் கொள்ள முடியாது. ஐந்து ரூபா அதிகம் போட்டுத் தரச் சொன்னாலும் அதிகம் பேர் தருவதில்லை.

எத்தனையோ நாள் வெள்ளைப்பச்சை அரிசிச்சோறும் முருங்கை இலைவறை யுமே சாப்பாடாய் ஆனது. இந்த நிலை

யில் பிள்ளை பெற்ற உடம்பு காய்ச்சல் வந்த உடம்பு என்று வேணியை எப்படிக் கவனிக்க இயலும்... எதுவுமே செய்ய இயலாத நிலையில் அவள் கொஞ்சம் கொஞ்சமாய் செத்துக் கொண்டு வந்ததை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கத்தான் முடிந்தது.

இரண்டு கிழமைக்கு முன்னர் வீட்டுக்குக் கொண்டு போகச் சொல்லி ஆஸ்பத்திரியில் சொல்லி விட்டார்கள். அரைகுறை உணர்வில் இருந்த வேணியை மாட்டுவண்டிலில் கிடத்தி வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள்.

கதைப்பது நின்றுவிட்டது. உடம்போடு தோல் ஒட்டிக் கொண்டது. கன்னத்தில் செழுமை வற்றிவிட்டது. தேசிக்காய் கரைத்து வாயில் விட்டால் கொஞ்சம் குடிப்பாள்.

குழந்தைகளைப் பார்க்கும்போது கண்களில் இருந்து கண்ணீர் வழியும். வாய் அசைக்க முயல்வாள். எந்தச் சத்தமும் வராது. மேற் பற்கள் உதட்டை அழுத்திக் கொள்ளும். முகத்தில் சொல்ல முடியாத வேதனை பரவும். அந்தப் பாவனை... அந்த தவிப்பு... அவனுக்குள் தாங்க முடியாத இரக்கத்தை தோற்றுவிக்கும்.

வேணிக்கு விட்டு விட்டு காய்ச்சல் வரும். இது என்ன வருத்தமோ என்று மனம் அலை பாயும். கடவுளே... கடவுளே... என்று பதறும். எந்த நிமிடமும் அவள் உயிர் அடங்கி விடக்கூடும் என்று அடிக்கடி தோன்றும்.

அம்மாவின் நிலைதான் பரிதாபமாய் மாறியது. வேணியையும் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு... எங்கேனும் வேலை வேலை என்று அலைகின்ற அவனையும் பார்த்துக் கொண்டு... முழுப் பொறுப்பும் அம்மாவின் தலையில் தான்.

ஏற்கனவே அம்மாவுக்கு ஏராளம் கவலைகள் இருக்கின்றன. வாழ்வில் பல இன்னல்களையும் இழப்புக்களையும் சந்தித்தவள்... பாவம்... அவனது குடும்பச் சுமையும் அம்மாவையே அழுத்தியது.

அவன் இப்போது அடங்கிப் போய் விட்டிருந்த வேணியின் முகத்தைப் பார்த்தான். வவுனியா ஆஸ்பத்திரி வரை கொண்டு போயிருந்தால் ஒரு வேளை இவள் பிழைத்திருக்க கூடுமோ என்று மனம் தத்தளித்தது.

கண்களில் நீர் திரையிட அவன் முகத்தைத் திருப்பி அம்மாவைப் பார்த்தான். அம்மாவின் கண்களில் இருந்து தன்னிச்சையாய் கண்ணீர் வழிந்தது. சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு எழுந்து அவளிடம் வந்தாள்.

“வேணியின்ர தாய் தகப்பன் வன்னேரிக்குளத்திலயல்லே இருக்கினம். என்னெண்டு அவைக்கு சொல்லி விடுறது...”

“வேணியின்ர தமயன் ஆட்கள் அக்கராயன் சந்தியில் இருக்கினம்தானே. அவையிட்ட சொன்னால் போதும் அவர் அங்கால சொல்லி அனுப்புவார்.”

“இப்ப ஆர்போய் இவைக்குச்சொல்லுறது.” அம்மா திகைப்புடன் கேட்டாள். அவன் ஒரு விநாடி யோசித்துவிட்டு... “நான்தான் போவேணும்” என்றான்.

அம்மா எதுவும் பேசவில்லை. ஊரில் என்றால் இந்த நேரம் எத்தனை சனம் வந்திருக்கும். இங்கு சுற்றாடல் எல்லாம் அவ்வளவு பழக்கமில்லாத ஆட்கள். இங்கு வந்த பிறகுதான் துரையண்ணை குடும்பமும் பழக்கமானது. சிலநாட்கள் முன்வரை இந்த வாய்க்கால் கரை நீளத்துக்கு நிறைய குடிசைகள் இருந்தன. ஷெல் அடி காரணமாய் பலர் இந்த இடம் விட்டு இன்னும் தூரமாய் போய்விட்டார்கள்.

அவன் குடிசை வாசலில் சாத்தியிருந்த சைக்கிளை எடுத்தான். திடீரென இருளின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஷெல் விழுந்து வெடிக்கும் ஓசை... அவன் திடுக்கிட்டு வடக்குப் பக்கம் பார்த்தான்.

ஷெல் விழுந்து வெடித்த சத்தத்தை வைத்துப் பார்க்கும் போது கோணாவிலில் அல்லது முறிப்பில் விழுந்திருக்கக்கூடும் என்று தோன்றியது. சமீப நாட்களாய் இரவு நேரங்களில் ஷெல் அடி அதிகமாய் இருக்கிறது. ஒருதடவை அவர்களையும் கடந்து கூவிக் கொண்டு போய் அக்கராயன் ஆஸ்பத்திரியில் விழுந்து வெடித்திருக்கிறது. அந்த சம்பவத்தில் நான்கு பேர் இறந்து போயிருந்தார்கள். எந்த இடம் இலக்கு என்றில்லாமல் எல்லா இடங்களிலும் விழுந்து வெடிக்கும் எறிகணைகள்...

அவன் சைக்கிளை மிதித்தான். நல்ல நிலவு வெளிச்சம். தெரு செம்மண்ணாய் நீண்டிருந்தது. ஒற்றையடிப் பாதையால் வந்து பிரதான வீதியில் ஏறியபோது வீதி கலகலப்பாய் இருந்தது. கடைகளில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சம்... புடைவைக்கடைகள் கதவுகள் சாத்தப்பட்டுக் கொண்டிருக்க சாப்பாட்டுக் கடைகள் சத்தமாய் இருந்தன. நேரம் எட்டரை இருக்கக்கூடும். தெருவில் சனங்களின் நடமாட்டம் அடங்கவில்லை. இவன் முருகன் கோவில் தாண்டியதும் சைக்கிளை வேகமாக மிதித்தான். காற்றின் வெம்மை முகத்தில் மோதியது.

அக்கராயன் சந்திவரை வந்து பாலத்தில் பிரியும் பாதையில் திரும்பி இரண்டாவது காணி வாசலில் போய் நின்றான். சைக்கிள் மணி அடிக்க, முற்றத்தில் நின்ற வேணியின் அண்ணா வாசலுக்கு வந்தார்.

நிலவு வெளிச்சத்தில் அவனது கலைந்த கோலம் தெரிய கலவரத்தோடு பார்த்தார்.

**சமீப நாட்களாய் இரவு நேரங்களில் ஷெல் அடி அதிகமாய் இருக்கிறது. ஒருதடவை அவர்களையும் கடந்து கூவிக் கொண்டு போய் அக்கராயன் ஆஸ்பத்திரியில் விழுந்து வெடித்திருக்கிறது. அந்த சம்பவத்தில் நான்கு பேர் இறந்து போயிருந்தார்கள்.**

“வேணி.....”

மேலே தொடர்ந்து அவனால் சொல்ல முடியவில்லை. வேணி செத்துப் போனாள் என்ற வார்த்தையை உச்சரிக்க மனம் வரவில்லை. அவருக்கு வினாடியில் விஷயம் புரிந்து விட்டது.

“என்ன... முடிஞ்சுதோ...”

அவன் தலையசைத்தான். அங்கு வந்த அவரின் மனைவி அய்யோ என்று கத்தினாள்.

“நீ வீட்ட போ. நான் இரவே போய் ஐயா அம்மாவுக்கு சொல்லி காலமை கூட்டி வாறன். வேற ஆருக்கு சொல்லுறது...”

“மல்லாவியில அக்காவையள் இருக்கினம். புதுக் குடியிருப்பில தம்பி குடும்பம். அவைக்கு சொல்லிஅனுப்பவும்ஏலாது. சொன்னாலும் வர ஏலுமோ தெரியாது.”

“சரி. நீ போ. நான் சொல்ல முடிஞ்ச ஆட்களுக்கு சொல்லிப் போட்டு காலமை வாறன்”

அவன் திரும்பி வரும்போதுதான் திடுமென ஒரு நினைவு மனதில் உறைத்தது. கையில ஒரு சதம் காசும் இல்லை. என்ன செய்வது... நாளைய தேவையை எப்படி சமாளிப்பது...

ஏனோ அந்த நேரம் இந்திரனின் ஞாபகம் வந்தது. அவனிடம் கடனாகக் கேட்டுப் பார்க்கலாம். அண்ணா சிலையடி வீதியில் திரும்பி இந்திரனின் வீட்டுக்குப் போன போது நல்ல வேளையாக வாசலில் நின்றான்.

“என்னடா இந்த நேரத்தில...”

“வேணி....” தயங்கி வார்த்தைகளை விழுங்கினான்.

“என்ன கடுமையே...”

“இல்லை. நாளைக்கு எல்லா அலுவலும் பார்க்க வேணும். அதுக்கு ஒரு சதமும் என்னட்ட இல்லை.”

இந்திரன் ஒரு வினாடி விக்கித்துப் போய் நின்று விட்டு அவனைக் கவலையுடன் பார்த்தான்.

“கன காசு வேணுமெல்லே. என்னட்டை அவ்வளவ இல்லை. ஆயிரம் ரூபா தாறன். காலமை அம்பலப்பெருமாள் குளத்துக்குப் போய் வாழைக்குலை கட்ட வைச்சிருக்கிற காசு. இந்தா பிடி. நான் காலமை வாறன்.”

காசை வாங்கிக் கொண்டு திரும்பும் போது ஒரே யோசனை. இந்த ஆயிரம் ரூபாவோடு எப்படி சமாளிப்பது? வேறு எங்கு போவது? யாரிடம் கேட்பது? கேள்விகள் தலைக்குள் மின்னலாய் வெடித்தது.

வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது மெலிதான அழுகுரல்களுடன் ஒரு விதமான பரபரப்புத் தெரிந்தது. பத்துப் பேர் வரை நின்றார்கள்.

அம்மா அவனைக் கண்டதும் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். அவள் மாடியில் ராசு துவண்டு போய்க் கிடந்தான். கையும் காலும் இழுத்து இழுத்து துடித்தது.

“என்னம்மா...” அவன் பதறிப் போய்க் கேட்டான்.



“சரியான காய்ச்சல் காயுது. பிள்ளைக்கு வலிக்குது. உடன் எங்கயாவது கொண்டு போகவேணும்.”

அம்மா உரத்த குரலில் அழுதாள். கண் மூடிக்கிடந்த பிள்ளையைப் பார்க்க மனம் பதறியது. அப்படியே வாரி எடுத்து தோளில் போட்டு ஒரு கையால் ராசுவை அணைத்துக் கொண்டு சைக்கிளை எடுத்தான்.

“கரும்புத் தோட்டத்துக்குப் பக்கத்தில் இருக்கிற டொக்டரிட்ட முதலில காட்டிப் போட்டு வாறன்.” காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமான ஓட்டம். தோளில் முகம் பதித்துக் கிடந்த ராசுவின் அம்மா... அம்மா... என்ற முனகல் நெஞ்சை அறுத்தது.

ஒரு சிறு கூடாரம் போட்டு லாம்பு வெளிச்சத்தில் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வைத்தியரிடம் பிள்ளையைக் காட்டினான். ஒன்பதரை மணிக்கு மேலான போதும் இன்னும் ஆட்கள் இருந்தார்கள். அவனது பதைபதைப்பையும் பிள்ளையின் மயங்கிய நிலையையும் பார்த்து வழிவிட்டார்கள்.

வாங்கில் ராசுவை கிடக்கச் சொல்லி வைத்தியர் பார்த்தார்.

“இப்பிடி காய்ச்சல் காயுது. ஏன் வைச்சுக் கொண்டு இருந்தனீங்கள்.” அவரின் குரலில் சிறிது எரிச்சல் தென்பட்டது.

அவன் பேசமால் நின்றான்.

“எத்தனை நாளாய் காய்ச்சல்?”

“ரத்தம் சோதிச்சனீங்களே...”

“இல்லை.” தயங்கிச் சொன்னான்.

“என்ன சாப்பாடு குடுத்தனீங்கள்?”

“ஒண்டும் அவன் சாப்பிடுறேலை.”

“இளநீர் ஏதும்?”

அவன் முகம் வாடப் பேசாமல் நின்றான்.

## ஒரு துளி பால் கடைசியாய் அவள் வாயில் விடக்கூட வழி இருக்கவில்லை.

"நீங்களே பிள்ளையைக் கவனிக்காட்டி என்ன செய்யிறது."

அந்த வார்த்தைகள் ஆழமான வலியைத் தந்தது.

"உடனடியாய் குளுக்கோஸ் ஏத்தவேணும். ஒரு டிரிப் ஏத்த ஐந்நூறு ரூபா ஆகும். என்ன செய்வம்..."

'திக்' கென்றது. தலை சரிந்து மயக்கத்தில் கிடந்த பிள்ளையைப் பார்க்க நெஞ்சு கலங்கியது.

சட்டைப் பைக்குள் ஆயிரம் ரூபா....

"சரி ஏத்துங்கோ. காசு தாரன்."

உடனே குளுக்கோஸ் ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. ராசுவின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் பக்கத்தில் இருந்தான்.

"பிள்ளைக்கு வலிக்குணம் இருக்கு. இரவு இங்க தங்கி நிற்கிறது நல்லது. பிள்ளையின்ர தாயைக் கூட்டி வந்து விடுங்கோ."

அவன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். மளுக்கென்று கண்களில் நீர் முட்டியது.

திக்கித்திணறி நடந்ததைச் சொன்னதும் அவரின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. இப்படியும் ஒரு மனிதனுக்குத் துயரம் நேருமா என்பதுபோல அவனை மிகுந்த அனுதாபத்துடன் பார்த்தார். ராசுவின் அம்மா அம்மா என்ற முனகல் அவர் மனதையும் நெகிழ வைத்திருக்கக்கூடும்.

பன்னிரண்டு மணிக்கு திரும்பவும் காய்ச்சல்வந்தது. அவர் நித்திரை முகத்துடன் வந்து குளிசை கரைத்துக்கொடுத்தார். மூன்று மணிக்கு காய்ச்சல் தணிய ராசு நித்திரையாகிப் போனான். மெல்ல விடிகிற நேரம்.

"பிள்ளையை வீட்ட கூட்டிப் போகட்டா?" என்று கேட்டான்.

"ஓம் கொண்டு போங்கோ. இந்த மருந்தைப் பார்த்துக்குடுங்கோ." அவன் ஆயிரம் ரூபாவை நீட்ட அவர் ஐநூறு மட்டும் எடுத்துக் கொண்டார்.

"குளுக்கோஸ் காசு மட்டும் போதும்."

அவன் ராசுவுடன் வீட்டுக்கு வந்த போது நன்றாய் விடிந்து விட்டது. நாலைந்து பெண்களுடன் முற்றத்திலிருந்து அம்மா அழுது கொண்டிருந்தாள். வேணி அதே இடத்தில் அசைவில்லாமல் கிடந்தாள். ராசுவை உள்ளே பாயில் கிடத்திவிட்டு வெளியே வந்தான். நிறைய வேலை இருக்கிறது.

முற்றத்தில் சின்னதாய் என்றாலும் ஒரு பந்தல் போட வேண்டும். அதற்கு கொஞ்சம் தடிகள் எங்காவது எடுக்கவேணும் அவன் தான் எங்காவது போய் தேடி வரவேணும்.

துரையண்ணையின் மகனும் அவனுமாய் நாலைந்து இடங்களில் அலைந்து கொஞ்சம் தடிகள் எடுத்து வந்தார்கள். தடிகள் நட்டுக்கொண்டிருந்த போதே இந்திரனும் வேணியின் தமயனும் வந்து விட்டார்கள். மேலே படங்கு போட்டு நிலத்திலும் படங்கு விரித்து ஒழுங்கு செய்ய கொஞ்சம் கொஞ்சமாய் ஆட்கள் சேரத் தொடங்கினார்கள்.

சொந்த ஊரின் ஆட்கள் விஷயம் கேள்விப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் துக்கம் அதிகரித்தது. அவனின் வீட்டு நிலை பார்த்து தமக்குள் காசு சேர்த்தார்கள். வெற்றிலை, பாக்கு, சுருட்டு, கற்பூரம் என்று வாங்கிவந்தார்கள். அவன் தன்னிடமிருந்த ஐநூறு ரூபாவையும் கொடுத்தான். வேணிக்கு மலிந்த விலையில் சேலை வாங்கி வரப்பட்டது.

ஞானம் 100ஆம் இதழில் செப்டெம்பர் 2008

**வி. என். சந்திரகாந்தி தனது கட்டுரையில்**



**ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையின் முதலாவது இதழ் எனக்கு கிடைத்தமை மிகவும் பசுமையாகவும் நேற்றையதினம் நடந்த ஒரு சம்பவம் போலவும் எனது மனத்தில் பதிந்துள்ளது. அதற்குள்ளாக நூறாவது இதழ் வந்துவிட்டதா என மலைக்கிறேன்!**

**ஞானம் சஞ்சிகை ஆரம்பம் முதல் நெருக்கடியானதொரு கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு சவால்கள் பலவற்றிற்கு முகம் கொடுத்து இலக்கிய உலகில் தனது இருப்பை தொடர்ந்து நிலை நிறுத்தி வருகின்றது.**

**ஈழத்து இலக்கிய சாதனைகளுக்கு ஞானம் சஞ்சிகை பெருமைப்பட வேண்டியதொரு ஆவணமாக தடம் பதித்து விட்டது. தொலைவிலிருந்து கொண்டு ஈழத்தின் இலக்கிய படைப்பாற்றலை அண்ணளவாக மதிப்பிட முனைபவர்களுக்கு ஞானம் நிச்சயம் சவாலாக அமையும்.**

**பாரதியார் ஆசைப்பட்டது போல ஞானம் தமிழின் பெருமையை உலகின் அனைத்து நாடுகளிலும் பரவ வழி செய்துள்ளது. வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கல்வி பயிலும் மாணவ மாணவியர் தமது பட்டப் பின் படிப்புக்காக ஞானத்தில் வெளிவந்த ஆக்கங்களை ஆய்வு செய்து தமது துறையை நிறைவு செய்துள்ளனர்.**

தேவாரம் பாடி கற்பூரம் கொழுத்தி வேணியை சுடலைக்கு எரிப்பதற்கு விறகு ஒழுங்கு செய்ய முடியவில்லை. எல்லாவற்றிற்கும் காசு வேணும். எரிக்காமல் புதைக்கலாம். அதை நினைக்கையில் மனதுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவன் வருத்தம் பார்த்துவிட்டு இந்திரனும் வேணியின் தமயனும் விறகு வெட்டி சுடலையில் போடுவதாய் சொல்லி தம்முடன் நாலு பேரைக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

பெட்டி வாங்க காசு இல்லை. பெட்டியின் விலை பற்றியும் தெரியவில்லை. யாருடன் கதைக்கமுடியும்.

அங்கு வந்தவர்களும் ஒருவித பதட்டத்தில் இருந்தார்கள். இந்த இடத்துக்கு சமீபமாய் ஒவ்வொரு நாளும் ஷெல் விழுந்து அவர்களைப்பயமுறுத்திக்கொண்டிருந்தது. இங்கும் இருக்க முடியாமல் இன்னொரு இடப்பெயர்வோ... என்ற ஏக்கம். ஆமி இங்கும் வந்து விடுமோ என்ற கலக்கம். பலபேர் மூட்டை முடிச்சுக்களுடன் ஓடுவதற்கு ஆயத்த நிலையில்தான் இருந்தார்கள். இனியும் கிட்டவாய் ஷெல் விழுந்தால் இன்னும் தூரமாய்ப்போக வேண்டியதுதான். ஒவ்வொருவரும் யோசனையுடனும் கவலையுடனும் ஒரு வித அமைதியின்மையுடனுமே அங்கு நின்றிருந்தார்கள்.

மத்தியானம் தூரத்தில் கிபிர் விமானங்கள் இரைச்சல் கேட்டது. கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் குண்டு போடும் சத்தங்களும் தேய்வாகக் கேட்டன.

அவனுக்கு இன்றைய அலுவல் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நடைபெற்று விட வேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது. கடன் பட்டாலும் எட்டுச் செலவும் செய்து விட வேண்டும். அதற்குள் எந்தக் குழப்பமும் வந்துவிடக் கூடாதே என்று மனம் தவித்தது.

குழந்தைகள் அங்கு அழுபவர்களை கண்களை விரித்து பார்த்துக் கொண்டிருந்தன. தமது இழப்பை உணர இயலாத வயது.

மூன்று மணிக்குமேல் பாடை கட்டி பச்சைத் தென்னோலையில் வேணியைக் கிடத்தி சேலையில் சுற்றி தூக்கிக் கொண்டார்கள். அவன் கொள்ளிக் குடத்துடன் முன்னே நடந்தான். முற்றம் கடந்து வாய்க்கால் சரிவில் இறங்க திடீரென கிபிரின் இரைச்சல் மிக சமீபமாக கேட்டது. பதட்டத்துடன் நிமிர்ந்து பார்த்தார்கள். வெய்யில் பட்டு மின்னியபடி வட்டம் போடும் ராட்சத விமானங்கள்...

தூக்கிக் கொண்ட பாடையைக் கீழே வைப்பதா... அப்படியே தோளில் வைத்திருப்பதா... என்று தடுமாறினார்கள். ஐந்து நிமிடத்தில் விமானங்கள் வடக்குப் பக்கமாய் போய் மறைந்தன.

அவர்கள் வாய்க்கால் கடந்து தெருவில் ஏறி சுடலை நோக்கி அவசரமாய் நடந்தார்கள். பத்துப் பதினைந்து பேர் கூட வந்தார்கள். சுடலையில் வேணியை எரித்துவிட்டு வீடு திரும்பி தலைக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு முற்றத்துக்கு இவன் வந்த போது இரவு ஏழு மணியாகிவிட்டது. துரையண்ணை வீட்டிலிருந்து வெள்ளை அரிசிச் சோறும் பருப்பும், தக்காளிப்பழக் குழம்பும் வந்திருந்தது. அம்மா இலையில் போட்டுத்தர கொஞ்சம் சாப்பிட்டான்.

ராசுவின் முகம் இப்போது கொஞ்சம் தெளிந்திருந்தது. தேவியும் வாணியும் குழந்தையுடன் குடிசையின் வாயில் பக்கம் இருந்தார்கள். வாசலோடு சிறு கைவிளக்கு மெலிதாய் எரிந்து கொண்டிருந்தது. வேணியைக் கிடத்தியிருந்த இடம்.

அவன் வெளியே வந்து முற்றத்தில் நின்ற பூவரசு மர அடிவேரில் அமர்ந்தான். நல்ல நிலவு தூரத்துக் குடிசைகளில் மினுக் மினுக்கென்ற மங்கலான வெளிச்சம்.

குடிசை வாசலில் குழந்தைகளுக்கு பக்கத்தில் வந்து அம்மா அமர்ந்தாள். முகம் வீங்கி தலை கலைந்து கண் சிவந்து கிடந்தது. கை விளக்கின் தீபம் காற்றில் அப்படியும் இப்படியும் அசைந்தது. அவன் நிலவு வெளிச்சத்தில் தெரிந்த மரங்களையும் வாய்க்கால் சரிவையும் வெறித்துப் பார்த்தான். அவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த துயரம் நெஞ்சுக்குள் புரண்டு புரண்டு எழுந்தது.

அவன் கலியாணம் செய்து கூட்டி வந்த பதினெட்டு வயது வேணி... அவன் உழைத்துக் கொண்டு வந்து கொடுக்கும் காசில் சிக்கனமாய் குடும்பம் நடத்தின வேணி...

அவனையும் குழந்தைகளையும் அன்பாய் பாசமாய் பார்த்துக் கொண்ட வேணி...

கடைசி நேரத்தில் வருத்தத்தோடும் பசி பட்டினியோடும் போய் விட்ட வேணி... அய்யோ... வேணி... வேணி... என்ர வேணிக் குஞ்சு...

அடிவயிற்றிலிருந்துவிம்மல்வெடித்துக் கொண்டு கிளம்பி கண்களில் நீராய் திரண்டது. அந்தக் கண்ணீர் கன்னத்தில் வழிந்த வினாடி காதை அதிர வைத்த ஷெல் வீச்சு...

மிக சமீபத்தில் வந்து விழுந்து வெடிக்க குழந்தைகள் திடுக்கிட்டு வீலென்று அலற... அவன் எழுந்து குழந்தைகளிடம் ஓடினான்.

அடுத்தடுத்து ஷெல் வந்து விழ...

இது அண்ணா சிலையடியில...

இது ஆஸ்வத்திரியடியில...

இது மணியங்குளத்தில...

கடவுளே... ஏன் அடிக்கிறாங் களாக்கும்...

ஒவ்வொரு அதிர்வுக்கும் பிள்ளைகள் அலறியடித்துக் கொண்டு அழுதன. தங்கள் தாய் இறந்துகிடந்த போது கூட அழத்தெரியாத பிள்ளைகள்.

"அப்பா! ஆமிக்காரன் இங்கயும் வரப்போறானாமா?"

ராசு திகிலுடன் கேட்க அடுத்த அதிர்வு...

துரையண்ணை ஓடிவந்தார்.

"கிட்டக்கிட்ட அடிக்கிறாங்கள். இங்க இனி இருக்க ஏலாது வாங்கோ தூரவாய் வன்னேரிக்குளத்துக்குப் போவம். பிள்ளையள் பயந்து அழுகுதுகள்."

அடுத்த ஒரு மணிநேரத்தில் அம்மா, குழந்தைகளுடனும், உடமைகளுடனும், வாய்க்கால் கடந்து தெருவில் போய்க் கொண்டிருந்த ஆட்களுடன் அவனும் சேர்ந்து கொண்டான்.

அணைக்க மனம் வராமல் அவன் விட்டுப் போயிருந்த கைவிளக்கு மட்டும் மெலிந்த சுடருடன் அழுது வடிந்து கொண்டிருந்தது.

# அரங்கவெளியில் அரசியல் கலையாக்கம்

**போர்க்காலத்தில் எழுதப்பட்ட தமது நாடகங்கள் பற்றி**

## குழந்தை ம.சண்முகலிங்கம்

– கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்

நேர்காணல்



குழந்தை
ம.சண்முகலிங்கம்

எண்பதுகளுக்குப் பின் எழுச்சி கொண்ட ஈழத்துத் தமிழ் அரங்கின் பிரதான நாடகவி யலாளன். ஈழத்து அரங்கை நவீனப்படுத்திய கலையரசு சொர்ணலிங்கத்தின் பாசறையில் புடம்போடப்பட்டவர். பேராசிரி யர் கணபதிப்பிள்ளை வழியில் பேச்சுத் தமிழைப் காத்திரமாகவும், நகைச்சுவையோடும் சமூகப்பிரச்சினைகளை நாடகத்தில் பேசப்பயன்படுத்தியவர். சமூக அரங்கை கல்வி அரங்கை, சிறு வர் அரங்கைப் புதிய தமிழ்த் தேசிய அரங்க வடிவத்துள் ஆட்படுத்தியவர். அதன் வழியே 1985 இல் போர்க்கால அரங்கை தனது மண்சுமந்த மேனியர் மூலம் புத்துயிர்ப்பு ஊட்டியவர். தொடர்ந்து தமிழர் அரசியல் உரிமை, போரின் துயரம் என்பன பற்றித் தான் எழுதிய நாடகங்கள் எல்லாமே மண்சுமந்த மேனியரின் பல்வேறு பாகங்கள் எனக்கூறும் நேர்காணலை தொடர்ந்து வாசகர்கள் வாசிக்கலாம். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் 2003 இல் அவரது நாடகப் பணிக்காக கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

**ஸ்ரீகணேசன்: தங்களது நாடகச் செயற்பாட்டு வரலாற்றில் "மண்சுமந்தமேனியர்" நாடகத்துடன் தங்களது போர்க்கால நாடகங்கள் தொடங்கின எனக் கொள்ளலாமா?**

கு.ச.: இவ்வகையான பெருந்தொடர்களால் கலை இலக்கியப் போக்குகளைத் தொட்டுக்காட்டுவது அபரிமிதமாகப்படுகிறது. போற்றுவதும், தூற்றுவதும் எமது கடுமையான தன்மைகள். சோழர் காலத்தில் கம்பனும், அதற்கு முற்பட்ட காலத்தில் இளங்கோவும், 20ம் நூற்றாண்டில் பாரதியும் நின்றுபிடிப்பது சாதனை தான். பாரதியார் கூட

"கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல்
இப்பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"

என்று உணர்ச்சிவசப்பட்டு பாடியுள்ளார். மேற்கத் தேய வீச்சான கவிஞர்களான சேக்ஸ்பியர், ஷெல்லி, போன்றவர்களை அறிந்து கொண்டும் தமிழ்க் கவிஞர்களின் புகழ்பாடுவதற்குக் காரணம் உண்டு. அவர் கவிஞர். ஆனால் கலை, இலக்கிய ஆய்வாளர் களும் விமர்சகர்களும் ஒரு நீதிபதிபோல் நிதானமாக எழுதவேண்டும். "மண் சுமந்த மேனியர்" எழுதப்பட்ட காலத்தை நினைத்துப் பார்க்கும்போது அதன் படைப்பாக்கத்தில் எழுத்தாளன், நெறியாளன், நடிகர்கள், இசையாளன் ஆகியோரின் கூட்டு முயற்சி பற்றிப் பார்க்கும் பார்வை வேண்டும். ஒரு எழுத்தாளன் அதேகாலகட்ட மற்றைய படைப்பாளிகளிடமிருந்து வேறுபட்டு ஒரு சிறந்த எழுத்தாளன் ஆகிய பின்னணி எது என்று வரலாறு எழுதும் ஆய்வாளன் கண்டுபிடிக்க வேண்டும். என்ன மாற்றத்தினை ஏற்படுத்தி உள்ளார் எனக் குறிப்பிட வேண்டும்.

**ஸ்ரீகணேசன்: "மண் சுமந்த மேனியர்" ஏன் உருவானது. போராட் டம் சம்பந்தமாக அது பேசாமல் அதே பாணியில், அதே அமைப்பில்**

**போடப்பட்டிருந்தால் வரவேற்கப்பட்ட நாடகமாக வந்திருக்குமா?**

**கு.ச.:** அது மேலே வந்ததுக்கு அடிப்படைக் காரணம் அந்தக் காலம் தலை மறைவாக இயக்கங்களோடு சம்பந்தப் பட்ட தமிழர் பிரச்சினை பற்றிப் பேசியது. வரவேற்கத்தக்க இன்னுமொரு அம்சம் மக்கள் மனங்களில் துளிர்விட்ட நம்பிக்கை. அதற்கான காரணம்: தமிழர் அரசியல் அகிம்சை வழியில் தோற்றுத் தோற்றுப் போனதால் பயத்தோடுதான் தமிழ் மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட வன்முறையை சண்டையால் எதிர்கொண்டனர். மேலும் ஒரு காரணத்தையும் இந்நாடக வெற்றிக்குக் காரணமாகக் கூறுவதெனில் மக்களின் விடுப்பு, ஆர்வம் தமது பிரச்சினையைத் தமது பிள்ளைகள் மறைந்து வாழ்ந்து அணுகும்முறைபற்றி அறியும்ஆர்வம்மக்கள் வருகையைக் கூட்டியது. பயத்தோடு கூடிய விடுப்பு - ஆர்வம். புதிதாக மேற்கிளம்பிய அல்லது முகிழ்த்த ஈழத்து தமிழ் அரங்க வடிவத்துக்கு அப்பால் பேசப்பட்ட விசயம் முக்கியமாகியது. விடிவைப் பெற்றுத் தரும் அரசியற் போக்கு என மக்கள் நம்பினர்.

ஏற்கனவே எழுபதுகளில் கொழும்பில் உருவாகி வந்த தமிழ் நாடக வடிவம் பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி கூறினார். அங்கு தொப்புள் கொடி உருவானது என்றும் இன்று “மண் சுமந்த மேனியர்” எங்களுடைய அரங்காக, நாம் தேடிக் கொண்டு வரும் தேசிய நாடகத்தின் அம்சங்கள் கொண்டதாக உருவாகி உள்ளதாகக் கொள்ளலாம் எனும் கருத்துப்பட அவர் நாடகம் பார்த்த உடன் எனக்குக் கூறியது ஞாபகம் வருகிறது.

கலை என்பது பலவற்றை ஒன்றிணைப் பதுதான். Collage என ஆங்கிலத்தில் கூறுவர். மண் சுமந்த மேனியரும் ஒரு Collage எனலாமா? என்னுடைய நாடகங் களில் வரும் மண் சுமந்த மேனியரின் வடிவம் தோன்றியதற்கு ஒரு வரலாறு உண்டு. அவ்வடிவம் 85 க்கு முந்திய எமது பாடசாலை நாடகங்கள் ஊடாக மேற்கிளம்பிய வடிவம். பாடசாலை அரங்குகளில் வரவேற்கப்பட்டதாக நினைவு உண்டு. அங்கும் மூன்று குடும்பங்கள் மேடையில் தோன்றும். மண் சுமந்த மேனியரில் ஒரு கிராமமே தோன்றுகிறது. உற்றார், உறவினர், அக்கா, தம்பி எனப் பொதுப் பாத்திரங்களாக உலவுவர். அங்கு பேசப்பட்ட தமிழர் பிரச்சினை காரணமாக அதற்குப் பங்காற்ற உற்றார், உறவினர் எல்லோரும் வாருங்கோ என்றுதான் அழைப்பு விடுக்கப்பட்டது. இப்போராட்டம் ஒரு பொது நிகழ்ச்சி. தனி நபர் நிகழ்வு அல்ல. ஆகவே எல்லோரும் ஒன்றுபட வேண்டிய தேவை இருந்தது.

யாழ்ப்பாண சமூகத்தில் உள்ள நல்லதும், கெட்டதும் ஆன போக்குகள் அங்கு காணப்படும் ஒருவர் உணர்வுபூர்வமாக இணைந்திருப்பார். ஆனால் அப்பாத்திரம் நிதானமாகக் கதைக்கும். இன்னொன்று உணர்ச்சிவசப்படும் பாத்திரம். விலாசம் காட்டி, காட்சி காட்டி மற்றவர் வாயை உருவிவிட்டு அந்தரப்பட்டு கொண்டு திரி யும் பாத்திரம். இந்த நிலைமை எமக்கு ஆபத்தைத் தரும் எனச் சுட்டுவதற்காக உருவாக்கப்பட்ட பாத்திரம். இன்னும் ஒரு பாத்திரம் மென்மையான போக்குடன் உருவாக்கப்பட்டது. ‘அந்த அலுவலை நீங்க பாருங்கோ’ என மற்றவர் மீது பொறுப்பைத் தள்ளிவிட்டு நிம்மதியாகத் திரியும் பாத்திரம். இப்படியாக வகை மாதிரிப் பாத்திரங்களாக உருவாக்கப் பட்டன. யாழ்ப்பாண மத்தியதர வர்க்க யதார்த்தப் பாத்திரங்களாக உருவாகின. இவை ஒரு பல்தன்மையுடன் யாழ்ப்பாண சமூகத்தை பாடுநர் உரைஞர் எனும் பாத்திரங்களாக அதன் கடும்போக்கைப் பிரதிபலிப்பதாக, விட்டுக்கொடுப்பையும்

இசைவையும் எடுத்துக் காட்டுவதாக அமைக்கப்பட்டன. ஒரு பாத்திரத்துக்குப் பதிலாக மூன்று பாத்திரங்களின் சமூகக்குணம் திரட்சி பெற்று ஒருகுணமாக-ஒரு பாத்திரமாக படைக்கப்பட்டது.

இவ்வகை உருவாக்கத்தைப் பற்றி Praba Manuratne என்பவர், 2008 ல் ஆங்கில மொழி பெயர்ப்பு சோ. பத்மநாதனால் செய்யப்பட்டு குமரன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட போது எழுதியதாவது மண்சுமந்த மேனியரில் வரும் பாத்திரங்கள் Every man நாடகத்தில் வரும் Portrait Characters போல அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டார். அதாவது Good deeds நல்ல செயல்கள், Friend Ship -நட்பு எனும் மனித குணாம்சங்களே பாத்திரங்களாக, அப்படியாக யாழ்ப்பாண சமூகமே பல்தன்மை கொண்ட பாத்திரங்களாக உருவாகியது எனலாம்.

எனது பாடசாலை நாடகங்களில் வரும் பாத்திரங்கள் பற்றி நாடக இயக்குநரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமாகிய என். சுந்தரலிங்கம் கூறும் போது அவை Collective Characters என்பார். இந்நாடகத்தில் வரும் பாத்திரங்களை சின்னையா, பொன்னையா எனவும் பெயரிடலாம். ஆனால் பேசப் படும் விடயம் பொதுச்சமூக விடயம்: அதனால் சமூகத்தின் பல்வேறு குணாம்சங்களை காட்ட பாத்திரங்கள் அவ் விதம் பொதுப் பாத்திரங்களாக உருவாகின.

அரங்க வடிவைப் பொறுத்தமட்டில் எழுபதுகளின் இறுதியில் நாடக அரங்கக் கல்லூரிக்காக மேடை ஏறிய, 'கூடி விளை யாடு பாப்பா' எனும் சிறுவர் நாடகத்தில் மண்சுமந்த மேனியர் நாடகத்தின் வடிவம் தோற்றம் பெற்றுவிட்டது. நாடக அங்க மாற்றமில்லை. திரை மூடுவதும் திறப்பதும் இல்லை. ஒரே அரங்கு பல்வேறு களங்களாக உருமாறும். மேடை நடவடிக்கைகளாக அவை மாறும். பாடசாலை நாடகங்களின் எண்பதுகளில் இந்தப் போக்குத் தொடர்ந்தது. பாத்திரங்கள் சமூகப் பாத்திரங்களாகின. வடிவம், பாணி, அமைப்பு என்பன கூடிவிளையாடு பாப்பா நாடகத்தின் தொடர்ச்சியே தான்.

மண்சுமந்த மேனியர் நாடகம் ஒரு யதார்த்த நாடகம் அல்ல. அக்காலத்தில் Linear Style நேர்ப்பாணியில் - நாடகங்கள் போடப்பட்டு வந்தன. ஒரு பிரச்சினை அது வளர்க்கப்பட்டு உச்சக் கட்டத்தை அடையும்: முடிவு காணப்படும். அங்கு பின்நோக்கு (Flash back) முன்னே நிழல் விழுத்தல் (Fore - shadowing) உத்திகள் பாவிக்கப்படலாம். ஆனால் நேர்கோட்டிலேயே நாடகம் ஓடும்.

ஆனால் மண்சுமந்த மேனியர் ஒரு சமூகத்தின் பல பிரச்சினைகளை பொதுத்தளத்தில் வைத்துப் பேசியது. அப்படிப் பேசும்போது பலதன்மையான வகைமாதிரிப் பாத்திரங்கள் பல்வேறு களங்களில் செயற்படும் அரங்காக நமது அரங்கு மாறிவிட்டது. உள்ளடக்க ரீதி யாக சுவைபட வருவனவெல்லாம் ஒரு இடத்து வந்துள்ளதாக தொகுத்துக் கூறவேண்டிய தேவை எழுத்தாளனுக்கு உண்டு. அங்கு நாட்டார் பாடல்கள் வரும், நவீன விடுதலைக்கவிதைகள் வரும். மனித உணர்ச்சிகளைக் காட்டும் தேவார திருவாசகங்கள் வரும்.

கதையமைப்பு ரீதியாக இதிகாசங்கள், புராணங்கள் கையாளப்படும். ஏனெனில் இவையெல்லாம் தமிழ்ச்சமூகம் அறிந்த பண்பாட்டு இலக்கிய செழுமைகள். எனவே அவற்றினூடு எமது பிரச்சினையைப் பேசும் போது அதன் பல்பரிமாணத்தை நாம் மக்களுக்கு தொற்ற வைக்க முடியும்.

இங்கு இன்னுமொரு பிரச்சினை வர லாம். ஏற்கனவே கூறியது போல பலவற்றை இணைக்கும் - Collage ஆக - படைப்பாக உருவாக்கும்போது அதன் குழைப்பு சரியான

முறையில் அமைக்கப்பட வேண்டும். வெறுமனே ஒட்டிவிட்டது போல் இருக்கக் கூடாது. நடிப்பிலும் யதார்த்த நடிப்புடன், எடுத்துரைப்பு (கூத்தில் வரும் கட்டியக்காரன் போல்) நடிப்பும் இணைக்கப்பட்டது. செய்து காட்டும் நடிப்பு, இடையில் வரும் புராண, இதிகாசக் காட்சிகளில் மனோரீதிய மிகைப்பாட்டு நடிப்பு முறைகள் பாவிக்கப்பட்டன. மேடையில் பல்வேறு செயற்பாடுகள் நடத்தப்படும். பாடகர் இணைவர். எழுதுநராக பாத்திரமாக மாறுவர். ஒரு நிலையான- குறிப்பான பாத்திரமாக இல்லை. இவ்வாறு அரங்கின் பல்வேறு முறைகளை பல்வேறு சாத்தியப்பாடுகளை நெறியாளர் கையாளும் விதமாக படைப்பு உருவாகியிருந்தது.

இப்படியாக இந்த குழைப்பில் உருவான புதிய மரபு (New idiom) மக்களுக்குப் பிடித்திருந்தது. பார்த்தார்கள், வரவேற்றார்கள், பல சேர்க்கை ஒன்று பட்டு ஒரு சீரான குழையலாக அழகி யற் படைப்பாக உருவாகியிருந்தது. எண்பதுகளில் தோன்றிய சீரற்ற சமூகச் சூழ்நிலையால் நாடக உலகம் இரவு நாடகங்களை மறந்திருந்தது. பாடசா லைகளில்தான் பகலில் நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பலர் யாழ்ப்பாண நாடக அரங்க வளர்ச்சி அல்லது மாற்றங்கள் பற்றி அறிந்திருக்கவில்லை. முதன்முதலில் மண்சுமந்த மேனியரைப் பார்த்தபோது பலருக்கு ஒருவித கலாசார அதிர்ச்சி காத்திருந்தது. 'நாடகத்தில் கனக்க மாற்றங்கள் வந்திருக்கு' என துருவன் எனும் பெயரில் எழுதி வந்த பரா குறிப்பிட்டிருந்தார். படைப்பின் வெற்றிக்கு ஒரு காரணம் மக்களின் உணர்வின் அலை வரிசையும், படைப்பின் அலைவரிசையும் நன்றாக வந்தமை, அத்தோடு காலத்தின் அலைவரிசைகள் ஒன்றாகியமையும் தான்.

கருப்பொருள் பல விடயங்களைக் கூற வேண்டிய கட்டாயம் நாடகவியலாளனுக்கு இருந்தது. சமூகநிலைமை அப்படி, அரசியல் களம் சூனியமாகியிருந்தது. பேசவேண்டிய அரசியல் உண்மைகள் மக்கள் மயப்பட வேண்டும். வெறும் சந்ததம் ஊட்டும் கலை நடவடிக்கைதேவைஇல்லை. அதனால்த்தான் பதினொரு பேர் அடிக்க பதினொராயிரம் பேர்வெறுமனேபார்த்துக்கொண்டிருக்கும் சமூகமாக அல்லாமல் சாதனை வீரருக்கு சோடா உடைத்துக் கொடுத்து பார்வை யாளராக அல்லாமல் மக்களை இணைக்கும் அறிவூட்டல் நாடகத்தூடு நடத்தப்பட வேண்டியிருந்தது.

படைப்பு எனும் போது ஒரு இசைவு வேண்டும். கவிஞர் விமர்சகர் சோ. பத்மநாதன் (சோ. ப) சொல்லுவார். பாரதியாருக்குப்பின் பக்திப் பாடல்களை சமூகச் செய்தி கூறப் பயன்பட்டது, இந்த நாடகத்தில்தான் என்று. இவை கதைக்கு தேவையானதே. நாடகச் செய்திகளின் உணர்வுக்கு அதன் செறிவைக் கூட்டுவதற்கு, சில சமயம் பிரச்சினைகளைத் தூரப்படுத்துவதற்கு (உணர்வு ஆழம் கூட்டுப்படுவதற்கு) பாடல்கள் பயன்படும்.

85ல் உருவான இந்நாடகத்தில் தாய்மார்கள் பிள்ளைகளை நினைத்து அழும் காட்சி பாடல் ஊடாக காட்சிப் படுத்தப்படும்.

**"கோயிலென்ற கோயிலெல்லாம்கும்பிட்ட நாங்கள் குஞ்சு தரவேணுமென்று நாங்கள் நின்றோமே"**

இன்று பிள்ளைகளை இழந்து தவிக்கும் தலைமுறையாக தொடரும் அவலம் நீடிக்கிறது. ஆகவே மண் சுமந்த மேனியர் வடிவம் மக்களை ஆச்சரியப்படுத்தியது. நாட்டார் பாடல் கள், தேவாரதிருவாசகங்கள் மக்கள் உணர்வை சுண்டி இழுத்தன. பிற்காலத்தில்

வாசித்த யப்பானிய நோ நாடகங்களில் பழைய பாடல்கள், காட்சிகள் பயன்படுத்தியுள்ளமையைக் கண்டேன். அமெரிக்க எழுத்தாளரின் Death of a salesman இல் நடந்த நிகழ்வுகள் நினைவுகளாகக் காட்டப்படும். பேராசிரியர் சிவத்தம்பி எழுதினார் கிரேக்க அவலச்சுவை கோரஸ்- குழுப்பாடல் முறைமை - எமது பஜனைப் பண்பாடு ஜேர்மனிய பிறெக்றின் அந்நியமாதல் உத்தி எமது பண்பாட்டு தேவார, திருவாசக நாட்டார், இதிகாச , புராண இணைப்புக்கள் கலந்து ஒரு புதிய கலவையாக உருவாகியுள்ளது என்றார். இங்கு குழைப்பும் உள்ளடக்க உருவ இணைப்பும் வெற்றியளித்தபடியால்த்தான் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

**ஸ்ரீகணேசன்: மண்சுமந்த மேனியர் பகுதி II எழுதி மேடையிட்ட அனுபவம் பற்றிக் கூறுங்கள்**

**கு.ச.:** மண்சுமந்த மேனியர் நாடகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலாசாரப் பேரவையினருக்காக எழுதும்போது பகுதி II எழுதும் எண்ணம் இருக்கவில்லை. இன்னொரு நாடகம் எழுத என்றே விவாதத்தில் ஏற்கனவே பங்குபற்றிய குழுவினருடன் ஈடுபட்டேன். பின்னர் கிரேக்க முக்கூட்டு நாடகங்கள் போலவே எங்கள் போராட்ட வரலாற்றை நாம் தொடர்ந்து எழுதலாம் என எண்ணி பகுதி இரண்டு என பெயரிட்டோம்.

வரலாற்றுத் தொடராக எழுதுவதுடன் சொல்லவந்த போராட்ட விடயத்தில் நியாயத்தை மக்களுடன் பகிரமுடியும் என்ற நம்பிக்கையும் அடுத்ததொரு காரணம். விரும்பித்தொடங்கப்பட்டதல்ல. எமது போராட்டம் எம்மீது திணிக்கப்பட்டது. படிப்படியாக அரசியல் முதிர்ச்சி பெற்றுத்தான் தொடங்கப்பட்டதல்ல. ஆற்றுகைக் காலங்களில் ம.சு.மே பகுதி ஒன்றில் போராட்டம் மக்கள் மயப்பட வேண்டும்

- சண்முகம் சிவலிங்கம் -

## துப்பாக்கிக் குழந்தை



உன் தங்க மீன்கள்
இன்னமும் கண்ணாடித் தொட்டியில்
தகதகக்கின்றன
உந்துதல்
ஓடுதல்
ஒளிதல் எனும்
எந்த நகர்வும் இன்றி
நீரின் மேலெழுந்து
எங்கே நீ எனத் தேடுகின்றன
எவர் அவர்க்கு உன்போல்
தீனி இடுவர்?

வெண்பஞ்சுத் துளிகள் – உன் முயல்கள்
வெளியில் வந்து
துள்ளித் துள்ளி
முன்பாதங்கள் தூக்கி
செங்கண் முகத்தைத் திருப்பித் திருப்பி
எங்கே நீ எனத்தான்
இன்னமும் தேடுவன
எவர் உன்போல்
அடம்பன் தளிரை ஊட்டுவார்
அவர்க்கு?

பப்பி திரிகிறது
நாலுகால் பாய்ச்சலில்
எறிந்த பந்தை எடுத்துவந்து
என்னிடம் தராதாம்
உன்னையே தேடி
ஓட்டமாய்த் திரிகிறது.



இத்தனையும் விட்டு
எப்படி நீ
துப்பாக்கியோடு
வாழ்வைத் தொடர்கின்றாய்
மகனே!

('சிதைந்துபோன தேசமும்தூர்ந்துபோன மனக்குகையும்' கவிதைத் தொகுதியிலிருந்து...)

எனும் கருத்து வலுப்பெற்றது. பகுதி ஒன்றில் விவசாயக் குடும்பம் ஒன்று மையம் ஆகியது. மற்றைய பாத்திரங்கள் அயலவர் சுற்றத்தவராக உருவாகினர். விவசாயிகளுக்கு எப்போதும் மண்ணோடு பாடுபட்டு வியர்வை சிந்தல் நித்தியமானது. இதனால் மண்சுமந்த மேனியர் தலைப்பு பொருந்தியது. விவசாயத்துக்கு அப்பாலும் சமகாலப் போராட்டமும் இணைந்த இளைஞர்கள் மக்களின் பாடுகளை மண்ணின் சுமைகளைச் சுமக்கும் மனிதர் ஆனார்கள். அதனாலும் தலைப்பு மிகப் பொருத்தமாகியது என விமசகர்கள் கூறத்தலைப்பட்டனர். மண்ணின் பாரத்தை வலிந்து தாங்கினர் இளைஞர். தந்தையின் பொறுப்பை தனயர் ஏற்றனர். அரசியலிலும் இது யதார்த்தமாகியது. இது விமர்சனத்துக்கு ஆளானது. இந்திய சுதந்திரப்போராட்ட இறுதிக்கட்டத்தில் ஜின்னா பாகிஸ்தானைக் கோரியபோது அவர் நாட்டைப் பிளவுபடுத்துகின்றார் என்றனர். அவரை ஒரு சிறுபான்மைப் பிரதிநிதியாகப் பார்க்கவில்லை. சோல்பரி, டொனமூர், கோல்புறூக், கொமிசன்கள் விட்டபிழைகளால் தமிழர் அரசியல் உரிமைகள் கேள்விக்குறியாகிவிட்டமை அரசியல் படிப்பிக்கும் எனது உள்ளத்தில் பதிந்து விட்டது. ஜி.ஜி. பொன்னம்பலம் சுந்தரலிங்கம் சோல்பரி கொமிசனிடம் அரசியல் சட்டமாக எழுதுங்கள் என வலியுறுத்தியிருக்கலாம். அந்தக்காலம் போய்விட்டது. இன்று மூத்த அரசியல் தலைவர்களின் பாரம் சுமக்க வந்த போராளிகளால் கூட நோக்கத்தை அடைய முடியாத கேவலம் சூழ்ந்துவிட்டது. இன்று அடிமைக்கு அடிமை, வம்சத்தோடு இவற்றைத் தாங்கும் நிலைமை. போராட்டம் வெறும்சொல் இன்று கோபம் தருவது போல் ஆகிவிட்டது. யுத்தஅளவு சென்றுவிட்டோம். அதைவிடுத்து வேறு சொல் தேட வேண்டும். உணர்ச்சிகளைத் தூண்டும் நிலைமைகள் ஆக வேண்டாம்.

அரசியலில் ஒட்டுமொத்தமான முறைகள் சுமைகள் எல்லாம் மண்மீது தாய்நாடு மீது சுமத்தப்பட்ட சுமையைச் சுமந்து போராடும் நிலைமை காரணமாக "மண்சுமந்த மேனியர்" என நாடகத் தலைப்பு அமைந்தது. முதலில் 'யாமார்க்கும் குடி அல்லோம்' எனும் தொடரை தலைப்பாகப் போடப்பட்டது. இது ஒரு கோஷமாக்கப்பட்டது. வெளிப்படையான தலைப்புப் போலிருந்தது. அதனால் மனம் அந்தத் தலைப்பை ஒத்துக்கொள்ளவில்லை. இரவு முழுக்க திருவாசகத்தைத் தட்டிக்கொண்டு போனபோது நமது முழுக்கருத்தையும் தரும் பாடலாக பின்வரும் பாடல் அமைந்திருந்தது.

**"மண்சுமந்த பாடல் பரிசுத்த படைத்தருளும்**
**பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்**
**விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்**
**கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலைமதுரை**
**மண் சுமந்த கூலி கொண்டுஅக்கோவால் மொத்துண்டு**
**புண்சுமந்த பொன் மேனி பாடுதும் காண் அம்மானாய்."**

பாடல் ஒன்றை நாடகத்தில் பயன் படுத்தும் போது அது நாடகத்தின் கருவை அடுத்த தளத்துக்கு ஏந்திச்செல்லும். நாடகச்சூழலின் தன்மையை செறிவடையச் செய்யும். இந்தப் பாடலில் இருந்து உருவாக்கப்பட்ட தலைப்பு "மண்சுமந்த மேனியர்' இரவிரவாக யோசித்து உருவாகிய தலைப்புடன் மறுநாள் அதிகாலையே நெறியாளர்வீடு நோக்கிச்சென்றுதலைப்பை மாறிப்போடுமாறு கேட்டுக்கொண்டேன். ஏனென்று கேட்டார். இந்தத் தலைப்பு அமைதியாக ஆழமாக அழகாக உள்ளது. என்றேன். பலர் நாடகம் பார்த்த பிற்பாடு தலைப்பையே மெச்சினர்.

பாகம் 2 எழுதும்போது எமது வரலாற்றை போராட்ட வரலாற்றை

தொடர்ந்து எழுத வேண்டும் எனும் உறுதி தோன்றியது நாம் சந்நதம் கொள்ளாது ஒற்றுமையாக இருந்து மக்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் எனும் நிலைப்பாடு தோன்றியது ஆனால் அது நடக்கவில்லை.

பாகம் 1 இல் கலகலப்பு அதிகமாக இருந்தது. நாடகத்தின் சுருதியும் லயமும் மென்மையாக இருந்தது ஆனால் கடுமையான கருப்பொருளும் கதையமைப்பும் அமைந்திருந்தது. பாகம் 2 நோக்கம் நாடகம் எனும் முறையில் காத்திரமாகவும் அமைய வேண்டுமென நினைத்தேன். படைப்புகளும் அமைதியாக ஆனால் ஆழமாக அமைவதுடன் போராட்டமும் அதே மாதிரி அமைதி யுடன் ஆழம் நிறைந்ததாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். பரபரப்பும் சலசலப்பும் அற்றுத் தொடர வேண்டும் என எண்ணினேன்.

பாகம் II இன் வாத்தியார் பாத்திரத்தில் கையில் ஒரு சிறு புத்தகம் அறிவு, புத்தி, முதிர்ச்சி எனபன உள்வாங்கப்படவேண்டும். பாகம் 1 இல் கிழவன் பாத்திரம் காத்திரமான பாத்திரம் . கோபத்துடன் நக்கலும் சேர்ந்து உரையாடும் பாத்திரம். போராட்ட நியாயத்தை வலியுறுத்தும் பாத்திரம். இது II இல் வாத்தியார் எனும் முன்னிலைப் பாத்திரத்தின் முன்னாள் பிரகிருதி.பாகம் II இல் சொல்லாத செய்தியாக ஓர் இயக்கப் பையன் காதலிப்பதாக, இயக்க மோதல் காட்சியாக சித்தரிக்கப்பட்டது. சலசலப்பு இல்லாமல் காத்திரமாக எல்லோரும் சேர்ந்து கற்றவர் மற்றவர் மக்கள் எல்லோரும் இணைந்து வாங்கோ என அழைப்பு விடுக்கப்பட்டது. 20 தடவைகள் மேடையேறியது. அன்றைய அரசியல் சூழல் காரணமாக - இயக்க மோதல் காரணமாகத் தொடர்ந்து போட முடியவில்லை.

**ஸ்ரீகணேசன்: ஏன் பாகங்கள்** III, IV **என வரவில்லை**

**கு.ச.:** சக இயக்கங்கள் அழிக்கப்பட்ட வுடன் இந்தப் போராட்டம் சார்பாக அரசியல் பேசும் நாடக எழுத்தாளனான எனக்குள் இருந்த வேதனை: அதனால் எழுத்தில் வடிக்க இயலவில்லை. நாடக எழுத்தைக் கைவிட வேண்டிய மனநிலை ஏற்பட்டு விட்டது. மக்களுக்கு அன்று ஏற்பட்ட வேதனை இன்று (2012 இல்) மக்கள் சுமக்கும் பாடுகளை வன்னியில் மக்கள் படும் பாடுகளை அவலங்களை குடும்பங்களைத் தொலைத்தவர்கள், அவயவங்கள் இழந்தவர்கள், மண்ணினைச் சொத்தினை இழந்தவர்கள் பற்றி நிறைய எழுத உண்டு. மக்களைப் பற்றி யாரும் யோசிப்பதாக இல்லை. மக்களுடன் வாழத் தயார் இல்லாத அரசியல்வாதிகள் பத்திரிகைகளுக்குத் தம்மை விளம் பரப்படுத்தும் படங்களுக்கு முகங்கள் காட்டி, அறிக்கைகள் விடுத்து சப்பாத்துச் சாயம் காயாது யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் போய் போராட் டங்கள் நடாத்தி விட்டுச் செல்கின்றார்கள். மக்கள் துயரைப் பங்கிட்டு வாழத் தயார் இல்லாதவர்கள். தங்கள் வகுப்புடன் தொடர்பில்லாத ஆசிரியர்கள் போல; குலதெய்வத்தின் கோயிலுக்கே செல்லாத பூசாரியார் போல; மக்கள் வாழ்வுடன் இணைந்து வாழ்ந்து ஆராய்ச்சி செய்யாத இனக்குழும ஆராய்ச்சியாளர்கள் போல (Ethnographic) கூத்துக் கிராமத்துக்கே செல்லாத கூத்து ஆய்வாளர் போல நம்மவர்கள் எப்படி எமக்கு விடிவு பிறக்கும்?

**ஸ்ரீகணேசன்: மண் சுமந்த மேனியர் பக்கம்** II **க்கு பின்னர் எழுதிய நாடகங்கள் பற்றி....**

**கு.ச.:** என்னைப் பொறுத்தவரை எல்லாமே மண்சுமந்த மேனியர் பாகம்

*3, 4, 5.* எனலாம். அன்னை இட்டதீ, எந்தையும் தாயும், வேள்வித்தீ, யார்க்கெடுத் துரைப்பேன்., நீ செய்த நாடகமே, நரகொடு சொர்க்கம், யார்கொலோ சதுரர், மனத்தவம், அகம் பிரம்மம் எனத் தொடரும் மண் சுமந்த மேனியர்கள்.....

ஆனால் எம்மீது சுமத்தப்பட்ட சுமைகளும் வந்து போன துயரங்களும் எம்மனங்களை அழுத்திக் கொண்டே இருக்கின்றன. எமது சமூகம் இன்று கோரிக்கை அற்றுக் கிடக்கிறது. இது பாரதிதாசனின் வரி. யாருக்கும் வெட்கமில்லை எனும் கண்ணதாசனின் வரியும் ஞாபகத்துக்கு வருகின்றது.

**ஸ்ரீகணேசன்: அடுத்து எழுதிய அன்னை இட்டதீ பற்றிக் கூறுங்கள்.**

**கு.ச.:** பேராசிரியர் தயா சோமசுந்தரம் மற்றும் வைத்தியகலாநிதி சிவயோகன் ஆகியோர் யுத்தத்தினால் வரும் தாக்கங்கள் பற்றி, உளவியல் அழுத்தம் பற்றி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். உடலுக்கு ஏற்படும் தாக்கத்தைவிட உளத்தாக்கம் பாரதூரமானது. மனிதருக்கு விசர் பிடித்துவிட்டது என்பதற்கு முன்னர் மனஅழுத்தங்கள் மென்மையாகத் தோன்றும் காலத்திலேயே உளவளத்துணை வழங்கினால் ஆறுதல் கிடைக்கும். எனவே நாடகத்தூடு அதனைச் செய்ய விரும்பினர்.

மண்சுமந்த மேனியர் 1ம், II ம் யுத்தம் சம்பந்தமாகப் பேசினாலும் யுத்தத்தின் விளைவுகள் எதிர்வு கூறப்பட்டன. வெளிநாட்டுக்குச் செல்லும் ஒருமகன், விவசாய நிலத்தை விற்கமுயலும் அவலம், மண்ணைக் காக்கப் புறப்பட்ட வேளை மண்ணையே விற்கும் அவலம், ஆகவே மக்கள் அகதிகள் ஆயினர் என்று சொல்லாமல் சொல்லிய விடயம். அன்னையிட்ட தீயில் தாக்கங்கள் வெளிப்படையாக அலசப்பட்டன. இது

## மேலும் சில இரத்தக் குறிப்புகள்

மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்து
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக் கொண்டு
அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப் பதறுகின்றேன்
இப்போதுதான் முதல் தடவையாக காண்பதுபோன்று

“இரத்தம்” கருணையை பரிதவிப்பினை
அவாவுகின்றது
இயலாமையை வெளிப்படுத்துகின்றது

வன் கலவி புரியப்பட்ட பெண்ணின் இரத்தம்
செத்தக் காட்டுப் பூச்சியின் அருவருப்பூட்டும் இரத்தமாயும்
குமுறும் அவளுயிரின் பிசுபிசுத்த நிறமாயும்
குளிர்ந்து வழியக் கூடும்

கொல்லப்பட்ட குழந்தையின்
உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்
மிக நிசப்தமாக
மிக்க குழந்தைத் தனமாக

களத்தில்
இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்
அதிக இரத்தத்தை சிந்த வைத்தவர்கள்
தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்
பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்
சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும் சுவர்களில்
மன்றாடும் மனிதாத்மாவின் உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன.

வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்
கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

(ஊடறு 2006)

- அனார் -

மண்சுமந்த மேனியரின் அடுத்த பாகம் தான்.

அன்னை இட்டதீ எழுத வெளிக்கிட்ட உடன் புதிய துறைகளைக் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. புதிய திறன்கள் விருத்தி பெற்றன. இரு வைத்தியர்களும் எனக்கு நல்ல விளக்கங்கள் தந்தனர். தங்களிடம் ஆறுதல் தேடிவரும் மக்களின் துயருக்கான பின்னணிகளை எனக்கு விளக்கினர். நூல்களைப் படிக்கத் தந்தனர். ஆரம்பத்தில் தோன்றும் இழப்புக்களினால் வரும் மன அழுத்தங்களைப் பெரிய நோயாக்க விடாமல் செய்வது நம்பொறுப்பாகும். உயிரிழப்புதான் பெரிதாகப் பார்க்கப்ப டுகின்றது. இடப்பெயர்வே ஒரு இழப்புத் தான். பயணம் சென்றவர், பிடிபட்டவர், உயிருடன் உள்ளாரோ இல்லையோ எனும் அவலம் பெரும் அவலம் ஆகும். இப்படிப்பட்ட மனநிலையுள்ள ஒரு பெண்ணாக பிரதான பாத்திரம் நாடகத் திலே தோன்றுகின்றது. மருத்துவக் கல்லூ ரியில் பயிலும் இப்பெண் அதே துறையில் படிக்கும் தனது மைத்துனனைக் காதலித்து கரம் பிடிக்கிறாள். பெண்ணின் தாய் ஒரு கலவரத்தில் கணவனை இழந்த ஏழை. மைத்துனனின் அப்பா அரச அதிபர். அங்கு அந்தஸ்து வித்தியாசம் காட்டப்படுகின்றது. திருமணம் முடிந்த சில நாட்களில் கொழும்புக்கு கிளாலியூடாக பயணம் செய்துதாண்டிக்குளத்தைத்தாண்டும்போது ஏற்பட்ட இராணுவ புலி களேபரத்தில் புலியின் பக்கம் திரும்பி கூடச் சென்ற நண்பன் வீடு வந்து சேர்கின்றான். ஆனால் ஆமியின் பக்கம் சென்ற நாயகன் காணா மல் போகின்றான். முடிவு தெரியாத சோகம் எனது மாணவி ஒருவரின் தந்தை காணாமல் போய் அந்தப்பிள்ளை பட்ட அவலத்தை நேரடியாக அனுபவித்தவன். ஒருவர் காணாமல் போவதால் அவர்கள் பெற்றோருக்குள் காணப்படும் மன அழுத்தங்கள் ஒவ்வொரு தன்மையில் இருக்கும். தந்தை அரசஅதிபர் கூறுவார் தனது அழுத்தத்தை மறைத்து 'நான் ஒரு கவர்மன்ட் ஏஜன்ட். என்ரை கார் உரலிலை ஏற்றிவிட்டுக் கிடக்கு. நான் சைக்கிளிலை கிளிநொச்சிக்குப் போய் வாறன். யுத்தம் எண்டால் இதெல்லாம் சகஜம். தாய்க்கு மகன் இருக்கிறான் எனும் நம்பிக்கை. மருமகளுடன் கோயிலுககுச் சென்று வருவார். பெண்ணின் தாய் கூறுவார். துடக்கோடை எப்படிப் பூ வைக்கிறது. இதனை எழுதும் போது கண்ணீரால் மேசையை நனைத்து விட்டேன்.

மூன்றுதரம் இதற்கான எழுத்துரு எழுதப்பட்டது. முதலில் பாத்திரங்கள் பற்றிய ஒரு தரவுக்குறிப்பு எழுதப்பட்ட பின் நாடக எழுத்துரு வரையப்பட்டது. வைத்தியர் சிவயோகனுக்கு வாசித்துக் காட்டும் போதும் கண்ணீர் சொட்டியது. ஒத்திகைகளின் போது எல்லோரும் உணர்வுபூர்வமாக ஒத்துழைத்தனர். மேடையேற்றத்தின் போது நாடகத்தால் பாதிப்புற்ற பார்வையாளர்கள் பற்றி எச்சரிக்கையுணர்வுடன் தொழிற்பட்டோம். அதற்காக வைத்திய மாணவர்களைத் தயார் நிலையில் உளவளத் துணை வழங்கி ஆதரவளிக்கத் தயார் பண்ணியிருந்தோம். ஒரு பெண்பிள்ளை மேடையை நோக்கி நிப்பாட்டு என ஓடிவந்தாள். அவரை வைத்திய மாணவர் ஆற்றுப்படுத்தினர்.

யுத்தத்தை எதிர்கொண்ட நாடுகள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் ஒரு வீரருக்கு ஒரு உளவளத்துணையாளர் என்று களங்களில் இறக்கிவிடப்படுகிறார்கள்.

இந்த நாடகத்தைப் 10 தடவைகள் தான் மேடை ஏற்றினோம். யுத்தப் பிரியர்கள் நாடகம் யுத்தத்தைக் கொச்சைப் படுத்துகிறது என விமர்சித்தனர். உண்மை யில் திணிக்கப்பட்ட இந்த யுத்தத்தால் பாதிப்புறும் மக்கள் நிலைமையைப் பற்றி

இது பேசியது. யுத்தத்தால் பாதிப்புற்ற அமெரிக்க, வியட்நாம், ஐரோப்பிய நாடுகள் இது பற்றி ஆய்வு செய்து போராளிகளை, மக்களைப் பாதுகாக்க உளவளத்துணையின் அவசியம் உணரப்பட்டது. அப்படிப்பட்ட நூல்களை ஆய்வு செய்து எழுதப்பட்டதே இந்த நாடகம்.

**ஸ்ரீகணேசன்: இவ் அரங்க நெறியாள்கை பற்றிக் கூறுங்கள்**

**கு.ச.:** மண் சுமந்த மேனியரில் பல்பரிமாணப் பாத்திரங்களை உருவாக்க முயற்சித்தேன். அன்னை இட்ட தீ யில் குறியீட்டுப் பாத்திரங்களை உருவகித்தேன். மேடை வெளியைப் பொறுத்தவரை மூன்று குடும்பங்கள் வாழும் அரங்கமாகவும் அதே வேளை பல்வேறு செயல்களைச் செய்யும் களமாக அரங்க வெளியைப் பாவித்தேன். எமது கூத்துப்பரப்பில் இவையெல்லாம் சாத்தியம். அதனால் மக்களுக்கு இலகு வாகப் புரிந்தது. மக்களே விமர்சகர்களாக ஆகினர். குறை சொல்வது அல்ல. வட்டக்களரியில் சூனியவெளி பாடல் மூலம் களம் கூறப்படும். இங்கு பாத்திரங்கள் உருவாக்க ஆழமாக ஒவ்வொரு பாத்திரமும் தத்தமது பிரச்சினையுடன் உருவாகின. புருசனைத் தவறவிடும் மனைவி, படையின ரால் பிடிபட்ட பையன், அனைவரும் மன அழுத்தத்தால் பாதிப்படைகின்றனர். தமது மன அழுத்தம் காட்டாது உலவும் பாத்திரங்களாக அரச அதிபரும், பேரா சிரியரும், பெண்ணைப்பெற்ற தாயின் இக்கட்டு இப்படியான பாத்திரங்களின் அவலத்தை, சாதாரண பாத்திரங்களின் அவலத்தைக் காட்ட யதார்த்தவாதம் தேவையாகியது. 1875 ல் இப்சனின் ஒரு பாவை வீடு நாடகத்துடன் யதார்த்த வாதம் தாக்கமாகப் பயன்பட்டது. அப்படியான ஒரு சூழலில் வரும் பாத்திரமும் ஒரு குறி யீடாகவே பெண்களின் வெளிச்சப்பாடு காட்டும் குறியீடாக முழுமையான பல்பரிமாணம் கொண்ட பாத்திரங்களாகப் படைக்க முயற்சித்தேன்.

சாதாரண பெண்ணான நோறா இனிப்பை கணவனுக்கு மறைத்துப்போட்டு அசைபோடும் நோறா நெருக்கடிநிலை தோன்ற ஆழமான உணர்வுகளுடன் முடிவை எடுக்கும் பாத்திரமாக நோறா வெறுமனே மணஉறவைப்பிரிப்பது தமது நோக்கமல்ல என்பதை முனைப்பாக்கம் செய்ய லின்டா - குறொக்ஸ்ரற் இணைவு கொண்டுவரப்படுகின்றது. ஒரு முரண் ஒப்பாக ஆயாவின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வண்ணம் இப் பாத்திரங்களைக் கட்டமைக்கின்றார். அட்டகாசமாக அல்ல. அமைதியாக ஆழமாக ஈற்றில் வீட்டைவிட்டு வெறியேறும் தருணம் கதவைச் சாத்துவதும் அது எழுப்பும் மெல்லிய ஒலியே பெரும் சத்தமாக விளைவை உண்டுபண்ணுவதாக விமர்சகர்கள் எழுதுவதும் இந்தச் சூழலில் உருவாகிய விளைவின் தாக்கம் தான்.

இரண்டாம் முறை எழுதும்போது முதற்பிரதியைப் பார்க்கவில்லை. ஏனெனில் மனதுக்குள் ஒரு அடிப்படை வரைபு வந்திருக்க வேண்டும். அன்னை இட்ட தீயின் இரண்டாம் கட்டத்தில் பாத்திரங்களே முன்னேறத் தொடங்கி விட்டன. முன்னர் எழுதியதை விட்டு வெளியே பாயத்தொடங்கிவிடுவேன். மனி தன் சூழ்நிலையின் கைதி. நானும் இழுத்துச் செல்லப்பட்டேன். நடைபயிலும் போது நாயை முதல் நாங்களும் பின்னர் நாய் எங்களையும் இழுத்துச் செல்வது போல....

**ஸ்ரீகணேசன்: வேள்வித்தீ நாடகத்தில் உருவான பாத்திரங்கள் பற்றி ...**

**கு.ச.:** கற்பு எனும் எண்ணக்கருவை அளவுக்கு மீறி அழுத்தியதால் பாதிக்கப் பட்ட பெண்ணின் நிலையை இக்கட்டான

நிலைமையில் சமூகம் வடுவாகப் பார்க்கிறது. மனங்களில் சுமையை ஏற்றிவிடுவோம். பாரம் பறிக்க மாட்டோம். நாடகத்தில் வரும் தமிழ் விரிவுரையாளர் பலிக்கடா ஆகின்றார். பழந்தமிழ் இலக்கியங்களில் தோய்ந்த பாத்திரமாக: அகலிகை வருகின்றாள். சீதை வருகின்றாள்; தாயைக்கொன்ற பரசுராமன் கதை வருகின்றது. மனைவியைச் சந்தேகிக்கும் ஒத்தெல்லோ வருகிறான்.

**“யுத்த அரக்கன் எழுந்து நின்றது**
**ஆதிக்கக் கொடுங்கோல் அதன்**
**காலிடைக்கிடந்தது’**

இப்படியாக வசனம் வந்து விழுகின்றது. பாலியல் வன்புணர்வுக்கு ஆளான பாதிப்புற்ற பெண்களுக்கு உளவளத்துணை புரியும் உளநல வைத்தியரான கணவன் கலாசார எண்ணக்கரு வழங்கிய பாரத்தினால் யதார்த்தத்தை ஏற்க மறுக்கிறான். சாதாரண மனநிலைக்கு கீழிறங்கி விடுகின்றான். வீணையை ஒரு பண்பாட்டு சின்னமாகக் கருதி பெண்களின் குறியீடாக, பொதுவாக தெய்வத்துக்கு சமனாக கையாளப்பட்டது அப்படிப்பட்ட வீணை உடைதல் அபசகுனமாக வாழ்க்கையில் பார்க்கப்படுவதாக அமைக்கப் பட்டது. குடும்ப உறவு மென்மை யாக பேணப்படவேண்டும்.

தனது சந்தேக நிலைமையினால் தவறை உணரும் கணவன் விழுந்து கிடந்த தாலிக்கொடியை எடுத்து மனைவியின் கழுத்தில் கட்டச்செல்வான். மனைவி அதைக் கையில் வாங்கிக்கொண்டு மீளவும் ஒரு சகஜ நிலைக்கு செல்ல முடியாத மனோநிலையை காட்டுவாள். கணவன் அப்பால் செல்ல தாலிக்கொடியை உடைந்த வீணையின் மேல் சாத்துவாள். அது கணவன் இறந்த பின் அவரது சடலத்தின் மீது மனைவி தன் தாலிக்கொடியை கழற்றி வைப்பது போல பார்ப்பவர்கள் மத்தியில் துாண்டுவதாக காட்சி அமைக்கப்பட்டது. உறவின் சிக்கல் நிலைமையில் வார்த்தைகளால் என்ன பலனும் இல்லை. வாசுகி எமது சமூகத்தின் பாரம் பரியத்தின் குறியீடு எண்ணக்கரு பாரமானது ஆனால் சமூகம் மாறும், அழுது அழுது செல்லும் பிள்ளை போல.



**ஸ்ரீ கணேசன்**

**ஸ்ரீகணேசன்: எந்தையும் தாயும் முழுக்க முழுக்க யாதார்த்த அரங்கிற்கு திரும்பிய ஒன்று எனக் கூறலாமா? இதுவும் மண் சுமந்த மேனியரின் இன்னொரு பாகம் ஆகுமா?**

**கு.ச.:** எந்தையும் தாயும் நாடகம் எனது மகன் கனடாவில் மேடை யேற்றுவதற்கென கேட்டபோது தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் (1999) எழுதியது. போரின் விளைவுகளில் பலதை எழுத எண்ணி அதுவும் பழைய வடிவத்திலேயே: மூன்று குடும்பங்கள் ஒரே மேடையில் எழுத முயற்சித்து யதார்த்த பாத்திரங்களகவே உருவாக்கிய நாடகம். பிள்ளைகளை யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தனியே வருந்தும் வயோதிப பெற்றோரின் நிலைமையை கருவாகக் கொண்டிருந்தது. அதே வேளையில் இந்த யுத்த சூழலிலும் யாழ்ப்பாண சமூகத்தின் மனித நேயம் சாகவில்லை என்பதை சுட்டிப்பாகக் காட்டுவதும் எனது நோக்கமாக இருந்தது. யாழ்ப்பாண சமூகம் ஒரு சுயநலமான சமூகம் என எம்மை நாமே நையாண்டி பண்ணும் வழக்கம் இருந்தது. இருப்பினும் தேவையான சந்தர்ப்பத்தில் சகல இன்பதுன்பத்திலும் கோபதாபங்களை விட்டு அவசரத்துக்கும் ஆபத்துக்கும்

உதவும் சமூகம் என்பதை கோடி காட்ட விழைந்தேன். இதற்காக உருவாக்கப்பட்ட பாத்திரமே ஐயாத்துரை எனும் பாத்திரம் தனது பதினொரு பிள்ளைகளையும் படிப் படியாக வெளிநாடுகளுக்கு பாதுகாப்பாக அனுப்பிவிட்ட திருப்தியோடு மனைவி யையும் இழந்த பின்னும் தனியே தனது ஊரில் வீட்டில் தவித்து வாழும் ஒவசியர் பெரியய்யா எனும் பாத்திரம். ஒரு இரண்டாம் நிலைப்பாத்திரமாகவே உருவாக்க நினைத்தேன். மூன்று குடும்பங் களாகவே மேடை உருவானது. நடு வீடாக பெரியய்யா வீடும் அயல் வீடுகளில் வாழ்பவர்களாக ஐயாத்துரை செல்வரத்தினம் குடும்பங்களும் அவை யதார்த்தப் பாத்திரங்கள்.

பெரியய்யாவிடம் பிள்ளைகளை அனுப்பி விட்ட சோகம் இல்லை ஆனால் நாடகத் தொடக்கத்தில் இருந்து மூத்த மகன் மோகன் நினைப்பில் ஆழ்ந்து விடும் பாத்திரம். ஏனெனில் அவருக்கு இறப்பு நினைப்பு வந்துவிடுகிறது. கொள்ளி வைக்க மூத்தவன் வருவான் என்ற நம்பிக்கை எமது பண்பாட்டினூடாக அவர் மனதில் ஆழமாய் பதிந்து விட்டது.ஆடம்பர வாழ்வு அவரிடம் இல்லை பணவசதி இருந்தபோதும் சிக்கனமாக நிதானமாக வாழ்ந்தவர். நிறைந்த பிள்ளைகள், பிள்ளைகளின் முன்னேற்றத்தை விரும்பிய தந்தையாக: அடுத்த வீட்டு ஐயாத்துரையின் மகன் கரைசேர திருமணம் முடிக்க தானும் உதவ முன்வரும் யதார்த்தபாத்திரம்.

முதல் மேடையேற்றம் ஒரு நாற்சார வீட்டில் பார்வையாளர்கள் பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம், எழுத்தாளர் கலைஞர்கள், மாணவர்கள் சுற்றி இருக்க நடைபெற்றது.

ஞானம் 26ஆம் இதழில் (ஜூலை 2002)

**கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களது கட்டுரையில்...**

*தாய்மண் உரிமை வேண்டித் தொடங்கிய போரால்,*
*நம் யாழ்ப்பாணச் சமுதாயத்தில் பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.*
*போருக்குப் பயந்து எல்லா வர்க்கத்தினரும் உலகம் முழுவதும் ஓடிக் குடிபுகுந்தனர்.*
*அதனால், நமது யாழ்ப்பாணச் சமுதாயத்தின் அடிப்படை அமைப்பே மாறிவிட்டது.*
*நம் சமூகத்தைப் பற்றியிருந்த நடுத்தரவர்க்கத்தின் வலிய இரும்புப்பிடி,*
*மெல்ல மெல்ல தளர்ந்து போயிற்று.*
*கீழ்வர்க்கத்தார், பொருளாதாரத்தில் இன்று யார் கையையும் நம்பவேண்டாத நிலை.*
*சொற்பமாய் இருந்த மேல் வர்க்கமும் உடைந்து உலர்ந்த நிலையில் இன்று.*
*எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ என்ற பயத்தில்,*
*யாரும் யாரையும் ஆளநினைக்காத செயற்கைப் பக்குவமடைந்துள்ளனர்.*
*இதனால் நெருக்குதல் அற்ற ஒரு சமநிலைச் சமுதாயம்,*
*தற்காலிகமாய்த் தோன்றியிருக்கிறது.*
*ஒருவரில் ஒருவர் தங்கியிராத நிலைமை தோன்றியிருப்பதால்,*
*பொய்முகம் காட்டும் போலித்தனம் நம் சமூகத்திடம் குறைந்திருக்கிறது.*
*இந்த நேரத்தில் புரட்சியும் புதுமையும் விளைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.*
*அந்தப் புரட்சியும் புதுமையும்,*
*சமூகத்தில் விளைகிறதோ இல்லையோ?*
*அறிவுலகில் விளையவேண்டும் என்பது என் பேரவா.*
*இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தியேனும் புத்துணர்ச்சி பெற்று,*
*நம் அறிவுலகம்,*
*தமிழுலகில் நமக்கென ஓர் தனி அடையாளம் காட்ட முயலாதா?*
*இதுதான் ஐயா என் ஏக்கம்.*
*நாம் செய்யாததை,*
*நம் இளைய தலைமுறையேனும் செய்யட்டும் எனும் விருப்பாற்தான்,*



பின்னர் மேடைகளிலும் அரங்கேற்றியது பல்வேறு நெறியாளர்கள் இயக்கத்தில். முதல் நாள் அன்று ஐயாத்துரை சுயநல உணர்வோடு உதவுவதாக கூறினர். அப்படி இல்லை. சாப்பாடு கொடுத்தல், கோயில் அர்ச்சனை செய்தல் எல்லா வேலையும் செய்கிறார். ஐயாத்துரை பாத்திரத்தினூடாக ரோசம் உள்ள ஆனால் மனித நேயம் நிறைந்த யாழ்ப்பாணத்த வரைச் சித்திரிக்க முயன்றேன். ஐயாத்துரை பாத்திரத்தினூடாக நன்றியுணர்வுடன் கூடிய மனித குணம் காட்ட முயற்சித்தேன். யாழ்ப்பாணத்தான் உதட்டளவிலான கோபம் கொள்வார்கள், ஆபத்தில் உதவுவார்கள் கைகொடுப்பர். எது வித பிரதியுபகாரமும் எதிர்பாராது என்று காட்ட விரும்பினேன் யுத்தத்தால் மனிதன் சாகவில்லை வாழ்வில் சோகம் உண்டு ஆயினும் ஐயாத்துரை எவரையும் இலேசாக எடுத்துக்கொள்வார். பணவசதி கிடையாது இரு பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் மகளுக்கு திருமணம் ஆகாமல் இருப்பினும் சோகத்தை சுமந்து வருத்தக் கூடாது என்று உலவும் பாத்திரம். மகளுக்கு உதவ விரும்பும் பெரியய்யாவிடம் 'உதைவிட்டுட்டு கிளம்புங்கோ காலைக் கடன்களை முடிப்பம்' என்பார். பெரியய்யாவுக்கு வியப்பு எப்படி இந்த மனிதனுக்கு எதையும் கலகலப்பாக எடுக்க முடியுது என்று.

இதற்கு எதிர்மாறாக மத்தியதர வசதி படைத்த யாழ்ப்பாணப் பிரதிநிதியாக செல்வரத்தினம் பாத்திரம். பிரதான பாத்திரமாக ஐயாத்துரையும் முக்கிய பிரச்சினை சொல்ல பெரியய்யாவும் இவர்களுக்கு முரண் ஒப்பாக செல்வரத் தினமும் முதல் இருவரும் நடித்தார்கள் செல்வரத்தினம் மனைவியுடன் தோன்று வார். அவரும் பிள்ளைகளை வெளியில் அனுப்பி விட்டு வருந்தும் பாத்திரங்கள் மேற்கு வாழ்க்கை முறையில் வசதியாக வாழ்பவர்கள் பிள்ளைகளுடன் கொழும் புக்கு சென்று தொலைபேசியில் பேசி மகிழ்வதை பெருமையாகக் கூறுவார்கள். பிள்ளைகளின் போட்டோ அல்பங்களுடன் வாழ்பவர்கள். செத்தாலும் கொழும்புக்கு சென்று சாக வேண்டும் அப்பத்தான் நல்ல சவப்பெட்டி எடுக்கலாம் எனக் கருதும் பாத்திரங்கள்.

ஐயாத்துரை பிள்ளைகள் ஊடாக யாழ்ப்பாண இளஞ்சமூகம் காட்டப்படு கின்றது. யுத்தத்தின்போது முனைப்புடன் இணையாத பாத்திரங்கள் எனினும் அதன் அடிப்படை உணர்வுகளுடன் வாழும் பாத்திரங்களாக உருவாக்கப்பட்டன.

**ஸ்ரீகணேசன்: இந்நாடகத்தினூடாக வெளிப்படும் போர்த் தாக்கங்கள்.....**

**கு.ச.:** இதுவும் மண் சுமந்து மேனி யரின் இன்னொரு பாகம்தான் பாடு களைச்சுமக்கும் மனிதர்கள். வைகை நதி யின் பெருக்கத்தை கட்டுப்படுத்த அணை கட்டும் செம்மன செல்விக்கு உதவ வரும் சிவன் கூலி ஆள் பிட்டுக்கு மண் சுமப்பார். விளையாட்டுத்தனத்தால் அரசனிடம் அடிவாங்குவார். துன்பம் சுமப்பார். இங்கு சோகம் உண்டு. ஆயினும் திருவிளையாட லில் நகையுணர்வு உண்டு. யேசுவின் பாடுகள் மக்களுக்காக மக்கள் யுத்தத்தின் பாடுகளைப் பல்வேறு பரிமாணங்களில் சுமப்பதை எந்தையும் தாயும் நாடகம் கூறுகின்றது. கப்பலில் வரும் பொருட்களுக்கு தபால்களுக்கு வெளிநாட்டுப்பிள்ளைகள் அனுப்பும் காசுக்கு, கொழும்பிலிருந்து வரும் பென்சன் காசோலைகளுக்கு என்று காத்திருக்கும் சமூகம் படும் அவஸ்தைகள் மென்மையாகவும் நுண்மையாகவும் காட்ட முயற்சித்தேன். அரங்கு அமைதியாக நகரும். பாரதி பாடல் ஒன்றைத்தவிர அதிகம் ஆடல் பாடல் இல்லாத யதார்த்த அரங்கு. இதன் ஊடாக போரின் தாக்கங்கள் எப்படி ஒரு சாதாரணமாக அமைதி விரும்பும்

யாழ்ப்பாண மக்களைப் பாதித்தது என்பது நாடகத்தூடு வெளிப்படும் தன்மையில் நாடகம் அமைக்கப்பட்டது.

இளைஞர் பங்கு கொண்ட போராட்டத்தில் 'பதி எழு அறியாப் பழங்குடிகள்' எப்படி கஷ்டப்பட்டார்கள் என்பதை நாடகம் காட்ட விழைந்தது. முதியவர் தனித்துப்போய் குடும்பங்கள் சிதைந்து அவலப்பட்ட சமூகம் ஆயினும் பாரதி பாடல் கூறும் எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய மண்ணின் உணர்வோடு கூடிய மக்களால் அநாதைப்பிணமாக பெரியய்யா இறந்த நிலையில் 'இது என்ன மாக்கோசின் பூதவுடலோ ஒரு வருடமாக வைத்துப்பார்க்க' என சோகத்திலும் பகிடிவிடுவார் ஐயாத்துரை.

**ஸ்ரீகணேசன்: மற்றைய நாடகங்கள் பற்றி.....**

குு.ச.: தொண்ணூறுகளில் தொடங்கி யுத்தத்தால் குடா நாட்டுக்குள் முதலில் இடம்பெயர்ந்து மாதகல் மயிலிட்டி மக்களின் அவலத்தைக்கூறும் நாடகம் யார்க்கெடுத்துரைப்பேன். மக்களை போர் பாதிப்புக்குத்தயார்படுத்த, பொருளாதாரம், வருமானம், சுகவாழ்வு, தொழில்தேடல் எனப் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மக்களைவழிப்படுத்த முனைந்த நாடகம். அங்கும் வீடு பற்றிய பேசும் பாத்திரங்கள் உண்டு. ஒரு நடுத்தரஅரச உத்தியோகஸ்தர் இருபது வருடங்கள் கடன் பெற்று வீடு கட்டி அதனை இழந்த சோகம் அவருக்கு. அதனால் ஏற்பட்ட அழுத்தம் சொந்த வெற்றிலைத் தோட்டங்களை விட்டு வந்ததால் வருமானத்தை இழந்து தவிக்கும் மாவிட்டபுர மக்கள், கடல்வாழ்வைத்துறந்து வந்த மயிலிட்டி மாதகல் மக்கள் அனைவரது சோகங்களையும் யதார்த்தமாகப் பேசியது யார்க்கெடுத்துரைப்பேன் என நாடகம் பேசியது.

நரகொடு சொர்க்கம் 96 இடப்பெயர்வின் பின்பு மீண்டும் வந்து எம்வீடுகளைத் தேடியபோது ஏற்பட்ட சோகம். சிறுகச் சிறுகச் சேமித்துக் கட்டிய வீடுகள், அதனைச் சுற்றி நட்ட பலன்தரும் மரங்கள், இடைக்காலத்தில் மாறிய தொலைபேசியில் வாழும் வெளிநாட்டுத் தொடர்புடைய வாழும் யாழ்ப்பாண நிலைமைகளைப் பேசியது அந்நாடகம். மீண்டும் மக்களின் பாடுகள், மண்சுமந்த மேனியரின் இன்னொரு பாகமாக தொடர்கிறது.

முதியவர்களின் வாழ்வைப் பேண வேண்டிய சூழலில் சமூகம். தனித்து விடப்பட்ட முதியவர்கள் விடுதியில் வாழும் சோகம். ஆதரவற்ற சமூகமாக போரினால் சிதைந்த சமூகமாக, நீ செய்த நாடகமே படைப்பில் வரும் பாத்திரங்களாக முதியவர்களை உருவாக்கினோம்.

போரின் வடுக்களாக உருவான பல நிலைகள் பற்றி நாடகங்கள் பேச முயன்றன. மனவடுக்கள், இடப்பெயர்வு அகதிவாழ்வு முதியவர் தனிமை ஆதரவற்ற பெற்றோர் எனப்பல விடயங்களைப் பேசவேண்டி இருந்தது: இருக்கிறது. பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் அவலங்களை உணர்ந்து செய்ய வேண்டியவைகள் ஏராளம் உண்டு. 2009ல் வன்னி மக்கள்பட்ட பாடுகளையும் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் நாம் பட்டவை ஒரு பொருட்டல்ல. எல்லாமே துயரம்தான். துயர் தீர்க்கும் மார்க்கங்களைக் கலைஞர்கள் கோடிகாட்டலாம். சம்பந்தப்பட்டவர்கள் மக்களின் பாடுகளைப் பற்றி நினைத்தால் தீர்வுகளை எட்டமுடியும். இல்லையெனில் மக்கள்பாடுகள் தொடர்ந்து செல்லும். மண் சுமந்த மேனியர்கள் தொடர்வார்கள்.

❍ ❍ ❍

சிறுகதை

# கண்ணீரினூடே தெரியும் வீதி...

- தேவமுகுந்தன் -

நான்கைந்து மாதங்களாய் இதே மாதிரித்தான் இரவில் ஒழுங்காய்த் தூங்க முடிவதில்லை. காலி வீதியைக் கிழித்து விரையும் அம்புலன்ஸ் வண்டிகளின் அவல ஒலிகள் என்னைத் திடுக்கிட்டு விழிக்கச் செய்கின்றன. பெரிய ஆஸ்பத்திரிக்கும் விமான நிலையத்திற்குமிடையே அவலக் குரலெழுப்பியபடி அம்புலன்ஸ் வண்டிகள் ஓடி விரைகின்றன. கல்கிசைச் சந்தியிலிருக்கும் மலர்ச்சாலைக்குச் சடலங்களை ஏற்றியபடி வரும் இராணுவ டிரக் வண்டிகள் அவற்றை அங்கு இறக்கி விட்டுச் செல்கின்றன. அவ்வண்டிகளின் முன் இருக்கைகளில் இராணுவ வீரர்கள் துயர்படிந்த முகத்தினராய் அமர்ந்திருப்பர். நகரெங்கும் வெண்கொடிகள் காற்றில் படபடக்கின்றன. நான் தங்குகின்ற அறையிருக்கும் கல்கிசை மார்க்கட்டுக்கு முன்னாலுள்ள வீதியிற்கூட இரு வீடுகளில் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டுள்ளார்கள். அவ்வீட்டு முகப்புகளில் இராணுவச் சீருடை தரித்த இளைஞர்களின் பெரிய வர்ணப் புகைப்படங்களை வைத்துள்ளார்கள். அவற்றைப் பார்க்க அவர்களுக்கு என்னிலும் பார்க்க இரண்டு மூன்று வயது குறைவாய் இருக்கும் போலிருந்தது. இன்று மாலை அவ்வீடுகளுக்குப் போய்க் கதைத்து விட்டும், குடித்துவிட்டும்வந்தஎனக்குஅறையின்சொந்தக்காரர் குமுது அங்கிள், சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மல்லாவியிலிருந்து வவுனியா வந்துவிட்டனவென்றும் இன்று இரவு வீடுகளுக்கு வந்து நாளையிண்டைக்கு இறுதிக் கிரியைகள் நடைபெறுமென்றும் சொல்லியிருந்தார். சொல்லும்போது



அவர் குரல் தழுதழுத்தது. அவருக்குத் தெரியப் பிறந்து வளர்ந்து இறந்த பிள்ளைகள்... அவர் தூக்கி வளர்த்த பிள்ளைகள் அவர்கள்.

நிக்ஸன் கூட இப்ப அறைக்கு வருவதில்லை. வருடத்தின் இறுதி மாதங்களில் அவனுக்கு ஓய்வில்லாத வேலை. அவன் அறைக்கு வந்தாலாவது கதைத்துக் கொண்டிருக்கலாம். இப்படி நித்திரைவராமல்நடுச்சாமத்தில் யோசித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நிக்ஸன் இனிமை படிந்த உடலோடும் உடையோடும் நத்தாருக்கு முதல்நாள் பின்னேரம் வருவான். புதுச் சேட், ரவுசர், புதிய கலண்டர்கள், டயறிகள் நிறைந்த அவனது 'பாக்'கில் நான் கணக்குச் செய்து பார்க்கவென ஒருபுறம் அச்சடித்துக் கிழிக்கப்பட்ட பேப்பர்களுமிருக்கும். நாலைந்து 'ஷம்போ'ப் பைக்கற்றுகளைவிரயஞ்செய்து முழுகி, முகமதியாவில் சாப்பிட்டு, புத்தாடை அணிந்து நள்ளிரவு ஆராதனைக்கு என்னையும் கூட்டிக்கொண்டு வெள்ளவத்தை சென்.

லோறன்சுக்குப் போவான். நத்தார்த் திருப்பலி முடிந்து வர அநேகமாய் ஓட்டோ, பஸ் இராது. பனி பொழியும் மார்கழியில் அடையாள அட்டையையும் பொலிஸ் பதிவுத் துண்டையும் பொக்கற்றில் எடுத்து வைத்துக்கொண்டு பட்டாசுச் சத்தங்களைக் கேட்டபடி வாணங்களின் வர்ண வெளிச்சங்களைப் பார்த்தபடி வெள்ளவத்தையிலிருந்து கல்கிசைக்கு காலி வீதியால் நடந்துவர வேண்டியிருக்கும். நிக்ஸன் நத்தாருக்கு அடுத்தநாள் காலையில் போனானென்றால் புதுவருடத்திற்கு முதல் நாள் பின்னேரம் வருவான்.

பேச்சுத் துணைக்கு ஆட்களில்லாமல் தனிமையில் அறையின் சுவர்களைப் பார்த்தபடி இருப்பது மகா கொடுமை. கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டமென்று மூன்று மாதங்களுக்கு முன்பு மூடப்பட்ட பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதற்கான அறிகுறியையே காணோம். 'கம்பஸ் கன்ரீனை'யே நம்பி வாழ்ந்த நாய்களும், பூனைகளும், இப்ப சாப்பாட்டுக்கு என்ன செய்யுங்கள்? உணவு தேடி எங்கெங்கு அலையுங்களோ? இடம்பெயர்ந்திருக்குங்களோ, பல்கலைக்கழகம் பூட்டப்பட ரஞ்சனும் சிவாவும் திருகோணமலை போய்க் கப்பலேறி யாழ்ப்பாணம் போயினர். ஜெபனும் புவியும் இரத்மலானை போய் விமானமேறி யாழ்ப்பாணம் போயினர். ஜீவாவும் நடேசும் பஸ் ஏறி மட்டக்களப்பு போயினர். கோணேசும் வசந்தனும் ரயிலேறி திருகோணமலை போயினர். ரமணனும் குகாவும் ரயிலேறி வவுனியா போயினர். ஈஸ்வரனும் ரங்கனும் நுவரெலியா போயினர். எல்லோரும் தங்கள் வீடுகளுக்குப் போயினர். நானெங்கு போவது... 'ஒப்பரேசன் ஜெயசிக்குறு' தொடங்கிய பிறகு போய்வரக்கூடிய நிலையிலா கிளிநொச்சி உள்ளது?

எனக்கு கிளிநொச்சியிலிருந்து அம்மாவின் கடிதங்கள் வந்ததாலேயே, நானும் என்னுடன் கூட அறையிலிருக்கும் பாவத்திற்காய் நிக்ஸனும் இரண்டு அறைகளைக் காலி பண்ண வேண்டியதாயிற்று. அங்கிருந்து வரும் கடித உறைகள் கசங்கிய கொப்பிப் பேப்பர்களில் எழுதப்பட்ட கடிதங்களையும், சில வேளைகளில் காளி கோவில் ஐயர் மந்திரித்துக் கொடுக்கும் திருநீற்றையும் நூலையும் அன்றி, வெடிகுண்டுகளைக் காவி வருவதாகவே இங்கிருப்பவர்கள் நம்புகிறார்கள். அனுப்புபவரின் முகவரியில் அம்மாவின் பெயர் எழுதப்பட்டு 455, மல்லாவி, கிளிநொச்சி

'டொக்... டொக்...'
கதவு தட்டப்படும் ஒலி.
எனது அறையின் கதவுகளை
யாரோ தட்டுகிறார்கள்.
பொலிஸ் வந்துவிட்டதா?
நேரத்தைப் பார்க்கிறேன்.
ஐந்து மணிக்கு இன்னும்
ஐந்து நிமிடங்கள்.

என்றிருந்ததால் ஸ்ரேசன் றோட் வீட்டை விட்டு எழும்ப வேண்டியதாயிற்று. சுமணராம றோட்டுக்கு வந்த கடிதத்தில் அனுப்புபவரின் முகவரியை அம்மா எழுதவில்லை. ஆனால், கிளிநொச்சி தபால் கந்தோரின் சீல் தெளிவாகக் குத்தப்பட்டு வந்தது. அந்த வீட்டுக்காரரும் தனது வீட்டில் கிளிநொச்சித் தொடர்பிருப்பவர்கள் தங்குவதை விரும்பவில்லை.

என் அப்பா கனடாவில் வேலைசெய்து உண்டியலில் அனுப்பும் பணத்தை அம்மாவுக்கு, கல்கிசை மக்கள் வங்கியில் இருந்து கிளிநொச்சி மக்கள் வங்கிக்கு அனுப்ப நான் படும்சிரமங்கள்... வங்கிப் படிவத்தை நிரப்பி பணத்துடன் 'கவுண்டரில்' கொடுக்கும்போது

கிளிநொச்சிக் கிளை என்பதை வாசித்துவிட்டு 'கவுண்ட'ரில் இருக்கும் கிளாக்கின் அதட்டல்கள் என்னைச் சிறுமைப்படுத்தும். பின் உள்ளே அறையிலிருக்கும் முகாமை யாளரின் விசாரணைகள்.

"ஆருக்கு காசு?"

"கடைசியாய் எப்ப அனுப்பியது?"

"எவ்வளவு அனுப்பியது?"

"எங்காலை இவ்வளவு காசு?"

"இஞ்சை என்ன செய்யிறீர்?"

இந்த வினாக்களுக்குப் பதில்களை ஆதாரங்களுடன் சொல்ல தேசிய அடையாள அட்டை, பொலிஸ் பதிவுத் துண்டு. பல்கலைக்கழகப் பதிவுப் புத்தகம் எல்லாவற்றையும் அவரிடம் மாதாந்தம் காட்ட வேண்டிவரும். காசையும் படிவத்தையும்கொடுத்தஎன்னிடம்நடக்கும் விசாரணைகள் மாதிரி, வங்கியில் கள்ளக் காசோலை கொடுத்துப் பிடிபட்டவனிடங் கூட நடந்திராது என்று தோன்றும்.

1995 ஐப்பசி வரையும் எனது குடும்பத்தின் முகவரி யாழ்ப்பாணமாய்த்தான் இருந்திற்று. 1996 வரை சாவகச்சேரியாயிற்று. பின் அது உருத்திரபுரம், மல்லாவி என்று கிளிநொச்சிக்குள் நகர்கின்றது.

சிறிது ஓய்ந்திருந்த அம்புலன்ஸ்களின் அலறல் ஒலி திரும்பவும் கேட்கத் தொடங்குகிறது. காயப்பட்டவர்களை விமான நிலையத்திலிருந்து ஏற்றிப் போகும்போது மட்டும் அலறல் ஒலியெழுப்புகிறார்களா? இல்லை, வெறுமையாக ஆஸ்பத்திரியிலிருந்து விமான நிலையத்திற்குப் போகும்போதும் அலறிக் கொண்டு போகிறார்களா? இந்த 'ஒப்பரேசன் ஜெயசிக்குறு' முடிவதெப்போ, அம்புலன்ஸ்களின் அலறல்கள் ஒய்வ தெப்போ?

நகுலன் இப்ப எங்கிருப்பான்? மூன்று கிழமைக்கு முன் வந்த அம்மாவின் கடிதம் வழக்கமான மலேரியாக் காய்ச்சல், அக்கராயன் ஆஸ்பத்திரி என்றிராமல் நகுலன் வீட்டுக்கு வந்து போன செய்தியைத் தாங்கி வந்தது. மழை பொழியும் ஐப்பசியின் ஒரு வெள்ளி மாலை வீட்டுக்குச் சீருடையின்றி வந்தவன் செவ்வாய் மதியம் திரும்பிப் போயிருந்தான். அம்மாவும் அகிலனும் அம்மம்மாவும் கண்கலங்கி அழுதுகொண்டிருக்கக் குடிசையின் வாசலில் வந்து நின்ற வாகனத்தில் ஏறித்



**எனக்குத் தலை சுற்றுமாய்ப் போல இருக்கு. நிக்ஸன் என்னைப் பிடித்தபடி கொமினிக்கேசனின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே வருகிறான். நகுலனின் உடல் அநாதையாய் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் இப்ப கிடக்கும்.உடலில்லாமல் கிளிநொச்சியில் செத்த வீடு நடக்கும்.**

திரும்பிப் பாராமற் போயிருப்பான். சித்தியின் குழந்தைகள் கை காட்டி வழியனுப்பிவிட்டு வேப்ப மரத்தில் நகுலன் கட்டிவிட்ட ஊஞ்சலில் ஆடி விளையாடியிருப்பார்கள். அடுத்தமுறை வரும் போது இரணைமடுக் குளத்தைக் காட்டுவதாய் நகுலன் அவர்களுக்குச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கலாம். இடம்பெயர்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் பள்ளிக்கூடம் போன நகுலன் திரும்பி வரவில்லை. அவனது சைக்கிள் மட்டும் வீடு திரும்பி வந்தது.

இரண்டாம் அரையாண்டுத் தேர்வு எழுதிவிட்டு விடுமுறைக்கு ஊர் போய் வந்த சிவா, ரஞ்சன், ஜெகன், புவி... ஆட்கள் நகுலனைப் பாடசாலைச் சீருடையுடன் ஸ்ரான்லி வீதியில், வேட்டி சால்வையுடன் நல்லூர்ப் பின் வீதியில், கறுப்பு பிளாஸ்ரிக் பைலுடன் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள காவலரனுக்கு முன்பாக, கிரிக்கெட் துடுப்பொன்றுடன் சென்றல் கொலிச்சடியில், பட்மின்ரன் ரக்கற் ஒன்றுடன் பழைய பூங்காவுக்குக் கிட்டவாக, பிரம்புக் கூடையொன்றுடன் பாஷையூர் மீன் சந்தையில், சாரத்துடன் நாலைந்து மாடுகளை விரட்டியபடி அரியாலை காவலரனுக்குக் கிட்டவாக, கண்டதாய் பரபரப்புடனும் பயத்துடனும் சொன்னார்கள்.

காலிவீதி வெறிச்சோடிப் போயிருக்கும். ஞாயிறு மதியங்களில் வெள்ளவத்தைக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு, கொமினிக் கேசனில் அப்பாவுக்கு ரெலிபோன் எடுத்தால் நகுலனைப் பற்றிக் கேட்டு அவரின் குரல் தழுதழுத்தழும்.

'டொக்... டொக்...' கதவு தட்டப்படும் ஒலி. எனது அறையின் கதவுகளை யாரோ தட்டுகிறார்கள். பொலிஸ் வந்துவிட்டதா? நேரத்தைப் பார்க்கிறேன். ஐந்து மணிக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள். இந்த அதிகாலையில் தட்டுவதானால் பொலிஸ ராய்த்தான் இருக்கும். சுற்றிவளைப்பாக இருக்கலாம். இனி அவர்கள் கேட்பார்கள்...

"கம்பஸ்கள் எல்லாம் பூட்டியிருக்க கொழும்பில் இருந்து என்ன செய்யிறாய்?" சிலவேளை, அவர்கள் என்னைக் கூட்டிக்கொண்டும் போகலாம். சேட்டைக் கொளுவிக் கொண்டு மேசையில் இருக்கும் அடையாள அட்டையையும் பொலிஸ் பதிவுத் துண்டையும் பார்த்துவிட்டுக் கதவைத் திறக்கிறேன். 'மை படிந்த' ரீ சேட்டோடு, குழம்பிய தலைமுடியோடு நிக்ஸன் நிற்கிறான். கையில் 'பாக்' இல்லை. அடுத்த முதலாளியோடும் பிரச்சினைப்பட்டுக் கொண்டு வேலையை விட்டுவிட்டு வந்து நிற்கிறான் போல.

நிக்ஸனைக் கண்டதும் மகிழ்ச்சியாய் இருக்கிறது.

"டேய் நிக்ஸன்" உற்சாகமாய்க் கத்துகிறேன்.

அவன் ஒன்றும் சொல்லாமல் வந்து கட்டிலில் இருந்து வெளிக்கிடு" நிக்ஸன் சொல்லுறான்.

"இந்த வெள்ளனை ஏன்?"

"வெளிக்கிடு சொல்லுறன்."

இவன் இப்படித்தான். ஒன்றும் முதலிலை சொல்லமாட்டான்.

அதிகாலையில் கல்கிசைச் சந்தியில் பலர் பஸ்சுக்காய் நிற்கிறார்கள். இருள் முற்றாக விலகியிருக்கவில்லை. நிக்ஸன் உற்சாகமில்லாமல் சோம்பலாய் கொட்டாவி விட்டபடி நிற்கிறான். சீருடையுடன் பாடசாலைப் பிள்ளைகள் நின்றபடியே புத்தகங்களை எடுத்துப் படிக்கிறார்கள். வகுப்பேற்றப் பரீட்சை போலும், உடல் பருத்த வயோதிபத் தம்பதியொன்று உடற்பயிற்சிக்காய் ஸ்ரேசன் றோட்டால் திரும்பி காலி வீதியில் விரைவாக நடக்கிறார்கள். மஹிந்த மலர்ச்சாலையில் இருந்து 'டரக்'கொன்று புறப்பட்டு இரத்மலானைப் பக்கமாய்ப் போகிறது. அவல ஒலி எழுப்பியபடி இரு அம்புலன்ஸ்கள் தெஹிவளைப் பக்கமாய் விரைகின்றன. பாணந்துறை புறக்கோட்டை பஸ் ஒன்று வருகிறது.

வெள்ளவத்தை றோயல் பேக்கறியில் பாணுக்காய் பலர் வரிசையில் நிற்கிறார்கள். வீரசேகரி, தினக்குரலை வாங்கிக் கொண்டு சிலர் நடக்கிறார்கள். திறந்திருந்த சைவக்கடையின் முதலாளி பக்திப் பாடல்களை ஒலிக்கவிட்டு சுவாமிப் படத்திற்கு மாலை சூட்டுகிறார். 'பிளேன் ரீ' குடிக்கையில் நிக்ஸன் சொன்னான்.

"மச்சான் உங்கடை அப்பா உன்னை அவரசமா ஒருக்கா ரெலிபோன் எடுக்கச் சொன்னார்."

"இப்ப அங்கை சாமமாய் இருக்கும். ஏனாம்?"

"தெரியாது." ஏதோ மறைக்கிறான் போல.

கொமினிக்கேசனில் வழமையான பெண்ணைக் காணவில்லை. இளைஞன் ஒருவன் தூங்கி வழிகிறான்.

"ராத்திரி இவங்கடை ரெலிபோன் நியூசிலை கேட்டன்... கோப்பாயிலை நகுலன் செத்திட்டானாம்... ஓ..." அப்பா அழுகிறார்.

"ஓ..."

"பொடி பெரியாஸ்பத்திரியில் இருக்காம்."

எனக்குத் தலை சுற்றுமாய்ப் போல இருக்கு. நிக்ஸன் என்னைப் பிடித்தபடி கொமினிக்கேசனின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே வருகிறான். நகுலனின் உடல் அநாதையாய் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் இப்ப கிடக்கும். உடலில்லாமல் கிளிநொச்சியில் செத்த வீடு நடக்கும்.

நாளைக்கு வீட்டுக்கார குமுது அங்கிளோடை வீட்டுக்குப் பக்கத்திலை நடக்கப் போகின்ற செத்த வீடுகளுக்குப் போக வேண்டும்.

கண்ணீரினூடே வீதி தெரிகின்றது.

வெண் புறாக்களாய் சீருடை அணிந்த பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிய வாகனங்கள் காலி வீதியில் ஊர்கின்றன. அந்த வாகனங்களை விலத்தியபடி அவலக் குரலெழுப்பி அம்புலன்ஸ் வண்டிகள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி விரைகின்றன. வானம் வேறு அழுது தொலைகின்றது.

**(தினக்குரல் 01 செப்ரெம்பர் 2008)**

# ஈழத்துப் போர்க் காலக் கவிதை



சோ.பத்மநாதன்

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகள் தொடங்கி 2009 மே மாதம் வரையிலானகாலத்தைப்போர்க்காலம்என லாம். எண்பதுகளுக்கு முன்பே ஈழநாட்டில் இன முரண்பாடு தோன்றியிருந்த போதும், ஆயுதப் போராக அது பரிணமித்தது எண்பதுகளில்தான். இப்போர் உயி ரிழப்பு, சொத்தழிவு, இடப்பெயர்ச்சி, புலப்பெயர்ச்சி முதலிய சொல்லொணா அவலங்களைஏற்படுத்தியது. தமிழர்வாழும் எந்தப் பிரதேசத்திலும், எந்தக் காலத்திலும் ஏற்பட்டிராத இச்சூழ்நிலைக்குச் சாட்சி களாக இருந்த ஈழத்துக் கவிஞர்கள் எவ்வாறு தம் அநுபவங்களைப் பதிவு செய்துள்ளார்கள் என்பதை இக்கட்டுரை நோக்கும்.

ஜனநாயக முறைமைக்குள் உரிமைக் கோரிக்கைமுன்வைக்கப்பட்டபோதல்லாம் அது ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டது. யாழ் நகரின் மையப் பகுதியிலிருந்த பழைய சந்தை காவல்துறையினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. 1981இல் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. வேலியே பயிரை மேய்ந்த இந்தக் கதையை முருகையன் 'வேலியும் காவலும்' என்ற கவிதையாக்குகிறார்.

**"வேலிக்குப் பயிர்கள் மேலே**
**வெறுப்புத்தான் இருக்குமென்றால்**
**வேலியேன் காவலேனோ..."**

என்ற வினாவுடன் அக்கவிதை முடிகிறது.

**"பாயில் தொடங்கி நூலகமும் பற்றி எங்கள்**
**கோயில் கடையெல்லாம் கொளுத்தப் படலாச்சே"**

என்பது சோ.ப வின் பதிவு

நூலகம் எரிக்கப்பட்டதை சேரன்,

**"முகில்களின்மீது**
**நெருப்பு**
**தன் சேதியை எழுதியாயிற்று!"**

என்று சொல்ல, நுஃமானோ அதைப் 'புத்தரின் படுகொலை' யாகக் காண்பார். 'புத்தரின்படுகொலை'ஆங்கிலத்தில்மொழி பெயர்க்கப்பட்ட பின் பல தொகுப்புக்களில் இடம் பிடித்துப் பிரபலமாகியது.

போர் தீவிரமடைந்தது. போராளிகள் படையினரை முகாங்களுள் முடக்குவதும், கண்ணிவெடி வைத்துத் தாக்குவதுமாய் இருந்தனர். அரச படைகள் எறிகணைகளை ஏவியும்குண்டுவீசியும்தாக்கத்தொடங்கின. இதனால், பொதுமக்கள்பெரிதும் பாதிக்கப் பட்டனர். இப்பாதிப்புக்கள் பற்றிப் பெரும் எண்ணிக்கையில் கவிதைகள் வெளி வந்தன: -

**"எந்தவழி தரைகடல், வான் இவற்றினூடு**
**எமைநோக்கி யமன் வருவான் என்று பார்த்து**
**நொந்தவர்கள் நாங்கள், படுந் துன்பம் ஒவ்வோர்**
**நொடியும் உள, கொடியர் இடுந் தீயில் நின்று**
**வெந்தவர்கள் நாங்கள்! அநியாயமாக**
**வெட்டுண்டும் சுடுபட்டும் வீழ்ந்தோர் நாங்கள்!**
**இந்துமா கடலைக் கேள், காற்றைக் கேள்,**
**இங்கு எறிக்கின்ற வெயிலைக் கேள், எல்லாம்**
**சொல்லும்!**

- சோ.ப (வடக்கிருத்தல்)

மரணங்கள் மலிந்துவிட்ட மண்ணை,

"மான்சுட்டால் அன்றி மரைசுட்டால் ...
மயில்சுட்டால்
ஏனென்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு
ஆனைக்குக் கூட அனுதாபப்படும் நாட்டில்
மனித உயிர்மட்டும் மலிவு... மிகமலிவு...

வீதியிலோ அன்றி வீட்டினிலோ பள்ளியிலோ
பாதியிரவினிலோ பஸ்ஸினிலோ படுக்கையிலோ
நாங்கள் சுடப்படலாம் நாய்போல்..!"

*என புதுவை இரத்தினதுரை சித்திரிக்கிறார்.*

"தெருவில் பிணங்கள் நாறுகின்றன.
பூட்டை ரவைகள் உடைக்கும் பொழுதில்,
வெண் புறாக்கள்
தலை கெழிய வீழ்ந்து
சிறகொடியச் சுருண்டு துடிக்கின்றன.
பையன்கள் சொல்லாமல் போகிறார்கள்
கடலில் குருதி தெறிப்பதாகச் சொல்கிறார்கள்.
கரையில் பிணங்களைத் தேடச் சொல்கிறார்கள்.
கரையில் ஒதுங்கிய பிணங்கள்
கடலில் கொட்டப்பட்டவை என்றும் சொல்கிறார்கள்.
ஆனாலும்
நீ என்னைப் பாடச் சொல்கிறாய்."

*என்பது சண்முகம் சிவலிங்கம் தீட்டும் சித்திரம்.*

*இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல, 1983 ஜூலையில், வெலிகடைச் சிறைக்குள்ளேயே நடத்தப்பட்ட படுகொலைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப் பட்டு உச்சப் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 52 அரசியற் கைதிகள், சிறைக்காவலர்களின் அனுசரணையுடன் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். இந்தக் கொடுமையை சி.சிவசேகரத்தின் "52" என்ற கவிதை பதிவு செய்கிறது.*

"சற்றே விலகி
நந்தி வழி விட்டதுபோல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இருப்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை நடக்கும்

பகுத்தறிவு ஆளுகிற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்கால் நடந்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ மௌனிக்கும்"

*பெரிய எதிர்பார்ப்புடன் வந்திறங்கிய இந்திய அமைதிப்படையும் விடுதலைப் புலிகளும் முரண்பட்டு மோத, மக்கள் தம் வீடு வாசல்களை விட்டு கோயில்களிலும் முகாம்களிலும் தஞ்சம் புகுந்து தவித்தனர் இருசாராருக்குமிடையில் அகப்பட்டு அல்லலுற்றனர். போரில் ஈடுபடாத இளை ஞர்கள் வலுக்கட்டாயமாக அணிகளில் சேர்க்கப்பட்டனர். 'பிள்ளை பிடித்தல்' என்ற மரபுச் சொற்றொடர் புழக்கத்துக்கு வந்தது. கல்வயல் குமாரசாமியின் நிரை மீட்பு இதைப் பேசும் :*

"ஏரிமுதிரா இளநாம்பன்
கன்றுகள்
ஊர் நிமிர
நாளை உழைக்க வளர்த்து எடுத்த
ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
பாராமுகமாய் இருக்க முடிஞ்சிடுமே!

வேலி பிரிச்சு
அவற்றை வெளியாலை கொண்டுபோய்
காலித்தனம் பண்ணக் கண்டும்
பொறுக்கிறதே!"

*பிள்ளைகளை மீட்கப் பெற்றோர் முகாம்களுக்கு முன்னே தவம் கிடக்கும்*

காட்சிகள் வழமையாயின. சோ.ப வின் "முகங்கள்" காட்டும் காட்சி இது :

**"என்ன பாவம்**
**செய்தோர் இவர்கள்**
**ஏக்கம், அச்சம், கலக்கம்**
**எல்லாம்**
**தேக்கிய முகங்கள்**
**தெருவோரத்து**
**அரண்களைத் தாண்டிப்**
**போகையில் – வருகையில்**
**காலையும் மாலையும்**
**காணும் முகங்கள்**
**என்ன பாவம்**
**செய்தோர் இவர்கள்**
**பிள்ளைகள் கதியை**
**எண்ணி, எண்ணித்**
**துடிக்கும் தாயராம்**
**சோக சித்திரங்கள்"**

எல்லாப் போர்களிலும் பெண்கள் உச்ச வன்முறையைச் சந்திக்க நேர்கிறது. இப்படியும் சொல்லலாம் : போர்களை நடத்துவோர் ஆண்கள் பாதிக்கப்படுவோர் பெண்கள். இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போதும், ஈரான் - ஈராக் போரின் போதும் எண்ணற்ற பெண்கள் வல்லுறவுக்காளாயினர். இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும் தமிழ்ப்பெண்கள் இந்த அவலத்தைச் சந்தித்தனர். 1997 இல் அம்பாறையில் வன்புணர்வுக்காளாக்கப்பட்டு, யோனியில் கிறனேட் வெடிக்க வைத்துக் கொல்லப்பட்ட கோணேஸ்வரி பற்றிக் கலா எழுதிய கவிதை பெண்ணிய அரங்குகளில் பெரிதும் பேசப்பட்டது.

**"வீரர்களே**
**உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள்**
**என் பின்னால்**
**என் பள்ளித் தங்கையும் உள்ளாள்**
**தீர்ந்ததா எல்லாம்?**
**அவளோடு நின்றுவிடாதீர்**
**எங்கள் யோனிகளின் ஊடே**
**நாளைய சந்ததி தளிர்விடக் கூடும்**
**ஆகவே**
**வெடிவைத்தே சிதறடியுங்கள்!"**

பெண் கவிஞர் ஒருவர் பெண்ணினத் துக்காக உரத்துக் குரல் கொடுத்த முக்கியமான சந்தர்ப்பம் இது.

போரின் தவிர்க்கமுடியாத விளைவாக மக்கள் தம் வீடுகளை - ஊரை - விட்டே ஓடுவார்கள். சிலவேளைகளில் மோதல்கள் ஓய்ந்தபின் வீடு திரும்புவார்கள். வருடக் கணக்காக சொந்த மண்ணுக்கு, வாழ்ந்த மனைக்குத் திரும்பாதோர் உள்ள் - வலிவடக்கு மக்களைப் போல. வீடு திரும்ப முடியாத ஏக்கத்தைச் சுமந்து திரியும் பல கவிஞர்களை, எழுத்தாளர்களை நான் அறிவேன்.

**"தூர்ந்துபோன, ஐதீகங்கள் மண்டிக் கிடக்கும்**
**உன்னுடைய கேணிகளில்**
**நினைவின் ஆழஅடுக்குகளுள் இழுத்துச் செல்கின்ற**
**பூர்வீகத் தெருக்களில்**
**பித்தாய் மனம் பற்றி அலைகிறது ...**
**தெய்வங்கள் உள்ளுறைந்த என்னுடைய முதுமரங்கள்**

**எங்கே?**
**காற்றைப்பிடித்துலுப்பி எழுகிற**
**மூதாதையரின் பாடல்களை**
**இழந்துதான் போனோமா?"**

என்று தன் ஊரை விளித்துப் பாடுகிறார் பா.அகிலன்

இளையவர்கள் எல்லோரும் தப்பி ஓட, படையினர் கைப்பற்றிய பிரதேசத்தில், தம் வீடுகளில் தனிமைத்துயரை அனுபவிக்கும் முதியோருக்குச் சாட்சியாய் இருந்தவர் கவிஞர் சு.வில்வரத்தினம். 'காற்றுக்கு வந்த சோகம்' என்ற கவிதை ஒரு பண்பாட்டுப் பதிவு. ஆளரவமின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது ஒரு வீடு. திறந்த வாசலூடு சுதந்திரமாக நுழைந்த காற்று சற்றே தயங்குகிறது. வாசற்படியில் வழுக்கிக்

கிடக்கிறது முதுமை. கைக்கெட்டாத் தூரத்தில் ஓர் ஊன்றுகோல். எதையோ சொல்ல வாயெடுத்தும் சொல் வரவில்லை. காற்றுக்கு அழுகை முட்டிக் கொண்டு வருகிறது. "எங்கே போயின இதன் உறவுகள்?" காற்று பரிதவிக்கிறது சேலைத் தலைப் பால் வாயைப் பொத்தியபடி வெளியேறுகிறது. காற்றை ஓர் மனிதனாக உருவகப்படுத்தி அற்புதம் புரிந்திருக்கிறார் சு.வி. அதற்குமப்பால் அவருக்கே வாலாயமான செவ்வியலும் கிராமியமும் கலந்த மொழிநடை கவிதைக்குச் செழுமை சேர்க்கிறது.

ஈழவிடுதலைப் போரின் மறுபக்கம் இயக்கங்களிடையே நேர்ந்த மோதல்களும் சகோதரப் படுகொலைகளும், மாற்றுக் கருத்துகளுக்குச் செவி சாய்க்காத இறுக்கமும், தட்டிக் கேட்போருக்கு துவக்கு முனையே தீர்ப்பாகும் கொடுமையும் இக்காலத்தில் வழமையாயின. சிவசேகரத்தின் 'பிரம்படி' சொல்வது இது :-

**"துரோகி எனத் தீர்த்து**
**முன்னொரு நாட் சுட்டவெடி**
**சுட்டவனைச் சுட்டது**
**சுடக்கண்டவனைச் சுட்டது**
**சுடுமாறு ஆணை**
**இட்டவனைச் சுட்டது**
**குற்றஞ்சாட்டியவனை**
**வழக்குரைத்தவனைச்**
**சாட்சி சொன்னவனைத்**
**தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது**
**தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது**
**எதிர்த்தவனைச் சுட்டது**
**சும்மா இருந்தவனையுஞ்**
**சுட்டது."**

அஸ்வகோஸின் 'வனத்தின் அழைப்பு' முழுமையும் போர்பாடிய ஒரு தொகுதி. ஈழவிடுதலைப் போரை பாரதப் போரின் பகைப் புலத்தில் பார்க்கிறார் கவிஞர்

**"அம்பணையில் முதுபெரு**
**வீரர் கிடந்தார்**
**உடலில் குத்திய அலியின் அம்புகளை**
**வெறுப்புடன் இழுத்தெறிந்தார்**
**இரத்தம் ஓடியது**
**தப்பிக்க முடியா மாயாலோகத்தின்**
**வசனங்கள் அவரிற்குக் கேட்டன**

**வீரன் தலை குனிந்து நின்றான்**
**பிதாமகரே**
**நான் வெறும் கருவி**
**கடமையைச் செய்தேன்**
**என்னை மன்னியும்**

**மரணத்திற்குக் காத்திருக்கும்**
**எந்தன் சொற்கள் உண்மையே**
**வனத்தின் அழைப்பைத் தாண்டி**
**எந்தன் மரணம் எட்டுமா**
**கொலைச்சூத்திரங்களை மட்டும்**
**உனக்குக் கற்பித்தவர்களிடம் சொல்**
**விண்டுரைக்க முடியா**
**மரணத்தின் விலையை**
**இனியும் தீர்மானிக்க வேண்டாம்**
**வனங்களின் கோரக்குரலுன்**
**தசைநார்களில் அதிர்கிறது**
**மகனே ஆயுதத்துடன் நீ**
**நன்றாகவே பேசினாய்**
**மனதையேன் இழந்து போனாய்**

**மீளமுடியா தளைகளை மீறி**
**உயிர் நிறுத்தி குரல் தந்தவன் முன்**
**சொல்லிழந்தவன் தலை குனிந்தான்**
**மகனே! தாகமாய் உள்ளது**
**வில் கோர்த்து புது ஊற்று நீர் ஈய்ந்தான்**
**முப்பாட்டன்**
**ஆவி குளிர்ந்தது**

**வரலாறு**
**அம்பணையில் துஞ்சியது**
**வீரம் வழி நடந்தது"**

பெண் போராளிகள் உள்ளிட்ட பெரும்பான்மையான கவிஞர்கள் போரை ஆதரித்து முன்னெடுத்து கவிபாடிக் கொண்டிருக்கையில், போருக்கு எதிராகக் குரல் கொடுத்த கவிஞர்களும் இருந்தார்கள். 'யுத்தத்தைத் தின்போம்' என்பது பிரதீபா தில்லைநாதன், திருமாவளவன், சக்கரவர்த்தி ஆகியோர் சேர்ந்து வெளியிட்ட கவிதைத் தொகுதி. அதில்வரும் சக்கரவர்த்தியின் கவிதையில் ஒரு பகுதி இது :

**"போரின் பகைப்புலம் அறியாது**
**பரணிபாடும் பாட்டுக்காரர்களே**
**குழந்தையின் மரணத்தை நீங்கள்**
**குதூகலித்து கொண்டாடுகின்றீர்களா?**
**ரத்தத்தையும் கண்ணீரையும்**
**ருசி தட்டிச் சுவைக்கின்றீர்களா?**
**ஒப்பாரி ஓசைக்கு மத்தியிலும்**
**உங்களுக்கு தூக்கம் சொக்குமா?**

**மஞ்சள் நிற சீனர்**
**கருநீல ஆபிரிக்கர்**
**ரெண்டும் கெட்டான் தென்னமரிக்கர்**
**பொது நிற ஹிந்தியர் மற்றும் செவ்விந்தியர்**
**மொத்த மொழி இந் நாட்டில் முப்பத்தி எட்டு**
**ஒற்றை இனத்துடன்**
**ஒத்துப் போக முடியாது**
**ஓடி வந்த நம்மைச் சுற்றி**
**எத்தனை இனக்காரன்,**
**எத்தனை மொழிக்காரன்,**
**எத்தனை நிறக்காரன்.**
**ஆயினும் நாம் வாழ்கின்றோம், வாழ்வோம்.**

**எப்படி இது சாத்தியம்?**
**அந்நிய தேசத்தில் சாத்தியமாமெனில்**
**ஏன் நம் சொந்த தேசத்தில்**
**முடியாதிருக்கிறது?**

இந்த எதிர்ப்புக்குரல் ஈழத்திலிருந்தல்ல, புலம்பெயர் தேசம் ஒன்றிலிருந்தே வந்தது என்பது கவனிக்கத்தக்கது.

ஈழவிடுதலைப் போரில் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைப் பதிவு செய்த கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் அஷ்ரஃப் சிஹாப்தீனும் ஓட்டமாவடி அறபாத்தும்.

துப்பாக்கிகள் உரத்துப் பேசிய ஓர் அந்திக் கருக்கலில் ஸெய்த்தூன் காணாமல் போனாள்.

**"மாரிமழையும் கோடை வெயிலும்**
**வசந்தத் தென்றலும் இலையுதிர் தினங்களும்**
**மாறி மாறி வரும்**
**ஸெய்த்தூனின் நினைவு மட்டும்**
**மாறாமலே இருந்துவரும்!"**

என்று துவக்கு வெடித்த இரவின் மீதும், இரத்தம் உறைந்த பூமியின் மீதும் இளைஞர்கள் சத்தியம் பண்ணுகிறார்கள்.

பிணையல் எருதுடன் வண்டியோடு போன வாப்பா விறகெடுத்து வருவாரென வாசலில் காத்து நிற்கிறான் மகன்.

**"காடேகிய குருவிகள் திரும்பின**
**நம் மாமரஉச்சியில்**
**குடியிருக்கும்**
**கொக்குத்திரும்பியது**
**பொந்திலிருந்த மரங்கொத்தியும்**
**திரும்பியது**
**உன்வாப்பா மட்டும் திரும்பவில்லை ..."**

என அறபாத்தின் 'தொலைதல்' சொல்கிறது.

போரின் தவிக்கவியலா விளைவாகத் தொடர்ந்தது புலப்பெயர்ச்சி. ஈழத்தமிழர்கள் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் புகலிடம் பெறலாயினர். பலர் போரால் பாதிக்கப்பட்டு ஓடியவர்களல்லர். வெளிநாட்டு வசதிவாய்ப்புகளை நாடியோர் என்று அரசு விமர்சிக்கிறது. ஆனால் புகலிடம் தேடுவதால் வழிவழிவந்த குடும்ப அமைப்பு உடைந்து போகும் நிதர்சனத்தை வ.ஐ.ச.ஜெயபாலன் பதிவு செய்கிறார்.

**"யாழ்நகரில் என்பையன்**
**கொழும்பில் என் பெண்டாட்டி**
**வன்னியில் என் தந்தை**

**தள்ளாத வயதினிலே**
**தமிழ்நாட்டில் என் அம்மா**
**சுற்றம் பிராங்போட்டில்**
**ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்**
**நானோ**
**வழிதவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம்போல்**
**ஒஸ்லோவில்**
**என்ன நம் குடும்பங்கள்**
**காற்றில் விதிக் குரங்கு கிழித்தெறியும்**
**பஞ்சுத் தலையணையா?**

**பாட்டனார் பண்படுத்தி**
**பழமரங்கள் நாட்டிவைத்த**
**தோப்பை அழியவிட்டு**
**தொலைதேசம் வந்தவன் நான்.**
**என்னுடைய பேரனுக்காய்**
**எவன் வைப்பான் பழத்தோட்டம்?"**

'காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணை' என்ற அற்புதமான படிமம் இக்கவிதையை உச்சாணிக் கொப்பில் வைக்கிறது. இப்படி அனுபவத்துக்குகலைவடிவம்தரமுடியாதவர்கள் கவிதை எழுதாமலே இருக்கலாம் என்றார் சுஜாதா.

மேனாடு ஒன்றில் குடியுரிமை பெறுவது நமக்குத் தீர்வாகாது என்பதை 'இனி ஒரு தேசியன்' என்ற திருமாவளவனுடைய கவிதை உள்ளத்தில் தைக்கும்படி சொல்கிறது. குளிருடை தரித்துத் துருவம் புகுந்த ஈழத்தமிழனுக்கு அன்று குடியுரிமை அளிக்கப்படும் சடங்கு. 'ஏழேழு தலைமுறைக்கும் தலையில் முள்முடி இறக்கப்படுகிறது' என்கிறார் கவிஞர்.

**"முந்நூறாண்டுகள் உழுதோம்**
**எங்கள் நிலத்தை அவர்க்கு**
**இனியும் உழுவோம்**
**அவர்கள் நிலத்தை அவர்க்கு"**

சடங்கு முடிகிறது. இன்றிலிருந்து நான் இன்னொரு தேசியன் என்று சந்தோஷப்பட முடியவில்லை கவிஞரால். களங்கட்டிப் பொறிக்குள் நுழைந்த மனிதன் களிப்படைய என்ன இருக்கிறது?

போர் முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் 2009 மேயில் முடிந்தது(?). அந்த ஊழியை சேரன் ஒரு மந்திரம்போல், மகாவாக்கியம் போல் பதிவு செய்துள்ளார்:

**"நீரற்றது கடல்**
**நிலமற்றது தமிழ்**
**வேரற்றது உறவு"**

போர்க்காலக் கவிதைகள் பற்றிய இவ்வாய்வு போர்க்கவிதைகள் பற்றிய உசாவலாக முடிவதை உணர்கிறேன். இக்காலத்திலேயே ஈழத்துக் கவிஞர்கள் வேறுபல பொருள்களை எடுத்தாண்டுள்ளனர். மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. "ஓங்கி உலகளக்கும் முயற்சி" என்று பாராட்டப்பட்ட "பொறிக்குள் அகப்பட்ட தேசத்"தை மு.பொ எழுதியதும் இக்காலத்தில் தான்.

**உசாத்துணை நூல்கள்**


- தமிழியல், மரணத்துள் வாழ்வோம் (1985)
- சோ.பத்மநாதன், வடக்கிருத்தல், தேசிய கலை இலக்கியப் பேரவை (1998)
- கல்வயல் வே.குமாரசாமி, மரணநனவுகள், யாழ் இலக்கிய வட்டம் (1986)
- வெளிச்சம் வெளியீடு, வெளிச்சம் கவிதைகள் (1996)
- சேரன், இரண்டாவது சூரிய உதயம் (ஜனவரி, 1983)
- சவுத் ஏசியன் புக்ஸ், தாயகம் கவிதைகள் அறுபத்தாறு, (1991)
- வில்வரெத்தினம். சு, காற்றுவழிக்கிராமம் ஆகவே' (1995)
- அஸ்வகோஸ், வனத்தின் அழைப்பு, நிகரி (1997)
- அஷ்ஃரப் சிஹாப்தீன், காணாமல் போனவர்கள், 'யாத்ரா' (1999)
- பிரதீபா தில்லைநாதன் முதலியோர், யுத்தத்தைத்தின்போம் அருவி வெளியீட்டகம், கனடா (1999)
- ஓட்டமாவடி அறபாத், வேட்டைக்குப்பின், 'சுஹா' (2004)

பூபாலசிங்கம் புத்தகசாலை, 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதை (2006)


⊙ ⊙ ⊙

# மஞ்சள் வரி கறுப்பு வரி

சிறுகதை

மழை விடாது இரண்டாம் நாளும் பொடுபொடுவெனத் தூறிக் கொண்டிருந்தது. கைமுனு கதவைத் திறந்து வெளியில் பார்த்தான். எங்கும் வெள்ளக்காடாயிருந்தது. திண்ணையில் இருந்து நிலத்தில் இறங்கினான். இடுப்பளவு தண்ணி வாரியிறைத் தோடியது. வானம், அடிவரை கறும் கிறும் என்று இருந்தது. இன்னும் இரு நாட்களுக்கு இப்படியே இருக்குமென அவன் முணுமுணுத்துக் கொண்டான். வீட்டின் பின்பக்கம் மேடான பகுதியென்பதால், வெள்ளம், முழங்காலுக்கும் கரண்டிக்காலுக்கும் இடையில்தான் நீர் இருக்க வேண்டுமென்று மெல்ல நடந்தான். கலங்கிய தண்ணியும், கந்தலும், கட்டையும், கம்பும், இலை குழையுமாய், நீர் மெதுவாக ஓடியதால் நீர்ப்பரப்பில் மிதக்கத் தொடங்கினான். கைமுனு மிக அருகில் சென்றதும் உறுமினான். அதை அவன் பொருட்படுத்தாது, நீர் வற்றியிருந்த சிறிய மேட்டுப்பகுதிக்கு அவனை இழுத்துப்போட்டு காயங்களுக்கு கட்டுப்போடத் துணி எடுத்து வருமாறு மனைவிக்குக் குரல் கொடுத்துவிட்டு அவனைப் பார்த்தான். அவனின் குதத்துக் கருகில் வால் ஒன்று முளைவிட்டு அரும்பத் தொடங்கி வளர்ந்து வந்தது. கையும் காலும் இடுப்பும் மேல்ப்பகுதியும் மஞ்சளும், கறுப்புமான புள்ளியாய் படர்ந்தது. அவன் ஒரு மிருகமாகிக் கொண்டிருப்பதை அவதானித்த மறுகணமே பிடரியில் தண்ணியடிபட ‘மகே அம்மே……. கொட்டி இன்னவா, கொட்டி இன்னவா’ என்று அண்டவெளி முழுவதும் கைமுனுவின் குரல் அதிர்ந்து கொண்டிருந்தது.

மனைவியையும் பிள்ளைகளையும் அவசரப் படுத்தி வீட்டைவிட்டு வெளியேறினான். அவனுடைய வாகனம் பறந்தது. கண்ணுக்குள் அவன் எரித்த உருக்கள், கரும்புகை எல்லாம் வந்து போயின. இப்போது அவன் தன்னைப் பழி வாங்குவதற்கு அது வந்திருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டான். ஸ்ரேசனுக்கு வந்தபோது ஒரு சிப்பாய் கூட இருக்கவில்லை. மேலதிகாரிக்குத் தொலைபேசியில் நடந்ததைக் கூறி னான். மரணம் தன்னைத் துரத்துவதாகப் சற்றுத் தூரத்தில் கிடந்த ஒரு உரு என்ன என்பதை அவனால் சரியாக அனுமானிக்க முடியவில்லை. மிக அண்மையில் போய்ப் பார்த்தான். ஐம்பது ஐம்பத்தைந்து மதிக்கத்தக்க மனிதன் என்பதை கைமுனு அறிந்தான்.

குப்புறக் கிடந்த உருவில் பின்பக்க மண்டையில் ஏதோ பலமாகத் தாக்கியிருக்க வேண்டும். குபுகுபுவென இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்தது. குதிக்காலுக்கு சற்று மேல்ப் பகுதியும் வெடித்து செந்நீர் பீறியடித்துக் கொண்டிருந்தது. அவன் சிவப்பு நிற

**- த.மலர்ச்செல்வன்**



அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தால் இதை விடுதலை செய்வதோடு, சிங்கராய வனத்தில் மேற்படி விலங்கை விடுமாறு பொலிஸ் அதிகாரிக்கு கட்டளையிடுகிறேன்.

புலம்பினான். மறுமுனையிலிருந்து வந்த பதிலுக்கு சேர்...... சேர்..... என வழிந்தான்.

சற்று நேரத்தில் சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர். அவர்களில் பாய்ந்து விழுந்தான் கைமுனு. கெதியாப் புறப்பட உத்தரவிட்டு மனைவியையும் பிள்ளைகளையும் குவாட்டசுக்கு அனுப்பி வைத்து புறப்பட்டான்.

கைமுனு வீடு வந்தடைந்தபோது சனத்திரள் நெழுநெழுத்தது. கைமுனு சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய முற்றத்திலிருந்த வெள்ளைக்காடுகள் ஆவியாய்ப் பறந்திருந்தன. எல்லாமே மாயமாகவிருந்தன. கைமுனு முட்டிமோதி கிழட்டுப்புலியிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். அவனை யாரும் கணக்கில் எடுக்கவில்லை. பவ்..... பவ்..... எனக் கதைகள்தான் மேலெழுந்தன.

அவற்றையும் வேறு சில வார்த்தைகள் குறுக்கிட்டன.

கைமுனு, கூட்டத்திற்கு மத்தியில் நடந்ததைக் கூற முற்பட்டான். இது கிழட்டுப்புலியல்ல. மனிதப்புலி, மனிதனாக இருந்துதான் புலியாக மாறியதாகச் சொன்னான். சனத்திரள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து கொல்லெனச் சிரித்தது. அவன் கூனிக்குறுகினான். தன்னுடைய நட்சத்திரம் உயரும் எனக் கனாக் கண்டதை இந்தப் புறம்போக்குகள் நாசமாக்குவார்களோ? என தனக்குள் பயம் கொண்டான்.

சனத்திரள் இரைச்சலில் கைமுனு காதுகளைப் பொத்திக் கொண்டு தியான நிலையிலிருந்தான். சற்றுப் பின் எழுந்தான். சனத்திரளைப் பார்த்து கையினால் ஏதோ சொன்னான். எங்கும் மௌனம் கௌவியது.

கைமுனு தன் வண்டியில் கிழட்டுப் புலியைத் தூக்கியெறிந்தான். கிழவன் வலியால் அலறினான். ஜீப் ஸ்ரேசனை அடைந்தபோது மதியம் கடந்துபோயிருந்தது. 'கிழட்டுப் புலி, மேல் நோவையும் பாராது ஒரு உறுமலுடன் ஜீப்பிலிருந்து குதித்து ஸ்ரேசனுக்குள் புகுந்தது. கைமுனு எஸ்.எல்.ஆர் உடன் பின்னுக்கு ஓடினான். பின் கூண்டைத் திறந்து கிழட்டுப் புலியை அடைத்தான்.

புலியெனச் சந்தேகப்படும் கிழட்டுப் புலியை ஆஜர்செய்தல்
Ho131411- 50.000 (2002/01) பொலிஸ் - 55
(F2 Orig.& Dup.S.T) 50/80
இலங்கை பொலிஸ், நீதவானுக்கு வழங்கப்படும் தகவல்.

2002.04.10 ஆம் திகதி அன்று உ.பொ.ப துட்டகைமுனு ஆகிய நானும் எனது மனைவி பிள்ளைகளும் எனது நிரந்தர விலாசத்தில் கனல்ரோட், பஞ்சிகாவத்தை, வத்தளையிலுள்ள சொந்த வீட்டில் 10.04.02 ஆம் திகதி நேரம் 10.00 மணி தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்த்துக் கொண்டிருந்தபோது இடைவிடாது மழை பெய்து கொண்டிருந்தது. சுமார் 3.00 மணியின் பிற்பாடு வீட்டின் கதவைத் திறந்து சுற்றாடலை நோக்கியபோது 3,4 அடி உயரத்திற்கு நீர் பெருக்கெடுத்து கந்தலும், கட்டையும், கம்பும் இலை குழையுமாய் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது நீர் சற்று பெருக்கெடுத்தது. எனக்கு பயம் எழ, சற்று தொலைநோக்கிப் பார்த்தேன். அங்கு ஒரு மேட்டு நிலம் காணப்பட்டது. அதில் ஒரு உரு அசைவதைக் கண்டேன். அதற்கு உதவும் பொருட்டு சென்றபோது, அதன் தலையில் காயம் ஒன்று ஏற்பட்டு இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது. அதற்கு மருந்து கட்டும் நோக்குடன் மனைவியிடம் மருந்து எடுத்து வருமாறு உத்தரவிட்டு பின் அந்த உருவத்தைப் பார்த்தபோது அந்த உருவம் புலியாக மாறிவருவதைக் கண்டேன். பின் சற்றும் தாமதிக்காது எனது மனைவியை யும் பிள்ளைகளையும் அழைத்து பொலிஸ் நிலையம் சென்று மேலதிகாரியிடம் அறிவித்துவிட்டு அவரின் உத்தரவின் பின் பொலிஸ் கான்ஸ்டபிளை ஆயுதங்களுடன் அழைத்துக் கொண்டு புலி இருந்த இடத்திற்கு வந்தோம். அப்போது சனங்கள் நெழுநெழுவென இரைச்சல் இட்டுக் கொண்டிருந்தன. அச்சமயம் கான்ஸ்டபிளிடம் கைது செய்யுமாறு உத்தரவிட்டு, கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு வந்து கைது செய்யப்பட்ட கிழட்டுப் புலியை விசாரணையைத் தொடர்வதற்காக, வாக்குமூலத்தைப் பதியச் சென்றபோது பேச்சு வழக்கில் இல்லாத புதிய மொழியாக இருந்தது. அதனால் வாக்குமூலம் பதியப்படவில்லை. இதனால், இக்கிழட்டுப் புலியின் மொழியை, மொழி அறிஞரிடமிருந்து அறிந்துகொண்டு விசாரணையை மேற்கொள்ள வேண்டும். இவ்விசாரணை முடிவடையும் வரை புலியெனச் சந்தேகப்படும் கிழட்டுப் புலியை விளக்கமறியலில் வைக்கும்படி கனம் நீதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி 11.04.02 துட்டகைமுனு

புலன் விசாரணைக்குப் பொறுப்பான உத்தியோகஸ்த்தர்

12.04.02 சந்தேக நபர் கிழட்டுப்புலி ஆஜர்
பொலிஸார் சமர்ப்பிக்கின்றனர்

சந்தேக நபரை 14 நாட்களுக்கு வனவிலங்கு சரணாலயத்தில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு இடுகிறேன்.

பொலிசார் புலன்விசாரணையை மேற்கொண்டு (மொழி ஆராய்ச்சியாளர்களின் துணையுடன்) மன்றுக்கு மேலதிக அறிக்கையை இணைக்குமாறு கட்டளையிடுகிறேன்.

வழக்கை 16.04.02 ஆம் திகதி கூப்பிடவும்.

சேக்கிழான் சேமரதன்

திகதி 12.04.02 நீதிபதி

பசுக்களும், மரைகளும், நரிகளும் கிழட்டுப் புலியைக் கண்டு மருண்டன. மான் கூட்டமும், அதிர்ந்துபோய் முகத்தைத் தொங்கப் போட்டன. கிழவன் நடந்து வருவதை வன அதிகாரி பார்த்து முகம் மலர்ந்தான். கைமுனுவிடம் "என்ன? ஒரு கிழவனை இங்கு கொண்டு வந்திருக்கிறாய். இங்கு வேலைக்கு அதிகமான ஊழியர்கள் உள்ளனர். நீ..... இதை....."

"சே இது கிழவனில்லை. கிழட்டுப்புலி நகரை அழிவிலிருந்து வேவு பார்க்கவந்த சில நேரத்தில் என்னிடம் மாட்டிவிட்டது. ஆனால் நீதிவானின் உத்தரவின்படி 14 நாட்கள் இதை இங்கே வைத்து, கண்காணித்து மொழி அறிஞர்களின் துணையுடன் ஒரு முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

சா....அப்படியா ஆளைப் பார்ப்பதற்கு இது புலி மாதிரியில்லையே. பசியால் வாடிக்கிடக்கும் கிழவன் மாதிரியல்லவா இருக்கு. நீ என்ன சொல்லுறா!"

"அப்படியல்ல இதுக்கு கறுப்பும் மஞ்சளும்....."

பல்லவியை அவிழ்க்கத் தொடங்கிச் சில நாழிகையில் மொழி அறிஞர்கள் வந்து சேர்ந்தார்கள்.

கைமுனு, கிழட்டுப் புலிக்கு அருகில் அழைத்துச் சென்றான். இதுதான் என அடையாளம் காட்டினான்.

மொழி அறிஞர் குழுத்தலைவன் சாம்சன் கைமுனுவைப் பார்த்துச் சிரித்தான். கிழவனுக்கு அருகில் சென்று பேசிக் கொண்டான். கிழவன் புவியில் இல்லாத ஒரு மொழியில் கதைத்துக் கொண்டு இருந்தான். அவனுக்கு விளங்கவில்லை. தன்னுடைய இத்தனை காலச் சேவையில் அவன் சந்தித்த புதுமொழி. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்த ஒரு மொழியின் வழித்தோன்றலாக இருக்க வேண்டுமென சாம்சன் ஊகித்துக் கொண்டான்.

கிழவனிடம் பேச்சை நிறுத்திக் கொண்டு, இன்றைய ஆராய்ச்சி போதும் எனப் புறப்பட்டனர். ஆனால் சாம்சனுக்கு நித்திரையில்லை. இரவு முழுவதும், புத்தகங்களைத் தூசி தட்டினான். ஒலி நாடாக்களைக் கேட்டான். இரவு எப்படித்தான் மறைந்ததெனத் தெரியவில்லை. காலையில் சரணாலயத்தை அடைந்தவுடன் கிழவனுடன் மீண்டும் கதைத்தான். அவனுக்கு சற்றுப் பிடிபட ஆரம்பித்தது. இது தமிழ் மொழியின் தோற்றுவாயாக இருக்கலாம். இருந்தும் இன்னும் சில வாரங்கள் அவனுக்குத் தேவைப்பட்டன.

கைமுனு அவசரக்காரனாகவே இருந்தான். தன் நட்சத்திர உயர்வு பற்றியே சதா சிந்தித்தான். வயிறு எரியுண்டாக வீடு ஏகியவன் அதிர்ந்தான். மனைவி மகனைத் தூக்கிக்கொண்டு அலறிக் கொண்டிருந்தாள். கைமுனுவைக் கண்டதும் பாய்ந்தாள். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இதைப் பார் எனத் தன் மகனின் உடலைக் காட்டினாள். கறுப்பும் மஞ்சளுமான புள்ளிமுளைத்திருந்தது. திக்கென்றது அவனுக்கு. தன் கையினால் அமுத்தித் தேய்த்தான். அது போகவில்லை.

"பயப்படாதே இது ஒன்றுமில்ல. ஏதோ தோல் வியாதி போலத்தானிருக்கணும், நாளைக்குடாக்டரிடம்காட்டுவோம்"எனத் தன் மனைவிக்கு ஆறுதல் கூறினான். அவள், அவனுடைய கதையை ஏற்கவில்லை. அந்தக் கிழவனை விட்டுவிடு என மன்றாடினாள். அவன் ஏற்கவில்லை. வனத்திற்கு கைமுனு வந்தடைந்ததும் கிழவன் ஒரு சிரிப்பை விட்டான். கைமுனுவுக்குஇதற்குமுன்அவன் சிரித்ததில்லை. பின் நமட்டுச்சிரிப்புடன் கிழட்டுப்புலி தன் கூட்டுக்குள் போய் அமர்ந்து கொண்டது. கைமுனுவுக்கு வனத்தில் நிற்க முடியவில்லை. மிக விரைவாக வீடேகினான். தன் மகனின்

முதுகைப் பார்த்தான் இன்றும் புதிததாக ஒன்று முளைத்திருந்தது.

அவனின் உடல் கனத்தது. தலை யில் கையை வைத்து திண்ணையில் குந்திக்கொண்டிருந்தான். தன் மனைவி சறபுறு சறபுறு என்றேயிருந்தாள்.

"சும்மா இரு பார்ப்போம்.நானொரு பொலிஸ் அதிகாரி, என் சுய நலத்துக்காக, அந்தப் புலியை விடலாமா?"

"சும்மாசுத்தாத. யார்இங்கு நேர்மையாக இருக்கிறா? அந்தக் கிழவன் உனக்கு என்ன செய்தவன்? காட்டு ராஜாவின் சந்ததிகள் ஏதும் செய்திருக்கலாம். அதனால் அவன் மாறியிருக்கலாம். சும்மா ஒருபக்க நியாயத்தை நியாயப்படுத்துவது சரியோ? விட்டுவிடு இல்ல...."

"சும்மா கிட, நான் கோழயில்ல. சுயநலக்காரனில்லை. நான் ஒரு வீரனின் பெயரையுடையவன். அதுக்காவது......."

"விசயம் தெரியாம கத்தாதிங்க. முன்னரும் உங்க நாமத்தையடையவர் ஒரு கிழவனை வஞ்சகத்தால வெற்றி கொண்ட கதை தெரியாதா என்ன? அந்த நாமத்தையுடையவங்க இயலாத கட்டையில்தான் வீரத்தைக் காட்டுறீங்க. கேவலமாகயில்ல.....

"என்னடி நீ கதைக்கிற கத"

"ஓம், யுத்த விதியே தெரியாது. குதிரை யில இருந்து விழுந்த மனிசன வெட்டின வர்தான் உங்க நாமத்தை யுடையவர்......

"சரி.... சரி.."

முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்ட மகனுடன் டாக்டரை அடைந் தான். டாக்டர் பூதக் கண்ணாடியை உடல் முழுதும் வைத்து பல மணிநேரமாக ஊர்ந்தார். புத்தகங்களைப் புரட்டினார். தலையைச் சொறிந்தார். இறுதியில் இது நோயல்ல என்றார்.

கைமுனுவுக்கு பயம் அதிகரித்தது. நட்சத்திரங்களைப் பெற்று என்ன செய்வது மகனைக் காப்பதுதான் முதற்கடனாகத் தோன்றியது அவனுக்கு.

*புலியெனச் சந்தேகப்படும் கிழட்டுப் புலியை*
*ஆஜர் செய்தமை*
*பொலிஸ் } 8*

இலங்கைப் பொலிஸ்
தகவல் ஏடு { பக்கம் } **261**      நிலை இலக்கம்
{ பந்தி } ஜிச்.ஜீ.வி
கடும் குற்றம்
சிறுகுற்றம்

**19/2002**
ஜீ. ஜீ. ஆர்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் **2002** ஆம் ஆண்டு **04**ஆம் மாதம் **10**ஆம் நாளன்று.

எதிரி
கிழட்டுப்புலி

வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உ.பொ.ப ரெட்டிக்கே துட்டகைமுனு ஆகிய நான் 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XIV ஆரம்ப பிரிவின் கீழ் 136(1) ஆம் பிரிவின்படி 2002ஆம்ஆண்டு 04 மாதம் 10 நாளன்று அல்லது நாளளவில் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்த வத்தளை கனல் ரோட் என்னுமிடத்தில் மேற்படி கூறிய எதிரியை நாங்கள் கைது செய்தோம். இது இ.ச.சட்டக்கோவை 19ஆம் அத்தியாயத்தின் 32 பிரிவுடன் சேர்த்து வாசித்து அதே அத்தியாயத்தின் 29ஆம் பிரிவின் கீழ் தண்டிக்க வேண்டிய குற்றமொன்றையும் புரிந்துள்ளார். ஆனால், எதிரியிடத்திலிருந்து வாக்குமூலமும் பெற முடியாத காரணத்தாலும், தடயங்கள் இல்லாத காரணத்தாலும் எதிரியைக் குற்றவாளியாக அடையாளப்படுத்துவதற்கான சான்றுகள் இல்லாதுள்ளன.

**சாட்சிக்காரர்களின் பெயர்ப்பட்டியல்**

1. இல்லை
2. இல்லை
3. இல்லை

**வழக்குத் தொடர்புடைய பெயர்ப்பட்டியல்**

1. உ.பொ.ப துட்டகைமுனு - வத்தளை பொலிஸ் நிலையம்
2. உ.பொ.கொ. 2.1 சில்வா - do
3. உ.பொ.ப - பண்டார - do
4. உ.பொ.கொ. - 2.1 காமினி -do

திகதி 2002.04.24

**ரெட்டிக்கே துட்டகைமுனு**
**பொறுப்பதிகாரி**
பொலிஸ் நிலையம் வத்தளை

இவ்வழக்கில் நெறிப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மூலமும் இல்லாததும், எதிராளி மீது சூட்டப்பட்ட குற்றங்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் வழக்குத் தொடுநர்கள் மன்றில் முன்வைக்கவில்லை என்பதும் அவதானிக்கப்படுகின்றது. மேலும் இவ்வழக்கில் சந்தேகங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களை நிரூபிக்கவில்லை என மன்றம் கருதுகிறது. என்ற காரணத்தால் சந்தேகங்களின் பலனை எதிராளிக்கு வழங்கி அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தால் இதை விடுதலை செய்வதோடு, சிங்கராய வனத்தில் மேற்படி விலங்கை விடுமாறு பொலிஸ் அதிகாரிக்கு கட்டளையிடுகிறேன்.

திகதி 2002.05.07 **மனுநீதிச்சோழன்**
**நீதவான்**

பல்லைக் காட்டிச் சிரித்தான் துட்டகைமுனு. கிழட்டுப் புலி தலையை தொங்கப் போட்டிருந்தது.

கைமுனு கூட்டைத் திறந்து கிழட்டுப்புலியை இழுத்து வந்தான். சுற்றும்முற்றும் பார்த்தான். யாருமில்லை, வடதிசை நோக்கி ஓடும்படி கை அசைவினால் சொன்னான். கிழவன் சிரித்தான். பின் வடதிசை நோக்கி நடந்துபோனான். கைமுனு அவனை வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தான். கிழவன் 18 வயது வாலிபனாக மறைந்து போனான்.






அநேகமான யுத்த திரைப்படங்களில் காணக்கூடிய ஒரு பலஹீனமான தன்மை, ஒரு பக்கச் சார்புநிலை எடுத்தலாகும். எனினும் இதன்போது படைப்பாளி ஒரு மத்தியஸ்தராக செயற்பட வேண்டும். இவர் இந்த இரு தரப்பினரதும் மனித நேயமற்ற குணாம்சத்தை தனது நெற்றிக் கண்ணால் பார்க்க வேண்டும்.

இது மிகவும் கடினமானதொரு காரியமாகும். அந்தந்த சமூகங்களில் காணப்படுகின்ற கருத்தியல்வாத நிலைமைகள் இதற்குக் காரணமா-கும். எச்சந்தர்ப்பத்திலும் வர்க்கங்களும் இனங்களும் இவ்வாறான படைப்புகளின் ஊடாக தாங்கள் உயர்ந்த மட்டத்தில் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு அதிக விருப்பு கொண்டுள்ளன.

உண்மையான படைப்பாளி ஒருவர் இந்த புள்ளியில் இருந்துதான் செயற்பட வேண்டும். அந்த வகையில் நம் நாட்டுப் படைப்பாளியான விமுக்தி ஜயசுந்தர தனது முதலாவது படைப்பினை “சுலங்க எனு பினிஸ” (காற்று வருவதற்காக) மூலம் யுத்தத்தினுள் இருக்கும் யுத்தம் குறித்து எடுத்துக் காட்ட முற்பட்டுள்ளார். இது கண்களுக்கு புலப்படாத யதார்த்தமாகும். எனினும் படைப்பாளியானவர் யதார்த்தத்தை நோக்கிச் செல்ல வேண்டி இருப்பினும் யுத்தம் சார்ந்த படைப்புகளின்போது கண்களுக்குப் புலப்படாத யதார்த்தத்தை நோக்கிச் செல்வதானது படு பயங்கரமான செயற்பாடாகும் என ஒரு சில சமூகங்களின் ஊடாக வெளிக்காட்டப் படுகின்றது.

முந்தைய கால கட்டத்தை விட தற்காலத்தின் யுத்த திரைப்படங்களில், அத்திரைப்படத்தை நிர்மாணிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பட்டறிவுகளே முக்கியமானவையாகும். இந்த பட்டறிவு களுக்கு யுத்தத்தில் நேரடியாக ஈடுபடுகின்ற இரு தரப்பினரும் உண்மையாகவே உட்படுகின்றனர். இதில் பொது மக்களும் உள்ளடங்குகின்றனர். இதன் ஊடாக உருவாகின்ற படைப்புக்கள் மிகவும் விருப்புடையதாக அமைந்து விடுகின்றன.

யுத்தத்தின் பின்னரான கால கட்ட மானது உண்மையிலேயே யுத்தத்தை விட பயங்கரமானதாகும். யுத்தத்தில் பங்கேற்றிருந்த சிப்பாய்களின் மனநிலை, யுத்தத்திற்கு நேரடியாகவும் மறைமுகமா-கமாகவும் முகங் கொடுத்திருந்த மக்களது மனநிலை என்பன இயல்பு நிலைக்கு வர சில காலம் எடுக்கும். தற்போதுகூட இலங்கையில் நிகழ்கின்ற பல்வேறு குற்றச்




“மாதா” திரைப்படம்

செயல்கள் தொடர்பில் குற்றவாளிகளைத் தேடிச் செல்கையில் அவர்களில் பெரும் பாலானவர்கள் யுத்தத்தில் நேரடிப் பங்களிப்பினை வழங்கியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இலங்கையில் யுத்தம் முடிவுறுவதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பதாக பேராசிரியர் சோமரத்ன பாலசூரிய எழுத்தாளர் புத்ததாஸ கலப்பத்தி ஆகியோர் இணைந்து யுத்தம் தொடர்பிலான சிங்கள மற்றும் தமிழ் மக்களது அனுபவங்களை உள்ளடக்கியதான சிறுகதைகளைக் கொண்டு “மனித ரேகைகள்” என்ற பெயரில் ஒரு குறுந் திரைப்படத்தையோ அல்லது சிறு தொலைக்காட்சி நாடகத் தொடரையையோ தயாரிப்பதற்கான யோசனைகளை முன்வைத்திருந்தனர். யுத்தத்தின் பின்னர் இரு தரப்பினரதும் கருத்துகளைப் பறிமாறிக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. அதாவது ஏற்பட்ட அனுபவங்களை இரு தரப்பினரும் பகிர்ந்து கொள்ள வழி வகுப்பதாகும். அதனூடாக ஒரு கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் அமைப்பதாகும். யார் என்ன கூறினாலும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரிலும் குறைபாடுகள் இல்லாமில்லை. எனவே இந்த இரு தரப்பினரும் தங்களது படைப்புகளை முன்வைப்பதன் ஊடாக ஒரு திறந்த நிலைப்பாடு உருவாகும். எனினும் மேற்படி முயற்சியானது தட்டிக் கழிக்கப்பட்டு விட்டதாக பின்னரே அறிய முடிந்தது.

யுத்த கால கட்டம் தொடர்பில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட படைப்பு களின் மூலம் கண்களுக்குப் புலப்படாத யதார்த்தத்தை நோக்கிச் செல்வதற்கு படைப் பாளிகளுக்கு வாய்ப்புக்கள் கிடைத்ததாக இல்லை. இதற்குக் காரணம் சமூக மட்டத்திலான கருத்தியல்களாகும். இவ்வா றான படைப்புகள் உருவாக்கப் பட்டிருப்பினும் அவற்றுக்கு சமூகத்தின் பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பின. சமூகத்தின் கருத்தியலுக்குப் பொருந்தாத காரணத்தினாலேயே இவ்வாறான எதிர்ப் புக்கள் கிளம்பின. இதனால் படைப் பாளிகளுக்கு ஒருதலைப்பட்சமான வழி நோக்கிச் செல்லக்கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.




அண்மையில் காமினி, செல்வம், மாதா போன்ற சிங்களத் திரைப்படங்கள் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதி யில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இத் திரைப்படங்களின் பின்புலமானது யுத்தம் நடைபெற்ற காலகட்டமாகும். இந்தப் படைப்பாளிகளது நோக்கம் ஒரு தலைப்பட்சமானது. இது இவர்களது கருத்து நிலைப்பாடுகளாகும். எனினும் உண்மையான யுத்தத்தின் தன்மை இதுவல்ல என்பதை இவர்கள் அறியாதவர்கள் அல்லர்.

இரசிகர்கள் கேட்டறிந்தவைகளுக்கும் கண்டவைகளுக்கும் பதிலாக தாங்கள் நினைத்த, நினைத்துக் கொண்டிருப்பவற்றை இவ்வாறான படைப்புகளுக்குள் புகுத்து வதன் மூலம் சிங்களத் திரைப்படத்துறையில் யுத்தத்தைப் பின்புலமாகக் கொண்ட திரைப்படங்கள் இரசிகர்களை ஏமாற்று கின்ற மாயாஜாலத் திரைப்படங்களாக உருமாறி இருக்கின்றன. எனினும் உயர் ரக யுத்த திரைப்படத்திற்கான வாய்ப்பு இன்னும் எஞ்சியிருக்கின்றது.

❍ ❍ ❍

# போர்க்காலப் பிரசவங்கள்

- இயல்வாணன்



இலங்கையில் 26 ஆண்டுகள் நீடித்த சிவில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் போர்க்கால இலக்கியப் பிரசவங்கள் தொடர்பில் மீள நினைந்து கொள்வதாக இக்கட்டுரை அமையும். இந்திய-புலிகள் யுத்தம் (1987-90) தவிர்ந்த இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் நான்கு கட்டங்கள் கொண்ட ஈழப் போர் என வர்ணிக்கப்படுகிறது.

முதலாம் ஈழப்போர் என்பது 1983-87 காலப்பகுதியாகும். இது கரந்தடி அடிப்படையில் ஆரம்பித்து விரிவு பெற்று இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் முடிவுக்கு வந்தது. இரண்டாம் ஈழப் போர் என்பது 1990இல் பிரேமதாஸ அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து ஆரம்பமாகி சந்திரிக்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் காலப்பகுதி வரை நீடித்தது. அதனையடுத்து சந்திரிகா அரசாங்கத்துடன் மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமாகி சர்வதேச அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகளுடன் நிறைவுக்கு வந்தது. அதன் பின்னர் மாவிலாற்றில் ஆரம்பமான நான்காவது ஈழப்போர் முள்ளிவாய்க்காலில் நிறைவு கண்டது.

இந்த யுத்தம் ஒவ்வொரு கால கட்டத்திலும் தீவிரத்தோடு முன்னகர்ந்து ஊழிக் கூத்தாடி ஓய்வு கண்டுள்ளது. ஆயினும் போரோடும், போர் வலியோடும் மனிதர்களின் இருப்பியலைப் பேசும் இலக்கியங்கள் இந்தக் காலங்களில் நிறைய வந்து கொண்டேயிருந்தன. அவை போராட்ட அனுபவங்களாகவும், பிரச்சாரப் படைப்புக்களாகவும், போரிடை வாழ்ந்த சாதாரண மனிதர்களின் வாழ்வின் தரிசனங்களாகவும் அமைந்தன.

இரண்டாம் ஈழப்போர் என வர்ணிக்கப்படும் கால கட்டமே அதிகளவில் படைப்புக்கள் வெளிவந்த காலமாகும்.1990இல் ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்கிய இலங்கை அரசாங்கம் அங்கு சிங்கள மக்கள் மத்தியில் காணப்பட்ட எதிர்ப்பலைகளைச் சமாளிக்கும் வகையில் சிங்கள தேசியவாதத்தைத் தட்டியெழுப்பி, இந்தியப் படைகளை இலங்கையை விட்டு வெளியேறுமாறு கோரியது.மறுபுறம் விடுதலைப் புலிகள் தரப்புடன் இணைந்து தமிழ் மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தியது. இதன் விளைவாக புலிகளின் பிரதிநிதிகள் ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஜனநாயக அரசியற் கட்டமைப்பான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உருவாக்கப்பட்டதுடன் தேர்தல் திணைக்களத்தில்

ஒரு அரசியற் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.

இந்தப் பின்னணியில் அரசியற் கட்டமைப்பிற்குள் கலாசாரக் கட்டமைப் புக்கள் முனைப்பாக ஆரம்பிக்கப்பட்டன. பெருமெடுப்பில் இரண்டு முத்தமிழ் விழாக்கள் நடத்தப்பட்டன. விடுத லைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவு இதனை முன்னெடுத்தது. இது பின்னர் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமாக பெயர் மாற்றம் பெற்றது. இந்நிறுவனத்தால் வெளிச்சம் என்ற பெயரில் கலை, இலக்கிய சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. மறுபுறம் நிதர்சனம் நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்ததுடன் புலிகளின் குரல் என்ற பெயரில் பண்பலை ஒலிபரப்பையும் ஆரம்பித்தது. அத்துடன் ஏற்கனவே வந்து கொண்டிருந்த முரசொலி, உதயன், ஈழநாடு பத்திரிகைகளுக்கு மேலதிக மாக புலிகளால் ஈழநாதம் என்ற நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு கட்டமைப்பும் பத்திரிகைகள், சஞ்சிகை களை வெளியிட்டன. உத்தியோகபூர்வ ஏடாக விடுதலைப் புலிகள் வெளிவந்தது. மகளிர் பிரிவு சுதந்திரப் பறவைகளை வெளியிட்டது.பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆதாரம் என்ற சஞ்சிகையை வெளியிட்டது. பெண்கள் ஆய்வு நிறுவனம் நாற்று என்ற சஞ்சிகையை வெளியிட்டது. மாணவர்களுக்கென சாள ரம் வெளியிடப்பட்டது. கல்விப் பிரிவால் விளக்கு வெளியிடப்பட்டது. இலங்கை அரசி யல் தொடர்பான விடயங்களைக் கொண்டு வெளியீட்டுப் பிரிவு தேர்ந்த கட்டுரைகள் தொகுப்பை தொடர் நூலாக வெளியிட்டது. கூடவே உலக நடப்புக்களை அறியும் வகை யில் உலக உலா வெளியிடப்பட்டது. புலிகளின் குரல் நிறுவனத்தால் வானோசை வெளியிடப்பட்டது. அத்துடன் போர்க்களம் முதலான உள்சுற்றுக்கான போராளிகளுக்கு அறிவூட்டும் - பல வெளியீடுகளும் வந்தன.

விடுதலைப் புலிகளால் வெளி யிடப்பட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள் பெருமெடுப்பில் இலக்கியப் பிரவேசத்தை ஏற்படுத்துவதில் பெரிதும் பங்காற்றின. பல போராளிகள் படைப்பிலக்கிய களத்தில் பிரவேசித்ததுடன் புதிய வாழ்வனுபவங்களை இலக்கியத்துள் கொண்டு வந்தனர். அத்துடன் யாழ்ப் பாண மையப்பட்ட மத்தியதர வாழ்வனு பவங்களை விட வேறான களத்தில், வேறான அனுபவ தரிசனம் பெறத்தக்க படைப்புக்களை இப்பத்திரிகைகள், சஞ் சிகைகள் தமிழுக்குத் தந்தன.

இந்தக் காலகட்டம் சாதாரண மானதல்ல. 1990இல் புலிகள்-அரசாங்க நல்லுறவு முறிந்து போனது. 1990 ஜூன் 11ஆந் திகதி யுத்தம் புது வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டது. படை முகாம்கள் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த வேளையில் பெருமெடுப்பில் விமான, எறிகணைத்தாக்குதல்களும்இடம்பெற்றன. ஏக காலத்தில் அரசாங்கத்தால் பொருளாதாரத்தடையும்விதிக்கப்பட்டது. ஒரு புறம் கொடுந் தாக்குதல். மறுபுறம் பட்டினி வாழ்வு. மின்சாரமில்லை. மின் மோட்டர்கள் துலாவுக்குப் பாரத்துக்குக் கட்டப் பட்டுள்ளன எனச் சிரித்திரன் சுந்தர் எழுதியது ஞாபகத்துக்கு வருகின்றது.

இந்தப் பொருளாதாரத் தடைக்குள் பத்திரிகைத் தாள்களும், அச்சு உபகரணங் களும் அடங்கியிருந்தன. இவற்றின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்தன. பத்திரிகைகளை நிறுத்தும் அளவுக்கு இவ்விலையுயர்வும் தட்டுப்பாடும் காணப்பட்டது. நியூஸ் பிறின்ட் தாள்கள் தீர்ந்து போக வெள்ளைத்தாள்கள், வர்ண டிமைதாள்கள் பயன்படுத்தப்பட்டன.

அடுத்த கட்டத்தில் உறையிடப் பயன் படும் பிறவுண் தாள், மணிலாதாள் என்பனவும், கோடிட்ட அப்பியாசப் புத்தகத் தாள்களும் பயன்படுத்தப்பட்டன. இறுதியாக கோவை அட்டைகளும் (File cover) பயன் படுத்தப்பட்டன. பழைய காகிதங்களையும், சல்வீனியா தாவரத்தையும் பயன்படுத்தி கடதாசி தயாரிக்கும் பரிசோதனை முயற்சி களும் இடம்பெற்றன.

இத்தகைய நிலையிலும் விடுதலைப் புலிகளின் வெளியீடுகளும், தனிநபர்களின் வெளியீடுகளும் பெருமளவில் வெளிவந்து கொண்டேயிருந்தன. இலக்கியப் புத் தெழுச்சிக் காலமாக இக்காலத்தைக் குறிப்பிடலாம். ஆயினும் நமது இலக்கிய விமர்சகர்களில் பலரும் இந்தக் காலத்தைச் சரிவரப் பார்க்கவில்லை என்பதுடன் அவர்களில் பலரால் 1980களின் பின்னர் வர முடியவில்லை என்பது குறிப்பிடத்தக் கதாகும்.

இந்தக் காலகட்டத்தில் மூத்த படைப்பாளிகளில் ஒரிருவர் தவிர எல்லோருமே எழுதினர். அதேபோல இளம் படைப்பாளிகள் எழுதினர். புதிய எழுத் தாளர்கள் களத்துள் பிரவேசித்து எழுதினர். கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளிச்சம் சஞ்சிகை இதற்கு நிறையக் களம் தந்ததுடன் பல படைப்பாளிகளை உருவாக்கி நிலை நிறுத்தியது. ஈழநாதத்தின் வெள்ளிநாதம் பகுதியும் பல படைப்பாளிகள உருவாக் கியது. நிதர்சனம் நிறுவனம் மூத்த படைப்பாளிகளைக் கொண்டு சிறுகதை மற்றும் கவிதைப் பட்டறைகளை நடத்தியது. இப்பட்டறைகள் வழியே புதிய படைப்பாளிகள் உருவானார்கள். பட்டறையில் பங்குபற்றிய சொர்ணகுமார் என்ற படைப்பாளி பொருளாதாரத் தடையை வத்தாளங் கிழங்குப் பயிர்ச் செய்கையோடு ஒப்பிட்டு ஒரு சிறுகதையை எழுதியிருந்தார். வத்தாளங் கிழங்குக்கு நீரைத் தடை செய்யும் போது உத்வேகத்துடன் கிழங்கை உருவாக்கும் என்ற சாரப்பட இக்கதை அமைந்திருந்தது. ஏறக்குறைய அதேபோலத்தான் தடைகளைத் தகர்க்கும் வகையிலேயே இக்காலத்தில் படைப்புக்கள் வெளிவந்தன.

விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினாலும், அவர்களது தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினாலும் பல்வேறு வெளியீடுகள் வெளியிடப்பட்டன.தாயகம் நோக்கிய பயணம் அதில் முக்கியமானதாகும். வில்லுக்குளத்துப் பறவை, அம்மாளைக் கும்பிடுறானுகள் என்பனவும் குறிப்பிடக்கூடிய நூல்களாகும். அத்துடன் ஈழவிடுதலைப் போராட்ட அனுபவங்களைச் சொல் லும் 51 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய காலம் எழுதிய வரிகள் கவி தைத் தொகுப்பு அதன் மிகக் காத்திரமான முன்வைப்பாகும். இதனைத் தொடர்ந்து வெளிச்சம் கவிதைகள், வானம் எம் வசம், செம்மணி, ஆனையிறவு ஆகிய கவிதைத் தொகுப்புக்களும், வெளிச்சம் சிறுகதை கள், வாசல் ஒவ்வொன்றும் முதலிய சிறுகதைத் தொகுப்புக்களும் வெளிவந்தன. எழு கவிதைகள், தாயகம் 66, மல்லிகைப் பந்தல் தொகுப்புக்கள் ஆகியனவும் இக்காலத்தில் வெளிவந்தன. இவை பலரது படைப்புக்களை உள்வாங்கித் தொகுக்கப்பட்டவையாகும்.

தனிநபர் படைப்புக்கள் என்ற வகை யில் போராளிப் படைப்பாளிகளின் நூல்களும் இக்காலத்தில் வெளிவந்தன. மலரவனின் போர் உலா, கப்டன் வானதி கவிதைகள், கஸ்தூரி கவிதைகள் முக்கியமானவையாகும். அத்துடன் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, மு.வே.யோ. வாஞ்சிநாதன், வளநாடன், சுஜந்தன், மலைமகள், தமிழ்க்கவி, தூயவன் முதலானோரின் நூல்களும் குறிப்பிடத்தக்க நூல்களாகும். சுதாமதி, ஜெயா, தமிழவள்,

உதயலட்சுமி, தூயவள், சி.பாவரசன், கோளாவிலூர் கிங்ஸ்லி, அடம்பனூர் செ.திருமாறன், தூயவன், மாவேலன், இ. திருமாறன், இளந்திரையன்,அடேல் ஆன், தமிழ்க் குமரன், சி.அமுதசாகரன்,வெள்ளை எனப் பல போராளிப் படைப்பாளிகள் படைப்பிலக்கியத்துக்குப் புது வீச்சும், புது அனுபவப் பரப்பும் தந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தவிர வெளியிலும் பல சஞ்சிகைகள் பத்திரிகைகள் வெளிவந்தன. பொ. ஐங்கரநேசனால் நங்கூரம் வெளியிடப்பட்டது. இயல்வாணனையும் தி.தவபாலனையும் இணை ஆசிரியர்களாகக் கொண்டு சிட்டு சிறுவர் சஞ்சிகை வெளிவந்தது. யாதுமூரானால் மாற்றம் வெளியிடப்பட்டது. வரதர் அறிவுக் களஞ்சியத்தை வெளியிட்டார். இக்காலத்துக்கு முன்பிருந்தே வெளிவந்த தேசிய கலை இலக்கியப் பேரவையின் தாயகம், டொமினிக் ஜீவாவின் மல்லிகை, உளவள ஏடான நான், சிவஞானசுந்தரத்தால் வெளியிடப்பட்ட சிரித்திரன் ஆகியனவும் தொடர்ந்து வெளிவந்தன.அ.யேசுராசா இளங்கவிஞர்களை உருவாக்கி வளப்படுத்தும் வகையில் கவிதை சஞ்சிகையை வெளியிட்டார். திருமலை யோகேந்திரம் தேசியம் என்றொரு சஞ்சிகையை வெளியிட்டார்.

இக்காலத்தில் பல நாவல்கள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். செங்கை ஆழியான் தொடர்ந்தும் தான் முன்னர் எழுதிய நூல்களை மீள வெளியிட்டு வந்ததுடன் புதிய நாவல், சிறுகதைகளையும் கமலம் பதிப்பகத்தால் நூலாக வெளியிட்டார். தவிர சினிமாப் புத்தகங்கள் வெளியிட்டு வந்த டேவிற் லிகோரி என்பவர் போர்க்கால வாழ்வியலைப் பதிவு செய்யும் வகையில் 25ற்கும் மேற்பட்ட நூல்களைத் தனது மீரா வெளியீட்டின் மூலம் வெளியிட்டார். 1998இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வெளியீடு 1994 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வந்தது.

இதன் மூலம் செங்கை ஆழியானின் மழைக்காலம், மண்ணின் தாகம், முற்றத்து ஒற்றைப்பனை (இரண்டாம் பதிப்பு), அக்கினி ஆகிய நாவல்களும், கே.எஸ். ஆனந்தனின் ராதையின் நெஞ்சம், பூஜைக்காக வாழும் பூவை, இராவணன் கோட்டை (சிறுவர் நவீனம்) ஆகிய நாவல்களும், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் முடிவல்ல ஆரம்பம், முள்முடி மன்னர்கள், இருள் இரவில் அல்ல, மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் ஆகிய நாவல்களும் வெளியிடப்பட்டன.

அத்துடன் தாமரைச் செல்வியின் தாகம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, வேள்வித்தீ முதலிய நாவல்களும், து.வைத்திலிங்கம் எழுதிய பூம்பனி மலர்கள், இயல்வாணன் எழுதிய சுவடுகள், கே.ஆர். டேவிட் எழுதிய பாலைவனப் பயணிகள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை, ஓ.கே.குணநாதன் எழுதிய விடியலைத் தேடி, வளவை வளவன் எழுதிய சங்கரன், செம்பியன் செல்வன் எழுதிய கானகத்தின் கானம், இந்திரா பிரியதர்சினி எழுதிய நிலவே நீ மயங்காதே, முருகு எழுதிய ஊருக்கல்ல (சிறுகதைகள்), வாமதேவன் எழுதிய ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள், பொன் கணேசமூர்த்தியின் தூரம் தொடுவானம் முதலிய நூல்களும் மீரா வெளியீடாக வந்தன. மேலும் சில நூல்கள் எனது ஞாபகப் புலத்திலிருந்து விடுபட்டமையால் குறிப்பிடப்படவில்லை என்பதையும் உணர்கிறேன்.

செங்கை ஆழியான் இக்காலப்பகுதியின் சமகால விடயங்களைத் தனது நாவல்களிலும், சிறுகதைகளிலும் தந்துள்ளார். இரண்டாம் ஈழப்போர்க் காலத்து வாழ்வியலை அவரது யாழ்ப்பாண இராத்திரிகளில் தரிசிக்கலாம். இக்கால கட்டத்தில் போர்க்கால இலக்கியங்களைப்

படைத்தவர்கள் பலராவர். அது நீண்ட பட்டியல் கொண்டது.

எனினும் போராட்ட களத்தில் இருந்து இலக்கியம் படைத்தவர்களது பெயர்களை இங்கு பட்டியலிடுகிறேன்.மூத்த படைப் பாளிகளான வரதர்,சிற்பி, சு.இராஜநாயகன், வீரமணி ஐயர், நாக.பத்மநாதன், பண்டிதர் பரந்தாமன், ச.வே. பஞ்சாட்சரம், முருகையன், சோ.பத்மநாதன், கல்வயல் வே.குமாரசாமி, அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை, நந்தி, அ.யேசுராசா, தா.இராம லிங்கம், ஐ.சாந்தன், செம்பியன் செல்வன், தில்லைச்சிவன், சபா.ஜெயராசா, நெடுந் தீவு மகேஷ், நா.யோகேந்திரநாதன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், கருணாகரன், இளையவன், குப்பிளான் ஐ.சண்முகன், முல்லைமணி, பொன். கணேசமூர்த்தி, தாமரைச்செல்வி, குந்தவை, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோகிலா மகேந்திரன், மலரன்னை, ஆதிலட்சுமி சிவகுமார், வவுனியா திலீபன், சந்திராதனபாலசிங்கம், க.சட்டநாதன், கே.ஆர்.டேவிட், எஸ்.பீ. கிருஸ்ணன், தெணியான், த.கலாமணி, க.தணிகாசலம், து.வைத்திலிங்கம், ந.கிருஸ்ணசிங்கம், ஞானரதன், அலெக்ஸ் பரந்தாமன், வாசு தேவன், விவேக் ஆகியோர் இக்காலப் பகுதியிலும் போராட்டக் களநிலை சார்ந்த படைப்புக்களை எழுதியிருந்தனர்.

தி.ஞானசேகரன், செ.யோகநாதன், காசி ஆனந்தன், மு.பொன்னம்பலம், சு.வில்வரத்தினம், எஸ்.பொ., ரஞ்சகுமார், நந்தினி சேவியர், உமா வரதராஜன், அ.முத்துலிங்கம், கி.பி.அரவிந்தன் எனப் பல படைப்பாளிகள் களத்துக்கு வெளியே இருந்து களஞ் சார்ந்த உணர்வுப் புரித லோடு படைப்புக்களை எழுதியிருந்தனர்.

1980களின் இறுதிப் பகுதி யில் இருந்து எழுத ஆரம்பித்த பல படைப்பாளிகள் இரண்டாம் ஈழப் போர்க் காலத்தில் அதிகம் துலங்கினார்கள் எனலாம். நாமகள்,மைதிலி,மன்னார் ரூபி மாக்கிரட், மீசாலையூர் கமலா, தாட்சாயணி, ஜெயபாரதி, சிவானி, சாரங்கா, குமுதினி, சித்ரா நாகநாதன், இயல்வாணன், முல்லைக் கோணேஸ், முல்லைக் கமல், முல்லை யேசுதாசன், ந.சத்தியபாலன், சி.கதிர்காமநாதன், ஆ.ரவீந்திரன், இ.இராஜேஸ்கண்ணன், த.ஜெயசீலன், உடுவில் அரவிந்தன், பு.சத்தியமூர்த்தி, சந்திரபோஸ் சுதாகர், வேலணையூர் சுரேஸ், தி.உதயசூரியன், உமா ஜிப்ரான், சத்துருக்கன், பரந்தனூரான், சுதுமலை நி.அகிலன், கி.சிவஞானம், அன்பழகன், இத்தாவில் க.சிவராஜா, சு.மகேந்திரன், இ.யதார்த்தன், செ.பொ.சிவனேசு, நாக. சிவசிதம்பரம், சி.ஜெயசங்கர், பா.அகிலன், தொண்டையூர் துவாரகன், கோ.றுசாங்கன் எனப் பெருமளவானோர் இக்கால கட்டத்தில் எழுதினார்கள்.

போருக்குள்ளும், பல்வேறு தடை களுக்குள்ளும் போர்க்கால வாழ்வியலைப் பேசும் படைப்புக்கள் வெளிவந்து ஈழ இலக்கியத்துக்கு வலுச் சேர்த்த இக்காலப் பகுதி புத்தெழுச்சி மிக்க வரலாற்றுக் காலகட்டமாக விளங்கியது. இதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அளிக்கப் பட்ட ஊக்குவிப்புக்களும், பல்விதமான நெருக்கடிகள் தந்த அனுபவ அடைகாப்பும் காரணமெனலாம்.வாழ்நிலை அவலங்களும், உணர்வு எழுச்சியும் படைப்புந்தலைத் தந்ததால் பல படைப்புக்கள் இக்காலத்தில் பிரசவிக்கப்பட்டன.பொருளாதாரத்தடை யின் மத்தியிலும் பல ஊடகங்கள் தொழிற் பட்டு இப்பிரசவங்களுக்குப் பிரசித்தம் செய்தன.

அவ்வகையில் பல விமர்சகர்களாலும் கவனிக்கப்படாது விடினும் கூட போர்க் காலப் பிரசவங்கள் வித்தியாசமான வாழ் வனுபவத்தை தமிழிலக்கியத்துக்குத் தந்து அழியாது நிலைபெற்றுள்ளன எனலாம்.

**“காதம் இருபத்திநான் கொழியக் காசினியை**
**ஓதக் கடல் கொண்டொளித்ததோ மேதினியில்**
**கொல்லி மலை நாடாளும் கொற்றவா நீ முனிந்தால்**
**இல்லையோ எங்கட் கிடம்?”**

இப்பழந்தமிழ் பாடலை எதிர்ப்பு இலக்கியத்துக்கொரு நல்ல உதாரணமாகக் காட்டலாம். அரசனின் அதிகாரப் போக்குக்கு கட்டுப்படாத, தன் தனித் தன்மையையும் சுதந்திரத்தையும் பேண முனையும் தமிழ்ப்புலவன் அரசனுக்கு சவால்விட்டவாறு அரச சபையிலிருந்து வெளியேறும் கூற்றாக இந்த வெண்பாவைக் காணலாம்.

“எதிர்ப்பு இலக்கியம் என்பது மனித இனம் தோன்றிய காலந்தொட்டே அவனோடு கூட வருவது” என்கிறார் அயர் லாந்து விடுதலைப் போராட்டத்தையும் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் ஒப்புநோக்கி எழுதிய அமானி அப்துல் ஃபாடிஃபராக்(Amany Abdul Fadi Farag). அவர் மேலும் கூறு கையில் வார்த்தைகள் என்பவை மனித னோடு தோன்றி யவை. ஆதனால் இலக்கியம் அவனது ஆயுதங்களில் ஒன்றா கும் மேன்மையைப் பெறுகின்றன என்கி றார்.

எங்கு அடக்குமுறை நிலவுகிறதோ அதைத் தகர்த்தெறியும் ஆயுதமாக முதலில் எதிர்ப்பு இலக்கியமே வெளிப்படுகிறது. பிரஞ்சு புரட்சி வெடிப்பதற்கு முன்னர் றூசோ, வோல்ட் டயர், மொன்ரெஸ்கியூ ஆகியோர் எழுதிய தெல்லாம் பிரஞ்சு அரச னுக்கும் பிரபுக்களுக்கும் எதிரான எதிர்ப்பு இலக்கியங்களே. மேற்காட்டியோர் தம் எதிர்ப்பு இலக்கியங்களை கட்டுரைகளாக, தத்துவ விசாரணைகளாக வைத்தனர். ஆனால் 1968ல் நிகழ்ந்த மாணவர்கள் தலைமை தாங்கிய இரண்டாவது பிரஞ்சுப் புரட்சியின்போது வெடித்துக் கிளம்பிய எதிர்ப்பிலக்கியம் கட்டுரைகளோ கவிதை களோ அல்ல; மாறாக மார்சியத்தையே தலை கீழாக்கும் சுலோகங்கள், ஹேபர்ட் மாக்கியூஸிக்கு ஆதரவளித்த சுலோகங்கள். இதோ அவற்றில் இரண்டு சுலோகங்கள் பின்வருமாறு:

முதலாவது, பொருளாதாரப் பண்டங் களே மக்களின் அபின் (Commodities are the opium of the people)

இரண்டாவது, அறிஞன் சந்திரனைச் சுட்டிக் காட்டும்போது முட்டாள் அவன் விரலைத்தான் பார்க்கிறான். (When the wise man points the moon the fool looks at the finger)

எங்கு சர்வாதிகாரமும் அதற்காதரவான ஒற்றர்களும் அதிகமாகக் காணப்படுகிறதோ அங்கே எதிர்ப்பிலக்கியத்தைக்காவும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவரு வது முடியாது போகும். அந்நிலையில்,




எதிர்ப்படும் மதிற்சுவர்கள், தெருக்கள் அகப்படும் பொருட்களிலெல்லாம் கரித் துண்டுகளாலும் செங்கட்டிகளாலும் எழுதப்படும் வாசகங்கள் எல்லாம் எதிர்ப்பு இலக்கியங்கள் ஆகின்றன! சிலவேளை கூடார்ந்த சித்திரங்களும் எதிர்ப்பு இலக்கியங்கள் ஆகின்றன. பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் சிறை யில் தள்ளப்பட்டபோது, அவர்கள் தமது உணர்வுகளை சிறைச்சாலை சுவர்களில் கூடார்த்தச் சித்திரங்களாகவும், கவிதைச் சுலோகங்களாகவும் வடித்தனர்.

இவ்வாறு தென்னமரிக்காவில் கறுப் பினமக்களின் அடக்கு முறைக்கு எதிராக வெளிவந்த UNCLE TOM'S CABIN அமெரிக்க எதிர்ப்பு இலக்கியங்களின் முன்னோடி எனலாம்.

நைஜீரியா சுதந்திரம் பெறுவதற்கு இரண்டு வருடங்கள் முன்னதாக வெளிவந்த *(1958)* W.B YEATS ன் THINGS FALL APART என்ற கவிதைவரியைத் தலைப்பாகக் கொண்டு எழுதப்பட்ட சீனுவா அச்சுபே யின் நாவல் எதிர்ப்பு இலக்கிய வகை யில் தனியானது. ஆபிரிக்க மக்களின் சடங்குகள், நம்பிக்கைகள் என்பவற்றோடு அவர்கள் தம்மை அடிமைப்படுத்திய காலனித்துவதற்கெதிராக போராடியவை மிக உயிர்ப்புடன் இதில் வெளிக்கொண்டு வரப்படுகிறது.

சிலி நாட்டின் அலண்டேக்கு முன்னரும் பின்னரும் நடந்த வார்த்தைக்கடங்காத துன்பங்களை வெளிக்கொணர்பவையாக ஏரியல்டோர்ஃமன் எழுதிய DEATH AND THE MAIDEN மற்றும் Empires Old Clothes நிற்கின்றன.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது சிறந்த எதிர்ப்பிலக்கியங்களை வெளியிட்டவர்களில் ஒருவராகப் பாரதி நிற்கின்றார்.

**" வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்**
**வேறொன்று கொள்வாரோ**
**ஆரமுது ண்னுதற் காசை கொண்டார்கள்ளில்**
**அறிவைச் செலுத்து வாரோ?"**

என்னும் வரிகளே இதைப் புலப் படுத்தும்

ஈழத்தில் தமிழர் தம் உரிமைப் போராட்டத்தை முன்வைத்து "சங்கிலி" மற்றும் "துரோகி" ஆகிய நாடகங்களைத் தந்த எதிர்ப்பிலக்கிய முன்னோடியாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நிற்கிறார். இத்தோடு அவர் எழுதிய 'இலங்கை வாழ் தமிழர் வரலாறு' என்னும் வரலாற்று நூலும் அத்தகையதே. இதன் 'விடுதலைப் போராட்டம்' என்ற கடைசி அத்தியாயம் பின்வருமாறு பேசுகிறது. "மதித்தற்கரிய மாணிக்கமாகிய சுதந்திரச் செல்வத்தை இழந்து விட்டோமே என்ற கவலை மக்களை வாட்டியது., விடுதலைவேட்கை பொங்கி எழுந்தது. பிறன்கைபட்ட ஈராண்டுக்கிடையில் ஆறுமுறை புரட்சி வெள்ளம் கான்யாறு புரண்டோடியது. இதனைப் போத்துக்கீச வரலாற்று ஆசிரி யரே கூறிப்போவார்."

இவர் ஐம்பதுகளில் எழுதிய இந் நூல்களுக்குப்பின்னர் அறுபதுகளில் மு. தளையசிங்கம் எழுதிய 'ஒரு தனிவீடு முக்கியமானது. இவ்வாறான இன ஒடுக்கு முறைக்கு எதிராக முற்போக்கு எழுத்தாளர் எவரும் எதையும் தரவில்லை. அவர்கள் சாதீய அடக்கு முறைக்கு எதிரான எதிர்ப்பு இலக்கியங்களை மட்டுமே தந்துள்ளனர். ஆனால் இந்த முற்போக்கணியின் பிதா மகர்களில் ஒருவராக இயங்கிய பேராசிரி யர் சிவத்தம்பி எழுதிய 'நான் தமிழனாகவும் இலங்கையனாகவும் இருக்கிறேன்' என்ற நூல் இவற்றுக்கு ஈடு செய்வதாக நிற்கிறது.

இவ்வாறு பலஸ்தீன மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் போலவே ஈழத்திலும், தமிழ் மக்கள் தம் உரிமை களுக்காக போராடினர். அவர்கள் இலங்கை அரசுக்கெதிராக மேற்கொண்ட போராட்டங்கள். அரசுக்கெதிரான எதிர்ப் பிலக்கியங்களையும் வெளிக் கொணர்ந்தன. இதோ அதற்குதாரணமாக:

**புதிய சப்பாத்தின் கீழ்**

**சமாந்திரமாய்ச் செல்லும்**
**கரிய தார்றோட்டில்**
**நடந்து செல்கிறேன்**
**கண்களில்,**
**பிரமாண்டமாய் நிலைகொண்டு**
**கறுத் திருண்ட**
**டச்சுக் கற் கோட்டை**
**மூலையில்,**
**முன்னோரைப் பயமுறுத்திய**
**தூக்குமரமும் தெளிவாய்**

**பரந்த புற்றரை வெளியில்**
**துவக்குகள் தாங்கிய**
**காக்கி வீரர்கள்.**
**அரசு யந்திரத்தின்**
**காவற் கருவி**
**என்றும் தயாராய்**
**வினைத்திறண் பேண**
**அவர், அணிநடை பயின்றனர்**
**சூழ்ந்த காற்றிலும்**
**அச்சம் பரவும்**

**முன்னூறு ஆண்டுகள் கழிந்தனவாகியும்**
**நிறந்தான் மாறியது**
**மொழிதான் மாறியது,**
**நாங்கள் இன்றும்,**
**அடக்குமுறையின் கீழ்..**

**திடீரெனத் துவக்குச்சத்தம் கேட்கும்**
**சப்பாத்துக்கள் விரையும் ஓசையும் கேட்கும்**
**தெருவில் செத்து நீ**
**விழ்ந்து கிடப்பாய்..**

– அ. யேசுராசா

### மீண்டும் வாழ்தல்

**எனது தேசம்**
**கண்கள் பிடுங்கப்பட்டுக்**
**காட்டில் அலைக் கழிக்கப்பட்டாலும்**
**இன்னமும் உயிர்த்தெழுதல் பற்றி**
**நம்பிக்கை கொண்டிருக்கிறது**
**உன்னைப் போலவே மீண்டும்**
**பிறத்தலில்**
**மண்ணோடிணைதலில்**
**நம்பிக்கையோடுள்ளேன்**

-இளவாலை விஜயேந்திரன்.

பலஸ்தீன மக்கள் மேற்கொண்ட போராட்டம் போலவே தமிழ் பேசும் மக்களின் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் தமிழ் மக்களோடு தோள் போட்டு நின்ற முஸ்லிம் தமிழ் பேசும் மக்கள், தமிழ் மக்களை தம்மை நசுக்கும் இன்னொரு பேரினவாதிகளாகக் கொண்டு அவர்களுக்கு எதிராகப் போராடக் கிளர்ந்தெழுந்தனர். 'முஸ்லிம் தேசம்' என்றொரு கோட்பாட்டை முன்வைத்துப் போராடவும் முன் வந்தனர்.

இதற்கு உடனடிக்காரணம் தமிழ் இயக்கத்தவர்கள் முஸ்லிம்களை, கொன்றமையும் வதைத்தமையுமே. முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக முன்வைத்த, எதிர்ப்பிலக்கியத்துக்கு உதாரணமாக ஏ.ஜி.எம். சதக்காவினால் எழுதப்பட்ட "அன்பின் கண்ணம்மாவுக்கு" என்ற கவிதை இதோ:

**இறப்புகளுக்காக ஏற்படுத்தப்பட்ட**
**போராட்டம் என்கிற பதிவுகளில்**
**'கல்குடா ரயில் மறிப்பு'**
**நினைவு இருக்கிறதா கண்ணம்மா?**

**இரயில் வண்டியில்**
**இனச்சங்காரம் கொடி பிடித்த நாள்!**

**முஸ்லிமை மட்டும்**
**அடையாளங் கண்ட ஆயுதங்கள்**
**அன்று**
**நிசப்தத்தைக் கண்ட நீசர்கள்**
**எமது பெண்டிர் நெற்றியில்**
**குருதியால் பொட்டிட்டனர் கண்ணம்மா**
**நீதான்**
**எவ்வளவு ஆவேசப்பட்டாய்**

**எகிறிப் பறந்தனர் மனிதர்**
**தலை பணிந்து அடிமையாய்**
**தொலைந்தனர் மனிதர்**
**குழந்தைகளாய்..**
**குருதியில் குளித்தனர் மனிதர்**

**வெம்பி மணலில் கால்புதைய**
**நெருஞ்சி முள் கிழித்துக்**
**குருதி கொப்பளிக்க**
**மூன்று மைல் மூச்சுப்பிடித்து**
**ஓடிவந்துன் வாசலிலே வீழ்ந்தேனே..**

மயங்குகிற மாலை
தடதடவென்று சப்பாத்துக்கால்கள்
வாழ்வின் நம்பிக்கைகள்
கருகிப்போகிற கணப்பொழுதுகளில்

"ஒரு சோனி வந்தவனே"
அதட்டின குரல்கள்
எனை மறைத்து
சாவகாசமாய்
"இல்லையண்ணே " என்று சொல்ல
எப்படியம்மா வந்தது துணிவு?

எனக்கே நம்பிக்கையில்லாத
இப்பிரதேசத்தை
'நமது தேசம்' என்று
நம்பிக்கையூட்டியவளே!

இரத்தம் சொட்டச் சொட்ட
நான் ஓடிவந்த பாதையை
வெறித்து
'நீயும் என் ரத்தம்தான்' என்றாயே

கலவரமூட்டும் காலைப் பொழுது
இறுகப் பற்றிய என்கையை
ராணுவ முகாமில் விடுவித்தாய்

அவர்கள் அதிர்ந்தனர்
கண்ணீரால் கைகூப்பினேன் நான்
விடைபெற்று நீயும் தூரே செல்ல
இரு புள்ளிகளாய் யாரோ
உன்னை நெருங்கினரே

அப்புறம் என்ன நடந்தது கண்ணம்மா
மனிதத்தைப் பூஜிப்பதே
பாவ (காரிய)மான உலகில்
உனக்கு என்ன நிகழ்ந்தது
நானறியேன் அறிய ஆவலாயுள்ளேன்.
காற்றின் முகத்தில் கண்ணம்மா
ஒரு கடுதாசி எழுதிவிடு

நான் காத்திருக்கிறேன்!

## II

எதிர்ப்பு இலக்கியம் என்ற (Resistance Literature) இந்த வார்த்தையை முதன் முறையாகப் பயன்படுத்தியவர் யார்? நான் அறிந்தளவில், பார்பரா ஹார்லோ (Barbara Harlow) என்பவர் Resistance Literature என்ற நூலை மிக விரிந்த பார்வையில் எழுதியுள்ளார். இந்நூலில் அவர் கஸான் கனாஃபனி (Ghassan Kanafani) என்னும் பலஸ்தீன விமர்சகர் - எழுத்தாளர் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ் விமர்சகரும், எழுத்தாளருமான கஸான் கனாஃனியே 'ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் எதிர்ப்பு இலக்கியம்' (Literature of Resistance in Occupied Palestine) என்ற நூலில் முதன்முதலாகப் பாவித்திருப்பதாகக் குறிப் பிடுகிறார்.

எதிர்ப்பு இலக்கியம் என்பது எல்லா ஆயுதங்களையும் விடப் பலமானது. அதையிட்டு ஆட்சியிலிருப்பவர்கள் பயந்தனர். இவ்வகை இலக்கியமானது, கைக்குக்கை மாறி மிக வேகமாக மக்களைத் தொட்டு அணி திரட்டக் கூடியதாய் மாறு கிறது. முன்னர் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த மொஷேடயான், ஒருமுறை மேற்குக் கரையில் நடந்த இஸ்ரேலியப் பெண்களின் எதிர்ப்புப் போராட்டம் பற்றி ஃபட்வா ரௌகுவான் (Fadwa Tuquan) எழுதிய கவிதையைப் படித்தபோது, பின்வருமாறு கூறினான். "இந்தக் கவிதையானது பத்து கொமாண் டோக்களுக்கு சமமானது" அத்தகைய சக்திமிக்கது எதிர்ப்பிலக்கியம்.

தமிழில் "எதிர்ப்பு இலக்கியமும் எசமானர்களும்" என்ற தலைப்பில் பேராசிரியர் சிவசேகரம் எழுதிய நூ லைப் படிப்பதன் மூலம் வேறு சில பார்வைகளையும் நீங்கள் தரிசிக்கலாம்.

❍ ❍ ❍

# கேட்டாயா காற்றே...

சாருமதி

கேட்டாயா காற்றே
இவள்
கேள்வியின் வெஞ்சினத்தை

“என்னடா பொடிகள்
இன்னுமா நீங்கள்
சாகப் பயந்தீர்
பிள்ளைகள் என்றால்
இனிக் ......”

துள்ளிய கோபத் துயரால் பொறிந்தகிழவி
தன்னையும் மீறிய தைரிய ஒலியில்
சொல்லிய சொல்லின் சூடு போக
எச்சிலைக் காறி துப்பினாள் எதிரே.

குவித்த மணல்
குப்பையாய் இருந்த என் நினைவுத்திடலின்
கூனல் கரைந்தது – அவள்
காறிய எச்சியில்.

பாட்டியாகிப் பல் விழுந்து
பாடையேறக் காத்திருந்தாலும்
சீற்றம் மட்டும் இவளிடம்
சிறிதும் இளமை குன்றா நிலையில்...
கேட்டாயா காற்றே
இவள்
கேள்வியின் வெஞ்சினத்தை
நேற்று ஒரு நேரம்
நிலவு சூரியனை வென்ற பொழுதில்
இராட்சசர் வந்திறங்கினார்
அந்த
இரவின் அமைதி குலைந்து போக

அமைதி இழந்த இரவின் ஓலம்.....
அங்கும் இங்கும் அவர்கள் ஓடினர்.

இரும்புத் தொப்பி உயர்த்திய துவக்கு
அவர்க்கும் நெஞ்சில் அச்ச இடிகள்.....
அவர்கள் ஒவ்வொரு வீடும் புகுந்தனர்.

அறியா மொழியில் ஆணவக் கேள்விகள்
அடியும் உதையும் உண்டன கிராமம்.

சில மணிநேரம் சில மணிநேரம்
பலதும் மறைய பதைத்த நெஞ்சம்.
எங்கே அவர்கள்?
எங்கே அவர்கள்?
எல்லோரிடமும் இதையே கேட்டனர்
எல்லாப் பதில்களும் ஒன்றையே மொழிந்தன
நாங்கள் அறியோம்! நாங்கள் அறியோம்!

சொந்த வீடே சிறையாய் மாற
வந்து இறங்கியோர்
மீண்டனர் – மறுகால்
எங்கும் அமைதி இயலாமையின் வெறுமை
முந்திய பகலில் எம்முடன் இருந்தோர்
இந்த இரவில் இல்லாது போயினர்.

இரும்பு எருமைகள் உறுமி மறைந்தன.
இயம தூதர்கள்
திரும்பவும் வரலாம்.

வில்லுக் குளத்தின் வெளியை வெறித்து
சொல்ல முடியா சோகமும் தாபமும்
எள்ளுள் உறையும் எண்ணெயைப் போலே
என்னுள் ஊறித் தளம்பிக் கொதிக்க
அள்ளிக் குவித்த மணல் போல் நான்
அந்தப் படியில் அமர்ந்து இருந்தேன்.

# தொன்மச் சிதைவும் கலையாக்க அரசியலும்

## போர்க்கால சிறுகதைகள் மீதான வாசிப்பு

எம்.எம்.ஜெயசீலன்
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தொன்மங்களைக் கையாண்டு படைப்பாக்கங்களை மேற்கொள்வது பண்டுதொட்டு எல்லாச் சமூகங்களிலும் நிலவிவருகிறது. குறிப்பாக ஒவ்வொரு மனிதனதும் வாழ்வியலோடு தொன்மங்கள் கலந்துள்ளதால் உயிர்ப்புடன் இயங்கும் எந்தப் படைப்பாளியும் அவற்றினின்றும் நீங்கியிருக்கவோ அவற்றைப்புறந்தள்ளவோ முடியாது. மொழி போன்றதொரு முக்கியத்துவம் தொன்மத்திற்கும் உரியது. 'தொன்மமும் ஒரு மொழி. வாழ்க்கை அனுபவங்களைக் குறியீடுகளால் பேசுவது தொன்மம். இத்தகைய குறியீடுகள் இல்லாமல் மக்கள் நடுவில் மொழித்தொடர்பு என்பது இன்றும் இல்லை. சமூகப்பிரக்ஞையை உருவாக்கும் மொழியாகவேதொன்மங்கள்விளங்குகின்றன. எனவேதான் உலகத்தில் எந்தப் படைப்பாளியும் இத்தொன்மங்களிலிருந்து படைப்புத்தளத்தில் மட்டுமாவது விடுபட முடிவதில்லை' (பஞ்சாங்கம்,க, தொன்மத்திறனாய்வு, பக். 118 - 119)

**தொன்மம் – கலை – அரசியல்**

மனித சமூகத்தின் ஆதிக் கலைக் கண்டுபிடிப்பாக நாம் தொன்மங்களினைக் கருதமுடியும். பொதுவாக தொன்மம் (Myth) என்பதற்கு, 'பழங்காலத்திற்குரிய புனைகதை, குறிப்பாக கடவுள்கள் மற்றும் துணிவாற்றல் உடையவர்கள் பற்றிய கதை: புராணக்கதை: இக்கதைகள் இயற்கை அல்லது வரலாற்று நிகழ்வுகளை விவரிக்கின்றன' (oxford ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி ) என விளக்கம் தரப்படுகின்றது. எனவே, தொன்மங்கள் கட்டியெழுப்பும் கலாசாரமும் கலாசாரம் பேணும் தொன்மங்களும் அவற்றினின்றும் மேலெழும் இலக்கியத்தினதும் இலக்கிய நிலையினதும் முக்கிய ஆக்கக்கூறுகளாக அமைகின்றன.

படைப்பாளியைப் பொறுத்தவரையில் அவனது படைப்பு மனோநிலையில், சமகால சித்திரிப்புக்கான பார்வையில் தொன்மம் நெருக்கமானதாக உள்ளது. இதற்குக் காரணம் படைப்பாளி, வாசகன் ஆகிய இருசாராரும் யாரும் அறிவிக்காமலே அறிந்து, உணர்ந்து, அனுபவமாக்கி வைத்துள்ள தொன்மங்களே எனலாம். ஏற்கனவே சமூக பண்பாட்டு மதிப்பும் வலுவும் பெற்றதுமான தொன்மங்கள் சுதேச பண்பாட்டுக்கு ஏற்படும் பண்பாட்டுக் கலக்கநிலையிலும் சுதேசிகளின் விதேசிகளிற்கான எதிர்ப்புநிலையிலும் பெரும் கலாசார ஆயுதமாக



விளங்குகின்றன. கலையாக்க நிலையில் தொன்மங்களும் தொன்மக்கூறுகளும் படைப்பாளியின் நோக்கம், சமூகப்பார்வை, கருத்துநிலை மற்றும் அழகியல் உணர்வு முதலியவற்றிற்கு ஏற்ப வெவ்வேறு விதங்களில் கலையாக்கம் பெறுகின்றன. சமூக மனத்தில் காலத்தேவைக்கு ஒட்டாது உறைநிலை அடைகின்ற தொன்மங்கள் சமூக அரசியல் வரலாற்று நிர்ப்பந்தங்களால் உயிர்நிலை பெற்று மீளவும் படைப் பாக்கங்களில் மேலெழுவதுமுண்டு.

காலந்தோறும் கையளிக்கப்பட்டுவரும் தொன்மங்கள் யாவுமே வடிவநிலையிலும் பொருள்நிலையிலும் இலக்கியத்தன்மையை ஒத்துள்ளன. பல தொன்மங்கள் நாட்டார் நிலையிலும் செந்நெறிநிலையிலும் கூட உயர்ந்த இலக்கியப்படைப்புகளாக விளங்குகின்றன. தொன்மங்களிலிருந்து கலையாக்கத்தினை மேற்கொள்பவர் தொன்மங்களினை முழுமையாகவோ அல்லது குறித்ததொரு தொன்மத்தின் சில கூறுகளையோ அல்லது இரு வேறுபட்ட தொன்மங்களினை இணைப்பதன் மூலமோ படைப்பாக்கச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். ஆனால், தொன்மத்தைப் படைப்பாக்கும் எந்தவொரு செயற் பாட்டிலும் தொன்மத்தின் கூறுகள் சிதைக்கப்படுகின்றன. இது படைப்பாளியின் ஆக்கத்திறன் சார்ந்து நிகழும் புதுமையாக்கம் எனலாம். அதாவது தொன்மம் மூலத்தொன்மத்திற்குரிய பரிசுத்த அல்லது தூய நிலையுடன் கலையாக்கம் பெறுவதில்லை. காலத் தேவை தொன்மத்தைச் சிதைத்து, சிதைப்பின் அழகியலாகத் தொன்மப் படைப்பு உருப்பெறுகின்றது. அத்தகைய படைப்பே காலத்தையும் மீறிவாழும் காலையாக்கமாகவும் நிலைபெறுகிறது.

சமூக அரசியல் வரலாற்று இயக்கங்கள் படைப்பின் போக்கினைக் காலந்தோறும் மாற்றிவந்துள்ளதை வரலாறு காட்டி நிற்கின்றது. அந்தவகையில் தொன்மங்கள் நிறுவன இயங்கியல் தன்மைசார்ந்து கலையாக்கம் பெறுவது காலந்தோறும் நிகழ்வதொன்று எனலாம். உதாரணமாக திராவிட சமூக அரசியல் இயக்கநிலைநின்ற படைப்பாளிகள் இதிகாச புராணக் கதைகளில் பொதிந்துள்ள தொன்மங்களை ஆரியத்தின் அதிகார மேலாதிக்கமாகவும் திராவிட எதிர்ப்புநிலையாகவும் வாசிக்க முற்பட்டதைக் குறிப்பிடலாம். இதை அவர்களது பல படைப்புகள் காட்டிநிற்கின்றன. இத்தகையதொரு பின்னணியில் ஈழத்தின் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் சமூக அரசியல் பண்பாட்டு சூழமைவுகளுக்கேற்ப தொன்மங்கள் கலையாக்கம் பெறு மாற்றினை சிறுகதைகளை மையப்படுத்தி ஆராய இக்கட்டுரை முனைகிறது.

ஈழத்துப் போர்க்கால சிறு கதைகளில் தொன்மம் கலையாக்கம் பெறுவதற்கானசமூகஅரசியல்பண்பாட்டுச் சூழல்

ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருமாறியதுடன் நாடு முழுவதும் அச்சம் நிறைந்த அரசியல் பண்பாடொன்றுபடரத்தொடங்கியது. இவ் அச்ச அரசியல், இனங்களுக்கிடையேயான விரிசல்களை அதிகரித்ததோடு இனங்களுக் குள்ளேயும் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. அதிகாரத்திற்கான போட்டி, தணிக்கைகளையும் பிரதான ஆயுதமாகக் கைக்கொண்டது. குறிப்பாக பேரினவாதத்தின் அடக்குமுறை, விடுதலை இயக்கங்களுக்கிடையேயான அதிகாரப் போட்டி, இந்திய அமைதிகாக்கும் படையினரின் அட்டூழியங்கள் போன்றன எதையும் வெளிப்படையாகப் பேசு வதற்குரிய சுதந்திரத்தை வழங்கவில்லை. சமாதான உடன்படிக்கை என்ற போலி

ஒப்பனையில் அரசியல் இலாப வேட்டையில் இறங்கிய சர்வதேச அரசுகளும் அதற்குத் துணைநின்ற ஆதிக்க சக்திகளும் இவ் அச்சம் நிறைந்த அரசியல் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேண திரைமறைவில் துணைநின்றன. இத்தகைய ஆதிக்க அரசியலின் நிலைப்பேற்றுகைக்காய் ஊடக சுதந்திரம் பல்வேறு தணிக்கைகளுக்கு உட்பட்டதுடன் அத்தணிக்கை அரசியலை மீறியோரின் இருப்பும் ஐயத்திற்கிடமானதாகவே தொடர்ந்தது. இந்நிலையில்தான் ஈழத்துப் படைப்பாளிகள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும் வலுவான ஆயுதமாக தொன்மங்களையும் தொன்மக்கூறுகளையும் கைக்கொண்டனர். கலையாக்கத்தில் சமகால அரசியலைத் தாங்கிவரும் குறியீடுகளாகவும் அவ்வரசியலை கேள்விக்குள்ளாக்கும் சாதனமாகவும் தொன்மங்கள் பயன்படுத்தப் பட்டன.

**தொன்மம் கலையாவதற்கான அடிப்படைச் செயற்பாடுகள்**

தொன்மங்கள் நவீன கலையாவதற்குரிய அடிப்படைச் செயற்பாடுகளாக பிரதானமாக மூன்று அம்சங்களை லில்லியன் பெடர் (Lillian feder) முன்மொழிகிறார்.

I. புராண எடுத்துரைப்புக்களானவை கதைநெறி மற்றும் பாத்திர உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன.
II. நடைமுறையில் உள்ள பாத்திரங்கள் மற்றும் அவைகளின் செயற்பாடுகளுக்கு அடியில் இவை மூழ்கியிருக்கின்றன.
III. புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்ற தொன்மங்களின் அமைப்புகள் மரபுரீதியான தொன்மங்களுடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. (Feder, Lillian, Myths, poetry and critical theory, p. 53)

இந்த அடிப்படையில் ஈழத்துப் போர்க்கால சிறுகதைகளில் 'தொன்மச் சிதைவும் கலையாக்கத்தின் அரசியலும்' எவ்வாறு நடைபெற்றுள்ளன என்பதைச் சில சிறுகதைகளை மையமாகக் கொண்டு ஆராயலாம்.

**ஈழத்துப் போர்க்காலச் சிறுகதைகளில் தொன்மம் கலையாதல்**

ஈழத்துப் போர்க்காலத் தமிழ்ப் படைப்பாக்கங்களில் தொன்மங்களையும் தொன்மக் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு பல சிறுகதைகள் தோற்றம் பெற்றுள்ளன. என்றாலும் கட்டுரையின் சுருக்கம் கருதி, ஈழத்தின் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டக் காலத்தில் மாறிவந்த அரசியல், பண்பாட்டுச் சூழலின் பிரதான போக்குகளை மையப்படுத்தி, கோசலை (ரஞ்சகுமார்), கோளறுபதிகம் (ரஞ்சகுமார்), அசோகவனம் (சாந்தன்), தேவர்கள் (சிதம்பர திருச்செந்திநாதன்), கழுகுகளும்வெண்புறாக்களும்(இராகவன்), பரசுராமபூமி (மைக்கல் கொலின்) ஆகிய கதைகள் ஆய்வின் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**கதை 01 : கோசலை (ரஞ்சகுமார்)**

ஆய்வுத் தேவைக்கேற்ப கோசலை தொடர்பான தொன்மக்கதையின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாக வரையறுத்துக்கொள்ளலாம்.

**கோசலை என்ற தொன்மம் பற்றிய சுருக்கம்**

இராமனது தாயான கோசலை, இராமனது வனவாசத்தாலும் கணவனது இறப்பினாலும் பிரிவுத் துயரில் வாடுபவளாகவும் வனம்சென்ற இராமனின்

வருகையை எதிர்பார்த்து ஆற்றொணாத் துயரத்தில் வாழ்பவளாகவும் காட்டப் படுகிறாள்.

**கதை 01 : தொன்மத்தைக் கலையாக்கல்**

ஈழவிடுதலைப் போராட்டம் குடும்ப அலகில் ஏற்படுத்திய அதிர்வுகளையும் அதனால் உறவுகளுக்கிடையே நிகழ்ந்த மனப்போராட்டங் களையும் சாதாரண குடும்பம் ஒன்றின் நிகழ்ச்சிகளுடே யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கும் ரஞ்சகுமாரின் கோசலை ஈழவிடுதலைப் போராளிகள் ஒவ்வொருவரையும் இராமனாக்கி அவர்களது தாய்மார்களைக் கோசலையாகக் காட்ட முனைகிறது.

கதையின்படி கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாய் ஒருத்தியின் இளைய மகன் சீலன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடுகிறான். மகனின் பிரிவுத்துயரினால் வாடி, அவனது நலத்திற்காய் பிரார்த்தித்துக் கொண்டு, அவனது வருகையை எதிர்ப்பார்த்திருக்கும் அத்தாய்க்கு கதையில் நேரடியான எந்தப் பெயரும் இடம்பெறவில்லை. ஆனால், கோசலை என்ற பெயரைக் கதாசிரியர் இறுதிப்பகுதியில் வழங்குகிறார். அதாவது கதையின் இறுதிப் பகுதியில் விடுதலை இயக்கத்துடன் சங்கமமான சீலன், இராமனைப் போலவே காட்டிலிருந்து தென்னிலங்கையில் மமதை கொண்டவர்களுடன் போராடுகிறான் எனக்கூறி சீலனை இராமனோடு ஒப்பிட்டு இராமனின் தாயை சீலனின் தாயாக்குகின்றார், ஆசிரியர்.

*‘சீலன் புனர்பூச நட்சத்திரம்! ராமன் கூட புனர்பூச நட்சத்திரம்!!*

*அவனும் காடுகளில் வசிக்க நேர்ந்தது.*

*கடலைக் கடக்க நேர்ந்தது.*

*அதமர்களுடன் நெடுகலும் போரிட்டுக்கொள்ள நேர்ந்தது.*

*வெல்ல முடியாது என்ற இறுமாப்பில் தென்னிலங்கையில் மமதை கொண்டிருந்தவர்களை அவனும் வென்றான்!*

*சாபத்தால் பீடிக்கப்பட்டோருக்கு அவனும் விமோசனமளித்தான்.*

*அவனும் பேதங்களைக் கடந்தவன்.*

*குரங்கும் வேடனும் அவனது தோழர்கள்*

*ஓ ஆயினும் ராமன் பேரில் அன்பு கொண்டவர்கள் அவன் பிரிவால் துன்புறநேர்ந்தது.*

*தசரதன்!... கோசலை!.... சீதை!”* (கோசலை)

என சீலனை இராமனோடு ஒப்பிட்டு இராமனின் பிரிவினால் துன்புறும் கோசலையாக சீலனின் தாயைக் காட்டுவதன் மூலம் ஈழவிடுதலைப் போராளிகள் ஒவ்வொருவரையும் இராமனாகவும் அவர்களது பிரிவுத் துயரினால் வாடும் தாய்மார்கள் அனைவரையும் கோசலையாகவும் பிரதிமை செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

எனவே, இராமாயணத்தில் இடம் பெறும் இராமனின் வனவாசம், அவ்வனவாசம் கோசலைக்குத் தந்த துயர் ஆகிய தொன்மச் சம்பவங்களை சமகால சமூக அமைப்பிற்கு ஏற்ப நவீன சமூக மதிப்பீடுகளின் அடிப்படையில் மறுவுருவாக்கம் செய்துள்ளதோடு அத்தொன்மப் பாத்திரங்கள் சாமான்ய மனிதர்களாகப் படைக்கப்பட்டுள்ளதையும் இக்கதையில் காணலாம்.

**கதை 02 : கோளறுபதிகம் (ரஞ்சகுமார்)**

கோளறுபதிகம் சம்பந்தரின் பதிகங்களில் ஒன்றாகும். இப்பதிகத்தின் தொன்மக்கதையினை பின்வருமாறு சுருக்கமாக குறித்துக்கொள்ளலாம்.

# மரண நனவுகள்

விளக்கைக் கொளுத்தக் கொளுத்த
விடாமல் சுழட்டி அடிக்குது
காற்றும் நெடுக.
விளக்கிலோ எண்ணெயிலை
ஊடுபத்திப் பத்தித் திரியும் கருகக்
காத்தும் அடிக்குது
எரியும் சுடர் ஆடி நடுங்கிச் சுழலுது.

படுகொலைப் புதராய் வடக்கும் கிழக்கும்
அடக்கு முறைக்கீழ், துவக்குப் பட்டுப்
புனிதம் பூக்கும் துடக்குப் பட்டு
மனிதம் புதிய பதிவில் எழும்பும்.

'செல்' விழுந்து சீவன் நெடுக சில சாகும்
கொல்லவிட்ட சண்டாளர் கூட்டம்
புறப்பட்டு சல்லடைபோட்டுத்
தவிச்சமுயல் அடிக்கும்
கல்வீடு கொட்டில் எரியும் சரியும்
எல்லாம் தரைமட்டமாகித்
தரை தட்டும்.

'பொம்பர்' கரணம் அடிச்சுவிட்ட
குண்டுபட்டுச் சம்பலாய்ப் போன
உயிர்க் கதைகள் கேட்டுமனம் வெம்பி
கலங்கி அழுது விழி பிதுங்கும்
நம்பிக்கை வேர் பாறிக் கொப்போடு
அடிசரியும்
குஞ்சுகள் பிஞ்சு குடல் சிதறக்
கண்டு பொறி நெஞ்சில் எழும்பி
நெருப்புத் துயர் கிளம்பும்.

மரண வலய வாசல் படிகள்
படுகொலைக் களமாய் அடிக்கடி
சடுதியில் மாறிச் சந்நதம் கொள்ளும்.

சோக சித்திரம் முகிழ்க்கும் சுவர்கள்
சுவர்கள் எழுப்பும் சுதந்திர வேகம்
அவதிப் படுகிற புதிய உணர்வுகள்.

அளப்பி மழுப்பி அதட்டி
அடக்கிக் கிளம்ப விடாமல்
சுதந்திரமூச்சைப்
பயங்கரவாதிகள் போர்வையுள் மூடி
நயம்பட நாக்கு வளைக்கும் தந்திரம்.

கொண்டுவா எண்ணெய்
திரியிடு ஊத்து
புழிஞ்சு திரியில் சுடரைக்
கொளுவு
அணையா வெளிச்சம்
வரட்டும், விடாதை தீமூட்டு,
எங்கடை மற்ற இளசுகளாவது
இருட்டில் இருந்து வெளியே
வரட்டும்.

சுதந்திரமாய் இக்காற்றை
சுவாசித்து மூச்சுவிட
சாகத் துணிஞ்சு எதையும்
சகிக்கப் பழகி விட்டம்.

மரண நனைவிலே
விறைப்பேறி நிற்கிறம்
பரணி படைப்பம்
படையொன்று
எடுப்பம்.

– கல்வயல் குமாரசாமி –

**கோளறுபதிகம் பற்றிய தொன்மச் சுருக்கம்**

சம்பந்தர் கூன்பாண்டியனைச் சந்திக்கச் செல்ல தயாரான போது 'இப்போது நாளும் கோளும் சரியில்லை. பிறகு செல்லலாம்' என நாவுக்கரசர் தடுத்தார். இதன்போது சிவபக்தனைக் கிரகங்கள் ஏதும் செய்யாது எனக்கூறி கோளின் தீமையற சம்பந்தர் பாடிய பதிகமே கோளறுபதிகமாகும்.

**கதை 02 : தொன்மத்தைக் கலையாக்கல்**

விடுதலைப் போராட்ட இயக்கங்களிடையே காணப்பட்ட ஒற்றுமை யின்மைகளையும் அதனால் விளைந்த அனர்த்தங்களையும் சமுதாயத்தில் நிலவும் பேய்கள் தொடர்பான நம்பிக்கைகளையும் ஐதீகங்களையும் அடிப்படையாகக்கொண்டு பேசும் ரஞ்சகுமாரின் கோளறுபதிகம் பாரம் பரியமாகச் சமுதாயத்தில் நிலவும் பேய்கள் தொடர்பான நம்பிக்கைகளையும் அந்நம்பிக்கைகள் நவீனத்துவத்தின் வளர்ச்சியால் சிதைந்த முறையையும் விளக்குவதோடு சமகால அரசியல் சமூகச் சூழமைவிற்கு ஏற்ப இந்நம்பிக்கைகள் எவ்வாறு மீளுருவாக்கம் பெறுகின்றன என்பதையும் தெளிவாகக் காட்டுகிறது.

சம்பந்தர் நாளும் கோளும் சரியில்லை என்பதற்காகப் பாடிய கோளறுபதிகத்தைப் பாடி கதையில் வரும் தேவனின் அப்புவான கந்தப்பு பேயிடமிருந்து உயிர்த்தப்பியதை 'கோளறுபதிகத்தை வரிசைக் கிரமமாக பக்திலயத்துடனும், பயத்தால் நடுங்கும் குரலுடனும் பாடத்தொடங்கினார். பாடுகிறார். பாடுகிறார். பயம் பறக்கிறது. விடிவெள்ளி மெல்ல உதயமாகி அப்புவிற்கு தைரியம் சொல்லிற்று. தூரே ஊரிலிருந்து கோழிகள் கூவி அப்புவுக்கு சுருதி சேர்த்தன. அப்பு கோளறுபதிகத்தை திரும்பத் திரும்பப் பாடுகின்றார். கிழக்கு வெளுக்கிறது. மேனி விறைக்கிறது. அப்பு தைரியமாகக் கரையில் ஏறினார்..' என பாரம்பரிய நம்பிக்கைசார் புனைவாகக் காட்டும் ஆசிரியர், 'அடா. மேனே, இந்த இஞ்சின் போட்டுக்கள் கடலுக்குள்ளை ஓடடா ஓடெண்டு ஓடி. பேயும் இல்லை. பிசாசும் இல்லை.' என்ற கூற்றினாலும் 'இப்ப உந்த மெஷினுகள் வயலுகளுக்கை ஒண்டுபாதி சாமமெண்டும் பாராமல் உழுது உழுது பேய் பிசாசெல்லாம் எந்தப் பக்கம் போனதென்று சொல்லாமல் போய்விட்டது' என்ற கூற்றினாலும் அப்பாரம்பரிய நம்பிக்கைகள் நவீனத்துவத்தின் வளர்ச்சியால் சிதைந்து போன முறைமையைச் சித்திரிக்கின்றார். பின்னர் கந்தப்புவின் இரண்டாம் தலைமுறையினரின்காலத்தில்நாட்டில்நிலவிய அரசியல் சமூக வரலாற்றுச் சூழமைவினால் சிதைந்து போன அந்நம்பிக்கைகள் மீளுருவாக்கம் பெற்ற முறையைக் கூறுகின்றார். அதாவது ஆட்சி, அதிகாரம், தலைமைத்துவப் போட்டி போன்ற காரணங்களால் விடுதலைப்போராட்டக் குழுக்களுக்கிடையே படுகொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு சகோதர அமைப்புக்களில் உள்ளவர்களை கொன்றொழிக்கின்ற சகோதரப் படுகொலைகளை யார் செய்கின்றார்களோ அவர்களை நவீன பேய்களாக வடி வமைக்கின்றார், ஆசிரியர். கதையின் இறுதிப்பகுதியில் கனவில் வரும் தேவன் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

'தேவன் மறுபடியும் மெலிந்திருக் கின்றான். அவனது மேலில் சேட் இல்லை. வளையைத் தோள்கள் மீது போட்டிருக்கின்றான். கிழிந்துபோன பழைய சாரன் உடுத்தியிருக்கின்றான். அவனுக்கு கால்கள் இல்லை. அந்தரத்தில் தொங்குகின்றான். ஒரு நிறைந்த நீர்நிலைப் பக்கமாக அவர்கள் போகையில் தேவன் நீருக்குள் இறங்க ஆரம்பித்தான். அவர்கள் 'அடே தம்பி... வாடா...' என நைச்சியம் பண்ணும் குரலில் கூவி

அழைத்தனர். அவன் மேலும் நீருக்குள் இறங்குகின்றான். சாரனை கழற்றி முண்டாசாகக் கட்டிக்கொள்கின்றான். திருநீரு பூசிக்கொள்கின்றான். ஏதோ முணுமுணுக்கிறான்.' (கோளறுபதிகம்)

எனவே, இங்கு பேயான தேவன் முணுமுணுக்கும் கோளறுபதிகம், சகோதர அமைப்புக்களில் கொலைவெறி கொண்ட நவீன மனிதப்பேய்களிடமிருந்து தன்னைப் போன்றவர்களையும் விடுதலைப் போராட்டத்தையும் காப்பாற்றப் பாடுவதாக அமைவதைக் காணலாம். அத்தோடு ஈழவிடுதலைக்கான நாளையும் கோளையும் போராட்டக் குழுக்களிடையே நிலவும் இத்தகைய உட்பூசல்கள் சீரற்றதாக்குகின்றது என்பதை உணர்த்துவதாகவும் விடுதலையின் மீது ஆத்மார்த்த பற்றுள்ளோரின் பிரார்த்த னையை வெளிப்படுத்துவதாகவும் இச் சித்திரிப்பு அமைகிறது.

சம்பந்தர் நாளும் கோளும் சரியில்லை என்பதற்காகப் பாடிய கோளறுபதிகம், பின்னர் கோளாறுகள் நிகழும் சந்தர்ப்பங்களில் மக்களால் பாடப்படுவது மரபாகும். ஆனால், இங்கு சகோதர அமைப்புக்களில் உள்ளவர்களையே கொன்றொழிக்கின்ற நவீனமனிதப் பேய்களிடமிருந்து விடுதலை அமைப்புக்களையும் ஈழ விடுதலையையும் காப்பாற்றுவதற்குப் படுகொலைசெய்யப்பட்டு பாதிக்கப்பட்ட போராட்டக் குழுவினால் பயன்படுத்தும் பதிகமாக கோளறுபதிகம் மாறியிருப்பதைக் காணமுடிகிறது.

**கதை 03 : அசோகவனம் / வேலியின் கதை (சாந்தன் – 1994)**

இக்கதையில் இடம்பெறும் அசோகவனம் பற்றிய தொன்மக்கதையின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

**அசோகவனம் தொன்மம் பற்றிய சுருக்கம்**

சீதையை இராவணன் நயவஞ்சகமாக கடத்தி வந்து சிறை வைத்த இடமே அசோகவனம் ஆகும்.

**கதை 03 : தொன்மத்தைக் கலையாக்கல்**

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது, அவர்களால் சாதாரண மக்கள் நடத்தப்பட்ட முறையையும் அம்மக்களின் மனப்போராட் டங்களையும் மேற்கூறிய அசோகவனம் என்றதொன்மத்தைமூலவுருவாகக்கொண்டு வெளிப்படுத்தும் சாந்தனின் அசோகவனம் - வேலியின் கதை அசோகவனமாக்கப்பட்ட யாழ் பிராந்தியத்தைக் காட்டுகிறது.

இராவணன் சீதையை நயவஞ்சகமாகக் கடத்தி வந்து சிறைவைத்ததுபோல இங்கு கிருஸ்ணன், சிங்கர் எனும் இரு சிவிலியன்களை நயவஞ்சகமாக (வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு முகாமிலுள்ள மக்களுக்கு உணவு ஏற்பாடு செய்ய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி) இந்திய இராணுவத்தினர் அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்துகிறார்கள். அவ்விசாரணைச் சூழலை சீதை சிறைவைக்கப்பட்டிருந்த அசோகவனமாகக் காணும் ஆசிரியர், அங்கு சிக்கித் தவிக்கும் கிருஸ்ணன், சிங்கர் ஆகியோரின் மனப்போராட்டங்களை சீதையின் மனப்போராட்டமாக்குகின்றார். 'இந்தா பத்து நிமிசத்தில் பேசிவிட்டு வந்துவிடலாமென்று கூட்டி வந்து ...! என்ன நயவஞ்சகம்...! கோபமா, கவலையா, பயமா, ஏமாற்றமா எதுவென்றில்லாமல் எல்லாம் கலந்து மனதை அழுத்தின' (அசோகவனம் / வேலியின் கதை) என சிறைவைக்கப்பட்டுள்ள சீதையின் மனப்போராட்டத்தையும் விசாரணைக்குட்

படுத்தப்படும் கிருஸ்ணன், சிங்கர் ஆகியோரின் மனப்போராட்டங்களையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றார், ஆசிரியர்.

எனவே, அசோகவனம் என்ற தொன்மத்தின் வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு உள்ளடக்கமாக தனது சமகால சம்பவங்களைச் சிறுகதை வடிவக்கூறுகளூடாக வெளிப்படுத்துவதன் மூலம் மூலத்தொன்மம் இங்கு கலையாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். குறிப்பாக இராவணனால் கடத்தப்பட்ட சீதை சிறைவைக்கப்பட்டிருந்த அசோகவனமாக இந்திய அமைதிகாக்கும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள்இருந்தயாழ்பிராந்தியம் குறிப்பிடப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட இடத்தினை மட்டும் குறித்த தொன்மம் முழுபிராந்தியத்தையுமே குறிக்கும் அடையாளமாக விரிவாக்கம் பெற்றுள்ளதைக் கதையில் காணமுடிகிறது.

**கதை 04 : தேவர்கள் (இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் - 1998)**

தேவர்கள் குறித்து இந்துசமய மரபில் இடம்பெறுகின்ற தொன்மக்கதைகளின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம்.

**தேவர்கள் பற்றிய தொன்மத்தின் சுருக்கம்**

இறவா மருந்தாகிய அமிர்தத்தை உண்டு சாவு, மூப்பு அற்று வாழும் தேவர்கள், சர்வலோகங்களும் அனுகூலமாக இயங்குவதற்கு வழிசெய்பவர்களாவர். லௌகீக வாழ்க்கையில் உயிர்களை ரட்சிக்கும் ராஜா அல்லது ராஜாங்கம் பல அதிகாரிகளைக் கொண்டு இயங்குவது போல இறைவனும் தேவர்கள் எனும் அதிகாரிகளைக் கொண்டு சர்வலோகங்களையும் ரட்சிக்கின்றான். இத்தேவர்களின் வரலாறு நெடுகிலும் அவர்கள் அரக்கர்களுடன் போராடுகின்றனர். ஈற்றில் இறைவனின் துணையுடன் அரக்கர்கள் அழிக்கப்பட்டு தேவர்கள் வெற்றிபெறுகின்றனர். அத்தோடு இத்தேவர்கள் இரவுவேளைகளில் பூவுலகின் புனித இடங்களில் சஞ்சரிப்பர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இறைவன் மீது மெய்யன்பு கொண்டவர்களுக்கு காட்சியும் தருவர். ஆனால் அக்காட்சியைத் தரிசித்தவர் அதனைப் பிறருக்குச் சொல்லக்கூடாது என்ற ஐதீகமும் உண்டு.

**கதை 04 : தொன்மத்தைக் கலையாக்கல்**

தேசத்தின் விடுதலைக்காகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும் போராடி மடிந்து போனவர்களையும் தொடர்ந்து போராடுபவர்களையும் தெய்வமாக்கும் மரபு பண்டுதொட்டு நிலவிவருகிறது. இத்தகைய மரபுகளின் நீட்சியாகவே ஈழவிடுதலைப் போராளி களைப் புனிதர்களாக்கும் சிதம்பர திருச்செந்திநாதனின் தேவர்கள் என்ற இக்கதை அப்போராளிகளின் சமூகப்பெறுமானத்தைப் பதிவு செய்வதாக அமைகிறது.

கதையின்படி ஆக்கிரமிப்பாளர்களான இராணுவத்தினர், தேவன் எனும் ஈழவிடுதலைப் போராளியைத் தேடி, இரவில்வந்துஒருவீட்டில்விசாரிக்கின்றனர். 'அடேய் தேவனைக் கோயிலில் கண்டாயா? மாடுகள் கொம்புகளை மறைத்த தலைகளை ஆட்டியபடி கேட்டன. லாடம் பூண்ட அவற்றின் கால்கள் துள்ளின. சட்டென்று அப்பாவின் அப்பு நள்ளிரவில் கோயிலில் கண்ட காட்சி நினைவிற்கு வந்தது. தேவர்களைக் கண்டால் சொல்லக் கூடாது. தேவர்களை மட்டுமா? தேவனையும்

தான்.' (தேவர்கள்) இங்கு 'தேவர்களை மட்டுமா? தேவனையும் தான்' என்பதன் மூலம் தேவனை தேவர்களோடு இணைத்து ஈழப்போராளிகள் அனைவரையும் தேவர் களாகக் கட்டமைக்க விளைவதைக் காணலாம்.

பொதுவாக தென்னிலங்கைவாழ் சிங்களவர்களை அரக்கர்குல நீட்சியாக கருதும் போக்கு இலக்கியப் பதிவுகளில் காணப்படுகின்றன. இதன் அறுபடாத் தொடர்ச்சியாகவே இன்றைய இராணு வத்தினரும் விளங்குகிறார்கள் என்பதை குறிப்பதாகவே கதையில் வரும் 'பச்சை இறைச்சி தின்னும் மாடுகள்', 'கொம்புகளை மறைத்த தலையை கொண்டவர்கள்' போன்ற இராணுவத்தினர் பற்றிய குறியீடுகள் அமைகின்றன. எனவே, இவ்வரக்கர்களின் அட்டூழியங்களை எதிர்த்துப் போராடும் தேவன் முதலிய ஈழப்போராளிகள் இயல்பாகவே தேவர்கள் என்ற அந்தஸ்தைப் பெறுவதோடு இப்போராட்டமும் தேவ அசுர யுத்தமாகி தர்மத்திற்கும்அதர்மத்திற்கும்இடையிலான போராட்டமாக வடிவம் பெறுகிறது.

அதர்மர்களான இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்குப் பயந்து தர்மத்தின் காவலர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது. ஏனெனில் தேவன் முதலிய தேவர்களான ஈழப்போராளிகளின் இருப்பு அதர்மத்தின் காவலர்களான அரக்கர்களின் அட்டூழியங்களை அழிக்க அவசியமானதாகும். எனவே, தேவர்களின் காட்சியினைப் பிறருக்குச் சொல்லக்கூடாதது போல தேவன் முதலிய ஈழப்போராளிகளின் காட்சியையும் யாருக்கும் சொல்லக்கூடாது. அவ்வாறு நடந்தால் தேவர்கள் போலத் தேவனும் மீண்டும் காட்சிதரமாட்டான். ஈழப் போராளிகள் மீண்டும் தோன்ற மாட்டார்கள். இதனைக் கதை சிறப்பாகக் காட்டுகிறது.

எனவே, தொன்மக்கதைகளில் இடம்பெறும் தேவர்களாக ஈழப் போராளிகளைப் பிரதிமை செய்வதன் மூலம் ஈழவிடுதலைப் போராட்டத்தினதும் போராளிகளினதும் சமூக முக்கி யத்துவம் மற்றும் புனிதத்தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதை இக்கதையில் காணமுடிகிறது.

**கதை : 05 கழுகுகளும் வெண்புறாக்களும் (இராகவன் – 2002)**

கழுகுகளும் வெண்புறாக்களும் என்ற இராகவனின் கதையானது மாணிக்க வாசகரின் வரலாற்றில் இடம்பெறும் பரிகளை நரிகளாக்கிய தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இத்தொன்மக்கதையின் பிரதான அம்சங்கள் வருமாறு

**பரிகளை நரிகளாக்கிய தொன்மம் பற்றிய சுருக்கம்**

அரிமர்த்தன பாண்டியனின் வேண்டு கோளுக்கு இணங்க, அமைச்சர் வாதவூரர் குதிரைகளை வாங்குவதற்கு ஒரு தொகைப் பொன்னுடன் சோழநாடு செல்கிறார். இடையில் திருப்பெருந்துறையில் இறைவன் குருவடிவாக வந்து ஆட் கொள்ளவே வாதவூரர் தன்னை மறந்து இறைபணியில் ஈடுபடுகிறார். பின்னர் வாதவூரரின் பொருட்டு மதுரைக்கடவுள் நரிகளைப் பரிகளாக்கி மன்னனிடம் கொடுத்துச் சென்றார். அன்றிரவே பரிகள் யாவும் நரிகளாகமாறி கூண்டில் இருந்த குதிரைகளையும் கடித்துக்கொன்றன. கோபமுற்ற மன்னன் வாதவூரரை வைகைக் கரையில் வைத்துத் துன்புறுத்துகிறான். இறைவன் வைகையை பெருகச்செய்து தனது திருவிளையாடலை நிகழ்த்தி வாதவூரரைக் காத்தார்.

**கதை 05 : தொன்மத்தைக் கலையாக்கல்**

மேற்கூறிய பரிகளை நரிகளாக்கிய தொன்மக்கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள கழுகுகளும் வெண்புறாக்களும் என்ற இக்கதையானது, இலங்கையில் சமாதான உடன்படிக்கை நடைமுறையில் இருந்த காலத்தில் சமாதான நடவடிக்கைகளைச் சீர்குலைத்து யுத்தத்தை விரும்பும் ஆயுத உற்பத்தி மற்றும் ஆயுத வியாபாரிகளினதும் அவர்களது இடைத்தரகர்களினதும் குரூரத்தையும் அவர்களின் சூழ்ச்சியால் விளையும் அவலங்களையும் குறியீட்டு முறையில் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தொன்மக்கதையில் வரும் அரிமர்த்தனன், வாதவூரர் ஆகிய தொன்மப் பாத்திரங்களின் பெயர்களிலேயே சமகால அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் இக்கதையில் உலாவுவதோடு வாதவூரரைத் தடுத்தாட்கொண்ட சிவனுக்குப் பதிலாக சமணர்களின் தலைவனான கழுகரசன் இங்கு தடுத்தாட்கொள்கிறான். இக்குறியீடு வெளிப்படையாக சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டு திரைமறைவில் ஆயுத வியாபாரங்களை மேற்கொள்ளும் அமெரிக்கா முதலிய மேற்குலகநாடுகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கதையின்படி சமாதானத்தை விரும்பும் மன்னனான அரிமர்த்தனனின் வேண்டுகோள்படி அமைச்சர் வாதவூரர் வெண்புறாக்களை வாங்கிவர ஒரு தொகைப் பொன்னுடன் செல்கின்றார். இடையில் ஆயுத உற்பத்தி மற்றும் ஆயுத வியாபாரிகளினது சூழ்ச்சியால் மதிமயங்கி யுத்தத்தை விரும்பி 'யுத்தமே இன்ப ஜோதி, யுத்தமே இன்ப ஊற்று, யுத்தமே உலக மகாசக்தி' என யுத்ததேவதையைத் துதிக்கின்றார். பின்னர் வாதவூரரின் பொருட்டு கழுகரசன் ஆயிரம் கழுகுகளை வெண்புறாக்களாக்கி கூண்டுகளில் நிரப்பி, பூதங்களைப் பரிகளாக்கி வாதவூரருடன் அனுப்புகிறான். மகிழ்ச்சியடைந்த மன்னன் கொண்டுவந்த வெண்புறாக்களை ஏலவே இருந்த இருவெண்புறாக்களுடன் சேர்த்து கூண்டில் அடைக்கிறான். 'காலை விடிந்த போது கூண்டு முழுவதும் கழுகுகள் நிரம்பியிருந்தன. அங்கே எந்தவொரு வெண்புறாவும் இல்லை. இந்தக் காட்சியை கண்ணுற்ற மன்னன் உயிரற்றவனாய் நிலத்தில் விழுந்தான். அவன் உடல் கூண்டு முழுவதும் நிரம்பியிருந்த கழுகுகளுக்குத் தூக்கி வீசப்பட்டது' (கழுகுகளும் வெண்புறாக்களும்)

இவ்வாறு வாதவூரர் போன்ற நேர்மையான அமைச்சர்கள் விலைக்கு வாங்கப்பட்டதையும் சமாதானச் செயற்பாடுகளும் சமாதான விரும்பிகளும் புறச்சக்திகளால் அழிக்கப்பட்டதையும் உலக அரங்கில் பெருகிவரும் ஆயுத கலாசாரத்தையும் வன்முறை அரசியலையும் இக்கதை சிறப்பாகக் காட்டுகிறது.

இதன்படி பரிகளை நரிகளாக்கிய தொன்மத்தின் வடிவத்தை எடுத்துக் கொண்டு பதிலியாக வெண்புறாக்கள் கழுகுகளாக மாற்றப்பட்ட செய்தியைச் சிறுகதை வடிவக்கூறுகளோடு வெளிப் படுத்துவதன் மூலம் தொன்மம் இங்கு கலையாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். குறிப்பாக அரிமர்த்தனன், வாதவூரர் ஆகியோர் தொன்மப் பாத்திரங்களின் பெயர்களிலேயே இடம் பெற்றாலும் அவர்களின் பண்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் இங்கு படைக்கப்பட்டுள்ளதோடு குருவாக வந்து ஆட்கொண்ட சிவனுக்குப் பதிலாக சமணர்களின் தலைவன் கழுகரசன் ஆட்கொள்வதாக கூறப்பட்டுள்ளது. அதாவது தொன்மக்கதையின்படி

அரிமர்த்தனன் குதிரைப்படையைப் பலப்படுத்துவதற்காகவே குதிரைகளை வாங்குவதற்கு வாதவூரரை அனுப்புகிறான். இடையில் ஆட்கொண்ட இறைவன் அவருக்கு ஞான உபதேசம் வழங்குகிறார். பின்னர் இறைவன் நரிகளை பரிகளாக்கி அனுப்புகிறார். பரிகள் நரிகளாக மாறியிருப்பதைக் கண்ட மன்னன் வாதவூரரைத் துன்புறுத்துகிறான். என கதை நீள்கிறது. ஆனால், இங்கு அரிமர்த்தனன் போரை வெறுத்து சமாதானத்தை விரும்பியே வெண்புறாக்களை வாங்கிவர வாதவூரரை அனுப்புகிறான். இடையில் தடுத்தாட்கொண்ட சமணத் தலைவன் கழுகரசன் ஞான உபதேசத்திற்குப் பதிலாகப் போருக்கான உபதேசங்களையே வழங்கி கழுகுகளை வெண்புறாக்களாக்கி அனுப்புகிறான். அத்தோடு வெண்புறாக்கள் கழுகுகளாக மாறியிருப்பதைக் கண்ட மன்னனின் உடல் கழுகுகளுக்கே இரையாக்கப்படுகின்றது.

எனவே, சமகால அரசியல் கொல்லாமையை வலியுறுத்தி உயிர்நேயம் காத்த மதத்தையும்கூட கொலையை வலியுறுத்திக் குருதியை விரும்பும் மதமாக மாற்றியமைத்துள்ளதையும் சர்வதேச அரசியலில் சுய இலாபங்களை இலக்குகளாகக் கொண்ட அரசுகள் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்ப கழுகுகளாகவும் வெண்புறாக்களாகவும் மாறிமாறி இயங்குவதையும் இக்கதை நுணுக்கமாக பதிவுசெய்கிறது.

### கதை 06 : பரசுராமபூமி (மைக்கல் கொலின் – 2012)

பரசுராமபூமி என்ற கதையில் இடம்பெறும் பரசுராமர் குறித்த தொன்மத்தின் முக்கிய அம்சங்களினை பின்வருமாறு சுருக்கமாகக் குறித்துக் கொள்ளலாம்.

### பரசுராமர் எனும் தொன்மம் பற்றிய சுருக்கம்

பரசுராமர் ஜமதக்கினி முனிவரதும் ரேணுகாவினதும் மகன். விஷ்ணுவின் ஆறாவது அவதாரம். இவர் தனது தந்தையின் கட்டளைப்படி தனது தாயையே கொன்றவர். பின்னர் தந்தையின் வரத்தைக் கொண்டே தாயை உயிர்ப்பித்தவர். அவரது தந்தையை அரசன் ஒருவன் நயவஞ்சகமாகக் கொன்றான். அதற்கு வஞ்சம் தீர்க்க இருபத்தியொரு தலைமுறை சத்திரியர்களை அழிக்கும் விரதத்தைப் பூண்டவர். ஈற்றில் இராமனிடம் தனது தவவலிமை அனைத்தையும் இழந்து ஞானஉபதேசம் பெற்றவர். அத்தோடு கர்ணனுக்கு பிரம்மாஸ்திர பிரயோகத்தைக் கற்றுக்கொடுத்துவிட்டு அவன் ஒரு பிராமணன் அல்ல என்பதை தெரிந்துக்கொண்டபோது ‘நீ கற்ற வித்தை தேவையான இடத்தில் உனக்குக் கைகொடுக்காது’ என சாபமும் இட்டவராக சித்திரிக்கப்படுகின்றார்.

### கதை 06: தொன்மத்தைக் கலையாக்கல்

மேற்கூறிய தொன்மக்கதை கூறும் பரசுராமர் குறித்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, ஈழ விடுதலைப் போரில் இந்திய அரசின் வகிபாகத்தை விளக்குவதாக மைக்கல் கொலினின் பரசுராமபூமி அமைகிறது. கர்ணனுக்கு போர்க்கலைகளைக் கற்பித்த பரசுராமரே தான் இட்ட சாபத்தினால் அவனது அழிவிற்கு காரணமாக அமைந்தது போல ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கிய இந்திய அரசே இன்று ஈழப் போராளிகளின் அழிவிற்கு காரணமாக அமைகிறது என்றும் தமது நாட்டின் (இந்தியா) தலைவரைக் கொன்றதற்கு வஞ்சம் தீர்க்கவென அவ்வரசால்

அழிக்கப்படுகின்ற இவ்ஈழப்போராளிகளை இருபத்திரண்டாவது சத்திரிய தலைமுறை என்றும் சித்திரித்து பரசுராமர் என்ற தொன்மப் பாத்திரத்தின் நீட்சியாக இந்திய அரசை கதையானது பிரதிமை செய்கிறது.

'... ஆயுதங்களுடன் ஓடித்திரியும் அந்த இளைஞர்கள் யார்.? திகைத்துப் போனார் பரசுராமர். சில வருடங்களுக்கு முன்னால் தனது தேசத்தில் தனது தேசத்தவர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட இவர்கள் மீது. இன்று எனது தேசமே முன்னின்று போர் தொடுப்பதா.?

யுத்ததந்திரங்கள் சொல்லிக் கொடுத்து, ஆயுதங்கள் அள்ளிக் கொடுத்த எனது தேசமே இவர்கள் மீது போர்தொடுப்பதா? நான் கர்ணனுக்கு செய்ததை எனது தேசம் இவர்களுக்கு செய்கிறதா.?

இது எனது தேசத்தினதும் எனதும் சாபக்கேடா? புண்ணியதேசம் என்பதும் மகான்களின் தேசம் என்பதும் வெறும் வெற்று வார்த்தைதானா?

சத்திரியர்களின் இருபத்தியொரு தலைமுறையை நான் வேர் அறுத்தேன். இருபத்திரண்டாவது சத்திரியர்களின் தலைமுறையை எனது தேசம் வேர் அறுக்கிறதா?" (பரசுராமபூமி)

என இந்தியா தொடர்பாக கட்டமைத்துவந்த புனித சித்திரத்தை இந்தியசமூகபண்பாட்டுமரபிற்குள்ளிருந்து மேலெழும் தொன்மத்தை வைத்தே கேள்விக்குள்ளாக்குவதோடு 'இருபத்திரண்டாவது சத்திரியர்களின் தலைமுறையை எனது தேசம் வேர் அறுக்கிறதா?" என்ற பரசுராமரின் கேள்வி ஈழத்தின் இறுதிக்கட்டயுத்தத்தில் இந்தியா செய்த கண்மூடி அரசியலையும் மனித அழிவிற்கான உடன்போதலையும் சாடி அம்பலப்படுத்துகிறது.

குறிப்பாக முள்ளிவாய்க்காலின் மரண ஓலங்களால் பல நூற்றாண்டுகால உறக்கத்திலிருந்து விழித்தெழுபவராகக் காட்டப்பட்டுள்ள பரசுராமர், அவ்வோலங்கள் கொண்டுவந்த இருபத்திரண்டாவது தலைமுறை என்ற செய்தியால் மனவுளைச்சலுக்கு உள்ளாகித் தன்னைத்தானே சற்று நிதானமாகச் சுயமதிப்பீடு செய்கிறார். இதன்போது அவர் கர்ணனுக்கு சாபமிட்டதும் தாயைக் கொன்றதும் பின்னர் தாயை உயிர்ப்பிக்கக் கேட்டதும் எல்லாமே அவசர புத்தியாலும் முன்யோசனை இன்றி தனது வீரத்தையும் தவவலிமையையும் பெரிதென எண்ணி தன்னிச்சையாக எடுத்த முடிவுகளாலும் ஏற்பட்டதென்பதைப் புரிந்துக்கொள்வதோடு தான் செய்த இத்தவறையே தனது நாடான இந்தியா இன்று தொடர்ந்து செய்வதையும் அவரால் உணர்ந்து கொள்ள முடிகிறதெனக் கதை விரிகிறது.

காலம் தந்த அனுபவத்தாலும் ஞானஉபதேசம் தந்த நிதானத்தாலும்

**நாட்டில் நிலவிய போர்க்கால அச்சச் சூழலானது எதையும் வெளிப்படையாகப் பேசுவதற்குரிய எழுத்துச் சுதந்திரத்தினை வழங்கவில்லை. எனவேதான் படைப் பாளிகள் தொன்மங்களைக் குறியீடு களாகக் கையாண்டு படைப்பாக்கங்களை மேற்கொள்வதன் மூலம் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த முயன்றனர்.**

தனது தவறினை உணர்ந்துகொள்ளும் பரசுராமர், தான் செய்த அத்தவறையே இன்று தனது நாடும் செய்வதனால் மிகுந்த கோபமடைகின்றார். அநீதியை அழிக்க தான் ஏந்திய மழுவினால் இவ் அநீதியை எதிர்த்துப் போராட முடியாமல் போனதால் அதனைக் காறித்துப்பி நந்திக்கடல் பெருவெளியிலே வீசி எறிவதோடு தானும் வன்னிக் காட்டுக்குள் தலைமறைவாகிறார். எனவே, பிராந்திய அரசியலின் மேட்டுமைப் போக்கு, இனம் ஒன்றின் விடுதலைக்கான போரை வேர் அறுப்பதோடு தமது பாரம்பரியங்களையும் அவமானப்படுத்துவதாக அமைவதைக் கதைக் காட்டுகிறது.

இந்த அடிப்படையில் நோக்கும் போது அநீதியை அழிக்க வந்த கடவுளாகவும் அரசர்களின் கடமை, தந்தை மகன் தாய் - மகன் உறவு, உண்மையின் உயர்வு போன்றவற்றைக் கற்பிப்பதாகவும் கருதப்பட்டுவந்த பரசுராமர் தொன்மம், இங்கு தன்னைத்தானே மறுபரிசீலனை செய்து எல்லாமே அவசர புத்தியாலும் முன்யோசனை இன்றித் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளாலும் ஏற்பட்டவை என்பதை உணர்ந்து தானே நொந்துகொள்ளும் பாத்திரமாகவும் தனது கடந்தகால வாழ்க்கைச் சம்பவங்களை சமகால இந்தியாவுடன் இணைத்து தனது பிம்பமாக இந்தியாவை கருதி தன் மீதும் தன் நாடு மீதும் மிகுந்த கோபமடைந்து தனது அடையாளங்களையே அழித்துக் கொள்ளும் பாத்திரமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**தொகுப்பும் மதிப்பீடும்**

மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட மேற்கூறிய கதைகளை ஆராய்கின்ற போது தொன்மங்கள் பின்வரும் முறைகளில் கலையாக்கம் பெற்றுள்ளன.

I. தொன்மக்கதைகளை சமகால சமுதாய அமைப்பிற்கு ஏற்ப மறுவுருவாக்கம் செய்தல். இங்கு தொன்மக்கதைகள் நவீன சமூக மதிப்பீடுகளுக்கு அமைய மீளப் படைக்கப்பட்டுள்ளதோடு தொன்மப் பாத்திரங்கள் சாமான்ய மனிதர்களாக வார்க்கப்பட்டுள்ளனர்.

II. எமக்குக் கையளிக்கப்பட்டுள்ள மூலத்தொன்மங்களை அவ்வாறே கையாள்தல். குறிப்பாக ஒப்புமைப்படுத்தல், குறியீடாக்கல் போன்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் மூலத்தொன்மங்கள் அவ்வாறே இடம்பெறுகின்றன.

III. மூலத்தொன்மத்தின் வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு உள்ளடக்கமாக தமது விடயங்களினைக் கூறல்.

எனவே, இங்கு மூலத்தொன்மங்கள் தமது பரிசுத்த அல்லது தூய நிலையை இழந்து பல்வேறு சிதைவுகளுக்கு உள்ளாகி சிதைப்பின் அழகியலாகக் கலையாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். குறிப்பாக மூலத் தொன்மங்களை அவ்வாறே கையாளும்போது கூட படைப்பாளியின் நோக்குநிலை மற்றும் தேவைக்கு அமைய அவற்றின் எடுத்துரைப்பு முறையும் மொழியமைப்பும் மூலத் தொன்மத்திலிருந்து வேறுபட்டமைவதைக் காணமுடிகிறது.

இவ்வாறு படைப்பாளியின் நோக்கம் மற்றும் படைப்புத்திறன் என்பவற்றுக்கேற்ப சிதைப்பின் அழகியலாக தொன்மங்கள் கலையாக்கம் பெற்றாலும் அப்படைப்புக்களின் மையமாக மூலத்தொன்மங்களின் உள்ளார்ந்த இயல்புகளே விளங்குவதைக் காணலாம். எனவே, காலத்திற்கு காலம் தொன்மங்கள் கலையாக்கம் பெறுவதன் மூலம் காலந்தோறும் அத்தொன்மங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு நீடித்த வாழ்வினைப் பெறுவதோடு படைப்பாளியும் தனது

நோக்கங்களை இலகுவில் சாத்தியப் படுத்திக் கொள்கிறான். இவ்வகையில் தொன்மங்கள் ஈழத்துப் போர்க்காலத் தமிழ்ச் சிறுகதைகளில் கலையாக்கம் பெறவேண்டியதன் சமூகத் தேவையையும் அவை சமூகத்தளத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் பின்வருமாறு குறித்துக்கொள்ளலாம்.

I. இக்கதைகளில்கையாளப்பட்டுள்ள தொன்மங்கள் யாவும் ஈழத்தமிழர் பண்பாட்டோடு ஒன்றிணைந்து அவர்களின் வாழ்வியலோடு கலந்துள்ளதால் படைப் பாளிக்கும் மக்களுக்கும் பொதுவான கூறாக அமைந்து அவர்களது மனவுணர்வுகளை ஒன்றுபடுத்தும் சாதனமாக விளங்கு கின்றன.

II. நாட்டில்நிலவிய போர்க்கால அச்சச் சூழலானது எதையும் வெளிப்படையாகப் பேசுவதற்குரிய எழுத்துச் சுதந்திரத்தினை வழங்கவில்லை. எனவேதான் படைப் பாளிகள் தொன்மங்களைக் குறியீடு களாகக் கையாண்டு படைப்பாக்கங்களை மேற்கொள்வதன் மூலம் தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த முயன்றனர்.

III. ஈழம் நீண்டகால இலக்கிய பாரம்பரிய தொடர்ச்சியினைக் கொண் டுள்ளதால் இதிகாச புராண தொன்மங்கள் மக்களுக்கு மிகவும் பரீட்சயமானதாக விளங்குகின்றன. இதனால் அவற்றினைக் கையாண்டு கலையாக்கங்களை மேற் கொள்ளும் போது அவை மக்களுக்கு மிகவும் நெருக்கமானவையாகவும் உணர்வு களைத் தூண்டக்கூடியனவாகவும் அமைவதோடு எளிதில் புரிந்துக கொள்ளக்கூடியனவாகவும் அமைகின்றன.

IV. ஈழத்தில் சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளால் தமிழரின் சுய பண்பாட்டு அடையாளங்கள் சிதையும் அபாயநிலை நிலவுவதால் தம் சுய அடையாளங்களையும் பண்பாட்டு வேர்களையும் தேடுவதற்கும் அவற்றை நிலைநிறுத்துவதற்கும் தொன்மங்களை கலையாக்கல் காலத்தின் கட்டாயச் செயற்பாடாக நடைபெறுகின்றது.

V. தொன்மக் கதைகள் பெரும்பாலும் அறப்போதனைகளைக் கற்பிக்கும் சாதனமாக விளங்குகின்றன. எனவே, ஈழப் போரில் நிகழ்ந்த அநீதிகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் அறப்போதனைகளை மேற்கொள்வதற்கும் தொன்மங்கள் கலையாக்கத்தில் அதிக வாய்ப்பான கூறுகளாய் அமைகின்றன.

போர்க்காலச் சூழலில் அதிகாரத்தை எதிர்ப்பதற்கும் அவலங்களைப் பேசுவதற்கும் பண்பாட்டு அடையா ளங்களை நிலைநிறுத்துவதற்கும் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தொன்மங்களை வலுவான ஆயுதமாக ஈழத்துப் படைப்பாளிகள் பயன் படுத்தியுள்ளனர். அத்தோடு இப்படைப்புக்கள் வாசிப்பு நிலையில் இன்னுமொரு தளத்தையும் எட்டியுள்ளன. அதாவது தொன்மச் சிதைப்பின் மூலம் கலையாக்கம் பெற்றுள்ள படைப்புக்களை வாசித்தல் என்பது தொன்மத்தை வாசிப்பதாகவும் தொன்மத்தை வைத்து புனைந்த புனைவை வாசிப்பதாகவும் - தொன்மம் கூறும் உள்ளடக்கத்தை வாசித்தல் தொன்மத்தை வைத்து புனைந்த புனைவின் உள்ளடக்கத்தை வாசித்தல் என இரண்டு வாசிப்புகளும் ஒரே வேளையில் நிகழ்கின்றன. தனியே ஒரு தொன்மத்தை நாம்வாசிப்பதற்கும்தொன்மத்தைகொண்டு புனையப்பட்ட புனைவை வாசிப்பதற்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது. தொன்மம்சார் புனைவுகளை வாசிக்கும் போது தொன்மத்தையும் தொன்மம்சார் புனைவினையும் ஒரேவேளையில் வாசிப்பு மனம் சமாந்தரமாக வாசித்துவிடுகிறது.

● வி.ஜீவகுமாரன் டென்மார்க்

# போர்



டென்மார்க்
மொழிப்பாடசாலை

சுபாவிற்கு பிரசவத்திற்கு இன்னும் ஒரு மாதமே இருந்தது.

எனவே அடுத்தநாளில் இருந்து தமிழ் தனியவே பாடசாலைக்குச் சென்றான்.

அகதி அந்தஸ்து கிடைத்த அனைவருக்கும் டென்மார்க் கின் சாதாரண குடிமகனுக்குக் கிடைக்கும் அத்தனை வசதிகளையும் அளித்து 18 மாத மொழிக் கல்வி வழங்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

அங்கு போனபொழுது கரீனாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு என்ற செய்தியும் கரீனாவினதும் குழந்தையினதும் படமும் அறிவிப்புப் பலகையில் இருந்தது. குழந்தை அசல் இலங்கைப் பையன் போலவே இருந்தான்.

றோட்டால் செல்லும் பொழுது ஏதோ ஒரு அட்டையை சைக்கிளிலால் மிதித்து விட்டு, அதனைத் தாண்டிச் செல்லும் பொழுது மனம் படும் ஒரு கண வேதனை அவனுக்குள் வந்து போனது.

கரீனாக்கு அப்பொழுது 20 வயதிருக்கும். ஒரு கால் சற்று ஊனம். பெரிய சோடாமுட்டிக் கண்ணாடி போட்டிருப்பாள். எப்பொழுதும் முகத்தில் புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருக்கும். மிக நல்லவள். பாடசாலையை சுத்தம் செய்யும் தனது பணிநேரம் முடிந்தாலும் எவர் என்ன உதவிகள் கேட்டாலும் அதைச் செய்து கொடுத்தாள்.

தமிழர்களின் பிள்ளைகளை வைத்தியரிடம் கூட்டிச் செல்வது, தமிழருக்காக பாங்கில் இருந்து இலங்கைக்கு காசு அனுப்புவது. தமிழருக்காக மலிவாக வீடுகளை பெற்றுக் கொடுப்பது என எதுவாயினும் அவள் உதவி செய்தாள்.

பாடசாலையில் உள்ள அனைத்து தமிழரும் தங்களால் முடிந்த ஐந்தோ, பத்தோ, இருபது குறோன்கள் சேர்த்து கரீனாவுக்கும் குழந்தைக்கும் ஒரு பெரிய அன்பளிப்பு செய்ய விரும்பினார்கள். அவ்வாறு சேர்த்த ஐந்நூறு குறோன்களுக்கும் அவளின் பிள்ளைக்குத் தேவை என அறிந்திருந்த ஒரு பெரிய தொட்டிலை வேண்டவும் அதனை எடுத்துச் செல்ல தமிழ் தனது வகுப்பாசிரியை பென்ராவின் உதவியை நாடினான்.

பென்ரா அனைவருக்கும் ஆசிரியையே தவிர அவளுக்கு வயது இருபத்தியிரண்டுதான். பிறநாட்டினர் அனைவருடனும் அன்பாகப் பழகுவாள்.

சிறுகதை

பென்ரா தமிழையும் கௌரி அன்ரி, மணியண்ணை உட்பட்ட மற்றைய நான்கு தமிழரையும் அவர்கள் வாங்கிய தொட்டிலையும் பாடசாலை முடிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றாள்.

கரீனா, அவர்கள் வருகையாலும் அவர்களின் பரிசினாலும் மிக்க மகிழ்ந்தாள். தனது மகனை அனைவரையும் தூக்கச் சொல்லி மகிழ்ந்தாள். மேசையில் இருந்த குடிபானத்தையும் சாக்கிலட்டுகளையும் பரிமாறினாள்.

தமிழ், சாக்கிலட்டை மட்டும் எடுத்துக் கொண்டான்.

கௌரி அன்ரி மதுபானத்தை எடுத்தது தமிழுக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் வெளிக்காட்டவில்லை.

"இது அவ்வளவு கொண்டு எழுப்பு தில்லை", மணியண்ணை முறைப்பட்டார்.

"இது வெறிக்கக் குடிப்பதில்லை. காலை யில் உணவுச் சமிபாட்டுக்காக குடிக்கிறது. "பழைய டெனிஸ்" என்று பெயர். கனக்க சரக்கு வகைகள் இதிலை போட்டிருக்கு. நானும் அவரும் காலமைகளிலை எடுக் கிறனாங்கள்" கௌரி அன்ரி சொல்ல மணியண்ணை வாய் அடைத்து நின்றார்.

"அன்ரியும் அங்கிளும் மற்றதும் அடிப்பியளோ", மணியண்ணை கிண்டி னார்.

"அங்கிள் அவ்வளவு ஸ்டாண்ட் பண்ண மாட்டர். ஆனால் எனக்கு ஓ.கே."

தமிழுக்கு வாயடைத்தது.

ஆஸ்பத்திரியில் சுமார் ஒரு மணி நேரம் மகிழ்ச்சியாகக் கழிந்த பின்பு அனைவரும் புறப்படத்தயாரானார்கள்.

இலையுதிர்கால இருட்டு பகல் பொழு தைக் கௌவ ஆரம்பித்து விட்டதால் பென்ரா அனைவரையும் அவரவர்கள் வீட்டில் கூட்டிச் சென்று விடுவதாக உறுதியளித்தாள்.

அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சி.

ஒவ்வொருவரின் வீட்டுக்கும் காரில் அழைத்துச் சென்ற பென்ரா இறுதியாக தமிழ் வீட்டை செல்ல முதல் தனது வீட்டுக்கு தமிழை அழைத்துச் சென்றாள்.

"ரீச்சர்.. சுபா வீட்டிலை தனிய யோசித்துக் கொண்டு இருப்பாள்"

"டோன்ற் வொறி. கெதியாய் போயிடலாம். எனது வீட்டை உனக்கு காட்ட விரும்புறன். தற்ஸ் ஆல்"

பென்ராவின் வீடு பளிங்குக் கல்லுப் பதித்தது போல இருந்தது.

விலை உயர்ந்த பொருட்களால் வரவேற்பறை அழகாக ஒழுங்கு செய்யப் பட்டு இருந்தது.

சுவரில் மட்டும் ஒரு அழகிய டெனிஸ் ஆடவனின் படம் மாட்டப்பட்டு இருந்தது.

"உங்களுடைய கணவரா"

"இல்லை"

"லவ்வரா"

"எக்ஸ் லவ்வர்"

தமிழ் நிமிர்ந்து பார்த்தான்.

"பிறகு எதுக்காக படத்தை மாட்டி வைத்து இருக்கிறன் என்று பாக்கிறியா?"

தமிழ் 'ஆம்' எனத் தலையாட்டினான்.

"அவன் என்ரை முதல் காதலன். செக்ஸ்சை முதல் முதலாக அனுபவித்ததே அவனோடைதான். பிறகு ஏனோ அவனுக்கு என்னைப் பிடிக்கேல்லை. போயிட்டான். பட், ஸ்ரில் ஐ லவ் ஹிம். ஸ்ரில் ஐ ரீம் எபௌட் ஹிஸ் செக்ஸ். அந்தளவுக்கு யாரும் என்னைத் திருப்திப்படுத்தவில்லை"

தமிழ் அதிர்ந்து போனான்.

"ரீச்சர்.."

"பயப்பிடாதை தமிழ், உன்னை நான் கற்பழிக்க மாட்டன் - நீயாக விரும்பி வந்தால் தவிர"

தமிழுக்கு கை விரல்கள் நடுங்கின.

"நீங்கள் எல்லாம் அதிகம் சென்ரிமென்ற் உள்ளவர்கள் என எனக்கு நன்கு தெரியும். உங்கள் அன்பு.. கோபங்கள், காதல்கள், காமங்கள் எல்லாம் சென்றிமென்ற் அடிப் படையில் அமைந்தவைதான். விரும்பினா லும் உங்கள் மனைவியைத் தவிர வேறு

யாரையும் உங்களாலை திருப்திப்படுத்த முடியாது. மனைவிக்குத் துரோகம் செய்ய நீங்கள் பயப்பிடுவதில்லை. ஆனால் துரோகம் செய்கின்றோம் என்ற சென்ரிமென்றுக்கு நீங்கள் பயப்பிடுவியள். ஆனாலும் வகுப்பிலை உன்ரை கெட்டித் தனத்தை நினைத்து பெருமைப்பட்டு இருக்கிறன். உன்னைப்போலை ஒருத்தனுடன் என்ரை வாழ்வை பகிர்ந்து கொள்ள வேணும்போல இப்பவும் ஆசைப்படுறன்"

"ரீச்சர் போவமா"

"நிச்சயமாய்"

"உனக்கு ஒன்று தெரியுமா? கரீனாவை ஏமாத்திட்டு கனடாக்கு ஓடினானே அந்த பாஸ்ரட, கரீனாவைச் சந்திக்க முதல் என்னோடை ஒரு கிழமை இங்கை இருந்தவன்தான். அவனாலை ஒரு பொம்பிளையை திருப்திப்படுத்துவது என்பது இம்பொசிப்பிள். உங்கடை ஊரிலை இருந்து கொண்டு வாற கற்புக் கதைக்கிற ஒரு பொம்பிளைதான் அவனுக்கு பெட்டிப் பாம்பாய் வாழும்."

டென்மார்க்கின் பார்த்திராத, கேட்டிராத முகம் தமிழைப் பயமுற வைத்தது.

மீண்டும் தனது கோட்டையும் கார்ச்சாவியையும் எடுத்துக் கொண்டு குடித்துவிட்டு மீதி வைத்திருந்த பியரையும் வாய்க்குள் ஊற்றியபடி சொன்னாள்.

"தமிழ், உங்கள் ஆணாதிக்க சமுதாயம் பல பெண்களுக்கு உச்சக்கட்ட இன்பம் என்பதை தெரியாமலே வைத்திருக்கு. ஆபிரிக்க அரேபிய நாட்டுப் பெண்களுக்கு உணர்ச்சி உறுப்பே சிதைக்கப்படுகிறது. இதைவிட கொடூரம் உலகத்திலை எங்கை இருக்குச் சொல்லு பார்ப்பம்"

தமிழ் மௌனமாய் அவளை ஆமோதித்தான்.

"ஆனால் எங்களை கேவலம் கெட்ட சமுதாயமாக நீங்கள் எல்லாரும் பார்க்கிறது எங்களுக்குத் தெரியும்"

"நான் அப்பிடிப் பார்க்கவேல்லை. என்னோடை நீங்கள் மிக்க நாகரீகமாய் நடந்ததை நல்ல விதமாய்த்தான் பார்க்கின்றன்"

"மிக்க நன்றி! வாழ்க்கையில் சுபாவைத் தவிர யாரோ ஒருவருக்கு உன் வாழ்க்கையில் நீ இடம் கொடுப்பதாயின் அந்த இடத்தை நீ எனக்குத் தந்தால் மிக்க மகிழ்ச்சி அடைவேன்"

"அப்பிடி ஒரு நிலை என்றும் வராது ரீச்சர்"

"மீண்டும் நீ உங்கள் கலாசாரக் கண்ணாடியோடும் தியாகங்கள் செய்யும் சென்ரிமென்ரல் கண்ணாடி போட்டுக் கொண்டும் வாழ்க்கையைப் பார்க்கின்றாய்"

தமிழ் பின்பு எதுவும் பேசவில்லை.

கார் வந்து வீட்டு வாசலில் நின்றது.

சுபா யன்னலால் எட்டிப் பார்த்தாள்.

தமிழுக்கு பென்ராவை வீட்டுக்குள் வரச் சொல்லி அழைக்கத் தோன்றவில்லை.

"தாங்ஸ் போர் யுவ றைவிங்"

"வித் பிளசர். றிகாட்ஸ் ரூ சுபா"

கார் கிளம்பிச் சென்றது.

"என்ன டெனிஸ் ரீச்சரோடை ஊர் உலாத்தினதிலை நேரம் போனது

**நெருப்பின் வெப்பிகாரத்தால் மூடியை தூக்கி எறிந்து விட்டு அரிசி கொதிப்பது போல ஒருநாள் போராளிகள் வெடித்தார்கள். மக்களுக்கு பரகூட்டுகளில் உணவுப் பொதி போட்ட அதே இந்திய வீரர்கள் போராளிகளையும் அப்பாவி மக்களையும் குறிவைக்கத் தொடங்கினார்கள். விளைவு! சிங்களவனால் மட்டும் கற்பழிக்கப்பட்ட தமிழ் பெண்கள் இந்திய இராணுவத்தாலும் கற்பழிக்கப்படத் தொடங்கினார்கள்.**



தெரியேல்லையோ” வழமையான வெகு ளித்தனமான சீண்டல்தான் அது.

“வில் யூ சட் அப் பிளீஸ்”

தமிழின் குரலிலும்--- கண்களில் தெரிந்த கோபத்திலும். உடலில் தெரிந்த நடுக்கத்தையும் கண்டு சுபா நடுநடுங்கிப் போனாள்.

பல்கலைக்கழகம் தொடக்கம் இன்று வரை காணாத ஒரு தமிழை அவள் கண்டிருந்தாள்.

என்ன செய்வது என்றே தெரியாது திகைத்துப்போய் கதவுக் கைப்பிடியை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

தமிழ் போய் சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

கால்களை நீட்டியபடி உடுப்பை மாற்றும் நினைவின்றி கூரையைப் பார்த்த படியே இருந்தான்.

சுபா எதுவும் பேசவில்லை.

எதுவும் பேசுவது உசிதம் இல்லை என நினைத்துக் கெண்டாள்.

தமிழையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவளைக் கடிந்து கொண்டதற்காக அவன் மனத்தினுள் மிகவும் வேதனைப் பட்டான். ஆனாலும் அவனது படபடப்புக் குறைய வில்லை.

அவன் கண்களில் இருந்து கன்னங்கள் வழியே கண்ணீர் ஓடியது.

சுபாவிற்கு‘திக்’ என்றது.

அவள் வாழ்நாளில் பார்த்திராத ஒரு காட்சி.

தமிழின் கண்களில் கண்ணீர்.

ஓடிப்போய் அவனை தனது மடியினில் கிடத்திக் கொண்டு கன்னத்தை தடவிவிட்டாள்.

தமிழ் மிகப் பலமாக அழத் தொடங் கினான்.

தமிழ் அழ அவளுக்கும் தாங்க முடிய வில்லை. அவனது கண்ணீர் அவளது நெற்றியிலும் கன்னத்திலும் விழத் தொடங்கியது. அவனின் நெற்றியையும் கன்னங்களையும் தடவிக் கொண்டே இருந்தாள்.

“சுபா நாங்கள் ஒரு பிழையான இடத்துக்கு வந்திட்டம்”

அழுத களையில் நித்திரைக்கு போகும் ஒரு கனவு நிலையில் தமிழ் சொன்னபோது

“ஏன்” எனத் திருப்பி அவள் கேட்க வில்லை.

அவன் நன்கு தூங்கட்டும் என அவனைக் குழப்பாமல் தூங்க அனுமதித்தாள்.

அன்று இரவு முழுக்க தமிழுக்கு கெட்ட கனவுகளாகவே வந்து கொண்டு இருந்தன.

**நீங்கள் உண்ணும் ஒவ்வொரு அரிசியிலும் ஆண்டவனின் பெயர் எழுதி வைக்கப்படுகிறது என்பது போல, புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வோர் தமிழனும் உண்ணும் ஒரு கவளம் சோறும் பிரக்கேறாமல் தொண்டைக்குழியைத் தாண்டுவது என்பது இலங்கையின் போராட்ட அரசியல் நிலையிலேயே தங்கியிருந்தது.**

**அதிகாலையில் இலங்கையில் இருந்து வரும் தொலைபேசி மணி அழைப்பு ஒன்றே போதும் அன்றைய நாளைக் கரிநாளாக்குவதற்கு.. அல்லது களைகட்டப் பண்ணுவதற்கு.**

அதில் தமிழ் அன்ரியுடன் ஒரு பாரில் இருந்து விஸ்கி குடித்துக் கொண்டு இருந்தான்.

பென்ராவுடன் காரின் பின்புற சீற்றில் சல்லாபத்தில் இருந்து கொண்டு இருந்தான்.

கரீனா மீண்டும் அந்த தமிழ் வாலிபனுடன் கனடாவில் உள்ள நயகரா நீர்வீழ்ச்சி அருகே நின்று முத்தமிட்டுக் கொண்டு நின்றாள். ஊரில் மனைவியையும் மகள்மாரையும் விட்டு விட்டு இங்கு தனியே வாழும் மணியண்ணை எட்ட நின்று கரீனாவை காமுறப் பார்த்துக் கொண்டு நின்றார்.

தமிழின் நெற்றியில் துப்பாக்கியால் சுடப்பட்டு ஆடையில்லாது கல்லில் மீது அமர்ந்திருக்கும் கடற்கன்னிச் சிலையுடன் சேர்த்து கட்டி வைத்திருந்தார்கள். டென்மார்க்கிற்கு உல்லாசப் பிரயாணிகளாய் வந்திருந்த அனைவரும் தமிழையும் கடற்கன்னியையும் இணைத்து போட்டோ பிடித்துக் கொண்டு இருந்தார்கள்.

சுபா கையில் ஒரு கொக்கோ கோலா போத்தலை வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னைப் படம் பிடிக்க வேண்டாம். எனக்கும் கடற்கன்னிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை" என அவன் பல முறை கத்தினான். ஆனால் குரல் மட்டும் வெளியில் வரவில்லை. உல்லாசப் பிரயாணிகள் தொடர்ந்து படம் பிடித்துக் கொண்டு இருந்தார்கள்.

* * * * *

நீங்கள் உண்ணும் ஒவ்வொரு அரிசியிலும் ஆண்டவனின் பெயர் எழுதி வைக்கப்படுகிறது என்பது போல, புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வோர் தமிழனும் உண்ணும் ஒரு கவளம் சோறும் பிரக்கேறாமல் தொண்டைக் குழியைத் தாண்டுவது என்பது இலங்கையின் போராட்ட அரசியல் நிலையிலேயே தங்கியிருந்தது.

அதிகாலையில் இலங்கையில் இருந்து வரும் தொலைபேசி மணி அழைப்பு ஒன்றே போதும் அன்றைய நாளைக் கரிநாளாக்குவதற்கு.. அல்லது களைகட்டப் பண்ணுவதற்கு.

அவ்வகையில், கோடைவிடுமுறை தொடங்கிய அன்று பாடசாலை முழுக்க வடக்கில் நடைபெற்றுக் கொண்டிருந்த பாரிய தாக்குதல் பற்றியே கதையாகவும் கவலையாகவும் இருந்தது.

விடுமுறைக்கு முன்னே தொடங்கிய யுத்தம் ஆயினும் விடுமுறையின் பின்பு அது வீரியம் கொண்டிருந்தது. போராளிகளை மட்டும் குறிவைத்து தாக்காமல் பொது மக்களின் உடமைகளையும் குறி வைத்து அது நடந்து கொண்டிருந்தது.

பூனைகளுக்கு இடையில் அப்பம் பிரிக்கும் குரங்காக சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்த இந்தியா இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில்தான் வந்து இறங்கியது.

"இந்தியா வாறது எங்கள் மக்களுக்கு நல்லது இல்லை" தமிழ் உறுதியாகச் சொன்னான்.

"அப்பிடிச் சொல்லாதையும் தம்பி! இந்தியாக்கு எப்பவும் எங்கடை மக்களிலை மிகக் கரிசனை"

"பொறுத்திருந்து பாருங்கோ"

இந்தியா சமாதானத்தைக் கொண்டு வரும். முழு ஐரோப்பாவும் எதிர்பார்த்தது.

அவ்வாறு சமாதானம் ஏற்பட்டால் முழுத் தமிழரும் திருப்பி அனுப்பப்படு வார்கள் என செய்தி ஊடகங்கள் ஆருடம் சொல்லத் தொடங்கின.

அது அனைத்து ஐரோப்பியத் தமிழரின் வயிற்றிலும் புளியைக் கரைத்தது.

கடன்பட்டு வந்த காசு கால்பகுதி கூட கட்டி முடியாத நிலையில் அனைத்து தமி ழரும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற செய்தி இலகுவில் செமிக்க மறுத்தது.

"இப்ப என்னத்துக்கு உந்த அறுவாங்கள் வந்தவன்கள்" மணியண்ணை தட்டை மாற்றிப் போட்டார்.

பத்திரிகைகள் நாடு முழுக்க இருந்த தமிழரிடம் நாட்டுக்கு திரும்பி போவது பற்றி பேட்டி எடுத்தன.

பலர் பேட்டி கொடுக்க மறுத்த பொழுது, தமிழ் தானாக முன் வந்தான்.

"உண்மையான சமாதானம் வந்தால் நாங்கள் இருவரும் திரும்பிப் போவோம்" எனப் பேட்டி கொடுத்தான்.

பத்திரிகையோ "உண்மையான சமாதானம் வந்தால்" என்பதையும் "இருவரும்" என்பதையும் தணிக்கை செய்து விட்டு, "நாங்கள் திரும்பிப் போவோம்" என தலைப்புச் செய்தி போட்டது. அதில் தமிழ், சுபா உட்பட்ட பல தமிழர் நிற்கும் படமும் இருந்தது.

கிட்டத்தட்ட முழு டென்மார்க்கும் தமிழுக்கு எதிராகத் திரும்பியது.

"இவர் யார் திரும்பி போற கதை சொல்ல..."

"இவருக்கும் மனுசிக்கும் கம்பஸ் ஸிலை வேலை கிடைக்கும். எங்களுக்கு அப்பிடியோ...."

"போதாதுக்கு மாமானாரின்ரை புட வைக் கடை இருக்குது"

தமிழைக் காணும் பொழுது குரலைத் தாழ்த்தியும் காணாதபோது உயர்த்தியும் பேசிக் கொண்டார்கள்.

"ஏன் தமிழ், இப்பிடி பேட்டி குடுத்த னீங்கள்?"

"நான் நினைச்சனானோ பேப்பர் காரன்கள் இப்பிடிச் செய்வான்கள் எண்டு. மாறாக ஏன் இந்தச் சனங்கள் துள்ளுவான். சமாதானம் வந்தால் போறது தானே"

"அதைத் தீர்மானிக்க நாங்கள் யார்?"

"இங்கை இருந்து நரக வாழ்க்கை வாழப் போகுது இந்தச் சனங்கள்... அது யாருக்கும் வடிவாய் புரியேல்லை"

"தமிழ்?" சுபா விழியை உயர்த்தினாள்.

"சுபா... அன்றைக்கு நான் எந்தத் தப்பும் செய்யேல்லை. ஆனால்நாளைக்கு உனக்கும் கல்வி கற்க இருக்கிற பென்ரா ரீச்சரிலை உனக்கு வெறுப்பு வரக்கூடாது எண்டதாலைதான் எதுவும் சொல்லேல்லை. எங்கடை அடுத்த சந்ததி இந்தத் தப்புகளை எல்லாம் நியாயப்படுத்தி வாழப்போகுது எண்ட பயத்திலும் கவலையிலும்தான் உன்னிலை ஏறி விழுந்தனான்"

"தமிழ்"

"நாங்கள் ஒரு பொறிக்கை விழுந்திருக் கிறம். அதுக்குள்ளை சோபா, ரீ..வி., வீடியோ, கார், காசு எண்டு எல்லாம் இருக்கிறதாலை இது பொறி எண்டு யாருக்கும் விளங்குதில்லை"

பென்ரா ரீச்சர் வீட்டை போனது தொடக்கம் வீட்டு வாசலில் அவள் காரில் கொண்டு வந்து இறக்கியது வரை, இந்த இரண்டு மாதங்களுக்குப் பின் தமிழ் சொல்ல அதிர்ச்சியால் உறைந்து போய் நின்றாள் சுபா.

கண்களை இறுக மூடிக் கொண்டு தாயை நினைத்துக் கொண்டாள்.

"நான் இந்த அம்மனை நம்பித்தான் உன்னை வெளிநாட்டிலை விட்டுட்டு இருக்கின்றன்"

அடுத்த கணமே அவனை வந்து இறுக்கமாக கட்டிக் கொண்டாள்.

"தமிழ். என்ரை தமிழ்.." அவளுக்கு குரல் அடைத்தது.

* * * * *

தமிழுக்கு இந்திய ஆமியின் வருகை விட இந்த மண்ணில் தனதும் சுபாவின் எதிர்காலம் பற்றிய பயம் அதிகமாகவே இருந்தது. மேலாக நாளை பிறக்க இருக்கும் தன் பிள்ளையின் எதிர்காலம் பற்றி, அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி..

அடுத்து அடுத்து இலங்கையில் நடைபெற்றவை மிகப் பயங்கரமான நிகழ்வுகளாய் அமைந்தன.

இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும் என ஒரு போராளி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தான்.

காந்தியின் காதுகளில் அந்த அகிம்சையின் மொழி கேட்கவில்லை.

நெருப்பின் வெப்பிகாரத்தால் மூடியை தூக்கி எறிந்து விட்டு அரிசி கொதிப்பது போல ஒருநாள் போராளிகள் வெடித்தார்கள்.

மக்களுக்கு பரசூட்டுகளில் உணவுப் பொதி போட்ட அதே இந்திய வீரர்கள் போராளிகளையும் அப்பாவி மக்களையும் குறிவைக்க தொடங்கினார்கள்.

விளைவு!

சிங்களவனால் மட்டும் கற்பழிக்கப்பட்ட தமிழ் பெண்கள் இந்திய இராணுவத்தாலும் கற்பழிக்கப்படத் தொடங்கினார்கள்.

“உனது தங்கைக்கு பெரிய குங்குமப் பொட்டும் போட்டு தொளதொளக்கிற சட்டையும்சீலையும்கட்டித்தான்வீட்டிலை வைச்சிருக்கிறம்” தாயின் கடிதத்தை படித்து தினம் தினம் தமிழ் கவலைப்பட்டான்.

மொழிப்பாடசாலையில் தினம் தினம் இதே போர்க்கதையும் கவலையும் தான்.

கரீனாவும் பென்ராவும் தமிழர்களின் கவலைகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

* * * * *

*2012*
டென்மார்க்
போர் இன்னமும் முடியவில்லை.
இலங்கையிலும்தான்!!

அமரதாஸ்

# துயர்க்காலம்

**அவரசமாய் அணிவகுத்து**
**போருக்குப் புறப்படும்போது**
**ஊரில் இருந்து**
**சதா எனை நினைந்து**
**அழுதிருக்கும் உன் முகம்**
**இதயத்தில் மினுங்கு மங்கலாய்.**

**விண்ணில் இறைந்து கிடக்கும்**
**வெள்ளித்துகள்களில் ஒன்றாய்**
**எட்டாத தொலைவில் நீ...**

**காற்றிடையே**
**அலைந்து கரையும் தீச்சுவாலையாய்**
**இனம்புரியாத்துயர் மனசோடு...**

**என் மனசு**
**கல்லாகிப் போனதாய் உணராதே**
**பிரிவுத்துயர்க்கடலில்**
**அமுங்கி அமுங்கி நிமிருகிறேன்.**

**காலமிதன் கோலமிது.**

**வெடித்துச் சிதறும் களத்திலிருந்து**
**உயிர்கொண்டு திரும்ப நேர்ந்தால்**
**உனைக்காண வருவேன்**
**மனஞ்சிலிர்த்து.**

ஒரு பார்வை

# மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஈழத்துப் போர்க்கால இலக்கியங்கள்

தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறியானது அதன் அரசியலோடு இணைந்து வளர்ச்சி பெற்று இன்று இங்கு நிலவிய நீண்ட காலப் போரின் ஓய்வுக்கு பின் அதன் எதிர்கால செல்திசை பற்றிய பல்வேறுபட்ட குழப்பங்களுக்கு மத்தியில் நின்று தடுமாறிக் கொண்டிருப்பதைக் காண-முடிகிறது. போர் இலக்கியம், போர்க்கால இலக்கியம், இனவுணர்வுக்காலம், தமிழ்த்தேசிய எழுச்சிக்காலம், என்ற வகையில் வழிநடத்தப்பட்ட ஈழத்துப் படைப்பிலக்கியப் போக்கில் போர் ஓய்வுக்குப்பின் ஏற்பட்டுள்ள திடீர்தள மாற்றமே இதற்கு முக்கிய காரணமாய் அமைகிறது. இதன் விளைவாய் போர் நடந்த காலத்தில் அதனை ஆதரித்துப் பாடியும் எழுதியும் வந்த பலரும் போரின் எதிர் விளைவுகள் பற்றி அப்போது பேசாத, பேசமுடியாத பலரும் இன்று இலக்கியப் பச்சோந்திகளாக மாறி அதன் எதிர்க்குரலாய் பேசத் தொடங்கியிருப்பதையும் காணமுடிகிறது. அத்துடன் இத் தளமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் இன்றும் வேறுபட்ட படைப்பாக்க உத்திகளிற்கூடாக இப் போர்க் கால இலக்கியங்களையே தொடர்ந்தும் படைத்து வருவதையும் காண முடிகிறது.


புலோலியூர்
**வேல்நந்தகுமார்**

மற்றொறுபுறம் ஈழத்துத் தமிழ்ப் படைப்பு வெளியின் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகி உலக அனுபவத் தளத்தை வழங்கி பல்பரிமாண வளர்ச்சி பெற்று வரும் புலம்பெயர் இலக்கியப் படைப்பாளிகளில் சிலர் மீண்டும் உணர்ச்சியை ஊட்டும் போர் இலக்கியங்களை இணைய வழி படைத்து வருவதுடன் அங்கும் குரல் மாற்றங்களையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன் ஏற்கனவே தமிழ்த் தேசியத்திற்கு எதிரான மாற்றுச் சிந்தனைப் படைப்பு வழியைப் பின்பற்றியவர்கள் தமது கருத்துக்களை வலிமையாக்கிவரும் அதேவேளை சிலரிடம் மாற்றங்களையும் காண முடிகிறது. இத்தகையதொரு சூழற் பின்புறத்தில் ஈழத்தின் போர்க்கால இலக்கியப் படைப்புகள் சமூகப் பெறுமதியற்ற ஒற்றைத்துதிபாடல்கள் என இன்று அவை மீது முன்வைக்கப்படுகின்ற விமர்சனத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்புச் செல்நெறியை நோக்கும்போது அவ் இலக்கியம் 1940களில் இருந்து நவீன இலக்கிய வடிவ பொருள்

மாற்றங்களைப் பெற்று மறுமலர்ச்சி, முற்போக்கு, மண்வாசனை, தேசிய இலக்கியம், நற்போக்கு, பிரபஞ்சவாதம், மார்க்ஸ்சியம், யதார்த்த வாதம், சோசலித யதார்த்தவாதம், பெண்ணியம், பின்நவீனத் துவம், தலித்தியம், இனவுணர்வு, புலம் பெயர்வு எனப் பல்வேறுபட்ட கொள்கை கோட்பாடுகளின்வழி வழிநடத்தப்பட்டு வந்துள்ளதை எம்மால் இனம்காண முடிகிறது. அத்துடன் ஒவ்வொரு காலகட்டத்திலும் அதற்குப் பின்னால் ஒரு அரசியல் சமூக பொருளாதாரக் காரணியும் இலக்கியப் போக்கில் தாக்கம் செலுத்தியிருந்ததை அறிய முடிகிறது. இவ் வகையில் 1980 களுக்குப் பின்னான காலம் இனவுணர்வுக்காலமாக அமைந்தது.

இந்தக்காலம் ஈழத்தமிழரைப் பொறுத்தவரை அவர்களது வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் போரும் அதன் விளைவுகளும் ஆக்கிரமித்திருந்த காலமாக விளங்கியது அது தந்த அவலங்களையும் வலிகளையுமே இக்கால இலக்கியங்கள் பதிவு செய்தன. இதிலிருந்து தோன்றிய தொன்றே போர்க்கால இலக்கியங்களாகும் இதே சமகாலத்தில் பெண்ணிய, புலம்பெயர், பின்நவீனத்துவ இலக்கியப் போக்குகளும் புதிய பாய்ச்சல் வெளிகளாய் அமைந்தன. குறிப்பாக புலம்பெயர் இலக்கியங்கள் உலக அனுபவத்தை வழங்கி ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு இன்னொரு பரிமாணத்தை வழங்கின. இவ்வாறு இக் காலத்தை இயக்கிய விசையாகிய போர் இப்போது ஓய்ந்து விட்டது. அதன் முடிவு எமது சூழலை, சிந்தனையை மாற்றியுள்ளது. ஆயினும் புலம்பெயர் தேசங்களில் அது இன்னமும் உணர்வு தணியாமல் கனன்று கொண்டு இருக்கிறது. இத்தகையதொரு புறச்சூழலில் ஈழத்தின் போர் இலக்கியப் போக்கு, அதன் அடுத்த காலம், எதிர் காலம் என்பன எவ்வாறு அமையப் போகின்றன என்பன இன்று முக்கிய விடயங்கள் ஆகின்றன. ஈழத்து இலக்கியத்தின் வலிமையான படைப்பிலக்கிய அணி எனக் கருதப்படும் முற்போக்கு அணி மீண்டும் தலை தூக்கக்கூடிய ஏதுநிலை தென்படுகின்ற அதேவேளை சஞ்சிகை, இணைய வெளிகளும் இதில் தாக்கம் மிக்க சக்திகளாக உருவெடுத்துள்ளன. இம் முற்போக்கு மற்றும் இடதுசாரி அணியைச் சேர்ந்த சிலர் கடந்து வந்த இனவுணர்வுக் காலத்தை ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஓர் இருண்ட காலமாக சித்திரித்துக் காட்டுவதிலும் முழுமூச்சாய் ஈடுபடத் தொடங்கி இருப்பதையும் அண்மைக் காலமாக இப் போர் இலக்கியங்கள் பற்றி அவர்கள் கூறிவரும் கருத்துக்கள்வழி அறிய முடிகிறது. இவர்களது இக் கூற்றில் சில நியாயங்கள் இருந்தாலும் முற்றாக அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் சொல்வதைப் போல "போர் இலக்கியங்கள்" ஒற்றைப்போக்கான மாற்றுச்சிந்தனைகளிற்கு இடம் தராத பிரசாரத் தன்மை கொண்ட, சமூகப் பெறுமதியற்ற ஆளும் வர்க்கத்திற்கான ஒரு ஒற்றைத் துதிபாடல்களாகவே அமைந்தன என்பதை ஓரளவு ஏற்றாலும் அதற்காக அக்காலத்தில் தோன்றிய எல்லாப் போர் இலக்கியங்களும் இவ்வாறுதான் அமைந்தன என்று நாம் கூறிவிட முடியாது. இதையும் தாண்டி வெளிவந்த பல சிறந்த படைப்புக்களையும் இக்காலம் எமக்குத் தந்தது என்பதையும் மறந்துவிட முடியாது. அந்த வகையில் அக்காலம் சரியான முறை யில் மீள் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டுமேயொழிய முற்றுமுழுதான ஒரு இருண்ட காலம் ஆக்கிவிட முடியாது.

பொதுவான உலக இலக்கிய ஓட்டத்திலே அதிகளவான வலிகள் தந்த அனுபவங்கள் வலி பிரசவிக்கப்பட்ட இலக்கியங்களே உலகத்தரம் வாய்ந்த

**இப்போர் இலக்கியங்களை எழுத்து இலக்கியத்தின் உன்னதமான புதிய வரவாக அந்தக் காலத்தில் போற்றிய சில எழுத்துப் படைப்பாளிகளும் விமர்ச்சகர்களும் இன்று போர் ஓய்ந்த பின் தடம் மாறி இப் போர் இலக்கியங்களுக்கு எவ்வித சமூகப் பெறுமதி யும் இல்லை அவை மனிதாபிமானத்திற்கு எதிரான அழிவுகளை நியாயப்படுத்திப் பாடிய ஒற்றைத் துதிப்பாடல்கள் என்ற வகையிலும் கருத்துக்களை முன் வைக்கத் தொடங்கியுள்ளனர் அந்தக் காலத்தில் இக் கருத்தை சொல்லக் கூடிய சூழல் இருக்கவில்லை என்கின்றனர்.**

இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன. இந்த வகையில்தான் இனவுணர்வுக் காலம் எமது இலக்கியப் போக்கில் உலகத் தரத்தை முற்றாக நெருங்காவிட்டாலும், ஓரளவிற்கு நெருங்கக்கூடிய கவி தைகளை, சிறுகதைகளை, நாவல்களை, புதிய வடிவ கட்டுடைப்புக்களை தந்தது என்பதையும் நாம் முற்றாக மறந்துவிட முடியாது. அத்துடன் சில துறை ரீதியான வளர்ச்சிகள் இக்காலத்தில் முதன்மைப்படுத்தப்பட்ட போர் உணர் வுகள் காரணமாக மட்டுப்படுத்தப்பட்டன என்பதையும் சில பக்கங்கள் பார்க்க மறுக்கப்பட்டன என்பதையும் நாம் மறுக்க முடியாது. இதேபோல் இக் காலத்தில் புலம்பெயர் தேசங்களுக்கு சென்றவர்கள் அங்கிருந்தவாறு போரிற்கு எதிரான மறுப்புக் குரலாய், தமிழ்தேசியத்திற்கு எதிரான மாற்றுக்குரலாய் ஈழத்தின் மிகச் சிறந்த கவிதைகளை. சிறுகதைகளை, நாவல்களை எதிர்ப்பிலக்கியங்களாக வெளிப்படுத்தி வந்துள்ளதையும் இவர்களது கருத்து நிலைகளுக்கு அப்பால் ஈழத்தின் மிகச்சிறந்த படைப்பாளிகளாக இன்று அடையாளப்படுத்துவதும்கூட போர் தந்த வாழ்வாலேயே ஆகும். இப்படிக் கூறுவதன் மூலம் அந்தக் காலத்தை ஒரு பொற்காலம் என்று கூறுவதாய் அர்த்தம் ஆகாது. அக்காலத்தில் கூட எமது இலக்கியப் போக்கில் சில பிழைகள் நிகழ்ந்துதான் உள்ளன. இலக்கிய நேர்மையுடன் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியதும் அவச-ிய மாகும். எனவே ஒட்டுமொத்தமாக ஒரு போர்க் காலத்தின் வரலாற்றுப் புனைவுகள் அனைத்தையும் ஒன்றாக்கி அதனை ஒரு நடுநிலை விமர்சனத்திற்கு உட்படுத்தும் அதே வேளை காலத்தின் கைகளில் அதன் நிலைப்பேற்றை விட்டு விடுவதே சாலச் சிறந்தது. அவற்றிலிருந்து மாறியுள்ள எமது அடுத்த காலத்திற்குரிய பாதையை செப்பனிட சில விடயங்களைக் கற்றுக் கொள்வதும் நாம் பயணிக்க மறந்த பாதைகளை இனங்கண்டு கொள்வதும் அவசியமாகும். என்னதான் சொல்லிடினும் படைப்பு, அதன் செல்திசை பற்றி யாரும் படைப்பாளிக்கு கட்டளையிட முடியாது. படைக்கும் சூழலும் உணர்வும் உந்தப்பெற பிறப்பதே உண்மைப் படைப்பாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்று என்பதே அடிப்படையில் ஒரு காலத்திலிருந்து மற்றொரு காலம் விமர்சனப் பாங்கான சில விடயங்களை கற்றுக் கொண்டு தமக்குரிய புதிய வழிகளில் பயணிப்பதாகவே இருந்துள்ளது. போரும் வாழ்வும் என்பது தமிழர் தம் வரலாற்றில் இன்று நேற்றுத் தோன்றியதல்ல வரலாற்றுக் காலம் முதலே அது இருந்துள்ளது. ஆளும் வர்க்கத்திற்கான பக்கம் சார் பாடல் மரபு என்பதும் தவிர்க்க முடியாத அம்சமாகவே இருந்துள்ளது. பொதுவாகதமிழருடையமனப்பாங்குகளில் அவர்களின் கடந்த காலங்களில் சங்ககாலம், சோழர்காலம் போன்றவை பொற் காலங்களாக தமிழனை தமிழன் ஆண்ட சிறந்த காலங்களாக சித்தரிக்கப்பட்டு வந்துள்ளன. அத்துடன் அடிப்படையில்

போரும் காதலுமே அவர்களின் வாழ்வியல் ஒழுக்கங்களைாகவும் பேணப்பட்டு வந்துள்ளதுடன் இவற்றைப் பாடுபொருளாகக் கொண்ட இலக்கியப் படைப்புக்களே உச்சமான, உணர்ச்சிமயமான இலக்கியங்களாகவும் போற்றப்பட்டுள்ளன. புறநானூறு முதல் சோழர்கால காவியங்கள்வரை தொடருகின்ற இந்தப் போர் இலக்கிய செல்நெறியில் மன்னன் புகழ் பாடலாய் ஒரு போர் இலக்கியப் பாரம்பரியம் எவ்வாறு தமிழில் வளர்ந்தது என்பதை நாம் கண்டுணர முடிவதுடன் அவை இன்றும்கூட தமிழரின் இலக்கிய வரலாற்றில் மிகச் சிறந்த இலக்கியங்களாகவே கற்கப்படுகின்றன. எனவே புறநானூற்றை இன்றும் எமது புறத்திணை இலக்கியமாகப் போற்றும் நாம் எமது போர் இலக்கியங்களை தூக்கி எறிவதில் அர்த்தமில்லை அதற்காக புறநானூறு காட்டும் வீரத்தை முற்று முழுதாய் ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் கூற முடியாது. அதில் கூட போரிற்கு, அழிவுக்குத் தூண்டுகின்ற அலங்கோலங்கள் நிகழ்த்தப்பட்டுத்தான் உள்ளன. எனவே புறநானூற்றை இன்று மறுவாசிப்புக்கு உட்படுத்தி நாம் விளங்கிக் கொள்வது போலவே எமது போர் இலக்கியங்களையும் இத்தகையதொரு மறுவாசிப்புக்கு உட்படுத்தி அதன் சமூகப் பெறுமதியை மட்டிடலாம் ஆயினும் இலக்கியங்கள் அவை தோன்றிய காலச் சூழலில் வைத்தே மதிப்பிடப்பட வேண்டும் என்ற பேராசிரியர் க.கைலாசபதியின் திறனாய்வுக் கோட்பாட்டையும் நாம் மறுக்க முடியாது. எமது எதிர்கால சந்ததியின் நன்மை கருதி மதிப்பிடுவதே சிறந்தது.

சங்கால போர் இலக்கியங்கள் மீது பிற்காலத்தில் சமூகவியல் நோக்கில் அவை ஆளும் வர்க்கத்திற்கு அனுசரணையாய் பக்கம் சார்ந்து பாடின என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. மற்றொருபுறம் போர் நடந்த காலத்தின் வெற்றிகளை பதிவு செய்த இவ் இலக்கியங்கள் அதற்கு பின்னால் நடந்த கொடுமைகளை, மக்கள்பட்ட அவலங்களை சரியாக பதிவு செய்யவில்லை என்ற குற்றச் சாட்டுக்கும் உரியனவாயின. களவழிநாற்பதில் இப் போக்கின் மாற்றத்தை போரின் வெறுப்பை தரிசிக்கலாம். இத்தகையதொரு வரலாற்றுப் பின்னணியில் வைத்துத்தான் ஈழத்தின் போர் இலக்கியங்கள் மீதான இன்றைய விமர்சனம் முன் வைக்கப்படுகிறதா என்பதும் சிந்தனைக்குரியது. எனினும் உலக இன விடுதலைப் போரியல் வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கும்போது தமிழ் மன்னராட்சிப் பின்னணி எந்த வகையில் ஈழத்துப் போரியல் இலக்கியங்களை மதிப்பிடப் பொருத்தமானது என்பதும் சிந்தனைக்குரியது.

ஈழத்து போர் இலக்கிய காலத்தில் படைப்புக்கள் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவானகுரல், மாற்றுக்குரல், எதிர்க்குரல் என்ற மூன்று அடிப்படைகளில் வெளிப் பட்டன இதற்கு அப்பாலான சமூக அவலங்கள் கொண்ட படைப்புக்களும் வெளிவரத்தான் செய்தன. இதன் ஆரம்ப கட்டத்தில் தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம் என்ற சிந்தனையின் தொடர்ச்சியாய் போரை, அதன் சமூக அவலங்களை சமூக வாழ்வியலோடு இணைத்து போரில் நேரடியாக பங்கு கொள்ளாத படைப்பாளிகள் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய வடிவங்களூடாகப் படைத்தனர். இவை போர்க்காலத்தில் படைக்கப்பட்டதால் போரின் அவலங்களைப் பேசுவதால் போர்க்கால இலக்கியங்கள் என இன்று அழைக்கப்படுகின்றன. போர்க் காலத்தில் போரை ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபடுத்திப் படைக்கப்பட்டவையே

போர்க்கால இலக்கியங்கள் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. காலப் போக்கில் போராடிய அமைப்பைச் சோந்த போராளிகளே படைப்பாளிகளாக மாறி இலக்கியங்களைப்படைக்கத்தொடங்கினர். இத்தகைய இலக்கியங்களே போர் இலக்கியங்கள் என அழைக்கப்பட்டன. இவ்வகையில் வானதி, கஸ்தூரி, அம்புலி கவிதைகள், புதுவை இரத்தினதுரையின் கவிதைகள், பாடல்கள் போன்றவை இவ் வகையின. வெளிச்சம் சஞ்சிகை, நிதர்சனம், கலை பண்பாட்டுக் கழகம் போன்றன இதன் வளர்ச்சியில் பங்களித்தன. ஆயி-னும் இன்றுவரை போர் இலக்கியங்களும், போர்க்கால இலக்கியங்களும் ஒன்றா வேறா என்ற சர்ச்சை தொடரவே செய்வதுடன் சிலர் அன்று தாம் படைத்தவை போர்க்கால இலக்கியங்கள் அல்ல என்றும் வாதிடுகின்றனர்.

இப்போர் இலக்கியங்களை ஈழத்து இலக்கியத்தின் உன்னதமான புதிய வரவாக அந்தக் காலத்தில் போற்றிய சில ஈழத்துப் படைப்பாளிகளும் விமர்ச்சகர்களும் இன்று போர் ஓய்ந்த பின் தடம் மாறி இப் போர் இலக்கியங்களுக்கு எவ்வித சமூகப் பெறுமதியும் இல்லை அவை மனிதாபிமானத்திற்கு எதிரான அழிவுகளை நியாயப்படுத்திப் பாடிய ஒற்றைத் துதிப்பாடல்கள் என்ற வகையிலும் கருத்துக்களை முன் வைக்கத் தொடங்கியுள்ளனர் அந்தக் காலத்தில் இக் கருத்தை சொல்லக் கூடிய சூழல் இருக்கவில்லை என்கின்றனர். இப் போர் இலக்கியங்கள் பற்றி இரண்டு விதமான விமர்சனங்கள் இன்று முன்வைக்கப்படுகின்றன. ஒரு சாரார் எமது வாழ்வின் வலி-களைப் பேசும் அவ்விலக்கியங்கள் மூலம் உலகத்தரம் வாய்ந்த இலக்கிய அனுபவங்கள் வெளிப்படுத்தப்பட்டன என்கின்றனர். மற்றொரு சாராரோ இவை ஒற்றைத்துதிப் பாடல்களாய், போரிற்கான பிரசார ஆயுதங்களாய், ஆளும் வர்க்கப் பக்கம் சார்பாய், உயிர்க் கொலைகளை விடுதலை என்ற போர்வையில் நியாயப்படுத்தியவையாய் மனித நேயப் பக்கங்களை பார்க்க மறந்த வையாய் அமைந்தவை என்கின்றனர். உணர்ச்சிகரமான கணங்கள் மாறி அறிவு நிலையில் நின்று இன்று என்ன பேசினாலும் இவை எமது இலக்கிய வரலாற்றின் ஒரு காலகட்டத்திற்குரிய பிரதிகள், பதிவுகள் என்பதை நாம் மறுத்துவிட முடியாது. அவை உண்மையில் ஒற்றைத்துதிப்பாடல்களா என்பதை அறிவதற்கென்றாலும் விமர்சனத் தளத்தில் வைத்து மறுவாசிப்புக்கு உட் படுத்தப்பட வேண்டும்.

போர்க்காலம் முடிந்தாலும் அது எமக்குத் தந்த அனுபவங்களை, வலிகளை, பிரசவங்களை முற்றாக நாம் நிராகரிக்க முடியாதவர்களாகவே வாழ்கிறோம். இதன் அர்த்தம் மீண்டும் கொடிய போர்த்துதிப்பாடலுக்கு செல்வதென்ப தல்ல. இவை சரியான விமர்சனத்திற்கு உட்படுத்தப்படும் போதே புதிய ஈழத்து இலக்கியம் படைப்புச் செல்நெறியை நாம் இதுவரைபார்க்கத்தவறியவிடயங்களையும் புரிந்து, புதியவற்றையும் இணைத்து சரியான செல்திசையில் கட்டமைக்க முடியும். இது விடயத்தில் புலம்பெயர் இலக்கியப் படைப்பாளிகளும், படைப்புவெளியும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டி யதும் அவசியமாகும். தமிழனிடம் வீரம் இல்லை என்று சொல்வதும் போர் இலக்கியங்கள் தேவையில்லை என்று சொல் வதும் ஒன்றுதான். ஆயினும் நாம் இவ்வாறு உணர்ச்சிகரமாய் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா.

போர் ஓய்ந்த பின்பும் ஈழத்தில் இருந்து வந்து கொண்டிருக்கும் படைப்புக்களைப் பார்க்கும் போது மழைவிட்டும்

போகாத தூவானமாய் இன்றும் அதிலிருந்து முற்றுமுழுதாய் தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத தன்மை கொண்டவையாகவே அமைந்திருப்பதைக் காண முடிகிறது. சில படைப்புக்களில் முன்னர் சொல்ல முடியாதிருந்த சில விடயங்கள் இப்போ சொல்ல முயலும் தன்மையும், இப்போதும் சொல்லமுடியாத குறியீட்டுத் தன்மையையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன் போருக்குள் இறுதிக் கட்டம்வரை வாழ்ந்து மீண்ட தளமாற்றம் பெற்ற படைப்பாளிகளால் இப்போது போர் எதிர்ப்பிலக்கியம், கறுப்பு வெள்ளை இலக்கியம், சாம்பல் இலக்கியம், விளை வின் விளைவு போன்ற கருத்தாக்கங்களும் படைப்புகளும் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் இப்போதும் நினைத்ததைச் சொல்லக் கூடிய படைப்புச் சூழல் உள்ளதா என்பதும் கேள்விக்குரியதே. அத்துடன் இலக்கியத்தினூடாக இன்னமும் நாம் தாக்கமான முறையில் நடுநிலை நோக்கில் எமது போரியல் வாழ்வு அனுபவங்களை பதிவு செய்யவில்லை என்றும் கூறப்ப டுகிறது.

இப்போது நாம் யுத்தம் முடிந்து இன ஐக்கியம் சமாதானம், சகோதரத்துவம் என்ற திசைகளில் பேதங்களை கடந்த மனித நேசிப்புக்கான பயணத்தில் பயணிக்கத் தொடங்கியிருப்பதால் இவற்றை வலி யுறுத்தக்கூடிய பழிவாங்கும் யுத்த மனநி லைகளை, அவநம்பிக்கைகளைத் தூண்டாத இன, மொழி, மதம் கடந்த மனித நேயத்தை அவாவிநிற்கும் படைப்புக்களே இன்றெமக்குத் தேவையாக உள்ளன என்ற கருத்தும் வலி யுறுத்தப்படுகிறது. அத்துடன் மனரீதியாக உடைவுகளுக்குள்ளாகியிருக்கும் எமது சமூகத்தை ஆற்றுப்படுத்தி நிமிர வைக்கக் கூடிய வாழ்வில் நம்பிக்கையூட்டக் கூடிய எதிர்கால நோக்குடைய இலக்கியப் படைப்புக்களே இன்று அதிகளவில் தேவைப்படுகின்ற போதும் இன்றைய இலக்கியப் போக்கு அதற்கேற்ப செல்கிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பலரும் நம்பிக்கையிழந்த பழையதை-யே படைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மாற்றங்கள் அடைந்துவிட்ட வாழ்வின் சவால்களையும், வாழ்வதற்கான நம் பிக்கையையும் இனி வரும் எமது இலக்கியப் படைப்புக்கள் வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் அநீதிகளுக்கும், பண்பாட்டு சீரழிவுகளுக்கும் எதிரான குரலாகவும் அவை ஒலிக்க வேண்டும் போர் முடிந்தாலும் போராட்டமாய் தொடர்கின்ற எமது வாழ்விற்கு வழிகாட்டக்கூடிய இலக்கியங்களை நாம்படைத்து எமது சமூக வாழ்வை செப்பனிட வேண்டியது அவசியமாகும். நாம் எமது அழிவுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே போர்க்கால இலக்கியங்கள் எமக்குச் சொல்லிச் சென்ற செய்தியாகும். இதேவேளை இந்த காலத்தில் சிங்களவர், முஸ்லிம்கள் படைத்த போர் இலக்கியங்கள் பற்றியும் ஒப்பியல் நோக்கில் நோக்குவது பயனு-டையது அதே வேளை இன்றைய நிலையில் போர் இலக்கியங்கள் என்ற அர்த்தத்தை சமூக அவலங்களுக்கு எதிராக குறிப்பாக சாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராக படைக்கப்படும் இலக்கியங்களையும் உள்ளடக்கிய அர்த்தத்தில் நோக்கலாமா என்பதும் சிந்தனைக்குரியது. அன்றைக்கே இவர்கள் சமூகப் போராளிகள் என்றே அழைக்கப்பட்டனர். "போராளிகள் காத்திருக்கின்றனர்" என்பதும் டானியலின் ஒரு நாவலின் பெயர் இன்றைக்கும் இது பொருத்தமாகவே அமைகிறது.

காலம் பதில் சொல்லும்.

○ ○ ○

சிறுகதை

# உழப்பு

தெணியான்



"இவளுக்கென்னாச்சு!

ஆகாயமும் இன்று இவளைப்போல அழகாக இல்லை எல்லாம் பொத்தல் பொத் தலாக கருமையின் எழில் வண்ணத்தை அலங்கோலப்படுத்துகிறது. இந்தப் பொத்த லில்லாத ஆகாயம்கூட இவள் மேனி அழகுக்குத் தோற்றுப்போகும்.

இவள் மேனி அழகு என்னைப் பைத்தியமாக்குகிறது. இந்த அழகுமேனி யில் மோகவெறி கொண்டு இவள் பின்னே நான் பறந்து திரிந்த நாட்கள்.. இவள் கரிய நிறத்தில் நந்தலாலாவைக் கண்டு நான் உணர்ச்சிப் பரவசத்தில் உள்ளம் சிலிர்த்துப் போன காலங்கள்.. கழுத்தைச் சொடுக்கித் திருப்பி, கண்ணின் கருமணியைச் சுழற்றி வெட்டி வெட்டி மோகம் ததும்பு விழி களால் இவள் போதை வெறியூட்டிய சமயங்கள்.... தெத்தித் தெத்தி நடக்கும் இவள் நடையில் கிறங்கி என்னை நான் இழந்து தவியாய்த் தவித்த வேளைகள்.. இவள் சிறகடிப்பில் என் இதயம் ஒரு கணம் நின்று படபடத்துத் துடித்த அந்தக் கிளுகிளுப்புகள்...

எல்லாமே இவளுக்கு மறந்து போச்சா!

எனக்கெப்படி உறக்கம் வரும்! சுண்டு வில்லால் விசையாகக் கூவி அடித்த கல்லொன்று மண்டையைத் தாக்கி விண் விண் என்று கலக்கி விட்டதுபோல தலை சுழன்று கனக்கிறது.

இவளால் இவை எல்லாவற்றையும் ஒரு தடவை நினைத்துப் பாராமல் மெய்மறந்து உறங்க முடிகிறதே! இந்த உறக்கம் நிசமா-னதுதானா! அல்லது...?

உறக்கத்திலும் மென்மையான தன் அலகுகளால் என் சிறகுகளை இதமாகக் கோதிக்கோதி, செல்லமாக மெல்லக் கொத்திக் கொடுத்து உறங்க வைத்தவள், இன்று தலையை மடக்கிக் கழுத்துக்குள் முகத்தைச் சரித்துக்கொண்டு கிடக்கிறாள்.

அலகுகளைக் கூராக்க வேண்டு மென்றொரு பொய்ச்சாட்டுச் சொல்லிக் கொண்டு என் அலகோடு தன் அலகை உரசி உரசி கருவிழிகள் சிவந்துவர, வெப்பமூச்செறிந்த வண்ணம் நெருங்கி வரு கின்றவள், இன்று ஒதுங்கிக் கிடக்கிறாள்.

இவளுக்காகவே இந்தக் கூடற்பனைக் குள் உச்சார வட்டிலே கட்டினேன் அழகான ஒரு வட்டக்கூடு. சுள்ளித் தடிகள் மென்மையான இவள் உடலை உறுத்தக் கூடாது என்பதற்காக எத்தனை வீடுகளுக்கு அலைந்தேன். தும்புத்தடிகளிலிருந்து தென் னந்தும்பைப் பிய்த்தெடுக்க எவ்வளவு

போராடினேன்! அந்தத் தும்புகளையும் பழைய துணிகளையும் சுமந்து வந்து, கூட்டினுள்ளே சொகுசான உள்ளணை தயாரித்தேன்.

அன்றிரவு, அந்த இதமான மெத்தையில் இருவரும் படுக்கச் சென்ற முதல்நாள்.. இவள் என்ன சொன்னாள்.

'காதல்தான் பெரிதெனக்கு; காலை யில் எழுந்து கரையவும் வேண்டாம் வயிற்றுப்பாட்டுக்காகக் கறணம் போட்டுப் பறந்து திரியவும் வேண்டாம். கட்டி அணைச்சுக்கொண்டு காலமெல்லாம் உறங்குவோம்.'

இன்னும் என்னென்னவோ சொல்லிப் பிதற்றிக்கொண்டே கிடந்தாள். அந்த இரவு இவள் உறங்கவே இல்லை.

அந்த அவளா, இவள்?

நம்பவே முடியவில்லை!

இன்றோடு இரண்டு இரவுகள், மழைக் கால விழிப்புப் போல எனக்கு மழை-யின் அந்தக் கொடுகல் விழிப்பிலும் என்ன ஆனந்தம்! நெருக்கமான.. மிகநெருக்கமான இவளின் கதகதப்பு. மழைவானத்து மை இருளை இவளின் மேனி வனப்போடு அப்போது ஒப்பிட்டுப் பார்ப்பேன், பூ..! வானமெங்கே? இவளின் சௌந்தரிய வண்ணக் கோலமெங்கே!

எப்போதோ நான் குரலெடுத்துக் கரையவேண்டுமென்று தவித்துக்கொண்டு கிடக்கிறேன்.

சேவல் இன்னும் தன்முதற் குரலைக் கொடுக்கவில்லையே! அதன் பிறகு, அதன் இரண்டாவது குரலையும் கேட்ட பிறகல்லவா நான் குரல் எடுத்துப் பாடவேண்டும்!

கடந்த இரவு என்றும்போல நான் பாடவில்லை; ஆமாம் பாடவில்லை; அழுதேன், என் பாட்டோடு சேர்த்து தேனாகப் பெருகும் இவள் இனிய-குரல், என் சோகக்குரல் கேட்டுக் கூட வெளிவரவில்லை. எனக்குப் பெருத்த ஏமாற்றந்தான்.

இவள் இவ்வளவு பெரிய விஷ மக்காரியா!

நான் அப்படி என்னத்தைச் சொல்லி விட்டேன்.

'இந்த மனிதரைப் போல எவனோ ஒருவன்ரை பிள்ளையைத் தன்ரை பிள்ளை எண்டு பெயர் பதியிறவனல்ல நான்' என்று தானே சொன்னேன்.

அதுக்கு இவள், 'என்ன சொல்லுறியள்?' என்று கேட்டாள், ஒன்றும் விளங்காதவள் போல,

இவள் நடிக்கிறாள் என்று உணர்ந்து கொண்டே மீண்டும் சொன்னேன்!

'நான் மானமுள்ளவன்'

'அப்ப... நான்தான் மானங்கெட்ட வளோ?'

இவள் கேட்டுக்கொண்டு அதன்பிறகு மௌனமாக ஒதுங்கினவள்தான்...

என்னைக் கொல்லாமற் கொன்று கொண்டிருக்கிறாள்.

நான் கேட்டதில் என்ன பிழை?

எனக்கும் ஒரு வருஷகாலமாக மன-தில் இருந்து கொண்டிருக்கும் ஒரு நெரு-டல் மனம் பொறுக்காமல் பகிடிபோலச் சொல்லிவிட்டேன்.

சென்ற ஆண்டு போல இந்தத் தடவை யும் நடந்து விடக்கூடாதென்று முன்னெச் சரிக்கையாகச் சொன்னேன். அவ்வளவு தான்.

கடந்த வருஷம் இவள் அடைகாக்க ஆரம்பித்ததும் நான் எவ்வளவு பெருமைப் பட்டேன். எனக்கும் ஒரு வாரிசு தோன்றப்போகிறது என்று மகிழ்ந்தேன். இவளுக்கு உவப்பான உணவுகள் எவை என்பதை அறிந்து, தேடி அலைந்து எத்தித் திருடி, எறிபட்டு, இடிபட்டு, இறாஞ்சிக்கொண்டு பறந்து வந்து அடைகாத்துக் கொண்டு கூட்டுக்குள்ளே

கிடந்த இவளுக்கு என் அன்பையும் குழைத்து ஊட்டினேன்.

ஒரு நாள்...

ஒரு நடுப்பகல் வரை இவளுக்கு மிக வும் பிரியமான குஞ்செலி ஒன்றைத் தேடி அலைந்து கடைசியில் பூனையோடு சண்டை இட்டு அதை ஏமாற்றி விட்டு அல-கினால் தூக்கிக் கொண்டு இவளைத் தேடி ஓடி வந்தேன்.

அப்போது கூட்டில் இவளோடு நான் எதிர்பார்த்திருந்த என் வாரிசு.

எனக்கு மனதில் எழுந்த ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இவள் தடுத்தும் கேட்காமல் அணைத்து முத்தமிட்டேன்.

என்ன நிறம்! ஆகா...! இப்படியுமொரு அழகுக் கருமையா? இவள்.. என் அழகுக் கறுப்பி தோற்றுப் போய் விடுவாள்; என்றாலும் இவளால் இப்படி ஒரு பேரழகைப் பெறமுடியும் என்று பெரு மிதங்கொண்டேன்.

அப்பன் எனக்கு, அந்தப் பெருமை மன-தில் பிறந்தது நியாயந்தானே!

பெண்ணுக்கும் தன்பிள்ளை பொன் பிள்ளை அல்லவா

இந்தக் குதூகலிப்புகள் எல்லாம் ஒரு மாதகாலம் வரை தான்.

அதன் பிறகு ஒரு நாள்....

இவளுக்கு உவப்பான குஞ்செலி ஒன்றைப் பிடித்துக் கொண்டு இவளுக்கும் கொடுத்து என் வாரிசுக்கும் பக்குவமாக அருகிருந்து ஊட்டிவிட வேண்டும் என்று எண்ணி ஆவலுடன் பறந்து வந்தேன்.

இங்கே... என் கூட்டிலே என் வாரிசு, ‘கூஉ... கூஉ... கூஉ...’ எனக் கொடூரமாகக் குரல் எழுப்புவது கண்டு திகைத்தேன். ‘கா.. கா... கா....’ என்று கானாமிர்தமாக இனிய குரல் எழுப்ப வேண்டிய என் வாரிசுவா இது?

எனக்குச் சினம் பொங்கி எழுந்தது.

கொல்லும் பார்வையால் இவளை வெறித்தேன்.

இவள் தலைகுனிந்து ஒதுங்கிக் கொண்டாள்.

என் வாரிசு எனறு பெருமைப்பட்ட அந்த ‘அதை’ என் அலகால் சினம் தீரும் வரை கொத்திக் கொத்தித் துரத்தினேன்.

அந்தத் தவறு திரும்பவும் நடந்தால்... இவளை எப்படி நான் மன்னித்து, இவ ளோடு இனிமேலும் நான் வாழ முடியும்? நானென்ன மானம் ரோசமில்லாத மனி தனா?

இது சொன்னதுக்காகவா இவள் என்னைப் பழிவாங்கிறாள்!

காலைமுதல் எத்தனை தடவைகள் இவளுக்குப் பிரியமான உணவுகளைக் கொண்டுவந்து கொடுத்தேன்.

அப்பத்துண்டு, ஒரு குழந்தையிடம் எத்தித் திருடினேன். ‘சீ! சனியன்’ என்று தாய் ஏசினாள். எனக்கு நெஞ்சு பதைத்தது. நான் திருடின



குற்றத்திற்காக நான் வாகனமாகச் சுமக்கும் என் தேவனான சனீஸ்வரனையா சந்திக்கு இழுக்க வேண்டும்! இவளுக்காக அந்த அம்மாவையும் நான் மன்னித்தேன். இவளுக்கு அப்பத்துண்டைக் கொடுக்க வேணுமென்ற அவசரம் எனக்கு. இல்லை என்றால் தலையில் ஒரு குட்டுக் குட்டிப் போட்டு வந்திருப்பேன்.

மத்தியானம் அந்த அம்மா பூவரசம் இலையில் ஒரு கிள்ளுச் சோறும் கறி யும் போட்டுக் கொண்டுவந்து கையிலே வைத்துக் கொண்டு நின்று "கா கா" என்று கூப்பிட்டாள். எனக்கு விளங்கிவிட்டது என்னுடைய தேவன் சனீஸ்வரனுக்கு ஆக்கிப்படைத்து, அதில் ஒரு பங்கை எனக்குத் தரக் கூப்பிடுகிறாள் என்று.

ரோசம் என்னைத் தடுத்தது என்றாலும் இவளை நினைத்துக் கொண்டேன்.

சரி, இதையாவது இவள் உண்பாள் என்ற நம்பிக்கையில் அலகுநிறைய அள்ளிக் கொண்டு ஓடிவந்தேன்.

அதன் பிறகு கோழித்தலை ஒன்று...

அதன்பிறகு ஆட்டெலும்பொன்று..

குஞ்செலியாவது விரும்பித்தின்னுவாள் என்று நம்பி பரதேசி நாயாக நான் அலைந்து, பொழுது மைம்மலுக்குள் விழும்போது, ஒரு குஞ்செலியைப் பிடித்துக் கொண்டு பறந்து வந்தேன். அதையும் தன் அலகினால் தூக்கி கூட்டுக்கு வெளியே எறிந்து விட்டாள்.

அது முதல் நானும் பட்டினிதான்.

இதுவரை எக்காலத்திலும் கிடைக்காத புதிய தீன் ஒன்றை இப்போது கொஞ்சக் காலமாக இவளோடு கலந்துண்டு மகிழ்ந்திருந்ததெல்லாம் இவள் மறந்து... இப்ப..

என்வாரிசை இவள் அடைகாத்துக் கொண்டு எதையும் தின்னாமற் கொள் ளாமல் பட்டினியாகக் கிடக்கிறாள். நான்மட்டும் எப்படித் தின்னலாம்.!

சரி, சரி, இனிமேலும் இப்படியே காலம் கழிக்கேலாது. இவள் மனதை அறியத்தான் வேணும். ஹூ ..ம்

" என்னப்பா பேசாமல் கிடக்கிறாய் !"

"..."

" என்ன... காது கேக்கயில்லையே!

" நல்லாக் கேக்குது"

" ஏன் ஒன்றையும் தின்னுறாய் இல்லை! இப்படிக்கிடந்தால் என்னெண்டு பொரிச்ச கூட்டுக்காலை எழுப்பப் போறாய்!"

"இதுக்குத்தான் பெத்தவள் இருக்க வேணுமெண்டு சொல்லுறது. இந்த நேரத்திலை நாவுக்கு இதமாக எல்லோ தின்ன வேணும். இப்ப கண்டதையும் தின்ன மனமில்லை"

'அப்பம், படையற்சோறு, கோழித் தலை, ஆட்டெலும்பு, உனக்குப் பிடிப்பான குஞ்செலி..எல்லாம் கொண்டுவந்து தந்தன். ஒண்டும் வேண்டாம் எண்டிட்டாய்.. நீ கோவத்திலை தான் தின்னாமல் கிடக்கிறாய் என்று நினைச்சேன்.

"மனதிலே ஆத்திரந்தான், எண்டாலும் ஆரோடை கோவிக்கிறது"

"என்ன தீன் வேணும்? கெதியாய்ச் சொல்லு! இரவும் பகலும் பட்டினி கிடக்கிறாய்'

'"உங்களுக்குத்தானே நல்லாத் தெரி யும்! இப்ப கொஞ்சக்காலமா நாங்கள் என்ன சாப்பிடுகிறமெண்டு'

"என்ன மனுஷ இறைச்சி! எனக்கெண்டால் சலிச்சுப் போச்சு எவ்வள வெண்டு தின்னிறது!

"எனக்குச் சலிக்கயில்லை. அதொரு தனி ருசி'

"சரி, இப்ப கொண்டு வாறன்; இரு!"

இப்ப எங்கை தேடப் போறியள்?

'அடி விசரி.. மனிஷ இறைச்சிக்கும் இஞ்சை இப்ப பஞ்சமா! எங்கே போனா லும் குவிஞ்சு கிடக்குது. நீ ஏன் வீணாகப் பசிகிடக்கிறாய். இரு, இப்ப வந்திடுகிறன், எது வேணும்...? ஈரலோ, மூளையோ? கா.. கா... கா...."

இந்த அகால வேளையிலும் இருளைக் கிழித்துக் கொண்டு ஒரு காகத்தின் ஒலி கேட்கிறது.

○ ○ ○

# இலையுதிர்கால நினைவுகள்

- வ.ஐ.ச.ஜெயபாலன் -

இன்பக் கனவுபோல்
தோன்றி மறைந்தது கோடை.
காற்றுக் குதிரைகளில்
குளிர்
சாட்டை சொடுக்கி வரும்.
வெய்யிற் சுகம் தேடி
வடதுருவப் பறவைகளும்
என் தாய்நாட்டின் திசை நோக்கி
தங்களது சிறகசைக்கும்.
வான் நோக்கிக் கையுயர்த்தித் தொழுகின்ற
கறுப்பர்களைப்போல்
இலையுதிர்த்து நிற்கும்
ஓக் மரங்களின் கீழே
தனித்தலையும் மக்பாய் இழிவாக எனை நோக்கும்.

“மக்பாய்! மக்பாய்!
எல்லாப் பறவைகளும்
என்னுடைய தாய்நாட்டின் திசைகளிலே
சூரியனைத் தேடிப் புலம்பெயரும்
குளிர்நாளில்
நீ மட்டும் இந்தத் துருவத்தில் தரித்ததென்ன?”

மக்பையோ உனக்கிவைகள் புரியாது
என்பதுபோல் தலையசைக்கும்.
“எனக்கிவைகள் புரியாதா?”
“உனக்கெப்படிப் புரியும்?
துருவத்துப் பறவைகளே தேடுமுந்தன் தாய்நாட்டை
வழிப்போக்கன்
குண்டிமண்ணைத் தட்டுதல்போல்
தட்டிவிட்டு வந்தவன் நீ”
மக்பை சொல் தீக்கோலாய்
மனதில் குறிபோடும்.
“நில் மக்பாய்!” என்றேன்.

“நாமறிவோம்
இலங்கைத் தமிழருங்கள் நாகரீகம்
பிறருடைய பேச்சுச் சுதந்திரத்தை
என்றேனும் ரசித்ததுண்டா நீங்கள்?”
என்றபடி மக்பை
எட்டப் பறந்து செல்லும்.

வானில் ஒரு பரதேசிபோல்
குளிர்ந்துபோன சூரியனின் பரிதாபம்.
மண்ணில்
மஞ்சளாய் தலைநரைத்த மரங்களின்
பொன்னாய் இறகசைத்து
வண்ணத்துப் பூச்சியாய்ப் பகட்டி
பேர்ச் இலைப் பழுத்தலொன்று
புல்லில் தரையிறங்கும்
ஒரு புது அகதி வந்ததுபோல்.



உலகெங்கும்
வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற
மனிதச் சருகுகளாய்ப் புரள்கின்றோம்.
என்ன நம் தாய் நாடு
ஓயாமல் இலையுதிர்க்கும்
உயிர்ப்பிழந்த முதுமரமா?

யாழ்நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதனிலே.
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்போட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ
வழிதவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம்போல்
ஒஸ்லோவில்
என்ன நம் குடும்பங்கள்
காற்றில் விதிக் குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?

பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டிவைத்த
தோப்பை அழியவிட்டு
தொலைதேசம் வந்தவன் நான்.
என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான் பழத்தோட்டம்?

கடந்த வசந்தத்தில்
கின்னரங்கள் மீட்டி
ஏழில்க் கன்னியர்கள் பாடுகின்ற
களியாட்டரங்குகளில்
கிண்ணங்கள் கொஞ்ச, மங்களம் கூறி
மனமுடைந்தேன் பரதேசி.

இது இயற்கையே விரக்தியுறும்
இலையுதிர் காலம்
இனி நீர்கூடக் கல்லாகும்
நீண்ட குளிர் காலம்.

இன்னும் எத்தனை நாள்
இந்துக் கடல் மடியில்
வாடையும் தென்றலும் மீட்ட இசைக்கின்ற
மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய்நாட்டை
நெஞ்சில் சுமந்து நான் ஏங்குவது?
நாட்டேக்கம் என்னுயிரை
நஞ்சாய் சமிக்கிறதே.....

“நெஞ்சம் கலங்காதே” என்றபடி
நெருங்கி வந்த மக்பை
“அதோ தெரியுது பார்” என்று
விமானத் துறையின் வழிகாட்டும்.
– 1989

**மக்பை - குளிர்காலத்திலும் இடம்பெயராத ஒரு வகைக் காக்கையினப் பறவை ஒன்று**

# மலையக மக்களும் போர்க்காலச் சூழலும்



## தெளிவத்தை ஜோசப்

முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து இந்த நாட்டு மக்களுக்கு விமோசனத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுத்துவிட்டதாக மார்தட்டிக் கொள்ளுகிறவர்கள் நிறையவே உண்டு.

'இந்த நாட்டு மக்கள் என்போர் யார்" என்பதில்தான் பிரச்சினையே இருக்கிறது. பிரச்சினையே தோன்றியது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசியல் மேலாதிக்கத்திற்கெதிராக வடகிழக்குத் தமிழர்கள் தேசிய எழுச்சி பெற்று ஆயுதம் ஏந்திய காலமே முப்பது வருடம் போர்க் காலம் என்றால் எழுபதுகள் என்றாகிறது.

58ல் தமிழர்கள் அடிபட்டது பேரின வன்முறை மட்டுமே.

தமிழ் வேண்டாம், தமிழர் வேண்டாம் என்றும் சிங்களம் மட்டுமே போதும் என்றும் சூளுரைத்து 1956ல் ஆட்சியைக் கைப்பற்றிய பண்டாரநாயக்கா அவர்கள் கிளப்பிவிட்ட பூதம் அது. அவரையும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டது.

நாற்பதுகளில் டி.எஸ். கூறினார் ஆங்கிலேயர்களிடம் இருந்து மீளப்பெற்ற ஆட்சியை இந்தியர்களிடம் நான் தாரை வார்க்கப் போவதில்லை என்று. இந்தியர்கள் என்றால் யார். அவர் கருத்துப்படி மலையகத் தமிழர்கள்.

1947 ல் இந்த மக்களின் ஓட்டுரிமை பறிக்கப்பட்டது. சட்டசபையில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கிறது என்னும் பலமும் மலையக மக்களின் வாக்குகளினால்தான் இடதுசாரி அரசியல்வாதிகளின் கை ஓங்குகிறது என்னும் சந்தேகமும் இடதுசாரி அரசியல்வாதிகளின் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்னும் நினைவும் எழுந்தது. டி.எஸ். குழுவினரின் பேரினவாதம் அது. இந்தக் குழுவுக்குள் ஒரு சில வடகிழக்கு அரசியல்வாதிகளும் அடங்கினர்.

மலையக மக்களுக்கு இந்தியத் தமிழர்கள் என்னும் இன அடையாளத்தைக் கொடுத்தவர்களே சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல்வாதிகள்தான்.

டி.எஸ். அவர்கள் நேருவிடம் பேசும் போது கூட உங்கள் தமிழர்கள் ஒன்பது லட்சத்துக்குக் குறையாமல் தேயிலைத் தோட்டங்களில் இருக்கின்றனர். இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு இது ஒரு தாங்கமுடியாத சுமை என்றுதான் குறிக்கின்றார். உங்கள் தமிழர் என்பது இந்தியத் தமிழர் என்பது தான்.

மிக அண்மையில் கூட தமிழகத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சிங்கள மக்கள் சிலர் அசௌகர்யங்களுக்கு முகம் கொடுத்த போது அமைச்சர்கள் சிலர் 'இங்கேயும் இந்தியத் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்பதை தமிழக அரசியல்வாதிகள் மறந்து விடக்கூடாது' என்று பேசினர். அது தான் அவர்களது இந்தியத் தமிழர் அடையாளம்.

நானும் பயந்திருந்தேன் அட்டன், தலவாக்கலை, பதுளை, பண்டாரவளை

என்று சில வன்முறைகள் ஆரம்பிக்குமோ என்று. தெய்வாதீனமாக அப்படி ஏதும் நடக்கவில்லை.

வடகிழக்குத் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் என்கின்ற அந்தத் தமிழ் இன அடையாளம் காரணமாகவே இந்தப் போர்ச் சூழல் காலங்களில் மலையக மக்களும் வன்முறைகளுக்காளாக்கப்படுவது மிக இயல்பான ஒன்றாகி விட்டது. ஆயுதப்போர் முரண்பாட்டில் நேரடிப் பங்காளிகளாக அவர்கள் இல்லாத போதும்.

இந்த நேரடிப் பங்களிப்பு இல்லாத வர்கள் என்பதிலும் கூட இப்போது சில முரண்கள் தோன்றுகின்றன.

முள்ளிவாய்க்கால் தீயுண்ட நிலமாகி மூன்று வருடங்கள் முடிந்துவிட்ட நிலை யில் மலையகத்தின் முக்கியமான நகர்ப் புறங்களின் இப்போது படைமுகாம்கள் தோன்றத் தொடங்கியுள்ளன.

எல்லாம் முடிந்துவிட்ட இறுதிப் போரில் இறந்தவர்களிலும், சிறைப்பட்டி ருப்பவர்களிலும் கணிசமானவர்கள் மலை யக இளைஞர்களும், மலையக மக்களும் என்பது தெரிய வந்திருப்பதே இதற்கான காரணியாகக் கருதப்படுகின்றது.

எந்த இடதுசாரி அரசியல் தலைமை-களை இந்த மக்கள் நம்பி இருந்தார்களோ, எந்த இடதுசாரித் தலைமைகளுக்காக தங்களது ஓட்டுரிமைகளை இழந்தார்களோ அதே தலைமைகள் அரசுடன் இணைந்து செயற்பட்ட எழுபதுகளில் தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டன. காணிச்சீர்த்திருத்தச் சட்டம் மூலம் தோட்டங்களைத் தேசியமயமாக்கும் உரிமையை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. தோட்டங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். வவுனியா என்றும் கிளிநொச்சி என்றும் இந்த மக்கள் அகதிகளாகப் இடம்பெயர்ந்தனர். பிந்திய அறுபதுகளில் நாடற்றோர் என்னும் ஒரு புதுப்பெயர் இடப்பட்ட மலையக மக்களை நாங்கள் கொஞ்சம் மீதியை நீங்கள் என்று இந்திய இலங்கை அரசுகள் பிரித்துக் கொண்டன. இந்திய அரசு ஏற்றுக் கொண்ட சுமார் ஐந்து லட்சம் மக்களையும் இந்தியப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்குமாறு இந்திய அரசுகேட்டுக் கொண்டது. ஆனால் ஏற்றுக் கொண்ட தொகைக்கும், விண்ணப்பித்த தொகைக்கும் இடையில் துண்டுவிழுந்த தொகை யான ஒரு லட்சத்துக்கும் சற்றே குறை வான தொகையினர் மலையகத்திலும் இல்லாமல் கடல் தாண்டியும் போகாமல் காணாமல் போய்விட்டனர். காடழித்து நாடாக்கிய பரம்பரைதானே! வவுனியாக் காடுகள் வாருங்கள் என்று வரவழைத்துக் கொண்டிருக்கலாம்.

பிந்திய அறுபதுகள் எழுபதுகள் என்றால் முப்பதாண்டுகள் என்பதுவும் சரிதான்! இயக்கங்கள் எழுச்சிபெற்ற, ஆயுதங்களைக் கையிலெடுத்த காலம் தான்.

ஒரு நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வேலையின்மை, வீடின்மை, பசி பட்டினி என்று கிடந்த மக்களை வெள்ளைக்காரர்களின் கங்காணிகள் கூட்டி வந்ததைப் போல் அதே நிலை யில் அகதிகளாகப் புலம் பெயர்ந்த இவர்களில் சிலரையும் இயக்கத் தோழர்கள் கூட்டிப் போயிருக்கலாம். பயிற்சி அளித் திருக்கலாம்.

நேரடிப் பங்கேற்காமை என்பதற்கான முரண்கள் இவை.

இனத்துவக்கலவரங்கள் பல்வேறு காலகட்டங்களில் நடந்திருந்தாலும் **1983** ஆம் ஆண்டுக் கலவரத்துக்குத் தனி இடம் உண்டு. திருநெல்வேலி வீதியில் **13** படைவீரர் கொல்லப்பட்டதால் வெடித்த கலவரம் இது என்றாலும் மலையகத் தோட்டத்து மக்களின் கொலைகள், உடமைகளின் அழிப்புக்கள், கல்விக் கூடங்கள், கோவில்கள் இடிப்பு என்று ஏகமான கொடூரங்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் அகதிகளாக காடுகளுக்குள் ஒளிந்து கிடந்தனர். கொழும்பு போன்ற நகரங்களில் தொழில் நிமித்தம் நகர்ந்துள்ள தோட்டத்து இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் சின்னா பின்னமாக்கப்பட்டன.

## “கரிப்புமணி” நிலம் கைவந்து சேர்ந்தது!

நிலவெறித்த பொழுதிலும்
நிலவொழித்த இருளிலும்
வெண்துகள் குவியல்கள்
சிரித்திருந்த தாய்நிலம்.
கரிப்பு மணிகளின்
தூய விளைநிலம்;
பகைவன் குகையாய்
பறந்து கொண்டது.

வாசலில் விரிந்திருந்தது
நிலம் விழுங்கி.
எம் உயிர்ப்பூக்கள் பல விழுங்கி
பசித்திருந்தது.

கவிதைகளாய் வானதி; கஸ்தூரியும்
கனவுகளாய் தமயந்தி; திலகாவும்
நூற்றுக்கணக்கில்
நெருப்பணிந்த நிலவுகளும்
உயிர்களைந்து போனபின்னும்
மெது நிலம் மெக்கில்லை.

ஆனையிறவு
அசையாத இறவாம்
சொல்லியது சிங்களம்.
இந்த விசப்பறங்களின்
துணிவில்தான்
‘சூரியக்கதிர்’ நாகம்
சுழன்றாடியது.
விசமூட்டி விசமூட்டி
உறவுகளை புதைத்தது.
‘ஓயாத அலை மூன்றாய்’
ஊழி எழுந்தது.
தலைவன் அசைவில்
விசப்பல் கெறி
வீழ்ந்து குலைந்தது;
எம் வாசலும் திறந்தது
ஆயிரமாயிரம் வீரரின் மூச்சுக்
காற்றினில் அசையுது
அழகாய் எம் கொடி!

**- தமிழவள் -**

ஆரம்பித்தது யாழ்ப்பாணம் திருநெல்வேலி என்றாலும் மலையகம்வரை வந்து தான் சாமியாட்டங்கள் நிற்பது வழமை யாகி விட்டது.

1977 ல் வடகிழக்கு பகுதிகளில் ஆரம்பித்த வன்முறைகள் மலையகத்தையும் வெகுவாகப் பாதித்தே இருக்கிறது.

1981ல் அம்பாறை மாவட்டத்தில் ஆரம் பித்த வன்முறை பரவிப் பரவி இரத்தினபுரி மாவட்டத்தின் 40க்கு மேற்பட்ட தோட் டங்கள் மோசமாகத் தாக்கப்பட்டன. லயங்கள் எரியூட்டப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தோட்டப்புறங்களில் இராணுவத்தின் சுற்றிவளைப்பும் மேற் கொள்ளப்பட்டது.

போர்க்கால சூழல்களின் பாதிப்புக் கள் மலையக எழுத்தாளர்களின் படைப்புக் களில் வெகுவாகவே காணப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

உதாரணத்துக்காக ஒருசிலரை குறிப் பிடலாம் என எண்ணுகின்றேன்.

என்னுடைய குடை நிழல் நாவல்.

இறுமாப்பு - மல்லிகை, மந்திரக்கோல், - தாயகம், சுவர் - ஞானம், சாம்பல் - மல்லிகை போன்ற சிறுகதைகள்.

மு. சிவலிங்கத்தின் வெந்து தணிந்த காலங்கள் (வீரகேசரி)

மாத்தளை வடிவேலனின் “இராமு தீபாவளிக்குத் தனது தோட்டத்துக்கு வருகின்றான்.”

மலரன்பனின் “தமிழ்ச்சாதி”

அல் அஸூமத்தின் “விரக்தி” மற்றும் “நிலத்தாய்” இரா சடகோபனின் “கருஞ் ஜூலை” (மல்லிகை) என்று நிறை யவே உண்டு.

இவைகள் ஒரு சில உதாரணங்களே! போர்க்காலச் சூழல் மலையக மக்களையும் மலையக இலக்கியத்தையும் மலையக அரசியலையும் இலகுவாகவே பாதித்து வந்துள்ளது என்பது மறுக்க முடியாதது.

# போரின் இருளில் தொலைந்து போன குரல்வளைகள் (இப்போதும் அப்படியே)

தானா விஷ்ணு

***‘போரின் கனத்த குரல்***
***ஒலிக்கும் போது***
***கேள்விகளைக் குறைத்துக் கொள்வோம்***
***அது மிகவும் நல்லது***
***இப்போது கேள்விகள் வேண்டாம்.’***

(வனத்தின் அழைப்பு பக்கம் 7)

இவ்வாறு அஸ்வகோஸ் எழுதியிருப்பது என்னிடம் இரண்டு அர்த்தங்களைக் கொண்டு வருகிறது. ஒன்று போர் உக்கிரமடைந்துள்ள நாட்களில் நாம் எமக்கான விடுதலையைக் கருத்தில் கொண்டு முரண்பாடுடைய விடயங்களை இப்போது தவிர்த்துக் கொள்வது நல்லது, இரண்டாவது போர் உக்கிரமாகியுள்ள இந்த நாட்களில் நியாயங்களைக் கதைப்பது எம்மை நாமே பலியாடாக்கிக் கொள்ளும் நிலைமையை ஏற்படுத்தி விடும் என்ற செய்தி.

போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரண்டு தரப்புக்களையும் நோக்கி முன்னிறுத்தக் கூடிய வார்த்தைகளாகவே இதனைக் குறிப்பிடமுடியும். ஏனெனில் இரண்டு தரப்புக்களும் தம்மை நோக்கி எழும், தமக்கு ஆபத்தெனக் கருதும் கருத்துக்களுக்கு ஆயுத அணுகுமுறைகளைக் கொண்டுதான் எப்போதுமே பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பல வெளிப்படையான உதாரணங்ள் உண்டு. ஆனாலும் ஒப்பீட்டுரீதியில் நோக்கும் போது இராணுவ அட்டூழியங்கள், அடக்குமுறைகள் கொலைகள், கற்பழிப்புக்கள் தொடர்பான வெளிப்பாட்டினை எமது இலக்கியங்கள் கணிசமாய்ப் பேசியிருக்கின்றன. அதிலும் கவிதை ஏனைய இலக்கியங்களை விடவும் வெளிப்படையாகவும் உள்ளார்த்தமாகவும் அனுபவ வெளிப்பாட்டுடன் பேசியிருக்கின்றன.

எப்போதுமே போராடும் இனம் என்ற அடிப்படையில் அதிகாரத்தின் மீது எதிர்க் குரல்களை எழுப்புவது வழமையான ஒன்றாகவே இருக்கின்றது. அதிகாரத்தின் மீது ஓங்கி அறையும் குரல்களையும் இரசிக்கத் தோன்றுகிறது. இதன் அடிப்படையில்தான் எம்மிடையே பலஸ்தீனக் கவிதைள், தென்னாபிரிக்கக்கவிதைகள் பெரும் வரவேற்பினைப் பெற்றிருக்கின்றன.

**"துப்பாக்கி முழக்கம் சொற்களை விடவும்**
**உரத்துப் பேசின**
**நீதி கோரும் எமது மக்களைத்**
**தடுத்திட வேண்டாம்**
**எமது புண்களைக் கிளறிட வேண்டாம்.**

**ஓநாய்களாக வேட்டைப் பறவையாய்**
**ஒவ்வொரு நாளும் பலியிடப்படுகிற**
**ஆட்டுக் கடாக்களாய்**
**கணிக்கப்படுவதனை நான் வெறுக்கின்றேன்"**

*(பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் 78)*

இவை அந்தொய்னே ஜபாறா என்ற பலஸ்தீனக் கவிஞனின் வரிகள் இருந்தாலும் முற்றுமுழுதாக இவை எமக்குச் சொந்தமான வரிகளாகவும் மாறியிருக்கின்றன. உலகில் எங்கு போர் நடந்தாலும் அது போருக்குள் வாழநேரும் எல்லோருக்கும் பொதுவானதாகவே அமைந்து விடுவது தவிர்க்க முடியாதுள்ளது. போரின் உக்கிரங்களும் அதன்பால் நிகழும் இழப்புக்களும் வலிகளும் வெற்றிகளும் தோல்விகளும் போராடும் எல்லா இனத்துக்கும் உரியதாகவே அமைந்துவிடுவதும் இயல்பானதே.

பலஸ்தீனத்தைப் போலவே நாமும் அதிகாரங்களுக்கு அடிபணிந்து போக வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி யிருக்கின்றோம். அங்கே நிகழ்ந்ததுபோல அல்லது அதனைவிடக் கொடு மையான வகையில் எமது போராட்ட காலங்களில் ஏற்பட்ட இழப்புக்கள், துயரங்களின் வெளிப்பாடுகள் கணி சமான அளவு இலக்கியரீதியாக வெளிக்காட்டப்பட்டுள்ள அதேநேரம் அதிகாரத்தின் வெளிப்பாடுகளை, அடக்கு முறைகளை, இராணுவத்தின் அட்டூழி யங்களையும் காலங்காலமாகக் கவிஞர் கள் வெளிப்படுத்தத் தவறவில்லை என லாம். அவ்வாறானதொரு அடிப்படையில் முதன் முதலாக வெளிவந்த தொகுப்பாக நான் "மரணத்தில் வாழ்வோம்" கவி தைத் தொகுப்பினை அடையாளங் காணுகின்றேன். அதே நேரம் இதனைத் தமிழ்த்தேசிய உணர்வை வெளிப்படுத்தும் மிக முக்கியமான தொகுப்பாகவும் அடையாளப்படுத்த முடியும். அதேபோல இராணுவத்தினரின் காம வெறியினை மிக வெளிப்படையாகப் பேசிய கவிதையாகக் கலாவினுடைய கோணேஸ்வரிகளைக் குறிப்பிடலாம்.

ஒரு போராடும் இனத்தைச் சேர்ந்த வர்கள் என்ற அடிப்படையில் ஈழத்துக் தமிழ்க் கவிஞர்களிடம் எதிரியை மிகவும் கொடியவனாகச் சித்தரிக்கும் அல்லது கோரனாகச் சித்தரிக்கும் மன நிலை இருந்தே வந்துள்ளது. போர் நடந்த நாட்களில் போரைப்பாடுதல், வெற்றியைப்பாடுதல், போர்வலி யைப் பாடுதல், இழப்பினைப் பாடுதல், இயல்பானதொன்றே. அதே நேரம் வெற்றிக் களிப்பில் மிதந்தவண்ணம் எதிரியானவனைப் பழித்தும் திட்டியும் எழுதப்பட்ட கவிதைகளும் உண்டு. வெற்றி நிகழும்போது எதிரி மிகக் கொடூரமாகத்தோற்கடிக்கப்படுகின்றான். இதனால் அங்கே இறந்துபோனவர்கள் எதிரிகள் அவர்களை மனிதர்களாகக்கூட நினைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகிறது. ஆனை யிறவு வெற்றியைக் கொண்டாடி வெளிச்சம் சஞ்சிகை கூட்டுக் கவி தைத் தொகுதியொன்றினை வெளி யிட்டிருந்தது. இதில் ஆனையிறவு வீழ்ந்த மகிழ்ச்சி மட்டுமல்ல எதிரி யின் தோல்வியை நக்கல் செய்தும் மாபெரும் கொடூரன் அழிந்தான் என்ற தொனிப்பொருளுடனான கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடியும். இது வெற்றியினைப்பாடும்

திட்டமிட்ட நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளதால், பல கவிதைகள் கவித்துவமற்று வெறுமனே செய்யப்பட்டவை போலவும் தோற்றம் தருகின்றன.

**"ஆனையிறவு**
**அசையாத இறவாம்**
**சொல்லியது சிங்களம்**
**இந்த விசப்பற்களின்**
**சூரியக்கதிர்; நாகம்**
**சுழன்றாடியது."**

இது 'ஆனையிறவுக் கவிதைத் தொகுப்பில் தமிழவள் என்னும் பெண் கவிஞரின் கவிதை. இது ஒருவகையில் நான் மேற்சொன்ன விடயத்தினை வெளிப்படுத்தும் கவிதைக்கான ஒரு மாதிரியாகக் கொள்ளலாம். இதேபோல கோரனாக எதிரியைக்காட்டும் கவிதைக்குச் சான்றாக

**"பேய்களின் உலகம்**
**பிரளயத்தில் அதிர்ந்தது**
**குட்டிச்சாத்தான்களின் வாய்களில்**
**குருதி கொப்பளித்தது."**

*(விவேக், ஆனையிறவு பக்கம் 08)*

இப்பகுதிகளை ஒரு மாதிரிக்காக எடுத்துரைத்துள்ளேன். இவைபோல இன்னும் பல கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

இவ்வாறான பாடுபொருட்ளைக் கொண்டமைந்த கவிதைகள் காலத்திற்குக் காலம் வெளிவந்திருக்கின்றன. கவிதைகளில் சிங்கள இராணுவத்தினர் பல்வேறு புனைபெயர்களால் அழைக்கப்பட்டிருந்தனர் அல்லது குறிப்பிடப்பட்டிருந்தனர். காடையர், பேய், பிசாசு, பிடாரன், சாத்தான், பிணம் தின்னி, வேட்டைநாய் போன்ற இன்னும் பல அடைமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. அநாமிகனின் கவிதையொன்றில்

**"புனர் வாழ்வளி (ழி)ப்பு முகாமின்**
**வெற்று மனிதர் முன்**
**உயிர் தின்னும் காடையர்"**

*(எலும்புக்கூட்டின் வாக்குமூலம்) (பக் 74)*

அமராதஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

**"பெரு வனத்தின் திக்கொன்றிற் தொடங்கி**
**நீள்கிறதென் நெடும் பயணம்**

**கொடிய மிருகங்களிடமிருந்தும்**
**விஷ ஜந்துகளிடமிருந்தும்**
**லாவகமாய்த் தப்பிப் பிழைத்து**
**பள்ளங்களில் இறங்கி........."**

*(இயல்பினை அவாவுதல் - பக்கம் 15)*

இது அமரதாஸினுடைய கவிதைகளில் ஒன்று இவ்வாறு பல இடங்களில் இராணுவம் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சித்தாந்தன் "பிடாரனின் திகைப்பூட்டும் கனவுகளிலிலிருந்து தான் தப்பிச் செல்வதாகக்" குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு இன்னும் பல கவிஞர்கள் எதிரி தொடர்பான அல்லது அடக்குமுறையாளர்கள் தொடர்பான தமது பதிவுகளையும் முன்வைப்புச் செய்துள்ளார்கள்.

இது எப்போதும் இழப்பினையும் அழிவினையும் கண்டு ஒவ்வொரு ஊராக அலைந்து திரிந்த கவிஞன் அல்லது படைப்பாளன் மனநிலையிலிருந்து வெளிவருவது இயல்பானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

இருந்தாலும் எமது கவிஞர்கள் இவற்றினையெல்லாம் தாண்டி நுண்ணுணர்வு சார்ந்த படைப்புக்களையும் போருக்குள்ளிருந்து அதன் வலிகளுக்குள்ளிருந்து அதன் காயங் களை ஆக்ரோசம் இல்லாமல் பிரச்சாரம் இல்லாமல் வெளிப்படுத்தும் படைப்புக்களையும் தந்திருக்கின்றார்கள். இதற்கு பல படைப்பாளிகளைக் குறிப்பிடலாம். எப்போதுமே போருக்குள் வாழ்ந்து அதன் இழப்புக்களை நன்கு உணர்ந்த ஒரு

கவிஞனின் வரிகளுக்கிடையே மௌனமாகத் துயரம் கவிந்துபோய் இருக்கும். போரை வியாபாரம் செய்யும் படைப்பாளிகளிடமிருந்து அத்தகைய கவிதைகள் பல மடங்கு வேறுபட்டு நிற்கும் என்பது வெளிப்படை, இன்று சில படைப்பாளிகள்தங்களைமிகத்தீவிரமான தழிழ்த்தேசிய வாதிகளாகக் காட்டிக் கொள்ளும் படைப்புக்களைச் செய்து, புலம்பெயர் நாட்டில் தமிழ் தேசிய வாதிகளாகத் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும் பலருக்கு விற்பனை செய்துகொண்டிருக்கும் அபத்தமான நிலையினை உருவாக்கியிருக் கின்றார்கள். ஆனால் நான் மேலே குறிப்பிட்டுள்ள துயர்கவிந்த கவிதைகள் போரின் வெற்றியையும் தோல்வியையும் தாண்டி மனித அவலத்தைப்பாடுவது, மனித வலியைப்பாடுவதாகும்.

பா.அகிலனுடைய கவிதையொன்று யாழ்ப்பாணம் இராணுவத்தால் கைப் பற்றப்பட்டபோது யாழ்ப்பாண மக் களின் மனநிலை எவ்வாறானதாக இருந்தது என்பதனை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றது.

**'பிதாவே,**
**சிதறிப்போனார்கள்**
**குரல்கள் கைப்பற்றப்பட்ட சனங்கள் எல்லாம்,**
**வெறிச்சோடியுள்ளன வீடுகள்**
**தேவாலயத்தின் வழிகளெல்லாம்**
**உதாசீனம் செய்யப்பட்ட அவர்களின் துயரங்கள்**

**சேவல் கூவுவதற்கு முன்பாக**
**பேதுரு எல்லாவற்றையும் பன்முறை**
**– மறுதலித்தான்**
**சிறைப்பிடிக்கப் பட்ட நகருள்**
**என்றாலும் நீர் பிறந்துள்ளீர்.**
**குருதியாறாத நிலத்தில்**
**நித்திய மோனத்தில்.'**

*(பதுங்குகுழி நாட்கள் : பக்கம் 37)*

சித்தாந்தனுடைய கவிதையொன்றில் இராணுவத்தின் பிரசன்னத்திற்குப்பின் தெருக்கள் எவ்வாறு இருந்தன என்ப தோடு, அடக்கு முறைக்குள் வாழ நேர்ந்த மக்களின்மனநிலையினையினையும்மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளதை அவதானிக்க முடி கின்றது.

**'எங்கள் தெருக்களில் குழந்தைகளைக்**
**காணவில்லை**
**குழந்தைகளின் கனவுகளை மிதித்துக்**
**கொண்டு**
**இராணுவ வாகனங்கள் விரைந்து செல்கின்றன**

**முகங்களைக் கறுப்புத் துணியால் கட்டிய**
**– இராணுவர்கள்**
**நடமாடத்தொடங்கிய பிறகு**
**குழந்தைள் தெருக்களை இழந்தன**
**தாய்மார்கள் இராணுவத்தைப் பயங்காட்டி**
**உணவூட்டத் தொடங்கிய பிறகு**
**தெருக்கள் குழந்தைகளை**
**இழந்தன......'**

*(துரத்தும் நிழல்களின் யுகம் : பக்கம் 56)*

இதேபோல மரணத்துடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வின் கொடுமை யினைக் கருணாகரன் தனது மொழியில் குறிப்பிடும் போது

**"பறவைகளின் சிறகுகளில்**
**சாவு வந்து குந்திக்கொண்டிருக்கும்**
**காலம் இதுவல்லவா**

**இந்தப் பதுங்கு குழிக்கு**
**எங்கள் எதிர்காலத்தைக் காப்பாற்றும்**
**கருணையும் வலிமையும்**
**இருக்கிறதா"** என்கிறார்.

அஸ்வகோஸ் "சிதழூறும் காயங்கள் பேசும் மொழியினில் என்னைப் பேச விடுங்கள்" என்கிறார்.

இவ்வாறு எமது பல கவிஞர் களிடமிருந்து பல்வேறு உதாரண வரிகளை எடுத்துக்காட்ட முடியும்

ஆனால் கட்டுரையின் சுருக்கம் கருதி அவற்றினையெல்லாம் எடுத்துக் காட்ட முடியவில்லை.

இவற்றினை விடவும் இன்னும் சில கவிஞர்கள் போரைப்பாடுதல் என்பது இன்னொரு வகையில் விடுதலைப்புலிகளின் தலைவரின் புகழ்பாடுதல் அல்லது அவரைத் தூய்மைப்படுத்துதல் என்ற இன் னொரு போக்கிற்குரியதாகவும் கருதி வந்திருந்ததினை நாம் அவ தானிக்க முடிந்திருக்கின்றது. இதுவும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் எழுதப்பட்ட ஒன்றாக இருந்தாலும் மாபெரும் வழிபாட்டு மரபினை ஏற்படுத்தும் ஒன்றாக இது மாறியிருந்தது. இதன் உச்சகட்டத்தைத் தொட்டவராக புதுவை ரத்தினதுரையினைக் குறிப் பிடலாம். இவரைத் தொடர்ந்து இவருடைய பாதிப்பில் எழுதிவந்த பல இளம் கவிஞர்கள் தவிர்க்கமுடியாமல் அவ்வாறானதொரு தொடர்ச்சி யினைப்பேணிவந்திருந்தனர். இதற்குப் பல கவிஞர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம் அதிலும் போராளிக் கவிஞர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கடவு ளாகவே பாவனை செய்து எழுதி வந்திருந்தமை வெளிப்படையானது இது பிரபாகரன் மீது தங்களுக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் கருவியாக கவிதைகளைப் பயன் படுத்தியிருந்ததோடு, ஏனைய பொறுப்பாளர்களிடம் நன்மதிப் பினைப் பெறும் நோக்கமாகவும் இருந்திருக்கின்றது. இதற்கு மிக முக்கியமான எடுத்துக்காட்டாகப் போராளிக்கவிஞராக இருந்த வீரா என்பவர் தனது “முதன் முதலாய்” என்னும்கவிதைத்தொகுப்பில்குறிப்பிடும் போது பிரபாகரனைத் தான் சந்தித்த போது அவரின் தலைக்குப்பின்னால் ஒளிவட்டம் சுழல்வதனைக் கண்டதாகச் சொல்கிறார். இதுபோல அத்தொகுப்பில் பல இடங்களில் அவரைக் கடவுளாக உருவகிக்கும் இடங்கள் உள்ளன. இந்தத் தொகுப்பினை மெச்சி அவருக்குப் பொறுப்பாக இருந்த சேரலாதன் என்னும் போராளி துப்பாக்கி ஒன்றினைத் (AK47) தனது கையெழுத்துப் பதித்து வீராவுக்கு அன்பளிப்புச் செய்த சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

இவ்வாறான புகழ்பாடுதல் காலம் காலமாக நிகழ்ந்து வந்துள்ளது வெளிப் படையானதுதான். நாம் தமிழ்க் கவி தையின் தோற்றகாலமாகக் கருதி வரும் சங்ககாலத்திலும் இவ்வாறான நிலைமை பெருவாரியாக நிகழ்ந்து வந்துள்ளமை எமது அறிவுக்குட்கிடையானதுதான். ஆனாலும் தேவை ஏற்படும்போது அக்காலத்துக் கவிஞன் அரசனுக்கு அறிவுரை வழங்கியதாகவும் சினந்து பேசியதாகவும் பழித்துப் பேசியதாகவும் இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. எமது புலத்தில் அப்படியொரு அதிசயம் நிகழவில்லை. அப்படி நிகழ்த்தக்கூடிய சூழ்நிலையினையும் எமது ஆயுதத்தரப்பினர் வழங்கி யிருக்கவில்லை. ஓரளவில் இராணு வத்தினரை எதிர்நிலையில் வைத்து எழுதப்பட்டிருந்தாலும் அது இன் னொரு வகையில் குறியீட்டிலும், படிமக்காட்சிகளாகவும் வெளிப்படுத் தப்பட்டுள்ளமையினையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். ஆனால் விடுதலைப்புலிகளை எமது கவிஞர்கள் விமர்சித்து எழுதுவதனைத் தவிர்த்து வந்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் வாழச்சாத்தியமான புலம் பெயர்ந்த கவிஞர்கள் சிலர் தமது எதிர்க்கருத்துக்களைக் கவிதைளாகவும் கதைகளாவும் வெளிக்கொணர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும். அது அவர்களின் இருப்புக்குப் பெருமளவில் பாதகமாக அமைந்திருக்காமை அவர்கள் துணிந்து எழுதுவதற்குப் பெரும் சாத்தியமாகவும் வாய்ப்பாகவும் அமைந்திருந்தமையும் இங்கு நினைவுகொள்ளத்தக்கது. அதே போல முஸ்லீம் கவிஞர்கள் சிலர் விடுதலைப்புலிகள் மீதுள்ள விமர்சனங்களினைப் படைப்புக்களில் வெளிக் கொண்டுவந்திருந்தனர்.

என். ஆத்மா குறிப்பிடுவதனைப் பார்க்கையில்,

***"முஸ்லீம்களைக் கொன்று கன நாளாயிற்றே***
***இனிக் கொல்வதில்லையா?***
***கொல்வதில்லையென்பதில்லை***
***இப்போதைக்கு இல்லை"***

இந்த வெளிப்பாட்டு நிலைமை விடுதலைப்புலிகளால் சகோதரப் படுகொலைகள் மிக வெளிப்படையாக நிகழ்த்தப்பட்டபோதும் கேட்பாரின்றி அப்பாவிப்பொதுமக்கள் கொல்லப் பட்டபோதும் எமது தமிழ்க் கவிஞர் களிடமிருந்து வரவில்லை. அதற்கான காரணம் நான் மேலே குறிப்பிட்டிருந்த அஸ்வகோஸின் வரிகளில் உண்டு.

இறுதி யுத்த காலத்தில் மக்கள் மூடுண்டுகிடந்த வன்னிப்பரப்புக்குள் மக்களின் துயரங்களை, அவர்களின் அவலங்களை அங்கே வாழ்ந்த பாத்திரம் என்ற அடிப்படையில் கவிஞர் கருணாகரன் மிக நுண்ணிய உணர்வுகளாய் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டுக்கு

**"ஒருவர் பின்னொருவராய்**
**சாகக் காத்திருக்கிறோம்**
**பிணங்கள் விழ விழ**
**பிணங்களாயே விழ**
**முடிவுற்ற இரவுகளின்**
**துயர்க்கயிறு நீள்கிறது**
**நம் கால்களுக்கிடையில்**
**ஊரும் போர்ப்பாம்பு**
**ஒவ்வொரு தலையாய் வீழ்த்துகிறது**

**முடிவற்ற சவ ஊர்வலத்தில்**
**சிக்கியழிகிறது பொழுது**

**புனித நினைவாலயங்கள்**
**ஒவ்வொன்றாக வீழ்கின்றன**

**எங்களைக் கைவிட்ட கடவுளர்கள்**
**எங்களால் கைவிடப்பட்ட கடவுளர்கள்**
**எல்லாம் இங்கேதான்**
**இனி வரும் முடிவற்ற இரவு**
**நமது பிணங்களின் பரிசாக.**

*(பலியாடு பக்கம் 112)*

இவ்வாறு எடுத்துக்காட்டத்தக்க பல கவிதைகள் அவருடைய தொகுப்பில் உள்ளன.

ஆனால் இறுதிக்காலத்தில் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் அவர்களை நம்பிய மக்களுக்கு அவர்கள் இழைத்த அநீதியினை யோ. கர்ணன். தனது கதைகளில் கொண்டுவந்து நிறுத்தியது போல அங்கு வாழ்ந்த கவிஞர்கள் தமது கவிதைகளில் வெளிப்படுத்தவில்லை. சிலவேளை எதிர்வரும் காலங்களில் அவை வெளிப்படையாகக் கவிதைகளில் பேசப்படவும் கூடும். பொதுவாகப் பார்த்தால் எப்போதும் எமது கவிஞர்கள் மௌனமாக இருக்க வேண்டியநிலையிலேயே இருந்தார்கள். அவ்வாறே இப்போதும் இருப்பதற்கு அஸ்வகோஸின் அதே வரிகளையே ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம் எனத்தான் தோன்றுகிறது.

○ ○ ○

# இணைப்புக்கான பாலம்
# ஆங்கிலக் கவிதைகள்



The vultures hover above
Blood blackened towns and villages
Rare books irreplaceable
Human flesh in fragment,
All lost forever

யாழ் நூலக எரிப்பைத்தொடர்ந்து ஜெகதீஸ்வரி நாகேந்திரனின் ஆங்கில மொழி மூலம் வெளியாகிய கவிதை இது. பண்பாட்டு அடையாளத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் பலியிடப்பட்டது புத்தகங்களே, ஆயினும் அவற்றை மனிதர்களாக அவர்களின் வாழ்வின் தொகுப்பாக சித்தரித்து துயரு-றும் இவர் பின் நாட்களின் துயரங்களையும் முன்னுணர்ந்து கொள்கின்றார். தமிழ் மக்களுடைய வாழ்வியல் அவலங்கள் ஆங்கில மொழி மூலம் சர்வதேச வியாபகத்தைப் பெறத்தொடங்குகிறது.

They sit where you ask them to sit,
They sit against the wall, they sleep
against the wall,
They curl up on mats embryos in sleep,
Some curse and grumble others silence keep.

*1983*இன் இன வன்முறை பலரை அகதி முகாங்களுக்குள் செலுத்தியது. சொந்த வாழிடங்கள் பாதுகாப்பற்றவையாகிவிட்டன. ஜேன் அரசநாயகத்தின் Refugees old men, old women, கவிதை மனித அவலத்தில் நிறைந்த வலியும் துயரமும் மிகுதியாகிப்போன ஒரு அகதி-முகாமின் காட்சியை விபரிக்கவும், மன-தின் செயற்பாட்டை இழந்துபோன மனிதர்களாக எங்கே இருக்கச் சொன்னார்களோ அங்கேயிருந்து அங்கேயே தூங்கிப்போன மனித செயற்பாட்டை, மனிதம் மீது இன மோதல் விளைவித்த அதிர்ச்சியினையும், வலியையும், வெளிக்கொணரும் வரிகளாக இவை அமைகின்றன.

Old men Women and Children with Bowls and
Plates
They stand, lining the stairways and the
Passages in ques for food, rice and sambar.

இந்த வரிகள் மீளவும் மீளவும் 2009 வரை அகதி முகாம் வாழ்வில் தொடர்ந்தது. சோற்றுக்காக, தட்டுகளை ஏந்தியபடி வரிசையில் காத்திருப்பது மனிதத்தின் மீது கடந்து போன வரலாற்றில் பதிவாகியுள்ளது.

Out or in, there’s no guarantee, there’s safety,
The town in burning
The streets are filled with marauders
New fires start up before old one
die down or are put out,

**அ. அன்ரன் அன்பழகன்**

கொழுந்து விட்டெரிந்து பழைய தீப்பிளம்புகள் அணைந்து போவதற்கு முன்பே, புதிதாய் எழுந்த தீப்பிளம்புகளால் நிறைந்துபோன வீதிகளின் காட்சிப் படிமங்களை பதிவு செய்துள்ளார் ஜேன் அரசநாயகம். பிறப்பால் பறங்கியர் இனத்தைச் சேர்ந்த இவர் திருமணத்தின் மூலம் தமிழர் ஒருவருடன் இணைந்ததினால் தமிழர்களின் துயரத்தில் பங்குகொண்ட ஒருவராகிறார். இவருடைய கவிதைகள் apocalypses எனும் கவிதை தொகுதியாக வெளிவந்தது. அகம் சுருங்கிய சுயத்தை மட்டுமே கருத்துக்கு எடுக்கும் (introvert and self centered) சமூகமாக இந்த தேசத்தின் மக்கள் மாறிப்போயிருந்த இயல்பை வெளிக்கொணரும் கண்ணாடியாக தன்னுடைய கவிதைகளை ஆக்கியிருந்தார்.

As dusk descend on Jaffna
the ghost- town empties of people
only the bullet ridden bodies remain
a school girl and an old man
terrorist in tomorrow's news-cast.

இருள் கவியும் வேளையில் மனிதர்களே இல்லாது வெறுமையாகிப் போன யாழ் நகரத்தில் எஞ்சியிருந்தது குண்டு துளைத்த ஒரு பாடசாலைச் சிறுமியும், ஒரு வயோதிபரும் மட்டுமே எனக்காட்சிப்படுத்தும் இக்கவிதை வரிகள் அவர்கள் நாளைய செய்திகளின் பயங்கரவாதிகள் என 83இன் பின்னரான யாழ்ப்பாணத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார். "Let life go on" எனும் கவிதைகளில் சுரேஸ் கனகராஜா, யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவரான இவரின் கவிதைகள் அன்றைய யாழ்ப்பாண வாழ்வை ஆங்கில இலக்கியத்தளத்துக்குள் கொண்டு செல்கிறது.

Dusk descends on Jaffna
But bright lights and balloons beautify
a small house in a narrow alleys;
an infant's first birthday.

இருள் கவிந்த மரணங்கள் மலிந்த யாழ்ப்பாணத்திலும் ஒளிரும் மின் குமிழ்களாலும், பலூன்களாலும் அலங்கரிக்கப்பட்டு குழந்தை ஒன்று தன் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடும் முரணை, நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் கவிதைத் தளத்தில் பயணிக்க வைக்கின்றார்.

Let life go on
What war be the odds
Let life go on

என்ன வகையான இடையூறுகளுக் கூடாகவும், வாழ்வை முன்னோக்கிச் செல்ல அனுமதிக்கிறார்கள் என அன்றைய கால கட்டத்தின் மனிதர்களின் வாழ்வுபற்றிய பார்வையை வெளிப்படுத்தி நிற்கிறது.

There were no coffins
There were no flowers
There were no mourners
And there were no bodies
Only lumps of flesh
Gummed to the bloody mats
Swarmed by giant flies
Shielded by greedy crows and
Followed by growling dogs

"October 1987" எனும் கவிதைகளில் பால ஜோகினி ஜெயக்கிருஷ்ணன் இந்திய அமைதிப் படைக்காலத்தை நம் கண்முன்னே கொண்டு வருகிறார். சவப்பெட்டிகள் இல்லை. அலங்கரிக்க மலர்கள் இல்லை. ஒப்பாரி வைப்பதற்கு யாருமே இல்லை. அது உடலாகக்கூட இல்லை.

சிதைந்துபோன எலும்பும், தசையும் ஒட்டிக் கிடக்கும் குருதி தோய்ந்த பாயில் சுற்றிக்கிடக்கிறது. பறக்கும் இலையான்களிடமிருந்தும், காகங்களிடமிருந்தும், தொடரும் நாய்களிடமிருந்தும் தப்பித்துக் கிடக்கிறது என விரியும் அவரின் காட்சிப்படுத்தலை மீளவும் மீயவும் நாம் சந்தித்தோம்.

இறுதியில் குறுகிய ஊரடங்கு தளர்த்தப்பட்ட இடைவெளியில் அடுக்கப்

பட்ட சடலங்களுக்கிடையே அவசர அவசரமாகப் பிரார்த்தித்த குருவானவர்.

God bless you,
Peace be with you,
Peace be with them,
The peace makers
Peace be with us,
and peace be with everybody.
Amen, amen, amen

என முடிகிறது அவரது கவிதை.

You burned the buildings
and put me in prisons
You threw their infants info fire
and called me inhuman
You murdered in Open light
and blamed me for wanting blood.
You turned my neighbor into refugee
and said I am responsible.
…………..

***கட்டடங்களை எரித்தவன் நீ,***
***ஆனால் என்னையே சிறையில் அடைத்தாய்.***
***அவயலவர்களின் குழந்தைகளை எரிநெடுப்புக்குள் வீசியவன் நீ.***
***ஆனால் என்னையே மனிதம் இல்லாதவன் என்றாய்***
***பகலின் வெளிச்சத்தில் படுகொலை புரிந்தவன் நீ***
***ஆனால் என்னையே இரத்தவெறியன் என்றாய்***
***என் அயலவனை அகதியாக்கியவன் நீ***
***ஆனால் நானே இதன் காரணன் என்றாய்***

"Just society" நீதியான சமூகம் எனும் பசில் பெர்னாண்டோவினுடைய கவிதையின் பிரித்தெடுக்கை இது. 1983 யூலையில் இக் கவிதை வெளியாகியது. ஆங்கிலப் படைப்பாளிகள் பலரின் மனங்களை 83 இனவன்முறை பலமாகத் தாக்கியது. ரஜீவ விஜயசிங்க, நிர்மலா ஹெட்டியராச்சி, ரிச்சட் டி செய்சா, கமலா விஜயரத்னே என இந்த வரிசை மிக நீளமானது.

மனிதப் பாகுபாடுகளின் விளைவுகளில் ஒன்றாக இனமோதல் இவர்களைப் பாதித்ததுடன் நீதியான தீர்வுக்காக குரல் கொடுக்கவும் வைத்தது. இந்த தளத்தை நாம் பயன்படுத்த தவறியிருக்கிறோம் என்பது துயரமானது. இந்த தளத்தின் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளை நியாயங்களை சாதாரண சிங்கள மக்களிடம் எடுத்துச் சென்றிருக்க முடியும்.

பசில் பெர்னான்டோவின் கவிதை இவ்வாறாகத் தொடர்கிறது.

You say it's peace
When you put the blame on the innocent
You say it's stability
When you protect culprits
You say its honesty
When hide the reports
and hush the inquires
Spread falsehood among the nations
Having a laugh at a restless nation
Divided and wounded

***இதனையே சமாதானம் என்றாய் நீ***
***குற்றத்தை அப்பாவிகள் மீது சுமத்தினாய்***
***இதுவே நிலைபேறுடையது என்றாய்***
***குற்றவாளிகளைப் பாதுகாத்தாய்***
***இதுவே நேர்மை என்றாய்***
***விசாரணை அறிக்கைகளை மறைத்தாய்***
***வெளிவரவிடாது கடினமாக்கினாய்***
***நாடுகளிடையே பொய்களைப் பரப்பினாய்***
***பிரிவினாலும் வலியினாலும் அமைதியற்றுப்போன நாட்டைப் பார்த்து எள்ளி நடையாடினாய்***

எனத் தொடர்ந்தது பசில் பெனான் டோவின் கவிதைகள்

"All bloody revolution are the result of long slow accumulated insult to the quick of pride in the mass men"

என D.H. Lawrence இனால் குறிக்கப் பட்ட வார்த்தைகள் எமது தேசத்தின்

வரலாற்றிலும் நிறுவப்பட்டுள் ளது. தொடர்ச்சியான அவ மதிப்புக்களால் மனிதர்கள் அழுத்தப்படும்போது வன் முறைக்கான வாய்ப்புக்கள் அங்கே உருவாக்கப்படுகின்றன என்பதே இதன் கருத்தாகும்.

அமெரிக்க சிவில் யுத்தம் கறுப்பின மக்களின் விடு தலைக்கான மார்க்கத்தில் பயணித்தபோது அமெரிக்கப் பெரும் கவிஞர் Walt Whitman 1885 இல் வெளியிட்ட "Leaves of Grass" (புல்லின் இதழ்கள்) கவிதைத் தொகுதியில் ஒரு கவிதை

***"நீக்ரோ உனக்காக நீ பேசமுடியாது***
***நான் உனக்கு என் நாவைத் தருகிறேன்***
***உன்நாவில் ஒரு பாம்புபோல் நெளிகிறேன்"***

என அடக்கு முறைக்கு எதிராக அவன் கோபம் வெளிப் படுகிறது. அமெரிக்காவின் அசைக்க முடியாமல் வேரூன்றிப் போயிருந்த நிறவெறிக்கு எதிராக அவன் கொதிப்படைந்தான். மனித நேயம் மிக்க உறவுக்காரர்கள் தமிழ்மொழி கடந்தும் வரவேண்டும். குறிப்பாக சிங்கள மனிதாபிமானமிக்க புத்தி ஜீவிகளிடமிருந்துவரவேண்டும். இதுவே அறிவுத்தளத்தினூடாக சாதாரண சிங்கள மக்களை எமது நியாயங்கள் சென்றடையக் கூடிய வழிமுறையாகும்.

❍ ❍ ❍

# செப்றெம்பர் நான்காம் நாள்

ஹோர்ஹே ஸல்காடோ றோச்சா
(Jorge salgado Rocha)
(சிலே நாட்டவர். 1945ல் பிறந்தவர்)

துப்பாக்கிச் சனியனைப் போல நீளமான ஒரு நாள் அது?
நமது இறுதி நம்பிக்கையெனும் குடாவில்
நங்கூரமிட்ட போர்க்கப்பல் போல
மிரட்டுகிற ஒரு நாள் அது.

மனக்கிலேசங்களும், அச்சமும், ஆயுதங்களும், குருதிப்பெருக்கும்,
மக்களின் முடிவற்ற பொறுமையின் இடையே
பயங்கரமாகக் கவ்வும் சாம்பற்தலைக் கவசங்களும் கொண்ட
தெளிவான உலர்வான நாள் அது:
செப்றெம்பர் நான்கு,
சனநாயகத்தின் நாள்.

கைப்பற்றுதல்களின்,
வீதித் தடுப்புக்கள், எதிர்ப்புப் பாடல்களின்,
வெடியோசைகள், சூடுகள், கைதுகளின்
குண்டுகளால் நோவுண்டு அலறும் இளம் உடல்களின் நாள்.

அன்றிரவு,
பசியையும் அமைதியையும் நீதியையும் விடுதலையையும்
தாங்கிய பூரண ஆயுதபாணிகளாக,
கொடுங்கோலர்கள் 'எமது பாசத்துக்குரிய தேசம்' என அழைக்கும்
பொருளற்ற கோமாளித்தனத்தின் மீது
கடுந்தாக்குதல் தொடுக்கத் துணிந்திருந்தோம் என்று
ஒப்புக்கொள்ளுமாறு கட்டாயத்துக்கு ஆளாக
எத்தனை பேரின் நித்திரை உலுக்கிக் கலைக்கப்பட்டது?

**ஆங்கிலத்தில்:- டைனா லிவிங்ஸ்வுன்** (Dinah Livingstone)
**தமிழில்:- சி.சிவசேகரம்**

**ஞானம் 20ஆம் இதழ் (2002)**

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் போர்க்கால வாய்மொழிப் பாடல்கள்

**எம்.ஐ.எம். ஹனிபா இஸ்மாயில்**
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்),
வலயக் கல்வி அலுவலகம்,
அக்கரைப்பற்று.

இலங்கையின் பல்லின சமூக நிலையில், தமது தனித்துவமான கலாசார பாரம்பரியங்களைப் பேணிக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து குறிப்பாக கிழக்கில் செறிவான நிலையில் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 1983ஐ ஒட்டிய காலப்பகுதியிலிருந்து வடகிழக்குப் பெருநிலம் யுத்த பூமியாக மாற்றப்பட்டதோடு உண்டான சுமுகமற்ற நிலை முஸ்லிம்களை வெவ்வேறு வகையில் பாதித்திருக்கின்றன. இத்தகைய பாதிப்புக்களின் வெளிப்பாடாக முஸ்லிம் மக்களிடமும் போர்க்கால இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

பொதுவாக, சமகால இலக்கியம் எனும் வகைப்பாட்டிற்குள் எழுத்திலக்கியங்களையே கவனத்தில் கொள்ளும் வழக்கம் உள்ள நிலையில், வாய்மொழி இலக்கியங்களும் நவீன உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கின்றமையை விபரிக்க வேண்டிய தேவையுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் போர்க்காலச் செய்திகளை வெளிப்படுத்தக் கூடிய எண்ணற்ற பாடல்கள் உள்ளமை பற்றி பலரும் அறியாதிருக்கலாம். அவ்வாறுள்ள பாடல்களுள் முக்கியமானவை மட்டும் இக்கட்டுரையில் பயன் படுத்தப்படுகின்றன.

**01.கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே தோன்றியுள்ள வாய்மொழிக்காவிய வடிவங்கள்.**

**I. வன்செயற் காவியம் :**

மூதூரைச் சேர்ந்த பாவலர் "மூதூர் கலை மேகம்" எனப்படும் ஏ.எஸ் இப்றாகிம் என்பவர் இயற்றிய இக் காவியத்தின் முதற்பாகம் நான்கு அடி களாலான 34 பாடல்களைக் கொண்டது. 1983இல் தொடங்கிப் பல உயிர்களைக் காவுகொண்ட யுத்த நிலைச் சரித்திரமாக அமைவது. ஊர்கள் பல அழிக்கப்பட்டும் உடமைகள், உயிர்கள் சிதைக்கப்பட்டும் வன்முறைகள் நடந்தமை பற்றியும் மக்கள் அகதி நிலைபடுத்தப்பட்டுத் தொழில் இழந்து, வாழ்விழந்து நின்றமை பற்றியும் கடத்தல், கபளீகரத்தனங்கள் பற்றியும் இக்காவியம் பேசுகிறது. வகைமாதிரிக்குச் சில பாடல்கள் தரப்படுகின்றன.

**பட்டினித் தொல்லைகள் ஒரு புறம் வாட்ட**
**பட்டாள வீரர்கள் மறு புறம்தாக்க**
**சுட்டபேர் பயங்கர வாதி யென்றோட**
**சுடு பட்டு மாண்டனர் அப்பாவி மக்கள்!**

**பத்தாறு குடும்பங்க ளொத்தாசையாலே**
**பலபேரு மொன்றாகி முகாம்களை யமைத்து**
**சித்தலியன் குட்டிபோல் சிறு குடிசை கட்டி**
**சொல்லொண்ணாத் துயரத்தில் சிந்தினர் கண்ணீர்!**

**பள்ளிக்குச் செல்கின்ற பிள்ளைகள் கடத்தல்**
**பக்கத்து ஊருக்குப் போவோரும் கடத்தல்**
**உள்ளூர்க்குள்ளேயும் ஒவ்வோர் கடத்தல்**
**உருப்படியாகுமோ இறைவா இது தகுமோ!**

**வண்ணமயில் மாதரசே இன்னமு நீ கேளாய்**
**மானிடர் படுந்துயர் ஏராள முண்டு**
**கண்ணை இழந்தோரும் காலைத்தொலைத்தோரும்**
**கணக்கில்லை ஐயகோ தீமை யழி யாதோ!**

**யுத்த நிறுத்தத்தில் இணைந்தோர்கள் இனியும்**
**யோசித்து உறவினைப் பல மாக்குவாரோ**
**நித்தம் கொலைவெறிச் சாவுகள் தவிர்த்து**
**நீண்ட சமாதானப் பாதை சமைப்பாரோ!**

### II. கினாந்திமுனைக் காவியம்:

மூதூரைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.ஏ. பரீத் இயற்றிய இக்காவியம் 2006இல் மூதூரில் இடம்பெற்ற வரலாற்று சோகத்தை விபரிப்பதாக அமைகிறது. இதனை ஆசிரியரும் தனது முன்னுரைக் கூற்றில் "கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையே நடைபெற்ற யுத்தம் காரணமாக நாட்டில் ஏற்பட்ட குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் உண்டான அழிவுகளும், உயிரிழப்புகளும் மனித அவலங்களும் சொல்லுந்தரமன்று. அந்த வகையில் மூதூர் பல்வேறு வகையிலும் உயிர், பொருள், உடைமையென பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளது என்பது நாடறிந்த உண்மை. அதன் உச்சக்கட்டம்தான் கடந்த 04.08.2006ஆந் திகதி மூதூர் மக்கள் தமது சொந்த மண்ணையும் உடைமைகள் சகலதையும் விட்டு ஆறாத்துயரோடு, கால்நடையாக கந்தளாய் நோக்கிச் சென்ற நிகழ்வு. அப்பயணத்தின்போது மக்கள் எதிர்கொண்ட யதார்த்தமான துன்பியல் அவல நிகழ்வுகளின் சுருக்கத்தை கருப்பொருளாகக் கொண்டதுதான் இக் கினாந்திமுனைக் காவியம்" என விபரிக்கின்றார். கினாந்திமுனையென்பது மூதூரின் தென்பகுதியில் மூன்று மைல் தொலைவில் அமைந்த மலையும், காடும் சூழ்ந்த பிரதேசமாகும் என்பதையும் மனதிற் கொள்ளலாம்.

1983ஐ ஒட்டிய காலப்பகுதியிலிருந்து மூதூர் முஸ்லிம் மக்கள் தொழில் மற்றும் உணர்வுநிலைப் பாதிப்பிற்கு உள்ளானமை பற்றி விபரிக்கும் ஆசிரியர், 2006 ஆகஸ்ட் முதல் வாரம் மூதூர் முழுவதும் விடுதலைப் புலிகளின் கைவசமானபோது வெடித்த யுத்த நிலையினால் 2006.08.04 வெள்ளிக்கிழமை உயிரை மட்டுமாவது காப்பாற்றிக்கொள்ள, உடமை முதலிய எல்லாவற்றையும் கைவிட்டு ஊரைவிட்டு வெளியேறி மூன்று மைல் கால் நடையாக நடந்து பெருவீதியை அடைந்த போது புலிகள் பெருவீதியால் செல்வதைத் தடுத்துக் கினாந்திமுனைக் காட்டு வழி காண்பித்துக் கொடுமைகள் விளைத்தமைபற்றியும் அதனால் உண்டான உயிரவலங்கள் பற்றியும் விபரிக்கிறார். வகைமாதிரிக்கு சில பாடல்கள் தரப்படுகின்றன.

**கப்பமுடன் வரியுமிங்கு களைகட்டி நிற்க**
**கடல்வலய தடையாலே மீன்பிடியுமட்டு**
**தப்பாத விவசாயம் தடையுண்டு போக**
**தவித்தனரே தொழிலின்றி அன்றாடம் மக்கள்**

**நிகழ்ந்ததொரு ஆண்டதுவாம் ஈராயிரத்தாறில்**
**நத்திவரு திங்களது ஆவணிநாள் ஒன்றில்**
**உகந்ததொரு துயிலெழுந் தூரவர்கள் பார்க்க**
**ஊரெங்கும் நின்றனரே தமிழ்ஈழப் புலிகள்.**

**முத்தூரைப் புலிகொண்ட முறையான செய்தி**
**முழுநாடும் கணப்பொழுதில் பறந்தோடிச் செல்ல**
**புத்தியுடன் படைத்தலைமை ஒன்றாக கூடி**
**புதியதொரு முடிவுதனை எடுத்தனராம் ஐயா.**

**நாழிகைகள் கழியுமுன்னே மேற்றிசையி லிருந்து**
**நகர்நோக்கி பாய்ந்துவர எறிகணையின் வீச்சு**
**ஊழியது நெருங்கியதோ என்றுவுளம் நடுங்கி**
**உயிர்காக்க பதுங்குமிடம் தேடினரே சனங்கள்.**

அரசுக்கு அறிவித்தும் ஆனபல னில்லை
அமைச்சர்க்கு முறையிட்டும் ஆகியது மில்லை
சிரசுக்குமேல் துயரம் பெருகிவரக் கண்டு
சிந்தித்த பெரியோர்கள் முடிவொன்று செய்தார்.

ஆவணித்திங் களதுஇரண் டாயிரத்து ஆறில்
நாலாம்நாள் வைகறையில் வெள்ளிதின மதனில்
போவதென அணிகொண்டு மூதூர்சனம் யாவும்
ஊணின்றி ஊர்ந்தனரே மந்தகதி யோடு.

தார்போட்ட வீதியிலே சென்றவர்கள் தம்மை
தடுத்தனரே புலிகள் மலையோரம் வைத்து
வார்நிறைந்த தோட்டாவுடன் துப்பாக்கியேந்தி
வழிமறித்தோர் மாற்றுவழி காட்டினரே ஆங்கு.

அடர்ந்துள்ள புதர்மண்டி ஆங்காங்கு பற்றை
படர்முள்ளி தொட்டாவும் சூரையும் விளைந்து
விடத்தைமுட் புடாருடன் கனன்திட்டி மேடும்
விட்தரையும்நிறைந்ததுவே கினாந்திமுனை என்பாம்.

ஆடவரை தனியெடுத்து அணியணியாய் நிறுத்தி
அவரவர் விலாசமதை எழுதினர்கள் சிலபேர்
தேடியிள வாலிபரை வேறாக எடுத்து
கூட்டியிரு கரங்களையும் பிணைத்தனரே சிலபேர்.

கற்றவர்கள் பெரியார்கள் என்ற நிலை இன்றி
கடும்வெயிலில் கால்கடுக்க வைத்தனரே எம்மை
குற்றமெது செய்தோமென என்று சிலர் கேட்க
குறுந்தடியால் தாக்கினரே சிலபுலிகள் வந்து.

தீனவர்கள் போற்றிசெயும் வெள்ளிதின மதிலே
ஜும்மாவெனும் வணக்கத்தை இல்லாமல் செய்த
மானுடமும் நாணுமந்த மாபெரிய தவறை
மறையோனும் பொறுப்பானோ மானிடரே கேளீர்.

கந்தளாய் சென்றவர்கள் கண்ட துய ரவலம்
கதைகதையாய் சொல்லிடலாம் நாட்கள்பல ஆகும்
சொந்தவிடம் விட்டகன்றால் நாயினிலும் கேடாம்
சோதனையும் வேதனையும் சொல்லிமுடி யாதே.

02.மெல்லிசைப் பாடல்கள்
(சினிமாப் பாடற் பாணியில் அமைந்தவை)
மீரா உம்மாவின் பாடல்கள் :

கிழக்கின் அம்பாறை மாவட்டம் இறக்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அக்கரைப்பற்றில் பலகாலம் வாழ்ந்து தற்போது ஜெய்லானியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். நினைத்த மாத்திரத்தில் கவிபாடும் வல்லமை பெற்ற இவர் பிறப்பிலிருந்து இரண்டு கண்களையும் இழந்தவர். ஏராளமான கவிகள் / பாடல்களைப் பாடியுள்ளார். விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு சமாதான வழிக்குத் திரும்பி பொதுமக்களோடு வாழவைக்க வேண்டுமென பிரார்த்தித்துப் பாடிய பாடல்கள் “விடுதலைப் புலிகள்” என்ற தலைப்பில் உள்ளன. அப்பாடலின் ஒரு பகுதி இதுவாகும்.

பொல்லாத புலிகள் ராணுவங்கள் ஆயுதம்
புச்சாக்கி வைத்து விடுங்கள் – அதன்
பெரிய நெருப்பை நூருங்கள்

உங்கள் பொறுமை நிறைந்திட்ட
பொதுமக்கள் யாவருக்கும்
பெரும் வெற்றி வாங்கித் தாருங்கள்
புலிகளைப் பொதுமக்கள் ஆக்கி வையுங்கள்

கிழக்க விட்டு முஸ்லிம்கள் எழும்புங்கள் என்று
கொடுமை நினைக்கின்றார்கள் – மக்களைக்
குல செய்து குவிக்கின்றார்கள் – இந்தக்
கொடுமையான புலிகளை பொதுமக்களாக்கி
குழப்பத்தை நீக்கி விடுவாய் – இறைவா
பொது அறத்தைக் காட்டி அருள்வாய்

இவ்வாறே “சமாதானம்” என்ற தலைப்பில் பொதுமக்களிடம் சமாதானம் தோன்றிட இறைவனைப் பிரார்த்திக்கின்ற படி நபியவர்களை வேண்டிப் பாடுகிறார்.

சங்கை நிறைந்த முருகா
சாந்தி சமாதானம் செய்யுங்கள்
– தாதா ஷுர்து நபியே
தயவுள்ள இறை கனியே
சகல இனமக்களும் சேர
சாந்தி சமாதானம் செய்யுங்கள் ....தாதா...

எனும் பகுதி எடுத்துக்காட்டாகத் தரப்படுகிறது.

கிழக்கில் தமிழர் விடுதலைக்கான இயக்கங்கள் உருவானபோது அந்த இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து கொண்டனர். இராணுவத்தின் தேடுகைக்கு அப்பால் புலிகளாலும் தீங்கு உண்டானது. அவ்வகையில் கொல்லப்பட்ட இளைஞர்களுள் "றாபி" என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட போது மீரா உம்மா "றாபியின் மரணம்" என்ற தலைப்பில் பாடியுள்ளார். அதன் ஒரு பகுதியைத் தருகின்றேன்.

முத்தான றாபி அவர் முடிவதை நினைத்தவுடன்
முஸ்லீம்கள் அழுதாரடி கிழக்கு முஸ்லீம்கள் அழுதாரடி
கிழக்கு முஸ்லீம்கள் அழுதாரடி

பொன்னான றாபி அவர் புலிகளுக்குச் சேர்ந்த செய்தி
அரசாங்கம் அறிந்தாரடி அவரை அடைக்கத் துடித்தாரடி
றாபியை அடைக்கத் துடித்தாரடி

03. (தனிப்)பாடல்கள்

I.V. றஹ்மத்தும்மா – மருதமுனை:

ஐந்தாம் வகுப்புவரை கல்வி கற்றிருக்கும் ஏ. றஹ்மத்தும்மா (வயது 85) மருதமுனையின் பிரான்ஸ் சிற்றி என்னும் பிரதேசத்தில் வாழ்கின்றார். இயல்பாகவே கவிபாடும் வல்லமை பெற்றவர். அமைச்சர் அஷ்ரப் என்னும் மாமனிதர் கொல்லப்பட்ட செய்தி இலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் துயரக்கடலில் ஆழ்த்தியபோது றஹ்மத்தும்மாவின் எண் ணங்கள் கவியாகின்றன. அதன் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.

சந்தன மரத்த தாளியாலும் நாட்டாம
பாளிமன்றில் நாட்டி வைத்தோம் அல்லா
பறித்தெடுத்துப் போட்டயடா.
ஏண்பத்தி ஒன்பதில் நாம இருபேரும் வைத்த மரம்
இரண்டாயிரம் ஆண்டில் மச்சி இது
இறந்துமுந்த மாயமென்ன?
ஆளமுள்ள கெங்கயிலே அழகான ஒரு பூப்பூத்து
எங்கும் மணக்கிறது சந்திரிகா நீ
இம்மணத்தக் காணயில்ல.

II.திருமதி முஸ்தபா – பொத்துவில்:

போர்க்காலக் கிழக்கில் முஸ்லிம் பொது மக்கள் வெவ்வேறு இடங்களிலும் கொல்லப்பட்டனர். அது குறித்த பாடலின் ஒரு பகுதி தரப்படுகிறது. பொத்துவிலிருந்து கொழும்புக்குச் சென்ற பஸ் தீக்கிரையாக்கப்பட்ட போது அதில் இறந்துபோன முஸ்தபாவின் மனைவி யின் ஒப்பாரியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி,

கொழும்புக்குப் போவதாக
சொல்லிப்புட்டுப் போனாரே
வருவன் என்று சொன்னவர்
சந்தக்கில் வந்தாரே!

நம்மட புள்ளதான் கவனம்
என்டு சொல்லிப்புட்டு போனாரே
நாசமத்த புலியால மோசமாத்தான் போனாரே!

மேற்குறிப்பிட்டபடி போர்க்காலக் கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனுபவித்த இன்னல்கள், துன்பங்கள், அவரது உயிராசைகள் முதலானவற்றை வெளிப்படுத்தக் கூடிய வாய்மொழிப் பாடல் வடிவங்கள் பலவற்றை கள ஆய்வி னூடே பெறக் கூடியதாக உள்ளன. ஆய்வுலகம் அவற்றில் கவனம் செலுத்தும் போது வாய்மொழிப் பாடல்களின் பெறுமானம் மிகைப்பட விளங்குவது தெளிவாகும்.

❍ ❍ ❍

சிறுகதை

அந்த நெருப்பு வெளிச்சத்தில் அவனு டைய முகம் நன்றாகத் தெரிந்தது. நெருப்பு எரிகிறதை அவன் கொஞ்ச நேரம் நின்று பார்த்துக் கொண்டுதான் நின்றான். எதற்கும் பயப்படாதவன் போல நெருப்பு வெக்கை என்மீது தாவிய பிறகுதான் எழும்பிப் பார்த்தனான். நான் படுத்திருந்த பக்கம்தான் முதலில் நெருப்பு எரியத் தொடங்கினது. அவன் அடுத்த பக்கத்துக் கூரைக்கு நெருப்பு வைக்கிறான் என்ற பிறகுதான் பயந்து கத்தினான். என்னைக் கண்ட பிறகு கூட அவன் பயப்படேல்ல. நான் கத்தின சத்தம் கேட்டு வீட்டுக்குள்ள படுத்திருந்த ஐயா 'என்னடா' என்று கேட்ட பிறகுதான் அவன் விட்டுவிட்டு வீட்டுப் படலையடிக்குப் போனவன். வாசலில் 'லைற்' இல்லாமல் இருட்டில நின்ற ஜீப்பில் ஏறி அவன் போயிட்டான். நான் சின்னப் பெடியன். அவனைத் தடுக்கிறதுக்கு என்னால் இயலவில்லை.

அவனை எனக்கு நல்லாத் தெரி யும், எனக்கு எவ்வளவு நாள் பழக்கம். நான் ஊரில பாக்கிற ஆட்களில் அவன் வித்தியாசமானவன். நல்ல கட்டையன்; 'பொலிஸ்குறோப்' வெட்டின தலைமயிர், எதையும் அலட்சியமாய்ப் பார்க்கிற அவ-னுடைய கண்கள், நெருப்புவைக்கும் போதும் அவனின்ர கண்கள் நெருப்பு வெளிச்சத்தில் அப்படித்தான் தெரிந்தன. எனக்கு அருகிலதான் நின்றவன். துவக்குகூட வச்சிருந்தவன். அவன் என்னை ஒன்றும் செய்ய வில்லைத்தான். ஆனால் ஏன் என்னுடைய வீட்டைக் கொழுத்தினான் என்று தெரியேல்ல.

ஐயா நெடுகச் சொல்லுறவர் 'டேய் நீ உவங்களோட சிநேகிதம் வைக்கிறாய்; உவங்களப் பற்றி உனக்கு விளங்கேல்ல, நான் நல்லா அறிஞ்சனான்' என்று. நான் அவரு டைய கதையைக் கேட்கிறதேயில்லை.

என்னப் பொறுத்தவரையில் காசு, இப்ப காசுதான் முக்கியம். எவ் வளவு காசைச் சேர்க்கமுடியுமோ சேர்க்க வேண்டும். ஏனென்றால் நான் இந்தத் தொழிலை எடுக்கிறதிற்கு, எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பன் என்று எனக்குத்தான் தெரியும். அந்தநேரம் ஒரு எஞ்சின், கட்டுமரம், சூடவலை, அறக்கொட்டியன் வலை எடுக்க நாலாயிரம் ரூபா போதும். ஊர் எங்களை நம்பாத காலம், சாதிப்பிரச்சினைகள், கட்சிப்பிரச்சினைகள், ஊர்ப்பிரச்சினைகள் என்று எல்லாம் இருந்த நேரம். எங்கட ஐயா ஒரு கொழுப்புப்பிடிச்ச ஆள். எல்லாரோடையும் பகை, ஊருக்க நாங்கள் மட்டும்தான் ஒரு வேதக்காரக் குடும்பம். அதால பிரச்சினை. இவர் தமிழரசு கட்சிக்காரன்; அதால பிரச்சினை. சம்மாட்டிமாரையோ, பொலிசை-யோ உத்தியோகக்காரர்களையோ

# கடல் எப்பவும் இருக்கும்

முல்லை யேசுதாசன்

மதிக்காத ஆள். கொஞ்சம் சண்டியன்; படிக்காத ஆள்தான். ஆனால் பாசையும் மூன்று தெரியும். சின்னவயசிலேயே கொழும்பில் ஒரு வீட்டுக்காரரோட வேலைக்கு நின்றவர். நீர்கொழும்பிலையும் கொஞ்சக்காலம் கடற்தொழில் செய்தவர். அதால எல்லாப்பாசையும் எழுதபடிக்க தெரியாட்டிலும் ஏசுவார். அந்தத்திமிர். அரைவாசி அதாலதான் நாங்கள் இப்படி கஸ்ரப்படுறம் என்று அம்மா அடிக்கடி சொல்லுவார்.

ஒருமுறை சேமன் லெக்ஸனில் அந்த சம்மாட்டியர் சாராயப் போத்தல், உடுப்பு, காசுகள் எல்லாம் கொண்டுவந்து "டேய் கபிரியேல் நீ வெளியில் ஆருக்கும் என்னண்டாலும் சொல்லு, போட்டை எனக்கு போடு" கலைச்சே போட்டார்.

ஐயா ஒரு கள்ளவேலை செய்யத் தெரியாத ஆள். இல்லாட்டி நாங்கள் எவ்வளவு நல்லா இருந்திருப்பம். ஆனா எனக்கு அவரில பிடிச்ச விசயம் எங்கட வீட்டு றோட்டில நின்று எந்த இளந்தாரிப் பொடியளும் கதைக்கிறதோ, இல்லாட்டி என்ர தங்கச்சிமாரை ஆரும் பகிடி பண்ணிறதோ இல்லை. ஏனென்றால் ஐயாவிற்கு ஒருபயம் இருந்தது ஊருக்கு. ஆனா காசு வேணும், எல்லாத்துக்கும் காசுவேணும்.

ஒரு கலனுக்கு மூன்று ரூபாய்ப்படி பார்த்தால் மூன்று கலனுக்கும் ஒன்பது ரூபா. அப்ப ஒன்பது ரூபா என்றால் பதினெட்டு றாத்தல் சூடைக்காசு, ஒன்பது கொத்து அரிசிக்காக, அதுபெரிசுதானே? அவன் பதின்மூன்று ரூபா பெற்றோலை எனக்கு பத்து ரூபாவுக்கு தருவான். நானாகப் போய் அவனிட்ட பெற்றோல் கேட்கவில்லை. அவனாத்தான் தந்தவன். கடற்கரைக்கு ஆரையும் கூட்டிக்கொண்டு கட்டாக் கருவாடு வாங்க அடிக்கடி வருகிறவன். என்னிடமும் அவனுக்கு மலிவாக மீன் எடுத்துக் கொடுத்து பழக்கம் வந்தது. ஒருநாள் கடற்கரைக்கு வந்தவன் 'மலிவாக பெற்றோல் தாறன்' என்று கேட்டு எனக்கும் ஒருகலனுக்கும் மூன்று ரூபா இலாபம் என்று வாங்கப்போய் வீட்டுக்கும் வந்து ஜீப்பில் வயர் வைத்து பெற்றோல் எடுத்துத் தருவான். சிலவேளை கட்டாக்கருவாடு, இறால் என்று வாங்கிக் கொண்டு போவான். எனக்கு அவனால இலாபம்தான். அந்தப் பழக்கம் தான் 'ஆமிக்காம்ப்' வரைக்கும் போகவச்சது. அப்பெல்லாம் அந்த 'ஆமிக்காம்பி'ல இருபது இருபத்தைந்து பேர்தான் இருப்பார்கள். எனக்குத் தெரிய சாலையில ஒரு 'காம்ப்', முல்லைத்தீவில ஒரு 'காம்ப்' என்று வன்னிக்கடற்கரையில் இரண்டே இரண்டு ஆமிக்காம்ப்தான். கள்ளக்கடத்தல் காரரைப் பிடிக்க கடற்கரை வழியே திரிவதுதான் அவர்கள் வேலை. விடியற்காலை வேளையிலே இரண்டுபேர் துவக்கோட கடற்கரையில நடந்து போவாங்கள். இவனும் சிலவேளைகளில் போவான்.

ட்ரான்ஸ்சிஸ்ரர் ரேடியோ புதுசா வந்தநேரம் அது. அதுக்குமுந்தி வால்வு ரேடியோதான். ரோச்லைற் எல்லாம் புதுசா வந்தநேரம், சினிமாப்படம் எங்கட ஊரிலயும் பார்க்கலாம். இரண்டு தியட்டர், ஒன்று கல்லால் கட்டின தியட்டர், மற்றது ரென்ற்கொட்டகை, ஆக சின்ன வயசிலேயே எனக்கு சினிமாப்படம் பார்க்கிறது பிடிக்கும். அப்புவினுடைய தோளிலேயே ஏறிப்போய் சிவஜோதித் தியட்டரில ரஞ்சன் நடித்த சவுக்கடி, 'சந்திரகாந்தா' படம் பார்த்த ஞாபகம் இன்னமும் இருக்குது. அந்ததியட்டர்களில தமிழ்ப் படங்கள்தான் ஓடும். அந்தக் காலம் எம்.ஜி.ஆர், சிவாஜி காலம். எனக்கு தமிழ்ப் படங்களைவிட இங்கிலீஸ் படங்கள் பார்க்க விருப்பம். இருந்திருந்து ஆமிக்காம்பிலயும் படங்கள் ஓடுறது. அது ஆமிக்காரருக்கு மட்டும்தான். ஆனா அவங்கள் தெரிஞ்ச சனங்களையும் கூப்பிடுவாங்கள். அங்க

இங்கிலீஸ் படங்களும் சிங்களப்படங்களும் ஓடும். அவன் படங்கள் ஓடினால் எனக்கும் வந்து சொல்லுவான். நானும் போவன். ஆரைமறிச்சாலும் அவன் என்னை மறிக்கான்.

இங்கிலீஸ் படங்கள் எல்லாம் பெரிய யுத்தப் படங்களாய்த்தான் இருக்கும். அந்தப் படங்களில் வெள்ளைக்காரர்கள் வெற்றியாளராய்த்தான் வருவாங்கள். அவங்களுடைய சண்டைகள் வெற்றியில்தான் முடியும். ஆனால் நான் பார்த்த சிங்களப் படங்கள் அப்படியில்லை. கதாநாயகன் கடைசியில தோற்றுப்போயும் நிற்பான். அந்தப் படங்களில உண்மை இருக்கிறதாத்தான் எனக்குப்பட்டது.

அப்ப காமினிபொன்சேகாதான் எனக்குப் பிடிச்ச சிங்கள நடிகர். அதற்குப் பிறகு வியஜகுமாரதுங்க. அந்தக் கதாநாயகர்களை பார்க்கும் போது பாவமாக இருக்கும். சிலபடங்களைப் பார்த்துப்போட்டு அழுது கொண்டும் வந்திருக்கிறன். அந்தவிடயங்கள் எல்லாம்தான் இந்த ஆமிக்காரனோடையும் சினேகிதம் வைக்க காரணமாயும் இருந்தது. ஏனென்றால் அவனைப் பார்க்க எனக்குப் பாவமாய்த்தான் இருந்தது. காசுக் கஸ்ரத்திலதானே அவன் எனக்கு கள்ளமாய் பெற்றோல் விக்கிறான். என்னைப் பொறுத்தவரைக்கும் சிங்கள ஆக்கள் என்றால் நல்லவங்கள் என்றுதான் நினைக்கிறனான். ஊரில இப்பவும் கடைவைச்சிருக்கிற குணபாலாஎன்றசிங்கள கடைக்காறறை ஐம்பத்தெட்டாம் ஆண்டு கலவரத்துக்குள்ள ஒரு பிரச்சினையும் வராம ஊராக்கள் காப்பாற்றி வச்சவியள் என்று ஊருக்கை சொல்லுவினம்.

சிங்கள ஆக்களைவிட தமிழர் எல்லாத்திலையும் கெட்டிக்காரர் என்றுதான் நான் நினைக்கிறனான். 'ஓசிக் கொரியா' என்ற சிங்களவரைப் பற்றி முன்பு 'மித்திரன்' பேப்பரில் தொடர் ஒன்று வரும். அதில அவர்தான் இலங்கையில பெரிய கொள்ளைக்காரர், கொலைகாரர் என்று. ஆனால் அந்தாளை கடைசியாய் பிடித்தது ஒரு தமிழ்ப்பொலிஸ் தானாம். எனக்குத் தெரிய மணியண்ணை ஒருக்கா கள்ளுத்தவறணையில ஒரு ஆமிக்காரருக்கு ஓடஓட அடிச்சவர். அதுமாதிரித்தான் றைவர் கணபதிப்பிள்ளை அண்ணை பஸ்ஸில் பெட்டையளோட சேட்டை விட்டதுக்கு ஆளை இறக்கி வச்சு வெளு வெளு என்று வெளுத்தவர்.

ஆனா எங்கட ஐயா சொல்லுற கதையைக்கேட்டா அது வேறமாதிரி இருக்கும்; ஏனென்றால்அவர்ஐம்பத்தெட்டு கலவரத்துக்கு கொழும்பில அகப்பட்ட ஆள். நீர்கொழும்பில ஒரு சிங்களப் பொம்பிளையை விரும்பியும் இருந்தவராம். சிலவேளை ஐயாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை வந்தா அந்தக் கதையும் பிரச்சினைக்கு வரும். 'சிங்களவனிட்டை அடி வாங்கின ஆள்தானே நீங்கள்' என்று ஒரு குத்தல் கதை அம்மாட்டை இருந்து வரும். அதோடை அடங்கிப் போவார் ஐயா. அவர் அந்தக் கலவரத்தில தப்பி வந்த கதையைச் சொல்லேக்க ஐயாவை பாவமென்று நினைக்கத்தோன்றும். இப்பவும் முறிஞ்ச கையால பெரிய வேலை செய்ய மாட்டார். ஒரே வருத்தம் அவருக்கு. உழைப்பில் அரைவாசிக்கு மேல அம்மாதான், எட்டாம் வகுப்புக்கு மேல் என்னாலும் படிக்கேலாமல் போச்சு. இந்தக் கஸ்ரங்களில இருந்து மீளுதலுக்கு எல்லாருமே கஸ்ரப்பட்டனாங்கள், தங்கச்சிக்கு லோனில ஒரு தையல் மிசின் எடுத்து அவளும் சாப்பாட்டு பிரச்சினைகளுக்கு உதவுவாள். நான் உழைக்கிறது கொஞ்சம் மிச்சமா வரும், அம்மாவும் தன்னுடைய பங்குக்கு உடுப்பு, துணி என்று தரும்.

ஊர் பஞ்சப் படாமல் இருக்க எப்பவும் நாயாறும், நந்திக் கடலும், கொக்கிளாய் ஆறும்தான் உதவும். ஆறுகளில் வீச்சுவலை அடிச்சுத்தான் கடலுக்கென்று தொழிலை நான் தேடினது. எத்தினை வருசம் கஸ்ரப்பட்டு ஒவ்வொரு வலையாத்தேடி..

ஒரு வருசம் அம்மாளாச்சி கோயில பொங்கல் அன்றைக்கு நந்திக்கடல் பாடுகளில ஒருதரும் இல்லை. அன்றைக்கு கறுப்பு இறால் இரைப்பா வந்து நான் தனிய நின்று வீச்சு வலை வீசி... ஒருநாள் காசு மட்டும் நாலாயிரம் ரூபா. அதிலும் ஒரு 'வோக்கஸ் போட்' எடுத்தது; சூடை வலையும் அறக்கொட்டியானும் தேடி முதல் வருசம் கடலுக்குப் போய் ஆயிரம் இறாத்தல் இறால், அப்பெல்லாம் இறால் ஆறு ரூபாதான். தொழில் எல்லாம், தொழில் செய்யிற ஆக்களெல்லாம் மிக மிகக்குறைவு. அதால கடற்கரையில தொழில் வைக்கிற தில்லை, நங்கூரம் வலையெல்லாம் வீட்ட கொண்டுவந்து விடுவம்.

அன்றைக்கென்று வலைகள் முழுக்க வீட்டுக்குள்ள. தையல் மெசின் உடுப்புகள் என்று எல்லாம் வீட்டுக்குள்ள. நெருப்பு பெரிசா எரியத்தொடங்க எல்லாரும் வீட்டுக்குள்ளஇருந்து வெளியேவந்திட்டம். நான் உள்ள போய் வலைகளை எடுப்பம் என்று வெளிக்கிட ஐயா மறிச்சுப் போட்டார். "ஐயா வலைஇருக்கிற இடத்தில நெருப்பு எரியேல்ல. வலைகளை எடுப்பம் வாங்கோய்யா" என்று கூப்பிட "அது எரிஞ்சா எரியட்டும்" என்று பேசாமலே நிற்கிறார். அம்மாமட்டும் பெரிசா கத்துகிறா. மற்றவர்கள் சத்தமே போடவில்லை பக்கத்து வீட்டு சனம்கூட உள்ளே வரவில்லை. அன்றைக்கு ஊரடங்குச்சட்டம் என்றதால ஆருமே எட்டிப் பார்க்கேல்ல. சனத்துக்கு எப்பவும் சரியானபயம். தங்கச்சி ஒரு மாதிரி மெசினை மட்டும் வெளியில எடுத்திட்டாள். கயிறு கட்டி மேஞ்சவீடு. கடற்கரையில அப்படித்தான் மேய்வினம். கொஞ்சம் மேலே ஏறி கயிற்றை அறுத்து கிடுகைத்தள்ளி விட்டா எல்லாப் பக்கமும் எரியாது. அதை செய்யக்கூட ஐயா விடேல்லை. சத்தம் போட்ட அம்மாவுக்கும் ஒரு அடி. உடுப்பு சாமான்களை உள்ளே போய் எடுக்கப்போன தம்பிக்கும் ஒரு அடி. நெருப்பு பெரிசா மூண்டுபோட்டுது. கடை-சியா நான் ஓடிப்போய் ஒரு கட்டுவலையை மட்டும் இழுத்தெடுத்திட்டன். திரும்பவும் உள்ள போகவெளிக்கிட்ட என்ன ஐயா சேட்டில எட்டிப்பிடிச்சு ஆறுதலாகச் சொன்னார். "எரியட்டுமடா தம்பி" என்று.

வீடுமுழுவதுமாய் எரிஞ்சு போச்சு; வீட்டோட கிடந்த எல்லாச் சாமான்களும் எரிஞ்சு போச்சு. எல்லாருமா ஒரு இடத்தில உடுத்த உடுப்போடு குந்தியபடி இருக்கிறம். தூரத்திலையும் கடற்கரை 'ஐஸ்' வாடிகள் பெரிசா எரிகிற வெளிச்சம். வேற வேற வீடுகளுக்கும் அவங்கள் நெருப்பு வச்சிருக்கிறாங்கள் போல.

நான் மெல்ல ஐயாவுக்கு அருகில் போய் "ஐயா வீட்டோட அவ்வளவு சாமான்களும் எரிஞ்சுமுடிஞ்சு போச்சு; ஒன்றைக் கூட எடுக்க விடாம மறிச்சுப் போட்டீங்கள். ஏனையா அப்படிச்செய்தீங்கள்?" என்று கேட்டேன். இருட்டுக்குள்ள அவருடைய முகம் தெரியவில்லை. மெதுவாய் என்னுடைய தலையைத் தடவியபடி "டேய் பெரியவா, அவங்களப்பற்றி எனக்கு நல்லாதெரியுமடா. அந்த ஐம்பத்தெட்டுக் கலவரத்தில அவங்கள் ஆடின ஆட்டத்தை நான் கண்ணால பார்த்தனான் அதைவிட இது பெரிசில்லையடா, கோபத்தில்வீட்டை கொளுத்திப்போட்டு போனவங்கள் அது எரியாமல் போனபிறகு அவங்களுக்கு எவ்வளவு கோபம் வரும், திரும்பவந்து உங்களுக்கு ஏதும் செய்திட்டாங்கள் எண்டால்" அவரின் தொண்டையில் குரல் கம்மியது.

"சரியய்யா போனாப் போகுது. நான் திரும்ப உழைச்சு எல்லாத்தையும் எடுத்திடுவன்." ஐயாவுக்கு ஆறுதல் சொன்னேன்.

இப்ப என்னைப் பொறுத்தவரை சிங்கள ஆமிக்காரன் இரக்கமில்லாத அரக்கர்கள், இவங்கள் அழிகிறநாள் எப்பவரும்; அதுவரைக்கும் எல்லாம் அழியட்டும், கடல் எப்பவும் இருக்கும்.




# யுத்தத்தின் சாபம்

## சில மனப் பதிவுகள்

போர்க்கால சூழலில் வாழ்ந்தோம்– அந்தக் கால கட்டங்களில் வாழ்ந்த நாம் பலவித அனுபவங்களைப் பெற்றோம். இரு மொழி பேசும் மூவினமாக நாம் வாழ்ந்த சூழல் 1958ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்துள்ளன. இந்தப் போர்க் காலச் சூழலில் நமக்கு ஏற்பட்ட துன்பங்ள், துயரங்கள் எத்தகையது என்பதை நாம் அறிவோம். அதனை நமது எதிர்கால சந்ததியினர்க்கு தெரியும் வண்ணம் நமது எழுத்தாளர்கள் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர்.

அத்தோடு, புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் குடியேறியவர்கள் இங்கு நடைபெற்ற இன ஒழிப்பை சிறப்பாக கதையாக, கவிதையாக பதிவு செய்துள்ளனர். ஆனால் நம்மோடு சொந்த சகோதரர்களாக வாழ்ந்த சிங்களச் சகோதரர்கள் இதனை எவ்வாறு பார்த்தனர் என்பதையும் மனிதாபிமான மிக்க சகோதர சிங்கள படைப்பாளிகள் அவ்வப்போது பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் எழுதிய கதைகளை, எழுத்தாளர் வ.ஆ.தங்கவேலாயுதம் தமிழில் மொழிப் பெயர்த்த கதைகள் 'ஞானம்' சஞ்சிகையில் 'போர்க்கால சிறுகதைகள்' என்ற வரிசையில் பிரசுரிக்கப்பட்டு பின்னர் 'யுத்தத்தின் சாபம்' என்ற பெயரில் ஞானம் பதிப்பக வெளியீடாக 2008ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

இந்தச் சிறுகதைத் தொகுதியில் முதல் கதையாக "யுத்தத்தின் சாபம்" என்ற புத்தகத்தின் தலைப்புக் கதையே இடம்பெற்றுள்ளது. "யுத்தம் என்கின்ற நான்கு எழுத்து எங்களுக்கென்றால் இப்பொழுது சாதாரணமான ஒன்றாகி விட்டது" என்ற வரிகளே கதையை படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது. ஒரு சின்னஞ்சிறிய பெண்ணின் மனவேதனையை இன மத பேதமின்றி ஒற்றுமையாக வாழ்ந்த நாட்களை யுத்தம் சூறையாடி விட்டதே என்று சொல்லப்படுகிறது. "யுத்தம் இல்லாமற் போய், துப்பாக்கி சூட்டுச் சப்தங்களுக்கு பதிலாக குருவிகளின் ரீங்காரங்கள் கேட்க வேண்டும்.. என்று புத்தபிரானை வேண்டுகிறார்" அந்த பிஞ்சு உள்ளத்தின் மனஉணர்வுகளை கங்கா நிலானி என்ற பெண் எழுத்தாளர் சித்திரிக்கின்றார். "கொட்டி கந்தவுற" [புலிகளின் முகாம்] என்ற கதை, எப்படி இனவாதத்தைத் தூண்டுகிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு "புஸ்பலதா" என்ற சிறுகதையில் மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்தும் பெண்மணியை அனுலா டி.சில்வா சித்திரித்திருந்தார்.

இந்த யுத்தத்தின் சாபம் என்ற சிறுகதைத் தொகுதியைப் படித்த பொழுது சிங்கள மக்களிடையே எத்தகைய இனவாதமற்ற நல்லவர்கள் இருக்கிறார்கள். அதே போல இனத்துவேசமிக்க சிலரும் வாழ்கிறார்களே என்ற உண்மை தோன்றுகிறது. இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட சாபத்தை, இரு இனங்களுக்கிடையே உள்ள பிளவை எவ்வாறு சமன் செய்வது. அரசியல்வாதிகளின் தூண்டுதலால் எப்பொழுது ஒற்றுமை ஏற்படும்?

நாடு யுத்தம் முடிந்து விட்டது என்று அறிவித்தாலும், இன்றும் புதைந்து கொண்டு தான் இருக்கிறது. கலை இலக்கியவாதிகளுக்கு ஏற்படும் நல்லெண்ணம் அரசியல் வாதிகளுக்கும் ஏற்படவேண்டும். இதனை எப்படித் தீர்ப்பது, உதாரணமாக "ஐ.நாவினால் ஒரு நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பலஸ்தீன இராச்சியம் ஐ.நா.வில் முழு அங்கத்துவ உரிமைக் கோரி விண்ணப்பத்தினை கடந்த ஆண்டு சமர்ப்பித்த போது அமெரிக்க அதிபர் ஓபாமா கூறிய வார்த்தைகள் நினைவு கொள்ள வேண்டியவை "ஐ.நா.வின் தீர்மானங்களோ, அறிக்கைகளோ மத்திய கிழக்கில் சமாதானத்தை கொண்டு வரமாட்டாது. இரண்டு தரப்புகளும் தமக்குள் பேசி முடிவு எடுக்க வேண்டும்" என்றார்.



யுத்தத்தின் சாபம் தீரவேண்டுமானால் இருமொழிப் பேசும் இவைகளும் விட்டுக் கொடுப்புக்குத் தயாராக வேண்டும். இதனையே இந்த கதைகள் உணர்த்தும் பாடமாகும்.

அந்தனி ஜீவா



# வன்னிப் பிரதேச நாவல்கள்
## போர்க்கால புனைவுகள் குறித்த தேடல்

இராசேந்திரம்பிள்ளை சிவலிங்கம்



பல்லாண்டு காலமாகப் பலரின் கவனத்தையும் தன்பால் ஈர்த்ததும், சர்வதேச ரீதியாகப் பேசப்பட்டதும், சரித்திரரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரதேசம் வன்னியாகும். அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திலும், உள்நாட்டில் இடம்பெற்ற இன ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்திலும் இறுதி வரை பங்குகொண்டு புண்சுமந்த மேனியாய், மாறாதவடுக்களோடும், தழும்புகளோடும் காட்சியளிப்பதும் இப்பிரதேசமே. இலங்கை மக்களின் பெரும் பகுதியினரை தனது மடியிலே சுமந்து நின்ற பிரதேசம் எனினும் இலக்கிய வளர்ச்சியில் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது ஓர் அசமத்துவ நிலையினை அவதானிக்கலாம்.

வன்னிப்பிரதேசமென்பது முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், புத்தளம், திரிகோணமலை போன்ற மாவட்டங்களை அடக்கிய மிகப்பரந்த பிரதேசமாகக் காணப்பட்ட போதும், வன்னியின் பிரதான கேந்திர நிலையமாக வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி என்பனவே காணப்படுகின்றன. புவியியல் ஒழுங்கிலும், மக்களது வாழ்க்கைமுறை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள், உறவுகள், உண்டாட்டுக்களென ஒன்றுபட்ட தன்மையினையும், பேணலையும் பிரதேசங்களில் காணலாம். வன்னிப் பிரதேசத்தில் நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்துக்கள், காவியங்கள், தனிப்பாடல்கள், நாவல்கள், சிறுகதைகள் எனப் பல்வேறு பட்ட இலக்கியங்கள் தோன்றிய போதும், இக் கட்டுரையில் நாவல்கள் பற்றி அதுவும் சிறப்பாகப் போர்க்கால நாவல்கள் பற்றியே பேசப்படும்.

'வன்னிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற நாவல்களைப் பட்டியலிடும்போது, சி.வை. சின்னப்பாபிள்ளையின் வீரசிங்கன் கதை (1905), ச.கைலாச பிள்ளையின் இன்பவதி (1942), கச்சாயில் இரத்திரனம் எழுதிய வன்னியின் செல்வி (1962), வி. இரத்திரசபாபதியின் பால்வெளி (1963), பிரதிபிம்பம் (1968) யுகசந்தி (1972) காற்றில் மிதக்கும் சருகுகள் (1975), கணேசலிங்கனின் மண்ணும் மக்களும் (1969), அ. பாலமனோகரனின் நிலக்கிளி (1973), குமாரபுரம் (1975) கனவுகள் கலைந்தபோது (1977) நந்தாவதி (1985), முல்லைமணியின் மல்லிகை வனம் (1985) வன்னியர்திலகம் (1988) கமுகஞ்சோலை (2000), மழைக்கோலம் (2000), மதுபாலனின் விதவையின் வாழ்வு (1975), தாமரைச் செல்வியின் சுமைகள் (1977), விண்ணிலல்ல விடிவெள்ளி (1992), தாகம் (1993), வேள்வித்தீ (1994), வீதியெல்லாம் தோரணங்கள் (2003), பச்சைவயல் கனவு (2004), செங்கையாழியானின் காட்டாறு (1977), யானை (1978), கனவுகள் கற்பனைகள் ஆசைகள் (1981), ஒருமையவட்டங்கள் (1982) ஓ அந்தப்பழைய உலகம் (1984), மண்ணின் தாகம் (1989) விடியலை நோக்கி (2011), முல்லையூரானின் குங்குமம் (1987), புதிய அலைகள் (1987), பிரியதர்ஷினியின் நிலவே நீ மயங்காதே (1990), ஈழ தீபனின் கலையாத கோலங்கள் (1990), மனசு (1990), மலரவனின் போர் உலா (1992), புயல் பறவை (2003),

ஓ.கே. குணநாதனின் ஒரு துளி (1999), வ.ந. கிரிதரனின் வன்னிமண் (1998), எஸ்.எஸ். நடேசனின் வண்ணாத்திக்குளம் (2003), நீ.பி அருளானந்தத்தின் வாழ்க்கையின் நிறங்கள் (2006), துயரம் சுமப்பவர்கள் (2009), இரா. உதயணனின் விதிவரைந்த பாதையலே (2008), சுருதி பேதமடைகிறது (2008), பனிநிலவு (2010), நூலறுந்த பட்டம் (2009), மன்னார் உதயனின் லோமியா (2008), தெம்மாடுகள் (2009), வாசாப்பூ (2010), எஸ். நாவண்ணனின் பயணம் தொடர்கிறது (1988), அக்கினிக்குஞ்சுகள் (1995), எஸ். அரசரத்தினத்தின் சாம்பல் பறவை (2010), அகளங்களின் அலைக்குமுறல் (2011), பொன். கணேசமூர்த்தி எழுதிய துளித்துளியாய் (2002) என ஏறக்குறைய 53 நாவல்கள் வரை வெளிவந்துள்ளமை அறியக்கிடக்கிறது. மேலும், இக்கட்டுரையாசிரியரின் தேடலுக்குள் அகப்படாமல் சில பிரதிக-ளேனும் இருக்கலாம்.

ஈழத்தமிழரின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் வன்னியே குருஷேத் திரமாயிற்று. 1977 இல் ஜே. ஆர். ஜெயவர்தனா ஈட்டிய தேர்தல் வெற்றியும், அது ஏற்படுத்திய அதிகார மமதையும், தமிழரை அடிமைப்பட்ட இனமாக அரசு தூண்டிவிட்ட இனசங்கார வேள்வியும், ஈழத் தமிழரை முற்று முழுதா-கப் பாதித்தபோது, வன்னி மக்களது வாழ்வியலிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. 1980க்குப் பிந்திய இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் பிரதான கருப்பொருள் இன முரண்பாடும் யுத்த அவலமும் தான். இன முரண்பாட்டால் பிளவுண்ட இலங்கையின் யுத்த சூழல் தனி மனிதர்களின் வாழ்வை அவர்களின் உணர்வுகளை, நடத்தையை எவ்வாறெல்லாம் பாதிக்கின்றது என்பதைத் தான் கடந்த முப்பதாண்டு காலப் பகுதியில் எழுந்த மிகப்பெரும்பாலான படைப்புகள் பேசுகின்றன. இவர்கள் அனுபவித்த இனப்பிளவின் குரூரங்கள் அவர்தம் அனுபவங்களாக வெளிப்படுகின்றன.

ஈழத்தின் மண்வாசனை நாவல்களின் முன்னோடியாகக் கருதப்படும் நிலக்கிளி ஆசிரியர் பாலமனோகரனின் "நந்தாவதி" முல்லைத்தீவுப் பிரதேசத்தின் ஆண்டான் குளம் - பழைய ஆண்டான் குளம் கிராமங்களைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். அங்கே தம-ிழர் சிங்களவர் இனக்குரோதமின்றி இணங்கி வாழ்வது அவ்வுறவுச் சூழலில் அவ்விரு இனக் காதல் முகிழ்ப்பதும், 1977 இனக்கலவரச் சூழலில் அக் காதல் கானலாவதும் காட்டப்படுகின்றது. இந்நாவலில் உபபாத்திரமாக காந்தி என்ற இளைஞன்வருகின்றான். இவன்மண்மீட்புப் போரில் இணைவதாகக் காட்டப் படுவதோடு நாவல் முற்றுப் பெறுகிறது. இவை பிற்கால நிகழ்வுகளுக்கான கட்டியங் கூறலாக ஆசிரியரால் காட்டப்பட்டதா என்ற எண்ணத்தைத் தோற்று விக்கின்றது.

வவுனியா, மன்னார், அநுராதபுர மாவட்டங்களின் எல்லைப்புறக் காட்டு மாங்குளத்தை அண்டிய கிராமங்களை களமாகக் கொண்டு, செங்கையாழியானின் ஒரு மையவட்டங்கள் குறுநாவல் நியூ செஞ்சுரி புக் வெளியீடாக 1982 இல் வெளியானது. இனவேறுபாடின்றி வாழும் தமிழ் சிங்களச் சமூகத்தினரிடம் தனிப்பட்ட வெறுப்புகளாலும், ஊழல்களாலும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. 1977 காடைத்தனம் தனது கை வரிசையை இங்கும் காட்டுகிறது. ஆயினும் மனிதப் பண்புமிக்கவர்களால் அவை கட்டுப்படுத்தப்படுவதும், தீய பண்புள்ளவர்கள் திருந்தி நற்பண்பு பேண முயல்வதாகவும் கதைப் போக்கு அமைகின்றது.

"புத்தா இந்தப் பேச்சுகளைப் பெரிதுபடுத்தாத இனவாதம் அரசியலில் ஜெயிக்கச் சுலபமான வழி இனம், மதம் என்று மக்களின் உணர்ச்சிகளைக்கிளறி விட்டு, பாராளுமன்றச் சீற்றுக்களைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர்கள்

எப்போதும் கவனமாக இருப்பார்கள். அடிபடுகிறது நாங்கள்தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இங்கே சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள். வரலாறு சரியாகப் புரியவில்லை. இவர்கள் இப்படித்தான் புத்தா" என ஜெயரத்தின முதலாளி என்ற பாத்திரம் பேசுவதனூடாக இனப்பிரச்சினை முனைப்புப் பெறுவதற்கு அரசியல் வாதிகளே காரணம் என நாவல் காட்ட முயல்கிறது.

1980 - 1983 காலப் பகுதியைப் பின் புலமாகக் கொண்டு எழுதப்பட்ட எஸ். நடேசனின் வண்ணாத்திக் குளம் (2003) நாவல் மித்திர வெளியீடாக வெளிவந்தது. இந்நாவல் வடமாகாணத்தையும், வட மத்திய மாகாணத்தையும் இணைக்கும் எல்லைப் பகுதியான மதவாச்சி, பதவிய (வண்ணாத்திக் குளம்) வவுனியா ஆகிய இடங்களை பின்புலமாகக் கொண்டது. ஒரு தமிழ் இளைஞனுக்கும், சிங்கள யுவதிக்கும் இடையில் மலரும் காதல் படிப்படியாக வளர்ச்சியடைந்து பதிவுத் திருமண உறவு நிலையை அடைவதாக கதை அமைந்துள்ளது. இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை உச்சம் பெற்ற 83 யூலைப் பெருவேள்விக்கு முன்னோடியாக இரு இனங்கள் மத்தியில் மோதல்களும் அரசியல் பிளவுகளும் ஏற்பட்ட காலத்தில் நாவலின் தலைமாந்தரான சூரியனும், சித்திராவும் இணைகின்றனர். அரசு வலிமை மிகுந்த ஆதிக்க சக்திகளின் அராஜகங்களும் அழிவுகளும் இவர்களை நாட்டைவிட்டு விரட்டுவதாகவும், அவர்கள் வெளிநாடொன்றில் வாழ்வதாகவும் கதை முடிகிறது.

1983 க்குப் பிந்திய ஆண்டுகளில் வன்னிப் பிரதேச முல்லைத்தீவு மாவட்ட மண்ணில் முளைவிட்ட விடுதலை இயக்க எழுச்சியை முல்லையூரான் தமது குங்குமம் (1987) புதிய அலைகள் (1987) ஆகிய நாவல்களில் பிரதிபலிக்கின்றார். குங்குமம் என்ற வன்னிப் பெண்ணை முக்கிய பாத்திரமாகக் கொண்ட இந்நாவலில், சிங்களக் குடியேற்றங்களின் பரவல், அதன் தொல்லைதரு வினையின் மத்தியிலும் தான் விளைத்த நெல்லை அறுவடையாக்க முயலும் வன்னி மனிதனின் மனவுறுதி, அப்பிரதேசத்தின் பாரம்பரியங்கள் என்பன நாவலில் பதிவாகின்றன. குங்குமத்தின் மகன் படிக்கப்போன இடத்தில் சிங்களப் பெண்ணை மணப்பதும், பின்னர் கைவிட்டு ஜேர்மனி சென்று வாழமுயல்வதும், இளைய மகன் போராளியாவதும் என இப்பிரதேசத்தில் உருவான போராட்ட அலையின் இன்னொரு முகத்தை இந்நாவல் காட்டி நிற்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, தொண்ணூறுகளிலிருந்து அவர்களது வாழ்க்கை ஒரு போர்க்கால வாழ்க்கையாகவே மாறியுள்ளது. இக்காலப் பகுதியை தமிழர் தம் வாழ்வின் துன்பியல் வாழ்வாகக் கொள்ளலாம். மரணங்கள், அகதிகள், இடப்பெயர்வுகள், காணாமல் போதல், சகோதரக் கொலைகள், அடக்கு முறைகள், அவமானப்படுத்தல்கள் என உயிர்வாழ்தலுக்கும் இருப்புக்குமான போராட்டமாகி, அவலங்களின் மத்தியில் வாழ்ந்த வன்னிமக்களின் வலியை தமது படைப்புகளில் கொண்டுவர வேண்டிய தேவை படைப்பாளிகளின் தார்மீகக் கடமையாயிற்று. இவ்வேளையில் ஈழத்துப் பெண் படைப்பாளியும், வன்னி எழுத்தாளரும், சுமைகள் நாவலாசிரியருமான தாமரைச் செல்வியின் விண்ணிலல்ல விடிவெள்ளி (1992) தாகம் (1993) வீதியெல்லாம் தோரணம் (2003), ஆகிய நாவல்கள் மீரா பதிப்பகத்தின் வெளியீடாகவும், பச்சை வயல் கனவு (2004) சுப்பிரம் பிரசுராலய வெளியீடாகவும் வெளிவந்தன.

"கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரு போர்க் காலப் பின்னணியின் மத்தியில் வெளிக் கொணரமுயன்றிருக்கிறேன்"என "விண்ணிலல்ல விடிவெள்ளி" நாவல் முன்னுரையில் குறிப்பிடும் ஆசிரியர், குத்தகைக் காணியில் விவசாயம் செய்வதும்,

அதனால் ஏற்படும் பிரச்சினைகள், இந்திய அமைதிப் படையின் அட்டூழியங்கள், இந்தியா இலங்கை இராணுவத்தினரின் கூட்டு ரோந்து விளைத்த இன்னல்கள் என நாவலில் பதிவு செய்துள்ளார்.

இவரது இன்னொரு நாவலான “தாகம்” நாவலில், கராஜ் வைத்துப் பிழைப்பு நடத்தும் ஒருவனையும், அவனது தொழிற் துன்பங்களையும், அமைதியாக வாழ்க்கை நடத்தும் இன்னொரு குடும்பத்தையும் இவர்களுக்கிடையிலான உறவினையும், போர்க்கால நெருக்கடிகள் ஏற்படுத்தும் மாற்றங்களையும் காட்டியுள்ளார்.

“வீதியெல்லாம் தோரணங்கள்” நாவல் இந்திய இராணுவம் வன்னி மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. வன்னிப் பிரதேச மக்களின் வாழ்க்கைக் கட்டமைப்பே உருமாறி எந்நேரம் எது நடக்குமோ என்ற ஏக்க உணர்வு விஞ்சி நின்ற சூழலில் மாறி மாறிச் சாவுகளும், நினைவஞ்சலிகளும், ஹர்த்தாலும், வீதியெங்கும் தோரணங்களும், கழற்றப்படாத கறுப்புக் கொடிகளும் என மரணத்துக்குள்ளான வாழ்வே காணப்பட்டது. இலங்கை இராணுவத்தால் பட்ட காயங்கள் ஆறுமுன்னரே, வெந்த புண்ணில் வேல் பாய்சியது போல, இந்திய இராணுவமும் புகுந்து அட்டகாசம் புரிந்தது. இவையனைத்தையும் தாமரைச் செல்வி தனது பிரதியில் பதிவு செய்துள்ளார்.

தாமரைச் செல்வியின் நாவல்களுள் விதந்துரைக்கத்தக்க நாவல் ‘பச்சை வயல் கனவு’ஆகும். யாழ்ப்பாணம் தென்மராச்சிப் பகுதியிலிருந்து வளமான வாழ்வுத்தேடி வெறுங் கையோடு புலம் பெயர்ந்து வந்த மக்கள் கூட்டம் தமது கடும் உழைப்பினால் கிளிநொச்சியைக் கட்டியெழுப்புவதை விளக்குவதோடு, அப் பிரதேசத்து மனிதனது வியர்வையையும், குருதியையும், அவலத்தையும் தியாகத்தையும், மகிழ்வையும், பிறள்வையும், எழுச்சியையும் வரலாறு தந்த பாடல்களோடு அற்புதமாக இந்நாவலில் பதித்துள்ளார்.

பொம்பர்களும் ஹெலிஹொப்டர்களும் வளைந்து பறந்தபடி கிளிநொச்சி பரந்தன் பகுதிகளில் குண்டுகளைக் கொட்டிய போதுதான் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்டார்கள். கிராமத்தின் உட்புறங்களிலும், இளைஞர் வட்ட மைதானத்திலும் ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் வந்து விழுந்து வெடித்தன. ஒரு பனை உயரத்திற்கு மண்புழுதியெழுந்து காற்றில்கலந்தது. மின்சாரம்நின்றுவிட்டது. கிராமத்தின் வீதியோரமாக வரிசையாக ஆண்களும் பெண்களுமாக போராளிகள் வேகமாக நடந்து பரந்தனை நோக்கிப் போய்கொண்டிருந்தார்கள்” என அந் நகரத்தின் வீழ்ச்சியையும் நாவல் காட்டி நிற்கிறது.

வன்னிப் பிரதேச நாவல் வரலாற்றில் இன்னொரு பாய்ச்சலை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகளே எழுதுகின்ற முயற்சிகள் சுட்டி நிற்கின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பில் பணிபுரிந்த மலரவன் என்றழைக்கப்பட்ட காசிலிங்கம் விஜிதன் என்ற இளைஞனின் பயணக் குறிப்பாக அமைந்த போருலா (1992) மலரன்னை வெளியீடாக வெளிவந்தது. பலாலிப் படைத்தளத் தாக்குதலின் போது மரணமடைந்த பின் அவரது உடைப் பையிலிருந்து எடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியே இந்நாவலாக முதிர்ந்தது. மலரவனின் குறிப்புக்கள் மகிழ்ச்சியும் துக்கமும்தீவிரமும்மரணமும்நிறைந்ததோர் நிலையில் போர் என்பது அன்றாட வாழ்வாக மாறியிருந்த ஒரு சூழலை எம் கண்முன் நிறுத்துகின்றன.

“ஈழத்தின் பெரும் பொருளாதார வளம் நிறைந்த மாங்குள விவசாயப் பூமியில் பசுமையாகத் திகழ வேண்டிய வயல்களில் எமது போராளிகள் செங்குருதியைப் பாய்ச்சி சாயத்தொடங்கினார்கள். இறுதி நொடியில் ஈழமண்ணுக்கு வளமாகிப் போனார்கள். சுதந்திரக் காற்றைச் சுவாசித்து சுயமான சுவடுகளைத் தமது தாயாக

மண்ணில் பதிக்கத் துடித்த இளம் மறவர்கள் வயல் காற்றுடன் கலந்து போனார்கள்.

ஒரு பாசறையில் பிறந்து ஒன்றாய்க் கூடிச்சிரித்து மகிழ்ந்த இளம் போரா-ளிகள் உயிர்த்தோழன் சாவை, உடனிருந்த மற்றையவன் இவனது உறுதியையும் பெற்றபடி வேகமாக எதிரியில் பாய்ந்தான். மடியும் வேளைதானும் மடிகிடைக்காது ஈழமண்ணில் புரண்டு தொட்டாச் சுருங்கிகளின் மேல் உயிர்விடும் சுதந்திர புருடர்கள், இளமையின் இன்பங்களை சுதந்திரத்திற்காகத் தொலைத்த பீஷ்மர்கள் இவர்கள்" என்ற மலரவனின் நடையில் விடுதலை வேட்கையும் இன உணர்வும் மேலோங்கி நிற்பதுடன், இயக்கஞ் சார் பிரசாரத்தொனியும் காணப்படுகின்றது. மலரவனின் இன்னொரு படைப்பான புயல் பறவை (2003) மலரன்னை வெளியீடாக வெளிவந்தது. இந்நாவல் போராட்டத்தின் சகல பரிமாணங்களிலும் இறங்கி ஈற்றில் பேச்சுவார்த்தை மேசையைச் சந்திக்கின்றது. பேச்சு வார்த்தைகள் குழம்புவதற்கு மந்திரிகளும், அரச விசுவாசிகளும், சிங்கள மேலாதிக்கவாதிகளும் தான் காரணமென நாவல் காட்ட முயல்கிறது. மேலும் போரின் உச்சக் கட்டத்தின் பின் பேச்சு வார்த்தைக்காக பல்கலைக்கழக மாணவ-ரோடு மந்திரியைப் பேசவைப்பதும், கவிதா என்ற பாத்திரத்தினூடாக இன அழிப்புத் தவிர்ப்பு, சிங்களக் குடியேற்ற நிறுத்தம், இன சதந்திரமும் சுய நிர்ணயமும், பயங்கரவாதச் சட்டங்கள், மாணவர் விடயத்தில் படை-டயினர் தலையிடாமை, கல்வி கூடங்களை படையினர் முகாமாக்குவதைத் தவிர்த்தல், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை என்ற கோரிக்கைகள் விடப்படுவதோடு, பேச்சுவார்த்தை முறிந்து மாணவர் போராட்டம் ஆரம்பிப்பதோடு நாவல் முற்றுப்பெறுவதாக அமைகின்றது.

தமிழ்கவி என்பவரால் எழுதப்பட்ட இனிவானம் வெளிச்சிடும் (2002) நாவல் அறிவமுது பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இந்நாவல் போர்க்கால நிகழ்வுகளைச் சித்திரிப்பதில் வேறொரு இயங்குதளத்தில் விரிந்து செல்கின்றது. இளம் பெண்ணாக குடும்ப வாழ்வில் ஈடுபட்ட காலத்தில் தமிழரசுக் கட்சிச் செயற்பாடுகள், பின்னர் இயக்கமொன்றில் இணைந்து போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தனது இருபிள்ளைகளையும் போரிலே பறிகொடுத்து விட்டு வாழ்வது வரை ஒரு தாயின் நீண்ட காலத்து மனப் போராட்டங்களையும், அனுபவங்களையும் நுணுக்கமாகச் சித்திரிக்கின்றது. "ஓமந்தையிலே உங்கட மகனஇப்பகண்டனான்ஒருபோரா-ளி கூறினான். பலகாரம் செய்ய நேரமேது? பத்து ரொபி வாங்கி எடுத்துக்கொண்டு ஓடினேன். அவர்கள் சாப்பிட்ட இலையை நாய் நக்கிக் கொண்டிருந்தது. அவர்கள் புறப்பட்டுப் போய் விட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. இப்படிப் பலமுறை அவனைப் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு? ஆனால் ஈச்சங்குளத்தில் புலிக்கொடி போர்த்து நாலு புலிவீரர்கள் தூக்கிவர ஒரு மலர்மாலையுடன் அவனை நிச்சயம் சந்திப்பேன். அந்தத் துணிவை மன-வலிமையை எனக்குத்தா" என்று குறிப்பிடும் தமிழ்க் கவியின் கூற்று போர்க்கால வாழ்வு தந்த சோகங்களைச் சொரிந்து நிற்கிறது.

இரா. உதயணனின் பனிநிலவு (2010) அருணா வெளியீடாக வெளிவந்தது. இரு பெண்பிள்ளைகளின் தாயான வைதேகி கணவனோடு வன்னிக் கிராமமான குளவி சுட்டானில் வாழ்கிறாள். யுத்தச் சூழலில் தன் கண்முன்னே கணவனை எறிகணைக்குப் பலிகொடுக்கிறாள். இடது காலை இழந்தாலும் பதவியா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறாள். சிங்கள இனத்தாதியரின் கரிசனையால் குணமாகிச் செயற்கைக் காலுடன் வவுனியாவிலுள்ள வீரபுரம் கிராமத்துக்கு மீள்கிறாள். அங்கே போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளின் புனர்வாழ்வுக்கும் மறுவாழ்வுக்கும் பாடு-படுகிறாள். இவ்வாறு அமையும் நாவல் போருக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றியும் பேசுகிறது.

மன்னார்ப் பிரதேசத்தையும், இந்தியாவில் உள்ள ஏதிலியர் முகாமையும்

மையமாக வைத்து எழுதப்பட்ட எஸ்.ஏ. உதயனின் 'தெம்மாடுகள்; திரும்புமுனை வெளியீடாக வெளிவந்தது. இந்நாவலில் மன்னார்ப் பிரதேச மக்களது இடப்பெயர்வு வறுமை போராட்டத்திற்கான பங்களிப்பு எனத் துன்பியல் வாழ்வாக நாவல்படருகின்றது.

"அதிகாரிகளின் ஏமாற்றம், வெற்றி தோல்வி, பலம் பலவீனம் என்ற வாழ்வியல் உணர்ச்சிகளுக்கூடாக நம் தாய் மண்மீது கொண்ட தாகத்தையே நாவலின் உட்கட்டுமானமாக்கியிருக்கிறேன்" எனக்கூறும் உதயன் சிறந்த கதை சொல்லியாகத் திகழ்கிறார்.

நாடறிந்த நாவலாசிரியரான செங்கையாழி யானின் விடியலைத் தேடி (2011) குறுநாவல் கமலம் பதிப்பகமாக வெளிவந்தது. விமானக் குண்டு வீச்சுகளுக்கும் செல்லெறிகளுக்கும் தப்பி வாழ நினைக்கும் சுங்கன்குழிக் கிராம மக்கள் காடழித்து களனிகளாக்கி வாழ முற்படுகின்றனர். விமானக் குண்டுகளும் எறிகணைகளும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்றன. குழந்தையைப்பிரசவித்ததாயும்குழந்தையும் கூட எறிகணைக்குப் பலியாகின்றனர். போராளிகளின் எண்ணிக்கையும் குறைகிறது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இளைஞர்களும் யுவதிகளும் பலவந்தமாகக் கடத்தப்படுகின்றனர். அதன் விளைவாக முதிரா இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் திடீர் திருமணங்களைப் பெற்றோர் செய்து வைக்கின்றனர். போர்க்களத்து வர்த்தகர்கள் அறவிலைக்குப் பொருட்களை விற்று மக்களைச் சுரண்டுகின்றனர். வசந்தியென்ற பெண் அவளது விருப்பத்தோடு இயக்க வாலிபனான சசிகரனால் கடத்தப்பட்டுத் திருமணம் செய்யப்படுகிறாள். நந்திக் கடலை வெள்ளைக் கொடியுடன் மக்கள் கடக்க முற்பட்ட போது இயக்கப் போராளியான சசிகரனும் இறக்கிறான். வசந்திக்கும் தியாகு என்ற வாலிபனுக்கும் திருமண ஒழுங்குகள் நடைபெறுகின்றன. இறந்ததாக சொல்லப்படும் சசிகரன் மீள்கிறான். இவ்வாறு செல்லும் நாவலூடே இயக்க நடவடிக்கைகளும், இராணுவச் செயற்பாடுகளும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன.

மேலும், கிழக்கிலங்கையைச் சேர்ந்த எஸ். அரசரத்தினம் எழுதிய சாம்பல் பறவைகள் குறுநாவல் (2010) சந்தியா பப்ளிக்கேசன் வெளியீடாக வெளிவந்தது. இக்குறுநாவலில் வரும் ஆனந்தன், பவானி ஆகியோரது காதல் பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக கைகூடாதபோது கவலையடைந்த பவானி உருத்திரபுரத்திலுள்ள தனது வீட்டிற்கு வவுனியாவிலிருந்து மாற்றலாகிச் செல்கிறாள். அங்கு போன சில மாதங்களில் வன்னிச்சமர் தொடங்குகிறது. அச்சமரின் உக்கிரத்தை பவானி குடும்பத்தை மையமாக வைத்து ஆசிரியர் நகர்த்திச் செல்கிறார். முள்ளிவாய்க்கால் வரை விரட்டப்பட்ட பவானி குடும்பம் இராணுவத்திடம் சரணடைவது வரை கதை வளர்ந்து செல்கிறது.

சண்டையில் சிக்குண்ட மக்கள் எல்லாத் திசைகளிலும் ஓடி ஓடி முடியாமல் தவிக்கின்றனர். வயதானவர்கள், குழந்தைகள், நோயாளிகள் என்போரை ஏற்றிச் செல்ல தயாராக நிற்கும் வெளிநாட்டுக் கப்பலுக்கும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் தமக்குச் சார்பானவர்களையே அனுமதித்தனர். அதனை "குழந்தையை வைச்சிருக்கிற இவவின்ர புருஷன் எங்க....? நீங்க மாவீரர் குடும்பமோ....? உங்கட குடும்பத்தில் ஆரும் போராளியாக இருக்கினமோ? என அடையாள அட்டை இல்லாதவனைப் பொலிஸ்காரன் கேள்வி கேட்பது போலக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்" எனக் காட்டும் நாவலாசிரியர் "அவர்களில் ஒருவன் துப்பாக்கியுடன் பேசினான்"

"நாங்கள் மக்களோடு மக்களாகவே இருக்கின்றோம் எப்போதும் எங்களால் முடிந்த உதவிகளை உங்களுக்குச் செய்து வருகிறோம். கஞ்சி வடித்துக் கொடுத்து இடம் பெயர்ந்தவர்கள் பட்டினியில் வாடாமல் காப்பாற்றி வருகிறோம். அதே வேளை முதியவர்களும் நோயாளிகளும்

கப்பல் மூலம் வெளியேற உதவுகிறோம் ..... ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்களை இராணுவத்திடம் சரணடைய நாங்கள் விடப்போவதில்லை.

..... இது மேலிடத்து உத்தரவு....

அவன் பேசி முடிப்பதற்குள் சனங்கள் அவன் மேல் பாய்ந்து விழுந்தார்கள். எதிர்பாராத இந்நிகழ்வால் இயக்கத்தினர் ஒருகணம் அதிர்ச்சியடைந்து போனார்கள்" என இயக்கப் போராளிகளின் தார்மிகமற்ற செயல்களை கேள்விக்குட்படுத்திய நாவலாசிரியர் புதுமாத்தளன் பகுதியில் இராணுவத்தினர் நடந்து கொண்ட நாகரீகமற்ற, மனிதாபிமான மற்ற ஈனச் செயலை, "இப்ப சரணடையப் போறவயை நிர்வாணப்படுத்தின பிறகுதான் இராணுவம் தங்கட கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ள எடுக்கிறதாம்" என விபரிக்கின்றார்.

இவ்விடத்தில் பேராசிரியர் நுஃமான் தமது கட்டுரையொன்றில், "ஷோபாசக்தி, சக்கரவர்த்தி ஆகிய புலம்பெயர் எழுத்தாளர்கள் போல யுத்தச் சூழலில் விடுதலை இயக்கங்களின் வன்முறை, மனித உரிமை மீறல் போன்ற கருப்பொருள்களை மையமாகக் கொண்ட கதைகளை எழுதியவர்களை ஈழத்தில் மிக அரிதாகவே காணமுடியும். அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருக்கவில்லை. கோவிந்தன் என்ற புனை பெயரில் இயக்கங்களின் வன்முறையை அம்பலப்படுத்தி புதியதோர் உலகம் நாவலை எழுதிய நோபேட் விடுதலைப் புலிகளால் பின்னர் கொல்லப்பட்டார். செல்வி அவ்வாறு கொல்லப்பட்ட ஒரு பெண்கவிஞர் இப்பின்னணியில் சுதாராஜ் போன்றவர்களின் மௌனத்தை நலன்புரிந்து கொள்ள முடியும். யுத்தத்திற்குப் பிந்திய சூழலில் இந்த மௌனத்திற்கு விடுதலை கிடைக்குமென எதிர்பார்க்கலாம்." எனக் குறிப்பிட்டுள்ளமை மனங் கொள்ளத்தக்கதாகும். இத்தகைய பின்னணியில் வைத்து நோக்கும் போது புயல் பறவைகள், விடியலை நோக்கி நாவல்களின் ஆசிரியர்களின் முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

எது எவ்வாறாயினும் தொகுத்து நோக்கும் போது வன்னிப் பிரதேசத்தில் எழுந்த ஐம்பதுக்குமதிகமான நாவல்களில் ஏறக்குறைய 15 நாவல்களே போர்க்காலச் சித்திரிப்புகளாகக் காணப்படுகின்றன. போர்க்காலத்தில் படைப்பாளிகளாகவிருந்த பலர் அக்காலச் சூழலில் அஞ்ஞாதவாசமிருந்தனர். இன்னும் சிலர் போர் நிகழ்வுகளுக்குப் புறம்பான படைப்புகளை எழுதி அமைதி கண்டனர். எனினும், செங்கையாழியான், முல்லையூரான், என். நடேசன், மலரவன், தமிழ்க்கவி, இரா. உதயணன், எஸ். அரசரத்தினம், மன்னார் உதயன் என்போர் அக்கால நிலைமைகளுக்கும் தர்மங்களுக்கும் உட்பட்டு சிலபோது துணிச்சலோடும் சிலபோது மீறியும் தமது படைப்புகளில் வன்னி மக்களின் போர் வாழ்வைப் பதிவு செய்துள்ளனர். எனினும் எதிர்காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் நிகழ்ந்த அவலங்களை நடுநிலைமையோடு சிறந்த நாவல்களாகப் படைப்பது படைப்பாளர் அனைவரதும் தார்மீகக் கடமையாகும்.

**உதவிய நூல்கள்**


01. வே. சுப்பிரமணியம், வன்னியின் கதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு 2007.
02. கந்தையா முருகதாசன், செங்கையாழியான் நாவல்கள், இலக்கியப்பேரவை வெளியீடு, யாழ்ப்பாணம், 2006
03. செங்கையாழியான், நானும் எனது நாவல்களும், மல்லிகைப் பந்தல் வெளியீடு கொழும்பு, 2000
04. செ. யோகராசா, ஈழத்துத் தமிழ் நாவல் வளமும், வளர்ச்சியும், குமரன் வெளியீடு, கொழும்பு, 2000
05. முல்லைமணி, வன்னியியற் சிந்தனைகள், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 2001
06. தாமரைச் செல்வி, விண்ணிலல்ல விடிவெள்ளி, மீரா வெளியீடு, யாழ்ப்பாணம்
07. தாமரைச் செல்வி, தாகம், மீரா வெளியீடு,யாழ்ப்பாணம், 1993
08. தாமரைச் செல்வி, பச்சை வயல் கனவு, சுப்ரம் பிரசுர நிலையம், பரந்தன், 2004
09. தாமரைச் செல்வி, வீதியெல்லாம் தோரணங்கள், மீரா பதிப்பகம், கொழும்பு, 2003
10. செங்கையாழியான், செய்கையாழியான் நாவல்கள், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 1992
11. எஸ். அரசரத்தினம், சாம்பல் பறவைகள், சத்யா பப்ளிகேஷன் வெளியீடு, கல்முனை, 2011
12. மலரவன், போர் உலா, விடியல் பதிப்பகம், 2010
13. மலரவன், புயல்ப்பறவை, மலரன்னை வெளியீடு, மாங்குளம், 2003
14. என். நடேசன், வண்ணாத்திக்குளம், மல்லிகைப் பந்தல் வெளியீடு, 2011
15. இரா. உதயணன், பனிநிலவு, அருணா வெளியீட்டாலயம், கொழும்பு, 2010
16. எம். ஏ. நுஃமான், ஞானம் சஞ்சிகை, இதழ் 147, பக் - 8
17. இராசேந்திரம்பிள்ளை சிவலிங்கம், வன்னிப் பிரதேச நாவல்கள், ஆய்வேடு,பேராதனைப் பல்கலைக்கழகம், 1984

# தொலையும் பொக்கிசங்கள்



வதிரி.இ.இராஜேஸ்கண்ணன்

தன் மனத்தைப் போலவே உச்சிச் சூரியன் உமிழும் வெயில் தகித்துக் கொண்டிருக்க, முகமெல்லாம் கருமை போர்த்தி, மனம் சோர்ந்து விறாந்தையில் போடப்பட்ட சாய்மனைக் கட்டிலில் வீழ்ந்தார் தம்பியண்ணை. 'மல்ரி பெரல்களாய்' இதயம் வெடிப்பது போன்ற உணர்வு. மனத்திலே பல்லாயிரம் ஆணி களால் அறைந்த தவிப்பு. உள்ளத்துப் புழுக்கம் உடலெல்லாம் வியர்வையாகி 'சேட்'டோடு ஒட்டி உடல் நசநசத்து வர எல்லாமே வெறுத்தது போன்ற உணர்வு. அலுத்துக் கொண்டார்.

காலைச் சாப்பாட்டை முடித் துக் கொண்டு வெளிக்கிட்டவர் - ஒருமணி யாகிவிட்டது - இப்போது தான் வரு கின்றார். அவரது நிலைமையை என்னால் ஓரளவு உணரமுடிந்தது.

"பிள்ளை.... மாமாவுக்கு குடிக்க எதாவது கொண்டு வாணை. நடு வெயிலுக்காலைவாறார். குளிர எதாவது குடெணை".

எனது மூத்தவளுக்கு கூறிய வாறே தம்பியண்ணைக்கு முன்னிருந்த கதிரை யிலே அமர்ந்து கொள்கிறேன்.

"என்ன தம்பியண்ணை கொஞ்சம் வேளைக்கு வரக்கூடாதே - வெயில் ஏறேக்கு முன்னம் - இந்த உச்சி வெய்யிலுக்காலை வாறியள்......"

தம்பியண்ணையை வருடும் வகையில் எதாவது கேட்கவேண்டும் என்பதற்காக ஒப்புக்குக் கேட்டுவைத்தேன்.

அவர் தன்னை சுதாகரித்துக் கொள்கின்றார். எனினும் உள்ளூர அவருக்கிருந்த பதகளிப்பு இன்னும் ஆறிய பாடில்லை.

தம்பித்துரை அண்ணை என்பதுதான் 'தம்பியண்ணையின்' விரிந்த வடிவம் என்பது பலரும் அறியாதபோதிலும் அவரை 'தம்பி யண்ணை' என்றே அழைப்பது வழக்க மாயிற்று.

தம்பியண்ணை என்னுடைய தந்தையின் மூத்தசகோதரி - பெரிய மாமியின் - மகன், அத்தான். வயதிலே மூத்த மைத்துனர்களை அத்தான் என்பதுதான் வழமை. எனக்கு நேரே இரு வயதுகள் மூத்தவர் என்பதனால் எமக்கிடையே வயதினால் உண்டான வேறுபாடுகள் எவையும் இல்லை. அத்தான் என்றாலும் ஒருவித நெருக்கம் கருதி 'அண்ணை' என்று சொல்லிவரும் பழக்கம் என்னிடம் சிறுவயதிலிருந்தே முறைவழு-வமைதி யாக வந்து சேர்ந்துவிட்டது.

எங்களுடைய குடும்பத்தில் முதல் பிறந்தவர் என்பதால் எனக்கு இளைய சகோ தரிகள் அவரை 'மூத்தத்தான்' என்றுதான் அழைப்பார்கள். என்னுடைய கடை-சித் தங்கையின் உறவுமுறை இன்னும் வித்தியாசமானது. அவள் அவரை

‘தம்பியண்ணை அத்தான்’ என்றுதான் அழைத்து வருகிறாள்.

அந்தளவிற்கு எல்லோருக்கும் தம்பி யண்ணை ஆகிவிட்டார் அவர்.

நீண்டகாலம் ‘தம்பியண்ணை’ ஊரிலே இல்லை. நேற்றுக் காலையில்தான் பயணத்தால் வந்திருந்தார். கனடாவிலேதன்னுடைய மகனின் குடும்பத்தோடு ஆறு வருடமாக இருந்துவிட்டு இப்போதுதான் சொந்த ஊருக்கு வந்திருக்கிறார்.

“செல்லம், புதிதாக பிறந்த மாதிரிக்கிடக்கடா எங்கடை ஊரிலை திரும்பியும் காலை வைப்பன் எண்டு கனவிலும் நினைக்கவே இல்லையடா. ஒரு மாசமெண்டாலும் நிண்டுதான் போகப்போறன். உன்ரை கடைசிப் பெடியன் கூட என்ரை தோளுக்கு மேலாலை வளர்ந்திட்டான். எல்லா ரையும் நேரை பார்க்க எவ்வளவு சந்தோசமாக் கிடக்குத் தெரியுமே....!”

என்று தம்பியண்ணை நேற்று வந்த வுடன் ஆதங்கத்தோடு கூறிய வார்த்தைகள் இதயத்தை வருடி நின்றன.

செல்லத்துரை என்ற எனது பெயரைச் சுருக்கி ‘செல்வம்’ என்று அழைப்பதுதான் அவரின் வாலாயம்.

“என்னண்ணை என்ன முகமெல்லாம் ஒரு மாதிரிக்கிடக்கு! பேயறஞ்சது மாதிரி. என்ன வெக்கை தாங்க முடியா-மல் கிடக்கே.....! என்ன ஒரே ‘ரென்ஷ னா’ இருக்கிற மாதிரிக் கிடக்கு. உங்கை உங்கட மருமேள் தேசிக்காய்த் தண்ணி வைச்சிருக்கிறாள் குடியுங்கோ. குடிச்சிட்டுப் பிறகு சாப்பிட்டிட்டு கொஞ்சம் ‘றெஸ்ற்’ எடுங்கோ. கனகாலத்துக்குப் பிறகு எங்கட வெயில் சுட்டுப்போச்சு...”

என்று என் குரலோடு நளினம் சேர்த்து அவரை இயல்புக்குக் கொண்டுவர



முனைந்தேன்.

“என்னத்தைக் குடிச்சென்ன சாப்பிட் டென்ன எல்லாம்.......”

தம்பியண்ணையின் வார்த்தை களில் வெளிப்படுவது ஏமாற்றமா? நம்பிக்கையீனமா? கழிவிரக்கமா? என்னால் பகுத்தறிய முடியவில்லை.

“என்னண்ணை....?”- மொட்டையா கவே கேட்டேன்.

“எல்லாம் அழிஞ்சுபோச்சுதடா. வீடும் சரி வாழ்க்கையும் சரி. வாழ வேண்டிய குடியை விட்டிட்டு வெளிக்கிட்டது பிழையாய்ப்போச்சு. எங்கட வாழ்க்கை குலைஞ்சது போல ஆற்ரை வாழ்க்கை குலைஞ்சது...?”

தம்பியண்ணை எங்கள் வீட்டிலே தான் தங்கி நிற்கின்றார். அவருடைய வீடு சென்றவாரம்வரை ‘ஆமிக்காம்ப்’ பாகத்தான் இருந்தது. அவருடைய வீடும், அதற்கு அருகிலுள்ள நான்கு வீடுகளும் சேர்ந்து இராணுவ முகாங்களாகப்

பாவிக்கத் தொடங்கி இப்போது ஏறத்தாழ ஐந்து வருடங்களாகி விட்டன. முக்கியமான இரண்டு சாலைகள் குறுக்கிடும் நாற் சந்தியின் அருகே அமைந்த வீடு என்பதால் அதிலே இராணுவ முகாம் இடுமளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இராணுவத்திற்கு மட்டுமல்ல, எங்கள் வாழ்விலும் கண்களும் பார்வையுமாக இணைந்துவிட்ட பெருமை அந்த வீட்டிற்கு உண்டு. எங்கள் குடும்பங்களின் தாய்வீடு அது. என்னுடைய தந்தையும், பெரிய மாமியும், சின்னமாமியும் பிறந்த இடம் அது. எங்களுடைய பேரன் பேர்த்தி உயிரோடு இருந்த காலத்திலே எங்கள் மூன்று குடும்பங்களினதும் கருவறையாக அந்த வீடுதான் விளங்கியது. நானும் என் அடுத்த இரு சகோதரி களும் அந்த வீட்டிலேதான் பிறந்தோம். சின்னவள்தான் நாம் இப்போது இருந்துவரும் அம்மாவின் சீதன வீட்டில் பிறந்தவள். எங்களைப் போலவே தம்பியண்ணையும், அவரது ஒரு சகோதரியும் அங்குதான் பிறந்தார்கள். சின்னமாமிக்குப் பிள்ளை கள் இல்லை. அப்பா அம்மாவின் வீட்டிக்கு சென்றதுபோல சின்ன மா-மியும் சின்னமாமாவின் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். தம்பியண்ணையின் குடும்பமும், மச்சாள் குடும்பமும் இந்த நாட்டைவிட்டு வெளியேறும்வரை அங்குதான் வாழ்ந்து வந்தனர். நான்கு தலை முறைகள் நலமாக வாழ்ந்த அந்த நாற்சார் வீட்டிற்கு ஒரு வரலாறு உள்ளதை இந்த ஊரில் இன்று அறிந்தவர் சிலரே.

தம்பியண்ணை கனடாவில் நின்ற காலத்தில் எனக்கு எழுதும் கடிதங்களில் ஒன்றில்கூட அந்த வீட்டின் பெரு மையை உணர்த்தி அதனை விசாரிக்கத் தவறியதில்லை.

“செல்லம் எங்கட வீடு எங்கட பேரன் பேத்தி, அம்மா ஐயா, நாங்கள், எங்கட பொடிபெட்டை எல்லாம்சீவிச்சுஓடியாடித் திரிஞ்ச இடம். எங்கட பேரப்பிள்ளையளும் அந்த முற்றத்தில மிதிக்க வேணுமெடா. எங்களைப்போல விளையாடா வேணு மடா. கவனிச்சுக்கொண்டு இரு. ஒரு காலம் வரும்தானே. அவங்கள் எழும்பின உடனே-யே வீட்டை பழைய மாதிரி ஆக்கிப் போடவேணும்....”

அந்த வீட்டைப்பற்றி தம்பி யண்ணை எழுதும் வரிகளில் என் மனதில் நீரில் வீழ்ந்த குருணிக்கல்லாய் புதைந்து நிலைத்துள்ள வரிகளிவை.

தம்பியண்ணை இப்படியெல்லாம் எழுதும் வேளைகளில் என்னுடைய மனத்தினடியிலே ஆழப்புதைந்த அந்த நாட்களின் நினைவுகள் வந்துபோகும்.

வழமைக்கு மாறாக வடக்கு நோக்கி அமைந்த முகப்பினை கொண்ட நாற்சார் வீடு. முகப்பு முற்றத்தில் இரண்டு அந்தலைகளிலும்இரண்டு பெரியகாய்த்துத் தள்ளும் பலாமரங்கள். இவற்றினிடையே அம்பலவி, கறுத்தக்கொழும்பான் மாமரங்கள இரண்டு. முகப்புவாயி லின் இருபுறமும் அளந்து வைக்கப் பட்ட பூஞ்செடிகளும் சாடிகளும், சுற்றிவரக் கழுத்துயர மதிற்சுவர். பிரதான வெளிவாயிலில் இருந்து முகப்புவரை பொழியப்பட்ட சலவைக் கற்கள் கொண்டு ஆக்கப்பட்ட நடை பாதை என்பவற்றோடு கூடிய அந்த வீட்டின் அழகு வார்த்தைகளில் வசப்படாதவை.

அந்த வீடுதான் இப்போது எழில் குலைந்து சுடுகாடுபோல கிடக்கிறது. நிலை கதவுகள் இடிக்கப்பட்டு, மரங்கள் தறிக்கப்பட்டு, கிடங்குகள் தோண்டப்பட்டு, முள் வளையங்கள் போடப்பட்டு, நெருஞ்சி முள் அப்பி...

அந்த வீடு இருக்கும் காணி அந்தக் காலத்தில் ஒரு பெரிய கட்டாந்தரையாக இருந்ததாம். அதிலிருந்த மூன்று பனை-

கள் மாத்திரம்தான் அந்த நிலத்திற்கும் உயிர்ப்பு இருந்ததை உணர்த்தி நின்றன. ஒரு முக்கோணத்தின் மூன்று புள்ளிகளாய் நின்ற அந்தப் பனைகள் தான் அந்தக் காணியிலே வாழ்ந்த எங்கள் பேரன் பேர்த்தியின் குடிசை யைக் கோபுரமாக்கிய சூட்சுமங்கள்.

வருடாவருடம் பார்த்திபோட்டு வரும் பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், ஊமல், பனாட்டு, கங்கு மட்டை விற்ற சேமிப்பில் உருவானதுதான் அந்த வீடு என்பதை இன்று யாருமே நம்பிவிடப்போவதில்லை என்றாலும் உண்மை.

“என்ன நீங்கள் உந்தப் பெரிய வீட்டைக் கட்டிப்போட்டு நடுக்காணியில பனை யளை விட்டிருக்கிறியள். மழை காத்துக்கு வீட்டுக்கு மேல சாஞ்சுதேயெண்டால்...!” என்று வீடு கட்டிய வேளையில் ‘நரி’ முரு கேசு வாத்தியார் அப்புவைக் கேட்ட வேை-ளயில்,

“எனக்கு மேல விழுந்து உயிர்போனாலும் பறவாயில்லை. அதுகள் தங்கடபாட்டிலை நிக்கட்டும்”.

என்று உறுதிபடக் கூறிய பதில் இன்றும் என் செவிகளில் நிறைந் துள்ளது.

நானும் தம்பியண்ணையும் சிறு வர்களாக இருந்த காலத்தில் மாமா-வைக் கொண்டு இரண்டு பனை களுக்கு குறுக்காக மரங்கட்டி ஊஞ்சல் கட்டுவித்து ஆடிய நினைவு கள் என்மனதில் பசுமையாக உள்ளன. நாங்கள் ‘அடிச்சுத்தொட்டு’ விளையாடும் போதிலெல்லாம் அந்த மூன்று பனைகளையும் சுற்றி ஆளையாள் துரத்திக்கொண்டு ஒடுவது விறுவிறுப்பைத் தந்தது.

மூன்றுபனைகளும்காய்த்துக்குலுங்கும் காலத்தில் வீடுகளை கட்டும். அப்பிளுக்கு அவுஸ்திரேலியா என்றால் பனம்பழத்துக்கு யாழ்ப்பாணம்.

நாங்கள் ஓரளவு பருவமறிந்த சிறுவர்களாக இருந்த காலத்தில் ‘பனாட்டு பினைவது’ அப்புவின் வீட்டில் ஒரு சடங்காகவே நடைபெ-றும். பனம்பழங்களை பவ்வியமாகச் சேர்த்துவைத்து பெரிய அண்டா போன்ற பாத்திரத்தில் ஆளும் பேருமாகச் சேர்ந்து ‘பினாட்டு பினைவதில்’ ஒவ்வொரு தட-வையும் ஒவ்வொரு உயிர்ப்பு. ஆச்சி தன்னுடைய பனையிலேயே சார்வேலை வெட்டுவித்து ”பெரும்பனை ஒலைப் பினாட்டுப்பாய்“ இழைப்பாள். பினைந்த பனங்கழியை பனாட்டுப் பாயிலே தடிப்பாகவார்த்து வெயிலிலே காய வைத்து ‘கண்டோஸ்’ போன்ற துண்டுகளாய் வெட்டி, மண்பானையில் ‘கருப்பணி’ பாணிகாய்ச்சி வார்த்து அரிசிப்பொரியோடு பனாட்டுத் துண்டுகளைப் போட்டு, பல நாட்கள் ஊறவிட்டு ‘பனாட்டு காடி’ போட்டு வைப்பார்கள். பாகிலே தோய்ந்த அந்தப் பனாட்டுத் துண்டுகளை வாயி-லே போட்டு ‘ரொபியாக’ உவிந்த காலம் - இப்போது யாரிதைச் செய்கிறார்கள்!...

பனாட்டு பிழிவதற்கு சேகரித்த பனம் பழங்களில் மிக உயர்ந்த தரமானவற்றைத் தெரிந்து கல்லடுப்பு மூட்டி, அடுப்பு வாயில் பனம்பழத்தை வைத்து தோல் கருகும்வரை எரித்து, சுட்டபின்னர் மூன்று மூன்றாக ‘கொட்டைகளை’ பிரித்துவைத்து, தோலுரித்து ‘பழப் புளியை’ கழியாகக் கரைத்து பனம் பழத்தில் வார்த்து, கைக-ளினால் தும்பையும், கழியையும் பிசைந்து இறுக கைகளினால் அழுத்தி பெரு விரலை யும் ஆட்காட்டி விரலையும் வளையமாக ஒன்று சேர்த்து பிசைந்த பனங்கழி வளை யமான விரலிடுக்கு வழியே பொங்கிவர வாயை வைத்து அந்தக் கழியை உறிஞ்சிக் குடிப்பதில் உள்ள சுகம். ‘சொத்தலிக்

கொட்டையை' தேர்ந்தெடுத்து முழுதாக வாயிலே தள்ளி 'பபிள்கம்' சப்புவது போல நாள் முழுக்க வாய் குதப்பித்திரிந்த சுகம்.

பாத்திகிண்டி படையல் வைத்தல், நெட்டி வெட்டி சீர் செய்து கிழங்கு அவித்தல், மொட்டு வெட்டி பூரான் தின்னுதல், புழுக்கொடியல் காயவிட்டு காவல் காத்தல் - இந்த சுகங்களையெல்லாம் வாழ்க்கையாக தந்தவை அந்த மூன்று பனை மரங்களும்தான். வாழ்வில் ஒவ்வொரு கணங்களும் கூடி வாழ்தல், கொடுத்து உண்ணுதல் போன்றவற்றின் வாளிப்பு கள் - வசீகரங்களைத் - தந்தவை இவை. இவை எல்லாம் மனக்கடலின் அடியிலிருந்து மிதப்பெடுக்கும்போது, இப்போதைய எங்கள் வாழ்வுகள் அர்த்தங்கள் பொய்த்து அந்தரிப்பது போன்ற ஒரு உணர்வு.

இந்தச் சுகங்களை எல்லாம் வாழ்க்கையாகத் தந்தவை அந்த மூன்று பனைமரங்களும்தான்.

"எடே அப்பு அவை, எங்களுக்கு மும்மூர்த்திகளும் இந்த மூண்டு பனையளுந் தானடா". என்று எங்கள் பேரன் - அப்பு - அடிக்கடி சொல்வது இன்றும் நினைவிடை நிறைந்துள்ளது.

தம்பியண்ணை வாழ்வே தொலைந்து விட்டதாக உணர்வது என் இதயத்து துடிப்போடு சேர்ந்து அதிரும் இழப்பின் உணர்வுகளைவிட மேலானது என்பதை அறிந்தும் என்னால் அவரை ஆறுதல் படுத்த முடியவில்லை.

"அண்ணை என்னண்ணை எங்களுக்கு மட்டுமே..... எல்லாருக்கும் இஞ்சை உப்பிடி ஒவ்வரு ஏக்கம் தான் வாழ்க்கையாகிப் போய் கிடக்குது. நேற்று நீங்கள் வீட்டைப் பார்க்கப் போகப்போறன் எண்டு சொல்லை யுக்கையே சொல்லவேணு மெண்டு தான் நினைச்சன் ஆனால்...."

"என்னடா பேக்கதை கதைக்கிறாய் கடிதத்திலை ஒரு சொல்லு எழுதியிருக்க கூடாதே உதைப்பாக்கவே சந்தோஷமா ஓடி வந்த னான்..... மெய்யே சொல்லு....."

அண்ணையின் எதிர்பார்ப்புகள் பொய்த்த மனஉணர்வுகள் வெப்பியாரமாக வெளிப்பட்டது.

"அண்ணை அவங்கள் அதுக் குள்ளை இருக்க நாங்கள் என்னண்ணை செய்யிறது. அறுவாங்கள்பங்கர்போட்டத்தானண்ணை தறிச்சிருப் பாங்கள்".

என் இதயம் உடைப்பெடுத் தது. என்னால் தம்பியண்ணையை தேற்ற முடியாததை உணர்த்திற்று.

"நாசமாய் போவாங்கள். என்ரை வீட்டை அம்மணமாக்கியிருக்கிறாங்கள் பறவாயில்லை கட்டியாதல் போட லாம். அந்த மூண்டையும் அப்பு எவ்வளவு பக்குவமா வளர்த்து பொக்கிசமா எங்களுக்கு விட்டிட்டுப் போனவர். அதை எப்பிடி இனி......."

அண்ணையின் வார்த்தைகள் தொண்டைக் குழியோடு சிறைப்பட்டன. சற்றுநேர மௌனத்தை குலைத்துக் கொண்டு எழுந்தார்.

"செல்லம்... எங்கையாதல் நல்ல பனங்கொட்டை பாக்கப் போறன். என்ரை விசா முடிஞ்சாலும் பறவாயில்லை எத்தினை மாச மெண்டாலும் சரி அந்த வளவு முழுக்க விதைக்கப் போறன்."

உறுதியோடு கூறிக்கொண்டு எழுந்து தகிக்கும் வெயிலில் இறங்கி நடந்தார். அவருக்காக வைத்திருந்த 'தேசிக்காய் தண்ணி' அப்படியே கிடந்தது.

**(ஞானம் ஒக்டோபர், 2002)**

**பத்தாம் ஆண்டு தமிழ் கற்பித்தல் ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூலில் இச்சிறுகதை இடம்பெற்றுள்ளது.**



# ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்

## ஓர் அறிமுகக் குறிப்பு

த.ஜீபன்

**அறிமுகம்**

போர்க்காலக் கவிதைகள் என் பது போர் நடைபெறும் காலங்களில் போரில் ஈடுபடுபவர்களாலும், போர்ப் பிரதேசங் களில் வாழ்ந்தவர்களாலும் பாடப்படுகின்ற கவிதைகள் ஆகும். இப்போர்க்காலக் கவி தைகள் போர்பற்றிய துமான, போர்க்கால வாழ்வு பற்றியதுமான கருத்து நிலைகளைக் கொண்டிருக்கும்

உலக இலக்கியங்களில் கிரேக்க வீரயுகப்பாடல்களில் இருந்தும் தமிழ் இலக்கியங்களில் சங்ககால புறநானூற்றில் இருந்தும் போர்க்காலக் கவிதைகள் முகிழ்ந்திருக்கின்றன. இருப்பினும் போர்க்காலக் கவிதைகள் என்ற தனி வரையறை முதலாம் உலக யுத்தத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. முதலாம் உலக யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்க, பிரித்தானிய படைகளில் கடமையாற்றிய படைவீரர்களால் எழுதப்பட்ட கவிதைகள் போர்க்காலக் கவிதைகளாகின்றன.

முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து இரண்டாம் உலக யுத்தகாலத்திலும் அதன் பின்னர் உலகில் தோற்றம் பெற்ற ஆயுதப்போராட்ட, விடுதலைப் போராட்ட அமைப்புகளாலும் பாடப்பட்ட கவிதைகள் போர்க்காலக் கவிதைகள் என இதன் வரலாறு நீண்டு செல்கின்றது.

எனவே போர்க்காலங்களில் பாடப் பட்ட இக்கவிதைகளின் தொனி பொருளானது போர் பற்றியதும், போராட்டம் பற்றியதும், போராட்ட எதிர்ப்பு பற்றியதும், போர்க்கால வாழ்வு பற்றியதுமாகவே பெரும்பான்மையான கவிதைகள் இருக்கின்றன.

**ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்**

ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள் என்பது ஈழத்தில் போர் நடைபெற்ற காலப்பகுதிகளில் போர்ப்பிரதேசங்களில் எழுதப்பட்ட கவிதைகளைக் குறிக்கும். இனமுரண்பாடுகளை அடுத்து ஏற்பட்ட ஆயுதப்போராட்டங்களால் போர் உக் கிரமடைந்து அந்த போரின் தாக்கம் கவிதைகளுக்குள்ளும் உள்நுழைந்திருக் கிறது. ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள் என்பது பெரும்பாலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இருந்து எழுந்த கவிதை களையே பெரும்பான்மையாக குறிக் கின்றது.

ஈழத்துத் தமிழ்க்கவிதைப் பாரம் பரியத்தில் ஐம்பதுகளுக்குப் பின்னரான இடதுசாரிச் சிந்தனை எழுச்சி கவிதை களில் ஏற்படுத்திய தாக்கம் புரட்சிகர சிந்தனைக்கு வித்திட்டது. இந்தியாவில் பாரதி, பாரதிதாசனின் புரட்சிகர சிந்தனை யும் விடுதலை பற்றிய அவர்களது கவிதை முழக்கங்களும் ஈழத்து போர்க்கவிதை களுக்கு வித்திட்டது எனலாம்.

உணர்ச்சிமயமான செல்லாடல்கள் மூலம் கவிதையை படிப்பவர்கள் மனதில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய கவிதைகளையே ஆரம்பகால போர்க்காலக் கவிதைகள் கொண்டிருக்கின்றன. எனினும் ஈழத்தின் போர்க்காலக் கவிதைகளை “மரணத்துள்வாழ்வோம்” என்ற தொகுப்பில் இருந்தே ஆரம்பிப்பது சரியானதாக

அமைகிறது. போர்க்காலக் கவிதைகள் என்ற இலக்கணம் மரணத்தில் வாழ்வோம் என்ற தொகுப்பில் இருந்தே திட்டவட்டமாக ஆரம்பிக்கின்றது.

எண்பதுகளின் பின் தோற்றம் பெற்ற கவிதைகள் பெரும்பாலும் போர்க்காலக்கவிதைகளாவும் போராட்டக் கவிதைகளாகவும் இருந்திருக்கின்றன. இவற்றில் போராட்டக் கவிதை என்பது தமிழில் முதன்முதலில் ஈழத்திலேயே தோற்றம் பெற்றது எனலாம். போர்க்காலக் கவிதைகள் எனும் வரையறைக்குள் போர்க்கவிதைகள் அல்லது போராட்டக் கவிதைகள் என்ற அமைப்பும் உள் ளீர்க்கப்பட்டதாகவே ஈழத்துப் போர்க் காலக்கவிதைகள் அமைந்திருக்கின்றன.

மரணத்துள்வாழ்வோம் என்ற தொகுப்பினைத் தொடர்ந்து நுஃமானால் மொழிபெயர்க்கப்பட்ட பலஸ்தீனக் கவிதைகள், சிவசேகரத்தால் மொழி பெயர்க்கப்பட்ட மறப்பதற்கான அழைப்பு போன்ற மொழிபெயர்ப்பு முயற்சிகளும் ஈழத்தில் போர்க்காலக்கவிதைகளும் போர்க்கவிதைகளும் புதிய புதிய பரிமாணங்கள் பெறுவதற்கு உறுதுணை யாயின. ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள் என்பது வெறும் கோசங்களாகவோ வீறுணர்ச்சி பொங்குகின்ற வார்த்தை களாகவோ அன்றி போர் நடைபெறுகின்ற மண்ணில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதரது உரிமைக்குரலாகவே ஒலித்திருக்கிறது.

**போரில் ஈடுபட்டவர்களால் எழுதப்பட்ட கவிதைகள்**

போரில் ஈடுபட்டவர்களால் எழுதப் பட்ட கவிதைகள் போர்க்கவிதைகள் என்றும் போராட்டக் கவிதைகள் என்றும் அழைக்கப்படும். இக்கவிதைகளில் பெரும்பாலும் போர்பற்றிய செய்திகளும் போருக்கான தூண்டுகையுமே அதிகம் காணப்படும். இவற்றினை போர்பற்றிய பிரச் சாரக் கவிதைகள் எனவும் குறிப்பிடலாம்.

போர்க்களத்தில் நின்று போராடிக் கொண்டிருந்த போராளிகளால் எழுதப் பட்ட இக்கவிதைகளில் அவர்களது போர்க்கள அனுபவங்களும் போராட்ட நியாயங்களும், தாம் இழந்த வாழ்வின் மீதான காதலும் அதன் நினைவுகளுமே முழு வீச்சாக உள்ளன. கவிதை என்ற தளத்தில் இக்கவிதைகள் தமிழுக்கு புதிய வரவாகவும் புதிய சிந்தனை வடிவ வீச்சுக்களாகவும் உள்ளன.

இருப்பினும் இக்கவிதைகளினுடைய இலக்கு போரும் போரை வெல்லுதலுமே ஆகும். இதனால் இக்கவிதைகள் பக்கச் சார்பானவை என்ற விவாதத்திற்கும் உட்படு கின்றன. கவிதை என்பது பொதுவான தளத்தில் இருந்து பார்க்கப்பட வேண்டியது. ஆனால் இக்கவிதைகளை எழுதியவர்களது சூழ்நிலைகள் அவர்களது உணர்வுகள் ஒரு முகப்பட்டதாகவே இருந்ததனால் இவர்களது பார்வைப்புலம் ஒரு திசையை நோக்கியதாகவே இருந்திருக்கிறது.

ஈழத்தில் போர்க்கவிதைகள் பெரும்பாலும் வடக்குபிரதேசங்களில்வாழ்ந்தவர்களாலேயே அதிகம் எழுதப்பட்டன. குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளி களாலும், போராட்டத்திற்கு துணையாக இருந்தவர்களாலும் எழுதப்பட்டன. போர்க்காலங்களில் போருக்கான பிரதான பிரச்சார ஊடகமாக இக்கவிதைகளே இருந்திருக்கின்றன. இளைஞர்களை போராட்டத்தின்பால் உள்ளீர்ப்புச் செய்வதற்கு இக்கவிதைகள் பிரதான பங்களிப்பினைச் செய்திருக்கின்றன.

**போருக்குள் அகப்பட்டவர்களால் எழுதப்பட்ட கவிதைகள்**

போர்ப்பிரதேசங்களில் வாழ்ந்த வர்களால் எழுதப்பட்ட கவிதைகள் என்பது ஆயுதம் ஏந்தாத சாதாரண மக்கள் கூட்டத்தினரில் எழுத்து வன்மையுள்ளவர்களால் எழுதப்பட்ட கவிதைகள் ஆகும். இக்கவிதைகளில் போரின் வன்மையும் போரினால் ஏற்படுகின்ற இழப்புக்கள், வலிகள், போருக்குமுந்தியதான வாழ்க்கை முறைகள், போர்க்கால வாழ்க்கை முறைகள் போரின் சரி, பிழை விவாதங்கள் என்பவைகள் உள்ளடங்கியதாக இருக்கும். இவர்களுடைய கவிதைத்தளம் ஒரு

பொதுவான தளமாக இருப்பதோடு நிதானமான கருத்தியலை கொண்டதாகவும் இருக்கும். இங்கு உணர்வு முன்மை பெறுவதை விட மக்கள் அவலங்களே முதன்மை பெறுகின்றது. போர்க்கால வாழ்க்கை முறையை மிகச்சரியான தளத்தில் வைத்து பாடப்பட்டவையாக இவர்களின் கவிதைகள் காணப்படுகின்றன.

இருப்பினும் போர் உக்கிரமடைந்த தொண்ணூறு காலப்பகுதியில் வடக்குப் பிரதேசங்களில் இருந்து எழுதப்பட்ட பெரும்பாலான கவிதைகள் போராட்டத்தை நியாயப்படுத்துவனவாகவே எழுதப் பட்டிருக்கின்றன. போரையும், போராட்டத்தையும் நியாயப்படுதக் கூடியதான படைப்புக்களை மட்டுமே வெளிக்கொணரக்கூடிய சூழ்நிலையே அக் காலப்பகுதியில் போர்நடந்த பிரதேசங் களில் இருந்திருக்கின்றன.

போர்க்காலக்கவிதைகளினுடைய தளமானது போர்பற்றியதான செய்திக ளோடு போரினால் மக்கள் படுகின்ற அவலங்களையும் சுட்டுவதாகவே அமைந்திருக்கும். ஆனால் ஈழப்போரைப் பொறுத்தவரையில் இங்கு நடைபெற்றது இரண்டு நாடுகளுக்கிடையில் நடைபெற்ற போரல்ல உள்நாட்டில் இடம்பெறுகின்ற பயங்கரவாத நடவடிக்கையுமல்ல. ஒரு இனம் தனது இருப்புக்காகவும் சுதந்திரமான தனது வாழ்வுக்காகவும் நடத்திய போர் ஆகையால்தான் ஈழப்போர்க்கவிதைகள் என்பது போராட்ட பிரச்சாரங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

**போர் எதிர்ப்புக்கவிதைகள் அல்லது போராட்ட குழுவுக்கான எதிர்ப்புக்குரல்**

போர் எதிர்ப்புக்கவிதைகள் என்பது போரினை வெறுப்பவர்களால் பாடப் படுகின்ற கவிதைகள் என நேரடி அர்த்தம் கொண்டாலும் ஈழத்துப் போர் எதிர்ப்புக்கவிதைகள் என்பது ஈழப்போராட்டத்தில் ஈழுபட்ட ஆயுதம் ஏந்தியவர்களுக்கான எதிரான கருத்தியலை கொண்ட கவிதைகளாகவே போர் எதிர்ப்புக் கவிதைகள் காணப்படுகின்றன.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிக்குழுக்களினால் விடப்படுகின்ற தவறுகள் மனிதஉரிமை மீறல்கள், மக்கள் மீது திணிக்கப்படுகின்ற வல்லழுத்தம் என்பவற்றிற்கு எதிரான குரலாக இது அமைகிறது. ஆயுதப் போராட்ட வாழ்வியலென்பது எதிர்க்கருத்தியலுக்கு இடமளிக்காது இருப்பதனால் போராட்ட சித்தாந்தங்களை மீள்வாசிப்புக்கு உட்படுத்துபவர்களால் இக்கவிதைகள் எழுதப்படுகின்றன. போர் எதிர்ப்புக்கவிதைகள் என்பது கூடிய பாகம் வடக்கிற்கு வெளியே அதாவது போராளிக்குழுக்களின் ஆதிக்கம் இல்லாத பிரதேசங்களில் இருந்து வெளிவந்தவையாகவே இருக்கின்றது. போர் எதிர்ப்புக்கவிதைகளில் மிக உச்சமானதாக குறிப்பிடப்படுவது கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளிவந்த முஸ்லீம் கவிஞர்களால் தொகுக்கப்பட்ட “மீசான் கட்டைகள் மீள் எழும்பாடல்கள்” என்ற தொகுப்பை குறிப்பிடலாம். இதனைவிட வடபுலத்திற்கு வெளியேயும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் போர் எதிர்ப்புக்கவிதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே போர் எதிர்புக்கவிதைகள் என்பது ஈழத்தைப் பொறுத்தவரையில் போராளிகளின் தவறான நடத்தைகள், கொலைகள் பற்றிய விமர்சிப்பாகவே பெரும்பகுதி இருந்திருக்கின்றன. போர்க்காலக் கவிதைகள் என்பது ஒழு குழுமம் அக்குழுமத்தில் போர் எதிர்புக்கவிதைகள் என்பது இலக்கியத் திறனாய்வு போன்று போரியலையும் போராட்டத்தையும் திறனாய்வு செய்கின்ற கவிதைகளாகவே இருந்திருக்கின்றன.

**முடிவு**

ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள் பல்பரிணாமங்கள் கொண்டதும் பல கருத்தியல்கள் கொண்டதுமான கனதியான ஒரு இலக்கியப் பாராம்பரியத்தை வலிசுமந்த வாழ்வுக்குப் பிறகு எமக்குத் தந்திருக்கின்றன.

சிறுகதை

# நான் இப்படி ஒருநாளும் அழுததில்லை.

ஆவூரான் – மெல்பேர்ண்



அப்போ நாட்டு நிலைமையையும் தாய் வீட்டையும் தம்பி காந்தனையும் நினைத்து சோகத்தோட கண் கலங்கினால் ஆதவன் ஓடிவந்து முகத்துக்கு முன்னால நின்று அதைப்பற்றிப் கேள்விக்கு மேலே கேள்வி கேட்டு என்னைக் குடைந்து போடுவார். அதோட அவரும் அப்ஸற் ஆகி விடுவார்.

அவுஸ்ரேலியாவிற்கு அவர் கப்பலில் தான் வந்தவர். அவருக்கு பாபு தான் கப்டன் “கூக்”. அதால அவர் தான் வந்த கப்பலையும் பாபுவையும் படமாக வரைந்து சுவரில் மாட்டி இருக்கிறார்.

நான் அவரின் ஸ்பொன்சரில் விமானத்தில் வந்தனான். வந்து ஆறு வருடம் குழந்தை இல்லை. அங்கு நேசரி ரீச்சர் எண்டதால ஒரு வருடம் கோர்ஸ் செய்து போட்டு ஆண்டு இரண்டு பிள்ளைகளுக்கு 5 வருடமாகப் படிப்பிக்கிறன். ஒவ்வொரு வருடமும் ஒரே வயதுப் பிள்ளைகள் என்ர வகுப்பில இருக்கிறதால எனக்கு பிள்ளை இல்லை என்ற குறை மனதை வாட்டுறதில்லை.

கடந்த 3 மாதத்துக்கு முன் கப்பலில் வந்ததாக, ஒரு குடும்பம் எங்கட கிராமத்துக்கு வந்து வாழ்கிறார்கள். கதிரவன் என்ற குழந்தையை என்ர வகுப்பில கொண்டுவந்து சேர்த்தார்கள். கதிரவன் வந்ததின் பின்னால் என்ர மனதில் எனக்கும் இப்படி ஒரு பிள்ளை இல்லையே. இவனைப் போல ஒரு பிள்ளை வேணும் என்று மனதில் கணக்குப் போட ஆரம்பித்து விட்டதால என்னவோ அவன் மேலே எனக்கு ஏதும் கரிசனையோ தெரியாது அவன் எதைச் செய்தாலும் மிகவும் அழகாகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்.

கதிரவன் சரியான கெட்டிக்காரன் எதையும் சூக்குமமாக சொல்லி முடிப்பான். சாதுரியமாகவும் சமாளிப்பான். ஆரம்பத்தில் அவனுக்கு ஆங்கிலம் வராது. எதையாவது மற்றைய பிள்ளைகளின் சாமான்களை எடுத்துப் போட்டு சாதுரியமாக சமாளித்து சொறி (sorry) சொல்வான்.

வெள்ளைக்காரப் பிள்ளைகளும் அவனின் சமாளிப்பால் மயங்கி ஏற்றுக் கொள்வார்கள்.

கதிரவனுக்கு ஓவியம் வரைவது கலர் தீட்டுவது என்றால் வடிவாகச் செய்வான்.

ஒருநாள் இரண்டு படம் கீறினான். ஒரு படத்தில் ஒரு வீடும் பெரிய மரமும் வீட்டுக்கு முன்னால் பிள்ளைகள் விளை யாடுவதுபோல், மற்றைய படத்தில் வீடு இடிந்து கிடக்கிறது, மரத்துக்குக்கீழே பிள்ளைவிளையாடுவதுபோல். நான் இதைக் கவனிக்கவில்லை. அதை வேண்டி அவனுடைய அலுமாரிப் பகுதியில் வைத்து விட்டேன். மறுநாள் இடைவேளையின் போது எதையோ எடுக்கப் போனன். கதிரவன் வரைந்த படங்கள் கீழே விழுந் திருக்கப் பார்த்தனான், எடுத்துவைக்க எத்தனித்தபோது கவனித்தேன்,

**"ரீச்சர், எங்கட அப்பாவும் நாட்டுக்காகப் போராடிய போர்வீரர், மாவீரர். அவரைப் புதைத்துப் போட்டுத்தான் நாங்கள் வந்தனாங்கள். அவற்ற கல்லறை அங்கு இருக்குமா?**

மிகவும் ஆச்சரியமாக இருந்தது. கதிரவனைக் கூப்பிட்டு விளக்கம் கேட்டேன். அவன் தனது குறும்புத் தனத்துடன் ஓடிக்கொண்டிருந்தான். பிடித் துக் கதிரையில் இருத்தி "இது நீங்கள் தானே வரைந்தீர்கள் இதுக்கு என்ன விளக்கம்" என்று கேட்டனான்.

"எங்களுக்கு அழகான வீடு இருந்தது. விமானம் குண்டு போட்டு வீடு உடைந்து போச்சு. மரத்துக்குக் கீழேதான் நாங்க வாழ்ந்தனாங்கள்"

என்று சொல்லிவிட்டு விளையாட ஓடினான் கதிரவன்.

கலங்கிய கண்களோடு நிமிர்ந்தபோது பக்கத்து வகுப்பு ரீச்சர் அஞ்சலினா என்னைப் பார்த்தவள். அஞ்சலினா என்ன நினைத்தாளோ don't worry என்று என் முதுகில் தட்டினாள். அதுக்கு என்ன அர்த்தம் என்று எனக்கு விளங்கவில்லை.

இப்போதெல்லாம் கதிரவன் வகுப் பறைக்கு வரும் வரையும், அவனைக் காணும் வரையும் மனம் பதட்டமாக இருக்கும். அவனை அவனது தாய் கொண்டுவந்து கொஞ்சி அனுப்பும்போது என்னை நிமிர்ந்து பார்த்துக் கை அசைத்துவிட்டுப் போவாள்.

என்னுடைய தாங்க முடியாத கவலைக்கும் வேதனைக்கும் ஏதோவொரு மருந்தாக கதிரவன் இருந்தாலும் அவனு டைய சின்ன வயதில் இப்படி ஒரு வடு இந்தப் பிஞ்சு இதையத்திலா என்று நம்புவதா நம்பாமல் இருப்பதா என்ற கேள்வி எழக்கூடிய சம்பவத்தை அவனே மனம் திறந்து சொன்னான்.

எப்பவும் சின்ன சின்ன கவலைகளுக்கு அழுத நான், அன்று தேம்பித் தேம்பி அழுதன்.

போன கிழமை நான்காம் ஆண்டு மாணவர்கள் பக்கத்து வகுப்பில் பேசிக் கொண்டிருந்தவர்கள். என்னைக் கண்டதும் என்னிடம் வந்து "ரீச்சர் நாங்கள் வியட்நாம் நாட்டுக்குப் போகப் போகின்றோம். எங்கட தாத்தாவின் சமாதி "மாவீரர் கல்லறை" அங்கு இருக்கிறது.

"Ansac day" அன்று நாங்கள் அங்கு தான் நிற்போம். எங்கட கிறேற் கிறான் தாத்தாவுக்கு நாங்கள் எல்லோரும் அஞ்சலி செய்யப் போகின்றோம். அரசாங்கமே இந்த ஒழுங்கைச் செய்து தருகிறதாம். நாங்கள் அங்கு போகின்றோம். மீண்டும் சந்திப்போம் ரீச்சர் என்று சொல்லி விலகிப் போனதைப் பார்த்துக் கொண்டிருந்த கதிரவன்,

"ரீச்சர் எங்கட அப்பாவும் நாட்டுக் காகப் போராடிய போர் வீரர், மாவீரர் அவரைப் புதைத்துப் போட்டுத்தான் நாங்கள் வந்தனாங்கள். அவற்ற கல்லறை அங்கு இருக்குமா?

நாங்கள் போய்ப் பார்க்கலாமா எப்பாவது? விளையாட்டுத்தனமாக விளை யாடிக் கொண்டிருந்த கதிரவன் என்னிடம் இப்படிக் கேட்டுவிட்டு திரும்பவும் விளை யாடப் போய்விட்டான்.

என் நினைவு தாய் நிலத்தின் பகுதிகளுக்கும் அதன் கொடுமைகளின் சுவடுகளுக்கும் ஒரு சுற்று சுற்றி வந்தது. அன்று வெள்ளிக்கிழமை காலை கதிரவன் வரும் வழியைப் பார்க்கிறேன். அவன்

வரவே இல்லை. திங்கள் கிழமையும் வரவேயில்லை. நிறையப் பேரிடமும் விசாரித்துப் பார்த்தும் விட்டேன். பதில் தெரியவில்லை.

அழுவதைத் தவிர என்னால் எதையும் செய்ய முடியவில்லை.

கதிரவன் வந்த இடம், எங்கு இருக்கிறான், என்பதை எல்லாம் அவனைக் கேட்க வேண்டும் என்று இருந்தேன். ஆனால் காற்று மாதிரி வந்து கணப் பொழுதில் மறையும் நிழல் மாதிரிப் போய் விட்டான்.

நான் அழுதுகொண்டிருக்கிறேன். ஆதவன் என் அருகில்வந்து என்தோளில் கையை வைத்து ஆதரவாக நின்றார்.

○ ○ ○

# உரக்கச் சொல்வோம்

**– தமயந்தி –**

ஒரு
சோக இசை
சில தெருக்களில்
தூங்கி வழியும்
கறுப்புக் கொடிகள்
சுவரில்
பூசிய பசைகள்
சரியாகப் பிடிக்கமறுத்ததால்
மூலைகள் கிளம்பிப்பறக்கும்
அஞ்சலித்துண்டுகள்.

சில
வாழை மரங்கள்
சில
மரியாதை வேட்டுக்கள்

நாங்கள் அறிந்துகொண்டோம்
அவன்
வீர மரணமடைந்துவிட்டான்
கண்ணீர் அஞ்சலியுடன்
புதைக்கப்பட்டுவிட்டான்
நாங்கள் அறிந்துகொண்டோம்.

ஆனால்
அஞ்சலிகள் மறுக்கப்பட்ட
இந்தப் புதைகுழிகள்
இங்கே
அழுது வடிகின்றன.

நண்பனே!
இது இரகசியம்
இவை
திரைக்குப் பின்னால்
நிகழ்ந்தவை.

உரக்கச் சொல்லாதே
உலகறிந்த
உண்மையானாலும்
திரைக்குப் பின்னால்
நிகழ்த்தப்பட்டவை.

இவற்றைப் பேசும் சுதந்திரம்
மறுக்கப்பட்டுள்ளது
உரக்கச் சொல்லாதே.

துரோகி நாமத்துடன்
துப்பாக்கிக் குண்டுகளும்
பரிசளிக்கப்படும்.

இவைதான் இப்போ
நவீன
பரிசுப் பொருட்கள்.

இப்போ
நடப்பவை எல்லாம்,
நமது
தலைவிதியை
துப்பாக்கிக்குழல்கள் தீர்மானிப்பதே.

# கபால பதி

திரேசா

நரகலோகமொன்றை உருவாக்கும் பணி தொடங்கப் பட்டிருந்தது. தார்க் கொப்பறைகளும், டயர்களும் எரிந்து கொண்டிருந்தன. சுற்றி வளைத்து அள்ளிக் கொட்டி வெட்டிச் சாய்த்தார்கள். குழந்தைகள் தாயின் முலைகளைத் தேடி அலையும்போது தெருநாய் தன் முலையைக்காட்டி பால் கொடுத்தது. தார் உருகி காலில் ஒட்டி தோலைப் பிய்த்தெடுத்தது. இரும்புக்குழலால் உடல் சல்லடையாக்கப்பட்ட நிலைமைகளால் நரகமாக்கும் முயற்சி நடந்து கொண்டிருந்தது. இதை வழிநடத்திப் போக சகல வல்லமையும் படைத்த “கபாலபதி” பதவிக்கு ஆள்தேவைப்பட்டது.

இதற்காக தங்களிடமுள்ள தகைமைகள் நிரூபிக்க வேண்டி இருந்தது. இவர்கள் காட்ட வேண்டிய தகைமைகள், அறிக்கையிடப் பட்டிருந்தது. இவர்கட்குரிய தகைமைகளாவன:

1. மந்திர தந்திர மாயா ஜாலங்களில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.
2. தனக்கென அடியா(ள்)ர் கூட்டமொன்றை வைத்திருக்க வேண்டும்.
3. எதற்காகவேனும் யாரையும் நம்பாதவர்களாக இருக்க வேண்டும்.
4. அமைதியான தோற்றமுடையவர்களாக ஆனால் ஆ(து)வேசம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
5. ஓரிடத்தில் இருந்துகொண்டு செயலாற்றக் கூடியவராக இருக்க வேண்டும்.
6. மாமிச பட்சினியாய் இருப்பது கட்டாயமானது.
7. மக்களை ஏமாற்றக் கூடியவர்களாகவும் அல்லது ஏமாற்றும் வகையில் (அனு-தாப) உரையாற்ற கூடியவராகவும், குறைந்தது நிறையவே பொய் கூறக் கூடியவராகவும் இருத்தல் அவசியம்.
8. அறிக்கைகள் விடக்கூடிய உதவியா-ளரை கொண்டிருத்தல் அவசியம்.

இவற்றைவிட சில உபதகைமைகளும் வேண்டப்பட்டன. அவை மேற்கூறியவை நிறைவு செய்யப்படும் பட்சத்தில் கபாலமாலை பூர்த்தி செய்யப்பட்டதும் நேரடி அறிவுறுத்தல்களாக அமையும் எனக் கூறப்பட்டது.

அத்தியாயம் 5 சரத்து 3ன்படி அவர்கள் கட்டாயமாக அணிந்து கொள்ளவேண்டிய கபால மாலைக்குரிய விதிகளாவன.

1. இயற்கை மரணம் எய்தியவர்களுடைய கபாலங்களைக் கொண்டிருத்தல் கூடாது.

சிறுகதை

2. சுடச்சுட எடுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.
3. இளம் பெண்களுடையவை கூடுதலாக இருக்க வேண்டும்.
4. மாலையின் நடுவில் குழந்தைக் கபாலங்கள் சிறுவட்டமாக்கப்பட்டு தொடுக்கப்பட்டி ருக்க வேண்டும்.
5. மாலையை அணிந்து கொள்பவரின் இனத்தைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது.
6. அணிபவரின் முழங்கால் வரை இருக்க வேண்டும்.
7. உயிருடன் பறிக்கப்பட்ட தலைகள் எங்காகிலும் இடப்பட்டு பின்னர் எடுக்கப்படலாம்.

இவற்றைப் பூர்த்தி செய்பவர் கபால புரத்தின் அதிபதியாக விளங்குவார்.

**பிற்குறிப்பு :**

"கபாலபதி" எனப்படுபவர் தன் விருப்பப்படி எதையும் நடாத்தவல்லவர். பாம்புகளுக்கு இறக்கை முளைக்கும் காலத்தை தாண்டியும் வாழலாம். ரெத்தத்தை குடித்தும், சதையைப் பொரித்து, சமைத்து, பச்சையாகவும் உண்ண வல்லவர்கள். யாருக்கும் தெரி யாமல் யாரும் அறியாமல் எல்லோர் தலை மீதும் கால்வைத்து நடக்கலாம். அவர்களது கண்களைப் பிடுங்கி எறியலாம். தலைகளை அடித்து பந்தாடலாம் யாருக்காவது தெரிந்தாலும்கூட எதுவும் செய்து விட முடியாத இடத்தில் இருப்பார்கள்.

## பகுதி – 2

இதெல்லாம் கபால புரத்துக்கானதும், கபால மாலைக்கானதுமான கதை கள். எப்போதும் புரங்கள் எல்லாம் நதி மூலத்திலிருந்து ஆரம்பிக்க, குருதி மூலத்திலிருந்து தோற்றம் பெறப்போவதுதான் கபால புரமாக இருக்கும். இதன் நாகரீகங்கள் கூட அப்படித்தான் இருக்கப்போகின்றது. இச்சம்பவங்கள் கபால மாலையை தொடுப்பதற்காக பறிக்கப்பட்ட தலைகளை மையப்படுத்தியது தான்.

(அ) படைகள் திரட்டப்பட்டிருந்தது தலைகளைக் காவு கொள்ளவும் மலக்குழிகளில் போட்டு கபாலங்களை எடுத்து வந்து சேமிக்கும் பணியில் இறங்கினார்கள். கொஞ்சம் அழகு, கொஞ்சம் நாணம், கொஞ்சம் பெண்மை இருந்தால் போதும். நாவுகள் எச்சிலில் மிதக்கும். வியர்க்கும், ஆண்மை விறைக்கும் கண்களை அவளது ஒவ்வொரு அங்கங்களிலும் ஒட்டி எடுத்து துருவிப்பார்த்தார்கள்.

இப்படியேதான் அவளுக்கும் நடந்தது. அவளை முதல் முதலில் வெள்ளை உடுப்பில்தான் பார்த்தார்கள். அவளது பருத்த தொடைகள் சைக்கிள் ஓடும் போது தெரிந்தது. அன்றும் அவள் வரும்போது நான்கு பேருக்கு ஆண்மை விறைத்திருந்தது. எப்போது போலவும் சேட்டையுடன் நின்று போய்விடக் கூடிய உணர்வுகள் அவர்களுக்கு எழவில்லை. எதுவான-ாலும் தீண்டிப்பார்க்கவென அந்த நாவுகள் எச்சிலைத் தெளித்தது. அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் மேல் கிடந்த நீட்டு நீட்டான இலைகளில் எச்சில் ஒழுகி ஊறிப்போனது. இழுத்துப்போ இழுத்துப்போ என கட்டளையிட்டிருந்தது. மூளை, கண்களால் தகவல் பகிரப்பட மறுகணத்தில் அவள் இழுத்துச் செல்லப்பட்டாள். அழுது இழுபட்டுச் சென்றாள். அவளது குரலும் காற்றில் இழுபட்டுக் கொண்டே போனது. மன்றாடி காலில் விழுந்தெழும்பி, இறைவனைக் காப்பாற்றும்படி கேட்டு அழுது புலம்பி தப்பிக்க ஓடினாள். நான்கைந்து பேராய் துரத்திப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவளை மல்லாக்கக் கிடத்தி மாறி

மாறி கவிழ்ந்தார்கள். வெறி அடங்கும் வரைக்கும், வெறி தாளாமல் மீண்டும் அவள் மேல் ஏறி அவளது உதடுகளைக் கடித்தார்கள். அவளுக்கு எதுவும் தெரியாது. அவளால் எழுந்திருக்க முடியாத நிலை. அப்படியும் ஒரு வலி இருக்கென சிந்திக்கக்கூட முடியாதிருந்தாள். அப்போது தான் அவனுக்கு சந்தோஷமாய் இருப்பதாக அவளுக்குப் புரியாத மொழியில் உரையாடிக் கொண்டே, அரைமயக்க நிலையில் மலக்குழிக்குள் அவளைத்தள்ளிச் சாக்காட்டினார்கள். வெறி அடங்கியிருந்த வேளையில் அவளைத் தேடிவந்தோரையும் கூட மலக்குழிக்குள் தள்ளிவிட்டுப் போனார்கள். அவர்களுக்கு கும்மாளம், கபாலங்கள் சேமிக்கும் பணி தொடர்ந்தது.

(ஆ) மண்டை ஓடுகளைத் தேடி இரும்பாலான பெரிய சிறிய குழாய்களுடன் பற்றைகளைப் போல பதுங்கி இருந்தார்கள். பெரிய கபாலங்களைப் பார்த்தபடி, அவள் இரண்டு கைகளிலும் பிள்ளைகளைப் பிடித்தபடி நடந்தாள். சிறு பையன் விம்மிக்கொண்டே வந்தான். அதுகளுக்கு அதுதான் தெரியும். எதைக் கேட்டாலும் அழுகைதான். அவளும் ஆறுதல் காட்டியே நடந்தாள். பாடசாலை விட்டு வந்ததும் நிறையவே இனிப்புகளைச் செய்து தருவேன் என்றாள். இது சுவையுடையதாகவும், பெரியதாகவும் இருக்குமென்றாள். சிறுவனது காதருகே குனிந்து " அண்ணனைவிட உனக்குக் கூடுதலானவை எடுத்து வைத்திருப்பேன்" என்று பையன்களின் கன்னங்களில் முத்தமிடடு அனுப்பினாள். பற்றைகளுக்கு கண்கள் முளைத்திருந்தது. அவையின் பார்வையில் குழந்தைகள் இல்லாமல் போனார்கள். அவள் தனியே கதைப்பதே தெரிந்தது. குனியும் போது முலைகள் தெரிகின்றனவா எனப் பார்த்தன. அவளது கபாலத்தைக் காட்டிலும்முலைகள்பெரிதாய்இருப்பதாக ஒரு பற்றை இன்னொரு பற்றையிடம் காட்டியது. அவள் தாயாகிப் போனாலும் அழகாயிருந்தாள். அவளது நெற்றியிலிருந்த பொட்டும் அதன் பின்னான மண்டை ஓடும அவர்களுக்குத் தேவைப்பட்டது. பற்றைகளும் அவர்களுக்குப் பின்னால் நகர்ந்தன. மண்டையோடு உட்பட எலும்புகளைச் சூழந்திருந்த சதையும், பொது நிறமான தோலும் இன்னமும் அவர்களுக்குகுதூகலமளித்தது. அவர்களது வேட்டைப் பற்கள் இன்னும் கொஞ்சம் வளர்ந்தது. கண்கள் பிதுங்கி அவளுக்குள் ஓடிப்போனது. பத்துப் பன்னிரெண்டு கண்களாக இருக்க வேண்டும். அவளைச் சுற்றிக் கொண்டு கேலி பேசின அவளைக் கோணலாக்கி இவர்கள் வரியாய் நின்றார்கள். அவர்களது நோக்கம் மண்டையோடாக இருந்தாலும், சதைகளைப் பியத்தெறியும் போது அதையும் சுவைத்தார்கள். அவளால் ஊரையோயாரையுமோகூட்டிவரமுடியவில்லை. இவர்கள் கவிழ்ந்தெழுந்து குண்டொன்றை யோனிக்குள் வைத்து வெடிக்கச் செய்து கபாலத்தைக் கொண்டு போனார்கள்.

கபாலபுரத்துக்குள் ஏராளமான மண்டையோடுகள் சேர்க்கப் பட்டிருந்தாலும் எடுத்தபடி வைக்கும் போது பாதத்தின் சில அடிகள் நிலத்தில் படக்கூடியதாக இருக்கின்றதென தகவல் கிடைத்தது. கபால மாலையும் முற்றுப் பெறாமலேயே இருக்கின்றதாம் அதில் மின்னிக் கொண்டிருக்கவென சில குறிப்பான ஓடுகள் தேடி விஷேட குழுக்கள் நியமிக்கப்பட்டன. துரத்திக் கொண்டோடவும், வீட்டுக் கூரைமேல் ஏறவும்,தூக்கிக் கொண்டு நடக்கவும்,எல்லாம் முடிய சுட்டுக்கொன்று மலக்குழியில் இடவும் எனப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(இ) சில இடங்களில் நேரடியாக

இறங்க அவர்கள் விரும்பவில்லை நகரங்களில் பூமிக்குக் கீழ் ஒரு குழுவை உண்டாக்கி வைத்திருந்தார்கள். வேண்டும் போது அவைகள் எழுப்பப்பட்டன. மட்பருக்கைகளை விலத்தி வெளியே வந்து இரத்தக் கறைகளுடன் உள்நுழைந்து கொள்ளும். இது வெளிக்கிளம்பும் போது ஒரு கோரம் இருந்து கொண்டே இருந்தது. அதனால் நிறையவே கபாலங்களும் சேர்ந்தது.

சில இடங்களில் உப-படைப்பிரிவுகள் புகுந்து விளையாடினார்கள். தங்களின் பிரிய எதிரிகளின் மண்டையோடுகளும் கபால புரத்திலோ. கபால மாலை யிலோ இருப்பது அவர்கட்கு சந்தோசம். உடலை முந்திரி மரங்களில் கட்டித்தூ க்கி விட்டு தற்கொலைப் படுத்தினார்கள். வீட்டுக்குள் புகுந்து பழைய பகைகளைக் காட்டினார்கள். இவ்வாறு கபாலங்கள் எடுக்கும் போது சீருடை அணியாமல் தான் திரிந்தார்கள். அவை இடைஞ்சலாகவும், ஆள்காட்டியாகவும் இருப்பதால் கழற்றி விடப்பட்டிருக்க வேண்டும். இதனாலேயே இவர்களுக்கு மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டக்கூடிதாகவிருந்தது.

இவர்களாலும் கபாலபுரம் எழுந்து கொண்டே இருந்தது. பிராந்திய கபால களஞ்சியமொன்றை நிறுவி தங்கள் பொறுப்பின் கீழ் வைத்திருந்தார்கள். இது முன்னர் பலருக்கு தெரியாததாக மூடி மறைக்கப்பட்டதாக இருந்தாலும் கூட பின்னர் கசிந்து எல்லோரினது நாசித் துவாரத்தை உறுத்தியது. இங்கிருந்து மண்டையோடுகள் கபாலபுரம் நோக்கிக் கொண்டு செல்லப்பட எலும்புக்கூடுகளை வைத்திருந்தார்கள். மந்திரவாதிகளுக்கும் நாய்களுக்கும் கூட இவை தேவைப்பட்டது.

(ஈ) இது கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது. கபாலமெடுக்கப் போனவர்கள் உள்ளாடையை வாயில் திணித்துவிட்டுச் சென்ற கதையும் இருந்தது. கபாலத்தை பிறகு எடுத்துச் செல்வதாக அவர்கள் செயல் இருந்திருக்க வேண்டும்.

அவர்கள் கண்ட மெலிந்த உடலுடன் கூடிய அந்தக் கபாலத்தைவிட சதை கள் நன்றாக இருந்ததனால் தொடர்ந்து அங்கேயே போய்க்கொண்டிருந்ததாகவும் “சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத்தான் காத்திருக்க வேண்டும்” என்று கதைத்துக் கொண்டார்கள். அவளை ஒருநாள் காட்டுக்குள் இழுத்துச் சென்று அம்மணமாக்கி கபாலத்தை முகர்ந்து முகர்ந்து சோதித்து விட்டுத்தானாம் கொன்றுவிட்டு, உள்ளாடையை வாயில் திணிந்திருந்தார்கள். அவளது அப்பாவும், மகளும் அழுது புலம்பிக் கொண்டே காட்டுப் பாதையில் தேடி எடுத்து புதைத்துப் போட்டார்கள். கபாலம் எடு-படாமல் போனது. சில வேளைகளில் பிறகு தோண்டி எடுத்துச் சென்றிருக்கலாம்.

இவள் கொல்லப்பட்ட பின்னர் இவளைக் கொன்றவர்கள் யார்? ஏன் கொன்றார்கள்? என்று காரணங்கேட்டு பறந்த கொண்டு போனார்கள். அட்டைகளைத்தாங்கி கூக்குரலிட்டுக் கொண்டே போனதால் எந்த மரமும் அவர்களைக் குந்த விடவில்லையாம். “இவைகள் பறப்பது தேவையில்லாத வேலை” - கீழேயிருந்து சத்தங் கேட்டது.

கபாலம் எடுக்க வந்த குழுவுக்கும், செத்துப் போன பிணம் உயிராய் இருக்கும் போது தொடர்பு இருந்ததாம். அவள் வேசி, கொல்லப்பட்டது நியாயம்.

“விபச்சாரிகளை ஒழிப்போம்”

“அவள் கொல்லப்பட வேண்டியவள் தாம்”

இந்தக் குரல்களும் மேலெழுந்து ஒலித்துக் கொண்டே இருந்தது.

இதே போல விபச்சாரியான இன்னொரு

கதையும் கூறப்பட்டது. இப்போதெல்லாம் கபாலமெடுத்தல் என்பது உடம்பையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டுதான் நடந்தது.

அவள் நடந்து வந்து கொண்டிருந்தாள். கால்களை இடந்து நடந்தாள். சுடிதார் அணிந்திருந்தாள். மார்புகள் பெரிதாக இருக்கின்றது. ஆனால் நெற்றியில் பொட்டு இல்லை. அவள் கபாலம் இவர்களுக்குத் தேவையாக இருந்தது. இவர்களுடைய கபாலங்கள் அவளால் சிதறி விடுமே என்ற பயமும் இருந்தது.



"IC எங்கே?"

"இல்லை"

"தள்ளி நின்று கொள்"

"..........."

"நெஞ்சில் என்ன இருக்கின்றது?"

"..............."

"ஏய் உன் உடம்பிலே என்ன கட்டி இருக்கின்றாய்?"

"............."

"சட்டையைக் கழற்றிக் காட்டு?"

"........."

"கழற்றடி நாயே"

"........"

"கழற்றப் பொறயா? இல்லையா....? கழற்றடி வேசி மகளே"

".........."

அவள் தூக்கிக் கழற்றுகின்றாள். உடம்பு பளபளப்பின்றி மார்புகள் பெரிதாக விம்மிப் புடைத்திருந்தது. வித்தியாசமாக எதுவும் கட்டப்படாமல் வெற்றிடமாகக் கிடந்ததால் அவளை அழைத்துக் கொண்டு போய் சோதித்து விட்டு உண்மையில் அவள் வேசியாக இருந்தாலும் அவள் மொழி அவர்களுக்குரியதாகவும் இருந்ததால் அனுப்பிவிட்டார்கள்.

இப்படி கபாலமெடுக்க முடியா-மல் போன சந்தர்ப்பங்களும் இருந்தன. இவைகளெல்லாம் மாலைக்காகச் சேர்க்கப்பட்டவை தாம். இன்னமும் அதற்கானதேடல்கள்செயற்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

**பகுதி – 3**

கபாலபுரம் அழகாய் காட்சி தந்து கொண்டிருந்தது. எங்கும் சலசலப்பு ஆனாலும் பற்களெல்லாம் கொடுகிக் கொண்டுதான் இருந்தது. யார் யார் தலை கழுத்துடன் உடம்பை விட்டுப் போகப் போகின்றதோ என்ற பயத்தில் வாழ்கையை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். தெருக்களில் விடிய விடியக் கடைகள் திறந்திருந்தன. கடைகள் ஒரு மொழிய-ில் பேசிக் கொண்டிருக்க வாங்குவோர் இன்னுமொரு மொழியிலும் பேசி புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது சிறிது நேர இடைவெளிகளில் தொடராக கபாலக் குழுக்கள் சுடச்சுட தலைகளைக் கோதி தோற்களைப்

**நச்சு வாயுவை அடித்தும், குண்டு மழை பொழிந்தும் நிறைய கபாலங்களைக் கொண்டு வந்தார்கள். இதற்குப் பயந்து பலர் இனக்கலப்பான பகுதிகளில் குடிபுக ஓடிக்கொண்டும் சொத்துக்களை வித்து அக்கரைக்கும் மாறிப் போனார்கள். முன்னை மாதிரி இப்போது வடபுலங்களில் இருந்த மண்டையோடுகளை அள்ளிக்குவிக்க முடியாமல் இருந்தது.**

---

பிய்த்துப் போட்டுவிட்டு கபாலங்களை அள்ளிக் கொண்டு போனார்கள். பலருக்கு பத்திரிகையில் வந்த பிய்த்த தலையும், வீட்டுப் பின்புறத்தில் கிடந்த காதும், காகம் மரத்தில் வைத்துக் கொத்திக் கொண்டிருந்த கட்கோளமும்தான் ஞாபகத்தில் இருந்தது. இதுவே இவர்களின் கனவுகளில் பயமுறுத்தியது. ஆனால் இதுவேதான் கபாலபதியாகப்போகும்எண்ணத்தை சிலருக்கு வலுவூட்டிக் கொண்டிருந்தது. அதனால் தங்கள் தகைமைகளைக் காட்டவேண்டி ஆட்களை ஏவிவிட்டு தங்கள் காரியங்களை சாதித்துக் கொண்டிருந்தார்கள். மக்களை ஏமாற்ற வேண்டி அறிக்கைகளையும் அனுதாப உரைகளையும் ஆற்றிக் கொண்டிருந்தார்கள். அத்தியாயம் 5 சரத்து 3ஏ இன் படியும், 3VII ன் படியும் கபாலங்களைக் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். பதியாவதற்கு தேவையான கபாலங்கள் தலை, முதுகு, பிரதேசங்களிலிருந்து தாராளமாகக் கிடைத்தது. இப்பிரதேசங்கள்தான் 3ஏ ஐ தாராளமாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. நச்சு வாயுவை அடித்தும், குண்டு மழை பொழிந்தும் நிறைய கபாலங்களைக் கொண்டு வந்தார்கள். இதற்குப் பயந்து பலர் இனக்கலப்பான பகுதிகளில் குடிபுக ஓடிக்கொண்டும் சொத்துக்களை வித்து அக்கரைக்கும் மாறிப் போனார்கள். முன்னை மாதிரி இப்போது வடபுலங்களில் இருந்த மண்டையோடுகளை அள்ளிக்குவிக்க முடியாமல் இருந்தது. பாதைகளில் மரங்களைப் போட்டும், வாகனத்திற்கு கல்லடித்தும் துரத்தப்பட்டார்கள். இதனால் இப்போதெல்லாம் அவர்கள் பார்வை சூரியன் உதிப்பதைப் பார்க்க திரும்பி இருந்தது. கழுத்துச் சுழுக்கினாலேயே தலை திரும்பி இருக்கின்றது என்று சொன்னார்கள். கழுத்துக்கு விளக்கெண்ணெய் தடவி சுழுக்கெடுத்தார்கள். இவர்கள் பார்வையால் சூரிய வெப்பங்கூடி குடிசைகள் எரிந்தன. வெந்தும், வேகாமலும் தலைகளுடன் மண்டை ஓடுகள் ஏற்றிக் கொண்டு வரப்பட்டன. இதில் களஞ்சிப்படுத்துவதற்கு, மாலைக்கு எனப் பிரித்தெடுக்கப்பட்டது. வெந்துபோன சிறுபிள்ளைகளின் ஓடுகள் மாலையின் கீழ்ப்பகுதிக்கென பிரித்தெடுக்கப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பலதுகள் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. சூரிய திசைகளில் இவர்களுக்கான ஈர்ப்பை பல வகைகளில் வெளிக்காட்டினார்கள். இரவோடிரவாக மண்டையைத் தூக்கி முண்டத்தை மட்டும் விட்டுப் போனார்கள். முந்திரிக் காட்டுக்குள் கட்டித் தூக்கிவிட்டு கொன்றார்கள். இந்தக் கபாலங்களையெல்லாம் தரைவழியாக இலகுவாக அள்ளிக் கொண்டு போனாலும் அதுகூட நீடித்துப்போக வியலாமல் போனது. கபால வீரர்களும், கபாலங்களும் வந்த ட்ரக் வண்டிகள் தாக்கப்பட்டது. எப்படியாகிலும் கொண்டு வந்தாக வேண்டுமென்ற கட்டாயத்தினால் வேறு பாதையில் கொண்டு வந்தார்கள். சில வேளைகளில் பழைய வழியால் வருவார்கள். இப்படியே மாறி மாறி வந்தார்கள்.

“யுத்த தந்திரோபாயம்” என இதைத்தான் சொல்லுவதென்று ஒரு கிழவன் எனக்குச் சொல்லிப் போனான். கபாலமேந்திய வண்டிகளைப் புதிய வழியில் வைத்து தாக்குவதாகக் கூறிவிட்டு பழைய பாதையில் வைத்துத் தகர்க்கப்பட்டது. கபால வீரர் பலர் மரணமுண்டு போனபோது அதே கிழவன் சொன்னான். “கெரில்லாத் தாக்குதலில் இருந்து தப்ப முடியாது”. மக்கள், ஆண்டவன்தான் அவர்களைத் தாக்கியழித்தான் என மதத்தலங்களுள் கண்ணீர் மல்க புரண்டெழுந்தார்கள். இப்படியெல்லாம் சந்தோசமும் கவலையும் சொல்லி மாழாது.

இதனால் படைகளுக்கு கபாலங்களை கொண்டு வரும் பிரச்சினைகள் தலை தூக்கத் தொடங்கியதால், களஞ்சியங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பங் கிடைக்கும் போது கபால புரத்துக்கு அவைகளைக் கொண்டு போய்ச் சேர்க்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. கபாலங்களைப் பெற உடல்களைப் புதைத்து வைத்திருந்தார்கள். சதை அழுகி மண்ணோடு போக மண்டை ஓட்டை எடுத்துக்கொண்டு போகலாம் என்றிருந்தார்கள். இவர்களுக்கு கபாலங்கள் வேண்டியளவு கிடைக்கப் பெற்றிருந்தாலும் கூட புரத்துக்கு அவைகளை கொண்டு சேர்ப்பதே இடைஞ்சலாக இருந்தது.

இதற்காக முதலில் கபாலங்கொண்டு போகும் நாட்களில் வீதியில் நின்று கொண்டிருந்த பலரை ட்ரக் வண்டிகளில் ஏற்றிக் கொண்டார்கள். நாங்கள் தாக்கப்பட்டதால் இவர்களைக் கொன்று விடுவோமென அறிவித்தார்கள். போகும் போது சந்தைக்கு வருபவர்களையும், பள்ளிக்கூடம் செல்பவர்கள், ஆஸ்பத்திரிக்குச் செல்வோர் என எல்லோரையும் ஏற்றிக் கொண்டு பாதுகாப்பாகப் பயணித்தார்கள். இரண்டு மூன்று தடவைகள் சென்ற பின் நான்காவது தடவை றோட்டில் யாரையும் காணவொண்ணாமல் போனது. ரக்குகளின் சத்தம் கேட்டு ஒழித்துக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இன்ன இன்ன தினங்களில்தான் இவர்கள் வருவார்கள் என அறிந்து அத்தினங்களிலேயே ஒழித்துக் கொண்டார்கள். பின்னர் இதுவே அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. யாரும் குறித்த தினங்களில் நடமாடக் கூடாது என்று, வீதியில் அடிக்கு ஒரு வீரரை நிறுத்தி கபாலங்களை கொண்டு செல்ல முனைந்தார்கள். இதுகூட தாக்கும் பகுதிக்கு இலகுவாய்ப் போனது. எதிரிகளை மட்டும் தனியாகச் சந்தித்து தாக்கினார்கள். இது கபாலப் படைகளுக்கு கூடுதல் அழிவாக இருந்ததனால் இவ்வழிமுறையும் சரிவராமல் போனது.

வான் வழிப்பாதை ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. கபாலங்களெல்லாம் சரியான கனமாய் இருந்தது. ஒவ்வொரு தலையும்சாதிக்கநினைத்தவையும், குடும்பத்தை தூக்கி நிறுத்தவென எண்ணி வைத்திருந்த திட்டகளெல்லாம் மண்டையோட்டுடன் ஊறி ஒவ்வொன்றும் மனிதனைவிட பாரமாய் இருந்தது. அதனுள் நிறையவே கனவுகளும் இருந்தது. இதையெல்லாம் சுமந்து உயரப்பறக்க முடியாமல் போக தாழ்வாகப் பறந்தது விமானம்.

அப்பாவின், அண்ணனின் கபாலாக் களைக் கொண்டு போகும் விமானத்துக்கு சிறுவர்கள் கற்களை எறிந்து வீசி அடித்தார்கள். “கெற்றப் போலால்” விமான ஓட்டியின் தலைக்கு குறிவைத்தார்கள். இதே கதிதான் நீர்ப்பாதைக்கும் நடந்தது. பாரம் தாங்காமல் கப்பல் புதைந்து போனது. இப்போது பதியாய் வரும் ஆசைக்கு போக்குச் சிக்கல்தான் மண்டைக்குத்தாய்

இருந்தது. எந்த வழியில் கொண்டு செல்வது என எண்ண முடியாமலேயே இருந்தது.

பகுதி 4

இதொரு பெரிய நகரம். இங்குதான் எல்லோரும் கூடி இருந்தார்கள். பதிகளாகக் காத்துக் கொண்டிருந்தவர்களும் கூட இங்குதான் இருந்து கொண்டிருந்தார்கள். கபால புரத்தின் தலைநகராகக் கூட இது இருந்தது எனலாம். நாகரீகம் தாண்டவமாடிய இடத்தில் பலர் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த காலம். நாகரீகத்தின் பெயரால் பலரும் வெவ்வேறு விதமாக மாறி இருந்தார்கள். யாரைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாத அளவுக்கு மொழியும், உடையும் மாறிப் போயிருந்தது.

கபாலம் எடுக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து தலையுடன் தப்பியோர் இங்குதான்குடிபெயர்ந்திருந்தார்கள். சிலரை இவர்கள்தான் என இனங்காண முடியாது இருந்தாலும் பெரும்பாலானோர் தலையை மறைத்து வைத்துத்தான் இருந்தார்கள். இவர்கள் தலைகள் எங்கிருக்கின்றனவென தெரியாமல் இருந்தது. தலைமயிரை வளர்த்தும், காதுகளுக்கு தோடுகளைப் போட்டும் மறைத்திருந்தார்கள். இவர்களின் தலைகள் கொய்யப்பட்டு மண்டையோடுகளை எடுத்துக் கொண்டால் கபால மாலை நிறைவு பெறுவதும் கபால பதியாக முடி சூட்டுவதும் விரைவில் நடைபெற்றுவிடும்.

சனநெருக்கடிகளுக்கிடையில் வீரர்கள் தாவிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தைப் பிடித்து எல்லோரையும் வீட்டுக்குள் அடக்கிவிட்டு தப்பிவந்திருந்த தலைகளைத் தேடிப் புகுந்தார்கள். மலக்கூடத்தில் இருந்தவர்களையும் கழுவி வரச் சொல்லி கொண்டு போனார்கள். எல்லோர் தலைகளும் பெரிய தலைகளாகத்தான் இருந்தது. மாலைகளுடன் தொடுக்க சிறிய தலைகளையும் கூட்டிச் சென்றார்கள். வந்தவர்களுக்கு தெரிவு செய்து கொள்ள இயலாதவண்ணம் தலைகள் இருந்தன. தசைக்குப் போர்த்தப்பட்டிருந்த தோல் கறுப்பாகவும் (பெண்களுக்கு வெள்ளை), உடலில் எங்காகிலும் இருந்த தழும்புகளுக்காகவும், சிலர் அழைக்கப்பட்டு போனாலும் கூட பெரும்பாலானோரை மண்டையோட்டை நோக்காகக் கொண்டே இழுத்துப் போனார்கள்.

வெயில் உச்சிக்கு வரும்போது என்ன செய்கிறார்களென பார்க்க அறுபது வயது கிழவன்களையும் கிழவிகளையும் தார்றோட்டில் நிற்க வைத்திருந்தார்கள். கிழவி ஒருத்தி வெயில் படப்பட கூன் விழுந்து றோட்டில் விழுந்து போனாள். சிலர் மூத்திரத்தை அடக்கி வைத்திருந்தார்கள். சீனி வியாதிக்காரர்கள். கட்டிய சாரணை சுருட்டி நனைத்ததை அவன்கள் பார்க்கவில்லை. இப்படியே குழந்தை பாலுக்கு அழுவதையும், பெண்கள் கூட்டம் ஒப்பாரி வைப்பதையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அழாத குழந்தைகளை வரி விழுந்த குழந்தைகள் என கபால மாலைப்பகுதிக்கு அனுப்பினார்கள். குந்தி இருந்தவர்களின் தலைகள் தெறித்துப் பார்க்கப்பட்டு இளந்தலைகளை அள்ளிக் கொண்டு போனார்கள். இது மாதிரியும் கொஞ்சம் வித்தியாசமாயும் பலமுறை கூட்டம் சேர்க்கப்பட்டு தலைகளைக்கொண்டு போனார்கள். தப்பி வந்தவர்களால் தங்களுக்கெல்லாம் தொல்லை என பலர் புலம்பினாலும் தங்கள் தலைகள்தான் முக்கியமென முடங்கிக் கிடந்தார்கள். பஸ்களை நிப்பாட்டி, வந்தவர்களின் தலையெழுத்துக்களை வாசித்தார்கள். அதற்கான தகுதி அவர்களில் சிலரிடம்தான் இருந்தன. தலையெழுத்துக்களைக் கூட்டி வாசிக்க முடியாமல், பெரிய இடத்தில் தெரிந்தவரிடம் கொடுத்து வாசித்தார்கள். கூடுதலாக வாசிக்கவென

எடுத்துச் செல்லப்பட்ட தலைகள் கபாலங்களாகத்தான் பிற்பாடு காணப்படும். இப்போதெல்லாம் தலைகளைக் கழுத்தினுள் அமுக்கி முண்டங்களாகவே பலர் தடிகளுடன் அலைந்து கொண்டிருந்தார்கள்.

**ரகசியத் தகவல் :** கபாலபதிக்கு உள்ளம் குளிர்ந்து கொண்டிருந்ததாம். உடலில் குமுறிக்கிடந்த சூடெல்லாம் கண்களால் போய்க் கொண்டிருந்ததனால் உக்கிரத்தைக் குறைக்க தெம்பிலிக் கோப்பைக்குள் ரெத்தத்தை ஊற்றிக் குடித்தும் கண்களுக்கு கண்ணாடி போட்டுக் கொண்டும் இருக்கின்றதாம்.

**பகுதி 5**

அது வெளிக்கிளம்பியது. எல்லோரும் எதிர்பார்ப்பதைப் போலவும் அது இருக்கவில்லை. நீண்ட முடியைச் சுருட்டிக் கொண்டும் அதில் இரு எலும்புகளை சொருகியும், கண்களை மறைத்தும், உதட்டில் இரத்தம் பூசப்பட்டதுடன் கடவாய் ஓரமாக வழிந்து கொண்டிருந்த வண்ணம் கர்ஜித்துக் கொண்டு வந்தது.

கபாலங்களைத் தொடுத்தவண்ணம் மாலையொன்று கிடந்தது. மாலையில் சிக்குண்டிருந்த கனவுகள், குலுங்கும் போது விழுந்து பதியின் கால்களில் மிதிபட்டு சிதைந்து போனது. சிறு கபாலங்கள் அழ ஆரம்பித்திருந்தன. தாயின் முலையைத் தேடி பால் மணத்தை முகர்ந்து அழுதன. அதன் கண்ணீரெல்லாம் பதியின் நகத்தில் பட்டு மிளிர்ந்தது.

அதைப் பார்க்க கோரமாய் இருந்தது. தலைகளைப் பாதுகாத்து வைத்திருந்த ஐந்துக்களெல்லாம் அதன் உருவுக்கும், சத்தத்திற்கும் பயந்து காதுகளையும் கண்களையும் பிய்த்துக் கொண்டு மாண்டு போயின. முன்னம் பலர் குந்தியிருந்த இடத்திலெல்லாம் ரெத்தம் உறைந்து கிடந்தது. நாய்களும், பூனைகளும் ரெத்தங்குடித்தும் சதை தின்றும் கொழுத்துப் போனது. இப்போது ரெத்தத்தை முகர்ந்து வேண்டாமென்று போயின.

கபாலபதி எம்பிக் குதித்து பறந்து கொண்டே வேண்டிய உருக்களை பிடித்து தின்று வீசிப்போனது. எல்லோருக்கும் சும்மாவே முக்காமலேயே மலமும், சலமும் கழிந்தது. எதையும் சமைக்காமல் உண்ண வேண்டியும், சில வேளைகளில் தங்கள் கைகளையோ கால்களையோ கடித்து உண்ண வேண்டிய நிலையும் இருந்தது. மனித உறுப்புக்களை தவிர மற்றவையெல்லாம் விலைகூடிப் போனது.

அதன் மண்டையோட்டு மாளிகை மின்னிக் கொண்டிருந்தது. அதன் பக்கம் சாதாரண ஜடங்களெல்லாம் போக அனுமதிக்கப்படுவதில்லை. அந்தப் பக்கம் போவதே பயமாக இருந்தது. கபாலபுரம் என்றாலே தானாக மூத்திரம் சுரந்து உடையை ஈரப்படுத்தி போகுமளவிற்கு கபாலபதியின் தாண்டவமிருந்தது. கபாலபுர வீதிகளிலும் கபாலபுரத்தை நெருங்கும் வீதிகளிலும் தூக்குக் கம்பங்கள் நடப்பட்டிருந்தது. துடிக்கத் துடிக்க நாக்கைத்தள்ளி, விழி பிதுங்கி, இறக்கும்வரை கொலைக்கம்பில் தூக்கில் கிடக்கும் பயத்தில் கபாலபுரத்தில் ஆள்நடமாட்டம் குறைந்திருந்தது.

நரகலோகம் தோற்றுக் கொண்டிருந்தது. கபாலபுரத்தின் உயரமாக கோபுரங்களில் மண்டையோட்டுக் கொடியும், மண்டையோடுகளும் மின்னிக் கொண்டிருந்தது. எதற்காகவென அறிய முடியாமலேயே இன்னமும் தலைகள் கொய்யப்பட்டன. அத்தியாயம் 3V ன் படி வரிசை நீண்டு கொண்டே போயிருந்தது. நான் எத்தனையாவதாய் உள்ளேன் என எண்ண முடியாமலேயே வரிசை முன்னே நீண்டு கிடந்தது. எனக்குப் பின்னால் தெரிந்த நண்பர் குழாம் சிரித்துக் கொண்டு நின்றது. பின்னமும் வரி நீண்டு கிடந்தது.

# கருவறைக் கனவுகள்

வவுனியூர் இரா. உதயணன்



மாரி மாதத்து மழை தொடர்ந்து நான்கு நாட்களாக விடாமல் அடைமழையாகப் பெய்து இன்று விடியற் காலைதான் ஓய்வெடுத்துக் கொண்டது.

விடியற்காலை ஐந்து மணிக்கே எழும்பி விட்ட சிவகாமி சுப்ரபாதம் சீடியை போட்டு விட்டு ஒவ்வொரு அறையாக சாம்பிராணிப் புகையை காட்டிக் கொண்டு வந்தாள்.

கணவன் சுந்தரேசனும் பிள்ளைகள் ஆரணியும், தாரணியும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரேசன் வழமையாக ஆறு மணிக்குத் தான் எழும்புவது வழக்கம் இரண்டு குழந்தைகளும் கூட

சுந்தரேசன் எழும்புவதற்கு முதல் பாத்திரங்களை கழுவியாக வேண்டும்.

தோட்டத்துக் கிணத்தடிப் பக்கமாக பாத்திரங்களை வைத்துவிட்டு வீசி வீசி வீச்சு ஊஞ்சல் ஆடுவது போல் எம்பி எம்பி துலாவினால் நீரை இறைத்து அருகில் உள்ள தொட்டியை நிரப்பிவிட்டு ஓடிச் சென்று மரப் பலகைக்கட்டையை எடுத்து வந்து பாத்திரம் கழுவ அமர்ந்து கொண்டாள் சிவகாமி.

சோர்ந்து நின்ற அழகிய பூமரங்கள் எல்லாம் மழை பெய்தபின் தலைநிமிர்ந்து சிவகாமியைப் பார்த்துச் சிரித்தன.

யாரோ முன் கதவைத் தட்டுவது போன்ற சத்தம். சிவகாமி பாத்திரங்கள் கழுவுவதை நிறுத்தி விட்டு காதைக் கூர்மையாக்கி மீண்டும் அவதானித்தாள்.

நிச்சயமாக யாரோ முன்கதவைத் தட்டுகிறார்கள் என்ற தெரிந்ததும் கைகளைக் கழுவி சேலைத்தலைப்பில் துடைத்து விட்டு பின் வாசல் வழியாக முன்பக்கம் வந்தாள்.

இதற்கிடையில் சத்தம் கேட்டு எழும்பிய சுந்தரேசன் எழுந்து சென்று முன் கதவை திறந்து கொண்டிருந்தான்.

சிவகாமியும் வர சுந்தரேசனும் கதவைத் திறக்க வெளியே சுந்தரேசனின் அம்மா வள்ளியம்மை நின்று கொண்டிருந்தார்.

"இங்கேயும் தேடி வந்திட்டியே" சுந்தரேசன் கோபத்துடன் தாயைப் பார்த்தான்.

"தம்பி உன்னையும் உன்ர மனுசி பிள்ளைகளையும் பார்க்க வேணும் என்று நினைச்சன் எனக்கும் வயது போட்டுது" தாய் வள்ளியம்மை சொல்லிக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

"ஏனன.... சின்னனிலேயே உன்ன விட்டுட்டு நான் ஓடினது உன்ர முகத்தை பார்க்க முடியாம, இப்ப இங்க

சிறுகதை

என்ர பிள்ளை யள் எப்படி உன்ர முகத்தை பார்க்கும் என்று நினைக்கிறாய் அதுகள் பயந்து போகுங்கள்.

"வள்ளியம்மையின் வலக் கண்ணிலிருந்து கண்ணீர்த் துளிகளை சொட்டுக்களாக பனித்தன.

சிவகாமி சுந்தரேசனை உள்ளே கூப்பிட்டாள்.

"இங்க ஒருக்கா வாங்கோ.... அப்பா"

வள்ளியம்மை வாசலில் காத்து நிற்க சுந்தரேசன் அறைக்குள் சென்று சிவகாமியுடன் முணுமுணுத்தான்.

"பாவம் அம்மா உங்கட அம்மாதானே. இருந்திட்டு போகட்டும்" சிவகாமி சொல்ல சுந்தரேசன் மறுத்துப் பேசினாள்.

"இப்பதான் ஒரு மாதிரி நல்ல நிலைக்கு வந்திருக்கிறம், இந்த மனிசியை வீட்டில வைத்திருந்தாலே தரித்திரம் பிடிச்சிடும். முகத்தை பாத்தாலே பிள்ளையள் பேய், பிசாசு என்று பயப்படப் போகுதுகள்"

"என்னப்பா நீங்களே இப்படிச் சொன்னால் அவதான் எங்க போறது ஒரே மகனைப் பார்க்க வந்திருக்கிறா...."

"நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு நான் நடக்க வேண்டியத பாக்கிறன்."

வாசலுக்கு வந்த சுந்தரேசன் ஆயிரம் ரூபாய் காசை தாயின் கையில் திணித்தான்.

"தம்பி நான் காசுக்காக வரேல்ல"

"எனக்குத் தெரியும். உனக்குத்தானே அப்பா கட்டின வீடு இருக்கு. அங்க தானே இன்னும் இருக்கிறாய். அங்கேயே போய் இரு...."

"தம்பி நான் உன்ன பார்க்கத்தான் வந்தனான்."

சிவகாமி அம்மாவுக்கு "ரீ" ஒன்று போட்டுக் கொண்டு வா.

"அம்மா நீ ரீயைக் குடிச்சிட்டு வீட்டுக்கு கிளம்பு. நான் இப்பதான் முன்னேறி வாரன்." சிவகாமி தேனீரைக் கொண்டு வந்து கொடுக்க வள்ளியம்மை ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் குடித்தாள்.

ஏதோ மகன் வீட்டில் தேனீர் அருந்திய திருப்தி வள்ளியம்மைக்கு

"தம்பிநல்லாயிரு"என்றுசொல்லிவிட்டு மனவேதனையுடன் திரும்பி நடந்தாள் வள்ளியம்மை.

சுந்தரேசன் நான்காம் வகுப்பு படிக்கும்போதே வீட்டை விட்டு ஓடியவன். அப்பொழுது சுந்தரேசனும் வள்ளியம்மையும் நாவற்குழியில்தான் வசித்து வந்தார்கள்.

சுந்தரேசனுக்கு ஞாபகம் தெரிந்த நாளிலிருந்து தாயின் மீது பிடிப்பு இல்லை. இதற்கு முக்கிய காரணம் தாயாரின் இடப்பக்கம் குழிவிழுந்து அழகற்று விகாரமாகத் தோன்றும் முகம்தான்.

ஆனால் வள்ளியம்மையோ அவனுக்கு பாசம் காட்டித்தான் வளர்த்தாள். சுந்தரேசன் என்ன சொன்னாலும் பொறுத்து நடந்தாள் இதற்கு முக்கிய காரணம் அவன் தந்தையில்லாப் பிள்ளை என்பதுதான்.

சுந்தரேசனின் தந்தை சுந்தரேசன் இரண்டு வயதாக இருக்கும்போதே மாரடைப்பால் இறந்து போனார்.

நாட்கள் போகப் போக சுந்தரேசனே தாயின் சொற்களை கேட்காமல் தன்னிச்சையாக செயற்படத் தொடங்கினான். தாய் உணவு அருந்த அவஸ்தைப்படும் போதெல்லாம் அவளை ஏளனமாய் பார்த்தான்.

சுந்தரேசனின் பாடசாலை நண்பர்கள் "உன்ர அம்மாவைப் பார்க்க விகாரமா யிருக்கு" என்று சொல்லும் போதெல்லாம் அவன் தன் தாயிற்காக அனுதாபப்படவில்லை. மாறாக வெறுத்தான். தாய் வள்ளியம்மையோ மகன் மனதைப் புண்படுத்தக்கூடாது, மனத்தைரியம் குறைந்து விடக்கூடாது என்று சகலதையும் பொறுத்தான்.

ஒருநாள் தாயின்மேல் ஏற்பட்ட வெறுப்புக் காரணமாக வீட்டை விட்டே ஓடிவிட்டாள். அப்பொழுது அவனுக்கு வயது பதின்மூன்று.



ஆரணிக்கும் தாரணிக்கும் பத்து வயதாகிவிட்டது.

திடீரென அவன் மனதில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. நாவற்குழியிலும் ஒரு ஜவுளிக் கடை திறந்தால் நல்லம் என்று யோசித்தவன் இருபது வருடங்களின் பின் நாவற்குழி புறப்படத் தயாரானான்.

வள்ளியம்மை கடைசியாக சுந்தரேசனை பார்க்க வந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகி விட்டன.

ஊர் ஊராகச் சுற்றி இறுதியில் கெக்கிராவா என்னும் இடத்தில் ஒரு ‘டெக்ஸ்டைல்ஸ்” கடையில் வேலைக்குச் சேர்ந்து, நிறைய கஷ்டங்களின் மத்தியில் முன்னேறி இன்று ஒரு ‘ஜவுளிக்கடைக்கு” சொந்தக்காரனாகி விட்டான்.

வள்ளியம்மையோ மகன் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவன். அனுபவங்கள் மூலமாவது தன்னை புரிந்திருப்பான் என்று நினைத்தாள்.

இரண்டு முறை அவனைத்தேடிப் போன போது வாசலிலேயே தன்னை தன் மகன் திருப்பியனுப்பியது அவனது புரியாமையை அவளுக்கு உணர்த்தியது. இனி மகனைத் தேடிப் போவதில்லை என்று முடிவெடுத்து விட்டாள்.

நாட்கள் நகர்ந்தன, மாதங்கள் வருடங்களாகின.

இப்பொழுது சுந்தரேசன் நிறையவே சம்பாதித்து விட்டான். பெரிய பணக்காரன். மாத்தளையில் இரண்டு ஜவுளிக்கடைகள் திறந்துவிட்டான்.

இரட்டைப் பெண்பிள்ளைகளான தாரணி, ஆரணியையும் சிவகாமியையும் அழைத்துக்கொண்டு நாவற்குழியில் வெறுமையாக இருந்த ஒரு கடையைப் பார்க்க புறப்பட்டான் சுந்தரேசன்.

பஸ்சில் சென்று நாவற்குழியில் இறங்கிய சுந்தரேசனை எவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

வெறுமையாகக் கிடந்த கடையைப் பார்த்து உரிமையாளரிடம் வாடகையை பேசிவிட்டு கடையை விட்டு வெளியே வந்தவனுக்கு ஒருமுறை தாயைப் போய் பார்த்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது.

சிவகாமியையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு கிரவல் வீதி வழியாக தாயின் சிறிய வீட்டுக்கு முன்பாக வந்தவனுக்கு, பாழடைந்து ஓடுகள் சிதறிக் கிடந்த வீட்டைப் பார்க்கும் போது ஏதோ மனதில் ஒருவித ஏக்கம் நிரம்பியது.

"அம்மா, அம்மா.... "கூப்பிட்டுப் பார்த்தான். ஒருவித பதிலும் இல்லை. வீட்டின் முன் கதவில் ஒரு பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த வீட்டுக்கு சென்று "வீட்டுக் காரர்" என்று கூப்பிட்டான். ஒரு வயது போனவர் வெளியே வந்து "என்ன தம்பி" என்று கேட்டார்.

"வள்ளியம்மை எங்க போயிட்டா" சுந்தரேசன் வயது போனவரைப் பார்த்துக் கேட்டான்.

"கிழவி போய் மூன்று வருஷங்களுக்கு மேல ஆச்சு. பாவம் ஒரே மகன் என்றாவது ஒரு நாள் தன்னைப் பார்க்க வருவான் என்ற கற்பனையோட இருந்தது. ஆனால் அந்த ஈவு, இரக்கமற்ற ஜடம் ஒரு தரம் ஏனும் இந்தக் கிழவியை வந்து பார்க்கேல்ல. அனாதையாகவே போய் சேர்ந்திட்டுது. அந்த ஒரே மகன் கருவறையில் இருக்கேக்க எத்தனை கனவுகள் கண்டிருக்கும். எப்படி வளர்க்க வேணும், எப்படியாக்கவேணும் என்றெல்லாம்..... ஆனால் சாவதற்கு ஐந்து மாதத்திற்கு முதல்தான் என்ர மகளிட்ட ஒரு கடதாசியை எழுதிக் கொடுத்து என்றாவது எனது மகன் வந்தால் கொடுக்கச் சொல்லி கொடுத்துவிட்டு போய் சேர்ந்திட்டுது." சொல்லி முடித்த வயோதிபர் சுந்தரேசனை நிமிர்ந்து கூர்மையாகப் பார்த்தார்.

"தம்பி ஏன் கிழவியை தேடி...? சுந்தரேசனின் தொண்டை வரண்டு உதடுகள் நடுங்கின.

"நான்தான் பெரியவர் வள்ளியம்மை யின்ர மகன்" சொல்லும்போது வார்த்தை கள் தடுமாறின.

"என்னடா தம்பி கிழவி இருக்கேக்க வராத நீ, இத்தனை வருஷம் கழிச்சு இப்ப வந்து நிற்கிறாய் அந்தக் கிழவியின்ர முகத்தைப் பார்த்து வெறுத்து ஓடிய உனக்கு இப்ப எப்படி அவளின்ர நினைவு வந்தது."

சுந்தரேசன் மௌனமாகவே நின்றான்.

"காவேரி... காவேரி...." பெரிதாக சத்தம் போட்டு யாரையோ கூப்பிட்டார் பெரியவர்.

"என்ர மகளைத்தான் கூப்பிடுறன்". பெரியவரே பதில் சொன்னார்.

இளம் வயதுடைய திருமணமான பெண்ணொருத்தி முன்வாசல் பக்கமாக வந்தாள்.

"கிழவி எழுதித்தந்த கடதாசியை எடுத்துக் கொண்டு வா" மகளுக்கு பெரி யவர் ஆணையிடுவது போல் சொன்னார்.

பத்திரமாக அலுமாரியில் வேஷ்டி களுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த கட தாசி உறையை எடுத்து வந்தாள் காவேரி.

"இந்தா, என்றாவது நீ வருவாய் என்ற கிழவியின்ர நம்பிக்கையையாவது நீ காப்பாற்றி விட்டாய்" என்று சொல்லிய வண்ணம் கையிலிருந்த கடதாசி உறையை சுந்தரேசனிடம் நீட்டினார்.

கடிதத்தை வாங்கிக் கொண்ட சுந்தரேசன்.

"நன்றி பெரியவர்" என்று சொல்லி விட்டு வள்ளியம்மையின் வீட்டு வாசற் படி-களில் அமர்ந்து கடிதத்தைப் பிரித்தான்.

சிவகாமியும் இரண்டு பிள்ளைகளும் மாமரத்திற்கு கல்லெறிந்து மாங்காய்களை விழுத்திக் கொண்டிருந்தார்கள்.

---

நாவற்குழியில் உன்னைத் தூக்கிக் கொண்டு வீதி வழியாக நடந்து வரும்போது நீர் கொண்டு வரும் தாங்கியிலிருந்து "பொம்" வெடித்ததில் உன் தாடை எலும்புகள் சிதறிவிட்டன. பல காரணங்களுக்காக அந்தச் சிறுவயதில் எனது தாடை எலும்புகளில் இருந்துதான் வெட்டி உன் தாடையை சரிப் பண்ணினார்கள்.

---

சுந்தரேசனின் கண்கள் நடுங்கிய கைகளினால் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தின் வரிகளைப் படிக்கத் தொடங்கின.

என் அன்பு ராசவுக்கு,

நீ வருவாய் வருவாய் என்று எதிர்பார்த்து ஏமாற்றத்தில் எனது இறுதி நாட்களை எண்ணிக் கொண்டு இருக்கிறேன்.

நான் சாவதற்கு முன்பு ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும் என்று அடிக்கடி யோசிப்பேன். நான் அப்படிச் சொல்லிவிட்டால் உன்ர மனத்தைரியம் குறைந்து விடுமோ என்ற பயத்தால் சொல்லாமலேயே இருந்து விட்டேன். நான் இறந்த பிறகாவது இந்த உண்மை உனக்குத் தெரியவேண்டும். அப்பொழுதாவது நீ என்னை நேசிப்பாய் என்று நினைத்து இந்தக் கடிதத்தை எழுதி அடுத்த வீட்டு காவேரியிடம் கொடுத்து வைத்தேன்.

உன் தாடையின் கீழ் தடவிப்பார். இரண்டு கீறல்கள் இருக்கும். சின்ன வயதில் நீ என்னிடம் என்ன காயம் என்று கேட்டபோது எல்லாம் ஏதோ சொல்லி சமாளித்து விட்டேன்.

என் முகத்தைப் பார்த்து விகாரமாயிருக்கு என்று நீசொல்லும் போதெல்லாம் என் வாய் உண்மையைச் சொல்லத் துடிக்கும். மனதிற்குள் அழுதுவிட்டு அமைதியாக இருந்துவிட்டுவேன். காரணம் எனக்கு நீ ஒருவன்தான்.

எத்தனையோ வருடங்களுக்கு முன்பு நாவற்குழியில் உன்னைத் தூக்கிக் கொண்டு வீதி வழியாக நடந்து வரும்போது நீர் கொண்டு வரும் தாங்கியிலிருந்து “பொம்” வெடித்ததில் உன் தாடை எலும்புகள் சிதறிவிட்டன. பல காரணங்களுக்காக அந்தச் சிறுவயதில் எனது தாடை எலும்புகளில் இருந்துதான் வெட்டி உன் தாடையை சரிப் பண்ணினார்கள். தெய்வாதீனமாக டாக்டர்களின் திறமையால் (Bone Transplant and Crafting) உனது முகம் வழமைபோல நன்றாக வித்தியாசம் தெரியாமல் மாறிவிட்டது. ஆனால் என்ர முகத்தின் இடது பக்கம் விகாரமாகி விட்டது.

இதுதான் ராசா உண்மை. இதற்காக என்னை வெறுத்தாய். என் பாசத்தை தூக்கியெறிந்தாய். என்னை உன் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த தயங்கினாய். இருந்தும் நான் உன்மீது வைத்திருக்கும் பாசம் சற்றும் குறையவில்லை. என்றோ ஒரு நாள் இந்த உண்மை உனக்கு தெரிய வேண்டும். இந்தக் கடிதம் உன் கைகளில் கிடைத்தால் அதுவே எனக்குப் போதும்.

இனியாவது நீ என்னை நேசிப்பாயா.

அன்புள்ள அம்மா

வள்ளியம்மை.

சுந்தரேசனின் கண்களிலிருந்து பொல பொல என நீர் வழிந்தது.

அம்மா, அம்மா நான் தப்புப் பண்ணி விட்டேன் என்று கதறி அழுதான். கேட்பதற்கு யாருமில்லை.

மாங்காய் மரத்திற்கு கல்லெறிந்து கொண்டிருந்த சிவகாமியும் பிள்ளைகளும் ஓடி வந்தார்கள்.

இது அம்மா தந்த முகம் என்று சொல்லிக் கொண்டே அவர்களைப் பார்த்து பெரிதாக கத்தி அழுதான் சுந்தரேசன்.



**MISSING**

கதிரை உண்டு, கதிரையில் கொழுவப்பட்ட சேட்டும் உண்டு. புத்தகம் மேசைமீது விரிக்கப்பட்ட நிலையில் அதன் அருகே விளக்குமுண்டு. ஆள் எங்கே? காணாமல் போய்விட்டார். காணமல் போனமை இவ்வாறே சித்தரிக்கப்பட்டுகிறது. மேற்புறம் சற்று இருள் இருப்பது போல் காட்சி அமைகிறது.

**ஓவியர்: கோ. கைலாசநாதன்**

# ஒரு முன்னாள் பெண்போராளியின் வாழ்வியல் பதிவுகள்

## புதிய கதைகள் சிறுகதைத் தொகுதியை முன்வைத்து ஒரு நோக்கு



கலாநிதி துரை. மனோகரன்

இலங்கையின் நவீனதமிழ்இலக்கியம் புத்தம்புது இலக்கியப் போக்குகளைக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் எண்பதுகளுக்குப் பின் இலங்கையின் நவீன இலக்கியம் இரு முக்கிய கிளைகளையும் உள்ளடக்கியதாக வளர்ந்து வந்துள்ளது. ஒன்று, புலம்பெயர் இலக்கியம். மற்றது, போர் இலக்கியம். இந்த இருவகை இலக்கிய முயற்சிகளும் இலங்கைக்கே தனித்துவமானவை. போரினால் ஏற்பட்ட தாக்கங்களும் பாதிப்புகளும் மிக அதிகம். அவற்றை ஈழத்து எழுத்தாளர் பலர் தமது படைப்புகளில் வெளிக்கொணர்ந்துள்ளனர். அதே வேளை, போரில் ஈடுபட்ட போராளிகளில் எழுத்தாற்றல் உள்ளவர்கள், போரியல் நிகழ்ச்சிகளையும், அதனோடு, இணைந்த வாழ்வியலையும் தமது எழுத்துக்களில் பதிவு செய்துள்ளனர். இவ்வகையில் பெண் போராளிகளின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில், ஒரு முன்னாள் பெண் போராளியான மலைமகளின் (இயற்பெயர் தெரியவில்லை) புதிய கதைகள் என்னும் சிறுகதைத் தொகுதி நோக்கப்படுகிறது.




மலைமகளின் இச்சிறுகதைத் தொகுதி 2004 இல் வெளிவந்தது. இத்தொகுதியில் பதினைந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது சிறுகதைகள் பல வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்ததோடு ஒரு வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன. சில கலை, இலக்கியப் போட்டிகளிலும் பரிசுகளைப் பெற்றுள்ளன. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு சிறுகதை சரிநிகர் பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது. பத்திரிகையில் வெளிவராத சில சிறுகதைதகளும் இத்தொகுதியில் அடங்குகின்றன. இதில் இடம் பெற்றுள்ள சில சிறுகதைகள் கனவுக்கு வெளியேயான உலகு (2002), வேர்கள் துளிர்க்கும் (2003) ஆகிய சிறுகதைத் தொகுதிகளிலும் வெளிவந்துள்ளன.

மலைமகள், தாம் இந்தச் சிறுகதைகளை எழுத முன் வந்தமைக்கான நோக்கத்தைச் ‘சொல்லாத செய்திகள்’ என்ற தமது முன்னுரையில் தெரிவித்திருக்கின்றார்.

“நடைமுறை வாழ்வியல் அசைவியக்கத்தின் அச்சாணியாகப் பெண்கள் இருக்கின்ற போதும், அவர்கள் கௌரவிக்கப்படுவதில்லை என்ற கோபம்

எனக்கு நிறையவே உண்டு. பெண்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக, விளைவை ஏற்படுத்தவல்ல செயல்களைச் செய்துவிட்டும் பேசாதிருப்பவர்கள் என்பதற்காக ஓய்வெடுக்கவும் நேரமின்றி இப்போதும் விழித்திருக்கும் என் தோழிகள் பேசப்படாதவர்களாகப் போய் விடுவார்களோ என்ற பயத்தினாலேயே நான் எழுத முனைந்தேன்".

மரபுகளை மீறுதலும், தடை-களைத் தாண்டி எல்லையற்ற வெளி யில் உலவுதலும் சிறுவயதில் இருந்தே தமது இயல்புகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். துணிச்சலும், தி-றமையும், அறிவுத்திறனும், சிறப்பான எழுத்தாற்றலும் கொண்ட படைப்பாளியாக மலைமகள் இச்சிறுகதைகளினூடாகத் தம்மை இனங்காட்டிக் கொள்கின்றார். அவரது எழுத்துநடை பற்றி, 'காலத்தின் சாட்சி' என்ற தலைப்பில் எழுத்தாளர் தாமரைச்செல்வி குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தமானது.

"மலை மகளுக்கு தான் சொல்ல விரும்பியதைச் சொல்வதற்கு அழ கான எழுத்துநடை கைகொடுக்கிறது. அவரது உணர்வும் சிந்தனையும் பேனா முனையும் இணைந்து இயல்பான கதைகூறலை நிகழ்த்திவிடுகிறது. தனக் கென ஒரு எழுத்து நடையை இவர் எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த நடை இயல்பானது. சிக்கனமான வார்த்தைகளில் அதிகளவு தாக்கத்தைத் தருவது. கேலி யும் கிண்டலும் குறும்பும் சேர்ந்து வாசிக்கும் ஆர்வத்தை உருவாக்குவது பாத்திரங்களோடு ஒன்றிப் போக வைப்பது".

உண்மையில் மலைமகளின் கதை சொல்லும் திறனுக்குக் கைகொடுப்பது, அவரது எழுத்து நடையாகும்.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள சிறுகதைகளில் பயணம், எதுவரை, யார் உன்னை அழைத்தார், முற்றுகை, இறுதிவணக்கம் என்பவை போர் அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. காணியும், மில்லும் இல்லாவிடின் கல்யாணமே தடைப்பட்டுப் போகக் கூடிய நிலையில் உள்ள முகமே தெரியாத யாரோ ஓர் அக்காவுக்காக நிலத்தை மீட்கமுனையும் பெண்போராளிகளின் உணர்வுகளை 'விலை' என்ற சிறுகதை அழகாக உணர்த்துகின்றது. உணவுக்காகப் பெண் போராளிகள் பட்ட கஷ்டங்களைச் சுவாரசியமாக 'ஒரு கோப்பைத் தேநீர்' தருகிறது. புதிய தலைமுறைப் பெண் போராளிகளின் போக்கைப் 'புதிய கதைகள்' என்ற சிறுகதை காட்டுகிறது. போர்க்காலச் சூழலில் பெண்கள் பட்ட அவஸ்தைகளை 'முருங்கையைவிட்டு இறங்காதவர்கள்' சொல்கிறது. போராளியாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்ற தன் அக்காவைப் பற்றிப் பெருமிதம் கொள்ளும் ஒரு தங்கையின் உணர்வுகளை 'ஆங்கோர் காட்டிடைப் பொந்திலே' என்ற கதை காட்டுகிறது. 'அனுமதி' என்ற சிறுகதை, சொந்த மண்ணைப் பார்ப்பதற்கு அனு-மதி பெறவேண்டிய நிலையை எடுத்துக் காட்டுகிறது.

எனது மனிதர்கள் - எனது மனிதர்கள் 2 என்பன, வியக்கத்தக்கவர்களாகவும், மனிதாபிமானம் கொண்டவர்களாகவும் விளங்கும் மனிதர்கள் பற்றிச் சொல்கிறது.

'யாரோ யாரிவர் யாரோ' என்ற கதை ஆனை அடக்கிய அரியாத்தையில் தொடங்கி, பெண் போராளிகளின் வீரதீரச் செயல்களைச் சொல்கிறது. 'கதவுகள் திறந்துதான் உள்ளன' என்ற படைப்பு, பெண்ணியம் சார்ந்த சிறந்த சிறுகதையாக விளங்குகிறது. வரலாற்றுப் போக்கில் பெண்ணுக்கு நிகழ்த்தப்பட்டு வந்த அநீதிகளையும் பாதிப்புகளையும்

வெளிப்படுத்துவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

பெரும்பாலான சிறுகதைகள் பெண் போராளி ஒருவரே கதை கூறுவதாக அமைந்துள்ளன. இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள படைப்புகளில், பெண் போராளிகள் தொடர்பான வாழ்வியல் பதிவுகள் பொதிந்துள்ளன. நவீன தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை, இப் பதிவுகள் புதிய தளத்தை உணர்த்துவனவாக உள்ளன.

இறுக்கமான, நெருக்கடியான, உயிராபத்து உள்ள வேளைகளில் கூட பெண் போராளிகள் எவ்வாறு இயல்பாக இயங்கினார்கள் என்பதைப் பல சிறு கதைகள் சுவாரசியமாக உணர்த்துகின்றன. ‘விலை’ என்ற சிறுகதையில் மயூரி என்ற பாத்திரம் கதை சொல்லிவரும்போது இவ்வாறு குறிப்பிடுகிறது:

“மரம் நிறையப் பூக்கள். காற்றோடு சேர்ந்து அசைந்து ஒன்றுடன் ஒன்று உரசி ஏதோ இரகசியம் பேசிச் சிரித்துக் கொண்டன. எங்களைப் போல. சிரிப்பதைத்தவிர வேறென்ன வேலை எங்களுக்கு?... சண்டைக்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்தபோதும் இப் படித்தான் அணிகளைப் பிரிப்பதும் நகர்த்துவதுமாக அவசர வேலைகள் நடந்த நேரம்கூட எங்களின் சிரிப்பு ஓயவில்லை. எல்லோரும் அல்லோலகல்லோலப்பட, நாங்கள் இரகசியங்கள் பேசிச் சிரித்துக் கொண்டோம். கதைத்துச் சிரிக்க ஆயிரம் விடயங்களிருந்தன எங்களிடம். அணி-களை அமைதியாக இருக்கும்படி அதட்டிய பொறுப்பாளர்களின் குரலையும் மீறி, ஏதோ இனி இப்படிச் சிரிக்க நேரம் வராது என்பது போலவும், இதுதான் கடைச்சிரிப்பு என்பது போலவும் அடக்கமாட்டாமல் சிரித்துக் கொண்டிருந்தோம்”.

பெண் போராளிகள் எவ்வாறு குறும்புத்தனமாக நடந்து கொண்டார்கள் என்பதை, ‘எதுவரை’ என்ற சிறு கதையில் இடம்பெறும் உரையாடல்களும் கலையாக உணர்த்துகின்றன. ஒருத்தி பதுங்குகுழிவெட்டிக்கொண்டிருப்பவர்கள் குவித்த மண்கும்பிமேல், மெத்தையில் படுப்பதுபோல் படுத்துக் கொண்டு கால்களை ஆட்டியவாறு, ‘சரி சரி, வேலை செய்துகளைச்சுப்போனம். அந்தறோல்ஸை யும் தக்காளி சோசையும் கொண்டு வாங்கோ. சாப்பிட்டுவிட்டு வேலை செய்வம்”, என்றாள். இன்னொருத்தி, “ஏன்ரி இல்லாததுகளை நினைவுபடுத்தி வாயைப் பழுதாக்கிறாய்” என்று அவளை அடக்கினாள்.

அதே சிறுகதையில் இரு பெண் போராளிகளுக்கிடையில் இவ்வாறு உரையாடல் நிகழ்கிறது:

“சத்தம் போடாதையுங்கோ. நிலம் வெடிக்கப்போகுது. வீட்டில் இருந்தா இப்படியெல்லாம் குதியன் குந்தியிருப்பியளே? சத்தம் போடாமல் ஒரு மூலையில் இருந்திருப்பியள்”.

“அதுதானே வீட்டில இல்லாமல் இஞ்சவந்து நிக்கிறம்”.

பெண் போராளிகளுக்கு ஏற்படும் உணவுப் பிரச்சினையை ‘ஒரு கோப்பைத் தேநீர்’ என்ற சிறுகதை சுவாரசியமாக விளக்குகிறது. அதிலிருந்து சில பகுதிகள்:

“காலையில் பிட்டும் கறியும், மதியம் சோறும் கறியும், இரவு பிட்டும் கறியும்”

பரவாயில்லை.

பின்னர்,

காலையில் பிட்டும் கறியும், மதியமும் இரவும் சோறும் கறியும்,

இதுவும் பரவாயில்லை.

கொஞ்ச நாளின் பின்,

மூன்று நேரமுமே சோறும் கறியும், அதுவும் எப்படியென்றால், காலையில் சோறும் கத்தரிக்காய் கறியும், மதியம் கத்தரிக்காய் கறியும் சோறும், இரவு சோ-றும் கத்தரிக்காய்க் கறியும்

இன்னும் கொஞ்சநாளின் பின்,

காலையில் கஞ்சி, மதியமும் இரவும் சோறும் கத்தரிக்காயும், கத்தரிக்காயும் சோறும்"

அவர்கள் "கத்தரிக்காயைக் கண்டு பிடித்தவன் நாசமாய்ப் போக!", "கத்தரித்தோட்டம் வைத்திருப்பவர்கள் தலையில் இடிவிழ!" என்று சபித்துக் கொண்டே சாப்பிடுவார்கள்.

உணவு நெருக்கடி அவர்களை எவ்வாறு செயற்பட வைத்தது என்பதைப் பின்வரும் பகுதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

"கத்தரிக்காயுடன் எங்கள் விருப்பத்துக்கு மாறாக கைகோர்த்துக் கொண்ட காரணத்தால், சோற்றுப்பைகள், கேட்பாரற்று தலைமேல் மரக்கிளைகளில் தொங்கின. அண்ணாந்து பார்த்தால் கோபம்தான் வரும். கூடவே கவலை வரும். இதைப்போய் எறிவதா? என்னவென்று? எம் மக்கள் ஒரு நேர உணவுக்கே அல்லாடிக் கொண்டிருக்கையில், இவ்வளவு சோற்றையும் வெட்டிப் புதைப்பதா?

மனம் கேட்கவில்லை..

காப்பரணைப் பலப்படுத்தவெனத் தரப்பட்டிருந்த உரப்பைகளுள் நல்லதாக ஒன்றை எடுத்துக் கழுவி உதறி வெயில் படக்கூடிய இடமாகப் பார்த்து, விரித்து, அதன்மேல் சோற்றுப் பருக்கைகளைப் பரப்பிக் காயவிட்டு மீண்டும் அரிசியாக்கினோம். தேநீர் சுடவைக்கும் அலுமினியப் பாத்திரத்தில் அதைக் கொட்டிக்கிளறிச்சூடேற்றிஅடுப்பிலிருந்து இறக்கி, அந்தப் பாத்திரத்தில் வைத்தே இடித்துப் பொடியாக்கினோம். வெகு அபூர்வமாக வந்த பிட்டையும் கூட காய வைத்து வறுத்தோம். கை தவறிக் கூட ஒரு சோற்றை கீழே போடமாட்டோம்.

வெளியே உணவு நெருக்கடி அதிகரிக்க, எம் கையிருப்பிலுள்ள சீனியின் அளவு குறையத் தொடங்கியது. தேநீரில் சீனி கலந்து குடிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. சீனியைத் தொட்டுத் தேநீர் குடிக்கத் தொடங்கி, அதிலும் நெருக்கடி ஏற்பட, கையிலிருந்த சீனியைப் பொரிமாவுடன் கலந்துவிட்டு, அதனோடு தொட்டுத் தேநீர் குடிக்கத் தொடங்கினோம். தேநீருடன் கொறிப்பதற்கான உப உணவாகச் செய்து வைத்திருந்த பொரிமா கடைசியில் தேநீருக்கான மூலப்பொருட்களுள் ஒன்றானது.

வீரைப்பழக் காலங்களில் வீரைப்பழம் பாணியுடனும், பாலைப்பழக் காலங்களின் பாலைப்பழப் பாணியுடனும் சிலநேரம் உலுவிந்தம் பழப் பாணியுடனும் என்று அந்த ஒரு கோப்பை தேநீரை, எங்கள் அபிமானத் தேநீரை விதம் விதமாகக் குடித்தோம்.

ஒரு கோப்பை தேநீர் தரும் மன உற்சாகத்துடன், கஞ்சியும் கத்தரிக்காயும் தந்த பலத்துடன் கடமையில் கண்ணாயிருந்தோம்".

இவர்களின் உணவுப் பிரச்சினையைக் கவனித்த ஆண் போராளிகள் ஏங்கிப்போய், "என்ன பிள்ளையளே, இந்த சாப்பாட்டைச் சாப்பிட்டோ இந்த மாதிரி...?" என்று மலைத்துப் போனார்கள். இடையிடையே தாம் சாப்பிடுவதற்காகக் கொண்டு வந்திருந்த சொக்கிலேட்களைப் பெண்போராளிகளுக்கும் கொடுப்பார்கள். அவர்கள் கொடுப்பதை இவர்கள் சாப்பிடாமல் காற்சட்டைப் பைகளுள் போட்டுக் கொள்வார்கள். அவர்களுக்கு கிடையிலான உரையாடல் சுவாரசியமானது.

"ஏனக்கா சாப்பிடாமல பொக்கற்றில் வைக்கிறீங்கள்? நீங்கள் இதைச் சாப்பிடுங்கோ, உங்கட ஆக்களுக்குக் கொண்டு போய்க் குடுக்கிறதுக்கு நாங்கள் வேற றொபி தாறம்."

"நாங்கள் இந்த றொபியோடதான் அண்ணை ரீ குடிக்கிறனாங்கள். எங்களிட்டச் சீனி இல்லை".

"இந்த நாலைஞ்சும் உங்களுக்கு எந்த மூலைக்குக் காணும் அக்கா? ஒரு ரீ குடிக்க உங்களுக்கு எத்தனை ரொபி வேணும்?"

"ஒரு ரொபியில நாலுதரம் குடிப்பம்".

ஆண் போராளிகள் பெண் போராளிகளுக்கு வழங்கிய பாதுகாப்பினைப் பற்றியும் சிறுகதையொன்றில் விபரிக்கப் பட்டுள்ளது.

போர்ச்சூழலில் பெண்களுக்கு ஏற்பட்ட பல்வேறு சங்கடங்களை 'முருங்கையை விட்டு இறங்காதவர்கள்' காட்டுகின்றது.

பெண் போராளி ஒருவருக்குச் சோதனைச் சாவடியொன்றில் சங்கடமான நிலை ஏற்பட்டது. அவளைப் பார்த்து இன்னொரு பெண் போராளி இவ்வாறு சொன்னாள்.

"காலையில் நீங்கள் போனாப்பிறகு, முன்வீட்டுப் பிள்ளை கொஞ்சநேரம் வந்து கதைச்சுக்கொண்டிருந்தா. நேற்றையான் காரனின்ர கதையைச் சொன்னன். நாங்கள் இஞ்ச வாறதுக்கு முதல், பள்ளிக்கூடம் போய்வாற நேரங்களில் தங்களுக்கும் பொடிச்செக்கிங் நடக்கிறதாம். திடீரெண்டு ரவுண்டப் பண்ணி மறிப்பாங்களாம். றோட்டிலேயே தங்கடை வெள்ளைச் சட்டையைத் தூக்கிப் பாக்கிறவையாம். அதுக்காகவே தாங்கள் அந்த நாட்களில பள்ளிக்கூடம் போறதில்லை எண்டு அந்தப் பிள்ளை சொல்லிச்சு".

'யார் உன்னை அழைத்தார்கள்' என்ற சிறுகதையிலும் பெண்களுக்கு ஏற்படும் பிரத்தியேகமான பிரச்சினைகள் சொல்லப்படுகின்றன. போரில் இறந்து பட்ட பெண் போராளி ஒருத்தி பற்றி, அவளது தோழி நினைத்துப்பார்க்கிறாள்.

"அகல்யாவின் தெற்றுப்பல் சிரிப்பு கண்களுக்குள் வந்து போனது. பார்ப்பதற்காகக் காலையில் நான் புறப்பட்டபோது, அகல்யா எழும்பியிருக் கவில்லை. 'வயிற்றுக்குத்து' என்று முனகினாள். வழமையாகவே இவள் வயிற்றுக்குத்து என்றால் சுருண்டு விடுவாள். நாங்களும் வேலை சொல்லமாட்டோம். வீட்டிலென்றால் எங்களை ஒரு வேலையும் செய்யவிடாமல் அம்மாவே எல்லாம் செய்து, சின்ன மீன் வாங்கி அரைத்த கறி வைத்து, அது, இதுவென்றெல்லாம் பக்குவம் பார்ப்பார். இங்கு அதற்கேது நேரம்? ஆளை ஆறுதலாக விட்டு விடுவோம்".

இவ்வாறு, பெண்கள் தங்களுக்கான பிரச்சினைகளுடனேயே போராளிகளாகவும் திகழ்ந்தார்கள் என்பதை மலைமகள் தமது இரு சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

'புதிய கதைகள்' என்ற படைப்பில் பெண்களின் புதிய போக்குகளை இனங்காட்டுகிறார். பாரதி கண்ட புதுமைப் பெண்கள் உண்மையிலே இலங்கையிலேதான் தோன்றியுள்ளனர். "நிமிர்ந்து நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச்செருக்கும்" கொண்ட பெண்கள் தோன்றத் தவறவில்லை. இந்தக்கதையில், ஊர்வம்பு பேசுபவர்கள் பெண் போராளிகள் பற்றிப் பேசுவதைச் சுவாரசியமாக மலைமகள் தருகிறார்:

"கடலில் கொஞ்ச மனிதர்கள் நீந்து கின்றார்கள். அது தெரிகிறது.

யார் அவர்கள்? அரைக்காற்சட்டைகளை அவர்கள் அணிந்திருக்கிறார்கள்.

'ஆம்பிளையளோ?'

தலையிலே முடி கொண்டயிட் டிருப்பது போலவும் தெரிகிறது.

'பொம்பிளையளோ?'

'என்ன பொம்பிளையளோ?'

'அதுவும் காற்சட்டையளோடையோ?'

'கடல் பொங்கி ஊரை அழிக்கிறதுக் குத்தான் உந்தக் கூத்தெல்லாம் நடக்குது?'

'அப்பிடியெண்டா வெள்ளைக்கார னின்ர கடலுமெல்லே பொங்கவேணும். அங்கை எல்லாரும்தானே குளிக்கினம்?'

'அது ரோசமில்லாத கடல். பேசாமல் கிடக்கும். எங்கட கடல் அப்பிடியே'.

எத்தகைய மிகைப்படுத்தல்களும் பிரசா ரங்களும் இன்றித் தமது கதைகளை நகர்த்துகிறார், மலைமகள்.

பெண் போராளிகள் போர்களில் ஈடுபட்டாலும், அவர்களிடத்தில் மனிதாபிமானமும் உண்டு என்பதையும் மலைமகள் ஒரு சிறுகதையில் உணர்த்துகிறார். போரின்போது எதிராளிகளின்மீது வெறுப்பும் கே-ாபமும் ஏற்படும். ஆனால், அவர்கள் உயிரிழக்கும்போது அவை யெல்லாம் இருந்தஇடம்தெரியாமல்பறந்துவிடுகிறது. 'யார் உன்னை அழைத்தார்' என்ற சிறு-கதையில் கதை கூறும் பாத்திரம் கூறும் கூற்று இதனை உணர்த்துகிறது. "உயிரோடு உள்ளபோது அவர்கள்மேல் எழும் கோபம் இறந்தபின் ஏன் வருவதில்லை என்பது புரியவில்லை" என்கிறது, அப்பாத்திரம். மனிதாபிமானமும் இரக்கமும் பெண் போராளிகளுக்கும் இருந்தன என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

இந்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'கதவுகள் திறந்துதான் உள்ளன' என்ற சிறுகதை பெண்ணியம் சார்ந்த சிறந்த படைப்பாக விளங்குகிறது. காலங்காலமாக வரலாறு பெண்ணுக்கு இழைத்த அநீதி-களையும், அதனால் அவளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் உயர்ந்த படைப் புத்திறனோடு அச்சிறுகதை சொல்கிறது. ஜனகனின் மகா சபையில் பிரம்மவாதியான யக்ஞவல்லியலுடன் பிரம்மம் பற்றிக் கருத்தாடல்செய்தபெண்தத்துவவாதியான கார்க்கியை அவன் அவமதித்தமை, சாளுவ மன்னன் கூல்வனுடன் மனத்தால் ஒன்றியிருந்த அம்பையைத் தன் தம்பி திருதராட்டினனுக்குத் திருமணம் செய்விப் பதற்காக அவளது இரு சகோதரிகளுடன் பீஷ்மன் தூக்கிச் சென்றதனால், அவளைச் சால்வன் வெறுக்க, பின்னர் உண்மை அறிந்து அவளைத் தன் தம்பிக்குத் திருமணம் செய்துவைக்க முடியாது என பீஷ்மன் மறுக்க, இருவராலும் திருமணம் மறுக்கப்பட்ட அம்பையின் பரிதாப நிலை, எவனோ ஒருவனின் கதை யைக் கேட்டுச் சீதையை ஐயுற்ற இராம னின் கொடூரம், வேடம் புனைந்து வந்து அகல்யையை ஏமாற்றிய இந்திரனின் கபடம், தானும் இந்திரனிடம் ஏமாந்து விட்டுத் தன் ஆற்றாமையால் அவளைச் சினந்த கௌதமனின் அநீதி என்று வரலாறு பெண்ணுக்கு எழுதிவைத்த அக்கிரமங்களையெல்லாம் பெண் எடுத்துக் கூறுவதோடு? இனியும் தான் ஏமாறத் தயாரில்லை என்றும், நல்ல மனிதர்களின் வருகைக்காகத் தனது மனத்தின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்தபடியேதான் இருக்கும் எனவும் அவள் தெரிவிப்பதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. மலைமக-ளின் ஆழ்ந்து அகன்ற அறிவுத்திறனையும் எழுத்தாற்றலையும் பெண்ணிய நிலை நின்று இப்படைப்பு மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் தமிழ்ச் சிறுகதைத் துறையில் போரியல் சார்ந்த அனுபவ வெளிப்பாடுகளையும், பெண்ணிய நிலை நின்று அவற்றை வெளிப்படுத்தும் திற னையும், ஆற்றல் மிக்க எழுத்து ஆளுமையை யும் மலைமகளின் சிறுகதைகள் இனங்காட்டுகின்றன. கடுமையான போர் நிலைகளுக்கு மத்தியில், நெகிழ்ச்சியான கதாசிரியையாகத் தம்மை நிலைப்படுத்திய மலைமகளின் எழுத்தாற்றல் உண்மையில் பிரமிக்க வைக்கிறது. தமது சிறுகதைகள் ஊடாக அவர் தரும் வாழ்வியல் பதிவுகள் அற்புதமானவை.



# மாணிக்கம்

**1983**ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியுள் ஆசிரியை கவிதாவுக்கு அது நான்காவது இடப்பெயர்வு.

இடப்பெயர்வு என்றால் இடர். ஆனால், தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டு இடப்பெயர்வு பேரிடர்.

இரவு எட்டுமணி, உடனடியாக இருப்பிடங்களை விட்டு வெளிமாவட்டத்திற்கு இடம்பெயர ஒலிபரப்பியில் வலிகாகம் மக்கள் கேட்கப்பட்டனர்.

கவிதாவின் குடும்பத்தில் நால்வர். அவர்கள் அவசர அவசரமாக அகப்பட்ட சில முக்கிய பொருட்களை சுருட்டிக் கட்டிக் கொண்டு தாவடியில் இருந்து மட்டுவிலுக்கு நடைகட்டினர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர், கர்ப்பிணிகள், வயோதிபர், நோயாளிகள் என லட்சோபலட்ச மக்கள் சுருங்கச் சொன்னால் வலிகாமம் முழுமையாகவே ஆணைக்குக் கட்டுப்பட்டது. நெரிசலுள் சிலர் தமது வாகனங்களையும் தள்ளிச் சென்றமையால், நெருக்கடி மிக மோசமாகியது. பற்றாக்குறைக்குச் சோனாவாரி மழை வேறு.

சோனாவாரி ஒரு வகையில் மக்களுக்கு ஆறுதலளித்தது. குடைகளில் இருந்து வழிந்தோடிய மழைநீரே பயணிகளின் தாகம் போக்கிய ஒரே ஒரு குடிநீர்.

நெருக்கடிக்குத் தாக்குப் பிடிக்கமாட்டாத வயோதிபரின் முக்கல் - முனகல் வலு பரிதாபமாக இருந்தது. தாக்குப்பிடி கொடுக்க முடியாத சிலர் மயக்கமுற்று வீழ்ந்தனர். நிறைமாதக் கர்ப்பிணி ஒரு சிலர் பெறுமாதக் குத்துத் தொடங்கியதால் வீறிட்டுக் கத்தி அழுதனர். படு கிழவர் பெரும்பாடு பட்டனர். ஒரு சிலர் ஆவி பிரிந்து - சரிந்து வீழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்களின் சடலங்கள் றோட் ஓரம் தள்ளப்பட்டன. - ஒன்று இரண்டு கிடைத்த தடி, தண்டு, சுள்ளி போட்டுத் தீமூட்டிக் கருக்கப்பட்டன.

செம்மணி - நாவற்குழிச் சந்தி - கைதடிச் சந்தி என நீண்ட கவிதாவின் நடைபவனியில் ஒரு பெரும் இழப்பு! அவளின் தாய், கணவன், மகன் ஆகியோர் எப்படியோ விடுபட்டமை கைதடி, அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய விளக்கொளியிலேதான் அவளுக்கு வெளிச்சமானது. “விநாயகப் பெருமானே! என்ரை குடும்பத்தவரை எப்பிடியும் மட்டுவில் வீட்டில் ஒண்டு சேர்த்துவிடும் ஐயா”, என மனமுருகி கவிதா அழுது வேண்டினாள்.

கோழி கூவிய நேரம், விடியற்காலை, மட்டுவில் வீடு வந்து சேர்ந்த கவிதா தனது குடும்பத்தினரைத் தேடினாள். அதுவரை ஆரும் வீடு வந்து சேரவில்லை! அடுத்து தான் கையோடு கொண்டு வந்த பொதியைப் பிரித்துப் பார்த்தாள். திகைத்துப் போனாள்! பொதி யுள் அவள் மறைத்து வைத்திருந்த தாலிக்கொடி உட்பட அனைத்து நகைநட்டு முடிச்சே இல்லை!

“எல்லாம் துலைந்து போச்சு”, எனக் கவிதா ஓலமிட்டு அழுதாள்.

கவிதாவின் கதறல் கேட்டு, பன்றித்தலைச்சி அம்மன் தஞ்சம் வேண்டி, அவ்வழி வந்த, அவளது ஊரைச் சேர்ந்த சீவற் தொழிலாளி “மாணிக்கன்”, “அம்மா நாவற்குழிச் சந்தியடியில் நான் கண்டு எடுத்த முடிச்சு இது, இதைக் கொஞ்சம் பாருங்கோ”, என்று சொல்லி ஒரு சீலை முடிச்சைக் கொடுத்தான்.

அது கவிதாவின் நகைநட்டு முடிச்சேதான்! அவள் மறைத்து வைத்த நகைநட்டு அத்தனையும் வைத்தவை வைத்தபடி.!

வேல் அமுதன்

சிறுகதை

சிறுகதை

# பருவாண்கரை

சக்கரவர்த்தி

மெலிதான காற்று மரங்களை அசைக்க இரைச்சல் எங்கும் எழுந்தது. நீண்ட நேரத்திற்கு முன்பாகவே உஷ்ணம் சூழலை விட்டு வெளிநடப்புச் செய்திருந்தது. சொறி நாய் ஒன்று சும்மா சும்மா ஊளையிட்டு எரிந்த குப்பைமேட்டுச் சாம்பலுக்குள் ரோமங்கள் உதிர்ந்து போன உடலைப் புரட்டி சிலிப்பிற்று. கடத்தி கம்பிகளை காவுகொடுத்துவிட்டு நீட்டுநீட்டு கறுப்புப்பூதங்களாக மின் சாரக் கம்பங்கள். ஆக்காண்டி பறவை ஒன்று திசையைத் தொலைத்துவிட்டு அங்குமிங்குமாய் அவசர அவசரமாய் பறந்து கத்திற்று. முகம் தெரியாத இருட்டு. ஊர் உறங்கி நெடுநேரமாகி இருந்தது.

சரசுவதி வேகமாய் ஓடி ஓடி நடந்தாள். அவளது கண்களுக்கு இருட்டு பழக்கப்பட்டிருந்தது. இதயம் சமநிலை தவறி வேகமாய்த் துடித்தது. அதைவிட சரீரம் அதிகமாய்ப் படபடத்தது. கைக்குழந்தை இடுப்பினில் நிகழ்வுகள் புரியாமல் தூக்கமும் விழிப்புமாகச் சிணுங்கியது. எட்டு மாதப் பிள்ளை வயிறு அதிகமாய் சுமை கொடுத்தது.

வேலியை இணைத்து மூடியிருந்த தகரக் கதவைத் திறக்க சத்தம் பலமாய் எழுந்தது. தாழ்வாரத்தில் மடுத்தோண்டி படுத்திருந்த வீமன் சத்தம் கேட்டு பலமாய் உறுமியது.

“வீமா...”

சரசுவதி சத்தம் எழுப்பினாள்.

தனக்குப் பழக்கமான குரல் என்பதை புரிந்துகொண்டு உறுமலை அடக்கிக் கொண்டு முனகலுடன் ஓடிவந்து அவள் காலை உரசியது. ஒரு தடவை எம்பி அவள் மேல் தாவி விசுவாசத்தைக் காண்பித்தது.

சரசுவதி அதை ஒதுக்கிவிட்டு கதவைத் தட்டினாள்.

“அம்மா...!”

நிசப்தம்.

“அம்மா... அம்மேய்...”

வீட்டுக்குள் சரசரப்புக் கேட்டது.

“ஆரது...?”

தூக்கக் கலக்கமாய் குரல் கேட்டது.

“அது நான்தாங்கா சரசி! கதவ தெறகா...”

கதவுதிறபட்டது. எண்ணைப் பசை இல்லாத பிணைச்சலில் உராய்வுச் சத்தம் இம்சையாய் எழுந்தது. கலைந்த தலையுடன் குலைந்த சேலையை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டே குப்பி விளக்குடன் கிழவி கதவுக்கு வெளியே வந்தாள்.

“என்ன மெனை இந்த நடுஊத்தில? அதுவும் புள்ள வகுத்துக்காரி. புள்ளையும் தூக்கித்து வந்திரிக்காய். எங்க புள்ளையிர அப்பன்?”

கிழவி முகத்தில் பரபரப்பு. படபடப் புடன் கேட்டாள்.

"புள்ளைய ஒள்ளம் புடிகா"

"வா மெனேய்"

கிழவி சரசுவதியின் இடுப்பிலிருந்து குழந்தையை தனது இடுப்புக்கு மாற்றிக் கொண்டாள். சரசுவதி இடுப்பைப் பிடித் துக் கொண்டு திண்ணையில் பாரமாய் அமர்ந்தாள். கேவலுடன் அழுதாள். கிழவி திகைத்தாள்.

"என்ன மெனேய். ஏன் கொளறுறா வகுத்துக்க நோகுதா? புள்ளையிர அப்பனிட்ட சொல்லி அனுப்பி யிரிக்கலாமே. நான் வந்திரிப்பன். உள்ளுக்க வா. சுடுதண்ணிய வெச்சித்து நேசி மனி சிய போய்க் கூட்டித்து வாறன். அந்த நாசமறுவாளும் வாறாளோ தெரியாது. நேரத்தோடையே காச கேப்பாள்."

கிழவி சொல்லிக் கொண்டே இடுப்பிலிருந்த குழந்தையை படுக்க வைத்துவிட்டு சரசுவதியை கைத்தாங்கலாய் தூக்க முனைந்தாள்.

"எனக்கு ஒண்டுமில்லகா"

சொல்லிக்கொண்டே முந்தானைத் தலைப்பால் மூக்கில் ஊறிய நீரைத் துடைத்தாள்.

"அவரப் பொடியனுகள் புடிச்சித்து போறானுகள்." சொல்லிவிட்டு சரசுவதி பலமாய் அழுதாள். கிழவி விறைத்துப் போனாள். எதையுமே பேசமுடியாமல் திகைத்துப் போய் நின்றாள்.

"புள்ளையாக் கெழவா" பலமாய் கிழவி சத்தமிட்டாள்.

"காப்பாத்துப்பா...!"

தலைமேல் கை தூக்கி வேதனை யாய் வேண்டினாள். பின் அவளும் அழுதாள். கிழவியின் அழுகை சரசுவ தியை மேலும் பலயீனப்படுத்தியது. சரசுவதி இன்னுமின்னும் கவலையுடன் அழுதாள். கிழவி அனுபவசாலி. அதிகம் வாழ்ந்தவள். சரசுவதியின் நிலைமை புரிந்து தன்னை சுதாரித்துக் கொண்டு மெல்ல அடக்கினாள்.

"ஏனாம் மெனேய் புடிச்சித்துப் போறா னுகள்?"

"எனக்கென்ன தெரியும். என்னவோ வெளங்கோணுமாம்!" விக்கி விக்கி சரசுவதி சொன்னாள்.

"நாசமாய்ப் போவானுகள்"

கிழவி மண்ணை அள்ளி கிழக்கு மூலைப்பக்கமாய் வீசினாள்.

"இவனுகள் நம்மளை வாழவும் உடமாட்டானுகள். சாகயும் உடமாட்டானு கள்." கோபமும் சோகமும் கிழவியை ஏகமாய்த் தாக்கியது.

வீமன் முதுகில் கடித்த தேள் ஒன்றை முன்பல்லால் கடித்தது. தேள் இடம் மாறிப் பலமாய்க் கடிக்க தரையில் ஒரு தடவை புரண்டு எழும்பியது. வேலிக்குள் எதுவோ சரசரக்க ஓடிப் போய் வேலி மட்டையை காலால் பிறாண்டியது. வேகமாய் ஓடிவந்து திரும்பவும் குந்திக் கொண்டது.

வீட்டின் பின் பக்கம் இருந்த கூமாமரத்தில் பறவை ஒன்று சலனம் எழுப்பியது. சில விநாடி மௌனத்தின் பின் ஆந்தை ஒன்று கூமாமரக் கிளையிலிருந்து பலமாய் அலறியது. கூமாமர ஆந்தையின் அலறல் கேட்டு எங்கோ இருந்து இன்னொரு ஆந்தை விநோதமாய் அலறியது. சரசுவதியின் முகம் பயத்தால் வெளிறியது. ஊருக்குள் ஆந்தை அலறினால் அவசரமாய் ஒரு மரணம் நிகழும் என்னும் கிராமத்து ஐதீகம் உடனடியாய் மூளைக்குப் போயிற்று. சரசுவதிக்கு கண் இருட்டுவது போல் இருந்தது. வியர்த்தது. அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன மெனேய் ஊமத்தம் கோழி கத்துது."

சரசுவதியைவிட கிழவி அதிகம் பயந்தாள்.

"எனக்குப் பயமா இரிக்கி கா." சரசுவதியின் குரல் நடுங்கியது.

"அந்தநரகல்சும்மாகத்துது. அதுகளுக்கு இண்டைக்கு எரை கெடைக்கல்ல போல. அதுதான் ஊருக்குள்ள வந்து கத்துதுகள்."

கிழவி சரசுவதியை சமாதானப்படுத்த முயன்றாள். ஆனாலும் சரசுவதியை விட அவள்தான் அதிகம் ஆந்தையின் அலறலால் கலவரம் ஆனாள். காக்கைகள் வாசலில் வட்டமிட்டாலே கஸ்டகாலம் என்று கலவரமடைபவள். ஆந்தை அலறினாலோ அதிகம் ஆடிப்போபவள். இப்போது அடக்கிக் கொண்டு தனக்குள் மட்டும் அல்லோலப் பட்டாள்.

இல்ல, நீ சும்மா சொல்றா. ஊமத்தைக்கோழி ஊமுனா ஆக்கள் சாகிற எலுவா? எனக்குப் பயமா இரிக்கி. சொல்லிவிட்டு சரசுவதி பலமாய்ச் சத்தம் போட்டு அழுதாள்.

"நான் என்ன மெனேய் செய்ய?"

"கண்ணா காட்டுப்பக்கம்தான் கூட்டித்துப் போறானுகள். வாகா போய்ப்பார்ப்பம்." சரசுவதி அழைத்தாள். ஏக்கமாய், கவலையாய் கிழவியின் முகத்தைப் பார்த்தாள்.

"கொப்பனும் இல்ல. போடியாற்ர வெள்ளாமைக்கு காவலுக்குப் பெயித்தாரு. இந்தப் புள்ளய ஆரிட்ட உட்டுத்துப் போறது?"

கிழவியில் கவலை ஏறிக்கொண்டது.

சரசுவதி எழுந்து கிழவியை கையால் தள்ளி விலத்தினாள்.

"வெல நான் தூக்கிறன். நீ வா!" சொல்லிக் கொண்டே எதுவுமே உணராமல் தூங்கும் குழந்தையை சரசுவதி நெருங்கினாள்.

"இல்ல மெனேய் நீ புள்ளவகுத்துக்காறி. நான் தூக்கித்து வாறன்" சரசுவதியைக் கிழவி தடுத்தாள்.

"ஒள்ளுப்பம் பொறு. அரிக்கன் லாம்ப பத்த வைச்சித்து வாறன். அதுக்குள்ள லாம் பெண்ணையும் இரிக்கோ தெரியாது" சொல்லிக்கொண்டே கிழவி இருட்டுக்குள் போய்த்தடவினாள். பாரமான சட்டியில் கால் அடிபட்டது. கால் இடறி வலித்தது. சருவச்சட்டி தன் பங்குக்கு ஓசையை எழுப்பிவிட்டு மெல்ல அசைந்தது. கிழவி வலியை அடக்கிக் கொண்டு அரிக்கன் லாந்தரைத் தேடினாள். பழைய சாமான்களுடன் பறன் மேல் கிடக்க கையால் கண்டு கொண்டாள். லாந்தரை எடுத்து தூசிதட்டி பற்றவைத்தாள். திரி பற்றிக் கொண்டது. அடியில் கொஞ்சமாக எண்ணை இருந்தது.

"இன்னா லாம்ப புடி. நான் புள்ளைய தூக்கித்து வாறன்".

சரசுவதியிடம் அரிக்கன் லாந்தரைக் கொடுத்துவிட்டு கிழவி தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை தூக்கி இடுப்பில் வைத்தாள். தூக்கம் கலைய குழந்தை சிணுங்கியது.

"கத்தாத மெனேய்"

கிழவி சொல்ல அதை குழந்தை கிரகிக்க முடியவில்லை போலும். தொடர்ந்து சிணுங்கியது.

லாந்தருடன் சரசுவதி முன்னே செல்ல கிழவி இடுப்பில் பிள்ளையுடன் இளைத்து இளைத்து நடந்தாள். இவர்கள் போகும் இடம் புரிந்துகொண்டதாலோ என்னவோ தெரியவில்லை. வீமன்இவர்களுக்கெல்லாம் முன்னால் ஓடிக்கொண்டிருந்தது.

உறங்கிக் கொண்டிருக்கும் ஊர் பயங்கரத்தை தோற்றுவித்தது. இருக்கும் இடத்தை காட்டிக்கொள்ளாமல் சில்லூறுகள் கத்தியது. இருட்டின் எல்லாத் திசையிலிருந்தும் ஓசையை எழுப்பின. சரசுவதியின் மனம் பதறிக்கொண்டே இருந்தது. "புள்ளையாரே அவர காப்பாத்து. ஒனக்கு வாழக்கொல நேந்து உடுறன். ஒன்னட்ட வந்து பொங்கிறன். காவடி எடுக்கிறன். அவர அவனுகளிட்ட இருந்து

எப்படியும் காப்பாத்து." கடவுளிடம் மனது வேண்டியது நிஜமாகவே நெஞ்சுருக நேற்றிக் கடன் வைக்கப்பட்டது.

கண்ணாக் காடு இருட்டுக்காடாய் இருந்தது. நட்சத்திரங்களின் வெளிச்சமோ நிலவின் ஒளியோ அங்கு பயன் தருவதாய் தெரியவில்லை. ஊர் வெளிச்சம் தூரத்தி லேயே தடைப்பட்டுப் போயிருந்தது.

ஆற்றிலும் சேற்றிலும் பட்டுவரும் காற்று உடலைப் பயத்துடன் சேர்த்து அதிகமாய் நடுங்கவைத்தது. புல்லும் வேளாண்மையின் அடிக்கட்டையும் சேற்றில் அழுகி நாறியது. காற்றோடு கலந்து சுவாசிக்க சுவாசிக்க குமட்டியது. தவளை இம்சையுடன் கத்தியது. அதுக்கு எடுத்தாள். ஆனாலும் நிலை தடுமாறி குப்புற சாய்ந்தாள். வயிறு அடிபட குப்புற விழுந்தாள்.

"அம்மா... ஆ..."

வேதனையில் பலமாய் அலறினாள். கண்ணாப் புதர்கள் இவள் போட்ட சத்தத்தைஒருதடவைஎதிர்ஒலிக்கவைத்தது. கிழவி பதறினாள். கலவரமடைந்தாள். "கடவுளே" சத்த மிட்டுக் கூவினாள்.

"கவனமாய் எழும்பு மெனேய். கைய கொண்டா. புள்ள வகுறுடாப்பா.." சொல்லிக் கொண்டே கிழவி ஒற்றைக் கையால் இடுப்புக் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டு மறுகையால் சரசுவ தியை நிமிர்த்தினாள்.

"இவனில எங்களுக்கு சந்தேகம். இவன நாங்க வெளங்க வேணும். அவனுகளோட இவனுக்கு பழக்கம் இரிக்கி. கொழும்புல இருந்து இந்த ஏரியாவுக்கு புதிசா ஒரு கொமாண்டர் வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு பயங்கரவாதியும் இரிக்கப் போடாது. மறுகா எங்களுக்குத்தான் கெட்ட பேரு. நாங்க இவன வெளங்க வேணும்." நெருங்கினவன் கிழவியிடம் சொன்னான்.

ஏதோ ஆபத்து போலும். பாம்பு ஒன்று அதனை விழுங்க எத்தனிக்கின்றது போலும். தவளையின் தலையைத் தவிர மற்றப் பாகம் எல்லாம் பாம்பின் வாயினுள் போயிருக்க வேண்டும். தவளை திரும்பவும் கத்தியது. சத்தம் தேய்ந்து வந்தது. சத்தம் முற்றாக மங்கிப் போனது. பாம்பு தவ ளையை விழுங்கிவிட்டதா? கண்ணாக்காடு உண்மையிலே படு பயங்கரமாய் தோன் றிற்று.

முன்னால் போய்க்கொண்டிருந்த வீமன் வேகத்தைக் குறைத்து தயங்கி நின்றது. சரசுவதி அதைத் தாண்டி முன்னேறினாள். கால் சேற்றில் முழங்கால் வரை புதைந்தது. புதைந்த காலை நிதானமாய் வெளியே

சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. விழுந்த வேகத்தில் வயிறு அடிபட வயிற்றுக்குள் இருந்த பிள்ளைக்கு வலிக்க அது கையைக் காலை அசைத்தது. அது அசைவைக் கொடுத்ததும் சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. வலியால் முனகினாள். இடுப்பைப்பிடித்துக்கொண்டு இம்சையால் அழுதாள். நிதானமாய் நிற்க முடியாமல் வரப்பு மேட்டில் அமர்ந்து கொண்டு துடித்தாள். உடலெங்கும் சேறாய் இருந்தாள்.

"ஆரது அங்க?"

இருட்டுக்குள் தூரத் திலிருந்து முரட்டுச் சத்தம் வேகமாய் வந்தது. அதைத் தொடர்ந்து துவக்குகள் உசாராகும் சத்தம்

இருட்டில் எழுந்தது. வீமன் குரைத்தது இருட்டைப்பார்த்து.

"வீமா சும்மா இரி"

நாயை அதட்டினாள்.

"அது நாங்க" "நாங்க எண்டால் ஆரு?"

"அரிசி குத்தி விக்கிற பொன்னிக் கெழவி"

"என்னயிறா இஞ்ச?"

"இஞ்ச ஒள்ளுப்பம் வாங்க கிளி"

கிழவி இருட்டைப் பார்த்து கெஞ்சினாள்.

நிமிடங்கள் சில இருட்டில் கரைந்தது. சரசரப்பு நெருக்கத்தில் கேட்டது. சரசரப்பு நெருங்க நெருங்க இருட்டில் இரண்டு உருவங்கள் மங்கலாய் தோன்றியது. சர்வ ஜாக்கிரதையாய் அடிமேல் அடியெடுத்து இரண்டு உருவங்களும் முன்னேறி வந்து கொண்டிருந்தன.

சரசுவதி இடுப்பைப் பிடித்துக்கொண்டு வலியால் முனகிக்கொண்டே இருந்தாள். வீமன் இருட்டை உற்று உற்றுப் பார்த்து. இரண்டு வேற்று உருவம் அதன் மோப்ப எல்லைக்குள் தென்பட உறுமியது. இரண்டு அடி முன்னால் வைத்தது. முன்னால் வைத்ததும்தான் பயங்கரம் உறைத்தது. நான்கு அடி பின்னால் ஓடி வாலை பின் காலிற்குள் சுருட்டிக் கொண்டு கிழவி யின் பின்னால் பதுங்கிக் கொண்டது. இருட்டுக்குள் வந்துகொண்டிருந்தவர்கள் இவர்களை நெருங்கினார்கள். கிழவி அவர்களின் முகத்தைக் கவனித்தாள். இனங் கண்டுகொள்ள முடியவில்லை. முகந்தெரியாத இருட்டு.

"என்ன செய்யிறேயல் இஞ்ச?"

இரண்டு பேரில் ஒல்லியாய் குட்டையாய் இருந்தவன் கேட்டான். தனது குரல் முரட்டுத்தனமாய் இருக்க வேண்டுமென்பதில் அவனுக்கு பிரியம்போலும். முரட்டுத்தனமாய் முயற்சி செய்து கதைத்தான். ஆனாலும் அவன் குரலில் கிச்சுத் தன்மைதான் தென்பட்டது. இன்னும் வாலிப வயதை எட்டாத விடலைக் காலம். அவனது வயதையும் தோற்றத்தையும் மறைப்பதற்கு இருட்டு பெரிதும் உதவியது.

"இந்தப் புள்ளயிர அவர பொடியனுகள் புடிச்சித்துவந்தித்தானுகளாம் மெனேய்" சரசுவதியை காட்டி அந்தப் பெடியன்களிடம் கிழவி சொன்னாள்.

"பொடியனுகள் எண்டால் ஆரு?" இரண்டு பேரில் உயரமாய் இருந்தவன் கேட்டான். உண்மையிலேயே அவன் குரல் படு பயங்கரமாய் இருந்தது. கிழவி பயந்தாள்.

"ஆரெண்டு தெரியாது. கண்ணாவுக் குள்ளதான் கூட்டித்து வந்தாங்க" சரசுவதி முனகி முனகி சொன்னாள்.

"அப்படி நாங்க இஞ்ச ஒருவரையும் கூட்டித்து வரல்ல"

பல்லைக் கடித்துக்கொண்டு கோபமாய் பதில் சொன்னான்.

"ஏன் மெனேய் கோவிக்கிறா? புள்ளத்தாச்சிக்காறி மெனேய் அந்தப் பொடியன உட்டுடுங்க கிளி." கிழவி கெஞ்சினாள்.

"என்னப்ப?" சின்னவன் கோபமாய் கிழவியை நெருங்கினான். "இவடத்த நிக்கவேணா. இந்தப் பொட்டையையும் கூட்டித்துப் போ பாப்பம்... இல்லாட்டி..." சொல்லிக்கொண்டே துவக்கின் பின் பக்கத்தை ஓங்கினான்.

"அடிக்கப் போறயா? அடி! எங்களுக் கொண்ணா. நாங்க போக மாட்டம். கொல்லுங்க... எங்க எல்லாரையும் கொல்லுங்க..." கிழவி தைரியமாய் சொன்னாள்.

வைராக்கியம் நெஞ்சில் ஏற வரப்புக் கட்டில் அமர்ந்துவிட்டாள். குழந்தை பீதி யுடன் கிழவியை இறுக்க கட்டிக்கொண்டு பலமாய் அழுதது.

"நாங்கல்லாம் உசிரோட இரிக்க தாலானே இப்படிப் பாதகம் செய்யிறயல். எல்லாரையும் கொம குடுத்துப்போட்டு நீங்க மட்டும் இந்த சவக்காலையில

வாழுங்க. கொல்லுங்க... கொல்லுடா...” மார்பில் அடித்து அடித்து சரசுவதி சத்தம் போட்டு அழுதாள்.

“பொட்ட கத்தாத...” சின்னவன் அதட்டினான்.

“நான் கத்துவன். கத்தினா சுடுவெயா? சுடு..”

“பொட்டை நரகல் கத்தாத உண்ட புருசனுக்கு வெளக்கம் நடக்கிது. வெளங்கிப் போட்டு இப்ப உடுவானுகள்” சரசுவதி அழுகையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டாள்.

“உண்ட புருசனில் எங்களுக்கு சந்தேகம். எங்களப் பத்தி அவன்தான் ‘ரிப்’ குடுக்கிறான்.”

“எண்ட கடவுளே...! என்ன பொய்யச் சொல்றா நீ”

“பொய்யா...? போய்யா....? அதுதான் வெளக்கம் நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து புதுசாய் இந்த ஏரியாவுக்கு பொறுப்பாளரு வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு காட்டிக்குடுக்கிறவனும் இரிக்க போடாது. மறுகா எங்களுக்குத்தான் கூடாத பேரு.” சின்னவன் அழுத்தமாய் சொன்னான்.

தூரத்தில் கொட்டடப்பாக்கன் குருவி ஒன்று விநோதமாய் சத்தம் எழுப்பியது. ரெண்டு பேரும் உசாரானார்கள். சின்னவனின் தோளைத் தட்டி “சிக்னல் குடு” என்றாள் மற்றவன்.

“கீக்... கீச்ச்.... கீச்ச்.... கீக்...” அசல் கொட்டடப்பாக்கன் குருவி போலவே சின்னவன் சத்தம் எழுப்பினான். சில வினாடி இடைவெளி விட்டு தூரத்தில் இருந்து அதேமாதிரிச் சத்தம் வந்தது.

கிழவியும் சரசுவதியும் விழி விரிய விரிய விநோதமாய் இவர்களைப் பார்த்தார்கள். நான்கைந்து உருவம் இருளிலிருந்து மெல்ல மெல்ல பிரிந்து முன்னேறி வந்துகொண்டிருந்தது. யாரோ வலியால் மெல்ல முனகும் ஓசை காற்றோடு சேராமல் தனியாகப் பிரிந்து வேறுபட்டு மெலிதாகக்கேட்டது. இருளிலும் உருவம் தெரியும் தூரம், நான்கைந்து பேர் ஆயுதங்களுடன் கூடவே கைத்தாங்கலாக இன்னொருவன். முகந்தெரியாத இருட்டுத் தான். இருந்தாலும் சரசுவதியால் இனங்காண முடிந்தது. கைத்தாங்கலாக அழைத்துவரப்படுவது தன் புருசன்தான் என. அருகில் வந்ததும் சத்தமிட்டு அழுதாள். கண்ணாக் காட்டுக்குள் சலசலப்புக் கேட்டது.

“ஆராக்கள் இவைய?” வந்தவர்களில் ஒருவன் இருவரையும் பார்த்து கடுமையாக, சற்று வேகமாகக் கேட்டான்.

“இவண்ட பொஞ்சாதியும் மாமியும்” உயரமானவன் சொன்னான்.

“ஆரிஞ்ச உங்கள வரச்சொன்ன?” சரசுவதியும் கிழவியும் அழமட்டும் செய்தார்கள்.

“இனி இந்த சேட்டை எல்லாம் வெக்காத... மறுகா தெரியும்தானே... தொம்பலுக்க தாட்டுப் போடுவன்.”

சரசுவதியின் புருசனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. தலை, நீரில்லாத முளைக்கீரை மாதிரி தொய்ந்து கிடந்தது. பிடித்திருக்கும் கையை விட்டால் அந்தக் கணமே தரையில் விழுந்துவிடும் நிலை. கொடூரமான செயல்களை சில நிமிடங்கள் மூளை கிரகிக்கும். அதன் பிறகு தற்காலிகமாய் மூளை தனது சில செயற்பாடுகளை நிறுத்திவிடும். முக்கியமாக உணர்தலை அது நிறுத்திவிடும். சரசுவதியின் புருசனால் இப்போது எதையுமே உணர முடியவில்லை.

“கூட்டிற்றுப் போங்க..” சரசுவதியின் புருசனைத் தள்ளிவிட்டார்கள். உணர்ச்சி இல்லாமல் குப்புற விழுந்தான். முனகலைத் தவிர அவனில் இருந்து எந்த

அசைவும் இல்லை. குப்புற விழுந்தவனை சரசுவதி ஓடிப்போய் நிறுத்தி தன் தோளில் அவன் சுமையை ஏலுமானவரை தாங்கி நடந்தாள். வயிற்றுவலி இப்போது இளகி இருப்பது போன்று இருந்தது. இளகிய வலி நிஜமா பிரமையா என்று இனம் கண்டுகொள்ள முடியாமல் மனது பூராக விதமான இம்மை வியாபித்திருந்தது.

கிழவி குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு முன்னே செல்ல வீமன் அவள் பின்னால் ஓடிற்று. சரசுவதி தட்டுத்தடுமாறி புருசனுடன் அணைத்தபடி நடந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் குழந்தையை இறக்கிவிட்டு கிழவி பாயை விரித்து அதன்மீது நைந்துபோன நைலோன் சீலை ஒன்றை விரிந்து. “இதுக்கு மேல படுக்கவை புள்ள” என்றாள் சரசுவதியிடம்.

சரசுவதி அவனை மல்லாக்க படுக்கவைத்தாள். முதுகு தரையில் அண்டமுடியாமல் முனகினான். சரசுவதி ஒருக்களித்து படுக்க வைக்க முயற்சி எடுத்தாள். எதிர்ப்பு இல்லாமல் உருண்டான். அவனது உடம்பில் இரத்தம் கண்டி நீல நிறக் கோடுகளாய் ஆங்காங்கு தெரிந்தது. மூக்கால் சுவாசிக்க முடியாமல் வாயால் சுவாசித்தான். வாய் அகலமாக விரிந்து கிடந்தது. அதிகமாய் மூச்சு வாங்கி வலியால் முனகினான்.

“பாதகனுகள்.. ஒண்டும் தெரியாத ஆளப் போட்டு இப்பிடி அடிச்சிரிக்கானு களே. இவனுகளெல்லாம் மனிசனுகளா? கண்ணழிஞ்சி போவானுகள்.” சரசுவதி கேவிக் கேவி அழுதாள். குழந்தை எதுவும் அறியாமல் சரசுவதியின் அருகில் அமர்ந்திருந்தாள்.

“மெல்ல கத புள்ள அவனுகள் வேலிக்கட்டைக்குள் நிப்பானுகள்.”

“நிக்கட்டுமே... கேட்டுத்து வந்து எல்லாரையும் கட்டுக் கொல்லட்டும் அரக்கனுகள்.”

“மெனேய்... மெனேய் சத்தமா கதைக்காத... அவனுகள்ற கொணம் தெரியும்தானே. அவருக்கு ஒடம்பு நோகும். கரியபவளத்தை அரச்சி சாராயத்தோட முட்டையையும் அடிச்சி குடுத்தா வருத் தத்த எடுக்கும். நான் போய் கிட்டுணன் பரியாரியாரிட ஊட்ட போய் வாங்கித்து வாறன். நீ மஞ்சளையும் உப்பையும் அரச்சி வை. நல்லெண்ணையையும் சூடாக்கிவை. ஒத்தணம் குடுப்பம்.” சொல்லி விட்டு கிழவி அரிகேன் லாந்தருடன் வெளியேறினாள்.

அம்மாக்காறி சொன்னதையெல்லாம் சரசுவதி செய்தாள். அரைமணி நேரம் கடந்து கிழவி வந்தாள். வந்த உடன் கரியபவளத்தை அம்மியில் வைத்து அரைத்து நன்கு மாவாகியதும் அதை ஒரு சிறிய பாத்திரத்தில் போட்டு சாராயத்தை ஊற்றி நன்கு கலக்கினாள். பின் முட்டையை உடைத்து வெள்ளைக் கருவை மாத்திரம் எடுத்து சாராயம் கரியபவளம் கலந்த கலவையுடன் வெள்ளைக்கருவையும் நன்கு கலக்கிய பிறகு சரசுவதியிடம் கொடுத்தாள். வாங்கிய சரசுவதி தனது புருஷனிடம் பருக கொடுத்தாள். வாங்க முடியாமல் முடங்கினான். தலையை தன் கையால் தூக்கி மடி மீது வைத்து அவனுக்கு குடிக்க கொடுத்தாள். குடித்தான்! தூரத்தில் இரையல் ஏதோ கேட்டது. சரசுவதியும் கிழவியும் செவியை கூர்மையாக்கினார்கள். உடனடியாக இனம் காண முடியவில்லை. சூடடிக்கப் போன போடியாரின் உழவு இயந்திரமாக? மனது முடிவு கொண்டது. விநாடிகள் கடந்து போக மனது மறுத்தது. சத்தம் நெருங்கி கேட்டது. ஏழெட்டு வாகனங்களின் தொடர்ச்சியான இரையல்..

மிகமிக நெருக்கமாக வாகனங்களின் சத்தம்.. அதைத் தொடர்ந்து யாரோ வீட்டைச் சுற்றி ஓடும் சத்தம். அந்நிய மொழியில் கட்டளையிடும் குரல். கூடவே சொந்த மொழிச் சத்தங்களும். கிழவி

யும் சரசுவதியும் ஆளாளுக்கு விபரீதம் புரியாமல் ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டார்கள்.

வீட்டு வாசலிலும் நடமாட்டம். திறந்த கதவு வழியாய் உருவங்களும் தெரிந்தது. சரசுவதி எட்டிப் பார்த்தாள்.

தலை வளர்த்து, கறுப்பு நிற களிசானும் அதே நிற தொள தொளப்பான சேர்ட்டும் கொண்ட ஒருவன் துவக்குடன் கால்களை அகட்டி அசட்டையாய் நின்றான்.

சரசுவதியின் மனதுக்குள் ஏதோ பகீரென பற்றிக் கொண்டது.

"எங்கடி உண்ட புரிசன்?" சரசுவதியை பார்த்து வெறியாய் கத்தினான்...

"என்னத்துக்கு கேக்கி..." மிகுதி வரவில்லை. சரசுவதி அழுதாள்... "எங்களுக்கு அவன் வேணும். அவன நாங்க வௌங்க வேணும்.."

"அவரு இஞ்ச இல்ல மய்யோரிச் சேனைக்கு காவலுக்கு பெயிருந்தாரு."

"காவலுக்கு பெயித்தானா? ஆருக்கு விசுக்கோத்துக்கால உடுறா? அன்னா படுக்கிறது ஆரு?"

"அது அப்பரு!"

"கொப்பரா? வாடா வேட்டைக்கு!" அவன் அழைத்தது சரசுவதியின் புரிசனுக்கு கேட்டது. முயற்சி செய்தான். அவனால் அசையக்கூட முடியவில்லை.

"அவர இப்பதான் பொடியனுகள் அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள்."

"பறவள்ளா... வாடா வேட்டைக்கு."

"அவரு எழும்ப மாட்டாரு.. எழும்ப அவரால ஏலா?" சரசுவதி ஓடிப்போய் புருஷன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

பச்சைநிற உடுப்புப் போட்ட அரசபடை அதிகாரி ஒருவன் வாசலில் நிற்பவன் பக்கம் நெருங்கினான். "றஷ்த்தவாதி இன்ன வத..?" மெதுவாய் கேட்டான்.

"ஓவ் மாத்தையா.. அத்துள புதிய கறனுவா." திக்கி திக்கி சொன்னான்.

மிக குறுகிய காலத்தில் கற்றுக் கொண்ட சிங்களம் போலும் உச்சரிப்பில் பிழை விட்டான்.

"புதி.. றஷ்த்தவாதி புதியகறுனுவா.. ஹா.. ஹா..." கேட்டு விட்டு சிங்கள அதிகாரி சிரித்தான். சிரித்து விட்டு, கடுமையான குரலில் "எலியட்ட அறங்கெனவா" என்றான்.

வாசலில் நின்றவன் வீட்டின் உள்ளே போய் படுத்திருந்தவனை பிடித்து வெளியே கொண்டு வந்தான்...

கிழவி ஓடி வந்தாள். "மெனேய்.. மெனேய்... இப்பத்தான் அவனுகள் உங்களுக்கு சப்போட்டாம் எண்டு அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள். நீங்களும் இப்படி இந்த ஐயாமாரோட வந்து அநியாயம் செஞ்சா எப்படி மெனேய்?" கிழவி கேட்டாள்.

சரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு கறுப்பு சேர்ட் போட்ட இன்னொருவன் கிழவியை நெருங்கினான்.

"இவனில எங்களுக்கு சந்தேகம். இவன நாங்க வௌங்க வேணும். அவனுகளோட இவனுக்கு பழக்கம் இரிக்கி. கொழும்புல இருந்து இந்த ஏரியாவுக்கு புதிசா ஒரு கொமாண்டர் வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு பயங்கரவாதியும் இரிக்கப் போடாது. மறுகா எங்களுக்குத்தான் கெட்ட பேரு. நாங்க இவன வௌங்க வேணும்." நெருங்கினவன் கிழவியிடம் சொன்னான்.

சொல்லிய மறுகணமே வாசலில் கிடந்த சரசுவதியின் புருஷனின் காலை அவன் பிடிக்க உள்ளேயிருந்து வந்தவன் கைகளை பிடிக்க இருவருமாக அவனை தூக்கிக் கொண்டு போய் ராணுவ வண்டிக்குள் எறிந்தார்கள்.

கிழவி பேச முடியாமல் திகைத்து நின்றாள்... சரசுவதிக்கு இடுப்பு வலி எடுத்தது. வயற்றைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் சரிந்தாள்.

வாகனங்கள் வேகமாய்ப் புறப்பட்டு போயின... இருள்தான் ஆனாலும் புளுதி பரவுதை உணர முடிந்தது.

# உயிரின் வாசம்

# "பெயரிடாத நட்சத்திரங்கள்"

## சு. குணேஸ்வரன்



போர்ப் பகைப்புலத்தில் இருந்த பெண்கவிஞைகளின் வரிகளாக உயிரின் வாசத்தோடும்,- உணர்வு கொப்பளிக்கும் வார்த்தைகளோடும் வந்திருக்கிறது "பெயரிடாத நட்சத்திரங்கள்" கவிதைகள். பெண் படைப்புக்களுக்கு இருக்கக்கூடிய தனித்துவத்தோடு எளிய மாந்தர்களும் புரிந்துகொள்ளக்கூடிய எளிமையான வார்த்தைகளோடு தாய்மையுணர்வு முதல் தாயக நேசிப்பு வரையான கவிதைகளைக் கொண்டிருக்கிறது பெயரிடாத நட்சத்திரங்கள்.

ஊடறுவும் விடியல் பதிப்பகமும் இணைந்து வெளியிட்டுள்ள இத்தொகுப்பில் 26 கவிஞைகளின் 70 கவிதைகள் உள்ளன. அதிகமும் அறியப்பட்ட கவிஞைகளான அம்புலி, ஆதிலட்சுமி, கஸ்தூரி, வானதி, பாரதி ஆகியோருடன் அலையிசை, மலைமகள், தூயவள், நாமகள், சூரியநிலா, சுதாமதி, தமிழவள் ஆகிய ஒவ்வொருவரினதும் மூன்றுக்கு மேற்பட்ட கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

மேலும் காந்தா, ஜெயா, கலைமகள், கனிமொழி, ஞானமதி, புரட்சிகா, கிருபா, நகுலா, நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி மார்க்கட், சிரஞ்சீவி, தயாமதி ஆகியோரின் ஒவ்வொரு கவிதைகளைக் கொண்டதாகவும் தொகுப்பு உள்ளது.

ஒரு போராட்ட அமைப்பு என்ற சார்புநிலைக்கு அப்பாலிருந்து தொகுக்கப்பட்ட தொகுதியாக இது இருப்பதை முதலில் குறிப்பிடவேண்டும். அமைப்பு, அதன் கொள்கை, அதன் பிரசாரத்தேவை என்ற முன்னுதாரணங்களை விலக்கிவிட்டுப் பார்ப்போமானால் பெண் படைப்புக்களின் வரிசையிலே போர்க்காலப் படைப்புக்களுக்கு வலிமை சேர்க்கக்கூடிய தொகுப்பாக அமைகிறது.

போர்க்கால இலக்கியப் போக்கினை மதிப்பிடுகின்றபோது அவற்றை பொதுவாக மூன்று வகையாக நோக்கலாம். ஒன்று சார்புநிலையாக வெளிப்படும் படைப்புக்கள். மற்றையது எதிர்நிலையில் இருந்து வெளிப்படும் படைப்புக்கள் இவற்றை அரசியல் விமர்சனம் சார்ந்த படைப்புக்கள் என்றும் கூறலாம். மூன்றாவது சார்பும் எதிருமின்றி நியாயத்தைப் பேசும் படைப்புக்கள். இவற்றை காலம் கடந்தும் வாழக்கூடிய படைப்புக்கள் என்றும் சொல்லலாம்.

சார்புநிலையைப் பேசும் படைப்புக்கள், குறித்த அமைப்பின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதாகவோ அல்லது அதன் கொள்கை பரப்பலாகவோ இருப்பதற்கு வாய்ப்பு அதிகம். அது மறுபுறத்தில் அபத்தமாகப் படலாம்.

ஆனால் இத்தொகுப்பில் வந்துள்ள கவிதைகள் போர்க்காலத்தில் மக்கள் எதிர்கொள்ளக்கூடிய அவலங்களையும் அந்த அவலங்களைத் தீர்ப்பதற்கு புறப்பட்டவர்களின் உணர்வுகளையும் பேசுவன

வாக உள்ளன. போராடுபவர்களின் பக்கம் நின்றுகொண்டு அதற்கான நியாயப் பாடுகளைப் பேசுகின்றன.

ஒட்டுமொத்தமாக தொகுப்பில் உள்ள டங்கியுள்ள கவிதைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **போரினால் மக்கள் படும் அவலங்களைப் பேசுதல்**
2. **பெண் அடக்குமுறை, சமூகத்தின் போலியை எதிர்த்தல்**
3. **விடுதலை வேட்கையைப் பாடுதல்**
4. **வீடு, உறவு, இளமைக்காலம் ஆகியவற்றை மீட்டுப் பார்த்தல்**
5. **உலகு பற்றிய பார்வை**

இந்தப்போர் மக்களை எவ்வாறெல் லாம் அலைக்கழிக்கிறது என்பதனை பல பெண்கவிஞைகள் பாடியுள்ளனர். காலங் காலமாக வாழ்ந்த பூர்வீகத் தேசத்தைவிட்டு ஏதிலிகளாக அலைந்துலைந்து வாழ வேண்டிய நிலையினையும், போரால் இழந்துவிட்ட உயிர்கள் பற்றியும் பல விதத்திலும் போரின் கரங்கள் மக்களின் மீது தொடர்ந்துகொண்டிருக்கும் அவலநிலை யினையும் பாடுகின்றனர்.

**"பாலியல் வன்முறைக்கு**
**இரையான**
**பள்ளிக்கூட மாணவி நீ**
**உன்னைச் சூழ்ந்து நின்று**
**மிருகங்கள் சுவை பார்த்து**
**சிரித்த பொழுது நீ**
**சத்தமிட முடியாமல்**
**சாவோடு போராடினாய் – உன்**
**விழிகளிரண்டும்**
**வான்நோக்கி நிலைத்தபோது**
**என்னம்மா நினைத்திருப்பாய்?"** (ஆதிலட்சுமி)

என்ற வரிகள் கிருஷாந்தி வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தை நினைவூட்டுகின்றது. மக்களை ஒடுக்குவதற்கு பாலியல் ரீதியான அடக்குமுறை ஒரு ஆயு-தமாக அடக்கப்படுபவர்களால் மேற் கொள்ளப்படுகிறது. இது மக்களுக்கு மிகுந்த அச்சத்தையும் இயலாத்தனத்தையும் ஏற்படுத்துகிறது.

ஒரு சாதாரண குடிமகன் என்ன நினைத்திருப்பான். தானும் தன் வீடும் தன் பிள்ளையும் தோட்டமும் என்று ஒரு குடிலில் வாழ்ந்த மனிதர்கள் சாவின் எல்லைவரை விரட்டப்படுகிறார்கள் இது இன்னொரு கவிஞையிடம்

**"உயிர் வாழ்வதன்றி வேறொன்றறியா**
**எம் உறவுகள்**
**மண்ணோடு போக**
**உளம் புண்ணாகி உடல் சோர்ந்து**
**வீதியிறங்கி**
**வியர்வைத் துவாரங்களால் இரத்தம் கசிய**
**கதறியழுது அலையும் வாழ்வு**
**ஏன் எனக்கு வந்தது?"** (மலைமகள்)

இவ்வாறான துன்பங்கள் தொடர் வதற்குத்தான் காரணங்கள் என்ன? அந்தத் துன்பத்தை வலிமை பெற்றவர்கள் கூட் டாக எளியவர்கள் மீது திணிக்கிறார்கள் என்பதனையும் இந்தக் கவிஞைகள் பாடு கின்றனர். மக்களின் துன்பம் தொடர்வதற்கு படிப்படியாக மாறிக்கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகள்தான் காரணம் என்கிறார்கள். ஆட்சியாளர்களுடன் கைகுலுக்கிக் கொண்டு வந்த வல்லரசுகள் மக்களைக் கொன்று குவிக்க உதவியமையை கவிதையொன்று சுட்டிக்காட்டுகிறது.

**"அனைத்து நாடுகளும்**
**அண்ணாந்து பார்த்து நிற்க**
**உயரத்தில் விழுந்தன**
**உணவுப் பொட்டலங்கள்.**
**ஒருதலைப்பட்சமாய் உள்ளே வந்த வல்லரசால்**
**அரிசிப் பொதிகள் விழுந்த**
**அதே குச்சொழுங்கைகளில்**
**குப்பெனப் பீறிட்டது குருதியாறு"** (கஸ்தூரி)

என்று வரலாற்றில் நடந்த ஓர் அவலத்தை மிகத் தத்ரூபமாக கண்முன் நிறுத்துகிறார் கவிஞர்.

**"தேநீர்க் கடையின் பாட்டுக்கூட**
**நின்றுபோயிருந்தது.**
**வெறிச்சோடிய வீதியில்**
**அவன் மட்டும்**

**தனியாகக் கிடந்தான்**
**கையொன்று வீதியின் மறுகரையில்**
**விரல்களை நீட்டியபடி**
**யாரையோ குற்றம் சாட்டுவதாய்.**

**சில நிமிடங்கள் தான்**
**அம்புலன்ஸ் எல்லாவற்றையும்**
**அள்ளிக் கொண்டுபோனது**
**எஞ்சியதாய்**
**அவனது இரத்தம் கொஞ்சம்**
**ஒன்றிரண்டு சைக்கிள் கம்பிகள்**
**செல் துண்டுகள் அவ்வளவுதான்."** (நாமகள்)

என்ற கவிதை எமது மக்கள் ஊமை யாய் உக்கிப்போய் செத்துப்போன நிலைகளை எடுத்துக்காட்டுகிறது. சேரன் 80 களின் தொடக்கத்தில் எழுதிய 'எல்லாவற்றையும் மறந்துவிடலாம்' என்ற கவிதையினையும் இவ்வரிகள் ஞாபகப்படுத்துகின்றன.




இவை தவிர மலையக மக்களின் பிரச்சினைகளுடன் அவர்களின் உழைப்பு சுரண்டப்படுதல் பற்றிய கவிதையும் இத் தொகுப்பில் உள்ளமை கவனிக்கத்தக்கது. எங்கள் சொந்தச் சகோதரர்கள் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர்.

**"சுரண்டல் தராசுகளில்**
**கொழுந்துக் கூடைகளை**
**கொழுவிவிட்டு**
**தேநீருக்காக ஏங்கும் இத்**
**தேயிலைச் செடிகள்**
**அக்கினியாய் அணிவகுத்து**
**அவலங்களை எரிப்பதெந்நாள்?"** (கஸ்தூரி)

என்று 'கொழுந்துக் கூடைகள்' என்ற கவிதையில் எழுதுகிறார்.

இன்னொரு கவிதை புலம்பெயர்ந்து சென்ற ஈழமகன் ஒருவனைப் பற்றிய சித்திரத்தை அழகாகத் தருகிறது. புலம்பெயர்ந்து செல்லமுன் ஒரு ஆண் மகன் வீட்டில் இருந்த நிலை, புலம் பெயர்ந்தவர்கள் அங்கு எதிர்கொள்கின்ற வாழ்க்கை முரண்கள், அவர்களின் தாயக உறவு பற்றிய அந்தரநிலை என்று பல விடயங்களை பாடுகிறார்.

வீட்டில் சாப்பிட்ட கோப்பையே கழுவாதவன் ஹோட்டலில் தட்டுக் கழுவிச் சம்பாதித்து தன் உறவுகளுக்கும் தாயகத்திற்கும் உதவுவதையும் சுட்டிக்காட்டுகிறார். போர் மனிதர்களை எவ்வாறெல்லாம் மாற்றி விடுகிறது என்பதற்கு நல்ல உதாரணம் இக்கவிதை.

**"கழிப்பறைக்கு நீர் சுமக்கவும் மறுத்த**
**தம்பியின் வாழ்வு**
**குளிர் பனிக்குள்**
**கழிப்பறைத் தூய்மையிலே கரைந்தது.**
**திண்ட கோப்பைகூடக்**
**கழுவத் தெரியாத பிள்ளை**
**ரெஸ்ரோரண்டில்**
**அதைக் கழுவிப் பிழைத்தே**
**காசு அனுப்பியது"** (அம்புலி)

என்று இன்னும் பல சம்பவங்களையும் குறிப்பிடுகிறார். உறவைப் பிரிந்துபோன ஏக்கம், தனிமைவாழ்வு, மொழிக்கலப்பு ஆகியனவும்பேசப்படுகின்றன. 'தூரவிருந்து

குரலை உயர்த்தி கரத்தையிணைத்து துணையிருக்கும் உறவுகள்' எனவும் புலம்பெயர்ந்துபோன ஈழத்தமிழ் மக்களை நன்றியுடன் நினைக்கின்ற கவிதையாகவும் இது அமைந்திருக்கின்றது.

சமூகக் கொடுமைகள் பற்றிச் சுட்டும்போது சீதனம் பெறுதல் மற்றும் பெண் அடிமைத்தனம் பற்றிப் பாடுகின்றனர். பெண்ணைப் பார்த்துக் குட்டக் குட்டக் குனிந்து கொண்டு (வானதி) குசினிக்குள்ளே முடங்கிப் போகாமல் சமூகத் தளைகளை உடைக்க வெளியே வா என சமூகத் தின் பிற்போக்குத்தனத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிராக எழுமாறு அறைக்கூவும் கவிதைகளும் உள்ளன.

மகாகவி பாரதியை முன்னிறுத்திப் பாடுவதுபோல் அமைந்த கவிதையில் இன்று சீதனம் வாங்கும் ஆண்களின் நிலையை பின்வரும் கவிதை சுட்டிக்காட்டுகிறது.

**"காசு பெரிதில்லை**
**நெஞ்சிலுள்ள காதல் பெரிதென்றாய்**
**இங்கோ கண்ணன்கள்**
**காசு பெரிதென்று**
**காதலை முறிக்கிறார்கள்"** (ஆதிலட்சுமி)

விடுதலை வேட்கையை வெளிப்படுத்தும் கவிதைகள் என்ற வகையில் பார்ப்போமானால் போராளிகளின் விடுதலையுணர்வு, அவர்களின் தியாகம், அவர்களிடம் இருக்கக்கூடிய நம்பிக்கை, எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தற்துணிவு என்பன இக்கவிதைகளில் பேசப்படுகின்றன.

ஓராயிரம் விழிகளின் உறக்கத்திற்காக தங்கள் காவல் முக்கியம் என்று அம்புலி எழுதுவார். இரவு பகல் வெய்யில் மழை என்றும் பாராமல் அவர்களின் காத்திருப்பும் காவலிருப்பும் குறிப்பிடப்படுகிறது. கொள்ளி வைக்க இருந்த பிள்ளையும் போய்விட்டதே என்று கலங்கும் தந்தைக்கு தாயினூடாகப் பதிலுரைக்கும்போது இறந்த பின்னர் அடக்கம் செய்யும் மயானத்திற்காகவும் தான் நான் காவலிருக்கிறேன் ('அப்புறமாய் வருகிறேன்' - ரூபி மார்க்கிரட்) என்று பாடுகிறார்.

**"ஓர் அழகிய காலையை**
**உனக்கு**
**காட்டமுடியாத வசந்த காலத்தில்**
**விளையாட முடியாத**
**பாலைவன நாட்களையே**
**உனக்குப் பரிசளிக்கிறேன்"** (அம்புலி)

என்று ஒரு தாயின் உணர்வுநிலையில் இருந்து கொண்டு குழந்தைக்குச் சொல்லும் வரிகளாக அவை அமைந்துவிடுகின்றன.

இதேபோன்று வானதியின் 'எழுதாத கவிதை' விடுதலை உணர்வையும் அதனை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பினையும் ஊட்டுகின்ற கவிதையாக அது அமைந்திருக்கிறது.

**"சீறும் துப்பாக்கியின் பின்னால்**
**என் உடல்**
**சின்னாபின்னப்பட்டுப் போகலாம்**
**ஆனால் என்**
**உணர்வுகள் சிதையாது**
**உங்களைச் சிந்திக்க வைக்கும் அது.**
**அப்போது**
**எழுதாத என் கவிதையை**
**எழுதுங்களேன்."** (வானதி)

என்று எழுதுகிறார். இதனை நாதினி என்ற இன்னொரு கவிஞை எழுதாதுபோன உன் கவிதையை எழுதுவதற்காக உயிரைக் கோலாக்கி உதிரத்தை மையாக்கி அணிவகுத்து நிற்பவர்களைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இவர்களிடம் உலகு பற்றிய பார்வையும் உள்ளமை மற்றொரு சிறப்பம்சமாகும். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான ருவாண்டாவில் நடந்த இனவழிப்பை இலங்கையில் நடந்த இனவழிப்புடன் ஒப்பிட்டுப் பாடுகின்றனர்.

**"மொழிவேறு என்றாலும்**
**எங்களுக்கும் உங்களுக்கும்**
**மூச்சு ஒன்றுதானே.**
**அகதிமுகாம் வாசலிலே**
**அம்மாவைத் தேடு என்று**
**ஐ.நா கூறியதாமே**
**யாரைப் பார்த்தாலும்**

**அம்மாவாய்த் தெரிகிறதா?**
**சின்ன வயதில் உங்கள் தோள்களிலே**
**சிலுவையை ஏற்றி வைத்தது யார்?"**
(ஆதிலட்சுமி)

*சர்வதேசம் பற்றிக் கூறும்போது அது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பெரிதாக்கி விடுகின்றன. இதனை 'வல்லரசுகள்' என்ற கவிதையிலே பாடும்போது*

**"சமாதான நாடுகளில்**
**சாமர்த்தியமாய் நுழைந்து**
**ஆணிவேரை அறுத்துவிட்டு**
**வாடாது நிற்க**
**நீர் ஊற்றுபவர்கள் நீங்கள்.**
**உங்கள் தலையீடுகளால்**
**தரைமட்டமாகிப் போன தேசங்களே அதிகம்."**
(கஸ்தூரி)

*தாயகம், வீடு, உறவு பற்றிய உணர்வு நிலைகள் மிக அழகாக வந்துள்ளன. 'அன்பான அம்மா' என்ற பாரதியின் கவிதையில் சிறுவயது நினைவுகள், வீடு மற்றும் கிராமத்து நினைவுகள் வருவதனைக் காணலாம்.*

*இளமை நினைவுகள், பள்ளிக்கூட வாழ்க்கை, அதன்பின்னர் பல நண்பர்களை தாம் இழந்துவிட்டமை, கால் இழந்துவிட்ட நிலையிலே அசையமுடியாது மரத்துப்போனதுபோல் இருக்கின்ற நிலை- என கவிதையின் போக்குப்பற்றி மேலும் குறிப்பிடலாம். அம்மா பற்றிய கவிதைகளும் அம்மா பற்றிய படிமமும் பல கவிஞைகளின் கவிதைகளில் அற்புதமாக வந்துள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கவை. தாயின் அன்பும் அவளின் அரவணைப்பும் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு அவள் தங்களை வளர்த்து ஆளாக்கியமையும் இக்கவிதைகளில் பாடப்படுகின்றன. மேலும் தமது உணர்வுகளைத் தாயை முன்னிறுத்திப் பாடும் கவிதைகள் அதிகமாக உள்ளமையும் கவனிக்கத்தக்கது. தந்தையிடம் கூறவேண்டியதை தாயிடம் கூறுதல், அவளை விட்டுப் பிரிந்து வந்த சோகத்தைக் கூறுதல் என்பன இங்கு முக்கியமானவை.*

**"அன்பான அம்மாவே**
**நான் உன்னை**
**அளவு கடந்து நேசிக்கிறேன்**
**அதனிலும் பார்க்க**
**நான் ஓடி விளையாடிய**
**என் வீட்டு முற்றத்தை**
**நான் கால் பதித்த**
**ஒற்றையடிப் பாதைகளை**
**செம்பாட்டு மண்படிந்த என்**
**தெருக்களை**
**சணல் பூத்துக் குலுங்கும் என் தேசத்தை**
**தோட்ட வெளிகளை**
**இப்படி இப்படியாய்**
**எத்தனையோ."** (பாரதி)

**"ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பில்**
**எனை மறக்கவும்**
**ஒரு குழந்தையை மென்மையாக தாலாட்டவும்**
**என்னால் முடியும்.**
**குளத்தடி மரநிழலில்**
**எனது புல்லாங்குழலைத் தழுவும்**
**காற்றோடு கதைபேச நான் தயார்.**
**நிம்மதியான பூமியிலே நித்திரைகொள்ள**
**எனக்கும் விருப்புண்டு"** (அம்புலி)

*என்று தாய் பற்றிய உணர்வையும் அவளின் அன்பையும் தவிர்க்கமுடியாமல் தாங்கள் புறப்பட்ட நிலையையும் எடுத்துக் காட்டுகின்றனர்.*

*நூலின் முன்னுரையில்*

*"பெண்களுக்காக வரையறுக்கப்பட்ட பல கலாசாரத் தடைகளை மீறி போர்க்களம் காணல், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல், உளவு பார்த்தல், பல்வேறுபட்ட நவீன இயந்திரங்களை இயக்குதல், அவற்றைப் பழுது பார்த்தல், சிக்கலான விடயங்களைத் தீர ஆராய்தல், முடிவுகளை எடுத்தல், இரவுக் காவல்களிலும் பணிகளிலும் ஈடுபடுதல், எல்லைக்காவல், தீவிர உடற்பயிற்சி, இரகசியங்களைப் பேணுதல், வரைபட வாசிப்பில் தேர்ச்சி என பல புதிய பரிமாணங்களை எட்டியிருக்கிறார்கள்."*

*என்று இக்காலத்தில் இருந்த பெண்களின் புதிய எழுச்சியை போர்க்காலத்தின்*

பதிவாகக் குறிப்பிடுகின்றனர் தொகுப்பாளர்கள்.

இயல்புநிலை அழிக்கப்பட்ட சூழலிலிருந்து பாடப்பட்ட கவிதைகள் இவையென்பது முக்கியமாக கவனத்தில் எடுக்கவேண்டியதாகும். கவிதைகள் எளிமையாக இருக்கின்ற அதேவேளை அவற்றின் புனைதிறன் உத்தியிலும் ஓரளவு சாத்தியத்தை எட்டியிருக்கின்றன. தங்கள் பிரச்சினைகளை, தாங்கள் எதிர்கொண்ட இன்னல்களை, காலத்தின் தேவையை பாடியிருக்கிறார்கள்.

உணர்வும் உயிரும் அற்ற வெற்றுவார்த்தைகளை மாபெரும் படைப்பெனக் கூறிக்கொண்டு நாங்களும் காலத்தின் வரலாற்று நாயகர்கள்தான் என எழுதிக்கொண்டிருப்பவர்களின் மத்தியில் இவை உண்மையான எழுத்துக்கள்தான் என்பதை இந்தக் கவிதைகள் உணர்த்திக் கொண்டேயிருக்கும்.

'மறையாத மறுபாதி', 'சொல்லாத சேதி' போன்ற பெண் படைப்பாளிகளின் தொகுப்புக்களின் வரிசையில் போர்க்காலப் படைப்புக்களில் பெண்களின் குரல்களாக வந்திருக்கும் 'பெயரிடாத நட்சத்திரங்கள்' ஈழத்து இலக்கியப் போக்கில் கவனத்திற் கொள்ளவேண்டிய தொகுப்பாக அமைந்திருக்கிறது.

○ ○ ○

# மீன் கொட்டிக்கிடக்கிறது

மீன் பாடும் தேனாட்டில்
வான் எழுந்து வருமுன்னே
மீன் கொட்டிக் கிடக்கிறது
ஏன் என்று தெரியவில்லை
இதை விளக்க யாருமில்லை
மீன் தின்று ஊன் பெருக்க
ஊரவர்கள் தயங்குகின்றார்
பிராணவாயு சுவாசிக்க
மீன் கரைக்கு வருமென்றார்
பிராணவாயு தேடி
கரைக்கு வந்த மீன் கூட்டம்
பிராணனை விடுவதற்கா
தன் தலையில் மண்போடும்?
காலநிலை மாற்றத்தால்
கரைக்கு வரும் மீனென்று
நாசா நிலையத்தார்
நல்ல செய்தி சொல்லிடவே
பேசாமல் ருசித்திட்டார்
பெரு வயிறு படைத்திட்டோர்
துடித்துத் துடித்து
துள்ளி வந்த மீன் கூட்டம்
பிடித்து உயிர் பறித்தார்
படித்தென்ன பாடம்?

வானிருண்டு மழைபெய்யும்
வானியலார் சொல்லிடுவார்
ஏனென்று கேட்காது
மேகமது விலகிவிடும்
காலத்தைக் கணித்திடும்
காலனா இவர்களெள்லாம்?
அன்றொரு நாள்
மக்கள் கூட்டம்
ஆவிதனைக் கைப்பிடித்து
சென்றிட்டார் உயிர்வாழ
சேருமிடம் தெரியாமல்
கொன்று குவித்து
மண்ணுக்கு உரஞ்சேர்த்தார்.
எட்டாண்டு முன்பாக
கடல்மாதா செய்த குற்றம்
கடுங்குற்றம் என்பதால்
நல்லிணக்கம் செய்து வைக்க
மீன் கூட்டம் வந்தனவோ?
இல்லை இல்லை
மண்ணில் நடந்தவெல்லாம்
மக்கள் மீட்புப் போரென்றால்
இன்னுமொரு சந்தர்ப்பம்
எமக்கு தாருமென்று
மின்னாமல் முழங்காமல்
மேலைக் கடல் சொன்னதுவோ?

– ப.ம.மகாதேவா

சிறுகதை

# பதுங்கு குழி

## நந்தி



ஹெலியின் யந்திர உறுமல் கேட்டது. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவாறு வரதன் கூக்குரலிட்டான்.

'ஓடி வாருங்கோ, தூரத்திலே இரண்டு பொம்மர்களும் தெரியுது'

சில விநாடிகளில், மேலே மூன்று விமானங்கள் - உயரத்திலே பருந்துகள் போல் இரு பொம்மர்களும், தாழ ஒரு ஹெலிகொப்படரும் வட்டமிட்டன. இதற் கிடையில் அந்த வட்டாரத்தில் வாழும் குடும்பங்கள் தமது பதுங்கு குழிகளில் ஒதுங்கிக் கொண்டனர். காலை 4.45 பால சூரியன் பௌர்ணமி ஒளியில் பொம்மர்கள் குறி பார்த்துக் குண்டு வீசுவதற்குத் தகுந்த நேரம் என்ற பீதி எல்லோருடைய நெஞ்சையும் நெருக்கியது. இதற்கு முன் குண்டு வீச்சு இரு தடவையும் இதே நேரத்தில்தான் நல்லூரில் நடந்தது.

வரதனின் வளவில் வேலி ஓரமாக வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழியில் அவன், அவனின் தாய் செல்லமணி, தங்கை வரதா, அவர்கள் வீட்டில் தங்கியிருக்கும் ரோசராணி யும் மரியம்பீபியும், அவர்கள் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட மாணவிகள்.

'பாட்டா, எங்களுக்கும் ஒரு பதுங்கு குழி வெட்ட வேண்டும்', 'எங்கள் வகுப்பிலே எல்லாப் பையன்கள் வீட்டி லும் வெட்டியாச்சு', 'பதுங்குகுழி உயி ருக்குப்பாதுகாப்பாம்' - இவ்வாறு ஐந்தாம் வகுப்பில் படிக்கும் வரதன் தன் தாயின் தகப்பனுக்கு, பாடசாலையில் இருந்து வரும்போது சில நாட்களாகக் கூறி வந்தான். செல்லத்துரைக் கிழவன் நேற்று முன் வரை இதை எல்லாம் கேட்டுச் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தார். அந்த வட்டாரத்தில் இரு நாட்கள் குண்டுகள் மாடிவீடுகளில் விழுந்தது உண்மைதான். மாடி வீடுகள் போராளிகளின் காம்ப் என்ற எண்ணம் இராணுவத்திற்கு உண்டு. மாடி வீட்டு மச்சில் இருந்து 50 கலிபர் துவக்குப் பூட்டி ஹெலியை சுட்டு விழுத்த முடியுமாம். ஆனால் செல்லத்துரையின் வீடு மாடி அல்ல, அது பழைய நாற்சார் வீடுதான். அத்துடன் பதுங்குகுழி வெட்டுவதற்குக் குறைந்தது 500 ரூபா வேண்டுமே! 'மூன்று பொம்மர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டின் மேலும் அவர்களால் குண்டுகள் போட முடியாது. யாழ்ப்பாணக் கோட் டையிலிருந்து 'ஷெல்' அடிக்கிறார்கள். அதற்குப் பதுங்கு குழிகளால் பிரயோசனம் இல்லை.' இப்படியாக, இலங்கை இராணுவத்தின் பரிமாணத்தை அறிந்த ஒருவர்போல் கிழவன் கூறி வந்தார்.

நேற்று முன்தினம், அதிகாலை 3.30, நல்லூரின் மேலே வானம் நொருங்கி ஒவ்வொரு வீட்டின் கூரைகளிலே இடித் துகள்களாகச் சொரிந்தது போன்ற ஓசை எல்லோரையும் அடித்து எழுப்பியது.

காங்கேசன்துறையிலிருந்து போராளிகளின் மோட்டார் வான் ஒன்றைத் துரத்தி வந்த ஒரு ஹெலி, அதைக் கோட்டை விடவே, ஏமாற்றத்தில் வெறிபிடித்து துயிலிலிருந்த பூமிமேல் சரமாரியாகச் சுட்டுத்தள்ளியது அயலிலே ஒரு வீட்டில் தூக்கத்திலிருந்த ஒரு வயோதிபரைத் துப்பாக்கிக் குண்டு துளைத்தது. மற்றவர்கள் வீடுகளிலே எங்கும் துவாரங்கள். அவர்கள் வளவுகளிலே, வாழைகளிலே, பனை-களிலே, தென்னைகளிலே சன்னங்கள். அன்று நண்பகல் சீ பிளேன் ஒன்று வந்து படமெடுத்துச் சென்றது. சீப-ிளேன் வந்து போனால் பொம்மர் வரும் என்பதும் அனுபவம். வரதன் சொன்னான், 'கோள்மூட்டி வந்து போறான். நாளை ஆள்காட்டியைக் கூட்டிக் கொண்டு பொம்மர்வரும்'சீபிளேனைக்'கோள்மூட்டி' மண்ணால் மூடப்பட்டது.

கிழவன் உள்ளே போகவில்லை. வெளியே மிஞ்சிய ஒரு மரக்குற்றியின் மேல் குழிக்குக் காவலாளிபோல் இருந்தார். வாய்விட்டு கூறாவிட்டாலும் அந்தக் குழி அவர் மனத்தில் சவக்குழியை ஞாபக மூட்டியது. வரதன் தலையை நீட்டிப் பார்த்து 'பாட்டா உள்ளே வாங்கோ' என்று அவசரப்படுத்தினான். 'தேவையா-னால் வாறன்' என்றார் செல்லத்துரை; சாவகாசமாக வெற்றிலையை மென்று இரத்தச் சிவப்பாகத் துப்பிக் கொண்டிருந்தார்.

மேற்குத் திசையிலே இருபொம்மர்கள் மாறி மாறிச் சத்தாருக்குக் கீழே இறங்கியபின் மேலே உன்னிப் போகும் போது பேரோசைகள் கேட்டன. 'ஆஸ்பத்திரியைச் சுற்றித்தான் அருச்சனை நடக்குது' என்று கிழவன் முணுமுணுத்தார். தொடர்ந்து



என்றும் பொம்மருக்குத் திசையும் குறியும் காட்டும் ஹெலியை 'ஆள்காட்டி' என்றும் பிள்ளைகள் பட்டம் சூட்டிவிட்டார்கள்.

அந்தியில் வரதனை பாட்டா செல்லத் துரை இருவர் உதவியுடன் 'டானா' வடிவில் ஒரு பதுங்கு குழி வெட்டினார். பக்கத்துப் பிள்ளையார் கோயில் வளவில் சோடை போயிருந்த ஒரு தென்னைமரம் குழிக்கு மேலே அடுக்குவதற்கு வேண்டிய குற்றிகளுக்கு உபயோகப்பட்டது. அவற் றின் மேலே மண் மூட்டைகள் வைத்து

ஹெலியின் சூடுகள்; அதை எதிர்த்து பையன்களின் 50 கலிபர் வேட்டுக்கள்; கோட்டையிலிருந்து ஷெல்லோசைகள். பூமியின் நான்கு திக்கும் அதிர்ந்தன.

'வாங்கோ பாட்டா' மீண்டும் வரதன்.

'வாங்கோ பாட்டா, பதுங்கு குழி பாதுகாப்பு' இது வரதா.

'நான் பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறேன்' என்று சொன்னார் செல்லத்துரை. கிழவனின் வாயில் ஒரு

## ‘இந்த மண் எமக்குச் சொந்தமில்லை என்றால், நாங்கள் பதுங்குவதற்கு இடமில்லை’

விரக்திச் சிரிப்பு அகப்பட்டது. ‘இது பாதுகாப்பில்லை என்றால், உதுகும் பாதுகாப்பில்லைத்தான்.’

வரதனுக்கும், வரதாவுக்கும் இந்தப் பேச்சு விளங்கவில்லை. மற்றவர்களுக்கு அவர் சொன்னது கேட்கவில்லை; கேட்டிருந்தால் பல்கலைக்கழக மாணவிகள் ஏதாவது அர்த்தம் கண்டிருப்பார்களே! அவரின் பேச்சு அவர்களுக்கு மிகவும் பிரியமான-தாகும். அவர் பேச்சில் கேலி, ‘கிண்டல், சொட்டை, சிலேடை பிரயத்தனம் இல்லாது தானாக வந்து சிந்தனையைக் கிளப்பும், அல்லது அசிரத்தையைக் குழப்பும், ரோச மலரும், மரியம் பீபியும் சிரிப்பார்கள், நாணி அழுவார்கள். ஓடி ஒளிப்பர்கள். முடிவில் போய் இருந்து சிந்திப்பார்கள். தமது பேராசிரியர்களுக்கே இல்லாத விவே-கமும், நிலைமையைப் புரிந்து கொள்ளும் சக்தியும் பாட்டாவுக்கு இருப்பதாகப் பேச-ிக் கொள்வார்கள்.

***

செல்லத்துரை சுருட்டுத் தொழில் புரிந்த காலத்தில் திறமையான தொழிலாளி, நாளுக்கு ஆயிரம் சுருட்டுக்கள் சுருட்டிவிட்டுத்தான் இருந்த இடத்தைவிட்டு எழுவார். அவர் சுருட்டுக் கொட்டிலில் பேசும் பேச்சுக்கள் பிரசித்தம். தொழிலாளர் நன்மைக்காகப் பத்திரிகைகளைப் பகிரங்கமாகப் படிப்பதும் அவர்தான். ‘அண்ணை நீ படிச்சிருந்தால் ஒரு அப்புக்காத்தாக வந்திருப்பாய்’ என்று புகழ்ந்து சக சுருட்டுக்காரர் அவர் உச்சியில் ஐஸ் வைப்பார். அவருடைய பகிடிகளில் சிலேடையும் சொற்சாலமும் தாராளம்; அவற்றில் சில சொந்தச் சரக்கு, சில தேய்ந்து போன இரவல்கள்; இன்னும் சில சுருட்டுக் கொட்டிலுக்கு வெளியே கூறமுடியாதன.

சுருட்டு முதலாளியின் சோலியாக கொழும்பு ஐந்து லாம்புச் சந்திக் கடைகளுக்குப் போய்வரும் செல்லத்துரை, அங்கே ஒரு கடையில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, வியாபாரம் பழகி, தான-ாக கொட்டாஞ்சேனை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு முன்னால் சுருட்டுடன் சோப்பு, சீப்பு, பவுடர், சிகரட் இத்தியாதி விற்கும் ‘பேப்பர்’ கடை போட்டார்.

* * *

தூரத்திலே யாழ் ரவுனுக்கு மேலே குபீர் குபீர் குபீரெனப் புகை திரண்டு எழுந்தது. பக்கத்து வளவிலிருந்து பொன்னையா மாஸ்ரர் வேலிக்கு மேலால் பார்த்துச் சொன்னார். ‘றவுனிலை பல கடைகள் எரியுதாம். அவ்ரோ பிளேனிலிருந்து பெற்ரோல் குண்டு வீசுறான்களாம்’ தமது பதுங்கு குழிகளிலிருந்து காலாறுவதற்கு அவ்வப்போது வெளியே வந்து அயலவர் செய்தி பரிமாறிக் கொள்வர். ஒரு பொம்மர் தாழப் பறந்தது. ஓசை குடலைக் கலக்கியது. பொன்னையா பதகளிப்புடன் பதுங்கு குழிக்குத் திரும்பிவிட்டார். செல்லத்துரை அப்படியே இருந்தார். அவருக்கு 1958ஆம் வருடம் கொழும்பில் தனது கடை சிங்களக் காடையர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்ட ஞாபகம் வந்தது. அவர் அகதிக் கப்பலில் யாழ்ப்பாணம் அடைந்து, உடுத்த வேட்டி சால்வையுடன் சுதந்திரமாகத் தனது வீட்டிற்கு, வந்தபோது அவரது மகள் செல்லமணி விளையாடிக் கொண்டிருந்தாள். ஒரு மாதப் பிள்ளை. அப்படியே அள்ளிக் கொஞ்சியது நேற்று

போலஇருக்கிறது. இதையெல்லாம்கிழவன் பேரப்பிள்ளைகளுக்குக் கூறியிருக்கிறார். அது அவருக்குப் பொழுதுபோக்கு, சிறுவர்களுக்கும் உபகதை போல ருசியானது. அவர் சொல்லுவார்; 'நான் உயிர் தப்பினது கடவுள் செயல். உங்கள் அம்மா அதிட்டக்காரி'

வரதன் விடுவானா? 'அப்படியிருந்தும் திரும்பவும் கொழும்புக்குப் போனனீங்கள் தானே பாட்டா?' என்று கேட்பான். அவரது விடை ஒரு புன்னகையாய் மலர்ந்து ஒரு நொடியில் அவிட்டுச் சிரிப்பாக வெடிக்கும்.

'பேய்த்தனம்தான்' அவர் ஒத்துக் கொள்வார்.

'1971இல் எனக்குத் தலையில் இரும்புக் கம்பியால் அடிச்சுப் போட்டாங்கள். மயக்கமடைந்து விழுந்து போனேன்'

கடை மறுபடியும் எரிந்து விட்டது. புதிய கடை அது.

ஒரு முஸ்லிம் நண்பரால் (மரியம் பீபியன் தந்தை) காப்பாற்றப்பட்டு மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அங்கே மீண்டும் சுதந்திரமாகச் சுவாசித்து. உடல் குணமாகி யாழ்ப்பாணம் வந்தார், செல்லமணி அப்போது ருதுவாகியிருந்தாள்.

'அவள் அதிஷ்டக்காரி'

இந்தச் சம்பவத்திற்கு அவள் இராகமும் தாளமும் அமைத்துக் கூறும்போது பேரப்பிள்ளைகளும் பீபியும் தம்மை மறந்து நிலையில் இருப்பர்.

இப்போது தாலி இழந்து, நிறப் புடவைகள் அணிவதைத் தவிர்த்து, 30 வயதில், நாடகத்திற்குக் கிழவி வேடம் போட்டவள்போல் தோன்றும் செல்லமணி அக்கா 1971இல் வாலைக் குமரி - ரோசமலரும் சோடனை செய்து கற்பனையில் களிப்பாள்.

1971 கலவரத்தின் போதும் 'என்ரை தலை தப்பியது அவளால் தான்'

இனக் கலவரமும் காடையரின் அட்டகாசமும் தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே மகளின் கலியாண வைபவத்திற்கு நல்லூர் வந்துவிட்டார். அவருக்கு அப்போது சொந்தமாகக் கடை இருக்கவில்லை. இரு இழப்புகளின் பின் அந்த ஆசை போய் விட்டது. கொழும்பு கோட்டை றயில்வே ஸ்டேசனின் முன்னிருந்த ஆனந்த பவானில் கஷியராக வேலை செய்தார். அந்தக் கலவரத்தின் போது ஆனந்த பவானின் முதலாளியின் மகனும், கஷியர் சீற்றில் அப்போது இருந்த ஒரு சிப்பந்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள். ஹோட்டல் ராட்சத அடுப்பில் வெந்து கரியாயிற்று.

'நான் இந்தப் பதுங்கு குழிக்கு ஏற்கனவே வந்து தஞ்சமடைந்ததால் இப்ப உங்களுக்குக் கதை சொல்லுறன்' என்பார் செல்லத்துரை.

'பதுங்கு குழியா?' கேட்பாள் வரதா.

பாட்டா செல்லத்துரை ஒரு சின்னச் சிரிப்போடு தன் அடர்த்தியான மீசையைத் தடவி விடுவார். 1977ஆம் ஆண்டில் தன் மகளின் கலியாணம் நடைபெற்ற அந்தக் காட்சிதான் அவர் மனத்தில் நிலைத்து நிற்கின்றது. தான் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச் சேர்த்து வைத்ததில், கலவரக் கள்வர்களிடமிருந்துதப்பியவற்றைஎல்லாம் சேர்த்து ஒரு அரசாங்க உத்தியோகஸ்தரை மாப்பிளையாக எடுத்தார். மருமகன் சிவபாலன் ரெயில்வே குமாஸ்தா லட்சணமும் குணமும் பொருந்திய பையன்.

'சிங்களப் பகுதியில் இனி வியாபாரம் செய்ய முடியாது. அரசாங்க வேலை என்றால் நிரந்தரமானது பாதுகாப்பானதும்' இப்படிச் செல்லத்துரை சொன்னார். எத்தனையோ யாழ்ப்பாணத்தவர் போல் அவரும் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்.

*1983 -*

கொள்ளை எனக் கோதாரி எனப் பரவிய இந்த வருடத்தில் சிங்களப் பயங்கரவாதத்தைப் பற்றிச் செல்லத்துரை

தனது பேரப்பிள்ளைகளுடன் பேசுவ தில்லை அவர் மனம் அவற்றைக் கதையாகக் கூற முடியவில்லை. அந்த ஆண்டு வரதனுக்கு ஐந்து வயது, வரதாவுக்கு மூன்று. 'அப்பா, சுவாமியிடம் போட்டார்' என்று மட்டும் செல்லத்துரை அவர்கள் தகப்பனைப் பற்றிக் கூறினார். அப்படியே அவர்களும் எண்ணினார்கள் என்று சென்ற வருடம் வரை நம்பினார். குழந்தைகள் எப்போதும் குழந்தைகள் என்றும், சிறுவர்களும் எப்போதும் சிறுவர்கள் என்றும் நினைப்பு.

போனவருடம் மீன் பிடிப்பதற்குப் படகில் போன முப்பது தமிழர்கள் கறுப்புச் சட்டை அணிந்த சிங்களக் கூலிப்படையினரால் வாள்களால் வெட்டித் துண்டமாக்கப்பட்டார்கள். இந்தத் திடீர் படையினர் இனக்கலவரங்களின் போது கலவரம் செய்யும் காடையர்; துப்பாக்கி உபயோகிக்கத் தெரியாதவர்கள். பத்திரிகையில் வந்த இந்தச் செய்தியை செல்லத்துரை வீட்டிற்கு வந்த ஒருவர் சல்லாபித்த போது வரதன் சொன்னான்.

'மாமா, எங்கள் அப்பாவையும் இப்படித்தான் வெட்டிக் கொன்றார்கள்' இதைக் கேட்டுக் கொண்டிருந்த கிழவன் திகைத்துப் போனார். 1983இல் அனுராதபுரம் ரயில்வே ஸ்டேசனில் கடமையாற்றிய ஸ்டேசன் அதிபர் உட்பட மூன்று தமிழர்கள் அலங்கோலமாகத் துண்டிக்கப்பட்டார்கள் அவர்களில் ஒருவர் வரதனின் தகப்பன். பிரேதத்தை யாழ்ப்பாணம் கொண்டு வரும் நிலையில் அது இருக்கவில்லை.

ஒரு பாரிய வெடிச்சத்தம். அருகா மையில் குண்டு விழுந்தது போல் கேட்டதுடன் நிலம் அதிர்ந்தது.

'அப்பு வாவன், அவரைக் குடுத்திட்டன். நீயும், என்னையும் பிள்ளைகளையும் அனா தரவாக விட்டுட்டுப் போகப்போறியா?'

மகள் செல்லமணி பதுங்கு குழியின் வாசலில் தலையை நீட்டிக் கெஞ்சினாள். கிழவன் மெல்லக் காலை எடுத்துக் குழியின் முதற் படியில் வைத்து மெல்ல இரண்டாம் படியிலும் வைத்து அப்படியே இருந்துவிட்டார்; உள்ளே போகவில்லை. உள்ளே ஒரே இருட்டு; எறும்பு பூச்சி கறையான், பாம்பு வராது தெளிக்கப்பட்ட கமக்ஸீன் மண்ணெண்ணெய் நாற்ற உபத்திரவம் வேறு.

நேற்றுக் காலையிலே பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைக் கிழவன் வீட்டில் யாருடனும் பரிமாறிக் கொள்ளவில்லை. பதுங்கு குழி அமைப்பதற்குத் தீர்மானித்துவிட்டார். ஆகவே அதன்மேல் பிள்ளைகள் வைத்துள்ள நம்பிக்கையைக் குறைக்க அவர் விரும்பவில்லை.

'பலாலி முகாமிலிருந்து நடை பவனி யில் வந்த இராணுவத்தினர், வளலாய்க் கிராமத்தில் பதுங்கு குழியில் பதுங்கி பாதுகாப்புக்கு இருந்த ஒரு குடும்பத்தில் ஆறு பேரையும் வெளியே இழுத்துச் சுட்டுக்கொன்று விட்டார்கள்' இதுதான் அந்தச் செய்தி.

'இது, இந்த மண்ணுக்கு மேலே ஆபத்தென்றால், உதுகும் ஆபத்துத்தான்' அதை மீண்டும் வாய் திறந்து கூறவில்லை; மீசையை வருடிக் கொண்டார். நல்ல வேளையாக தரை மார்க்கமாக நல்லூருக்கு இன்னும் இராணுவம் வர முடியவில்லை. அதுதான் ஆகாயத்திலிருந்து இவ் வளவு அட்டகாசம். இந்த ஆகாயத் தாக்குதலில் இருந்து பதுங்கு குழி நல்ல இடம்தான். கிழவன் யோசனை செய்து கொண்டிருந்தார்.

சமீப காலத்தில் நம்பமுடியாத அபூர்வமான அதிசயமான உண்மைச் செய்திகளும், அதீத கற்பனையுள்ள எழுத்தாளருக்கே மனத்தில் மருளாத நிகழ்ச்சி வர்ணனைகளும் பத்திரிகைகளில் வருவது சர்வ சாதாரணமாகிவிட்டன. ஷெல்களும், ஹெலியிலிருந்து சூடுகளும் புரிந்த சோகக் கூத்துக்கள் அவை; கலியாணப் பந்தரில் ஷெல் - மணமகன் மரணம்; மரண வைபவத்தில் ஹெலியின் வேட்டுக்கள் -



புரோகிதர் உட்படச் சகலரும் அயல் வீடுக-ளில் தஞ்சம்; வைத்திய சாலை வார்ட்டில் ஷெல் - ஆறு நோயாளிகள் மரணம்; வீட்டின் மேல் ஷெல் - ஒரு குடும்பத்தில் ஐவர் மரணம்; கோவிலிலே, கோபுரத்திலே பாடசாலையிலே, அம்புலன்ஸ்வண்டியிலே ஷெல், ஷெல்.

என்றாலும், இதுவரை கிழவன் சாதாரண வாழ்க்கையை நடத்தினார். கோவில், குளம், வயல், வாய்க்கால், கடைத்தெரு ஒன்றையும் குறைக்கவில்லை. கிழவனின் போக்கு மற்றவர்களுக்குத் துண-கரமாகவே தோன்றியது. சில நாட்களுக்கு முன் அயலவர்கள் மேகத்தின் முழக்கத்தைக் கேட்டுப் பதுங்கு குழிகளுக்குள் ஒதுங் கினார்கள்.

ஓசை ஒன்றும் கேட்கவில்லை, ‘இன்றைய வேட்டை முடிஞ்சு போச்சு’ என்றவாறு செல்லமணி தகப்பனை விலக்கிக் கொண்டு பதுங்கு குழியிலிருந்து வெளியே வந்தாள். செல்லமணி கிழவனின் மனம் அவளைப் பார்த்தது, ‘செல்லமணி! ஒரு கலவரத்தின் போது பிறந்து, ஒரு கலவரத்தில் ருதுவாகி, மற்றொன்றில் மாங்கல்யம் பெற்று, ஒரு கொடூர கொடு மையின் போது விதவையானவள்.’

அந்த இனக் கலவரங்களின் ஆழமான நினைப்பு செல்லத்துரைக் கிழவனின் மனத்தில் நியாயமான சிந்தனையைத் தோற்றுவித்தது. இப்போது நடை பெறுவது கிழவனுக்கு ஒரு போராகவே தோன்றியது. ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையே அது நடைபெறுகிறது. போரைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது, அவருக்குப் புரியாதது! அந்த வாரங்கள், அந்த வருடங்கள். 1956 முதல் 1983 வரை போர் இல்லை. ஆயுதம் தாங்கிய தமிழ்ப் போராளிகள் இருக்கவில்லை.

‘அந்தக் காலத்திலை காந்தி வழியில் சத்தியாக்கிரகம் நடந்தது.’

‘அரசியலிலே உரிமைகள் கேட்டு எமது தலைவர்கள் சமரசப் பேச்சுக்குப் போனார்கள்.

ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. கிழவனுக்கு அரசியல் விடயங்கள் தெளிவான மனப்பாடம். ஆனால் அந்தக் காலத்தில் கலவரங்கள் மூண்டன. பெறுமதியில்லாத நிகழ்வுகள், அயலவர்கள் மனஸ்தாபம், தனிப்பட்ட வியாபாரப் போட்டி பொறாமை, காம விவகாரம் - யார் குற்றவாளியாக இருந்தாலும் கலவரத்தை உண்டாக்கியது. அந்தக் கலவரங்கள் காட்டுத் தீயும் சுழல் காற்றும் சேர்ந்தது போல்பரவும்; தொட்டம் தொட்டமாக, பரவலாக, திடீர் திடீரென, கொடூரமான தமிழர் பாதிக்கப்படுவர். செல்லத்துரைக் கிழவனின் நெஞ்சு விம்மியவாறு ஒரு நிமிடம் நிலைகொண்டது.

‘வடக்கும் கிழக்கும் எமது பதுங்கு குழிகள்’

“ஒவ்வொருவராக பதுங்கு குழியி லிருந்து வெளிவந்தார்கள். உடலில் இருந்த மண்ணைத் தட்டிக் கொண்டார்கள். செல்லத்துரைப் பாட்டா மீண்டும் கூறி னார்;

‘இந்த மண் எமக்குச் சொந்தமில்லை என்றால், நாங்கள் பதுங்குவதற்கும் இடமில்லை’

‘கோப்பி குடிக்க, வா அப்பு’ என்று செல்லமணி அவரை அழைத்தாள்.

**(மல்லிகை, ஜனவரி 1988)**

# மட்டக்களப்பு படுவான்கரையில் போர்க்கால நாடக அரங்கச் செயற்பாடுகள்

## ஓர் அறிமுகம்

சந்திரலிங்கம் சந்திரமோகன்

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள் நாட்டு முரண்பாட்டினால் நடந்தேறிய யுத்தத்தினால் சொல்ல முடியாத பாரிய அசம்பாவிதங்கள் ஏற்பட்டது. இனங்களுக்கிடையிலான தொடர்ச்சியான மோதலினால் இடம்பெயர்வு, அச்சவாழ்வு, இராணுவம், சோதனைச் சாவடிகளின் அட்டகாசம் மற்றும் விடுதலைப் போராளிகள், பேரினவாதம் ஆகியன சார்ந்த அடக்குமுறைகள் எனப் பல வழிகளினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். மூவின மக்களிலும் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பொருட்கள் சேதமாகியது, பொருளாதாரம் மந்த நிலை அடைந்தது, கல்வியில் தாக்கம் ஏற்பட்டது. இளைஞர், யுவதிகள் இராணுவத்தினர், புலிகள் ஆகியோரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இள வயதில் திருமணம் செய்துகொண்டனர். இவ்வாறு பல வழிகளில் துன்பங்களை அனுபவித்த காலம் அது. அந்தக் காலத்தில் மேலேழுந்த கலை, இலக்கியப் படைப்புக்களில் கலைஞர்கள் தங்களது உணர்வு வெளிப்பாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் படைத்துள்ளனர்.

மட்டக்களப்பின் படுவான்கரை சிவில் நிருவாகக் கட்டுப்பாட்டினுள் இல்லாத பிரதேசமாதலால் விடுதலைப் புலிகளின் நிருவாக இறுக்கம் நீண்ட காலம் நிலவியது. இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி என்பதனால் ஆளும் சிங்கள அரசுக்கு எதிராகவும், இராணுவ அடக்குமுறைக்குஎதிராகவும் நிகழ்த்தப்பட்ட கலைச் செயற்பாட்டில் நாடகம் முக்கிய ஊடகமாக விளங்கியது.



அரங்கு என்பது மனித முரண்பாடு, மனித விடுதலை, ஒடுக்குமுறைக்கான எதிர்ப்பு உணர்வுகள் போன்றவைகளை பிரதான கருப்பொருளாகக் கொண்டு திகழும் ஆற்றுகைக் கலையாகும். இவ்வாறான நிகழ்துகைகளின்போது நிகழ்த்துவோர் மனதில் உறங்கிக்கிடக்கும் எதிர்ப்புணர்வுகளும் தாக்கங்களும் அதிகாரத்தால் ஒடுக்கப்பட்ட பார்ப்போர் மீது காணப்படும் எதிர்ப்புணர்வும் வெளிக்கொணரப்பட்டு தார்மீக கோபத்தை வெளிப்படுத்தும் இடமாக அக்கணப்பொழுது காணப்படும். இவற்றோடு நிகழ்த்துகை இடம்பெறும்போது பார்ப்போர் தங்களுக்குள் இராணுவ, ஆளும் அரசியல் அதிகாரங்களையும் சொல்லமுடியாத அபிலாசைகளையும் கோப உணர்வுடன் கலந்துரையாடுவர். மனதில் பதிந்து இரத்தத்தில் ஊறியிருந்த எதிர்ப்புணர்வுகளை வெளிப்படுத்த இந்த நாடக நிகழ்வுகள் களமாக அமைந்தது.

படுவான்கரையில் போர்க்காலத்தின்போது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆற்றுகைகள் இடம்பெறும்.

1. கோயில் சடங்கு நிகழ்வுகளில் கலைக் கழகங்கள் ஊடாக நிகழ்ந்தமை.
2. விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம்தமது கருத்தியல், கோட்பாடுகளை மையப்படுத்திய நாடக ஆற்றுகை நிகழ்வுகள்.
3. பாடசாலைகளில் பொது நிகழ்வுகளில் இடம்பெற்றமை.
4. மாவீரர் தினத்தின்போதான போட்டிகளும் நிகழ்துகைகளும்.

இவற்றைவிட மேலும் பல சந்தர்ப்பங்களும் நிலவியது.

கோயிலில் கலைக்கழகங்கள் ஊடாக ஆற்றுகை செய்யப்பட்டனவாக சமூக நாடகம் வரலாற்று நாடகம், நகைச்சுவை நாடகம், கூத்து எனும் வகைப்பாட்டோடு "புரட்சி நாடகம்" எனும் தலைப்பிலும் நாடகம் நிகழ்த்தப்பட வேண்டும் எனும் கட்டாயம் இருந்தது. இது விடுதலைப் புலிகளின் எண்ணக்கருவை மையப்படுத்தியதாக அமைதல் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இதில் "வந்த வரத்தென்ன போன போக்கென்ன" எனும் மேடையில் நிகழ்த்தப்பட்ட நாடகம் குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளிலும் இப்போக்கு காணப்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கலை பண்பாட்டுக்கழகம் இரண்டு வழிகளில் நாடகங்களை நிகழ்த்தியது.

1. வீதி நாடகம் - தங்களது இயக்கம் சார்ந்த கருத்தியலை மக்கள் மயப்படுத்த நாடகத்தைப் பிரதான ஊடகமாகப் பயன்படுத்தியதனால் இச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். மக்கள் கூடும் இடங்களில் ஒரு வாகனத்தில் திடீர் எனச் சென்று அவ்விடத்தில் நாடகத்தை நிகழ்த்துவர். இது வீதி நாடகத்தை மையப்படுத்தியதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக "பிணம் தின்னி" எனும் நாடகம் குறிப்பிடத்தக்கது.

2. மேடை நாடகம் - பொது இடங்களிலும், முக்கியமாக கோயில் திருவிழாக்களிலும் கோயில் நிகழ்வோடு பிரச்சாரப் பேச்சுக்களையும், நாடக ஆற்றுகைகளையும் மேற்கொண்டுள்ளனர். இது அவர்களின் சண்டையைக் காட்டி ஆட்சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

தமது விஷேட தினங்களை முன்வைத்து நாடகப் போட்டிகளை நடாத்தும் மரபும் காணப்பட்டது. இது மேடை நாடகங்களேயாகும். இவற்றுள் "மர்மம், தூ ங்காத விழிகள்" போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம்.

இந் நாடகங்களின் பாணி மரபு வழி நாடகங்களின் நன்மையையும், நவீன நாடகத்தின் உத்திகளையும் உள்வாங்கியதாக அமைந்திருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகங்களின் கருப்பொருட்களாக சமகாலத்தில் தமிழருக்கு ஏற்படும் துயரம் நிறைந்த விளைவுகள், அதன் பாதிப்புக்கள், இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, இராணுவச் சுற்றி வளைப்பு, காணாமல்போதல், பெண்களின் பாலியல் பலாத்காரம், இளைஞர்கள் துன்புறுத்தப்படல், சோதனைச் சாவடிகளில் ஏற்படும் அசௌகரிகம் போன்ற விடயங்களுக்கு மேலும் எதிர்ப்புக்களைக் கொடுத்து கிராமத்தவரை நாடகத்தின் மூலம் வயப்படுத்துவதாக அமைந்தது. போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளின் பிரச்சார ஊடகமாக நாடக அரங்கு பல வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் புலனாகின்றது. இவை தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும்.

தொகுத்து சிந்திக்குமிடத்து போர்க்கால அரங்கச் செயற்பாடுகள் கலை வடிவங்களினூ டாக உளச்சிகிச்சை முறையாகவும், எதிர் குரல் வெளிப்பாடாகவும் பிரதிபலிப்புச் செய்யப்பட்டிருப்பினும் இவை தொடர்பான முறையான மீள்நோக்கும், பதிவுகளும், மதிப்பீடும் தேவையாக உள்ளது.

போர்க்காலம் சார்ந்த அல்லது போர்க்கால வாழ்வின் அடியான அனேக நாடக முயற்சிகள் வாய்மொழிப் பாரம்பரியம் சார்ந்தே படைக்கப்பட்டதனால் ஆவணப்படுத்தல் நிகழவில்லை. அத்தோடு அக்காலகட்டத்தில் நிலவிய தணிக்கை, இராணுவக் கெடு பிடி, கருத்துச் சுதந்திர மறுப்பு காரணமாக கலைஞர்கள் தமது படைப்புக்களைத் தாமே எரித்தும், அழித்துமுள்ளமையினால் இது ஆழமான ஆய்வு முயற்சிக்குத் தடையாக அமைந்துள்ளது எனலாம்.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மண்சுமந்த மேனியர், எந்தையும் தாயும் போன்ற படைப்புக்கள் பிற்காலத்தில் பிர-சுர வடிவம் பெற்றது போல் மட்டக்களப்புப் பிராந்திய போர்க்கால நாடகப் படைப்புக்களும், இதர கலைப் படைப்புக்களும் தொகுக்கப்படும்போதே எம்மால் மிகச் சரியான மதிப்பீட்டை மேற்கொள்வது சாத்தியமாகும்.

# வன்னி மண்ணின் போர்க்காலக் கதைகள்

- ச. முருகானந்தன்

இலங்கையின் நவீன இலக்கிய வரலாற்றில் பாலகனாகிய சிறுகதை இலக்கியம் கடந்த எழுபத்தியைந்து ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்களையும், வளர்ச்சிப் படிநிலைகளையும் கண்டுள்ளது. காலத்துக்குக் காலம் இதன் வடி விலும், உத்தியிலும், உள்ளடக்கத்திலும் நோக்கிலும் பல்வேறு மாற்றங்களைத் தரிசிக்க முடிகிறது. அந்த வகையில் எண்பதுகளில் தேசிய இனப்பிரச்சினையும் ஆயுதப் போராட்டமும் சிறுகதை, நாவல் இலக்கியங்களின் போக்கையும், நோக்கையும் புரட்டிப்போட்டு விட்டது எனலாம். அதுகாலவரை முனைப்புப் பெற்றிருந்த வர்க்க, சாதிய அம்சங்களும், தேசிய வாதமும் பின் தள்ளப்பட்டு இன ஒடுக்கலுக்கு எதிரான திசையில் பேனாக்கள் கூர்மையுற்றன. போர், மனித வாழ்வின் ஒடுக்கலுக்கும், போராயுதங்களின் கொடூரங்களுக்கும் மத்தியில் விடுதலை உணர்வு மேலோங்கிய காலகட்டத்தில் படைப்பாளிகளிடமும் அந்நிலை காணப் பட்டது.

வன்னி மண்ணைப் பொறுத்த வரையில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட குடியேற்றவாசிகளாக வந்தவர்கள். பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், பரந்த நிலப்பரப்பும் கொண்ட வன்னி மண்ணில் பாரம்பரியமாக வாழ்ந்த மக்களின் எண்ணிக்கையுடன் இவர்களும் ஒன்றிணைந்த பின்னர் காடுகள் கழனிகளாயின. வன்னி மண்ணை பொன்கொழிக்கும் பூமியாக மாற்ற விவசாயிகள் கடினமாக உழைத்தார்கள். பாம்புக்குள்ளும், நுளம்புக்குள்ளும், கொடிய விலங்குகளின் தாக்குதலுக்கும் மத்தியில் உழைத்த அவர்களது வாழ்வு எதிர்பார்த்த வேகத்தில் முன்னேற்றம் காணாவிட்டாலும், அவர்கள் பசிபட்டினி இன்றியும், நிம்மதியாகவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். வர்க்க ரீதியிலான சுரண்டல்களுக்கு மத்தியில் துளிர்த்தெழுந்து வாழக்கைப் பயணத்தை மேற்கொண்டிருந்த இவர்கள் வாழ்வில் இடி விழுந்து போல கொடிய இன ஒடுக்கல் யுத்தம் உள் நுழைந்தது.

மெல்ல மெல்ல தொடங்கிய யுத்தம் நாட்டின் தமிழ்ப் பிரதேசங்களைச் சூழ்ந்த போதிலும் இதன் தாக்கம் நாடளாவிய ரீதியில் உணரப்பட்டது. தமிழ் மக்கள் மிக மோசமான உயிரிழப்புக்களையும், உடமை, உறையுள் இழப்புக்களையும் சந்தித்தனர். தமிழ்ப் போராளிகளை அடக்கி ஒடுக்க இராணுவம் ஊர்மனைகளுக்குள் புகுந்து இளைய தலைமுறையினரை அழித்தும், கைது செய்தும் அட்டகாசம் புரிந்த போது மக்கள் இடம் பெயர்ந்து ஓடி அகதிகளாயினர். மக்கள் பிரதேசங்களில் இருந்த போராளிகளும் காடுகளை நோக்கி நகர்ந்து கொரில்லா முறைத் தாக்குதலை தொடர்ந்தனர். வன்னிக் காடுகளும் அவர்கள் தளங்களாகின.



போர்க்கால இலக்கியங்கள் படைப்பதில்

எழுத்தாளர்கள் அச்சம் கொண்டனர். எழுத்தாளர்கள் சுதந்திரமாக எழுதிட முடியாத சூழல் இருந்த அவ்வேளையில் பத்திரிகைகளும்போர்சார்ந்தபடைப்புகளை வெளியிடத் தயங்கின. இந்தக் கால கட்டத்தில் வடகிழக்கு மாத்திரமன்றி ஏனைய பிரதேச எழுத்தாளர்களின் கைகளும் கட்டப்பட்டிருந்தன. இனப்பிரச்சினை தொடர்பான கதைகளை எழுதிய முக்கிய படைப்பாளிகளால் கூட போர் பற்றிய கதைகளை எழுத முடியாத அந்தக் காலத்தில் சிலர் போரை உருவகப்படுத்தி மறை முகமாக எழுத ஆரம்பித்தனர். இந்தக் கால கட்டத்தில் வந்த முக்கியமாக மூன்று கதைகள்பற்றிகுறிப்பிடவேண்டும். அடுத்தது ரஞ்சகுமாரின் கோசலை இனவிடு தலைப் போரின் முன்னோடிக் கதையாகக் குறிப்பிட வேண்டும். உமா வரதராஜனின் அசரனின் வருகை மற்றது ச.முருகானந்தனின் அலியன் யானையை அடுத்ததாகக் குறிப்பிடலாம். வன்னி மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த ச.முருகானந்தன் குழுப்பிடித்த அலியன் யானைக்கு உருவகப்படுத்தினர். இந்தக் கதைகளிலும் போரின் கொடுமைகளும், அழிவுகளும், உயிர் இழப்புக்களும், போராட ஆயுதம் ஏந்த ஆரம்பித்த இளைஞர்களும் உருவகப்படுத்தப் பட்டிருந்தனர். இதன் பின்னர் மெல்ல மெல்ல போர் தொடர்பான கதைகள் வெளிவர ஆரம்பித்தன. ரஞ்சகுமாரின் கோசலை கதையும், நந்தியின் பதுங்குழி, தாமரைச்செல்வியின் இங்கேயும் சில இழப்புகள், ச.முருகானந்தனின் தரைமீன்கள், தெணியானின் காகத்தையும் இறைச்சியையும் மையப்படுத்திய 'உவப்பு' கதை உள்ளிட்ட கதைகள் மனித அவலங்களினூடேயும், போருக்குப் புறப்படும் இளைய தலைமுறையினரையும் அவர்களது பெற்றோரின் தவிப்பையும் எடுத்தியம்பின. பலரின் கவனத்தை இக்கதைகள் ஈர்த்தன.

முதலில் யாழ்ப்பாணம், திருகோண-மலை, மட்டக்களப்பு உள்ளிட்ட இடங்கள் போரின் பெரும் பாதிப்புக்களை கண்ட பிரதேசங்களாக இருந்தன. போரா-ளிகளின் கொரில்லா முறைத் தாக்குதல் முனைப்புப் பெற்ற பின்னர் காடும், காடு சார்ந்த பிரதேசங்களும் போரின் முக்கிய களங்களாகின. இக்காலகட்டத்தில் வன்னியும், வாகரையும் போராளிகளுக்கு வாய்ப்பான இடங்களாக இருந்தன. போர் பற்றிய சிந்தனை தேசியளவில் முக்கியத்துவம் பெற ஆரம்பித்த பின்னர் பத்திரிகைகளும் போர்பற்றிய இலக்கிய வடிவங்களைப் பிரசுரிக்க ஆரம்பித்தன. போர்ப் பிரதேசங்களிலிருந்தும், போரில்லா விட்டாலும் அதனால் பாதிக்கப்பட்ட ஏனைய அனைத்து பிரதேசங்களிலிருந்தும் எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்தனர். புதிய தலைமுறை எழுத்தாளர்களும் காத்திரமான படைப்புகளைத் தந்தனர். பெண்களின் பங்களிப்பும் அதிகரித்தன. வன்னி போராளிகளின் தளமாக மாறிய பின்னர் வன்னியிலிருந்து பல படைப்புகள் வெளியாகின. துரதிஸ்டவசமாக அந்த படைப்புக்கள் வன்னிக்குள்ளேயே முடங்கிப் போனதுடன் இன்று அவைபற்றி அறிந்து கொள்ள முடியாதவாறு இறுதிக்கட்ட போரில் நூல்களும், பத்திரிகைகளும், படைப்பாளிகளின் கைவசமிருந்த பிரதிகளும் அழிந்து போயின.

போர்பற்றிய படைப்புகளை தமிழர்கள் கணிசமாக எழுதிய போதும், முஸ்லீம்கள், சிங்களவர்களும் கூட போர் பற்றிய படைப்புகளை உருவாக்கினர். காலம் காலமாக அந்நியோன்னியமாக வாழ்ந்த தமிழ் முஸ்லீம் மக்களிடையேயான உறவை வேரறுத்து பிரித்தாள பேரினவாதம் தூபமிட்டு செயற்பட்டமையின் அறு வடையாக தமிழ் முஸ்லீம் மக்களிடையே விரிசலும்முரண்பாடும்வெடித்தது. வடக்கை விட்டு முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட கொடிய அராஜகத்துடன் இந்நிலை மி-கவும் மோசமடைந்தது. ஊர்காவல் படை-யில் முஸ்லீம் இளைஞர்கள் இணைந்து அரச படைகளுடன் செயற்பட்டமையால் இந்நிலை மிகவும் மோசமடைந்தது.

கிழக்கின் தமிழ் கிராமங்களின் அழிப்பும் கொலையும், பள்ளிவாசல் படு கொலையும் கசப்பான உண்மைகள். இவை தொடர்பான படைப்புகள் சில தரிசன-மான போதிலும், முத்தரப்பு அச்சம் காரண-மாக இவை அடக்கியே வாசிக்கப்பட்டன. வன்னியையும், வாகரையையும் பொறுத்த வரை மிக நீண்ட காலம் போராளிகளின் பூரண கட்டுப்பாட்டுக்கும் அப்பிரதேசங்கள் இருந்த போது அங்கு புதிய முறையிலான நிர்வாகக் கட்டமைப்பு நடைமுறைக்கு வந்தது. அப்பிரதேசங்களில் வெளியான பத்திரிகைகளில் போரின் கொடூர அனர்த்தம் பற்றிய படைப்புகள், மக்களின் துன்பங்கள், அழிவுகள் என்பவற்றைத் தாங்கிய கதை கள் வெளியாகின. கூடவே போருக்கு ஆதரவான நிலைப்பாட்டுடனான கதை-தகள் நிறைய வெளியாகின. இளைய தலை முறையினரை போருக்குள் உள்வாங்கும் மறைமுக பிரசுரமும், மக்கள் ஆதரவைத் திரட்டும் முயற்சிகளும் இக்கால படைப்புகளில் இருந்தன. அதே சமயம் போராளிகளின் தியாக முகத்தை, போர்த் திறனைக் காட்டிய படைப்புகளும் நிறைய வெளியாகின. இன்னொரு புறம், போராளிகளின் இன்னொரு முகமான சில சர்வாதிகாரப் போக்குகளைப் பற்றி இந்த எழுத்தாளர்கள் மூச்சு விடவில்லை என்ற குறை இப்போது சிலரால் முன்வைக்கப் படுகின்றது. இதை நாம் இரு வகை-யாக நோக்கலாம். ஒன்று அப்பகுதி மக்கள் போராளிகளை ஆதரித்ததுடன் அவர்களது குறைகளைப் பெரிதுபடுத்தி போராட்டத்தின் நியாயத்தன்மையை மழுங்கடிக்க விரும்பாதமை. மற்றயது அச்சம் காரணம் எனலாம். புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள் சிலரே சில மாறான படைப்புகளை வெளியிட்டனர். இவர்கள் கூட மாற்று போராளி அமைப்புகளைச் சார்ந்தவர்களாகவோ, போராளிகளின் பாதிப்புக்கு உள்ளானவர்களாகவோதான் இருந்தார்கள். இவர்கள் கூட போராளிகளின் நியாயத் தன்மைகளை தெரிந்திருந்தும் அதை மறுத்தனர். போராளிகளுக்கு எதிராக முஸ்லீம் படைப்பாளிகள் கூட அதிகம் எழுதவில்லை.

இந்த வகையில் போராளிகளின் தளமா-கவும், கட்டுப்பாட்டுக்குள்ளும் இருந்த வன்னி மண்ணின் கதைகள் எவ்வாறு மாற்றம் கண்டன என்பதை நோக்கலாம். வன்னி மண்ணை கதைக் களமாகக் கொண்டு எழுதியவர்களில் வன்னி மண்ணின் மைந்தர்கள், வன்னியில் நீண்டகாலமாக வசித்து வருபவர்கள், வன்னியில் குறுகிய காலம் அரசபணி அல்லது வேறு தொழில் காரணமாக வாழ்ந்தவர்கள் என பலரைக் குறிப்பிடலாம். இவர்களுடன் வன்னிக்கு அகதியாக வந்து சென்றவர்களிலும் சில படைப்பாளிகள் போர்க்காலக் கதை களை எழுதினர். இவர்கள் மட்டுமன்றி பிற பிரதேச எழுத்தாளர்களும், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களும் தமது வாசிப்பு அனுபவத்தையும் அறிவையும் கொண்டு போர்சார்ந்த படைப்புகளை எழுதினர்.

ஆரம்ப காலத்தில் வன்னி மண்ணின் மண்வாசனை சார்ந்த கதைகளை பால மனோகரன், முல்லைமணி, அகளங்கன், தாமரைச்செல்வி, யோகேந்திரநாதன், செங்கை ஆழியான் உள்ளிட்ட படைப்பாளிகள் எழுதினார்கள். எண்பதுகளின் பிற்கூற்றிலும், தொண்ணூறுகளிலும் போர்சார்ந்த கதைகள் முனைப்புப் பெற்ற வேளையில் முன் குறிப்பிட்ட எழுத்தாளர்களுடன் ச.முருகானந்தனும் இணைந்து கொண்டு போர்சார்ந்த படைப்புகளை வன்னி மண்வாசனையுடன் எழுதினார். இந்தக் காலகட்டத்தில் எழுதாமலிருக்க முடியாது என்ற சிந்தனையுடன் புதியவர்கள் பலர் அலையலையாக எழுத ஆரம்பித்தனர். இவர்களது படைப்புகளில் உருவத்தை விட உள்ளடக்கத்திலேயே அதிக கவனம் இருந்ததை காணமுடிந்தது.

சிறுகதைகள் வெளியான அளவுக்கு நாவல்கள் அதிகம் அறுவடையாகவில்லை. கவிதைகள் உணர்ச்சிப் பெருக்குடன்

உள்ளத்தைத் தொடும் வண்ணம் பலரால் படைக்கப்பட்டன. சிறுகதைகள் பலவும் போர்க்கால பதிவுகளாக இருந்த அதே வேளை ஒருசில கதைகள் காத்திரமாகவும் அமைந்தன. புதியவர்களை பட்டியலிடுவது சிரமம் எனினும் யோ.கர்ணன், கருணை ரவி, தமிழ்க்கவி முதலான படைப்பாளிகள் நினைவுக்கு வருகின்றனர். திரு நகர் நடராசா முதலான பழைய படைப்பாளிகள் கூட போர்க்காலத்தின் எழுச்சியில் மறுபடி எழுத ஆரம்பித்தனர். புதிய மிலேனியத்தில் வன்னியில் உருவான படைப்பாளிகளின் எண்ணிக்கை மிக அதிகம். பலருக்கு ஈழநாதமும், ஈழநாடும் வெளிச்சமும் களம் அமைத்தன. போட்டிகளினூடாக பலர் எழுதினர். புதியவர்களில் பலர் பரிசு பெற்றனர். வன்னியை விட்டு கொழும்புக்கு வந்தபின் பவானி சிவகுமாரன், சந்திரகாந்தா முருகானந்தன் உள்ளிட்ட சிலர் சில காத்திரமான கதைகளை எழுதினர். போரின் இறுதிக் கட்டம் பற்றியும், முகாம் வாழ்வின் அவலம் பற்றியும், சொந்த மண்ணிற்கு மீண்டு வந்த பின்னர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் சிலர் எழுதியுள்ளனர். கொடுநாச யுத்தத்தில் கோர முகங்கள் பற்றிய சுய அனுபவத்தினூடாக சில கதைகள் தரிசனமாகின. போராளி களின் கட்டுப்பாட்டுக்கு வெளியே இருந்த மன்னார், வவுனியா பகுதிகளில் இருந்த படைப்பாளிகளும், யாழ் மண்ணின் படைப்பாளிகளும் ஏனைய படைப்பாளிகளும் கூட வன்னியின் இறுதிப் போர் அவலங்கள் பற்றி சில நல்ல படைப்புகளைத் தந்துள்ளனர். இவ்வாறே புலம் பெயர் எழுத்தாளர்கள் கூட நல்ல படைப்புகளைத் தந்துள்ளனர்.

இன்றைய வன்னிமண் கபளீகரம் செய்யப்பட்ட அவலநிலையிலிருந்து மீண்டெழ வேண்டும். வெறும் பிரதான வீதிகளையும் நகர்ப்புறங்களில் சில கட்டடங்களையும் அமைப்பதன் மூலம் மட்டும் மக்கள் வாழ்வு பழைய நல்ல நிலைக்குத் திரும்பிடாது. மீண்டும் குடியேறி எதுவித அடிப்படை வசதிகளுமின்றி மக்கள் படும் அல்லல்கள் பற்றியும் வதிவிடமின்மை, தொழிலின்மை மற்றும் வறுமை பசிபட்டினி பற்றிய ஆக்கங்கள் வெகு சிலவே வந்துள்ளன. இன்றைய மீள்குடியேற்றம் என்பது முக்கிய தேவைகளைக் கவனத்தில் கொள்ளப்படாத ஒன்று. வீடுகள் இல்லை, வேலைவாய்ப்புக்கள் இல்லை, தொழிலை ஆரம்பிப்பதற்கான ஆதாரம் இல்லை. சிலருக்கு சொந்த இடங்களில் குடியேற முடியாத அவலம்! அங்கவீனர்களும், உளப்பாதிப்புக்குள்ளானவர்களும் ஏராளமாக உள்ளார்கள். இவர்களது நிலை பற்றி உலகறிய வைப்பதிலும், பதிலிடலிலும் எழுத்தாளர்களின் பங்கும் முக்கியமானது. இவ் அவலங்களை உள்ளடக்கிய கதைகள் எழுதப்பட வேண்டும்.

வன்னியில் வெளியான படைப்புகளில் இன்னொரு அங்கமாக போராளிகளின் படைப்புகளை நோக்கலாம். போராளிகள் சிலர் நல்ல பல படைப்புகளைத் தந்துள்ளனர். போர் உலா போன்ற மகத்தான படைப்புகள் வெளியாகியுள்ளன. புதுவையின் கவிதைகள் உட்பட பலரது பிரமிக்க வைக்கும் கவிதைகளும், பாடல்களும் கூட அக்கால கட்டத்தில் வெளியாகின. அவர்களைப் போலவே அவர்களது ஆக்கங்களும் கூட மண்ணோடு மண்ணாகி விட்டன.

வன்னியில் போராளிகளின் கட்டுப்பாட்டுக்கு வெளியே இருந்த பகுதிகளிலிருந்து அகளங்கன், உதயணன், உதயன், முல்லைமணி முதலான மூத்த படைப்பாளிகள் உட்பட பல இளையவர்களும் வன்னிப் போர் பற்றிய படைப்புகளை ஆக்கியுள்ளனர். அருகேயிருந்த யாழ் மண்ணிலிருந்து எழுதியவர்களில் தாட்சாயிணி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோகிலா மகேந்திரன், சி.கதிர்காமநாதன், சீனா உதயகுமார், சாரங்கன், செங்கை ஆழியான், தெணியான், தேவபரமலிங்கம், கண மகேஸ்வரன்,

கிழக்கிலிருந்து அன்புமணி, திருமலை சந்திரகாந்தி உள்ளிட்ட மூத்த எழுத்தாளர்களும், விமல் குழந்தைவேல் உள்ளிட்ட பல இளையோரும், கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் இருந்த படைப்பாளிகளும், முஸ்லீம் எழுத்தாளர்களும் கூட போர்க்கால சிறுகதைகளை வழங்கியுள்ளனர். மல்லிகை, ஞானம் ஜீவநதி போன்ற சஞ்சிகைகளும் தேசிய பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, தினகரன் மற்றும் பிராந்திய பத்திரிகைகளான உதயன், சங்குநாதம், ஈழநாதம், ஈழநாடு முதலான பத்திரிகைகளும் பின் நாட்களில் பல போர்க்காலச் சிறுகதைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தன. பலரது நூல்கள் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. நீ.பி.அருளானந்தம், செங்கை ஆழியான், ச.முருகானந்தன், தமிழ்ச்செல்வன், தீபச்செல்வன், சந்திரகாந்தா முதலானோர் போர்க்கால சிறுகதைகள் சிலவற்றை யுகமாயினி, கணையாழி, தாமரை முதலான இந்திய சஞ்சிகைகளிலும் எழுதினர்.

கடந்த மூன்று தசாப்தங்களாக வெளிவந்த வன்னியைத் தளமாகக் கொண்ட போர்க்கால சிறுகதைகளின் பதிவுகள் சிறப்பாக இருந்தாலும், கதைகளின் கலைத்துவத்தை நோக்கும் போது பல கதைகளில் போதாமையை அவதானிக்க முடிகிறது. கதைக் கரு சிறப்பாக இருந்த போதிலும், பாத்திரவார்ப்புக்கள், நடை, கதைப்பின்னல், உத்தி, சூழ்நிலைச் சித்திரிப்பு என்பவற்றில் குறைபாடுகளை அவதானிக்க முடிகிறது. கதாசிரியர் கூறும் செய்தியை வாசகனின் மனதில் ஆழமாகப் பதிய வைப்பதில் இவற்றின் போதாமையின் தாக்கத்தை குறிப்பிடவேண்டும். போர்க்காலத்தில் சிறுகதை எழுத்து முயற்சிகளுக்கு பலதரப்பினரும் காட்டி வரும் ஆர்வம் விதந்துரைக்கத் தக்கதெனினும், வாசகர் வட்டம் என்பது, குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் தேய்வடையும் நிலையை அவதானிக்க முடிகிறது.

போர்க்கால சிறுகதைகளின் கலைத்துவக் குறைபாடு பற்றியும், தேக்க நிலை பற்றியும் தமிழ்நாட்டில் சில கருத்துக்கள் இருப்பினும் இன்று இலங்கையின் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி உயர்வானது என்பது மறுப்பதற்கில்லை. இன்று தமிழ் இலக்கியம் சர்வதேச மட்டத்தை நோக்கிய பயணத்திற்கான பாதையை இட்டவர்கள் புலம் பெயர் தமிழ் எழுத்தாளர்கள் தான். ஈழத்துச் சிறுகதைகளின் நுணுக்கமான யதார்த்தப் பார்வையை மறுத்துரைப்பது முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானதாகும்.

வன்னிப் போரைப் போலவே, வன்னிப் போர்க்காலப் படைப்புகளினூடாக ஈழத்து இலக்கியமும் இன்று சர்வதேச கவனிப்பை பெற்றுள்ளது. இவற்றில் காத்திரமான படைப்புகளை மொழிபெயர்க்க வேண்டியது அவசியமாகும். இதுபற்றி சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதுபற்றிய தொடர் கவனம் காலத்தின் தேவையாகும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது வன்னி மண்ணின் போர்க்காலச்சிறுகதைகள் ஈழத்து நவீன சிறுகதைகளின் வார்ப்பாகும். யதார்த்தபூர்வமான ஈழத்து சிறுகதைகள் சில சிறந்த கலைப்படைப்புகளாகவும் இருக்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல தகவம் பரிசு பெற்ற கதைகள் இன்றைய ஈழத்து சிறுகதைகளின் போக்கையும், நோக்கையும், சிறப்பையும் எடுத்தியம்புகின்றன. தகவம் பரிசு பெற்ற கதைகள், கனக செந்திநாதன் கதா விருது பெற்ற கதைகள் போன்றவை தொகுதிகளாக வெளிவரவேண்டும். இதன் மூலம் இன்றைய ஈழத்து சிறுகதைகள் பற்றி பலரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். இவை மொழிபெயர்க்கப்படவும் வேண்டும்.



# சாருமதியின் வீடு



தாட்சாயணி

அந்த முற்றத்தில் இப்போது பாதச் சுவடுகள் கூடுகின்றன.

புதிய, புதிய சுவடுகள்...

யார், யாரோ...? எவர், எவரோ...?

அந்த வீடு முன்னெப்போதும் காணாத பலபேரைத் தன் அறைகளுக்குள் அனுமதிக்கிறது.

இன்னும் கொஞ்சநாள்தான்.

அதற்குப்பிறகு அந்த வீட்டின் மீதான எனது நெருக்கம் விலக வேண்டியதுதான்.

இதுவரைக்கும் அதனோடிருந்த ஒட்டுறவு கழன்று வெறும் ஏக்கப் பெருமூச்சுக்களோடு அதைத்தாண்டிப் போகவேண்டியதுதான்.

எனக்கே இந்த அவதி என்றால்... சாருமதிக்கு...?

சாருமதி இங்கு இல்லை.

அவள் இப்போது இங்கு இல்லாமலிருப்பதே நல்லது.

எப்போதாவது அவள் திரும்பி வருவாள் என்ற நிலையும்இனி இல்லாமலாகும்.

இனி, எந்த ஒருகாலத்திலும், அவள் இங்கு வரப்பிரியப்படமாட்டாள்.

எப்போதாவது வந்திருக்கலாம்.

வராமல் விட்டுவிட்டு இனி ஏங்குவதில் அர்த்தமொன்றுமில்லை.

சாருமதியின் வீடு எப்படியெல்லாம் இருந்தது அப்போது.

வாயிலின் இரண்டு பக்கமும் சரிந்து, வீட்டை நோக்கிச் செல்லும் பச்சைச் செடிகள் மூன்றடிக்கு அழகாகத் தறிக்கப்பட்டிருக்கும். புல்வேலிபோல் பசுமை. முன் படலைக்குக் குடை பிடிப்பது போல் ஜாம்மரம். குறுணல், குறுணலாக சிவந்த பழங்களையும், கூடவே சில குருவிகளையும் கொண்டிருக்கும். பின்வளவில் ஒரு பெரு நெல்லி நின்றது. சாருமதியின் அம்மா பெரிய, நீண்ட கொக்கத்தடி தந்து நெல்லிக்காய் பறித்த ஞாபகம் நெஞ்சின் ஓரத்தில் பதுங்கியிருக்கின்றது.

சிறுவயதில் சாருமதி பள்ளிக்கு வரும்போது, நெல்லிக்காய் கொண்டு வருவாள். எங்கள் வீட்டுப் பக்கம் வேறெங்கிலும் பெரிய நெல்லி இருந்ததில்லை. அவள் ஒன்றொன்றாய், ஒவ்வொருவருக்கும், நெல்லிக்காய் பகிர்ந்துதருவாள். இன்னொன்று... இன்னொன்று... என்றுகேட்டு, அவளது நெல்லிக்காய்களுக்காகவே நான் அவளோடு சிநேகமாயிருக்கிறேன்.

அவள் எனக்கு நெருக்கமான சிநேகிதி என்றில்லை. அவள் என்னூர்க்காரி என்பதால், சிறுவயதில் ஆரம்பித்த நட்பு. அவ்வளவுதான். அவளுக்கு நெருக்கமாக அஞ்சுவும், யாழியும் ஒட்டிக் கொண்டு திரிந்தார்கள். எனக்கு பானு நெருக்கமாயிருந்தாள். சாருமதி எனக்கு சாதாரணமான ஒருவகுப்புத் தோழி. அவ்வளவே.

ஆனால், ஒரு நெல்லிக்காய்க் காலத்தில், அவளோடு என் உறவு முறிந்து போனது.

அது அவளது தோழிகளதும்,

என் தோழியினதும் போட்டியினால் ஏற்பட்டதாயிருக்கலாம்.

ஒவ்வொரு முறையும் பெரிய நெல்லிக்காயில் எனக்குள்ள விருப்பம் உணர்ந்து, கொண்டுவந்து தருவாள் அவள். அந்த நெல்லிக்காய்ப் பரிமாற்றம் எல்லா வித நட்புக்களைவிடவும், அபரிமதமான தாயிருந்தது. ஆனால், அந்தமுறை அஞ்சுவும், யாழியும் என் மீதிருந்த சாருவின் அன்புரிமையைப் பறித்துவிட முனைந்தனர். அதிகூடிய நட்புக்களாய்த் தாங்கள் இருக்கும்போது அவள் எப்படி முதல் நெல்லிக்காயை என்னிடம் தரலாம் என்பதாகத்தான் தொடங்கிற்று அது.

சாரு அதற்குப் பதில் சொல்ல மாட்டாமல் திணறினாள். எத்தனை புதிய நட்புக்கள் வந்தாலும், இளமையிலே ஆரம்பித்த நட்பை அவள் எப்படி உடைத்துவிட முடியும்?

அதற்குள் பானு குமுறிவிட்டாள். நெல்லிக்காய் வேண்டுமானால் சந்தையில் வாங்கிக்கொள்ளலாம். இதற்குப் போய் ஒருநட்புத் தேவையா...? என்று உருவேற்றினாள் அவள்.

அதற்குப் பிறகு சாருமதியும், நானும் பேசிக்கொள்வதில்லை. அஞ்சுவோடும், யாழியோடும், பானு முறுகிக் கொண்டாள். நெல்லிக்காயில் அவர்களுக்கு விருப்பமதிகமில்லாவிட்டாலும், நெல்லிக்காய்க் காலங்களில் என்கண்களில்படும்படி கன்னங்களை உப்பவைத்துக் கொண்டு செல்வதை, நான் கண்டும் காணாத மாதிரிச் சென்றிருக்கிறேன்.

இதெல்லாம், பத்தாம் வகுப்பில் நாங்கள் படிக்கும்போது நடந்தது. பிறகு, இரண்டு வருடங்கள் நாம் பேசிக்கொள்ளாமலேயே கழிந்தது. அம்மா சாருமதி வீட்டுக்குப்போகின்றவேளைகளில், சாருவின் அம்மாவை நிறைய நெல்லிக்காய்களைக் கொடுத்துவிட்டிருப்பாள். அம்மாவுக்கும், சாருவின் அம்மாவுக்கும், நாம் பேசிக் கொள்ளாதது குறித்து நிறையவருத்தம் இருந்தாலும், காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டார்கள்.

சின்ன வயதில் நான் பெரும்பாலும் அங்குதான் விளையாடி வளர்ந்தேன். அவள் வீட்டுமுற்றம். அதில்சரித்து வெட்டப்பட்டிருந்த பச்சை அடர்ந்த குறுவேலிகளுக்கிடையே ஒளித்து விளையாடுவோம். இரண்டு அண்ணன்கள் அவளுக்கு. அவர்களது நண்பர்களால் அவளது வீடு அமர்க்களப்படும். சிறு வயதில் அவர்களோடு சேர்ந்து நானும், சாருவும் விளையாடியிருக்கிறோம். வளர்ந்த பிறகு பையன்கள் நிற்கும் வீடு எனும் நினைப்பு என் குடும்பத்தைச் சலனப்படுத்தியது. அதன் விளைவாக நான் அங்கு போதல் ஓரளவு மட்டுப்பாட்டுக் குள்ளேயே இருந்து வந்தது.

அவளோடு கதைக்காமல்விட்ட பிறகு, அந்தவீடு, எனக்கு முற்றிலும் அந்நியமானது போலிருந்தது. டியூஷனுக்கு, அவளது வீட்டைத் தாண்டித்தான் போய்வர வேண்டியிருந்தது. அவளது அண்ணன்கள், படலையின் ஜாம் மரத்துக் குக் கீழ், யாரேனும் நண்பர்களோடு கலகலத்துக்கொண்டிருப்பார்கள். அவளும், நானும் ஒற்றை, ஒற்றையாக வந்து கொண்டிருப்போம்.

சிலவேளைகளில் அவள் முன்னால்...

சிலவேளைகளில் நான் முன்னால்...

அவளது பெரியண்ணா எங்களைக் கிண்டலடித்துச் சிரிப்பான்.

அவளானால், வீட்டில் அவனோடு அதுகுறித்து மல்லுக்கட்டமுடியும்.

என்னால் அதுமுடியாது.

தலையைக் குனிந்து கொண்டு வந்துவிடுவேன்.

காலம் அப்போது கரும்புக்கைகளால் நிரம்பியிருந்தது.



அம்மாவிடம், அவள் அம்மா கொடுத்தது போக, மீதி நெல்லிக்காய்களை அவளின்அம்மாசந்தைக்குக் கொடுத்தனுப்புவதாகப் பிறகு அறிந்தேன்.

அடுத்த இருவருடங்களுக்கு நாங்கள் பட்டுக் கொள்ளாமல் பழகிக்கொண்டோம். அவளுக்கு அதிகமாய் நண்பர்கள் இருந்தார்கள். இரண்டு அண்ணன்கள் இருந்ததாலோ என்னவோ, அவள் ஆண்பிள்ளைகளோடு மிகவும் இயல்பாகப் பேசுவாள். அது, யார்கண்ணைக்குத்தியதோ தெரியவில்லை. எங்களுக்கு முதல் வகுப்பில் படித்த "சேந்தனோடு" அவள் கதைப்பதாக என் வகுப்புப் பெண்கள் கிசுகிசுத்தார்கள். அவள் இயல்பாய்க் கதைத்ததை அவர்கள் தப்பாய் அர்த்தப்படுத்திக் கொண் டார்களோ...? அல்லது "சேந்தனை.." அவளுக்குப் பிடித்துக் கொண்டதோ அது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாய் இருக்கலாம்.

சிலவேளை, அஞ்சுவும், யாழியும்கூட அவளோடு தொடர்பில் இருந்திருப்பின் அதை அறிந்திருக்கலாம்.

அதைப்பற்றி அவளிடம் கேட்பதற்குரிய எந்த உரிமையும் என்னிடத்தில் இல்லை,

உயர்தரப் பரீட்சை எழுதி மறுமொழி வந்து, இரண்டாம் தடவைக்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருந்த காலகட்டம் அது.

அப்போதுதான், அவள் சீக்கிரத்தி லேயே போய்விடப் போகிறாள் என்றார்கள்.

அவள் அம்மாவுக்கு, உடம்பு முடி யாமல்போய், கடைக்குட்டிப் பெண்ணான

அடிக்கடி குண்டுகள் வந்து விழத்தொடங்கியிருந்தன.

கொஞ்சநாளில் அவளது அம்மா, தன்பேரிலிருந்த ஆறுபரப்புக் காணியை விற்பதற்காக ஓடித்திரிந்தாள்.

நெடுநாள் அலைச்சலின்பின் காணியை விற்றுத்தன் ஆண்பிள்ளைகளைக் கொழும்புக்கு அனுப்பிவிட்டாள். அவர் களும் அதற்குப்பிறகு ஒன்றொன்றாய் ஏதே தோதேசங்களுக்குப் போனதாயறிந்தேன்.

நாங்கள் ஏ.எல்லுக்கு வந்தோம். அஞ்சுவும், யாழியும் பட்டணத்துப் பாடசாலைக்குப் படிக்கப்போனார்கள். பானுவோ, கலைப்பிரிவில் சேர்ந்து கொண்டாள். நானும், சாருவும், விஞ்ஞானப் பிரிவில் ஒன்றிணைந்தோம். பழைய நட்புகள் விலகப், புதுப்புது நட்புகள் சேர்ந்தன. ஆனால், எங்களுக்கிடையிலான இடைவெளி அப்படியேதானிருந்தது.

ஏனோ, என்னாலும் அவளோடு பேசமுடியவில்லை.

அவளும் என்னோடு வலிந்து பேசவில்லை.

அஞ்சுவும், யாழியும் பிரிந் து போனபின் அவள் ஒருநாளும் நெல்லிக்காய் கொண்டுவரவுமில்லை.

அவளுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் வந்தபோது, அவளுக்கு வயது வெறுமே இருபதுதான். அண்ணன்கள் அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்த்தார்கள். அப்போது போக்குவரத்து சிக்கற்பட்டுக் கொண்டிருந்த காலம். வடக்கைத் தாண்டுவதென்பதே பெரும்பாடாக இருந்தது.

அவளுக்குக் கல்யாணம் முற்றாகிற் றென்று, அவளது அம்மா, எனது சித்தியிடம் சொல்லியிருந்த செய்தி என் காதிற்கும் கசிந்து வந்தது.

"இப்பவாவது ஒருக்கால் போட்டுவா..." அம்மாவின் குரலில் சாருமதி மீதிருந்த பரிவு எட்டிப் பார்த்தது.

நெடுநெடுவென்று நீண்ட, நாட்களின் பின்னரானஒருமாலைப்பொழுதில்அவளது வீட்டிற்கு மறுபடியும் சென்றிருந்தேன். சிரித்தபடியே வாசலுக்கு வந்தாள். எனக்கு அவளைப் பார்க்கத் துக்கம் ஒரு பாறை போல, தொண்டைக்குள் அமுத்தியது.

என்ன மனநிலையோடு அவளை அணுகுவதென்று தெரியவில்லை.

இறுகிப் போன மௌனத்துடனிருந் தேன்.

ஒரு வேளை அவள் உண்மையிலேயே "சேந்தனைக்" காதலித்து, தாய்க்காக இந்தக் கல்யாணத்தை ஏற்றிருக்கின்றாள் என்றால், அதற்காக நான் சந்தோஷப்படமுடியாது.

மிக நிறைவாக, இந்தத் திருமணத்தையே அவள் தன் வாழ்வின் உன்னத தருண- மாகக் கருதி அவள் கிளம்புகிறாள் என்றால், அவளை நான் வாழ்த்தாமல் இருப்பது அந்தச் சந்தர்ப்பத்திற்கு இசைகேடாகிப் போகலாம்.

இயல்பிற்கு மீறி என்னாலும் அவளிடம் அதிகம் பேசமுடியவில்லை. டீயும், பிஸ்கட்டும் கொண்டு வந்து தந்தாள். அவ- ளால் அந்தச் சந்தர்ப்பத்தில் அதைமட்டுமே தரமுடிந்தது. அதிலிருந்து அவளது மகிழ்ச்சி குறித்து எதையும் ஊகிக்கமுடியவில்லை. இருவருக்குமிடையே இடைவெளி விழுந் திருந்தது. திரைகழன்று இருவரும் பேச ஆரம்பித்தபோது ஒன்றொன்றாய் ஆட்கள் வரத்தொடங்கினார்கள். அவளது பழைய சிநேகிதிகளும்கூட... எங்கிருந்தோ மோப் பம் பிடித்து வந்துவிட்டார்கள்.

விடைபெற்றபோது அவள் என்னைப் பார்த்து இயல்பாய்ப் புன்னகைத்தாள். நான் அவள் கரத்தைப் பற்றிக் குலுக்கினேன்.

"விஷ் யூ ஓல் த பெஸ்ட்..." என வாழ்த்தினேன்.

குளிர்ந்திருந்த அவள் கரம் கொஞ்ச நேரம் என்கைக்குள் இருக்கவேண்டும் போலிருந்தது.

"மதி..." என்று அவளது அம்மாவின் குரல் கேட்டபோது அவள் என்னிடமிருந்து விலகிக்கொண்டாள்.

"ஓகே...பை..." என விடைபெற்றுக் கொண்டேன்.

அதன் பிறகு அவள் போய்விட்டாள் என்பதனைச் சித்தி மூலம் அறிந்து கொண்டேன். நீண்ட நாட்களுக்கு, அவள் வாசலுக்கு வந்து விடை பெற்ற கணங்கள் என் உள் மனதைக் கிளறிக் கொண்டேயிருந்தன. அன்று வாசலுக்கு வந்த கடைசிக் கணத்தில் அவள் என்னிடம் என்ன சொல்லவந்தாள்...? அவள் கண்களில் இருந்தது என்னவென்பதை என்னால் பின் வந்தநாட்களில் யூகிக்கமுடியவில்லை. அவளது திருமணம் இந்தியாவில் நடந்ததென்றும், கொஞ்ச வாரங்கள் கொழும்பில் நின்ற அவளது அம்மா, தானும் பிள்ளைகளிடம் சென்றுவிட்டாள் என்றும் பிறகு அறிந்துகொண்டேன். அவளுக்கு நெருக்கமான உறவாயிருந்த அவளது மாமா வீட்டில் அவளது திருமணப் புகைப்படத்தையும், அவளது குழந்தையின் புகைப்படத்தையும் பார்க்கக்கிடைத்தது.

அவளைப்பற்றிக் கடைசிக் கணங்களில் ஏற்பட்ட கலக்கம் அந்த நிமிடத்தில் தீர்ந்து போனது.

அவள் நன்றாகத்தான் இருக்கிறாள்.

அவளோடு கதைத்துத் திரிந்ததாகச் சொல்லப்பட்ட சேந்தனிடத்தில் அவள் போனபின்னர் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை. அதனால் என்னிடம் தொடர்ந்து எந்தவிதமான சஞ்சலமும் ஏற்படவில்லை.

அதன் பிறகு சாருமதியின் வீடு கொஞ்சக்காலம் அவளுடைய ஒன்றுவிட்ட மாமாவின் பராமரிப்பில் இருந்தது. ஐந்தாறு மாதங்கள். அப்போது நாங்கள் பெரிய நெல்லிக்காய் வேண்டி அங்கு போவோம். ஒற்றை, ஒற்றையாய் விழும் நெல்லிக்காய்களை உப்பில் ஊறவைத்துச் சாப்பிடுவோம்.

அப்போதெல்லாம் நான் அவளை இரக்கத்தோடும், அவளது தோழி-களை எகத்தாளத்தோடும் நினைத்துக் கொள்வேன்.

ஆனால், பிறகு அதற்கும் வழியில் லாமல்போனது.

ஐந்தாறு மாதங்களில், அவள் வீட்டுமதிலுக்கு மேல் மூன்றடி உயரத்திற்கு தகரங்கள் அடிக்கப்பட்டு, கேற் அருகில் மண் அணைகட்டி காவலரண் ஏற்பட்டது. உள்ளே மேலும் கட்டுமானப்பணிகள் நடப்பதற்கு ஏதுவாய், மணல், சல்லியோடு உழவு இயந்திரங்கள் ஒழுங்கையால் போய்த்திரும்பும்.

உள்ளே பெரிய வேலைப்பாடுகள் நடப்பதாய்ப் பானு சொல்வாள். அங்கே இரவிரவாய் வேலை நடக்கிறதென்றும், யாரோ பெரியவர்கள் தங்குகின்ற அசுமாத்தம் இருந்ததென்றும், ஊருக்குள் பேசிக்கொண்டார்கள்.

ஆனையிறவுப் பக்கம் அடிபாடு தொடங்கமுதல் அந்த வீடு சில நாட்கள் ஒரே கூச்சலும், கும்மாளமுமாய் இருந்தது. போராட்டப் பாடல்கள் உள்ளிருந்து கசட்ரெக்கோடர்களில் உணர்ச்சி ததும்ப எழும்பி உயிரை அருட்டுவதாக இருக்கும். அதன்பின் அடிபாடுகள் நடைபெறும் காலங்களில் விவரிக்கவியலாத ஒரு நிசப்தம் அந்த வீட்டைச் சூழ்ந்திருக்கும்.

இடையில் ஒரு நாள் அந்த வீட்டைக் கடந்து சென்ற வேளையில், சேந்தனை அவ்விடத்தில் கண்டேன். சீருடையு-டன் இருந்தான். எனக்கு அவனை அங்கு கண்டது அதிர்ச்சியாயிருந்தது. அவன் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. உள்ளே போய்விட்டான்.

அதற்குப் பிறகு அவனைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை.

ஒரு வருடம் அவர்கள் மாறிமாறிப் பல குழுக்களாக அந்த வீட்டில் இருந்தார்கள். அதற்குப்பிறகு அவர்களும் அந்த வீட்டில் இருக்க முடியாமற் போனது.

மாறிமாறி வெடிச் சத்தங்கள் துரத்திய ஒரு பொழுதில் அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்தார்கள். பிறகு, மறுபடியும், அந்த இடத்தை அவளது மாமா பராமரிக்கத் தொடங்கினார்.

அந்தவீட்டில்இடைக்கிடைசோதனை-களும், ஆயுதத் தேடல்களும் நிகழும். அங்கே ஒரு தடவை ஒழித்து வைக்கப்பட்ட சில ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதன்பிறகு அந்த வீடு கடும் பாதுகாப்பின் மத்தியில் அமளிதுமளிப்பட்டது. மாமா கூட அங்கு வருவது தடைப்பட்டது. பிறகு கொஞ்ச நாளில் அக்குவேறு, ஆணி வேறாகத் துளைக்கப்பட்ட பிறகு அந்த வீடு மாமாவிடம் கையளிக்கப்பட்டது.

அங்கு நெல்லிமரத்தின் கீழ், பெரியதாக ஒரு பதுங்கு குழி அமைக்கப்பட்டிருந்த தென்றும், அதற்குள் இரண்டு, மூன்று அறைகள் அமைந்திருந்ததென்றும் கதை யோடு கதையாக செய்திகள் வந்தன.

ஒழுங்கைக்குள் இருந்ததாலோ என்னவோ மற்றைய வீடுகள் போல் இராணுவம் அந்த வீட்டைத்தான் எடுத்துக் கொள்ளவில்லை. தொடர்ச்சியாய் மாமாவும் அங்கு போய்த் தங்கி வந்ததனால், அந்த வீடு நெடுநாட்களுக்குப்பின் மீட்கப்பட்டதாய் சொல்லிக் கொண்டார்கள். பிறகு, அங்கிருந்த நெல்லிக்காய் நினைவு மடிந்து போன ஒரு பொழுதில் மீண்டும் அந்த நினைவை மேலெழச்செய்யும் வண்ணம் அங்கு போகவேண்டி நேர்ந்தது.

அது முதலாவது சமாதான காலத்திற்கு முன்னர் வெடித்த போராகவிருந்தது.

கடும் ஷெல் மழைக்கு மத்தியில் மீள முடியாத திணறல் ஏற்பட்டது.

ஓய்வொழிச்சல் இல்லாத ஷெல் லடிக்குள் இருபக்கத்திற்குமிடையிலான யுத்தத்தில் சிக்கிக்கொண்டபோது ஒவ் வொன்றாய் குடும்பங்கள் விலகி ஓடின.

நாங்கள் ஒரு இருபது, முப்பது குடும்பங்கள் எஞ்சியிருந்தோம். ஓடுவதற்கு இடமின்றி சாருமதி வீட்டு பங்கருக்குள் தஞ்சம் புகுந்தோம். ஐந்து பகல். ஐந்து இரவு. அரிசிமாவும், பிஸ்கட்டும், தேநீருமாய் அங்கேயே வசித்தோம். கொங்கிரீட் அறை களுடனிருந்த உறுதியானபங்கர்.

வெடிச்சத்தங்கள் இடைவெளி விட்டபோது, அவளது வீடும், நெல்லியும் அவளது நினைவை என்னுள் வளர்த்துக் கொண்டே இருந்தது. அப்போது நெல்லியில் காய்கள் இருக்கவில்லை. ஆனாலும், நிமிர்ந்து அந்த மரத்தைப் பார்ப்பதற்கு எனதியல்பு தவறிவிடவுமில்லை.

தொடர்ந்து தங்க முடியாமல் ஊரைவிட்டு விலகியபோது, அவளது வீட்டுச் சுவர்கள் ஷெல் சிதறல்களால் உருக்குலைந்திருந்ததைக் காணமுடிந்தது.

முதல்நாளில்கூட அங்குதான் இருந் தோமா...? எனும் ஆச்சரியம் பீதியாய் உருமாற எங்கள் ஊரை முதல் தடவை யாகப் பிரிந்துபோனோம்.

இரு வருடங்களின்பின் மீளவும் ஊர்திரும்பியபோது, எங்களுடைய வீடுகள் போலவே, அவளுடைய வீடும், யன்னல்கள் நொறுங்குண்டு, உருக்குலைந்திருந்தது. நெல்லி மரத்தடியிலிருந்த பங்கர் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டிருந்தது.

மாமா மட்டும், மீண்டும், மீண்டும் அவளது வீட்டைக் கவனமெடுத்துப் பராமரித்துக் கொண்டிருந்தார்.

எனக்கோ அவளது வீட்டைப் பார்க்கும் கணந்தோறும், அவள் ஊரை விட்டுப் பிரிந்தநாளும், அந்த வீட்டில் ஒருபோது சேந்தனைச் சீருடையில் கண்டதுமே மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது.

அவனைப் பற்றிய தகவல்கள் மட்டும் எனக்குத் தொடர்ந்து கிடைக்கவில்லை.

சாருமதி மட்டும் சுகமாய் இருப்பதாய் அறிந்தேன்.

பிறகு எனக்கும் கல்யாணமாகி, குழந்தைகள் பிறந்து, அவர்களும் பள்ளிக் கூடம்போய், நெல்லிக்காயில் ஆசை வைத்து, நெல்லிக்காய் கேட்கிற அளவிற்குக் காலம் வளர்ந்துபோயிற்று.

ஒருநாள், சின்னவனின் ஆய்க்கினை தாளாது சாருமதி வீட்டுக்குப் போய், நீண்ட கொக்கத்தடி எடுத்து நெல்லிக்காய்களைத் தட்டி விழுத்திக் கொண்டிருந்தேன்.

அருகிலே வெடிவைத்துத் தகர்க்கப் பட்ட பங்கர் புதர் மூடிக்கிடந்தது. அதைப் பார்த்தபோது சேந்தன் நினைவில் வந்தான்.

நாங்கள் ஆபத்திற்கு ஒதுங்கிய பங்கர், அவன் ஒரு காலத்தில் தங்கியிருந்த இட மாயிருக்கும். அவன் அங்கே பெரிய பதவி யில் இருந்தானாம். கடைசிப் போரில் காணாமல் போய்விட்டான். அவனைப் பற்றிய எந்தத்தடயமும் இல்லாமல் அவனது குடும்பம் அல்லாடிக் கொண்டிருந்தது.

நெல்லிக் காய்களோடு நானும், மகனும் திரும்பிக் கொண்டிருந்த போது

மாமாவும், இன்னொருவரும் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்தனர்.

முன்பு வாசலிலிருந்து வீட்டை நோக்கிச் சரித்து வளர்க்கப்பட்ட பசியபுல் வேலியின் அடையாளம் கொஞ்சமும் இல்லை.

வந்தவர் தெருவில் இறங்கியதும் நான் மாமாவிடம் கேட்டேன்.

”என்ன மாமா... வாடகைக்கு விடப் போறீங்களோ...?”

”ஏன் வாடகைக்கு விடவேணும்? இவ்வளவு காலம் பாத்த நான் இனியும் பாக்கமாட்டனே...?”

அவரது குரலில் ஆதங்கம் இருந்தது.

அப்ப ஆர் மாமா வீட்டை, இப்பிடிப் பாத்திட்டுப் போகீனை...”

மாமா ஒரு நிமிடம் மௌனமானார். கனத்த கணமொன்று விடைபெற்றபோது பெருமூச்சோடு சொன்னார்.

“வீட்டை விக்கிறதெண்டால், ஆக்கள் பாத்திட்டுத் தானை வாங்குவீனை....”

“என்ன ...” என் சொற்கள் வீறிட்டன.

அது சாருமதியின் சீதன வீடு.

ஒரு காலத்தில் வீடு திரும்புவாள் என எதிர்பார்க்கப்பட்ட சாருமதி.

எதற்காக அவள் வீட்டை விற்க வேண்டும்...?

அவளுக்கென்ன குறைச்சல் அங்கே!

“அப்ப, அவள் இனி வரவே மாட்டாளா....?” என்றேன் அளவிட முடியாத் துயருடன்.

“வரமாட்டாள்...” என்றார் மாமா திடமுடன்.

“ஏன்...?” மீண்டும் கனத்த நிமிடங்கள்.

“சாருமதீன்ரை பிள்ளை போன வருஷம் ஒரு அக்சிடென்ரிலை ஆப்பிட்டிட்டான்...”

“அது போன வருசமேல்லோ... சுகமாப் போச்சுதெண்டறிஞ்சன்...” எனது குரலை உடைத்து மாமா சொன்னார்.

“இல்லை, அவன் இன்னும் கோமா நிலையிலைதான். இன்னும் நினைவு வரேல்லை......”

அதற்குமேல் ஒன்றும் என்காதில் விழவில்லை.

நான் அவளது வீட்டைக் கடைசி முறையாகப் பார்க்கிறேன்.

அவளது நினைவுகளை, கூடவே சிலதுளி அவனது நினைவுகளையும் சுமந்த அந்த வீடு இனி, என் பார்வையில் விழப்போவதில்லை.

எனது மனதில் பல வருடங்களாக வட்டமிட்ட அவளது முகம், இப்போது என்னை அலைக்கழிக்கத் தொடங்குகிறது.



## யுத்தபீதி – War Phobia

விமானக்குண்டு வீச்சுக்குப் பயந்த மனிதனொருவன் ஒரு ஜந்துவாக மாறியுள்ளான். மனமெங்கும் “விமானக்குண்டு” தொடர்பான நினைவுடன் பயந்துகொண்டிருக்கும் நிலையை இது சித்தரிக்கின்றது.

அவன் நெஞ்சுக்குள் வீச்சுடன் கீழ் நோக்கி இறங்கும் விமானமொன்று பூடகமாகக் காட்டப்பட்டுமுள்ளது. (உற்றுப்பார்க்கவும்) எமது நிலம் பிளவுபட்டுமுள்ளது.

**ஓவியர்: கோ. கைலாசநாதன்**

# கண்கள் குருடாகி...!
# கால்கள் முடமாகி...!
# காதுகளும் செவிடாகி...!

fupj;J tpl;l vd; Kfk; fhz
vtUfFk; tpUggk; ,y;iy
,dW....!

vd; ,dk;
vd; ehL
vd; kf;fs;
vdWjhd;
vd; vz;zq;fs; tpupe;jpUe;jd.....!
mtuf Sf;fhfNt
Xb Xb ciye;Jk; ,Uf;fpdwd....!

vd; cUtk; fhz Tk;
vd; MNyhrid fs;Nfl;fTk;
vj;jid vj;jid
kdpj tuTfs;
vd; gpdNd te;jpUe;jdu;..!

,ae;jpuj; Jgghf;fpAk;
ntb kUe;J fFz;Lf Sk;
neQR njhq;fpa eQRf; FggpAk;
vd; cwtha; ,Ue;J s;s du;....!

jkpopr;rpapd; Nahdp fpopj;j
rpq;fggwf;fis f;

fpopj;njLj;jpUf;fpNwd;....!
jkpor;Nrhjupapd; khuG rggpa
Xeha;fisf; frf;fpg;
gpope;njLj;jpUf;fpNwd;....!
vd; tueil apd; trRk;
vd; tujjkpo; nkhopapd; NgrRk;
vd; Jgghf;fpapd; ,aqF ifAk;
vd; iffFz;Lfspd; tRifAk;
vd;id
KdNdwwp KdNdwwp
mrpq;f kdpjuf;fis
Xl Xl
tpulbj; Jujjpapuf;fpwJ.!

vupRthiyglL
fz;fs; $rp fhy;fs; ,oe;J
eilgpz khfp
nksdpjj kdj;JlNdNa
,dW ehDk;...!
mJ $l
Krrpy; tz;bapd;
,Uf;ifapy; ,Uej;gbNa...!

nrkGOjp ,wf;if flbg;gwf;f
nrqFUjp ,iwjjgb Xl
jkpor;Nrhjupapd;Nahdp fpopj;Jk;
jkpor;Nrhjupapd;khuG rggpAk;
cUfFiyj;J Jtkrk; nra;tJ
jkpo;Nrhjud; vdgij
vd; fhJfs;Nfl;fpdwd.....!

fz;fis ,oej vdfF
fhy;fis ,oej vdfF
fhJfSk; nrtplhfpg;NghapUf;fyhNkh
vdW
kl;Lk; epidf;fNt
,dW vd;dhy; KbfpwJ......!

சமரபாகு சீனா உதயகுமார்

# ஆத்ம விசாரம்

– அ.ச.பாய்வா –

அமானுஷ்யமான சூழல்களில்தான் மனிதனுக்கு ஞானம் பிறக்குமென்பதையும், மனிதனின் வாழ்க்கை வட்டமே மிகமிகச் சிறியது தானென்பதையும் நானிப் போதுதான் முதன்முதலாக உணர்கிறேன்.

மன்னம்பிட்டிப் பிரதான வீதியிலிருந்து தெரியாதவன் தலைவகிடிழுத்தாற் போலமைந்த, ஒடுங்கியவோர் ஒற்றையடிப் பாதையின் அந்தத்திலிருக்கும் சேனைத் திடலில், கடந்துபோன என் இருபதுவருட வாழ்க்கையின் அர்த்தங்களைத் தேடிக் கொண்டிருப்பதே ஒரு சுகந்தான்.

எனது குடும்பமும், பிறந்த களிமண் வீடு, வேலியற்றவளவு, பேர, தெம்பிலிமரங்கள், இரண்டு பெட்டி நெல்விதைக்கும் பள்ளத்துப் பனங்களித்தரை, சிறிசேன, பந்துல என்கிற உயிருள்ள உயிரற்ற பிண்டங்களென்று சுருங்கி, அன்பு, பாசம் என்கிற சராசரி உணர்வுகளோடு என் சாதாரண வாழ்க்கை முடியப்போகிறதே என்பதை நினைத்தால் வேதனையாகவும் வெட்கமாகவுமிருக்கிறது.

முரட்டுப் பச்சைக் காக்கித் துணிக்குள் வியர்வையில் மசமசத்துப் போகுமுடலில் ஏ.கே.47ஐயும் "கோல்ற்ஸ்" (ரவைக்கூடு) யையும் ஏந்திக்கொண்டு நானிந்த வன்னிக் காட்டில் நிற்பதில்கூட எனக்கு உடன் பாடில்லை தான். யாரோவொரு பஞ்சத்திலடிபட்ட தொத்தல் ஆமிக்காரனென்று என்னைப் பார்க்கும் எந்தவொரு தமிழனும் கேலி செய்வான்.

இந்த விமர்சனங்கள்கூட, அவனுக்கு எங்கள் சிங்கள இராணுவத்தின்மீது இயற்கையாய் ஏற்பட்ட வெறுப்பாலும் சலிப்பாலும் கூட இருக்கலாம். ஆனால் தோளிலே சுமந்து கொண்டிருப்பது, வெறுமனே துப்பாக்கி மட்டுமல்ல, என்குடும்ப வறுமையுந்தான் என்பதை என்னைப் புரிந்தவர்களைத்தவிர வேறு எவருமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நானும் இவைகளையெல்லாம் பற்றிக் கவலை கொள்ளமுடியாதுதானே.

ஒட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி, ஹாமதுருவினால் வரைந்து ஓதிக்கொடுக்கப்பட்டுக் கறுத்த நாடாவில் கழுத்தில் தொங்கும் செப்புத் தகட்டுக்கூடு. வெல்லநாரால் கோர்த்து இடுப்பில் கட்டப்பட்ட, "கோள்பீ" திறந்தநிலையில் அரைக் காற்சட்டை, பருவகாலத் திற்கேற்ப மாங்காயோ, விளாங்காயோ, சுட்ட தாமரைக் கிழங்கோவென ஏதோவொன்றைக்கார்ந்து கொண்டு சிறிசேனவுடனும் பந்துலவுடனும் ஊர் மனையிலுள்ள குளத்திலோ வாய்க்காலிலோ நீச்சலடித்தல், எருமையேற்றம், கள்ளப்பால் கறத்தலெனக் கடந்து போன என் சிட்டுக்குருவி வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறேன்.

இவ்வாறானதோர் கோலத்தில்தான் என்னையும் பந்துலுவையும் சிறிசே னவை யும் சேர்த்து, எங்களூரில் ஏதோ ஆராய்ச்சிக்கு வந்த 'சுத்தா' ஒருத்தன் (வெள்ளை நிறமான எல் லோருமே

சிறுகதை

**தோளிலே சுமந்து கொண்டிருப்பது, வெறுமனே துப்பாக்கி மட்டுமல்ல, என்குடும்ப வறுமையுந்தான் என்பதை என்னைப் புரிந்தவர்களைத்தவிர வேறு எவருமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.**

எங்களுக்குச் சுத்தாதான்) எடுத்த புகைப்படமொன்று ஏதோவொரு ஆங்கில நாளேட்டில் அவனுக்குப் பரிசுபெற்றுக் கொடுத்ததாக எங்கள் "ஸ்கோல மாத்தயா" சொல்லக் கேட்டுப் பெருமைப்பட்டோம். ஆனால், அந்தச் 'சுத்தா' எங்களைப் பற்றியென்ன எழுதியிருப்பானென்று இப்போதுதான் என்னால் உணரமுடிகிறது. அவனுக்கு நாங்கள் விநோதப்பிராணிகளாய்த் தெரிந்திருப்போம் போல.

ஆனால் இப்போது எனது கழுத்தில் கிடப்பதோ, அந்தப் பழைய கறுத்த நாடாவில் கோத்த செப்புத் தகட்டுக் கூட்டுக்குப் பதிலாக மற்றெல்லா இராணுவ வீரர்களையும் போல தங்கச்சங்கிலியில் கோத்த வெள்ளரசு இலை. ஆனாலும் எனது அப்பா மிகுந்த நம்பிக்கை விசுவாசத்தோடு எனது கழுத்தில், ஒரு நிறை 'பொசன்' தினத்தன்று கட்டிவிட்ட அந்தச் செப்புத் தகட்டுக் கூட்டை நினைத்தால் எனக்கிப்போதும் கண்களில் நீர் முட்டும்.

அது பார்வைக்கு 'சயனைட்' குப்பியைப் போலிருந்ததால், நண்பர்கள் நாங்கள் மூவரும் சேர்ந்து 'அந்த' விளையாட்டு விளையாடுவோம். அந்த விளையாட்டும் சலித்துப்போன ஒருநாள் "கிறெனைட்" விளையாட்டு விளையாடுவோமென்று பந்துல கொடுத்த யோசனைதான் அதற்கு எமனாயிற்று.

எல்லைக் கிராமங்களைக் 'கொட்டி' தாக்கப்போவதாகக் கூறி எங்களூரில் முகாமிட்டு இராணுவம் இளைஞர்களுக்குக் கொடுத்த பயிற்சியின்போது பார்த்ததைப் போல, 'கிளிப்' எறியும் போது "டு... ம்..." என்று, எறிந்தவர் சப்தமிட்டுத் தரையல் 'நிலை'யெடுக்கவேண்டும் என்பதே நிபந்தனை. செப்புத்தகட்டுக் கூட்டின் மூடிக்கு மேலே நாடா கோப்பதற்காக வைக்கப்பட்ட கொழுக்கியை வாயில் வைத்துக் கடித்து மூடியைக் கழற்றி எறிந்து விளையாடிய அன்றே அது தொலைந்துவிட்டது. அதன் பிறகு அப்பாவிடம் வாங்கிய அடிகள், அவரதைத் தேடித் திரிந்த நாட்கள், தாயத்துக் கூட்டை அவமதித்ததன் பரிகாரமாக விகாரைக்குக் கொடுத்த 'தான' என யாவும் நினைவுக்கு வருகின்றன.

அதுமட்டுமா, மன்னம்பிட்டிப் பாலத்தினடியில், வரண்டு கிடக்கும் மாவலித் தாயின் மடியில் அருங்கோடைக் காலங்களில் எங்களுக்குள் நாங்கள் நடத்தும் தென்னை மட்டை காட்டுத் தேங்காய்க் கிரிக்கட் போட்டிகளையும், மாரிக் காலங்களில் பாலத்தின் மேல் நின்று வியந்த அந்த சலப்பிரவாகத்தையும் எண்ணிப் பார்க்கிறேன். காலந்தான் எவ்வளவு பொய்யானது. நிரந்தரமென்பதே ஒன்றுமில்லையா! அப்படியென்றால் எதற்காக இந்த யுத்தம்! புரியவில்லையே புத்த ஹாமுதுருனே.

அதென்ன தேவையோ, குடும்பப் பற்றோ, ஏதோவென்று என்னைப் பிடித்துப் பலவந்தமாய்த் தள்ளிவிட்டாலும், இராணுவத்தில் சேர எனக்கு எவ்வித அடிப்படைத் தகைமைகளும் இருந்ததில்லைதான். 'சமூக பரிஷண' (நேர்முகப் பரீட்சை)யின் போது தான் தெரிந்தது. எனது உண்மையான உயரம் ஐந்தடி இரண்டங்குலமென்று.

விசுக்கோத்துக்காகவே சில நாட்கள்

எங்கள் ‘ஹாமதுறு’ கூட ‘சில்’ ஓதும்போது கொலை செய்யக்கூடாது. அது பாவமென்பார். ஆனாலிங்கு என்னதான் நடக்கிறது? ஒரு வேளை பௌத்தர்கள் பௌத்தர்களைக் கொலை செய்யக் கூடாது. ஆனால் ஏனையவர்களைக் கொலை செய்யலாமெனத் தவறாகப் புரிந்து கொண்டார்களோ, என்னவோ?

ஸ்கூலுக்குப் போன எனக்கு, அப்பா எப்படியோ ‘ஸ்கோல லொக்கு மாத்தயா’ வைக் கெஞ்சிக் கூத்தாடி, இரண்டுபெட்டி நெல்லுக்கும் தெம்பிலிக்குலைக்கும், நான் ஐந்தாம் வருடம் சித்தியடைந்தவனென்று விடுகைப் பத்திரத்தில் எழுதி வாங் கித்தந்தாலும், நான் அதிகமாக எழுதப்படிக்கக்கற்றுக்கொண்டதேஇராணு வத்தில்தான். படிப்பின்றி நானெப்படி சங்கிலி. சப்பாத்தென்று அணிய முடியும். ஏனைய சிப்பாய்களைப் போல.

இத்தனைக்குமப்பால், இராணு வத்தின் கட்டுப்பாடுகள் எனக்கு விசித்திரமாயிருந்தன. இதயமற்ற வெறும் கட்டளைகளுக்காக எதை யுஞ் செய்யப்பழக்கப்பட்ட இயந்திர மனிதர்களுடன் கடந்த ஒரு வருடகா லமாக வாழும் நான், முதல் நியமனம் பெற்று வவுனியாவுக்கும் முருங்கனுக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசத்தின் நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் காடுகள் அழிக்கப்பட்டு, இருநூறு யாருக்கொன்றாய் இரண்டு பேர் கொண்டு சிறுசென்றிகள் சகிதம் நிறைந்திருந்த அந்த ஆளரவமற்ற பிரதேசத்தில், இன்னும் எத்தனை நாள் நான் வாழ வேண்டும் ‘தெய்யனே...!’ நான்கடிக்கு நான்கடியிலான பள்ளம், நான்கைந்து பனையோலையிலான கூரை, ஏழெட்டு மணல் மூடைகள், அவைகளுக்கிடையே துப்பாக்கியுடன், காற்றின் சிறு அதிர்வையும் எதிரியாயெண்ணிக் குறி வைத்தபடி, ஆபத்தின்றிக் கடந்துபோகும் ஒவ்வொரு விநாடியையும் வாழ்வதற்காய்க் கிடைத்த கணங்களாக எண்ணி அற்ப சந்தோஷ த்துடன் நாங்கள்.

இந்தப் பிரதேசத்தின் இயற்கை வளங்கள், வீடுகள், குடியிருப்புகள், கோவில்கள்தான் என்ன பாவஞ் செய்தன? எங்களை அழிவுக்குப் பயன்படுத்தி அதிலிருந்து பெற்ற லாபங்களை உயர- திகாரிகள் அனுபவிக்கிறார்களென்பதும் நாமறிந்த விடயம். ஒருவன் இரத்தத்தை வியர்வையாய்ச் சிந்தி உழைத்ததை இன்னொருவன் அடக்கு முறையால் அபகரிப்பதைப் புத்தபகவான் எவ்வாறு அனுமதிப்பார்? நாங்களெல்லாம் பௌத் தர்களென்று சொல்லவே வெட்கமா யிருக்கிறது.

என்னை மிகவும் பாதித்ததும், மனித அநாகரிகங்களுக்குச் சிகரம் வைத்தாற் போலமைந்ததுமான இன்னொரு விடயம், எங்கள் சென்றிக்கும், தூர்ந்துபோன குழாய்க் கிணற்றுக்குமிடையிலமைந்த பழமைமிக்க அந்தச் சின்னஞ்சிறிய பிள்ளையார் கோ

வில் தான். இவர்களுக்கு என்ன செய்தது. ஒரு கொடூரமான ஆக்கிரமிப்பின் வெளிப் பாடாகவே இதைக் கருதுகிறேன்.

காலங்காலமாக அரசோச்சிவந்து, பூசை புனஸ்காரங்களால் மகிமையுற்று, எத்தனையோ பக்தர்களின் வேண்டு தல்களையெல்லாம் தன்னுட் சுமந்துநின்ற பிள்ளையார் சிதைந்து புழுதியில் கிடக்க, நேற்று வந்த புத்தபகவானைப் பிரதிஷ்டை செய்தது என்ன நியாயம். எங்கள் கிராமத்தில் சேனையை அழிக்கவரும் யானையைக் கூட 'கணதெய்யோ' வென்று அம்மா கையெடுத்துக் கும்பிடுவாளே.

இராணுவத்திலுள்ள அநேகர் பின் தங்கிய ஏழைக் கிராமங்களிலிருந்து வந்தவர்கள்தானே. இவர்களால்கூட இந்தப் பண்புகளை எவ்வாறு நிராகரிக்க முடிந்தது. இல்லை... வேறெதனைத்தான் சாதித்துவிட்டார்கள்? புத்தர் சிலைகளைத் தாம் கைப்பற்றிய இடங்களில் பிரதிஷ்டை செய்துவிட்டால் எல்லாருமென்ன பௌத்தர்களாகி விடுவார்களென்ற எண் ணமா, இல்லை, எல்லாமே பௌத்தப் பிர தேசமாகிவிடுமா?

யுத்தத்தில் கூட, தர்மம் கடைப் பிடிக்கப்பட்டதாமே ஒரு காலத்தில், எங்கள் 'ஹாமதுறு' கூட 'சில்' ஓதும்போது கொலை செய்யக்கூடாது. அது பாவமென்பார். ஆனாலிங்கு என்னதான் நடக்கிறது? ஒரு வேளை பௌத்தர்கள் பௌத்தர்களைக் கொலை செய்யக் கூடாது. ஆனால் ஏனையவர்களைக் கொலை செய்யலாமெனத் தவறாகப் புரிந்து கொண்டார்களோ, என்னவோ? நாங்கள் புரிவதுகூட நியாயமற்ற யுத்தந்தானே உரிமைகளை மறுப்பதுகூடப் பாவமல்லவா?

தனிமையென்பதே ஒருவனுக்குக் கிடைத்த மகத்தான தண்டனை தானென்பதை நான் முற்றாக உணர்கி றேன். காலையிலும் மாலையிலும் பவுசரில் தண்ணீர் கொண்டு வரும் இரண்டு கிழக்கோப்ரல்கள், சாப்பாடு கொண்டுவரும் அருவருப்பான சமையல்காரன், ஒருநாளைக்கு இரண்டு தடவை 'ட்ரக்' வண்டிகளில் கையசைத்துச் செல்லும் முகந்தெரியாச் சகவீரர்கள், காய்ந்து வரண்ட வனாந்தரச் சூழல், புழுதி படிந்தவானம், தார்வீதியில் கான லாய் வெம்பி நெளிந்து காற்றில் கலந்து முகத்திலறையும் உஷ்ணம், இதற்கு மேல் வாசிப்பதற்கு ஒருவரியுமில்லை யென்றாகிப் போன பழைய பத்திரிகையெனச் சலித்துப் போன இவைகளை விட்டால் மனதுக்கு ஆறுதல்தரும் ஒரேயொரு விடயம், எனது சென்றிக்கு நேரே நீண்டு வளர்ந்த இரண்டு நாணற்புற்களை இணைத்து, ஆபத்தான அதன் விளிம்பில் கூடுகட்ட எத்தனிக்கும் அந்தப் பெயர் தெரியாத சிறிய சிட்டுக்குருவிச் சோடிதான்.

இப்போது என்னுலகமோ, மணல் மூடை இடுக்குகளுக்குள்ளே ஒளிந்திருக்கும் மரணத்தைக் கூட அறியாது, கடந்த ஒரு வாரமாக அவையிரண்டும் அந்த இரண்டு நாணல்களையுமிணைத்துக் கூடுகட்டச் செய்யும் முயற்சிகளையெண்ணி வியந்து கொள்வதுதான். இரண்டு நாணல்களையும் இணைக்கும் முயற்சியில் அவை தோற்றுப் போன ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாகக் கொண்டு வந்த மூலப்பொருள்களைச் சேர்த்தால் மூன்று நான்கு கூடுகள் கட்டலாம். சளைக்காத இந்தப் போராட்டத்துள் அவை தமக்குள் என்னதான் பேசியிருக்குமோ. ச்சே... பறவைகளின் மொழி புரியாது போனதேயெனக்கு.

நான்கூட ஒரு தடவை. அந்த இரண்டு நாணல்களையும் சிட்டுகளுக்குத் தெரி யமால் இணைத்து வைப்போமாவென எண்ணியதுண்டு. ஆனால் சிட்டுகளின் கூட்டில் மனிதர்கள் கைமணம் பட்டால் அவை மீண்டுமந்த இடத்துக்கு வராதென அம்மா கூறிய ஞாபகம்.

அதேவேளை இரண்டு நாணல்களையும் இணைப்பதிலவை வெற்றிகண்ட அந்த நாளைதான் எப்படியென்னால் மறக்க முடியும். நானடைந்த சந்தோசத்தை, சென்றியிலிருந்த என் சகாவிடம் கூறியபோது முகத்தைஅஷ்டகோணலாக்கி, "உம்பட்ட வெடக் நே ஒய்... மந்தவசக் மேகுருல்ல ஹீத்த தெக்கம மரணவா" (உனக்கு வேலையில்ல ஓய்... ஒருநாளைக்கு இந்தக் குருவி ரெண்டையும் கொல்லுவன்) என்று கெட்ட வார்த்தையில் சலித்துக் கொண்ட அவனைப் போன்ற ஏராள-மான சடங்களின் நடுவில் நான் வந்து மாட்டிக்கொண்டதே துரதிஷ்ட வசமான நிகழ்வுதானே.

உண்மையிலென்னால் நம்ப முடிய வில்லை. எனது சகா இவ்வளவு மூர்க்கனாய் நடந்து கொள்வானென்று. சிட்டுக்களின் கீச்... கீச்... சப்தம் தனது பகல் கோழித் தூ க்கத்துக்குப் பங்கம் விளைவிப்பதாய்க் கூறி, முற்றுப் பெறாத அதன் கூட்டை, முந்தைய தினம் என் கண்முன்னேயவன் பிய்த் தெறிந்தபோது, அவையிரண்டும் தூரத்திலி ருந்தும் கூட்டினருகில் வந்தும் இரண்டு நாட்களாய் அவல ஒலியெழுப்பிப் பறந்து போனதும், ஒற்றை நாணலில் பிய்ந்து தொங்கிய அந்தப் பாதிக் கூடும், என் மரணபரியந்தம் என் நினைவை விட்டுப் பிரியப்போவதில்லை.

நமது இராணுவம் நாசவேலைகளுக்குப் பேர்போனதென்கிற உண்மையை மெள்ள மெள்ள என்மனம் உள்வாங்கத் தொடங்கு கிறது. மூர்க்கனான சகாவின் முன் கோ ழையாகிப் போனதில் வெட்கமும், ஒரு வேளை இவ்வாறான தனிமை எனக்குள் விரக்தியையும், என் சகாவைப் போன்றே என்னையும் ஆக்கிவிடுமோ வென்கிற பயமும் என்னை ஆட்கொள்கிறது.

இவ்வாறந்தச் சிட்டுக்களைப் போல்தானே இந்தத் தமிழர்களும் வேதனைப்படுவார்கள். திக்கொன்றும் திசைக்கொன்றுமாய்ச் சிதறி, எங்கெல்லா மிருந்து தங்கள் வீடுகளையெண்ணி ஏக்கப் பெரு மூச்சு விடுகிறார்களோ. இந்தப் பாவமும் பழியுமெல்லாஞ் சேர்ந்தொருநாள் என்னையுமென் சந்ததியையும் கருவறுக் கத்தான் போகிறதோ? அதற்குள் நான் விடுதலையாக வேண்டும்.

அன்றைய கடமை முடிந்து சீருடை-களைக் கழற்றிவிட்டு முகாமில் எனக்குத் தந்த 'கஹட்டா'வைப் பருகுகிறேன். இருள் சூழந்த வனாந்தரத்துக்கும், வழித்துத் துடைத்து விட்டதைப் போன்றிருந்த வானத்துக்கு மிடையே, அழித்தல்தான் கருமமென்றில் லாதவொரு புதிய பாதையைத் தேடுகிறேன். நிர்மலமான என் மனத்திரையுள் அது நன்றாகவே தெரி கிறது.

என்ன விலை கொடுத்தாகிலும் இதிலிருந்து நான் விடுதலையாக வேண்டும். என் பெற்றோர்களும் நிட்சயமாய் என்னுணர்வுகளைப் புரிந்து கொள்வார்களென மனம் நம்புகிறது. மாவலியில் நீந்திச் சேற்றுமணம் குடிக்கவேண்டும் போலிருக்கிறது. இதுவுமென்ன, ஒருவகை நிஷ்கரண அவஸ்தையோ?

அந்திவானத்துக் கரைசலுக்கு மேலும் மெருகூட்டிக் கறுப்புப் புள்ளிகளாய் இரண்டு சிட்டுக்கள் பறக்கின்றன. அவைகளேன் என் சிட்டுக்களாயிருக்கக் கூடாது? இங்கில்லா விட்டாலும் அவை வேறெங்கோவொரு பாதுகாப்பான சூழலில், ஏன்... துப்பாக்கிச் சனியன்களின் சுடுசூழல்களுக்குள் கூட ஒருநாள் கூடுகட்டி, அமைதியாய் வாழுமென்ற நம்பிக்கை பிறக்கிறது.

எழுந்து மயங்கிய சிமினி விளக்கின் முன்னமர்ந்து எழுதத் தொடங்குகிறேன். "ஆதரனிய அம்மா தாத்தா வெத்தட்ட..."

**(ஞானம் ஜூன் 2004)**

# விலங்கு நடத்தைகள்...

சிறுகதை

அம்ரிதா ஏயெம்

அந்தக் கப்பல் ஆடி அசைந்து போய்க் கொண்டிருக்கிறது.கப்பலில் ரெண்டாவது தளத்தில் நிண்டு கடலைப் பார்க்கிறேன். எங்கும் பரந்திருக்கிற நீலம், எங்கும் நீலம். எதிலும் நீலம். நீலம் என்பது நிறம் மட்டுமில்ல. அது தூய்மை, ஞானம், தியானம் செய்யிற ரைம்ல நெத்திப் பொட்டில உண்டாகி முள்ளந்தண்டுக்கூடாகப் போய் குண்டலினி சக்தியை தூண்டி பேரின்பத்தை உணரச் செய்யிற அந்தச் சுடர்கூட நீலந்தான். நீலக் கடல் தாய்மையின் வடிவம். ஏனென்றால் எங்களச் சுமந்து எங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுவதால், இந்தக் கடல், இதே கடல்தான் எனது தாய், தந்தையால என்ர ரெண்டு வயதில அறிமுகம் செய்யப்பட்ட கடல், கடல் மேலே கப்பல், கப்பல் மேலே நான் கப்பல் அலைந்து போற மாதிரி என்ர மனமும் அலையத் தொடங்குது.

என்ர பட்டப் படிப்ப நிறைவு செய்ய குரங்குகளில் நான் ஒரு ஆய்வை செய்ய வேணும். அந்தக் குரங்குகள் இப்ப நான் போகப் போற இடத்தில தான் மிகவும் கூட இருக்கிறதாம். எப்படி அந்த ஊரை கப்பல் விட்டு இறங்கி கண்டுபிடிக்கப் போறேனோ என்ட பயம் எனக்கில்ல. நான் சின்ன வயதில குடும்பமா இருந்த நகரப் பகுதியைச் சார்ந்த கிராமப் புறம்தான் அந்த ஊர் என்பதால் எப்படியோ கண்டுபிடிச்சிடலாம் எண்டு மனதில ஒரு தன்னம்பிக்கை இருக்குது. கப்பல் ஆடி அசைந்து போய்க் கொண்டிருக்குது. நிமிர்ந்து என்ர தெற்குப் புறம் நோக்கிப் பார்க்கிறன். இப்ப அந்த ஏழு மாடித் தொழிற்சாலைக்குப் பக்கத்தில கப்பல் போகுது. அங்கே நெறைய மீனெல்லாம் செத்துக் கிடக்குது. கடற்படையினரால் அரைமணிக்கொரு தரம் நீருக்கடியில செய்யிற கிரனேட் சார்ஜினால் சாக்கொல்லப் பட்டவைதானாம் அந்த மீனெல்லாம். கொல்லப்பட்டவை தங்கட முகாமுக்கு அள்ளுப்பட்டுப் போக மீதப்பட்டவையெல்லாம் செத்துமிதக்குது. கப்பல் இப்ப அடிக்கடி உயிர்களை காவெடுக்கும் அந்த மலைப் பக்கமாக போகுது. அந்த மலைப்பகுதி கழியுமட்டும் இந்தப் பிரயாணிகளுக்கு கடவுள் மேலே எவ்வளவு பக்தி. கப்பல் இப்ப இறங்கு துறையை அடைஞ்சிட்டுதுபோல பாதுகாப்பு சோதனைகள் முடிஞ்சவுடன் என்ர பெயர், முகவரி போன்ற விபரங் களையெல்லாம் பொலிஸ் பதிஞ்சிட்டு இறங்கு துறையை விட்டு வெளியேவாறன். பஸ்ஒண்டு அந்தக் குரங்குகள் இருக்கிற ஊர்ப்பக்கம் தாண்டி போகத் தயாரான நிலையில் நிக்குது. அதில ஏறுறன். இப்ப பஸ் என்னச் சுமந்து போய்க் கொண்டிருக்கிது. ஒரு பதினெஞ்சு வருசங் களுக்குள்ள எவ்வளவு மாற்றங்கள். வீதி மருங்கில இருந்த காடுகள் அழிக்கப் பட்டிருக்குது. வீடுகள் நிறைய இடங்களில தரை மட்டமாக்கப் பட்டிருக்குது.

நான் இறங்க வேண்டிய நாற் சந்தியில இறங்குறன். சந்திக்கு மேற்குப் பக்கமா ரெண்டு மைல் போனா நான் சின்ன வயதில இருந்த

அந்தப் பச்சை மாடிவீடு வரும் என மனதில பழைய நினைவுகள் ஓடுது. ஆனா நான் என்ர குரங்குகள் இருக்கிற ஊருக்கு சந்திக்கு கிழக்குப் பக்கமா நாலு மைல் நடந்து போக வேணும்......

நடக்கிறன். வீதி எவ்வளவோ மாறியிருக்குது. பள்ளமும் படுகுழியுமாய். வீதி ஓரத்திலிருந்த கண்டல் காடுகள் கண்டபடி அழிக்கப்பட்டிருக்குது. வீதியோட சேர்ந்தாப் போல ஒரு ஓடையும் வீதிக்குப் போட்டியாய் ஓடிக் கொண்டிருக்கிது. இங்க வீதியின்ற ரெண்டு ஓரத்தில இருக்கிற வீடெல்லாம் ஓட்டையும் உடைசலுமாய் காணப்படுகுது. நிறைய வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டும் இருக்குது. குண்டுகள் சன்னங்களினது வேலையாக்கும் இதெல்லாம் என நினைச்சுக் கொள்ளுறன். கூரையில்லாத வீடுகளில் ஜன்னல், கதவு நிலைகள் பிடுங்கப்பட்டு இருக்குது.

திடீரென நிறையச்சப்பாத்துச்சத்தங்கள் கேட்கத் தொடங்குது. சீருடை அணிஞ்ச ஆக்கள் வந்து கொண்டிருக்காங்க. ஏதோ தாக்குதல் ஒண்ட நடத்தி முடிச்சிட்டு வாறாங்கள்போல்தான்தென்படுகுது? அதில அவங்களுக்கு வெற்றியோ? தோல்வியோ? எத்தனை பேர் செத்தாங்களோ தெரியாது?. அவங்க என்ன நோக்கி வர வர எனக்கு பயம் வரப் பார்க்குது. ஒரு வேளை அவங்க வாற எதிர்ப்பக்கம் நான் போறேனோ? அல்லது நான் போற எதிர்ப்பக்கமா அவங்க வாறாங்களோ தெரியாது? இதில என்ன பயம் வேண்டிக் கிடக்குது. நான் என்ன பயங்கரவாதி மாதிரியா இருக்கிறன். அப்ப வீதிய திரும்பிப் பார்க்கிறன். வீதியில ஒருத்தரும் என்னத் தவிர இல்ல. ஒரு சீருடைக்காரன் எனக்கிட்ட வந்து அவன்ர மொழியில விசாரிச்சு சந்தேகம் தீர்க்கிறான். இந்த சீருடைக்காரனிடம் கொள்ளையா ஆண்மையும், ஆணவமும் இருக்குது. முகத்திலேஅகங்காரம்நெரம்பிவழியுது. ஒரு வேளை அவன்ர வீடு ஆளுயரமேயில்லாத ஒத்த அறைக் குடிலோ என்னவோ? இவனுக்கு கலியாணம் கட்டாத ரெண்டு அக்காக்களும், தங்கைகளும் வயல்ல வேல செய்யிற ரெண்டு தம்பிமாரும் பத்தாம் வகுப்பை மூணு தடவை படிக்கிற ரெண்டு தம்பிமாரும் இருக்கலாம். இல்லாட்டி ரெண்டு தம்பிமாரும் வேறெ எங்கோ சீருடைக்காரனாலையும் செய்யலாம்.

இவைகளை நெனச்சிக் கொண்டு அந்தப் பாலத்தை தாண்டுறன். ஒரு பதினஞ்சு வருசங்களுக்குமுந்திஒருமாலைப்பொழுதில நானும் என்ர சொந்தக்காரப் பெண்ணும் ஆளுக்கொரு சைக்களில் இந்தப் பாலம் வரைக்கும் வந்து திரும்பியிருக்கம். இந்தப் பாலத்திற்கும் அந்தப் பாலத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்குது. இங்க நிறையத் தூண்கள் உடைஞ்சி காணப்படுகுது.

பாலத்த தாண்டி வந்து கொண்டிருக்கன். இந்த உச்சி வெயிலுக்கு வீதியில ரெண்டு சைற்றிலயும் மரங்கள் குடை போல அமைஞ்சி குளிர்மை குடுத்துக் கொண்டிருக்குது. அப்ப எனக்கு முன்னால தூரத்தில அஞ்சாறு பொடியன்கள் நின்று கொண்டிருக்கிறத பார்க்கிறன். அவங்கள யாரென மதிச்சிட்டன். அவங்கள் முகத்தில சிரிப்பும் இல்ல, ஆனா கவலயும் இல்ல. செருப்பு போட்டிருக்காங்க. அவர்களிடம் இயல்புக்கு மீறிய அழுத்தம் இருந்தது. உண்மையில இயல்புக்கு மீறிய அழுத்தம் வாறத்திற்கு அவங்களின் கடந்த காலம் கசப்பான மாதிரி இருக்க வேணும். வாழ்க்கையில நிறைய அடிகள் பட்டிருக்க வேணும். அந்தத் திடகாத்திரமான உடம்புள்ள பொடியன்கள் என்னப் பார்க்கிறாங்க. நான் புன்னகைக்கிறன். அவங்க பதிலுக்கு புன்னகைப்பதா அல்லாட்டி வேண்டாமா என்று யோசிச்சிட்டு கஸ்டப்பட்டு புன்னகைக்கிறாங்க. அவங்கள தாண்டிப் போறன். என்னையே பார்த்துக் கொண்டிருக்காங்க.

***

விடிகாலைச் சூரியக் கிரணத்தின் வெம்மை என்னைத் தட்டியெழுப்புது. கட்டிலில் படுத்தபடி ஜன்னலுக்கூடாக பார்க்கிறன். அந்த நாற்சந்தி, நீரோடையின் வளைவு எல்லாம் தெளிவாகத் தெரியுது. தூரத்தில விவசாயம் செய்யாம பல வருசங்களா கைவிட்ட தரிசு நிலத்தில புல்லு முளைச்சு அது பச்சைக் கம்பளம் மாதிரி காட்சியளிக்குது. இக்கரைக்கு அக்கரை பச்சை அது மாதிரி என்னவோ?

"குய்.... குய்.... குய்..." என்று சத்தம் கேட்குது. திரும்பிப் பார்க்கிறன். பெரிய குரங்கு ஒண்டு ஜன்னலுக்கு வெளியில இருந்து எனக்கு பயம் காட்டுது. நானும் பதிலுக்கு அது மாதிரிக் கத்துறன். பின்ன அந்தக் குரங்கு போயிட்டுது. ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருக்கிற இந்த ரெண்டு அறை வீட்டுக்கு வந்து ஒரு வாரமாயிட்டுது. மெல்ல மெல்ல ஊரும், இந்த வீடும், குரங்குகளும் பழக்கமாயிட்டுது. என்ர அறைக்குப் பக்கத்தில இருக்கிற பெரிய ஆல மரத்திலதான் குரங்குகள் தங்குது. பகல் நேரத்தில பன்ரெண்டர மணியிலிருந்து ஒண்ணரை மணிவரையும் சிறுதூக்கம் செய்யுது. பின்ன குறூப் குறூப்பா பிரிஞ்சி விளையாடுவதும், சாப்பிடுவதும், சேர்க்கை செய்து ஓடிப் பிடிச்சும் விளையாடுது.

திடீரென அலறலுடன் சேர்ந்த மாதிரி குரங்கொன்றின் சத்தம் கேட்குது. அது அசாதாரணமான சத்தம் என்று உணர்ந்து கொள்ளுறன். வெளிய வந்து பார்க்குறன். குரங்கொன்று மண்டை வெடிச்சி ரெத்தம் வழிஞ்சி நான் பார்ப்பதற்கு இடையில் அஞ்சாறு முறை மூச்செடுக்க கஸ்டப்பட்டு செத்துப் போட்டுது. மழைக்கால இருட்டென்றாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாதாம். இது எப்பவும் உண்மையில்ல எண்டு எத்தனை பேருக்கு தெரியுமோ தெரியாது. என்ர யுனிவர்சிட்டி வளவுக்குள்ளேயே கூட மூண்டு



me;j
jpl fhj;jpuKs;s
nghbad;fs;
xUj;jid jiyia nkhl;il
mbr;rpÞ fUk;Gs;spÞ nrk;Gs;sp
Fj;jpÞ rTf;fhy; mbr;rpÞ
elj;jpf;fpl;L mtd;u Nknyy;yhk;
nuj;jk; topQ;rp nfhz;bUf;f
te;J nfhz;bUf;fpdk; vd;d
jtW nrQ;rhNdh njupahJ.
,td; Vd; ,g;gb mtidj;
jz;bf;fhq;fNsh- mtd; fOj;jpy
VNjh Nghl;khl;b mjpy VNjh
vOjg;gl;bUf;FJ. J}uj;jpy
vz;ljhy vd;dhy thrpf;f
Kbayy;y. ,g;g vd; [d;dYf;F
NeNuAs;s Kr;rej;jpf;F nfhz;L
te;J mq;F ,Uf;fpw Gspakuj;jpy
nghbad;fs; mtidf; fl;Lfpdk;
M! mtd; ekf;Fj; njupQ;r td;
me;jj; Njhzpf;fhud; fOj;jpy;
fple;j Nghl;il thrpf;fpwd;
"vdJ kfisf; fwg;opj;jtd;
ehd;".

குரங்குகள் பிடி பிழைச்சி செத்திருக்குது. அவை விழுந்து கிடந்தாலும், உடனே முதலுதவிக்கு குரங்குக்கு கிட்ட போக வேலாது. அது தற்கொலை முயற்சி மாதிரி. நாம் சத்துருவா மித்திரனா உண்டு மற்றக் குரங்குகளுக்கு தெரியாது. எல்லாம் சேர்ந்து நாலு வேட்டைப் பல்லாலும், இருபது நகத்தாலும் தாக்கத் தொடங்கினால் அதோ கதிதான். இப்போ செத்த குரங்கைச் சுற்றி பதினைஞ்சுக்கு மேலே குரங்குகள் நிற்கிது. ஒரு குட்டிக் குரங்கு செத்த குரங்கைச் சுற்றி கட்டிப் பிடிச்சி அழுது கொண்டிருக்கிது. சின்ன கறுத்த முலைக் காம்பு அதற்கு இருந்தது. ஜெனி என்று பெயர் வைக்கிறன். அதற்கு அருகிலே முலைக்காம்பு நீண்டு தொங்கும் பெரிய குரங்கு செத்த குரங்கை தட்டிப் தட்டிப் பார்த்து தன்ர தலையில கைவைச்சி எதையோ தொலைச்சிவிட்டது. மாதிரி சோகமாக கண்ணில் நீருடன் நிலத்தையும் மரத்தையும் மாறி மாறி அண்ணாந்து பார்க்குது. செத்த குரங்கை ஜெனி கட்டிப் பிடிச்சி அழுது கொண்டிருந்ததைப் பார்க்கையில மனசுக்கு கஸ்டமாக இருக்குது.

இந்த பெரிய பெட்டைக் குரங்கு ஜெனியின் தாயாக இருக்கணும் போல. தாய்க்கு வீணா என்று பெயர் வைக்கிறன். செத்துக் கிடக்கும் குரங்கு ஜெனியின் தகப்பனாக இருக்கணும் போல. அதற்கு விக்கி எண்டு பெயர் வைக்கிறன். விக்கி எண்ட பேர் வச்சா வகுப்பில அடிக்கடி என்ன கிண்டல் பண்ணும் அந்த தாடிக்காரனை பழிவாங்கியது போல் கூட இருக்கும்.

விக்கியை கட்டிப் பிடிச்சி அழுதுக்கிட்டிருந்த ஜெனியை வீணா தகப்பனாக்கிப் போட்டுது. அப்பவும் ஜெனி திமிறிக்கொண்டிருக்குது. தன் தகப்பனில்லாத எதிர்காலத்தப் பத்தியா? அல்லது சாப்பாட்டப் பத்தியா? தூங்குகின்ற மரக்கிளையைப் பத்தியா? தகப்பனின் அன்பின் பிரிவைப் பத்தியா? ஆனா ஏதோ ஒண்டு ஜெனிக்கும் வீணாவுக்கும் ஏதோவொரு வகையில் இழப்பாத்தான் இருக்கணும் போல. எப்படி விக்கி செத்திருக்கும்? சாப்பாட்டுக்கும், பெண்ணுரிமைக்கும் போட்டி போட்ட மத்தக் குரங்குகள் ஒரு வேளை ஒரு மரத்திலிருந்து மத்த மரத்திற்கு தாவற ரைம்ல தட்டியும் விட்டிருக்கலாம். இங்கே எல்லாம் விரவிக்கிடப்பது போட்டியும் பொறாமையும் தானே. அடக்குதலும், அடங்குதலும்தானே.

ரெண்டு கிழமைக்கு பிறகு இண்டைக் குத்தான் ஜெனியும், வீணாவும் விளையாடுவதைப் பார்க்கிறன். காரணம் மூணாவது குரங்கு. ஆண் குரங்கு. அதற்கு பரா என்று பெயர் வைக்கிறன். மூணும் ஓடிப்பிடிச்சி விளையாடிக் கொண்டிருக்கிது. அதற்குப் பின்ன மூணு நாளுக்கு தொடர்ச்சியா மூணும் ஒருமிக்கத்தான் இருக்கிது. வீணா பராவை துணையாக்கிக் கொண்டு விட்டது போல. ஜெனிக்கு புதுசா ஒரு அப்பா கிடைச்சிருக்கார் போல. வாழ்க்கை என்பதில் பரம்பிக் கிடப்பது வளைத்தலும், வளைதலும், மயங்குதலும், மயக்குதலும், துணையாதலும், துணையாக்குதலும் தானே.



முக்கிப் பிடிச்சி ஒடையில முங்கி முங்கி குளிச்சிக் கொண்டிருக்கிறன். ஒரு தரம் முங்கி எழுந்து நிமிர்ந்து பார்க்கிறன். ஒரு தோணி என்ர தலைக்கு நேரே தெர-

யுது. அதில ஒருவன் தன்னந் தனியே வலை வீசிக் கொண்டிருக்கிறான். அவன் வலை வீசுவதையே பார்த்துக் கொண்டிருக்கன். பதினஞ்சு வருசத்துக்கு முன்னால ஒரு வலைப்பாட்டில எவ்வளவு மீன்கள் படும். ஏன் இப்ப குறஞ்ச போச்சு? ஒரு வேளை யுத்தம் காரணமாக்கும். அந்த மெல்லிய கறுத்த வலை வீசுற தோணிக்காறன் தோணி யுடன் என்னை நெருங்குகிறான். ஏதாவது கதைக்கணும் என்பதற்காக மீனப்பத்தி விசாரிக்கிறன். நான் அவனோட கதைச்சது அவனுக்குச் சந்தோசம் எண்டு அவனது முகத்தைப் பார்த்ததும் புரிஞ்சி போச்சி.

தோணி, இப்ப எனக்குப் பக்கத்திலிருந்த துறையடிக்கு போய்க் கொண்டிருக்கிது. பொதுவாக ரெண்டு துறையடிகள் இருக்கிது. ஒண்டு குளிக்கவும், மத்தது தோணி தள்ளி வைக்கவும். இப்ப இரண்டு பெண்களும் நெருங்கி வருகினம். ஒரு பெண் நடுத்தர வயது. மற்றது இளவயது. ரெண்டு பேரும் அம்மாவும் மகளுமாக இருக்கணும் போல. குளிச்சி வெளியேறிய நான் கரை யாலேயே நடந்து அந்த தோணித் துறைக்குப் போறன். இப்ப தோணி தரை தட்டிட்டுது. அந்த ரெண்டு பெண்களும் தோணியைப் பிடிச்சி தோணிக்காரனுடன் சேர்ந்து தோணியை கரைக்கு இழுக்கினம். நானும் உதவி செய்ய நெனச்சி தோணியில கை வைக்க அவர்கள் அதை மறுக்கினம். ஒரு வேளை எனக்கு கஸ்டம் தரக்கூடாதாக்கும் எண்டு நெனக்கிறாங்களோ தெரியாது.

தோணிக்குள் கிடந்த மீன்களை அந்த ரெண்டு பெண்களும் கோர்வையாக்கினம். கோர்வையாக்கின கொஞ்ச நேரத்தில அடி மாட்டு விலைக்கு மீன்கள் வில போகுது. மீன்கள் போன பின் முகத்தில் அவங்களுக்கு திருப்தி இல்ல போல. மீன் வித்த காசு. இன்றைய, நாளை ஒரு வேளை ஒப்பேற்ற போதுமோ என்னவோ? தெரியாது. நான் இந்த நடுத்தர வயதுப் பெண்ணிடம் கதை கொடுக்கிறன். இளவயதுப் பெண் தனது மகளென்றும், முதலாவது திருமணத்தில் பிறந்தவளென்னும், தோணிக்காரன் கணவனென்றும், தனது முதற் கண-வனை பத்து வருடத்திற்கு முன்னால் சீருடைக்காரர்கள்கூட்டிச்சென்றுகொண்டு போட்டார்கள் என்றும் சொல்லுகிறாள்.

பெரிய முள்ளை சின்ன முள் துரத்த, அது நிமிசத்தை துரத்த, பின் மணியை, நாளை, மாதத்தை துரத்திச் சென்று விட்டன. நான் இந்த ஊருக்கு வந்து ஆறு மாதமாயிட்டுது. எனது புறஜக்ட் இன்னும் முடிய ஆறுமாதம் இருக்குது. துரத்தல்கள் மாதங்களுக்கிடையே நடந்து கொண்டிருந்த பிரக்ஞையிலிருந்து விடுபட்ட நேரம் எனது அறைக்குப் பக்கத்து ஆல மரத்தில் குரங்குகள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன. அதில பத்தொன்பது பேர். எல்லோருக்கும் பேர் வச்சிருக்கன். எல்லாம் என்ர வகுப்புத் தோழர்களின் பெயர்களின் சுருக்கம்தான். தெரிந்தால் கொன்றுபோட்டு விடுவானுகளாக்கும்.

கிழக்குப் பக்கமாக இருந்த கிளை பலமாக ஆடிக்கொண்டிருக்குது. என் னெண்டு பார்க்கிறன். அங்கே பராவும், ஜெனியும் இருக்காங்க. ஜெனி முனகிக் கொண்டிருந்தது. வர வர பராவின் நடத்தை காட்டுமிராண்டித் தனமாகி வருவதை அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறன். ஒரு முறை ஜெனிக்கு முதுகுப் பக்கமாக கடிச்சிவிட்டது. அதற்கு நான்தான் மருந்து போட்டு விட்டன். இப்ப ஜெனியை பரா புணருவதற்கு முயல்கிறது. நாலு காலில் ஜெனியை நிற்க வைச்சி பரா பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறது. ஆனா ஜெனி ஒத்துக் கொள்கிறாப் போல இல்லையே. பரிதாபமாக பின்னால் திரும்பிப்பார்க்குது. உடனே பரா ஜெனியின் கழுத்தின் பின் பகுதியை கடித்துவிடுகிறது. அப்ப ரெத்தம் கசியத் தொடங்க வலியி-னால் ஜெனி அலறுகிறது. பின் ஜெனிய நாலு காலில் நிற்க பரா அதன் முழங்கால்

சில்லுக்கு பின்னால மேலே தன்ர ரெண்டு பெரிய கால வச்சி ஏற, ஜெனி துவண்டு கீழே விழுகுது. பின் ஏறி ஜெனியின் பிற்பக்கத்தில் தன் முன்பக்கத்தினால் புணருது. ஜெனி மீண்டும் துவளத் தொடங்குது. ஒரு வேளை ஜெனியின் தாய் வீணா இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமோ தெரியாது. இந்தப் பாலியல் வல்லுறவு வீணா இல்லாத நேரங்களில்தான் நடக்கின்றன என்று நான் இரு மாதங்களுக்கு பின் தான் உறுதி செய்து கொள்ளுறன். வாழ்க்கை என்பது நம்புதலும், நம்ப வைத்தலும்தானே. பலதார திருமணம் இல்லாத இந்த குரங்கினத்தில் (மொனோகெமி) ஜெனி கர்ப்பமானால் இந்தக் கர்ப்பத்திற்கு காரணம் பரா என்றால் அது மிகவும் முறைகேடான ஒன்றாகத்தான் இருக்கும். பராவின் அட்டகாசம் அந்த 'பன்யன் ட்ரூப்பில்' (ஆலமர குறூப்) அளவுக்கு மீறிப் போயிட்டுது. இது 'மேல் ஓவர்ரேக்கிங்' காகத்தான் இருக்குமாக்கும். கட்டிலில புரண்டு புரண்டு படுக்கிறன். நித்திரை இன்னும் வரவில்லை. இன்றையுடன் இந்த ஊருக்கு வந்து ஒரு வருசம். இன்றுடன் என்ர புறஜக்ட் முடிஞ்சிட்டுது. நாளைக்கி என்ர யுனிவர்சிட்டிக்கு நான் போக வேணும். புறஜக்ட் றிப்போர்ட், புத்தகங்கள், உடுப்புக்கள் வைக்கப்பட்ட பையை தூக்கிக் கொண்டு மேற்குப் பக்கமாக நாலு மைல் நடந்து, அந்த நாற்சந்தியை அடைஞ்சி, பஸ்ஸோ அல்லது வேனோ அல்லது வேறு என்னத்தையோ பிடிச்சி ஜெற்றிக்குப் போய், பத்தரை மணிக் கப்பலைப் பிடிக்கணும். ஒரு வருசத்திற்குப் பின்ன இந்த ஊரை விட்டுப் போறது சந்தோசமென்றாலும். இந்த ஊர், இந்த வீடு, இந்த ஓடை, இந்த ஆல மரம், இந்தக் குரங்குகள் இவைகள பிரிஞ்சு போறத நினைக்கிற நேரத்தில கொஞ்சம் துக்கமாத்தான் இருக்கிது. இந்தக் குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் என்ன வித்தியாசம். ரெண்டு வயது குழந்தையும்,

சேரன்

# காடாற்று

வெந்து தணியாத
காடாற்றச் சென்றோம்
ஒரு குருவி கிடையாது
ஆள்காட்டி வெளிக்குமேல்
ஆகாயம் இல்லை

கண் தொட முடியாத எல்லைவரை
சாம்பல் வீசிக் கிடக்கின்ற நிலமற்ற நிலத்தில்
எலும்புகளைத் தேட
ஒருவருக்கும் வழி இல்லை

எனினும்

பாலூற்ற ஊற்றுப் பெருகும்
எம் கண்ணீரைக் கேளிக்கையாக்கி
கொண்டாட்டத்தோடு
களிக்கூத்து ஆடும்
மற்றவர்களுக்கு
நம்
மாற்றுவழி என்ன?

இதயப் பெருந்தீயைக் குளிர்விக்க
இன்றைக்கு ஒன்றுமில்லை

காயாத குருதித்துளிக்கு
சாட்சியம் இல்லை

முற்றிற்று என்று சொல்லி
காற்றிலும் கடலிலும் கரைத்துவிட்டுக்
கண்மூட
காற்று கிடையாது
கடலும் கிடையாது
காடாற்று எப்போதோ?

ரெண்டு வயது குரங்கும் எனக்கு ஒரே மாதிரித்தான் இருக்கினம். அறிவிலும் சமம்தான். எனக்கு இவைகள் மாமாட, சித்தப்பாட பிள்ளைகள் மாதிரி. அவைகள் என்னிடம் கேள்வி கேட்கும். நானும் பதில் சொல்வன். நானும் கேட்பன். அவையும் மறு மொழி சொல்லும். இந்தக் குரங்குகளின்ர இன்பத்திலும், துன்பத்திலும், சாவிலும், பிறப்பிலும் கலந்த கொண்டிருக்கன். இந்த ஆலமரம் இவைகளின் அரண்மனை மாதிரி. அதில் அரசோச்சிய அரசனும், அரசியும், அரசிளங்குமாரர்களையும், சேவகர்களையும் எனக்கு தெரியும். மற்றவர்களின் கண்ணுக்கு வாயில்லாத வாலுள்ள வானரங்களாத் தெரியும். எனக்கோ அவற்றின் ஒவ்வொருவரின் கதை கூட நன்றாக இந்த ஒரு வருடத்தில் தெரியும். என்ன, மனிதனும் குரங்கும் எவ்வளவு செயல்களிலும் நடத்தைகளிலும் ஒண்டுதான். ஆனால் மனிதன் வாலில்லாத வானரம்.

வையகத்தை
சுருக்கிவிட்டவைகளின்
துணையோடு
தொலைந்துவிட்ட
வாலைத்தேடி....

என மனசு கவிதை சொல்லத் தொடங்க தூக்கம் கண்களைச் சொருக தூங்கிப் போகிறன்.

சூரியன் பரவி, பறவைகள் வெளிக்கிளம்பி, பொழுது விடிஞ்சி காலை நேரமாகி விட்டிருந்தது. நான் யுனிவர்சிட்டி திரும்ப தயாராகி நிற்கிறன். எனது பேக்கை தோளில் போடுகிறன். அப்போ, மக்களின் கத்தல் ஆரவாரச் சத்தம் மெல்ல மெல்ல கேட்கத் தொடங்குது. அப்போ தெளிவாக கேட்கத் தொடங்குது. ஒரு ஆள் அடிபட்டு அலறும் சத்தமும், சவுக்கடியும் கேட்குது. அப்போ அலறுபவனுக்குத்தான் அடி விழுதாக்கும் என்று நான் நினைக்கையில இப்ப ஆல மரத்திலயும் பாயும் சத்தமும், அரளும் சத்தமும் கேட்கத் தொடங்குது. பல குரங்குகள் ஒண்டாகச் சேர்ந்து ஒரு குரங்கை தாக்கத் தொடங்குது என்று புரிஞ்சு கொள்ள எனக்கு கனநேரம் எடுக்கல்ல.

இப்போ ஜன்னலுக்கூடாக எனக்கு தெளிவாக தெரிகிற தூரத்தில் சனங்கள் வந்து கொண்டிருக்காங்க. சனக் கூட்டத்தில் அந்த திடகாத்திரமுள்ள பொடியன்கள் ஒருத்தனை தலையை மொட்டை அடிச்சி, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, சவுக்கால் அடிச்சி, நடத்திக்கிட்டு அவன்ர மேலெல்லாம் ரெத்தம் வழிஞ்சி கொண்டிருக்க வந்து கொண்டிருக்கினம். என்னதவறு செஞ்சானோ தெரியாது. இவன ஏன் இப்படி அவனைத் தண்டிக்காங்களோ? அவன் கழுத்தில ஏதோ போட் மாட்டி அதில ஏதோ எழுதப்பட்டிருக்குது. தூரத்தில எண்டதால என்னால வாசிக்க முடியல்ல. இப்ப என் ஜன்னலுக்கு நேரேயுள்ள முச்சந்திக்கு கொண்டு வந்து அங்கு இருக்கிற புளியமரத்தில பொடியன்கள் அவனைக் கட்டுகினம். ஆ! அவன் நமக்குத் தெரிஞ்சவன். அந்தத் தோணிக்காரன். கழுத்தில் கிடந்த போட்டை வாசிக்கிறன். "எனது மகளைக் கற்பழித்தவன் நான்".

இப்ப ஆல மரத்திலுள்ள கிளைக ளெல்லாம் உடையிற மாதிரி சத்தமும், அலறல்களும் கேட்கத் தொடங்குது. முச்சந்தியைப் பார்க்கப் பிடிக்காமல் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறன். மரத்திலிருந்து ஒரு குரங்கு தலை அடிபட விழுந்து, அஞ்சாறு முறை மூச்செடுக்க கஸ்டப்பட்டு மூச்சுக்கு ஏங்கி மேலெல்லாம் பல்லும் நகமும் பட்டு சதை கிழிஞ்சி ரத்தம் ஓடி செத்துப் போய்விட்டிருந்தது. கிட்டப் போய்ப் பார்த்தான் அது பரா. சத்தம் இல்லாமல் தனது கடைசி மூச்சையும் விட்டுட்டுது. அப்போது புளியமர முச்சந்தியிலிந்து டுமீல். என்று மூண்டு சத்தங்களும், யாரோ தன்ர தாயை அலறிக் கூப்பிடுகிற சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

# ஞானம் சஞ்சிகையின் "போர்க் காலக் கதைகள்" தொகுப்பு நூல் குறித்த இரசனைக் குறிப்பு



- முருகேசு ரவீந்திரன் -

ஈழத்துச் சிற்றிதழ்கள் பலவும் போர்க்காலம் குறித்த சிறுகதைகளை அவ்வப்போது வெளியிட்டாலும் "போர்க்கால கதைகள்" என்ற மகுடத்தில் எந்தவொரு சிற்றிதழும் செய்ய முன்வராத ஒரு செயலை ஞானம் வெளிக்கொணர்ந்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது. அதுவும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியிலேயே தமிழ் எழுத்தாளர்களதும், சிங்கள எழுத்தாளர்களதும் யுத்தம் பற்றிய மனவிகசிப்புக்களை காய்தல் உவத்தல் இன்றி வெளிவரச் செய்ததில் ஈழத்து இலக்கிய உலகு அவருக்கு கடமைப்பட்டிருக்கிறது.

போரை மக்கள் விரும்புவதில்லை. போர் அவர்களின் மீது திணிக்கப்படுகிறது. போர்க்காலம் போன-காலமாக இருக்கட்டும். "போயின போயின துன்பங்கள்" எனப் பாரதி போன்று பாட முடியாவிட்டாலும் துன்பங்களிலிருந்து விடுபடலே இன்றைய தேவையாகும்.

ஞானம் சஞ்சிகை ஆசிரியரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட "போர்க்காலகதைகள்"இந்தநாட்டில்நடந்த கொடிய யுத்தம் பற்றிய பதிவாகவுள்ளது. போர்க்காலத்திலே ஞானம் சஞ்சிகையின் முதல் 50 இதழ்களில் வெளியான சிறுகதைகள் 20 சிறுகதைகளைத் தேர்வு செய்து அந்தக் காலப்பகுதியிலேயே (2007) வெளியிட்டது என்பது முக்கியமானது.

போர்க்காலக் கதைகள் தொகுப்பு நூலில் அதன் ஆசிரியர் தி.ஞானசேகரன் நூல் வெளிவருவதற்கு காரணமாயமைந்தவர் மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது மித்ர ஆர்ட்ஸ் கிரியேஷன்ஸ் வெளியீடாக ஞானம் பதிப்பகத்துடன் இணைந்து இந்நூல் வெளிவந்திருக்கிறது.

தேர்ந்த எழுத்தாளர்களால் இந்தக் கதைகள் எழுதப்பட்டுள்ளன. இராணுவ நடவடிக்கைகளும் பொருளாதாரத் தடைகளும் தமிழர்களின் வாழ்வை எப்படி எல்லாம் சீரழித்தன என்பதைப் பெரும்பாலான கதைகள் சித்திரிக்கின்றன.

சில கதைகள் மேற்சொன்ன விடயங்களோடு தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாமல்இன்னும்விசாலமாகவுள்ளன.

அத்தகைய கதைகள் பற்றி இங்கு குறிப்பிடுவது எமது சிந்தனையின் மட்டுப்பாட்டைத் தளர்த்த உதவலாம்.

"போர்க்கால கதைகள்" தொகுப்பிலேயுள்ள "நாம் யார்?" சிறு-கதை புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் எம்மவர்கள் வன்முறையில் ஈடுபடுவதைச் சித்திரிக்கின்றது. டென்மார்க்கிலுள்ள அகதிமுகாமில் பல நாடுகளிலும் இருந்து வந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்த முகாமில் பொழுது போக்கிற்காக திரையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. உதைப்பந்தாட்ட போட்டி நேரடியாக ஒளிபரப்பப்பட்ட போது இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் இரு பிரிவுகளா-கி அரங்கினுள் அடிபடுகின்றனர். அங்கு போடப்பட்டிருந்த கதிரைகளை உடைக்கின்றனர். ஈற்றில் அம்புலன்ஸ் வந்து காயப்பட்டவர்களை ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறது.

டென்மார்க்கிலுள்ள அகதிமுகாமில் சிங்கள இளைஞன் ஒருவனும் இருக்கிறான். அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துச் சந்தை வியாபாரி ஏகாம்பரம் அண்ணா இப்படிக் கூறுகின்றார்.

"அந்தச் சிங்களவன் சாடையாய் தமிழும் கதைப்பானாம். உவன் கொழும்பில் வேலை செய்த கொக்குவில் தமிழ்ப் பொம்பிளை ஒண்டைக் கலியாணம் செய்திருக்கிறானாம். அதாலை கொக்குவிலிலும் நாங்கள் இரண்டு பேரும் குடியிருக்க ஏலாதென்றும் சிங்களப் பகுதியிலையும் நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து வாழ முடியாதென்றும் இதை வச்சுத்தான் அகதி அந்தஸ்த்துக் கேட்டு வழக்கைச் சோடிச்சிருக்கிறானாம்." என்கிறார்.

"உவங்களைக் காதலிக்கிற எங்கட பெட்டையளை சந்தியில் வைச்சுச் சுடவேணும். எங்கட சனம் இன்னும் திருந்தேல்லை" என்பது கூடவிருந்தவரின் விமர்சனம்.

உதைப்பந்தாட்டப் போட்டியைப் பார்த்து எம்மவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்ட போது,

"இங்கிட்ட வந்தும் ஏன் மச்சான் தங்களுக்குள்ள சண்டை போடுறீங்க"

இப்படிக் கேட்ட கொஞ்சு தமிழுக்குரியவன் அந்த சிங்கள இளைஞன் தான். தொடர்ந்து கேட்டான்.

"ஏன் மச்சான் இண்டைக்கு ஸ்ரீலங்காவும் டென்மார்க்கும் விளையாடியிருந்தா யாரை ஆதரிப்பீங்க? யாரை அடிச்சிருப்பீங்க? என்னையா?"

என்றபடி அந்த சிங்கள இளைஞன் இருளில் மறைந்தான். சிந்திக்க வைக்கும் வரிகள் "நாம் யார்?" சிறுகதையை முல்லையூரான் எழுதியுள்ளார்.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதிய "அது உடைந்து விடக் கூடாது" சிறுகதை சமாதானம் உடைந்து விடக் கூடாது என்பதாகவும் கருதலாம். சமாதான உடன்படிக்கையின் பயனாக A-9 நெடுஞ்சாலை திறக்கப்படுகிறது.

கதையின் நாயகிக்கு மாதா சிலையொன்றைத் தன் வீட்டு முகப்பில் வைக்க வேண்டும் என்பது நீண்ட கால ஆசை. ஷெல் வீச்சுகளும் குண்டு வீச்சுகளும் மலிந்த யுத்த பூமியில் வீடுகள் எப்போது சிதிலமாகுமோ என்ற பயம் எல்லோருக்கும் இருந்தது. இந்த நிலையில் சாந்த வடிவான அன்னைமேரியின் சிலையை வீட்டு முகப்பில் வைப்பது சாத்தியப்படவில்லை.

சமாதான உடன்படிக்கைக் காலத்தில் கொழும்புக்கு வந்த போது கடையில் அன்னைமேரியின் அழகிய சிலையைக் கண்டு ஆசைப்பட்டு வாங்குகிறாள். மிகப் பத்திரமாக அதைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே அவளது எண்ணமாகவுள்ளது. "றெஜிபோமினால்" சுத்திக் கட்டப்பட்ட சிலையை தன்மடியில் வைத்தவாறு வானில் யாழ்ப்பாணம் போக-றாள்.

இராணுவ முகாம்களில் சோதனைகள். ஏன் இப்படி சோதிக்கிறார்கள் என்பதும்

புரியவில்லை. அந்தச் சோதனைகளைத் தாண்டியபோது மீண்டும் சோதனை. மீண்டும் பொதி பிரிக்கப்படுகிறது. தமிழிலே விசாரணைகள். “விலை என்ன? பற்றுச் சீட்டு இருக்கிறதா?” வரை நீண்ட வினாக்கள். “இந்தச் சிலைக்கு வரி செலுத்த வேண்டும்” என்ற பவ்வியமான வேண்டுகோளில் வந்து நிற்கிறது என யோகேஸ்வரி சிவப்பிரகாசம் தனது சிறுகதையிலே எழுதியுள்ளார்.

சமாதானம் எத்தகைய அழகாக இருந்தபோதும் அது சாதாரண மக்களுக்கு எட்டாமல் இருப்பதன் ஆதங்கம் இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. சின்ன ஆசைகளுக்கு கூட தடைகள் ஏற்படுத்தப்படும் போது மனம் துவண்டு விடுகிறது. இவை எல்லாந்தான் அவலங்களுக்குள் எம்மை ஆழ்த்தியதோ என எண்ணத் தூண்டுகிறது.

“அது உடைந்து விடக் கூடாது” சிறு-கதை வித்தியாசமான வெளிப்பாடு.

“போர்க்காலக் கதைகள்” தொகுப்பில் காணப்படும் மற்றுமொரு மாறுபட்ட கதையாக “அலைகடல் தாண்டி” சிறுகதையைக் குறிப்பிடலாம். மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் இதனை எழுதியுள்ளார்.

யுத்த அவலத்தினால் பாதிக்கப்பட்டு பாக்கு நீரிணையை கடந்து தமிழகம் சென்ற எம்மவர்கள் பற்றியதாக கதை எழுதப்பட்டுள்ளது. தமிழக அகதி முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் அனுபவிக்கும் துயரங்கள், அத்துன்பங்களில் இருந்து விடுபட்டு தாயகம் வரவிரும்பினாலும் அதற்கு தடைபோடும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் பற்றியும் இங்கே சொல்லப்படுகிறது.

இப்படித் தமிழகம் வந்து அல்லல்படுவதை விட அங்கேயே செத்துப் போயிருக்கலாம் என முகாம்களில் உள்ள தமிழர்கள் நினைக்கின்றனர்.

அதிகாரிகளுக்கு தெரியாமல் முகாமிலிருந்து இலங்கை வர முயல்கின்றனர். பணம் கொடுத்து படகில் மன்னார் வரும்போது படகோட்டி வலுக்கட்டாயமாக மணல் திட்டி ஒன்றில் இவர்களை இறக்கி விடுகிறான். கடல்பெருக்கினால் மணத்திட்டியை நீர் மூடுகிறது. அவர்கள் கடலுக்கு இரையாகின்றனர். அவர்களின் சடலங்கள் தாயத்தில் கரையொதுங்குவதாக கதை முடிகிறது. போரின் மற்றுமொரு பக்கத்தை செங்கை ஆழியன் தனது “அலை கடல் தாண்டி” கதையிலே அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்கள இலக்கியத்துறையில் புகழ் பெற்ற எழுத்தாளராகவுள்ள நீரங்க விக்கிரமசிங்ஹ எழுதிய “மணல்” சிறுகதை “போர்க்கால கதைகள்” தொகுப்பிலே இடம்பெற்றுள்ள மிக முக்கியமான கதையாக கருதப்பட முடியும்.

வன்முறையும் அதற்கான எதிர் வினையும் நிலைமைகளை எப்படிப் பாரதூரமாக்குகின்றன என்பதை கதைவாயிலாக நீரங்க விக்கிரமசிங்ஹ வெளிப்படுத்தியுள்ளார். போரினால் பாதிக்கப்படுபவர்கள் எப்போதும் சாதாரண பொது மக்களாக வேயுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் அகதி முகாமில் தங்கியிருக்கும் சிங்களவர்களில் சிலர் காளிகோயில் பகுதியில் உள்ள அகதி முகாமில் தங்கியிருக்கும் தமிழர்களை கொலை செய்யத் திட்டமிடுகிறார்கள். சிங்களவர்களின் அகதிமுகாமில் இருக்கும் ரத்னபால மனிதாபிமானம்மிக்கவன். கொக்கிளாயில் அவன் தந்தையும் தங்கையும் போராளிகளால் கொல்லப்பட்டு விட்டார்கள்.

ஆனாலும் அந்த அகதி முகாமில் உள்ள சில சிங்களவர்களைப் போன்று அவனால் சிந்திக்க முடியவில்லை. ரத்னபால சிங்களவர்களைப் போன்றே தமிழர்களையும் நேசிக்கிறான். யாராக இருந்தாலும் மனிதர்கள் கொல்லப்படக் கூடாது என்பது அவனது எண்ணமாகவுள்ளது.

காளி கோயில் அகதி முகாமில் உள்ள தமிழர்களை தாக்கச் செல்லும் தனது முகாமைச் சேர்ந்தவர்களை பார்த்து ரத்னபால இப்படிக் கேட்கிறான்.

"நாங்களும் அகதிகள் அவர்களும் அகதிகள். நாங்க அடிக்கிறது இன்னொரு அகதி முகாமுக்கு. ஆனா நாங்களும் அவர்களும் எந்த நாளும் அகதிகளாகத்தான் இருக்கிறோம். இப்படி அடிக்கிறது சரியா."

இந்த வரிகள் மனித மனச்சாட்சியைத் தட்டுவதாகவுள்ளது. வன்முறை எந்த வடிவத்தில் எங்கிருந்து வந்தாலும் அது வெறுக்கத்தக்கதே என்பதை நீரங்க விக்கிரமசிங்ஹ தனது "மணல்" சிறுகதையில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழர்கள் எல்லோரையும் பயங்கரவாதிகளாக சித்திரிக்க முயலும் சிங்கள இனவாத ஊடகங்கள் நீரங்க விக்கிரமசிங்ஹ போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிடாது விடலாம். உண்மைகள் கசப்பானவையாக இருந்தாலும் அவை உண்மைகளே. எமது இன அடையாளம் பண்பாடு எமக்கு எவ்வளவு முக்கியமோ ஏனைய இனங்களுக்கும் அது முக்கியமானது என நோக்கும் மனப்பாங்கு மனித மனங்களை இணைக்கும்.

அவலங்கள் அவலங்கள் தான் அதனை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் அதற்கும் அப்பால் கல்லாகிப் போயுள்ள மனங்களிலும் ஈரம் இன்னும் இருக்கிறது.

மேற்சொன்ன விடயத்தை சித்திரிப்பதாக "போர்க்கால கதைகள்" தொகுப்பிலேயுள்ள "ஆத்ம விசாரம்" கதையுள்ளது. அ.ச.பாய்வா எழுதிய இந்தக் கதை சிங்கள இராணுவ வீரனின் மனவுணர்வை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

வேலையற்றிருக்கும் சிங்கள இளைஞன் ஒருவன் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இராணுவத்தில் சேருகிறான். குடும்ப வறுமை அவனை ஆயுதம் தூக்க வைக்கின்றது.

அவனோடு "சென்றி"யிலிருக்கும் சக இராணுவ வீரர்கள் இவனின் இளகிய மனதை.. புரிந்து கொள்ளமுடியாதவர்களாக இருக்கிறார்கள். காலவோட்டத்தில் தனது மனமும் தனது சக இராணுவ வீரனின் மனம் போன்று ஆகிவிடுமோ என இவன் கவலைப்படுகிறான்.

மிக யதார்த்தமாக கதையை அ.ச.பாய்வா எழுதியுள்ளார். மனிதர்கள் எல்லோருமே நேசிப்புக்குரியவர்கள். நேசிப்பை விரும்புகிறவர்கள். சந்தர்ப்ப சூழ்நிலை அவர்களின் போக்கினை மாற்றியமைக்கிறது.

"போர்க்காலக் கதைகள்" தொகுப்பிலே யுள்ள பல சிறுகதைகள் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

தொகுப்பிலுள்ள எல்லாச் சிறுகதைகளையும் விரிவு கருதி குறிப்பிட முடியவில்லை. டிலான் ஜெயந்தன், ராணி சீதரன், தி.ஞானசேகரன், புலோலியூர் செ.கந்தசாமி, ஓ.கே.குணநாதன், தாமரைச்செல்வி, சுதர்ம மகாராஜன், குமுதினி கலையழகன், வதிரி இ.இராஜேஸ்கண்ணன், ச.முருகானந்தன், முல்லை மணி, தாட்சாயணி, கே.விஜயன், முத்து, லோ.சுதர்மன் ஆகியோர் எழுதிய நல்ல கதைகள் "போர்க்கால கதைகள்" நூலிலே இடம்பெற்றுள்ளன. இந்தக் கதைகள் ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு வலுச் சேர்ப்பதாகவும் காலத்தின் பதிவாகவுமுள்ளன.

ஈழத்து சிறுகதை இலக்கியத்துக்கு ஞானம் சஞ்சிகை ஆற்றியுள்ள காத்திரமான பங்களிப்பாக "போர்க்கால கதைகள்" தொகுப்பினைக் கருத முடியும்.




நேரம் அதிகாலை 3:55.

தூரத்தில் நாயொன்று இடைவிடாது குரைத்துக்கொண்டிருந்தது.

ஆசிரியர் சமய பாடம் நடத்திக் கொண்டிருந்தார். வகுப்பின் கடைசி வரியில் அவன் அமர்ந்திருந்தான். அவன் நெற்றியில் நீலநிற வியர்வைத் துளிகள் முத்திட்டிருந்தன! மடி பருத்த வியர்வைத் துளியொன்று மெதுவாக அவன் நெற்றியின் வழியே கீழிறங்கத்தொடங்கியது. வழியத் தொடங்கிய அந்த வியர்வைத்துளி நெற்றியின் நடுவிலிருக்கும் அவனது ஒற்றைக்கண்ணின் இமையைத் தொட்டு விட்டது. மெய்யுணர்ச்சி மூளைக்குச் செய்தி சொல்லத் தன் முதுகின் நடுவிலிருந்து நீண்டிருக்கும் மூன்றாவது கையினால் அந்த வியர்வைத் துளியைத் துடைத்துக் கொண்டான். துடைத்துவிட்ட கை மீண்டும் முதுகை அடைந்தது.

சமய ஆசிரியர் திருவாசகப் பாடத்தைத் தொடர்ந்தார்...

“... கல்லாய் மனிதராய் பேயாய் கணங் களாய்....”

டிங்... டிங்...டிங்....டிங்.... பாடசாலை இடைவேளைக்கான மணி நான்கு முறை அடித்தது!

அனைத்து மாணவர்களும் வகுப் பறையைவிட்டு பாய்ந்து வெளியே ஓடினார்கள். ஆசிரியரும் வகுப்பைவிட்டு வெளியேறிவிட்டார். அவன் தனித்து விடப்பட்டான். மெதுவாக எழுந்து கொண்டான். அவனுக்கு இடுப்பிலிருந்து பாதம் வரைக்கும் ஒரு காலாக இருந்தது. இடுப்பிலிருந்து பாதம் நோக்கி ஒடுங்கிச் சென்றது அந்த ஒற்றைக் கால். அவன் அந்த ஒற்றைக்காலினால் உந்தி உந்தி வகுப்பறையைவிட்டு வெளியேறினான்.

மாணவர்கள் மைதானத்தில் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். விளை யாடும் மாணவர்களை ஏக்கத்துடன் பார்த்த படியே அவன் மெதுவாக உந்தினான்.

எங்கிருந்தோ வந்த நாயொன்று அவனருகே வந்து அவனுடன் நடக்கத் தொடங்கியது. அந்த நாய்க்கு ஆறு கால்கள். அதன் வலது இடது புறங்களில் சிகப்பு நிற இறக்கைகள் நீண்டிருந்தன. நாயின் நடுநெற்றியிருந்து வெள்ளை நிறக் கொம்பொன்றும் நீண்டிருந்தது. அந்தக் கொம்பின் நுனியிலே வெள்ளிப் பூண் கட்டப்பட்டிருந்தது.

“நீ... சாப்பிட்டியா..” அவன் நாயைப் பார்த்துக் கேட்டான். அது ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தன் சிகப்பு நிற இறக்கையை மேலும் கீழுமாக அசைத்தது.

மாணவன் ஒருவன் பின்துரத்த வேகமாக ஓடிவந்த சிறுவனொருவன் அவனுடன்

பலமாக மோதிக்கொண்டான். மோதலினால் சமநிலை தடுமாறிய அவன் வீசப்பட்டு நிலத்தில் விழுந்தான். விழுந்த அவன் வலது கையில் காயம். காயத்திலிருந்து பச்சை நிற குருதி பீறிட்டு அடித்தது.

இந்தக் களேபரத்தால் பயந்த நாய் விரைவாக பறந்து சென்று மரமொன்றில் குந்திக்கொண்டது. மரத்திலிருந்தவாறு கீழே விழுந்துக்கிடக்கும் அவனைப் பரிதாபமாகப் பார்த்தது.

"ஐயோ.. என்ரை பிள்ளை விழுந்துட்டான்..."

யாழினி கதறியபடி விழித்துக் கொண்டாள். அவள் உடல் வியர்வையால் குளித்துவிட்டது. கண்ணோரத்தில் கண்ணீர்த்துளி எட்டிப்பார்த்தது. மனைவியின் ஓலத்தால் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் மோகனன்.

"என்ன.. என்ன... கனவேதும் கண்டனியே...?"

மோகனன், யாழினியின் முகத்தை



ஆதரவாகத் தடவிக்கொடுத்தான். யாழினி கணவனின் கேள்விக்கு ஆம் என்று பதில் சொல்லவுமில்லை இல்லை என்று மறுக்கவுமில்லை. அவள் கனவின் தாக்கத்திலிருந்து இன்னமும் மீளவில்லை. யாழினி கண்ட கனவை அவளுக்கு வார்த்தையாகக் கோர்த்துச் சொல்லத் தெரியாது; முடியாதும் கூட. மோகனன், தண்ணீர் கூசாவிலிருந்த நீரைக் கோப்பையில் நிரப்பி கோப்பையுடன் மனைவியின் அருகில் அமர்ந்துகொண்டான். யாழினியை ஆதரவாகத் தன் மார்பில் சாய்த்து நீரைப் பருக்கி ஆசுவாசப்படுத்தினான். தண்ணீரை குடித்துவிட்டு யாழினி மீண்டும் கட்டிலில் படுத்துக்கொண்டாள். மோகனனும் படுத்துக்கொண்டான்.

மோகனன் தன் மனைவியின் எட்டு மாத வயிற்றை மெதுவாக வருடிக் கொடுத்தான். உள்ளிருக்கும் தன் குழந்தைக்கு வலித்துவிடக்கூடாது என்பது அவனது கவனம். அவர்களுக்கு அது முதல் குழந்தை. கல்யாணம் நடந்து நான்கு வருடங்களுக்குப் பின்னர் யாழினிக்கு குழந்தை உண்டாகியிருந்தது.

"அதிகாலையில் கண்ட கனவு பலிக்குமாமே....?" யாழினி கேட்டாள்.

".....ம்...... என்ன கனவு கண்டாய்..?" நித்திரைத் தூக்கத்தில் மோகனன் கேட் டான்.

"......." யாழினி மௌனித்தாள்.

மோகனனின் கண்களை நித்திராதேவி மெதுவாக அணைத்தாள்.

"அப்பா...." மோகனனைத் தொட்டவாறு யாழினி அழைத்தாள்.

"..ம்....." அவன் 'ம்...' கொட்டினான்.

"அப்பா......." யாழினி அவனைத் தட்டினாள்.

"....ம்...... ம்....."

"அப்பா......" பலமாக உலுப்பினாள்.

மோகனன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

"என்ன.....?" இப்போது மோகனனின் குரலில் பதட்டம் தெரிந்தது.

"பிரச்சினை ஏதும் வராதுதானே...?"

அவள் கேள்வியில் எதிர்பார்த்து குறித்திருந்த பதிலையே மோகனன் கூறினான்.

“..... ஒரு பிரச்சினையும் வராது.. நீ பேசாமல் இப்ப படு”

அவனுடைய மீதி நித்திரை அவ்வளவு தான்....! யாழினிக்கு ஆதரவளிப்பதிலேயே அன்றைய மிஞ்சிய இராப்பொழுது கழிந்தது.

தாய் தந்தையரே அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இரு சாரரினதும் பூர்வீகம் யாழ்ப்பாணம். சில ஆண்டுகளுக்கு முன்னரே மோகனனின் குடும்பம் கொழும்புக்கு வந்துவிட்டது. இப்பொழுது மோகனன் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் கணக்காள ராகப் பணியாற்றுகின்றான். மல்லாகத்தைச் சொந்த ஊராகக் கொண்ட யாழினி யின் குடும்பத்தினர் யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வன்னியில் சில ஆண்டுகள் வசித் தனர். யாழினி ஈழ யுத்தத்தின் அனைத்துக் கூறுகளையும் கேட்டவள், பார்த்தவள், அநுபவித்தவள்.

பங்கர் குழி..

துப்பாக்கிச் சன்னம்..

செல்த் துண்டு..

குண்டுச் சத்தம்..

அவலச் சாவு..

சிதறிய மனித ஊண்..

இரத்த வாடை.... யுத்தம் கொடியது.

மூளைச் சலவைச் செயற்பாட்டில் சிக்குண்டு அவளும் அள்ளுப்பட்டுச் சென் றவள். சுயமாகச் சிந்திக்க தெரியாத இள வயதில் உணர்ச்சி வெறியில் போராளியாக மாறியவள். போராளிகளின் ஆரம்பப் பயிற்சியில் அவளின் வயிற்றில் அடிபட ஒரு கிழமையிலேயே வீட்டிற்குத் திரும்பி ஓடி வந்தவள். அவளின் விதி அவளுக்கு போராட்ட உணர்ச்சியை மீண்டும் தூண்டவில்லை; போராளிகளும் அவளைத் தேடிவரவில்லை.

ஈழப்போர் அமர்ந்தாலும் யாழினியின் மனம் போரின் அநுபவங்களினால் உளைவதை மோகனன் உணர்ந்திருக்கிறான். அவர்களுக்கு குழந்தைப்பேறு பிந்தப் பிந்த யாழினியின் மனம் பலவற்றுடன் முடிச்சுப்போடத் தொடங்கியது.

ஏன் குழந்தைப் பாக்கியம் இன்னமும் தனக்குக் கிட்டவில்லை? தினம் தினம் பயம் மனதை ஒடுக்கினதாலோ, இதயத் துடிப்புகளின் எண்ணிக்கையினும் அதிகமாகக் கேட்ட துப்பாக்கி வெடி-களினாலோ, பொழிந்த குண்டுகளின் அதிர்வுகளினாலோ, நாள்தோறும் தான் சுவாசித்த கந்தகப் புகையினாலோ, அல்லது வயிற்றில்ப் பட்ட அடியினாலோ... எல்லாவற்றிக்கும் விடை தெரிந்த இறைவ-னிடமே பாரத்தைப் போட்டுவிட்டாள். அவனும் யாழினிக்கு விடை கொடுத்தான்.

அவர்களுக்குத் திருமணமாகி நான்கு வருடங்களுக்குப் பின்னர் யாழினி கருவுற்றாள்.

ஒரு தாய் பெறும் அனைத்து இன்ப உணர்வுகளையும் அவளும் பெறத் தொடங்கினாள். கறைபடிந்த நினைவு கள் அவளைவிட்டு மெதுவாக மறை யத் தொடங்கின. தன் நிழல் கண்டு பயந்தவள் தன் நிழலுருவம் கர்ப்பத்தினால் மாறுவதற்காகக் காத்திருந்தாள். நாட்கள் நகர்ந்தன.

யாழினி கருவுற்ற நான்காவது மாதம் மீண்டுமொரு சோகம் அரங்கேறியது.

ஒரு நாள் காலை யாழினி வயிற்றைப் பிடித்துக்கொண்டு துவண்டு படுத்துவிட்டாள். வலியின் உக்கிரத்தால் துடித்தாள். மோகனனின் வற்புறுத்தலின் பேரில் வைத்தியரைக் காண உடைய ணிய எழும்பியவள் தன் கால்களைப் பார்த்து அதிர்ந்து போனாள். இரு கால்களிலும் கறுப்பு நிற இரத்தம் வழிந்திருந்தது.

கரு கலைந்துவிட்டது.

வீட்டில் மயான அமைதி. நீண்டதொரு மௌன ஒப்பாரிக்குப் பின், கொடுத்தவன் எடுத்துக்கொண்டான் என இருவரும் மனதைத் தேற்றிக்கொண்டனர்.

கருவின் மீதித் துண்டுகள்கர்ப்பத்தில் இருக்கும் என்றும், அதை முறையாக நீக்க வேண்டும் என்றும் வைத்தியராகப் பணியாற்றும் மோகனனின் நண்பர்கள் சிலர் அவனுக்கு அறிவுரை செய்தனர். அதிகம் பின்போடக்கூடாது என்றுமனதில்உறுத்த, இது நடந்த நான்காம் நாள் யாழினியை வைத்தியர் ஒருவா-ிடம் அழைத்துச் சென்றிருந்தான்.

அவர் ஒரு பிரபல்யமான வைத்தியர்; பழுத்த பழம். யாழினியின் வயிற்றை ஸ்கான் செய்தார். மீண்டும் ஸ்கான் செய்தார். மீண்டும் மீண்டும் ஸ்கான் செய்தார்.



"எல்லாம் அந்த அல்லாஹ்வின் செயல்; குழந்தை உயிரோடு இருக்குது" அவர் வார்த்தைகளை கவனமாகப் பொறுக்கி அடுக்கிக் கூறினார். டொக்டர் கூறியது மட்டும்தான் தாமதம், யாழினி உணர்ச்சிப் பெருக்கால் விம்மி வெடித்தாள்.

"டொக்டர்.. கறுப்பு நிற இரத்தம் நிறைய வந்தது, அதற்கு என்ன காரணம்?" மோகனன் கேட்டான்.

"மிஸ்டர் மோகனன், நீங்கள் கேட்பதற்காக நான் ஒரு பதிலை உருவாக்கிக் கூறிவிடலாம். ஆனால் உண்மையில் எனக்குக் காரணம் தெரியாது. ஆனால் குழந்தை உயிரோடு இருக்கு" அநுபவ முதிர்ச்சியினால் ஏற்பட்ட தெளிவு அவர் பதிலில் இரண்டறக் கலந்திருந்தது.

"டொக்டர்.. குழந்தைக்கு... குறையொண்டும் வராதுத-ானே...?" யாழினி உடைந்த குரலில் கேட்டாள்.

"........"
டொக்டர் பதில் கூறவில்லை.

"வலது குறைவு. மரபணு சீரின்மை (Genetic Disorder) அல்லது டவுண் சின்ட்றோம் (Down Syndrome) ஏதும் ஏற்பட வாய்பிருக்கா..? டெஸ்ட் ஏதும் செய்து பார்க்கலாமா?" மோகனன் டொக்கரின் மௌனத்தைத் தொடர்ந்து கேட்டான்.

மேலைத்தேய நாடுகள் பலவற்றில் கரு உண்டாகியவுடனேயே குறைகளை இனங்காண டவுண் சின்ட்றோம் டெஸ்ட் போன்ற பல பரிசோதனைகளைச் செய்து விடுவார்கள்.

சின்ட்றோம் என்பது பல்வேறுபட்ட நோய்களின் தொகுப்பைக் குறிக்கும்.

டவுண் சின்ட்றோம் பரிசோதனையின் வாயிலாக மரபணுக்களில் ஏற்பட்டிருக் கக்கூடிய பிரச்சினைகளின் அறிகுறிகளை கண்டுகொள்ளமுடியும். குறைகள் ஏதும் இனங்காணப்பட்டால் பெற் றோரிடம் அனுமதி பெற்று கருவைக் கலைத்துவிடுவார்கள். இப்படிச் செய்வது குழந்தைக்கும் நல்லது பெற்றோர்களுக்கும் நல்லது என்பது அவர்களின் வாதம்.

டொக்டர் தன் மூக்குக் கண்ணாடியை கழற்றி மேசையில் வைத்தபடி கூறி-னார். "மோகனன் டவுண் சின்டறோம் டெஸ்ட் இலங்கையிலும் செய்யலாம். அம்நியோசென்டிசிஸ் (Amniocentesis) என்ற ஒரு டெஸ்ட் இருக்கு. கர்ப்பமாகி நான்கு மாதத்தில் செய்யலாம். வயிற்றிலே ஊசியினால் குத்தி குழந்தையைச் சூழவுள்ள பன்னீர் குடத்தில் சிறிதளவு நீரை எடுத்து அதை ஆராய்ந்து கூறுவார்கள்."

"பிள்ளைக்கு ஊசி குத்திவிடாதே...?" பதறியபடி யாழினி கேட்டாள்.

டொக்டர் மறுமொழி கூறவில்லை. சிரித்தார்.

"சரி இந்த டெஸ்டை செய்து, குழந்தைக்குக் குறையேதும் இருந்தால் என்ன செய்யப் போறீங்க..?" டொக்டர் கேட்டார்.

"....." இப்பொழுது மோகனன் பதில் கூறவில்லை. சில கேள்விகள், கேள்வி நிலை யிலிலே இருந்துவிடவேண்டும். அவற்றுக் கான விடைகள் மிகவும் சிக்கலானவை.

"இஸ்லாத்தின் படி ஒரு குழந்தையைக் கொல்லக் கூடாது. அதுமட்டுமல்ல இலங்கையில் அபோர்ஸன் செய்வது சட்டப்படி குற்றம்" டொக்டர் பாடம் நடத்தத் தொடங்கிவிட்டார்.

நடப்பது நடக்கட்டும் என்று யாழி-னியும் மோகனனும் இருந்துவிட்டார்கள். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், அணுவணுவாக அவஸ்த்தைப் பட்டார்கள்.

அன்று தொடங்கியது யாழினியின் கனவுகளின் யாத்திரை. வலது குறைவு என்ற சிந்தனைத் தூண்டலினால் அவள் கனவில் வரும் உருவங்கள் வர்ணனைக்கு அப்பாற்பட்டவை. பெருத்த தலை கொண்ட உடல், மூன்று கண்கள், நான்கு தலைகள், பன்னிரெண்டு கைகள், என்று மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவை.

யாழினி ஒவ்வொரு நாளும் புதுப் புது சிந்தனைகளுடனும், கனவுகளுடன் நாட்களை நகர்த்தினாள். பரீட்சையின் பெறுபேறுக்குக் காத்திருந்து சித்தியடை யாவிட்டால் மீண்டும் பரீட்சையை எழுதலாம். ஆனால் குழந்தையில்



பிழையேற்பட்டால் திருத்தமுடியாத பிழை யாகிவிடுமல்லவா. கை-யறுநிலை.

"ஹிரோசிமா நாகசாக்கியில் குண்டு போட்டு அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, வலது குறைந்த பிள்ளைகள் இண்டைக்கும் பிறக்கிறாங்களாம்......... உண்மையே அப்பா...?" யாழினி மோகனனிடம் ஒரு நாள் கேட்டாள்.

"யார் சொன்னார்கள்....?" யாழினிக்குச் சமையலில் உதவ, சின்ன வெங்காயத்தை உரியிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து உரித்தபடியே மோகனன் கேட்டான்.

"இன்டர்நெட்டில் போட்டிருக்கு.."

"....." மோகனன் மௌனம் காத்தான். மனைவி தன்னிடம் விடையை எதிர்பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை என்று அவனுக்குத் தெரியும்.

"உந்த அறுவான்கள் குண்டுகளைப் போட்டு போட்டு எங்கட மண்ணை கந்தக பூமி ஆக்கிப்போட்டாங்கள். அந்தக் கந்தக பூமியில விளையிற காய்கறியைத்தான் நாங்கள் தினமும் சாப்பிடுகிறோம். அது எங்கட உடலோடு உடலாகக் கலந்து போடும். இதண்ட விளைவுகள் பரம்பரை பரம்பரையாகத் தொடரப் போகுது."

"கண்டறியாத இன்டர்நெற்.." மோக னன் சலித்துக்கொண்டான்.

இன்டர்நெற் தன் மனைவியை புதுசு புதுசாகச் சிந்திக்க வைப்பதை எண்ணி மகிழ்வதா அல்லது அழுவதா என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால்

மனைவியின் கேள்வியிலுள்ள உண்மை அவன் இதயத்தைத் தைத்தது. வியட்நாம் போரின் விளைவுகளைப் பற்றி அவன் வாசித்துள்ளான். வியட்நாம் போரில் அமெரிக்கா பாவித்த ஏஜென்ட் ஒரேஞ் (Agent Orange) என்ற இராசாயன ஆயுதத்தின் விளைவு இன்றுவரை நீண்டுள்ளது. வியட்நாம் போர் முடிந்து முப்பது ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னர், இன்று பிறக்கும் மூன்றாம் தலைமுறைக் குழந்தைகளுக்கும் சமிபாட்டுத் தொகுதியிலும் நரம்புத் தொகுதியிலும் குறைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். இப்படியான இரண்டு லட்சத்திற்கும் மேலான குழந்தைகள் வியட்நாம் நாட்டில் பிறந்தனவாம்.

மோகனனின் மனக்கண்ணில் தன் தாய் மாமவின் பிள்ளை ரவி தோன்றி மறைந்தான். ரவி ஈழப்போரின் உச்ச காலங்களிலே கருவாகிப் பிறந்த குழந்தை. 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது மாமாவின் குடும்பமும் இடம்பெயர்ந்தது. அந்த காலகட்டங்களில்தான் ரவி பிறந்தான். மாமி தாங்கள் பட்ட துயரை கதை கதையாகச் சொல்லியிருக்கிறாள். பதினைந்து வயதாகியும் ரவி மூன்று வயது குழந்தையைப் போன்றே நடப்பவன். மோகனனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து ரவியின் மன வளர்ச்சி ஒரே மட்டத்தில்தான் இருக்கின்றது. மோகனனின் மாமாவும் மாமியும்தான் அவனுக்கு தற்பொழுதும் குளிப்பாட்டி உணவூட்டி விடுகிறார்கள். சென்ற தடவை அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தபோது ரவி தானாக காலில் செருப்பை மாட்டிக் காட்டினான். கடந்த ஒரு வருட பயிற்சியால் ரவி சரியாகச் செருப்பை தன் கால்களில் மாட்டக் கற்றுக்கொண்டானாம், மாமா பெருமையடித்துக்கொண்டார்.

ரவியினால், மாமாவின் குடும்ப வாழ்க்கையே மாறிவிட்டது. தற்பொழுது தன் மகனுக்காக தங்கள் தொழிலைத் துறந்து வலது குறைந்தவர்களைப் பராமரிக்கும் ஒரு அமைப்பை நடத்தி வருகின்றார்கள். பிறக்கும்போது ஒரு சாதாரண குழந்தையாகவே இருந்த ரவியின் மனவளர்ச்சிக் குறைபாடு இரண்டு மூன்று வயதுக்குப்பின்னர்தான் அறியப்பட்டதாம்.

‘குழந்தையை கொடுப்பது மாதிரி கொடுத்து பின்னர் சந்தோஷத்தைப் பறித்துக்கொள்வது முந்துறும் விதியின் செயலேயாகும்!’ மாமாவும் மாமியும் தன் பிள்ளை ரவியின் நிலையை ஜீரணிக்க முடியாமல் விதியை சாட்டி உண்மையை மறைத்துக் கொண்டார்கள்.

இறைவன் ஒரு குடும்பத்தின் சந்தோஷத்தை நிரந்தரமாக பறிக்க நினைத்தால் இப்படியொரு குழந்தையைக் கொடுத்துவிடுவான்போலும். மோகனனுக்கு ஔவைக் கிழவியின் வரிகளுக்கெல்லாம் அப்போதுதான் அர்த்தம் புரியத் தொடங்கியது

“அரிது அரிது மானிடர் ஆதல் அரிது.
மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.”

யாழ்ப்பாணத்துச் சின்ன வெங்காயத்தின் தோலை உரிக்க உரிக்க, அது சாம்பல் நிறக் கந்தகமாக மோகனனுக்குத் தெரிந்தது.

மோகனன் கண்ணைக் கசக்கி சின்ன வெங்காயத்தைப் பார்த்தான்.

“அப்பா கண் எரியுதெண்டா விடுங்கோ.. நான் உரிக்கிறேன்..” யாழினி கூறினாள். மோகனன் எழுந்துவிட்டான்.

பிறக்கப்போகும் அடுத்த தலைமுறைகள் என்ன பிழை செய்தார்கள்? கருவினுள்ளேயே நச்சைப் பதிக்கும்படி செய்துவிட்டார்களே. மோகனனுக்கு கோபம் கோபமாக வந்தது. யார்மீது என்றுதான் குறிப்பாகத் தெரியவில்லை.

தங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தை எப்படி இருக்குமோ?

மோகனனின் மனம் மீண்டும் அந்தரிக்கத் தொடங்கியது.

போரும் கவிதையும் :

# மஞ்சுள வெடிவர்தனவின் மனிதத்தை நோக்கிய சகோதரத்துவக் குரல்

லறீனா அப்துல் ஹக்

**அறிமுகம்**

போர் என்பது எப்போதுமே அழிவோடு தொடர்புடையதுதான். துன்பம் தருவது தான். போரின் கொடுமையை வலியுறுத்தி, அமைதிவழி அரசரை ஆற்றுப்படுத்திய புலவர்களையும் நாம் சங்க இலக்கியத்தில் காண்கின்றோம் என்பதையும் மறுப்பதிற் கில்லை. நிழலின் அருமை வெயிலில் தெரி யும் என்பது போல, சுமார் மூன்று தசாப்த காலம் கொடுமையான ஒரு யுத்தத்தை எதிர்கொண்டு, யுத்தத்தின் பின்பும் அதன் மோசமான விளைவுகளால் துன்புற்றுக் கொண்டிருக்கும் இலங்கையரான நமக்கு, அமைதியின், சமாதானத்தின் அருமையும் பெருமையும் மிக நன்றாகத் தெரியும். நம்முடைய கலை இலக்கியங்கள் போரின் போதும் போருக்குப் பின்னரும் நம் மக்கள் அனுபவித்துவரும் சொல்லொணா அவலங்கள் பற்றிப் பேசிவந்துள்ளன. பதிவுசெய்துள்ளன. போரினால் நேரடியாகப் பாதிக்கப்படாத ஆக்க இலக்கிய கர்த்தாக்கள்கூட தம் சக மனிதர்களின் துன்பங்களைக் கண்டு கலங்கி, அவர்களுக்காகக் குரல்கொடுக்கத் தயங்கவில்லை.

இந்நிலையில், ஈழப் போரினாலும் அதையொட்டிய காரணங்களாலும் தமிழ் மக்கள் அனுபவித்துவந்த துன்ப துயரங்கள் குறித்துப் பெரும்பான்மைச் சிங்கள இனத்துச் சகோதர சகோதரிகள் சிலர் தொடர்ந்து பதிவுசெய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்படியானவர்களில் அனேகர் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிராய் உரத்துக் குரல்கொடுத்த காரணத்தினால் தம் இன்னுயிரை இழந்துள்ளனர் அல்லது உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்று பிற நாடுகளில் தஞ்சம் பெற்று வாழ்கின்றனர். அத்தகைய மனிதநேயமிக்க இலக்கிய கர்த்தாக்களில் மஞ்சுள வெடிவர்தனவும் ஒருவர்.

பொதுவாகவே கலை இலக்கியவாதிகளுக்கு இன, மத, மொழி, பிரதேச வேறுபாடற்ற மனிதநேயமும் அநீதிக்கு எதிரான தார்மீகக் கோபமும் இரத்தத்திலேயே கலந்திருக்கும் என்பார்கள். அந்த வகையில், இலங்கைவாழ் தமிழ் மக்கள் இனப் போரினால் அனுபவித்த துன்ப துயரங்கள் குறித்துப் பெரும்பான்மைச் சிங்கள இன ஊடகவியலாளரும் கலை இலக்கியவாதிகள் சிலரும் தொடர்ந்து குரல் எழுப்பிவந்துள்ளனர். அவர்களுள் 90களில் தென்னிலங்கையில் இடதுசாரிச் செயற்பாட்டாளராக தீவிரமாய்ச் செயற்பட்ட மஞ்சுள வெடி



மாற்றுப் பத்திரிகையாளராக 'ராவய' ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்த இவர், சிறந்த நாவலாசிரியர், சிறந்த கவ-ஞர், சிறந்த நாடகாசிரியர் என பல்வேறு தேச-ிய விருது களைப் பெற்றவர். "மரியா எனப்பட்ட மேரி" என்பது இவரது சிறுகதைத் தொகுதி. தலைப்புச் சிறுகதை தீவிர சர்ச்சைக் குரியதாய்க் கருதப்பட்டதால், இத்தொகுதி இலங்கையில் தடைசெய்யப்பட்டது."நான் லிங்கமாலன் ஆனேன்", "நிமலராஜனின் அம்மாவுக்கு", "அவனொரு புதிய தமிழன்" எனும் கவிதைகள் ஏற்கெனவே தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு பிரசித்தி பெற்றுள்ளன. பஹீமா ஜஹான், ரிஷான் ஷெரீஃப் ஆகிய இருவராலும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இவரது கவிதைகளின் தொகுதி வெகுவிரைவில் பிரான்ஸ் நாட்டில் வெளிவரவுள்ளது. இவரது சில கவிதைகளை இப்னு அஸூமத், செல்வர், என். சரவணன் ஆகியோரும் மொழிபெயர்த்துள்ளனர்.

மஞ்சுள வெடிவர்தன தன்னுடைய கவிதைகளில் தான் சார்ந்த சமூகத்தின் ஒரு தரப்பினரால் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்கொடுமைகள் குறித்துத் தனது கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளார். நான் லிங்கமாலன் ஆனேன், நிமலராஜனின் அம்மாவுக்கு, அவன் ஒரு புதிய தமிழன், மட்டக்களப்பில் இருந்து, தலைப்பிலித் தாய்மண், த்வாரகா, செம்மணி என்பன இவரது தீவிர அரசியல் கவிதைகளில் சிலவாகும்.தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள், வன்கொடுமைகள் குறித்துத் தன்னுடைய கவிதைகள் வாயிலாகக் காரசாரமாகக் குரல்கொடுத்த காரணத்தினால் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானவர் என்று இவர் முத்திரை குத்தப்பட்டார். உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் நாட்டிலிருந்து தப்பிச் சென்று தற்போது ஐரோப்பிய நாடொன்றில் தஞ்சம் புகுந்துள்ள மஞ்சுள வெடிவர்தனவின் வலைப்பூ http://monsoon-mn.wordpress.com/. வலைப்பூவின் முகப்பில்,

**"பின்தொடர்**
**என்னைப் பின்தொடர்**
**ஆயுதமுனைக்கு முடியாது**
**நினைவுகளை அழிப்பதற்கு"**

என்ற வரிகள் பளிச்சிடுகின்றன.

மஞ்சுளாவின் கவிதைகள் பலதரப்பட்டவை. அவற்றின் பேசு பொருள் பன்முகப்பட்டவை. அவற்றில் பெரும்பாலான கவிதைகள் அநீதிக்கும் அதர்மத்துக்கும் எதிரான கலகக் குரலாய் ஒலிக்கின்றன. தமிழ் மக்களின் இருப்புக்கும் அவர்களின் நியாயமான கனவுகளுக்கும் உள்ள உரிமையை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றன. அற்ப காரணங்களைத் தூக்கிப்பிடித்து இனத்துவ முரண்பாடுகளை வளர்த்துப் பிழைப்பு நடத்தப்படுவதை வன்மையாய்க் கண்டிக்கின்றன. இனிநாம் அவரது சில கவிதைகளையும் அவற்றின் பாடுபொருளையும் நோக்குவோம்.

"தனிமையின் குரல்" என்ற கவிதை இப்படி ஆரம்பிக்கின்றது:

**கனவுக்கும் சிரிப்பூட்ட – ஒரு**
**துப்பாக்கியால் முடியும்**
**ஒரு கனவினால்**
**துப்பாக்கிச் சன்னத்தையும்**
**தடுத்து நிறுத்த முடியும்".**

இவ்வாறு கனவில் சஞ்சரிக்கும் மஞ்சுள,

**"தலைகுனிந்து நடக்கும் – ஒரு**
**மனிதனைக் கேளுங்கள்,**
**'நிலத்தில் வீழ்ந்து கிடப்பதென்ன'வென**
**'வாழ்க்கை' என்று**
**அவன் கூறுவான்"**

என்கிறார். உண்மைதான். வாழ்க்கை எங்கோ வீழ்ந்துதான் கிடக்கின்றது. மனிதன் அதனைத் தேடிக் கண்டடைய வேண்டிய நிலையில் இருக்கின்றான்.

இனங்களுக்கு மத்தியில் பரஸ்பர நல்லெண்ணமும் மதிப்புணர்வும் இருந்தால் அமைதியும் சமாதானமும் சாத்திய மாகும். சக இனத்தவரையும் மனிதப் பிறவிகளாய்க் கருதி, அவர்தம் அபிலாஷைகளையும் மதிக்கும் உயர் பண்பாடு வாய்க்கப்பெற்றால், குரோதமும் விரோதமும் காணாமல் போய்விடும் என்பதில் ஐயமில்லை. மஞ்சுளாவின் மற்றொரு கவிதை ஒரு தமிழனைப் பற்றிப் பேசுகின்றது.

**அவனொரு புதிய தமிழன்**
**உண்மைதான்! நான் ஒரு சிங்களவன்**
**ஆம், சிங்களவன்**
**நான் ஒரு சிங்களவன்**
**சுத்த சிங்களவன்**
**தமிழ்க் கனவெனில்**
**தமிழிலேயே காணுதல்**
**வேண்டுமென விழைந்ததால்**
**தாய்த் திருநாட்டில்**
**வாழ்தல் மறுக்கப்பட்டேன்**
**நான் சிங்களத்திலேயே சிந்திக்கிறேன்**
**ஈழத் திருநாட்டிலிருந்து**
**துடைத்தெறியப்படும்**
**கடைசித் தமிழனைப் பற்றியும்**
**கவி வரைவேன் சிங்களத்தில்**
**சிங்களவனாய் இருப்பதாலேயே**
**கவிதை எழுதும் – என்**
**கரங்களிலும் இரத்தம்**
**எழுதுகோலின் வழியே**
**ஊறுவதும் இரத்தம்தான்!**

**சிங்களத்தில் சிரிக்கத்தான்**
**விருப்பம் எனக்கு**
**அதனாலேதான் அது எனக்கு**
**சாத்தியப்படவே இல்லை**

**சைவக் கடையில் சாப்பிட்டபடி**
**முல்லைத்தீவைக் கைப்பற்றுவது பற்றி**
**சிந்தித்துக் கொண்டிருக்கும்**
**என்னுடைய நண்பன்**
**மின்னஞ்சல் வழியே**
**உழுந்து வடையொன்றை**
**அனுப்பி வைத்திருந்தான்**

**தோழனே,**
**சொந்த நாட்டுக்குள்ளே**
**துரத்தப்பட்டோராய்வாழ்வதிலும்**
**வாழ்வை வேற்றிடத்தில்**
**கழிப்பது பரவாயில்லைதான்!**

**புதியதொரு கவிதை – என்**
**இதயத்துள் ஜனிக்கிறது,**
**அதுவும்கூடஒரு**
**தமிழனைப் பற்றியதே!**
**அவனோர் "புதிய தமிழன்"**
**சிங்களத்தைப் பார்த்துச்**
**சிரிக்கின்ற தமிழன்**

**அவனை நான்**
**சிங்களத்தில் வாழ்த்துகின்றேன்."**

இவரது இக்கவிதை மிக முக்கிய மானது. தமிழரின் உரிமைக்காய் குரல் கொடுத்த காரணத்தாலேயேதான் தாய் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது என்பதை அவர் இக்கவிதையில் தெளிவாக உணர்த்துகின்றார். சிங்கள இனத்தவராய் இருப்பதையிட்டுக் கவிஞர் கொண்டுள்ள ஆதங்கம், யுத்தத்தை முழு முனைப்போடு தடுத்து நிறுத்தும் வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வராத காரணத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் சிந்திய இரத்தத்தின் கறை, முழு சிங்கள இனத்தின் மீதும் படிந்துள்ளதாய்க் கருதுதல், அதனால் மனம்விட்டுச் சிரிக்கக்கூட இலாயக்கற்றவர்களாய் சிங்களவர்கள் மாறிவிட்டார்கள் என்ற கழிவிரக்கம் என இக்கவிதை பல முக்கிய விடயங்கள் குறித்துப் பேசுகின்றது. குறிப்பாக,

**"தமிழ்க் கனவெனில்**
**தமிழிலேயே காணுதல்**
**வேண்டுமென விழைந்ததால்**
**தாய்த் திருநாட்டில்**
**வாழ்தல் மறுக்கப்பட்டேன்"**

என்ற அடிகள் உணர்த்தும் பொருள் மிகவும் ஆழமானது. கனவுகாணும் உரிமை யாருக்கும் பொதுவானது. தமிழருக்கான கனவு தமிழரால் காணப்படுதலே நியாயம். மாறாக, அதனைச் சிங்களத்தில் காணுவது என்பது நடைமுறைச் சாத்தியமில்லை என்பதோடு, அது நியாயமும் இல்லை என்கின்றார். அவரவருக்குரிய தேவை என்ன என்பது இயல்பாக அவரவராலேயே தீர்மானிக்கப்படுதல் வேண்டுமே ஒழிய, மற்றவரால் திணிக்கப்பட முடியாது, திணிக்கப்படவும் கூடாது என்ற கருத்து இவ் வரிகளில் ஓங்கி ஒலிக்கின்றது. தமிழரின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படக் கூடாது. தமிழரின் இயல் பான தேவைகளை நிர்ணயிக்கும் உரிமை தமிழர் வசமே இருத்தல் வேண்டும் என்ற தொனி இவ் வரிகளினூடே அழுத்தமாக வெளிப்படுத்தப்பட்டிருப் பதைக் காணலாம்.



திஸ்ஸநாயகம் பற்றிய கவிதை வரிகள் மனிதநேயமிக்க இவரது உள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டு கின்றன.

**கைகளுக்கோ விலங்காம் – நாளை**
**கழுழியத் தண்டனையாம்**
**உனைப் பற்றி நான்**
**எதை நினைப்பேன், நண்ப?**
**முடிவற்ற காரிருளில்**
**அமிழ்ந்தனையோ வதைபட்டு?**
**உள்ளத்துள் முழுநிலவின்**
**நேச ஒளி விழைந்தனையோ?**
**திஸ்ஸ எனும் என் தோழனே!**
**சத்தியத்தினால் உனக்கிந்த**
**சிறை இருப்பு!"**

என்ற வரிகள் உண்மையை உரத்துச் சொன்னதால்சிறைவாசம் அனுபவிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட திஸ்ஸநாயம் மீதான இரங்கலுணர்வை அழகாக வெளிப்படுத்து கின்றன.

"சிவா" என்ற தலைப்பில் அமைந்த மற்றொரு கவிதையில்,

**"சிவா என்றாலும் நீயொன்றும் கடவுளல்ல**
**கடவுளர் அற்ற மண்ணில் மனிதமும் இல்லை**
**இதயமற்ற படையினர் கொடும் வெறியரானர்**
**தடிகளால் சிதைத்துனை கடலெறிந்தார்"**

என்று தொடங்குகின்றது. அற்பக் காரணங்களுக்காகப் படையினராலும் காவல்துறையினராலும் படுகொலை செய்யப்பட்டு கடலுக்குள்ளும் புதைகுழி களுக்குள்ளும் எறியப்பட்ட எத்தனையோ "சிவா"க்கள் பற்றி இக்கவிதை பூடகமாய்ப் பேசிச் செல்கின்றது.

சிங்களப் பௌத்த சமயத்தைப் பொறுத் தவரையில் புத்தரின் முற்பிறப்புக்களைப் பற்றி விபரிக்கும் ஐந்நூற்றி ஐம்பது பிறவிக் கதைகள் (பன்சிய பனஸ் ஜாதக கதா) மிக முக்கியமானவை. அதில் அங்குலிமாலனின் கதையும் ஒன்று. தன்னுடைய குருவின் துர்ப் போதனையால் ஆயிரத்துக்கும் அதிக மானோரைக் கொலைசெய்து, அவர்களின் கட்டைவிரல்களை வெட்டியெடுத்து மாலையாகக் கோத்துக் கழுத்தில் அணிந்துதிரிந்த அங்குலிமாலன், பின்பு புத்தரின் போதனையால் திருந்தி துறவியாய் மாறி அஹிம்சைவழி சென்றான் என்பதே அங்குலிமாலனின் கதை. அகலிகை பற்றிய புராணக்கதையை மறுவாசிப்புச் செய்து புனைகதை யாத்த புதுமைப்பித்தனைப் போல, மஞ்சுள வெடிவர்தனவும் அங்குலிமாலனின் கதையை மாற்றி,'நான் லிங்கமாலன் ஆனேன்' என்ற கவிதையை எழுதியுள்ளார்.

மூன்று குழந்தைகளின் தாயான கோணேஸ்வரி அம்பாறையைச் சேர்ந்தவர்.

*1996 ஜூன் மாதம் காவல்துறை மிருகங்கள் பத்துப் பேரால் கொடூரமாகப் பாலியல் வல்லுறவு கொள்ளப்பட்ட பின்னர் யோனியில் கிரனைட் செருகப்பட்டுப் படு-கொலை செய்யப்பட்டார். மனித நாகரிகம் வெட்கித் தலைகுனியத்தக்க இத்தகைய கொடூரமான இழிசெயலைக் கேள்வியுற்ற மனசாட்சியுள்ள இதயங்கள் அதிர்ந்தன. குமுறிக் கொந்தளித்தன. அத்தகைய மனிதநேயமிக்க இதயங்களுள் மஞ்சுள வெடிவர்தனவின் கவிதை நெஞ்சமும் ஒன்று.*

*கோணேஸ்வரிக்கு இழைக்கப்பட்ட கொடுமையால் மனம் வெதும்பி அவர் எழுதிய கவிதை “நான் லிங்கமாலன் ஆனேன்”.இவர் தன்னுடைய இக் கவி தையில், சகோதரத்துவம், மனித நேயம் முதலான எத்தகைய உணர்ச்சிகளுமற்ற ஓர் இனம் வாழவே தகுதியற்றது என்று சாடுகிறார். வடக்கிலும் கிழக்கிலும் நடக்கும் கொடுமைகள் மிகத் தாமதமா கவே தெற்குக்குத் தெரியவருகின்றது என்ற உண்மையைக்குறிப்பால்உணர்த்துகின்றார். புத்தரின் புனிதப் பாதத்தடம் பதிந்திருக்கும் ஸ்ரீபாத மலையில் சிங்கள ஆண்குறி மாலை சாத்துவதாய்க் கூறுகின்றார். அங்குலிமாலனைத் தடுத்தாட்கொண்டு அஹிம்சா தர்மத்தைப் போதித்ததைப் போலத் தன்னையும் தன்னுடைய குரூரச் செயலையும் தடுத்துநிறுத்த இன்று போதி-மாதவன் இல்லை. எனவே, எத்தகைய மாபாதகச் செயலைச் செய்வதும் சாத்தியம்தான் என்று கூறுவதன் மூலம் இன்று புத்தரின் போதனைகள் நடைமுறையில் இல்லாத காரணத்தாலேயே பௌத்தநாடாகிய இலங்கையில் அஹிம்சைத் தத்துவத்துக்கு எதிரான பல்வேறு கொடுஞ்செயல்கள் தலைவிரித்து ஆடுகின்றன என்ற கருத்தை வலியுறுத்த முனைகின்றார். அவலச் சுவை மிகுந்த,இனத்துவ ரீதியில் சுயவிமர்சனமாய் அமைந்தஅக்கவிதை வருமாறு:*

**“நான் லிங்கமாலன் ஆனேன்”**

**வெசாக் முழுநிலவு**
**தலையில் கைவைத்துப்**
**புலம்பி அழுகிறது**
**சாளரம் வழியே அதன்**
**மூக்குச்சளி வழிகிறது**

**அயல் வீடொன்றில்**
**புத்தரின்**
**பிறப்பை, துறவை**
**பரிநிர்வாணத்தை**
**நினைந்து பூசித்த**
**ஏழு தாமரைகளும்**
**இன்னுமே வாடவில்லை**

**தொலைவிலோர் ‘தொரண்’**
**பந்தலின் அருகே**
**போதி மாதவனின்**
**550 பிறவிக்கதைகளின்**
**சாராம்சத்தை நவீனப்படுத்தி**
**‘புதுக்கதை’ புனைந்து**
**இயற்றிய ‘விரிது’க்**
**கவிகளின் இன்னிசை**
**இடைக்கிடை கேட்கிறது**

**என் முன்னே**
**கவிதைத் தவமிருக்கும் – ஒரு**
**வெற்று வெள்ளைத் தாள்**

**அந்தக் கணத்தினில்**
**எங்கிருந்தோ ஒரு தசைத் துண்டு**
**பறந்து வந்து . அந்தத்**
**தாளில் அழுந்தியோர்**
**யோனியாய் உருமாறிற்று**
**நிச்சயம் அது**
**கோணேஸ்வரியுடையதாய்**
**இருத்தல் வேண்டும்.**
**அம்பாறையில் இருந்து**
**கொழும்புக்குப் பறந்துவர**
**இத்தனைக் காலமாயிற்றோ?**

**அவ்வளவுதூரம் நாம்**
**தொலைவினில் உள்ளோம்!**
**என்னிருவிழியிலும்**
**கண்ணீரின் குளம்.**

**விழிநீர் மத்தியில் நான்**
**அங்குலிமாலன் அல்ல,**
**லிங்கமாலன் ஆனேன்**
**விரல்கள் வேண்டாம் எனக்கு**
**ஆண்குறிகளே தேவை**

**பக்தி சிரத்தையாய் – அத்**
**தசைத் துண்டத்தை**
**இடக்கரம் எடுத்து**
**கூரிய வாளினை**
**வலக்கரம் ஏந்திப்**
**புறப்பட்டுப் போனேன்**

**வழியெங்கும் எதிர்ப்பட்ட**
**வீடுகளைத் தட்டினேன்**
**சிங்கள ஆண்குறிகள்**
**அனைத்தையும் வெட்டியோர்**
**நூலினில் கோத்தேன்,**
**இறுதியில் என்னதும் –**
**ஆ!!**

**வேதனை சகித்து**
**ஸ்ரீபாத மலைக் கழுத்தில்**
**குறிமாலை சாத்தினேன்**

**எனைத் தடுத்தாட்கொள்ள – ஒரு**
**புத்தரிங்கு இல்லாததால்**
**நிச்சயம் இதனைச்**
**செய்திடல் சாத்தியம்**

**சகோதரத்துவமற்ற**
**உணர்ச்சிகள் ஏதுமற்ற**
**ஓரினம்தான் எதற்கு?**

**என்னெதிரில்**
**ஒரு வெற்றுத்தாள்**
**அதில் இரத்தக் கறை**

**அது ஒரு கவிதை**
**தமிழ்க் கவிதை.**
**அதனால்தான் – அது**
**சிங்களவருக்குப் புரியவேயில்லை."**

இக்கவிதையின் இறுதியில் கவிஞர் ஒரு முக்கியமான குறிப்பை வாசகர்களுக்கு விட்டுச் செல்கின்றார். தமிழரின் பிரச்சினைகள் - அது தமிழருடைய பிரச்சினையாய் இருக்கின்ற ஒரே காரணத்தினால்- சிங்களவருக்குப் புரியவில்லை. பெரும்பாலான சிங்களவர்கள் அதனைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவும் இல்லை என்பதே அந்தக் குறிப்பு.

"நிமலராஜன்", "ஒக்டோபர் கவிதை", "நிமலராஜனின் அம்மாவுக்கு" எனும் கவிதைகள் நிமலராஜனைப் பற்றி இவர் எழுதியவை. இக்கவிதைகள் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜன் மீதான இரங்கலுணர்வை கவிஞர் மிக அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார். நிமலராஜன் எனும் கவிதையில்,

**"என்னுடைய எழுதுகோலுக்குக்**
**குரலொன்று இல்லை**
**நிமலராஜனின் குரலுக்குச்**
**சிறகுகள் இல்லை"**

என்று எழுதும் கவிஞர் "ஒக்டோபர் கவிதை"யில்,

**"எமக்கொரு தோழனுள்ளான்**
**பற்களால் புன்னகைத்துக்**
**கண்களால் கதைகள் பேசி**
**ஒக்டோபர் தினமொன்றில்**
**உயிர்த்தெழுந்து மரணித்துப்போவான்**

**துப்பாக்கிச் சன்னத்துக்கும்**
**நொடிப்பொழுதோர் உயிர்ப்பிருக்கும் – ஒரு**
**தோழனுக்காய் எமக்கிருப்பது**

ஒக்டோபரில் ஒருதினம் மட்டுமா?"

என்று கேள்வியெழுப்புவதன் மூலம், எல்லோரும் நலம்வாழத் தம் இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளை வெறுமனே

ஒரு தினத்தில் மட்டும் நினைவுகூர்ந்து அஞ்சிலி செலுத்துவதோடு முற்றாக மறந்துபோய்விடும் சமூகத்தின் நன்றி கெட்டதனத்தைச் சாடுகின்றார். "நிமல ராஜனின் அம்மாவுக்கு" என்ற கவிதை முழுக்க முழுக்க மனிதர்களும் அவர்தம் உணர்வுகளும் சமமே என்ற கருத்தை ஆழமாக வலியுறுத்துகின்றது. 'எல்லா மனி தரின் உதிரமும் சிவப்பு நிறமே. எல்லா மனிதரின் கண்ணீரும் உவர்ப்புச் சுவை-யே!' என்ற 'ஆசிய ஜோதி'யின் கருத்தை நினைவூட்டும் வகையில் இக்கவிதை அமைந்திருக்கின்றது. சோகத்தின் தவிப்பை மிக அற்புதமாக வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறே,படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகீதராஜன் பற்றிய, "திருகோணமலை நிலவு" என்ற கவி தையிலும், தர்மராஜன் சிவராம் பற்றிய" தராகி"என்ற கவிதையிலும் அவலச்சுவை மேலோங்கியுள்ளது.

"தெற்கிலுள்ள உறவினருக்கு" எனும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதை இப்படி ஆரம்பிக்கின்றது:

**"தஞ்சம் கோரிய**
**தமிழ்மக்கள் திரளுக்கு**
**சுவையான சாதத்தை**
**பரிவோடு பார்சலாய்க்**
**கட்டித் தருகின்ற**
**எனது சொந்தங்களே!**
**நீட்டுக கரங்களை**
**நான்**
**முத்தமிட வேண்டும்."**

துன்பத்தில் உழல்பவர்களுக்குத் தோள் கொடுக்க அனைவரும் இன, மத, பிரதேச வேறுபாடுகளை மறந்து முன்வருதல் வேண்டும் என்ற கவிஞரின் மன உத்வேகத்தை இக்கவிதையில் காணக் கூடியதாய் உள்ளது.

அவ்வாறே, "வன்னியிலுள்ள கவிஞ னுக்கு ஒரு மடல்" என்ற கவிதையில்,

**"ஆணியறையப்பட்ட கையினால்**
**துயர் களைவதெப்படி?**
**ஆணியறையப்பட்ட கையினால்**
**கண்ணீர் துடைப்பதெப்படி?**
**ஆணியறையப்பட்ட கையினால்**
**கையசைப்பதெப்படி?**
**ஆணியறையப்பட்ட கையினால்**
**கவியெழுதுவதெப்படி?**

என்று தன்னுடைய கையறு நிலையினை ஆற்றாமையோடு சுட்டிக்காட்டுகின்றார். நடப்பவை எவையுமே சரியில்லை என்று மனசாட்சி உறுத்தியபோதும், அரச அதி-கார யந்திரத்தின் முன்னால் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டவாறு, சுயாதீனமாய் இயங்க முடியாமல் ஒருவகை முடமான நிலையில் இருக்கும் ஊடகத்தின் நிலையை இவ்வரிகள் குறிப்பாய் உணர்த் துவதாகவும் கொள்ளலாம். அதே கவிதை யில்,

**"முறிக்கப்பட்ட கால்களால்**
**எழுந்து நிற்பதெப்படி?**
**சுடப்பட்ட இதயமொன்று**
**துடிதுடிப்பதெப்படி?**
**சிறகு முறிந்த உள்ளமொன்று**
**பறந்து திரிவதெப்படி?**
**பெயர் பொறித்த நிலமிருந்து**
**பெயர்ந்து போவதெப்படி?"**

என்று கேள்வியெழுப்புகின்றார்.

இவ்வாறு இவரது பல்வேறு கவி தைகள் தமிழ் மக்களின் பன்முகப்பட்ட துயரங்களைப் பேசுகின்றன. அதிகாரத் தரப்பின்அடக்குமுறைக்கும்அநீதிகளுக்கும் எதிரான கண்டனத்தை வீரியத்தோடு பதிவுசெய்கின்றன.

## முடிவுரை

எழுத்தாளருக்கும் கலை இலக்கியவாதி களுக்கும் ஒரு சமூகப் பொறுப்பு உண்டு. தம்முடைய திறன்களைப் பயன் படுத்தி இலக்கியத்தைக் காலத்தின் கண் ணாடியாய்க்காட்டிச்செல்வதோடு மட்டும் நின்றுவிடாமல், சமூகப் புன்மைகளைக் காரசாரமாகச் சாடுவதோடும் விமர்சிப் பதோடும் மட்டும் நின்றுவிடாமல், தான் வாழும் சமுதாயத்தையும் எதிர்காலச்

சந்ததியையும் கருத்திற் கொண்டு, சமூகத்தைப் புதிதாய்க் கட்டியெழுப்பப் பாடுபட வேண்டும். தன்னுடைய கலை இலக்கிய ஆற்றலின் வழியே உறங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி, அதன் உணர்வையும் சிந்தனையையும் காத்திரமான முறையில் தூண்டி வழிநடத்த வேண்டும். பாரதி செய்ததும் இக்பால் செய்ததும் அதைத்தான். அந்த வழி யில், மஞ்சுள வெடிவர்தனவும் இலங்கை மண்ணில் நிலவிவந்த அவலச் சூழலுக்கு வெறுமனே மௌன சாட்சியாய் இருக்க விரும்பவில்லை. மாறாக, அநீதிகளுக்கும் அசமத்துவத்துக்கும் எதிரான கலகக் குரலை எழுப்பினார்.

கவிதையில் மட்டுமல்ல, தன்னுடைய பிற படைப்புக்களின் மூலமும் இவர் மாற்றீடுகளுக்கான தன்னுடைய தேட லைக் கைவிடவில்லை. இவரது நாவலான பத்தலங்குண்டுவ"வில் இவர் காணும் சமூக தரிசனம் அற்புதமானது. 'சமூக அமைப்பை மாற்றுவதாயின் எழுத்தின் மூலம் அதனை மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும்' என்ற டெரிடாவின் கோட்பாடு மஞ்சுள வெடிவர்தனவைப் பெரிதும் ஆகர்ஷித் துள்ளது எனலாம். இவர் தனது நாவலில், தன்னைச் சுற்றியுள்ள சமூகச் சூழலில் நிலவும் எண்ணக்கருக்களைக் கட்டவிழ்ப்புச் செய்து கலைத்துவப் படிமங்களாய் அவற்றை மீள்கட்டமைப்புச் செய்வதைக் காணலாம். தனது படைப்பின் மூலம்தான் எழுப்பும் கேள்விகளாலும் சர்ச்சைகளாலும் வாசகரின் சிந்தனையைத் தட்டியெழுப்புகின்றார். இலங்கையின் இன முரண்பாட்டு நிலை குறித்த மஞ்சுள வெடிவர்தனவின் கருத்தோட்டம் எத்தகை யது என்பதை அவரது மேற்படி நாவ லில் இடம்பெறும் பின்வரும் வரிகள் உணர்த்துகின்றன:

"...ஆண்டனி அந்தத் தேசத்தை நேசிக்கத் தொடங்கினான். அது ஒரு புதிய வானம். புதிய நிலம். புதிய உலகம். புதிய ஆரம்பம். புதியதோர் கனவு. பத்தலங்குண்டுவ என்பது ஒரு பல் கலாசார தேசம். அங்கே தமிழ் பேசும் சிங்களவர்கள் வாழ்கிறார்கள். அரசகரும மொழியோ அரசகருமமற்ற மொழியோ அங்கில்லை. முதல்தரப் பிரஜைகள், இரண்டாந்தரப் பிரஜைகள் எனும் இரு தரப்புப் பிரிவுகள் அங்கில்லை. இனத்துவத்துக்கு 'பத்தலங்குண்டுவ'வுக்குள் எந்தவொரு முக்கியத்துவமும் இல்லை. மொ ழியை வைத்துச் செல்லுபடியாகும் நிலை அங்கில்லை. வாழ்க்கை என்பது அதன் நீள அகலத்தினால் தவிர, மொழியொன்றினால் நிர்ணயிக்கப்படாதது அவர்கள் பெற்ற பாக்கியம். வலையில் சிக்கும் மீன்களே அவர்களின் வாழ்வாதார வழியாக உள்ளன. மாறாக,"இன அரசியல்" அவர்களுடைய பிழைப்புக்குரிய வழியாய் இருக்கவில்லை. மொழி என்பது கருத்துப் பரிமாறலுக்கான ஒரு கருவியாக அல்லாமல், தலையில் தூக்கிவைத்துக் கொண்டு வெறியாட்டம் போடுவதற்கான ஒன்று என அவர்கள் தெரிந்துகொள்ளாமல் இருந்ததும் அவர்கள் செய்த பாக்கியமே."

இவ்வாறு, எழுத்து மூலமான அரசி யல் சாசனத்துக்குப் பதிலாக இதயங் களின் பரஸ்பரப் புரிந்துணர்வினால் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கனவுத்தேசம் பற்றி எழுதிச் செல்லும் மஞ்சுள வெடிவர் தனவின் மனிதத்துவத்துக்கான மகத்தான குரல், அவரது படைப்புக்களில் மிக அழுத்தமாகக் கேட்கின்றது எனலாம்.

குறிப்பு: இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ள கவிதை வரிகள் அனைத்தும் கட்டுரையாளரால் மொழிபெயர்க்கப்பட்டவை ஆகும்.

**உசாத்துணைகள்:**


http://monsoonmn.wordpress.com/
http://puram400.blogspot.com/
http://thoguppukal.wordpress.com/
http://thripitakaya.com/
http://si.wikipedia.org/
http://ta.wikipedia.org/


❍ ❍ ❍

# துப்பாக்கியால் ஒருபோதும் சுடாத கொமாண்டோக்கள்



களத்தில் ஒலித்த தேசபக்திப் பாடல்கள் பற்றிய

## புறநிலை நின்ற ஓர் ஆய்வு



PATRIOTIC *Songs...*



*செல்லத்துரை சுதர்சன்*

## I

ஹசான் கனஃபானி (Ghasan Kanafani) எனும் அராப்தேச எழுத்தாளர் அடக்கப்பட்ட இனத்துக்காகக் குரல் கொடுத்தவர். அவரது ஆயுதம் ஒரு குமிழ் முனைப் பேனா. அவரது அரங்கம் புதினப் பத்திரிகையாளனின் பக்கங்கள். ஆயுதம் தாங்கிய படையினரின் தாக்குதலைவிட அவரது தாக்குதல் அதிகமானது. அவர் இறந்தபோது அவரது மரண அறிவித்தற் பிரசுரத்தில் "துப்பாக்கியால் ஒருபோதும் சுடாத கொமாண்டோ" எனப் போடப்பட்டது. இது போராடும் சமூகத்தில் எழுத்தாளர்கள் எந்த அளவிற்கு வல்லமைபெற்றிருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஆயுதரீதியான தடுப்பு இனவிடுதலைப் போராட்டத்திற்கு இனத்தைப் பாதுகாக்க எவ்வளவு அவசியமோ அதேயளவிற்குக் கலாசாரரீதியான தடுப்பும் அவசியம். இந்த வகையில் கலாசாரரீதியான தடுப்புக் காவலர்களாக - ஆயுதரீதியான தடுப்புக்காவலர்களைக் கூட உருவாக்கக் கூடியவர்களாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் இனத்திலிருந்து கவிஞர்கள், பாடலாசிரியர்கள் மேலெழுகின்றனர். பகைவன் எறியும் கணைகளை இசையில் திருப்புகின்ற, மக்களின் போர்முகத்தை ஒன்றுதிரட்டிப் பகைவனை நோக்கி நகர்த்துகின்ற, போர்நகர்வில்உந்துதல்களை ஏற்படுத்துகின்ற, போரை அரசியல் சமூக இயக்கமாக மாற்றுகின்ற தேசபக்திப் பாடல்களை எழுதிய அரசியற் கவிஞர்களும் கொமாண்டோக்கள்தாம். அவர்களையும் "துப்பாக்கியால் ஒருபோதும் சுடாத கொமாண்டோக்கள்" என்று குறிப்பதே சாலப்பொருத்தமானது.

தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டம் தோன்றி வளர்ச்சிபெற்று ஆயுதரீதியாக வீழ்ச்சியடையும்வரை இந்தத் தேசிய விடுதலைப் பாடல்கள் எனும் தேசபக்திப் பாடல்கள் வெளிவந்துள்ளன. இப்பாடல்களின் கருத்துநிலை பற்றிய உசாவலாக இக்கட்டுரை அமைகிறது. இப்பாடல்களில் வெளிப்பட்ட கருத்துநிலை - கருத்துநிலைக் கூறுகள் எவை? அவை எவ்வாறு பாடலாக்கம் பெற்றுள்ளன? அவற்றின் அரசியல் சமூகப் பெறுமானம் எத்தகையது? முதலாய வினாக்களை முதன்மைப்படுத்தி இப்போர்க்காலப் பாடல்களை அரசியல் சமூக வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து ஆராய இக்கட்டுரை முயலுகிறது. ஈழவிடுதலைப் போராட்ட காலத்தில் ஆயிரக்கணக்கான பாடல்கள் வெளிவந்துள்ளன. எனினும் ஆரம்ப காலத்தில் குறிப்பாக 80களின் இறுதிப் பகுதியிலும் 90களின் தொடக்கப் பகுதியிலும் வெளிவந்த களத்தில் கேட்கும் கானங்கள். புலிகளின் பாடல் (பு.பா.), அந்நியர் வந்து புகல் என்ன நீதி, புயல்கால ராகங்கள், தமிழீழ எழுச்சிப் பாடல்கள் (த.எ.பா.), பாசறைப் பாடல்கள், வேங்கைகளின் விடுதலைக் கீதங்கள் (வே. வி.கீ.), இந்தமண் எங்களின் சொந்தமண், இது புலிகளின் காலம் (இ.பு.கா.)ஆகிய ஒன்பது ஒலி நாடாக்களை இவ் ஆய்வு எல்லையாக வரித்துக்கொள்கிறது.

## II

தேசபக்திப் பாடல் என்பதை முதலில் வரையறை செய்துகொள்வது பொருத்தமானது. தேசபக்திப்பாடல் என்பதில் வரும் தேசம்-பக்தி-பாடல் என்ற மூன்று பதங்களும் வெவ்வேறு தளத்தில் வெவ்வேறு கருத்தினைக் கொள்கின்றன எனினும் "தேசபக்திப் பாடல்" என்ற ஒருங்கிணைந்த பதத்தில் இவை அரசியல் மற்றும் சமூகக் கருத்து நிலையால் ஒன்றிணைக்கப்படுகின்றன. 'தேசம்' என்பதை 'ஒரு பொதுவான மொழி, ஆட்சிப் பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுரீதியாக உருவா-

கிய நிலையான மக்கள் சமூகம்' என வரையறுத்துக் கொண்டால் இதன்மீதான பக்தியை, பெருவிருப்பை, ஆராக்காதலை 'தேசபக்தி' எனவும் இதன் நலன் கருதிய பாடல்களை - இதன் நலனைப் போற்றும் - இதன் நலனை எதிர்ப்பவரை எதிர்க்கும் பாடல்களை 'தேசபக்திப் பாடல்கள்' எனவும் குறிக்கலாம். தனது நாட்டை நேசிப்பவரையும் பகைவரிடமிருந்து நாட்டைக்காக்க ஆயத்தமாக உள்ளவரையும் தேசபக்தியாளர் (நாட்டுப் பற்றாளர், தேசாபிமானி) என்றழைப்பது வழக்கம். இவரை ஆங்கிலத்தில் Patriot என்பர். தேச பக்தியை Patriotism என்ற சொல்லால் குறிப்பர். இந்த அடிப்படையில் தேசபக்திப் பாடல்களை Patriotic Songs எனக் குறிக்க முடியும். இப்பாடல்களுக்கு ஒரு சமூக அரசியல் வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

## III

மொழி மூலம் உருவாகும் ஏனைய எழுத்து வடிவங்களைவிட அரசியல் இயக்கப்பாட்டுச் சாதனம் என்ற வகையில் இப்பாடல்கள் சக்திவாய்ந்தவை. மொழியானது பாதுகாக்கப்பட வேண்டிய அடிப்படைத் தேசியப் பெறுமானம். மொழியில் உருவாகும் தேசபக்திப் பாடல்கள் மொழியையும் மொழிசார் தேசியத்தையும் அதன் கூறுகளையும் வரலாற்று நினைவடுக்குகளில் வைத்துப் பேசும் கருவி என்ற வகையில் அதிமுதன்மை பெற்றவை. போராடும் சமூகங்கள் யாவுமே பாடல்களை வலுவுள்ளதொரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளன. உதாரணமாக டியூனிசியாவில் தொடங்கிய 'அரபு வசந்தம்' எனப்படும் சர்வாதிகளுக்கு எதிரான மக்கள் புரட்சியைக் குறிப்பிடலாம். இது மத்திய கிழக்கின் வரலாற்றையே மாற்றிய புரட்சி. டியூனிசிய மக்கள் எழுச்சிக்கு உத்வேகம் கொடுத்ததற்காகப் பாராட்டப்படும் எழுச்சிப் பாடலாசிரியர் 21 வயது இளைஞர் ஹமாடா பென் அமோர். இவர் 2011ஆம் ஆண்டு வரலாற்று நாயகர்களில் ஒருவராகக் கணிப்புப் பெற்றவர். அதிகார அரசுக்கு எதிராக இவர் பாடிய றாயிஸ் லெப்லெட் (Rais Lebled) என்ற பாடல் டியூனிசியாவிலிருந்து எகிப்துக்குப் பரவி அங்கு நடந்த ஆட்சிக் கவிழ்ப்பிற்கு வித்திட்டது. தலைநகர் கயிறோவின் தஹ்றிர் சதுக்கத்தில் திரண்ட மக்கள் நாவில் புரட்சிக் கீதமாக இந்த அரபுமொழிப் பாடல் இசைக்கப்பட்டது.

கென்யாவின் வரலாற்றாசிரியர் Maina Wa Kainyatti என்பவர் மொழிபெயர்த்துப் பதிப்பித்த 'மலைகள் இருந்தான இடிமுழக்கம் (Thounder from the Mountains) என்ற தொகுப்பில் வரும் பல பாடல்களும் இங்கு கவனிக்கத்தக்கவை. இப்பாடல்கள் குறிப்பிட்ட மக்களின் கலாசார நிறுவனங்களின் ஒரு பகுதியாகவும் அவர்களின் இருப்பின் ஒரு பகுதியாகவும் போராட்ட மேடையாகவும் அமைவதைக் காட்டிநிற்கின்றன. பொதுவாக தேசபக்திப் பாடகர்கள் கொரில்லாத் தளபதிகளின் மாதிரிகளாக தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றனர். வரலாற்று நிர்ப்பந்தம் காரணமாகச் சமூகத்தால் அவ்வாறு தகவமைக்கப்பட்டு விடுகின்றனர். இப்பாடலாசிரியர்கள் தமக்கு முந்திய அல்லது தமது சமகாலத்தைய அரசியல் வரலாற்றுத் தளபதிகளின் இலக்கியநிலைத் தளபதிகளாகின்றனர். புதிய வரலாற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயற்பாட்டிலும் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய தேசபக்திசார்ந்த எழுச்சிப் பாடல்களின் பங்கு விடுதலைப் போராட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இந்த முக்கியத்துவம் இருநிலைப்பட்டது. ஒன்று ஆதிக்கத்திற்கு எதிரான, ஒன்று திரட்டப்பட்ட - ஒருங்கிணைக்கப்பட்ட பதிற் குறிகளைத் திரட்டுதல் மற்றும் இயங்கச் செய்தல். மற்றையது நிலம் மற்றும் இனம் பற்றிய சமூக

# பாடலாசிரியர்கள்



புதுவை இரத்தினதுரை



காசி ஆனந்தன்

வரலாற்று நினைவடுக்குகளைச் சேர்த்து வைத்துக் கடத்தி உறவாடும் பெட்டகமாக இருத்தல்.

அடக்கப்படும் இனத்தின் பொதுவான நிலப்பகுதி, பொதுவான வரலாறு, பொதுவான அடையாளம், இருப்பின் வெளிப்பாடு என்பன பற்றியெல்லாம் இப்பாடல்கள் பேசுகின்றன. இத்தகைய பாடல்களை ஹஸன் கனஃபானி போன்ற விமர்சகர்கள் "பேராட்டத்தின் களரி" எனக் குறிப்பிடுகின்றனர். ஆதிக்கத்துக்கு உட்படும் மக்கள் குழுவின் பண்பாட்டைக் கீழ்மைப்படுத்துதல், அதன் கலை, நடனங்கள், மதங்கள், வரலாறு, புவியியல், கல்வி, வாய்மொழி மரபு, இலக்கியம் ஆகியனவற்றை மதிப்பற்றதாக்குதல் முதலிய ஆதிக்கச் செயற்பாடுகளின்போதும் ஆதிக்க நிலையில் உள்ள மொழியையும் மொழிசார் பண்பாட்டையும் திட்டமிட்டு ஆதிக்கவாதிகள் பரப்பும்போதும் அவை சுதேச மக்களின் மனங்களை ஆக்கிரமிக்காதவகையில் எல்லை வகுத்து எதிர்ப்பவையாக இப்பாடல்கள் அமைகின்றன. உடலை வருத்திப் பணிய வைக்கும் துப்பாக்கி ரவைக்கு மாறாக மனப்பரப்பில் - ஆன்மீகத் தளத்தில் அசைக்கமுடியாத - ஆதிக்கசக்தி வெல்ல முடியாத நிலையை இப்பாடல்கள் உருவாக்குகின்றன. ஒரு வகையில் எதிரியின் துப்பாக்கியின்தோல்வியை இப்பாடல்களே தீர்மானிக்கின்றன. இதற்குக் காரணம் இவை தனியே சொல்லும் இசையும் சேர்த்துப் பொருத்தப்படாமையே. இப்பாடல்கள் வெறும் சொல்லும் இசையும் சேர்ந்தவையல்ல. இவை ஒரு மாபெரும் அரசியலைச் சார்ந்தவையும்கூட. ஒடுக்கு முறைக்கு எதிரான அனைத்து முகங்களுக்குமான அரசியலும் மொழியும் இசையும் கலந்து மேலெழும் களத்தின் கலைக்குரல்கள். இதற்காகத் தான் அரசியற் பாடுநர்கள் தேடித் தேடி அழிக்கப்படுகிறார்கள்.

கூகி வா தியாங்கோ (Ngugi Wa Thiong'o) அரசியல் இலக்கியத்தில் இரண்டு எதிரெதிரான அரசியல் வெளிப்படுகின்றது என்றார். ஒன்று அடக்குமுறை, துஷ்பிரயோகம், சுரண்டல் முதலியவை தொடர்பானது. அது ஏகாதிபத்தியம் சார்ந்தது. தன்னைவிட வளத்திலும் ஆற்றலிலும் குறைந்த நாடுகள் மீது வளமும், வலிமையும் கொண்ட நாடுகள் செலுத்தும் ஏகாதிபத்திய அரசியல் சார்ந்தது. இரண்டாவது முழுமையான விடுதலைக்கான மனிதப் போராட்டத்தின் அரசியலும் அதுசார்ந்த இலக்கியமும். இது சுதந்திரத்தை முதன்மைப்படுத்தியது. இனம், நிலம் முதலியவற்றின் பற்றுச் சார்ந்தது. பாரதியின் வார்த்தைகளில் "விதந்தரு கோடி இன்னல் விளைந்தென்னை அழித்திட்டாலும் சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே" என்றும் "மானுடந்தனைக் கட்டிய தளையெலாம் அறுக" என்றும் இதனைக் குறிப்பிடலாம். கவிஞர் புதுவை இரத்தினதுரையின் வார்த்தைகளில் "தமக்கு வேண்டிய தனைத்தும் தான்பெறும் சக்தி கை-

**மொழியில் உருவாகும் தேசபக்திப் பாடல்கள் மொழியையும் மொழிசார் தேசியத்தையும் அதன் கூறுகளையும் வரலாற்று நினைவடுக்குகளில் வைத்துப் பேசும் கருவி என்ற வகையில் அதிமுதன்மை பெற்றவை.**

வரல் விடுதலை என்பதாம்" எனக் குறிப்பிடலாம்.

இந்த அடிப்படையில் அமில்கார் கப்ரால் (Amilcar Cabral) கூறியது போல ஒரு மக்களின் தேசிய சுதந்திரம் என்பது 'அவர்களின் வரலாற்று ரீதியான ஆளுமையை அவர்கள் மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்' - ஏகாதிபத்திய ஆதிக்க அழிவில் இருந்து அவர்கள் தங்களுடைய வரலாற்றுக்குத் திரும்புதல்" ஆகும். இதற்கான வரலாற்றுப் பணியைச் செய்பவர்களே இந்தத் தேசபக்திப் பாடலாசிரியர்கள். வோல் சொபீன்கா எனும் நைஜீரிய நாட்டு எழுத்தாளர் இத்தேசபக்திப்பாடல்களை "விடுதலைக்கான பெரும்படியான சமரின் முக்கிய பகுதிகள்" எனக் குறிப்பிட்டார்.

## IV

தமிழ் மரபில் தேச விடுதலைப் பாடல்களின் முன்னோடியாகப் பாரதியார் விளங்குகிறார். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலிருந்து பாரதி யையோ பாரதியிலிருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தையோ பிரித்துப் பார்க்க முடியாது. தேசபக்தியை ஒரு மதமாக மாற்றும் வகையில் அவரின் பாடல்கள் அமைந்திருந்தன. தேசபக்த மதத்தாரின் தெய்வமாகப் பாரதமாதாவை வரித்துக்கொண்டவர், அவர். பாரதமாதா மீது பதிகம் பாடிய அவரே "வந்தே மாதரம்" என்பதைத் தேசபக்தியின் மந்திரச் சொல்லாக மாற்றியவர். அந்நிய ஆதிக்கத்தை இருளாகவும், அடிமைப்பட்ட பாரத மக்களை நீடுதுயில் கொள்வதாகவும் இணைத்து விழித்தெழச்செய்யப் பாடல்களை எழுதியவர். இதனால்தான் பாரதிதாசனால் "நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா" என்று அவர் குறிப்பிடப்படுகிறார். தாய்நாடு, தாய்மொழி பற்றிய பாரதியின் தேசபக்திப் பாடல்களைத் தொடர்ந்தே தமிழில் தேசபக்திப் பாடல்கள் வரலாயின. பின்னர் பாரதிதாசன் இயக்கநிலைப்பட்ட - திராவிடக் கருத்துநிலையை மேலோங்கச் செய்யும் வகையிலான பலபாடல்களை தேசபக்தியோடுஇணைத்துப்பாடியுள்ளார். இவரின் வீறார்ந்த செய்யுள் நடையைப் பிற்காலக் கவிஞர்களிடமும் காணமுடிகிறது.

## V

ஈழத்தைப் பொறுத்தவரையில் சிங்களவர்களைவிடவும் தீவிர இலங்கையர்களாக இருந்த சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், திரு. கென்டி பேரின்பநாயகம் முதலியோரது காலத்தி லிருந்து இலங்கை தேசத்தைப் போற்றிப்பாடும் பாடல்கள் வந்துள்ளன. பாவலர் துரையப்பாப்பிள்ளையிலிருந்து இந்த நீட்சியைக் காணமுடியும். ஆயினும் இவை பெரும்பாலும் கவிதை நிலைப்பட்டவையாகவும் ஐக்கிய இலங்கையைப் பிரதிபலிப்பனவாகவும் அமைகின்றன. இதற்கு மாறாகத் தமிழ் இலக்கிய அரசியல் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது முதன்முதலாகத் 'தமிழனுக்கு என்றொரு தனி நாடு" எனும் அடிப்படையிலான தமிழ் இனம், தமிழ் நிலம், தமிழ்மொழி இவற்றை இணைக்கும் தமிழ்த் தேசியக் கருத்துநிலை சார்ந்த தேசபக்திப் பாடல்கள் ஈழத்தில் தமிழ்த் தேசியக் கருத்துநிலை

மேலோங்கிய பின்னரேயே - தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்திலேயே முதன்முதலில் வெளிவந்தன. 1950களில் இருந்து ஈழத்துத் தமிழ் கவிதை அரசியல் மயப்பட்டதெனினும் 1980களின் இறுதிப் பகுதியில் இருந்துதான் தமிழ்த் தேசிய அரசியலைமுதன்மைப்படுத்திய தேசபக்திப் பாடல்கள் வெளிவரத் தொடங்குகின்றன. இதற்குரிய காரணங்களாக இனமுரண்பாடு உக்கிரமடைதல், தமிழீழ விடுதலைப் பேராட்டம் ஆயுதப் போராட்டமாக அதிக முனைப்புறுதல், இளைஞர் இயக்கங்களின் வருகை, ஆதிக்க சக்திக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கு முதலியவற்றைக் குறிப்பிடலாம். 1985இல் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' முன்னுரையில் இக்காலச் சூழலின் யதார்த்தத்தைக் கவிஞர் சேரன் பின்வருமாறு குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

"எமது நிகழ்காலம் கொடூரமான ராணுவ அடக்குமுறைகளின் உச்சங்களையும் அவற்றுக்கெதிராகப் பல்வேறு வடிவங்களிலும் வெடித்தெழும்பும் போராட்டங்களையும் வரலாறாக்குகிறது. அநீதி, துயரம், அறிவும் நியாயமும் கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவுக்குப் படுகொலைகள் தங்களுடைய சொந்த மண்ணிலிருந்து வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு அகதிகளாய் வெளியேறுகிற மக்கள் எல்லைப் புறங்களில் எரிந்து கொண்டிருக்கும் எமது வீடுகள், வயல்களிலிருந்து இன்னும் அடங்காத புகை இன்னும் அடங்காத நெருப்பு -இவையேசூழலின்யதார்த்தம்(மரணத்துள் வாழ்வோம் - முன்னுரை- 1985)

கவிஞர் புதுவை இரத்தினதுரை

**"சிங்கள ராணுவப் பாசறையும்**
**வந்த இந்திய ஆதிக்க ராணுவமும்**
**தலையாட்டிகளின் கொலைவேட்டைகளும்**
**இன்று ஆள்வதுதான் தமிழ்ஈழமண்"**

(பாசறைப் பாடல்கள்)

என்று சூழலின் யதார்த்தத்தைக் கூறி

**"கேட்க ஒரு நாதி**
**கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்**
**மீட்க ஒரு இயக்கம்**
**மூச்சுவிட ஒரு கவிஞன்**
**கட்டாயம் தேவை – இது**
**காலத்தின் குரலாகும்"**

(மரணங்கள் மலிந்த பூமி)

எனக் காலத்தோடு ஒட்டிய வரலாற்றுத் தேவையை வலியுறுத்துகிறார். இதனால்

**"இறைமையோடு நான் நானென இருந்திடும்**
**இருப்பு என்பதே விடுதலை"**

(பூவரசம் வேலியும் புலினிக் குஞ்சுகளும்)

என்பதை ஈழத்தில் வலியுறுத்த கவிஞர்கள், அரசியற் பாடலாசிரியர்களாக மாற்றமடைகின்றனர்.

முன்னர் குறிப்பிட்ட ஒலி நாடாக்கள் தமிழ்த் தேசியக் கருத்துநிலை தீவிரம் பெற்ற காலத்தில் வெளிவந்தவை. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கருத்து நிலையின் அடிப்படையில் பின்வரும் மூன்று அரசியற் செயற்பாடுகளை இக்காலத்தில் மேற்கொண்டனர்.

1. ஆதிக்கம் செய்யும் இலங்கை அரசை எதிர்த்தல்
2. அப்பொழுது நிலவிய தமிழரசியலை நிராகரித்தல்
3. பின்காலனித்துவப் போராட்ட நாடுகளில் மார்க்சிய முனைப்புடன் தொழிற்பட்ட இடரெதிர் நெடும் போரையும் தளைநீக்கக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்ளல்.

## VI

இதுவரை குறிப்பிட்ட சமூக அரசியல் வரலாற்றுப் பின்னணியில் தமிழ் தேசியத்தை முதன்மைபடுத்தும் தேசபக்திப் பாடல்கள் வெளிவரத் தொடங்கின. கலாசார எதிர்ப்பு ஆயுதரீதியான எதிர்ப்பாகப் பரிமாணம் அடைந்தது. எனினும் கலாசார அம்சங்களே ஆயுதப் போராட்டத்தினை வன்மையோடு நடத்தும் கருவிகளும் ஆயின. இவற்றுள்

பாடல் முதன்மை பெற்றது. **"மரணத்துள் வாழ்வோம்"** என்பது இக்கால சமூக, அரசியல் வாழ்வின் குறியீடு எனினும் பாடல்கள் **"சாவு எமக்கொரு வாழ்வென ஆனது" (களத்தில் கேட்கும் கானங்கள்)** என இன, நில விடுதலைக்காகச் **"சாதலேவாழ்தல்"** என உயர்ந்து நின்றன. ஒடுக்கு முறைக்கு எதிரான இருப்பின் அடையாளத்தை அடக்குமுறை அரசியலின் முகத்தில் அறைந்து பிரகடனம் செய்தன.

எதிர்காலப் போராட்டத்தினது அழைப்புக் குரல்களை விடுப்பனவாக, போராட்ட வாழ்வைப் பிரதிபலிப்பனவாக இக்கால அனைத்துக் கலை இலக்கியச் செயற்பாடுகளும் அமைந்தன. மண்சுமந்த மேனியர் முதலிய நாடகங்களும் விவரணத் திரைப்படங்கள், கவிதா நிகழ்வுகள், வீதிநாடகங்கள் முதலியவையும் இக்காலச் சூழலைப் பிரதிபலித்தன. வடபகுதியின் பாரம்பரிய கூத்தான காத்தவராயன் கூத்து (பேச்சு வழக்கில் காத்தாக் கூத்து) இக்காலத்தில்தான் **'களத்தில் காத்தான்'** என்று அரசியல் நீதியாகக் கலையாக்கம் பெறுகிறது. உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கூட குமரப்பா இனிப்பு, கிட்டுப் பப்பாசி, ஜொனி / மிதிவெடி (சம்ஸா) என அரசியல்சார் நாமம் பெற்று இக்காலத்தில் வெளிவந்தன. (குமரப்பா, கிட்டு, ஜொனி ஆகியோர் அக்காலத்தில் வீரமரணமடைந்த புலிகளின் மூத்த தளபதிகள்) பொதுவாக இரத்தம் சிந்தும் அரசியலையே இக்காலக் கலை இலக்கியச் செயற்பாடுகளும் பொருளாதார முயற்சிகளும் வெளிக்காட்டின. தியாகி திலீபனின் மரணத்தோடு இந்திய அரசு, அகிம்சையையும் அகிம்சைப் போராட்டத்தையும் மரணமடையச் செய்துவிடுகிறது.

## VII

இத்தகைய சமூக அரசியல் மற்றும் கலை, இலக்கியப் பகைப்புலம் மட்டுமன்றி தேசபக்திப் பாடல் இயக்கத்துக்கான பாடல் - மக்கள் மற்றும் போராளிகளுக்கான பாடல் என்ற வகையில் ஈழத்தில், முக்கியமாக இரு விதமான இணைப்புகளின் அடிப்படையில் உருவாகியதையும் குறிப்பிடுதல் வேண்டும். அதாவது திராவிட இயக்க வழிவந்தத் திரைப்படப் பாடல் மரபும் ஈழத்து மெல்லிசைப் பாடல் மரபும் இணைந்து ஈழத்துத் தமிழ்த் தேசிய அரசியல் தளத்திற்கேற்ப பாடலாக்கம் பெறுவதையும் அவதானிக்க முடிகிறது.

### தமிழகப் பாடகர்கள்


ரி.எம்.எஸ்.


தேனிசை செல்லப்பா


சொர்ணலதா


பி.சுசீலா


மலேசியா வாசுதேவன்


வாணி ஜெயராம்


மனோ


ரி.எல்.மகாராஜன்

தி.மு.க.வின் அரசியல் சமூக வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாகத் திரைப்படத்துறை விளங்கியது. அத்திரைப்படங்களில் வெளிவந்த பாடல்களை ஈழவிடுதலைப் போராட்ட இளைஞர் இயக்கங்கள் ஆரம்பத்தில் பயன்படுத்தியமை சுவாரசியமான ஒரு நிகழ்வு. இயக்கங்களின் பிரசாரக் கூட்டங்களிலும் மேடைப் பேச்சுக்களிலும் பேச்சுக்களின் முன்பும் அறிவிப்புக்களின் இடையிலும் இப்பாடல்கள் ஒலிபரப்பப் பட்டன. திரைப்படங்களில் வெளிவந்த பாரதியாரின் தேசபக்திப் பாடல்களே அதிக தடவைகள் இவ்வாறு ஒலிபரப்பப்பட்டன. 'வெற்றி எட்டுத் திக்கும் என்று கொட்டு முரசே', 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' போன்ற பாரதி பாடல்களும் 'நாளை நமதே இந்த நாடும் நமதே', 'எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே', 'அச்சம் என்பது மடைமையடா அஞ்சாமை திராவிடர் உடைமையடா', 'தூங்காதே தம்பி தூங்காதே', 'நல்லநல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி', 'நேருக்கு நேராய் வரட்டும் நெஞ்சி துணிவிருந்தால்', 'தோல்வி நிலையென நினைத்தால் மனிதன் வாழ்வை ஜெயிக்கலாமா', 'வீட்டைப் போலே நாட்டை நினைக்கனும்' முதலிய திரைப்படப் பாடல்களும் அதிகளவு ஒலிப்பரப்பப்பட்டன.

*1939*இல் இந்திய காங்கிரஸ் தேங்கிக் கிடந்தபோது வெளிவந்த பம்பாய் மெயில் படத்திற்குக் கே.பி. காமாட்சி எழுதிய

**"தேசத் தொண்டே**
**தெய்வப் பணியென அறிவாய்**
**தெளிந்தே நடந்தால் வருமே**
**சுய ஆட்சியென உணர்வாய்"**

என்ற பாடலும் பலதடவைகள் ஒலிப்பரப்பப்பட்டது. தமிழ் விடுதலை இயக்கங்கள் தமது கொள்கைப் பரப்பலுக்காகப் பாடல்களைப் பயன்படுத்தும் செயற்பாட்டை ஆரம்பகாலத்தில் இவ்வாறுதான் மேற்கொண்டிருந்தன.

இரண்டாவது ஈழத்து மெல்லிசைப் பாடல் மரபு. திரைப்படத்துறையினால் வளர்த்தெடுக்கப்பட்ட இவ் இசை மரபு ஈழத்தில் ஆரம்பத்திலே திரைப்படத் துறையுடன் வளர்ந்ததெனினும் பின்னர் திரைப்படத்துறை வளர்ச்சியற்றுப்போக தனியொரு கலைவடிவமாக வானொலி மூலம் வளர்த்தெடுக்கப்பட்டு வியாபகமாகியது. இலங்கை வானொலி இசைவாணர் மணிபாகவதரால் *1960*களில் இலகுபடுத்தப்பட்ட இசையாக (இலகு சங்கீதம்) பெருமளவு வளரத்தொடங்கியது. *1969*இல் காவலூர் ராசதுரையுடன் இந்த முயற்சி வர்த்தக சேவைக்காக விஸ்தரிக்கப்படுகிறது. *80*களின் ஆரம்பப் பகுதிவரை இம்மெல்லிசைப் பாடல்கள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தன. மெல்லிசைப் பாடல்கள் சமூகத்தில் தொடர்பியல் வலுவுடைய ஒன்றாக இக்காலத்தில் விளங்கியிருந்தன. இதற்கு உதாரணமாக *1977*இல் நடைபெற்ற வன்செயலின் பின்னர் சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்த கேலிச் சித்திரத்திற்குப் போடப்பட்ட பாடற்பகுதியைக் குறிப்பிடலாம். தமிழர்களைச் சிங்களவர் பஸ் வண்டியில் இருந்து இறக்கிக் கொலை புரிவது போன்ற கேலிச் சித்திரத்திற்கு,

**"தங்கரதம் போலே பொங்கிவரும் தேரே**
**எந்தன் ஈழநாட்டைப் பார்த்தாயா?**
**சிங்களமும் தமிழும் சேர்ந்து நடம்புரியும்**
**மங்காத காட்சியில் பூத்தாயா?**

என்ற மெல்லிசைப் பாடற்பகுதி போடப்பட்டிருந்தன. மேற்படி பாடல் வரிகள் புலப்படும் ஒற்றுமை புரையோடிப் போயிருப்பதைக் கேலியோடு இச்சித்திரமும் கவிதையும் புலப்படுத்தின. இப்பாடல் பற்றிய சமூகக் கேலியாகவும் இதனைக் கொள்ளலாம்.

மௌனகுரு எழுதிய 'சின்னச்சின்னக் குருவிகள்' என்ற பாடலில், 'நாளை இந்த ஈழ நாட்டை நடத்தப் போகும் குருவிகள்' என்ற வரி வந்ததற்காகச் சில தடவைகள்

ஒலிபரப்பப்பட்ட பின்னர் இப்பாடல் ஒலிபரப்பத் தடையாகியது. எனவே மெல்லிசைப் பாடல்களுக்கூடாகவும் ஒரு அரசியல் மாற்றத்திற்கான பிரதிபலிப்புத் தெரிவதுடன் தமிழீழத் தேசியத்தை வலியுறுத்திய தேசபக்திப் பாடல்களுக்கான மினுக்கங்கள் தெரிவதையும் காணமுடிகிறது.

முன்னர் குறிப்பிட்ட அரசியல் சமூக நிலவரங்களும் இப்போது குறிப்பிட்ட இருவிதமான இசைப்பாடல் மரபுகளும் இணைந்து தமிழீழத் தேச பக்திப் பாடலாக்கத்திற்கு அடிப்படையாகின.

தமிழீழ விடுதலைப் போர் 1983ஆம் ஆண்டுதொடக்கம்விடுதலைப்புலிகள்தலைமையில் நிறுவனமயப்படுத்தப்பட்டது. சோசலிசத் தமிழீழத்தை நோக்கி (1980), அரசியலும் இராணுவனும் (1985), ஒன்றிணைந்து போராடுவோம் (1985), சோசலிசத் தத்துவமும் கெரில்லா யுத்தமும் (1984) போன்ற அவர்களின் நூல்களும் கா. சிவத்தம்பியின் தமிழ் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்(1986)எனும் நூலும் இந்த நிறுவனமயப்பாட்டை வலியுறுத்தின. எம். ஏ. நுஃமானின் பலஸ்தீனக் கவிதைகள் மொழிபெயர்பும் உரிமைக்கான பாடல் வரவுக்கு உந்துசக்தியாகியது. இத்தகைய நிறுவனமயப்பட்ட போாின் பிரதான இலக்கிய வடிவமாகத் தேசபக்திப் பாடல் முதன்மைப்பெறத் தொடங்கியது. இப்பாடல்களைத் தமிழீழ வீடுதலைப் புலிகள் இயக்கமே பெருமளவு வெளியிட்டமைக்கு அவ்வியக்கத்தின் நிறுவனமயப்பாடும் ஒரு பிரதான காரணமாகும். ஆரம்ப காலத்தில் பிறவிடுதலை இயக்கங்களும் இத்தகைய முயற்சிகளில் சிறிதளவு ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## VIII

களத்தில் கேட்கும் கானங்கள், புலிகளின் பாடல், அந்நியர் வந்து புகல் என்ன நீதி, புயல்கால ராகங்கள், தமிழீழ எழுச்சிப் பாடல்கள், பாசறைப்பாடல்கள், வேங்கைகளின் விடுதலைக் கீதங்கள், இந்தமண் எங்களின் சொந்தமண், இது புலிகளின் காலம் என வரும் ஒலிநாடாக்களின் பெயர்களே அவை வெளிவந்த காலத்து - அவற்றை வெளியிட்ட இயக்க அரசியற் கருத்து நிலையைக் கோடிகாட்டுகின்றன. நிலம், இனம், படை, எழுச்சி, விடுதலை, ஆதிக்க எதிர்ப்பு முதலியன தமிழ்த் தேசியக் கருத்துநிலையின் பின்னணியில் பாடலாக்கம் பெறுவதை ஒலிநாடாக்களின் பெயர்கள் சுட்டிநிற்கின்றன.

இப்பாடல்கள் மக்களியக்கத் தொழிற்பாட்டுக்கான கருவியாக அமைந்தன. ஏற்கனவே திரைப்படப் பாடல் மற்றும் மெல்லிசைப் பாடல் கேட்கும் மரபில் வாலாயமான மக்களின் செவிகளுக்காகக் கவிதை பாடலாகிறது. மக்களிடத்தில் கொள்கையைப் பரப்பவும், அவர்களிடத்தில் இயக்க உந்துதல்களை ஏற்படுத்தவும் இப்பாடல்கள் பயன்பட்டன. விடுதலை இயக்கத்துக்கான ஆட்சேர்ப்பில் இப்பாடல்கள் முக்கிய பங்கெடுத்தன. இப்பாடல்கள் வெளிவந்த 1986 தொடக்கம் 1995 வரையான காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் அதன் விளைவான பொருளாதாரத்தடை, தொடர்பாடல் துண்டிப்பு முதலியனவும் அரசியல் சமூகக் களத்தில் இப்பாடல்கள் அதிக கவனிப்புப் பெறக் காரணமாயின. விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிகாக்கும் படைக்கும் இடையிலான மோதல் நடவடிக்கைகள், இந்தியப்படையும் இலங்கைப் படையும் செய்த அட்டூழியங்கள் முதலியன மக்களைத் துயர வாழ்வுக்குள் தள்ளின. மின்சாரம் வடக்கில் இல்லாமற் போயிற்று. மின்கலங்களின் வருகை நிறுத்தப்பட்டது. மின்சாரத்தில் இயங்கும் ஊடகங்களின் பயன்பாடு அற்றுப் போயிற்று. கொழும்புப்

***இசையின் லய இறுக்க வளவுக்குள் விடுதலைக் கருத்து நிலையை இறுகப் பற்றிய சொற்கள் வந்து விழும்போது ஈர்க்கும் இசையுடன் பாடகர்களின் பாவத்துடன் கூடிய குரலும் இணைந்தபோது ஒரு தொடர்பியல் வலுமிக்க சாதனமாக இப்பாடல்கள் செவிகளூடாக மக்களதும் போராளிகளதும் மனங்களில் வெகு லாவகமாகத் தொற்றிக்கொண்டன.***

பத்திரிகைகள் வருவதில்லை. கடதாசியின் வருகையும் நிறுத்தப்பட்டது. யாழில் இருந்து வெளிவரும் உதயன் முதலான பத்திரிகைகள் சில பொழுதுகளில் கோப்பில் (File) இல் அச்சிடப்பட்டு வெளியாகின. இவற்றின் மூலம் விடுதலை இயக்கக் கொள்கை பரப்பலை நிறுத்தலாம் என அரசு நினைத்தாலும் இச்சூழலே கொள்கைப்பரப்பலுக்கு இன்னும் சாதகமாகியது. புலிகளின்குரல்வானொலி, நிதர்சனம் தொலைக்காட்சி முதலியவற்றைப் புலிகள் குறிப்பிட்ட நேரமே இயங்கவைத்தாலும் அவற்றின் மூலம் பாடல்களை ஒலிபரப்பி கொள்கை பரப்புச் செயற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டனர். மக்களின் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கென்றும் மக்களோடு ஐக்கியமாகும் வகையிலும் அக்காலத்தில் உருவான மக்கள் கடை, இயக்கக் கடை முதலியவற்றிலும் இப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. வீடுகளில் சைக்கிள் டைனமோக்களைச் சுழல வைத்து அதன் மூலம் மின்பிறப்பித்து வானொலிகளை இயங்கவைத்துப் புலிகளின் குரல் வானொலி மூலம் பாடல்களையும் செய்திகளையும் கேட்கும்நிலை இருந்தது. புலிகளின் பிரசார மேடைகளிலும் போரின் வெற்றி விழாவிலும் வீரர்களின் இறுதி ஊர்வலத்திலும் மட்டுமன்றித் திருமண வீடுகள், பூப்புனித நீராட்டுச் சடங்குகளிலும் இவை ஒலிபரப்பப்பட்டன. இன்னும் மக்கள் அதிகம் கூடும் கோயில் களிலும் குறிப்பாக சுவாமிவீதி வலம் வரும்போது நாதஸ்வரத்தினூடாகவும் இப்பாடல்கள் மக்கள் கூட்டத்தின் மத்தியில் ஒலித்தன. தூக்குக் காவடி, பறவைக்காவடி ஊர்திகளிலும் இவை ஒலிபரப்பாயின. கல்வி நிறுவனங்களின் கலை நிகழ்ச்சிகளில் இப்பாடல்கள் இல்லாத நடனமோ நாடகமோ வில்லிசையோ இல்லை எனலாம். அந்தளவிற்கு அக்காலச் சூழலில் அதிகமான சமூகச் செல்வாக்கை இப்பாடல்கள் பெற்றிருந்தன. பாடல் கேட்கும் பண்பாட்டில் பழக்கப்பட்டவர்களை இந்தப் பாடல்கள் இலகுவிற் சென்றடைந்தன. கொள்கை பரப்பும் நோக்கில் வெற்றியும் பெற்றன. மக்கள் மத்தியில் மட்டுமன்றி போராளிகள் மத்தியிலும் கொள்கை உறுதியை இப்பாடல்கள் வளர்த்தன. கேட்பவர்களின் துன்ப வாழ்வு, உரிமை என்பவற்றை அவர்களுக்கு இப்பாடல்கள் உணரவைத்து அவர்களையும் போராட்டத்தின் பங்காளிகளாக ஆக்கும் நிலையை எய்தின.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு இப்பாடல்களைப் பின்வருமாறு குறிப்பிட்டது. “காலம் காலமாக எமது உரிமைகள் பறிக்கப்பட்ட சரித்திரத்தை, மறுக்கப்பட்ட தனது அரசியல் தன்னாட்சி உரிமைக்காக எமது இனம் நடாத்திய சுதந்திரப் போரின் வரலாற்றை, இந்தப் போரில் எமது மக்கள் சந்தித்த துயரங்களை வேதனைகளை தாயகத்தின் விடுதலைக்காக எம்மினத்தின் சந்ததி ஒன்று புரிந்துவிட்ட அர்ப்பணிப்புக்களின் உன்னதத்தை எடுத்தியம்புகின்றன இந்தப் பாடல்கள். எமது போராட்டத்தை ஒடுக்கி எமது இனத்தை அழித்து எமது மண்ணை அபரிகத்துவிட முனையும் ஆதிக்க சக்திகளை

எதிர்த்து புலிப்படை நடாத்திய வரலாற்றுப் போரை எடுத்துக்காட்டுகின்றன இந்தப் பாடல்கள்.... யுத்த கானங்கள்".

இசையின் லய இறுக்க வளவுக்குள் விடுதலைக்கருத்து நிலையை இறுகப்பற்றிய சொற்கள் வந்து விழும்போது ஈர்க்கும் இசையுடன் பாடகர்களின் பாவத்துடன் கூடிய குரலும் இணைந்தபோது ஒரு தொடர்பியல் வலுமிக்க சாதனமாக இப்பாடல்கள் செவிகளூடாக மக்களதும் போராளிகளதும் மனங்களில் வெகு லாவகமாகத் தொற்றிக்கொண்டன.

இந்தப் பாடல்கள் 'யுத்த கானங்கள்', 'விடுதலைக் கானங்கள்', 'எழுச்சிக் கானங்கள்', 'பாசறைக் கானங்கள்', 'ரத்த கானங்கள்' என்றெல்லாம் பாடல் களுக்குள்ளேயே வரிகளாகப் பதிவுபெற்றன. விடுதலைப் போருக்காய் ரத்தம் சிந்துவதை வரவேற்கும் பாடல்களாக இவை அமைந்தன.

**"கானம் ரத்த கானம்**
**கானம் ரத்த கானம்**
**......**
**வெடித்துச் சிதறும் இதயங்களிங்கே**
**வெதும்பி இசைத்திடும் விடுதலைக் கானம்**
**துடிக்கும் இதயம் உனக்கிருந்தால் உன்னை**
**தூங்கவிடாதிந்த ரத்தகானம்"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

எனக் குருதி தோய்ந்த பாடல்களாக இவை வெளிப்பட்டன. இப்பாடல்கள் குருதி சிந்தும் போருக்கானவை. ஆதிக்கத்தை அழிக்கக் குருதி சிந்தி அதன் மூலம் மானுடத் தளை அறுக்கும் கானம் என்பதை

**"ஈழவிடுதலைப் புலிகளின் குருதியில்**
**எழுதப்படுகின்ற மானுடகானம்"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

என்பது காட்டி நிற்கிறது. இப்பாடல்களின் கேட்குநர் வட்டத்துள் மக்களும் போராளிகளும் அடங்கினர்.

ஒன்பது ஒலிநாடாக்களிலும் அமைந்த 86 பாடல்களும் தமிழ் இன அடிப்படையில் ஒன்றிணைந்த கலைஞர்களின் (தமிழீழ - தமிழக) கூட்டு முயற்சியாகும். புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன், காளிமுத்து, இரும்பொறை, செ. ராஜநாயகம், கந்தராசா, சேதுராமன், இன்குலாப், மெய்யப்பன், புலமைப்பித்தன், பங்காரு, ரவி, நாவண்ணன் ஆகிய பதின்மூன்று




பாடலாசிரியர்கள் இவற்றை எழுதினர். இவர்களில் ஈழத்தைச் சேர்ந்தவர்களும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இவர்களில் பலர் ஏற்கனவே கவிஞர்களாக நன்கறியப்பட்டவர்கள், புதுவை இரத் தினதுரை மார்க்சியக் கருத்து நிலை யோடு தமிழ்த் தேசியக் கருத்து நிலையை இணைத்துக் கொண்டவர். பின்னர் தமிழ் தேசியக் கருத்து நிலையின் இயக்கநிலைப்பட்ட கவிதை மற்றும் பாடல் ரீதியான பிரசாரகராக விளங்கியவர். காசி ஆனந்தன் தமிழ்த் தேசிய அரசியற் கருத்து நிலையினை வரித்துக் கொண்டவர். இவர்கள் இருவரும் இக்கால கட்டத்தின் முக்கியமான போர்ப் பாடலாசிரியர்கள்.

இசையமைப்பாளர்களாகத் தேனிசை செல்லப்பா, கண்ணன், தேவேந்திரன், எஸ். வைத்தியநாதன் ஆகிய நால்வரும் விளங்குகின்றனர். தேனிசை செல்லப்பா தமிழகத்தைச் சார்ந்தவர். ஈழவிடுதலைப்

போரின் ஆரம்பகாலப் பாடல்களைப் பெருமளவு இசையமைத்தவர். இவர் பல பாடல்களையும் பாடியுள்ளார். இவர்களில் இலங்கை வானொலிக் கலைஞரான கண்ணன் ஈழத்துக்கான பல தேசபக்திப் பாடல்களை இசையமைத்தவர். இவரது இசையில் வெளிவந்த பாடல்கள் பெரும் ஜனரஞ்சகத் தன்மை கொண்டவை. மக்களிடம் அதிகம் வரவேற்புப்பெற்றவை. இலங்கை வானொலிக் கலைஞரான கண்ணன் பின்னர் யாழ்ப்பாணத்தில் Keyboard கற்பிக்கும் இசையாசிரியராக நன்கறியப்பட்டவர்.

பாடகர்களாக தேனிசை செல்லப்பா, ரி.எம்.சௌந்தரராஜன், சொர்ணலதா, மலேசியா வாசுதேவன், பி. சுசிலா, வாணி ஜெயராம், மனோ, தீபன் சக்கரவர்த்தி, ரி.எல். மகாராஜன், தினேஷ், எம்.எஸ். ராஜேஸ்வரி, ராகவேந்தர், நாகூர் பாபு, பொன் சுந்தரலிங்கம், சாந்தன், சியாமளா, மிதிலா, பௌசியன், குணமலர் ஆகியோர் (19 பாடகர்கள்) விளங்குகின்றனர். இவர்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள். தமிழகத் திரையிசைப் பின்னணிப் பாடகர்களும் (ரி.எம்.எஸ் முதலியோர்) ஈழத்து இசைக் கச்சேரி மரபில் வந்தவர்களும் (பொன். சுந்தரலிங்கம்), புதிய தலைமுறைப் பாடகர்களும் (சாந்தன் முதலியோர்) அடங்குவர்.

## IX

இப்பாடல்களில் இசையமைப்பாளர்களின் பெயர் தெரியாத பதினைந்து பாடல்களும் பாடகர்களின் பெயரற்ற ஒன்பது பாடல்களும் அமைந்துள்ளன. இதற்கு பாதுகாப்பின்மை ஒரு காரணமாக இருக்கலாம்.

இப்பாடல்களின் உள்ளடக்க அம்சங்களைஅடிப்படையாகக்கொண்டுஇவற்றை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம். இவ் ஐந்து அம்சங்களும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் பிணைந்தவை எனினும் ஆய்வுவசதிகருதியேஇவைதனித்தனியாகப் பிரிக்கப்படுகின்றன.

### (I) மொழி, இனம், நிலம் பற்றியவை

தேசம் என்பது ஒரு வகையில் மொழி, இனம், நிலம் மற்றும் பண்பாட்டுக் கூறுகளின் ஒருங்கிணைந்த கருத்தமைவு ஆகும். இக்கூறுகளுக்கு அரசியல் நிலைப்பட்ட ஊறு ஏற்படும்போது அதற்கெதிரான எதிர்ப்பும் பாதுகாப்பும் மேற்கொள்ளப்படுவது தவிர்க்க முடியாது. தனிச் சிங்களச் சட்டத்தினைத் தொடர்ந்து மொழிப் பிரச்சினை தேசிய ஒடுக்குமுறை என்பதாகக் கருத்தமைவு அடிப்படையிலும் வாழ்வியல் அடிப்படையிலும் முக்கியமான ஒன்றாகியது. தமிழ்த் தேசிய அரசியலும் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சிங்களப் பெருந்தேசியவாத அரசியலும் இவற்றுக்கெதிராக நடைபெற்ற தமிழ் உணர்ச்சி மற்றும் மொழி உரிமைப் போராட்டங்களும் தமிழ் மொழிபற்றிய நீலாவணன், முருகையன் முதலியோரின் உணர்ச்சிச் செறிவுமிக்க கவிதைகளும் உணர்ச்சிச் செறிவுமிக்க தமிழ் மொழி பற்றிய தேசபக்திப் பாடல்களுக்கு உந்து சக்தியாயின. இவை ஒருவகையில் தமிழின் மேன்மை மீட்புப் பற்றியவையே.

**"தமிழே உயிரே வணக்கம்**
**தாய் பிள்ளை உறவம்மா**
**உனக்கும் எனக்கும்"**

(பு.பா.)

என்று மொழியை உயிராகவும், தாய் - சேய் உறவு நிலையிலும் பாடுவது மட்டுமன்றி,

**"தமிழே உன்னை நினைக்கும்**
**தமிழன் என்நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்**
**அமிழ்தே உன் எழில் நினைத்தால்**
**ஆயிரம் பூக்கள் சிரிக்கும் சிரிக்கும்**
**....**
**தமிழே உனக்கேன் கலக்கம்**
**தாயே பொறம்மா முழக்கம் வெடிக்கும்**

**அமிழ்தே உனை எவன் தொட்டான்**
**அவனை என் கைவாள் அழிக்கும் முடிக்கும்"**

*(பு.பா.)*

என்று தமிழுக்கான யுத்தத்தையும் இப்பாடல்கள் பேசின.

**"மன்னர் தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்**
**துடைக்க மறப்பேனோ"**

*(பு.பா.)*

என்றும்

**"வேல் பிடித்து வாழ்ந்த கூட்டம் கால் பிடிக்குமா**
**வீழ்ந்த வாழ்வு, மீள இன்னும் நாள் பிடிக்குமா**
**தோள் நிமிர்த்தித் தமிழர்தானை போர் தொடுக்குமா**
**எங்கள் சோழ சேரர் பாண்டியர் போல் பேரெடுக்குமா"**

*(புலிகளின் பாடல்)*

என்றும் மொழியின் அடிப்படையில் இனப்போரைத் தொடுக்க முயலுவதை இவை காட்டுகின்றன. முந்தைய தமிழ் மன்னரின் வீரச் செறிவின் மிதப்பில் கிறங்கினாலும் ஒடுக்கு முறைக்கு எதிரான குரல்கள் என்ற அடிப்படையில் இவை முக்கியமானவை. வீரம், செங்களம், வாள், வேல், ஈட்டி என ஆரம்பகாலப் பாடல்களில் இப்பதிவுகள் இடம்பெற்றாலும் புறநானூற்றுப் போர் வீரத்தைப் பின்னோக்கி நாடிச் செல்வதும் காலத்தேவைக்கு அதனை மீட்டெடுத்துக் கையாள்வதும் தவிர்க்க இயலாதவை.

இப்பாடல்கள் உலகத் தமிழினத்தை முன்னிலைப்படுத்தி நிலத்துக்கான போரை முதன்மைபடுத்திக் கூறின

**"உலகத் தமிழினமே எண்ணிப்பார் – நீ**
**உறங்கினால் வரலாற்றில்**
**யாருன்னை மன்னிப்பார்**

**எங்கேனும் உனக்கென்றோர்**
**அரசுண்டா காட்டு – தமிழ்**
**ஈழப்போர் வென்றேனும்**
**மானத்தை நாட்டு**

**வாழ்கின்ற நாடெல்லாம்**
**உனது தாய் நாடா?**
**வாடகை வீடென்ன**
**உன் சொந்த வீடா?**
**ஆளாமல் அலைகின்றாய்**
**ஆடாநீ மாடா?**
**அடிமையாய் இருக்கின்றாய்**
**நீ கெட்ட கேடா?"**

*(த.எ.பா.)*

தமிழரசு ஒன்றினை நிறுவுவதற்கான போரின் பாடல் முகமாக இது அமைவதைக் காணலாம். இந்த அடிப்படையில் தமிழீழம் எனும் தமிழினத்துக்கான தனிநாடு காணும் பயணத்துக்கான அறைகூவலை இப்பாடல்கள் விடுத்தன.

**"வாருங்கள் புலிகளே தமிழீழம் காண்போம்**
**வாழ்வா சாவா ஒரு கை பார்ப்போம்**
**முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றமல்லவா**
**முடிசுமந்து நாங்கள் ஆண்ட கொற்றமல்லவா**
**இந்த மண்ணின் மக்கள் எங்கள் சுற்றமல்லவா**
**தமிழ் ஈழ மண்ணை மறந்து வாழ்தல் குற்றமல்லவா"**

*(பு.பா.)*

என்ற பாடற்பகுதி இதனைப் புலப் படுத்துகிறது.

**"இந்த மண் எங்களின் சொந்த மண் – இதன்**
**எல்லைகள் மீறியார் வந்தவன்**
**நீர்வளம் உண்டு நிலவளமுண்டு**
**நிம்மதி ஒன்றுதான் இல்லை – எனினும்**
**இந்தமண் எங்களின் சொந்தமண்**

*(இந்த மண் எங்களின் சொந்தமண்)*

என்ற பல்லவி விடுதலை இயக்கத்தின் கருத்தினை மட்டுமன்றி தமிழ் நிலம் பற்றிய வளத்தையும் போர் தின்ற நிம்மதியையும் விபரிக்கிறது. இப்பாடலில் வரும் சரணங்கள் இரண்டு. முதலாவது சரணத்தில் போருக்கான காரணமும் போரின் இன்னலும் விளக்கப்படுகிறது. இரண்டாவது சரணத்தில் போரில் இணையும்படியான வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. அந்த வேண்டுகோள் வருமாறு:

**"சாவா இலையொரு வாழ்வா எனப்பெரும்**
**சமரே எழுந்தது தமிழா – உடன்**
**வாவா புலியுடன் சேர்சேர் எனுங்குரல்**
**வரையைப் பிளக்குது தமிழா – இனி**

**ஆகா அழைப்பிது போபோ எனவொரு**
**மகவை அனுப்பிடு தமிழா – நீ**
**பூவா இலைப்பெரும் புயலாய் எழுந்துமே**
**புறப்பட்டு வந்திடு தமிழா"**

*(இந்த மண் எங்களின் சொந்தமண்)*

தமிழரின் நிலமும் வாழ்விடமும் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்ட நிலையினையும் இப்பாடல்களில் காணமுடியும்.

**"மண்மேடாய்க் கிடக்கின்ற வீடுகளைப் பாரும் – இது**
**முன்னாளில் தமிழர்களின் குடியிருப்பு ஆகும்.**
**வயல்வெளிகள் பாரும் – இது**
**விளையவில்லைப் பாரும் – இது**
**தமிழர் நிலம் என்பதனால் விதைக்க வில்லைப் போலும்.**

*(இந்த மண் எங்களின் சொந்தமண்)*

**"உயிரினும் மேலானதாய் நாடு – இன்று**
**உடலங்கள் எரிகின்ற பேய் வீடு**
**பயமின்றி நாம் வாழ்ந்த சிறுகூடு – இன்று**
**பாதகரால் சிதைந்த மண்மேடு"**

*(இந்த மண் எங்களின் சொந்தமண்)*

கவிஞர் சேரன் குறிப்பிட்ட இக்கால சூழலின் யதார்த்த நிலைப் பாடல்களாக இவற்றைக் காணமுடிகிறது.

திருகோணமலை என்பது தமிழரின் பூர்வீக பூமி என்பது வரலாற்றுச் செய்தி. இந்து சமுத்திர வலயத்தில் இதற்கு ஒரு பொருளாதார அரசியல் முக்கியத்துவம் உண்டு. இதன் கேந்திர முக்கியத்துவம் காரணமாக வல்லரசுகளின் பார்வையிலிருந்து எப்போதும் இது விலகுவதில்லை. தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கம் திருகோணமலையைத் தமிழீழத் தலைநகராக வரலாற்று அடிப்படையில் பிரகடனம் செய்தது. அதற்குரிய வரலாற்று ரீதியான சான்றுகளை முன்வைத்தது. அதற்கான பாடற் பதிவுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**"கோணமலை எங்கள் கோட்டை – திருக்**
**கோணமலை எங்கள் கோட்டை**
**கொடுப்போமா எவன் கையிலும் – இந்த நாட்டை"**

*(இ.பு.கா.)*

**"பழந்தமிழன் குளக்கோட்டன்**
**அரசாண்ட மண்ணடா**
**இழந்தால் இந்த மண்ணை – நீ**
**தமிழனா என்னடா"**

*((இ.பு.கா.)*

**"தலை நகர் எவன் தொட்டாலும்**
**தமிழீழம் போர் தொடுக்கும்**
**தலைதரும் நிலை வந்தாலும் – எங்கள்**
**தமிழினம் தலை கொடுக்கும்"**

*((இ.பு.கா.)*

பாரம்பரியத் தமிழர் நிலத்தின் வளத்தையும் வனப்பையும் எடுத்துக்காட்டி மக்களுக்குத் தேசப்பற்றை ஊட்ட இப்பாடல்கள் முனைந்தன. இதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடற் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**"ஏல ஏலே ஐலசா**
**ஏலேலேலே ஐலசா**
**மீன் மகள் பாடுகிறாள்**
**வாவி மகள் ஆடுகிறாள்**
**மட்டுநகர் அழகான மேடையம்மா – இங்கே**
**எட்டுத்திசையும் கலையின் வாடையம்மா**

--------------------------------

**ஓடிவரும் உப்பாற்று வெள்ளத்திலே – பாடல்**
**ஒன்று வரும் தேன் சுமந்து வள்ளத்திலே**
**பாடிப்பாடி கதிரறுப்பார் கவிகளிலே – எங்கள்**
**பைந்தமிழும் வந்துவிழும் செவிகளிலே**

--------------------------

**நீர்க்கரையில் வல்லவர்கள் நீச்சலிருக்கும் – எங்கள்**
**நேரிழையார் வாய்குரவைக் கூச்சலிருக்கும்**
**போர்க்கலையில் வல்ல புலிக்கூட்டமும் உண்டு**
**பகை பொடிப்பொடி யாக்கும்போ ராட்டமுமுண்டு"**

*(இ.பு.கா.)*

மட்டக்களப்பின் மாண்பினை இப்பாடல் எடுத்துரைக்கிறது. தமிழினம் என்ற அடிப்படையில் புவியியல் அமைப்பில் பாரம்பரிய ஈழத்தமிழர் பிரதேசத்தினின்றும் மாறுபட்டு வாழும் மலையகத் தமிழர்களையும் இணைத்தன, இப்பாடல்கள். மலையக மக்களின் துயரவாழ்வையும் அவர்களைச்

சுரண்டி வாழும் இனத்தையும் பதிவு செய்வன வாய் இவை அமைந்தன.

**“செந்தமிழ் மகனின் இரத்த நிறம்**
**தேயிலைச் சாற்றின் சிவப்பு நிறம்**
**எம் தமிழ் மகனின் இதய நிறம்**
**றப்பர் மரப்பால் வெள்ளை நிறம்”** *(பு.பா.)*

**“தமிழர் உடம்பே உரமாகி**
**தளைத்தது தேயிலைச் செடிகளெல்லாம்”**
*(பு.பா.)*

**“சந்தனமரமாய்த் தனைத் தேய்த்தான்**
**தளைத்திடும் சிங்களன் சினம் ஏற்றான்**
**விந்தைத் தமிழன் உழைப்பினிலே**
**வேறோர் இனமே கொழுத்தம்மா”**
*(பு.பா.)*

இத்தேசபக்திப் பாடல்களை எழுதிய பாடலாசிரியர்கள் பாரதியாரையே முன்னோடியாகக் கொண்டனர் என்பதை **‘பாரதி இருந்தால்’ (பு.பா.)** எனத் தொடங்கும் பாடல் காட்டிநிற்கிறது.

## 2. இயக்கச் செயற்பாடு, விடுதலை, சுயநிர்ணய உரிமை பற்றியவை

ஒரு இனத்தின் விடுதலை இயக்கம் என்பது அது முன்வைக்கும் கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டே ஒழுங்கமைக்கப்படும். தமிழ்த் தேசியம் முதன்மைப்படுத்திய சுயநிர்ணய உரிமை என்பது தமிழினத்தின் வாழ்க்கையில் வலுக்கட்டாயமாகக் குறுக்கிடுவதற்கோ, அதன் நிறுவனங்களை அழிப்பதற்கோ, அதன் நடத்தைகளையும் மரபுக ளையும் மீறுவதற்கோ, தமிழ் மொழி யை நசுக்குவதற்கோ, தமிழின் உரிமைகளை ஒடுக்குவதற்கோ ஒருவருக்கும் உரிமையில்லை என்பதுமட்டுமல்ல தமது உரிமையைத் தாமே தீர்மானித்தலையும் சார்ந்ததாகும். தன்னாட்சி என்பது வெறும் பண்பாட்டு உரிமைகளை மட்டும் அளிக்க சுயநிர்ணய உரிமை என்பது ஒரு இனத்தின் அனைத்து உரிமைகளையும் அளிப்பதாக அமைகிறது.

இந்த அடிப்படையில் படையிலிருந்து கொடிவரையும் விடுதலையிலிருந்து ஆட்சிவரையும் முதன்மைப்படுத்தும் பல பாடல்கள் வெளிவந்ததைக் காணலாம்.

**“மறவர்ப் படைதான் தமிழ்ப்படை – குல**
**மானம் ஒன்றுதான் அடிப்படை**
**வெறிகொள் தமிழர் புலிப்படை – அவர்**
**வெல்வார் என்பது வெளிப்படை”**
*(பு.பா.)*

**“நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்**
**நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்**
**– – – – – – – – – – – – – – – – – – – – – –**
**வானம் நமது கொடியை அழைக்கும்**
**மாற்றார் முகத்தில் நாணம் முளைக்கும்**
**மானம் நமக்கோர் மகுடம் வழங்கும்**
**மண்ணில் நமது பெயரும் விளங்கும்”**
*(பு.பா.)*

புலிப்படை, வீரம், போர்த்திறன், வெற்றி முதலிய பலவற்றை இப்பாடல்கள் புலப்படுத்தியதுடன், விடுதலையையும், சுயநிர்ணய உரிமையையும் அதிகம் வலியுறுத்தின.

இயற்கையோடு இணைத்து விடுதலையைப் பரவசம் கொள்ளும் வகையில் இப்பாடல்கள் இசைத்தன.

**“இடிகின்றாய் வான் முகிலே –ஏன்**
**இடித்தாய் இங்குள்ள தமிழர் நெஞ்சில்**
**வெடிக்கின்ற விடுதலையின் பேர் ஆர்வம்**
**வெளிக்காட்ட விரும்பினாயோ”**
*(பு.பா.)*

‘என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம், என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்’ எனும் பாரதியின் பாடல் வழியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாரக மந்திரமாகிய “புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்” என்பதை

**“தமிழீழத் தாகம் தணியாது – எங்கள்**
**தாயகம் யாருக்கும் பணியாது”**
*(இ.பு.கா.)*

எனப் பாடல்கள் பதிவு செய்தன.

தமிழீழம் மலருவதையும் அதற்காக ஒரு கொடியின்கீழ்வீரர்கள்அணிவகுப்பதையும் பின்வரும் பாடற்பகுதிகள் காட்டிநிற் கின்றன.

**"காற்றுக்கும் கை முளைக்கும் தமிழ் ஈழத்திலே**
**கல்லறையும் மூச்சுவிடும் தமிழ் ஈழத்திலே**
**நாற்றுப் பயிர்களும் குண்டுகள் வீசும்**
**நம்பிக்கை யோடிங்கு பாட்டுக்கள் பாடும்**
**ஈழம் மலரும் – தமிழ் ஈழம் மலரும்"**

*(இந்தமண் எங்களின் சொந்தமண்)*

என்று நம்பிக்கையோடு பாடி

**"இமயமலை உச்சியிலே – முன்னர்**
**ஏற்றி வைத்த கொடியதுபோல்**
**அமைந்த தெங்கள் புலிக்கொடியே –**
**அதன்பின்**
**அணிவகுத்து நாம் நடப்போம்"**

*(இந்தமண் எங்களின் சொந்தமண்)*

என்று போருக்கு அணிவகுத்து

**"தமிழீழம் பெறும் ஒருகாலம் வரும்**
**ஒன்றாகச் சேருங்கள் – இதை**
**நன்றாகக் கேளுங்கள்**
**பழிதீரும் நிலை உருவாகும்வரை**
**போர்ப்பாட்டுப் பாடுங்கள்"** *(த.எ.பா.)*

என்று பாடல் மூலம் அறைகூவல் விடுத்து

**"பொறிகக்கும் விழியோடு புறப்பட்டு விட்டோம்**
**போராட நாட்குறிப்போம்"** *(பு.பா.)*

என நாட்குறித்து




**பூபாளம் பாடும் நேரம் – தமிழன்**
**புலியாகிப் போராடும் காலம்**
**போராடும் காலம் புலியாகும் நேரம்**
**பூகம்பம் எழுகின்ற தேசம்"**

*(இந்தமண் எங்களின் சொந்தமண்)*

எனப் போர்க் காலத்தை விபரித்து

**"யாகம் தொடங்கிவிட்டோம் – ஒரு**
**வேள்வி தொடங்கி விட்டோம்**
**ரத்த அருவியில் நாங்கள் குளித்தொரு**
**யாகம் தொடங்கிவிட்டோம்**
**வீரர்கள் சூழ்ந்தனர் காவலில் நின்றனர்**
**வேள்வி தொடங்கி விட்டோம் "**

*(புயல்கால ராகங்கள்)*

என விடுதலை வேள்வியை நடத்தியதை யெல்லாம் அழகியலுடன் இப்பாடல்கள் எடுத்துரைத்தன. ஆதிக்கத்தை இருளாகவும் அடிமை வாழ்வை நீடுதுயிலாகவும் பாடும் மரபின் அடிப்படையில்

**"தூக்கமா கண்மணி பள்ளி எழு – இந்த**
**தொட்டிலை விட்டு நீ துள்ளி எழு**
**பூத்தஎன் பூந்தமிழ் பொற்கொடியே – கையில்**
**புலிக்கொடி ஏந்தவா பூங்குயிலே**
– ---- ----- -------
**அப்பன் மடிந்ததும் போர்க் களத்தில் – உந்தன்**
**அண்ணன் இறந்ததும் போர்க்களத்தில்**
**கக்கும் அனல்வழி யோடெழுவாய் – புலி**
**காட்டிடும் பாதையில் நீ தவழ்வாய்"**

*(இந்தமண் எங்களின் சொந்தமண்)*

என்ற பள்ளி எழுச்சிப் பாடலும் அமைவதைக் காணலாம்.

பெண் விடுதலையை முதன்மைப் படுத்திய இவ் இயக்கம் தமிழின வரலாற்றில் முதன்முதலில் ஆயுதம் தாங்கிய பெண் போராளிகளை உருவாக்கி நாட்டு விடுதலைப் பணியில் அவர்களையும் இணைத்துக்கொண்டது.

**"சிறகு முளைத்த குருவி உனக்குச் சிறைகளா – தமிழ்**
**தேசம் எங்கும் பறக்க உனக்குத் தடைகளா?**
**அடுப்பங்கரையில் உறங்கிக் கிடந்து அழுவதா – நீ**
**அடிமையாகி இன்னும் இன்னும் விழுவதா?**
**விழியில் நெருப்பு ஏந்தி – நீ**

**வெளியில் வருக நீந்தி**
**வழியில் உள்ள தடைகள் யாவும்**
**எரிய வருக தாண்டியே**

**பேரம் பேசி உன்னை விற்கும் கோரம் – இது**
**பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்கா நேரம்**
**தாரமென்றும் தாய்மை என்றும் பேசும் – இந்தத்**
**தடைகள் யாவும் உடைய எழுந்து வாரும்**
**புனிதப் போரில் குதித்து நிற்கும் நாடு – பெண்**
**புலிகள் களத்தில் உலவுகின்ற வீடு"**

*(வே.வி.கீ.)*

இவ்வாறு இயக்கம், விடுதலை, உரிமை எனப் பல முகங்களை இப்பாடல்கள் வெளிப்படுத்தின.

### 3. நாட்டு வளம், நாட்டுப்பற்று, மக்கள் ஆதரவு பற்றியவை

போராடும் சமூகத்தில் எழும் பாடல்களில் நாட்டுவளம் அதன் தொன்மை என்பன எடுத்துக் கூறப்படுவது நாட்டுப் பற்றினை உருவாக்கும் பொறிமுறையைச் சார்ந்தது. நாட்டுப் பற்று என்பது இருப்பின் விருப்பியல் சார்ந்தது. நாட்டுச் சிறப்பை எடுத்துரைத்து மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டி மக்களது ஆதரவைப் பெற்றுக் கொள்வது எல்லாச் சமூகங்களிலும் நடைபெறுவது. மக்கள் போராட்டமாக ஒரு இயக்கத்தை மாற்ற இத்தன்மையைப் பிரதிபலிக்கும் பாடல்கள் வெளிவருதல் அவசியமானதே.

**"நம்நாடு தமிழ்நாடு இங்கே – ஒரு**
**நாடுண்டு நாமெல்லாம் உண்டு**
**தொன்மைசேர் வரலாறு உண்டு –மலை**
**தோழுண்டு ஆட்சிதான் இல்லை இல்லை"**

*(பு.பா.)*

எனத் தொடரும் பாடலில் நாட்டு வளம் பெரிய அளவில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. வயல், கனிப் பொருள் முதலிய இயற்கை வளங்கள், கால்நடை வளங்கள், கலை வளம், மீன் வளம், முத்து வளம், உப்பு வளம் என எல்லா வளங்களும் உள்ளன எனினும் ஒவ்வொரு சரணத்தின் கடைசி அடிகளில் எது எது இல்லை எனக் கூறப்படுகிறது.

**"மலைத்தோழுண்டு ஆட்சிதான் இல்லை இல்லை"**
**"ஒருவேலிதான் நம்நாட்டில் இல்லை இல்லை"**
**"தமிழ் இனம் என்றவாழ்வுதான் இல்லை இல்லை"**
**"சொந்தப் படை ஒன்றுதான் இல்லை இல்லை"**

இறுதியில் பின்வருமாறு பாடல் முடி-கிறது.

**"மொத்தத்தில் எல்லாமே உண்டு – தமிழ்**
**முடிமட்டும் இல்லாத நாடு நாடு"**

*(பு.பா.)*

ஆறுமுகநாவலருக்குப்பின் 'சைவமும் தமிழும்' இரு கண்கள் என்று கருதும் சைவ மேலாண்மைக்கண்ணோட்டத்தில்நின்றும் மாறுபட்டு தமிழும் தமிழீழ மண்ணும் இரு கண்கள்என்றுதமிழ்த்தேசிய மேலாண்மைக் கண்ணோட்டத்தில் பொருள்கொள்ளும் நிலை நாட்டுப்பற்றினைப் புலப்படுத்தும் பாடல்களில்

**"தங்கத்தமிழும் தமிழீழ மண்ணும்**
**எங்கள் இரு விழிகள்"**

*(புயல்கால ராகங்கள்)*

எனப் பதிவாகிறது.

**"வீட்டை உறவை வெறுத்து வாழ்ந்தோம்**
**விலங்கு சுமந்து நடப்போமா**
**நாட்டைக்காக்க மறந்து நாங்கள்**
**நடைப்பிணம்போல் கிடப்போமா**
**கண்கள் எதிரில் குண்டு விழலாம்**
**களத்தில் நாங்கள் மாழலாம்**
**என்ன நடந்தாலும் எங்கள் மண்ணை**
**நாங்கள்தானே ஆளலாம்"**

*(புயல்கால ராகங்கள்)*

எனவரும் பகுதிகளில் எல்லாம் நாட்டுப்பற்றே மிகுந்திருப்பதைக் காண முடிகிறது.

நாட்டுப்பற்றின் அடிப்படையில் விடுதலைப் போருக்கு மக்களை ஒன்று திரட்டும் பணியையும் இப்பாடல்கள் மேற்கொண்டன.

“வாருங்கள் வீரர்களே – ஒன்றாய்ச்
சேருங்கள் தோழர்களே
போகும்வழி வெகு தூரமில்லை
சாவு எமக்கொரு பாரமில்லை
– – – – – – – – – – –
நெஞ்சினில் குண்டுகள் பாயும் பாயும்
நிச்சயம் ஷெல்லுகள் கூவும் கூவும்
பிஞ்சுடன் பூக்களும் போர்க்களம் வாருங்கள்
புலிக்கொடி ஆடிடும் பாசறை சேருங்கள்”

*(புயல்கால ராகங்கள்)*

என்ற பாடற்பகுதியைக் குறிப்பிடலாம். இன்னும் விடுதலைப் புலிகளின் கானக வாழ்க்கையையும் வீரமரணத்திற்குப் பின்னான நிலையையும் அழகிய படிமங்களுடன் பாடல்கள் சித்திரித்தன. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

“வானுயர்ந்த காட்டிடையே
நானிருந்து பாடுகிறேன்
வயல்வெளிகள் மீது கேட்குமா – இது
வல்லைவெளி தாண்டிப் போகுமா
– – – – – – – – – – –
நான் சரியும் மண்ணில் நாளை
பூமலர்ந்து ஆடக்கூடும்
தேனெடுக்கும் ஈக்கள் கூட்டம்
தேடி வந்து பாடக்கூடும்”

*(புயல்கால ராகங்கள்)*

மக்கள் ஆதரவு பற்றிய பாடல்கள் போராட்டத்திற்கு ஆதரவு கோருவன வாகவும் ஆதரவு வழங்கித் தன்மைக் காப்பாற்றியதற்கு நன்றி கூறுவனவாகவும் அமைந்தன. பின்வரும் பாடல்வரிகள் மக்கள் ஆதரவை வேண்டியவை.

“கேடயமாய் எமைக் காத்த எம் மக்களே
– –––––– ––––––––
மீனுக்கு நீராய் வேருக்கு மண்ணாய்
இருந்தீர்கள் நாங்கள் நிமிர்ந்தோம்
– ––––– –––––
மக்கள் யுத்தம் என்ற மாபெரும் யுத்திதான்
நமது பணி எளிதாக்கும்
– –––– –––––
தொடர்கின்ற போரில் மக்கள் துணைகொண்டால்
விடுதலை இனித் தப்பாது
– ––––– ––––––

*(அந்நியர் வந்து புகல் என்ன நீதி)*

உதவிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் இப்பாடல்கள் அமைந் திருந்தன. அரச படையினரின் தேடுதல் வேட்டையில் அகப்படாது மக்களே தம்மைக் காத்தனர் என்ற நன்றியுணர்வு மேலோங்கும் வகையில் அமைந்த பாடலுக்குப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

“அடைக்கலம் தந்த வீடுகளே
போய்வருகின்றோம் நன்றி – நெஞ்சை
அடைக்கும் துயர் சுமந்து செல்கின்றோம்
உங்கள் அன்புக்குப் புலிகள் நன்றி
– ––––– –––––
பெற்றோரின் உறவைப் பிரிந் திருந்தோம்
அந்த இடத்தை நிறைத்தீர்களே – மாற்றார்
முற்றுகை நடுவில் மூடி எமையுங்கள்
சிறகால் மறைத்தீர்களே –––“

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

இவ்வாறு நாட்டுவளம், நாட்டுப்பற்று, மக்கள் ஆதரவு ஆகியவற்றை அரசியற் தேவையின் பின்னணியில் இப் பாடல்கள் புலப்படுத்தின.

## (4) சிங்கள அரசு மற்றும் இந்திய அரசுக–ளின் படைகள் மீதான எதிர்ப்புப் பற்றியவை

சிங்கள அரசுப் படையும் அமைதி காக்கும் படை என்ற போர்வையில் வந்த இந்தியப் படையும் தமிழ்ப் பகுதிகளில் புரிந்த படுகொலைகள், அட்டூழியங்கள், கற்பழிப்புகள், சூறையாடல்களைக் கண்டித்து அவற்றின் அதிகாரப் போக்கை எதிர்ப்பனவாய்ப் பாடல்கள் வெளிவந்தன. இந்திய சுதந்திர விடுதலைப் போராட்ட காலத்தில் “வெள்ளையனே வெளியேறு” எனும் வகையில் பாரதி முழங்கியதுபோல இந்திய இராணுவத்தை ‘வெளியேறு’ எனக் கூறும் வகையில் பாடல்கள் வெளிவந்தன.

இவற்றை இந்திய இராணுவ எதிர்ப்பு என்ற நிலையில் மட்டுமன்றி ஒரு வல்லரசை எதிர்க்கும் எதிர்ப்புப் பாடல்களாகவும் நோக்குதல் வேண்டும்.

**"யாரிதைச் சொல்லவில்லை**
**இன்று யாரிதைச் சொல்லவில்லை**
**போர் வெறிகொண்ட இந்தியப்படைகளே**
**ஈழமண்ணை விட்டு போ வெளியே என்று**
**யாரிதைச் சொல்லவில்லை"**

*(அந்நியர் வந்து புகல் என்ன நீதி)*

**"இந்திய அரசே**
**உன் படையைத் திருப்பு"**

*(பாசறைப் பாடல்கள்)*

என்பதோடு மட்டும் இப்பாடல்கள் நிற்கவில்லை.

**"வீர விடுதலைப் புலிகள் உலாவரும்**
**வீதி தமிழீழ வீதி**
**எங்கள் ஊரில் இனியும் நீயிருந்தால் – இங்கேயுன்**
**படையில் இருக்காது பாதி"**

*(பாசறைப் பாடல்கள்)*

என எச்சரிக்கையும் செய்தன. இதற்கான காரணங்களையும் பாடல்கள் மூலமாகவே கண்டு கொள்ளலாம்.

**"வந்தது இந்திய ராணுவம்**
**ராணுவம் ராணுவம் ராணுவம் – அது**
**தந்தது துன்பங்கள்**
**ஆயிரம் ஆயிரம் ஆயிரம்"**

*(பாசறைப் பாடல்கள்)*

**"அரிசி வந்த படகில் தமிழன்**
**குருதி கொண்டு போனாய்**
**எரியும் ஈழத் தமிழர் பெண்கள்**
**இளமை தின்னலானாய்**
**உதவி செய்ய வந்ததாக**
**முதலில் கூறலானாய்**
**உயிரைக் கொன்றதோடு – எங்கள்**
**உரிமை மீறலானாய்"**

*(பாசறைப் பாடல்கள்)*

**"இந்திய ராணுவப் புண்ணிய வான்களால்**
**ஈழம் எரிந்ததம்மா – இலை**
**சோற்றுக் கழுததம்மா**

*(பு.பா.)*

**"ஒப்புக்குப் போர்த்திய அமைதித்திரையின்**
**ஓரங்கள் பற்றி எரிகின்றன"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

என்றெல்லாம் இந்திய அமைதிப் படையின் கொடுமைகளைப் பாடல்கள் விபரித்து அப்படையை எதிர்த்தன. இந்த விடுதலைப் பாடல்கள் நிலத்திலிருந்து மட்டுமல்லாது மனத்திலிருந்தும் இந்திய ராணுவத்தை ஓட்டின என்பதற்கு இப்பாடற் பகுதியைக் குறிப்பிடலாம்.

**"ஆதிக்கம் உன்னைப் பாதிக்கும்**
**எங்கள் அற்புத வேங்கைகள் சாதிக்கும்**
**இது வேங்கைகள் விளைகின்றநாடு – உந்தன்**
**வேசங்கள் கலைந்தது ஓடு"**

*(பாசறைப் பாடல்கள்)*

தமிழர் பகுதிகளில் அமைதிகாக்க வெனத் தமிழ்தெரியாத இந்திய இராணுவத்தை அனுப்பிய இந்திய அரசின் கொடுமைகளையும் இவை விபரித்தன. உதாரணத்திற்கு இப்பாடல் பகுதியைக் குறிப்பிடலாம்.

**"இந்திய இராணுவம் சுற்றி வளைக்குது**
**இந்தியில் ஏதேதோ சொல்லி முறைக்குது**
**பள்ளிக்கு எப்படிப் போவோம் –அவன்**
**பாதையில் நின்றிடில் சாவோம்"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

அந்நியப்படைகளின் எதிர்ப்புப் பற்றிய பெருமளவு பாடல்கள் 'அந்நியர் வந்து புகல் என்ன நீதி' என்ற ஒலிநாடாவிலேயே அமைந்திருந்தன.

தமிழ்த் தேசிய அரசியலில் நிலரீதியாக ஈழத்தமிழர்கள் என்ற அடிப்படையிலும் இனரீதியாக இந்திய - தமிழகத்தின் தொப்புள் கொடி உறவெனவும் ஈழத்தமிழர்கள் கணிக்கப்படுவது முக்கியமானதாகும். ஈழத்திலிருந்து இந்தியப் படைகள் செய்த கொடுமைகளை விபரிக்கத் தூதுவிடும் இப்பாடலில் மேற்படி பண்பை அவதானிக்கலாம்.

**"வீசுங்காற்றே தூது சொல்லு – தமிழ்**
**நாட்டிலெழுந்தொரு சேதி சொல்லு**

**ஈழத்தில் நாம்படும் வேதனைகள் – இதை**
**எங்களின் சோதரர் காதில் சொல்லு**
**–––––––––––––––**
**உங்கள் கொடிமலர் இங்கு மடியுது**
**ஊர்மனை யாவிலும் சாக்குரல் கேட்குது**
**–––––––**
**கத்திடக் கேட்டிடும் தூரமல்லோ – கடல்**
**கைவந்து தாங்கிடும் நீளமல்லோ**
**–––––––––**
**எத்தனை எத்தனை இங்கு நடந்திட**
**எங்களின் சோதரர் தூக்கமல்லோ**
**––––––––––**
**தாங்க முடியல்லை வேதனைகள் – இதை**
**தாயக பூமியின் காதில் சொல்லு"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

இப் பகுதியில் வரும் 'சோதரர்', 'கொடி மலர்', 'தாயகபூமி' முதலிய பதங்கள் கவனிப்புக்குரியவை.

இவை மட்டுமன்றி அனேகமான பாடல்கள் இலங்கை அரசபடையை எதிர்ப்பனவாகவும் அதன் கொடுமைகளை விபரிப்பனவாகவும் அமைந்தன. (இவை பற்றி முன்னரும் பல எடுத்துக்காட்டுகள் தரப்பட்டன)

**"துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கும்**
**ராவில் செல்வந்து எங்களைத் தாக்கும்**
**தப்பேதும் செய்யாத போதிலும் எங்களைச்**
**சிப்பாய்கள் தாக்கிடக் கூடும்**
**தமிழ் ஈழத்தில் சா விளையாடும்"**

*(புயல் கால ராகங்கள்)*

இத்தகைய எதிர்ப்புக்களைக் காட்டி வேதனைகளை விபரித்துப் பின்னர் ஈழத்துக்காக வாழ்தல் என்ற நிலையில் இப்பாடல்கள் வந்து நிற்கின்றன. தாலாட்டுப் பாடல் மரபில் வரும் பின்வரும் பாடற்பகுதியைக் குறிப்பிடலாம்.

**"செல்வந்த வேளையில் நீ பிறந்தாய் – இன்று**
**செல்வந்து உன்னப்பன் போய் முடிந்தான்**
**வல்லவர் யாவரும் காட்டினிலே – கொடும்**
**வானரக் கூட்டங்கள் நாட்டினிலே**
**அப்பன் தமிழ்க்கவி வாணனடா – உன்**
**அண்ணன் ஒரு புலி வீரனடா**
**இப்போது மட்டுமே தூங்கிவிடு – தமிழ்**
**ஈழத்துக்காகவே வாழ்ந்துவிடு"**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

இவ்வாறு ஆதிக்க சக்திகளின் எதிர்ப்பை இப்பாடல்கள் வெளிப்படுத்தியதுடன் ஆதிக்கத்துக்கெதிராகப் "போருக்காக வாழ்தல்" என்பதையும் வலியுறுத்தின.

**(5) போர், வீரம், காதல், சோகம், கொடுமை, துரோகம், அழிவு பற்றியவை**

போர்க்கால வாழ்வுக்குள் வாழ்வின் பல்பரிமாணத்தையும் உள்வாங்கி பாடும் பாடல்களை இவ்வகைக்குள் அடக்கலாம். எனினும் வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் போரின் தாக்கம் இருப்பதையும் இப்பாடல்களில் காணமுடிகிறது. இது தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையும் கூட.

தலைவியொருத்தி தான் கண்ட கனவினைத் தோழிக்குச் சொல்வதாய் அமையும் பாடலொன்றில் வரும் பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**"நானோர் கனாக் கண்டேன் தோழி – தமிழ்**
**நாட்டின் விடுதலை**
**கேட்கப் பிறந்தவர் தானை நடத்தினார் தோழி**
**––––––––––––**
**காதலர் வரவில்லைத் தோழி – அவர்**
**களத்திலே இருக்கட்டும் இங்கென்ன வேலை**
**மோதட்டும் பகைவர்கள் முன்னால் – தோழி**
**முத்தமும் சத்தமும் அவற்றிற்குப் பின்னால்"**

*(பு.பா.)*

ஆண், பெண் இருவரும் பாடுவதாக அமைந்த பாடல் ஒன்று அக்கால சமூகத்தில் காதலர்கள் ஜோடியாகச் சென்று போராட்டத்தில் இணைந்தமையைப் பிரதிபலிக்கிறது.

**"பெண்: நிலவு வந்து பொழியும் நேரம்**
**நீ வரவில்லை – நான்**
**நீண்ட நேரம் காத்திருந்தேன்**
**பதில் தரவில்லை ......**

**ஆண்: காவலுக்கு வந்த பேய்கள்**
**கழக்கும் நாளையில் – ஒரு**
**காதல் என்ன மாலையென்ன**
**இந்த வேளையில்**
**எங்கள் புலி வீரர் – அவர்**
**இருக்கும் இடம் போறேன் – தமிழ்**
**ஈழம் வந்தால் வாறேன்.**

**பெண்: உன்னை நெஞ்சில் தூங்கவைத்துப்**
**பாட்டுப் பாடுவேன் – எம்**
**உரிமைக்காக நானும் வந்து**
**படையில் சேருவேன்"**

*(புயல்கால ராகங்கள்)*

இன்னும் கணவன் மனைவி இருவரும் தமக்குக் குழந்தை பிறந்தவுடன் சேர்ந்து பாடுவதாக,

**"பூமலர்ந்தது கொடியினில் – ஒரு**
**புலி பிறந்தது மடியினில்"**

*(இந்த மண் எங்களின் சொந்தமண்)*

அமைவதையும் பிறந்த குழந்தைக்குத் தாலாட்டுப் பாடாத தாயின் குரலாக,

**"தாலாட்டுப் பாட மாட்டேன்**
**தாலாட்டுப் பாடமாட்டேன்**
**தமிழீழப் பிள்ளை என் பிள்ளை – அவன்**
**தலை சாய்ந்து தூங்க இது நேரமில்லை"**

*(இ.பு.கா.)*

அமைவதையும் காணமுடிகிறது.

சொல்லில் அடங்காத கொடுமைகளை

**"சொல்லில் அடங்காத கொடுமை**
**சொல்லுகிறேன் கேளுங்கள்"**

*(து.எ.பா.)*

என்ற பாடலில் விபரித்துச் செல்வதையும் கொடுமைகளின் சோகம்

**"கொள்ளிவைக்கும் பிள்ளைகளே**
**கொள்ளியிலே வேகுதடா**
**அள்ளி வைத்த தாய் விழியோ**
**ஆறு குளம் ஆகுதடா**
---------
**யாழ்நகர வீதியிலே**
**சோக இசை கேட்குதடா**
**சோக இசை ஓர் நொடியில்**
**வீர இசை ஆனதடா"** *(பு.பா.)*

> **ஈழத்தைப் பொறுத்தவரையில் சிங்கள வர்களைவிடவும் தீவிர இலங்கையர்களாக இருந்த சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம், திரு கென்டி பேரின்பநாயகம் முதலியோ ரது காலத்திலிருந்து இலங்கை தேசத்தைப் போற்றிப்பாடும் பாடல்கள் வந்துள்ளன.**

என விரவி வருவதையும் காணமுடி கிறது.

போரையும் வெற்றியையும் பாடுவன வாய்ப் பல பாடல்கள் அமைந்தன.

**"தர்மத்தின் பெயர் சொல்லும் யுத்தம் – தமிழ்**
**ஈழத்தைப் பெற எங்கள் ரத்தம்**
**அதர்மத்தின் அடிவேரை அடியோடு சாய்க்கின்ற**
**புயலாகி வந்த எங்கள் யுத்தம்"**

*(பாசறைப் பாடல்கள்)*

**"எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்– தமிழ்**
**ஈழமண்ணை மீட்டெடுக்க ஓடிப் போகிறோம்**

*(இந்தமண் எங்களின் சொந்தமண்)*

**"ஆயிரம் தோழர்கள் தீயினில் போயினர்**
**ஆயினும் போரது நீளும் – புலி**
**ஆடும் கொடிநிலம் ஆளும்**
**பேயிருள் சூழ்ந்திடும் கானகம் மீதினில்**
**பாசறை ஆயிரம் தோன்றும் – கருப்**
**பைகளும் ஆயுதம் ஏந்தும்**

*(புயல்கால ராகங்கள்)*

எனவரும் பகுதிகள் யாவும் வீரத்திற னைப் பேசுவனவாய் அமை கின்றன.

**"ஆயிரம் ஆயிரம் படை வந்தாலும்**
**ஆட்கள் தொகையா வெல்லும்**
**அறமும் வீரமும் வெல்லும்"**

*(புயல்கால ராகங்கள்)*

என்று கூறி வெற்றிக்காகப் பரணி பாடும் பாரம்பரியத் தமிழ் இலக்கிய மரபினையொட்டி இப்பாடலாசிரியர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்.

**"பரணி பாடுவோம் பரணி பாடுவோம்**
**புதியதானதோர் பரணி பாடுவோம்**
**தரணி போற்றிடும் புலிகள் மீதிலே**
**கவிஞர் யாவரும் பரணி பாடுவோம்**
**கலிங்கம் மீதிலே படைகள் பாய்ந்திட**
**பழைய பாவலன் பரணி பாடினான்**
**புலிகள் வாழ்ந்திடும் களங்கள் வாழ்ந்திடும்**
**புதிய பாவலர் பரணி பாடுவோம்"**

*(பாசறைப் பாடல்கள்)*

பகைவர்களின் பாசறைகளையும், கோட்டைகளையும் தாக்கி அழித்த நிகழ்வுகளையும் இப்பாடல்களில் காண-முடியும். கொண்டச்சி, கொக்காவில், கும்புறுமுனை, களுவாஞ்சிக்குடி, யாழ் கோட்டைபோன்றவற்றைவெற்றிகொண்ட சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன. எதிரியின் பாசறைகளைக் காட்டி

**"அந்தோ பாசறை அதற்கே தீயிடு**
**எரியட்டும் முடியட்டும் விடியட்டும்"** *(வே.வி.கீ.)*

எனக் கூறுவதைக் காணமுடிகிறது.

வீரர்களின் வீர வாழ்க்கையையும் அவர்களது இலட்சிய வேட்கையையும் இப்பாடல்கள் பின்வருமாறு பதிவு செய்கின்றன.

**"என் இனமே என்சனமே**
**என்னை உனக்குத் தெரிகிறதா?**
**எனது குரல் புரிகிறதா?**
**மண்ணை இன்னும் நேசிப்பவன் – அதனால்**
**மரணத்தையே யாசிப்பவன்"** *(வே.வி.கீ.)*

என வீரர்கள் தம்மை அறிமுகம் செய்வதாகவும் இறந்த வீரர்களின் புதை-குழியில் மண் போட்டுச் செல்லும்போது,

**"எங்கள் தோழர்களின் புதை குழியில்**
**மண்போட்டுச் செல்கின்றோம்**
**இவர்கள் சிந்திய குருதி – தமிழ்**
**ஈழம் மீட்பது உறுதி"**

*(புயல்கால ராகங்கள்)*

**"வீரன் மண்ணில் புதையும் போது**
**விதையாய் தானிருப்பான்**
**நாளை போரில் பகையை மாய்க்க**
**ஆயிரம் தோற்றுவிப்பான்"**

*(பாசறைப் பாடல்கள்)*

என்றெல்லாம் கூறுவனவாகவும் அமைகின்றன.

ஒரு வீரன் வீர மரணம் அடைந்த பின் அடுத்த வீரன் போராட்டத்தைத் தொடருவதை

**"பூமாலை உன் படத்தில் போட்டார் பார்த்தோம்**
**போட்டவரே நஞ்சுமாலை ஏற்றார் பார்த்தோம்"**

*(இ.பு.கா.)*

**"தோழர் நினைவில் மீண்டும் தோளில்**
**துப்பாக்கிகளை அணைக்கின்றோம்**

*(புயல்கால ராகங்கள்)*

என வரும் பாடற் பகுதிகள் காட்டுகின்றன.

ஆயுதப் போராட்டத்தில் இறந்த வீரர்களைமட்டுமன்றி அகிம்சைப் போராட்டத்தில் இறந்தவர்களையும் இப்பாடல்கள் பதிவு செய்தன.

**"நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்**
**நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்**
**தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை**
**திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை"**

*(பாசறைப் பாடல்கள்)*

**"வீரன் திலீபன் வாதாடினான் – பசித்**
**தீயில் குதித்துப் போராடினான்"**

*(பாசறைப் பாடல்கள்)*

என வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**"விண்வரு மேகங்கள் பாடும் – மா**
**வீரரின் நாமங்கள் கூறும்**
**கண்வழி கங்கைகள் பாயும் – இவர்**
**காவிய நாயகர் ஆகும்**
**புதைந்த குழியில் இருந்து நீங்கள்**
**எழுந்து வாருங்கள்**
**எரிந்த இடத்தில் இருந்து நீங்கள்**
**நிமிர்ந்து வாருங்கள்"** *(வே.பு.கா.)*

என வரும் பகுதியும் வீரர்களை நினைவு கூர்வதாய் அமைகிறது. இன்னும்

‘தமிழ்ப்பகை முடிக்க’ (தமிழீழ எழுச்சிப் பாடல்கள்), ‘பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே (களத்தில் கேட்கும் கானங்கள்), ‘எங்கள் தலைவன் (இது புலிகளின் காலம்) முதலிய பாடல்கள் தமிழீழத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சித்திரிப்பனவாய் அமைந்தன.

**“பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே – மழை**
**பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே**
**மங்களம் தங்கிடும் நேரத்திலே –எம்**
**மன்னவன் பிறந்தான் ஈழத்திலே”**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

என்ற பகுதியைக் குறிப்பிடலாம்.

போராட்ட காலத்தில் நடைபெற்ற துரோகச் செயல்களைப் பதிவு செய்வனவாயும் துரோகிகள் எனத் தாம் கருதியவர்களுக்கு எச்சரிக்கை செய்வனவாயும் பாடல்கள் அமைந்தன. இதற்குப் பின்வரும் பாடற் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

**“நாயே உனக்கும் ஒருநாடா – எச்சில்**
**நாடும் உனக்கு வரலாறா**
**தாயாள் புலம்புகிறவேளை – மாற்றான்**
**காலைக் கழுவுகிற கோழை”**

*(பு.பா.*

**“நீயே தடை பகைவர் அல்லர் – தமிழ்**
**நிலத்தில் பிறந்த படு பாவி”**

*(பு.பா.)*

**“நடந்துவந்த பாதை தன்னைத் திரும்பிப் பாரடா – நீ**
**நாசவேலை செய்த பின்னர் வருந்துவாயடா**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

**“எதிரிகாலில் ஏறிநின்று செருப்புமாகினாய் – தமிழ்**
**ஈழமண்ணை எண்ணெய் ஊற்றி நெருப்பு மூட்டினாய்**
**கதிரை ஏறும் ஆசைகொண்டு விலையுமாகினாய்– எம்**
**களத்தில் வீரர் போகும் போது தலையுமாட்டினாய்”**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

**“நீதியற்ற பகைவனோடு கூட்டம் போடுறாய் – அவன்**
**நீட்டுகின்ற பதவியேற்று ஆட்டமாடுறாய்”**

*(களத்தில் கேட்கும் கானங்கள்)*

இவ்வாறாகப் போர்க்களத்தின் பல வித உணர்ச்சிகளையும் நிகழ்ச்சிகளையும் பதிவு செய்வனவாய் இவ்வகைப் பாடல்கள் அமைந்திருந்தன.

## X

பொதுவாக வாசிப்பவர் மனதில் இப்பாடல்கள் ஏற்படுத்தும் உணர்ச்சிச் செறிவைவிடப் பாடலாகக் கேட்கும் நிலையில் அதிக கலையாக்கத் தன்மை உள்ளனவாய் அமைவதைக் காண லாம். கருத்துடன் அழகுக் கவர்ச்சி உள்ள சொல் ஒழுங்கைப் பாடுவனவாய் இவை தென்படுகின்றன. மக்கள் மத்தியிலும் போராளிகள் மத்தியிலும் விருப்போடு கேட்கப்பட்ட இப்பாடல்கள் போராளிகள் பற்றிய ஒரு படிமத்தையும் மக்கள் மனதில் ஏற்படுத்தத் தவறவில்லை. இப்பாடல்களில் வரும் மனக் கிளர்ச்சியை உண்டு பண்ணும் படிமங்கள் சுட்டும் உணர்வு ஆழம்மிக்கது. ஒரு அரசியல் இயக்கத்தின் பிரதான பிரசார கருவியாகவும் மக்கள் ஒன்றிணைப்புச் சாதனமாகவும்விளங்கியஇப்பாடல்களுக்கு ஒரு அரசியல் வரலாற்று முக்கியத்துவம் உள்ளது.

ஆனால் பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள் சமூக விடுதலையின் அனைத்துத் தளங்களையும் தழுவியது போல இப்பாடல்கள் அமைந்தனவா என்ற முக்கியமான ஒரு வினாவும் உண்டு. பாரதியார் சாதி ஒடுக்குமுறையிலிருந்து பெண்ணொடுக்குமுறைவரை எதிர்த்து உள்ளார்ந்த சமூக விடுதலையை வலியுறுத்தி உள்ளார்ந்த சமூக விடுதலை யின் அடிப்படையில்தான் தேச விடுதலை சாத்தியம் என்பதை உணர்த்தும் வகையில் பல சமூக விடுதலைப் பாடல்களையும் தேசபக்திப் பாடல்களையும் எழுதி னார். சமூக விடுதலையே தேச விடுத லையை நோக்கி நகர்த்தும். சமூக விடுதலை யின் வெற்றியின் பின்னான நகர்வே தேச விடுதலையைத் தீர்மானிக்கும். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில்

சாதி ஒடுக்குமுறை, பெண்ணடிமை, பிரதேசப் பாகுபாடு, மூட நம்பிக்கை, மரபுசார் பழைமைவாதம் என்பவற்றுக்கு எதிரான குரல் கவிதைகளில் பதிவு செய்யப்பட்ட அளவிற்குக் கூட பாடல்களில் பதிவு செய்யப்படவில்லை. விடுதலை இயக்கத்தின் அரசியற் செயற்பாடுகளில் சமூக விடுதலைக்கான முயற்சிகள் ஓரளவிற்கு மேற்கொள்ளப்பட்டாலும் மக்களிடத்தில் உணர்வு பூர்வமான மாற்றத்தினை ஏற்படுத்தவில்லை. இதற்கு சமூகத்தின் உள்ளார்ந்த விடுதலைசார்ந்த மாற்றத்திற்குப் பாடல்களை வலுவான முறையில் பயன்படுத்தாமையும் ஒரு காரணம் எனலாம். ஐக்கிய இலங்கை என்ற கருத்து நிலையிலிருந்து மக்களைத் தமிழ்த் தேசியக் கருத்து நிலைக்கு மாற்றி வெற்றி கண்ட இப்பாடல்களால் சமூகத்தின் உள்ளார்ந்த விடுதலையை ஏற்படுத்த முடியா-மல் போயின. சமூகத்தின் உள்ளார்ந்த விடுதலை இப்பாடல்களில் பெரிதளவு பேசப்படவில்லை. பாடலாசிரியர்கள் தாம் வரித்துக்கொண்ட இயக்கக் கருத்து நிலையில் நின்று அந்நிய எதிர்ப்பையும் போர், வெற்றிச் சிறப்பையும் பாடிய அளவிற்குச் சமூகத்தில் புரையோடிப்போன விடயங்களை எதிர்த்துப் பாடவில்லை. அந்நியராட்சியிலிருந்து தமிழினத்தை விடுவிக்க வேண்டும் என்று கருதி வீறுடன் பாடிய பாடலாசிரியர்கள் தமிழினத்தின் உள்முகமாகக் கட்டுண்டுக் கிடக்கும் தளைகளைப் பாட மறந்துவிட்டார்கள் என்பதையும் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

இப்பாடல்களின் பிற்பட்டகால வளர்ச்சி, போரின் ஒவ்வொரு கட்டங்களிலும் அது வளர்ச்சிபெற்ற முறை, இடையிடையே வந்த சமாதான காலங்களில் அது பெற்ற மாற்றம், இசையியல் ரீதியாக அடைந்த வளர்ச்சி, விடுதலை இயக்கத்தினர் ஆலயங்களுக்கு எழுதிய பக்திப் பாடல்களின் கருத்து நிலை, அதற்கான தேவை, தென்னிலங்கையில் போர்க்காலத்தில் வெளிவந்த சிங்கள தேசபக்திப் பாடல்களுடன் இப்பாடல்கள் கொள்ளும் ஊடாட்டம் (கருத்துநிலை ரீதியான ஒற்றுமை/வேற்றுமை), இப்பாடல்களில் தெரியும் சமூக அரசியல் பண்பாட்டு மாற்றம், போர்க்காலத் திரைப்படம், விவரணப் படம் முதலியவற்றில் பாடல்கள் கையாளப்பட்ட முறை, இப்பாடல்களில் காணப்படும் எதிர்ப்பிலக்கிய அம்சங்கள் பற்றி எல்லாம் விரிவாக ஆராய்வதற்கு இடமுண்டு.

அரசியல்சமூகவரலாற்றுஇயக்கமொன்று தனது அரசியல் நடத்தைகளுக்கான ஊடகமாகத் தேசபக்திப் பாடலை எவ்வாறு உருவாக்கிப் பயன்படுத்தியது என்பது பற்றிய கருத்துநிலைசார் உசாவலும் அதனடிப்படையில் பல ஆய்வுகளுக்கான புதிய வெளியைத் திறத்தலுமே இங்கு மேற்கொள்ளப்பட்டன.

○ ○ ○

*“எமது நிகழ்காலம் கொடூரமான ராணுவ அடக்குமுறைகளின் உச்சங்களையும் அவற்றுக்கெதிராகப் பல்வேறு வடிவங்களிலும் வெடித்தெழும்பும் போராட்டங்களையும் வரலாறாக்குகிறது. அநீதி, துயரம், அறிவும் நியாயமும் கூடச் சுமந்து கொள்ள முடியாத அளவுக்குப் படுகொலைகள் தங்களுடைய சொந்த மண்ணிலிருந்து வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு அகதிகளாய் வெளியேறுகிற மக்கள் எல்லைப் புறங்களில் எரிந்து கொண்டிருக்கும் எமது வீடுகள், வயல்களிலிருந்து இன்னும் அடங்காத புகை இன்னும் அடங்காத நெருப்பு –இவையே சூழலின் யதார்த்தம் (மரணத்துள் வாழ்வோம் – முன்னுரை– 1985)*



# ஈழத் தமிழரின்

## போர்க்காலப் பிரசுரங்களும், போராட்ட இலக்கியங்களும்

20.07.2012

என்.செல்வராஜா

நூலகவியலாளர், லண்டன்

## அறிமுகம்

*1948* இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் படிப்படியாகத் தீவிரமடைந்து வந்தன. தமிழரின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்வீகப் போராட்டங்களின் வழியாக இந்த அடக்குமுறைகளுக்குத் தீர்வு காண முயன்று தோல்வி கண்டமை இன்று வரலாறாகிவிட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் சாத்வீகப் போராட்ட நிலையிலிருந்து ஆயுதப் போராட்டமுறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப்பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.

*1974*ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளில் பதினொரு அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்ப் பலியுடன் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கெதிராக விடுத்த வெளிப்படையான அச்சுறுத்தலானது, கல்வித்துறையின் திட்டமிட்ட தரப்படுத்தல்களால் எதிர்காலத்தையே இழந்துநின்ற தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தின்பால் தள்ளியது. தொடர்ந்து சிங்கள அரசியல்வாதிகளால் *1977, 1983* ஆண்டுகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவர வன்முறைகளும் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைக்கான அவசியத்தையும் தனிநாடு ஒன்றிற்கான தேவையையும் வலியுறுத்தின.

*1981*இல் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்கள் ஒரே நாளில் சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப் போராட்டமுறைகளை இளைஞர்களின் வன்முறைப் போராட்டவடிவமாகக் கருதி ஒதுங்கியிருந்துவந்த தமிழ்ப் புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

அரசின் பாரிய கெடுபிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப்படையாக அச்சிட முடியாத நிலை ஆரம்பத்தில் காணப்பட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கிய தமிழரின் அச்சகங்கள் எவையும் பகிரங்கமாக இப்பிரசுரங்களை தாயக மண்ணில் அச்சிட முன் வரவில்லை. அது தற்கொலைக்கு ஒப்பான செயலாகக் கருதப் பட்டது. அச்சகங்கள் அனைத்தும் அரசின் காவல்துறையினரால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வந்தன. இன விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்நாட்களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தகைய இலக்கியங்களைப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. ஆரம்பகால விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங்கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகளவில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, சிறிய எண்ணிக்கையில் தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன. விடுதலைப்போராளிகளில் படைப்பிலக்கிய ஆர்வம் கொண்டிருந்தவர்களுக்கும் இது நல்ல வாய்ப்பாயிற்று. அவர்களிடையே புதுப் படைப்பிலக்கியவாதிகளையும் இச்சூழல் தோற்றுவித்தது.

## விடுதலைப் போராட்டத்தை நோக்கிய திசையில் எழுந்த ஆரம்பகால நூல்கள்

ஈழத்தவரின் ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்பகாலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றோரின் விடுதலை உணர்ச்சிமிக்க படைப்புகளை சுதந்திரன், தீப்பொறி போன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன. **தனி ஆட்சி** என்ற நூல் கா.பொ.இரத்தினம் அவர்களால் எழுதப்பெற்று, யாழ்ப்பாணத்திலிருந்து ஒக்டோபர் 1972 இல் வெளிவந்திருந்தது. பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் இலங்கை அரசியலில் ஈடுபட்டு பாராளு மன்ற உறுப்பினராக இருந்தவேளையில் 1970-71 ஆண்டுக் காலப்பகுதியில் ஆற்றிய முக்கியமான அரசியல் உரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருந்தன.

1958இன் இனக்கலவரம் தொடர்பாக **சிறீ அளித்த சிறை** என்ற தலைப்பிலான நாவேந்தனின் நூலொன்று மே 1959இல் வெளியாயிற்று. தார்சி விட்டாச்சி அவர்கள் **எமர்ஜென்சி 58** என்ற தலைப்பில் எழுதிய ஆங்கில நூலையொத்ததாக அக்கலவரம் தொடர்பாகத் தமிழில் நூலெதுவும் வந்ததாகத் தெரியவில்லை. அவ்வகையில் நாவேந்தனின் (இயற்பெயர்: V.T.திருநாவுக்கரசு) இந் நூலை முக்கியமான வரலாற்றுப் பதிவாகக் கொள்ளலாம். சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து நடந்த கிளர்ச்சி பற்றிய நூல் இதுவாகும். இந்நூலாசிரியரின் சிறை அனுபவங்களையும், சிறைவாசத்தின்போது எழுந்த உணர்ச்சியலையினையும் இந்நூல் பதிவுசெய்கின்றது. தமிழரசுக்கட்சித் தலைவரும், கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான கு.வன்னியசிங்கம் அவர்களின் வாழ்த்துரையும், நான் கண்ட நாவேந்தன் என்ற தலைப்பில் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளு மன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் 15.5.1959இல் வழங்கிய அறிமுக உரையும் இடம்பெற்றுள்ளன. செந்தமிழ் காக்கச் சிறைசென்ற செல்வர்கள் என்ற தலைப்பில் பெயர்ப்பட்டியல் ஒன்றும் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளது. ஜூலை 2002இல் இரண்டாவது பதிப்பாக இந்நூல் வெளியானபோது, அந்நூலின் இறுதியில் இந்நூல் பற்றியும் நாவேந்தன் பற்றியும் கனடா எஸ்.கே.மகேந்திரன், வட்டுக்கோட்டை எஸ்.ஜெபநேசன் (பேராயர்), கொழும்பு, பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஆகியோரால் எழுதப்பட்ட குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

**போராடுவோம்** என்ற தலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் ஒரு நூலை எழுதி கொழும்பு, அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் மூலம் 1978 இல் வெளியிட்டிருந்தார். புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தேசியப் பேரவையில் 3.8.1978 அன்று சமர்ப்பிக்கப்பட்டபோது, விவாதத்தைப் புறக்கணிப்பதற்கு முன்பு ஆற்றிய 5 மணிநேர உரையின் தொகுப்பாக இது அமைந்திருந்தது.

ஈழத்தவரின் போராட்ட வரலாற்றுடன் தொடர்புபட்ட முக்கியமானதொரு நூல் **லங்காராணி** என்பதாகும். அருளர் (எம். ஐ. அருட்பிரகாசம்) எழுதி சென்னை கனல் வெளியீடாக டிசம்பர், 1978 இல் 256 பக்கங்களில் இந்த வரலாற்று முக்கியத்துவமான நூல் வெளிவந்திருந்தது. இதன் இரண்டாவது பதிப்பு, யாழ்ப்பாணத்திலிருந்து ஈழப்புரட்சி அமைப்பினரால் (ஈரோஸ்) 1988 இல் வெளியிடப்பட்டிருந்தது. 1977 ஆகஸ்ட் இலங்கை இனக்கலவரத்தின்போது கொழும்பிலிருந்து ஈழத்தமிழர்களை அகதிகளாக ஏற்றி, வடபுலத்திற்குக் கொண்டு வந்த கப்பலின் பெயர்

தான் **லங்காராணி.** லங்காராணியின் வட புலம் நோக்கிய கடற்பிரயாணத்தின் பின்னணியில் அதன் பிரயாணிகளின் உணர்வலைகளின் ஊடாக ஈழத்து இனப் பிரச்சினையின் பூதாகாரத்தன்மையை யும் விடுதலைப் போராட்டத்தின் தேவை யையும் அழகாகச் சித்திரிக்கும் நாவல் இதுவாகும். எழுபதுகளில் ஈழவ-ிடுதலைப் போராட்டத்தில் நேரடியாக இளைஞர் களை ஈடுபடத் தூண்டிய நூலாகவும் இந் நூல் கருதப்படுகின்றது.

ஈழப் போராட்டம் பல்வேறு இயக்கங்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட எண்பதுகளின் ஆரம்பப் பகுதியில் **புதியதோர் உலகம்** என்ற நாவல் கோவிந்தன் என்ற போராளியால் எழுதப்பட்டு சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது. விடுதலை இயக்கமொன்றின் உள்ளக முரண்பாடுகளும், அதன் விளைவாக எழுந்த குரோதங்களும், சித்திரவதைகளும் உள்வீட்டுப்பிள்ளைகளினால் துணிச்சலுடன் பதிவுசெய்யப்பட்டிருந்த நூல் இது. வெளியீட்டாளர் விபரமோ, அச்சக விபரமோ பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. மே 1985 இல் 365 பக்கங்களில் முதற்பதிப்பு வெளிவந்தது. இரண்டாவது பதிப்பு, கோவை, விடியல் பதிப்பகத்தினால் உப்பிலிப்பாளையத்திலிருந்து ஏப்ரல் 1997 இல் மாணவர் மறுதோன்றி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது. விடுதலைப் போராளியான இந்நூலாசிரியர் இந்நூலுக்கான முன்னுரையில் குறிப்பிட்ட சில வாசகங்கள் நூலின் உள்ளடக்கத்தை தெளிவாக்குகின்றது. “பெப்ரவரி 15, 1985 இல் நான் அங்கம் வகித்த தமிழீழ விடுதலை அமைப்பில் இருந்து வெளி-யேறிய தோழர்களுடன் நானும் சேர்ந்து கொண்டேன். நாம் வெளியேறிய பின்பு எம்மை அழிப்பதற்காகத் தேடிய அவர்களிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொண்டு இரு மாதங்கள் தலை மறைவாக இருந்தோம். அக்காலத்திலேயே இந்நாவல் படைக்கப்பட்டது. இந்நாவல் தனியொரு மனிதனின் படைப்பல்ல. பல தோழர்களின் ஆலோசனைகள், ஒத்துழைப்புடன் உருவான கூட்டுப்படைப்பு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு வருடகாலமாக நடைபெற்ற உண்மைச் சம்பவங்களிலிருந்தே இந்நாவல் உருப்பெற்றுள்ளது.” இந்நாவலைப் படைத்த கோவிந்தன் பின்னர் இனந்தெரியாதோரினால் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி இந்நூலின் இரண்டாவது பதிப்பில் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

**முறிந்த பனை** என்ற மற்றொரு நூலும் ஈழப்போராட்டத்தின் பின்புலத்தில் நூலாசிரியரை படுகொலைக்குள்ளாக்கிய மற்றொரு நூலாகும். ராஜினி திரணகம, ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே.ஸ்ரீதரன் ஆகிய நான்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து இவ் வாவணத்தைத் தொகுத்திருந்தார்கள். யாழ்ப்பாணம், மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (UTHR) என்ற அமைப்பு இந்நூலை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டிருந்தது. 1வது பதிப்பு, 1996 இல் வெளிவந்திருந்தது. 576 பக்கங்கள் கொண்டதாக புகைப்படங்கள் சகிதம் வெளியான இந்நூல் இரு பகுதிகளாக அமைந்திருந்தது. இந்நூலின் முதற்பாகம் 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்தியப்படையின் வருகையும் நிகழ்ந்த காலகட்டத்தில் நின்று ஈழத்து இனப்பிரச்சினையின் ஒரு பரிமாணத்தை-ஈழத்தமிழர் போராட்டத்தின் வரலாற்றை வெளிக்கொண்டுவரும் நோக்கில் எழுதப்பட்ட ஆங்கில நூலின் தமிழாக்கமாகவும், இரண்டாம் பகுதி அக்காலகட்டத்தில் இந்தியப் படையினரின் தாக்குதல் பற்றிய பல்வேறு புலனாய்வு அறிக்கைகளும் ஆய்வுகளும்

கொண்டதாகவும் அமைந்துள்ளது. The Broken Palmyrah என்ற தலைப்பில் இதன் மூலநூல் ஆங்கிலத்தில் வெளியான சிறிது காலத்தில் இந்நூலின் முக்கிய பங்காளியான ராஜினி திரணகமவும் யாழ்ப்பாணத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

எண்பதுகளில் வெளியான பல போராட்ட அறிவியல் நூல்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமே விளைநிலமாக இருந்துள்ளது என்றால் மிகையாகாது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மறுமலர்ச்சிக்கழகம் என்ற மாணவர் அமைப்பு பல சிறு நூல்களை வெளியிட்டு அரசியலறிவை மக்களிடை யேயும் மாணவர்களிடையேயும் போராளிகளி டையேயும் ஜனரஞ்சகமாகப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுவந்திருந்தது.

**தான்பிரீன் – தொடரும்** பயணம் என்ற நூல் ப.ராமஸ்வாமி என்ற புனைபெயரில் எழுதப் பெற்று மறுமலர்ச்சிக் கழகத்தினால் 1985இல் வெளியிடப்பட்டது. அயர்லாந்து விடுதலைப் போராட்டம் பிரித்தானிய ஆதிக்கத்தை எதிர்த்து 750 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. 1916-1948 காலப்பகுதியில் சிறப்பினைப் பெற்ற தலைவர்கள் ஆர்தர் கிரிபித், மைக்கல் கொலின்ஸ், டிவலெரா போன்றோருக்கு இணையாகக் குறிப்பிடத்தகுந்த ஒரு போராளியான தான்பிரீன் அவர்களின் வீரம் செறிந்த போராட்ட வரலாறே இந்நூலாகும்.

**தெலுங்கானா போராட்டம்** என்ற மற்றொரு நூலும் மறுமலர்ச்சிக் கழகத்தின் முக்கிய நூலாகும். இது சுகந்தம் வெளியீடாக 1986 இல் 60 பக்கங்கள் கொண்டதாக வெளி வந்திருந்தது. இந்நூல் தெலுங்கானா ஹைதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்த காலகட்டத்தில் (இன்று அது ஆந்திரப் பிரதேசத்தின் ஒரு பகுதியா-கும்) நடைபெற்ற நிலவுடைமைக்கு எதிரான தோர் போராட்டத்தின் வரலாற்றை விளக் குவதாக அமைந்திருந்தது.

அரசியல் விழிப்புணர்வினை ஒரு நீண்டகாலப் போராட்டத்துக்குத் தயா ராகும் ஈழத்தமிழ் மக்களுக்கு வழங்கு வதென்பது மிக முக்கியமான போராட்ட முன்னெடுப்பாக அந்நாட்களில் கருதப் பட்டது. அரசியல், கொள்கை பரப்பு நூல்களாக பல நூல்கள் அவ்வேளையில் வெளியிடப்பட்டன. அரச பாதுகாப்புப் படையினரின் கழுகுக் கண்களிலிருந்து தப்பி, மலிவு விலையிலும், இலவச வெளி யீடுகளாகவும் இவை மக்கள் மத்தியில் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

**சோசலிசத் தமிழீழத்தை நோக்கி** என்ற நூல் இவ்வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்பு, வெளியீட்டுப் பிரிவி-னால் மாசி 1980இல் தமிழ்நாட்டிலிருந்து அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது. இரண்டு பகுதிகள் அடங்கியுள்ள இந்நூலின் முத லாம் பாகத்தில், சுயநிர்ணய உரிமையும், தனிநாட்டுக் கோரிக்கையும் என்ற தலைப் பில் இலங்கையின் மார்க்சியவாதிகளின் குழம்பிய நிலையும், சுயநிர்ணய உரிமையும் பிரிந்துசெல்லும் உரிமையும், தனிநாட்டுக் கோரிக்கையும், பாட்டாளிவர்க்க ஒருமைப் பாடும், விடுதலைப் புலிகளும் வர்க்கப் போராட்டமும், தனித்தமிழ் ஈழம் சாத்திய மாகுமா ஆகிய தலைப்புகளில் பல விடயங்கள் ஆய்வுக்குள்ளாகியுள்ளன. இரண்டாம் பாகத்தில், சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி என்ற தலைப்பில் 1971 ஏப்ரலில் இடம்பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன என்ற JVP இயக்கத்தின் போராட்டம் தோல்வியில் முடிந்தமை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அரசியலும் இராணுவமும்** என்ற நூலும் இந்த வகையில் குறிப்பிடத்தகுந்ததாகும். ஆசிரியர் விபரம் இல்லாத இந்நூல் தீப்பொறி வெளி யீடாக மார்கழி 1985. இல் வெளிவந்திருந்தது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் அரசியல் தன்மை, பொதுமக்கள், விடுதலை இயக்கங்கள் மத்தியிலுள்ள போராட்டம், இராணுவம்

பற்றிய தவறான கருத்துக்களின் தன்மை, அவற்றால் விடுதலைப் போராட்டத்திலே ஏற்பட்டிருந்த மோசமான பின்னடைவுகள் போன்றவற்றை இச்சிறுநூல் ஆராய முற்படுகின்றது. தோழர் சந்ததியார் (வசந்தன்) நினைவு வெளியீடாக வெளியிடப்பட்ட தீப்பொறி வெளியீடு என்பதைத்தவிர வேறு எவ்வித பிரசுரத் தகவல்களும் அக்காலகட்டத்து அரசியல் நெருக்கடிகளின் காரணமாக நூலில் குறிப்பிடப்படவில்லை.

**ஒன்றிணைந்து போராடுவோம்** என்ற நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினால் மே 1985 இல் வெளியிடப்பட்டிருந்தது. இலங்கை அரசு, இஸ்ரவேலிய மொஸாட் அமைப்புடன் இணைந்து தமிழ்-முஸ்லீம் மக்களிடையே பெரும் மோதலைத் திட்டமிட்டு ஏற்படுத்தியது. அவ்வேளையில் இவ்விரு இனங்களுக்குமிடையே ஒற்றுமையைப் பேணும் வகையில் ஈழப் போரியல் வரலாற்றில் முக்கிய திருப்பு முனையானதொரு காலகட்டத்தில் இச்சிறுநூல் பிரசுரமானது.

**சோசலிசத் தத்துவமும் கெரில்லா யுத்தமும்** என்ற மற்றொரு நூலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சார வெளியீட்டு வாரியத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. இதன் 2வது பதிப்பு, டிசம்பர் 1984இல் 92 பக்கங்களில் வெளியானது. செகுவேரா எழுதிய "கெரில்லாப் போராட்டத்தின் சாராம்சம்", ரெஜி டெப்ரே எழுதிய "புரட்சியில் புரட்சி" என்ற கட்டுரையின் சில பகுதிகள், மாவோ சேதுங் எழுதிய "கெரில்லாப் போர்முறை", அமில்கார் கப்ரால் எழுதிய "தேசிய விடுதலையும் சமூகப் புரட்சியும்", "மக்கள் மத்தியில் கெரில்லாக்கள்" ஆகிய நான்கு கட்டுரைகளை உள்ளடக்கிய நூல் இதுவாகும். விடுதலைப் போராளிகளின் அரசியல் அறிவினை விருத்தி செய்யும் வகையில் இத்தகைய தேர்ந்த படைப்புகள் பல சிறு நூலுருவில் அக்காலத்தில் வெளி வந்தன.

**தமிழ்த் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்** என்ற தலைப்பில் கா.சிவத்தம்பி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையொன்று சென்னையிலிருந்து ஈரோஸ் ஆவணக் காப்பக வெளியீடாக பெப்ரவரி 1986இல் வெளியிடப்பட்டிருந்தது. 1986 ஜனவரி 2ம் திகதி முதல் 8ம் திகதிவரை, ஈழமுரசு நாளேட்டில் தொடர் கட்டுரையாக வெளிவந்த இவ்வுரை தொகுத்து தனிநூலாக வெளியிடப்பட்டது. இது 31.12.1985இல் யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் ஆங்கிலத்தில் நிகழ்த்திய ஹண்டி பேரின்பநாயகம் நினைவுப் பேருரையின் தமிழாக்கமாகும்.

**தாயகம் நோக்கிய பயணம்** என்ற நூலும் முக்கியமானதொரு நூலாகும். குழல்-அருளாளன் என்ற புனைபெயரில் வி.பி. யோசப் எழுதிய நூல் இது. யாழ்ப்பாணம், ஈழநாதம் வெளியீடாக செப்டெம்பர் 1992இல் வெளியிடப்பட்டது. இஸ்ரேலிய எழுத்தாளர் லியோன் யூறிஸ் (Leon Uris) அவர்களின் எக்ஸோடஸ் (Exodus) நாவலின் தமிழாக்கம். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்கள் தாம் தொலைத்துவிட்ட தாயகப் பூமியை மீட்டெடுப்பதற்காக நடத்திய போராட்ட வரலாற்றினைப் பகைப்புலமாகக் கொண்ட Exodus என்ற இந்த நான்கு பாகங்களிலான நாவலின் முதலிரு பாகங்களும் முதலாவது பாகத்தில் 468 பக்கங்களில் முன்னர் வெளியிடப்பட்டிருந்தது. பின்னர் அந்த மூலநூலின் பின்னிரு பாகங்களையும் உள்ளடக்கியதாக இரண்டாம் பாகம் வெளியிடப்பட்டது. தமிழ்ப்பகுதிகளில் விதிக்கப்பட்ட அரசின் பொருளாதாரத் தடையினால் பத்திரிகைத்தாள் தட்டுப்பாடான காலகட்டத்தில் Foolscap கோட்டுத் தாளில் அச்சிடப்பட்ட நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்த் தேசியத்தின் பாதையில் ஈழவேந்தனின் பதிவுகள்** என்ற நூல் நாகலிங்கம் ஞானசேகரம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கனடா, முகம் வெளியீடாக மார்கழி 2007 இல் வெளிவந்தது. யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பிறந்த ஈழவேந்தன், இலங்கை மத்திய வங்கியில் தொழில்புரிந்து வந்த வேளையில் மத்தியவங்கி தமிழ் ஊழியர்சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராக விளங்கினார். பின்னர் தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சியில் இணைந்துகொண்ட இவர், காவலூர் நவரத்தினம் தமிழரசுக் கட்சியுடன் கொண்ட கருத்து முரண்பாடு காரணமாகத் தமிழர் சுயாட்சிக் கட்சியை உருவாக்கியபோது அதில் தன்னையும் இணைத்துக்கொண்டவர். பின்னர் ஆயுதப் போராட்டக் குழுவான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர்ந்து திம்புப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறியபோது காசி ஆனந்தன் போன்றோருடன் இந்தியாவுக்குச் சென்று தமிழகத்தில் தங்கியிருந்து அரசியல்பணிகளில் ஈடுபட்டவர். அங்கிருந்து பின்னர் இந்திய அரசினால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர். பின்னர் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டபோது நியமனப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரானவர். இத்தகைய அரசியல் பின்புலத்தில் உருவாகிய ஈழவேந்தனின் கடிதங்கள், உரைகள், கட்டுரைகள் என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அவரது 50 ஆண்டுக்கால அரசியல் வாழ்க்கையின் பதிவாகவும், ஈழத்து அரசியல் போக்கின் ஒரு காலகட்ட வரலாற்றை உள்ளிருந்து பார்க்கும் ஒரு பார்வையாகவும் இந்த நூல் அமைகின்றது. கடந்த காலத்தில் ஈழவேந்தன் எழுதி வெளியிட்ட வரலாற்றுப் பதிவுகளின் மறு பதிப்பாகவும், வேறும் புதிய பதிவுகள் சேர்க்கப்பட்டும் இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழன் கண்ட முருகன் தொடங்கி, அண்மையில் ஐ.நா.தலைமைச் செயலாளர் பான் கி - மூனுக்கு எழுதிய கடிதம் வரை இந்த நூலில் பதிவாகியிருக்கிறது. இவற்றுள் ஈழவேந்தனின் நாடாளுமன்ற உரைகளும், விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் என்பனவும் அடங்குகின்றன.

ஈழவேந்தனைப் போலவே, தனது ஈழத்து அரசியல் வாழ்க்கைப்பயணத்தின் ஐந்தொகையாக, இரை மீட்பாக, **சுவடுகள்** என்ற தலைப்பில் செல்லையா இராசதுரை அவர்களும் நூலொன்றை எழுதியிருந்தார். மட்டக்களப்பு, பூமகள் பதிப்பக வெளியீடாக 2008இல் அது வெளியிடப்பட்டது. இலங்கை அரசியலில் செல்லையா இராசதுரை பற்றியும் அவரது சாதனைகள் பற்றியும் விபரிக்கும் வரலாற்று நூல் இது. மட்டக்களப்பில் பிறந்த இவர் பின்னாளில் மட்டக்களப்பு மாநகர சபையின் அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினராகச் சேவையாற்றியவர். ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தில்தான் சார்ந்த தமிழ் அரசியலிலிருந்து விலகி ஸ்ரீமாவோ அரசில் இணைந்து கொண்டவர். வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து, பிரதேச அபிவிருத்தி அமைச்சினை உருவாக்கியவர்.

### ஈழப் போராளிகளின் பார்வையில் எழுந்த போராட்டம் பற்றிய அனுபவங்கள்

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றிவிட்டு இடையில் ஒதுங்கிக்கொண்ட சில முக்கிய முன்னாள் போராளிகள் புகலிட நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். தாம் நடத்திய போராட்ட அனுபவங்களை மலரும்

*நினைவுகளாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் எழுதிய முக்கியமான சில நூல்களையும் போர்க்காலப் பிரசுரங்களாகப் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும்.*

**எமது பாதை** *என்ற தலைப்பில் வெளியான நூலொன்றை முதலில் குறிப்பிடலாம். மத்திய செயற்குழு. தமிழீழ விடுதலை இராணுவம் என்ற அமைப்பின் மத்திய செயற்குழு 1984இல் வெளியிட்ட நூல் இது. தமிழ் ஈழ விடுதலை இராணுவம்* (Thamil Eelam Liberation Army) *ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பல தீவிரவாதக் குழுக்களில் ஒன்றாகும். இது ஒபறோய் தேவன் (17.4.1958-14.8.1983) என்ற இளைஞனின் தலைமையில் இயங்கியது. 1983இல் இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்.*

*இந்த அமைப்பினரின் செயற்பாடுகள், இயக்கத்தின் செயற்பாடுகள், கொள்கைத் திட்டம், ஈழவிடுதலைப் போராட்டம் பற்றி தமிழகத் தலைவர்களின் கருத்துக்கள், இயக்கப் படுகொலைகளுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும், ஒபறோய் தேவன் மரணிப்பதற்கு முன்னர் "1974ம் ஆண்டு முதல் நான் கண்ட களங்களும் சென்ற வழியும்" என்ற தலைப்பில் எழுதிச் சென்ற நாட்குறிப்புகள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

**ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்** *என்ற நூல், சி.புஷ்பராஜா எழுதியது. புத்தாநத்தம் அடையாளம் வெளியீடாக டிசம்பர் 2003இல் வெளியிடப்பட்டது. ஈழப்போராட்டத்தின் தொடக்ககால வரலாற்றைச் சித்திரிக்கும் நூல். ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வாழ்ந்த சிதம்பரி புஷ்பராஜா என்ற போராளியின் அரசியல் சுயசரிதை. வட இலங்கையின் மயிலிட்டிக் கிராமத்தில் 1954இல் பிறந்த*

**"என்னோடு**
**ஒரு கோப்பையில்**
**சோறுண்ட நண்பர்கள்,**
**ஆடைகள் இன்றி**
**அவர்கள் தெருக்களில்**
**சுடப்பட்ட வேளைகளிலும்,**
**என் சகோதரிகள்**
**கம்பி வேலிகளுக்குள்ளும்,**
**காற்றின் பற்றைகளுக்குள்ளும்**
**குதறி எறியப்பட்ட வேளைகளிலும்,**
**தமிழச்சி வயிற்றில்**
**பிறந்ததைத் தவிர**
**வேறெந்தத் தவற்றையும்**
**செய்யாத பிஞ்சுகள்**
**நஞ்சுக்குண்டில் பொசுங்கிய போதும்,**
**இப்படி வார்த்தைக்குள்**
**அடங்காத வலிகளை**
**என் உறவுகள் அனுபவித்து**
**துடிதுடித்த வேளைகளில்**
**உயிர்பெற்றவை**
**இக்கவிதைகளில் அனேகமானவை"**

***- கண்ணீர் வெடிகள் என்ற***
***கவிதைத் தொகுதியில்***
***ரவி இந்திரன்***

*இவர் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாலிப முன்னணியில் 1969இல் இணைந்து தமிழ் மாணவர் பேரவையின் தீவிர செயற்பாட்டாளராக இருந்தவர். தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது தலைவராகவும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தினர்களில் ஒருவராகவும் அதன் செயலாளர் நாயகமாகவும் இயங்கியவர். 1974-1980 காலப்பகுதியில் யாழ்ப்பாணம். கொழும்பு, வெலிகடை சிறைகளிலும், பனாகொடை இராணுவத் தடுப்புமுகாமிலும் சிறையிருந்தவர். பின்னாளில் பிரான்சில் அரசியல் தஞ்சம்கோரி வாழ்ந்து மறைந்தவர்.*

**வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்: ஒரு சமூகவியல் ஆய்வு** *என்ற நூல் கைமண் என்ற*

புனைபெயரில் எழுதப்பட்ட நூல். மூலநூலாசிரியரின் விபரமில்லை. லண்டன், மறுநிர்மாணம் என்ற சமூகவியல் ஆய்வு மையம், ஜூலை 2011 இல் இதனை லண்டனில் வெளியிட்டது. "இயக்கம் என்பது வெறுமனே ஒரு அல்லது சில தனிநபர்களோ நிறுவனங்களோ அல்ல. இயக்கத்தினதும், இயக்கத்தின் தலைமையில் அணி திரண்டு போராடிய மக்களினதும் தியாகங்கள் என்றுமே வீண்போகாது, ஒடுக்கப்பட்ட மக்கள் அதை வீண்போக விடமாட்டார்கள். ஆழ்மனப்படிமங்கள் பௌதிக வடிவம் பெறும். புதிய தலைமை உருவாகும். போராட்டம் தொடரும்" - என்ற கருத்தை மையப்படுத்தி இந்நூல் ஈழ விடுதலைப் போராட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரையிலான ஆயுதப் போராட்டத்தின் முடிவின் பின்னையதான புதிய சிந்தனைக் கருத்துக்களைத் தர்க்கரீதியில் பதிவுசெய்கின்றது. அரசியல் காரணங்களுக்காக நூலாசிரியரின் இயற் பெயரும் வெளியீட்டு நிறுவனத்தின் முகவரியும் நூலில் பதிவுசெய்யப்படவில்லை. இந்நூல் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள், யுத்தகாலப்பேரழிவுகள், மகிந்தசிந்தனையும் பொருளாதாரக் கட்டுமானமும், இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும், மகிந்த சிந்தனையும் இராஜதந்திரமும் ஆகிய பிரிவுகளின்கீழ் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது.

**ஈழப் போராட்டத்தில் எனது பதிவுகள்: பிரபாகரனோடு புலிகள் அமைப்பை ஆரம்பித்த நாட்கள்.** என்ற தலைப்பில் கணேசன் (ஐயர்) எழுதிய நூலும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய இராச்சியத்தில் இருந்து, இனியொரு என்ற ஊடக அமைப்பினால் டிசம்பர் 2011இல் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. ஈழப்போராட்ட வரலாற்றின் ஆரம்ப நிலையில் அதனோடு தன்னை முழுமையாக இணைத்துக்கொண்ட கணேசன் (ஐயர்) தனது பார்வையில் ஈழப் போராட்டத்தின் வரலாற்று நிகழ்வுகளை, உள்வீட்டுப் பிள்ளையாக இருந்த அனுபவங்களின் தொகுப்பாக 32 இயல்களில் பதிவுசெய்திருக்கிறார். தலைமறைவு இயக்கங்கள் ஊடாகவே ஈழப்போராட்டம் ஆரம்பமாகிறது. இந்தவகையில் ஒவ்வொரு ஈழப் போராளியும் தலைமறைவுப் போராளியாகவே தனது போராட்ட வாழ்வை ஆரம்பிக்கின்றார். கணேசன் - ஐயர் என்ற பெயரில் தலைமறைவுப் போராளியாக விடுதலைப் புலிகள் அமைப்பை பிரபாகரனோடு ஆரம்பிக்கின்றார். சிறுவயதில் பெரியார், திராவிடக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்ட ஐயர், தேசியப் போராட்ட அலை எழுந்தபோது அதனை ஆயுதப் போராட்டமாகத் தலைமை தாங்கியவர்களில் ஒருவர். பின்னாட்களில் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி என்ற

> ***ஈழப் போராளிகளின் பார்வையில் எழுந்த போராட்டம் பற்றிய அனுபவங்கள்***
>
> ***விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றிவிட்டு இடையில் ஒதுங்கிக்கொண்ட சில முக்கிய முன்னாள் போராளிகள் புகலிட நாடுகளில் வாழ்ந்துவருகின்றார்கள். தாம் நடத்திய போராட்ட அனுபவங்களை மலரும் நினைவுகளாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் எழுதிய முக்கியமான சில நூல்களையும் போர்க்காலப் பிரசுரங்களாகப் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும்.***

மாவோயிச அமைப்பின் மத்திய குழுவி லும், பின்னர் தீப்பொறி என்ற அமைப்பின் மத்திய குழுவிலும் செயற்பட்ட ஐயர், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப வரலாற்றைத் தனது சாட்சியமாக இந்நூ லில் பதிவுசெய்கின்றார்.

### போராட்ட உணர்வுகளின் வெளிப்பாடாக மலர்ந்த கவிதை நூல்கள்

ஈழப்போராட்டத்தின் எழுச்சிக்குக் கட்டியம் கூறும் வகையில் எம்மவரின் படைப்பிலக்கியங்களும் அந்நாளில் வீறுடன் எழுந்தன. அவை இன்றுவரை தொடர்ந்தவண்ணம் உள்ளன. தாயகத்தில் போரிலக்கியமாகப் படைக்கப்பட்ட பல கவிதை நூல்களை அடியொற்றிப் பின்னா ளில் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியிலும் பரணிபாடுதலாக அது தொடரச் செய்தது. இக்கட்டுரையின் நோக்கம் அவற்றை முழுமையாகப் பட்டியலிடுவதல்ல. ஆங் காங்கே தொட்டுச்செல்வது மாத்திரமே விரிவஞ்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. போர்க்காலக் கவிதைகள் பற்றியோ, அக்காலத்தில் எழுந்த பிற புனைகதை இலக்கியங்கள் பற்றியோ விரிவான ஆய்வை மேற்கொள்ளவிரும்புவோர், கட்டுரையாளரின் நூல்தேட்டத் தொகுதி-களைப் பார்வையிடுவதே உகந்ததாகும்.

**மரணம்** என்ற கவிதைத் தொகுதி செழியன் என்பவரால் படைக்கப்பெற்று சென்னையிலுள்ள சிவா பதிப்பகத்தினால் சூளைமேட்டில் அச்சிடப்பெற்று 40 பக்கங்களில் வெளியாகியிருந்தது. விடு தலைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டத்தில் வெளியான இந்த நூலின் முன்னுரையில் “தினமும் துப்பாக்கி வேட்டுக்களும் உயிரற்ற உடல்களும் எரிகின்ற மணமும் கொண்ட தேசத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அழகிய அந்திக் காட்சிகளை, பௌர்ணமி நிலாவைப்பற்றி எண்ணி எங்களால் எழுத முடியவில்லை. சிறையிடப்பட்ட எங்கள் இரவுகளை, அதிகாலைப் பொழு துகளை, முட்களை ஏந்தும் பூக்களைப் பற்றியே எழுதமுடிகிறது.” என்று செழியன் குறிப்பிட்டிருந்தார். இதுவே ஈழத்தவரின் போர்க்கால கவிதை இலக்கியங்களின் அடிநாதமாக அமைந்திருந்தது.

**ஆளற்ற தனித்த தீவுகளில் நிலவு, ஈரமற்ற மழை** என்ற தொகுப்பு செழிய னின் மற்றொரு பிற்காலப் படைப்பாகும். கொழும்பு மூன்றாவது மனிதன் வெளியீடாக, ஆகஸ்ட் 2002 இல் இது வெளிவந்திருந்தது. தேசிய விடுதலைப் போராட்ட இலக்கியத்தில் முன்னோடியானவையாகவும் பல தளங்களில் முதன்மையானவையாகவும் அமைந்த கவிதைகளில் செழியனின் கவிதைகளும் அடங்கும். அனுபவத்தின் ஆழம், உணர் வின் செறிவு, கடப்பாட்டின் தீவிரம் என்பன அவரது கவிதைகளின் அடிநாதமாக அமைந்துள்ளன.

**மரணத்துள் வாழ்வோம்** என்ற பெயரில் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால்வரும் தொகுத்து ஒரு போரியல் கவி தைத் தொகுதியை வெளியிட்டிருந்தார்கள். முதலில் யாழ்ப்பாணம் தமிழியல் வெளி யீடாக 1985 இலும் பின்னர் கோவை விடியல் பதிப்பகத்தின் வாயிலாக உப்பிலிபாளையத்திலிருந்து 2வது பதிப்பாக டிசம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது. ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். சமகால ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட இக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர்களின் பெண்நிலைப்பட்ட அநுபவங்கள் உயிர்த்துடிப்புடன் வந்துள்ள மையும் சிறப்பம்சமாகும்.

இந்நூலின் தொகுப்பாளர்களில் ஒருவ ரான உருத்திரமூர்த்தி சேரன், ஈழத்தின் புகழ்பூத்த முன்னோடிக் கவிஞரான

“மஹாகவி” (அமரர் து.உருத்திரமூர்த்தி) அவர்களின் மகனாவார். சேரன் ஈழத்தின் போர்க்கால படைப்பாளிகளுள் குறிப்பிடத் தகுந்தவர். **இரண்டாவது சூரிய உதயம்** என்ற சேரனின் முதலாவது கவிதைத் தொகுப்பு, சென்னை பொதுமை வெளியீடாக ஜூன் 1983 இல் வெளிவந்தது. சேரனின் மூன்று நெடுங்கவிதைகளும் ஏழு சிறுகவி தைகளும் ஒரு பாடலும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. 1978-82 காலப் பகுதியில் சிங்களப் பேரினவாதத்தால் தொடர்ந்து அவமதிக்கப்பட்டுவரும் சிறுபான்மையினத்தவர்களின் உண்மை யான-வாழ்ந்து பெற்ற-அனுபவம் இக் கவிதைகளில் சிறப்பாக வெளிக்காட்டப் பட்டிருந்தது. **யமன்** என்ற இவரது மற்றொரு கவிதைத் தொகுப்பு, இவரது சொந்த மண்ணான அளவெட்டியிலிருந்து படைப்பாளிகள் வட்டம் வெளியீடாக 1984 இல் யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது. இக்கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிதைகள் அனைத்தும் ஜூலை 1983க்குப் பிறகு எழுதப்பட்டவை. ஈழத்தமிழரின் பல்வேறு இன்னல்களையும் உணர்வுகலந்து சொல்லிச் செல்பவை. **கானல் வரி** என்ற இவரது கவிதைத் தொகுப்பும் சென்னை, பொன்னி வெளியீடாக சென்னை இராசகிளி பிரின்டர்ஸ் வாயிலாக அச்சிடப்பெற்றிருந்தது. 1975 முதல் 1981 வரையிலான காலப்பகுதியில் சேரன் எழு திய கவிதைகளில் தேர்ந்தெடுத்த 28 கவிதை களின் தொகுப்பு இதுவாகும். பின்னாளில் இவர் கனடாவில் புலம்பெயர்ந்து வாழத் தொடங்கிய பின்னர் **எலும்புக்கூடுகளின் ஊர்வலம்** என்ற கவிதைத் தொகுப்பினை கனடா, தேடல் பதிப்பகத்தின் வாயி லாக வெளியிட்டிருந்தார். தாயக தேசத் தின் அன்றாட வாழ்வில் ஏற்பட்ட அவலங்களையும் அலங்கோல அரசியலை யும் தாளலயங்களைக் கடந்து வரலாறு ஆக்கும் முயற்சியாக எலும்புக்கூடுகளின் ஊர்வலம் அமைந்திருந்தது. காலம் காலமாக நின்று எமது துயரங்களையும் சொல்லில் மாளாத இழப்புக்களையும் மரணத்துள் வாழ்ந்த கதைகளையும் சொல்லி உலகின் மனச்சாட்சியை அதிரவைத்துக் கொண்டிருக்கும் கவி தைகள் இவை. இதைத் தொடர்ந்து **நீ இப்பொழுது இறங்கும் ஆறு** என்ற தலைப்பில் சேரனின் 100 கவிதைகளைக் கொண்ட தொகுப்பொன்று ஒகஸ்ட் 2000 இலும் **மீண்டும் கடலுக்கு** என்ற தலைப்பில் மற்றொரு கவிதைத் தொகுப்பு டிசம்பர் 2004 இலும் வெளியாகியிருந்தன. இன்றும் தொடரும் அவருடைய படைப்புக்கள் அன்றைய காலத்துச் சமூக அசைவியக்கத்தின் பதிவுகளாக மட்டுமல்லாமல் சமூக விமர்சனமாகவும் அமைவதுதான் அவற் றின் சிறப்பு. ஈழப் போராட்டத்தின் ஆரம்பகால அனுபவங்களை, தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட நெருக்கடிகளை, ஒடுக்குமுறைகளை, சேரன் கவிதைகளா-கத் தந்தபோது அது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் இலக்கியமாயிற்று. மறு புறத்தில் சமூக விமர்சனமாகவும் அது விரிந்தபோது, சமூகம் சார்ந்த பல அரசியல், அறிவியல், சமூகவியல் விவாதங்களுக்கு இட்டுச்சென்றது. அந்த வகையில் கவி தையின் இன்னுமொரு முக்கியமான பரிமாணத்தை அவருடைய கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. கனடா யோர்க் பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முனை-வர் பட்டம் பெற்று அங்கு பேராசிரி யராகப் பணிபுரியும் சேரனின் கவிதைத் துறைப் பங்களிப்பு ஈழத்தின் போரியல் இலக்கியத்தின் வரலாற்றுப் பதிவாகின்றது.

சேரனைப் போன்றே ஈழத்தின் போர்க்கால இலக்கியத்துக்குச் செழுமை சேர்த்த மற்றொரு படைப்பாளி, கவி ஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் ஆவார். தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழும்

**இவரது ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்** என்ற கவிதைத்தொகுதி சென்னை காந்தளகத்தின் வாயிலாக 1986இல் வெளிவந்தது. இச்சிறு காவியம் ஈழ விடுதலைப் போராட்டத்தின் கோரத்தையும் கொடுமையையும் மட்டு மல்லாது தீரத்தையும் தியாகத்தையும் சித்திரிக்கின்றது. இதே ஆண்டு **சூரிய னோடு பேசுதல்** என்ற மற்றொரு தொகுதியையும் வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்கள் கோவை, யாழ். பதிப்பகத்தின் வாயிலாக பெப்ரவரி 1986 இல் வெளியிட்டார். இதன் இரண்டாவது பதிப்பு ஜூலை 1987 இல் மைலாப்பூர் மிதிலா அச்சகத்தினால் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான வெளியீட்டுரையில் துரை மடங்கன் அவர்கள் "போர்க்களமாய் மாறிப்போன ஈழமண்ணிலிருந்து முகிழ்த்த இவரது இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பல்பரிமாணங்களுடன் புலனாக்குவதால் இவற்றை மக்களுக்கு வழங்குவதும் கூடப் போராட்டத்துக்குப் புரியும் உதவியே" என்று குறிப்பிட்டிருந்தார்.

**நமக்கென்றொரு புல்வெளி** என்ற கவிதைத் தொகுதியையும் இவர் சென்னை, க்ரியா வெளியீடாக மார்ச் 1987இல் வெளியிட்டிருந்தார். **ஒரு அகதியின் பாடல்** என்ற கவிதைத் தொகுதியில் வ.ஐ.ச. ஜெயபாலன் தான் வாழுகின்ற காலத்தின் நெருக்கடியைப் பல்வேறு தளங்களில் அனுபவித்துக் கவிதையாக்கியிருந்தார். அவை போரிலக்கியத்தில் ஒரு அகதியின் குரலாகத் துயரங்களைச் சொல்லி நிற்கின்றது. கனடா: தேடல் பதிப்பகம், ரொரன்ரோவிலிருந்து மார்ச் 1991 இல் இந்நூலை வெளியிட்டிருந்தது.

வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதைகளில் பெரும்பாலானவற்றைத் தொகுத்து 320 பக்கங்களில் **வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகள்: பெருந்தொகை** என்ற பெயரில் சென்னை ஸ்நேகா வெளியீட்டகம் ஒரு பாரியதொகுதியை ஏப்ரல் 2002 இல் வெளியிட்டிருக்கின்றது. நேரடித்தன்மையும் உள்ளுறை உவமையும் ஒருசேரவாய்க்கப்பெற்ற எளிமையான, எனினும் செறிவான மொழி வளம் கொண்ட வ.ஐ.ச. ஜெயபாலனின் கவி தைகளின் பெருந்தொகுப்பு இதுவாகும். ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் என்ற இவரது குறுங்காவியம் உள்ளிட்ட பெரும்பான்மையான கவிதைகள் இதில் அடங்கியுள்ளன. ஈழத்தமிழரின் போரியல் வாழ்வின் கணிசமான காலப்பகுதியின் குறுக்குவெட்டு முகத்தை இக்கவிதைகளில் தரிசிக்க முடிகின்றது.

**தோற்றுப் போனவர்களின் பாடல்** வ.ஐ.ச. ஜெயபாலனின் அண்மைக்கால நூலாகும். இது 2009 இல் சென்னை ஆழி பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. உலக இன மரபில் தமிழின அழித்தொழிப்பின் உச்சபட்ச நாட்களில் ஜனனித்த இக்கவிதைகள் அதே ரத்தவாடையோடும், நிண வீச்சத்தோடும் நிழலாடுகின்றன. இக் கவிதைத் தொகுப்பு மூன்று உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. 2002 - 2009 காலகட்டத்தில் எழுதப்பட்ட தோற்றுப் போனவர்களின் இன்றைய பாடல்கள் பகுதி ஒன்றிலும், மக்களின் முன்னைய பெரும் தோல்விகளின்போது எழுதிய கவிதைகளில் சில இரண்டாவது பகுதியிலும், ஜெயபாலனின் இசைப்பாடல்கள் மூன்றாவது பகுதியிலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு யுத்தத்தின் தோல்வியின்போதும் இனி முடிந்ததென்று சொல்லப்பட்ட மக்களின் போராட்டம் புதிய தளத்தில் புதிய பின்னணியில் மீண்டும் உக்கிரம் கொண்டதையே இத்தொகுப்பினை வாசிப்போரின் மனம்கொள்ளும் மொழியில் திளைத்து, மண்ணில் வேரோடி, ஜரிகைக் கனவுகளில் சஞ்சரித்த கவிஞனை போர்க்கழுகு கொத்தித் துரத்துகின்றது. நாடோடியாய் திரிந்து யுத்தகாலத்திற்குள் வாழ்ந்த தமிழ்ப்புலவன் அரற்றும் கண்ணீர் இக்கவிதைகளில் அறத் தீயாய் எரிகின்றது.

ஈழத்துப் போரியல் கவிதை இலக்கியத்தில் காசி ஆனந்தனின் பணி குறிப்பிடத்தகுந்ததாகும். அவரின் பாதிப்பில் இன்றும் பல இளங்கவிஞர்கள் எழுச்சிக் கவிதைகளைப் பாடி வருகின்றார்கள். காசி ஆனந்தனின் ஆரம்பகாலக் கவிதா-வரிகள் இன்றைய பல கவிதைகளில் பொது வாசகங்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. காசி ஆனந்தன் கவிதைகள், காசி ஆனந்தன் கதைகள், காசி ஆனந்தன் நறுக்குகள் எனப் பல பதிப்புகளைக் கண்ட நூல்கள் இவ்வுணர்ச்சிக் கவிஞரின் திறமைக்குச் சான்றாக அமைகின்றன.

**தமிழன் கனவு** காசி ஆனந்தனின் முக்கியமானதொரு படைப்பு. கொழும்பு, ரகுநாதன் பதிப்பகம், ஆகஸ்ட் 1968இல் இந்நூலைத் தமது முதலாவது வெளியீடாக வெளியிட்டிருந்தது. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ஆரம்பகாலக் கவிதைகளின் தொகுப்பாக இது அமைகின்றது. தமிழரின் உரிமைப் போராட்டமும் அவர்தம் அங்கலாய்ப்புகளும் தமிழன் கனவுக்குப் பொருளாய் அமைந்துள்ளன. படை நடத்தியாவது தனக்கென ஒரு தனி நாடு காணும் உரிமை வேட்கை கொழுந்து விட்டெரியும்வண்ணம் மிகப் பக்குவமாக அறுபதுகளிலேயே மூட்டப்பட்ட கனற்பிழம்பாகக் காட்சி தருகின்றன இக் கவிதைகள்.

**படகோட்டியின் பாடல்,** காசி ஆனந்தனின் மற்றுமொரு முக்கிய படைப்பாகும். இதுவும் ரகுநாதன் பதிப்பகத்தால் பெப்ரவரி 1972 இல் வெளிவந்தது. 1962ஆம் ஆண்டு தமிழகத்தில் ஈரோடு சின்னச்சாமி அவர்களை ஆசிரியராய்க் கொண்டு வெளிவந்த சமநீதி இதழில் ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் படகோட்டியின் பாடல் எனும் தலைப்பில் எழுதிய தத்துவத் தமிழ்த் தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இதுவா-கும்.

நீண்டகாலமாகத் தமிழகத்தில் புலம் பெயர்ந்து வாழும் காசி ஆனந்தன் 'தம்பி ஜெயத்திற்கு' என்ற நூலை அண்மையில் வெளியிட்டிருக்கிறார். டிசம்பர் 2009 இல் காசி ஆனந்தன் குடில் வெளியீடாக மலர்ந்துள்ளது இந்நூல். இந்திய அமைதிகாக்கும் படையின் சுற்றிவளைப் பின்போது அதில் அகப்பட்டு சயனைற் நஞ்சருந்தி 10.9.1988 இல் மடிந்தவர் சிவஜெயம் என்ற இயற்பெயர் கொண்ட மேஜர் சந்திரன். இந்நூல் வீரமரணமடைந்த போராளியான மேஜர் சந்திரனுக்கு அவரது தமையனார் காசி ஆனந்தன் எழுதிய கண்ணீர்க் கடிதமாக அமைகின்றது. இது வெறும் கடிதமாக அல்லாமல் ஒரு ஈழ விடுதலைப் போராளியின் குடும்ப வரலாறு, அவன் சார்ந்த ஒரு விடுதலைப் போராட்டத்தின் வரலாறு என விரிகின்றது. ஈழத்தின் அறவழிப் போராட்டத்தின் முடிவில் வெடித்த புலிகளின் மறவழிப் போராட்டத்தின் தொடக்க வரலாற்றைக் கூறுவதாக இந்நூல் அமைந்திருக்கிறது. காசி ஆனந்தனின் பல கவிதைகள் இன்னமும் நூலுருவாகாதிருப்பது கவலைக்குரியது. அறுபதுகளில் வீறுடன் எழுந்த இவரது உணர்வுக் கவியாற்றல் பத்திரிகைகளுக்குள்ளும், சஞ்சிகைகளுக்குள்ளும் முடங்கிப் போனது வருத்தத்திற்குரியது.

கவிஞர் காசி ஆனந்தனைத் தொடர்ந்து ஈழப் போராட்டத்தின் இலக்கியத் தடத்தை பின்னாளில் வழிநடத்திச் செல்பவராக புதுவை இரத்தினதுரை இனங் காணப்படுகின்றார். **இரத்த புஷ்பங்கள்** என்ற கவிதைத் தொகுப்பு புதுவை இரத்தினதுரை அவர்கள் ஆரம்ப காலங்களில் எழுதி கண்டி கலைஞர் பதிப்பகத்தின் வாயிலாக மார்ச் 1980இல் வெளியிட்ட கவிதைத் தொகுதியாகும். **"வானம் சிவக்கிறது", "ஒரு தோழனின் காதல் கடிதம்"** என்ற இரு கவிதைத் தொகுதிகளை ஏற்கெனவே தந்த புதுவை இரத்தினதுரையின் மூன்றாவது நூலாக வெளிவந்த 27 கவிதைகளைக் கொண்ட தொகுப்பு இதுவாகும்.

**நினைவழியா நாட்கள்** என்ற இவரது கவிதைத் தொகுதி, பிரான்சிலிருந்து தமிழ்த்தாய் வெளியீடாக ஆவணி 1993 இல் இரண்டாவது பதிப்பைக் கண்டது. விடுதலைப் போராட்டச் சூழலில் எழுந்த இக்கவிதைகளின் தொகுதி, மனித அவலங்களையும், ஏக்கங்களையும் படிமக்காட்சிகளாகச் சித்திரித்து, இன வாதக் கொடூரத்தை அழுத்தமாக உணர்த்திக் காட்டுவதுடன், ஒடுக்கு முறைக்கு எதிரான ஆவேசம் மிக்க கொதிப்புணர்வையும் தட்டியெழுப்புவதாக அமைந்தது.

**'தமிழீழ எழுச்சி கானங்கள்'** என்ற இவரது மற்றுமொரு சிறிய கவிதைத் தொகுதி, கிளிநொச்சியிலிருந்து தமிழ்த்தாய் வெளியீடாக ஏப்ரல் 2003இல் வெளிவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட ஆனையிறவுச் சமர், முல்லைப்போர் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்ட விடுதலை எழுச்சிப் பாடல்கள் 16 இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. புதுவை இரத்தினதுரை இயற்றிய இப்பாடல்களை கண்ணன், முரளி ஆகியோர் இசையமைக்க, திருமலைச் சந்திரன், நிரோஜன், ஜெயா சுகுமார், எஸ்.ஜி.சாந்தன், தவமலர், செங்கதிர், மணிமொழி, மேஜர் சிட்டு, கணேஷ் குழுவினர், தியாகராஜா ஆகியோர் பாடியுள்ளனர். நூலின் பின்னிணைப்பாக **ஆனையிறவு - ஆழப்பதிந்ததொரு காலச்சுவடு** என்ற கட்டுரையும் இடம் பெற்றிருந்தது.

**பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்** என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங்கூரம் வெளியீடாக பங்குனி 2005இல் வெளிவந்துள்ளது. 432 பக்கங்களுடன் வெளியான இப்பெருந் தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993இல் வெளிவந்த "தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே" என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகையின் மாசி 2005இல் வெளியான "இருந்ததும் இல்லையென்றானதும்" என்ற கவிதைவரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத்தம் 155 கவிதைகள் இடம்பிடித்திருக்கின்றன. இந் நூலையும் நூலாசிரியரையும், நூலாசிரியரின் கவித்துவ வளர்ச்சிப் படிநிலைகளையும் கவிஞரின் இலக்கிய வரலாற்றினையும் ஆழமாக அறிமுகம் செய்வதாக அமைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் 28 பக்கங்கள் கொண்ட விரிவான விமர்சனக் கட்டுரை, இந்நூலுக்கு நுழைவாயிலாக அமைந்துள்ளதுடன், ஈழத்துப் போரியல் இலக்கியங்களுக்கு ஓர் அறிமுகமாகவும் அமைகின்றது.

**வியாசனின் உலைக்களம்** புதுவை இரத்தினதுரை அவர்களின் மற்றொரு படைப்பிலக்கியப் பரிமாணத்தை வித்தியாசமான ஈழத்துப் போராட்டகால இலக்கிய வடிவத்தில் தரிசிக்க வைக்கின்றது. தாயகத்திலிருந்து தமிழ்த்தாய் வெளியீடாக ஜூலை 2003இல் கிளிநொச்சி நிலா பதிப்பகத்தின் வாயிலாக 256 பக்கங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் வியாசன் என்ற புனைபெயரில் விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வ ஏட்டில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இந் நூல். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதை அக்கு வேறு ஆணி வேறாகத் தனது பேனா முனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டுவரும் முயற்சியாக இது அமைந்துள்ளது. விடுதலைப் புலிகள் ஏட்டில் இக்கவிதைகள் வெளியான போது, விடுதலைப் போரின் அந்தந்தக் காலங்களிலான சமூக அரசியல் நிலைமைகளையும் ஒரு கவிஞனின் அதன் மீதான பார்வையையும் தரிசிக்க வைப்பதாக அமைந்திருந்தன. காலத்தின் பிரதிபிம்பமாக இக்கவிதைகள் விளங்குகின்றன.

ஈழத்தின் கவிதை இலக்கியத்துறையில் நினைவுகொள்ளத்தக்க மற்றொரு கவி

ஞர் கி.பி. அரவிந்தன் ஆவார். 1990களில் புலம் பெயர்ந்த ஈழத்துக் கவிஞராக அதிகம் அறியப்பட்டவர் கி.பி.அரவிந்தன் என்னும் கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ். தோழர் சுந்தர் என்றும் ஈரோஸ் இயக்கத்தின் விடுதலைப் போராளியாக அறியப்பட்டவர். தற்போது புலம் பெயர்ந்து பிரான்சில் வாழ்பவர். இவரது படைப்புக்களில் ஈழவிடுதலைப் போராட்டமும், ஈழத்தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன.



**ஈழத்தின் போர்க்காலப் பிரசுரங்கள் தொடர்பான எனது இவ்வாய்வு முழுமையானதல்ல. பல நூல்கள் விரிவஞ்சி இடம்பெறவில்லை. மேலும்பல நூல்கள் பற்றிய தகவல் என்னை வந்தடையாதிருக்கலாம். புலம்பெயர் நாடொன்றில் இருந்துகொண்டு, போர்க்காலச் சூழலில் ஆங்காங்கே வெளியாகிய அனைத்து நூல்களையும் தேடித்தொகுப்பதென்பது எனது தனிமனித முயற்சியின் வலி மிகுந்த அத்தியாயங்களாகும்.**

**இனி ஒரு வைகறை** கி.பி. அரவிந்தன் எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும். சென்னை அடையாறிலிருந்து பொன்னி வெளியீடாக மார்ச் 1991இல் சென்னை இராசகிளி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியானது. தனது முகவுரையில் இவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். “இவை எனது குறிப்பேடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டவை. எழுத்துக்களினாலான இவ்வுணர்வுகள் கவிதைகளாயிருப்பின் போராளியாயிருந்த ஒருவன் கவிஞனாகின்றான்”.

**முகம்கொள்** கி.பி. அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. சென்னை கீதாஞ்சலி வெளியீடாக, நவம்பர் 1992இல் இந்நூல் வெளிவந்தது. இத் தொகுதியிலுள்ள கவிதைகள் மூன்று வகை அனுபவங்களை உள்ளடக்கியவை. அவை யாழ்ப்பாணத்து அனுபவங்கள், தமிழகத்தில் வாழ்ந்த இடைக்காலத்து அனுபவங்கள், அகதி வாழ்வின் பாதிப்புக்கள். இக்கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை மட்டுமல்ல, அவ்வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத்தப்பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப்பட்டுள்ளன.

**கனவின் மீதி**, இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். சென்னை, மடிப்பாக்கம் பொன்னி வெளியீடாக ஆகஸ்ட் 1999இல் இந்நூல் வெளிவந்தது. “ஒரு நாட்டில் வாழுகின்ற ஓர் இனத்திலுள்ள அகதியின் அவலத்தை இனத்தின் அவலமாக, நாட்டின் அவலமாக, உலகின் அவலமாகக் காட்டுகின்ற திறமை அரவிந்தனுக்குக் கைவந்துள்ளதென்றே கருதுகின்றேன்” என்று இந்நூலுக்கான முன்னுரையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இத்தொகுப்பில் கி.பி. அரவிந்தனின் 31 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. புலம்பெயர் வாழ்வின் நெருக்கடிகள் பற்றி இவை பெரிதும் பேசுகின்றன.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின்னர், **இருப்பும் விருப்பும்** என்ற நூல் கி.பி. அரவிந்தனால் எழுதப்பட்டது. சென்னை, சாளரம் வெளியீடாக ஜூன் 2009இல் இந்நூல் வெளிவந்தது. இவர் எழுதிய

கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். தமிழகம் இந்நூலைக் கைகளில் ஏந்தட்டும் என்ற வைகறையின் முன்னுரையான அறிமுகக் கட்டுரையுடன் இது அணிந்துரை அல்ல தோழர்களே என்ற தலைப்பில் பாமரன் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையும், அப்படித்தானா அரவிந்தன்? என்ற கே.எம்.வேணுகோபாலின் கட்டுரையும் இத்தொகுதிக்கும் அதன் படைப்பாளி கி.பி. அரவிந்தனுக்குமான விரிவான அறிமுகத்தை வழங்குகின்றன. உள்ளே உள்ள கி.பி. அரவிந்தனின் பத்துக் கட்டுரைகளும் முறையே இருப்பும் விருப்பும், ஒற்றுமையை ஓதுவோருக்கு, காலம் அரித்திடாது எம் இணைப்பை, எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம், இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை, சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன், யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு, ஓர் அகதியின் தாயும் தாயகமும், ஒரு பயணமும் சில நினைவுகளும், அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் கால கட்டத்தில் வெளியான அனைத்துக் கவிதைகளும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், போராளிகளின் வீரதீரங்கள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், வன்மங்கள், உடைமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை நுணுக்கங்கள் என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன. ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்களில், நின்று நிலைத்திருக்கப்போகும் வலிமைபெற்ற போரியல் இலக்கியத்துக்குக் கதியால் போட்டு நீரூற்றி வளர்த்த ஈழத்துக் கவிஞர்கள் அனைவரையும் இச்சிறு கட்டுரைக்குள் அடக்குவது என்பது இயலாத காரியமாகும். அங்கொன்றும் இங்கொன்றுமாக மாதிரிக்கு ஒன்றாகவே இப்படைப்பாளிகளை உதாரணமாக இங்கு காட்டக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் குறிப்பிடத்தகுந்த மேலும் சில படைப்புக்களைச் சுருக்கமாக இங்கே பார்க்கலாம்.

**அந்த விடியலுக்கு** என்ற கவிதைத் தொகுப்பினை க.இளங்கோ சென்னை சூளைமேட்டிலிருந்து சிவா பதிப்பகத்தின் வாயிலாக 1985இல் வெளியிட்டிருந்தார். "தான் பார்த்து-தான் ரசித்து-தான் வெதும்பி-தான் பாடிய சுதந்திர கீதங்கள் ஈழப்போர்முனைக்கு இசையமைக்க வருகின்றது. மக்களே மக்களே என்பதே இந்தக் கவிதைக்குப் பின்னால் கேட்கும் மிருதங்கம். எழுக எழுக என்பதே இந்தக் கவிதையோடு இயல்பாகப் பின்னப்பட்ட வயலின் இசை" என்று முல்லையூரான் இந்நூலுக்கான முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**இந்த மண்ணும் எங்கள் நாட்களும்** என்ற கவிதைத் தொகுதி யாழ்ப்பாணம்: தர்க்கீகம் வெளியீடாக வைகாசி 1982இல் வெளிவந்தது. ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களான குறிஞ்சித் தென்னவன், மு.புஷ்பராஜன், வ.ஐ.ச.ஜெயபாலன், சாருமதி, க.ஆதவன், எம்.ஏ.நுஃமான், ஹம்சத்வனி, கவியரசன், புசல்லாவை குறிஞ்சிவளவன், சு.வில்வரத்தினம், சுந்தரன், அ.யேசுராசா, அரு.சிவானந்தன், யோகராணி, ரவீந்திரன் ஆகிய ஈழத்துக் கவிஞர்களின் விடுதலைக் கவிதைகளின் தொகுப்பாக இது அமைந்திருந்தது.

**இந்த மழை ஓயாதோ?** என்ற கவிதைத் தொகுப்பு கனகரவி (இயற்பெயர்: கனகரத்தினம் இரவீந்திரன்) அவர்களால் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட வெளியீடாக 2001இல் வெளிவந்திருந்தது. சமகால மக்களின் அவலங்களும் அலட்

சியங்களும் கவிதைகளாகப் பதிவு செய்யப்படுவது எதிர்கால சந்ததியினருக்கு அவசியமான ஒன்று என்ற அடிப்படையில் இக்கவிதைத் தொகுதி முக்கியத்துவம் பெறுகின்றது. இடப்பெயர்வு, மீள்குடியேற்றம், நாடுவிட்டு ஓடுவோர், குண்டு போடும் அரசு, துப்பாக்கி ஏந்தியோரின் அநியாயச் செயல்கள், மண்ணோடு போராடும் மனிதர்கள், அமைதி விருப்பம், சிறையி-னில் வாடுவோர் துயரம், பிந்துனுவெவ முகாம் அழிப்பு, காணாமல் போனவர்கள் என்று பல்வேறு சமகால ஈழத்துப் போராட்ட வாழ்வியலை இக்கவிதைகள் படம்பிடிக்கின்றன. ஊடகவியலாளரான கவிஞரின் பாடுபொருள் பரந்துபட்டதாக உள்ளமை இத்தொகுதிக்கான சிறப்பம்சமாகும்.

**இலக்குத் தெரிகிறது** என்ற தொகுதி தூயவன் (சு.தனேஸ்குமார்) என்ற ஈழவிடுதலைப் போராளியின் படைப்பாகும். தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப்பிரிவு இத்தொகுப்பினை சித்திரை 1993 இல் வெளியிட்டிருந்தது. கவிஞர் தூயவன், ஈழவிடுதலைப்போரில் களத்தில் நின்று போராடிய ஒரு போராளி. விடுதலையை அவாவி நின்றவர். வாழ்வில் மற்றவரின் கண்களுக்குப் புலப்படாத பக்கங்கள் இவரின் பார்வைக்குக் கிட்டுகின்றன. அவை இங்கு கவிதைகளில் பதிவுக்குள்ளாகியுள்ளன.

**அக்கரைக்குப் போன அம்மாவுக்கு** என்ற தொகுதி ஹம்சத்வனி என்ற முக்கியமான படைப்பாளியின் கவிதைத் தொகுப்பாகும். சென்னை: தமிழியல் வெளியீடாக ஒகஸ்ட் 1985இல்இது வெளிவந்தது. நூலாசிரியரின் முன்னுரையில் குறிப்பிடும் வாசகங்களே இந்நூலுக்கான விளக்கத்தைத் தருகின்றது. “தமிழ் ஈழத்தின் மிகப்பயங்கரமான கணங்கள் என்னுள்ளே ஏற்படுத்திய ஆழமான அதிர்வின் பிரதிபலிப்புக்களே எனது கவிதைகள். எனது கிராமங்களும் வீதிகளும் பச்சை வயல்வெளிகளும் ஒரு நாள் சிறைமீட்கப்படும். அந்த மீட்சிக்கு ஒரு உரமாக எனது கவிதைகள் அமையுமாயின் நான் மகிழ்வேன்” என்று தன் ஆதங்கத்தை இந்நூலில் கவிஞர் ஹம்சத்வனி வெளிப்படுத்தியுள்ளார். 1980-1985 ஆண்டுகளுக்கிடைப்பட்ட ஈழத்தமிழரின் துயர் மிகு அவல வாழ்வை இக்கவிதைகள் பதிவு செய்கின்றன.

**அனுபவ வலிகள்** என்ற தொகுதி இரணையூர் பாலசுதர்சினி அவர்களால் வவுனியா: விண்மணி வெளியீட்டகத்தினூடாக வெளியிடப்பெற்ற கவிதைத் தொகுப்பாகும். இதன் 1வது பதிப்பு, 2004இல் வெளியிடப்பட்டது. வன்னி மண்ணின் இரணையூரிலிருந்து புறப்பட்ட பெண் எழுத்தாளரான பாலசுதர்சனியின் கவிதைகள் இவை. மண் பற்றியும், மனிதர்கள் பற்றியும் இவை பேசுகின்றன. சமாதான சாபங்கள், எழு பெண்ணாய், வெற்றி நிச்சயம், சுதந்திர ஒளி, சீதனம், அகதியாய் எனப் பல்வேறுபட்ட விடயங்களினூடாகப் பெண்களின் முடக்கி வைக்கப்பட்ட அனுபவ வலிகளைத் தன் கவிதை-வரிகளினூடாக வெளிக்கொண்டுவரும் கவிதைத் தொகுதி இது. போரியல் வாழ்வில் ஈழப்பெண்களின் பார்வை இக்கவிதைகளில் முனைப்புப்பெற்றுள்ளன.

**ஆனையிறவு** என்ற தொகுப்பு 42 கவிஞர்களின் கவிதைகளைக் கொண்டது. வவுனியாவிலிருந்து வெளிச்சம் வெளியீடாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் பண்பாட்டுக் கழகத்தின் நடுவப்பணியகம், ஜூன் 2000 இல் இத்தொகுப்பினை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளி-னால் மேற்கொள்ளப்பட்ட வடபுலத்தின் ஆனையிறவு இராணுவ முகாம் ஆக்கிரமிப்பு வெற்றியைக் களத்திலேயே நின்று தரிசித்த பாட்டுத் திறத்தோர் எழுதிய கவிதைகள் இவை. ஆனையிறவு மீட்புச் சமர்களில் இதுவரை வீரமரணமடைந்த

மாவீரர்களுக்குக் காணிக்கையாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

**செம்மணி** என்ற தலைப்பில் வெளியான மற்றொரு நூலில் 24 கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றிருந்தன. வெளிச்சம் வெளியீடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்பாட்டுக் கழகத்தின் நடுவப் பணியகம், செப்டெம்பர் 1998இல் இத்தொகுப்பை வெளியிட்டது.

யாழ்ப்பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போனோராக்கப்பட்டு வதையின் பின் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவை. 1995இல் **ரிவிரச** என்ற யாழ்ப்பாண ஆக்கிரமிப்புப் போரின்பின், தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தஞ்சமடைந்த தமிழ்மக்களை மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கைமூலம் சிறைப்படுத்திச் சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றது. அக்காலகட்டத்தில் சிங்கள இராணுவம் அவர்களை யாருங்காணாமற் பிடித்துச்சென்று படுகொலைசெய்து செம்மணிவெளியில் புதைத்த வஞ்சகச்செயலை அம்பலப் படுத்தும் பதிவுகளாக இவை அமைகின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாள-மாகவே இக்கவிதைகள் அமைகின்றன.

**பெயரிடாத நட்சத்திரங்கள்** என்ற தலைப்பில் கோயம்புத்தூர் விடியல் பதிப்பகம், சுவிட்சர்லாந்து ஊடறு அமைப்பினருடன் இணைந்து ஜூலை 2011இல் ஒரு நூலை வெளியிட்டுள்ளனர். ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போரா-ளிகளால் அவ்வப்போது எழுதப்பட்டு கவிதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இது. வானதியின் கவிதைகள் (1991), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), நிமிர்வு (1993), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செம்மணி (1998), ஆனையிறவு (2000), என் கவிதை (2000), எழுதாத உன் கவிதை (2001), மீண்டும் துளிர்க்கும் வசந்தம் (2004), பெயல் மணக்கும் பொழுது (2007) ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றவற்றில் தேர்ந்த 70 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றை அம்புலி, அ.காந்தா, அலையிசை, ஜெயா, கலை மகள், ஆதிலட்சுமி, கனிமொழி, ஞானமதி, வானதி, புரட்சிகரா, கஸ்தூரி, கிருபா, மலைமகள், நகுலா, நாமகள், நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி மார்கரட், பாரதி, சிரஞ்சீவி, சூரியநிலா, சுதாமதி, தமிழவள், தயாமதி, தூயவள் ஆகிய 26 போராளிக் கவிஞர்களின் கவிதைகள் இவை.

இலங்கையின் போர்க்காலக் கவிதைகளின் படைப்பாளிகள் பற்றிப் பேசும்போது தவிர்க்கப்படமுடியாத மற்றொருவர் தீபச்செல்வன் ஆவார். ஈழத்தின் வன்னியில் கிளிநொச்சி நகரத்தின் இரத்தினபுரம் கிராமத்தைச் சேர்ந்த இக்கவிஞர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பட்டதாரி. பாலேந்திரன் பிரதீபன் என்ற இயற்பெயர்கொண்ட இவரது **பதுங்குகுழியில் பிறந்த குழந்தை** என்ற கவிதைத் தொகுப்பு நாகர்கோயில், காலச்சுவடு பதிப்பக வெளியீடாக டிசம்பர் 2008இல் வெளியாயிற்று. இன்றைய ஈழத்துக் கவிதைகளில் வலுவான குரல்களில் ஒன்றாக உணரப்படும் தீபச்செல்வனின் முதலாவது தொகுப்பு இது. தொடரும் போர்ச் சூழலில் நித்தமும் மரணத்துள் வாழும் இன்றைய ஈழத்து மக்களின் பேரிழப்புகளை இடப்பெயர்வுகளின் அவலத்தை, மனச் சிதைவுகளை, கூடவே துளிர்விடும் நம்பிக்கையை மிகையேதுமின்றி யதார்த்தமாகச் சித்திரிக்கும் கவிதைகள் இவை. கவித்துவம், சொற்கட்டு, செறிவு, படிமம் என்பவற்றுக்கப்பால் ஒரு கவிதை உண்மையை உரைக்க வேண்டும்,

உண்மைக்காய் துடிக்க வேண்டும், உண்மையைச் சார்ந்திருக்க வேண்டும், அவ்வகையில் இவ்விளம் கவிஞனின் கவிதைகள் காயத்திலிருந்து கொட்டும் குருதியாக, நெரிபடும் கழுத்திலிருந்து கிளம்பும் ஓலமாக, கொலைப்படுகளத்தைப் பார்க்க விதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் கண்ணீர்த் துளிகளாக அமைந்திருக்கின்றன. தீபச்செல்வன் ஒட்டுமொத்த ஈழத்தமிழ ரின் வலியை இக்கவிதைத் தொகுதி யில் பிரசவிக்க முயன்றுள்ளார். சூனியம், வெறுமை, இன்னும் பிற சொற்களுக்குள் அடக்கமுடியாத மரணப்பெருவெளியாக, சாம்பல்மேடாக, மக்கள் கால்நடைகளாக பலவந்தமாக விரட்டப்பட்ட நிலங்களைக் காட்சிப்படுத்தியிருக்கிறார். அதிகமாய் சூனிய நிலத்தைப் பற்றியே இக்கவிதைகள் பேசுகின்றன. மேலும் அகதிகளாய் இன்றுவரை ஓடிக்கொண்டே இருக்கும் நிராதரவான மக்களைப் பின்தொடர்ந்து செல்கின்றன இவரது வார்த்தைகள். கவிதைகளில் பல இடங்களில் பாலஸ்தீனக் கவிஞர் மஹ்மூத் தர்வீஷ் ஞாபகப்படுத்தப்படுகின்றார், நோக்கம் சார்ந்து வெளிப்படையாகப் பேசும் தீபச்செல்வனின் இந்தக் கவிதைகள் வாசக மனத்துள் பெரும் துக்கத்தைக் கவியச் செய்யும் ஆற்றல் கொண்டன.

தீபச்செல்வனின் இரண்டாவது கவி தைத் தொகுதி, **ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்** என்ற தலைப்புடன் சென்னை உயிர்மை பதிப்பக வெளியீடாக டிசம்பர் 2009இல் வெளியிடப்பட்டது.

யுத்தத்தின் வடுக்களைப் பிரதிபலிக்கும் கவிதைகள் இவை. ஒரு இனத்தின் இருண்ட தொரு காலகட்டத்தை கவிதைகளினூ டாக வரலாற்றுப் பதிவாக்கியிருக்கிறார். யுத்த அழிவின் நேரடிச் சாட்சிகளாக நின்று அந்தப் பேரவலத்தின் வாக்குமூலங்களாக அமைகின்றன இவரது கவிதைகள். 2008ம் ஆண்டு செப்டெம்பர் முதல் 2009 மே வரையில் அன்றாட யுத்தக் கொடுமைக ளையும் மக்களின் அலைமோதல்களையும் உயிருக்கு அஞ்சி ஓடியதையும் அதற்குப்பின் வந்த நாட்களின் மனிதத் துயரங்களையும் ஏமாற்றங்களையும் ஒரு நாட்குறிப்புப் போலவே இக்கவிதைத் தொகுப்பில் பதிந்திருக்கின்றார்.

இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு **பாழ் நகரத்தின் பொழுது** என்ற கவிதைத் தொகுதி காலச்சுவடு பதிப்பக வெளியீடாக ஜூலை 2010இல் பிர-சுரமானது. பல பத்தாண்டுகளாக விடுத லைக் கனவைப் பேணிய ஓர் இனம் யுத்தத்தால் அழித்தொழிக்கப்பட்டபின்னர் எஞ்சியிருக்கும் மானுடர்களின் துய ரையும் இன்னும் பற்றிக்கொண்டிருக்கும் நம்பிக்கையையும் இந்தக்கவிதைகள் பேசு கின்றன. ஒரு நாள்வழிக் குறிப்பின் சாய லில் எழுதப்பட்டிருக்கும் இந்தக் கவிதைகள் நிகழ்கால அவலம் பற்றிய மனச்சான்றின் வடுக்களாகின்றன.

தீபச்செல்வன் போன்று மேலும் பல படைப்பாளிகள் போர்க்காலச் சூழலில் உருவாகித் தமது படைப்புக்களால் தமிழ் இலக்கியத்தின் போர்க்கால இலக்கியத்துக்கு

**கவித்துவம், சொற்கட்டு, செறிவு, படிமம் என்பவற்றுக்கப்பால் ஒரு கவிதை உண்மையை உரைக்க வேண்டும். உண்மைக்காய் துடிக்க வேண்டும். உண்மையைச் சார்ந்திருக்க வேண்டும். அவ்வகையில் இவ்விளம் கவிஞனின் கவிதைகள் காயத்திலிருந்து கொட்டும் குருதியாக, நெரிபடும் கழுத்திலிருந்து கிளம்பும் ஓலமாக, கொலைப்படுகளத்தைப் பார்க்க விதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் கண்ணீர்த் துளிகளாக அமைந்திருக்கின்றன. தீபச்செல்வன் ஒட்டுமொத்த ஈழத்தமிழரின் வலியை இக்கவிதைத் தொகுதியில் பிரசவிக்க முயன்றுள்ளார்.**

வளம்சேர்த்திருக்கிறார்கள். விரிவஞ்சி அனைவரது படைப்புக்களையும் இக் கட்டுரையில் உள்ளடக்க முயலவில்லை. மேலதிக வாசிப்பையும் ஆய்வையும் மேற்கொள்பவர்கள் நூல்தேட்டம் நூல்விபரப் பதிவேட்டின் எட்டுத் தொகுதிகளுள்ளும் அவற்றைப் பார்வையிட முடியும். பலரது படைப்புக்கள் நூலுருவில் வெளிவராதுள்ளதால், பரந்த வாசிப்புக்கும் அறிமுகத்துக்கும் அவர்களின் ஆளுமைகள் கொண்டுசெல்லப்படுவதில் தடங்கல் இருப்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்திய சில புனைகதை நூல்கள்**

சிறுகதை, நாவல் இலக்கியத்துறையில் போர்க்காலச் சம்பவங்களின் பதிவுகள் ஏராளமாக ஈழத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. எண்பதுகளின் பின்னர் ஈழத்துப்படைப்பாளிகளின் அத்தனை படைப்புகளும் ஏதோவொரு வகையில் போராட்டம் சார்ந்ததாகவும், அதன் அனுபவங்களின் வெளிப்பாடுகளாகவும் இருந்திருக்கின்றன. குறிப்பாக வன்னி மண்ணிலிருந்து வெளியாகிய படைப்பிலக்கியங்கள் அனைத்திலும் இதன் பாதிப்பு துலக்கமாகத் தெரிகின்றது. இவை பற்றிச் சில ஆய்வுகளும் அவ்வப்போது சில திறனாய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வழி** என்ற தலைப்பில் தமிழீழப் பெண்களின் சிறுகதைகள் கொண்ட தொகுப்பொன்றை ஆ.உலக மங்கை தொகுப்பாசிரியையாக இருந்து வெளியிட்டிருந்தார். விடுதலைப் புலிகளின் பெண் போராளியும் போர் இலக்கியவாதியுமான அமரர் திருமதி சந்திரா அற்புதலிங்கம் (12.7.1961- 29.11.2004) அவர்களின் நினைவாக அவரது வழி என்ற சிறு கதையைத் தலைப்புக் கதையாகக் கொண்டு, மேலும் ஒன்பது பெண் போராளிகளான வன்னிமகள் (கௌரவம்), சிவாஜினி சிவசங்கர் (மனிதத்துள்), கிருஷ்ணவேணி (பூ ஒன்று புயலானது), குமுதினி (பயணம்), அலை வரிசை (மௌனத்திரை விலக), ஆதித்த நிலா (எங்கே கண்ணைத்திறவுங்கோ), காந்தா (நெஞ்சுக்குள்ளே), மலைமகள் (புலிவாலைத் தேடி), அம்புலி (உள்ளே எரியும் தீ) உள்ளிட்ட தமிழீழப் போராளிப் பெண்களின் மெட்டி, எல்லைக்கோடு, வதையின் கதை ஆகியவை உள்ளிட்ட 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பெண்களின் இயல்பு நிலையை வெளிப்படுத்துவனவாகவும், போர்க்காலச் சூழலில் வாழ்ந்தவர்கள் புலம் சார்ந்த வாழ்க்கையின் அவலங்களையும் போராளிகளின் உணர்வுகளையும், விலைமதிப்பற்ற தியாகங்களையும் கருப்பொருளாக உள்வாங்கித் தம் படைப்புக்களை ஆக்கியுள்ளனர்.

**வாசல் ஒவ்வொன்றும்** என்ற பெயரில் கவிஞர் புதுவை இரத்தினதுரை, கரு- ணாகரனுடன் இணைந்து சிறுகதைத் தொகுதியொன்றினை வெளியிட்டிருந்தார். கோயம்புத்தூர் விடியல் பதிப்பகம், இந்நூலை டிசம்பர் 2001இல் வெளியிட்டிருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் இலக்கிய இதழான வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்த பத்தொன்பது படைப்பாளிகளின் 19 சிறு- கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் இது இரண்டாவது தொகுப்பாகவும் அமைகின்றது. இரு தசாப்தங்களைத் தாண்டிய நிலையில் நடந்துகொண்டிருந்த யுத்தசூழலின் அவலங்கள், அது மனித வாழ்விலும், மனிதவிழுமியங்களிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், நம்பிக்கை, தோல்வி, வெறுப்பு, கோபம் உள்ளிட்ட மனித உணர்வுகளின் ஆதிக்கம், அவற்றில் தொழிற்படும்

தன்மை என்பன பற்றிய இயல்பான வெளிப்பாடுகளாக அமைந்துள்ள கதைகள் அவை.

**வெளிச்சம் சிறுகதைகள்** என்ற பெயரில் வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினரால் தொகுக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பும் இங்கு நல்லதொரு உதாரணமாகின்றது. விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் இத்தொகுப்பினை மேற்கொண்டிருந்தது. மார்ச் 1996 இல் வெளியான இந்நூலில் வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்த தேர்ந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 15 சிறுகதைகள் உள்ளன. தாயக விடுதலைப் போரின் பல்வேறு பரிணாமங்கள், இலக்கிய வடிவில் பிரதிபலிக்கின்றன. சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் அரசியல் எழுச்சியையும், மன உணர்வுகளையும் போராட்டக் கால அனுபவங்களையும் இக்கதைகள் பேசுகின்றன.

**அதிர்ச்சி நோய் எமக்கல்ல** என்ற உருவகக் கதைத் தொகுதி நாக.பத்மநாதன் அவர்களால் யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடாக புரட்டாதி 1993இல் வெளிவந்திருந்தது. மண்பற்றும், இன விடுதலையும்-இதற்கான தியாகங்களும் அலை வீசி நிற்கும் 34 உருவகக் கதைகளின் தொகுப்பு இதுவாகும்.

**அம்மாளைக் கும்பிடுறானுகள்** சிறுகதைத் தொகுதி, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால உண்மைக் கதைகளைக் கொண்டது. தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவு ஒகஸ்ட் 1994இல் இந்நூலின் முதற் பதிப்பையும், ஆகஸ்ட் 1997இல் 2வது பதிப்பையும் மேற்கொண்டிருந்தது. இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்புக் காலகட்ட வாழ்க்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் சோகங்களையும் சித்திரிக்கும் படைப்புக்களாக 14 கதைகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத்தினைச் சித்திரிப்பதாக ஒரு கதையும் இத்தொகுதியில் அமைகின்றன. இத்தொகுப்பின் இரண்டாவது பாகமாக **வில்லுக்குளத்துப் பறவைகள்** என்ற தலைப்பில் மேலும் பல உண்மைக் கதைகளைக் கொண்ட மற்றொரு தொகுப்பும் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவினால், ஆடி 1995இல் வெளியிடப்பட்டது. இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் உண்மை நிகழ்வுகள் கதை வடிவில் தொகுக்கப்பட்ட இரண்டாம் பகுதியாக வில்லுக்குளத்துப் பறவைகள் அமைகின்றது. 17 உண்மைக் கதைகளைக் கொண்ட இத்தொகுதியிலும் இந்திய அமைதிப்படையின் வேட்டைக்குப் பலியான அப்பாவித் தமிழ் மக்களின் கதைகள், போராட்டத்தில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள், போராளிகளை நேசித்து அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் எனப் பலவாறாகப் பதிவுபெறுகின்றன.

ஈழத்தின் போர்க்கால இலக்கியத்தில் தாமரைச் செல்வியின் (ரதிதேவி கந்தசாமி) பங்களிப்பு குறிப்பிடத்தகுந்தது. **அழுவதற்கு நேரமில்லை** என்ற இவரது சிறுகதைத் தொகுதி, பரந்தன் சுப்ரம் பிரசுராலய வெளியீடாக டிசம்பர் 2002இல் வெளியானது. ஒரு சிறுகதை தவிர மற்றைய 11 கதைகளும் இடப்பெயர்வின் பின்வந்த நாட்களில் எழுதப்பட்டவை. 1995இல் ஏற்பட்ட வடபுலப்பெயர்ச்சி-வன்னிக்கான யாழ்ப்பாணப் புலப்பெயர்வு மிகப்பெரிய தாக்கத்தை ஈழத்தவரில் ஏற்படுத்தியது. இதனூடாகவும் இதனைத் தொடர்ந்தும் அகதிப் பிரச்சினை மோசமடைந்து மிக உக்கிரமான நிலை ஏற்பட்டிருந்தது. இந்தப் புதிய நிலைமையைச் சுட்டிக்காட்டும்வகையில் அனைத்துக் கதைகளும் அமைந்துள்ளன.

**பச்சை வயல் கனவு** தாமரைச்செல்வியின் பெயர் சொல்லும் ஒரு நாவலாகும். இது பரந்தன் சுப்ரம் பிரசுராலய வெளியீடாக ஆகஸ்ட் 2004இல் வெளிவந்தது. பச்சை வயல் கனவுகளுடன் கிளிநொச்சியில் வந்து குடியேறிய குடியேற்றவாசிகளின் கதை. கிளிநொச்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும், தமிழ் ஈழ விடுதலைப் பயணத்தில் கிளிநொச்சி மண்ணின் பாத்திரமும் இந்நாவலில் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. கிளிநொச்சி மக்களின் வாழ்க்கை முறைகள், எதிர்பார்ப்புகள், போராட்டங்கள், நம்பிக்கைகள், நலந்தீங்குகள், கலைகள், விழாக்கள் அனைத்தையும் ஆவணப் படுத்தும் சுவையான நாவல். கடந்த 30 வருடங்களாக சிறுகதைகள், நாவல்கள் எனக் கூடுதலாக எழுதியிருக்கும் தாமரைச்செல்வியின் எட்டாவது நூல் இது. இவரது சிறுகதைகள் பல பிற மொழிகளிலும் பயணித்திருக்கின்றன. சில தேர்ந்த கதைத்தொகுப்புகளிலும் அடையாளம்காணப் பட்டுள்ளன. தமிழ்ப் படைப்புலகிலும், ஈழத்துப் பெண் படைப்பாளிகளிலும் தாமரைச்செல்வி பெறும் இடம் முக்கியமானது.

**வீதியெல்லாம் தோரணங்கள்** என்ற நாவலும் தாமரைச்செல்வியின் மற்றொரு போரிலக்கியப் படைப்பாகும். கொழும்பு, மீரா பதிப்பகம் இந்நாவலை நவம்பர் 2003இல் வெளியிட்டது. மீரா வெளியீட்டகத்தின் 40ஆவது வெளியீடான இந்நாவல், இந்திய இராணுவம் இந்த மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்தைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்டது. ஏற்கெனவே நொந்து போய்க்கிடந்த மக்களின் வெந்தபுண் மீது IPKF என்ற பெயரில் இந்திய அமைதிகாக்கும் படை வந்து வேல் பாய்ச்சிய காலம் அது. ஈழமண்ணில் ஓரிடத்தில் ஏற்படும் போரின் அனர்த்தங்களின் விளைவுகளை அதன் வலிகளைச் சுமந்தவாறு இன்னோரிடத்தில் வாழ்கின்ற மனிதர்களை இந்நாவலில் சந்திக்க முடிகின்றது. 1989இல் யாழ் இலக்கிய வட்டம்- வீரகேசரியுடன் இணைந்து நடத்திய போட்டியில் 2ம் பரிசினைப் பெற்ற நாவல். 1.3.1992 முதல் 3.5.1992 வரை வீரகேசரி வார வெளியீட்டில் தொடராகவும் இது வெளிவந்திருந்தது.

**ஈழப் போராட்ட வரலாற்றை முழுமையாக ஒரு மகாநாவலில் உள்ளடக்கும் பாரிய முயற்சியை மேற்கொண்டவர் தேவகாந்தன் ஆவார். கனவுச்சிறை என்ற மகாநாவலை ஐந்து பாகங்களில் தந்தவர் இவர்.**

**ஈழத்துடன் இணைந்த சிறுதீவான நயினாதீவின் வடகரையிலிருந்து தொடங்கும் கதை. கட்சிப் பூசல்கள், கூட்டணி அமைப்பு, தமிழீழத்தின் தத்துவார்த்த உதயம், போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி என்பவற்றின் இலக்கியச் சாட்சியமாகின்றது கனவுச்சிறை.**

**இந்நாவல் யுத்தத்திற்கானதாகவோ அன்றி சமாதானத்துக்கானதாகவோ எழுதப்படாது சமகால அரசியல் நியாயமொன்றை விசுவாசமாகச் சொல்லியிருக்கின்றது.**

**1981–2001 வரையான 21 ஆண்டுகளில் 21 நூற்றாண்டுகளின் இலங்கைச் சரித்திரத்தை புல்லின் தலைப் பனித்துளியின் பிரபஞ்சப் பிரதிபலிப்பாக இந்நாவல் மீளுருவாக்கம் செய்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.**

**நீலமாகி வரும் கடல்** முல்லை யேசுதாசன் அவர்களின் சிறுகதைத் தொகுப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் வெளியீடாக வெளிவந்த இச்சிறுகதைத் தொகுப்பு ஒக்டோபர் 2003இல் முல்லைத்தீவு: அந்திவானம் பதிப்பகத்தால் அச்சிடப்பட்டுள்ளது.

கடலோர வாழ்வின் அழியாத ஞாபகங்களும் நிகழ்காலமுமாக முல்லை யேசுதாசனின் கதைகள் அமைகின்றன. பழகிய கடலும், கரையும் மனிதர்களும் இவரது கதைகளில் ஊடாடுகின்றனர். காயங்களோடும் குருதியோடும் போர் நாட்களின் கடலாகிப் போன நீர் மீதும் அலைமீதும் தத்தளித்த நிகழ்காலத்தையும் வாழ்வையும் தனது கதைகளில் சொல்கிறார். கடலோடியாகவும், கடலோடும் கலங்களைக் கட்டும் கலைஞனாகவும், அரங்கக் கலையில் ஈடுபாடு கொண்டு தாயகத்தில் பல குறும்படங்களின் உருவாக்கத்தில் உழைத்தவருமான யேசுதாசனின் யதார்த்தமான பாத்திரப் படைப்புக்கள் ஒவ்வொரு போரியல் சிறுகதைகளிலும் அவரது வாழ்வனுபவத்தின் வழியே பளிச்சிடுகின்றன.

**புதிய கதைகள்** என்ற தொகுதி மலைமகள் அவர்களால் எழுதப்பட்ட கதைகளைக் கொண்டது. கிளிநொச்சி, கப்டன் வானதி வெளியீட்டகம் ஏப்ரல் 2004இல் இந்நூலை வெளியிட்டது. இத்தொகுப்பிலுள்ள 15 கதைகளும் ஈழப் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பெண் போராளிகளின் களநிலை அனுபவங்களின் பிழிவாக அமைகின்றன. ஈழப் பெண்கள் பற்றிய புதிய பார்வையை இவை தருகின்றன. இந்த மண்ணின் பெண்கள் யார், இவர்கள் எத்தகையவர்கள், என்ன செய்கிறார்கள் என்பதையும், விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகளின் பங்கு, அவர்களது மனோதிடம், அர்ப்பணிப்பு, களமுனை வாழ்க்கை என்பனவற்றையும் கருப்பொருளாகக் கொண்டு அமையும் இக்கதைகள் ஈழ விடுதலைப் போராட்டத்தின் மிக நெருக்கமானதொரு காட்சிப் படிமத்தை வாசகரின் மனக்கண்முன் நிறுத்துகின்றன. இது கப்டன் வானதி வெளியீட்டுத் தொடரின் ஐந்தாவது வெளியீடாகும்.

தீபா குமரேஷ் எழுதிய 'புரிதல்' என்ற சிறுகதைத் தொகுதி முல்லைத்தீவு ஆரண்யம் வெளியீட்டகத்தால் மார்ச் 2003இல் வெளியாகியது. தாயகமண்ணில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களைக் கருவாக்கித் தரும் முயற்சியில் விளைந்த ஆசிரியரின் கன்னிப் படைப்பு இதுவாகும். போராட்ட மண்ணின் பகைப்புலத்தில் நின்று எழுதப்பட்ட 13 சிறுகதைகள் இந்நூலில் காணப்படுகின்றன.

ஈழத்தின் ஜனரஞ்சக நாவலாசிரியரான செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). அவர்களும் மண்வாசனை கலந்த போர்க்கால இலக்கியங்கள் பலவற்றை படைத்துள்ளார். 'யாழ்ப் பாணத்து இராத்திரிகள்' யாழ்ப்பாணம், யாழ். இலக்கிய வட்ட வெளியீடாக ஒக்டோபர் 1993இல் வெளியானது. இருபத்திமூன்று சிறுகதைகள் கொண்ட இத்தொகுப்பில் ஆசிரியர் தான் வாழும் யாழ்ப்பாணத்துச் சூழலை, மக்களின் மன ஓட்டங்களை, அவர்களது ஆசாபாசங்களைத் துல்லியமாகக் கொண்டுவந்துள்ளார்.

**அக்கினிக் குஞ்சு** என்ற இவரது குறுநாவல் ஜனவரி 1983இல் யாழ்ப் பாணம் விவேகானந்தா அச்சகத்தில் அச்சிடப்பெற்று யாழ். இலக்கியவட்டத்தின் 29வது வெளியீடாக வெளிவந்தது. தினகரன் நடத்திய குறுநாவல் போட்டி யில் 1978 இல் பரிசில் பெற்றது. தமிழ்மக்கள் மீதான இனவெறிக் கொடுமையும், தமிழர்களிடையே புரையோடிப்போன சாதிப் பாகுபாட்டுக் கொடுமைகளும் ஒப்பீட்டுரீதியில் பிணையப்பெற்ற குறுநாவல் இது. 1976களில் யாழ்ப்பாணத்தில் தீவிரவாத இளைஞர்களைத் தேடி இராணுவமும் பொலிசாரும் வலைவீசித் திரிந்த ஒரு காலகட்டத்தினைச் சித்திரிக்கும் கதையம்சம் கொண்டது.

**இரவுநேரப் பயணிகள்** செங்கை ஆழியானின் மற்றொரு சிறுகதைத் தொகுப்பு. இதுவும்

யாழ்ப்பாணம் கமலம் பதிப்பகத்தின் ஜனவரி 1995இல் வெளிவந்தது. செங்கை ஆழியானின் மூன்றாவது சிறுகதைத்தொகுதி இதுவாகும். போராட்டச் சூழலில் தமிழ்மக்கள் படுகின்ற அவலங்களையும் அந்த அவலங்களைச் சந்திப்பதால் வன்மம் பெறுகின்ற உள்ளங்களையும் சித்திரிக்கும் கதைகள். டொமினிக் ஜீவா வின் முன்னுரையுடன் கூடிய இந்நூலில் உள்ள சிறுகதைகள் மல்லிகை, வீரகேசரி, வெளிச்சம், ஈழநாதம், ஈழநாடு (பாரிஸ்) ஆகியவற்றில் பிரசுரமானவை. இந்நூல் 'ராத்திரிய நொனசாய்' என்ற தலைப்பில் சிங்களத்திலும் சிறுகதைத் தொகுப்பாகக் பின்னர் வெளியிடப்பட்டது.

**'கொழும்பு லொட்ஜ்'** என்ற நாவல் செங்கை ஆழியானால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் யாழ். இலக்கிய வட்ட வெளி யீடாக டிசம்பர் 1998இல் வெளிவந்தது. இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை சந்தி ரிகா அரசு ஏற்றுக்கொண்ட ஆரம்பகால வேளையில் எழுதப்பட்டதும், சமகால வாழ்வியல் இடர்ப்பாடுகளின் ஓர் அம்சத்தைச் சித்திரிப்பதற்காக எழுதப்பட்டதுமான ஒரு நாவல் இது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் பெருநிலப் பரப்புக்கும் இடையிலான ஆனையிறவுப்பாதை அடைக்கப்பட்ட நிலையில் கிளாலிக்கடலேரியூடாக யாழ்ப்பாண மக்கள் இரவுநேரங்களில் பயணம் செய்து, பல இடர்ப்பாடுகளினூ டாகக் கொழும்பு வந்து, அங்குள்ள விடுதிகளில் பல்வேறு கனவுகளோ-டும் ஏக்கங்களோடும் தங்கி வாழ்ந்த துயரங்களை இந்நாவல் சித்திரிக்கின்றது. இன்றைய அவலச் சூழ்நிலையில் நமது மக்களின் பாரம்பரியமான பண் பாட்டு இறுக்கங்களையும் மரபுக் கட் டுப்பாடுகளையும் உதறிவிடும் மீறல்களை இந்த நாவல் விபரிக்கின்றது. தினக்குரல் ஞாயிறு மலரில் 1997இல் தொடராக வெளிவந்தது. வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப்பரிசில் பெற்ற நூல்.

**போரே நீ போ** செங்கை ஆழியா-னின் நாவலாகும். கொழும்பு பூபால சிங்கம் பதிப்பகம் இதை ஜூன் 2002இல் வெளியிட்டது. தாயகத்தின் சமகாலப் பிரச்சினையைக் கூறும் நாவல் இது. 1995இல் நிகழ்ந்த பாரிய இடப்பெயர்வின்போது, இடம்பெயர்ந்த மக்களையும், இடம் பெயராத மக்களையும் இணைத்த நூலாக இது அமைகின்றது. மானிடவாழ்வின் பெறுமதி வாய்ந்த உயிர்களையும் இளமைக் கனவுகளையும் போர் எவ்வளவுதூரம் நாசப்படுத்தி வருகின்றதென்ற அவலநி லைகளை போரே நீ போ சித்திரிக்கின்றது. யாழ்ப்பாணம், உதயன் பத்திரிகையில் தொடராக இந்நாவல் வெளிவந்தது.

**மெல்ல இருள் இனி விலகும்** என்ற நூலும் செங்கை ஆழியானின் கைவண்ணத்தில் உருவாகிக் கமலம் பதிப்பகத்தின் வழியே ஒகஸ்ட் 2009 இல் வெளிவந்த நாவலாகும். இலங்கையின் பெருநிலத்தையும் யாழ்ப்பாணக் குடா நாட்டையும் இணைக்கின்ற ஆனையிற வுப் பாதை மக்களின் போக்குவரத்திற்கு அடைபட்டுப்போனதன்பின்னர் இடர் நிறைந்த வழிகள் மக்களைத் தெற்கேயும் வடக்கேயும் இடம்மாற்றி வந்துள்ளது. முதலில் கேரதீவு-சங்குப்பிட்டிப் படகுப் பாதை. அதன்பின்னர் இயக்கச்சி-ஊரியான் அல்லது இயக்கச்சி-கொம்படி களப்புப் பாதை. அதன் பின்னர் கிளாலி-பூநகரிக் குடாக்கடல் பாதை என்பவற்றினூடாக மக்கள் இரவு நேரங்களில் சஞ்சரித்தனர். அவ்வேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுகர்வுப் பொருட்கள் இல்லை. எரிபொருட்கள் அரிது. மின்சாரம், தொலைபேசி வசதிகள் எதுவுமேயில்லை. வானத்தில் ஹெலிகளும் பொம்பர்களும் அட்டகாசம் செய்தன. இவற்றிடையே அவசியம் நேர்ந்தவர்கள் அப்பாதைகளில் பயணப்பட்டனர். அவ்வாறான கால கட்டத்தைப் பின்னணியாகக் கொண்ட

நாவல் இதுவாகும். இரண்டு களங்களில் நிகழும் இந்நாவலினூடாக யாழ்ப்பாணத்து மக்களின் மனவுணர்வுக் கோலங்களைப் பாவத்தோடும் பலவீனத்தோடும் சித்திரித்துள்ளார்.

ஈழப் போராட்ட வரலாற்றை முழுமையாக ஒரு மகாநாவலில் உள்ளடக்கும் பாரிய முயற்சியை மேற்கொண்டவர் தேவகாந்தன் ஆவார். **கனவுச்சிறை** என்ற மகா நாவலை ஐந்து பாகங்களில் தந்தவர் இவர். இத்தொகுதியை சென்னை இலக்கு நூல்கள் வெளியீடாக ஜூன் 1998 முதல் தேவகாந்தன் வெளியிட்டார்.

ஐந்து தொகுதிகளாக விரியும் கனவுச்சிறை மகாநாவலின் **திருப்படையாட்சி** என்றமுதற்பாகம்1981-1983காலகட்டத்தை களமாகக் கொண்டது. 1981இல் அக்கினிப் பொறி போன்ற மையச் சம்பவமொன்றின் உந்திப்புடன் ஆரம்பிக்கும் நாவலில் 1983 கறுப்பு ஜூலை, தேசம் தாண்டுதல், அகதிமுகாம் அவலங்கள், மேற்குலகின் அடையாளச் சிக்கல்கள், சமூக நிலை மாற்றங்களும் தேசமளாவிய கருத்துருவின் புத்தாக்கமும் என்று வியாபிக்கும் சரித்திர வெளியில் இன்னொரு சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது. ஈழத்துடன் இணைந்த சிறு தீவான நயினாதீவின் வடகரையிலிருந்து தொடங்கும் கதை, கட்சிப் பூசல்கள், கூட்டணி அமைப்பு, தமிழீழத்தின் தத்துவார்த்த உதயம், போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி என்பவற்றின் இலக்கியச் சாட்சியமாகின்றது கனவுச் சிறை. இந்நாவல் நகரும் காலத்தைப் பிரதானப்படுத்தி ஐந்து பாகங்களில் எழுதி முடிக்கப்பட்டதாகும். 1981 தொடக்கம் 2001 வரையிலான காலப்பகுதிக்குரிய 21 ஆண்டுக்கால இலங்கையின் வாழ் நிலைக்களத்தில் நின்று ஐந்து பாகங்களிலும் கதை நகர்த்தப்படுகின்றது. 1981-1983 காலப்பகுதியைக் கூறும் திருப்படையாட்சி, 1985-1987 காலப்பகுதியைக் கூறும் வினாக்காலம், 1989,1991,1993 காலப்பகுதிகளைக் கூறும் அக்னி திரவம், 1995-1999 வரையிலான காலப்பகுதியை கதைக்களமாகக் கொண்ட உதிர்வின் ஓசை, 1999-2001 வரையான கதைக்களனைக் கொண்ட **ஒரு புதிய காலம்** என்றவாறாக இந்நாவல் யுத்தத்திற்கானதாகவோ அன்றி சமாதானத்துக்கானதாகவோ எழுதப் படாது சமகால அரசியல் நியாயமொன்றை விசுவாசமாகச் சொல்லியிருக்கின்றது. 1981-2001 வரையான 21 ஆண்டுகளில் 21 நூற்றாண்டுகளின் இலங்கைச் சரித்திரத்தைப் புல்லின் தலைப் பனித்துளியின் பிரபஞ்சப் பிரதிபலிப்பாக இந்நாவல் மீளுருவாக்கம் செய்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

தேவகாந்தனின் **யுத்தத்தின் முதலாம் அதிகாரம்** என்ற நாவல், கொழும்பு பூபாலசிங்கம் பதிப்பகத்தினால் 2003 இல் வெளியிடப்பட்டது. சமூகம் வளருமென்பது அதன் முரண்விளைவுகளை உள்ளடக்கியதுமாகும். குடியேற்றத் திட்டங்கள் நல்ல பலன்களைத் தந்தன. ஆனால் பெருகிய குடியேற்றங்களால் நிலம், நீர்ப்பங்கீடு சார்ந்த குரோதங்கள் எழுந்தன. இனரீதியாய் இப்பிரச்சினை வடிவெடுத்தது தான் இலங்கை வரலாற்றில் நிகழ்ந்த சோகம். இந்தப் பகைப்புலத்தில் தான் முதல் துவக்கு வெடிச்சத்தம் இங்கே அதிர்ந்தெழுகிறது. அந்த வருடம் 1975. சுமார் இரண்டு நூற்றாண்டுகாலச் சமூக வரலாற்றுப் புலத்தில் இந்நாவல் விரிகிறது.

**இனி வானம் வெளிச்சிடும்** என்ற நாவல் தமிழ்க்கவி என்ற வன்னி எழுத்தாளரால் படைக்கப்பட்டது. கிளிநொச்சி அறிவமுது பதிப்பகம் செப்டெம்பர் 2002இல் இந்நாவலை வெளியிட்டிருந்தது. இந்நாவல் பற்றி படைப்பாளியின் சுயவிமர்சனம் இது: "இது எனது முதலாவது கதை. இது என்னுடன் இருந்து என்னைத் தாக்கி என்

உணர்வுகளைக் கிழித்துத் தைத்த ஒரு விவகாரம். என் அனுபவங்களைக் கலந்து இக்கதையை எழுதினேனா? இக்கதையில் எனது அனுபவங்களைக் கலந்தேனா என்பதும் புதிரல்ல. இனவாத அரசின் செயற்பாடுகளால் எழும் வன்முறைகள், அடிமனதின் ஆழத்தில் புதையுண்டு போய், அதுவே சந்ததி வழியாகக் காவிச் செல்லப்பட்டு இயலுமை உண்டான போது வெளிப்போந்து வீரியம் பெறுகின்றது. என் மகனும் இவ்வெளிப்பாட்டின் ஒரு குறியீடே. இவன் போராடப் போனபோது நான் எனக்குள் வருந்தியதுண்டு. எனக்குச் சொல்லாமல் போய்விட்டான் என்பதற்காக. ஒவ்வொரு போராளியின் பின்னணியிலும் ஒரு சரித்திரம் உண்டு. அந்தப் பிஞ்சு உள்ளத்தின் ஆதங்கத்தை மதித்தேன். ஒரு நாள் அவனைத் துப்பாக்கி ஏந்தியவனாய் சீருடையில் பார்க்கத் துடித்தேன். ஆகாயக் கடல் வெளிச் சமரில் அவன் ஆகுதியான செய்திதான் கிடைத்தது. இது எனது மகனின் கதை"

ஈழத்தின் போர்க்கால இலக்கியங்கள் பற்றிய தேடலை மேற்கொள்ளும் எவரும் ச. முருகானந்தனின் படைப்புகளைக் குறிப்பிடாதிருக்க முடியாது. 'அது ஓர் அழகிய நிலாக்காலம்', 'அவர்கள் துணிந்துவிட்டார்கள்', 'இது எங்கள் தேசம்', 'இனி வானம் வசப்படும்', 'தரை மீன்கள்', 'துளிர்த்தெழும் புதுச்செடிகள்', 'நாம் பிறந்த மண்', 'நெருப்பாறு', 'நீ நடந்த பாதையில்', 'மீன் குஞ்சுகள்' எனப் பல படைப்புகளை வெளியிட்டவர். கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றின் மாணவரான ச. முருகானந்தன், வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். போரின் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த வன்னி மண்ணில் மருத்துவராகவும் படைப்பாளியாகவும் இரு துறைகளில் தன் ஆளுமையை வெளிக்காட்டியிருப்பவர். மானுடநேயத்துடன் தான் சார்ந்த சமூகத்தைப் பீடித்திருக்கும் பிணிகளுக்கு வைத்தியம் செய்வது மட்டுமல்லாமல் அச்சமூக வளர்ச்சியின் ஊட்டச் சக்தியாகத் திகழும் கருத்துக்களையும் வழங்கும் ஒரு வலிமைமிக்க பேனா இவருடையது.

## வலிகாமம் புலப்பெயர்வு தந்த இலக்கியங்கள்

ஈழத்தின் வடபகுதியில் தளம் கொண்டுள்ள பலாலி இராணுவ முகாமிலிருந்து பெருமெடுப்பில் **வலிகாமம்** பிரதேசத்தை நோக்கிய படைநகர்வொன்றை நடத்தத் திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு முகம்கொடுக்க இயலாமல் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் பகுதியிலிருந்து மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுவாசல்களையும் தேடிய தேட்டங்களையும்கைவிட்டுப்பயத்தோடும் பரிதவிப்போடும் குடாநாட்டைவிட்டு, பாரிய இடப்பெயர்வொன்றை மேற்கொண்டார்கள். உலகின் எந்தவொரு இனத்திற்கும் வரலாற்றில் ஏற்பட்டிராததும் பாரிய எடுப்பில் இடம்பெற்றதுமான இந்த அவல நிகழ்வில் ஏறத்தாள ஐந்து இலட்சத்து இருபத்து ஐயாயிரம் மக்கள் கையில் எடுக்கக்கூடிய பொருட்களுடன் குடும்பம் குடும்பமாக ஒரே நாளில் புறப்பட்டு சேரிடம் அறியாது மூன்று நாட்களாக உண்ண உணவின்றி மரநிழல்களில் தங்கிக் கூட ஓய்வெடுக்கும் வாய்ப்பின்றி ஒருவழிப்பயணத்தை மேற்கொண்ட அந்தக் கையறுநிலை ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் தனிப்பட்ட சொத்துக்கள் மாத்திரமன்றி ஏராளமான கல்வியியல் நிறுவனங்களும் கூட இந்தப் புலப்பெயர்வால் கைவிடப்பட்டு பாரிய பாதிப்புக்குள்ளாயின. படைப்பாளிகள்

> ***“...இனவாத அரசின் செயற்பாடுகளால் எழும் வன்முறைகள், அடிமனதின் ஆழத்தில் புதையுண்டுபோய், அதுவே சந்ததி வழியாகக் காவிச் செல்லப்பட்டு இயலுமை உண்டான போது வெளிப்போந்து வீரியம் பெறுகின்றது. என் மகனும் இவ்வெளிப்பாட்டின் ஒரு குறியீடே. இவன் போராடப் போன போது நான் எனக்குள் வருந்தியதுண்டு. எனக்குச் சொல்லாமல் போய்விட்டான் என்பதற்காக. ஒவ்வொரு போராளியின் பின்னணியிலும் ஒரு சரித்திரம் உண்டு...”***
>
> **– தமிழ்க்கவி**
>
> **– இனி வானம் வெளிச்சிடும் நாவலின் சுயவிமர்சனத்தில்**

பலர் தமது படைப்புக்களையும் சேக ரித்துக் காத்து வைத்த நூல்களையும் இக் காலகட்டத்தில் பெருமளவில் இழந்தார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆயிரம் ஆவணங்கள் இவ்விடப்பெயர்வின் பயனாகக் கவனிப்பாரற்று கறையான்களின் பசிக்கு உணவாகி அழிந்தொழிந்து விட்ட செய்தி மனதை வருத்துவதாகவுள்ளது. கிராமம் தோறும் கட்டிக்காத்த சனசமூக நிலையங்களில், பொது நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்ட நூல்களின் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த வரலாற்று அவல நிகழ்வையும் அதற்கு முன்னரும் பின்னருமான தமிழரின் வேறும் பல முடிவில்லாத இடப்பெயர்வுகளையும் ஈழத்து இலக்கியங்களாக நம்மவர்கள் பதிவு செய்து வைத்துள்ளார்கள். போரின் விளைவாக ஏற்பட்ட இந்த உள்ளக இடப்பெயர்வுகளினைச் சித்தி ரிக்கும் ஈழத்து இலக்கியங்கள் பல சமகாலத்தில் வெளிவந்திருந்தன. இதுபற்றி விரிவான கட்டுரையொன்று முன்னர் எழுதப்பட்டுள்ளது. (பார்க்க: ஈழத்தின் வடபுலப்பெயர்வும் அது தொடர்பான இலக்கியங்களும் - என். செல்வராஜா. **வேரோடி விழுதெறிந்து**- ஞானம் வெளியீடு)

கார்த்திகேசு குகபாலன், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, வரதர், தாமரைச்செல்வி, செங்கை ஆழியான் போன்றோர் தமது படைப்பிலக்கியங்களுக்கூடாக வட மாகாணத்தில் 1995இல் இடம்பெற்ற வலிகாமம் இடப்பெயர்வினைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

வலிகாமம் இடப்பெயர்வினைப் பின்னணியாகக்கொண்டு **முடிவில்லாத ஆரம்பங்கள்** என்ற நாவல் சு.சிவராசா என்ற படைப்பாளியினால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம், ம.சந்திரபோஸ் என் பவரால் வெளியிட்டுள்ளது. வட மாகாணத்தில் 1995 இல் இடம்பெற்ற வலி-காமம் இடப்பெயர்வினை பின்னணியாகக் கொண்டு இந்நாவல் விரிகின்றது. வலிகாமம் இடப்பெயர்வின் சோகங்கள், அனுபவங்கள் அனைத்தையும் முடிந்தவரையில் ஒன்று திரட்டி இந்நாவல் வழியாகப் பதிவு செய்திருக்கிறார். இராமநாதன் - யசோதா-ரமா குடும்பம் 1995 இல் வலிகாமம் இடப்பெயர்வின்போது தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிக ளிலே பல இன்னல்களுக்கிடையே வாழ்ந்து வருகிறார்கள். கிளாலிக்கூடாகச் சென்ற வள்ளங்களை கடற்படை மூழ்கடித்ததில் ரமா பெற்றோரை இழந்து அநாதையாகிறாள்.

ஒப்பிரேஷன் லிபரேஷன் இராணுவ முன்னெடுப்பில் தன் சொத்துக்களை இழந்த மகாலிங்கத்தார், மற்றும் கந்தசாமி, சாந்தி என்று பல பாத்திரங்கள் இந்நாவலில் இடப்பெயர்வின் அவலங்களின் சான்றாக வலம்வருகின்றனர்.

**அந்த இருள்படிந்த நாட்கள்: யாழ்ப்பாணப் போர்க்கால நாளேடு** என்ற நூல் எட்வின் சவுந்தரநாயகம் அவர்களால், அவுஸ்திரேலியாவிலிருந்து 1997இல் வெளியிடப்பட்டது.

இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாற்றில் 1995ம் ஆண்டு இடம்பெற்ற பலத்த இராணுவ ஆக்கிரமிப்பும், வலிகாமப் புலப்பெயர்வும் வரலாற்று நிகழ்வாகப் பதிந்துவிட்டன. இந்த நிகழ்வுகளை அனுபவித்த ஒருவரின் நாளேட்டுக் குறிப்பு இது. ஐப்பசி 30 வியாழக்கிழமை முதல் தை 30 செவ்வாய்க்கிழமை வரை நடந்த அந்த நிகழ்ச்சிகள் இந்நாளேட்டில் பதிவாகியுள்ளன. கலாநிதி எட்வின் சவுந்தரநாயகம் கடந்த 50 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களில் மறைப்பணியில் ஈடுபட்டு வந்துள்ளார். மெய்யியல் ஆசிரியப் பணியிலும் இவர் ஈடுபட்டவர்.

**புகலிட மண்ணில் தொடர்ந்த சில போர்க்காலப் படைப்பிலக்கியங்கள்**

போரியல் இலக்கியத்திற்கு புதுவடிவம் கொடுத்த ஈழத்து இளந்தலைமுறைப் படைப்பாளிகள் வரிசையில் ஷோபா சக்தி குறிப்பிடத் தகுந்தவராகின்றார். **தேசத் துரோகி** என்ற ஷோபாசக்தியின் (இயற்பெயர்: அந்தோனிதாசன்) சிறுகதைத் தொகுப்பு அடையாளம் வெளியீடாகத் தமிழகத்திலிருந்து மே 2003இல் வெளிவந்துள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் ஷோபாசக்தி. நிகழ்கால ஈழத்து அரசியலைப் புனைவாக்கிய **கொரில்லா** இவரது முதல் நாவல். **தேசத்துரோகி** இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு. புகலிட நாடுகளில் வெளியான எக்சில், அம்மா ஆகிய சஞ்சிகைகளிலும் இருள்வெளி, இனியும் சூல்கொள், கறுப்பு ஆகிய தொகுப்பு நூல்களிலும் வெளியான இவரது சிறுகதைகளையும், சூக்குமம், குரு வணக்கம் ஆகிய இரு பிரசுரமாகாத கதைகளையும் கொண்டதாக மொத்தம் 14 கதைகளுடன் **தேசத்துரோகி** என்ற நூல் வெளியாகியுள்ளது.

**கொரில்லா** என்ற நாவல் ஷோபா சக்தியின் அற்புதமான படைப்பாகும். தமிழகத்தில் அடையாளம் பதிப்பக வெளியீடாக நவம்பர் 2001இல் வெளிவந்த நாவல் இது. பிரான்சில் வாழும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களில் தொடர்ச்சியாக இலக்கியம் படைத்து, எழுத்தைத் தன் பிரத்தியேக ஊடகமாகக் கொண்டு செயற்படும் ஷோபாசக்தி, பல நல்ல சிறுகதைகளையும், ஓரிரு நாடகங்களையும், தமிழ்மொழிக்குத் தந்தவர். அவரது முதல் நவீனம் இதுவாகும். இலங்கைப் போர்ச் சூழலினால் ஏற்படும் சம்பவங்கள், இடப்பெயர்வுகள், புலம்பெயர்ந்த தேசங்களில் ஏற்படும் அவலங்கள் ஆகியன இந்நவீனத்தின் அத்திவாரமாக அமைகின்றன. விடுதலைப் போராட்ட அமைப்புகளின் உள்ளகப் பார்வையில் விரியும் சம்பவக் கோர்ப்புக்கள் வாசகரை போர்க்கால யாழ்ப்பாணத்தின் தீவக மண்ணுக்கே அழைத்துச் செல்லும் வல்லமை மிக்கதாக அமைந்துள்ளன.

**"ம்"** என்ற ஒற்றைப் பெயரிலான ஷோபா சக்தியின் மற்றொரு நாவல் சென்னை கருப்புப் பிரதிகள், வெளியீடாக அக்டோபர் 2004இல் வெளிவந்துள்ளது. "கொரில்லா"வை அடுத்து ஷோபா சக்தியின் இரண்டாவது நாவல் இது. பேரினவாதக் கொடுமைகள், இயக்க நடவடிக்கைகள், ஆகியவற்றினூடாக அகதியாக ஐரோப்பாவில் வாழும் ஒருவனின்

வரலாறு இது. ஆழம் காட்டமுடியாத மனித சுயத்தின் வேறுசில பரிமாணங்களை அடையாளம் காட்டும் முயற்சியாக இது அமைகின்றது. வெலிக்கடை சிறைப் படு-கொலை, மட்டக்களப்புச் சிறை உடைப்பு, இயக்கப் படுகொலைகள் என்கின்ற வரலாற்றுப்பின்னணியில்மனிதஇருப்பைப் புரிந்துகொள்ள முயலும் சிக்கலான பணியை வேகம் குன்றாமல் செய்கின்றது இந்நாவல்.

இலங்கைக்கு அப்பாலிருந்து போர்க்காலத் தரிசனத்தோடு வெளி வந்த புனைகதைகளும் இங்கு பதிவு செய் யப்படவேண்டியவை. அவ்வகையில் தமிழ கத்தில் வடபழனியில் வாழும் குமரன் பதிப்பக அதிபரும், பிரபல எழுத்தாளரு மான செ.கணேசலிங்கனின் நூல்கள் சிலவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

**வதையின் கதை** செ.கணேசலிங்கனின் பெயர்பொறித்த போர்க்காலக் கதை களுள் முக்கியமானது. மே 1982இல் வெளியிடப்பட்ட நாவல் இது. ஈழத் தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக் கூடங்களில் வதைக்கப்பட்டுவந்த ஆரம்ப காலங்களில் இந்நாவல் எழுதப்பட்டது. மனிதவதை இருவகைப்படும். ஒன்று உடல்வதை. மற்றொன்று மன (Mental) வதை. முதலாளித்துவத்தின் மனித உறவுகளுக்கிடையே பண்டம் என்ற மூன்றாவது பொருள் தோன் றியது. பண்டப் பெருக்கம் சமூக வாழ்க்கையையும் சிக்கலாக்கியது. பண்ட வளர்ச்சியோடு மூன்றாவது அமைப்பாகிய அரசும் வலுவடைந்தது. இது வர்க்கப்போராட்டத்தை அடக்கி யொடுக்கத் தோன்றிய பலாத்கார அமைப் பாகும். பண்ட உற்பத்திப் பெருக்கத்தோடு அண்மைக்காலத்தில் தோன்றி வளர்ச்சி பெற்ற அமைப்புகளே பொலிசும் இராணுவ முமாகும் என்று விளக்கும் செ.க., இவை அரசின் பாதுகாப்புக்காகத் தன்னை வடிவமைத்துக்கொண்டனவென்றும், முதலாளி வர்க்கம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய சட்டங்களை அமைத்துத் தமது சமூக அமைப்பை எதிர்ப்போரை வதைக்கும் பொறுப்பை பொலிஸ் இராணுவத்திடம் ஒப்படைத்தது என்றும் தனது சிந்தனைக்கூற்றை இந்நாவலில்வலியுறுத்துகின்றார். அதற்காக வேண்டிய நீதிமன்றம், சிறைச்சாலை களையும் ஆக்கிக்கொடுத்தது. வதை என்பது பொலிஸ் ராணுவத்தின் கடமை போல வழக்கிலுள்ளது. முதலாளித்துவ சமூகத்திற்கு எதிரான உண்மைகளைப் பெற வும், புரட்சிகர இயக்கங்களை அழிக்கவுமே வதை பெரிதும் பயன்படுகின்றது. வதை யின் கோர உருவங்களின் முழுமையல்ல இந்நாவல். அவற்றின் கோரப் பற்களை ஆங்காங்கே தொட்டுக்காட்டியுள்ளார் ஆசி ரியர். இலங்கையின் பத்து ஆண்டு சமகால வரலாறு இந்நாவலில் அடங்கியுள்ளது.

**தாயின் குரல்** என்ற நூலும் சமகால சமூகப்பிரச்சினையொன்றைச் சுற்றியே பின்னப்பட்டது. மாலை நேரம் கடைக்குச் சென்ற சுந்தரத்தைக் காணவில்லை. தாயார் தங்கம்மா, அக்கா மல்லிகா உட்பட வீட்டில் யாவரும் பதட்டம் அடைகின்றனர். பொ லிஸ் நிலையம், இராணுவ முகாம் சென்று முறையிடுகின்றனர். பல்கலைக்கழகத்தில் கற்கும் மூத்த மகன் மகாலிங்கம் தாயாரை மனித உரிமைக் கழகத்திற்கு அழைத்துச் சென்று முறையிடுகின்றான். காணா-மல் போனவர் பட்டியலில் 356ஆவது நபராக சுந்தரம் பதியப்படுகின்றான். இத்தேடுதல் வேட்டை மருத்துவமனைகள், சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், சவக்கிடங்குகள் வரை விரிகின்றது. சட்டங்கள் ஒழுங்குகள் நீதிகள் மனித உரிமைகள் ஒழிந்துவிட்டனவா என்ற வினாவுக்கு மருத்துவனைச் சவக்கிடங்குக் காவலன் கதிரவன் "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்ற

பாரதி பாடலைக் கூறுகின்றான். நீண்ட கால உலக யுத்தங்களின் தொடர்ச்சியில் மனித நாகரிகத்தின் நிலையும் இந்நாவலின் அடிப்படையாக அமைகின்றது.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் கலாநிதி ஜீவகுமாரன் **இப்படிக்கு அன்புள்ள அம்மா** என்ற தலைப்பில் டெனிஷ் மொழியில் ஒரு நூலை எழுதியிருந்தார். அவரது கணவரும், எழுத்தாளருமான வி.ஜீவகுமாரன் அந்நூலைத் தமிழாக்கம் செய்து, விஷ்வசேது இலக்கியப் பாலம் என்ற தனது வெளியீட்டகத்தின் வாயிலாக டிசம்பர் 2010இல் வெளியிட்டிருந்தார். கண்களில் நீரை வரவழைக்கும் வலிமிகுந்த காவியக் கவிதைப் படைப்பு. ஈழத்திலிருந்து டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்த ஒரு 90 வயது மூதாட்டி யசோ அம்மாவின் பார்வையில், நிகழ்காலத்திற்கும் இறந்த காலத்திற்குமிடையே நடக்கும் ஒரு போராட்டமே கதை. ஈழத்தில் இன விடுதலைப்போரில் இறந்த தனது மகன் ஹரியின் மறைவை ஏற்றுக்கொள்ளாத இந்தத் தாய், தனது இறுதிக்காலத்தில் மகன் உயிருடன் இருப்பதாக நினைத்து எழுதும் பத்துக் கடிதங்களின் உணர்ச்சித் தொகுப்பே இக்காவியமாகும். அழகு தமிழில் ஆங் காங்கே ஈழத் தமிழழகு இழையோட தாயின் வலியோடு, இலங்கையின் தமி ழினம் மீதான தாக்குதலில் உண்டான வலி யையும் புலம்பெயர்ந்தபின் தாய் மண்ணின் நினைவுதரும் வலியையும் சேர்த்துக் குழைத்து நமது உயிருக்குள் வலியை ஏற்படுத்தும் உன்னத காவியமாக கலாநிதி ஜீவகுமாரன் இதனை வடித்திருந்தார். ஒரு அன்னையர் தினத்தில் தொடங்கிய இக்கதை அடுத்த ஆண்டின் அன்னையர் தினத்தில் முடிவதாய் அமைந்துள்ளது. கதையா, கவிதையா, காவியமா என்று வரையறைக்குட்படுத்த முடியாத குழப்பகரமான நிலைக்கு எம்மைத்தள்ளும் புதியதொரு இலக்கிய முயற்சி இது.

தமிழ்நதி என்ற படைப்பாளி பற்றிய பதிவொன்றும் இங்கு பொருத்தமானதாக அமையும். திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்நதி, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரி. ஈழத்துப் போரினால் 1992இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். கனடா வில் வாழ்ந்த காலத்தில் கலைவாணி இராஜகுமாரன் என்ற பெயரில் சிறு-கதை, கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல்வேறு ஆக்க இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தித் தனது படைப்புகளை வெளியிட்டவர்.

**ஈழம் தேவதைகளும் கைவிட்ட தேசம்** என்ற நூல் தமிழ்நதியால் எழுதப்பட்டு நாகர்கோயில் காலச்சுவடு பதிப்பகத்தினால் டிசம்பர் 2010இல் வெளியிடப்பட்டது. ஈழத்தின் நிகழ்வுகள், தமிழகத்தின் எதிர் வினைகள் ஆகியவற்றை ஊடும் பாவு-மாகக் கொண்ட தமிழ்நதியின் அரசி யல் கட்டுரைகள் இந்த நூலின் முதல் பகுதி. வேரிழந்து சென்றவர்கள் விழுதுகளு டன் தாயகத்தைநோக்கித் திரும்பிவரும் அனுபவங்களையும் சொந்த மண்ணில் அந்நியனாகப் பயணிக்க நேர்ந்தபோது பெற்ற மனவலியையும், அவமானத்தையும் பதிவுசெய்வது இரண்டாவது பகுதி. ஈழத்து அரசியல் நிகழ்வுகள் தொடர்பான இலக்கியப் பிரதிகளை அன்றைய அரசியல் சூழலில் பரந்து வாசிக்கும் இலக்கிய-அரசி யல் விமர்சனங்கள் இந்நூலின் இறுதிப்பகுதி. தமிழ்த் தேசியப் பார்வையுடன் எழுதப் பட்டுள்ள கட்டுரைகளைக்கொண்ட இத் தொகுப்பு ஈழப்பிரச்சினை தொடர்பான விவாதத்தையும் மறுபரிசீலனையையும் தூண்டுவதாக அமைகின்றது.

ஈழப்போரின் பக்க விளைவுகளான அகதி வாழ்வு பற்றியும் பல நூல்கள், படைப்புகள் வெளிவந்துவிட்டன. **போரின் மறுபக்கம்: ஈழ அகதியின் துயர வரலாறு** என்ற நூல் சற்று வித்தியாசமானது. தமிழகத்தில்

வாழும் "ஈழ அகதி" தொ. பத்திநாதன் என்பவரால் எழுதப்பட்டு காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட வாழ்க்கை வரலாறு இது. டிசம்பர் 2007 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மன்னார் மாவட்டம், அடம்பன் தாழ்வு என்னும் சிற்றூரில் பிறந்தவர் பத்திநாதன். 1990இல் தனது 16ஆவது வயதில் தமிழகத்துக்கு அகதியாக வந்துசேர்ந்தவர். 8 ஆண்டுகள் மதுரை மாவட்டம் உச்சப்பட்டி அகதி முகாமில் இருந்தவர். பின்னர் சென்னைக்கு வந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்துறையில் இளங்கலைமானியாகக் கல்விகற்றவர். தனது அகதிவாழ்வின் அனுபவங்களை இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார்.

**எங்கட கதைதான்** என்ற நூலைத் தற்போது தமிழகத்தில் வாழ்பவரான, யாழ் தர்மினி பத்மநாதன் எனும் புனை பெயருடையவர் தந்துள்ளார். இவர் புனைபெயருக்குள் மறைந்திருந்து அழகிய கதைகளை எழுதித் தஞ்சாவூர் அகரம் பதிப்பகத்தினூடாக வெளியிட்டிருந்தார். சென்னைப் பல்கலைக்கழத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல்துறையில் எம்.ஏ. பட்டத்திற்கான உயர்கல்வி கற்கும் மாணவியான தர்மினி பத்மநாதனின் சிறுகதைத் தொகுதி இது. தனது 17ஆவது வயது முதல் இலக்கியத்துறையில் ஈடுபட்டு வரும் இவர் எழுதிய கதைகளுள் ஈழப் பெண்களின் பிரச்சினைகளையும், ஈழமக்களின் வாழ்வியல் தாக்கங்களையும் யதார்த்தமாக அணுகும் ஒன்பது சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஈழத்தில் வீரகேசரி, சுடர்ஒளி ஆகிய பத்திரிகைகளில் முன்னதாக வெளியானவை. இலண்டன் பூபாள இராகங்கள் சிறுகதைப்போட்டியில் 2007, 2008 இரு ஆண்டுகளிலும் பரிசினை வென்ற இவர், 2000ம் ஆண்டு உணர்வுக் கலசம் என்ற முதலாவது நூலை எழுதியிருக்கிறார்.

தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் வாழ்ந்துவருபவர் இ. தியாகலிங்கம். 1994 இல் அழிவின் அழைப்பிதழ் என்ற நாவலினூடாக இலக்கிய உலகில் அறிமுகமான இவர், நாளை, பரதேசி, திரிபு ஆகிய வெற்றிகரமான நாவல்களை தொடர்ச்சியாக வெளியிட்டவர். **எங்கே** என்ற தலைப்பில் உருவாக்கப்பட்ட இவரது நாவலும் இங்கு பதிவுக்குள்ளாக்கப்படவேண்டியதாகும். சென்னை மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ் பதிப்பகத்தின் வாயிலாக ஜூலை 2011 இல் எஸ்.பொ. வெளியிட்டுள்ள இந்நாவல், இரண்டு தலைமுறைகளின் கதையைக் கூறுகின்றது. ஒரு பகுதி சுபனின் தந்தையாக வாழும் நோர்வே நாட்டில் நிகழ்கின்றது. அடுத்தது மகன் தேவனாய் வாழ்ந்த காரைநகரிலே நிகழ்கின்றது. பொன்னாலைப் பாலம் தொடுப்பதினாலே நகரான ஒரு தீவின் செழுமைகளும் பெருமிதங்களும் இக்கதையில் பேசப்படுகின்றன. அம்மண்ணின் மக்களின் அரசியல் சார்பு அவர்களைப் பாதித்த தமிழினப் பிரச்சினைகள் ஆகியன பிரசாரத் தொனியின்றி சொல்லப்படுகின்றன. முக்கியமாக - இந்நாவல் வரலாற்றினை நேர்செய்யும் ஒரு இலக்கிய ஆவணமாகவும் அமைகின்றது. எண்பதுகளின் விடியலிலே தோன்றிய புளொட் விடுதலைப் போராட்ட அமைப்பு உமா மகேஸ்வரனின் தலைமையில் நம்பிக்கை தரும் ஒரு அமைப்பாக வளர்ந்ததும், விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் புளொட் அமைப்புக்குமிடையே நடைபெற்ற சகோதரப் போராட்டம், படுகொலைகள் என்பனவும் இங்கே பேசப்படுகின்றன. அந்த இயக்கம் எவ்வாறு செயலற்றுப் போனது என்ற கேள்விக்கு இலக்கிய ஆதாரமாக இந்நாவல் அதன் உள்வீட்டுப் பிள்ளையின் பார்வையில் அமைகின்றது. அந்த இயக்கத்தில் இணைந்து இந்திய

மண்ணுக்குச் சென்று ஆயுதப் பயிற்சிபெற்ற இயக்க வீரர்களுள் ஒருவரான தியாகலிங்கம் (நாவலாசிரியர்) தன்னை இந்நாவலில் முதன்மைப்படுத்தாது, ஓர் இயக்கத்தின் மறைவினை மிக நுட்பமாகச் சொல்கிறார். ஒரத்த நாட்டில் அமைந்த அதன் முகாம் இந்நாவலில் மிக யதார்த்தமாகச் சித்திரிக்கப் படுகின்றது.

**கண்ணீர் வெடிகள்** என்ற கவிதைத் தொகுதி ரவி இந்திரன் என்ற இளம்படைப் பாளி எழுதியது. சென்னை ஒளிர் பதிப்பகம், ஏப்ரல் 2012 இல் வெளியிட்டிருக்கிறது. பாரம்பரிய புத்தக அளவைவிட இரண்டு மடங்கு பெரிய அளவில், வண்ணப்பட ஓவியங்களுக்கும், கணனிச்சித்திர வடிவமைப்புக்கும் முக்கியத்துவம் அளித்து வெளிவந்திருக்கும் ஒரு கவிதைத்தொகுதி. ஈழத்துக் கவிதைகள் சேமித்து வைப்பதெல்லாம் காயங்களைத்தான் என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளை அடியொற்றித் தன் நெஞ்சில் காயங்களாய்ப் பதிந்திருந்த கண்ணீர்த் துளிகளை கவிதைகளாகப் படைத்திருக்கிறார். "என்னோடு ஒரு கோப்பையில் சோறுண்ட நண்பர்கள், ஆடைகள் இன்றி அவர்கள் தெருக்களில் சுடப்பட்ட வேளைகளிலும், என் சகோதரிகள் கம்பி வேலிகளுக்குள்ளும், காற்றின் பற்றைகளுக்குள்ளும் குதறி எறியப்பட்ட வேளைகளிலும், தமிழச்சி வயிற்றில் பிறந்ததைத் தவிர வேறெந்தத்தவறையும் செய்யாத பிஞ்சுகள் நஞ்சுக்குண்டில் பொசுங்கிய போதும், இப்படி வார்த்தைக்குள் அடங்காத வலிகளை என் உறவுகள் அனுபவித்து துடிதுடித்த வேளைகளில் உயிர்பெற்றவை இக்கவிதைகளில் அனேகமானவை" என்ற கவிஞர் ரவி-இந்திரனின் முன்னுரைவரிகள் இக் கவிதைகளின் பின்னணியை உணர்த்துகின்றன. நூலாசிரியர் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்.

**நிலவுக்குத் தெரியும்** என்ற சிறுகதைத் தொகுதி லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் சந்திரா இரவீந்திரன் எழுதியது. நாகர்கோயில், காலச்சுவடு பதிப்பகம் நவம்பர் 2011 இல் வெளியிட்டிருக்கிறது. துயரத்தின் வடிவம் ஒப்பாரியாகத்தான் இருக்க வேண்டியதில்லை. மனதில் உறைந்து போன கண்ணீரின் பாறைகளாகவும் இருக்கக்கூடும். சந்திராவின் சிறுகதைகள் சுமந்துவரும் துயரம் இரண்டாவது வடிவத்தைச் சார்ந்தது. இத்தொகுப்பில் பால்யம், தரிசு நிலத்து அரும்பு, அவர்கள் இல்லாத தேசம், என் மண்ணும் என் வீடும் என் உறவும், முறியாத பனை, நெய்தல் நினைவுகள், வல்லை வெளிதாண்டி, யாசகம், காற்று, கண்ணில் தெரியும் ஓவியங்கள் ஆகிய பத்துக் கதைகள் இடம்பெற்றுள்ளன. உமா வரதராஜனின் "துயரத்தின் நெடும்பயணம்" என்ற நீண்ட ஆழமான முன்னுரையுடன் கூடியது. வடமராட்சி பருத்தித்துறையில் மேலைப் புலோலியூர், ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சந்திரகுமாரி. யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர்கல்விகற்று 1991 வரை யாழ். அரச செயலகத்தில் பணியாற்றியவர். இவரது முதல் கதை ஒரு கல் விக்கிரகமாகிறது என்ற தலைப்பில், சந்திரா தியாகராஜா என்ற பெயரில் இலங்கையில் பிரசுரமாகியது. 1988 இல் 'நிழல்கள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர். 1991 இல் பிரித்தானியாவுக்கு இடம்பெயர்ந்து தற்போது லண்டனில் வசித்து வருகிறார்.

**மண்ணிழந்த தேசத்து மலர்கள்** லண்டனில் வாழும் இளம் கவிஞர் ந.கோபிநாத். எழுதியது. கோயம்புத்தூர் தகிதா பதிப்பகம், நவம்பர் 2011இல் இக்கவிதைத் தொகு தியை வெளியிட்டுள்ளது.

கவிஞர் கோபிநாத்திற்கு வெண்பா மெட்டில் பெருவிருப்புள்ளமையை இத்தொகுதிக் கவிதைகளில் பலவும் வெண்பாவின் சாயல்பெற்று வெளிவந்திருப்பதன் மூலமும், சில பாக்கள் சுத்தமான வெண்பாக்களாக அமைந்திருப்பதிலிருந்தும்

அறிய முடிகின்றது. உரையும் பாட்டும் கலந்த நடையில் அமைந்த கண்ணீர்க் குளக்கட்டு கவிதையில் ஈழத்தமிழர்களுக்கு மீண்டும் எழுந்து நிமிரும் வலிமையைத் தாய்க்குலமே வழங்குமென்ற ஒரு கருத்தை கவிஞர் முன்வைக்கிறார். கவிதைகள் அனைத்தும் எளிய சொல்நடையும் உணர்வோட்டமும் பெற்று மிளிர்கின்றன.

ஈழத்தின் மற்றுமொரு புலம்பெயர் படைப்பாளி ஈழவாணியின் கவிதைகள் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். ஈழவாணி (இயற்பெயர்: வாணி ஜெயாதீபன்) இலங்கையில் வவுனியாவில் பிறந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். தேடல், செந்தணல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்பொழுது புலம்பெயர்ந்து மலேசியாவிலும், இந்தியாவிலுமாக வசித்து வருபவர். ஈழத்தின் போர்க்காலத் துயர நெருப்பினூடே எழுந்தவை இவருடைய கவிதைகள். அழிவின் விளிம்பில் நின்று வாழ்வின் மீட்சியை வேண்டுபவை. துயரத்தின் நிழலைப் பின்தொடரும் இவரது சொற்கள் அன்பின் காதலின் வெளிச்சத்தையும் தீண்டத் தவறவில்லை. **தலைப்பு இழந்தவை** என்ற இவரது கவிதைத்தொகுதி கோயம்புத்தூர், தகிதா பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. “கடந்துபோன பொழுதுகளில் லயித்தும், வெறுத்தும் எழுதிப்போட்ட மனஓலங்கள் தொகுப்பாய் நூலாகின்றபோது பழைய நினைவுகளும் வாழ்வதாய் தோன்றுகின்றது. சில கவிதைகளோடு சில நிமிடங்களில் பேசலாம். சில கவிதைகளோடு கண்ணீர்த் துளிகள் வீழலாம். எல்லா மீட்டல்களுமே பயண இறுதியில் மிஞ்சும் பயணச் சீட்டுகள்தான். கண்களில் தடுக்கும் பொழுதுகளில் எழும் பயண நினைவுகளாய் இவையும் நீண்டு வீழ்ந்து கிடக்கும் இறந்துபோன நாட்களாயும் தொலைந்துபோன சந்தோஷங்களாயும் மீதம் தலைப்புகள் இடும் முன்னமே எதிர்பாராமல் நிகழ்ந்து முடிந்துவிடும் திடீர் நிகழ்வுகளாயும் தங்கிவிட்டன. இவை தலைப்புகள் இல்லாமலே வாழ்வில் நிகழ்ந்து மறையும். ஒரே தலைப்பில் நிகழ்ந்து போகும். இவற்றிற்கெல்லாம் எப்படி வெவ்வேறு தலைப்புகளிடுவது? இதனாலேயே தலைப்பு இழந்தவையாகப் பிறந்துவிட்டது இக் கவிதை நூல் எனத் தனது முகவுரையில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஈழவாணியின் மற்றுமொரு கவிதைத் தொகுதி **ஒரு மழைநாளும் நிசி தாண்டிய ராத்திரியும்.** சென்னை உயிர்மை பதிப்பக வெளியீடாக டிசம்பர் 2011இல் வெளிவந்துள்ளது.

### போராட்ட நிகழ்வுகளின் பதிவான சில முக்கிய திரைப்பட, நாடக நூல்கள்

இலங்கையில் விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய தேவை உருவாகிய ஆரம்பகாலங்களில் அதற்குத் துணையாக இருந்த ஊடகமாக தெருக்கூத்துகளும், வீதி நாடகங்களும், மேடை நாடகங்களும் அமைந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலும் இதன் நவீனத்துவமான வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருந்தன.

குழந்தை ம.சண்முகலிங்கம் நெறியாள்கை செய்த ‘மண் சுமந்த மேனியர்’ நாடகத்தை, தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து, சென்னை சவுத் விஷன் பதிப்பகம், மே 1998 இல் நூலுருவில் வெளியிட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நடிக்கப்பெற்ற இந்நாடகம் ஈழத்துத் தமிழ்ப் பிரதேசங்களில் நடந்துகொண்டிருக்கும் அரசியல் போராட்டத்துக்கு புதியதொரு பரிமாணத்தை வழங்கியது. இலங்கைத்

தமிழ் மக்களின் தனித்துவமான பாரம்பரிய தாயகத்தின் மீது திணிக்கப்பட்ட யுத்தக் கொடுமைகளுக்கு எதிராக விடுதலை வேண்டிநிற்கும் தமிழ் மக்களின் சுயசார்புத் தேடலின் முனைப்பை இந் நாடகத்தில் காணலாம். மக்களின் தேவைகளை, விரக்தியை, வேதனையை, நம்பிக்கைத்துளிர்களை நவீன வெகுஜன ஊடகத்தின் வசதிகளற்ற யாழ். மண்ணில் வெளிக்கொணரும் அரங்கமாக நவீன நாடக அரங்கு அமையத் தொடங்கிய வரலாற்றின் தொடர்ச்சியில் முக்கியத்துவமுடையது இந்த நாடகம்.

**மயில்: இரு நாடகங்கள்** என்ற தலைப்பில் ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களால் எழுதப்பட்டு, தெல்லிப்பழை, குரும்பசிட்டி சன்மார்க்க சபையினால், மே 1991இல் வெளியான நாடக நூல் இங்கு குறிப்பிடத்தக்கது. விடுதலை உணர்வினை வலியுறுத்தி நிற்கின்ற மயில் என்ற சிறுவர் மோடி நாடகத்தினையும், ஈழத்தமிழர்களின் தேசியக் கலை வடிவங்களில் ஒன்றான தாளக்காவடி எம்மவர் மத்தியில் மறைகின்ற வேளையில் அதன் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கும் தாளக்காவடி என்ற யதார்த்த நவீன நாடகத்தையும் இந்நூல் உள்ளடக்கியது. சுதந்திர வாழ்வே வாழ்வு என்ற செய்தியைச் சிறுவர்களுக்கு மயில் நாடகம் வலியுறுத்துகின்றது. ஆடல், பாடல் விரவிய உத்திப் பின்னல்கள் அளவாகப் புகுத்தப்பட்ட மோடி நாடகம் இது. கட்டுவன், வறுத்தலைவிளான், வீமன்காமம் பகுதிகளில் ஆடப்பட்ட வசந்தன் ஒயிலாட்டப் பாடல் மெட்டுகளில் நாடகம் நகர்த்தப்பட்டுள்ளது. தாளக் காவடி நாடகம், எமது பிரதேசத்தின் கிராமியக் கலை வடிவங்களான காவடி, கரகம், வசந்தன் போன்றவை பேணப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைகின்றது. கலைஞனின் தன்மான உணர்வு இந்நாடகத்தில் வலியுறுத்தப்படுகின்றது. முதலாளியின் அடக்கு முறையை விஞ்சிநிற்கும் காவடி அண்ணாவிப் பாத்திரத்தைச் சுற்றி நாடகம் நகர்த்தப்படுகின்றது.

**ஆர்கொலோ சதுரர்: நடன நாடகம்,** சாந்தினி சிவநேசன், தவநாதன் றொபர்ட், சா.சிவயோகன், இ.முருகையன், குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோரால் தயாரித்து வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம், நாடக அரங்கக் கல்லூரி, இதனை நூலுருவில் 2008இல் வெளியிட்டிருந்தது.

பஞ்சபாண்டவர்-கௌரவரின் பாரதப் போரின் பின்னணியில் எழுந்த நாடகமான ஆர்கொலோ சதுரர்- பரதநாட்டிய ஆற்றுகை நெறிப்படி அமைக்கப்பட்டது. இந்த நடன நாடகம் 5.1.2003இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் முதன்முதலில் மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து அவ்வாண்டில் ஏழு தடவைகளும், கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இரு தடவைகளும் மேடையேற்றப்பட்டன. இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு, யுத்தம் இடைநிறுத்தப்பட்டு, "சமாதானம்" நிலவிய காலத்தில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்நாடகத்தின் நூல்வடிவம் இதுவாகும். பின்னிணைப்புகளாக, படைப்பாக்கத்தில் இணைந்தவர் தம் கருத்துக்கள், ஆற்றுகையில் பங்கேற்றவர்களது அனுபவங்கள், விமர்சனங்கள் என்பன 61-165 பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. மாணிக்கவாசகரின் திருவாசகத் தொகுதியில் கோவில் திருப்பதிகத்தில் வரும் பத்தாவது பாடலில் "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கராஆர்கொலோ சதுரர்" என்ற பாடல் அடிகளிலிருந்து நாடகத்தின்

தலைப்புப் பெறப்பட்டுள்ளது. (சதுரர் என்பதன் பொருள் கெட்டிக்காரன். யார் கெட்டிக்காரன்? நீயா நானா- என்று கேட்பது இத்தலைப்பின் பொருள்).

**புத்தனின் பெயரால்: திரைப்பட சாட்சியம்** என்ற நூலும் இவ்வகையில் முக்கியத்துவம் பெற்றது. லண்டனிலிருந்து, யமுனா ராஜேந்திரன் எழுதி சென்னை உயிர்மை பதிப்பக வெளியீடாக டிசம்பர் 2009இல் வெளிவந்த நூல் இது. முப்பது ஆண்டுக்கால ஈழப்போராட்டத்தின் விளைவாக ஈழமக்கள் வந்தடைந்திருக்கும் உளவியல் சிக்கல் உக்கிரமான படைப்பு மனநிலைக்கு அவர்களைக் கொண்டு வந்திருக்கிறது. திரைப்படங்களின் வழி ஈழ விடுதலைப் போராட்டத்தையும் அதன்வழி ஈழச் சமூகத்தையும், அதன் வழி ஈழ மக்களையும், சிங்கள மக்களையும் அவர்களுக்கிடையிலான முரண்பாடு களையும் நேசத்தையும், வெறுப்பையும் துயர்களையும் புரிந்துகொள்ள முனைந்த தாக ஜமுனா ராஜேந்திரனின் திரைப் பயணம் அமைந்துள்ளது. வரலாற்று நூல்களின் வழியாக வந்தடைந்த புரிதல்களை விடவும் ஆழமான புரிதலை இத்திரைப்படங்கள் இவருக்கு அளித்துள்ளன. கடந்த 20 ஆண்டுகளாகத் தான் தேடித் தேடிப் பார்த்து வந்திருக்கின்ற அந்த ஈழ வரலாற்றின் திரைப்படமூலமான சாட்சியங்களை இந்நூலில் புனைவுப் படங்கள், குறும்படங்கள், விவரணப் படங்கள், ஆகியனவற்றின் ஆழமான திரை விமர்சனங்களாகத் தந்திருக்கிறார். தமிழகத்தின் கோவை சௌரிபாளையத்தில் பிறந்த யமுனா ராஜேந்திரன் கணிதத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டவர். லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் இவர் ஈழத்தமிழர்களுடன் நெருங்கிய இலக்கியத்தொடர்பினைப் பேணுபவர்.

**ஆணிவேர்: ஈழத் தமிழர்களின் முதல் திரைப்படம்** என்ற நூல், அதன் இயக்குநர் ஜான் அவர்களால் எழுதப்பட்டு, சென்னை நக்கீரன் பப்ளிக்கேஷன்ஸ் வாயிலாக வண்ணப்படங்களுடன் வெளி யிடப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் போர்க்கால வாழ்க்கையைத் திரைப்பட மாக வன்னி மண்ணிலிருந்து தயாரித்து வழங்கிய இயக்குநர் ஜான், ஆணி வேர் படப்பிடிப்பின்போது ஈழத்தில் தனக்கேற்பட்ட அனுபவங்கள், உணர்வலை கள் என்பவற்றை விபரித்திருக்கிறார். இந்நூ லின் இரண்டாம் பிரிவில் ஆணிவேர் திரைப்படத்தின் திரைக்கதை உரையாட லின் எழுத்துரு இடம்பெற்றுள்ளது. பக்கங்கள் தோறும் வண்ணப்படங்கள் காணப்படுகின்றன.

### போராட்ட நிகழ்வுகளின் பதிவான நியோ ஜேர்னலிசக் கதைகள்

ஈழப் போராட்டத்தில் தாயக மண்ணில் ஏற்பட்ட அழிவுகளைக் கதைக்களமாகக் கொண்டு அந்தச் சம்பவத்தை வரலா-றாகப் பதிந்துவைக்கும் நோக்கில் பல படைப்புகள் வெளியாகியுள்ளன. இவை கற்பனை கலவாத சம்பவக்கோப்புகள். படைப்பாளியின் கைவண்ணத்தில் இவை விறுவிறுப்பான கதையாகச் சொல்லப் படுகின்றது. இக்கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட லங்காராணி, புதிய தோர் உலகம் போன்றே இவையும் ஈழ விடுதலைப்போராட்டத்தின் ஏதோவொரு சம்பவத்தை வரலாறாக்குகின்றன.

**இருபத்திநான்கு மணிநேரம்** என்ற நூலை நீலவண்ணன் என்ற புனைபெயரில் செங்கை ஆழியான் எழுதியிருந்தார். யாழ்ப்பாணம்: கமலம் வெளியீடாக ஒக்டோபர் 1977 இல் வெளிவந்தது. இந்நூல் பல பதிப்புக்களை பின்னாளில் கண்டது. 1977 ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி இலங்கையில் ஆரம்பமான இனக்கலவரத்தின் முதல்

நாள் யாழ்ப்பாணத்தில் நடந்தது என்ன என்பதைச் சித்திரிக்கும் வரலாற்றுப் பதிவு இது. வரதர் வெளியீடாக 16.10.1977இல் வெளியிடப்பட்ட முதற்பதிப்பு 15 நாட்களில் விற்பனையாகிவிட்ட நிலையில் 31.10.1977அன்று மீள்பதிப்புச் செய்யப்பட்டது. இந்நூலின் வரலாற்று முக்கியத்துவம் கருதி 25வருடங்களின் பின்னர் 3வது பதிப்பையும் 2003இல் கண்டுள்ளது.

**எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன** என்ற நூல் ஈழமண்ணில் நடந்தேறிய உண்மை நிகழ்வுகளின் மற்றொரு விவரணமாகும். நாவண்ணன் அவர்களின் கைவண்ணத்தில் யாழ்ப்பாணம்: தமிழ்த் தாய் வெளியீடாக ஒக்டோபர் 1995 இல் வெளியா-கியது. முன்னோக்கிப் பாய்தல் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றினை இலங்கை அரசு 9.7.1995 முதல் 16.7.1995 அதிகாலை வரை வலிகாமம் மேற்கு பகுதியில் நடாத்தியது. அவ்வேளையில் படுகொலை செய்யப்பட்ட 239 பேரில், விமானக்குண்டு வீச்சுக்கு இலக்காகி நவாலித் தேவாலயச் சுற்றாடலில் பலியான 141 பேரின் துயரச் சம்பவங்கள் உட்பட அந்தப் படையெடுப்பின் போது குறித்த நிலப்பகுதியில் பரவலாக நடந்த படு-கொலைகள் விவரண வடிவில் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. வலி-காமம் மேற்குப் பகுதியில் புலிகளின் எதிர்நடவடிக்கைகளைத் தொடர்ந்து தாம் ஆக்கிரமித்த பகுதிகளை விட்டு இராணுவம் பின்வாங்கிய ஒரு சில நாட்களில் அவ்விடங்களுக்குச் சென்று நேரடியாகச் சேகரித்த தகவல்கள் இவை.

**அக்கினிக் கரங்கள்** நாவண்ணனின் மற்றுமொரு போரிலக்கியமாகும். யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடாக மலர்ந்துள்ள இது ஐப்பசி 1995இல் முதற்பதிப்பைக் கண்டது.

ஈழத்தமிழரின் இனப்பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட உண்மை நிகழ்வுகளைக் கலாபூர்வமாகப் பதிவுசெய்து வைக்கும் பணியிலேயே திரு நாவண்ணனின் இலக்கிய வாழ்வின் பெரும்பகுதி கழிந்திருக்கிறது. அக்கினிக்கரங்கள் என்ற இந்தக் குறுநாவலும் அந்த வகைக்குள்ளேயே அடங்குகின்றது. 1987ம் ஆண்டு ஒக்டோபர் 21ம், 22ம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் இந்திய அமைதிகாக்கும் படையினர் புகுந்து புரிந்த படுகொலைகளை மையமாக வைத்து இக்குறுநாவல் எழுதப்பட்டுள்ளது.

நாவண்ணனின் பெயர்சொல்லும் மற்றொரு படைப்பு **கரும்புலி காவியம்: பாகம் 1.** கிளிநொச்சி அறிவு அமுது பதிப்பகம் மார்ச் 2003இல் இந்நூலை வெளியிட்டது. விடுதலைப் போராட்டத்தில், சிங்கள இராணுவத்தின் சிம்மசொப்பனமாகக் கருதப்பட்ட கரும்புலிகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் எழுச்சியையும் கூறும் கரும்புலி காவியத்தை இந் நூல் தருகின்றது. இதில் கரும்புலிகளின் உள்ளத்து உணர்வுகளையும் அவர்களது அளவு கடந்த அர்ப்பணிப்புகளையும் மிகவும் நுட்பமாகவும் சாதுரியமாகவும் சொற்களை நெகிழ்த்திச்சென்று தத்ரூபமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நாவண்ணன் போன்று போரியல் சம்பவங்களை வரலாறாகப் பதியும் மற்றொரு முயற்சியை மேற்கொள்பவர் வல்வை ந.அநந்தராஜ் அவர்கள். **வல்வைப் படுகொலைகள்** என்ற இவரது நூல் வல்வெட்டித்துறை நந்தி பதிப்பக வெளியீடாக 1989இல் வெளிவந்தது. இந்திய இராணுவத்தினர் இலங்கையை ஆக்கிரமித்திருந்த வேளையில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல படுகொலைகளில் உலகையே உலுக்கிய

படுகொலைகளாக வல்வெட்டித்துறைப் படுகொலைகள் இடம் பெற்றிருந்தன. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2, 3, 4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியபின் இந்திய இராணுவத்தினரால் கண்மூடித்தன மாக மேற்கொள்ளப்பட்ட படுகொ லைகள் தொடர்பான விபரங்கள், கதை களாக நெஞ்சை உருக்கும் வகையில் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன. மக்களின் அவலங்களைச் சித்திரிக்கும் கறுப்பு வெள்ளை, வண்ணப் புகைப்படங்களுடன் இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட வல்வைமக்களின் சத்தியப் பிரமாண வாக்குமூலங்களை உள் ளடக்கியதாக India's Mylai என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான அணிந்துரை முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டசினால் மிக உணர்வுபூர்வமாக வழங்கப்பட்டிருந்தது.

வல்வை அநந்தராஜ் அவர்கள் வல்லை ஆனந்தன் என்ற புனைபெ யரில் எழுதிய மற்றொரு வரலாற்றுப் பதிவு **உதிரம் உறைந்த மண்: ஒரு மாண-வப் படுகொலையின் அழியாத சுவடுகள்** என்ற நூலாகும். கிளிநொச்சி: தமிழ்த்தாய் வெளியீட்டகம் வெளியிட்ட இந்நூ லில் 22.9.1995 அன்று வடமராட்சியில் நாகர்கோயில் மஹா வித்தியாலயத்தின் மீது இலங்கை இராணுவத்தின் வான்படை குண்டுவீசியதை அடுத்து அங்கு பலியான, காயமடைந்த பள்ளிச் சிறுவர்களின் சோக நிகழ்வை உணர்ச்சி ததும்ப விபரித்துள்ளார். பத்திரிகைத் தணிக்கை அமுலிலிருந்த இக் காலத்தில் இந்தப் பாரிய கொடுமை வெளியுலகத்திற்கு எடுத்துச் சொல்லப்படுவதில் இருந்த தடங்கலை இந்நூல் நீக்கி, அந்நிகழ்வை வரலாற்றில் பதிந்துள்ளது.

### ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் எழுந்த மேலும் சில இலக்கியங்கள்

மே 2009இல் ஆயுதப் போராட்டம் முடிவுக்குவந்தபின்னர் நிலவிய மயான அமைதிக்குப் பின்னர், படைப்பாளிகள் சுதாரித்துக்கொண்டு படிப்படியாக அது பற்றிய இலக்கியப் பதிவுகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். அவ் வகையில் தமிழகத்தில் இயங்கும் ஈழத்துப் பதிப்பகமான வடலி பதிப்பகம் சில நூல்களைத் தேடிப் பதிப்பித்திருந்தது.

அதன் முக்கிய பிரசுரமாக **தேவதை களின் தீட்டுத்துணி** நூலைக் குறிப்பிடலாம். ஈழத்துப்படைப்பாளியான யோ.கர்ணன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு இது. சென்னையிலிருந்து வடலி பதிப்பகம் ஓகஸ்ட் 2010இல் இதனை வெளியிட்டது. ஈழத்தின் யுத்தத்தில் ஒரு காலைப் பறிகொடுத்தவர் யோ. கர்ணன். யுத்தம் அவருடைய கல்வியை, தொழில்வாய்ப்புக்களை, அவருக்கான எதிர்காலத்தை என எல்லாவற்றையும் தின்று தீர்த்துள்ளது. அவருடைய கடந்த காலத்தின் நினைவுப்பரப்பு விசைகூடிய ஒரு காந்தத்தைப் போல அவரைக் கவர்ந்திழுத்துக் கொண்டேயிருக்கிறது. விடுதலைக்கான போராட்டம் என்று ஆரம்பித்த அரசியல் செயற்பாடுகள், முடிவற்ற யுத்தமாகிக் கர்ணனைப் போன்ற பல்லாயிரக்கணக்கான மனிதர்களின் வாழ்க்கையையே பாதித்துவிட்டன. இந்நூலிலுள்ள கதைகள் அதையே சொல்கின்றன. ஈழத்தமிழ் இலக்கியச் சூழலில் முள்ளிவாய்க்காலுக்குப் பிற-கான காலப்பகுதியில் முள்ளிவாய்க்கால் அனுபவம் தொடர்பில் வெளிவந்த முதல் சி-றுகதைத் தொகுதி இதுவாகும். இது பெரும் புனிதங்களைத் தகர்க்கவும், ஜீரணிக்க முடியாத வலியை நம்மீது இறக்கவும் வல்ல உண்மைகளைச் சுமந்திருக்கிறது.

முள்ளிவாய்க்கால் கால வன்னியில் துயருற்றுழன்ற மக்களில் ஒருவரான யோ. கர்ணனின் இந்தச் சாட்சியங்கள் அவரை நல்லதொரு கதை சொல்லியாகவும் ஆக்கியுள்ளது. ஆதிரையும் நாற்பது ஆமிக்காரரும், மன்னிக்கப்படாதவனின் கைத்தொலைபேசி, பெயர், தஸ்யுக்களின் பாடல்கள், சுதந்திரம், பாதுகாப்பு வலயம், திருவிளையாடல், றூட், சடகோப னின் விசாரணைக் குறிப்பு, தேவதைகளின் தீட்டுத்துணி ஆகிய பத்துக் கதைகளிலும் இதனை வாசகர் உள்வாங்கமுடிகின்றது.

**சாம்பல் பறவைகள்** என்ற குறுநாவல் எஸ். அரசரெத்தினம் அவர்களால் எழுதப்பட்டு, கல்முனை சத்தியா பப்ளிக்கேஷன்ஸ் வாயிலாக ஓகஸ்ட் 2010 இல் வெளியிடப்பட்டுள்ளது.

இக்குறுநாவல் வன்னிச் சமரின்போது சாதாரண மக்கள் அனுபவித்த அவலங்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில் எழுதப் பெற்றுள்ளது. ஆனந்தன்-பவானி காதல் பற்றிய கதையாகத் தொடங்கினாலும், கதை முழுவதும் யுத்தத்தின் கொடுமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மணியத் தாரின் கண்டிப்பான வளர்ப்பில் வளர்ந்த ஆனந்தன் மாஸ்டர் உருத்திரபுரம் முருகே சுவின் மகளான பவானி ஆசிரியையிடம் காதல் கொள்கிறார். ஆனந்தனின் தந்தை எதிர்த்துக் கிளம்ப ஆனந்தன் பொறுமை யைக் கையாள்கிறான். விரக்தியுற்ற பவானி கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறாள். போரின் கெடுபிடி சூடுபிடிக்கிறது. பெட்டி படுக்கையுடன் மக்கள் இடம்பெயர, பவானி, தந்தை முருகேசு, அண்ணன் குமாரின் குடும்பம் என்போர் புளியம்பொக்கணைக்கு இடம் பெயர்கிறார்கள். வழியில் முருகேசர் நெஞ்சுவலியால் இறக்கிறார். இருட்டுமரு கிராமம், சுதந்திரபுரம், இரணைப்பாலை, புதுமாத்தலன் என்று எஞ்சியோரின் இடப்பெயர்வு தொடர்கிறது. குமா-ரின் மனைவி சாரதா பங்கருக்குள்ளேயே ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு உயிர்துறக்கிறாள். பால் வாங்கவும் வழி யின்றி குமார், பவானி, உமா ஆகி யோர் இராணுவத்திடம் சரணடைகின்றனர். இடையில் குழந்தையும் இறக்கின்றது. இராணுவத்தின் உதவியுடன் வவுனியா முகாமுக்கு வந்துசேர்கின்றனர். முகாமில் ஆனந்தன் பவானியை சந்திக்க முயல்கிறான் என்றவாறாகக் கதை தொடர்கின்றது.

**எங்களையும் இந்த மண்ணில் மனி தராக வாழவிடுங்கள்** என்ற கட்டுரை நூல் சேனையூர் அ.அச்சுதன் எழுதியது. சென்னை மணிமேகலைப் பிரசுரமாக 2011 இல் வெளிவந்தது.

1997இல் கவிதைத்துறையில் இறங்கியவர் அரசரெத்தினம் அச்சுதன். திருக்கோணமலை மாவட்டத்தின் சேனையூர் கிராமத்தைச் சேர்ந்தவர். இளம் பத்திரிகையாளர். 2010இல் சர்வதேச இந்து மத பீடத்தினால் ஊடகத்துறையில் இவரது சிறந்த பணிக்காகக் கௌரவிக்கப்பட்டவர். சுடர் ஒளி வார இதழில் வெளிவந்த இவரது கட்டுரைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இவை யுத்த காலத்தின் பதிவுகளாக, நேரடிச் சாட்சியங்களாக உள்ளன. திருக்கோணேஸ்வரமும் பழந்தமிழ்க் கிராமங்களும்; யுத்தத்தின் பெயரி லான கட்டுப்பாடு: அமைதி வந்தபின்பும் ஓயவில்லை- மூதூர் மக்களது பிரச்சினைகள் எப்போது தீரும்?- திருக்கோணமலைத் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்- தாய் மண்ணின் சிதைவு-ஈச்சிலம்பற்று, வெருகல் பிரதேச மக்களின் பிரச்சினைகள்- கிழக்கில் கலாசாரச் சீரழிவுகளும் அத்துமீறிய குடியேற்றங்களும்- கிழக்கின் நில ஆக்கிரமிப்பு- நலன்புரி நிலையங்களில் நிரந்தர அவலங்கள்- யுத்தத்தின் மத்தியிலும் புத்தகம் ஏந்தும் மாணவர்- பெற்றோரே

விழித்திருங்கள்-மனிதப் புதைகுழியாக மாறும் வன்னி மண் என்பன உள்ளிட்ட 23 தலைப்புகளில் இந்நூலிலுள்ள கட்டுரைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**ஃபீனிக்ஸ் பறவைகளாய் எழுவோம்** என்ற தலைப்பில் ஈழத்தின் மிக முக்கியமான போர்க்கால இலக்கியப்படைப்புகளை வெளியிட்டவரான ச.முருகானந்தன் ஒரு சிறுகதைத் தொகுப்பை வழங்கியிருக்கிறார். சென்னை, மணிமேகலைப் பிரசுரம் 2011இல் இதனை வெளியிட்டது.

ஈழத் தமிழர்களின் வாழ்வில் இருண்ட காலத்தின் கதைகள் இவை. யுத்தத்தின் பின்னான ஈழத்தமிழரின் வாழ்க்கை இது. அவர்கள் போருக்குள் சிக்கி அல்லல் பட்டமையையும், உச்சகட்ட யுத்தக்கொடும் நிகழ்வுகளையும், தப்பியவர்கள் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் அனுபவித்த முகாம்வாழ்க்கையையும், பின்னர் துயருடன் சாம்பல் மேட்டில் மீள்குடியேற்றப்பட்ட அவர்களின் அவலங்களையும் இதிலுள்ள கதைகள் பதிவுசெய்கின்றன. போரா-ளிகளின் தோல்வியுடன் பேரினவாதத்தால் கைவிடப்பட்ட தீர்வுத்திட்டத்தையும், மக்களுக்கு இன்னமும் அமைதி எதுவும் கிட்டவில்லை என்பதையும் சுட்டி நிற்கின்ற கதைகள். உச்ச கட்டம், அம்மா வந்தாள், வெறும் சோற்றுக்காக, எத்தனை கோடி துன்பங்கள், தாய்மடி மண், பஞ்சம் எப்போதும் தொடர்கதைதான், முள்வேலி, புலவு காத்த கிளி, நிர்வாணம், நெருப்பு மழை, என்னைப் போல் ஒருத்தி, ஃபீனிக்ஸ் பறவைகளாய் எழுவோம் ஆகிய பன்னிரு கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**கூண்டுக் குயில்களின் கவிதைத் தொகுப்பு** என்ற தலைப்பில் அண்மையில் லண்டனிலிருந்து பிரசுரமான கவிதைத் தொகுதி எம்மைக்கவர்ந்த முக்கியமான படைப்பிலக்கியமாகும். முன்னாள் விடு தலைப் போராளிகளின் அண்மைக்கால கவிதைகளாக இவை அமைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இலச்சினையைத் தவிர வெளியீட்டு விபரம் எதுவும் இல்லாத போதிலும், 2012இல் இந்நூல் ஐரோப்பிய நாடொன்னிறிலிருந்து வெளியிடப்பட்டுள்ளதாக உணரமுடி கின்றது. 127 பக்கம் கொண்ட இக்கவிதைத் தொகுதி இலங்கையில் ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2009இல் இடம்பெற்ற இறுதிக்கட்டச் சரணடைவுகளின்போது கைதுசெய்யப்பட்டு புனர்வாழ்வு நிலை யங்களில் வைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் தாயக உணர்வும் ஏக்கமும் நிறைந்த உணர்வுபூர்வமான கவிதை களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. சிறைகளிலும், புனர்வாழ்வு முகாம்களி லும் அவர்கள் அனுபவிக்கும் இன்னல் களுக்கூடாகவும் அவர்களின் மனங்களில் புதைக்கப்பட்டுள்ள பொறிகள் சொல் லாத சேதிகளாக இக்கவிதைகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

**மேலும் சில இரத்தக்குறிப்புகள்** என்ற நூல்பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். இது எஸ்.மகாதேவன் என்ற மலையாள எழுத்தாளர் அம்மொழியில் எழுதிய கதை. குளச்சல் மு. யூசுஃப் தமிழில் மொழிபெயர்த்து, தமிழ்நாட்டிலிருந்து எதிர் வெளியீடாக, ஜூலை 2009இல் வெளியிட்டுள்ளார். இலங்கையில் தமி ழீழ விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் ஈழத்தமிழர் அதிர்வில் உறைந்திருந்த மௌனச் சூழலில் இந்நூல் அவசர அவசரமாக வெளியிடப்பட்டது. இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாகக் கடல்மார்க்கமாக வந்த வண்ணமுள்ளனர். அப்படி வருபவர்களில்

கணிசமானோர் இந்தியக் கரையை அடைவதில்லை என்ற அனுமானத்தில், அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்ற தேடலாக உருவகித்த கற்பனையில் உதித்த கதை இது. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய ஆழமான பார்வையற்ற கற்பனாவாதக் கதையாக இது அமைகின்றது என்பதை முதல் அத்தியாயத்திலேயே அனுமானிக்கமுடிகின்றது. போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் வெளியான நூல்கள் பற்றிய விரிவான கட்டுரையொன்று கட்டுரையாளரால் எழுதப்பட்டுள்ளது. அதில் மேலதிக விபரங்களை காணலாம். (பார்க்க: ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின் எழுந்த ஈழத்தவர்களினதும் அவர்கள் சார்ந்ததுமான குரல்கள்: ஒரு நூலியல் தேடல் - என்.செல்வராஜா . **பூவல்: உலகத் தமிழ் இலக்கிய மாநாடு 2012 சிறப்பு மலர்,** கொழும்புத் தமிழ்ச்சங்கம்).

**ஈழப் போராட்டம் குறித்த சிந்தனையாளர்களின் தத்துவார்த்த நூல்கள்**

ஈழ விடுதலைப் போராட்டம் சார்ந்த நூல்கள் பற்றிப் பேசும்போது, அவ்விடுதலைப் போராட்டக் களத்தின் அரசியல் தத்துவார்த்த நெறியாளராக நின்று செயற்பட்டவர்கள் எழுதிய நூல்கள் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக **ஈழவர் இடர்தீர** என்ற தலைப்பில் இ. இரத்தினசபாபதி அவர்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஒரு நூலை வெளியிட்டிருந்தார். Eelam Research Organisation என்ற நிறுவனத்தின் மூலம் செப்டெம்பர் 1984இல் இந் நூல் வெளிவந்திருந்தது. ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) நிறுவனரான இந்நூலாசிரியர், இவ்வமைப்பின் அதிகாரபூர்வ ஏடான தர்க்கீகம் இதழ்களின் வாயிலாக வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். மொழி வெறியாகவும், மாணவர் உயர்கல்விப் பிரச்சினையாகவும் 1975ம் ஆண்டுவரை அணுகப்பட்ட ஈழப்பிரச்சினையை இவரது கருத்துக்கள், மார்க்சிய பார்வையில் தமிழ்பேசும் மக்களின் உடைமைப்பாட்டுப் பிரச்சினையாக அணுகியிருந்தது.

ஈழ விடுதலை அரசியல் சார்ந்த நூல்கள் பற்றிக் குறிப்பிடும்போது அன்ரன் பாலசிங்கம் - அடேல் பாலசிங்கம் தம்பதியினரின் எழுத்தியல் பங்களிப்பு முக்கியமானதாகும். **இரண்டு தசாப்தங்களும் புலிகளும்** என்ற நூல் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆகஸ்ட் 1992இல் வெளியிடப்பட்டது. 1991ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திய முத்தமிழ் விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலரில் இடம்பெற்ற ஒரு அரசியல் கட்டுரையின் நூல் வடிவமாக இது அமைந்துள்ளது. இருபது வருடகால புலிகளின் வரலாற்றை சித்திரிக்கும் ஆரம்பகால ஆவணம் என்ற வகையில் இந்நூலும் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்நூலைப் போலவே பின்னாளில் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கம், ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதினார். Will to Freedom என்ற அந்நூல் பின்னாளில் ஓகஸ்ட் 2002இல் ஏ.சீ.தாசீசியஸ், அன்ரன் பாலசிங்கம் ஆகியோரால் தமிழாக்கம் செய்யப்பட்டு **சுதந்திர வேட்கை: தமிழீழ விடுதலைப் போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு** என்ற பெயரில் வெளிவந்தது. இந்நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வாழ்வினை உள்ளிருந்த பார்வையாக, ஆழமாகத் தரிசிக்கின்றது. சுயதரிசன விவரணமாகவும், வரலாற்று நோக்குடனும் எழுதப்பட்ட இந்தநூலில் விடுதலைப்புலிகள் பற்றி அன்றுவரை வெளிவராத பல்வேறு சுவையான

***"தினமும் துப்பாக்கி வேட்டுக்களும் உயிரற்ற உடல்களும் எரிகின்ற மணமும் கொண்ட தேசத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அழகிய அந்திக் காட்சிகளை, பௌர்ணமி நிலாவைப்பற்றி எண்ணி எங்களால் எழுத முடியவில்லை. சிறையிடப்பட்ட எங்கள் இரவுகளை, அதிகாலைப் பொழுதுகளை, முட்களை ஏந்தும் பூக்களைப் பற்றியே எழுதமுடிகிறது." என்று செழியன் குறிப்பிட்டிருந்தார்***

தகவல்கள் தரப்பட்டுள்ளன. கடந்த 20 ஆண்டுக்காலமான தமிழீழ சுதந்திரப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகள் திருப்பங்கள் இந்நூலில் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளன. அவுஸ்திரேலியரான திருமதி அடேல் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய நிலையில் எழுதப்பட்ட நூல் இது. அடேல் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வாழ்ந்து தமிழ் சமூகக் கட்டமைப்புப் பற்றி நன்கறிந்தவர். விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் பற்றியும் யாழ்ப்பாணச் சமூக சீதனமுறை பற்றியும் மேலும் சில நூல் கை-ளையும் இவர் எழுதியுள்ளார்.

**விடுதலை** என்ற தலைப்பில் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு நூலொன்றும் நவம்பர் 2003 இல் இலண்டனிலிருந்து வெளி வந்துள்ளது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் முன் னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் பங்களிப்பும், 1987 ஜூலையில் புதுடில்லியில் நிகழ்ந்த சந்திப்பின்போது ராஜீவ்-பிரபாகரன் இடையே செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் உள்ளிட்ட பல விடயங்களையும் தெளிவு படுத்தும் 11 கட்டுரைகள் இதில் உள்ளன. மனிதவாழ்வு பற்றியும், மனித வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் புது மையான, புரட்சிகரமான சிந்தனைகள் இந் நூலில் அறிமுகமாகியுள்ளன. அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மிக அண்மைக்கால வெளியீடாக 'War and Peace' என்ற நூலும், அதன் தமிழாக்கமான **போரும் சமாதானமும்** என்ற நூலும் குறிப்பிடத்தகுந்த பிற நூல்களாகும்.

**ஈழப்போர்ச் சூழலில் வாழ்ந்த பத்திரிகை யாளர்களினதும் பத்திரிகைகளினதும் பார்வை களின் பதிவுகள்.**

ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் யாழ்ப்பாண மண்ணில் பல அரசியல், பொருளாதார இடையூறுகளுக்குள் வெளிவந்த பிராந்தியப் பத்திரிகை **ஈழநாடு** என்ற நாளிதழாகும். 1984ம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழ்ப் பிரதேசங்களில் நீண்டகால ஊரடங்குச் சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டு, அர சின் நெருக்கடிகளால் விடுதலைப் போராட்டத்தின்பால் நகர்ந்த மக்களின் ஈடுபாட்டை நசுக்கும் கீழ்த்தரமான முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. அக்கால கட்டங்களில் ஈழநாடு நாழிதளில் வெளியான ஆசிரியத் தலையங்கங்கள் சில **ஊரடங்கு வாழ்வு** என்ற பெயரில் தனிநூலாக மீளப் பிரசுரமாகியிருந்தன. ஈழத்தமிழருடைய போராட்ட வரலாற்றில் உண்மையாய் எழுதப்பட்ட பதிவேடுகள் இவை. இக்கட்டுரைகளின் ஆழத்தையும் சமூகப் பின்னணியையும் விரிவாக ஆராய்ந்து அச்சிடக்கூடிய நிலை அன்றிருக்க

வில்லை. வரலாற்றுப் பதிவான அந்த ஆசிரியத் தலையங்கங்கள் எதிர்காலத்தில் ஈழ வரலாறு பற்றிய பல ஆய்வுகளுக்கு மூலாதார நூலாக விளங்கக்கூடும்.

பத்திரிகையாளர்கள் பலர் போராட்ட பூமியிலிருந்தும், பின்னர் அங்கிருந்து நெருக்கடிகளால் புலம்பெயர்ந்து வந்து புகலிட தேசத்தில் நிலைகொண்டிருந்தும் பல நூல்களைத் தமது அனுபவங்களாக எழுதி வெளியிட்டிருந்தார்கள். **ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை** என்ற நூல் இவ்வகையில் ஒரு உதாரணமாகக் குறிப்பிடலாம். எஸ்.எம்.ஜி என்றழைக்கப்படும் பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம், மட்டக்களப்பிலிருந்து ஆகஸ்ட் 2000த்தில் இந்நூலை வெளியிட்டிருந்தார். இந்நூலில் இந்திய அமைதிப்படையினரால் இப்பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டதன் பின்னரான இரண்டு மாத சிறை அனுபவம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டதிலிருந்து விடுதலையாகும் வரை நடந்த நிகழ்வுகள், சிறையில் சந்தித்தவர்கள், அவர்களிடமிருந்து கேட்டறிந்தவை அனைத்தும் பதிவுக்குள்ளாகியுள்ளன.

### எழுத்து ஊடகங்களின் போர்க்காலத்துச் சிறப்பிதழ்கள்

போரியல் சார்ந்த படைப்பிலக்கியங்களைச் செறிவாகக் கொண்ட சிறப்பிதழ்கள் பல தாயக மண்ணிலிருந்து காலத்திற்குக் காலம் வெளியாகியுள்ளன. **வெளிச்சம்: பவள இதழ் 2001** இதில் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் நடுவப்பணியகம் இத்தொகுப்பினை 2002இல் வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிப்பகத்தின் வாயிலாக புதுக்குடியிருப்பிலிருந்து வெளியிட்டுள்ளது. 300 பக்கம் கொண்ட இம்மலர், தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் பருவ இதழாக வெளிவரும் **வெளிச்சம்** சஞ்சிகையின் 75வது இதழாகும். இது கார்த்திகை-மார்கழி 2001இல் பவள இதழாக மலர்ந்துள்ளது. இச்சிறப்பிதழில் ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பான கவிதைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்புக்கள் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொடரில் குறிப்பிடத்தகுந்த மற்றொரு மலர் **புலிகளின் குரல் வானொலி பத்தாவது ஆண்டு நிறைவு மலராகும்.** புலிகளின் குரல் நிறுவனம் இம்மலரை நவம்பர் 2000இல் புதுக்குடியிருப்பு: சந்திரன் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிட்டிருந்தனர். 332 பக்கம் கொண்ட இத்தொகுப்பு பல்வேறு அரிய புகைப்படங்கள் சகிதம் வன்னியிலிருந்து வெளியிடப்பட்டிருந்தது. 1990ம் ஆண்டு நவம்பர் 21இல் தமிழீழ மாவீரர் நாளில் தொடங்கப்பட்ட புலிகளின்குரல் வானொலிச் சேவையின் 10வது ஆண்டைக் குறிக்கும் வகையில் வெளியான சிறப்பிதழ் இதுவாகும். வே.இளங்குமரன், நா. தமிழன்பன், பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம், இ. இராஜேஸ்வரன், வை. சச்சிதானந்தசிவம், ராதேயன், ப.வசந்தன், ஆகியோரை மலர்க்குழுவாகக் கொண்டு இது வெளிவந்துள்ளது. 52 கட்டுரைகளும், 67 கவிதைகளும் கொண்ட பாரிய தொகுப்பு. இவை புலிகளின்குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள் உள்ளிட்ட ஆக்ககர்த்தாக்களின் ஈழவிடுதலைப் போராட்டம் சார்ந்த ஆக்கங்களாகும்.

**போர்க்காலக் கதைகள்** என்ற தொகுப்பு நூல், **ஞானம்** சஞ்சிகையின் ஆசிரியர் தி.ஞானசேகரன் அவர்களால் தொகுக்கப்பட்ட இருபது சிறுகதைகளின் தொகுப்பாகும். கொழும்பு ஞானம் பதிப்பகம், தமிழ்நாடு மித்ரா ஆர்ட்ஸ் அன்ட் கிரியேஷன்ஸ் பதிப்பகத்துடன், இணைந்து இந்தத் தொகுப்பினை

2007இல் வெளியீடு செய்தது. ஈழப்போர் ஏற்படுத்திய அனர்த்தங்களின் பல்வேறு கோலங்களை இந்தப் போர்க்காலக் கதைகள் பேசுகின்றன. ஞானம் சஞ்சிகையின் முதல் ஐம்பது இதழ்களில் வெளிவந்த சிறு கதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. இத் தொகுப்பில் டிலான் ஜெயந்தன் எழுதிய ஒற்றைக்கூவல், ராணி சீதரன் எழுதிய பிறந்த மண், தி.ஞானசேகரனின் காட்டுப் பூனைகளும் பச்சைக்கிளிகளும், செ. கந்தசாமியின் இடிபாடுகள், ஓ.கே.குணநாதனின் ஒரு பிடிசோறு, தாமரைச்செல்வியின் அடையாளம், சுதர்மமகாராஜனின் புழுதி, குமுதினி கலையழகனின் கடற்குருவிகள், முல்லையூரானின் நாம் யார், யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் அது உடைந்து விடக் கூடாது, இ. இராஜேஸ்கண்ணனின் தொலையும் பொக்கிஷங்கள், செங்கை ஆழியானின் அலை கடல் தாண்டி, ச.முருகானந்தனின் இன்பம் எங்கே?, முல்லைமணியின் பொட்டு, தாட்சாயணியின் காணாமல் போனவனுக்கு ஒரு கடிதம், கே. விஜயனின் சந்தேகக் கைதிகள், இராமு சரவணமுத்துவின் இத்துவரும் சுமைதாங்கிகள், நீரங்க விக்ரசிங்ஹவின் மணல், சந்திரகாந்தா முருகானந்தனின் யாரிடம் நோவேன்?, அ. ச. பாய்வாவின் ஆத்மவிசாரம் ஆகிய கதைகள் அடங்கியுள்ளன. ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரந்து வாழும் இந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களில் போரினால் ஏற்பட்ட அனர்த்தங்கள். இளைஞர்களின் உயிர்த்தியாகங்கள், பொதுமக்களின் உயிரிழப்புகள், பொருள் இழப்புகள், அங்கவீனமாக்கப்பட்டோர், தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், கண-வனை இழந்த மனைவியர், சகோதரங்களை இழந்தோர், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், இடப்பெயர்வுகள், புலம் பெயர்வுகள், இராணுவத்தினரின் அடாவடித்தனம், சோதனைச் சாவடிக் கெடுபிடிகள், கைதுகள், சிறைவாசம், காணாமல் போன கணவன் உயிருடன் வருவாரா எனக் காத்திருக்கும் மனைவியார், காணாமல் போன பிள்ள திரும்பி வருவானா எனக் காத்திருக்கும் பெற்றோர் - இப்படியான அவலங்களை இக்கதைகள் மனிதநேயக் கிளர்ச்சியுடன் பேசுகின்றன.

**யுத்தத்தின் சாபம்: போர்க்கால மொழிபெயர்ப்புச் சிங்களச் சிறுகதைகள்** என்ற தொகுப்பு நூல் வ.ஆ.தங்கவேலாயுதம் எழுதி கொழும்பு, ஞானம் பதிப்பக வெளியீடாக ஜூன் 2008இல் வெளிவந்தது. ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த ஆசிரியரின் கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. போர்க்காலச் சூழலைச் சித்திரிக்கும் 13 சிங்களக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். சிங்கள எழுத்தாளர்கள் போர்க்காலச் சூழலை எவ்வாறு பார்க்கிறார்கள் என்ற எண்ணக்கருவை இக்கதைகள் எமக்கு ஊட்டுகின்றன. இந்நூலில் யுத்தத்தின் சாபம், முடிவில்லாத கண்ணீர், தலைவிதி, கொட்டி கந்தவுற (புலிகளின் முகாம்), ஜனவரி 31ம் திகதி, எதிரொலி, புஸ்பலதா, புயலுக்குப் பின், சரஸ்வதி, மட்ட யுத்தய எப்பா, பரமேஸ்வரி பொலிசுக்குப் போனாள், அதுவும் சிகப்பு இரத்தம் தான், ஒரு இராணு-வச் சிப்பாயின் மரணம் ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. வல்வையூரான் என்ற புனைபெயரிலும் அறிமுகமாகியிருக்கும் வ.ஆ.தங்கவேலாயுதம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வல்வை சிவகுரு வித்தியாசாலை, சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். 1967இல் தினபதி-சிந்தாமணி பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்த இவரது முதலாவது நூல் வாழ்க்கையின் சுவடுகள் 2005இல் வெளிவந்தது. சிறுவயதிலிருந்தே நாடகத்துறையில் ஈடுபாடு காட்டிவந்துள்ள இவர்

*40 ஆண்டுகளுக்கு மேலாக நடிகராகவும், நெறியாளராகவும், தயாரிப்பாளராகவும் செயற்பட்டு பல மேடை நாடகங்களையும் குறும்படங்களையும் வழங்கியவர். கலைத் துறை ஈடுபாட்டுக்காக கலாபூஷணம் விருதினை 2007இல் பெற்றுக்கொண்டவர்.*

**போர்க்காலத்தெழுந்த மக்கள் பாதுகாப்பு மற்றும் உளவியல்சார் நூல்கள்**

*போர் நடவடிக்கைகளால் உளவியல்ரீதியில் பாதிப்புற்ற தாயக மக்களின் உளவியல் பிரச்சினைகளை ஆராயும் வகையிலும் சில அறிவியல் நூல்கள் போர்க்கால ஈழத்தில் மலர்ந்துள்ளன.*

**மனவடு: நெருக்கீட்டின் உள விளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும்** *என்ற நூல் வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம் அவர்களால் எழுதப்பட்டு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடாக 1993 இல் வெளிவந்தது. 230 பக்கம் கொண்ட இந்நூல் விளக்கப்படங்கள் சகிதம் வெளிவந்துள்ளது. தாயகத்தின் இன்றைய போர்ச் சூழலில் மக்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கு உட்படுகிறார்கள். பரபரப்பு, பதகளிப்பு, அச்சம், தவிப்பு, போன்ற உளப்பாதிப்புக்கும் நெருக்கீடுகளுக்கும் உள்ளாகின்ற இவர்கள் இவற்றை எதிர்கொள்ள எவ்வகையான வழிமுறைகளைக் கையாளலாம் என்பதை விளக்கும் முக்கிய நூல் இதுவாகும்.*

**தமிழ் சமுதாயத்தில் உளநலம்** *என்ற மற்றொரு நூலும் தயா சோமசுந்தரம், சா.சிவயோகன் ஆகிய இருவராலும் எழுதப்பட்டு, சாந்திகம் என வழங்கப்படும் யாழ்ப்பாணம், பண்பாடுகளினூடான உளசமூக நிறுவனம் என்ற தொண்டர் நிறுவனத்தால் 2000ம் ஆண்டில் 246 பக்கம் கொண்டதாகபுகைப்படவிளக்கப்படங்கள் சகிதம் வெளியிடப்பட்டது. இது பின்னர் 2004இலும் மீள் பிரசுரம் செய்யப்பட்டது. ஈழத்தமிழருடைய வாழ்வில் நிகழும் இடப்பெயர்வுகள் அவர்களில் பாரிய உளப் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. சமுதாய மீள்சீராக்கல் நடவடிக்கைகளுள் உளநலத்தைப் பேணுதலும் இன்றியமையாதது. இந்தப் பின்னணியில் உருவான நூல் இது. உளச் சமூகத் தொண்டர்கள், உளநலம் விரும்பும் ஆர்வலர்கள் படித்துப் பயனடையும் வகையில் அரிய பல தகவல்களைக் கொண்டது. பல்வேறு உளநலப் பிரச்சினைகளும் அவை தோன்றுவதற்கான காரணங்களும் அவற்றிலிருந்து விடுபடும் வழிமுறைகளும் இங்கு எளிமையாகக் கூறப்பட்டுள்ளன.*

*போரியல் சார்ந்த நூல்களில் படைப்பிலக்கியங்களுக்கு அப்பால் போர்ச்சூழலில் வெளியான இரண்டு நூல்கள் பற்றிய பதிவையும் இங்கு மேற்கொள்வது பயனுள்ளதாக அமையும் என்று கருதுகின்றேன்.*

*இலங்கை அரசபடைகளின் அட்டூழியங்களின் உச்சகட்டமாக வான்படையால் எரியூட்டும் குண்டுகள் வீசும் நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்கம் வகையில் எமது மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களிடையே தற்பாது காப்பு நடவடிக்கைகளை வலுப் பெறச் செய்யும் வகையில்* **எரியூட்டும்**

**“ஒரு நாட்டில் வாழுகின்ற ஓர் இனத்திலுள்ள அகதியின் அவலத்தை இனத்தின் அவலமாக, நாட்டின் அவலமாக, உலகின் அவலமாகக் காட்டுகின்ற திறமை அரவிந்தனுக்கு கைவந்துள்ளதென்றே கருதுகின்றேன்”**

**- பேராசிரியர் கா.சிவத்தம்பி**

**– கனவின் மீதி முன்னுரையில்**

**குண்டிலிருந்து பாதுகாப்பு** என்ற நூல் வெளியிடப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப்பிரிவு இந்நூலை செப்டெம்பர் 1986இல் வெளியிட்டது. மக்கள் பாதுகாப்பு என்னும் தொடர் வரிசையில் இரண்டாவது சிறுநூலாக வெளிவந்துள்ளது. போர்க்காலச் சூழலில் இலங்கை அரசபடையினரின் உயர்சக்தி மிக்க எரிகுண்டுத் தாக்குதலிலிருந்து ஈழத் தமிழ் மக்கள் தம்மை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது என்ற அடிப்படைத் தகவல்களை விளக்கப் படங்களின் உதவியுடன் இந்நூல் தெளிவாகக்கூறுகின்றது. எரியூட்டும்குண்டு வகைகள், இரசாயனச் சேர்க்கைகள், அதன் பாதிப்புக்கள் என்பனவும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. போர்க்காலத் தற்பாது காப்பு நடவடிக்கைகளில் ஒன்றான பதுங்குகுழிகளை அமைத்தல் தொடர்பான சிறு பிரசுரங்களும் அக்கால கட்டத்தில் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

**சமரும் மருத்துவமும்: போர்க்களப் பதிவுகளும் புதிய புதினங்களும்** என்ற நூல் தூயவன் என்ற மருத்துவப் போராளியால் எழுதப்பட்டது. (இயற்பெயர்: சு.தனேஸ்குமார்). கிளிநொச்சி தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினால் மே 2003 இல் வெளியிடப்பட்ட இந்நூல் கிளிநொச்சி நிலா பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது. 108 பக்கம் கொண்ட இந்நூலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவத்துறையைச் சேர்ந்த தூயவன், தன்னுடைய களமருத்துவப் பணிகளை நூலாக்கித் தந்துள்ளார். இதில் கடந்த 10 வருடகாலத்தில் களங்களிலும், தள சத்திரசிகிச்சைக்கூடங்களிலும் ஏற் பட்ட தனது நேரடி அனுபவங்களை ஆவணப்படுத்தியிருக்கிறார். 1993-2003 வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் ஏடு, வெளிச்சம் சஞ்சிகை, புலிகளின் குரல் வானொலி ஆகியவற்றில் வெளியா-னவை இவை.

## முடிவுரை

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட் டம் தமிழில் போரியல் இலக்கியங்கள் பல உருவாகுவதற்கு வழிகோலியுள்ளது. புலம்பெயர்ந்து திக்கெட்டும் சென்ற ஈழத்தவரால் இவ்விலக்கியங்கள் உலக மொழிகளிலும் சேர்க்கப்படுகின்றன. இலங் கையின் தமிழர்களின் இனப்படுகொலைகள், வீரம் செறிந்த விடுதலைப் போராட்டங்கள், பாரிய இடப்பெயர்வுகள் என்பனவற்றை எதிர்காலத்தில் ஆராய முற்படுவோருக்கு இக்கட்டுரை ஒரு சிறு பொறியே யாகும். பெருங்கடலுள் ஆழ்ந்திருக்கும் பனிப்பாறையின் முகட்டை மாத்திரம் இங்கு காட்டமுடிகின்றது. இங்கு குறிப் பிடப்பட்டிருக்கும் நூல்கள் மட்டுமே ஈழத்து தமிழ் படைப்புலகத்தை அழகு படுத்துகின்றனவென்றோ, இங்கு குறிப் பிட்ட படைப்பாளிகள் மாத்திரம் தான் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் இன்று ஈடுபட்டுழைக்கிறார்கள் என்றோ வாசகர் பொருள் கொள்ளலாகாது.

இங்கு பதிவுக்குள்ளாக்கப்படாத முக்கிய மான ஆவணத்தொகுதி, போர்க்காலததில் எழுந்த போராளிகள் தொடர்பான நினைவுமலர்கள், மாவீரர் நினைவு வெளியீடுகளாக அமைந்த மலர்கள் என்பனவாகும். இலக்கியச்செறிவுகொண்ட இம்மலர்கள் பற்றிய தனித்த ஆய்வுக்குப் போதுமான பதிவுகள் நூல்தேட்டத்தின் தொகுதிகளுள் புதையுண்டு கிடக்கின்றன. விரிவஞ்சி அப்பிரிவு இக்கட்டுரையில் இடம்பெறவில்லை.

ஈழத்துத் தமிழ் நூல்களில், குறிப்பாக போர்க்கால வெளியீடுகளை, அவற்றின் ஆழ்ந்தகன்ற இருப்பினை பதிவுக்குள்ளாக்கும் முயற்சி ஏற்கெனவே ஆங்காங்கு தொடங்கப்பெற்றுள்ளது. ஈழத்தமிழரின் படைப்புக்கள் பற்றிய விரிவான தேடலை மேற்கொள்ள விரும்பும் ஆய்வாளர்களுக்கு இக்கட்டுரையாளர் (என். செல்வராஜா) தொகுத்து வரும் **நூல்தேட்டம்** என்ற ஈழத்துத் தமிழ் வெளி யீடுகளின் குறிப்புரையுடனான நூல்விபரப் பட்டியல் துணைபுரியும். தொகுதியொன்றுக்கு

ஆயிரம் நூல்கள் என்ற வகையில் எட்டுத் தொகுதிகளில் 8000 ஈழத்தமிழ் நூல்கள் பற்றிய விபரங்கள் இதுவரை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இத்தொகுப்பின் ஒன்பதாவது தொகுதி 2013ம் ஆண்டு நடுப் பகுதியில் வெளிவரவுள்ளது. ஒவ்வொரு நூலினதும் விரிவான நூலி யல் அம்சங்களை பதிவு செய்வதுடன் அந்நூல் பற்றிய சிறுகுறிப்புரையும் இப்பதிவுகளில் காணப்படுவது சிறப் பாகும். இத்தொகுப்பின் பிரதி-களை இலங்கையிலுள்ள பிரபல புத்தக விற்பனையாளர்களிடம் ஆய்வாளர்களும் நூலகர்களும் பெற்றுக் கொள்ளலாம். அண்மையில் உருவாக்கப்பட்ட கட்டுரை யாளரின் இணையத்தளமான Noolthettam.com ,லும் இதுபற்றி அறிந்துகொள்ளலாம்.

ஈழத்தின் போர்க்காலப் பிரசுரங்கள் தொடர்பான எனது இவ்வாய்வு முழுமை யானதல்ல. பல நூல்கள் விரிவஞ்சி இடம் பெறவில்லை. மேலும்பல நூல்கள் பற்றிய தகவல் என்னை வந்தடையாதிருக்கலாம். புலம்பெயர் நாடொன்றில் இருந்து கொண்டு, போர்க்காலச் சூழலில் ஆங்காங்கே வெளியாகிய அனைத்து நூல்களையும் தேடித்தொகுப்பதென்பது எனது தனிமனித முயற்சியின் வலி மிகுந்த அத்தியாயங்களாகும். இதை எமது படைப்பாளிகள் இன்றளவிலும் முழுமை யாகப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்று என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. இன்றுவரை மிகச்சில படைப்பாளிகளும் பதிப்பாளர்களும் மட்டுமே தமது படைப்புக்களை சமூகப் பொறுப்புணர் வுடன் எனது பார்வைக்கும் பதிவுக் கும் வழங்கியுள்ளார்கள். பிரபல படைப்பாளிகள் உட்பட பெரும்பாலான வர்களின் நிலைப்பாடு, இவ்விடயத்தில் பார்வையாளர்களாக நின்று விடுவது மட்டுமே. தமது படைப்புகள் விரிவாக ஆவணப்படுத்தப்படவேண்டும் என்ற மனநிலையை அவர்கள் பெறவேண்டும். கனக செந்திநாதனையும், எப்.எக்ஸ். சி.நடராஜாவையும், சில்லையூர் செல்வ ராஜனையும் மாத்திரம் தமது படைப்புகளின் தொகுப்பாளர்களாகக் கருதும் மாயை யிலிருந்து விடுபட்டுச் சமீபத்தைய நிலைக்களனுக்கு அவர்கள் வரவேண்டும். இருபத்தியொராம் நூற்றாண்டில் நிற் கும் ஆய்வாளர்கள் நூல்தேட்டத்தையும் தமது உசாத்துணை நூலாகக்கருதித் தமது தேடலை விரிவாக்கவேண்டும்.

இந்நிலை மாறும்போதுதான் இத்த கைய ஆய்வுகள் மேலும் முழுமையை நோக்கி நடைபயிலும். அதுவரை எமது ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகத்தின் வரலாற்றுப்பதிவென்பது ஏக்கப் பெரு மூச்சுகளுடன் மாத்திரமே நின்றுவிடும்.

## என்.செல்வராஜா

ahogggh z k; M i d f;Nfhl;i l i ar;Nrue;j E}yf tpayhsu;vd;nry;tuh[h mNahj;jp E}yf Nritfs; mikggpd; ];jhgfu; <oj;jpd; Kjy; jkpo; E}yftpay; rQ;rpifahd; E}yftpay; fhyhz;bjopid Vohz;Lfs; njhlue;J ntspaplL <oj;J E}yftpay;J iwf;F cukplL tsuj;jtu; 2002Kjy; E}y;Njl;lk; vd;w ghupa E}ypay; gjpTKawr;papy; <Lgl;L ,Jtiu vl;Lj; njhFjpfspy; 8000 <oj;Jj; jkpo; E}y;fisf; FwpgG;iuAld; gjpTnraj;tu; jdpkdpj Kawr;papdhy; vt;tpj epWtd epjpAjtpAkpdwpj; njhlUk; ,gg z pNa <oj;Jj;jkpog; gilgG;yfj;jpd; tuyhWN-jbr; nry;Yk; vkJ mLj;j jiyKiwapdUf;F crhj;Jiz ahf mikag;Nghfpdw;J. jw;NghJ FLkgj;Jld; y z;ldpy; thOk; ,tu; gpupj;jhdpa jghy;Nritapy; KONeu Copauhf Tk; fle;j gjpide;J Mz;Lfshfg; g zpahwwptUfpdw;whu; –ஞானம் ஆசிரியர்

# குறிப்புகள்

# குறிப்புகள்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்....